JL
Y15m211M99
M99.17 MO
161434

15 APR 1915
MADRAS.

சென்னை-600 008

The Tamil Zenana & School Magazine.

மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"—ஔவையார்

Vol. XVII | Madras January & February 1915. | No. 1&2
புத்தகம் 17 | சென்னை: ஜனவரி, பிப்ரவரிமீ 1915ஆ | இலக்கம் 1&2

தமிழ் வசனகாவிய சரித்திரம்.

தமிழ் மொழியில் வசன நூல்கள் எப்போது உண்டாயின என்பதைப்பற்றி சற்று ஆராய்ந்து, வசன நூல் சரிதையைக் கவனித்து, தற்காலத் தமிழ் வசன நூலின் தன்மையையும்பற்றி சற்றுக் கருதுவோம்.

எல்லா தேச பாஷைகளிலும் செய்யுள் நூல்களே முதலில் உதித்தன. திருஷ்டாந்தமாக இங்கிலீஷ் பாஷையில் பியூவில்பு, சாசர் முதலான நூல்கள் 7 முதல் 14-ம் நூற்றாண்டு வரையில் விளங்கின. 16-ம் நூற்றாண்டில்தான் வசன நூல்கள் பெரும்பாலும் வழக்கமாயின. அதைப்போலவே நந்தமிழ்ப்பாஷையிலும், சரித்திரத்திற்குப் பூர்வகாலங்களிலும், கி. பி. பல நூற்றாண்டுகளிலும் வசன நூல்களே அரிதாயிருந்தன. புலவர்கள் பாடல்கள் பாடுவது உரிமையுமன்றி கௌரவமுமாயிருந்தது. மேலும் எழுதிவைப்பதற்கு அக்காலப் பனையோலை யேட்டுகளுக்கு வசனம் லாயக்கல்லாமலிருந்தது. அச்சாபீஸும், காகிதம் செய்யும் தொழிற்சாலைகள் சீமையில் ஏற்பட்டபின்பன்றோ, அங்கு வசனத்தில் நூல்கள் எழுதுவது சாதகமாயும், சவுகரியமாயுமிருந்தது? தமிழிலோவென்றால் அச்சாபீஸ் 19-ம் நூற்றாண்டின் துவக்கத்தில்தான் ஏற்பட்டது. அதற்கு முன்பு காகிதத்தாள் வெகு அபூர்வமாகவே இருந்திருக்குமென எண்ணுகிறோம். நகரவாசிகள் தவிர மற்றையோருக்கு காகிதம் வகைரா நூதனமாகவே யிருந்திருக்கலாம். ஆயினும், நமது பாஷையின் சிறப்பு யாதெனில், வசன நூல்கள் சிறுகச்சிறுக 14-ம் நூற்றாண்டுமுதல் 18-ம் நூற்றாண்டிலுங்கூட உண்டாகிவந்தன. இது மிகவும் ஆச்சரியமான விஷயம்.

ஆங்கிலத்திலுங்கூட வசன நூல்கள் மத சம்பிரதாயப் பிரஸ்தாபனைகளுக்குக் கருவியாக ஆரம்பித்தது. அவ்வாறே தமிழ் வசனநூல்கள் ஆரம்பத்திலும் பெரும்பான்மையும் மதவிஷயங்களைப்பற்றியே எழுதப்

1.161434

[illegible] சமணமதம் 7-ம் நூற்றாண்டில் பாண்டிய தேசத்தில் நசிப்பிக்கப்பட்டது முதல், சைவமதம் ஸ்தாபிக்கப்பட்ட காலங்களிலும், வைஷ்ணவ மதம் உதித்த காலங்களிலும், தமிழில் வசன நூல்கள் ஆரம்பிக்கப்பட்டன. வைஷ்ணவ மதமானது வட மொழியைப் பிரதமமாகக் கொண்டு, தென்மொழியையும் பிரயோகித்ததினால் தேசத்தில் ஊன்றிக்கொண்டது. ஐரோப்பா கண்ட சரித்திரத்திலும், கண்டன மத ஸ்தாபன காலமாகிய 16-ம் நூற்றாண்டில் இவ்வாறே லாத்தின் (Latin) பாஷையில் மதாசாரியர்கள் பெரும்பாலும் எழுதுவதை மாற்றி, தேசபாஷைகளில் தேசவாசிகளுக்கு சிரத்தையுண்டாகுமாறும் மதஞான போதனைகளைச் தேசபாஷையிலேயே பிரசங்கித்தார்கள். வைஷ்ணவ மதத்தாரும் கௌதம பௌத்தர்போல் பாமர ஜனங்களுக்கு எளிதில் விளங்கும்படி மணிப்பிரவாள (கலந்த) நடையில் எழுதினார்கள். உண்மையாகவே, அக்காலத்தில்தான் தமிழ் வசன நூல் முதற்பிறந்தது.

மத்தியகால சரித்திரத்தில் தமிழ் வசன நூல்கள் மத சம்பந்தமான விஷயங்கள் தவிர வேறு விஷயங்களைப்பற்றிக் கிடையாதென நம்பப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் சாதனங்களின்மையே. ஜனங்கள் வசனம்தான் பேசினார்கள். ஆயினும் நாட்டின் ராஜாங்கங்கள் மாறிக்கொண்டு வந்ததாலும், உள்நாட்டு மன்னர்களுக்குள் தினே தினே ஏற்பட்ட சண்டைக் காரணங்களினாலும், ஜனசமூக வாழ்க்கை ஸ்திரங்கெட்டிருந்தது. ஆயினும் ராஜ்ய பரிபாலன விஷயங்களைப்பற்றி வசன நூல்கள் ஏற்படாதது மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. கதைகளும், விடுகதைகளும் ஓதப்பட்டனவேயன்றி, எழுதப்படவில்லை. சரித்திர விஷயங்களைபற்றி வசன நடையில் துறைமுகங்களில் ஐரோப்பியருடன் பழகிய பலர் எழுதியிருக்கலாமென சம்சயிக்கிறோம். உதாரணமாக 18-ம் நூற்றாண்டில் பிரென்சு கவர்னர் டூப்ளேயின் துபாஷாய் விளங்கிய அநந்தரங்க பிள்ளை அவ்வாறு தினசரிக்குறிப்புகள் தமிழில் எழுதிவைத்திருந்தார். இவ்வாறே நகரவாசிகள் எழுதியிருந்ததெல்லாம் எங்கு காணாமற்போயினவோ அறிகிலோம்.

19-ம் நூற்றாண்டின் ஆதியிலேயே தமிழகத்தில் ஆங்கிலேய அரசாட்சி ஸ்திரமாய் ஸ்தாபிக்கப்பட்டது. ஜனசமூகத்திற்கு இளைப்பாறுதி கிடைத்தது. அமரிக்கையான வாழ்வும், சச்சரவின்மையும், நவீன காரண காரியங்களும் ஜனசமூகத்தை சும்மா விடவில்லை. பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. நாட்டுபாஷைகளில் கல்வி பயிலவேண்டுவது அவசியமாயிற்று. சில நகரங்களில் மாத்திரம் ஆங்கிலம் தெரிந்த சிலர் வசித்தனர்; நாடோ புதிதாக ஜெயிக்கப்பட்டது. தமிழ்ப்பாஷையின் அபிவிருத்தியைக் கூடியமட்டில் உதவவேண்டியதாயிற்று. ஆங்கில சிவிலியின்க

ளும் தமிழ் முன்ஷிகளிடம் தமிழ் பயின்றனர்; கிறிஸ்துமதம் பரவ அவாக்கொண்ட பாதிரிகளும் தமிழகம் சார்ந்தனர்; முதல் முதல் தமிழ் அச்சுக்கூடம் அவர்கள் ஏற்படுத்தினார்கள்; கிறிஸ்து மத நூல்கள் மொழிபெயர்ப்பதுடன், எளிய நடையில் தமிழ்வசன நூல்களையும் அவர்கள் இயற்றினார்கள். இத்துடன் தமிழர்கள் சிலரும் தமது பழங்கதைகளையும் புராணங்களையும் மொழிபெயர்ப்பது லாபகரமென வறிந்து அவ்வாறு செய்யப் புகுந்தனர். பஞ்சதந்திரம் முதலிய வசன நூல்களை தாண்டவராயப்பிள்ளை மொழிபெயர்த்தார். இதுதான் தற்காலத்தமிழ்வசன நூற் சரித்திரத்தின் நிதரிசன ஆரம்பம்.

சென்ற 19-ம் நூற்றாண்டின் நாளாக நாளாகத் தமிழில் வசன நூல்கள் பல செய்யப்பட்டன. இவ்வகை நூல்களை மூன்றுவகையாகப்பிரித்துக் கருதுதல் வழக்கம். அபூர்வவசன நூல், சார்பு நூல், மொழிபெயர்ப்பு நூல்; ஆகவசன நூலை மூவகையாய்ப்பிரித்துப் பார்ப்போமானால் தமிழ்வசனநடையில் அபூர்வ நூல்கள் மிகச்சிலவேயிருப்பது வெளிப்படும். மொழிபெயர்ப்பு நூல்கள் பலவுள. ஐதிகங்களும், புராணங்களும் பலவும் செய்யுளிலும் வசனத்திலும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள. சார்பு நூல்கள் பெரும்பாலும் சம்ஸ்கிருத நூல்களைப்பற்றிய சுருக்கங்களும், பழைய தமிழ்க்காரியங்களுக்கு உரை முதலியன எழுதப்பெற்ற சில நூற்களே. ஒரு நூற்றாண்டு முழுமையும் இலக்கியங்களில் மேன்மைபெற்ற பல மேற்கு சீமை பாஷைகளுடன் பழகியும், அப்பாஷைகளிலுள்ள மேன்மையான நூல்களை மொழிபெயர்க்காததும், அவற்றைப்பின்பற்றி தமிழ் நூல்கள் எழுதாததும் விசனிக்கத்தக்கன.

பாஷாபிவிருத்தி யேற்பட்டதற்கு பலகாரணங்கள் உண்டு என்பது பாஷையின் சரிதையைப் படிப்பவர்க்கு தெரியும். இதர பாஷைகளிலிருந்து கடன்வாங்குவது ஈனமென்று நினைப்பது தப்பெண்ணமல்லவா? பாஷையின் புஷ்டிக் குறைவை நீக்க, வேறுவகையில்லையே! ஆதலால் மேற்றிசை வசன நூல்களை மொழி பெயர்ப்பதும், அவற்றின் பின்பற்றி சார்பு நூல்கள் இயற்றுவதும் தமிழுக்கு நன்மையேயன்றி கேடல்ல!

தற்காலத் தமிழ்வசன இலக்கியத்தின் ஸ்திதி எவ்வாறிருக்கிறது என்றால், சிறுவர் சிறுமியர் பாட புத்தகங்கள், ஆங்கிலச்சிறப்பு நாவல்களின் மொழி பெயர்ப்புகள், தினசரிப் பத்திரிகைகள், மாத சஞ்சிகைகள் ஆகிய இவைகளே. மற்ற இந்திய பாஷைகளிலெல்லாம், சாஸ்திர விஷய ஆராய்ச்சி நூல்களும், இந்துதேச சரித்திர நூல்களும், பெருகச்சிறுக ஆங்கிலத்தினின்றும் மொழிபெயர்க்கப் படுகின்றன. பெங்காளி பாஷையிலும், மராட்டி, ஆந்திர பாஷைகளிலும், (Original) புதிய வசன நூல்களைத் தவிர, [illegible]ப்பாஷாபிமானிகள் மேற்றிசையோ

ரால் எழுதப்பட்ட சாஸ்திர ஆராய்ச்சி நூல்களையும் மற்றைய சரித்திர நூல்களையும், நவீனங்களையும் தீவிரமாய் தத்தம் தேச பாஷையில் மாட்டி தத்தம் தேசாபிமானிகட்கும் பாஷாபிமானிகட்கும் எளிதிற் புகட்டுகின்றனர். தென் இந்தியாவில் மாத்திரம் தமிழுலகில் பாஷாபிமானங்குன்றி, தமிழ்ப் பாஷையே ஏளனமாகத்தோன்றுகிறது. மற்ற நாட்டுப் பாஷைகளில் பிறந்து வளர்ந்து பேசுபவர்கள் பாஷாபிமானத்தை விடவில்லை. பெங்காளிகள், மராட்டியர், ஆந்திரர் இவர்கள் சாதாரணமாக தத்தம் சொந்த பாஷையிலேயே ஏறக்குறைய ஆங்கிலமே பேசாமல், ஒருவருடன் ஒருவர் கலந்து பேசுகிறார்கள். தமிழர்களோவென்றால், சதாசர்வகாலமும் தேசபாஷையைப் பிரயோகிக்காமல், நாளாவர்த்தியில், தமிழில் பேசுவதையே மறந்து, பேசநாவெழாமல் திண்டாடுகிறார்கள். இவ்வாறு பல வருஷங்களாயிருக்கும் நிலைமை, இனி அதிசீக்கிரமாக நன்கு மாறுவதற்கு வேண்டிய உபாயங்கள் யாதாவது உண்டோ என்பதே சந்தேகமாயிருக்கிறது.

ராஜாங்கத்தின் கவனமின்மை ஒருசார், ஜனங்களின் கவனமின்மையொருசார், வயிற்றின் கொடுமையொருசார், ஆங்கிலத்தினால் உண்டாகும் தனலாபம் ஒருசார்—ஆக இக்காரணங்களினால் தமிழ் நசித்துப்போகும்படியான ஸ்திதியடைந்தது ஆச்சரியமல்ல. நசிக்காமலிருந்தது ஆச்சரியந்தான். இராஜாங்கத்தாரும் தமிழைக் கைவிடக்கூடாது என்று பலநாளாகச் சென்னைச் சர்வகலாசாலையை வற்புறுத்துகிறார்கள். சர்வகலா சாலையிலோவென்றால் கற்றுக்குட்டி வைத்தியம் நடந்து வருகிறது. சமீபகாலங்களில் தேசபாஷைகளைத்தேற்ற முயற்சி செய்யப்படுகின்றன. இதுவெல்லாம் நல்லகாலந்தான். ஆயினும் நல்ல நூல்கள் ஆக்கப்படாவிடின், இவ்வளவு நன்மையையும் தமிழ் அனுபவிக்க முடியாதே! முதலில் பணக்காரர்களும் உத்தியோகஸ்தர்களும் நிலச்சுவான்தார்களும் தேசபாஷையில் நூல்கள் எழுதுவதற்கு தகுந்த பணவுதவி புரியவேண்டும். தமிழ்ச்சங்கத்தினது ஓர் பாகம் ராஜதானிப் பிரதான பட்டணத்தில் ஏற்படுத்தப் படவேண்டும். புலவர்களுக்கு வசதியான ஸ்தலங்கள் புத்தகசாலை சென்னையில் ஒன்று அத்தியாவசியம். (Original) வாஸ்தவ உரிமை நூல்கள் லௌகிக விஷயங்களைப்பற்றி எழுதுபவர்க்கு இனாம் தரவேண்டும். *தமிழ் நாட்டில் பாடசாலைகளிலெல்லாம் வடமொழியும் தென்மொழியும் ஆங்கிலத்துடன் கூடக்கட்டாயப் படிப்பாகப் பயிலும்படி செய்யவேண்டும். வடமொழியைக் கைவிடின், தென்மொழியின் கதியதோகதிதான். புதுவார்த்தைகள் உண்டுபண்ணவும், புதுநூல்கள் எழுதுவதற்கும் வடமொழி ஞானம் மிகவும் உபயோகமாயிருக்கும். மேலும், ஆங்கிலங்கற்ற சமுகத்தலைவர்கள் தம்மாலியன்றமட்டும் தமிழுலகத்தாரு

க்கு தமிழிலேயே பிரசங்கங்கள் செய்யவேண்டும். ஆங்கிலத்தில் கதையெழுதிப் பேர் பெறும் ஆசையைத்தள்ளி, செந்தமிழில் உரிமை நூல்களும், சார்புநூல்களும், சிரேஷ்டமான மொழிபெயர்ப்பு நூல்களையும் ஆங்கிலம் பயின்றவர்கள் இயற்ற முயன்றால் தமிழானது இகழ்ச்சி ஸ்திதியினின்று நீங்கி, தமிழுலகிற்கும், தமிழருக்கும் மகிழ்ச்சியையும் மகிமையையும் கொணரும், என்பது திண்ணம் K.R.இராமகிருஷ்ணய்யர் B.A.,B.L.

ஸ்திரீகளும் தொழிலும்

நிந்தைச் சொற்களுக்கும், குரூரநடத்தைக்கும் உட்பட்டு, வீட்டில் நான்குசுவர் நடுவில் அடைக்கப்பட்டு, தன்னந்தனியே கடும் வேலை செய்து, தினே தினே, வாழ்நாளை வீணாளாக நமது ஸ்திரீகள் கழித்துவருவதை நாம் மனவருத்தத்துடனே உணர்ந்துவருகிறோம். சிறுவயதில் பெற்றோர்கள் முதலிலும், பின்பு கணவனும் அஞ்ஞானமென்னும் இருளில் அடைத்து விடுகிறார்கள். முன்போல நிரக்ஷரகுக்ஷியாய் செய்யாவிட்டாலும், அரைகுறை பாஷை நடையில் ஓரிரு கடிதங்கள் புருஷனுக்கு எழுதவும், புள்ளிகுத்தவுமே கற்பிக்கப்படுகிறார்கள். உபயோகமுள்ள அறிவைப்பெற்று கண்ணியமான யாதொரு தொழிலில் அவசியம் நேர்ந்தால் தான் அமரசக்தியுடையவளாவதில்லை. தம்குழந்தைகளை மேற்பார்வை பார்க்கவோ, உலகவிஷயங்களை அறியவோ, ஜனசமூகத்திற்கு நன்மை செய்யவோ, போதுமான அறிவும் படிப்பும் அவர்களுக் கேற்படுவதில்லை. புருஷர்கள் அடிக்கடி சொல்வதாவது "ஸ்திரீகள் வீட்டு வேலைகளில் தேவநா சுகத்தோடிருப்பதால், சுயேச்சையாய் சம்பாதிப்பதில் நோக்கமுடையவர்களாயிருப்பதில்லை. வீட்டில் பிரியமாகவும், கண்ணியமாகவும் நடத்தப்படுவதால் உலகத்தில் வெளிச்சென்று வேலை செய்வோமென்பதை கனவிலும் எண்ணுவதில்லை."

கனவிலும் எண்ணாததற்கு காரணம் வீட்டிலடையும் அபரிமிதமான சுகமல்ல. ஆனால் படிப்பில்லாமையும், குறுகிய நோக்கமும், இயற்கையாகவே வளர்க்கப்படாமல் மட்டந் தட்டப்பட்ட கொள்கைகளே ஆதிமூல காரணங்கள். அநுகுணமான தந்நலமதிப்பும், உயர்ந்த அவாவும், எண்ணங்களும் இல்லாமல், தற்காலத்திற்கேற்ற ஓர் புதிய எண்ணமும், அவர்கள் மனதில் உதிக்காமல், மனமொடுங்கி, வாழ்நாள் மூடபக்தியிலும், பழங்கதைகளிலும், வழக்க ஒடுக்கங்களிலும் ஆழ்ந்திருப்பது ஆச்சரியமல்ல.

படிக்கவழியின்றியிருந்துவருவதற்குமுன் விவாகம் முடித்தேதீரவேண்டும். கைம்பெண்கள் மறுவிவாகம் செய்து கொள்ளக் கூடாது. ஆகையால் விதவைகளாய்ப் போகும்போது, படிப்பில்லாத ஓர் ஏழை ஸ்திரீ, தன் புருஷன் வீட்டிலாவது, தகப்பனார் குடும்பத்திலாவது கடும் வீட்டு

வேலை செய்து நிந்தைச் சொற்கேட்டு இடிப்பட்டு காலத்தை கழிக்க வேண்டியவர்களாகிறார்கள்; அல்லது வயிற்றைவளர்க்க ஓர் குற்றேவல் தொழிலில் அமருகிறார்கள். அந்தோ பாபம்!

இங்கிலாந்தில் ஸ்திரீ சுதந்தரவாதிகளின் சப்தம்கேட்டபிறகு ஜனங்கள் "ஸ்திரீகளின் இடம்வீடே" எனவற்புறுத்துகிறார்கள். இப்பழமொழியை நாம் கண்டிக்க வரவில்லை. ஆனால் தனக்கென்று வீடில்லாத ஓர் ஸ்திரீயின்கதியும், இடமும் எங்கே? வீடுடையவர்கள் எவ்வளவு கொஞ்சம் பேர்! கலியாணம் செய்து கொள்ளாதவர்களுக்கு வீடில்லை. பர்த்தாவை பறிகொடுத்தவர்களுக்கு வீடில்லை. தள்ளப்பட்ட ஸ்திரீகளுக்கு வீடில்லை. இதோடு பேருக்கு வீடிருந்தும், வீடு வீடல்லாமல் புளிக்காடாய் விளங்கும் துர்பாக்கியமுள்ள ஸ்திரீகள் பலபேர்!

இப்படியானால் தன்னை கண்ணியமாய் காப்பாற்றிக்கொள்ள ஒரு தொழில் கற்றுக்கொள்ள அவள் ஆசைப்பட்டால் அது பாவமா?

சென்னையில் ஓர் விதவாசிரமம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு சூப்பரின்டெண்டண்டு 9-ம் வயதில் விதவையான ஓர் ஸ்திரீ இப்பொழுது பிஏ. எல். டி. பட்டம் பெற்றிருக்கிறாள். முப்பத்தாறு பாலிய விதவைகளை தமது சகோதரிகளுக்கு பிரயோஜனமான கண்ணியமுள்ள ஓர் தொழிலுக்குப் பயிற்சி செய்து வருகிறார். இருண்ட மேகத்தில் இது ஓரே மின்னல் வெளிச்சம். ஒன்றும் இல்லாதிருப்பதற்கு இது சிரேஷ்டந்தான். பல பெண்கள் கண்ணும் கண்ணீருமாய் நிற்கும்வரையில் தேசம் முன்னேற்றமடைவது கஷ்டம். தேசாபிமானிகள் உதவிசெய்ய முந்துங்கள்.

கே. வி. சுப்பிரமணிய அய்யர், பீ. ஏ.

விவசாயத் தொழில் கான்பரென்ஸின் திறப்புதினக் கொண்டாட்டம்.

சென்ற டிசம்பர்மீ 14உ ஸெயின்ட்ஜார்ஜ்கோட்டை கவுன்ஸில் சேம்பரில், விவசாயத்தொழில் கான்பரென்ஸ் கூடியபொழுது பல கவர்ன்மெண்டு ஆபீஸர்களும் ராஜதானியைச் சேர்ந்த பலதொழில், வியாபார மெம்பர்களுமாக 60 பேர்கள் வந்திருந்தார்கள். அந்த 60 பேர்களில் சென்னை வியாபாரச் சங்கங்களின் மெம்பர்கள் 20 பேர்கள், மற்ற 40 பேர்கள் வெளிஜில்லாக்களிலிருந்து வந்த நிலச்சுவான்தார்களும் ஜெமீன்தார்களும், பருத்தி, வேர்க்கடலை வியாபாரிகளுமாவார்கள். H. E. கவர்னர் சபா நாயகராக வீற்றிருந்து இந்தக் கான்பரென்ஸைத் திறந்து வைத்தார். ஆனரபில் மிஸ்டர் A. G. கார்டியூவும் வந்திருந்தார்.

கவர்னரின் பேச்சு:—"விவசாயம், தொழில் இவ்விரண்டின் அபிவிருத்தியின்பொருட்டு கவலைகொண்டிருக்கும் சென்னை கவர்ன்மெண்டைச் சே

ர்ந்த சில உத்தியோகஸ்தர்கள் மேற்கண்ட கான்பரென்ஸுக்கு வரத்தயாராக இருக்கிறோம் என்று அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்திருந்தபடியால் அவர்களுடன் வேறு பல கனதனவான்களும் வருவதுயுக்தமாகுமென்று நினைத்து உங்களுக்கு வரவழைப்புக் கடிதங்களை யனுப்பினேன். அந்த வரவழைப்புக் கிணங்கி நீங்கள் வந்திருக்கிறதைக் கண்டு நான் நிரம்ப சந்தோஷப் படுகிறேன். இவ்விதக் கான்பரென்ஸ் இதுவரையிலும் இந்த ராஜதானியில் கூடினதே யில்லை. சென்ற 8 வருஷங்களாக கவர்ன்மெண்டார் விவசாய அபிவிருத்தியைப்பற்றி அக்கறை கொண்டு, அதற்காக ஏராளமாய் பண உதவிசெய்து வருகிறார்கள். விவசாய இலாகா பூர்ணபலம் பெற்று விளங்காவிட்டாலும், அது செய்து வரும் பிரயத்தனங்களினால் பல நன்மைகள் விளைந்திருக்கின்றன. விவசாயத்தில் பயிற்சி யடைந்தவர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களைப் பல ஜில்லாக்களுக்கனுப்பி விவசாய விஷயமாய் அவர்கள் விவசாயிகளுடன் சேர்ந்து ஒத்துழைக்கும்படிச் செய்ததினால், அந்த இலாகா நிரம்ப அபிவிருத்தியடைந்து வந்திருக்கிறது. புது விவசாயவழியை அனுஷ்டித்து வருவதில் விவசாயிகள் ஒரு வருஷத்திற்கு ஒரு கோடி ரூபாய் லாபம் அடைந்து வருகிறார்கள். விவசாய அபிவிருத்தி முறையை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதானது தேசத்துப் பொருளாதார அபிவிருத்திக்குக் காரணம். உங்களால்தான், தேசத்தில் உற்பத்தியாகும் பண்டங்கள் விற்பனைக்கு உலகத்திலுள்ள மார்க்கெட்டுகளுக்குப் கொண்டுபோகப் படுகின்றன.

மதராஸ் பாங்கி, இருப்புபாதை, ஐக்கியநாணயச் சங்கம் இவைகளின் பிரதிநிதிகள் வரவழைக்கப் பட்டிருக்கிறதானது, பலருடைய ஒத்துழைப்பு அவசியமென்பதைக் காட்டுகிறது.

இவ்விதக் கான்பரென்ஸைக் கூட்ட வேண்டுமென்று, யுத்தம் ஆரம்பமாவதற்கு முந்தியே யோசிக்கப்பட்டது."

இவ்விதம் பேசிவிட்டு கவர்னர் பருத்தி வியாபாரத்தின் சரித்திரம் விவசாய இலாகா, தற்கால முறை தற்கால அபிவிருத்தி முதலிய விஷயங்களைப்பற்றி நீண்டதோர் உபந்நியாசஞ் செய்தார்.

இராஜ பக்தி.

இராஜத் துரோஹிகளின் பயம்.

6-ம் அத்தியாயம்.

'இந்தமட்டாவது எதுகுலதிலகனைக் குடிசையிலேயே இருக்கும்படி யுக்திபண்ணினோமே' என்று அமிர்தேசன் சந்தோஷப்பட்டுக்கொண்டு, மறுபடியும் மாளிகையின் உள்ளே நுழையவே, அங்கே சமையல்காரி

சுந்தரி தன் சாமான்களைச் சித்தமாய் மூட்டைகட்டி வைத்துக்கொண்டிருந்தாள். அமிர்தேசன் அவளைப்பார்த்து "நீயாவது அம்மாளைப் பார்த்துவிட்டு வந்தாயா?" என்று கேட்டான்.

"ஆமாம் கண்டேன், அவர் சொல்வது விசித்திரமாய் இருக்கின்றது. தான் கட்டிலின்மேல் பிள்ளையார் போல் உட்கார்ந்து இருக்கப்போகிறாளாம், நான் பின்னால் கைகட்டிக்கொண்டு மரம்போல் நின்று இருக்கவேண்டுமாம்!! எப்படி ஐயா!! அந்நிலையில் தாம் மரியாதையாய் அவ்வீரர்களை வரவழைத்து அவர்களுக்கு உபசாரம் செய்யப்போகிறாளாம். நன்றாய் இருக்கிறதா இல்லையா? எனக்கு என்னவோ அவர் சொல்வது பிடிக்கவில்லை; என்னத்துக்கு இந்தப் பிடிவாதம்!! ஒருக்கால் அவ்வீரர்கள் கிழட்டு விமலையாளை ஒன்றும் தொந்தரவு செய்யாமல் விட்டாலும், என்னைப் பலவிதமாய்க் கஷ்டப்படுத்தி பரிகாசம் பண்ணுவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. என்னால் இருக்கமுடியாதப்பா இவ்விடத்தில்—" என்றாள் சுந்தரி.

"சரி, போகட்டும்; மாதவன் எப்பொழுது திரும்பி வருவதாகச் சொல்லிப்போனான்?"

"அவனுக்குத் திரும்பி வருவதாக எண்ணமே கிடையாதே! அது தெரியாதா உமக்கு!! நீர் சொன்னபடி உண்மையாய் விஷயங்கள் நடந்ததா என்று பார்க்க நாளை காலையில் ஒருவேளை வந்தாலும் வருவானாம். அங்கம்மாளும் என்னை விட்டுவிட்டு மாதவனோடு ஓடிப்போய்விட்டாள்—"

"ஐயோ இந்தக் கிழவியை வெளிப்புறப்படும்படி சொல்ல என்னால் கூடுமானால் எவ்வளவு நன்றாய் இருக்குமே!" என்று பாதி தன் மனத்துள்ளும் பாதி சமையல்காரியை நோக்கியும் சொல்லிக்கொண்டான். "அவள் எண்ணுகிறபடி அச்சண்டாளர்கள் இக்கிழவிக்கு மரியாதை செய்யப்போகிறார்களா!! இது என்ன அவிவேகம்! மறுபடி ஒருமுறை மேலே போய் நான் அவருடன் பேசவந்து இருப்பதாகச் சொல் அம்மா!" என்றான் அமிர்தேசன் வருத்தத்துடன்.

"போ ஐயா!! போ! உனக்கு என்ன வேலை? பொழுதுபோய் இருட்டாகின்றது; மெத்தையின் மேலும் கீழும் போய்க்கொண்டிருந்து என்ன பண்ணுகின்றது? இஷ்டமிருந்தால் நீயே போய்க்கொள். நான் புறப்படவேண்டும் இங்கிருந்து" என்றாள் சுந்தரி.

"எங்கே போகப்போகிறாய் அப்படியானால்?"

"எங்கயா? பேட்டையிலே ஆட்டக்கார நீலமேக செட்டி வீட்டுக்குத்தான்; அதுவே சுமார் ஒரு நாழிகை வழிக்குமேலே இருக்குமே! மூட்டையைத் தூக்கிக்கொண்டு போனால் இன்னும் எவ்வளவு கஷ்டம் பார்த்துக்கொள்!" என்றாள்.

"பெண்ணே உன் மூட்டையை நான் தூக்கிக்கொண்டு உன்னுடன் துணைவருகிறேன். நானும் நீலமேகனிடம் வரவேண்டியிருக்கின்றது. என் உதவி வேண்டுமானால் மேலே போய் அம்மாளிடம் சொல்லிவிட்டு வா" என்றான் அமிர்தேசன்.

அவளும் சம்மதித்து ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு போய் மாடியில் வைத்து அமிர்தேசனையும் அழைத்தாள். அமிர்தேசன் வெகு வணக்கத்துடன் விமலையார் முன்சென்று "அம்மா இன்னொரு முறை தங்களை அழைக்கவந்தேன். தயவுசெய்து என் வார்த்தையை நம்பி இவ்வீட்டைவிட்டு வந்து விடுங்கள்" என்றான்.

விமலையார் "என்ன பேச்சுப் பேசுகிறாய் அமிர்தேசா! வீட்டைவிட்டு வருவதா? அசாத்தியம்! அசாத்தியம்!! அசையமாட்டேன்! இவ்வீடு முழுவதும் இராஜத் துரோகிகள் நிரம்பிப்போகட்டும், அப்படியானாலும் நான் நகரமாட்டேன். ஒரு முறைசொன்ன பேச்சு மறுபடியும் மாறுவேன் என்று எண்ணினையோ?"

அமிர்தேசன் "ஆனால் ஒரு விஷயம் தய——"

விமலையார் "பேசாதே: வாய் மூடிக்கொண்டிரும் பிள்ளாய்!! நீ உன் நிலைமை தெரியாமல் பெரிய மனிதர்களிடம் தட்டிப் பேசுகின்றாய்!——'

அமிர்தேசன் "இல்லை அம்மா——"

"இல்லையும் கிடையாது; உண்டும் கிடையாது; நட இவ்விடத்தைவிட்டு; என் எதிரில் நீ இனி வரவேண்டாம்—போ என்றால் ஏன் இன்னும் நிற்கின்றாய்? போய் உடனே அங்கம்மாளை இங்கே அனுப்பு."

அமிர்தேசன் "அங்கம்மாள் முன்னமேயே மாதவனுடன் செட்டிப்பேட்டைக்குப் போய்விட்டாள். சுந்தரியும் போகத்தயாராய் இருக்கிறாள். நான் ஒருவனே இருக்கிறேன், நானும் போய்விட்டால் தாங்கள் தனி—"

விமலையார் "அவர்கள் எல்லாரும் என்னைவிட்டுப்போகவும் தைரியம் வந்து விட்டதா?"

"அவர்களுக்கு இங்கிருக்க தைரியம் இல்லை; அவ்வளவு தான் தாயே அவர்களைக்கோபிப்பதில் பயனில்லை" என்றான் சாந்தமாக.

"சரி; அப்படியானால் நீயும் புறப்பட்டுப்போ! கதவை இழுத்துச் சாத்திக்கொண்டுபோ" என, அமிர்தேசன், இன்னும் அக்கிழவியைத் தனியே விட்டுப்போக மனம் வாராமல் சற்றுத்தயங்கவே, அக்கிழவி "என் வார்த்தையை நீயும் கேட்கமாட்டாயா? போ உடனே வெளியில்" என்றாள் மஹா கோபத்துடன்.

அமிர்தேசன் இனிப்போராடுவதில் பயனில்லை என்று கண்டு, கடைசியாக அக்கிழவி பிட்ட உத்தரவுப்படி கதவையும் இழுத்து மூடிக்கொண்டு, வெளியே வந்தான். நடு முற்றத்தில் சுந்தரி மூட்டையுடன் தயாராய் நின்றாள். தான் முன் அவளுக்கு வாக்களித்தபடி அவளது மூட்டையை வாங்கித்தலைமேல் வைத்துக்கொண்டு பேட்டையை நோக்கிப் புறப்பட்டனர் இரண்டுபேர்களும்.

நடந்து செல்லும் இருவரும் அரை நாழிகை வரையில் ஒன்றும் பேசவில்லை. பிறகு சுந்தரி "ஐயா அமிர்தேசரே குழந்தைகளுக்கு என்ன கதி! ஐயையோ குழந்தைகளை விட்டுவிட்டு வந்து விட்டோமே, அங்கம்மாளும் ஓடிப்போய்விட்டாளே! திக்கில்லாமல் திண்டாடுமே! ஏழைக் குஞ்சுகள்!!" என்று துக்கத்துடன் அழுதுகொண்டே கேட்டாள். இது வரையில் தன் உயிரையும் சாமான்களையும் காப்பாற்றவேண்டுமே என்ற பயத்தில் மற்றவர்களைப்பற்றி எண்ணவும், கூடவில்லை போலும் ஏழைச் சுந்தரிக்கு!! இப்பொழுது தனது க்ஷேமம் ஒருவாறு நிச்சயம் ஆனதும், தான் தினமும் அன்னமிட்டு வளர்த்தின குழந்தைகளின் பால் அவள் மனம் சென்று, அவர்களின் க்ஷேமத்தைத் தோருவாள் ஆயினள். குழந்தைகளின் இருப்பிடத்தை ஒருவரிடமும் சொல்ல அமிர்தேசனுக்கு இஷ்டமில்லை. இராஜவிசுவாசியான நரசிம்ம வீரன் குழந்தைகள் உயிரோடு இருக்கின்றார்கள் என்று கேட்டால் விஜ்ஜலனும் அவன் வீரர்களும் அவர்களைக் கஷ்டப்படுத்துவார்கள் என்று எண்ணி, ஏதோ அந்தஸ்திலேயை அப்பொழுது சமாதானம் செய்ய எண்ணம் கொண்டு, "சுவர்ண விக்ரஹங்கள் போன்ற, பால் வாய்உலராக்குழந்தைகளைப் பார்த்தால் தொந்தரவு செய்வார்கள்!! நீ பயப்படாதே; கருணையில்லாக் காட்டாளும் குழந்தையென்றால் மனம் இறங்குவான்!! சிறுவர்களைக் குறித்து நீ வீணில் மனம் வருந்தாதே!! ஈசனருளால் அவர்களுக்கு ஒரு தீங்கும் விளையாது; நீ நடமுன்னால்" என்று அவளை முன்விட்டுத் தான் பின்னே நடந்து சென்றான். பிறகு இருவரும் ஒருவார்த்தையாவது பேசாமல் நீல மேகன் கடைக்கு வந்து சேர்ந்தார்கள்.

மாளிகைக்குத் தீ மூட்டியது

7-ம் அத்தியாயம்

நீலமேகச் செட்டியாருக்கு 50 வயது இருக்கலாம்; அவ்வூரில் பல சரக்குக் கடைவைத்து இருக்கின்றவன். அபினி, கஞ்சா, நாட்டுச்சாராயம், இவைகளும் இவனிடத்தில் கிடைக்கும். இத்துடன் வழிப்போக்கர்

களுக்குத் தண்ணீர் கொடுக்கப் பக்கத்தில் தண்ணீர்ப்பந்தலும் வைத்துக் கொண்டிருந்தான். தண்ணீர்ப்பந்தலில் ஜலம் குடிக்கும்போது சிற்றுண்டிகள் ஏதாவது ஜனங்களுக்கு வேண்டியிருந்தால், அவர்களின் கஷ்டத்தைப் பூர்த்திசெய்ய அவன் மனைவி அவ்விடத்திலே ஒரு பக்ஷணக்கடையும் வைத்துக்கொண்டிருந்தாள். நல்லமத்தியான வேளையில் அவ்வழிச்செல்வோர், நீலமேகன் தண்ணீர் பந்தலில் நுழைந்து, கைமேல் காசுகொடுத்தாவது, கடன்சொல்லியாவது இரண்டுகாசுக்கு சுண்டல், வடை, முறுக்கு, இவைகளை வாங்கித்தின்று, ஒரு படிஜலத்தையும் குடித்து ஏப்பம் விட்டபின், ஒருகாசுக்கு பாக்கு வெற்றிலை சுண்ணாம்பு வாங்கிமென்று கொண்டு போவது சர்வசாதாரணம். 40 வயதுள்ள அப்பெண்மணிக்கு பக்கத்து கிராமம் 18 லும் பழகின ஜனங்கள் உண்டு. ஒவ்வொருவருக்கும்—ஆண், பெண், எப்பாலாயினும் சரி—ஒரு புன்சிரிப்பும், ஒருதலையசைப்பும், ஒரு நல்லவார்த்தையும், தயாராய்வைத்து இருப்பாள். குழந்தைகள் என்றால் அவளுக்கு மிகப்பிரியம். குழந்தைகளுடன் யாராவது கடையில் நுழைந்து விட்டால்போதும்; தாய்தகப்பனாரைக் கேளாமலே ஒரு முழுமுறுக்கை எடுத்து அக்குழந்தையின் கையில்கொடுத்து விடுவாள். அக்குழந்தை பாதிக்குமேல் தின்றபிறகுதான் அதை இடுப்பிலிருந்து கீழேவிடுவாள். மீதியுள்ள பாதியைத்தின்று கொண்டு தாயாரிடம் போகும்போதுதான் அவளுக்குக்கையை விட்டுக் காசுகொடுக்க வேண்டுமென்பது தெரியும். மிகக் களைத்தவர்களுக்குத் தெளிவும், இன்னும் பலவகையான பானங்களும் தக்கவர்க்குத் தக்கபடி சமர்ப்பணம் செய்வாள் அம்மாது சிரோன்மணி. இரவில் பல சரக்குக்கடை சாத்திவிட்டால் வீட்டுப்பெரிய முற்றத்துக்கே பக்ஷணக்கடை வந்துவிடும். மூணுக்கு மூணுக்கென்று எரியும் விளக்கு வெளிச்சத்தில் தலையாரி குருவவீரனும், தாசன் நாகண்ணனும், தப்புக்கொட்டி மல்லனும், இன்னும் இவ்வகையான ஊர் மஹா ஜனங்களும், அஸ்தமித்து 10, 15 நாழிகைவரையில் அம்முற்றத்தில் சபைகூடி விடுவார்கள். இரவில் பொழுதுபோக்க அவ்வூர் ஏழை ஜனங்களுக்கு நீலமேகன் கடையே தக்கவிடமாய் அமைந்தது.

இத்தகைய லக்ஷணங்கள் பொருந்திய வீட்டில் அமிர்தேசனும், சுந்தரியும் நுழைந்தனர். ஒருமூலையில் மூட்டையை இறக்கி வைத்துவிட்டு நிமிர்ந்தான் அமிர்தேசன். 'படபட' வென்று குதிரைகளின் காலடிகள் ஓசைப்பட்டன. ஒரு நொடியில் குதிரைவீரர் கடைமுன் வந்து நின்றனர். நின்றவுடன் சற்றும் ஆலோசனை செய்யாமல் நேரே எல்லோரும் குதிரைவிட்டிறங்கி மாப்பிள்ளைகள்போல், முற்றத்தில் வந்து உட்கார்ந்து கொண்டனர். நீல மேகன் கடையில் கூடும் சபை]அவ்வளவு பலமாய்

இல்லை அன்றையதினம். அமிர்தேசனுக்குத் தான் முன் மாலைப்பொழுதில் வனத்தில்கண்டதளம் இதுவே என்பது விளங்கிற்று. ஏனெனில்'கோடாலிக்காம்பும்' அவ்வீரருள் ஒருவனாய் இருந்தான். அவ்வீரர்கள் சிறிதும் ஸங்கோஜப்படாமல் செட்டியாரிடமிருந்து தங்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் வரவழைத்துக் கொண்டார்கள். செட்டியார் மனைவியுடனும், இன்னும் மற்ற ஸ்திரீகளுடனும், முக்கியமாய் சமையல்காரி சுந்தரியுடனும், பலநாள் பழகினவர்கள்போல் கேலியாகவும், அன்பாகவும், பேசிக்கொண்டிருந்தனர். உண்பன உண்டபின், 'போர்வீரப் பெசாசு' களுக்குப் பானம் சமர்ப்பித்தான் நீலமேகன். இந்த ஆபாசங்களைப் பாராமல், தன் வேலையைப் பார்த்துக்கொண்டு குடிசைபோய்ச் சேரலாம் என்று, அமிர்தேசன் 'நல்லவனுக்கடையாளம் சொல்லாமல் போவதென்றபடி' மெதுவாய் எழுந்து நழுவப்பார்த்தான். நடவில் காவல் வைத்திருந்தபடியால் வழியில்லை வெளிப்புறப்பட; வீட்டின் பின்புறத்திலும் அவ்விதமே போர்வீரர் காவல் கார்த்துக்கொண்டு நின்றனர். வீட்டைவிட்டுப் புறப்படுவது அசாத்தியம் என்றுஅறிந்ததும் மறுபடியும் அமிர்தேசன் அவர்களிடையில் வந்து உட்கார்ந்துகொண்டான். சில நிமிஷம் கழித்து அவ்விடத்தைச் சுற்றிக்கொண்டு வந்த சௌடவேலன் அமிர்தேசனை இன்னான் என்று அறிந்து கொண்டு அவனிடம் பேசவந்தான். அவனிடம் தெரியாதவன் நடிப்பது ஆபத்துக்கு இடமாகும் என்றுஎண்ணி, அமிர்தேசன் அவன் கேட்டகேள்விகளுக்கு எல்லாம் சரியாகவே கவனமாய் பதில் உரைத்தான். சகஜமாய் மாளிகையைப் பற்றிப் பேச்சுப் பிறக்கவே அமிர்தேசன் "ஆம் அதிர்ஷ்டஹீனரான நரசிம்மவீரன் குழந்தைகள்தான் இப்பொழுது மாளிகையில் இருக்கின்றார்கள். பாவம்! தாய் தந்தையர் இல்லாப் பரதேசிகள்!! என்ன செய்வது தெய்வச்செயலுக்கு!!" என்றான். அப்பொழுதே விமலையாரையும் பற்றிச் சொல்ல ஆரம்பித்தவனாய், அவளைத்தப்புவிக்க இன்னுமொரு யுக்தி செய்ய எண்ணி "நீங்கள் எல்லாரும் மாளிகைக்குப் போகிறீர்கள் என்பதும், எதை நாடிச் செல்லுகிறீர்கள் என்பதும், நாடிய பொருள் கிடைப்பின் உங்களுக்கு என்ன இலாபம் கிடைக்கும் என்பதும், என்காதில் பட்டன. அவையெல்லாம் சரியே. ஆனால் சௌடப்பா ஒரு குறிப்புச் சொல்லுகிறேன் கேள். ஒருவேளை நான் சொல்வது தப்பாய் இருந்தாலும் இருக்கலாம். ஏன்? ஆயினும் நீ நம்பாவன்; உனக்குக் கிடைத்தால் நமக்குக் கிடைத்ததுபோல். ஒரு இரகசியம், காதோடுசொல்லுகிறேன். ஆனால் நிச்சயமில்லை தப்பாய் இருந்தாலும் இருக்கலாம்; ஏன்?"

சௌடவேலன்:—"என்ன அண்ணே, அது என்ன? சொல்லப்பா சீக்கிரம் சொல்லு; தப்போ சரியோ இருந்து சாகிறது; சொல் சங்கதியை.

இரகசியமானாலும் பயப்படாதே; என்னிடம் என்ன பயம் சொல்லு அண்ணே" என்று தபிக்கிறான்.

"தம்பி சௌடப்பா நீ மாளிகைக்குப் போனாய் ஆனால்,—" "ஹா—" சொல்லு அண்ணே—

"தம்பி நீ போனால் தான் சொல்லுகிறேன்; போனால் அங்கே—தேடினால், அங்கே ஒரு கிழவியை, என்ன தம்பீ கிழவி—இல்லாவிட்டால் கிழவியைப் போல் ஒரு உருவத்தைக் கண்டால், தெரியுமா தம்பீ, கண்டால் உடனே பிடித்துக்கொள், தெரிந்து கொண்டாயல்லவா? அதுதான் இரகசியம்!! கண்டால் பிடித்துக்கொண்டு குதிரை மேல் ஏற்றிக்கொண்டு ஒரு நொடியில் இங்கே கொண்டுவந்து விடு; நான் சொல்வது விளங்குகின்றதா?" என சௌடப்பன் சிரித்துக் கொண்டும், தலையை அசைத்துக்கொண்டும் அமிர்தேசனைத் தழுவிக் கொண்டான்.

வீரர்களெல்லாம் தத்தமக்கு வேண்டிய உணவுகளைத் தின்று பானங்களைக் குடித்தபின் அவ்விடமிருந்து புறப்படச் சித்தமானார்கள். வீரத்லைவன் குதிரையேறிப் புறப்படும்படி உத்திரவு கொடுக்கவே எல்லாரும் கிளம்பினார்கள். அமிர்தேசனும் சற்று நிதானித்து அவர்களைப் பின்தொடர்ந்தான். மாளிகையை நெருங்கினதும் அதைச் சுற்றிக் கொண்டார்கள். ஒரு நொடியில் பந்தங்களும் சுழந்துகளும் பிரகாசித்தன. அரைநாழிகைக்குள் மாளிகையின் நாற்புறத்திலிருந்தும் அடர்ந்த புகை கிளம்பிற்று. கடைசியாக அக்னிச்சுவாலை கீழ்ப் பாகங்களிலிருந்து மேல் கிளம்பிற்று. சிறிது நேரத்தில் அவ்வனந்தரமெல்லாம் அக்னிச் சுவாலையால் பிரகாசிப்பதாயிற்று. "சரி எல்லாம் ஆய்விட்டது. இனி குடிசைக்குப் போவோம்" என்று பெருமூச்சுக் விட்டுக்கொண்டு அமிர்தேசன் குடிசையை நோக்கிப் புறப்பட்டான். அப்பொழுது ஒரு குதிரை நாலுகால் பாய்ச்சலாய் ஓடும் சப்தமும், குய்யோ முறையோ, என்று ஒரு ஸ்திரீயின் அலறும் சப்தமும் கேட்டன. ஒரு நொடியில் சௌடவேலன் விமலையாரைத் தன் பின்னால் குதிரை மேல் வைத்து கெட்டியாய்க்கட்டிக் கொண்டு பறந்தோடுவதையும், அந்த அம்மாள் தன்னால் கூடியமட்டில் உதைத்துக் கொண்டும் அடித்து பிடுங்கிக்கொண்டும் போவதையும், கண்டான்.

இதைக் கண்டதும் அமிர்தேசனுக்குத் தன்னையறியாமல் சிரிப்பு வந்து விட்டது. தன் யுக்தியால் இக்கிழவியின் உயிரைக் காப்பாற்ற முடிந்ததே, என்று அவனுக்கு சந்தோஷம். சௌடவேலனுக்கோ, இப்பெண்மணியே பெண்வேஷம் போட்டுக்கொண்டிருக்கும் தைலப்ப மஹாராஜன் என்று நிச்சயமாயிற்று ஆகையால் தனக்குத்தான் இனாம் கிடைக்கப்போகிறது என்று எண்ணிக்கொண்டு தன்னால் கூடியமட்டும் வேகமாய்ப் பறந்தோடினான்.

வெங்கட்ட சுப்பிரமணிய சர்மா.

கடல் பஞ்சு.

SPONGE.

கடல்பஞ்சு என்பது ஒரு செதில்னால் அமைக்கப்பட்ட பிராணி அன்று. பல செதில்களினால் அமைக்கப்பட்ட பிராணி.

மேல்தோலென்றும் உள்தோலென்றும் பிரிவினை உண்டு.

மேல்தோல் ஸ்பரிசத்துக்கும் உள்தோல் அன்னபானாதிகளை உட்கொள்ளும் பொருட்டும் யேற்பட்டிருக்கிறது.

கடலில் தரைமட்டத்தில் பாறைகளில் ஒட்டி வேரூன்றி முளைக்கும் ஒரு விதப்பூண்டு போலிருக்கும். இத்தேக அமைப்பால் பவழப்பிராணி ஒத்திருக்கிறது.

கடல் பஞ்சுக்கு தேகமுழுமையும் பொத்தல்கள் உண்டு. உட்தோலில் அமீபாபோன்ற செதில்கள் உண்டு.

அவைகளில் சில பெரிய துவாரங்களாகவும் இருக்கும். சிறு துவாரத்தின் வழியாக உள்ளே நீரை ஏற்றுக்கொண்டு பெருந்துவாரத்தின் வழியாக நீரை வெளியேவிடும். மத்தியில் ஒரு இடவெளி உண்டு. அதுதான் ஆகாரத்தையும் பிராணவாயுவையும் உட்கொள்ளவும் மலங்கழிக்கவும் இடமாக இருக்கிறது.

இது உட்கொள்ளும் ஆகாரமே. இது தாவரவர்க்கமல்ல. பிராணிவர்க்கமென்பதற்கு சாக்ஷியாயிருக்கிறது.

கடற்பஞ்சுப் பிராணியின் தேகத்துக்கு வலுக்கொடுக்கும் பொருட்டு நார்போன்ற பதார்த்தம் உள்ளே உண்டாகிறது. அதுதான் கடைசியில் அலசியெடுக்கும்படியான பஞ்சு. இந்த உறுதியான நார்பதார்த்தம் இல்லையாகில் வெறுந்தோலாக சுருங்கி கடலில் நிற்கமாட்டாமல் நிலை குலைந்துவிடும். கடல் பஞ்சு என்றால் எல்லாப் பஞ்சுகளும் வியாபாரச் சரக்கு ஆகாது.

மத்தியதரைக் கடலில் சில இடங்களில் தான் நல்ல விலையுயர்ந்த பஞ்சுகள் கிடைக்கின்றன. பஞ்சினத்தில் ஒருஜாதி நல்ல ஜலத்திலும் வசிக்கும். நம்நாட்டில் சில குளங்களிலும், பெரிய கிணறுகளிலும் பாசம் போல் கற்களை ஒட்டி முளைக்கும். அவைகளைப் பிடுங்கி முகர்ந்து பார்க்கிடத்து வலைநாற்றம் நாறும். இப்பஞ்சு ஒன்றுக்கும் உபயோகமில்லை. நம் தேசத்து கடல்களில் அநேகவிதம் பஞ்சுகள் வசிக்கின்றன. அவைகள் ஒன்றுகூட வியாபாரச் சரக்காகும் யோக்கியதை பொருந்தினதாகயில்லை.

என். எஸ். ஜம்புநாதன், B.A., L.T.F., Z.S.

ராஜ சக்கரவர்த்தியின் அரண்மனைச் செலவு.

"காலஞ்சென்ற 7-வது எட்வர்ட் சக்ரவர்த்தியைப்போல வீட்டுச் செலவுகளில் அவ்வளவு சிக்கனமான எந்த பிரிட்டிஷ் அரசரும் இருந்ததில்லை. என்றாலும் ஏழாவது எட்வர்ட் சக்ரவர்த்திக்கு அவருடைய தாயாருக்குக் கொடுத்துக் கொண்டு வந்ததைவிட அதிகப் பணம் செலவுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது.

விக்டோரியா மகாராணி விண்ட்ஸர் மாளிகையில் வசித்துவந்தபொழுது, அடுப்பு மூட்டுவதற்கு மட்டும் ஒரு நாளுக்கு 500-பவுன் செலவாயிற்றென்று சொல்லப்பட்டது. அத்தொகை உயர்த்திச் சொல்லப்படவேயில்லை. உள்ளபடியே சொல்லப்படுகிறது. விக்டோரியா மகாராணியாருக்குச் சொந்தச் செலவு அதிகமாயிருந்ததில்லை.

விக்டோரியா மகாராணியாரின் அரண்மனையில் அளவுக்கு மிஞ்சின வேலைக்காரர்கள் இருந்து வந்தார்கள். விக்டோரியா மகாராணியார் காலையில் படுக்கையைவிட்டு எழுந்திருந்தவுடனே ஒரு கப்பு கோக்கோ பருகுவதுண்டு; அதற்காக மூன்று ஸ்திரீகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

எட்வர்ட் மகாராஜாவுக்கு சொந்தச் செலவுக்கு அவருடையதாயாரைவிட அதிகப்பணம் வேண்டியிருந்தது.

விக்டோரியா மகாராணியார் விருந்தினர்களைச் சாப்பாட்டுக்கு ஜாஸ்தியாக அழைக்கும் வழக்கத்தை வைத்துக்கொள்ளவில்லை. எட்வர்ட் சக்கரவர்த்தியோ வருஷம் முழுவதும் விருந்தினர்களை அழைத்த வண்ணமாகவேயிருந்தார். எட்வர்ட் மன்னன், ஒருவருஷத்தில் தம் தாயாரைவிட 10 மடங்கு அதிகமான வெகுமதிகளைக் கொடுத்துவந்தார்.

எட்வர்ட் மன்னன் ஒரு பெரிய வேட்டைக்குதிரையை வைத்திருந்தார். அவருக்கு வேட்டையாடுவதில் பிரியம் அதிகம். அவர் உடுப்பு விஷயத்தில் மற்ற அரசர்களை விட அதிகச்செலவு செய்வார்.

நம ஜார்ஜ் மன்னர் செலவில் பலவித்தத்தில் தம்பிதாவை ஒத்திருக்கிறார். நம் அரசர் வருஷத்திற்கு 125800-பவுன் சிப்பந்திகளுக்கும் மற்றச்சில்லரைச் செலவுக்கும் பட்டுவாடா செய்கிறார். இத்தொகையில் உத்தியோகஸ்தர்கள் வேலைக்காரர்கள் அரண்மனைக்குச் சப்ளைசெய்யும் வியாபாரிகள், இவர்களுக்குக் கொடுக்கப்படும் பணம் சேர்ந்திருக்கிறது.

நம் அரசருக்கு, குதிரைகளுக்கும், மோட்டார்களுக்கும் வருஷம் ஒன்றுக்கு 20000 பவுன் செலவாகிறது. சமீபத்தில் ஒருவருஷத்தில்

சோப்புக்கு மட்டும் 491 பவுன் செலவாயிற்று." துணிகள் வெளுப்பதெல்லாம் அரண்மனையிலேயே நடக்கவேண்டும்.

டாக்டர்களுக்கும் மருந்துகளுக்கும் வருஷத்தில் 2700 பவுன் செலவாகிறது. நிலக்கரிக்கும் விறகுக்கும் 1000 பவுன் செலவாகிறது. நம் சக்கரவர்த்தியின் வீட்டிற்கு வருஷத்தில் 193000 பவுன் செலவுக்கு வேண்டியிருக்கிறது.

விக்டோரியா மகாராணியாருக்கு அப்பங்களும் மிட்டாய்களும், லண்டனிலுள்ளவர்கள் தயார்செய்து சப்ளை செய்துவந்தார்கள். எட்வர்ட் மகாராஜா பட்டத்திற்கு வரவே, எல்லாம் மாற்றப்பட்டது. அரண்மனை சமையல் மேற்பார்வை பார்ப்பவருக்கு வருஷத்திற்கு 2000 பவுன் சம்பளங் கொடுக்கப் பட்டது. அவருக்குக் கீழ் பல சமையல் காரர்கள் வேலை செய்து வந்தார்கள். அவர்களைக் கொண்டுதான், அரண்மனைக்கு வேண்டிய போஜன பதார்த்தங்கள், அப்பம் முதலியவை அந்த சீப் (Chief) தயார் செய்யும்படி செய்து சப்ளை செய்வார்."

நீராவியின் வல்லமையை முதலில் அறிந்த கதை

STORY OF A TEA-KETTLE.

யூரோப் கண்டத்தில் ஸ்காத்லாந்து தேசத்தின் மேற்றிசையிலுள்ள க்ரீனக் என்னும் பட்டணத்தில் சாதாரணமான ஒரு வீட்டில் இதற்கு நூறுவருஷங்களுக்கு முன் ஒரு நாள் மாலைநேரத்தில் அவ்வீட்டிலுள்ளவர் குளிருக்குச் சாந்தியாய்த் தேத்தண்ணீர் காய்ச்சிச் சாப்பிடயத்தனித்தார்கள். அவ்வீட்டில் முதிர்ந்த வயதுள்ள ஒரு ஸ்திரீ அங்குமிங்கும் பரபரப்பாய் நடந்துபோய் உண்கலங்களை மேசையின் மீது பரப்பி, ரொட்டிகளைத் துண்டு துண்டாக்கி வெண்ணெயைத் தடவிவைத்தாள். குளிருக்கும் இதமான உஷ்ணமுண்டாக்க நெருப்பு மூட்டம் போட்டிருந்தது. அப்படிப்போட்டிருந்த இருப்படுப்பில் வெந்நீர்க்கரகம் ஒன்று வைத்துக் காய்ந்துகொண்டிருந்தது. தீ கொழுந்துவிட்டெரிய அந்தக் கரகத்திலிருந்து ஜலம் அதிக சூடேறி சற்றுத் தளபளவென்று கொதிக்கையில், கரகத்தின் மூக்கிலிருந்து உஸ்உஸ் என்று நீராவி புறப்பட்டது. மேற்சொன்ன கிழஸ்திரீக்கு இவையெல்லாம் பாராட்டத்தக்க ஓர் அதிசயமாகத் தோன்றவில்லை. நெடுநாளாய் இப்படித்தான் நெருப்பு எரிகிறதும் வெந்நீர் கொதிக்கிறதும் ஆவி எழும்புகிறதும் பார்த்திருக்கிறாள்; இனி மேலும் இப்படித்தான் இருக்கப்போகிறது; ஆகையால் புதுமையொன்றும் அவளுக்குத் தோன்றவில்லை.

அந்த் விருத்தை அடுப்பண்டை சென்று குனிந்து, கொதிக்கும் வெந்நீரை ஒரு பாத்திரத்தில் இறுத்து வடிகட்டுகையில், அந்த நெருப்புக்கு எதிரில் அவளுடைய பன்னிரண்டு வயதுள்ள ஜேம்ஸ் என்னுங் குமாரன் ஒரு தாழ்ந்த பீடத்தின் மீது உட்கார்ந்து முழங்காலின்மேல் முழங்கைகளை ஊன்றிக்கொண்டு, இரண்டு கைகளால் கன்னத்தைப் பற்றிக்கொண்டு எரிகிற நெருப்பையும் காய்கிற கரகத்தையும் அதினின்று எழும்புகிற நீராவியையும் கருத்தாய் உற்றுப் பார்த்துக்கொண்டு, அதைப் பற்றி ஒரே நினைவாய்ச் சிந்தித்துக்கொண்டு மற்றெல்லாவற்றையும் மறந்திருந்தான். இப்படி இந்தச சிறுவன் நெருப்பின் மீதே கண்ணாயிருக்கையில் தாயானவள் அவன்மீதே கண்ணாயிருந்து, நம்முடைய ஜெம்மியைப் பார்க்கிலும் சோம்பேறிப் பிள்ளை இவ்வுலகத்தில் வேறொன்றுண்டோ என்று எண்ணிக் கொண்டிருக்கையில், அயல்வீட்டுக்காரி ஒருத்தி அங்கேவர, அவளைப்பார்த்து: எங்கள் ஜெம்மியினுடைய மனப்போக்கைப் பார், அவன் அந்த நெருப்பண்டை உட்கார்ந்துகொண்டு அந்த வெந்நீர்க் கரகத்தையும் நீராவியையும் இமைகொட்டாமல் விழிபிதுங்கப் பார்த்துக்கொண்டிருக்கிறான். இப்படிப்பட்ட வீண் பிள்ளையைப்போல் மற்றொருபிள்ளை நீ எங்கேயாவது கண்டதுண்டா அம்மா என்று கேட்டாள். தாயின் கருத்து அப்படியிருநதது. தாய் சொன்னது உண்மைதான்: அந்தப்பிள்ளை பார்த்த பார்வையில் ஒரு விசேஷமிருந்தது. அந்தப் பார்வையின் மூலமாய் அவன் புத்தியால் பார்த்து கனவில் ஏதோ ஒரு பகட்டான அற்புதத்தைக் கண்டு வியக்கிறவனாய் அசைவற்று ஒரே நோக்கமாயிருப்பவன்போல் காணப்பட்டான். கரகத்திலிருந்து கொண்டல் கொண்டலாய் வெளிப்படுகிற நீராவி வாவரீ லேசாய் மேலெழுந்து கனம்குறைந்து விந்தைவிந்தையாய்ச் சுழன்று செல்வதையும், அந்த ஆவி கரகத்தின் மேல்மூடியை ஒவ்வொருதரம் கிளப்புவதையும், அப்பொழுது குப்புகுப்பென்று வெளிப்படுகிற ஆவியையும், கிளம்பின மூடி மறுபடி சத்தத்தோடு கரகத்தின் வாயில் படிவதையும் இவை முதலான விநோதங்களைக் கருத்துறப் பார்த்துக்கொண்டிருந்தான். அந்த நீராவிப்புகையில் ஒரு வல்லமை இருப்பதை அந்தச்சிறுவன் கண்டுகொண்ட மாத்திரத்தில் புதிதான ஒரு நினைப்பு தற்செயலாய் அவனுக்குப் பிறந்தது. அதாவது, கரகத்திலிருந்து புறப்படுகிற நீராவியின் முயற்சியைப் பார்த்தால் மனிதன் புத்திசக்திகளால் பஞ்ச பூதங்களைத் தன் வசப்படுத்திக் கொள்ளலா மென்பதற்கு இது ஒரு அறிகுறியாயிருக்கிற தென்று நினைத்தான்.

அவன் இன்னும் அதைப்பற்றியே வேறுவேறாய்ச் சிந்தித்துவருகையில், அதுவரையில் ஒருவர் கண்ணுக்கும் தோன்றாமலும் ஒருவர் அறிந்

து சொல்லாமலுமிருந்த இந்த நீராவிச் சக்தியால் மரக்கலங்கள் சமுத்திரத்தில் காற்றின் உதவியில்லாமலும் பாய்விரிக்காமலும் விரைவாய் இயங்குவதுபோலும், நிர்மானுஷ்யமான காடுகளிலும் மணல் வெளிகளிலும் வண்டித்தொடர் வேகமாய் ஓடுவதுபோலும் அச்சிறுவன் கண்ணுக்குக் கனவில் காணும் காட்சிபோல் தோன்றிற்று. இவ்விதமாய் மனோராஜ்யம் செய்து கொண்டிருக்கையில் தாயானவள் அவனைப்பார்த்து: "ஜெம்மீ! ஜெம்மீ!! இப்படித் திரும்பிப்பார்; தேத்தண்ணீர் குடிக்க இங்கு வந்து உட்காரமாட்டாயா? நீ மறுபடி அந்த நெருப்பையே உற்றுப்பார்த்துக்கொண்டிருப்பாயாகில் உன் தலைநோகக் குட்டுவேன்" என்றாள்.

அந்தச் சிறுவன் தன் தாய் கோபமாய்ச் சொன்னதைக்கேட்டு, உடனே எழுந்திருந்து சொன்னபடி செய்தான். அவன் தான் பிற்காலத்தில் 'ஸர்ஜேமஸ்வாட்' என்னும் பேரும் பிரக்கியாதியும் பெற்ற புத்திமான். நீராவியின் சக்தியை மனிதருக்குப் பலவிதத்தில் உபயோகமாகும்படி முதல்முதல் அறிந்து வழிகாட்டினபடியால், இந்த மஹாபுருஷனுக்குத் துரைத்தனத்தார் 'ஸர்' என்னும் பட்டங்கொடுத்து பெருமைப்படுத்தினார்கள். இந்த நீராவியானது நமது உலகத்தைப் புதிய உலகமாக மாற்றிவிட்டதென்பதற்குச் சந்தேகமில்லை. அது மனிதனுக்குச் செய்யாத காரியம் ஒன்றிருக்கிறதா? அது நெடுநாளைய கப்பல்யாத்திரை சில நாளுக்குள் முடியும்படி அவனைத் துரிதமாய்ப் பெருங்கடல்மேல் ஏற்றிக்கொண்டுபோகின்றது. அவனுடைய ஆகாரத்திற்காகக் கோதுமைமுதலான தானியங்களை அரைத்துக் கொடுக்கின்றது. அதுபருத்திநூலும் பட்டுநூலும் நூற்று அவனுக்கு வஸ்திரம் நெய்து கொடுக்கின்றது. அவனுக்கு இரும்பை உலையிலிட்டுக்காய்ச்சிப் பதப்படுத்தித் தருகின்றது. பயிருக்குத் தண்ணீர் இறைக்கின்றது தரையிலும் நீரிலும் பெருஞ்சுமையையெடுத்துச் செல்லுகின்றது. ஆயிரங் குதிரைகளின் பலத்துக்குச் சரியான பலமுடையதாயிருப்பினும் அந்த நீராவியானது யந்திரத்தால் ஒரு சிறுவன் கைக்கு அடங்கவும், சொன்னபடியெல்லாம், செய்யவும், இப்படிக் கீழ்ப்படிந்து பணிவிடை செய்கின்றது. மனிதனுடைய சுகானுபவம் ஏதேதுண்டோ அதையெல்லாம் அது நொடியில் அமைக்கின்றது. சாஸ்திரத்திற்கு வெற்றிக்கொடியான இந்த நீராவியின் சக்தியைப் பற்றிப் பேசினவர்களை பலர் ஏளனஞ்செய்தகாலமும் ஒன்றிருந்ததல்லவா! ஒரு சிறுபிள்ளை அடுப்பு நெருப்பிற்கு எதிரில் உட்கார்ந்தபோது விநோதமாய்ப் பார்த்துக் களித்த சிறு கரகத்தினின்று நூலிழைபோல் வெண்ணிறத்தோடு எழும்பிய நீராவிப்புகைதானே என்று அற்பமாக நினைத்த நாள்களும் இருந்தனவன்றோ!

பதார்த்த விஞ்ஞான சாஸ்திரமென்பது இன்னும் இளமைப்பருவத்திலிருந்தாலும் இந்தப் பருவத்திலேயே மனிதனுக்கு மேற்சொல்லிய

பெரிய காரியங்களைச் செய்யுமானால், இது யௌவனத்தில் என்னென்ன அற்புதங்களைச் செய்யமாட்டாது! பூர்வத்தில் தோன்றின, இந்தச் சாஸ்திரத்தை விசேஷமாய்ப் பயின்று விருத்தி செய்வார்களல்லவா?

இவ்விதமாய் இங்கிலாந்து தேசம் சாஸ்திர ஞானத்திலும் சிற்பவேலையிலும் மேன்மை பெற்றிருக்கின்றது. இதிலும் மேன்மையானது மற்றொன்றுண்டு. அதாவது அத்தேசம் தெய்வபக்தியிலும் பதி நெறியிலும் தலைமைத்தன்மை பெற்றிருக்கின்றது. தனக்கிருக்கும் குலத்தையும் செல்வத்தையும் உண்மைக்குத் தாரமாய்ப் பயன்படுத்தி தவிக்கிறதினாலே தான் தேவானுக்கிரஹம் பெற்றுச் சமீபத்திலும் தொலைவிலுமுள்ள பல தேசங்கள் சத்துரு பயமில்லாமல் தம்தம் சுகத்தையும், விருத்தியையும், சுவாதீனத்தையும் மேற்படி தேசத்தினுதவியால் அடையலாமென்று எதிர் பார்க்கும்படியான செல்வாக்குடையதாய் விளங்குகின்றது.

மேற்சொன்ன விருத்தாந்தம் கட்டுக்கதையல்ல; ஜேம்ஸ் வாட் என்பவன் 1736-ஸுல் ஜநித்தவன். அவனுக்குப் பன்னிரண்டாவது வயதில் இந்த நீராவியைப் பற்றிய விருத்தாந்தம் நடந்தது. அவன் மேற்சொன்னபடி ஸ்காத்லாந்தில் க்ரீநக்கப் பட்டணத்திலுள்ள அல்ப வியாபாரியின் குடும்பத்தில் பிறந்துவளர்ந்தவன். அசைப்புத்தகமும் கிறிஸ்து வேதப்புத்தகமும் தவிர வேறுபுத்தகங்களைப் படித்தவனல்ல; ஆயினும் நுட்புத்தியும் பேரறிவும் ஒரே தேசத்துக்காவது ஒரே காலத்துக்காவது உரியனவல்லவே. எந்தத் தேசத்திலும் காலநியதியில்லாமல் அவை தோன்றலாமல்லவா. பூர்வத்தில் ஹிந்துதேசத்தில் காளிதாஸனும், க்ரீஸ் தேசத்தில் ஹோமரும் மஹாகவிகளாய்த் தோன்றியிருந்தனர்; அப்படியே இங்கிலாந்து தேசம் இக்காலத்தில் மில்டன் என்னும் கவிராஜனைப் பெறவில்லையா? அலெக்ஜாந்திரியாவில் முற்காலத்தில் ஒரு மஹாவீரன் உண்டாய் பல வெற்றிகளைப் பெற்றானென்று சிறப்பித்தால், ஸ்காத்லாந்திற்கு ஜேம்ஸ் வாட் என்னும் அதிமேதாவி தோன்றி உலகத்தைப் புது உலகமாக மாற்றினதைச்சிறப்பித்துச் சொல்லலாமே. ஜநவிநோதினி.

மிஸ்டர் கோகலேயின் மரணத்தைப்பற்றி ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி.

மிஸ்டர் கோகலேயின் மரணத்தைக் கேட்டு ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி துக்கப்பட்டு அடியிற்கண்ட கடிதத்தை சமாச்சாரப் பத்திரிகைகளுக்கு எழுதியிருக்கிறார்;—கோகலே இறந்துபோய் விட்டார். இந்த சமாச்சாரத்தை நண்பர் ஒருவரிடமிருந்து கேள்விப்பட்டேன். பாரத

மாதாவுக்கு நேரிட்டிருக்கும் சோகத்திற்கும் நஷ்டத்திற்கும் அளவில்லை. நான் இதைவிட அதிகமாகச் சொல்லக்கூடியது வேறென்ன இருக்கிறது? என் அருமை கோகலேயினால் இந்தியாவுக்கு இன்னும் எவ்வளவோ கைங்கரியங்கள் செய்யப்படும் என்று நான் எண்ணியிருந்த எண்ணமெல்லாம் வீணாய்ப் போயின. என்றாலும என் மனம் ஆறுதல் அடைவதற்கு ஒரு வழி ஏற்பட்டிருக்கிறது. அவருடைய மரணம் இந்தியர் எல்லாருக்கும் பெரிய விசனத்தையும் நஷ்டத்தையும் உண்டாக்கியிருக்கிறது. பாரத மாதாவுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்ய வேண்டுமென்று எண்ணங் கொண்டிருந்ததையும் அவர் செய்திருக்கும் நன்மைகளையும் ஜனங்கள் நன்றாக உணர்ந் திருக்கிறார்கள். இந்தியாவின் மீது அபிமானம் வைத்திருக்கும் வேறு சிறுவர்கள், அவர் செய்து வந்த மகா கைங்கரியத்தைப் பின்பற்றுவது மல்லாமல், அவர் செய்து முடியாமல் விட்டுப்போன தேச ஊழியக் காரியங்களை மேற்கொண்டு செய்து முடிப்பார்கள் என்று நம்புகிறேன். இவ்விதமாய் என் மனதில் ஒரு தேறுதலை உண்டாக்கிக் கொண்டாலும், அவருடைய மரணத்தைப்பற்றிய நினைவு என் மனதில் தோன்றின வுடனே, என்னையறியாமல் துக்கம் உண்டாகிறது. அவர் 70-வருஷகாலம் (புருஷ ஆயுசு) ஜீவனோடிருந்திருந்தால் அவர் இன்னும் எவ்வளவோ நன்மைகளைச் செய்திருப்பார். அவர் இறந்துபோன துக்கம் என் மனதை விட்டு அகலமாட்டேன் என்கிறது.

காட்டுயானைகளின் உபத்திரவம்.

வங்காள மாகாணத்திற்குக் கிழக்கிலுள்ள அஸ்ஸாம் மாகாணத்தில் பல காட்டுயானைகள் இங்கு மங்கும் திரிந்து, பயிர்பச்சைகளை அழித்து விடுவது மன்றி, பல உயிர்ச்சேதமும் விளைப்பதாகத் தெரிய வருகிறது. அந்தயானைகளில் ஒன்றோ தன்னைத்தாக்க வருபவர்களை யெல்லாம் வெருட்டு விரட்டி விடுகிறதாம். ஆகவே அத்தகைய கொடிய யானைகளைக் கொன்றுபோடுபவர்களுக்கு ஏற்றவாறு இனாமளிப்பதாக அங்குள்ள அதிகாரிகள் அறிவித்திருக்கின்றனர்.

ஸிந்து நதியில் வெள்ளம்.

ஸிந்து நதியில் திடீரென்று வெள்ளம் புறப்பட் டிருப்பதாய்த் தெரிகிறது. பஞ்சாப்பில் கனமழை பெய்து அந்த நாட்டு ஆறுகளிலெல்லாம் வெள்ளம் புறப்பட் டிருக்கிறபடியால் அவ்வாறுகள் வந்து கலக்கும் ஸிந்து நதியில் இன்னும் அதிக வெள்ளம் புறப்படக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அகால ஜலப்பெருக்கால் பஞ்சாப்

மாகாணத்தில் அறுவடையாகும் தருணத்திலிருக்கும் கோதுமை மாருலுக்குச் சேதம் நேரிடக்கூடுமென்று அஞ்சப்படுகிறது.

யானையும் வைர மோதிரமும்:—அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களிலுள்ள சின்சினாட்டி யென்னும் பட்டணத்தில் ஒரு கனவான் தனக்குப் பழக்கமான ஒரு யானைக்கு நிலக்கடலையைத் தமது கையில்வைத்துக் கொண்டிருந்தார். அந்த யானை அவர்கையிலிருந்து கடலையைப் பொறுக்கித் தின்றுகொண் ருந்தபொழுது, அவர் கைவிரலிலிருந்த விலையுயர்ந்த வைர மோதிரத்தையும் பிடுங்கி வாயிற் போட்டு விழுங்கிவிட்டது. மோதிரம் யானைவயிற்றில் எங்கிருக்கிறதென்று அறிவதற்காக அதனை எக்ஸ்ரேஸ், என்னும் ஜோதியை உபயோகித்து பொட்டக்கிராப் படம் எடுத்தார்கள். அப்பொழுது அந்த மோதிரம் யானையின் தொண்டையின் மேலும் கீழும்செல்ல மார்க்கமில்லாமல் இருப்பதாக தெரியவந்தது. உடனே ஒரு மிருக வைத்தியரின் உதவியைக் கொண்டு அம்மோதிரம் யானையின் தொண்டையிலிருந்து எடுக்கப்பட்டது. அந்த யானை மிகுந்த கஷ்டமடைந்ததென்று தெரிகிறது. (ஜ—னி.)

விதிஷாவில் ஒரு பூர்வீக தேவாலயம்.

க்வாலியர் சமஸ்தானத்தில் பேஸ்நகரம் என்று ஒரு சிறியடவுன் உண்டு பழையகாலத்துச் சின்னச்சோதனை சாஸ்திர நிபுணர்கள் அதைப் பரிசோதனை செய்ததில் அந்த டவுன் பூர்வகாலத்து விதிஷா என்ற நகரம் என்று கண்டுபிடித்தார்கள். விதிஷா என்ற நகரம் காளிதாஸ மகாகவியால் எழுதப்பட்ட மேகதூதம் என்ற நூலில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. கி. மு. இரண்டாவது நூற்றாண்டில் அந்நகரில் கட்டப்பட்ட ஒரு கோவிலின் கருடத்துவஜம் ஒன்று கண்டெடுக்கப் பட்டதாகவும் டாக்டர் மார்ஷல் சொல்லுகிறார். கருடத் துவஜத்திற்கு எதிரில் நீளமான சுவர் ஒன்று எழுப்பப்பட் டிருந்ததென்று சூப்ரின்டெண்டண்டு மிஸ்டர். D.R பண்டார்ரா சொல்லுகிறார். கூலி ஆட்கள் கிடைக்காததினால் சோதனை வேலைகள் நிறுத்தப்பட்டன. பழைய காலத்தில் வாசுதேவ ஆலயம் என்று சொல்லப்படும் ஆலயத்தின் இடம் அதுவாயிருக்கலாம் என்று டாக்டர் பந்தர்க்கர் சொல்லுகிறார்.

கும்பகோணம் நாஷனல் இந்தியச் சங்கம்.

ஸ்திரீகளின் கூட்டம்.

கும்பகோணம் கவர்ன்மெண்டு காலேஜ் லெக்சரான ராவ் பகதூர் T. சங்கரராவின் மனைவியான ஸ்ரீமதி. காமாட்சிபாய், கும்பகோணம் டபீர் கீழ்த்தெருவிலுள்ள அவரது சொந்தக் கிரகத்தில் மேற்கண்ட

சங்கத்தைச் சேர்ந்த ஸ்திரீ மெம்பர்களுக்கு, போன வியாழக்கிழமையன்று ஒரு வீட்டுக் கச்சேரியை நடத்தினார். பல ஸ்திரீகள் வந்திருந்தார்கள். விருந்து செய்தவரின் குமாரத்தியான ஸ்ரீமதி. கோதாவரி பாய் வந்த விருந்தினர்களை உபசரித்துப் பேசினார். ஸ்திரீகளுக்கிருக்க வேண்டிய சகல குணங்களிலும் உத்தமமான குணமாகிய கற்பு என்ற குணம் பூர்வகாலத்திலிருந்த நளாயணி முதலிய ஸ்திரீகளிடத்தில் விளங்கி வந்ததற்குக் காரணம் அவர்களின் படிப்பேயாகும் என்று ஸ்ரீமதி ஜானகி அம்மாள் பேசினார்.

இந்திய ஸோல்ஜர்களின் குடும்பத்தாருக்கு உதவி.

அநாதையாய்ப் போகும் இந்திய ஸோல்ஜர்களின் மனைவிகளுக்கும் அந்த ஸோல்ஜர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த பெண்மக்களுக்கும் உதவிபுரிவதற்காக யுத்தம் முடியும்வரையில் மாதந்தோறும் 300. ரூபாய் கொடுப்பதாக "மஹாராணி அதிராணியார்" அறிவித்தனர். அந்த உதவியை ராஜப்பிரதிநிதி பேரன்புடன் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

இந்திய ஸோல்ஜர்களின் அனாதைக் குழந்தைகளுக்கு உதவி.

இந்திய ஸோல்ஜர்களின் அநாதைக் குழந்தைகளுக்கு வேண்டிய சௌகரியங்களை செய்வதற்காக யுத்தம் முடிவடையும் வரையில் ஒவ்வொருமாதமும் 200 ரூபாய் கொடுப்பதாக மஹாராஜ் அதிராய குமாரர் உதயசந்த மஹதாபம் அவரது சகோதரிகளுக்குப் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுடைய உதவியை ராஜப் பிரதிநிதி மிகுந்தஅன்புடன் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

பம்பாய் மாணவர்களின் சகோதரச்சங்கத்தின் மிஸ்டர் வாச்சா

பம்பாய் மாணவர்களின் சகோதரச் சங்கத்து மெம்பர்கள் மிஸ்டர் கோகலேயின் குடும்பத்தாருக்குத் தங்கள் அநுதாபத்தைத் தெரிவிக்க மீட்டிங்க்கூடிய சமயம் மிஸ்டர். கோகலேயின் ஆப்த சிநேசிதராகிய மிஸ்டர். வாச்சா அக்கிராசனம், வகித்தார். அவர் அச்சங்கத்து மெம்பர்களுக்குச் சொன்ன புத்திமதி குறிப்பிடத்தக்கது. ஆனரெபில் மிஸ்டர் கோகலே செய்துவந்த நல்லவேலையை நீங்கள் பாராட்டுவதுண்மையானால், உங்களுடைய செய்கைகள் அவருடைய செய்கைகளைப்

போலவே யிருக்கட்டுமென்றார். தேச க்ஷேமமாகிய கட்டிடத்தைத தாங்கி நின்ற தூணாக மிஸ்டர். கோகலேயிருந்து வந்தாரென்று மிஸ்டர் வாச்சா சொன்னார்.

ஒரு தேர்ந்த தையற்காரி:—பம்பாய் வாசியான சம்புபாய் என்னும் ஒரு மகாராஷ்டிரப் பெண் பட்டுநூலால் தையல்வேலைகள் செய்து சித்திரங்கள் அமைப்பதிற் சிறந்தவள். இவள் தான் செய்த சில தையல்வேலைகளைச் சமீபத்தில் போய் பாலில் நடந்த பொருட்காட்சிக்கு அனுப்பினாள். இவளது அற்புத வேலைகளின் அழகை மெச்சிய போப்பால்பீகம் மகாராணியார் மிகுந்த சந்தோஷமடைந்தவராய் இந்தப் பெண்ணை உடனே தந்திவாயிலாய் வரவழைத்து ஒரு தங்கப் பதக்கம் கொடுத்ததோடு தமது உருவம்போன்ற வேலையொன்று செய்து தரும்படியும் உத்தரவு செய்தாராம்.

சென்னை கவர்ன்மெண்டின் தொழில் ஸ்காலர்ஷிப்.

சென்னைக் கவர்ன்மெண்டார் இந்த வருஷம் தங்கள் தொழில் ஸ்காலர்ஷிப்பை சிற்பமும், நகர் நிர்மாணமும் படித்துவரப் பிரியப்படுகிற இம் மாகாணச் சிறுவனொருவனுக்குக் கொடுப்பதாய்த் தீர்மானித்திருக்கிறார்கள். சென்னை வியாபார சபை தென்னிந்தியா வியாபாரசபை, இந்திய வர்த்தகக் கூட்டம், இவைகளின் அபிப்பிராயத்தையும் வேறு சில வியாபாரக் கம்பனிகளின் அபிப்பிராயத்தையும் கேட்டுக்கொண்டு அவ்விதம் தீர்மானம் செய்திருக்கிறார்கள். அந்த ஸ்காலர்ஷிப்பைப் பெறவிரும்புவோர் இஞ்சினீரிங்க் பட்டதாரிகளா யிருக்கவேண்டுமென்றுஞ் சொல்லி யிருக்கிறார்கள். இதெல்லாம் சரிதான். ஸ்காலர்ஷிப்பைப் பெற்றுச் செல்லும் இந்தியச் சிறுவர் சில நிர்ப்பந்தங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டியிருக்கும். அவைகளைப் பொறுத்துக்கொண்டு வாசித்துவிட்டு வந்தபிறகு பட்ட கஷ்டத்துக்குச் சரியான உத்தியோகம் கிடைக்குமென்ற நிச்சயமுண்டானால் நலமாயிருக்கும்.

படிப்பு

"ஸ்திரீகள் கல்வி கற்றிருந்தால் தான் இந்தியாவில் படிப்பு அபிவிருத்தியடையும். சிறிய பிள்ளைகள் தாயாரால்தான் நல்ல படிப்பையும் நல்லொழுக்கத்தையும் அடையவேண்டி யிருக்கிறது. ஆனால் அவர்களுக்கு சுத்தமாயிருக்கும் வழி, வீட்டுக் காரியங்களைத் திறமையாய் நடத்தும் உபாயம், சிக்கனமாய் ஜீவனஞ்செய்வதற்கு வேண்டிய வழி குழந்தைகளை காப்பாற்றும் வழி முதலியவைகளைப் பற்றிப் போதிக்கும் படிப்புமட்டும் தெரிந்தால் போதுமானது. அவர்களுக்கு வரையறையுள்ள சுதந்தரம்தான் கொடுக்கப்படவேண்டும்.

கைம்பெண்களுக்கு மருத்துவச்சித் தொழிலையும், நர்ஸ் தொழிலையும் கற்றுக் கொடுப்பதற்கு ஸ்கூல்கள் அவசியம் வேண்டும். பூர்வகாலத்தில் கைம்பெண்கள்தாம் மேற்கண்ட தொழில்களைக் கற்று உலகத்திற்குப் பிரயோஜனமான காரியங்களைச் செய்து வந்தார்கள்.

“மடாதிபதிகளும், ஜெமின்தார்களும், வியாபாரிகளும் பண உதவி செய்தால், மேற்படி விஷயங்களைத் தமிழிலும் இங்கிலீஷிலும் கற்பிப்பதற்கு வேண்டிய ஸ்கூல்களை ஸ்தாபித்து நடத்தி வரலாம். அவ்வித ஸ்கூல்களை நடத்துவதற்கு கவர்ன்மெண்டாரின் உதவியை நாடவேண்டியதில்லை” என்று சித்தூர் கான்பிரஸில் மிஸ்டர் S. சீனிவாசய்யங்கார் பேசினார்.

உணவுப் பொருள்களின் விலையேற்றமும் ஏழைகளுக்கு உதவியும்.

பஞ்சாப் மாகாணத்தில் உணவுப் பொருள்கள் அதிக விலைக்கு விற்பதால் ஏழை ஜனங்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்களென்று தெரிகிறது. ஆகவே உணவுப் பொருள்களை விலைக்குவாங்கி சரியான விலைக்கு அவைகளை ஏழை ஜனங்களுக்கு விற்பதற்காக இந்தியக் கஷ்ட நிவர்த்தி பண்டிலிருந்து லட்சம் ரூபாய்க்கு மேல் கொடுக்கப் படுமென்று தெரிய வருகிறது. அவ்வாறு உதவிசெய்ய வேண்டியது மிகவும் பொருத்தமும் அவசியமுமாகும்.

இனி, அம்மாகாணத்திலிருந்து வெளியிடங்களுக்கு உணவுப் பொருள்களுக்கு ஏற்றுமதி யாவதைத் தடுத்தால் உணவுப் பொருள்களின் விலையானதுகுறைய மார்க்கமுண்டு.

* * * *

“காலம் என்ற பெரிய சமுத்திர அலை புரண்டு முன்சென்று கொண்டிருக்கிறது. தீங்கு செய்யும் பழமைகளை யொதுக்கி நன்மைசெய்யும் புதுமைகளைப் புகுத்த அது சக்தியுள்ளது. இதுவரையில் இந்து பிராமணர்கள் எத்தனையோ புதுமைகளுக்கு ஆக்ஷேபித்தும், அவைகள் அனுஷ்டானத்துக்கு வந்துகொண்டிருக்கின்றன. அப்படியே ருதுமதி விவாகமும், பழமைகாக்கும் இந்துக்கள் எவ்வளவு அலறினாலும், அனுஷ்டானத்துக்கு வருமென்பதில் சந்தேகமில்லை. இந்தியா பழையகாலத்தைப் போல் தனக்குள்ளே தானடங்கிய தேசமென்று கனவுகாணும் புத்திமான்களே புதுமைக்கு ஆக்ஷேபிக்கிறவர்கள். உலகம் செல்லும்வழியே நாமும் சென்றாலன்றி நமக்கு மீட்சியில்லை யென்ற உண்மையை இவர்கள் அறியாவிட்டாலும், இந்து சமூகத்தில் திடனும், சாமர்த்தியமும், ஊக்கமுமுள்ள தலைவர்கள் இதை முற்றிலும் உணர்ந்து முன் சென்றுகொண்டிருக்கிறபடியால், இந்து சமூகம் அதற்கு நன்மைசெய்யாத பல பழமைகளை அகற்றி, நன்மைக்கு அவசியமான புதுமைகளை ஏற்றுக்கொண்டு போமென்று நாம் நிச்சயமாயிருக்கலாம்” என சுதேசமித்திரன் அபிப்பிராயப்படுகிறது உண்மையே.

The Tamil Zenana & School Magazine.

மாதர் மனோரஞ்சினி.

“எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்”—ஔவையார்.

REGISTRAR O... 13 MAY 1915 MADRAS.

Vol. XVII | Madras March, 1915. | No. 3
புத்தகம் 17 | சென்னை மார்ச்சு௴ 1915௵ | இலக்கம் 3

திரவ பதார்த்தங்களின் வழியாய் உஷ்ணம் பரவுவதெப்படி?

திரவ பதார்த்தங்களின் வழியாயும் வாயுபதார்த்தங்களின் வழியாயும் உஷ்ணம் கண்டக்ஷனால் பரவுவதில்லை எனவே, பின் எவ்வாறு அவற்றுள் உஷ்ணம் பரவுகின்றது? ஒரு பரிக்ஷை செய்வோம். 4 அங்குலம் வாயகலமும், 6 அங்குலம் உயரமும் உள்ள மெல்லிய கண்ணாடிப் பாத்திரம் எடுத்துக் கொண்டால் நலம்; இல்லையேல் ஒரு கல்சட்டியாகிலும் கிடைக்குமா பாருங்கள். ஒன்றுமில்லாவிட்டால் ஒரு தகரப் பாத்திரமாவது போதும். அதில் முக்கால் வரிசை ஜலம் ஊற்றி, இலேசான மரப்பொடியையாவது, எரிந்த நெருப்புக் குச்சியின் நுனியில் இருக்கும் மெல்லிய கரிப்பொடியையாவது ஜலத்தில் போடுங்கள். பாத்திரத்தை ஜலத்துடன் ஒரு முக்காலிமேல் வைத்து நடுமத்தியில் விளக்கினால் காய்ச்சுவோம், கவனித்துப் பாருங்கள்; மாப்பொடியாவது, கரிப்பொடியாவது கண்ணுக்குப் புலப்படுகின்றதா? ஆம்; அவை மேலும் கீழும் போய்க் கொண்டேயிருக்கின்றன. மேலே கிளம்பும் தூசிகள் பாத்திரத்தின் நடுமத்தியில் காணப்படுகின்றன: கீழ்நோக்கிச் செல்லுகின்றவை பக்கங்களில் இறங்குகின்றன: கண்ணாடிப் பாத்திரமாய் இருந்தால் அத்தூசிகள் பாத்திரத்தின் நடுபாகத்தில் கீழிருந்து புறப்பட்டு நேரே மேல் கிளம்பி மறுபடி இப்புறத்திலோ அப்புறத்திலோ கீழிறங்கக் காணலாம். ஏன் தூசிகள் நகரவேண்டும்? ஜலம் அடித்துக் கொண்டு போகின்றது; சரியே; கண்டக்ஷன் ஆவதாய் இருந்தால் வஸ்துவின் அணுக்கள் நிலைமாறுவதே இல்லையென்றோம் அல்லவா? ஜலத்தின் அணுக்களோ மேலும் கீழும் போய்க் கொண்டிருப்பதனால் ஜலத்துள் உஷ்ணம் பரவுவது ‘கண்டக்

ஷன்' இல்லை யென்பது தீர்மானம் ஆகின்றது. கண்டக்ஷனைவிட முற்றி லும் வேறான இக்காரியத்துக்கு 'கன்வெக்ஷன்' என்பார் ஆங்கிலேயர், நாம், 'அணுக்கள் இடம் மாறி உஷ்ணம் பரப்புவது என்போம்.

ஆயின் கனபதார்த்தத்தில் கன்வெக்ஷன் ஏன் ஆகக்கூடாது; அதாவது அணுக்கள் இடம் மாறி உஷ்ணத்தை ஏன் பரப்பக்கூடாது? ஏனெனில் கனபதார்த்தத்தில் தாராளமாய் அணுக்கள் ஒன்றின்மீது ஒன்று நழுவிச்செல்ல வழியில்லை. ஜலபதார்த்தத்திலோ, அணுக்களை ஒன்று சேர்த்து பந்தப்படுத்திக் கொள்ளும் சக்தியாகிய 'கொகிஷன்' மிகக்குறை வாய் இருப்பதுபற்றி, அணுக்கள் இடம் மாறி நகருவது வெகு சுலபம். ஆகையால் நாம் பாத்திரத்தை உஷ்ணமாக்கத் தொடங்கினதும் விளக்கின் உஷ்ணம் பாத்திரத்துக்குப் போகின்றது. பாத்திரம் தன்னிடமிருக்கும்உஷ் ணத்தை ஜலத்துக்குக் கொடுக்கவே, அவ்விடத்தைச் சுற்றிலும் உள்ள ஜலம் சூடாகின்றது. உஷ்ணமான ஜலம் பக்கத்தில் உள்ள ஜலத்தைவிட இலேசாவதால், மேலே புறப்படுகின்றது. அள்ளைப்புறங்களில் உள்ள குளிர்ந்த ஜலம், உஷ்ணமடையும் பொருட்டு பாத்திரத்தின் அடிப்புறம் வருகின்றது. அந்த ஜலம் முன்போலவே உஷ்ணமடைந்து மேல் கிளம்பு கின்றது. இவ்விதமாய் உஷ்ணமான ஜலம் மேலே போகவும், குளிர்ந்த ஜலம் கீழே வரவும், ஜலத்துள் 'ஓட்டம்' ஏற்படுகின்றது. இவ்விதமான ஜலத்தின் ஓட்டத்திற்கு Convection currents என்று பெயர் கொடுத்து இருக்கின்றனர்.

திரவ பதார்த்தங்களுக்கு கண்டக்ஷன் குறைவாயிருப்பினும் கன் வெக்ஷனால் சூடு வெகு எளிதில் ஜலத்தின் வழியாய் பரவுகின்றது. உதா ரணமாக:—ஒரு சிறு காகிதத்தால் செய்த தொட்டியில் கொஞ்சம்ஜலம் ஊற்றிக் காய்ச்சுங்கள். ஜலத்தைப் பொங்க விட்டாலும்கூட காகிதம் எரி வதில்லை. ஏன்? மெல்லிய காகிதத்தின் வழியாய் கண்டக்ஷன் செய்யப் பட்டு உஷ்ணம் ஜலத்தை அடையவே ஜலம் வெகுவிரைவில் மேலும்கீழும் ஓடி உஷ்ணத்தை ஓரிடத்தில் நிலைநிற்க வொட்டாமல் பரப்புகின்றது. உஷ்ணம் காகிதத்தின் மேல் நிலைத்து நில்லாமல் பரப்புவதினால் ஜலம் சூடேறி காகிதத்தைக் காப்பாற்றுகின்றது

வாயுபதார்த்தங்களிலும் உஷ்ணம் பரவுவது கன்வெக்ஷன் ஓட்டத் தினாலேதான். இதை அறிய ஒரு பரிக்ஷை செய்வோம். வாயகன்ற ஒரு கண்ணாடி பாட்டிலையாவது, முன் ஜலபதார்த்தத்துக்கு உபயோகித்த பாத்திரத்தையாவது எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு அட்டையால் அதை இரண்டு பாகமாகச் செய்யுங்கள். அட்டை பாதிக்குமேல் கீழே போனால் சரி. ஒரு பாகத்தில் ஒரு மெழுகு வர்த்தியை ஏற்றிவையுங்கள். மெழுகு வர்த்தி யிருக்கும் பாகத்திற்கு மேலே கையை வைத்தால் சூடேறிய

காற்று கையின்மேல் தடுக்குவது புலப்படும். அடுத்த பாகத்தில் கையை வைத்தால் சூடான காற்று வரவேவராது. ஏன்? இன்னொருபரிக்ஷை செய்தால் பதில் கிடைக்கும்.

ஒரு துணி நாடாவை கோலில் சுற்றிக்கொண்டு நெருப்பில் துணி யைக் கொளுத்துங்கள். துணி எரிய ஆரம்பித்த உடனே ஜுவாலையை ஊதிவிடுங்கள், துணியிலிருந்துபுகை வெகு அதிகமாய்க் கிளம்பும். இல்லை யேல் ஒரு முரட்டுக் காகிதத்தைச் சுருளாய்ச் சுருட்டி ஒரு துணியைப் பற்றவிடுங்கள். காகிதம் எரியத்தொடங்கினதும் அதை அவித்து விட் டால் அதினின்று புகை ஏராளமாய் வரும். எவ்விதத்திலும் புகை வர வேண்டியது நமக்கு அவ்வளவே. அடுப்பினின்று ஒரு குறைக் கொள்ளி யை, சிறிதாயிருந்தால் எடுத்துக் கொண்டாலும் போதும். இவ்வாறு புகை வரும் வஸ்துவை மெழுகுவர்த்தி வைத்திருக்கும் பாகத்திற்கு மே லாய்ப் பிடித்தால் புகை எத்திசையாய் போகின்றது பார்த்தீர்களா? நேரா ய்ப் புகை மேலே கிளம்புகின்றது. அடுத்தபாதியில் புகைக் காகிதத்தைப் பிடித்தால்புகை எத்திசையாய்போகின்றது? நேரே கீழ்நோக்கிச் செல்லு கின்றது. கீழே போனதும் மெழுகுவர்த்தி யிருக்கும் பாதிக்குச்சென்று அவ்வழியாய் நேராய் மேலே போவதைக் காணலாம். ஆகவே இப் பரிக்ஷையினின்றும் என்ன தெரிந்து கொண்டீர்கள். மெழுகு வர்த்தி யைச் சுற்றிலும்உள்ள வாயு உஷ்ணமடைய அவ்வுஷ்ணமான காற்று மேல் கிளம்பும்போது பக்கத்து பாகத்திலிருந்து குளிர்ந்த காற்று மெழுகு வர்த்தியின் பக்கத்திற்கு வருகின்றது அது மறுபடி உஷ்ண மடையவே அது மேல்கிளம்ப இன்னும் குளிர்ந்த காற்று வருகிறது. இவ்விதமாய் சூடுள்ளகாற்று மேலேபோகவும் குளிர்ந்தகாற்று கீழேவா வும் கன்வெக்ஷன்கதி ஏற்படுகின்றது. இதனால் கன்வெக்ஷன் ஓட்டம் வாயுபதார்த்தத்திலும் உண்டென்பது விளங்கிற்றல்லவா?

இராஜ பக்தி

8-ம் அதிகாரம்

மாளிகையின் கோலத்தை ஏதுகுலன் அறிதல்.

அமிர்தேசன் குடிசைக்கு வரும்வரையில் மாளிகையைத் திரும்பி த்திரும்பிப் பார்த்துக்கொண்டேவந்தான். நெருப்பு மேல் மேலும் மூண்டு எழுந்து, நாற்புறமும் வெளிச்சம் பரவிற்று. குடிசைக் கதவுதாளிட்டு இருந்தபடியால், கதவைத்தட்டி ஏதுகுலனைக் கூப்பிட்டான். அவன் கதவைத்திறக்க இருவரும் உள்ளே நுழைந்தனர்.

ஏதுகுலதிலகன் "அமிர்தேசா என்சகோதரிகள் இருவரும் அயா

ந்து நித்திரை செய்கின்றனர். ஹம்ஸனும் ஒரு நாழிகையாய் உட்கார்ந்தபடியே தூங்கிவிழுந்து கொண்டு இருக்கிறான். நாம் இருவரும் மாளிகையைப் பார்க்கப் போகுமுன் அவனையும் தூங்கச் சொல்லிவிடுவோம் ஏன் சிறுவன் தூங்காமல் இருக்கவேண்டும்?" என்றான்.

அமிர்தேசன் "ஊருக்குத் திரும்பவா!—

எதுகுல திலகனே! என் அருமை மகனே!! சற்று வெளியே வந்து பார்." என்று அழைத்துப்போய், எதுகுலதிலகனை மாளிகைப்புறம் திரும்பிப் பார்க்கச் சொல்லவே, மரங்களுக்கு இடையில் அக்னிச்சுவாலையும், சிவந்த வெளிச்சமும், அந்தப் பக்கத்தையே முழுவதும் பிரகாசிக்கச் செய்தன. எதுகுலன் மரம் போல் அசைவற்று நின்று விட்டான். இதைப்பார்த்த அமிர்தேசன் ஒன்றும் பேசாமல் சிறிது நேரம் சும்மாவிருந்து, பிறகு என் கண்ணின் கருமணியே! உனக்கு நான் முன்னேயே சொல்லவில்லையா! இவ்வாறு நடக்குமென்றே உங்களை நான் இங்கு அழைத்து வந்தது; நான் அவ்வாறு செய்யாவிடில் நீங்கள் எல்லாரும் இந்நேரம் வெந்து போய் இருக்கவேண்டும். ஏனெனில் அவர்களுக்குள் எந்தப் பாவியாவது தீ மூட்டுமுன் உள்ளே நுழைந்தான் என்று எண்ணுகிறாயா? எல்லாரும் அங்கு வந்து நின்றது தான் தாமதம், உடனே நெருப்பு வைத்து விட்டார்கள். உள்ளிருந்தவர் ஓடிப்போகாமல் பார்த்துக்கொள்ள நாற்புறமும் காத்துக்கொண்டு விட்டனர்—" எதுகுலன் "அப்படியானால் அத்தைப் பாட்டி—"

"இருக்கின்றாள் சுகமாக: இந்நேரம் அவளும் சௌக்கியமாய் செட்டிப் பேட்டை போய்ச் சேர்ந்து இருப்பாள்?"

"அப்படியானால் நாளைய தினம் காலமேயாவது அவளைப் போய்ப் பார்த்து வரக்கூடுமா?"

"நீ போவது தப்பு என்று எனக்குத் தோன்றுகின்றது. நீ செட்டிப் பேட்டைக்குப் போய், உன்னை ஆபத்துக் காளாக்கிக்கொள்வது சரியில்லை. நீங்கள் எல்லாரும் மாளிகையில் இறந்து போய் விட்டதாகவே வதந்தி உண்டாகும்படி நடந்து கொள்வது மிகவும் நல்லது?"

"ஆனால் அத்தைப் பாட்டிக்கு நாங்கள் எல்லோரும் உயிரோடு உன்குடிசையில் சௌக்கியமாய் இருக்கிறோம் என்று தெரியுமே: அதற்கு என்ன செய்ய போகிறாய் அமிர்தேசா?"

"உண்மைதான் குழந்தாய்; நீ சொல்லும் வரையில் இவ்விஷயம் எனக்குத் தோன்றவில்லை." நிஜமாகவே விஷயத்தைக் கிழவன் யோசனை செய்யவில்லை.

அமிர்தேசன் "சரி ஆனாலும் பார்ப்போம். நாளைக்கு நானே செட்டிப்பேட்டைக்குப் போய் நடந்த சமாசாரங்களைத் தெரிந்து கொண்டு,

விமலையாரைப் பார்த்து விட்டு வருகிறேன். ஆனால் நீ மட்டும் இங்கேயே இருப்பதுடன் குழந்தைகளையும் ஜாக்கிறதையாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டியது. நான் வந்தது மேல் இனிச்செய்யவேண்டிய காரியங்களை ஆலோசனை பண்ணிக்கொள்ளலாம்—அதோ இன்னமும் எரிகின்றது பார் மாளிகை; விடிவதற்குள் தணிய ஆரம்பிக்குமோ என்னமோ"

எதுகுலன் கோபத்தோடு கைமேல் கைதட்டிக்கொண்டு "என்வீட்டையல்லவா இந்த இராஜத்துரோகிகளான மொட்டைப் பசங்கள் சுட்டு எரித்தனர்" என்று ஆர்த்தான்.

"மகனே உன்மாளிகையாய் இருந்தது வாஸ்தவமே; ஆனால் இந்தப் பிரளய காலத்திலே உன்னுடையதாய் நிலைத்து நின்று இருக்குமோ என்பது சந்தேகம். இராஜ்யத்தில் ஒவ்வொன்றும் விபரீதமாய் நடக்கும்பொழுது உன் மாளிகையும் நாடும் உனக்கு சித்திக்குமா? உன்னுடைய ஆஸ்தியைப் பிடுங்கி நாளைய தினம் இன்னொருவனுக்கு விஜ்ஜலன் தத்தம் செய்துவிடவும் கூடும். காலத்தின் கோலம் எப்படியோ! பிள்ளாய் நீ கோபம் கொள்ளாதே."

"என் சொத்தை எவர்கள் கைக்கொண்டாலும் அவர்கள் நாசமாய்ப் போகட்டும்! எனக்கும் ஆயுள்பூர்ணமாய் இருந்து நானும் மனிதனானால் என்ன செய்கிறேன் என்பதைப் பார்ப்பாய்!!"

"சரி! சரி! பார்த்துக்கொள்வோம். 'நரிபிழைத்து நாடாளட்டும்.' அப்பொழுது நீயும் இவ்விதமாய்க் கோபத்தோடு கண்டபடியெல்லாம் பிதற்றாமல் யோசனையோடு பேசுவாய். பனியடிக்கின்றது. இனி வெளியே நிற்பதில் பயனில்லை. உள்ளே போய் சற்று படுத்துத் தூங்குவோம், வருவாய்" என்று எதுகுலனை உள்ளே அழைத்துச் சென்றான். எதுகுலன் பித்தனைப்போல் அமிர்தேசனை பின்தொடர்ந்தான். படுக்கையில் படுத்தால் கண் இமையோடு இமைமூடவில்லை. இப்புறமும் அப்புறமும் களைத்துப் போன குதிரையைப்போல் புரண்டு கொடுத்துக் கொண்டு சிந்தாக்கிராந்தனாய்ப்படுத்துக்கிடந்தான். எங்ஙனம் தன் ஆண்மையால் இராஜத்துரோகிகளைஜயிப்பது? எங்ஙனம் தருமத்தை நிலைநாட்டி துஷ்டர்களை சிக்ஷைசெய்வது என்ற எண்ணம்தவிர வேறு எண்ணங்களுக்கே அவன் மூளையில் இடமில்லை. கடைசியாய்த் தூங்கினான் என்றாலும் கோரமான கனவுகள் கண்டபடியால் தன் தம்பியையும் தங்கைமார்களையும் விழித்துக்கொள்ளும்படி பலதடவை கெட்டியாய்ப் பிதற்றலுற்றான்.

9-ம் அதிகாரம்

போர்வீரர் அமிர்தேசன் குடிசையைச் சோதனை செய்தல்.

மறுநாட் காலையில் குழந்தைகளுக்கு சாப்பாடு போட்ட பிறகு அமிர்தேசன் சீக்கிரமாகவே மாளிகையை நோக்கிப் புறப்பட்டான். மாதவ

னும் அங்கு காலையில் வருவதாக சமயல்காரி சுந்தரி சொன்னதும் அவ னுக்கு ஞாபகம் வந்தது. மாதவனைக் கண்டால் விமலையாரின் சமாசாரம் விவரமாய்த் தெரியுமென்று எண்ணினான். எரிந்து தணிந்து கொண்டிருக்கும் மாளிகைக்குப் பக்கத்தில் வரவே அங்கே பலர் நின்று கொண்டிருந்தனர். அவற்றுள் வேடிக்கை பார்க்க வந்தவர் சிலர்; வேகின்ற வீட்டில் பிடுங்கினது லாபமென்ற நோக்கத்துடன் வந்தவர்பலர்; சிறிது நோத்திற்கெல்லாம் மாதவன் குதிரை மேலேறிக் கொண்டு உல்லாசமாய் அவ்வழியே வந்தான். உடனே அமிர்தேசன் மாதவன் பக்கத்தில் நெருங்கி "மாதவா என்ன கோலம் பார்த்தாயா? மனம் பதைக்கின்றது; ரெட்டிப்பேட்டையில் என்ன விசேஷம்?" என்று கேட்டான்.

"விசேஷமாய் என்ன சொல்லப் போகிறேன். எங்கே பார்த்தாலும் போர் வீரர் தான்!! நம்மவர்களை அவமரியாதை செய்து சொல்லவேண்டியதில்லை."

"கிழவி விமலையாரைப் பற்றி ஏதாவது தெரியுமா?"

"ஆஹா அதை ஏன்கேட்கிறாய்; அது இதைவிடச் சங்கடமானசேதி; இன்னும் குழந்தைகளும்கூட!! ஐயோ எதுகுலமோ! என்னப்பன் தன் பிராயத்தில் எம் மாத்திரம் ஆகப்பட்டவன்!!" என்று மாதவன் பிரலாபிக்கத் தொடங்கி விட்டான்.

"சொல்லப்பா கிழவியைப்பற்றி; சுகமாய் ரெட்டிப் பேட்டை வந்து சேர்ந்தாளா? நீ பார்த்தாயா அவளை; சொல்லு தம்பி வேகமாய்" என்று கேட்டான்.

"ஆமாம்! ஐயோ பாவம், கண்டேன். விமலையாரை! புத்திகெட்ட போர் வீரர்கள் அவளைத் தைலப்பமஹாராஜன் என்று எண்ணிக்கொண்டார்களாம்!!"

அவர்கள் தப்பு இப்பொழுது தெரிந்து விட்டதல்லவா?" ஆமாம்! தெரிந்துகொண்டார்கள். அதற்கு என்ன தடை?—அந்த சௌடவேலன் நன்றாய்க் கண்டுகொண்டான்—என்ன ஆச்சரியம் பார் அண்ணே, அக்கிழவி சௌடவேலன் கழுத்தை முறிப்பாள் என்று நினைக்கவும் கூடுமா? ஆயினும் சரி—"

"என்ன! என்ன!! என்ன!!! கழுத்தை முறித்துவிட்டாளா? சௌடவேலனையா? பொய் சொல்லுகிறாயா என்ன? எப்படியப்பா எப்படி? என்ன சங்கதி சொல்லுகிறாய்? குடிக்க வில்லையே காலை வேளையில்?"

"சொல்லுகிறேன் கேள் அண்ணே! குடியுமில்லை ஒன்றுமில்லை; நிஜமே சொல்லுகிறேன் சமாசாரம் என்னவென்றால் சௌடவேலன் கிழவியை வைரமுடி தைலப்பன் என்று எண்ணி, மாறுவேஷம் போட்டிருக்கி

றான் என்று நினைத்து, அவளைப்பிடித்து குதிரைமேல் தன் பின்னே பலமாய்க் கட்டிக்கொண்டு குதிரையை நாலுகால் பாய்ச்சலாய் விட்டானாம். கேளண்ணே, வரபோது அந்த அம்மாள் உதைத்துக் கொண்டும், அடித்துக் கொண்டும் போன போது, அவனால் தாங்கமுடியாமல் இரண்டுபேரும் கீழே விழுந்து விட்டார்கள். அவனுக்குக் கழுத்து முறிந்து போய்விட்டது" என்று மாதவன் சொல்லி முடிப்பதற்குள் அமிர்தேசன்;

"வேணும் வேணும்! இராஜத்துரோகிக்குத் தகுந்த தண்டனை தான் தெய்வத்துக்கே பொறுக்கவில்லை. பேஷ்! சுவாமி நன்றாய் இடம்பார்த்து தண்டிக்கிறார்" என்றான்.

"இன்னும் கேள் மற்றவர்கள் தேடிப்பிடித்து சௌடவேலனையும் கிழவியையும் எடுத்து வந்தனர். அப்பொழுதும் சௌடப்பன் கட்டின கட்டுத் தளரவில்லை. அப்படியே ரெட்டிப் பேட்டைக்குக் கொணர்ந்தார்கள்—"

"முடிவு சொல்லு தம்பி, முடிவு சொல்லு!! கிழவி எங்கே இருக்கிறாள் இப்பொழுது: நீ கண்டு பேசினாயா! என்றால் என்னென்னவோ இராமாயணம் வளர்த்து கிறாயே!!"

"நான் கண்டேன், உண்மையே; ஆனால் அம்மாள் இப்பொழுது இங்கேயில்லை; ஆகையால் அவளிடம் பேசவில்லை. ஏனெனில் சௌடவேலன் கீழேவிழுந்து கழுத்து முறிந்தபோதே நம்ம அம்மாளுக்கும் அவ்விதமே ஆய்விட்டது!! என்ன செய்வோம் அண்ணே! அண்ணே!!" என்றான் மாதவன்.

அமிர்தேசன் கொஞ்சம் கோபத்தோடு "இதற்கு இத்தனை நேரமா? முட்டாள் மாதிரி, முதலில் சங்கதியைச் சொல்லாமல், கதை வளர்க்துகிறாயே; விமலையார் இறந்து விட்டாள் என்கிறாயா?" என்று கேட்டான்.

"ஆமா; ஆமாம்; அப்படியேதான் சந்தேகமில்லை; ஆனால், அவள் செத்தால் என்ன, கல்யாணம் போல; குழந்தைகளைப்பற்றி யோசிக்கும் பொழுதுதான் என் மனம் சகிக்கவில்லை, அங்கம்மாள், பாவம், கேட்டது முதல் புலம்பிக்கொண்டே யிருக்கிறாள்."

"அதெல்லாம் கிடக்கட்டும் சக்கிரவர்த்தியின் சங்கதியென்ன? ஏதாவது தெரியுமா?"

"என்னமோ அப்பா ஒன்றும் தெரியவில்லை. மறுபடி அந்த ரணபாதகர்கள் இன்றையதினம் இவ்வனாந்தரமெல்லாம் சுற்றப்போகிறார்களாம். சில வீரர் முன்னையே புறப்பட்டு விட்டனர்."

இராஜத்துரோகிகள் வனாந்தரத்தை யெல்லாம் சோதனை செய்யப்

புறப்பட்டார்கள் என்ற சங்கதியைக் கேட்டதும் அமிர்தேசனுக்கு விசாரம் முன்னிலும் நூறு மடங்கு அதிகமாயிற்று. உடனே மாகவனிடம் விடை பெற்றுக்கொண்டு தன் குடிசையை நோக்கிப் பறந்தோடினான். "ஐயோ பாவம்! விமலையார் காரியமும் முடிந்து விட்டதா! என்ன செய்வது; தெய்வச் செயல் எப்படியோ அப்படி நடக்கட்டும். ஈசன் செயல் எதுவாயினும் அது நமக்கு நன்மையே பயக்கும் என்பார் பெரியோர். இப்பாதகர்கள் நரசிம்மனது சிறு குழந்தைகளை என்னசெய்ய காத்திருக்கின்றனரோ!! தேவாதிதேவ பிரக்லாதனைக் காத்து ரக்ஷித்த அகோபிலச் சீமானே!! இக்குழந்தைகள் உனது அடைக்கலம். உன் திருவுள்ளம் நடக்கட்டும். ஈசனே துணை" என்று இவ்வாறு பதைபதைக்கும் தன் மனதைத் தேற்றிக்கொண்டே தள்ளர்டித் தள்ளாடி வழி நடந்தான்.

குடிசைவந்து சேர்ந்ததும் வெளியே குழந்தைகள் விளையாடிக்கொண்டிருக்கக் கண்டனன். இவனைக்கண்டதும் எல்லாரும் ஓடிவந்து சுற்றிக்கொண்டனர். எல்லாருக்கும் முன்னால் சிங்கம் போன்ற அவனுடைய நாய் முன்வந்து பணிந்தது. அந்த நாயைத்தட்டிக் கொடுத்து அன்போடு அப்புறம் தள்ளிவிட்டு அலமேலுவைத்தோளில் தூக்கிக்கொண்டு எல்லாருடனும் வீட்டினுள் நுழைந்து கொண்டே "குழந்தைகாள்! என் கிழக்கால்கள் எவ்வளவு வேகமாய் நடக்கக்கூடுமோ அவ்வளவு வேகமாய் இங்கே ஓடிவந்து இருக்கிறேன். என் அருமைக் குழந்தைகாள்! நீங்கள் இனி வெளியே வந்து விளையாடக்கூடாது. அப்பாவிகள் இவ்வனாந்தரத்தைச் சோதனைபோடுகிறார்களாம். நீங்கள் வெளியே விளையாடினால், உங்களை அவர்கள் ஒருவேளை பார்த்துவிட்டால் ஆபத்துக்கிடமாகும். உள்ளேயே விளையாடுங்கள் சில நாளைக்கு" என்றான்.

"இந்தக் குடிசையையும் கூட தீவைத்து நாசம் செய்து விடுவர்களா என்ன" என்று விசாலாக்ஷி அமிர்தேசன் கையைப் பிடித்துக் கட்டிக்கொண்டு பயம் மேலிடத் தன் இரண்டுகண்களையும் பிசைந்துகொண்டு அழ ஆரம்பித்தாள். அதைக்கண்டு அலமேலுவும் அழத் தொடங்கிவிட்டாள். அமிர்தேசன் உள்ளே நுழைந்ததும், கதவை ஜாக்கிரதையாய்த் தாளிட்டுக்கொண்டு, குழந்தைகளைத் தேற்றி, அவர்கள் அழுகை நின்றவுடன், சமாதானமாய்ச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த பின்னர், அவர்களை நோக்கிக் "குழந்தைகாள்!! வீரநரசிம்ம மல்லருடைய வம்சத்தில் பிறந்த குழந்தைகள் இக்குடிசையில் இருப்பதாகத் தெரிந்தால் போதும் தொந்தரவு செய்யத்தொடங்குவார்கள். ஏனெனில் உமது பிதாவும் பிதாமகனும் அதிக ராஜபக்தியுடையவர்கள் அல்லவா? ஆதலால் அவ்வீரர்கள் உங்களைக் கண்ணாலேயே காணாமல் இருக்கும்படி செய்யவேண்டியது; அப்பொழுது ஒன்றும் பயமில்லை" என்றான். பிறகு சாப்பாட்டு

விஷயத்தைப் பற்றி யோசிக்கவேண்டியதாயிற்று. பொழுது 10, 12 நாழிகை இருக்கலாம். சிறு குழந்தைகள் காலையில் பழையது சாப்பிட்டிருந்தாலும் இன்னும் 4. 5 நாழிகை போனால் பசியால் வருந்துவார்கள் என்பது அமிர்தேசனுக்குத் தெரியும். மேலும் செல்வக்குழந்தைகள்; அமிர்தேசனுக்கோ அனைவருக்கும் சேர்த்துச் சமையல் செய்யச்சக்தியில்லை. ஆகையால் அவன் "குழந்தைகளே நாம் என்ன சமையல் செய்யலாம்? கொஞ்சம் மாமிசம் இருக்கின்றது. பருப்பு முதலிய மற்ற சாமான்களும் கொஞ்சம் இருக்கின்றன. எல்லாரும் கூடி பிரயாசைப்பட்டால் தான் சாப்பிடலாம்? யார் சமையல் செய்வது சொல்லுங்கள் பார்க்கலாம்" என்றான்.

விஸாலாக்ஷி "நான் சமையல் பண்றேன் அப்பா! ஆனால் எனக்கு எல்லாம் சொல்லிக் கொடுக்கணும்" என்றாள்.

அமிர்தேசன் "தயார் அதற்கென்ன! எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுதூரம் சொல்லிக்கொடுக்கிறேன். எதுகுலதிலகனே நீ தண்ணீர் இழுத்து, வென்னீர்ப்பாத்திரத்தையும் மற்ற ஜோடுதவலைகளையும் நிரப்புவாய் துரையே! ஹம்ஸப்பிரியா நீ காய் கறிகளை நறுக்கிக்கொடுக்கவேண்டும். நான் எல்லாரிடத்திலும் வந்து எல்லாருக்கும் வேண்டியபடி உதவி செய்கிறேன்" என்றான். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் காரியத்துக்கு செல்லவே அமிர்தேசன் எதுகுலனைக்கூப்பிட்டு "சிறுவனே நீஜலம் இழுத்தபிற்பாடு குடிசைக்குக் காவல்காரன் போல் ஜாக்கிரதையாய் நாலுபுறமும்பார்த்துகொண்டு இருக்கவேண்டும் யாராவது நெருங்குவதையோ,— பக்கத்தில் போவதையோ கண்டால் உடனே என்னிடத்தில் வந்து சொல். வேண்டிய ஜாக்கிரதை செய்யவேண்டியிருக்கும். லக்ஷ்மணன் சீதையைக்காத்தது போல் காத்துக்கொண்டிருக்கவேண்டும் தெரியுமா?" என்றான், எதுகுலனும் சரியென்று தன் வேலையைச் செய்யப்போனான்.

குடிசை நடு வனாந்தரத்தில் இருந்ததென்னலாம். நாற்புறமும் மரங்களும், புதர்களும்தான். மாளிகைக்கப்புறத்தில் மட்டுமே ஒரு சிறு வழியிருந்தது; அந்த வழியாய் ஒருசிறு வண்டி தாராளமாய்ப் போகும். அவ்வழியால் அடிக்கடி அமிர்தேசன் தன் குதிரையை ஓட்டிக்கொண்டுபோய் ரெட்டிப்பேட்டையிலிருந்தாவது, அல்லது வேறு இடத்திலிருந்தாவது வாரம் வாரமோ பக்ஷத்துக்கு முறையோ சௌகரியத்தைப்போல் தனக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு வருவான். சற்று எல்லா புறங்களிலும் பல பாதைகள் போயினவென்றாலும், அவை நிச்சியமாய் ஒரு ஊருக்குக கொண்டுபோகும் வழிகள் அல்ல, வனாந்தரத்துக்குள்ளே கொண்டுபோய் விடும் பாதைகள்பல, வனபாலர்கள் வனாந்தரத்தில் அலைந்து சுற்றிப்பார்க்க ஏற்படுத்திக் கொண்ட பாதைகள் பல; செஞ்சு ஜன

ங்களும் வேடர்களும் வேட்டைக்குக் அடிக்கடி போவதனால் ஏற்பட்ட ஒத்தையடிப் பாதைகள் சில; இவ்வாறிருந்த குடிசைக்கு வெளியே கோனேரியில் ஜலம் இழுத்துக் கொண்டே எதுகுலன் நாலாபக்கமும் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பெரிய வீட்டுக் குழந்தைகளுக்கு காரியம் சொல்லிவைப்பது மிகவும் கஷ்டமான காரியம். ஏழைக்குழந்தைகள் தாமாகவே பலகாரியங்களைத் தெரிந்து கொள்ளுகின்றனர். பணக்காரர் வீட்டுக்குழந்தைகள் பலநாள் அன்னியர்களுடைய உதவியை எதிர்பார்த்து இருப்பதுபற்றி எளிதில்வேலை கற்றுக் கொள்ளச்சிலருக்கு மனது வருகிறதில்லை. நல்லவேளையாய் விசாலாக்ஷியும் அலமேலுவும் அப்படிப்பட்ட கோஷ்டியில் சேராமல் பிரியத்தோடு காரியங்களைத் தெரிந்து கொள்ள இஷ்டப்பட்டனர். ஆகையால் அமிர்தேசன், சமையல் நடந்து கொண்டிருக்கும் பெரிய பாத்திரங்களையும் சமையல் சாமான்களையும் ஒழுங்காய் வைக்கவும், அறையை பெருக்கவும் தாலங்களை அலம்பித்துடைக்கவும் இவ்விதமான இன்னும் பல சில்லறைக் காரியங்களையும் விசாலாக்ஷிக்குச் சொல்லிக்கொடுத்தான். ஹம்ஸப்பிரியன், தோய்த்தவேஷ்டிகளை உலர்த்தவும், புஸ்தகங்களையும் மற்றவஸ்துக்களையும் தூசியில்லாமல் தட்டிவைக்கவும், இலைபோட்டு, ஜலம் தெளித்து, சாப்பாட்டுக்குத் தயார் செய்யவும், கற்றுக்கொண்டான். 4,5, நாழிகைக்குள் 'கமகம' வென்று மணக்கும் சாம்பாரும், சேனைக்கிழங்குக்கறியும், வெள்ளிரிக்காய்க் கூட்டும் தயார் ஆயின. சாதம் உலைப்பூருகின்றது. தாலங்களைவைத்து இலைகளையும் போடுகிறான் ஹம்ஸப்பிரியன்.

அப்பொழுது எதுகுலன் 'திடுதிடு வென்று ஓடிவந்து "இதோ குதிரை வீரர்கள் குடிசையைப் நோக்கி ஓடிவருகிறார்கள்" என்றான். என்ன செய்வான் அமிர்தேசன்! வெளியே போய் தானும் ஒருமுறை பார்த்தான். எதுகுலன் சொன்னது உண்மைதான். ஒரு நிமிஷம் யோசனை செய்தான்.

உடனே குழந்தைகளைப்பார்த்து "என் கண்மணிகாள், நான் சொல்லுகிறபடி செய்தால் இனிப்பிழைக்கலாம். இவர்கள் குடிசைக்கு வருவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. ஹம்ஸப்பிரியா நீயும் உன் தங்கைமார்களும் படுக்கையில் படுத்துக்கொண்டு வியாதியால் அதிகமாய் வருந்துகின்றவர்கள் போல் பாசாங்கு பண்ணுங்கள். எதுகுலா உன்னுடைய அலங்காரமான பட்டாடையும் சரிகை வஸ்திரத்தையும் உள்ளே வைத்துவிட்டு உன்வெள்ளைதுப்பட்டியை எடுத்துப் போர்த்துக்கொள். அவர்கள் படுத்து இருக்கும் அறையில் போய் அவர்களுக்கு சைத்திய உபசாரம் செய்வதுபோல் மேலும் கீழும் அலைந்துகொண்டு இரு. நீயும் போ அம்மா" அலமேலு என்று பின்தங்கிய சிறு குழந்தையையும் கூட்டிக்கொண்டு

போய் இந்தப் பிசாசுகள் வந்துவிட்டுப்போன பின்னர் நாம் எல்லோரும் சாப்பிடுவோம் என்று உள்ளே அவர்களைப்படுக்கையில் படுக்கவிட்டு நன்றாய்ப் போர்த்துக்கொள்ளும்படி சொல்லி தான் வெளியே வந்து தாலங்களையும் இலைகளையும் எடுத்து ஒரு மூலையில் வைத்துவிட்டுத்திரும்புவதற்குள்—தடதடவென்று கதவைத்தட்டும் சப்தம் கேட்டது. "யார் இதோ வந்தேன்" என்றான் அமிர்தேசன். கதவைத் திறக்கவே முதலில் நுழைந்தவன் "யார் அப்பனே நீ!" என்றான்.

"இப்புறத்தில் ஒரு வனபாலன் ஐயா நான்! மஹா துர் அதிர்ஷ்டசாலி வெகு அவஸ்தைப் படுகிறேன்" என்றான் அமிர்தேசன்.

"என்ன ஐயா அவஸ்தை உமக்கு என்றான்" இரண்டாவன். "என் தாயில்லாக்குழந்தைகள் நால்வரில் மூவருக்கு அம்மை வார்த்து இருக்கிறது, கஷ்டம் இவ்வளவென்று சொல்வதற்கில்லை. எது பிழைக்குமோ எது போகுமோ தெரியவில்லை. இதைவிட இன்னும் என்ன ஐயா வேணும் மனுஷனுக்கு" என பதில் சொன்னான்.

"எப்படியிருந்தாலும் உன் குடிசையை நாங்கள் தேடவே வேண்டும். அது தப்பமுடியாது" என்றான் முதல்வன்.

"அதற்குத் தடையில்லை. நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள். குழந்தைகளை மட்டும் பயப்படுத்த வேண்டாம். வியாதியால் போவதற்கு முன் பயத்தால் போகாமல் பார்த்துக்கொள்ளுங்கள் ஐயாமாரே" என்றான் அமிர்தேசன்.

அதற்கு முதல்வன் "ஆனால் நான் ஒருவனே தேடி வருகிறேன். நீங்கள் எல்லாரும் இங்கேயே இருங்கள்" என்று சொல்லிவிட்டு ஒவ்வொரு மூலையும், அறையும், அட்டம், கோர்காலி முதல் எல்லாப்பாகத்தையும் தேடிவிட்டுக் குழந்தைகள் இருக்கும் அறைக்குப்போகவே அலமேலு 'கட கட' வென்று வீரிட்டுக்கத்த ஆரம்பித்துவிட்டாள். எதுகுலன் தட்டிக்கொடுத்துக்கொண்டு 'பயப்படாதே! பயப்படாதே!!!' என்று சொல்லிக்கொண்டிருந்தான். அவன் குழந்தையை கவனிக்காமல் திரும்பி வந்து "இங்கே ஒன்றும் பிரயோஜனமில்லை. போவோமா" என்றான். அதற்குள் இரண்டாவன் "பசிக்கிறது மேலும் சாம்பார்வாசனை 'கமகம' வென்று வருகிறது" என்று சொல்லிக்கொண்டே சாதம் வைத்திருக்கும் இடத்துக்குப்போய் "ஏன் ஐயா எங்களுக்கு ஒரு கபளம் சாதம் போடக்கூடாதா" என்று சொல்லிக்கொண்டே ஒரு கரண்டியில் சாம்பாரை மொண்டுவாயில் ஊற்றிக்கொண்டான். "உங்கள் இஷ்டப்பிரகாரம் செய்யுங்கள் ஆனால் குழந்தைகளுக்கு கரைத்துக்கொடுக்கக்கொஞ்சம் சாதம் மிச்சம் வையுங்கள்" என்று மரியாதையாய்ச் சொன்னான் அமிர்தேசன்.

இதே போதுமானதென்று அந்த வீரர்கள் இலைகளைப் போட்டுக்கொண்டு ஒரு பிடியாவது மிச்சம் வைக்காமல் எல்லாவற்றையும் சாப்பிட்டு விட்டுக் குதிரையேறிப் பறந்தோடிவிட்டனர்.

சென்னை ஆசாரத்திருத்தச் சங்கம்.

சாஸ்திரங்களும், ராஜாங்கமும்.

சென்னை ஆசாரத்திருத்த சங்கத்தின் ஆதரவில் 11ந் தேதி மாலை ஆண்டெர்ஸன் ஹாலில் ஆசாரத்திருத்த மீட்டிங் ஒன்று கூடிற்று. ஸர் சங்கரன் நாயர் அக்கிராசனம் வகிக்க முடியாதிருந்தபடியால், மிஸ்டர் S. ஸ்ரீனிவாச அய்யங்கார் அக்கிராசனம் வகித்தார். அச்சமயம் மிஸ்டர் P. சுப்பிரமனிய அய்யர் (பச்சையப்பன் காலேஜ்) ருதுமதி விவாகத்தைப் பற்றி அடியிற்கண்டபடி ஒரு உபந்நியாசஞ் செய்தார்.

சாஸ்திரங்களில், விவாகங்களைப்பற்றி, அபிப்பிராய பேதங்களிருப்பதினால், ருதுமதி விவாகப் பிரசினையைப்பற்றி நிர்ணயஞ் செய்வதற்கு சாஸ்திரங்களை ஆதாரமாகக் கொள்ளுவதில் யாதொரு பிரயோஜனமுமில்லை. ஸ்மிருதிகளை ஆராய்ந்து பார்த்தால் ருதுமதி விவாகங்களுக்கு அனுகூலமான வசனங்களை மனுவும், யாக்ஞவல்கரும், சொல்லியிருக்கிறதைக் காணலாம். பாராசரர் ஒருவரே, ருதுமதி விவாகத்திற்குப் பிரதிகூலமாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் அவருடைய வசனத்தைவிட பிரபலமான வசனங்கள் அனுகூலமாகச் சொல்லப்பட்டிருப்பதால், பாராசரின் வாக்கியத்திற்குப் பலக்குறைவு ஏற்பட்டு விட்டது. ஆசாரத்திருத்த பிரசினையில் தலையிடுகிறதற்கு கவர்ன்மெண்டுக்குச் சுதந்தரம் உண்டு என்பதை இங்கு எடுத்துச் சொல்லுகிறேன். பூர்வகாலத்தில் பிராமணர்கள் சாஸ்திரங்களுக்கு வியாக்கியானம் எழுதிவந்தார்கள். பரிஷத்துக்களைப்போன்ற ஆலோசனை சங்கத்தார் தர்ம சாஸ்திரங்களை உண்டாக்கினார்கள். அந்த சாஸ்திரங்கள், அபிவிருத்தி வழிக்கு அனுசரணையாக அனுஷ்டிக்கப்படுவது அரசர்களுக்குச் சம்மதமாயிருந்தது. அவ்வித பரிஷத்து ஒன்று சமீபத்தில் இந்த ராஜதானியில்கூடி ருதுமதி விவாகம் சாஸ்திர சம்மதம்தான் என்று அபிப்பிராயப்பட்டது. இங்கிலாந்தில் ஆசாரத்திருத்த விஷயமாய் கவர்ன்மெண்டு அக்கரையெடுத்துக் கொள்ளுவதுபோல இந்தியாவில் எடுத்துக்கொள்ளுகிறதில்லை. ஜனங்களின் வாழ்க்கை எந்த விதத்திலாவது குன்றி வருகிறதென்று தெரிந்தால், அதைப்பற்றி கவர்ன்மெண்டு உதாசீனமாயிருக்கக்கூடாது. அதன் பரிகார வழியைக் கவனித்து ஜனங்களுக்கு உதவிபுரியவேண்டும். சீர் திருத்தக்காரர்களின் தொகை குறைவாகத்தான் இருக்கும். அத்தொகையை அதிகப்படுத்தும் உபாயத்தைத் தேடுவது கவர்ன்மெண்டின் கடமையாகும். சககமனம், சிசுஹத்தி, புனர்விவாகம் முதலிய விஷயங்களில் லார்டு வில்லியம் பெண்டிக்கு, லார்டு லான்ஸ்டவுன் முதலியவர்கள், தலையிட்டு சீர்திருத்தஞ் செய்த பொழுது ஜனங்கள் பலவிதமாகக் கூக்குரலிட்டார்கள். சீர் திருத்தங்களுக்கு எப்பொழுதுமே ஜனங்கள் விரோதமாயிருப்பார்கள். கூச்சல் போடுவார்கள். ஜனங்கள் கண்டனஞ் செய்வது எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நன்மை பிறகு ஏற்படும் என்பதை கவர்ன்மெண்டு அறியவேண்டும்.

பொருளாதார விஷயம், இந்தப்பிரசினையில் சம்பந்தப்பட்டிருக்கிறபடியால், இதில் கவர்ன்மெண்டு தலையிடவேண்டியது நியாயமாகும் என்று பேசி முடித்தார்.

சேர்மன் பின்வருமாறு பேசினர்—ஒவ்வொருவரும் அபிவிருத்தி வழியைக் கவனிக்கவேண்டும். அபிப்பிராய பேதமும், பிளவும், எங்கிருக்கின்றனவோ அந்த சமூகம் ஐக்கிய சமூகம் ஆகாது என்ற விஷயம் பழைய காலத்துச் சரித்திரம் வாசிக்கத் தெரியவரும். சாஸ்திரங்களோ ருதுமதி விவாகத்திற்கு அனுகூலமாயிருக்கின்றன. எதிர் கட்சியார் சொல்வதிலும் உண்மை யில்லாமற் போகவில்லை. ராஜாங்கத்தார் இதில் தலையிடுவதற்கு நியாயமும் அவசியமும் இருக்கிறது.

பூர்வீக இந்தியாவில் நகர் நிர்மாணம்.

நகர் நிர்மாணத்தைப் பற்றி ப்ரொபஸர் கெட்டிஸ் சென்னையில் சமீபத்தில் சிறந்த உபந்நியாசங்கள் செய்ததை அனைவரும் அறிவார்கள். நகர் நிர்மாணம் என்ற பிரசினை புதிதல்ல. பூர்வீக இந்தியர்கள் நகர் நிர்மாண சாஸ்திரத்தை நன்றாக அறிந்திருந்தார்கள். இந்த சாஸ்திரத்தை இக்காலத்தில் சாஸ்திரோக்தமாக அறிய வேண்டியிருக்கிறது. பூர்வத்தில் நகர் நிர்மாணத் தொழில் படிப்பில்லாதவர்களாலுங்கூட அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. நகர் நிர்மாணத்திலும் நீர்ப்பாசன மராமத்து வேலைகளிலும் பாபிலோனியர்களும் அஸ்ஸிரியர்களும் சிறந்த நிபுணர்களாக இருந்தார்கள். நகர் நிர்மாணத்தைப்பற்றிப் பூர்வீகர்கள் ஒருவித அபிப்பிராயத்தை கொண்டிருந்தார்கள். உதாரணமாக, இந்தியாவில், பூர்வீக தலைமைப்பட்டணங்கள் சிறந்த பிளான்களில் கட்டப்பட்டன. கிறிஸ்து பிறப்பதற்கு 306 வருஷத்திற்கு முந்தி, இந்தியாவில் சந்திரகுப்தன் என்ற சக்கரவர்த்தி ஆண்டுவந்தார். அவர் காலத்தில், அவருடைய கோர்ட்டுக்கு மகாஸ்தனிஸ் என்பவர் தூதாக அனுப்பப்பட்டார். சந்திரகுப்தன், மகா அலெக்ஸாண்டருக்குப்பின் இந்தியாவின்மீது படையெடுத்துவந்த ஸெலூகஸ் என்பவரைத் தோற்கடித்தார். அப்பொழுது தலைமை நகரமாயிருந்த பாடலீபுத்ரம் என்ற பட்டணம் சிறந்த பிளானில் கட்டப்பட்டது. அந்தப்

பட்டணம் ஸோனே, கங்கை என்ற இரண்டு நதிகளும் சேரும் குறுகலான இடத்தில் கட்டடங்கள் சம சதுரவடிவான அளவில் கட்டப்பட்டன. அந்நகரம் 9 மைல் நீளமும் $1\frac{1}{2}$ மைல் அகலமுமுள்ளது. அந்நகரத்திற்கு 64 வாசல்களிருந்தன. அதைச்சுற்றி சுவர் எழுப்பப்பட்டிருந்தது. 570 கோபுரங்கள் கட்டப் பட்டிருந்தன. சுவற்றைச் சுற்றிலும் 600 அடி அகலமும் 45 அடி ஆழமுமுள்ள அகழி இருந்தது. இந்த அகழி, நகர் பாதுகாப்புக்காகவும், சாக்கடை ஜலம்வெளியே போவதற்காகவும் அமைக்கப்பட்டது. சந்திரகுப்தனுடைய ராஜதானியைச் சுற்றிலும் மரச்சுவர் எழுப்பப்பட்டிருந்தது. உள்ளிலிருந்து சேனைகள் எதிரிகளின்மீது அம்புகளை எய்வதற்குவேண்டி அந்த மரச்சுவர்களில் தொளைகள் அமைக்கப் பட்டிருந்தன.

கிரீக்கு தேசத்துப் பழமையான நகரமாகிய ஏதென்ஸிலும் பூர்வ காலத்தில் பலகையினால்தான் சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தன. மழையினாலும் நதிகளில் பிரவாகம் வந்து கரை புரண்டு ஓடுவதினாலும், கற்சுவர்களுக்குக் கெடுதி வரும் என்று எண்ணியே பலகைச் சுவர்கள் எழுப்பப்பட் டிருந்தன. பாடலிபுரத்தில் முனிஸிபல் ஆட்சி நிரம்ப திருப்திகரமாக இருந்தது. அச்சமயம் முனிஸிபாலிடிகளில் ஜனன மரணக் கணக்குகள் வைக்கப்பட்டிருந்தன.

சீன தேசத்து சஞ்சாரியான பாஹியான் (Fahian) கி. பி. ஐந்தாவது நூற்றாண்டில் பாடலிபுரத்தைப் பார்க்கச் சென்றிருந்தார். பாடலிபுரத்தில் அசோகாவின் அரண்மனை வேலைகள் முழுவதும் அற்புதமான கற்களில் செதுக்கப் பட்டவைகளாக இருந்தன. அவைகளைக் கண்டு அடங்காத ஆச்சரியமடைந்து குறிப்பிட்டிருக்கிறார்.

பூர்வத்தில் புராணங்களில்கூட சில சிறந்த பட்டணங்களின் கட்டடங்களைப்பற்றிக் கூறி யிருக்கின்றன. 7-வது நூற்றாண்டிலிருந்த பாணன் என்ற மகாகவி, உஜ்ஜினிப் பட்டணத்தைக் கைலாசத்திற்குச் சமானமான பட்டணமாக வர்ணித்திருக்கிறார்.

தவிர அப்பட்டணத்தில் நீர்மராமத்து வேலைகள், பாலங்கள், கோவில்கள், உல்லாச ஸ்தலங்கள், கிணறுகள், ஹோஸ்டல்கள், கால்நடைகளை அடைப்பதற்கு ஏற்பட்ட கொட்டகைகள், மண்டபங்கள் முதலியவைகள் அமைக்கப்பட்டிருந்த மாதிரிகளைப் பார்த்தால், அவைகள் சாதாரணமாய் மனிதர்களால் கட்டப்படாமல், தேவர்களால் கட்டப்பட்டவைகளைப் போல அவ்வளவு சிறப்பாக விளங்கிவந்தன. சிற்ப சாஸ்திரத்தின்படி கட்டடங்கள் கட்டப்பட்டன.

கிறிஸ்து பிறப்பதற்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முந்திய இந்தியாவில் விசாலமான ரோட்டுகள் கட்டப்பட்டன, மைல் கற்கள் நாட்டப்பட்டிருந்தன. சாலை மரங்கள் வைக்கப் பட்டிருந்தன. குடி ஜலம் தாராளமாய் சப்ளை செய்யப் படுவதற்கு வேண்டிய வசதிகள் ஏற்பட்டிருந்தன. மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிகள் ஏற்பட்டிருந்தன. யாத்திரிகர்களுக்கு தங்குவதற்கு இடவசதிகள் ஏற்பட்டிருந்தன. இந்தியாவில் உன்னதமான சுவர்கள் எழுப்பப் பட்டிருந்த பெரிய நகரங்கள், குறிப்பிட்ட பிளான்களின்படியே சுகாதார விதிகளை யனுசரித்துக் கட்டப்பட்டன. பூர்வீக இந்தியாவில் பட்டணங்களிலும் கிராமங்களிலும் இருப்பது போல பெரிய நகரங்களில் ஜன நெருக்கம் அவ்வளவு அதிகமாக இல்லை. பூர்வீக ஹிந்துக்களுக்கும், பௌத்தர்களுக்கும் தோட்டங்களிலும் விருக்ஷங்களிலும் பிரியம் அதிகமிருந்தது. ஒவ்வொரு வீட்டிற்கருகிலும் ஒரு சிறிய தோட்டமும் புஷ்பச் செடிகளும் இருக்கும். சரீரப் பயிற்சிக்கு வேண்டிய விசாலமான கட்டடங்களும் இருக்கும். கோவில்களும், மடங்களும், ஏராளமாய்க் கட்டப்பட்டிருந்தன. அவைகளில் அமைக்கப்பட் டிருந்த சிற்பவேலைகள் விசித்திரமாயிருந்தன. யானைகள் போவதற்கு விசாலமான தெருக்கள் ஏற்பட்டிருந்தன.

கி. பி. 629-ம் வருஷத்தில் இந்தியாவில் பிரயாணஞ் செய்த சீன தேசத்து யாத்திரிகரான ஹியான் திஸாங்க் இந்தியாவின் பட்டணங்களைப் பற்றி அடியில்வருமாறு கூறியிருக்கிறார்:—பட்டணங்களுக்கும் கிராமங்களுக்கும் உள்கேட்டுகள் உண்டு. சுவர்கள் விசாலமாயும் உயரமாயும் இருக்கும், தெருக்களும் சந்துகளும் வளைந்து வளைந்து இருக்கும். கசாப்புக் கடைக்காரர்கள், செம்படவர்கள், நாட்டியக்காரர்கள், தோட்டிகள் முதலியவர்கள் நகரத்திற்கு வெளியில் வசிப்பார்கள். அவர்கள் நகருக்குள் வரும்பொழுதும் வீட்டிற்குத் திரும்பிப் போகும்பொழுதும் ரஸ்தாவின் இடதபுறமாகவே செல்லவேண்டும். அவர்களுடைய வீடுகளைச்சுற்றித் தாழ்ந்த சுவர்கள் அமைக்கப்பட்டிருக்கும். சிற்பசாஸ்திரவல்லோர்களின் சாமர்த்தியம் முழுவதும் மடங்கள் கட்டப்படுவதில் காண்பிக்கப்பட்டிருக்கும். நாலு மூலைகள் சந்திக்கும் இடங்களிலெல்லாம் மூன்றடுக்கு கோபுரம் ஒன்று கட்டப்பட்டிருக்கும். கதவுகள், ஜென்னல்கள், தாழ்ந்தசுவர்கள் முதலியவைகள் வர்ணம் பூசப்பட்டிருக்கும். சன்னியாசிகள் வசிக்கும் மடங்களின் உட்புறத்தில் அலங்காரமான வேலைகள் செய்யப்பட்டிருக்கும். சந்திரகுப்தன் அரசாண்டகாலத்தில் முனிசிபல் ஆட்சி முறை நிரம்ப திருப்திகரமாக இருந்தது. சீனதேசத்து யாத்திரிகர் இந்தியாவைப் பார்க்கவந்திருந்த காலத்தில் இந்தியாவில் முனிஸிபல் ஆட்சிமுறை அவ்வளவு திறமையாக இருக்கவில்லை. ஹியூன் திஸாங்கு காலத்தில்

ஜனங்கள் சுத்தத்தைக் கவனித்து வந்தார்கள். அக்காலத்தில் பெரிய கலாசாலையும் இருந்தது.

ஸ்கூலில் விவசாயம்

சமீபத்தில் கோயமுத்தூரை போய்ப்பார்த்தவர்கள் அங்கே, விவசாயக்காலேஜுக்காக சென்னை கவர்ன்மெண்டார் விசாலமான இடத்தில் ஒரு சிறந்த கட்டடம்கட்டி யிருக்கிறதைக் கண்டு களிப்படைந்திருக்கிறார்கள். கல்வியபிவிருத்திசெய்து பொதுஜனங்களுக்கு பாஷாக் கியானத்தை உண்டாக்கும் பொறுப்பை கவர்ன்மெண்டார் ஏற்றுக் கொண்டதுடன் நிற்காமல் இந்தியர்களுக்கு அத்யாவசியமான விவசாய சாஸ்திரபடிப்பையும் கற்பித்து வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையுஞ் செய்திருக்கிறார்கள். டேராடூனில் பாரெஸ்ட்டு ஸ்கூல், ஒன்று ஏற்பட்டிருப்பதினால் இந்தியாவில் காட்டிலாகா நிரம்ப திருப்திகரமான ஸ்திதியிலிருந்து வருகிறது. இந்தியாவில் இஞ்சினீயரிங் காலேஜ்கள் ஏற்பட்டிருப்பதின் பயனாக பலர் அந்த சாஸ்திரத்தில் தேர்ந்து கீர்த்திபெற்று விளங்குகிறார்கள். இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மெடிகல் காலேஜுகள் இந்தியாவுக்குப் பல நன்மைகளைச் செய்திருக்கின்றன. இவ்வளவுடன் கவர்ன்மெண்டார் நிற்காமல் கோயமுத்தூரில் ஒரு விவசாயக்காலேஜையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்

இந்த விவசாயக்காலேஜ் சில வருஷங்களுக்கு முந்தி சைதாப்பேட்டையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. சைதாப்பேட்டை சென்னைக்கு நிரம்ப சமீபத்திலிருக்கிறதினால் அங்கே பண்ணை சிறப்பாக விளங்குவதற்கு ஹேதுவில்லை. அங்கே நிலமும் செழிப்பாக இல்லை. வேறு பல அசந்தர்ப்பங்களினால் அங்கே அக்காலேஜ் தழைத்து ஓங்கிவளராமல் மூடப்பட்டது.

இப்பொழுது நிரம்ப செலவுசெய்து, கோயமுத்தூரில் விவசாயக்காலேஜ் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அக்காலேஜில் இப்பொழுதிருக்கும் பிரின்ஸிபால் மிஸ்டர் உட் நிரம்ப சாமர்த்தியசாலி. அவர் விவசாய சாஸ்திரத்தில் நிபுணர், அக்காலேஜில் வித்யார்த்திகளுக்கு ஏற்பட்டிருக்கும் வேலை நிரம்ப கஷ்டமாயிருக்கிறதென்று அவர்கள் முறையிடுகிறார்கள். விவசாய காலேஜ் என்பது தமாஷாக காலம் கழிக்கும் இடமல்ல என்பதை அறியவும். இப்பொழுது காலேஜில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்பொழுது அந்தக் காலேஜில் வித்யார்த்திகளுக்கு ஆரம்பத்தில் அனுஷ்டான விவசாய சாஸ்திரபாடங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. அதன்பிறகு உயர்தர விவசாய சாஸ்திரபாடங்கள் கற்பிக்கப்படும். வித்யார்த்திகள் பட்டம் பெறுவதற்குத் தவறிப் போனாலும் அவர்கள் விவசாயத்தில் மெத்த அனுபவம் பெற்று

காலேஜை விட்டுப் போகிறார்கள். அவர்கள் அந்த அனுபவ ஞானத்துடன் விவசாயத் தொழிலை செய்து வந்தால் அது அவர்களுக்கு மிக்க பிரயோஜனத்தைக் கொடுக்கும்.

காலேஜில் சேர்ந்து வாசிக்க வேண்டிய காலம் மூன்றுவருஷம். வருஷா வருஷம் 20 பேர்களுக்கு மேல் காலேஜில் சேர்த்துக் கொள்ளப் படுகிறதில்லை. 1913-ம் வருஷத்தில் 12 பேர்கள் அக்காலேஜில் பட்டம் பெற்றார்கள். அவர்களில் 7 பேர் சர்க்கார் உத்தியோகத்தி லிருக்கிறார்கள். ஒருவர் தயிர், பால், பண்ணை ஒன்றை வைத்து நடத்தி வருகிறார். மற்ற நால்வர் அவர்களுடைய கிராமங்களில் விவசாயத் தொழிலைச் செய்து வருகிறார்கள்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர், பெண்கல்வியைப்பற்றி பேசியது.

காஞ்சீபுரம் பெண் பாடசாலையில் வருஷாந்த பரிசளிப்பு தினம் கொண்டாடப்பட்ட தினத்தில் ஆனரெபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் அடியில் வருமாறு பேசினார்:—"தென்னிந்தியா முழுவதிலும் இருக்கும் பெண் பாடசாலைகளில் இதை ஒரு சிறந்த பாடசாலை யென்று சொல்லலாம். இந்த ஸ்கூலில் படிக்கும் பெண்களின் சாமர்த்தியத்தையும் இந்த ஸ்கூல் வைத்து நடத்துவோரின் சாமர்த்தியத்தையும் கண்டு மெச்சினேன்.

பெண்கல்வியின் அவசியத்தைக் கண்ணியமுள்ள கனவான்கள், ஒவ்வொருவரும் உணர்ந்திருக்கிறார்கள்.

பெண்கல்வியை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று செய்யப்படும் பிரயத்தனங்களுக்கு, கவர்ன்மெண்டார் தாராளமாய் பொருளுதவி செய்து வருகிறார்கள். இதற்கு உதாரணமாகத் திருவல்லிக்கேணியில் பெண்களுக்கு ஒரு ஹைஸ்கூலையும், பீச்சு ரோட்டில் ஸ்திரீகளுக்கு ஒரு காலேஜையும் கவர்ன்மெண்டார் வைத்து நடத்திவருகிறார்கள். நான் சட்ட சபை மெம்பராக இருக்கையில், பெண்கல்வியின் அபிவிருத்தியைப் பற்றி சிரத்தை யெடுத்துக்கொள்ளும் இந்தியகனவான்கள் அடங்கிய பலமான கமிட்டி ஒன்று ஏற்பட்டிருக்கிறதென்று கவர்ன்மெண்டாரின் நோட்டீஸுக்கு வர, அந்தக்கமிட்டிக்குக் தாராளமாகத் கவர்ன்மெண்டார் பண உதவி செய்து வந்தது எனக்குத்தெரியும். பெண்கல்வியைப் பரவச் செய்வதற்கு, கவர்ன்மெண்டாரின் பண உதவியையே நீங்கள் பூராவாக எதிர்பார்க்கக்கூடாது. அதற்கு இந்தியர்களும் பண உதவிசெய்ய வேண்டும். அவ்வித சகாயத்தை இந்தியர்கள் செய்ய முன்னுக்கு வந்ததாகத் தெரியவில்லை. ஆண்பிள்ளைகளுக்காக அங்கும் இங்கும் சில

ஸ்கூல்களை ஸ்தாபித்திருக்கிறார்களே யன்றி பெண் பாடசாலைகளை ஸ்தாபிக்க அவர்கள் சிரத்தை யெடுத்துக்கொண்டிருக்கிறதாகத் தெரியவில்லை. இனி மேல் இக்குறை நீங்கிப்போகும் என்று நம்புகிறேன்.”

சமாச்சாரக் குறிப்பு.

டீச்சர்ஸ் காலேஜ் பிரின்ஸ்பால் வேலை.

சைதாப்பேட்டை டீச்சர்ஸ்காலேஜ் பிரின்ஸிபால் மிஸ்டர் H.C. டங்கன் ஆனரெபில் மிஸ்டர் ஸ்டோனுக்குப் பதிலாய் சென்னை வித்தியாதிகாரியாய் ஆக்ட்செய்ய நியமிக்கப்பட்டிருக்கிறாராதலால் அவருக்குப்பதிலாய் அந்தக்காலேஜ் வைஸ் பிரின்ஸிபால் மிஸ்டர் R.W. ராஸ் பிரின்ஸிபாலாய் ஆக்ட்செய்ய நியமிக்கப்பட்டிருக்கிறார். வைஸ் பிரின்ஸிபால் ஸ்தானத்துக்கு அந்தக் காலேஜ் மிஸ்டர் T. V. சிவகுமார சாஸ்திரியார் நியமிக்கப்படுவர்போலும்.

வாராவதி கிராண்டு

பாலக்காட்டிலிருந்து கோயமுத்தூருக்குப்போகும் ரோட்டில் நருகம்பள்ளி பாலத்திற்கு கவர்ன்மெண்டார் 65,000-ரூபாய் சாங்கிஷன் செய்திருக்கிறார்கள்.

மிஸ்டர் மல்லாதி சத்யலிங்கம் நாயக்கரின் நன்கொடை.

மிஸ்டர் மல்லாதி சத்யலிங்கம் நாயக்கர் காக்கினாடாவுக்கருகிலுள்ள கொரிங்காவைச் சேர்ந்தவர். அவர் பிறப்பில் செம்படவரென்று சொல்லப்படுகிறது. அவர் ரங்கூனுக்குப்போய் ஏராளமாய் பணம் சம்பாதித்தார். இறக்கும்பொழுது அவர் சம்பாதித்துவைத்த சொத்தின் மதிப்பு 50 லட்சம் ரூபாய் என்று சொல்லப்படுகிறது. காக்கினாடாவில் சில தர்ம காரியங்கள் நடத்தப்படுவதற்கென்று 8-லட்சம் ரூபாய் நன்கொடை செய்திருக்கிறார்.

காக்கினாடாவைச் சேர்ந்த ஜயநாயகபுரம் என்ற இடத்தில் நிலத்தை வாங்கி, பிள்ளைகள் விளையாடுவதற்கும் தேகப்பயிற்சிசெய்வதற்கும் தகுதியாய் விஸ்தாரமான விளையாடும் இடங்களுடன் பெரிய ஸ்கூல் ஒன்று கட்டப்படவேண்டும். காக்கினாடாவுக்கருகிலிருக்கும் சேளங்கி கிராமத்தில் கல்லினால் ஆலயம் ஒன்று கட்டப்படவேண்டும். ஏழைகளுக்குச் சாப்பாடு போடுவதற்கு ஜயநாயகபுரம் ஸ்கூலுக்கருகில் சத்திரம் ஒன்று கட்டப்படவேண்டும்.

ஜாதி, மதம் முதலியவைகளைப் பாராட்டாமல் எல்லாவகுப்புக் குழந்தைகளும் அந்தஸ்கூலில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும். அந்த ஸ்கூலில் சேர்ந்துவாசிக்கும் பிள்ளைகளுக்கு (ஆண் பெண்கள்) பிரைமெரி படிப்புவரைக்கும் வகுப்புகள் வைத்துக் கற்பிக்கப்படவேண்டும். தவிர அந்த

ஸ்கூலில் தச்சுவேலை, நெசவுத்தொழில், மண்பாண்டங்கள் செய்யும் தொழில், முதலிய வேறு பல தொழில்கள் இலவசமாய் கற்பிக்கப்படவேண்டும். இவ்வாறு ஒரு லட்சம் ரூபாய் கட்டடங்கள் செலவுக்குப் போக, பாக்கி இருக்கும் 7 லட்சம் ரூபாயில் வரும் வட்டிப் பணம் மேற்கண்ட தர்மங்களை நிர்வகிப்பதற்கும், வருஷா வருஷம் இந்த மாகாணத்தைச் சேர்ந்த ஹிந்து மாணாக்கன் ஒருவனை உயர்தரப் படிப்புக்காவது அல்லது தொழிற் படிப்புக்காவது ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் அல்லது வேறு அன்னிய தேசங்களுக்கு அனுப்பிக்கொண்டு வருவதற்கும் விநியோகஞ் செய்யப்படவேண்டுமாம். இதல்லவோ சிறந்த தர்மம்!

ஊரூராய்த் திரியும் டிஸ்பென்ஸரிகள்.

ஊரூராய்த்திரியும் டிஸ்பென்ஸரிகளை ஸ்தாபிப்பதின் அவசியத்தை சென்னை கவர்ன்மெண்டார் உணர்ந்திருக்கிறார்கள். சென்னை கவர்ன்மெண்டார் இந்த ராஜதானியில் அவ்வித டிஸ்பென்ஸரிகள் சிலவற்றை ஸ்தாபிக்கும்படி சாங்கிஷன் செய்திருக்கிறார்கள். அவ்வித டிஸ்பென்ஸரிகள் முக்கியமாய் வட ஜில்லாக்களில்தான் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. எல்லா ஜில்லாக்களிலும் அவ்வித டிஸ்பென்ஸரிகள் ஸ்தாபிக்கப் படுவதற்கு நிரம்ப காலஞ்செல்லும். அவ்வித டிஸ்பென்ஸரிகள், சாஸ்வதமாக இருக்கும் டிஸ்பென்ஸரிகளைப்போல அவ்வளவு சிலாகிக்கத் தக்கனவை யாகாவாயினும் சாஸ்வத டிஸ்பென்ஸரிகள் ஸ்தாபிக்கப்படாத இடங்களில், அவ்வித டிஸ்பென்ஸரிகள் நிரம்பப் பிரயோஜனமாயிருக்கும். அவ்வித டிஸ்பென்ஸரிகளை ஸ்தாபிக்கும் பொறுப்பை ஜனங்கள் ஏற்றுக்கொள்ளும்படியாக கவர்ன்மெண்டார் செய்தாலொழிய அந்த டிஸ்பென்ஸரிகள் அபிவிருத்தியாகா.

கும்பகோணம் சரஸ்வதி பாடசாலை,

ஆனரெபில் ரர்வ் பகதூர் V. K. ராமானுஜாச்சாரியார் கும்பகோணம் சரஸ்வதி பாடசாலையைப்பற்றி அக்கறை எடுத்துக்கொண்டதின் நிமித்தம் அப்பாடசாலையின் கட்டடத்திற்கு கவர்ன்மெண்டார் 8,550 ரூ.ய் சாங்கிஷன் செய்திருக்கிறார்கள். மதிப்புத்திட்டம் 17,100 ரூபாய். தியாஸாபிகல் எடுகேஷன் டிரஸ்டார் 5000 ரூபாய் கொடுக்கிறார்கள். மீதி 3550 ரூபாயை பெண் கல்வியின் அபிவிருத்தியில் அக்கரையுள்ள தர்மப்பிரபுக்களிடமிருந்து சந்தாத்தொகை வசூல் செய்யப்படும். இந்த வித்யாசாலைக்கு மிஸ் பார்ஸன்ஸ் F. T. S. ஆனரெரி சூபரின்டென்டெண்டாக வந்திருக்கிறார். அவர் வந்ததுமுதல் அந்த ஸ்கூலில் பெண்கள் அதிகமாய் சேர்ந்து வருகிறார்கள். சில பெரிய ஸ்திரீகளும், பெண்களும் ஸ்பெஷலாக அவரிடத்திலிருந்து கல்வியைக் கற்று வருகிறார்கள். இந்த ஸ்கூலையொட்டி

ஹோஸ்டல் ஒன்றை ஸ்தாபிப்பதற்குவேண்டிய யோசனை செய்யப்பட்டு வருகிறது. வெளியூர்களிலிருந்து பெண்களை இந்த ஸ்கூலில் சேர்ப்பதாகப் பலர் சொல்லி யிருக்கிறார்கள்.

கல்கட்டாவில் கல்மழை.

கல்கட்டாவில மார்ச்சுமாதம் 5உ பிரமாதமான கல்மழைபெய்து, நகரம் முழுவதிலும் பொருள் நஷ்டத்தை யுண்டாக்கிற்று. பல விடங்களில் ஒரு மணிநேரத்திற்கு மேலாக, தெருக்களில் பிரவாகம் ஓடிற்று. அப்பொழுது வண்டி முதலியவைகளின் நடமாட்டம் நிறுத்தப்பட்டது.

ரத்னகிரியில் பூகம்பம்.

போன மாதம் 16உ ரத்னகிரியிலும் அதற்கு அக்கப்பக்கத்திலும் பூகம்பம் உண்டாயிற்று. 6 செக்கண்டுவரையிலும் பூமி நடுங்கிற்று. உயிர்சேதம் உண்டாகவில்லை. ஜெயபாட்டு என்ற இடத்தில் ஒருமணி நேரத்திற்குள் இரண்டு முறை பூகம்பம் உண்டாயிற்று.

இந்திய அனாதை ஆஸ்ரமங்கள்.

பிப்ரவரி மாதம் கூடிய ராஜப்பிரதிநிதிச் சட்டசபை மீட்டிங்கில் பல மாகாணங்களிலுள்ள ஹிந்து, மகம்மதிய அனாதை ஆஸ்ரமங்களின் தொகை இவ்வளவென்று கண்டு இந்தியா கவர்மெண்டு ஒரு பத்திரம் வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். அத்தொகை பின்வருமாறு:—

	ஹிந்து	முஸ்லீம்
சென்னை	3	5
பம்பாய்	14	9
வங்காளம்	3	4
ஐக்கிய மாகாணங்கள்	11	13
பஞ்சாப்	12	7
பேஹார்	2	1
மத்திய மாகாணங்கள்	3	2
ஆஸ்ஸாம்	1	0

வரதக்ஷிணை வாங்காத ஒரு மாணாக்கன்.

கல்கட்டாவில் காலேஜ்வகுப்பில் வாசிக்கும் பாபு பக்தோபாடர் பானர்ஜி என்ற ஒரு மாணாக்கன் பாபு தாராம்தாஸ் சட்டர்ஜியின் குமாரத்தியை இந்த மாதம் 3-தேதியன்று விவாகஞ் செய்து கொண்டார். அக்குடும்பத்தில் பெரியவர் மண மகனுடைய தமையனாவர். விவாகத்திற்கு முந்தியே மணமகன் தம் தமையனை நோக்கி, அண்ணா! என் விவாகத்தில் மணமகளின் பெற்றோர்களிடம் வரதக்ஷிணை வாங்கும் எண்ணம் தங்களுக்கிருக்குமேயானால், எனக்கு விவாகமே வேண்டாம் என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டார். அவரும் வரதக்ஷிணையைப் பற்றி பிரஸ்தாபிக்கவில்லை. வரதக்ஷிணை வாங்காமலே விவாகம் நடந்தேறிற்று. இந்த மாணாக்கருடைய வழியை மற்ற எல்லா மாணாக்கர்களும் பின்பற்றுவார்களாக.

திருப்பதி தேவஸ்தானம் ஸ்கூல்கள்.

திருப்பதியிலும், வேலூரிலும் உள்ள இரண்டு இங்கிலீஷ் ஹைஸ்கூல்கள், திருப்பதியிலுள்ள சம்ஸ்கிருத பாடசாலை ஆகிய இம்மூன்று கல்வி ஸ்தாபனங்களின் மேற்பார்க்கும் வேலையை திருப்பதி மஹந்து இந்த மாதம் 11-ந்தேதி முதல் நிர்வகித்து வருகிறார்.

மேற்கண்டஸ்கூல்களின் நிர்வாகத்தை மார்ச்சு மாதம் 11-ந்தேதி முதல் ஸ்ரீமஹந்து நிர்வகித்து வருவார் என்று பிப்ரவரி மாதம் 28-ந்தேயன்று நடந்த திருப்பதி ஹைஸ்கூலின் வருஷாந்த தினக்கொண்டாட்டத்தில் அக்கிராசனம் வகித்த ஆனரெபில் மிஸ்டர் P.S சிவஸ்வாமி அய்யர் வெளியிட்டார். மேற்கண்ட இங்கிலீஷ் ஹைஸ்கூல்கள் இரண்டிலும் மதப்படிப்பு கற்பிக்கப்பட்டு வரவேண்டுமென்றும், தினமும் ஸ்கூல்வேலை ஆரம்பமாவதற்கு முந்தி ஸ்ரீ வெங்கடேஸ்வர தோத்திரம் செய்யப்பட வேண்டுமென்றும் ஸ்ரீ மஹந்து அவ்விரண்டு ஸ்கூல்களின் தலைவர்களுக்கும் அறிவித்திருக்கிறார். மதப்படிப்புக் ஸ்காலர்ஷிப்புகளும் பரிசுகளும் கொடுக்கப்படுகின்றன.

தஞ்சாவூர் கவர்ன்மென்டு பெண்பாடசாலை.

தஞ்சாவூரிலிருக்கும் கவர்ன்மெண்டு பெண்பாடசாலைக்கு ஒரு கட்டடத்தைக் கட்டுவதற்கு வேண்டிய துண்டு நிலத்தை தஞ்சாவூர் முனிஸிபாலிடியைச் சேர்ந்த மானம்புச்சாவடி வார்டில், வாங்குவதாக கவர்ன்மெண்டு யோசித்திருந்தார்கள். பல காரணங்களைக்கொண்டு அந்த ஸ்தலம் அவ்வளவு திருப்திகரமாக இல்லையென்பது உறுதி ஆகையால் கோட்டைக்கருகிலேயே வேறு இடத்தைத் தெரிந்தெடுத்து அதில் அந்த ஸ்கூலைக் கட்டுதல் சிலாக்கியமாகும். என ஒருவர் தெரிவிக்கிறார்.

பரோடாவில் சுகாதாரக் காட்சி.

பரோடாவில் சுகாதாரக் காட்சிக்குச் சிறந்த பொருள்களை அனுப்பியவர்களுக்கு, மகாராஜாவே போன புதனன்று பரிசுகளைக் கொடுத்தார். அச்சமயம், ரெஸிடெண்டும், திவானும் வேறு பல பெரிய உத்தியோகஸ்தர்களும் போயிருந்தார்கள். நிர்வாக கமிட்டியின் பிரஸிடெண்டான மிஸ்டர் M.N. மேடா ரிப்போர்ட்டை வாசித்தார். அப்பொருட் காட்சியைப்

பார்க்க, ஏராளமான ஸ்திரீகள் உள்பட 40,000-ஜனங்கள் வந்திருந்தார்கள் என்று அந்த ரிப்போட்டில் கண்டிருந்தது.

மகாராஜா பரிசுகளைக்கொடுத்த பிறகு, பொருட்காட்சி நிரம்ப திருப்திகரமா யிருந்ததென்று சொல்லிவிட்டு அதை ஏற்படுத்தினவர்களைப் புகழ்ந்து பேசினார். சுகாதார விதிகளை ஜனங்கள் அனுசரித்து வந்தால் டாக்டர்களுக்கு வேலையொன்றுமே இராது. குடித்தனத்தைச் செட்டாய் நடத்தி வந்தால், ஜனங்கள் கடனாளிகளாகவும் ஏழைகளாகவும் இராமல் ஐசுவரியவான்களாக ஆவார்கள். ஏழைகளாயும் கடனாளிகளாயு மிருந்தால் தான், ஜனங்கள் திருட்டு முதலிய ஈனத்தொழில்களைச் செய்யத் துணிவார்கள். அப்பொழுது, போலீஸ் இலாகாவுக்கு வேலை அதிகமாகும். ஜனங்கள் செட்டாய் ஜீவனஞ் செய்தல், போலீஸ் கமிஷனருக்கும் அவருடைய சிப்பந்திகளுக்கும் வேலையே இராது என்று மகாராஜா பேசினார்.

இந்திய ஸ்திரீகளின் கூட்டம்.

ஸ்ரீ சாரதா ஸ்திரீகளின் யூனியனின் ஆதரவில் திருவல்லிக்கேணி கவர்ன்மெண்ட் ட்ரெய்னிங்க் ஸ்கூல் ஹாலில், இந்திய ஸ்திரீகளின் மீட்டிங்க் ஒன்று போன சனிக்கிழமை மாலை கூடிற்று. அச்சமயம் மிஸ்ஸெர்ஸ் T. சாதாசிவய்யர் அக்கிராசனம் வகித்தார். சமஸ்கிரத சுலோகங்கள் சொல்லப் பட்டன.

ருதுமதிவிவாக மசோதாவைஆதரித்து மீனாட்சியம்மாவால் தமிழில் ஒரு சிறந்த வியாசம் எழுதி வாசிக்கப்பட்டது. இரத்தோட்டம், இரத்தம் சுத்தி கரிப்பு என்ற விஷயங்களைப் படங்களைக் கொண்டு சகோதரி R. S. சுப்பலட்சுமி அம்மாளால் ஒரு உபந்நியாசஞ் செய்யப்பட்டது.

பெங்களூரில் ஒரு புதிய லேடி ஸர்ஜன்

பம்பாயைச் சேர்ந்த மிஸ்ஸெஸ் மதுராபாய் உச்கோன்சர் L.M.S. அஸிஸ்டண்டு ஸர்ஜனாக நியமிக்கப்பட்டு, பெங்களூர் பிரஸவ ஆஸ்பத்திரியில் வேலைபார்த்து வரும்படியாக மாற்றப்பட்டிருக்கிறார். இந்தமாது பௌகாம்வாசி. இவருடைய பிதாவுக்கு, மைசூரைச்சேர்ந்த ஹாஸன் ஜில்லாவிலுள்ள அரிசிக்கரை தாலுக்காவில் நிலங்களிருக்கின்றன. மிஸ்ஸெஸ் மதுராபாயிக்கு சமூக ஊழியத்தில் நிரம்ப அக்கரையுண்டு. பம்பாயிலுள்ள தேவசாதன சங்கத்தில் பிரியமுள்ளவர். தம்மைப் போலொத்த அபலைகளுக்கு வேண்டிய உதவியைச் செய்துவரும் மரியாதையான பிராம்மண குடும்பத்தைச்சேர்ந்த மிஸ்ஸெஸ் மதுராபாயின் வழியை, மைசூர் கைம்பெண் ஆச்சிரமத்தைச் சேர்ந்தவர்கள் பின்பறறி வருவார்கள் என்று நம்புகிறோம். கைம்பெண் ஆச்சிரமத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தாராளமாய் பண உதவி செய்துவரும் மைசூர் கவர்ன்மெண்டார்

அந்த ஆச்சிரமத்திலுள்ள சிலரை, மெடிகல் ஸர்விஸுக்கு வேண்டிய பரீட்சைகளுக்கு வாசிக்கச்செய்து அவர்களுக்கு அந்தஇலாகாவில் பெரிய உத்தியோகத்தைக் கொடுத்து அவர்களைக் கொண்டு ஸ்திரீஜாதிகளுக்குப் பல நன்மைகளைச் செய்யும்படி செய்வார்கள்.

ஆஸ்பத்திரிகளுக்கு கவர்ன்மெண்டு பணஉதவி

கிராமாந்தரங்களில் சுகாதார அபிவிருத்திக்கும் ஆஸ்பத்திரி வைப்பதற்கும், வருஷா வருஷம் இவ்வளவு கிராண்டுத் தொகை, கொடுத்துவர வேண்டுமென்று 1915-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 3-ந் தேதியன்று கூடிய சென்னை சட்டசபை மீட்டிங்கில், ஆனரெபில் மிஸ்டர் ராமய்யங்காரால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தைப் பற்றி, விவாதம் நடந்தபொழுது, லோக்கல் போர்ட்களால், புதிதாய் ஸ்தாபிக்கப்படும் ஆஸ்பத்திரிகளுக்குப் பிடிக்கும் செலவு தொகையை எவ்வளவு பாகம்,பண உதவி செய்யமுடியும் என்று கவர்ன்மெண்டு யோசித்தார்கள். யோசனை செய்ததில் இனிமேல் லோக்கல் போர்டுகளாலும் முனிஸிபாலிடிகளாலும் ஸ்தாபித்து நடத்தப்படும் ஆஸ்பத்திரிகளுக்கும் டிஸ்பென்ஸரிகளுக்கும் பிடிக்கும் செலவில், பாதித் தொகையை அவைகளுக்குக் கொடுப்பதாக கவர்ன்மெண்டு தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் எப்பொழுது கவர்ன்மெண்டுக்கு ஐவேஜுக் குறைவாக இருக்கிறதோ அப்பொழுது இந்த கிராண்டுகள் கொடுபடாமல் நிறுத்தப்படும்.

ராஜாங்க ஸ்காலர்ஷிப்புகள்.

சம்ஸ்கிருதம் படிக்க விரும்பும் இந்தியர்களுக்கு இந்த வருஷம் ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்படும். அராபி படிக்க விரும்புவோருக்கும் ஸ்காலர்ஷிப்பு கொடுக்கப்படும். ஸ்காலர்ஷிப்புகளைப் பெறும் வித்யார்த்திகள் ஐரோப்பாவுக்குப் போய் படித்துவர வேண்டும். ஸ்காலர்ஷிப்புகளைப் பற்றிய விவரங்களை சென்னை மாணவர்களின் புத்திமதிக்கமிட்டி செக்ரிடேரியாகிய மிஸ்டர் A. டேவிஸி னிடமிருந்து தெரிந்துகொள்ளலாம்.

குழந்தைக் கைம்பெண்கள்

இந்தியாவில் குழந்தைக் கைம்பெண்களின் தொகை பின் வருமாறு:—

ஒரு வயதுள்ள கைம்பெண்கள்	859
2-வயதுக் கைம்பெண்கள்	1,039
2-வயது முதல் மூன்று வயதுக் கைம்பெண்கள்	1,886
மூன்று முதல் 4 வயதுள்ள கைம்பெண்கள்	3,732
4-வது முதல் 5 வயதுள்ள கைம்பெண்கள்	8,180
5-முதல் 10 வயதுள்ள கைம்பெண்கள்	78,407
10-முதல் 15 வயதுள்ள கைம்பெண்கள்	2,27,367

ருதுமதி விவாகம் செய்யக்கூடாதென ஆக்ஷேபம் செய்துவரும பிராமண சிகாமணிகள் மேற்கூறிய தொகையைக் கண்டு என்ன பதில் அளிப்பார்களோ தெரியாது.

K. T. செட்டி பெண் பாடசாலை

கலவால திருவேங்கடத்தான் ஸ்கூலின் வருஷாந்த பரிசளிப்பு தினம் போன சனிக்கிழமை பச்சையப்பன் ஹாலில் ஆனரெபில் ஜஸ்டிஸ் பேக்வெல்லின் அக்கிராசனத்தின் கீழ் கொண்டாடப் பட்டது. மிஸ்ஸஸ் A. G. கார்ட்யூ பரிசுகளைக் கொடுத்தார். செட்டி ஸ்திரீகள் பலர் வந்திருந்தார்கள். வீணை வாசிக்கப்பட்டது; டிரில் நடந்தது. மிஸ்ஸஸ் கார்ட்யூ வெகுமதிகளைக் கொடுப்பதற்கு முந்தியே, அந்த ஸ்கூலின் வருஷாந்த ரிபோர்ட்டு வாசிக்கப்பட்டது.

சேர்மன் அந்த ஸ்கூலைப்பற்றியும் உதாரகுணமுள்ள இரண்டு சகோதரர்களைப்பற்றியும் புகழ்ந்து பேசினர்.

தவிர ஹாஸ்டல் ஹாலில் மிஸ்டர் கோகலேயின் உருவப்படம் ஒன்று இருக்கவேண்டியது அவசியம் என்றும் சொன்னர்.

ஐரோப்பிய யுத்தத்தின் காரணங்கள்

அவைகளைச் செவ்வையாய் அறிந்துகொள்வதற்குப் பின்வரும் விஷயங்களைக் கவனித்துப் படிக்கவேண்டும்: (1) சென்ற நூற்றுண்டில் ஐரோப்பாவில் தோன்றிய மாறுதல்கள். (2) ஜெர்மன்ஏகாதி பத்தியத்தின் பிறப்பு (3) இடாலி தேசம் ஒருமைப்பட்ட ஆச்சரியம். (4) ஆஸ்டிரிய ஏகாதிபத்தியத்தில் மாறுதல்கள். (5) ஜெர்மன் ஏகாதிபத்தியம் வளர்ந்தோங்கிய சிறப்பு. (6) ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் செல்வச் செருக்கும் ராணுவக் கொழுப்பும். (7) கிரேட் பிரிட்டனும் ஜெர்மனியும் செய்தபோட்டி (8) பால்கன் நாடுகளிலும் துருக்கியிலும் நடந்த யுத்தங்களின் பலன்கள் (9) வல்லரசுகள் யுத்த முயற்சிகளைச் செய்யத் தொடங்கினது (10) ஆஸ்டிரிய இளவரசர் கொலையுண்ட பிறகு வல்லரசுகளுக்குள் நடந்த கடிதப் போக்குவரத்து. (11) வல்லரசுகள் ஆரம்பித்த மகா யுத்தத்தின் விசேஷங்கள்.

ஐரோப்பிய சரித்திரத்தை இவ்வளவு விஸ்தாரமாய்ச் சொல்லி யுத்தத்தின் உண்மையான காரணங்களை விளக்குகிற புத்தகம் வேறேதுவுமில்லை என்று நாம் நிச்சயமாய்ச் சொல்லுவோம். இது தமிழ் உலகத்தாருக்கு மிகவும் உபயோகமானது.

இப்புத்தகத்தின் விலை அணு 12. வேண்டுவோர் சென்னை சுதேச மித்திரன் ஆபீசுக்குஎழுதி பெற்றுக்கொள்ளலாம்.

The Tamil Zenana & School Magazine.

மாதர் மனோரஞ்சினி.

“எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்”—ஔவையார்.

Vol. XVII | Madras April & May, 1915. | Nos 4 & 5
புத்தகம் 17 | சென்னை ஏப்ரல்—மே 1915௵ | இலக்கம் 4&5

THE REGISTRAR OF BOOKS 4 - OCT 1915 MADRAS.

நியாயம்.

JUSTICE.

சற்றேறக்குறைய 20 வருஷங்கட்கு முன்னல் யானும் என் நண்பர் இருவருமாக மேகதாட் என்னும் இடத்திற்குச்சென்று திரும்பும்பொழுது ஏதோ ஓர்எண்ணத்தால் காவேரிநதியிலேயே கீழ்செல்லஎண்ணி ஓர்வலையனிடம் ஏற்பாடு செய்து படகிலேறிச் சென்றனம். பகல் 10 மணிக்குப் புறப்பட்டு சோழப்பாடி என்னு மிடத்திற்குச் செல்லவே, அங்கு பிராமணர்கள் வீடு ஐந்து இருந்தன. அவர்களுள் தனவந்தரும் தர்மகுணமு முள்ளவர்கள் இருவரே. அவ்விருவரும் சற்று உலக வழக்கங்களை நன்கறிந்தவர்கள் போலவே தோன்றினர். எங்களைக் கண்ட மாத்திரத்தில் முன் பின்னறியா திருந்த போதிலும் அவர்கள் வீட்டில் தங்கியிருக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்தினது மன்றி படகுக்காரனுக்கு உள்ள கூலியைக் கொடுத்து அவன் ஊர் போகும்படி செய்து விட்டனர்.

இம்மாதிரியான மனிதர் இம்மலை நாடுகளிலும் உளரோ என எங்கட்கு ஐயமுண்டாகவே, எத்தனை நாட்கள் அங்கு கழிக்கவேண்டுமோ என்கிற விசாரம் முதலில் மேலிட்டது. இராமசுவாமி அய்யரும் மாலைக் கடன்களை முடித்தபின் வீட்டின் வாயிலிருந்த பந்தலி லமர்ந்தனர். அவ்வூர் உத்தமர்களும் அநேகர் அங்கு நெருங்கினர். பின்பு ஐயர் எங்களைநோக்கி ‘உத்தமர்காள்’ தினந்தோறும் என் குழந்தைகளுக்கும் அவர்களைப்போல பாவிக்கும் இவ்வக்கிரஹாரக் குழந்தைகளுக்கும் புத்தி புகட்ட எண்ணி யாங்கள் இங்கு சந்தித்து மானிடவாழ்க்கைக் குரிய விதிகளை ஆராய்ச்சி செய்து வருகிற வழக்கம். தாங்கள் புதிதாயிருக்கிறபடியால் நாளையதினம் தாங்கள் அந்த சிரமத்தை ஏற்றுக்கொண்டு எங்களை கிருதார்த்தர்களாக்க வேண்டும் என்றனர்.

யாதுமறியாத எங்களுக்கு இவையெல்லாம் ஆச்சரியமாய்த் தோன்றிய போதிலும் அன்று அவர்கள் செய்பவற்றைத் தடுக்க எண்ணமில்லாதவராய் அவர் சொன்னவற்றிற்கு ஒத்துக்கொண்டோம். பின்பு சுமார் 8 வயது முதல் 14 வயது வரையுள்ள சிறு பெண்களும் பிள்ளைகளுமாக பன்னிருவர் வந்தனர். அவர்களை நோக்கி எவனும் ஐசுவரியத்தில் பிறந்த செல்வர்களாக நினையான். அவர்களுடைய தேக சௌக்கியதிற்கோ குறைவில்லை. பெண்கள் ஒரு புறமும் பிள்ளைகள் மற்றொரு புறமுமாக உட்கார்ந்தார்கள். பெண்கள் கழுத்தில் மங்கல நாண் (கயிறு) விளங்கக் கண்டனம். இதன்பின் இராமசுவாமி அய்யர் தன் சகோதிரன் குமாரனை போஜனை நோக்கி கேட்கிறார்:—

இரா:—போஜா! நேற்று எதைப்பற்றி பேசினோம்?

போஜ:—கல்விகரையில் என்பதைக் குறித்துச் சொன்னீர்கள்.

இரா:—(தன் குமார்த்தி மீனாக்ஷியை நோக்கி) மீனா நியாயம் என்பதை எப்படி படத்தில் காட்டியிருக்கிறார்கள்?

மீனாக்ஷி: கண்ணைக் கட்டிய பெண்ணாகவும், ஒரு கையில் திராசும் மறு கையில் கத்தியும் வைத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

இரா:—திராசு என்னத்திற்கு, கத்தியினால் என்ன செய்கிறாள்?

மீனா:—மனிதர் செய்யும் காரியங்களின் பெருமையை நிறுத்து; குற்றம் செய்தோரைத் தண்டிக்கத் தான் இவ்விரண்டும் உபயோகம்.

சுப்பராயன்:—அப்பா! அவளுக்கு காது ஏன் செவிடாகவில்லை?

இரா:—காதையும் பொத்திக்கொள்ளுகிறாள். ஏனெனில் யாராவது கோட் சொன்னால் அது காதில் விழக்கூடாதாம். மற்ற சமயங்களில் இருதிறத்தாரும் கூறும் வழக்கை கேட்க காது வேண்டுமல்லவா?

மீனா:—பிறர் படும் துயரைப்பார்த்து பச்சாதாபப்பட கண் வேண்டாமோ?

இரா:—கண் உண்டு. ஆனால் வழக்குகள் கொண்டு பலரின் ஸ்திதி, நடை, உடைபாவனைகளைப் பார்த்தால் பக்ஷபாத மின்றி நியாயம் செலுத்துவது கஷ்டமென்றறிந்து கண்ணைக் கட்டிக்கொள்ளுகிறாள்.

மீனா:—பூலோகத்தில் எல்லோரும் இம்மாதிரி நியாயவழியாய் நடப்பார்களா?

இரா:—நான் அதற்கு சிறு கதைகள் சொல்லுகிறேன் கேளுங்கள். காவேரிபுரம் கோட்டை மைசூர் இராஜ்ஜியத்தின் எல்லையாயிருந்த பொழுது அபாரசேனன் என்னும் ஒரு சேனைத்தலைவன் தன்னாட்டு எதிரியான் சோழனைப்படை எடுத்து வரும்படி இரகசியமாய் ஓலை எழுதியனுப்பினான். அதே மாதிரி எதிரிவந்ததும் சண்டை நடக்கும் சமயத்தில் இவன் எதிரிபக்கம் சேர்வதாக சங்கதி தெரிந்தது அரசன் இவனைச் சிறை

செய்யும்படி கட்டளையிட்டுத் தானே யுத்தத்திற்குப் புறப்பட்டான். அபாரசேனன் இங்குமங்கும் ஓடிக் கோயிலுட் புகுந்து ஒளிந்தான். மைசூர் ராஜன் வெற்றியடைந்தபோதிலும் அரசன் போரில் மடிந்தனன். ஊரார் எல்லோரும் சேனைத்தலைவனை கொலை செய்ய எண்ணிச் செல்லவே, ஒரு மாது ஓடிவந்து அவர்களுடைய காலில்விழுந்து கீழ்வருமாறு கூறினள்:—
"இந்த ஆலயத்துட்சென்று ஒளிந்திருக்கும் துரோகி என் மகன். நான் அவன் தாயார் என்பதில் அன்பு செலுத்த வேண்டியவளே; ஆயினும் நம்ம நாட்டிற்குத் துரோகியானவன் எனக்கும் சத்துரு. நீங்கள் செய்யும் காரியம் மிகவும் நியாயத்தைப் பொருத்ததே. இதோ இக்கதவைத் தள்ளி ஒரு பெரும் பாராங்கல்லை அதனிடத்தில் வைத்துச் சார்த்தி விடுங்கள்" என்று சொல்லி அகன்றனள். இவ்வாறு செய்துள்ள தாயார் தன் மகன் மேலுள்ள அன்பை எண்ணி நியாயத்திற்கு விரோதமாக நடந்து கொள்ள வில்லையே!

சுப்ப:—ஒருவன் தன் தாய் தகப்பனை அம்மாதிரி தண்டிக்கும்படி விட்டு விடுவானா? நியாயமெப்படியோ யிருக்கட்டும்.

இரா:—நியாயத்திற்குக் கட்டுப்பட்டால் தான் சொல்லுகிறது. நீ கேட்ட பிறகாரம் ஒருவன் தன் தகப்பன் செய்த குற்றத்தைப் பொறுக்காமல் நியாயப்படியே நடந்தான். மைசூர் இராஜ்ஜியத்தில் மாளவல்லி என்னும் ஊரில் சுமார் 100 வருஷங்களுக்குமுன் வீரப்பன் என்னும் ஒரு வியாபாரி இருந்தான். அவன் வர்த்தகத்தில் கொஞ்சம் திரவியம் சம்பாதித்ததால் இராஜாங்கத்தில் சாபா காகிதம்முதலியவை விற்பனை செய்யும்படி ஏற்படுத்தினார்கள். அவனும் தனக்கு அதுவும் ஒருவரும்படி என்றெண்ணி ஒரு ரூபாய்க் காகிதத்திற்கு ரூபாயும் இரண்டணாவும் கொடுத்து வாங்கும்படி செய்து வந்தான்

நாளடைவில் இம்மாதிரி நடக்கும் சங்கதிகளை விசாரிக்கச் சில உத்தியோகஸ்தர்கள் புறப்பட்டு ஊர் ஊராய் சுற்றிவந்து மாளவல்லி யடைந்தார். அங்கேயே சர்க்கார் உத்தியோகத்தில் அமர்ந்திருந்த அவன் குமாரனிடம் விசாரிக்க அவன் இவ்வாறு தன் தகப்பன் செய்வது வழக்கம் என்று கூறினதுமன்றி அதைத்தானே மறுநாள் காலை பிரத்தியக்ஷமாகவும் காண்பித்தான். அதன்பேரில் அவ்வர்த்தகனுக்குள்ள கண்ணியம் குறைந்தது. அவனுக்குதண்டனையும் விதித்தார்கள். பின் தகப்பன் தன் குமாரனை ஏகமாய்க் கோபிக்கவே அவன் வேறோர் இல்லத்தி லமர்ந்தனன். இவ்வாறாக தன் தகப்பன் செய்தது நியாயவிரோதமென்று தெரிந்து தன் அன்பினும் மேலாக நியாயத்தைப் பாராட்டியது அருமையல்லவா?

குப்புசாமி:—சகோதிரர்கள் இம்மாதிரி எங்கேயாவது செய்ததாக உண்டோ?

இரா:—நீ கேட்பது சரிதான். எங்கும் பெற்றோரிடம் அன்பினும் அதிகமாக சகோதிரர்களை பாவிப்பது வழக்கமாகயிருப்பதில்லை. ஆயினும் அன்புக்குகந்தவர்களுள் அவர்களும் முக்கியமானோர். இக்காலத்திய வழக்கம் என்னவென்றால் பெற்றோர், சகோதிரர்களைவிட நெருங்கிய அன்பினர்கள் மனைவியின் உறவினர் என்று எண்ணுகிறார்கள். அதற்கு அடுத்ததாக சிநேகிதர்களை பாவிக்கிறார்கள். இவ்விதம் நடப்பதைப்பற்றி அன்பு, 'நட்பு' என்பவற்றை ஆராய்ச்சி செய்யுமிடத்தில் பேசுவோம். ஆகையால் சகோதரர்களை விட்டுவிட்டு தனக்குத்தானே நியாயம் செலுத்தி மனச்சாட்சிக்கு விரோதமின்றி நடந்தவன் உண்டோ என்று பார்ப்போம்.

முற்காலத்தில் பெயர்பெற்று வழங்கிய நலந்தஎன்னும் பாடசாலையில் கல்விபயின்று வந்த காந்தலன் என்னும் வாலிபன் இருந்தான். அவன் பெரிய தனவானின் குமாரன். தன் குமாரனைவிட்டு பிரிந்த கோவலன் நலந்த நகரை நண்ணி பாடசாலையை நோக்கிச் சென்றனன். காந்தலன் தகப்பன் வருவதை அறிந்த உபாத்தியாயர்கள் தாங்கள் கோவலன் குமாரனுக்கு அதிகமாக படிப்பு புகட்டியிருப்பதாக காண்பிக்கவேண்டி அநேகவிதமாக சுவடிகளில் அவன் பெயரை முதலில் எழுதியதுமன்றி அன்றையதினம் வகுப்பில் அவனை முதலில் உட்காரும்படி செய்தனர். விருத்தாப்பியமான கோவலன் தன்மகன் அதிகமாகப் படித்து எல்லாராலும் மெச்சப்படுவதைக்கண்டு களித்தான். அன்றிரவு காந்தலன் வீடு வந்தவுடன் தன் தகப்பனுடைய சந்தோஷத்தைப்பார்த்து விசனமடைந்துகூறுவான்:—"நான்வகுப்பில் முதல்வனல்லன்; அவ்வாறு அடையவேண்டுமென்று படும் பிரயத்தனங்கள். பயனிலவாயின. என்னைவிட சிறந்தவன் 'பிரதாப்' என்பவன் ஒருவனிருக்கிறான் என்றான்." அதைக்கேட்ட அவன் தகப்பன் தன் குமாரன் உபாத்தியாயரைவிட அதிகமாக நியாயமின்னதென்பதை அறிந்தானென்று முன்னிலும் அதிக சந்தோஷப்பட்டான்.

மீனா:—அரசர்களும் நியாயாதிபதிகளும் இவ்வாறே நியாயம் அறிந்து நடந்து கொள்ளுகிறார்களோ? அவர்களும் மானிடவாழ்க்கைக்குரிய சுகதுக்கங்களையும் கோபதாபங்களையும் பொருந்தி வாழ்பவர்களன்றோ?

இரா:—ஆமாம். அதற்கு சந்தேகமில்லை. நியாயமென்பது அரசரிடமமைந்துள்ளது. தன்னுயிர் போல் மன்னுயிர் காப்போன்தான் காவலன் என்றுகூறப்படுபவன். பக்ஷபாதமின்றி எல்லாக் குடிகளையும் ஒழுங்கே நடக்கச் செய்வது அவன்கடமை. முற்காலத்தில் நம் நாட்டரசர்கள் கோவில் குளங்கள்மைக்க எண்ணி அவ்வவ்வூர்க் குடிகளுக்குக் கட்டளையிட்டு அவர்களைக் கொண்டு வேலைசெய்து கொள்வது வழக்கம். குடிகளும் தங்களுக்கு வேண்டியவரை கடவுள் கொடுத்திருந்தால் அரசனுடைய அன்பும் உறவும் புண்ணியம் தேடவும் உன்னி கட்டளைப்படி நடப்பது வழக்கமா

யிருந்தது. இவ்வாறு நடந்துவரும் காலத்தில் ஓர் நாள் காஞ்சீபுரத்தில் அரசாட்சி புரிந்துவந்த பல்லவராய ஒருவன் தன் நாட்டெல்லையிலிருந்த கருமலை நகர் வாசிகளை ஒருகோவி லியற்றும்படி கட்டளையிட்டனர். இதைக் கேள்வியுற்ற அவ்வூர்ச் சிற்றரசன் சினங்கொண்டு கச்சியையடைந்து அரசன்முன் கூறலாயினன்.

சென்றவருஷம் நடந்த யுத்தத்தில் கருமலை நகரும் சுற்று வட்டத்திலுள்ள நாடுகளும் பாழடைந்த பின்னர் அங்கு இப்பொழுதுதான் குடிகள் பயிரிடத் துடங்குகின்றனர்கள். இவ்வாறிருக்க அவ்வூர் வாசிகளுக்கு அதிகத் தொந்திரவு கொடுத்து பணம் தாராளமாய் சிலவழிக்கும்படி கட்டளையிட்டால் எங்ஙனம் நிறைவேற்றுவார்கள்? இவைகளை முன்பின் யோசியாமல் தங்களுடைய கட்டளையை ரத்துசெய்வீர்என நம்புகிறேன். இதைக் கேள்வியுற்ற அரசன் விசனமுற்று மந்திரியைக்கூவி தனக்கு நல்வழியில் செல்லுமார்க்கத்தைக் காட்டாமல் இம்மாதிரி ஒரு நகர் வாசிகளுக்கு கடுந்துன்ப மியற்றும்படி செய்வித்ததற்குத் துக்கமடைந்து சிற்றரசன் தைரியத்தையும் மெச்சினன்.

சி. வெங்கடேசய்யர், பி. ஏ.

(இன்னும் வரும்)

இராஜ பக்தி.

10-ம் அதிகாரம்.

"காலத்துக்கேற்ற கோலம்."

வீரர்கள் புறப்பட்டுத் தலை மறைவாய்ப் போனபின்பு அமிர்தேசன் மறுபடி கதவை இழுத்துத்தாளிட்டு "சுவாமி! ஜெகதீசா!! ஸ்ரீசைலவாஸீ!! பிரபோ!! இந்தமட்டும் ஆபத்திலிருந்து காப்பாற்றினையே! இவ்வளவு இலகுவாய் 'இப்பாவிகளின் பாதை ஒழியுமென்று நான் கனவிலும் எண்ணவில்லை. சோற்றோடு போச்சே சனியன்" என்று முணுமுணுத்துக்கொண்டு, படுக்கையில் படுத்து இருக்கும் குழந்தைகளை எழுந்திருக்கச்சொன்னான். உடனே எழுந்தனர் மூவரும்; "அந்தப் பாதகர்கள் போய்விட்டனர்" என்றான் அமிர்தேசன். கூடத்துக்கு வந்து எச்சில் இலைகளையும் காலிப்பாத்திரங்களையும் பார்த்த ஹம்ஸப்பிரியன் "அவர்களோடு சாப்பாடும் போய்விட்டதுபோல் இருக்கின்றதே!" என்றான்.

அமிர்தேசன் "போனால் போகின்றது; குற்றமில்லை மறுபடி சமைத்துக் கொள்ளலாம் அப்பா! இன்னொருதரம் விளையாட்டுப்போல் எல்லாக் காரியத்தையும் செய்து முடித்து விடலாம்—ஆரம்பம் செய்யலாமா? அம்மா விசாலாக்ஷி! எதுகுலா! நல்லஜலம் மறுபடியும் இரண்டொரு கு

டம் வேண்டும். ஹம்ஸப்பிரியா நீ கொஞ்சம் கரிகாய் நறுக்கிக்கொடுக்க தயவு செய்" என்று ஒவ்வொருவருக்கும் ஒரு வேலை இட்டான்.

ஹம்ஸப்பிரியன் "இது என்ன அப்பா! இது!! சமையல் செய்யவும் எச்சலிடவும் வீடுமுழுகி பத்துத்தேய்க்கவும் வேண்டியதாயிற்றே உபத்திரவம்! சரி எல்லாம் செய்யலாம் மெதுவாய்!!"

மறுபடி சமையல் ஆயிற்று சாப்பிடத்தொடங்குமுன் அனுமேனு "அண்ணா, முன்னே சமைச்ச சாதத்தை அந்தப் போக்கிகள் தின்னுட்டுப்போனாப் போலே இன்னும் யாராவது வந்துடுவாளோ" என்றாள். அமிர்தேசன் "பயப்படாதே, அம்மா! குழந்தாய்! ஒருவரும் வரமாட்டார்கள். நாமே சாப்பிடலாம்; அதோ உன்தாலத்தையும் எடுத்துவைத்துக்கொண்டு அண்ணாவதையும் எடுத்துவை" என்றான். எல்லாருக்கும் பசி இவ்வளவென்று சொல்லமுடியாது. 35 நாழிகை ஆய்விட்டதென்றால் பார்த்துக் கொள்ளவேண்டியதுதானே. ஹம்ஸப்பிரியன் வாய்நிரம்ப சாதத்தை நிரப்பிக் கொண்டு "அப்பாடா! பேஷாய் இருக்கின்றது" என்றான்.

"ஆம்!! நமது இராஜன் தைலப்பனுக்கு இன்று இவ்விதமாய்ச் சாப்பாடாவது கிடைக்கின்றதா என்பது சந்தேகம். ஏன் எது குலதிலகனே, வாய்மூடிக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான் அமிர்தேசன்.

"ஏன் பேசவேண்டும்? பேசாமலிருப்பதற்குக் காரணம் இல்லையா? வீட்டினுள் நுழைந்து நுழைந்து பார்த்தானே. அந்தச் சிப்பாயை ஒரு அறை கொடுத்து கீழேதள்ளி மிதித்து இருந்தால்—"

"உன்னால் கூடுமா! மகனே; அங்ஙனமீ செய்ய? ஆனால் ஆய்விட்டது; விட்டுத்தள் மூர்க்கர் சமாசாரத்தை; யானைக்கு ஒருகாலம் வந்தால் பூனைக்கு ஒருகாலம் வாராதா? மறுபடி தைலப்பனுக்கு இராஜ்யம் வாராமல் போய்விடுமா? உனக்குக் கருமலைநாடு கிடைக்காதா?" என்றான் அமிர்தேசன்.

இவ்விதம் பேசிக்கொண்டே போஜனம் செய்தபின் எல்லாரும் சற்றே வெளியில் உலாவத் தொடங்கினர். அன்று வேறு வீரர்கள் குடிசைப்புறம் வரவில்லை. இரவும் கழிந்தது.

மறுநாட் காலையில் எழுந்து பழயது எல்லாருக்கும் போட்டபின்னர் அமிர்தேசன் அரட்டைக்கார நீலமேகன் கடைக்குச் சென்றான். அங்கே விசாரித்ததில் தைலப்ப மஹாராஜன் யாதவ அரசனண்டை அடைக்கலம் புகுந்து இருக்கிறான் என்றும், விஜ்ஜலன் தன் சேனைகளையெல்லாம் தலைநகருக்கு வரும்படி உத்தரவு அளித்துவிட்டான் என்றும், கருமலை வந்த வீரர்கள் கல்யாண புரிக்குத் திரும்பிப் போய்க்கொண்டு இருக்கிறார்கள் என்றும், இனி இராஜ்யத்தின் ஒவ்வொரு பாகத்துக்கு வெவ்வேறு பிரபுக்களை அதிகாரிகளாக்கப்போகிறான் என்றும்—தெரியவந்தது. இவற்றுள் எது உண்மை, எதுபொய் என்று ஒருவராலும் சொல்லமுடியவில்லை. வீரர்கள் மட்டும் அதிகமாய் அமிர்தேசன் கண்ணுக்குப் புலப்படவில்லை. இனிப் போர்வீரர்களால் அதிக தொந்திரவு இராதென்று தெரிந்துகொண்டு ரெட்டிப்பேட்டையை நோக்கிப் புறப்பட்டான்.

ரெட்டிப் பேட்டையில் தனக்குச்சிநேகமான ஒரு ஜவளிக்கடைக்காரனிடத்தில் பிள்ளைகள் இருவருக்கும் இரண்டு துண்டுகளும், தலைக்கு இரண்டு துணி உருமாலும், காலுக்கு இரண்டு செருப்பும், பெண்கள் இருவருக்கும் வேண்டிய துணிகளையும் வாங்கிக் கட்டிக்கொண்டு, மற்றொரு கடையில் நுழைந்து ரொட்டிக்குமாவும், சமையலுக்கு அரிசியும், இன்னும் வேண்டிய சில்லரைச் சாமான்களையும், சேகரித்துக் கொண்டான்.

எல்லாவற்றையும் சேர்த்துப் பெரிய மூட்டையாய்க் கட்டித் தலைமேல் வைத்துக்கொண்டு மெல்ல மெல்ல வழி நடந்து மத்தியானம் குடிசைவந்து சேர்ந்தான்.

சாப்பாடு ஆனவுடன் குழந்தைகள் எல்லாரையும் சுற்றிலும் வைத்துக்கொண்டு மூட்டையை அவிழ்த்து, "என் அருமை மக்களே, நீங்கள் இப்பொழுது குடிசையில் வசிப்பதால் ஏழை ஜனங்களைப்போலவே இருக்கவேண்டும். பட்டுகளை யெல்லாம் கட்டிவைத்து விடுங்கள். மேலும் துணிகள் அழுக்கானால் நாமே தோய்க்கவேண்டுமே ஒழிய துணிகளை வெளுக்கக்கூட ஆள்கள் கிடையாது. இதோ இந்த ரெட்டுத் துணிகள் உங்களுக்கென்று வாங்கிவந்து இருக்கிறேன். இவற்றை உடுத்திக்கொண்டு இந்த வனமெல்லாம் சுற்றித்திரியலாம். கல், முள்—இவை மாட்டிக் கிழிந்து போனாலும் குற்றமில்லை. பட்டு ஆடைகள் இவ்விடத்திற்குத் தகுதியானதல்ல; மேலும் இனிமேல் நீங்கள் எனது பேரப்பிள்ளைகள் போல் இருக்கவேண்டும். பிரபுக்கள் வீட்டுக் குழந்தைகள் என்று சொல்லிக்கொள்ளக்கூடாது. ஏனெனில் குடிசையில் வாழ்வோர் ஏழைகள்தானே!! நான் சொல்வதின் அர்த்தம் தெரிகின்றதல்லவா எது குலதிலகனே! உனக்கு!!" என்று கேட்டான்.

எதுகுலன் "சரி தெரிந்து கொண்டேன். உன்னிஷ்டப்படியே நடக்கிறோம்" என்றான்.

புது ரெட்டுத்துணிகளை குழந்தை உடுத்திக் கொண்டபின் அமிர்தேசன் "என் கண்மணிகாள் இனி நீங்கள் பயமில்லாமல் வெளியே சென்று விளையாடலாம்: குற்றமில்லை" எனவே, தாங்கள் வெளிச்சென்று விளையாட முக்கிய காரணமாய் நின்ற ஆடைகளைக்கண்டு குழந்தைகள் மூவரும் ஆனந்தக் கூத்தாடினார்கள்.

அன்று இரவெல்லாம் அமிர்தேசனுக்குத் தூக்கமே வரவில்லை. இக்குழந்தைகளை தெய்வம் கிழவனை என் காலில் கட்டிவிட்டது—என்று ஏங்கினான்.

“என் ஆயுள் சீக்கிரம் முடிந்து விட்டால் இக்குழந்தைகளின் கதியென்ன? எதுகுலனுக்குச் சுமார் 14 வயது: சுறுசுறுப்பு, தைரியம், யுக்தி, புத்தி, இவை குடிகொண்டிருக்கின்றன; அவனிடத்தில் அது வாஸ்தவமே; தப்பில்லை. இருப்பினும் சிறுபிள்ளையே அல்லவா? நான் இறந்து போய்விட்டால் மற்ற மூவரையும் வார்த்த சாமர்த்தியம் உண்டா? ஹம்ஸப்பிரியனும் புத்திசாலிதான்; ஆனால் அவன் கையால் என்னவேலை செய்ய முடியும்? பெண்பிள்ளைகளோ—சொல்லவேண்டியதில்லை; பால் மணம் மாறாக்குழந்தைகள்....என் மனைவி இறந்தபின் 25 வருஷகாலமாய் இத்தகைய விசாரமே எனக்கு விடுவதற்கு வழியில்லையென்று எண்ணியிருந்த எனக்கு சாகும் தருணத்தில் ஜகதீசன் பெருத்த பாரத்தை என் தலைமேல் சுமத்திவிட்டானே!!

என் பாலனுடைய வீடெங்கே? நரசிம்மன் மாளிகை எங்கே!! அவன் குழந்தைகள் என் குடிசைக்கு வந்து சேரவேண்டுமா?....ஆச்சரியம்! ஆச்சரியம்!! எல்லாம் எனையாளும் ஈசன் செயல்!!! கடவுள் நம்பினவரைக் கைவிட மாட்டார் என்றார்களே பெரியோர்!! அவ்வீசன் விட்ட வழிவிடட்டும்....ஆயினுமென்! என்னை நம்பியா இக்குழந்தைகளை சிருஷ்டித்தான் ஈசன்! நானேன் அவ்வளவுதூரம் என்பெருமையைப் பாராட்டிக்கொள்ளவேண்டும்!! கருவினுள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும் உவந்து அமுது அளிக்கும், மெய்யன் இருக்கும்போது நானென்னத்திற்காக விசாரப்படவேண்டும்!! கோபுரத்தை பொம்மையா தாங்குகின்றது!! ஏ பயித்தியகார மனமே உனக்கேன் இந்தப்பெருமை!! ஆனாலும் மனம் கேட்கவில்லையே!!

இக்குழந்தைகள் ஒருவருடைய உதவியையும் எதிர்பார்க்காமல் தாங்களே தங்களுக்கு வேண்டிய காரியங்கள் எல்லாவற்றையும் செய்துகொள்ளும்படி கற்றுக்கொடுக்கவேண்டியது என்கடமை; உன் ஆயுளோ சீக்கிரம் முடிந்துவிடும்; அப்படி நிகழ்வதும் சரியே; எனக்குப் பிறகு இவர்கள் சற்றும் பின்வாங்காமல் சம்சாரம் நடத்தும்படி இவர்களை நாளை முதல் பழக்கி வைக்கின்றேன். ஈசா! எனக்கு அந்தமட்டும் பலம் கொடுத்தால் போதும்! உன் திருவுள்ளம் பரிபூர்ணமாகட்டும்!!........” என்று இவ்வாறு மனோராஜ்யம் செய்துகொண்டே வெகுநேரம் கழித்து நித்திரை போனான்.

11-ம் அதிகாரம்.

குடிசை வாழ்க்கை.

எதுகுலதிலகனும் ஹம்ஸப்பிரியனும் தங்கள் சகோதரர்களுடன் இனிஅமிர்தேசன் குடிசையில்தான் குடியிருக்க வேண்டியதென்பது நிச்சயமாயிற்று; வேறு போக்கிடமும் கிடையாது. அமிர்தேசனும் இக்குழந்தைகளுக்கு தெய்வபக்தியும், இராஜபக்தியும், ஒழுங்கும், உண்மையும், புகட்ட தினமும் விடியற்காலமேயே எழுந்து, குழந்தைகளை எழுப்பி அவர்களுக்குக் கிருஷ்ணகர்ணாமிருதம், சிவானந்தலஹரீ, முதலிய பக்தி சுலோகங்களையும் தெலுங்கு பத்தியங்களையும் சொல்லிக்கொடுப்பான். காலைவேளைகளில் எதுகுலன் தன் தம்பிக்கு எழுதவும் படிக்கவும் உதவிசெய்வான் இரண்டு பெண்களுக்கும் அமிர்தேசன் தனக்குத் தெரிந்தவரையில் எழுதவும், படிக்கவும் கற்றுக்கொடுக்க மேற்கொண்டான். இராஜவம்சத்துக்குச் சரியான உயர்குலத்தில் உதித்த உத்தம ஸ்திரீகளுக்கு எழுத்து வாசனை இல்லாவிட்டால் என்ன பிரயோஜனம், என்று அடிக்கடி அமிர்தேசன் சொல்வதுண்டு. “எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்” “குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சளழகும் அழகல்ல.........கல்வியழகே அழகு” என்னும் உண்மைகளில் மனதார நம்பிக்கையுள்ளவன் அமிர்தேசன்.

மற்றகாரியங்களில் எவ்வாறு பிறர் உதவியின்றித் தங்கள் வேலையைத் தாங்களே பார்த்துக் கொள்ள வேண்டியதாயிற்றோ அவ்விதமே படிப்பிலும் வேறு ஒருவர் உதவியின்றி விருத்திசெய்துகொள்ளவேண்டியதாய் இருந்தது ஆகையால் இச்சிறுவர்களும் சிறுமிகளும் படிப்பில் செலவழித்த காலம் மிகக் கொஞ்சமே! எதுகுலனுக்கோ படிப்பைவிட வேட்டையாடுவதிலும், மரம்வெட்டுவதிலும், வில்வித்தை பழகுவதிலும், தேன் சேகரிப்பதிலும், ஊக்கம் அதிகமாய் இருந்தது. ஹம்ஸப்பிரியனும் தன் தமயனுடன் பழகி வில்வளைத்து குறிபார்த்து அம்பு எய்யக் கற்றுக்கொண்டான். ஆயினும் அவனை அமிர்தேசன் காட்டுக்கு அழைத்துக்கொண்டு போவதேயில்லை. வீட்டிலேயே அவனுக்குப் பகலெல்லாம் வேலையிருந்தன. குதிரை, மாடுகள், இவற்றைப் பாதுகாத்து, புல்போட்டு, நீர்காட்டி, மேய்ச்சலுக்கு விட்டு, மறுபடி அவற்றைக் கட்டுத்தரையில் கட்டவேண்டும்: வீட்டின் பின்புறம் இருந்த சிறிய காய்கறித்தோட்டத்தில் கொத்தி, வெட்டி, விரை விதைத்து, களைபிடுங்கி நீர்கட்ட வேண்டும். இத்தகைய சில்லரைக் காரியங்கள் பல; இவைகளைக் கூட சிறுபிள்ளை தனியாய்ச் செய்யக்கூடுமா? அமிர்தேசனும் எதுகுலனும் வேட்டைக்கு வெளியே போகாத காலமெல்லாம் ஹம்ஸப்பிரியனோடேயே கூடி எல்லாரும் ஒரு மிக்கத் தோட்டத்தில் வேலை செய்வார்கள். இத்தோட்டத்திலிருந்

தே தங்களுக்கு வெகுவாய் வேண்டிய வஸ்துக்கள் எல்லாம் எளிதில் கிடைக்கும்படி செய்துகொண்டனர். ரொட்டி செய்ய மாவும், சமைக்க அரிசி பருப்பும் தான் முக்கியமாய் வேண்டியவை. அவைகளை வாங்கி வருவதற்குத்தான் வேறு இடங்களுக்குப் போக வேண்டியிருந்தது.

வீட்டிலோ முக்கால் வாசி வேலையும் விசாலாக்ஷியுடையதே. அலமேலு, கோழி, வாத்து, புறா இவைகளுக்குத் தீனிபோடுவது, முட்டைகளை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்வது, சாயங்காலம் அப்பக்ஷிகளைக் கூண்டில் அடைப்பது முதலான காரியங்களைக் கவனித்து வந்தாள். இரவில் எல்லாரும் ஒருங்கு கூடி போஜனம் செய்த பின்னர் ஏதாவது சில பத்யங்களைப் பக்தியோடு பாடி, தேவனை ஆராதனம் செய்து விட்டு, படுக்கைக்குச் செல்லுவர். இவ்வாறு மிக ஒழுங்காய்த் தம் காலத்தைக் கழித்து வந்தனர் நமது இளங்குழந்தைகள்.

சுமார் ஒருவருஷகாலம் ஆய்விட்டது; காலம்தான் என்ன துரிதமாய்ப் பறக்கிறது! குழந்தைகள் பள்ளியில் 'ஆ', 'ஊ' என்று எழுத்துக்கள் கற்றுக்கொண்டும், ஒன்றும் இரண்டும்; மூன்று; நாலும் இரண்டும் ஆறு, என்று கணக்குப் போட்டுக்கொண்டும் இருக்கும்பொழுதே ஒரு வருஷம் தெரியாமல் கழிந்து போகின்றது. போர்வீரன் ஊர் ஊராய்த்திரிகின்றான். ஒரு சண்டை போக மறுசண்டை பிடிக்க வேண்டியதாகின்றது. ஊரைவிட்டு வந்து எத்தனை நாள் ஆகின்றதென்று கணக்குப் பார்த்தால் ஒருவருஷம் தெரியாமல் ஓடிப்போய் விடுகின்றது; உழும் குடியானவன் உழுது, பயிரிட்டுக் களைபிடுங்கி, நீர்பாய்ச்சி, கதிர் அறுத்து, பலனைச் சேர்த்து வைத்து இரண்டு மாதமாவது இளைப்பாறுவோமா, என்று யோசிப்பதற்குள் மறுவருஷம் முன்வந்து நிற்கின்றது. பணம் சேர்த்துக் கல்யாணம் செய்துகொள்ள எண்ணிக்கொண்டவன் ஓயாமல் உழைத்துழைத்துப் பொருளை வட்டிக்குக் கொடுத்து எப்பொழுது சரியான தொகை சேரும் சேருமென்று திரும்பத் திரும்பக் கணக்கிட்டுக் கொண்டே ஒரு நாளும் ஒரு யுகமாகப் பெருமூச்சு விட்டுக் கொண்டு கழித்தானானாலும், மெள்ள மெள்ள ஒரு வருஷம் நழுவி விடுகின்றது!! அப்படியே நம் குழந்தைகளுக்கும் ஒரு வயது அதிகமாய் ஆய்விட்டது. அமிர்தேசனுக்கும் கிழத்தனத்தால் ஏற்படும் பாரம் அதிகரித்தது.

மறுபடி மழைகாலம் வந்து விட்டபடியால் சுற்றுப் புறமெல்லாம் தண்ணீர் வெளியே போவதும் வேட்டையாடுவதும் அசாத்தியமாய் இருந்தன. சேற்றிலும், மழையிலும், சில சமயங்களில் சற்று தூரத்துக்கு அப்பால் போய் விறகு வெட்டி இழுத்துக்கொண்டு வருவார்கள். அமிர்தேசனும், எதுகுலதிலகனும், ஹம்ஸப்பிரியனும் ஒரு நாள் விறகு இழுத்துக் கொண்டு வரும் பொழுது ஹம்ஸப்பிரியன் "அமிர்தேசா!. கட்டை

வண்டி ஒன்று செய்து கொண்டால் இவ்வளவு கஷ்டப்பட வேண்டியிராது. குதிரையையாவது மாட்டையாவது எருமையையாவது கட்டி இழுத்துவரலாம்; இல்லையேல் நாமே வேண்டுமானாலும் இழுத்துக்கொண்டு வரக்கூடும்," என்றான்.

அமிர்தேசன் "ஹம்ஸப்பிரியா, நீ சொல்வது நல்லயுக்தியே. ஆனால் இப்பொழுது வண்டி செய்வதென்றால் நம்மால் முடியாது. ஒரு சிறு வண்டி விலைக்கு வாங்குகிறேன். பல வேலைகளுக்கு அவ்வண்டி உபயோகப்படும்,"

"ஆம்! ஆம்!! தோட்டத்திலிருந்து காய்கறி வகைகளைப் போட்டுக் கொண்டு வரலாம். வீட்டிலிருந்து எருவு ஏற்றிக்கொண்டு போகலாம். காட்டில்மரம் வெட்டினதும் அங்கேயே அழகாய்ப் பிளந்து வண்டியில் அடுக்கிக்கொண்டு வந்து விடலாம். பேஷ்! பேஷ்!! நன்றாய் இருக்கும்! நன்றாய் இருக்கும்!! வாங்கப்பா சீக்கிரமாய் ஒன்று" என்று சந்தோஷப் பட்டான் ஹம்ஸப்பிரியன்.

அமிர்தேசன் "சரி கொஞ்சம் மழை நிற்கட்டும், வழியெல்லாம் உலர்ந்ததும் ஏதாவது ஏற்பாடு செய்யலாம்" என்று உற்சாகப் படுத்தினான்.

மழை காலத்தில் வெளியே அதிகமாய்ப் போகவில்லை என்றாலும் வீட்டில் அனைவரும் வீண்காலம் போக்கவில்லை. இதுவே அவர்கள் எல்லாரும் வீட்டுவேலைகளைக் கற்றுக்கொள்ள நல்ல சமயமாய் இருந்தது. விசாலக்ஷி தையல் தைப்பதற்கும் கிழிந்த புடவை வேஷ்டிகளைச் செப்பனிடுவதற்கும், ஊறுகாய் போடுவதற்கும் இன்னும் இவைபோன்ற உபயோகமான பல வேலைகளையும் கற்றுக்கொண்டாள். ஹம்ஸப்பிரியனோ வீட்டில் இருந்த உளி, ரம்பம், இழைப்புளி, முதலியவற்றை வைத்துக் கொண்டு தச்சுவேலை செய்யத் தொடங்கினான். கொஞ்சம் கொஞ்சமாய் அமிர்தேசனுடைய உதவியால் வீட்டுக்குவேண்டிய அகப்பை, பலகை நாற்காலி, முதலியவற்றைத்தானே செய்யத் தொடங்கினான். அலமேலுவும் கூட தோசைவார்க்கவும், தின்பண்டங்கள் செய்யவும் ஆரம்பித்து விட்டாள்!! இவ்வாறு ஒவ்வொருவரும் ஏதோ புதிய காரியங்களைச்செய்ய எதுகுலன் மட்டும் அவ்விதம் இல்லை. சில காலங்களில் அதிக கவலையோடு ஒருமூலையில் உட்கார்ந்து விடுவான். சில சமயங்களில் தன்னையே வெறுத்துக்கொண்டு "உலகத்தில் எவ்வளவு அநியாயங்கள் நடக்கின்றன! என்னால் அவற்றுள் ஒன்றையேனும் நேர்செய்ய முடியவில்லையே... இது என்ன வாழ்வு; கிணற்றில் தவளைப்போல இக்குடிசையில் விழுந்து கிடக்கின்றேனே!! கல்யாணபுரியில் என்ன நடக்கின்றதோ என்னவோ! ஒன்றும்

தெரியாமல் இங்கு தின்று உறங்குவதினும் கேடுகெட்ட பிழைப்பு உண்டா?" என்று தன்னைத்தானே நொந்து கொள்வான்.

ஒருவாரம் மழை நின்று, சுற்றுப் புறமெல்லாம் சற்று உலர்ந்து, எங்கே பார்த்தாலும் பச்சைப் பசேல்என்று புல் முளைத்து வனாந்தரமெல்லாம் ரமணீயமாய் இருந்தது. அமிர்தேசன் எதுகுலனைப் பார்த்து "இன்று வேட்டைக்குப் போய் மான் கிடைத்தால் அதை அடித்து லக்ஷ்மணபுரியிலாவது, செட்டிப் பேட்டையிலாவது விற்று வருவோம். கொஞ்சம் பணம் கிடைத்தால் ஹம்ஸப் பிரியனுக்கு வண்டியொன்று வாங்கவேண்டுமல்லவா? கண்ணைக்கவரும் இக்காலப்பொழுதில் வன வேடிக்கைகளைக் கண்டு ஆனந்தித்துக் காரியத்தையும் பார்த்துவருவோம்" என்றான்.

இருவரும் புறப்பட்டு நாலைந்து நாழிகை வழிதூரம் நடந்ததும் ஒரு மானின் அடிச்சுவடு தெரிந்தது. அதைப்பற்றிக்கொண்டே போனதும் சுமார் ஒருமைல் தூரத்துக்கப்பால் இருந்த புதர் வரையிலும் சுவடுகள் தெரிந்தன. நாற்புறமும் அப்புதரினருகில் சுற்றிப்பார்க்கவே மான் வெளியே போனதாக அடையாளம் ஒன்றும் காணப்படவில்லை. புதரிலேயே தான் மான் இருக்கவேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டு இருவரும் அதைப் புதரினின்று அப்புறப் படுத்த எத்தனம் செய்தனர். அமிர்தேசன் எதுகுலனைத்தக்க இடத்தில் நிறுத்திவிட்டு தன் பெரியநாயுடன் கூட புதரில் புகுந்தான். உடனே புதரில் சர சர வென்று சப்தம் கேட்டது. எதுகுலன் செடிமறைவில் நின்று கொண்டு அம்பை எய்யத் தயாராய் இருந்தான். இரண்டு நிமிஷம் சென்றதும் ஒரு நேர்த்தியான ஆண்மான் புதரினின்று வெளிக்கிளம்பிற்று. எதுகுலன் அம்பு எய்தான் மான் அடியுண்டு கீழே விழுந்தது. மறுபடி எழுந்தோடுமோ வென்று இன்னொரு அம்பையும் தயாராய் வைத்து இருந்தான். ஒரு நொடியில் அமிர்தேசன் நாயுடன் அவ்விடம் வந்து நின்றான்.

"பேஷ்! பேஷ்!! இனி நகர்வதேது இம்மான்? சரியான குறிவைத்தாய்; உனக்கு சமானமாய் யாரைச்சொல்லப்போகிறேன்" என்றான் அமிர்தேசன். உடனே இருவரும் பக்கத்தில் வந்து அந்தப் பிராணியைப் பரிக்ஷை செய்து, தூக்கிக்கொண்டு போவதற்குத் தாளாது என்று கண்டு அமிர்தேசன் "மகனே! நீ வீட்டுக்குப் போய் குதிரையை ஓட்டிவா: இதை அதன்மீது ஏற்றிக்கொண்டு போவோம்" என்றான். குடிசைக்குப் போய் எதுகுலன் குதிரையை ஓட்டிக் கொண்டுவரவே மானை அதன்மேல் வைத்துக்கொண்டு மத்தியானம் வீடுவந்து சேர்ந்தனர்.

மறுதினம் அமிர்தேசன் இறைச்சியில் கொஞ்சத்தைக் கொண்டு போய் லக்ஷ்மணபுரியில் விற்றுவிட்டுவந்தான். இன்னொரு நாள் செட்டிப்

பேட்டைக்கு ஒருமூட்டை கொண்டுபோனான். இவ்விதமாகக் கொஞ்சம் கொஞ்சமாய் சொல்ப பணம் சேர்த்து ஒரு சிறுவண்டி வாங்கினான். அவ்வண்டி அமிர்தேசன்குதிரைக்கு ஏற்றதாய்இருந்தது. ஹம்ஸப்பிரியனும் குதிரையை வண்டியில் கட்டிப்பழக்கினான். அன்றுமுதல் வண்டி அவர்களுக்கு அதிக உபயோகமாய் இருந்தது.

இக்காரியங்களின் நிமித்தம் பல ஊர்களுக்குப் போய் வந்தபடியால் வெளியில் நடக்கும் சமாசாரம் பல தெரிந்தன. விஜ்ஜலன் தலைநகரில் அரசன் என்ற பெயர் இல்லாமற் போனாலும் அரசன் போலவே அதிகாரம் செலுத்துவான் ஆயினான். இது ஒன்று. இதைக்கண்டு மற்றப் பழைய பிரபுக்களுக்கு மனஸ்தாபம். இது இரண்டாவது. பிம்மாஸுர நரபதி என்ற பிரபு குண்டல நாட்டின் வடபாகத்துக்குத் தலைவன்: அவன் பெரிய இராஜ விசுவாசி; அவன் தான் முன்னின்று மறுபடி தைலப்ப சக்ரவர்த்தியை சிம்மாஸனம் ஏற்றவேண்டுமென்று உன்னியதற்காக, விஜ்ஜலன் அவன்மேல் படையெடுத்து, அவனைச் சிறைபடுத்தி அவனைச்சித்திரவதை செய்தான். இது மூன்றாவது— இதைக் கேட்டதும் எதுகுலனுக்குக் கோபம் அபரிமிதமாய் வந்துவிட்டது. "நரபதியைக் கொன்ற இராஜத்துரோகிகளும் உயிரோடிருக்க நாம் உயிர்வைத்து இருக்கிறோமா? அவ்விஜ்ஜலனைத் துண்டு துண்டாய் வெட்டஎப்பொழுது காலம்கிட்டுமோ!" என்று சொல்லிப்பெருமூச்சுவிட்டான். அரசன்மனைவியும் குழந்தைகளும் ஆந்திரதேசத்தரசனிடம் அடைக்கலம் புகுந்தனர் என்பது நான்காவது. அரசன் இருப்பிடமோ முன்னமேயே தெரியும்.

"ஏதோ போகிறது!! நம்மரசனாவது குடும்பத்துடன் இப்பாவிகள் கையில் சிக்காமல் தப்பினானே!! அதுவே தெய்வச்செயல்" என்றான் எதுகுலன்.

அமிர்தேசன்" குழந்தைகாள்! இவற்றுள் எது உண்மை, எதுபொய் என்பது யாருக்குத் தெரியும்? எனக்குத் தோன்றின மட்டில் இந்த விஜ்ஜலன் கொடுமை நெடுநாள் நடைபெறாது. இன்னமும் நமது சக்ரவர்த்திக்கு மறுபடி நாடு கிடைக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை."

இப்பருவத்தில் குடிசையில் மிகவிரைவாய் வேலைநடந்தன. மழைக்குப் பிறகு கொத்த வேண்டிய நிலங்களைக் கொத்தி பனிகாலத்துப் பயிர்களை விரைத்தனர். காய்கறி கிழங்கு வகைகள், சேகரிக்கவேண்டிய வற்றைச் சேகரித்து அழிக்கவேண்டிய வற்றை அழித்துப் பண்படுத்தினர். முன்னமேயே முளைத்துவந்து பெருகும் தருவாயில் நின்ற பயிர்களுக்கு மழைக்கப்பால் வெகுவாய் களை பிடுங்க வேண்டியதாயிற்று. குதிரைக்

கும் வண்டிக்கும் சேர்த்து ஒருசிறு பந்தல் போடவேண்டியிருந்தது. இவ்வேலைகளெல்லாம் முடிவதற்குள் மழைக்காலம் கிட்டத் தட்டக் கழிந்து போயிற்றென்றே சொல்லலாம்.

பகலும் இரவும்.

உங்கள் ஞாபகத்துக் கெட்டினவரையில் நினைத்துப்பாருங்கள். தினந் தினம் சூரியனுதித்து ஆகாயமார்க்கமாய்ப் போய் அஸ்தமிப்பதில் பிசகுண்டா? பிரதி ராத்திரியும் வானம் மப்புமந்தாரமில்லாதிருந்தால் சந்திரனும் நக்ஷத்திரங்களும் நம்முடைய தலைக்கு மேல் திரிவது கண்ணுக்குத் தோன்றவில்லையா? வழக்கப்படிக்கு நாளைக்கும் சூரியன் உதயமாகுமென்பதிலும் இனிமேலும் கழிந்த மேரைப்படி வருஷந்தோறும் உதயாஸ்தமயமாகுமென்பதிலும் உங்களுக்குச்சிறிதேனும் நம்பிக்கைக் குறைவிருக்குமா? பூமியைச்சுற்றி நாலண்டையும் ஓயாமல் பிருதுவான சலனம் இருப்பதைக் காண்கிறீர்களே. இந்தச் சலனத்துக்கு ஏதுவென்ன? இதென்ன விந்தை? என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருப்பீர்களா?

வெய்யில் காயும்போது வெப்பமாயிருக்கிறது. ஆகாயத்தை மேகம் மறைக்கும்போது காற்று குளிர்ந்திருக்கிறது. சூரியன் மறைந்து இரவுபடும்பொழுது குளிரெடுக்கிறது. இன்னம் பகலில் ஆகாயமெங்கும் வெளிச்சம் நிறைந்திருக்கிறது. மேற்றிசையிற் சூரியன் அஸ்தமிக்கவே இருளுண்டாகிறது, வெளிச்சமும் வெப்பமும் சூரியனாலல்லவோ உண்டாகின்றன. ஆதலால் சூரியனுக்கும் பூமிக்குமுள்ள சம்பந்தங்களைப்பற்றி நாம் சிறிது தெரிந்துகொண்டாலொழிய பூமியில் நடக்கும் காரியங்களைப் பற்றி நமக்கொன்றும் நன்றாகத் தெரியாதென்பது திண்ணம்.

இதைப்பற்றி வெகுநாளைக்கு முன்னமே பூர்வகாலத்து ஜனங்களுக்கிருந்த அபிப்பிராயமே உங்களுக்கும் இருக்கிறதோ வென்னவோ. அவர்கள் அகிலத்தின் மையநிலை பூமியென்றும், அதைச்சுற்றிச் சூரியனும் சந்திரனும் நக்ஷத்திரங்களும் ஓயாமல் ஓடுகின்றனவென்றும் எண்ணியிருந்தார்கள். இப்போது உதயாஸ்தமயமென்று பேசுவது பூமியைச்சுற்றி அவைகள் திரிவதாக எண்ணுகிற விவகாரப்படிதான்.

உள்ளபடி பார்த்தால் பூமியல்ல அசையாத மையம். சூரியனைச்சுற்றி ஓயாமல் ஓடும் கிரகங்களில் அதுவுமொன்று. சூரியன்தான் நடுவில் நிற்கும் ஓர் அக்கினிபிண்டம். அதிலிருந்து பூமிக்கு வெப்பமும் வெளிச்சமும் உண்டாகின்றன. அதைச்சுற்றித்தான் பூமி இடைவிடாமல் சுழலுகின்றது.

பகலும் இரவும் மாறிமாறி வருவது சூரியனுடைய சலனத்தால் உண்டாவதுபோல் தோற்றுகிறது. தத்துவம் அதன்று. பூமிதானே உருளுவதால் இவ்விகற்பமுண்டாகிறது. ஒருபமானத்தால் இது எளிதில் விளங்கும். ஒரு காம்புப் பம்பரத்தை உங்கள் பலங்கொண்டவரையில் இழுத்துச் சுற்றிவிட்டால் ஒருக்ஷணம் அது அசைவற்று நிற்பதுபோலத் தோன்றும். இதைப்பார்த்து சிறுவர்கள் பம்பரம் தூங்குகிறதென்று சொல்வார்கள். இப்போதுதான் அது அதிவேகத்துடன் சுழலும். அதன் அடிமுனையிலிருந்து மேற்காம்பின் நுனிவரையில் ஒரு நேர்கோடு ஊடுருவிச்செல்வதாகப் பாவியுங்கள். பம்பரத்தின் ஒவ்வொரு பாகமும் இந்த நடுரேகையைச்சுற்றிச் சுழலும். இக்கோட்டிற்குச் சுழலிருசு என்று பெயர். இதேரீதியாய்ப் பூமியும் தன் இருசைச்சுற்றி வேகமாய்ச் சுழல்கின்றது.

பின்னும் பாடசாலைகளில் வழங்கும் பூகோள உண்டையை நிறுத்தி, அதுக்குச்சில அடி தூரத்தில் அதைச்சுற்றியிருக்கும் பித்தளை வளையத்துக்கு நேராக ஒரு மெழுகுவர்த்தியைக் கொளுத்திவையுங்கள். இப்போது கோளத்தை இருசின்பேரில் சுழற்றலாம். அது சும்மாவிருந்தாலும் இருசாணியில் வேகமாய்ச் சுழன்றாலும் விளக்கெதிரிலிருக்கும் பாதிக்குவெளிச்சமும்மறுபாதிக்கு இருட்டுமிருக்கும். சும்மாவிருக்கையில் வெளிச்சமுள்ள புறத்தில் குறித்திருக்கும் இடங்களெல்லாம் வெளிச்சத்திலும், மற்றப் புறத்திலிருக்கும்இடங்களெல்லாம் இருட்டிலுமிருக்கும். அதைச்சுற்றும்போது ஒவ்வொரு இடமும் வரிசையாக வெளிச்சத்தில் வந்து இருளில் மறையும். விளக்கிருக்கிறவரையில் கோளம் சுழல்வதனால் அதன் மேற்புறத்தின் ஒவ்வொரு பாகமும் மாறிமாறி வெளிச்சமும் இருட்டும் அடையும்.

இச்சிறுகோளத்தையே பூகோளமாகவும், இந்த அற்பவிளக்கையே சூரியனாகவும் பாவியுங்கள். அப்போது பூமி தன் இருசின்மீது சுழல்வதால் ஒவ்வொரு தேசத்தையும் மாறிமாறி வெளிச்சத்தையும் இருட்டையும் அடைவிக்கும்.

பாடசாலைக் கோளத்துக்கு இருப்புக்கம்பி இருசாகவிருப்பதுபோல, பூமியை ஊடறுத்துச்சென்று நிஜமாக ஒருகம்பி இருசு இருக்கிறதென்று எண்ணப்போகிறீர்கள். அப்படி ஒரு ரேகையிருப்பதாக மனதில் பாவித்துக்கொள்ளவேண்டியதுதான். நிஜமாக ஒரு கம்பி இருசு உள்ளுருவிச்சென்றால் இருவழியிலும் பூமிக்கு மேற்புறத்தில் எப்படி வெளிப்படுமோ அப்படியே இந்தப் பாவனரேகைக்கும் இரண்டு முனைகளிருப்பதாக எண்ணிக்கொள்ளுங்கள். இவைகளுக்கு வடமுனை தென்முனை என்று பெயர். இவைகளை வடதுருவம் தென்துருவம் என்று ஹிந்து ஜோதிஷ சாஸ்திரிகர்கள் சொல்லுவார்கள்.

இந்த இருசைச்சுற்றிப் பூமி இருபத்துநான்கு மணிநேரத்துக்கு
ஒருதரம் சுழலுகின்றது. இக்கால முழுதும் சூரியன் ஆகாயத்தில் நின்ற
விடத்திலேயே நின்று ஏகரீதியாகப் பிரகாசிக்கின்றான். பூமியிலோ
எந்தக்காலத்தில் எந்தப்பாகம் அவனுக்கு நேராகவிருக்குமோ அந்தப் பாக
த்துக்குத் தான்வெளிச்சம். விளக்கின்முன் வைத்துப்பார்த்த கோளத்தோ
ற்றப்படி பூமிக்கு ஒருபுறம் வெளிச்சமும் ஒருபுறம் இருளும் இருக்கவே
யிருக்கும். பூமி அசையாமலேயிருந்தால் ஒருபாதிக்குச் சதா வெய்யிலும்
வெளிச்சமும் மறுபாதிக்குச் சதா இருட்டும் இருக்கும். பூமி சுழலுகிற
படியால் ஒவ்வொரு பாகத்துக்கும் மாறிமாறி வெளிச்சமும் இருட்டும்
உண்டாகும். நமக்கு வெளிச்சமுறும்போது பகல், இருட்டுறும்போது
இரவு.

சூரியன் கிழக்கிலிருந்து மேற்கே போவதாகத் தோன்றுகிறது.
பூமியின் நிஜசலனமோ இதற்கு மாறுபட்டிருக்கவேண்டும். அதாவது
அதன் சலனம் மேற்கிலிருந்து கிழக்காகவிருக்கிறது. காலையில் கிழக்கில்
தோன்றுகிற சூரியனுக்கெதிரில் தள்ளிக்கொண்டு போகப்படுகிறோம்.
சூரியன் வரவர வானத்தில் ஏறுகிறுப்போலத் தோன்றி உருமத்தில் தலை
க்கு நேராக நின்று மறுபடியும் பூமி தன் ஓயாச் சுழற்சியால் நம்மை இரு
ட்புரத்திற்குத் தள்ளிக்கொண்டு போகப்போகச் சூரியனும் ஓடி மேற்றி
சையில் அஸ்தமிப்பதுபோலத் தோன்றுகின்றது. இரவிலும் பூசலனத்துக்
குக் குறி கண்டுபிடிக்கலாம். அப்போது நக்ஷத்திரங்கள் ஒன்றன்பின்
ஒன்றாய் உதயமாய் அஸ்தமிக்கின்றன. பகலவன் ஒளிமுன் அவைகளின்
ஒளி மழுங்கி மறைகின்றது.

பூமிதன் இருசின்மீது சுழலும்போதெல்லாம் சூரியனைச்சுற்றி உரு
ண்டுகொண்டும் இருக்கிறது, அதாவது சூரியனைச்சுற்றி ஓடிக்கொண்
டும் இருக்கிறது. சூரியனைச்சுற்றிப் பூமியோடும் வீதிக்குப் பூமியின் கச்
சை வட்டம் என்று பெயர். அவ்வீதியில் வலம்வருவதற்குப் பூமியின்
பகணம் எனப்பெயர். சூரியனைச் சுற்றியிருக்கும் பூமியின் வீதி ஒரு
பெரிய விருத்தம். பூமி இந்த விருத்தமத்தியில் உருண்டு அருக்கனை ஒரு
பிரதக்ஷிணம் பண்ண முந்நூற்று அறுபத்தைந்து நாளுக்குச் சற்று
அதிகமாகவே பிடிக்கிறது. விகலை ஒன்றுக்குச் சராசரி பத்தொன்பது
மைல் வீதம் சண்டவேகமாய் ஓடியும் தினகரனை ஒரு சுற்றுவரப் பூமி
க்கு இத்தனைநாள் செல்லும்.

பூமியின் தற்சுழற்சியால் பகலும் இரவும் வருஷங்களும் கணிக்
கிறோம். ஆதலால் பூமியே நமக்கு ஒரு பெரிய கால அளவை.

(முற்றிற்று.)

[பூமி சாஸ்திரத்திலிருந்து எடுக்கப்பட்டது. ப. ர்.]

The Tamil Zenana & School Magazine.

மாதர் மனோரஞ்சினி.

" எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் " — ஔவையார்.

Vol. XVI | Madras June & July, 1915. | Nos 6 & 7

புத்தகம் 16 | சென்னை ஜூன்—ஜூலை மீ 1915ஞு | இலக்கம் 6&7

நமது பத்திரிகை

நமது மாதர் மனோரஞ்சினியை 16 வருஷ காலமாக நடத்திவருவது
யாவருக்கும் தெரியும். இதனால் நமக்கு யாதொரு லாபமுமில்லையாது'
பெண் கல்வி முக்யமாய் விருத்தி யடையவேண்டுமென்ற எண்ணத்துடன்
இதை ஆரம்பித்து இதனால் நமக்கு விளையும் நஷ்டத்தையும் அனுபவி
த்து வருகிறோம். இப்பத்திரிகையின்மூலமாய் நம்மாலியன்றமட்டும் பெண்
மணிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அறிவை விருத்தி செய்யும் விஷயங்களை
பிரசுரித்து வருகிறோம். இன்னும் இதை விருத்திக்கு கொண்டுவந்து ஒவ்
வொரு மாதத்திலும் சரிவர பிரசுரித்து வரலாம் ஆனால் அவ்விதம்செய்ய
போதுமான திரவியம் நம்மிடத்தி லில்லை; இப்பொழுது கையொப்பக்காரர்
களில்பெரும்பான்மையோர் தங்கள் சந்தாவையும் அனுப்பவில்லை, மேலும்
தற்காலத்தில் நடந்துவரும் யுத்தத்தால் பேபர் விலை அதிகமாய்விட்டது.
அச்சுக்கூலியும் உயர்த்தப்பட்டிருக்கிறது. நமது கையொப்பநேயர்களும்
பெண்கல்வியில் அபிமான முள்ள கனதனவான்களும், சீமாட்டிகளும்,
உதவி செய்ய முன்வந்தால் இப்பத்திரிகை முன்போலவே வெகுநன்றாக
நடைபெறும். ஆகையால் இப்பத்திரிகையின் விருத்தியைக் கோரும் ஒவ்
வொரு அபிமானியும் வருஷம் ரூ 10-வது அல்லது ரூ 5 வது அனுப்பி—
க்கு உதவி புரியும்படி மிகவும் வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.
பாக்கியுள்ள கையொப்பநேயர் களும் தங்கள் பாக்கி சந்தாத் தொகையை
யும் மணியார்டர் மூலமாக இம்மாதத்திலேயே அனுப்பி உதவி செய்யும்
படியும் கேட்டுக்கொள்ளுகிறோம். இவ்விதம் செய்வார்களாகில் நாமே நமது
பத்திரிகையை சரிவர நடத்த முடியும். மேலும் இதன் விருத்தியைப்பலப்
படுத்தமுடியும. இன்னும் அழகான சித்திரப்படங்களையும், சிலபக்கங்களைச்
சேர்த்து சிறந்தவிஷயங்களையும் பிரசுரிக்கமுடியும். ஆகையால் கனதன

வான்கள் நமது வேண்டுகோளுக் கிணங்கி நமக்குஉதவிசெய்ய தற்சமயம் முன் வருவார்களென்று முழு நம்பிக்கையுடன் இதை எழுதலானோம். இனி நமது பத்ரிகைக்கு வருஷ சந்தா ரூ. 2 அ 8 இதை யாவரும் அங்கீகரிப்பார்களென்று நம்புகிறோம். ஏப்ரல், மே, ஜூன், ஜூலை மாதங்களுக்கு இதை ஒன்றாக தற்சமயம் பிரசுரித்திருக்கிறோம். ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களுக்கு ஒரு பத்திரிகை இம்மாதத்திலேயே வெளிவரும். இவ்விதம் நாம் செய்ய நேரிட்டதற்காக நமது நேயர்கள் காருண்யத்துடன் நம்மை மன்னிப்பார்களாக. பத்திராசிரியர்.

காலஞ்சென்ற 7 வது எட்வர்ட் அரசர்.

காலஞ் சென்ற 7-வது எட்வர்ட் சக்ரவர்த்தி அரசுபுரிந்தகாலத்தில் சமாதானமே எங்கும் எப்பொழுதும் குடிகொண்டிருக்க வேண்டுமென்ற எண்ணத்தை யுடையவராயிருந்தா ரென்பது யாவருக்கும் தெரியும். இவ்வித எண்ணம் உடையவராயிருந்தமையால் சண்டை சச்சரவின்றி இவர் ஆளுகையில் சமாதானமே குடிகொண்டிருந்தது. இவரை யாவரும் சமாதானம் செய்பவரென சொல்லத்தலைப்பட்டார்கள். இவர் ஆளுகையில் இதர இராஜாங்கத்துடன் இங்கிலாந்து சமாதானத்துடன் ஸ்நேகபான்மையோடு இருந்தது. இவர் காலத்தில் இவருடைய புத்திசாதுரியத்தால் சண்டை சச்சரவில்லாமலிருந்தது. இவர் பிரஞ்சுதேசத்துடன் 1904-ம் வருஷம் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். இதனால் இங்கிலாந்தும் மற்ற இராஜ்யங்களுடன் அதிக ஸ்நேகபான்மையாய் இருக்கநேர்ந்தது. இத்துடன் 1901ம் வருஷத்திலும், 1905ம் வருஷத்திலும், ஜப்பானுடன் உடன்படிக்கை செய்துகொண்டார். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ராஜ்யத்தை ஆசியாவின் கிழக்குக்கரையிலாவது இந்தியாவின் கரையோரமாகவாவது எந்தராஜ்யத்தைச் சேர்ந்தவராவது எதிர்க்கவந்தால் பரஸ்பர உதவிசெய்து கொள்ளவேண்டுமென்பதே. ஆகையால்தான் இப்பொழுது நடக்கும்யுத்தத்தில் ஜப்பான் ஜர்மினியர்களை கியாசௌ என்ற இடத்திலிருந்து துரத்தி அதைத்தங்கள் சுவாதீனம் செய்துகொண்டது மன்றி, எம்டன் கிழக்குக்கரையில் துஷ்டசெய்கை செய்தபொழுது அதைத்தண்டிக்க ஜப்பான் உதவி புரிந்தது.

1904ம் வருஷத்தில் ருஷியாவுக்கும் ஜப்பானுக்கும் பெருத்தயுத்தம் நடந்தது. அப்பொழுது ஜப்பான் ஜயம்பெற்றது. ஆனால் க்ரேட்ப்ரிட்டனாவது, இதர இராஜாங்கத்தாராவது, இந்தயுத்தத்தில் சேரவில்லை. இவருடைய ஆளுகை நீடித்திராவிடினும், இவர் திடீரென 1910-ம் வருஷம் மேமீ 6உ பரலோகமடைந்த பொழுது, ப்ரிடிஷ்ராஜ்யமுழுவதும்கொண்ட துக்கத்திற்கு அளவேகிடையாது. நமது சக்ரவர்த்தியிடத்தில் இதர மன்

னர் வகித்திருந்த மரியாதையோ இவ்வளவு அவ்வளவல்ல. திருஷ்டாந்தமாக இவர் இறந்தவுடன், 8 பெரிய இராஜ்யங்களின் மன்னர்கள் சவத்துடன் சவக்குழிக்கு ஊர்கோலமாகச்சென்றார்கள். இவர்களில் ஜெர்மனி தேசத்து கெய்சரும் ஒருவராகயிருந்தார்.

நமது அரச சக்ரவர்த்தி

இவருக்குப்பின் இவரது இரண்டாவது குமாரராகிய ஜார்ஜ் பட்டத்
துக்கு வந்தார். இவருக்கும் தமது தகப்பனாரைப் போலநடந்துவர வே
ண்டுமென்ற எண்ணம் உண்டு. இதற்காக இவர் இந்தியாவிற்கு வந்து
டெல்லியில் ஒரு தர்பார் கூட்டிவைத்தது யாவருக்கும் தெரியுமே. அச்ச
மயத்தில் இந்தியர்களுக்கு நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி கல்வி விஷயமாக 6
கோடி ரூ. செலவழிப்பதாக வாக்களித்ததும் யாவருக்கும் தெரியுமே.
இதன் பலனாக 1913-14-ல் 2:8 பாடசாலைகள் ஆண்பிள்ளைகளுக்காக
அதிகமாயிருக்கின்றன, 69,960 ஆண்பிள்ளைகளும் அதிகம், இவர்களில்
53,328 இங்லீஷ் கற்றுவருகிறார்கள். ப்ரதமகல்வி விஷயத்திலோ விருத்தி
அதிக திருப்திகாமாயிருக்கிறது. சென்ற இரண்டு வருஷங்களாக ப்ரைமரி
பாடசாலைகளில் 531,375 மாணாக்கர்கள் அதிகமாய் படித்துவந்தார்கள்.
ஸ்பெஷல் ஸ்கூல்களும் காலேஜ்களும் முன் 6,951 இருந்தன இப்பொழுது
7155 ஆகயிருக்கின்றன. 1913 14-ல் (லாவக்கீலுக்கு 3877 மேல் படித்து
வந்தார்கள். இப்பொழுதோ 4083 பேரிருக்கின்றார்கள். சென்ற இரண்டு
வருஷகாலமாக சுதேச. பாஷாபிவிருத்தியின் பொருட்டு ஸ்தாபிக்கப்பட்ட
காலேஜ்கள் 1669 முன் 217 தான்இருந்தன. கல்கத்தாவில் சென்ற பிப்ர
வரிமீ 1914ம்வருஷம் ஒரு வைத்யபாடசாலைக்காக அஸ்திவாரக்கல் போடப்
பட்டது. அதுமுடிந்து விட்டால் நமது தேசத்துபிள்ளைகளுக்கு வைத்
தியவிஷயத்தில் இன்னும் அதிக லாபமுண்டு. கைத்தொழில் பாடசாலை
கள் 2,000 யிருக்கின்றன. பெண்கல்வியை விருத்திசெய்வதற்காக அநேக
புதியபெண்கள் பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன முன்பாட
சாலைகளில் 930,645 படித்து வந்தார்கள். இப்பொழுது, 1141,318 பெண்
மணிகள் படித்துவருகிறார்கள் இதில் அதிகபெண்களிருப்பதாக தெரிந்த
போதிலும் பள்ளிக்கூடத்துக்குப் போகக்கூடிய பெண்கள் ஜனத்தொகை
யில் 100 க்கு 6 வீதம் தான் படித்துவருவதாகத் தெரிகிறது. மேற்
கூறிய விருத்தி நமது வைஸ்ராயினது ஆளுகையில் உண்டானதே."

தர்மம், நியாயம், சத்யம் முதலியவைகளுக்காகவே நமது க்ரேட்ப்ரி
ட்டனும், ப்ரன்சு, ருஷியா, இத்தலியும் துர் எண்ணமும், பேராசையும்,
அநியாயமுள்ள ஜர்மனியருடன் யுத்தம் புரிந்து வருகிறார்கள். நமது

ஜார்ஜ் சக்ரவர்த்தியும் தம்மாலியன்றமுட்டும் இந்தயுத்தம் நடக்காமலிருக்க வேண்டியப்ரயத்தனங்களைச் செய்து வந்தார். பஞ்சபாண்டவர்கள் துரியோதனாதிகளுடன் சண்டை சச்சரவுக்குப் போகாமல் எவ்வளவோ பொறுமையாயிருந்து கடைசியில் நியாயத்திற்காக அவர்களும் யுத்தம் புரிய வேண்டியிருந்ததல்லவா? பஞ்சபாண்டவர்களும் கடைசியில் ஜயம் பெற்றார்களல்லவா? அவ்விதமே நமது ப்ரிட்டிஷாருக்கு ஜயமுண்டாகும். ஜயமுண்டாகும்படி ஈசன் கிருபை செய்வார்.

இந்தியர்களும் இச்சமயத்தில் ப்ரிட்டிஷாருக்கு தங்களாலியன்ற உதவிகளைப்புரிந்துவர பின் அடையமாட்டார்கள். ஏனெனில் இந்தியர்கள் ராஜவிசுவாசமுள்ளவர்கள். ப்ரிடிஷ் கொடியையே எப்பொழுதும் விரும்பியிருப்பவர்கள். சுபம்.

பத்திராதிபர்.

கணக்கு போதிக்கும் விதம்.

INFANT CLASS.

கணக்குகளை சாதாரணமாக அநேகர் பிள்ளைகளுக்குப் பெரிதாகக் கொடுத்துவருகிறார்கள். இப்படிச்செய்வதால் பிள்ளைகளுக்கு புத்தி தடுமாறிவிடுகிறது. மேல் வகுப்புகளுக்கு அவர்கள் வரும்பொழுது அவ்வித பெரிய கணக்குகளைப் போடத் தெரிகிறதில்லை. ஆகையால் உபாத்தியாயர்கள் பாலர் வகுப்பிலிருந்து 4-வது வகுப்புவரையிலும் சிறிய கணக்குகளையே கொடுத்து வரவேண்டும். பிள்ளைகளை விரல்களைக்கொண்டு எண்ணும் வழக்கத்தை ஒழிக்கவேண்டும் பலகையில் ஒவ்வொரு கணக்கையும் போடுவதைப்பார்க்கிலும் மனதினாலேயே வேலை செய்து விடையை வரவழைக்க முடலவேண்டும். இவ்விதம் செய்தால் பிள்ளைகள் நாளாவிர்த்தியில் விருத்தியடைவார்கள். மேலும் உபாத்தியாயர்கள் பொருள்களைக் கொண்டும் வேடிக்கையான சிறு கதைகள் மூலமாயும் கணக்குகளை கொடுத்துவரவேண்டும். இவ்விதம் செய்துவரின் பிள்ளைகளுக்கு மனது சலியாமல் வெகு நேரம் தங்கள் மனதை உற்சாகத்தோடு செலுத்த சக்தியுண்டாகும். அவர்கள் நன்றாக செய்வதும் தவிர அவர்களுடைய அறிவும் விசாலப்பட்டு விர்த்தியடையும்.

பாலர் வகுப்புக்கு கணக்குகளைப் போதிக்கும் விதம்.—பிள்ளைகளுக்கு முன் புளியங்கொட்டைகளைக் கொண்டு வந்து வைத்து, ஒரு கொட்டையை எடுத்து இதென்னவென்று கேட்கவேண்டும். பிள்ளைகள் புளியங்கொட்டை என்பார்கள். அவ்விதமே ஒரு கோலியையாவது இன்னும் சில பொருள்களையாவது வைத்துக்கொண்டு கேட்டு விடையைப் பெற்றபின் இதுதான் ஒன்று என்று சொல்லி பிள்ளைகளையும் சொல்லச் செய்யவேண்டும். ஆனால் உடனே பலகையில் எழுதி காண்பிக்கக்

கூடாது. பிள்ளைகளுக்கு ஒரு கோலியை எடுத்து அதெத்தனை என்று கேட்கவேண்டும். பிள்ளை ஒரு கோலி என்று சொல்வான். இவ்விதம் 2, 3, பிள்ளைகளைக் கேட்டபின் மற்றொரு பிள்ளையை 2 கோலிகளை எடுக்கச்சொல்லவேண்டும். எடுத்த உடனே எத்தனை கோலிகளை எடுத்தாய் என்று கேட்கவும். இவ்விதமே 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, வரையில் போதிக்கலாம். பிள்ளைகளுக்கு 10 வரையிலும் பொருள்களைக் கொண்டு போதிக்கவேண்டும். இதில் கூட்டல் முடிந்தபின் கழித்தலும் பெருக்கலும், வகுத்தலும, போதிக்கலாம்.

உதாரணம்.—

ஒரு புளியங்கொட்டையும் ஒரு புளியங்கொட்டையும் எத்தனை புளியங்கொட்டை?



பிறகு

புளியங்கொட்டை　　புளியங்கொட்டை எத்தனை?



புளியங்கொட்டை.　　புளியங்கொட்டை எத்தனை?



மேற்கூறிய விதம் திரும்பித்திரும்பி பொருள்களைக் கொண்டு பிள்ளைகளை அடிக்கடி கேட்டுவந்தால் பிள்ளைகளுக்கு எண்களை விரல் விடாமல் கூட்டவும் எண்களைத் தெளிவாக உச்சரிக்கவும் பொருள்களின் பெயர்களும் விளங்கும். இக்காலத்தில் பலகையை உபயோகிக்கக்கூடாது.

வேடிக்கை கதைகள்.

புளியமரத்தை வெட்டப்பேய் எள்ளைச் சம்பாதித்துக்கொண்டது.

ஒரு குடியானவன் கலப்பை செய்வதற்காக அவ்வூருக்கருகாமையிலுள்ள ஒரு தோட்டத்திலிருந்த புளிய மரத்தை வெட்டப்போய் அடியில் ஒரு வெட்டுப் போட்டான். அதில் வெகு நாளாக வசித்துவந்த பேய்கள் கீழே இறங்கிவந்து, ஐயா, இதை ஏன் வெட்டுகிறீர்கள் என்றதுகள். அக்குடியானவன் எள்ளுக்கு உழவு கலப்பை பண்ணவேணு மென்றான். ஆனால் சரி, உமக்கு வருஷந்தோறும் வேண்டிய எள்ளு கொடுத்து வருகிறோம், இதை வெட்டாமல் தயை செய்யவேண்டு மென்றதுகள்.

அதற்கு அவன் மிகவும் சந்தோஷப்பட்டு இது நமக்கு அதிகலாபம் கொடுக்குமே என்று எண்ணி சம்மதித்து விட்டு வருஷத்தில் நாழுகலம் எள்ளு வாங்கிக்கொண்டு வந்தான். இப்படி யிருக்கையில் அந்தப் பேய்களிடத்திற்கு மற்றொரு பேய் வந்தது. அங்கேயிருந்த பேய்கள் விசனமுற்றிருந்தன. அப்பேய்களைப்பார்த்து என்ன விசனமாக யிருக்கிறீர்களென்றது. நாங்கள் விசனமாயிருப்பதற்கு காரணம் உண்டு. அது என்னவெனில் இந்த ஊரிலிருக்கும் குடித்தனக்காரனுக்குத் தினந்தோறும் எள்ளு திருடிக்கொண்டு வருவதே காரியமாயிருக்கிறது. அதனால அலுத்துப் போகிறோம் என்றதுகள்.

இதைக் கேட்ட அந்தப் புதுப்பேய் நீங்கள் ஒரு சிறு மனிதனுக்குப் பயப்படலாமோ? இதோ அவனை நான் கொன்று விட்டு வருகிறேன் என்று சொல்லி, அக்குடியானவனிருக்கும் இடத்திற்குப் போயிற்று. அவன் மாட்டுத் தொழுவத்தில் சில மாடுகளுக்குச்சூடுபோட்டுக்கொண்டிருந்தான். இந்தப்புதுப் பேய் ஒளிந்துக்கொண்டு ஒரு மரத்தடியில் உட்

REGISTRAR ... JAN 1916 ... MADRAS

71-A

The Tamil Zenana & School Magazine.

மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"—ஔவையார்.

Vol. XVII | Madras August & Septem. 1915. | Nos 8 & 9

புத்தகம் 17 | சென்னை ஆகஸ்டு—செப்டம்பர்மீ 1915ஞு. | இலக்கம் 8&9

Life of Queen Alexandra.

அலக்ஸாண்டரா மகா ராணியார்.

அலக்ஸாண்டரா மகாராணியாரின் சரித்திரத்தை நமது தேசத்திலுள்ள மாதர்களும் பிள்ளைகளும் நன்கறியும்பொருட்டு பிரசுரிக்கலாயினோம். ஸ்திரீகளும் பிள்ளைகளும் இதைநன்றாய் வாசித்து அவர்களுடைய குணாதிசயங்களைப் பின்பற்றிநடப்பார்களாக.

ஜனனமும் இளமைப் பருவமும்.

அலெக்ஸாண்டரா மகாராணியார் அவர்கள் டென்மார்க் தேசத்து அரசராகிய பிரின்ஸ் கிறிஸ்டியனுடைய செல்வக்குமாரத்தியாய் 1844-வது வருஷத்தில் டிசம்பர்மீ முதல்தேதியன்று கோபன் ஏகன் என்ற பட்டணத்தில் ஜனித்தார்கள். இவர்களுடைய தாயார் லூயிஸ் என்பவள் மிகுந்த சாமர்த்தியமுள்ள இராஜவம்ஸத்தைச் சேர்ந்தவள். இவளுக்கு பல பாஷைகளிற் பயிற்சியுண்டு. சங்கீதம் நன்றாகத் தெரியும். சித்திரம் எழுதுவதில் மிகத்தேர்ந்தவள். பிரின்ஸ் கிறிஸ்டியனும், லூயிஸும் வெகு சாமானியமாய் குடித்தனம் செய்து கொண்டு வந்தார்கள். இவ்வித குணங்களமைந்துள்ளவர்களின் புத்திரிதான் நமது அலெக்ஸாண்டரா மகாராணியார். இவர்களுடைய தாயாரும் தகப்பனாரும் அதிக செல்வமாக இவரை வளர்த்து கல்வி புகட்டிவந்தார்கள். குழந்தையா யிருக்கும் பொழுதே ஆங்கிலம் பயிற்று வித்தார்கள்.

இவர்கள் குழந்தையா யிருந்தபொழுது தமது சகோதரர்களுடனும், சகோதரிகளுடனும் சேர்ந்து தோட்டம், தோப்பு முதலியவைகளுக்குச் சென்று அங்குள்ள அதிசயங்களைக்கண்டு ஆனந்திப்பார்கள். புஷ்பங்களைத் தாங்களே பறித்து எடுத்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பி

வருவார்கள். வீட்டு வேலைசெய்வதில் ஒவ்வொருவரும் பழக்கப்பட்டு வந்தார்கள். தாங்கள் தாங்களே தங்களுக்குவேண்டிய உடுப்புகளைத் தைத்துக்கொள்ள பழக்கப்பட்டார்கள். ஒவ்வொரு வேலையையும் இதராளுடைய சகாயமின்றி செவ்வனே செய்வார்கள். இப்படி சிறு குழந்தைகள் செய்து வந்ததானது தாய் தந்தையர்களுக்கு அதிக மகிழ்ச்சியை உண்டாக்கியது. இப்படியல்லவோ இந்தியர்களாகிய நாம் நமது குழந்தைகளை பாலியத்தில் கெட்டவர்களுடன் சேரவிடாமல் நற்புத்தி அவர்கட்குப் புகட்டி தாங்கள் தாங்களே இதராளுடைய சகாயமின்றி செய்யக் கூடிய வேலைகளைச்செய்யப் பழக்கவேண்டுவது அவசியமன்றோ? மேலும் அலக்ஸாண்டரா மகாராணியாரவர்கள் பொய்பேசவே மாட்டார்கள். மிகுந்த சாமார்த்தியமுள்ளவர்கள். இவர்கள் இளம்பிராயமுதல் நற்குணமுள்ளவர்களாயும், சமயோசிதமாய் பதிலுரைப்பவர்களாயுமிருந்திருக்கிறார்கள். ஒரு சமயத்தில் காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரவர்கள் "அன்புள்ள ஆலிக்ஸ் மிகுந்த சாமார்த்தியமுள்ளவள், உண்மையானவள்" என எழுதியிருக்கிறார்கள் இவர்களுடைய பெற்றோர்கள் அதிக செல்வமாக வளர்க்க வளர்ந்து கல்வியில் அதிக தேர்ச்சியடைந்து தமது மங்கைப் பருவத்தையடைந்தார்கள்.

௭-வது எட்வர்ட் மகாராஜாவின் ஜனனம்.

நமது காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரவர்களுக்கு 1841-ம் வருஷம் நவம்பர் மீ 9உ இரண்டாவது குழந்தை பிறந்தது. நமது மகாராணியாருக்கு முதற் பிறந்த குழந்தை பெண்குழந்தை; இரண்டாவது ஜனித்தது ஆண்குழந்தை யாகையால் மகாராணியாரவர்கள் மிகமகிழ்ந்ததுடன் ஜனங்களும் மிகச்சந்தோஷப் பட்டார்கள்; இக்குழந்தைக்கு ஆல்பர்ட் எட்வர்டு எனப்பெயரிட்டார்கள். பின்பு 1842 வருஷம் ஜனவரி மாதம் 25உ விண்ட்ஸர் நகரத்திலுள்ள ஸெயிண்ட்ஜார்ஜு கோயிலில் இவர் ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டார். அப்பொழுது அநேக பிரபுக்களும் உத்தியோகஸ்தர்களும் வந்திருந்தார்கள். சடங்கு வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. விருந்து சாப்பாட்டுக்குச்சுமார் 30-லக்ஷம் ரூபா செலவிடப்பட்டது.

குழந்தைகளை நமது விக்டோரியா மகாராணியார் தாமே எடுத்து வளர்க்கப் போதுமான சாவகாசமில்லாததனால் தாதிகளை நியமிக்கவேண்டியிருந்தது. ஆயினும் தாமே தமது குழந்தைகளுக்கு பால் ஊட்டி வந்தார்கள். நமது தேசத்தில் திரவியமுள்ளவர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பால் ஊட்டாமல் வேலைக்காரியை வைத்து பால் ஊட்டும்படி செய்து வருகிறார்கள். தங்களது குழந்தைகளுக்கு ஸ்நானம் முதலியவைகளை

இதரர்களைக்கொண்டு செய்துவைக்கிறார்கள். நமது விக்டோரியா மகாராணியாரவர்களோ தாமே தமது குழந்தைகளுக்கு ஸ்நானம் செய்து வைத்து வந்தாராம். இதுவன்றோ விசேஷமானது! இவ்விதமன்றோ நமது தேசத்திய மாதர்கள் நடக்க முயலவேண்டும்!

குழந்தைகளை வளர்ப்பதில் மிக அக்கரையெடுத்துக்கொண்டு அவர்களுக்கு நற்புத்தி புகட்டிவந்தார்கள். கெட்டவர்களுடன் சேர விடவேயில்லை. எப்பொழுதும் அவர்களை உபாத்தியாயர் வசம் ஒப்புவித்து அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்து வரும்படி கட்டளையிட்டதும் தவிர அவர்களைத் தமது ஓய்வுகாலத்தில் பரீக்ஷித்தும் வந்தார்கள். மகாராணியார் தாமே தமது குழந்தைகளுக்கு தெய்வபக்தியுண்டாகும்படி பல நூல்களைக்கொண்டு போதித்துவந்தார்கள். ஒரு சமயம் ஒரு கனவான் காலஞ்சென்ற மகாராணியாரைப் பார்க்க வந்தபொழுது குழந்தைகளைப்பரீக்ஷை செய்தார். அப்பொழுது அவர் கேட்ட கேள்விகளுக்குச்சரியாக தவறாமல் பதில் உரைத்தார்கள். அவர் மிகச்சந்தோஷப்பட்டு "உங்களுக்கு இவ்விஷயங்களை இவ்வளவு நன்றாகப்போதித்த உபாத்தியாயர் மிகவும் கெட்டிக்காரர்" என்று சொன்னார். குழந்தைகள் புன்சிரிப்புடன் "எங்களுக்கு இவைகளைப்போதித்தவர் எங்கள் அருமைத் தாயார்தான்" என பதிலுரைத்தார்கள். இவ்விதமல்லவோ நமது மாதர்களுமிருக்கவேண்டும். நமது மாதர்களும் படித்திருந்தால்தான் இவ்விதம் செய்யக்கூடும். ஆனது பற்றி நமது மாதர்கள் கற்க முயலவேண்டும். அப்படி கற்பதின் பிரயோஜனம் அபரிமிதமேயாம்.

நமது மகாராணியார் தமது குழந்தைகளுக்கு சாமானிய உடைகள் உடுத்திவர பழக்கம் செய்திருந்தார்கள். தாய் தந்தையர்கள் ௭-வது எட்வர்டின் கல்வி விருத்தியைப்பற்றி மிகக் கவலையுடன் ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். இவரும் மிகக்கெட்டிக்காரரென பெயர் பெற்றார். இவருக்கு அடிக்கடி பிறருடைய முகஸ்துதிக்கும், இச்சக வார்த்தைகளுக்கும் இடம் கொடாமல் நடந்துகொள்ளவேண்டுமென பலதடவை புத்தி புகட்டியதும் தவிர கடிதம் எழுதும்பொழுதும் இவ்விதமே எழுதியும் வந்தார்கள். இப்படி இவரது பெற்றோர்கள் செய்து வந்தமையால் அவர் அவர்கள் வார்த்தையை தலை மேல் வைத்துக்கொண்டு சரியாகவே நடந்து வந்தார். இவருக்கு முதலில் எச். எம். போர்ச் எனும் பாதிரியாரும் பின்னிட்டு மிஸ்டர் F. W. கிப்ஸ் என்பவரும் போதகாசிரியராயிருந்தனர். இவர்கள் சொற்படி எட்வர்ட்டு கேட்டு நன்றாகப்படித்து வந்தார். இவர் அப்பொழுதே தேச சஞ்சாரம் செய்யத் தலைப்பட்டார். இங்கிலண்டு, ஸ்காட்லண்டு, ஐயர் லண்டு, ஜர்மனி முதலிய தேசங்களுக்குச்சென்று அங்குள்ள விசேஷங்களை அறிந்துகொண்டார். கிரிமியாயுத்தம் நடந்த

பிறகு தமது பெற்றோர்களுடன் பாரிஸ் நகருக்குச் சென்றிருந்தார். இப்படிச் செய்வதினால் அறிவுண்டாகுமென்பது அவரது தந்தையாரின் முக்கிய எண்ணமாம். பின்பு நமது மகாராஜா அவர்கள் எடின்பரோவில் டாக்டர் லயன் பிளேபர் என்பவரது மாணாக்கராயிருந்து படித்துவந்தார். ஆக்ஸ்போர்டில் டாக்டர் ஸ்மிட்ஸ் என்பவரிடத்திலும் பின்பு கேம்பிரிட்ஜ் ட்ரினிடி கலாசாலையிலும் சேர்ந்து படித்துவந்தார்.

பின்பு 1860-ஆம் வருஷத்தில் கனடாவுக்கும், ஐக்கியமாகாணங்களுக்கும் போயிருந்தார். அக்காலத்தில் அவருடன் டியூக் ஆப்கானில் சென்றிருந்தார்கள். அமெரிக்கா தேசத்து ஜனங்கள் நமது மகாராஜா அவர்களுக்கு நல்வரவு கூறி வெகுமரியாதை செய்தார்கள். இவர் பின்பு இங்கிலாண்டுக்குத் திரும்பிச்சென்று தமது தந்தையார் இறப்பதற்குமுன் ஐயர்லாண்டில் முதலில் போர்ச்சேவகத்தொழிலில் சேர்ந்து அதன் சங்கதிகளைத் தெரிந்துகொண்டார்.

விவாகம்.

1861௵ தமது தோழர்களிலொருவருடைய கையில் அலெக்ஸாண்டரா மகாராணியாரின் உருவப்படத்தைக்கண்டு மகிழ்ந்தார். இவர்களுடைய ரூபலாவண்ணியத்தைக்கண்டு மயங்கினார். இவர்களை நேரே பார்க்கவேண்டுமென்ற எண்ணம் மனதினுதித்தது. இதே வருஷத்தில் ஜர்மனி தேசத்துக்குச் சென்றார். அங்கு பூர்வகாலத்து ஸ்பியர் என்னும் பட்டணத்தில் ஒரு கோவிலில் ரூபவதியாகிய அலெக்ஸாண்டராமகாராணியாரை முதல் முதல் கண்டு மோகங்கொண்டார். கண்கள் கண்களையழைத்தன; ஹிருதயம் ஹிருதயத்தை ஆவலுடன் இச்சித்தது. நமது மகாராஜா அவர்கள் மகா ராணியாருடன் "பரஸ்பரமாய் அந்தரங்க விசுவாசமமைந்தது" என்றார்கள். உடனே மகாராணியாரும் தமது சம்மதத்தைப்புன்சிரிப்புடன் தெரிவித்தார்கள். இவ்விதம் இவர்களுக்கு மனப்பொருத்தம் நேர்ந்தது ஆச்சரியகரமானதேயாம். சாதாரணமாய் ஐரோப்பியருக்குள் இவ்விதம் நடந்துவருகிறது; ஆனால்இராஜவம்சத்தில் வழக்கமில்லை. ஆயினும் நமது அலக்ஸாண்டராவின் மனப்பொருத்தம் விதிக்கு விரோதமாயினும் யாவராலும் ஒத்துக்கொள்ளப்பட்டது.

நமது விக்டோரியா மகாராணியாரும் 1863-வது வருஷம் பிப்பரவரி மாதத்தில் பார்லிமெண்டு கூடியபோது தமது குமாரன் விவாகத்தைப் பற்றி தாம் சம்மதித்ததாக பயிரங்கமாகச் சொன்னார்கள்; பார்லிமெண்டிலுள்ள அவுஸ் ஆப் காமனைச் சேர்ந்தவர்கள் நமது மகாராஜா அவர்களுக்கு 40,000 பவுனும், மகாராணியாரவர்களுக்கு 10,000 பவுனும் கொடுக்க சம்மதித்தார்கள். இதைத்தவிர நமது மகாராஜாவுக்கு காரன்வாலிலிருந்துவரும் வருஷவரும்படி சுமார் 60,000 பவுன்.

நிற்க, அலக்ஸாண்டரா மகாராணியாரவர்கள் 1863-ஆம் வருஷம் பிப்ரவரிமாதம் 26௳ கோபன் ஏகன் நகரைவிட்டு கீல்ஹனோவர் கோலோன் முதலிய விடங்களுக்குவந்து கடைசியாக மார்ச்சு௴ 2௳ யன்று பிரஸல் பட்டணத்திற்கு வந்தார்கள். வழியில் ஊர்களிலுள்ள பிரபுக்களும், சீமாட்டிகளும் நமது மகாராணியாரவர்களுக்குத் தகுந்த மரியாதை செய்தார்கள். கிரேவ்ஸெண்ட் என்னும் துறைமுகத்தில் நமது மகாராஜா அவர்கள் மகாராணியாரை யெதிர்கொண்டு அழைக்கவந்தார். உடனே மகாராணியார் அவரைச் சந்திக்கப்போகையில், மிக ஆவலோடு அவர்களது கையைக்குலுக்கி முத்தமுமிட்டார் நமது மகாராஜா. நமது மகாராணியாரைப் பார்ப்பதற்கு திரள்திரளாய் ஜனங்கள் அங்கு கூடினார்கள். எல்லாரும் சந்தோஷமாயிருந்தார்கள். துறை முகத்து வாராவதியின் மீது சிவப்பு, வெளுப்பு நிறங்கள்அமைந்த வஸ்திரங்களை மாதர்கள்தரித்துக் கொண்டு பலவர்ணங்களுள்ள புஷ்பங்களைப் பரப்பியிருந்தார்கள். அப்பொழுது அலக்ஸாண்டரா அவர்கள் பரப்பியுள்ள புஷ்பங்களின்மேல் காலை வைத்து தமது அன்புள்ள நாயகனுடைய கையைப்பிடித்துக் கொண்டு நடந்து வருகையில் அந்தஸ்திரீகள் புஷ்பங்களை இவர்களின் மீது சொரிந்தார்கள். சந்தோஷத்துடன் கரகோஷம் செய்தார்கள். அலக்ஸாண்டராவின் முகம் புதிதாயுண்டான சந்தோஷத்தால் வெண்ணிறம் பாய்ந்திருந்தது.

இவர்கள் மெதுவாக நடந்து ரயில் ஸ்டேஷனுக்குச் சென்றார்கள். பின்பு இவர்கள் அகன்றதெருக்களும், அடுக்கடுக்கான உயர்ந்தமெத்தை வீடுகளும், கூட கோபுரங்களும், மாடமாளிகைகளும், சிறந்த தேவாலயங்களும், எண்ணிறந்த ஷாப்புகளும், பூந்தோட்டங்களுமுள்ள லண்டன் மாநகரம் வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது இவர்கள் எப்பொழுது வருவார்களென்றுகாத்துக்கொண்டிருந்தஜனங்கள் சந்தோஷத்துடன்பிரின்ஸ் ஆப் வேல்ஸும் அலக்ஸாண்டராவும் வாழ்கவென கரகோஷம் செய்தது டன் புஷ்பமாரி புரிந்தார்கள். அப்பொழுது அலக்ஸாண்டராவுக்கு வயது 18. (இப்பொழுது 71 ஆகிறது.) உயர்ந்த உருக்கொண்டு மெலிந்த மேனி வாய்ந்திருந்தாள், மிகுந்த அழகுள்ளவள்; அவளது கண்கள் ஊதாநிறங்கொண்டுபிரகாசித்தன; அவளது நேர்த்தியான அழகைக்கண்டு அனைவரும் சந்தோஷப்பட்டார்கள். இப்படியிருக்க 1863-௵ மார்ச்சு௴ 10௳ விண்ட்சரிலுள்ளசெயண்ட்ஜார்ஜுகெதீடரலில் அலக்ஸாண்டராவுக்கும் நமதுமகாராஜாவாகிய எ-வதுஎட்வர்ட்டுக்கும்வெகு விமரிசையாக விவாகம்நடந்தது அப்பொழுதும் பிரதம குரு அவர்களும், குருமார்களும், பிரபுக்களும், சீமாட்டிகளும், பொதுஜனங்களும் திரளாய் கூடியிருந்தார்கள். விவாக

மானவுடன் புஷ்பங்களைச்சொரிந்தார்கள்; சந்தோஷத்தால் கரகோஷம் செய்தார்கள். வாத்தியகோஷமானது வெகு விமரிசையாக நேர்ந்ததுடன் எல்லாருடைய மனதையும் ஆனந்திக்கச்செய்தது. நமது மகாராணியாரவர்கள் மிகச் சந்தோஷப்பட்டார்கள். இவ்விவாகத்தைப் பற்றி (Bishop of Oxford) பிஷப் ஆப் ஆக்ஸ் போர்டு (குருமார்) "நான் இதுகாறுங் கண்டுள்ள விவாகங்களெல்லாவற்றிலும் இதுவே சிறந்தது; இதுவே என் மனதைக் கவர்ந்தது. பிரின்ஸஸ் ஆப் வேல்ஸ் சாந்தமும், லஜ்ஜையும், அடக்கமும் பொருந்தியிருந்தாள்" எனக்கூறினர். அன்று இரவில் ட்ராயிங்ரூமில் அவர்களைப் பார்க்கவந்தவர்கள் திரும்பிப் போக வழியில்லாமையாலும் அவ்விடத்தில் ஒழுங்காசார மங்களகர கூட்டத்தின் சம்பாஷணையாலும் தடைபட்டு மறுநாள் காலை 7-மணிக்குத் தான் தங்கள் தங்கள் வீடுபோய்ச் சேர்ந்தனராம்.

இல்லற தருமம்.

இப்பொழுது இராணியவர்களுக்கு வயது 71-ஆகிறது. தம் பர்த்தாவைவிட இவர் நான்கு வருடம் வயதில் குறைந்தவர்கள். இவர்களுடைய ரூபலாவணியத்தைக் குறித்தும், தெய்வ பக்தியைக்குறித்தும், ஸ்டான்லே என்கிற ஒரு பெரிய மடாதிபதி பின் வருமாறு எழுதியிருக்கிறார்:—

"இவர்கள் யுக்தியும், சௌந்தரியமும் உள்ளவர்கள். உண்மை ய உருக்கொண்டவர்கள், தெய்வ பக்தியுள்ளவர்கள் ஈஸ்டர் பண்டிகையின் ஒருநாள் மாலையில் நான் தெய்வ ஆராதனை செய்து, வேத புத்தகத்தை என் கையில் எடுத்துக்கொண்டு, இந்த அழகிற் சிறந்த ஸ்திரீயை ஆசீர்வாதம் செய்தேன். சௌந்தரியத்தில் நமது புராணங்களில் வர்ணிக்கப் படுகிற திவ்விய சுந்தர விக்கிரங்களைப் போலிருக்கிறார்களென்று சொல்லலாம்."

இவர்கள் உன்னத அந்தஸ்தை அடைய விரும்பாமலிருந்தபோதிலும், எவர்களாவது தம்மை பட்டமகிஷியென்று சொல்லாமல் இளவரசருடைய பத்தினியென்று மாத்திரம் சொன்னால் அவர்கள் மீது சினங்கொள்வார்கள்.

அரசர்கள் குடும்பத்தில் அர்த்தாங்கி, பிராணநாயகன், (consort) என்று அழைக்கும்படியான வழக்கம் எப்படி வந்ததென்றால், சொர்க்கத்தில் தற்காலம் அரசுபுரிந்துவரும் நமது விக்டோரியா மகாராணியாருக்கு ஆல்பர்ட் என்பவர் பிராணநாயகரானதே தவிர, இராஜ்ஜியத்திற்கு அதிபதியாகாததினிமித்தம் அவரை அரசர், அல்லது சக்கிரவர்த்தியென்று அழைக்கமுடியாமல் இராணியாரின் பிராணநாயகரென்று மாத்திரமே

அழைத்துவந்ததினால், அதே வழக்கபடி இந்த அம்மாளையும் இளவரசருடைய பாரியை யென்றே எவரும் அழைத்துவந்தார்கள்.

கான்சர்ட் என்று சொல்லும்படியான ஆங்கில வார்த்தையானது ஆண்பாலார், பெண்பாலார் இருவருக்கும் உரிய தாகையால், அந்த வார்த்தையை புருஷரான ஆல்பர்ட் என்பவருக்கும், ஸ்திரீயாகிய அலெக்ஸாண்டிரா மாதுக்கும் உபயோகித்து வந்தார்கள். பூர்வத்தில் இளவரசாயிருந்தவரும், இப்போது ராஜ்ஜியத்திற்கு அதிபதியாயுமிருப்பவராகிய 7-வது எட்வர்ட் என்பவருக்கு இந்த அரசாட்சிகிடைப்பதற்கு முன்னமே இந்த மாது தெய்வசாட்சியாய் பாணிக்கிரஹணஞ் செய்துகொண்ட அர்த்தாங்கியாகையால் அவருக்குக் கிடைத்த இளவரசுபிரபுத்துவத்தையும், இராஜ்யபரிபாலன அதிகாரத்தையும், இந்த அம்மாளும் அநுபவித்து வந்தார்களல்லவா? ஆகையால் அந்தந்த காலத்தில் அந்தந்த அதிகாரங்களினால் இந்த அம்மாளும் கௌரவிக்கப் படாமலிருந்தால் இந்த அம்மாளுக்கு அது விஷயத்தில் வருத்தம் உண்டாகாதா? அதனால் நம்முடைய அலெக்ஸாண்டராவை பாலியத்தில் இளவரசியென்றும், இப்போது இராணி யென்றும் அழைப்பதே முறைமை. இது இந்த அம்மாளுக்கு ஒரு கௌரவமல்லவா? இந்த மாதின் தந்தையாராகிய டென்மார்க் அரசர் தனவந்தராக விருந்தாலும், தக்கபடி நடத்தின தகப்பனாரின் ஆக்கினைகளுக்கு இந்த அம்மாள் கீழ்ப்படிந்து வந்தது தவிர, பெண்பாலார்க்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, என்கிற நான்கு நற்குணங்களும் பொருந்தியுள்ளவர்களா யிருக்கிறார்களென்று ஜனங்கள் மிகவும் புகழ்ந்து வருகிறார்கள்.

இந்த மாது கலியாணஞ் செய்து கொண்டு தமது கணவருடைய அரண்மனையை யடைந்த பிறகு, தாம் வெகு ஐஸ்வரியத்தால் நிறைந்தவர்களா யிருந்தபோதிலும், பெருமை யென்கிற வார்த்தையை சிறிதேனுங் கொள்ளாமல் சாதாரண ஸ்திரீயைப்போல் விளங்கி வருகிறார்கள். அதிக விலையுயர்ந்த ஆபரணங்களை அணிந்து கொள்வதிலும், மனதிற்கு ஆநந்தத்தை உண்டாக்கும்பொருள்களை வாங்குவதிலும், திரவியத்தை அதிகமாகச் செலவு செய்யாமல் போதுமான அளவு செலவு செய்வார்கள். தாம் அதிக ஐஸ்வரியமுள்ள ஒரு அரசருடைய செல்வக் குமாரத்தியா யிருந்தாலும், "மாமியார் வீட்டில் மருமகள் எவ்விதம் அடங்கி நடக்க வேண்டுமோ அவ்விதம் அடங்கி நடந்து வந்தார்கள். இதல்லவா சன்மார்க்க நடக்கையுள்ள மருமகளின் இலட்சணம்! இவ்விதமாக சமுசாரஞ் செய்ய ஆரம்பித்த சில தினங்களுக்குள் அம்மாது ஓர் ஆண் குழந்தையைப் பெறும் பாக்கியவதியானார்கள். அம்மாது அதாவது 1864வரு ஜனவரிமீ 8உ சாயங்காலம் உல்லாசமாய் பொழுது போக்குவதற்காக,

தமதாண்மனையின் சமீபத்திலிருந்த ஓர் நதிக்கரைக்குப் போயிருந்த காலத்தில், ஆண் குழந்தையைப் பிரசவித்தார்கள். அக்காலத்தில் அந்தம்மாளுடன் இரண்டொரு வேலைக்காரிகள் மாத்திரம் இருந்தார்களே யன்றி வேறு ஒருவரும் அவ்விடத்தில் இல்லை. இச்சங்கதி அரண்மனைக்குத் தெரிந்தவுடனே மகாராணியாரவர்களும், ஆல்பர்ட்டும், மற்றுமுள்ள பந்துக்கள் யாவரும் ஆச்சரியத்துடன் திகிலும் அடைந்திருந்தார்கள். அங்கு ஜனித்த இளங்குழந்தைக்குப் போர்ப்பதற்கு, அந்தம்மாள் அக்காலத்தில் போர்த்துக்கொண்டிருந்தபிளானல் வஸ்திரம் தவிர வேறு வஸ்திரம் ஒன்றும் இல்லாமையால், அதையே அக்குழந்தைக்கு போர்வையாக போர்த்தார்கள்.

கடவுளின் செய்கையைப் பார்த்தீர்களா? அக்குழந்தைக்கு என்ன குறைவு? அதன் தகப்பனார் வேல்ஸ் தேசத்தின் இளவரசர். பாட்டியாரோ இங்கிலாந்து, இந்தியாமுதலிய தேசத்தை ஏக சக்கிரவர்த்தினியாய் ஆண்டுவந்த மகாராணியவர்களன்றோ? இவ்வித பெருமை வாய்ந்த அக்குழந்தைக்கு ஒரு நதி தீரம் ஜென்ம ஸ்தானமாக வாய்த்தது விதியின் பயனல்லவா? தமது இரண்டொரு வேலைக்காரிகள் தவிர வேறு ஒருவரும் இல்லாத அந்நதிதீரத்தில் அந்தம்மாள் அக்குழந்தையைப் பிரசவித்த போதிலும், கடவுளுடைய கிருபையால் தாயாரும், குழந்தையும் சுகமாகவே யிருந்தார்கள். உடனே ஆல்பர்ட் சிலவேலைக்காரர்களையும், பெண் வைத்தியர்களையும், மருத்துவப்பெண்களையும் அனுப்பி அதிக பத்திரமாக அந்தம்மாளை அழைத்து வரும்படி உத்தரவு செய்தார்கள். அவர்கள் வேண்டிய மருந்துகளுடன் அவ்விடம் சென்று தாயும், குழந்தையும் சௌக்கியமாயிருப்பதைக்கண்டு மகிழ்ந்து, வேண்டிய சீதோப சாரங்களை யெல்லாஞ் செய்து, வண்டியில் அவர்களை வெகு சாக்கிரதையாக ஏற்றி அரண்மனைக்கு அழைத்து வந்தார்கள்.

ஜனனாசௌசம் முடிந்தபிறகு குழந்தையைத் தொட்டிலில் விட்டு தாலாட்டி நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்த்துவந்தார்கள். இக்குழந்தைக்கு பிரின்ஸ் ஆல்பர்ட் விக்டர் என பெயரிடப்பட்டது. இந்தம்மாள் ஆண் குழந்தையைபெற்று சந்தோஷமாய் வாழ்ந்துகொண்டிருக்கும் நாளில் இவர்களுக்கு பெரிய விசனமொன்றுண்டாயிற்று. அஃதென்ன வெனில், தமது தகப்பனாருக்கும், ஜெர்மனி தேசத்தரசனுக்கும் அதிக நாளாக பொங்கிக்கொண்டிருந்த கோபமானது நாளுக்குநாள் வளர்ந்து விவாதமுண்டாகி யுத்தம் செய்யும்படி நேரிட்டது. இந்த சங்கதியை இந்த மாது செவியேற்றலும், தாம் வயதில் சிறியவர்களாயும், அநுபவம் இல்லாதவர்களாயுமிருந்ததனால் அதிக மனவருத்தமுடையவர்களாய் இந்த ஆபத்து நீங்கும்பொருட்டு கடவுளைப்பிரார்த்தித்து, தாமும் பிரயத்தனம் செய்தார்கள்.

பத்திராதிபர்

தாக பதில் சொல்லி, அமிர்தேசன், ஹம்ஸப்பிரியன் இவர்களிடத்தில் விடைபெற்றுக் கொண்டுகுதிரை மீதேறிப் புறப்பட்டான்.

வழியில் செலவுக்குப் பணம் வேண்டியிருக்குமோ என்னவோ வென்று அமிர்தேசன் உத்தரவுப்படி கொஞ்சம் காசுகளைத் தலைப்பில் முடிந்து கெண்டிருந்தான். குளிர் மிகுந்தபின் பனிக்காலமாகிய தைமாதக்காலையில் தேகத்தை நன்றாய்ப் போர்த்துக்கொண்டு உல்லாசமாய்ச் சவாரிசெய்தான் எதுகுல திலகன்.

சுமார் 5,6 நாழிகை வழிநடந்து அமிர்தேசன் சொன்ன குறிப்புகளால் வழிதப்பாமல் லக்ஷ்மணபுரி போய்ச் சேர்ந்தான். அவ்விடத்தில் அச்சுவல பாரிஜாதன் வீட்டை விசாரித்து, அவ்வீட்டண்டை இறங்கிக் குதிரையை ஒரு மரத்தில் கட்டிவிட்டு கதவை இடித்தான். சுமார் பதினான்கு வயதுள்ள சிறுபெண் கதவைத்திறந்தாள்.

“அம்மா மணிகாரர் அச்சுவல பாரிஜாதர் வீட்டில் இருக்கிறாரா?” என்று கேட்டான்.

“இல்லை ஐயா! அவர் இவ்வீட்டில் இப்பொழுது குடியில்லை. அவர் வனத்துக்கு ஏதோ காரியமாய்ப் போய் இருக்கிறார்” என்று பதிலுரைத்தாள்.

“சரி: அவர் திரும்பிவரும் சங்கதி ஏதாவது தெரியுமா?”

சாயங்காலம் தான் அவர் திரும்பிவரும் சமயம்: வேலைமுடிந்தால் சீக்கிரமாயும் வரலாம். வந்தால் நேரே இங்கேயேதான் வருவார்.”

“ஆனால் அவர் வரும் வரையில் அல்லவா காத்துக்கொண்டிருக்க வேண்டியது, காரியம் முடியவேண்டுமானால்!” என்று சற்றுபலமாய்த் தனக்குத் தானே சொல்லிக்கொண்டான்.

“நீர் ஒருகோடி நிற்பதாய் இருந்தால் என் தகப்பனாருடன் வேண்டுமானால் உமது வரவைப்பற்றிச் சொல்லிவருகிறேன்.” என்று ஓட்டமாய் உள்ளே போய்விட்டு மறு நிமிஷத்தில் மின்னல் கொடிபோல் மறுபடி, திரும்பிவந்து “ஐயா உம்மை எனது தகப்பனார் பார்க்கவேண்டுமென்று அழைக்கின்றார். பாரிஜாதரைப் பார்க்க வந்து இருப்பினும் சற்று உள்ளே நுழைந்து தன்னையும் பார்த்துவிட்டுப் போகலாம்” என்று கேட்டுக்கொள்ளுகிறார் என்றாள்.

எதுகுலன் மரியாதையாய் அப்பெண்மணியைப் பின்தொடர்ந்து உள்ளே நுழைந்தான். எதிரே கூடத்தில் பெரிய உத்தியோகஸ்தன் போன்று ஒரு மனிதன் நாற்காலிமேல் உட்கார்ந்து இருந்தான். அவர்கள்

இருவரும் அம்மனிதனுடைய பின்புறத்தில் நின்றமையால் அவன் இவர்களைப் பார்க்கவில்லை. எதுகுலனுக்கு மட்டும் அவன் விஜ்ஜலனண்டை உழைக்கும் ஒரு உத்தியோகஸ்தனாய்த்தான் இருக்கவேண்டுமென்பது தெளிவாய் விளங்கிற்று. அவனது நீண்டகத்தியும் உருமாலையும் நாற்காலியின்மீது வைத்து இருந்தன. அவர் முன் இருந்த ஊஞ்சல் பலகையின் மீது ஓலைகள் குவியலாய்க் குவிந்து இருந்தன.

"இதோ இவர்தான் அப்பா" என்றாள் அப்பெண்மணி தன் தந்தையிடத்தில். அந்த மனிதன்—அதாவது பிரபு, ஏனெனில் அவன் முகத்தைப் பார்த்தவுடனேயே அவன் ஒரு பிரபுவென்று நன்கு விளங்கிற்று—அப்பிரபு, அப்பெண் சொன்னதை கவனியாமல் ஏதோ ஒரு கடிதத்தை வாசித்துக்கொண்டேயிருந்துவிட்டார். எதுகுலன் "இது என்னடா பாடு; பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காய் முடிந்தது; மணிகார பாரிஜாதனைப் பார்க்கவந்தால், இப்பெண்மணியின் பேச்சைக்கேட்டு, இராஜத்துரோகியான ஒரு உத்தியோகஸ்தனிடம் வந்து சிக்கிக்கொண்டோமே! இவனோ வெகு கர்வம் கொண்டவன்போல் தோன்றுகின்றது. அப்பெண் சொல்லியும் என்னை கவனிக்கவில்லையே" என்று எண்ணிக்கொண்டு தன்னை அவமரியாதை செய்ததற்காகக் கோபம் ஒரு புறம் மூள, கண் முகமெல்லாம் சிவந்து பசியோடு வருந்தும் சிங்கம்போல் விளங்கினான். நல்லவேளையாய் அப்பிரபு இன்னும் கொஞ்சநேரம் ஒரு கடிதத்தைக் குறிப்பாய்ப் படித்துக்கொண்டே இருந்துவிட்டார். எதுகுலன் பக்கம் திரும்பவேயில்லை. எதுகுலனும் அதற்குள் தன்னிலைமையை அறிவானாயினான். தான் உக்ர நரசிம்மன் வம்சத்தவன் என்று சொல்லிக்கொள்ளாமல் இப்பொழுது வனபால அமிர்தேசன் பேரனாய் இருப்பது தனக்கே ஞாபகம் வந்தது. "வனபாலர்களுக்குப் பிரபுக்கள் என்ன மரியாதை செய்வார்களோ அவ்வளவுதானே நான் இப்பொழுது எதிர்பார்க்கலாம்" என்று தன் மனதைத் தேற்றிக் கொண்டான். ஆனால் கோபக் குறிகள் முற்றும் அவன் முகத்திலிருந்து நீங்கவில்லை. வாயை மூடிக்கொண்டு சும்மா நின்றான்.

கடைசியாய் அவ்வோலையைப் படித்து முடித்ததும் அப்பிரபு எதுகுலனைத் திரும்பிப் பார்த்து என்ன, அப்பனே வேலை உனக்கு இவ்விடத்தில்?' என்று கேட்டார்.

"எங்கள் சொந்தக் காரியமாய் மணிகாரர் பாரிஜாதனண்டை வந்தேன். தங்களிடம் ஒரு வேலையுமில்லை. அவரைப் பார்த்துப் போகும்போது அவரிடமிருந்து இரண்டு நாய்க் குட்டிகள் வாங்கிக் கொண்டு போய் என் பாட்டனாருக்குக் கொடுக்கவேண்டும். இதற்காகத் இங்கு வந்தேன்" என்றான்.

'உன் பாட்டனார் பெயர் என்ன?"

"வனபால அமிர்தேசர்."

"அமிர்தேசனா?" என்று சொல்லிக்கொண்டே ஒரு பெரிய கடிதத்தைக் கையில் எடுத்துக் குறிப்பாய்த் தேடிப் பார்த்தார். "அமிர்தேசன் துங்கபத்திர வாஸி, வனபாலன், கருமலை நகரம் ஓகோ! நரசிம்ம மல்ல வீரனிடத்தில் பல நாள் இருந்துவிட்டு வனபாலன் ஆனவன்—அப்படியானால் ஏன் உன் பாட்டனார் என்னை இன்னும் வந்து பார்க்கவில்லை?" என்று கேட்டார் பிரபு.

"உம்மிடம் என்னத்துக்கு ஐயா என் பாட்டனார் வரவேண்டும்?"

"பிள்ளாய்! இவ்வனாந்தரங்களும், இத்தேசமும், இராஜாங்கமும், தைலப்ப சக்ரவர்த்தியுடையதல்ல இனிமேல்; விஜ்ஜல முக்கிய புருஷர் முன்னின்று நடத்தும் குடியரசைச் சேர்ந்துவிட்டது. இவைகளெல்லாம் உனக்குத் தெரியுமா சங்கதி? இப்புறத்தில் வேலை செய்யும் ஒவ்வொரு உத்தியோகஸ்தனும், ஒன்று குடியரசுக்கு உட்பட்டு உழைக்க வேண்டும்; இல்லையேல் வேலையை விட்டு ஓடிப் போகவேண்டும். இந்த விவரத்தை நான் ஒவ்வொரு உத்தியோகஸ்தனுக்கும் சங்கதி சொல்லியனுப்பியிருக்க உன் பாட்டன் மட்டும், ஏன் மகனே, இன்னும் இங்கு வந்து தன் இஷ்டத்தை எனக்குத் தெரியப்படுத்தவில்லை?"

"என் பாட்டனுக்கு இந்த நிமிஷம் வரையில் இவ்விஷயத்தை ஒருவரும் வந்து சொல்லவில்லை, ஐயா! அவர் அரசனிடத்தில் உத்தியோகத்தில் அமர்ந்து வேலை செய்து வந்தவர். 2, 3, வருஷங்களாக அவருக்கு வரவேண்டிய சம்பளங்கள் வரவில்லை. பரம்பரையாய் அவர் முன்னோர்கள் குடியிருந்த குடிசையில் இருந்து கொண்டு காலம் கழித்து வருகின்றார்.

"அது இருக்கட்டும் பிள்ளாய்; நீ உன் பாட்டனிடம் குடியிருக்கிறாயா? அல்லது எங்கேயாவது தனியாய் இருக்கிறாயா?"

"ஒரு வருஷகாலமாய் அவருடன் இருக்கின்றேன்."

"நல்லது, இரண்டு வருஷகாலமாய் அவருக்கு சம்பளம் முதலியன வரவில்லை என்றாயே, எப்படியப்பா வயிறுவளர்க்கிறார் அவர் வழியென்ன சொல்லப்பா?"

"மற்ற வனபாலர்க்கு என்ன வழியோ அதே வழிதான், பின்னை என்ன இருக்கின்றது? என்றான் தைரியமாக.

"வெகு சாமர்த்தியமாய்ப் பேசுகிறாய் மகனே!! உன் பாட்டனைப் பற்றி எனக்கும் கொஞ்சமாவது தெரியும் தம்பி! அவர் உழைத்தது

நரசிம்ம மல்ல வீரனிடத்திலல்லவா? இன்னுமொரு கேள்வி இப்பொழுது. நீ இரண்டு நாய்க் குட்டிகள் வேண்டுமென்றாயே, அவை என்னத்திற்கு?"

"தெரியாதா? வேட்டையாடத்தான்!!"

"ஆகவே நீங்கள் இப்பொழுது கூட வேட்டையாடுகிறீர்கள் அல்லவா?" என்று கேட்டார்.

"உமக்கு பதில் சொல்ல எனக்கு இஷ்டமில்லை, முதலாவது நான் உமது கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லி தண்டனைக்கு உட்படுவதற்கு இங்கு வரவில்லை. இரண்டாவது, இக்கேள்விகள் கேட்க உமக்கு என்ன அதிகாரம் இருக்கின்றது? அதைச் சொல்லுமையா முன்னால்" என்று கேட்டான் எதுகுல திலகன்.

"சிறு பிள்ளாய் எனக்கு அதிகாரம் உண்டா இல்லையா என்பது தெரிய வேண்டுமானால், இதோ இருக்கின்றது பார்வ! அதிகப் பிரஸங்கி,—இவ்வார்த்தை எதுகுலன் காதில் பட்டதும், கண் சிவந்து, உதடுதுடித்துக் கைகால் பதறின—இதோ பார் என் அதிகார பத்திரம். என்னை இப்பிராந்தியத்துக்குப் பிரதி நிதியாய் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். நான் இந்த நாட்டுக்கு எஜமானனாகவிருந்து வரி வசூல் செய்து இவ்வனுந்தரங்களையும் மேல் பார்வை பார்த்துக் கொள்ளவேண்டியது. உனக்கோ எழுத்து வாசனையிராது, எப்படி படிக்கப் போகிறாய் இப்பத்திரத்தை? நான் சொல்வதை நம்பி சும்மாவிரு" என்றான் கொஞ்சம் கடுத்த குரலோடு. பத்திரத்தை அப்பிரபு கீழே வைத்ததும், அவர் நாற்காலியிடம் நெருங்கி வாய்திறந்து பேசாமல் ஓலையைக் கையில் எடுத்துக் கொண்டு வாசித்தான். வாசித்து முடிந்ததும் "ஆம்! நீர் சொல்வது சரிதான்!! நீர்தான் இப்பிராந்தியத்துக்கு எஜமானன் என்று வைத்துக் கொள்வோம். இருப்பினும் தேதி தனுர் மாதம் யிருப்பதே யல்லவா போட்டிருக்கின்றது! இன்றைக்கு 14, 15 நாள்தானே ஆகின்றது!! என்று சொல்லிக்கொண்டே அப்பத்திரத்தை ஊஞ்சல் பலகையின் மீது வைத்தான்.

"அதனால் என்ன? 14 நாள் ஆனால் என்ன; 15 நாள் தான் ஆனால் என்ன? அதில் ஒரு வித்தியாசமும் காணோமே! என்று சற்று ஆச்சரியத்துடன் எதுகுலனைப் பார்த்துக்கொண்டே சொன்னார் அப்பிரபு.

"ஏன் அதில் எவ்வளவோ விசேஷம் இருக்கின்றது. என் பாட்டனார் அமிர்தேசருக்கு வாயுவினால் உடம்பெல்லாம் பிடிப்புண்டு. இந்த 2, 3 மாதமாய்ப் படுத்த படுக்கையில் இருக்கின்றார். இச்சமயத்தில் அவர் மானையாவது மிருகத்தையாவது வேட்டையாடக் கூடுமா இப்பொழுது

குடியரசு, இராஜ்யத்தையெல்லாம் கைக்கொண்டதானால், அப்படிச் செய்யும் வரையில் இவ்வனமெல்லாம் அரசனுடையதேயல்லவா? இப்பொழுது வேண்டுமானால் உங்களுடையது என்று சொல்லிக்கொள்ளுங்கள்; யார் வேண்டாம் என்கிறார்கள். ஆகவே தனுர்மாசத்துக்கு முன் வேட்டையாடின குற்றத்திற்கு என் பாட்டனார் சக்ரவர்த்திக்குத்தான் பதில் சொல்லவேண்டுமே ஒழிய உங்களுக்கு பதில் சொல்லவேண்டிய அவசியம் என்ன விருக்கின்றது என்று கேட்டான்.

"இந்த ஏட்டில் உன் பாட்டனார் இராஜவிசுவாசி யென்று எழுதாமல் இருந்தபோதிலும், இப்பொழுது நீ பேசும் வார்த்தைகளில் இருந்து உன் பாட்டனார் எக்கக்ஷியைச் சேர்ந்தவர் என்றும், உன்னை எவ்விதம் வளர்த்து வந்து இருக்கின்றார் என்றும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது."

ஐயா பாலூட்டிய வீட்டுக்குப்பகை நினைக்கலாமா? உப்பும் சோறும் உண்டுவிட்டு துரோகம் செய்வது சாத்தியமா? அமிர்தேசனும், அவன் தகப்பனும், நரசிம்மமல்லர் வீட்டிலேயே வேலை செய்து வந்தார்கள்: அவ்வீரரிடத்திலேயே பலகாலம் சிப்பாய்களாய் இருந்தார்கள்; வனபரிபாலத்துவம் கிடைத்ததும் நரசிம்மகுலத்தார் தயவினாலேயே!! அப்படியிருக்க நான் அமிர்தேசனுடைய இராஜவிச்வாசத்தைச் சிலாகித்துப் பேசுவதில் என்ன தப்பு? என் பாட்டனாரும் நரசிம்மமல்லருக்கு விரோதமாய் எப்பொழுதும் பேசவேமாட்டார், என்றான் எதுகுலன் உற்சாகத்துடன்.

"பிள்ளாய் உனக்கு இடமறிந்து பேசத்தெரியாவிடினும் நன்றிமறவாமல் பேசுகிறாய். உக்ரநரசிம்மன் வீரநரசிம்மன் இவர்கள் வீராதிவீரர்கள்; அவர்களுடைய இராஜபக்தியையும் நன்றியறிவையும் நான் மெச்சியபோதிலும், அவருடைய பக்தி மூடபக்தியே ஒழியவேறில்லை. நீங்கள் எல்லாரும் குடியரசுக்கு எதிராய் இருப்பது தெரிந்தும் உங்களுக்கு என்னிடத்தில் வேலை கொடுப்பது என் அந்தஸ்துக்கும் என் யோக்கியதைக்கும் குறைவு——ஆனால் நீ உன் இளம்பிராயத்தில் எங்கு வளர்ந்தாய்" என்று கேட்டார் சற்றே யோசனை பண்ணி.

"ஐயா நான் மாளிகையில் எஜமானன் குழந்தைகளுடன் வளர்ந்தேன்."

"அங்கேயே படிக்கக் கற்றுக்கொண்டனையோ?" என்று மறுபடியும் கேட்டார்.

"அலைந்து திரிய இஷ்டமின்றி வீட்டில் இருக்கத்தோன்றிய பொழுதில் உபாத்தியாயரும் நேருவாரானால் ஏதோ கொஞ்சம் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொள்வது வழக்கம்." என்றான் நிதானமாக."

"மாளிகைத்தீப்பற்றியபோது எங்கிருந்தாய் ?

"ஐயா அப்பொழுது நான் குடிசையில் இருந்தேன்" என்றான் பல்லைக்கடித்துக்கொண்டு, தேகமெல்லாம் கோபத்தால் பதைபதைக்க !!

"பிள்ளாய் உனக்குக்கோபம் மூளுவது தர்மமே ; நாங்களும் அக்காரியத்தைக் கெட்டதென்றே தீர்மானித்து அவ்விதம் செய்தவர்களைத் தண்டித்தோம்" என்றான் பிரபு, வாடினமுகத்துடன். எதுகுலனுக்கு அதைப்பார்த்துக்கொஞ்சம் கோபம் தணிந்தது. சிறிதுநேரம் பொறுத்து "ஐயா நான் பாரிஜாதனைத் தேடிவந்த காரியம் வீணாயிற்று. இனி நாய்களை வைத்துக்கொண்டு நாங்கள் என்ன செய்யப்போகிறோம் ?"

"ஏன் ?——"

"ஏனெனில் நீங்களோ வனமெல்லாம் உங்களுடையதென்கிறீர்கள். நாங்கள் அவ்வனங்களில் வேட்டையாடினால் உங்கள் அபிப்பிராயப்படி குற்றவாளிகளேயல்லவா ?" என்று கேட்டான்.

"ஆம் ! ஆம் !! சிறுபிள்ளையானாலும் நீ சிறந்த புத்திசாலி ! நான் சொல்லவேண்டியதை நீயே சொல்லிவிட்டாய்" என்றார் பிரபு.

"ஐயா நீங்களோ எங்களுக்கு வேலை கொடுக்கமுடியாதென்று சொல்லிவிட்டீர்கள் ! இனிமேல் நாங்கள் முன்னிலும் பதின்மடங்கு அதிகமாய் இராஜவிசுவாசிகளாய் இருப்பதற்குத் தடையுமுண்டோ ? வேலையிலிருந்து தள்ளப்பட்டவன் தனக்குவேண்டிய சாமான்களை வனத்திலிருந்து திருடிக்கொள்ளுகிறான் : அப்பொழுது என்ன செய்வீர்கள் ?" என்று கேட்டான் எதுகுலன்.

"உனக்கேதெரியுமல்லவா ? உங்கள் தைலப்பன் சட்டப்படியே தான் நாங்களும் தண்டனை விதிப்பது !! திருடனைக்கண்டு பிடித்தால் தண்டிக்கிறோம்——அவ்வளவேதான்——இனி எனக்கு வேலையிருக்கின்றது. அதோ சமையல் அறைப்புறம் போய் ஏதாவது சாப்பாடு கிடைத்தால் சாப்பிட்டுவிட்டு, பாரிஜாதன் வரும்வரையில் காத்திரு : உனக்குவேண்டிய உணவுகொடுப்பார்கள்" என்றார் பிரபு.

எதுகுலனுக்குத் தன்னைப்பார்த்து "சமையல் அறைக்குப்போய் ஏதாவது வாங்கிச்சாப்பிடு" என்று அவமரியாதையாய்ச் சொன்னது மிகவும் மனதைப்புண்படுத்திற்று ஆயினும் வேறுவிதியில்லாமல் சமையல் அறைக்குப்போனான்.

அழகேசன்.

முன்னொரு காலத்தில் அளகாபுரி என்னுமோர் பட்டணமுண்டு. அப்பட்டணத்தில் நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்துநான்கு கலைஞானம், தொண்ணூற்றாறு தத்துவம், பதினெண்புராணம் ஆகிய இவைகளைத் தெளிவரக் கற்றுணர்ந்து மநுநீதி தவறாமல் தன்னுயிரைப் போல் மன்னுயிர்களையும் பாது காத்து, குடிகளிடம் ஆறிலொரு கடமை வாங்கி, தனது மந்திரிமார்களும், புடைசூழ, கொலுவிலமர்ந்து, ஐம்பத்தைந்து தேசங்கட்கும் அதிபதியாய் நின்று, ராஜ்யபரி பாலனம் செய்து வருகின்ற ஜயசீலன் என்னும் சக்கரவர்த்திக்கு லீலாவதி யென்றொரு மனைவி யுண்டு.

இச்சக்கரவர்த்தியார் இருபது வருஷகால பரியந்தம், அரசுபுரிந்தும், இவர்கட்கு இதுகால பரியந்தம், ஒரு குழந்தையேனும் பிறக்கவில்லை இதைப்பற்றி சக்கரவர்த்தியாருக்குத் துக்கம் மேன்மேலாய் விளைந்து, தமது மந்திரியாகிய மதிவதனனை நோக்கி, கேளாயப்பா எனது மனதிற்குகந்த, மதிவதனரே, கடவுளானவர் எனக்கு சகல வைபவங்களையும் கொடுத்து, புத்திர பாக்கியமொன்று தாரமலிருப்பதனால், நான் பாபியோ, அல்லது முன் செய்த தீவினையின் கூற்றோ, அல்லது என் தேவியாகிய லீலாவதி, யாதேனுந் துன்பம் புரிந்திருப்பாளோ, என்னமோ, எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை.

ஆகையால் இதன் காரணத்தைக் கண்டுணர்ந்து கூறவேண்டுமென்று கூறிய சக்கரவர்த்தியின் மொழியைக் கேட்ட மதிவதனர் என்னும் மந்திரியானவர் மிகவும் வணக்கத்துடன், கேளும், ராஜாதிராஜா பரமேஸ்வரா, தயை, தாக்ஷண்யம், அறம், நெறி முதலாகிய சத்தியத்திற்கு, வித்தாயுள்ளவர் நீரேயன்றி மற்றவர் ஒருவருமில்லை. ஆதலால் எங்கும் சம்பிரமமாய் அன்னதானங்கள் செய்யும்; எல்லோரையும் வரவழைத்து ஒவ்வொருவருக்கும் வேண்டிய வஸ்திரங்களைத்தாரும், வருகிறவர்களிடத்தில் தயையுடன் பேசும், நீர் செய்யும் நற்காரியங்களை யெல்லாம் அவர்களுக்கு காண்பியும், அவர்களுடைய பிரார்த்தனை மூலமாய் உமதுள்ளத்தில் நிரம்பி யிருக்கும் விருப்பம் சம்பூர்ணமடையுமென்று உரைத்துவிட்டு தன் தொழிலில்தான் பிரவேசித்திருந்தனர்.

சக்கரவர்த்தியானவர் மந்திரியின் அபிப்பிராயத்தை ஒப்புக்கொண்டு அவன் சொல்லியவண்ணம் செய்யும்படி கட்டளையிட்டார். மதியிற் சிறந்த மந்திரியானவர் தான் கருதியபடி தானதருமங்கள் செய்வதற்கு கட்டடமொன்று பட்டணத்தில் அமைக்க அரசனிடத்தில் விடைபெற்று, சிற்பி வேலையில் தேர்ந்தவர்களை வரவழைத்து கட்டடத்துக்கு வேண்டிய

சாமான்களையெல்லாம் சேகரம் செய்து அன்னதான பிரதிஷ்டைக்கு பிரத்தியேகமாய் கட்டடம் ஒன்று திட்டஞ் செய்யச் சொன்னான். கட்டடம் கட்டி நிறைவேறிய பின்னர் அன்னதானம் செய்வித்தான். ஒவ்வொரு தினமும் எளியவர்களும், பாட்டைசாரிகளும், இந்த தருமத்தைப் பெற்றுக்கொள்ள வந்தார்கள்..

இவ்விதமாகச் சத்திரம் கட்டுவித்து, தானதருமங்கள் செய்துவரும் நாளில், ஒரு நாள் விபூதி, உத்திராக்ஷம், காவி, தண்டுகமண்டலம், முதலாகிய சிவபூஷணங்களணிந்த ஒரு பெரியவர் அளகாபுரிக்கு வந்து ஜயசீலரைக்கண்டு ஆசிகூறி நிற்கும்போது, சக்கரவர்த்தியார் கொலுவை விட்டிறங்கி மந்திரிமார்களுடன் வந்து பெரியவருடைய பாதத்தினடியில் வீழ்ந்து, கண்களில் ஆனந்த நீர் பெருக, கைகூப்பி நின்று, எம்பெருமானுடைய நித்யவிபூதி கண்டனுபவிக்க என்ன தவஞ்செய்தேனோ என்று பணிந்தெழுந்து, பெரியவரைப் பார்த்து, ஓ! சுவாமி, நீர் யாரோ எனக்குத் தெரியவாராது. சகல லோகநாயகனாகிய ஜெகதீசனைப்போல் காண்கின்றீர். அடியேனுக்கு சகல சம்பத்தும் கொடுத்து பாக்கியமொன்றருள் செய்யாதிருப்பது நன்றல்லவே. அடிமையின் குற்றத்தைப் பொறுத்து, புத்திர சந்தான மளிக்கவேண்டும் நாதா என்று வேண்டினார்.

உடனே அப்பெரியவர் இரக்க முடையவராகி அரசனது குணங்களையும் நல்லொழுக்கத்தையும் கண்டு மனதில் ஆனந்தப்பரவசராய் தன்கரத்திலிருந்த மாங்கனி யொன்றை மன்னனிடத்தில் கொடுத்து உனது பட்டத்தரசியை உண்ணும்படி செய்யவேண்டுமென்று சொல்லி மறைந்துவிட்டார். அரசன் பெரியவரைக்காணாது மிகவும் வியப்புற்று, தனது கரத்திலிருந்த மாங்கனியோடு அந்தப்புரம் சென்று, தனது பட்டத்து தேவியாகிய லீலாவதியிடத்தில் கொடுத்து, பெரியவர் மொழிந்த வசனங்களை ஓதி, கனியைப் புசிக்கச்செய்தான். அவள் சிலகாலஞ்சென்றபின் கர்ப்பிணியானாள். அரசி கர்ப்பவதியான சேதி உடனே அரண்மனையிலும் பட்டணமெங்கும் பரவியமாத்திரத்தில் யாவரும் சந்தோஷப்பட்டார்கள். அரசிக்கு ஒன்பதாமாதம் கடந்து, பத்தாமாதம் பூர்த்தியாகி சூரியனைப் போன்ற பிரகாசமும் அழகு சௌந்தர்யமுமுள்ள ஒரு ஆண்குழந்தை ஜனித்தது.

இது சங்கதி அரசனறிந்து மிகவும் சந்தோஷப்பட்டு தன்தேயம் முழுமையும் எளியோர்களுக்கும், சைனியத்துள்ளோருக்கும், வேண்டிய பொருள்களும, நாமம் கொடுத்து, 32, தர்மமும் குறைவற நடத்தி, அட்சணமே பிள்ளையின் சாதகத்தைக் குறிப்பதற்காக ஜோதிடர்களை வரவழைத்தான். மதிநுட்பத்திற் சிறந்த ஜோதிடவல்லவர்கள் அதிதுரிதமாய் வந்து குழந்தை பிறந்த லக்கினத்தை ஆராய்ந்து, அவன் வயதைக்

கணக்கிட்டுப் பார்த்ததில், 56 தேயங்களையும் ஜெயித்து ஏகச் சக்ராதிபதியாய் அரசாளுவானென்றும், வேறுயாதொரு குறைவுமில்லையென்றும், இக்குழந்தைக்கு அழகேசன் என்று நாமகரணமிடவேண்டுமென்றும் சொல்லி, அரசனால் வேண்டிய வெகுமதிகள் பெற்று ஏகினர்.

இராஜ குமாரனுக்கு 5 வயதான பின்பு பெருமை மிகுந்த அவன் தந்தை அவனுக்கு வித்தியாரம்பஞ் செய்விக்க, மனதுடையவராய், அறிவும், கலைஞானங்களும், நிறைந்தவருமாகிய உபாத்தியாயரிருக்கும் பள்ளியில் வைத்து, கல்விகற்கும்படி ஏற்படுத்தினார். அரசகுமாரன் சிலநாளையில் யானையேற்றம் குதிரையேற்றம், வில்வித்தை முதலிய பயிற்சிகளிலும் தன் ராஜாங்கத்துக் குரிய கல்விகளிலும் ப்ரபலமுடையவனானான். ஏழு வயதானதும் அழகேசன் என்பவன் தனது சிநேகிதனாகிய குணசீலனோடு, அடிக்கடி வேகமுடைய குதிரையேறி, பட்டணத்தை விட்டகன்று, விசாலமுடைய ஒருவனத்தில் வேட்டையாடி ஏகோபித்து விளையாடி மகிழ்ந்திருப்பார்கள். இவிதமாக பத்து வருஷங்கள் கடந்தபின் நமது கதாநாயகனாகிய அழகேசனுக்கு பதினேழாவது வயதில் முடிசூட்டும் வைபவம் நடந்தது.

இது நடந்த சுமார் 6 மாதகாலமான பிற்பாடு, ஜயசீலர் பரமகதியடைந்தார். யாவரும் இதைப்பற்றி மிகவும் விசனப்பட்டார்கள். அழகேசன் தனது தந்தை இறந்ததைப்பற்றி மிகவும் விசனப்பட்டாலும் தனது ராஜ்யத்தில் ஒரு குறைவும் வாராமல்படிக்கு பாதுகாத்து ஜனங்களுக்கு வேண்டிய பொது நன்மைகளும் செய்துவந்தார். இவருக்கு அரசுபட்டம் உண்டானவுடன் பல தொல்லைகளாலும் தனது தகப்பனார் இறந்த விசனத்தாலும், தனது சிநேகிதனாகிய குணசிலனை மறந்துவிட்டார்.

இது நிற்க, ஒரு நாள் அழகேசன் வேட்டை மேல் விருப்புற்று தனது சைனியங்களுடன் புறப்பட்டான். வழக்கம் போல் வேடர்கள் பல திசையில் அங்கு மிங்கும், ஓடவும் தூதர்கள் ஏகோபித்து முன்னேறிச் செல்லவும், பறைகளொலிக்கவும், ஊதை கொம்புகள் ஆரவாரிக்கவும், அரசன் வேட்டையாடி காடுகள் தோறும் சென்று வருகையில் எதிரே ஒரு அழகிய மான் நிற்கக்கண்டு, அதை பிடிக்க ஆவல்கொண்டு குதிரையை நடத்தினார். ஆனால் அது நமது அரசர்கைக்கு அகப்படாமல் துள்ளிப்பாய்ந்து நெடுந்தூரம் போய் மறைந்து விட்டது. இதனைக்கண்ட அரசன் மிகவும் வியப்புற்று, நிராசையுள்ள, ஆரணயத்தில் தனியாக நின்று, தாகத்தால் பிடிப்பட்டு, மிகவும் சோர்ந்து, தனது சைனியங்களைப் பார்த்தான். ஒருவரையும் காணோம். பக்கத்திலும் தண்ணீரைத் தேடி அலைந்து கிடையாமல் மிகவும் வியாகூலத்தோடு களைப்பினால் சோர்ந்து மரத்தடியில் மூர்ச்சையாய் விழுந்தான்.

இது நிற்க, அரசனது சைனியங்களும் வேடுவர்களும் தமது அரசனை அவ்வாரணிய முழுதும் தேடி, காணாது மிகவும் வியாகூலத்தோடு ராஜ்யத்துக்கு திரும்பினார்கள். இவ்விதமிருக்க, நமது குணசீலன் ஆரண்ய மார்க்கத்தில் வேட்டையாடி திரும்பி வரும்வழியில் மரத்தடியில் அழகு சௌந்தர்யமுள்ள ஒரு புருஷன் விழுந்து கிடப்பதையும் குதிரை ஒன்று அவ்வாரண்யத்தில் மேய்ந்து கொண்டிருப்பதையும் பார்த்து ஆச்சரியமுற்று விரைந்து பக்கத்தில் வந்து யுவகனை உன்னிப் பார்த்து தனது சிநேகிதனாகிய அழகேசனென்று தெரிந்து மிகவும் விசனமுற்று தூக்கி எடுத்து மடியில் வைத்து சோபகலை யாற்றி, தனதிடமிருந்த எலுமிச்சங்கனிகளை அறுத்துக் கொடுத்து, தாகத்தை தணித்தான். தாகம் தணிந்ததும் தனது சிநேகிதனாகிய குணசீலனைக் கண்டு, மிகவும் வியப்புற்று இதுசமயம் என்னைக்காத்து ரட்சித்த உனக்கு என்ன உபகாரம் செய்வேனென்று சொல்லி, இருவரும் அளகாபுரியை நோக்கிப் புறப்பட்டார்கள். புறப்பட்டு வரும்போது, தொலைதூரம் வந்தகளைப்பினாலும், இருள் சமீபித்தபடியாலும், அவ்வாரணயத்தினோர் மரத்தடியில் படுத்து நித்திரை புரிந்தார்கள். மறுநாள் காலை அழகேசன் நித்திரையினின்றும் எழுந்து தனது பக்கத்தில்படுத்திருந்த சிநேகிதனாகிய குணசீலனைக் காணாது விசனமுற்று அவ்வாரணயத்தில் பல இடங்களிலும் தேடி அகப்படாது வியாகூலத்துடன் திரும்பிவரும் வழியில் ஒரு குடிசையினோரமாக கரத்தில் விலங்குதரித்த ஒரு பெண்மணி குந்திக் கொண்டிருந்தாள்.

வடிவினில் இரதிமாதினையும் லட்சுமியையும் பழிக்கத் தகுந்த ரூபலாவண்யமுற்றிருக்கின்ற பெண்ணை அழகேசன் கண்டு, "எ? மாதுசிரோன்மணியே நீ யார்? உன் கரத்தில் விலங்கு வந்த காரணம் என்ன! உன் ஊர், பேர் யாது?" என்று வினவ, "சுவாமி நீர் யாரோ, யானறியேனாகையால், நீர் இன்னாரென்று தெரிவிப்பீராகில் அதன் பின்பு என்விருத்தாந்தத்தை" உரைக்கின்றேனென்றாள். மாது இவ்விதம் கூறியதைக் கேட்ட அழகேசன் அப்பெண்ணைப்பார்த்து, கேளாய் மாதரசே, அளகாபுரி யென்னும் பட்டணத்துஅரசன், என் நாமதேயம் அழகேசன், இவ்வாரண்யத்தில் வேட்டையாடிப்புறப்பட்டு திரும்பிவரும் சமயம் உன்னைக்கண்டேன். ஆதலால் இனியாதொன்றுக்கும் பயப்படாமல் உனது சரித்திரத்தை தெரிவிப்பாய் என்று கூறினான்.

அழகேசனுடைய முகத்தைப்பார்த்து நேரிழையாள் கூறுகின்றாள். "கேளும் சுவாமி சக்கரவர்த்தியாரே, நான் சண்புகாபுரமென்னும் பட்டணத்தை யாளப்பட்ட சந்திரதாச மகாராஜாவின் புத்திரி. என் நாமதேயம் மதனவல்லி என்று கூறுவார்கள். என் தந்தையானவர்

தினந்தோறும் வேட்டைக்குப்போய் வருவது வழக்கம். ஒரு நாள் வேட்டையாடப் போனவர் வழக்கம்போல் திரும்பிவாராததால், அன்று சாயரக்ஷை உப்பரிகையின்பேரில் தலைகோறிக்கொண்டிருந்த என்னை, ஒரு ராக்ஷதன் எடுத்துவந்து என் கரத்தினில் விலங்கைப் பூட்டிவிட்டு, 4-நாளைக்கொருதரம், என் கரத்தின் விலங்கைக்கழட்டித் தன்னை மணம் புரியும்படி மேன்மேலும் வேதனைவிளைவிக்கின்றான். மேலும் என்னைத் துன்பப்படுத்தி தூஷணமான சொற்களைப்பேசிவிட்டு, பின்பு மான் ரூபங் கொண்டுபோவது வழக்கமாயிருக்கிறானென்றும், ராக்ஷதன் வருவதற்குள் என்னை என் தகப்பனார் தேசத்திற்காவது அல்லது தங்கள் தேசத்திற்காவது கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்று வணக்கத்துடன் கேட்டாள்.

அழகேசன் மேற்கூறியவற்றைக் கேட்டு, சினமடைந்து அப்பெண்மணியைப்பார்த்து, கேளாய் மதனவல்லியே, நீ இனியாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். ராக்ஷதன் வந்தவுடன், அவனிடம் போராடி, ஜெயித்து உன்னை இட்டுக்கொண்டு போகிறேனென்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, அப்பெண்மணியை எடுத்துவந்த ராக்ஷதன் விரைவாய் ஓடிவந்தான். உடனே அழகேசன் மிகவும் தைரியமாய், நீ யார், இப்பெண்மணியார்? இதன் வாலாற்றை ஆதியோடந்தமாக உண்மையாய் தெரிவி. இல்லாதவரை என் கைவாளுக்கு உன்னை இறையாக்குவேனென்று கூறினான். இராக்ஷதனைக்கிட்டும்போது, அந்த அகோர கோர ரூபமுள்ள ராக்ஷதனுக்கு கோபம் பிறந்து கர்ச்சித்து பக்கத்திலிராநின்ற ஒரு மரத்தைப்பிடுங்கி, ஓடிவரும்போது அரசகுமாரன் நிதானித்து, தனது வல்லமையால் ராக்ஷதனுடைய கையைவெட்டி, மயிரைப்பிடித்து அவனது சிரசை வெட்டும்போது பெரிய சத்தத்துடன் கீழேவிழுந்து ஆவியை ஒழித்தான்.

ராக்ஷதன் மரணமடைந்ததும் அழகேசன் மதனவல்லியை நோக்கி, "கேளாய்பெண்மணியே. இந்தப்பயல் ஒழிந்துவிட்டான். இனி நமக்குயாதொருதீங்கும் இல்லை. ஆகையால் உன்னை உன்தேசத்தில் கொண்டுபோய் சேர்த்துவிடுகிறேன்" என்றான். நான் சண்புகாபுரத்தரசன்குமார்த்தியாய்ப் பிறந்து அநேக துன்பங்களனுபவித்து, இது பரியந்தம் எனது கற்புக்கு பின்னம் வாராமல்காத்து, இப்போது தங்களிடம் அகப்பட்டமையால் நீரே எனக்கு நாயகனாகுமே தவிர, மற்றவரை விரும்பேன் என்று, மதனவல்லி ஓதிய சேதியை அழகேசன் கேட்டு, அப்பெண்ணுடன் அளகாபுரிக்குப் புறப்பட்டுப்போனான். அவ்விடம்போய் சேர்ந்து, தனது மந்திரிமார்களுக்கும், பிரதானிகளுக்கும், தான் வேட்டைக்குபோய் வந்ததினம் முதல் நடந்த சங்கதிகளை விபரமாகவும் குணசீலனைக்காணாது போன சங்கதியையும் குறித்து ஆதியோடந்தமாகச்சொல்லி தான்போன நாள்

முதலாக ராஜ்யத்தில் நடந்த காரியங்களை மந்திரியால் தெரிந்துகொண்டு தனது சிம்மாதனத்தில் வீற்றிருந்து அரசுபுரிந்துவந்தார்.

உடனே சண்புகபுரத்தரசனுக்கு அவன் புத்திரி க்ஷேமமாய் தன் இராஜ்யத்திலிருப்பதாக தெரியப்படுத்தினான். இது நிற்க, ஒரு வாரம் கழிந்து, குணசீலனைக்காவலாளிகள் கண்டு கூட்டிப்போய் அரசனிடம் விட்டார்கள். அழகேசன் தனது சிநேகிதனாகிய குணசீலனைக்கண்டு மிகவும் சந்தோஷத்தோடு கட்டி அணைத்து முத்தமிட்டு ஆரம்பத்தில் எனது பக்கத்தில் துயின்ற நீ, இதுகால பரியந்தம் எங்கு சென்றாய் என்று வினவினான்.

குணசீலன் அரசனைநோக்கி, எனதன்புக்குரிய சிநேகிதனே, நானனுபவித்ததை யெல்லாம் சொல்லப்போகிறதை கவனத்துடன் கேட்பாயாக என்று உரைக்கலுற்றான். உனது பக்கத்தில் நித்திரைபுரிந்த எனக்கு நித்திரைபிடியாமல், எழுந்து அவ்வாரண்யத்தைச் சுற்றிவரும்போது, எதிரில் ஒரு திருக்குளம் தோன்ற தாகவிடாய் தீர்த்துக்கொள்ளச் சென்றேன். அத்திருக்குளத்தில் ஒரு இரகசியவழி தென்பட்டது. அதனுள்போய்ப் பார்த்ததில், காளிகோவிலொன்றும், அக்கோவிலுள் "பூரண சந்திர உதயமோ" சந்தான் பானுவையுமொ சங்கரிபோ "அல்லது விண்ணுலகத்தார் புகழும் மேனகையோ, என யாவரும் அதிசயிக்கும்படியாக சுமார் 18வயதுள்ள பெண் ஒருவள் தனது தாதிகளோடு கூடி, வீணை வாசிக்கக் கண்டு, மோகமுற்று, அறிவு தடுமாறி, தாதியொருவளை சைகையால் அழைத்து, அவளை மணம் புரிய எனது எண்ணம் என்பதை அரசிக்கு தெரிவிக்கும்படி வேண்டினேன், அம்மாது என்னை அவ்விடமிருக்கும் ஒரு குளத்தில் முழுகிவரும்படி ஆஞ்ஞாபிக்க நான் அக்குளத்தில் முழுகினதும் உமது ராஜ்யத்திலிருக்கக்கண்டு மிகவும் ஆச்சர்யமுற்றிருந்தேன். அப்பொழுது உமது காவலாளிகள் என்னை, இங்கு கொண்டு வந்தார்களென்று சொல்லி முடித்தான்.

உடனே அரசன் எழுந்து அவ்வழியைக் காட்டும்படிக்கு நவில, உடனே இருவரும் மேற்சொன்ன கானகத்திற்கு சென்று, திருக்குளத்தின் இரகசிய வழியாக போனபோது அப்பெண் மணியானவள் அழகேசனைக்கண்டு அன்புற்று, தன் அறிவுகலங்கி நிற்கும்போது, அழகேசன் யுவதியைப் பார்த்து, பெண்ணே நீயார் உனது பெற்றோர் யாவர் என்று வினவ, அப்பெண்மணியானவள் அரசனைப்பார்த்து தானிருப்பது ஞானகலிங்கபுரமென்னும் பட்டணத்து அரசியென்றும், என் நாமதேயம் குணபூஷணியென்றும், இவ்விடம் உல்லாசமாய்வந்து போவதாகவும் சொல்லி, தங்களைப் பார்த்தவுடனே என்மனது தங்கள்பாற் சென்றுவிட்டது. ஆதலால் தாங்களே எனக்கு நாயகனென்று உரைத்து நமஸ்காரம் செய்து நின்ற

குணபூஷணியைப் பார்த்து, அழகேசன் கூறுகிறான். கேளும் மாதே, இவர் எனது ஆப்த நண்பர், இவர் உன்னைக் கண்டு பிரியப்பட்டபடியால், யாதொரு பதிலும் இயலாமல் இவரை உனது நாயகனாக கொள்ள வேண்டுமென்று உரைக்க, குணபூஷணி அக்கருத்துக்கு இசைந்ததை அறிந்த அழகேசன் தனது சிநேகிதனோடும், அரசியோடும் நாகலிங்கபுரம் போய், குணசீலனுக்கும் குணபூஷணிக்கும் விவாகம் அதிவிமரிசையாய் நடப்பித்து, ஷையார்களிடம் விடைபெற்று தனது பட்டணம் வந்து தாயார் லீலாவதியின் ஏற்பாட்டின்படி மதனவல்லியை மணஞ் செய்ய ஒரு மங்களதினம் குறிக்கப்பட்டு, குணசீலனுக்கும் மதனவல்லியின் பெற்றோர்களுக்கும் இன்னும் மற்ற அரசர்களுக்கும் அழைப்பு திருமுகங்கள் அனுப்பப்பட்டன. சூரியனும் நாணும்படி அரண்மனையை அலங்கரித்து பூதானம் கோதானம் யாவும் வழங்கப்பெற்று சகலஜனங்கள் கண்ணும் கருத்தும் கண்டு களிக்க அழகேசனுக்கும், மதனவல்லிக்கும் விவாகமகோற்சவத்தை அதிசம்பிரமாக நடத்தினர்.

மதனவல்லியின் பெற்றோர்கள் தனது குமார்த்தியைக்கண்டு சந்தோஷமுற்று தனது மருமகனாகிய அழகேசனுக்கு வேண்டிய சீதனங்கள், கொடுத்து பெண்ணையும் மாப்பிள்ளையையும் ஆசீர்வதித்து ஏகினர். சதிபதிகளாகிய மதனவல்லியும் அழகேசனும் பூவிற் பொருந்திய மணம்போல களங்கமற்ற நேசம்பூண்டவர்களாய், 56 தேயங்களையும் ஜெயித்து ஏகசக்கிராதிபதியாய் சிம்மாதனத்தில் வீற்றிருந்து, இனிதுசுகித்து வாழ்ந்திருந்தனர். சுபம்.

T. S. முருகநாதன்.

பூர்வீக இந்தியமாதர்கள்.

1. கார்க்கி:—பாமஹம் சரைப்போல் உலகமுழுவதும் சுற்றித்திரியும் கலியாண மில்லாதவர். பிரஹதாரண்ணிய உபநிஷத்தில் இவர் யாக்ஞவல்கியர் ஜனக மகாராஜனது சபையில் பசுக்களைக் கடத்தியபோது பஹிரங்கமாகக் கேள்விகேட்டவர் என்று சொல்லப்படுகிறது (இந்தக்கேள்விகளைப் பற்றி சமயம் வாய்ந்தபோது குறிப்பிடப்படும்).

2. மைத்திரேயி:—யாக்ஞவல்கியரின் பாரியைகளிலொருவர் பர்த்தாகாலஞ் நெருங்கிய பொழுது, தன் செல்வத்தில் பாதியை எடுத்துக்கொள்ளும்படி சொன்னதனால் மோக்ஷசாதன முண்டோ வென்று கேட்க, இல்லை என்று சொன்னதின்பேரில் அதன் வழியைக்கேட்டு மோக்ஷமடைந்தாள்.

3. சுலவ:—பிரதவ அரசன் குமாரி. தன்னைவிட வித்தையிலும், கற்பிலும் உயர்ந்தாரைப்பார்க்கக் கூடாமையால் கன்னிகையாகவே இரு

க்க நேர்ந்தது. பிறகு பரமஹம்சராகப்பெற்று இடங்கள்தோறும்சஞ்சரித்து பிரமானந்தத்தை யடைந்து வந்தார். ஜனகமகாராஜனது அவையைபடைந்து, ஒருகாலத்து அவருக்கு பிரமத்தை யடையு முபாயத்தையும், அரசுமுறைமையும் போதித்தார். அவரைப்பற்றி மகாபாரதத்தில்சாந்திபருவத்தில் பின்வருமாறு காணப்படுகிறது. சுலவ என்னும் கன்னிகையார் மற்றத் தன்னைப்போலொத்தசந்நியாசிகள் ஜனகமகாராஜனை மிகவும் சிலாகித்துப் பேசியதுகண்டு, அவரைப்பார்க்க ஆசையுடையவராகத் தனது ரூபத்தை மாற்றிக்கொண்டு யோகாப்பியாசத்தால் யௌவனமும் ரூபலாவண்ணியமுமுடையவளாக ஜனகனது சபையடைந்தகாலத்து மகாராஜன் வழிபட்டு ஆசனத்திருத்திவழிபட......

4 கலாவதி:—காசிராஜனது புத்திரி தூர்வாச முனிவரின் தொண்டர். ஸ்காந்தம் பிரமோத்தர காண்டத்தில் அதிக பாண்டித்தியமுடையவளென்று கூறப்படுகிறது.

5. வேதவதி:—குஷத்துவராஜனின் புத்திரியாய், மணமின்றி யோகாப்பியாசம் செய்துகொண்டு யோகாக்கினி மூலமாகமோக்ஷத்தை யடைந்தாள். வால்மீக ராமாயணம் உத்தரகாண்டம் 17வது சர்க்கத்தில் மேற்படியாரைப்பற்றிப் பின்வருமாறு சொல்லப்படுகிறது. “அங்கே அந்தக் கன்னிகை (வேதவதி)யை சடை மரவுரியுடனும் ரிஷியைப் போலவும் தேவர்களைப்போல சுந்தரமாகவும் கண்டார்.” அன்றியும் தேவிபாகவதம் ஒன்பதாவது ஸ்கந்தம் பதினேந்து பதினாறவது அத்தியாயங்களிலும் காணப்படுகிறது.

6. அம்பா:—மணமின்றி தபஸ் வினியாகவே இருந்தார். “அந்த அம்மணி கூட, ஆமகாராஜனே, யமுனைக்கரையை யடைந்து கடுந்தவம் புரிந்தவள்” என்று மகாபாரதம் உத்தியோகபருவம் நூற்றுத் தொண்ணூற்றேழாம் அத்தியாயத்தில் காணப்படுகிறது.

7, 8. வாயுனு, தாரணி:—பாகவதம் நான்காம் அத்தியாயம் முதல் சுலோகத்தில் இந்த இருசகோதரிகளும் கன்னிகா பிரும வாதினிகளாகவிருந்து யோகத்திலும், கல்விமூலமாகவும் சித்தியடைந்தவர்களென்று காணப்படுகிறது.

9. மதால்கர்:—கர்மயோகத்தில் சுவர்க்காராஜன் தேர்ச்சியடைந்தபோது அவன் தகப்பன் வானப் பிரஸ்தத்தையடைய விரும்பி மகனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வனத்திற்கு ஏகுங்கால், அவன் தாயாகிய மதால்கர் என்பவள் தன் புத்திரனிடத்தில் ஒரு மோதிரத்தைக் கொடுத்து “நீ சிநேகாது விலக்கிலிருந்தாவது திரவிய நஷ்டத்தாலாவது அபாயத்தாலாவது துக்கமடையும்படி நேரிட்டால், இம்மோதிரத்தை உடைத்துப் பார்ப்பா யாகில் இதில் அபூர்வமான திரவிய மிருக்கக்காண்பாய்” என்று சொல்லிக்கொடுத்தாள்.

22 DEC 1916 MADRAS

The Tamil Zenana & School Magazine.

மாதர் மனோரஞ்சினி.

“ எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் ”—ஔவையார்.

Vol. XVIII | Madras December 1916 | No. 1

புத்தகம் 18 | சென்னை : டிசம்பர்மீ, 1916ஹு | இலக்கம் 1

நமது துண்டுப் பத்திரிகை.

நமது பத்திரிகை இம்மாதம் முதல் சரியாக வெளிவர ஏற்பாடு செய்திருக்கிறோம். இது வரையிலும் நமது பத்திரிகை வெளிவராமலிருந்ததைப்பற்றி நாம் மிகவும் விசனப்படுகிறோம். ஆயினும் கூடிய சீக்கிரத்தில் இதை மறுபடியும் துவக்க பிரயத்தனம் செய்து வந்தோம். பேபர் விலையும் நமக்கு நேரிட்ட நஷ்டமும் அதிகமாயிருந்தமையால் அவ்விதம் பத்திரிகையை ஆரம்பிக்க முடியவில்லை.

* * *

மனந்தளராமல் திடங்கொண்டு பத்திரிகையை முன்னை விட இன்னும் அதிகச் சிறப்பாக நடத்தவேண்டுமென்று அவாவுடன் சில கனவான்களைப் பார்த்தோம்.

* * *

அவர்களில் கனம் ஜட்ஜி சேஷகிரிஅய்யர் அவர்களும், கனம் வக்கீல் ஆர். சட்கோபாசாரியாரவர்களும், ஆண்டிப்பட்டி ஜமீன்தாரரும், தமிழ் அபிமானியுமான மிஸ்டர் பெத்தாச்சி செட்டியாரவர்களும், மிஸ்டர் L. D. வெங்கிட்டராமய்ய ரவர்களும், கோயம்புத்தூர் மிஸ்டர் T. A இராமலிங்க செட்டியாரவர்களும், மிஸ்டர் எம். வி. மீனாக்ஷி சுந்தரமுதலியாரவர்களும் திரவிய சகாயம் செய்வதாக வாக்களித்தார்கள். இன்னும் சிலகனவான்கள் திரவிய உதவி செய்வதாகவும் வாக்களித்திருக்கிறார்கள்.

* * *

இவ்விதம் மேற்கூறிய கனவான்கள் உதவிசெய்ய முன் வந்தபடியால், நாம் மனோதைரியங்கொண்டு பத்திரிகையை முன்னைவிட இன்னும் நல்ல மாதிரியாக நடத்திவர ஏற்பாடுசெய்யலானோம்.

முன்போல சித்திரப் படங்களுள்ள கதைகளு மாதர்களுக்கு உபயோகமான விஷயங்களும், கல்விசம்பந்தமானவைகளும், பிரசுரிக்கப்படும். இப்பத்திரிகையை ஆரம்பித்த சமயத்தில் நாம் எழுதிய பிரகாரம் பெண்கல்விப்பயிற்சியே எமது கருத்தாகையால், பெண்கள் தங்கள் சகோதரிகள் க்ஷேமத்தின் பொருட்டு எழுதுபவைகளுக்கு இப்பத்திரிகையில் முதலிடங்கொடுப்போம்.

* * *

இப்பத்திரிகையால் நமது தேசத்துப்பெண்மணிகள் எள்ளளவேனும் கல்வியும் விவேகமும் அடைந்தார்களென்று ஏற்பட்டால் அதுவே எமக்கு பெரியபரிசு. இதுவரையினும் நமக்கு பற்பலவிஷயங்களினும் உதவி புரிந்து வந்த பத்திராதிபரவர்களுக்கும், கையொப்பநேயர்களுக்கும், அபிமானிகளுக்கும், நமது மனப்பூர்ண வந்தனத்தை அளிக்கின்றோம். சுபம்.

* * *

இப்பொழுது திருவல்லிக்கேணியில் நடைபெறும் ஸ்ரீசாரதா ஐக்கிய சங்கத்தில் ஜூலை மீ டாக்டர். முத்துலக்ஷ்மி அம்மாள் குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் விதம் என்ற விஷயத்தைப்பற்றி ஒரு உபந்நியாசம் செய்தார். அது இம்மாதப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அந்த வியாசம் ஸ்திரீகளுக்கு மிகவும் உபயோகமானது. நமது தேசத்தில் சிசு மரணமோ அதிகம். தாய் தந்தையர் அறிவின்மையால் பல தின்பண்டங்களைக் குழந்தைகளுக்குக்கொடுக்கிறார்கள். அவைகளால் குழந்தைகள் வியாதியடைந்து அவஸ்தைப்பட்டு மரணமடைகின்றன. டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாள் சொல்லியிருக்கும் மாதிரி தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு உணவு அளித்துவரின் குழந்தைகள் சுகஜீவனத்துடனிருக்கும். சிசுமரணம் குறையவும் ஏதுவுண்டு.

* * *

இந்தியாவில் பெண்களின் கல்விவிஷயமாக இந்தியா கவர்ன்மெண்டார் மாகாண கவர்ன்மெண்டார்களுக்கு ஒரு சுற்றுக்கடிதம் அனுப்பி அவர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்டிருந்தார்கள். அதற்கிணங்க சென்னை கவர்ன்மெண்டின் உத்தரவு பிரகாரம் கல்வியிலாகாத் தலைவர் ஒரு கான்பரன்ஸ் சென்ற மாதத்தில் கூட்டிவைத்தார். அச் சமயத்தில் சில கனவான்களும் சில மாதர்களும் சேர்ந்து யோசித்தார்கள். அவர்கள் செய்த தீர்மானங்கள் கூடிய சீக்கிரத்தில் வெளிவருமென்று நம்பப்படுகிறது.

கைத்தொழில்.—இந்தியாவில் இப்பொழுது பென்ஸில், காகிதம், நெருப்புக்குச்சி முதலியவைகளைச் செய்துவர பற்பல விடங்களில் முயன்றுவருகிறார்கள். மைசூரில் மேற்கூறியவைகளைச் செய்ய ஏற்பாடுசெய்யப்பட்டு வருகிறது. வாழைநாரிலிருந்து நூலெடுத்து வஸ்திரம் நெய்யப்படுகிறது யாவருக்கும் தெரியும். இப்பொழுது வாழைமட்டையிலிருந்து காகிதமும் செய்யும்முறையும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

* * *

சென்னை கவர்ன்மெண்ட் ஸ்திரீகள் காலேஜூக்கு பம்பாயில் இந்தியன் சோஷல் ரிபார்மரின் ஆசிரியரான மிஸ்டர் K. நடராஜனுடைய புத்ரி மிஸ். கே. நடராஜன் பி. ஏ., உதவி சரித்ரபோதகராக நியமிக்கப்பட்டிருப்பதைக் கேட்க சந்தோஷிக்கிறோம்.

* * *

ப்ரோபஸர் கார்வே பூனாநகரில் இந்திய மாதருக்கு பாரதவர்ஷீயமஹிளா வித்யாபீடத்தைச் சிரமப்பட்டு ஸ்தாபித்திருக்கிறார். இதற்கு 8 போதகாசிரியர்களிருக்கின்றார்கள். இவர்களில் ப்ரொபஸர் மிஸ் சாந்தாபாய் ஹர்லேகர். பீ. ஏ. என்றமாது சிரோன்மணி ஒருவராவர். இதில் தற்சமயம் 5 மாணவிகளிருக்கின்றார்கள். மாணவிகள் முக்யமாய் சுதேச பாஷையிலேயே போதிக்கப்படுவார்களாம். இதற்கு வருஷத்துக்கு ரூ. 1000 வீதம் 10 வருஷகாலம் கொடுப்பதாக மிஸ்டர் காட்கில் சொல்லியிருக்கிறாராம். மிஸ் கிருஷ்ணாபாய் தாகூர் 4000 ரூ. கொடுத்திருக்கிறார்கள். இன்னும் அநேக கனவான்கள் திரவிய சகாயம் இதற்குச் செய்வதாக வாக்களித்திருப்பதைக் கேட்க சந்தோஷப்படுகிறோம். நமது தேசத்துப் பெண்களுக்கு தேசபாஷையிலேயே உயர்தரக் கல்விபோதித்து வருவது நலமென ஒருகக்ஷியார் அபிப்பிராயப் படுகிறார். மற்றொருக்கக்ஷியார் இங்கிலீஷ் பாஷை போதித்து வருவதுதான் நலமென அபிப்பிராயப்படுகிறார். இவ்விஷயத்தில் அபிப்பிராய பேதமிருப்பினும், ப்ரோபஸர் கார்வே எடுத்த பெரும் முயற்சி நிறைவேறுமென நம்ப இடமிருக்கிறது.

* * *

நமது வைஸ்ராயின் மனைவியாராகிய எச். ஈ. லேடி செம்ஸ்போர்ட் இந்திய ஸ்திரீகளுக்கும் இங்கிலீஷ் ஸ்திரீகளுக்கும் ஸிம்லாவில் ஒரு க்ளப் செப்டம்பர் மீ 12உயில் ஸ்தாபித்தார்கள். இந்த க்ளப்பில் இந்தியஸ்திரீகளு மாங்கிலஸ்திரீகளும் மெம்பர்களாயிருந்து தங்கள் அறிவை விருத்திசெய்யச் சமயம் வாய்க்கும்பொழுது பிரசங்கங்கள் ஏற்படுத்துதலாம். இதற்கு காரியதரிசி ராணி ஹர்ணம்சிங். [ப—ர்]

குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் விதம்

(டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாள்)

பிரிய சகோதரிகளே!

தாய்மார்கள் ஒவ்வொருவரும் இந்த விஷயத்தைப்பற்றிக் கவனிக்க வேண்டியது மிகவும் அவசியம். சிறுகுழந்தைகள் திடமாயிருந்தால் அநேக தொத்து வியாதிகளிலிருந்து தப்பித்துக் கொள்ளுகிறதுமல்லாமல் பெரியவர்களான பிற்பாடும் சுலபமாக அவர்கள் வியாதியினால் பிடிக்கப்படுகிறதில்லை.

ஆகையர்ல் தாய்மார்கள் குழந்தைகளை மூன்று பிராயம் வரையில் சிரத்தையுடன் காப்பாற்றிவிட்டால் பிற்பாடு அவர்களுக்கு தொந்தரவு அநேகமர்ய் ஏற்படாது.

குழந்தைகளுக்கு தேகபலத்தையும் வளர்ச்சியையும் கொடுக்கக்கூடியது குழைந்தைகள் உட்கொள்ளும் ஆகாரமே. குழந்தைகளின் ஆகாரமானது அந்தந்த வயதுக்குத் தகுந்ததாகவும் புஷ்டியைக் கொடுக்கக்கூடியதாகவும் இருக்கவேண்டியது.

(1) குழந்தை பிறந்தவுடன் அதற்குச்சரியான ஆகாரம் அதனுடைய தாயாரின் மார்பிலிருந்து ஊறும் சீம்பால்தான். அந்தச் சீம்பாலுக்கோ குழந்தையின் மலத்தைக் கழிக்கிற சக்தியும் நல்ல பசியை சிசுவுக்கு உண்டாக்குங் குணமும் அமைந்திருக்கிறது. நம்மவர்கள் அது தெரியாமல் பிறந்த குழந்தைக்கு செவ்வெண்ணையும் தண்ணீர் கலந்த பசும் பாலையும் போட்டுகிறார்கள். அதுமிகப்பிசகு.

(2) குழந்தை பிறந்த ஆறுமணிக்குப் பிறகு சிசுவைத் தாயார் மாரில் வைத்து பால்குடிக்கச் செய்யவேண்டியது.

(3) முதல் மூன்று மாதம் இரண்டு மணிக்கு ஒருதரம் பகலிலும், நாலு மணிக்கு ஒருதடவை இரவிலும் பால்கொடுத்து வரவேண்டியது.

(4) மூன்று மாதத்திலிருந்து ஆறுமாதம் வரையில் பகலில் இரண்டரை மணிநேரத்திற்கு ஒருதரமும், இரவில் நாலுமணிக்கு ஒருதரமும் கொடுக்கவேண்டியது.

(5) ஆறு மாதத்திலிருந்து ஒன்பது மாதம் வரையில் பகலில் மூன்று மணிக்கு ஒரு தரமும், இரவு 11 மணியிலிருந்து காலை ஏழு மணி வரையில் பால் கொடுக்கக்கூடாது. இந்த நேரத்தில் குழந்தை ஒருவித தொந்தரவும் இல்லாமல் நித்திரை செய்யவேண்டும்.

(6) ஒன்பது மாதத்திலிருந்து ஒரு வருஷம்வரையில் பகலில் நாலுமணிக்கு ஒருதரமும், இரவில் மேல் சொன்னபடியும் செய்ய

வேண்டியது. ஒன்பதுமாதம் அல்லது ஒருவருஷத்திற்குப் பிறகு குழந்தையை பால் மறக்கடிக்க வேண்டியது.

நடுவில் குழந்தைகள் அழுதால் வெய்யிற்காலத்தில் தாகத்தினாலும் மழைகாலத்தில் குளிரினாலும் அழுவது சகஜம். இதைத்தவிர உடம்பில் அசவுக்கியம் ஏற்பட்டாலும் குழந்தைகள் அழும். இதை அறியாமல் சில தாய்மார்கள் குழந்தை அழும்போதெல்லாம் பசியினால் அழுகிறதென்று நினைத்துக் கண்டபடி உணவைக் கொடுக்கிறார்கள். இதனால் தான் குழந்தைகளுக்கு அஜீரணம், வயிற்றுப்போக்கு முதலிய வியாதிகள் உண்டாகின்றன.

குழந்தைகளுக்கு எவ்விதமான ஆகாரம் கொடுப்பது என்பது நம்மவர்களில் அநேகருக்குத் தெரியாமலிருக்கிறது. அதைப்பற்றித் தெரிந்துகொள்வது அவசியம்.

தாயாரின் பாலுக்குச் சமானமான ஆகாரம் குழைந்தைகளுக்கு இதுவரையில் ஒருவரும் கண்டு பிடிக்கவில்லை. தாயாரின் பால்கூட சில சமயங்களில் சரியாயில்லாமல் போய்விடுகிறது. எப்படியென்றால் தாய், காசம், இரத்தக் குறைச்சல், அஜீரணம், வயிற்றுப்போக்கு, ஹார்ட் வியாதிகள் இவைகளால் பீடிக்கப்பட்டிருந்தால் அவர்களின் மாரில் ஊறும் பால் குழந்தைகளுக்கு விஷமாய்ப் போய்விடுகின்றது. திடசரீரமுள்ள தாய்மார்கள் தங்கள் தங்கள் குழந்தைகளுக்குப்பால் கொடுத்து வளர்ப்பது அவர்களின் கடமை. அவர்களுக்கு தங்கள் குழந்தைகளுக்கு வேண்டியபால் இல்லாமற் போனபோதிலும் புஷ்டியான ஆகாரத்தினாலாவது, மருந்துகளினாலாவது பாலைவளரச்செய்து தங்களுடைய குழந்தைகளுக்கு வேண்டிய பாலைக்கொடுப்பது உசிதம். ஆனாலோ நம்மவர்களில் சிறுவயதில் கலியாணம் செய்து சீக்கிரம் குழந்தைகள் உற்பத்தியாய் விடுகிறதினாலும், இருபது பிராயத்திற்குள் நாலு ஐந்து குழந்தைகளுக்குத் தாயாராகி விடுவதினாலும் சீக்கிரத்தில் உடம்பு மெலிந்து, நல்ல இரத்தமில்லாமல் பால் குறைந்தாவது அல்லது ஒன்றுமே யில்லாமல் பூஜ்யமாகவாவது ஆய்விடுகிறது. அப்படியிருந்தால் அந்த குழந்தைகளுக்கு ஆகாரம் கொடுக்கும் விதம்:—

தாயார்பாலுக்கு அடுத்தது பசுவின்பால்தான். இது போட்டும் விதம் நம்மவர்களுக்குத் தெரியாமல் பாலில் தண்ணீர்சேர்த்து அடுப்பில் கொதிக்கவைத்து ஆடையை எடுத்துவிட்டு சுவையில்லாத பாலைப் போட்டுகிறார்கள். இதுவுமில்லாமல் அரிசிக்கஞ்சி, ஜவ்வரிசிக்கஞ்சி, கோதுமைக்கஞ்சி முதலான பலதினுசுகளையும் குழந்தைகளுக்கு யோஜனையில்லாமல் சங்கில்போட்டு வயிற்றை அடைத்து விடுகிறார்கள். இப்படிச்செய்வதினால் தான் குழந்தைகளுக்கு ஈரல் கட்டியும்,

சூணவயிறும், எலும்பு உருக்கிவியாதி வருவதுடன் கூட குழந்தைகள் நன்றாய் வளருகிறதுமில்லை, பல சாலியாக ஆகிறதுமில்லை. நாளுக்கு நாள் நம்மவர்கள் குறுகிக்கொண்டே வருகிறார்கள். இதுவுமல்லாமல் பலஹீனமான குழந்தைகளை அடிக்கடி தொத்து வியாதிகள் தொந்தரவு செய்கிறது. குழந்தைகளுக்கு சாதம், பிஸ்கட் முதலியவைகள் பல்முளைத்த பிறகு கொடுக்கலாம்.

பசுவின்பால் தயார்செய்து கொடுக்கும் விதம்

I

முதலில் பாலை சுத்தம் செய்வது எப்படியென்றால் மூடியுள்ள பீங்கானில் பாலை வைத்து மற்றொரு பாத்திரத்தில் குளிர்ந்ததண்ணீர் விட்டு பிறகு பால் பாத்திரத்தை அந்த தண்ணீருள்ள பாத்திரத்தின் மத்தியில்வைத்து அடுப்பில்வைத்து தண்ணீரைக் கொதிக்கவிடவும். கொதி வந்ததிலிருந்து பத்து நிமிஷம் வரையில் அடுப்பில் தண்ணீர் கொதித்துக்கொண்டே இருக்கவேண்டியது. பத்து நிமிஷம் சென்ற பிறகு இன்னுமொரு பாத்திரத்தில் குளிர்ந்த தண்ணீர் வைத்து இந்தப் பாலுள்ள பீங்கான் பாத்திரத்தை கொதிதண்ணீரிலிருந்து எடுத்து அதில் வைத்து பத்திரமாய் ஒரு குளிர்ச்சியான இடத்தில் வைத்திருக்கவேண்டியது. காலமே, சாயந்திரம் குழந்தைக்கு வேண்டிய பாலை இந்த விதமாக தயார்செய்து வைத்துக்கொள்வது அவசியம். இவ்விதமாக கொதிக்கவைப்பதினால் ஆடை தனியாக எடுபடாது. குழந்தைகளுக்கு பால் சுவையாகவும் தேக வளர்ச்சிக்கு ஏற்றதாகவு மிருக்கும்.

II

இரண்டாவது:—குழந்தைக்கு பால்கொடுக்கும் பாத்திரங்களை தினசரிகாலமே ஸோடாப்போட்டு வெந்நீர் விட்டுச் சுத்தம் பண்ணி ஒரு மேஜையின் பேரிலாவது அல்லது ஒரு அலமாரியிலாவது தனியாக வைத்துக்கொள்ள வேண்டும். பீங்கான் பாத்திரங்களையாவது அல்லது வெள்ளிப்பாத்திரங்களையாவது உபயோகிப்பது உசிதம். ஒவ்வொருதரமும் பால்கொடுக்கிறதற்கு முந்தியும் பிந்தியும் பாத்திரங்களை வெந்நீர் விட்டுக் கழுவிக்கொள்ளவேண்டியது. குழந்தைக்குக் கொடுக்கும் பாலை ஈக்கள் தீண்டாமல் முன்சொன்னபடி மூடிவைக்கவும்.

முதல் மூன்று மாதம் வரையில்:—முன்பு சொன்னபடி கொதிக்க வைத்த பாலுக்குச் சரிசமமான கொதித்த தண்ணீர் சேர்த்து ஒரு அவுன்ஸுக்கு (1 oz. of mixed milk and water) ஒரு கிரெயின்

அல்லது இரண்டு கிரெயின்ஸ் ஸோடா ஸிட்ரஸ் (1 or 2 grains of soda citrus) என்ற உப்பைச்சேர்த்துக் கொடுக்கலாம், அநேக குழந்தைகளுக்கு அது ஜீரணித்துவிடும்.

மூன்று மாதத்திற்குப்பிற்பாடு:—அந்தப்பாலை அப்படியே குழந்தை குடிக்கும் அளவிற்கும் எடுத்துக் கொண்டு தண்ணீர் சேர்க்காமலே ஒரு அவுன்ஸுக்கு முன் சொன்ன அளவு ஸோடா ஸிட்ரஸ் என்னும் உப்பைச் சேர்த்துக்கொடுக்கலாம். ஸோடா ஸிட்ரஸ் சேர்ப்பதினால் அநேக குழந்தைகள் தண்ணீர் சேர்க்காதபாலை ஜீரணிக்கும். மாதம் ஆக ஆக உப்பைக் குறைத்துக் கொண்டுவந்து ஒன்பதுமாதத்திற்குப்பிற்பாடு அதைமுழுவதுமே நிறுத்திவிடலாம்.

தாய்ப்பால் பசுவின்பாலைவிட சுவையாயிருக்கும்:— ஆகையால் பசுவின்பால் கொடுக்கும் பொழுது அதற்கு கொஞ்சம் (lactose) லாக்டோஸ் என்னும் சர்க்கரையைச் சேர்த்துக் கொள்ளலாம். இம்மாதிரிதான் குழந்தைகளுக்கு தாயார் பாலுக்கு அடுத்தபடி சரியான வழியென்று மேல்நாட்டு வைத்தியர்களால் கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது.

சிசுக்களுக்குக் கொடுக்கும் பால்ஜில்லென்றிருக்காமல் கொஞ்சம் சூடாகவே யிருக்கவேண்டும்.

மற்றப்படிமெலின்ஸ் மாவு, ஹார்லிக்ஸ்பொடி, ஆலம்பரிஸ் பொட்டிப்பால் இவைகளெல்லாம் கொடுப்பது பிசகு. எப்பொழுதாவது ஒரு சமயத்தில் உபயோகித்துக் கொள்ளலாம்.

ஆனால் சதா அவைகளையே ஆகாரமாக பாவித்துவைத்தியர்கள் உத்திர வண்ணியில் கொடுப்பது பின்னால் பலதீங்குகளை உண்டாக்கும்.

ஸோடாஸிட்ரஸ் சேர்த்தபால் சில குழந்தைகளுக்கு ஜீரணமாகாமலிருக்கும் பக்ஷத்தில் வைத்தியர்களைக் கேட்டு அப்பொழுதுக்கப்பொழுதே உபசாந்தி பண்ணிக்கொள்வது அவசியம்.

சிசுகளுக்கு குடிக்கக் கொடுக்கும் ஜலம் கொதிக்கவைத்ததாயிருக்கவேண்டும். ஆகாரநேரம் தவிர மற்றநேரங்களில் கண்டபடி பக்ஷணத்தையும், பிஸ்கோத்துகளையும், ரொட்டித்துண்டுகளையும் சாப்பிடும் படியாக விடக்கூடாது. கண்டபடி குழந்தைகளைத் தின்னவிடுவதினால் ஜீரணக் குடல் பலஹீனப்பட்டு மாந்தம், வயிற்றுப்போக்கு இப்பேற்பட்ட குடல் வியாதிகளுக்கு இடமாகிறது.

ஒன்பது மாதத்திற்குப்பிற்பாடுதான் சாதம் கொடுக்கலாம். குழந்தைகளுக்கு சாதமாவது பாலாவது கொடுக்கும் பொழுது தாய்மார்கள் தங்கள் கைகளை அரப்பு அல்லது சோப் போட்டு கழுவிக்கொண்டு கொடுக்க வேண்டியது.

குழந்தைகளுக்கு ஏற்ற ஆகாரம் கொடுப்பதற்கு அடையாளம் ஒவ்வொரு நாளும் குழந்தை தளிர்த்து வளர்ந்து கொண்டே வரும் அப்படி யில்லாவிட்டால் ஆகாரத்தின் பிசகென்று வைத்தியர்களிடம் காண்பித்து எங்கு பிசகிருக்கிறதென்று உடனே கண்டு பிடிக்க வேண்டியது ஒவ்வொரு தாயாரின் கடமை.

மேல் நாட்டார் இவ்வளவு வீரர்களாகவும் சாமர்த்திய சாலிகளாகவும் இருக்கிறதற்குக் காரணம் அந்நாட்டின் தாய்மார்களே. நாம் பிஞ்சில் பழுப்பதுபோல கொஞ்சவயதிலேயே எல்லாம் அநுபவித்துக் கிழத்தன்மையை வெகு சீக்கிரத்தில் அடைகிறோம். அவர்கள் நீடித்து வாழ்வதுமன்னியில் தேசாபிமானிகளாகவும் புத்திக் கூர்மை யுள்ளவர்களாகவும் தைரியசாலிகளாகவு மிருக்கிறார்கள். அவர்களைப் போல் நாமும் உன்னத பதவியை அடைய முயலுவோமாக.

ராஜ பக்தி

கலாவதி

(80-வது பக்கத் தொடர்ச்சி)

எதுகுலதிலகன் சமையல் அறையில் புகுந்ததும் அங்கே ஒருவரையும் காணவில்லை. தனக்கு எப்படியானாலும் சரி குதிரையைப் பட்டினி போடக் கூடாதென்ற எண்ணத்துடன் புறவடைப்பக்கம் போனான். பின் புறவாயிலால் வெளிப்புறப்பட்டு முதலில் தன் குதிரையைக் கட்டவிழ்த்து, தன் பின்னாலேயே நடத்திக்கொண்டு போய் புறவடையில் ஒருமூலையில் கட்டிவிட்டுத் தொட்டியில் நிரம்பப்புல்லும் போட்டு, குளிர்க்கு ஹிதமாய் குதிரை யண்டையிலேயே வெயிலில் உட்கார்ந்து கொண்டான். "அட! அடா! நான் இரண்டு நாய்க்குட்டிகளைத் தேடிவர இங்கு ஒரு பெரிய இராஜத் துரோகியைக் கண்டேனே!! இவன் மீது எனக்கு எவ்வளவு கோபமுள வேண்டுமோ அவ்வளவு தூரம் இவன் மேல் கோபம் வரவில்லை !! இது என்ன காரணம் பற்றி? இராஜத்துரோகியானாலும், நம் வம்சத்தைப் பற்றிப் பேசும் போது எவ்வளவுமரியாதை!—" என்று இவ்விதம் தனக்குள்ளேயே ஆலோசனை செய்து, கொண்டிருப்பதற்குள், அப்பிரபுவின் பெண் அங்கே வந்து "ஐயா சமையல் அறையில் உம்மை கவனிக்க ஒருவரும் இல்லைபோல் தோன்றுகின்றது; இவ்விதம் உம்மை அவமரியாதை செய்ததற்கு நான் மிகவும் மனம் வருந்துகின்றேன். எங்கள் வீட்டுவேலைக்காரி சந்திரமதி வெளியே போய் இருப்பது எனக்குத் தெரியாது. நீர் தயவு செய்து இப்பொழுது சமையல் அறைக்கு வருவதாய் இருந்தால் உமக்கு வேண்டிய உணவை நானே படைக்கின்றேன்—எழுந்திரும் ஐயா!" என்றாள்.

"அநேக வந்தனம்! அம்மா!! மெத்த சந்தோஷம் என்னைப் போன்ற வனத்திருடர்களுக்கு நீர் எவ்வளவு அன்பும் தயையும் உள்ளவர்களாய் இருக்கின்றீர்கள்!!" என்றான் எதுகுலன்.

"ஓ! ஓகோ! நீர் அவ்விதம் வனத்தில் திருடமாட்டீர் என்று எனக்குத் தோன்றுகின்றது; நிச்சயம் செய்யமாட்டீர் என்று எனக்குத் தெரியும்; அவ்விதம் செய்வதாய் இருப்பினும், ஐயா நீர் அப்படி செய்யக் கூடாதென்று நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று உள்ளே கூட்டிக்கொண்டு போய் சாப்பாடு போட்டாள்.

சாப்பிடும் போது எதுகுலதிலகன் "தாயே! உமது தகப்பன் பெயர் ஹேமநாதர் அல்லவா? அப்படித்தான் அச்சாஸனத்தில் பார்த்ததாக ஞாபகம்" என்றான்.

"ஆம்! ஐயா! என் தகப்பனார் பெயர் ஹேமநாதர்; என் பெயர் கலாவதி,"

எதுகுலன்: நீங்கள் இங்கேயே இருக்கின்றீரா?"

கலாவதி "ஆம்! ஐயா, இப்பொழுது இங்கேதான் இருக்கின்றோம். நீர் மெதுவாய் போஜனம் செய்யலாம். நான் போய் வருகிறேன்" என்று புறப்பட்டுப் போய் விட்டாள்.

"எவ்வளவு நல்ல பெண் இவள்!! இராஜத் துரோகியான உத்தியோகஸ்தன் பெண்ணாய் இருந்தும் என்னை 'வா'-'போ' என்று மரியாதைக் குறைவாய்ப் பேசாமல், 'ஐயா' வென்று அழைக்கின்றாளே? அமிர்தேசன் வம்சத்தில் பிறந்தவன் அல்ல இவன் என்று காட்ட என் முகத்தில் ஏதாவது குறிகள் இருக்கின்றனபோலும்!! ஒருவருக்கும் நம் யோக்கியதையைப் பற்றிச் சந்தேகம் உண்டாக வழியில்லாமல் ஜாக்கிரதையாய் நடந்து கொள்வதே மேல் என்று இவ்வாறு ஆத்மகதமாய்ப் பேசிக்கொண்டே போஜனம் செய்து முடித்தான். பிள்ளைக்குப் பசி அதிகமாய் இருந்ததென்று சொல்ல வேண்டுவதில்லையே!! போஜனம் முடிந்ததும் எதுகுலன் இடம் விட்டு எழுந்து போவதற்குள் மறுபடி கலாவதி உள்ளே நுழைந்து "பாரிஜாதர் இதோ வந்து கொண்டிருக்கின்றார்." என்றாள்.

எதுகுலன் "சந்தோஷம் அம்மா; ஒரு கேள்விக்கு மட்டும் தயவு செய்து பதில் சொல்லவேண்டும்; இப்பொழுது நமதரசர் எங்கேயிருக்கின்றார் தெரியுமா உங்களுக்கு? என்று கேட்டான் எதுகுலன். "நமது—உங்கள் அரசனா? அவர் இப்பொழுது யாதவகுல அரசனிடம் அடைக்கலம் புகுந்து இருக்கின்றார் என்றும், அவ்வரசனும் விஜ்ஜல சேனாபதியும் தங்களுள் கலந்து பேசிக்கொண்டு மறுபடி யாதவ தேசத்திலேயே சிறைப்படுத்தப் போவதாகவும்—சிறைப்படுத்தி

யிருப்பதாகவுமோ—சமாசாரம். ஆனால் அவரைப் போய்பார்ப்பதற்கு எவராலும் முடியாது. முடிந்தாலும் அவ்விதம் போவது ஆபத்துக்கிடமாகும் என்று எனது வாய்க்காதோடு சொல்லிவிட்டு ஓட்டம் பிடித்தாள்.

எதுகுலன் வெளியேபோனதும் பாரிஜாதன் எதிரேவந்துகொண்டிருந்தான். இருவரும் அவன் குடிசைக்குச் சென்று சற்றுநேரம் பேசியபின்னர், தான் வந்த காரியத்தைச் சொன்னான் அவனுடன் எதுகுலன். "என் சினேகிதன் அமிர்தேசனுக்குப் பேரப்பிள்ளை இருக்கிறான் என்பது இன்றையவரையில் எனக்குத் தெரியவில்லை. நீ வெகு நாளாய் அமிர்தேசனோடேயே குடியிருந்து வருகிறாயா அப்பா?" என்றுகேட்டான் பாரிஜாதன். "இல்லை? இப்பொழுது ஒரு வருஷ மாய்த்தான் என் பாட்டனோடு இருக்கின்றேன். இதற்குமுன் கருமலை நகரில் எஜமானன் மாளிகையில் அவரது பிள்ளைகளுடன் நானும் வளர்ந்து வந்தேன்—"

"ஆனால் நீ இராஜ கக்ஷியைச் சேர்ந்தவன் அல்லவா?" என்பதற்குள், எதுகுலன் "ஆம்! ஆம்!! சந்தேகமென்ன!! உயிருள்ளவரைக்கும் அந்தக் கக்ஷியை விடுவதாக எண்ணம் கனவிலும் கிடையாது!!" என்றான்.

"நானும் அவ்விதமே இருப்பவன் தான். ஆனால் இப்படிப் பட்ட வார்த்தைகளை இவ்விடத்தில் பேசுவது தகாது. வீட்டின் பின் புறம் போய்விடுவோம் வா; அங்கே ஒற்றுக்கேட்க நாய்களும், பசுக்களும் தான் இருக்கின்றன. அவை ஒருவரிடமும் நாம் பேசுகிறதைக் கேட்டுக்கொள் சொல்லமாட்டாதன;" என்று எதுகுலனை வீட்டின் பின்புறம் அழைத்துப் போனான்.

அங்கே போனதும் எதுகுலதிகன் "ஐயா உம்மைக் காணவந்து, ஒரு இராஜத்துரோகியண்டை வார்த்தையாட வேண்டியிருக்குமென்று நான் எண்ணவேயில்லை. எப்படியோ பேசியானது ஆய்விட்டது;" என்று அவனுடன் ஆதியோடந்தமாக நடந்த விஷயத்தையெல்லாம் சொன்னான்.

அவற்றையெல்லாம் கேட்ட பாரிஜாதன் "நீ மஹா துணிவுள்ளவன்!! அப்பா!! ஆயினும் எல்லாம் நமது நலத்துக்கே நீ அவ்விதம் பேசிவிட்டனை போலும்: எனக்கு உத்தியோகம் கொடுத்து இருக்கின்றனர். என்னைப்போல் இன்னும் இரண்டு பேருக்கும் உத்தியோகம் கிடைத்து இருக்கின்றது. அவ்வளவுதான். மற்றப்பேர்களுக்கு ஒன்றுமில்லை. வனபாலகர்களாக இன்னும் பலர் வெவ்வேறு இடங்களிலிருந்து வந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் எந்தவிதத்தில் உத்தி

யோகத்துக்குத் தகுதியோ எனக்குத் தெரியாது. தினம் காலை முதல் சாயங்காலம்வரை இராஜனை தூஷிப்பது தான் அவர்கள் வேலை. இராத்திரியிலும்கூட அப்படியே செய்வார்கள்; ஆனால் முடிகிறதில்லை. அற்பசொற்பமாய்க் குடித்தால் அல்லவர் புத்தி சுவாதீனத்தில் இருக்கும்! இவ்வளவு யோக்கியர்கள் வேலைக்கு வந்து இருக்கின்றனர்!!" என்றான் பாரிஜாதன்.

இவர்கள் அனைவரும் உமக்குக் கீழ்ப்பட்டவர்கள் தானே" என்று கேட்டான் எதுகுலதிலகன்.

"அப்படியென்று சொல்லலாமே ஒழிய உண்மையாய் அப்படியில்லை. ஒவ்வொருவனும் என்னவேண்டுமானாலும் செய்கிறான். கட்டுகாவல்கிடையாது இக்காலத்தில்—ஆகையால் இனிமேல் நீ இங்கே வருவதாய் இருந்தால் உன் வில், அம்பு, கத்தி இவற்றைக் கொண்டுவர வேண்டாம். வீட்டுக்குப் போகும்பொழுது திருட்டுப்பசங்கள் உன்னைப் பின் தொடராமல் பார்த்துக்கொள். இதோ நாய்கள் உன் பாட்டனுக்கு. உனக்கு மான் வேட்டையாடத் தெரியுமா தம்பி?" என்று கேட்டான். நான் ஒருமானையாவது அடியாமல் வெளியில் புறப்பட்டபின் வீட்டுக்குப் போவதில்லையே!!" என்று பதிலுரைத்தான் எதுகுலன். "அப்படியா? ஆனால் நாம் இருவரும் ஒருதினம் வேட்டைக்குப் போகவேண்டும். நானும் ஒருநாள் உங்கள் இருப்பிடத்துக்கு வர வேண்டும். உனக்கு அங்காளம்மன் மாந்தோப்பு தெரியுமா?" என்று கேட்டான். பாரிஜாதன்.

"பேஷாய்—தெரியாமலென்ன?" என்றான் எதுகுலன். "நாளனிக்குக் காலை சூரிய உதயத்துக்கு முன்னர் என்னை அம்மாமரத் தோப்பில் சந்திக்கின்றாயா?" என்றுகேட்டான். பிழைத்து இருந்தால் வருவதில் சந்தேகமில்லை" என்றான் எதுகுலன். ஆனால்சரி பொழுதாகின்றது. நாய்களைக் கயிற்றைக் கட்டி இழுத்துக்கொண்டு இப்பொழுது ஊருக்குப் புறப்பட்டுப் போ குழந்தாய்" என்றான் பாரிஜாதன்.

பாரிஜாதனுக்கு இரகசியம் வெளியிட்டது.

வனபரிபாலனம் முற்காலத்திலும், கிட்டத்தட்ட, தற்காலத்தில் நடப்பது போலவே, நடந்தேறிவந்தது. வனத்தலையாரிகளும், வனபரிபாலரும், அவர்களுக்கு மேல், வனமணிகாரனும் அவருக்குமேல் வனத்தலைமை யதிகாரியுமாக அநேக உத்தியோகஸ்தர் இருந்தனர். வனங்களில் வேட்டையாடவும், தேன், காய்கறி, எடுக்கவும், விறகு வெட்டவும், மரம் அருக்கவும், அதிகாரிகள் அனுமதியில்லாமல் வனத்தில் பிரவேசித்தல் குற்றமான காரியம். இவ்வாறு செய்வோரை அவரவர் குற்றத்துக்குத் தக்கபடி தண்டனை விதிப்பதுண்டு.

மேற்சொன்ன காரியங்கள் செய்யவும், மாடு, ஆடு மேய்க்கவும் உத்தரவு கேட்கும்போது ஏராளமாய்த் தலைமை அதிகாரிக்குப் பணம் கட்டவேண்டியிருக்கும். அவ்வரியைக் கொடுக்க இஷ்டமில்லாதவர்களும் சக்தியில்லாதவர்களும் திருட்டுத்தனமாயும் தங்கள் தங்கள் வேலையை நடத்திக் கொள்வதுண்டு. இதைத்தடுக்க சில சில உத்தியோகஸ்தர்கள் வெகு கடுமையான தண்டனை விதித்துவந்தனர். ஆடுமாடுகளைக் கவர்ந்துகொள்வர்; வேட்டையாடினால் சிறைப்படுத்துவார்கள். மறுபடியும் அதே தப்பிதம் செய்யின் கையைவெட்டி விடுவார்கள்.

இவ்விதமாய் வனபரிபாலனம் நடந்துவந்ததும் கருமலைப் பிரதேசத்தில் மட்டும் இதுவரையில் எல்லாரும் நினைத்தபடி கொள்ளையடித்துக்கொண்டிருந்ததும், இப்பொழுது தற்காலத்தில் தாங்களே அவ்விதம் செய்ய ஏற்பட்டதும் எதுகுலனுக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால் குடிசைக்குப் போகும்போதே தன் கஷ்டத்திசையைப் பற்றி ஆலோசனை செய்துகொண்டுபோவான் ஆயினன்.

"அமிர்தேசன் இனி இருப்பது கொஞ்சகாலம்தான். அவன் ஆயுள் வெகுவாய் முடிந்துவிட்டதென்றே சொல்லவேண்டும். இனி நான் தனியாய் வேட்டையாடி அதனால் கிடைக்கும் பொருளை விற்றேயல்லவா ஜீவனம் செய்யவேண்டும்? குடியரசோ ஒரு விதமாய் நிலைநின்றுவிட்டது போலும். புதிய உத்தியோகஸ்தனும் வந்து சேர்ந்துவிட்டான். முன்போல் நினைத்தபடி ஒன்றும் செய்யமுடியாதே—ஆயினும் கொஞ்சம் அநுகூலமிருக்கின்றது. ஹம்ஸப்பிரியனுடைய தோட்டம் வளப்பமாய் இருக்கின்றது. இன்னும் கொஞ்சம் பிரயாசைப்பட்டால் சோளம், கம்பு, ராகி இவற்றையும் பயிராக்கலாம். ஏதோ பார்க்கலாம். எவ்விதம் முடியுமென்று—" என்றிப்படிப் பின் வரும் சங்கதிகளைப்பற்றி யோசித்துக்கொண்டே குடிசை போய்ச் சேர்ந்தான்.

மறுநாட் காலையில் போசனம் செய்யும்பொழுது எதுகுலதிலகன் மணிகாரன் வீட்டுக்குப்போன சங்கதிகளையும், மணிகாரன் தன் வீட்டை எஜமானனுக்குக் கொடுத்துவிட்டுத்தான் பக்கத்தில் ஒரு குடிசை போட்டுக்கொண்டு இருப்பதையும், தனக்கும் அவ்வெஜமானனுக்கும் நடந்த சம்பாஷணையையும், ஒன்றும் விடாமல் சொல்லி முடித்தான்.

படுக்கையில் எழுந்து உட்கார்ந்துகொண்டு இவற்றையெல்லாம் கேட்டிருந்த அமிர்தேசன் "அப்பா! கண்மணியே நீ எவ்வளவுதூரம், புத்திசாலிதனமாய்ப் பேசவேண்டுமோ அதை விடுத்து தைரியமாய்ப் பேசிவிட்டனை! ஆயினும் நீ செய்ததில் தப்பொன்றுமில்லை. யார் தான் பெரிய வம்சத்தில் பிறந்த உன்னிடத்தில் முகஸ்துதியை

எதிர்பார்க்கக்கூடும். பொய்யோ உன் நாக்கை அறுத்தாலும் வராத ஆண்மையும், கர்வமும் குடிகொண்ட வீர சிம்மமே போல்வாய். ந அவ்விதம் நடப்பது என்மனதுக்கு மிகவும் சந்தோஷமாய் இருக்கின்றது. என்னைப் படுக்கையில் படுக்கவிடு. விசாலாக்ஷியிடம் சென்று தயவுசெய்து கொஞ்சம் கஞ்சி வாங்கிக்கொண்டு வா, குழந்தாய்" என்றான்.

இவ்விரண்டு மூன்று நாட்களில் அமிர்தேசனுக்கு உண்டான தேகத்தளர்வைப் பார்த்து எதுகுலனுக்கு அடக்கமுடியா விசனமுண்டாயிற்று. அந்திக்காலம் கிட்டிக்கொண்டிருக்கின்றதென்பது தெளிவாயிற்று. எதுகுலன் மத்தியானம் தனது வேலைகளைப்பார்த்துவிட்டு சாயங்காலம் ஹம்ஸப்பிரியனுடன் தோட்டத்தில் களை பிடுங்கியானதும், அமிர்தேசனை வந்து மறுபடியும் பார்த்துவிட்டு "அமிர்தேசா! நான் நாளைகாலையில் பாரிஜாதனோடு வேட்டைக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறேன். போய்வரட்டுமா?" என்று கேட்டான். "என் மகனே அப்படியே செய்—பாரிஜாதனோடு எவ்வளவு சினேகமாய் இருக்கக்கூடுமோ அவ்வளவு சினேகமாய் இரு. அவன் எனது ஆப்த சினேகிதன். அவசியமானால் நீ யார் என்ற உண்மையைக் கூட அவனிடத்தில் சொல்லலாம். உங்கள் எல்லாருக்கும் ஒருநாள் பிரயோசனம் ஆகுமென்று எண்ணி நானே அவனிடத்தில் உங்கள் விருத்தாந்தத்தை சொல்ல எண்ணினேன். அதற்குள் எனக்கு இவ்வியாதி வந்துவிட்டது. கூடுமானால் நாளை இராத்திரி அவனை இங்கு அழைத்துவா. எனக்கு அதிக அவஸ்தை யென்றும் ஏதோ சில வார்த்தைகள் பேசவேண்டும் என்றும் சொல்! உடனே வந்துவிடுவான். நீ நாளைகாலையில் அவனுடன் போய்வா குழந்தாய்" என்றான்.

மறுநாள் காலையில் எதுகுலன் அருணோதயத்திலேயே புறப்பட்டு 5,6 நாழிகை வழி தூரத்திலிருந்த மாந்தோப்புக்குப் போய்ச் சேர்ந்தான். ஒரு பெரிய மரத்தில்மேல் தன் வில்லைச் சார்த்திவிட்டு அமிர்தேசனதுபெரிய நாய் காலடியில் படுத்து இருக்கத் தான் அம்மரத்தின்மேல் உல்லாசமாய்ச் சாய்ந்துகொண்டு கிழ்த்திசையின் அழகைப்பார்த்து ஆநந்தப்பட்டுக் கொண்டிருந்தான். அதிக நேரம் காத்து இருக்கவில்லை, அச்சுவல பாரிஜாதனும் வில், அம்பு முதலியவற்றுடன் தன் தாய்ப் பின் தொடர எதுகுலனிடம் வந்து சேர்ந்தான். இருவரும் தழுவிக்கொண்டபின் "எதுகுலதிலகா நீ என்ன சூரியோதயத்தைப் பார்த்து ஆனந்திக்கின்றையோ? நான் உன் பக்கம்வரும் வரையில் என்னைத்திரும்பியே பார்க்கவில்லையே நீ" என்றான்.

"பாரிஜாதரே நீர் வந்தது பற்றி மிகச் சந்தோஷம்,"

"என் அருமைச் சிறுவனே நீ வந்துபோனது முதல் என் எஜமானன் வீட்டில் என்னை எத்தனை தொந்தரவு செய்து விட்டார்கள் தெரியுமா? உன்னைப்பற்றி 10,000 கேள்விகள் கேட்டார். நீ அமிர்தேசன் பேரனு இல்லை, தைலப்ப சக்ரவர்த்தி சகோதரன் யக்ஷேசுவரனு என்று கூட அவருக்குச் சந்தேகமோ என்னவோ? தக்க விடை கொடுப்பதற்குள் என் பிராணனுக்கு வந்துவிட்டது. கடைசியாக உன் பாட்டனார் குடியிருக்கும் வீடும் தோட்டமும் அவருடைய சொந்த ஆஸ்தியென்றும், அவை உங்களுக்கு வெகு நாளைக்குமுன் கொடுத்த சேவக மானியம் என்றும், நீங்கள் மாளிகையில் வளர்க்கப்பட்டு கடைசியில் நரசிம்மவீரனும் இறந்து, மாளிகையும், தீப்பற்றி எறிந்தபின், மறுபடி உன் பாட்டன் வீட்டுக்குவந்து சேர்ந்தீர் என்றும், விவரித்துச் சொன்னேன். அவரைவிட அவருடைய குமாரத்தி இன்னும் அதிகமாய் கேள்விகேட்கத் தொடங்கினாள். அவர் இல்லாத சமயத்தில் கடைசியில் நீ வேட்டையாடக் கூடாதென்றும், அவ்வாறு செய்தால் திருட்டுத் தனத்துக்காகத் தன் தகப்பன் தண்டிப்பார் என்றும் உன்னிடம் சொல்லும்படி என்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்" என்றான் பாரிஜாதன்.

'என்னை பத்திரமாய் இருக்கச் சொன்னதுபற்றி அந்த அம்மணிக்கு வந்தனம். எப்படி யிருப்பினும் இன்றைக்கு ஒரு மான் அடிப்பதாகவே தான் புறப்பட்டிருக்கிறேன். இராஜவடிவம் பொருந்திய ஆண் மான்கள் குடியரசு உத்தியோகஸ்தர்களுக்கு ஏற்பட்டன வல்ல. நம்போன்ற இராஜ விசுவாசிகளே வேட்டையாட வேண்டியவை" என்றான் கர்வித்தோடு.

"நீ சொல்வது உண்மையே தம்பி: உன் சாமர்த்தியத்தைப் பார்க்கலாம், புறப்படுவோமா?" என்று புறப்பட ஆரம்பித்தனர். சுமார் 1 நாழிகை வழிதூரம் நடந்து போனதும் மான் அடிச் சுவடு ஒன்றைப்பற்றிக்கொண்டு ஒரு புதரண்டைப் போய்ச்சேர்ந்தார்கள். பாரிஜாதனை வெளியில் நிறுத்திவிட்டு வில் அம்புடன் மெதுவாய் புதருள் புகுந்தான். சப்தம் கேட்டு ஒரு மான் நகரத்தொடங்கிற்று. எய்தான் அம்பை; வில் நாண் சப்தம்கேட்டு இன்னொரு மான் புதரிலிருந்து வெளிப்புறப்பட்டது. பாரிஜாதன் அதைத்துரத்திக் கொண்டு போனான். போய் அதைக் கொள்வதற்குள் எதுகுலனும் அங்கே போய்ச் சேர்ந்தான். எதுகுலன் மானை அடிக்கத் தப்பினதாகவும் தான் அதை அடித்து விட்டதாகவும் நினைத்துக்கொண்டு ஜெம்பமாய்பாரிஜாதன் "என் பிள்ளாய் மானை நழுவவிட்டாய், நானல்லவாகொன்றேன், உன்கையால் ஆகவில்லையே" என்றான். "இந்தப்

பெண்மானை நான் குறிவைக்கவேயில்லையே. அதோ புதரில் நான் அடித்த ஆண்மான் விழுந்துகிடக்கின்றது போய் பார்க்கலாம் வா" என்றான்.

புதரில் போய்ப்பார்க்கவே எதுகுலன் சாமார்த்தியத்துக்கு சாஷியம் இருந்தது.

மகனே இவ்வளவு கவனமாயும், கெட்டித் தனமாயும், நீ வேலை செய்வாய் என்று எனக்கு எண்ணமேயில்லை. உனக்கு பலே பழக்கம் இருக்கிறதுபோல் தோன்றுகின்றது என்று இரண்டு மிருகத்தையும் ஒரே இடத்தில் எடுத்து வைத்தபின், எதுகுலன் "ஐயா பாரிஜாதரே நாம் இருவரும் எங்கள் குடிசைக்குச்சென்று வண்டியையும் குதிரையையும் கொண்டுவந்து. அந்த வண்டியில் இவ்விரண்டையும் போட்டு உம்வீட்டிற்குப் கொண்டுபோகலாம்" என்றான். அதற்கு மணிகாரனும் சம்மதிக்க இருவரும் அமிர்தேசன் குடிசையை நோக்கிச் சென்றனர்.

குடிசைக்குவந்து சேர்ந்ததும் அமிர்தேசனும் பாரிஜாதனும் சிறிதுபொழுது அளவளாவினர். பின்பு பாரிஜாதனும், எதுகுலனும், ஹம்ஸப்ரியனும் போஜனஞ் செய்தனர். போஜனம் முடிந்ததும் குழந்தைகள் வெளியே போயின. எதுகுலனும், ஹம்ஸப்பிரியனும்தோட்டத்தைக்கவனிக்க வெளிச்சென்றனர். அச்சமயத்தில் பாரிஜாதனுக்கு அமிர்தேசன் இக்குழந்தைகள் எவர் என்றும், எவ்விதம் தன்னிடம் வந்தார்கள் என்றும், ஒன்றையும் ஒளிக்காமல் விவரமாய்ச் சொன்னான். பாரிஜாதனுக்கு இதைக்கேட்டு ஆச்சரியமும் சந்தோஷமும் ஒருங்கே எழுந்தது. ஒரே ஓட்டமாய்த் தோட்டத்துக்கு ஓடி எதுகுலனைக்கண்டு "ஐயா நீர் எனது தலைவனான வீரநரசிம்மமல்ல தேவன்குமாரர் என்பது இப்பொழுதே தெரிந்தது. என்னுடன் வேட்டையாடினவர் எவரென்று நான் சரியாய் அறிந்துகொள்ளவில்லை. இப்பொழுது, தெரிந்தபின் என்மனம் குளிர்ந்தது" என்று முறைப்படி இருவருக்கும் வந்தனம் செய்தான்.

எதுகுலதிலகன் கம்பீரமாய் "நீ இவ்வளவுதூரம் மரியாதை செய்யவேண்டியதில்லை. நான் இன்னும் அமிர்தேசன் பேரனாகவே இருக்கவேண்டு மென்பதை மறக்காதே" என்றான்.

"அவ்விதமாகவே தான் நடிக்கவேண்டும் என்பதை ஏழையாகிய நான் மறப்பேனோ? இன்று மத்தியானம் என் சாப்பாடு நரசிம்மராஜன் மகன் எனக்குப்படைக்க நான் எவ்வளவு புண்யம்பண்ணினேனோ தெரியவில்லை" என்று ஆனந்தக் கூத்தாடினான். வெகுநேரம் பலவிஷயங்களைப்பற்றிப் பேசியபின் பாரிஜாதன் "ஐயா எதுகுலரே

அமிர்தேசன் இனி 4, 5, நாள்கூட இருப்பது கஷ்டமே. நான் மறுபடி வந்துபார்க்கிறேன். ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்றான்.

மறுநாள் காலையில் வண்டியில் மிருகங்களை ஏற்றிக்கொண்டு வனங்களைத்தாண்டி பாரிஜாதன் வீடுபோய்ச் சேர்ந்தனர். அன்று இரவு எதுகுலன் அங்கேயே தங்கிவிட்டு மறுநாள் அமிர்தேசன் குடிசைக்குத் திரும்பவேண்டுமென்று தீர்மானம் செய்து கொண்டனர்.

"என் சந்திரமதி எங்களுக்கு ஏதாவது தயவுசெய்கிறாயா? பசிக்கின்றது" என்று பாரிஜாதன் வேலைக்காரியைக் கேட்டான். அவள் உடனே உணவிடவே இருவரும் சாப்பிட்டார்கள். பின்னர் "என் சந்திரமதிஎன் சிநேகிதனை இச்சிறுவருக்குப் படுக்க இடமிருக்கின்றதா என்றான், வீட்டில் இடமில்லை புறவடையில் குதிரைலாயத்துக்குப் பக்கத்தில் புல்வீட்டில் ஏராளமாய்ப் புல்இருக்கிறது. அங்கே வேணுமானால் படுத்துக்கொள்ளட்டும்" என்றாள்.

"அது போதும் எனக்கு" என்றான் எதுகுலதிலகன். படுக்கைக்குப் புறப்பட நேரமானபடியால், எவ்விடத்திற்குப் போவதென்பதைக்காட்ட, எதுகுலனுடன் பாரிஜாதனும் வந்தான். எதுகுலன் புல் அறையில் படுத்துக்கொண்டதும் 200, 250 அடி தூரத்துக்கப்பால் இருந்த தன் குடிசைக்குச் சென்றான் பாரிஜாதன்.

பதார்த்த குண சிந்தாமணி.

கீரை வகை.

சூரணத்தண்டென்னும் பத்தியத்திற்கான கருணைத்தண்டால் மூலரோகமும், கபகோபமும் நீங்கும், பல முண்டாகும், சீரணமும் பசியு முண்டாகும்.

கீரைத்தண்டால் பித்த கிரிச்சரம், பிரமேகச்சூடு, வயிற்றுக் கடுப்பு, ரத்த பேதி முதலிய நோய்களும் போம். ஆனால் அதிவாத சீதளமுள்ளது.

நோயற்ற நல்ல பதார்த்தமாகிய வெண் கீரைத்தண்டினால் வெப்பமும் வெளிமூல ரோகமும் பித்த எரிச்சலும் நீங்கும்.

புதியன் மூலியால் அரிசியோடு வாந்தி, அக்கினிமந்தம், அழுக்கு ரத்தம், மலப்போக்கு, இவை நீங்கும். போசனமும் செல்லும்.

வெள்ளைக்கீரைக்கு வாதகோபம் நீங்கும். முலைப்பால் பெருகும். இளம் பருப்புக் கீரைக்கும் பித்தாதிக்கம் போம்.

மழைக்காலத்து வங்கார வெள்ளைக்கீரையினால் வாதநோயும், வயிற்றுப்பிசமும் நீங்கும், சிக்கிய மலமும், நீரும் சரியாயிறங்கும், குடலுக்குச் சுகமுண்டாகுமென்க.

நல்லபசலைக் கீரையால் நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீங்காத மேகம் அருசிவாந்தி இவைகள் போகும்.

சிறு பசலைக்கீரை தாகத்தையும், சூட்டையும் தணிக்கும், மலத்தையிளக்கும், கபத்தைப் பெருக்கும்.

பாற்சொரிக்கீரை வயிற்றுக் கடுப்பையும், மலம், சீதபேதி இவைகளையும் நீக்கும்.

காணுக்கீரை கபம், அக்கினிமாந்தம் அழிக்கணம், மகோதரம், புழுநெளிகின்ற இரணம் இவை போமென்க.

நமது சித்திரப்படக் கதை.

நூறு வருஷம் நித்திரைசெய்த பெண்மணி.

முன் ஒரு காலத்தில் ஒரு அரசன் ஒரு ஊரில் வசித்துவந்தான். அவனுக்கு ஒரே ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையை மிகவும் அன்பாய் வளர்த்திவந்தான். அதற்கு ஒரு வயதானவுடன் பெயரிட ஒரு சடங்குசெய்தான். அச்சமயத்தில் அநேகரை விருந்துண்ண வரவழைத்தான். வரவழைத்தவர்களில் ஏழு தேவதைகள் வந்திருந்தார்கள். இத் தேவதைகள் ராஜன் குழந்தைக்கு நன்மை செய்ய வந்தார்கள்.

விருந்துண்ண எல்லாரும் உட்காரும்பொழுது ஒரு வயது சென்ற தேவதை உள்ளே நேராகவந்தாள். இத்தேவதையை ராஜன் வரவழைக்கவில்லை. ஏனெனில் ஒருவருக்கும் இத்தேவதையின் க்ஷேம சமாச்சாரம் சுமார் நாற்பது வருஷங்களாகத் தெரியாது. இத்தேவதைக்கோ அரசன் தன்னை விருந்துக்கு அழைக்காததினால் அரசன் மீது கோபம் உண்டாயிற்று. இச்சங்கதி தெரிந்து தேவதைகளில் மிக்க சிறியது தனது இடத்தை அதற்கு கொடுத்துவிட்டு என்ன நடக்கப்போகிறதென்பதைப் பார்க்க ஒரு திரைக்குப்பின்னால் மறைந்திருந்தாள்.

ஆறு தேவதைகளும் குழந்தைப் பெண்ணை ஆசீர்வதித்தார்கள். முதல் தேவதை அப்பெண்ணுக்கு அழகையும், இரண்டாவது நல்ல குணத்தையும், மூன்றாவது கருணையையும், நான்காவது இனியகுரலையும், ஐந்தாவது மரத்திலுள்ள இலைமாதிரி இவள் லேசாய் ஆடும்படியும், ஆறாவது இவள் வெகு கஷ்டமான பாடங்களையும் சுலபமாகக் கற்றுக் கொள்ளும்படியும் ஆசீர்வதித்தார்கள்.

பின்பு வயதான தேவதை முன்வந்து தன் தலையை அசக்கி, "இப்பெண்ணுக்கு பதினைந்தாவது வயது வந்தவுடன் இவள் நூல் நூற்க ஆரம்பிப்பாள். அப்பொழுது இவள் விரல் அந்த நூல் இராட்டினத்தின் முள்ளில் பட்டு முள் தைக்கும். அந்த காயத்தினால் மரணமடைவாள்" என்றாள்.

இவ்விதம் சொன்ன சொற்களைக் கேட்ட விருந்தாளிகளெல்லாம் நடுங்கினார்கள். ராஜனும், ராணியும் துக்கித்து அழுதார்கள். அச்சமயத்தில் திரைக்குப் பின்னால் மறைந்திருந்த அந்தச் சிறிய தேவதை வெளியில் வந்து "பயப்படவேண்டாம். அத்தேவதை சொன்னதையெல்லாம் நான் மாற்றமுடியாது. ஆயினும் ஒன்று சொல்லுகிறேன், கேளுங்கள். அப்பெண் தன்விரலை இராட்டினத்தில் காயம் பண்ணிக்கொள்வது நிச்சயம். ஒருவரும் அப்படிச் செய்வதைத் தடுக்க முடியாது; என்னால் செய்யக்கூடியது ஒன்று உண்டு. அதாவது அக்காயத்தால் இறந்துபோகமாட்டாள். ஆனால் நூறுவருஷம் நித்திரை செய்து கொண்டிருப்பாள். பின்பு ஒரு அரசகுமாரன் வந்து இவளைத் தூக்கத்தினின்று எழுப்பி இவளை மணந்து சுகமாகயிருப்பான்" என்றாள்.

உடனே எல்லா தேவதைகளும் மறைந்துபோய்விட்டார்கள்.

பின்பு அரசன் தன் தேசத்தில் ஒருவரும் நூல் நூற்கும் இராட்டினத்தை வைத்துக் கொள்ளக் கூடாதென்று எல்லாருக்கும் தெரி

வித்தான். ஒருவரும் நூல் நூற்கவும் உத்திரவு பெறவில்லை. ஏனெனில் அப்படி யாராவது செய்தால் ராஜகுமாரி அதில் நூல் நூற்க முயன்று தன்விரலை அதன்முள்ளில் தைக்கும்படி செய்துகொண்டு அதனால் இறந்து விடுவளோ யென்றபயம் ராஜனுக்கு அதிகமாக இருந்தது.

ராஜன் செய்திருந்த உத்திரவெல்லாம் வீணாய் விட்டன.

அவளுடைய பதினைந்தாவது பிறந்த வருஷதினத்தில் தனது தோழிமார்களை வரவழைத்து அவர்களுக்கு ஒரு விருந்தளித்தாள். சாயங்காலம் தேத்தண்ணீர் அருந்தியபின்னர், தன் தோழிகளுடனும் வேலைக்காரிகளுடனும் முகமலர்ச்சியுடன் தனது இருப்பிடத்திற்குச் சமீபத்திலிருக்கும் தோட்டத்திற்குப்போய் கண்ணாம்பூச்சி விளையாட்டு ஆடினாள். ராஜகுமாரத்தி ஒளிந்து கொண்டாள். இவளை மற்றப் பெண்கள் கண்டுபிடிக்க முயன்றார்கள். இவ்விதம் ஒருபெண் ஒளிந்து கொள்வதும், மற்றவர்கள் அவளைக் கண்டு பிடிப்பதுமாக இருந்தார்கள். ராஜகுமாரத்தி மற்றபெண்களுக்குப் பின்னால் ஓடினாள்.

அவ்விதம் ஓடும்பொழுது அச்சோலையில் ஒரு பழைய் கோபுரத்தைக் கண்டாள். கோபுரவாசல் திறந்திருந்தது. உள்ளே யாரிருக்கிறார்களென்பதைக் காண உட்சென்று மெத்தைப்படிகளின் மீது ஏறி மெத்தைக்குப் போனாள். அங்கு போனதும் ஒரு அறையில் ஒரு வயது முதிர்ந்த ஸ்திரீ தையல் யந்திரத்தண்டை உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். நாம் முன் சொல்லிய கிழதேவதைதான் இப்

பொழுது இவ்வித மாறுவேஷத்துடன் தான் இட்ட சாபத்தை நிறைவேற்ற வந்தாளென்று சொல்லலாம்.

ராஜகுமாரத்தி "அம்மா! என்ன செய்கிறீர்கள்? தயவுசெய்து சொல்லுங்கள்" என்று மிக்க மரியாதையுடன் கேட்டாள்.

"எனது பிரியமுள்ள பெண்மணியே! நான் நூல் யந்திரத்தை ஆட்டுகிறேன்" என்றாள் கிழவேஷ ஸ்திரீ.

"ஆ! ஆ!! இது எவ்வளவு நேர்த்தியாயிருக்கிறதே! நான் சிறிது நேரம் இந்தச் சக்கரத்தை ஆட்டலாமா அம்மா!" என்று ராஜ கன்னிகை கேட்டாள்.

பாலில் பழம் நழுவி விழுந்தாற்போல் தன் சாபம் பலிக்கவேண்டுமே என்று காத்துக்கொண்டிருந்த அந்த வேஷம்தரித்த ஸ்திரீ "அம்மா! ஜாக்கிரதையாகச்செய்" என்றாள்.

ராஜகுமாரத்தி நூல் யந்திரத்தைச் சுற்ற ஆரம்பித்தாளோ இல்லையோ கைவிரல் சக்கிரத்தின் முள்ளில்பட்டு காயமுண்டானது. காயம் உண்டாகவே சாபத்தின் பிரகாரம் மயக்கம்கொண்டு கீழே படுத்துக்கொண்டாள்.

விளையாடிக்கொண்டிருந்த மற்றப் பெண்களும், வேலைக்காரிகளும் ராஜாவின்புத்ரி எங்கே போய்விட்டாள் என்று திகிலுடன் விசாரித்து தேட ஆரம்பித்தார்கள். இந்தப் பாழடைந்த கோபுர வாசலின் வழியாக மெத்தைக்கு ஒரு சேனை வருவதுபோல் வந்தார்கள். வந்தவுடன் அரசன் குமாரத்தி மயக்கத்துடன் படுத்திருப்பதைக்கண்டு திகைத்தார்கள். எண்ணாத எண்ணம் எல்லாம் அவர்கள் மனதில் உதித்தன. அந்த வேஷக்கிழவியோ ராஜகுமாரத்தியை மறுபடியும் உயிர்ப்பிக்க செய்பவள்போல் பாசாங்கு செய்துகொண்டிருந்தாள்.

வேலைக்காரிகளுக்கு இன்னது செய்கிறதென்று தெரியவில்லை. சிறிது நேரம் சென்றபின் இந்தப் பெண்மணியை எடுத்துக் கொண்டு ராஜமாளிகைக்குச் கொண்டுபோனார்கள். அநேக வைத்தியர்களை அழைப்பித்து செய்யவேண்டிய சிகிச்சைகளை யெல்லாம் செய்துபார்த்தார்கள். ஒன்றும் பிரயோசனப்படவில்லை. விதியை வெல்ல யாரால் முடியும்? வைத்தியர்கள் செய்தபிரயத்தனங்களெல்லாம் வீணாயின. ராஜ குமாரத்தியோ தூங்குவதுபோல் தென்பட்டாளே யொழிய இறந்துபோனதாகக் காணப்படவில்லை. ஆயினும் தூக்கத்தினின்று இவளை எழுப்ப ஒருவராலும் முடியவில்லை.

இது அக்கிழ தேவதையின் சாபமல்லவா? ஆகையால்தான் அவ்விதம் செய்ய முடியவில்லை. எல்லாரும் மிக்க மனவருத்தத்துடன் அரசகுமாரத்தியைப் படுத்திருக்கும் வண்ணம் விட்டு விட்டு தங்கள் இருப்பிடத்திற்குப் போய்விட்டார்கள்.

அரசகுமாரத்தியை விட்டுவிட்டு யாவரும் போயினபின்பு, சிறிய தேவதை வந்து அங்குள்ளவர்களை யெல்லாம் தனது மாயாசக்தியால் தூங்கும்படிசெய்தாள். சமையல்காரன் சமையல் அறையிலும், தோட்டக்காரன் தோட்டத்திலும், வேலைக்காரர்கள் பெண் பக்கத்திலும், தூங்க ஆரம்பித்தார்கள். நாய்களும், குதிரைகளும், பக்ஷிகளும் நித்திரைசெய்யத் துடங்கின. அவ்வரண்மனை சுற்றிலும் கால்மணி நேரத்திற்குள் காடாக தென்பட்டது. இதனுள் மனிதர் போகமுடியாமல் அவ்வளவு அடர்த்தியாக ஆய்விட்டது. எங்கு பார்த்தாலும் முட்செடிகளுமுண்டாயின. மிருகங்களும் உள்ளே போகமுடியாமல் அச்சிறுதேவதையின்சக்தியால் அவ்விடம் பயங்கரமான காடாக ஆய்விட்டது. இவ்விதமிருந்தால் தான் மிருகங்கள் உட்சென்று நித்திரை செய்பவர்களைப் புசிக்கமுடியாது. இல்லாவிடில் அவர்களை மிருகங்கள் புசித்து விடுமல்லவா? இக்கதை அடுத்தமாசப் பத்திரிகையில்முடியும்.

ஐரோப்பிய யுத்தம்

கடந்த பிப்ரவரி மாதத்தில் ஜெர்மானியர்கள் ப்ரிடிஷ் படையைத் தோற்கடிக்க கலேவழியாக பாரிஸ் என்னும் முக்கிய பட்டணத்துக்

குப் போவது அசாத்தியம் என்பதைக் கைவிட்டுவிட்டார்கள். தங்கள் எண்ணம் நிறைவேறும் பொருட்டு வர்டன் சுற்றிலுமுள்ள கோட்டைகளை முற்றுகைபோட்ட வண்ணமாய் இருந்தார்கள். இப்பொழுதோ தோல்வியுடன் பின்னடைந்து வருகிறார்கள்.

மே மாதத்தில் ஆஸ்திரியர்கள் இத்தாலியின் வடக்கில் பிரவேசித்து டிரேன்டினோ வரையில் தங்கள் கைவசப்படுத்திக்கொண்டார்கள். அம்மாதக் கடசி வரையில் ஜயம் அவர்கள் பக்கமாகவே யிருந்ததாகக் காணப்பட்டதே யொழிய அவர்களுக்கு ஜயம் சிறிது முண்டாகவில்லை.

ஆனால் ஜூன் மாதம் முதற்கொண்டு சண்டையின் நோக்கம் மாறுதல் அடைந்திருக்கிறது. இது இந்த யுத்தத்தின் சரித்திரத்தில் ஒரு புது அத்தியாயம் துடங்கி யிருக்கிறது என்பதை அறியுங்கள்.

மே மாதம் 31உ ஒரு பெரிய கடற் சண்டை நடந்தது. அந்தச் சண்டையில் ஜட்லண்டு கரையின் சமீபத்தில் தங்கள் பலம் முழுவதோடு எதிர்த்துவந்த ஜர்மன் படைக் கப்பல் ப்ரிடிஷ் படைக்கப்பலால் முறியடிக்கப்பட்டது. ஆனால் ஜர்மானியர்கள் தாங்களே ஜயம் அடைந்ததாகக் கொண்டாடினார்கள். ஜயம் என்கிற வார்த்தைக்கு அவர்கள் அகராதியில் அர்த்தம் இன்னதென்பதை அறிவது ஆச்சரியப்படத்தக்கதாக இருக்கிறது. ஏனென்றால் அவர்கள் பட்ட உதையினால் அதி சீக்கிரத்தில் கப்பல் தங்குமிடத்தில் போய் அடைக்கலம் புகுந்தார்கள்.

இதற்கு கொஞ்ச நாள் பிறகு ஜூன் மாதம் முதலில் ருஷியர்கள் ரீகாவிலிருந்து கார்பேத்தியன் மலை வரையில் ஆஸ்திரியர்களைத் துரத்தி எதிர்த்து நின்றார்கள். இதில் ஜர்மானியர்களுக்கும் ருஷியர்களுக்கும் கோவனுக்கு வடக்கே பெரும்சண்டை நடந்தது.

இத்தாலியர்கள் ஜூன் மாதம் கடைசியில் ஆஸ்திரியர்களை எதிர்த்து, சேனைகளை டிரேன்டினோவிலிருந்து வாராத வழியைப் பார்த்து ஓடும்படி துரத்தி கோரிஜியா, கார்ஸோ முதலிய இடங்களை ஆகஸ்ட்மீ பிடித்துக்கொண்டார்கள்.

இவைகளெல்லாம் இப்படி யிருக்க, மேற்கு பிரதேசத்தில் கூட்டாளிகள் (ப்ரிடிஷ் படையும், ப்ரான்சுபடையும்) வர்டனுக்கு 80 மயில் வட மேற்கிலும், இப்பிரேஸுக்கு ஏறக்குறைய 50 மயில் தெற்கிலும், பாரிஸுக்கு ஏறக்குறைய 80 மயில் வட கிழக்கிலும் உள்ள ஆங்கர், சாம் என்னும் 2 நதிகளுக்கு மத்தியிலுள்ள இடத்தை யுத்த களமாகச் செய்து இப்போது ஜர்மானியர்களை எதிர்த்து நிற்கிறார்கள். ஜர்மானியர்கள் மிகுந்த திகிலுடன் பின் வாங்குகிறார்கள்.

மேற் கூறியதிலிருந்து சண்டையின் தற்கால நிலைமையை சற்று ஆலோசித்து பார்ப்போம். மேற்கில் ஆங்கிலேயர்களும் பிரஞ்சுக்காரர்களும், ஆங்கர், சாம் நதிகளுக்கு நடுவே ஜர்மானியர்களை எதிர்த்துக்கொண்டு நிற்கிறார்கள். கிழக்கில் ருஷியர்கள், ஆஸ்திரியர்களைத் தோற்கடித்து, பின் வாங்கும்படிசெய்து வருகிறார்கள். இத்தாலியர்களோ ஆஸ்திரியர்களை டிரிஸ்டு வரையில் துரத்திவிட்டு ட்ரிஸ்டை அடையமுயலுகிறார்கள். பால்கன் நாட்டில் பல்கெரியா இன்னும் ஜர்மானியார்கள் பக்கமாகத்தான் சண்டை போடுகிறார்கள். ஆனால் மிகுந்த கால தாமதம் செய்து கடைசியாக ப்ரிடிஷார் ஜயம் அடைவார்கள் என்று நிச்சயித்து ரொமேனியர் ப்ரிடிஷார் பக்கம் சேர்ந்து ஆஸ்திரியர்களைத் துறத்திக் கொண்டு வருகிறார்கள்.

ஏஷியாமைனரில் ருஷியர்கள் துருக்கியர்களை நசுக்கிக்கொண்டு இருக்கிறார்கள். இது அவர்களுடைய மடத்தனத்துக்கும் துரோகசிந்தனைக்கும் சரியான தண்டனை தான்.

ஆஸ்த்ரியாவுக்கும், பல்கேரியாவுக்கும் ஆபத்து சமயம் சமீபித்து வருகிறது. வெகு சீக்கிரத்தில் கிரீசும் கூட்டாளியோடு சேரும் என்பதில் கொஞ்சமும் சந்தேகமிராது. ஆகையினால் ஜர்மானியர்களும் ஆஸ்திரியர்களும் நாலாப்பக்கத்திலும் எதிர்க்கப்பட்டு நெருப்பில் விழுந்த புழுப்போல துடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இதிலிருந்து சண்டை சீக்கிரத்தில் நின்றுவிடும் என்று நீங்கள் நினைக்கவேண்டாம். ஜர்மானியர்களுடைய சைனியங்கள், சண்டைக் கப்பல்கள், பீரங்கிகள், மருந்துகள், இவைகள் எல்லாம் அழிந்து அவர்கள் பலம் அடியோடு ஒடுங்கும் வரையில் சண்டை நடக்கும். ஜர்மானியர்கள் பெல்ஜியம், போலண்ட், அல்லது வர்டேண் முதலிய விடங்களைத் தாண்டிச்செல்ல சேனைகளைக்கொண்டுபோக முடியவில்லை. இப்பொழுது ஜயத்தை எதிர்பார்த்த ஜர்மானியர்கள் தோல்வியுடன் தங்கள் தேசத்துக்குத் திரும்பிப்போக நினைக்கிறார்கள். கடைசியாக ப்ரிடிஷாருக்கு கூடிய சீக்கிரத்தில் ஜயமும், சமாதானமுமுண்டாகும்படி கடவுள் கிருபை செய்வாராக. அடுத்தமாசப் பத்திரிகையில் மற்ற விபரம் எழுதப்படும்.

சென்னையில் பெண் கல்வி.

(சைதாப்பேட்டை மிஸ்டர் சி. எஸ். சுந்தரம் அய்யர் எழுதியது.)

சென்னையில் பெண்கல்வி, அபிவிருத்தி யடைவதில் மெதுவாக இருந்தாலும், உறுதியாக அபி விருத்தி யடைந்து வருகிறது. 6 வயது

முதல் 12 வயது வரையிலும் குழந்தைகள் ஸ்கூலுக்குப் போகும் காலம் என்று இந்தியாவில் சொல்லப் படுகிறது. அது விஷயமாய் கவர்ன்மெண்டார் நூற்றுக்குப் பதினைந்தென்று மதிப்புத் திட்டம் போட்டிருக்கிறார்கள்.

ஸ்கூலில் படிக்கும்பெண் குழந்தைகளின் சராசரி மதிப்புத் திட்டம் நூற்றுக்கு 4-7. சென்னை ராஜதானியில் சென்ற 30 வருஷ காலமாய் பப்ளிக் ஸ்கூல்களில் பள்ளிக்கூடத்திற்குப் போகும் வயதுள்ள பிள்ளைகள் 1882-ம் வருஷத்தில் 10 ஆயிரத்துக்கு 105 ஆக இருந்தது. 1914-ம் வருஷத்தில் 403 ஆக உயர்ந்துவிட்டது. 1891-1901 -1911 இந்த வருஷங்களில் சென்னை ராஜதானியின் ஜனத்தொகைக் கணக்கின்படி படித்த பெண்பிள்ளைகளின் சராசரித் தொகை ஆயிரத்திற்கு முறையே 6.9-9. 2-13.4 ஆக இருந்தது.

அதற்கு முந்திய ஸென்ஸெஸ் கணக்குகளின்படி எழுதவும் வாசிக்கவும் தெரியாமல் கையெழுத்து மட்டும் போடத் தெரிந்தவர்கள், படித்த வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டு வந்தார்கள். ஸ்திரீகளில் நூற்றுக்கு ஒருத்திக்குத் தான் எழுதவும் வாசிக்கவும் தெரிந்திருந்தது.

சென்ற 20 வருஷகாலமாக, ஸ்திரீகளுக்காக ஏற்பட்ட காலேஜ் ஒன்றிலிருந்து மூன்றாக உயர்ந்திருக்கிறது. அவைகளில் படித்து வந்த மாணாக்கர்களின் தொகை ஒன்றிலிருந்து 65 ஆக உயர்ந்திருக்கிறது. 1887-ம் வருஷத்தில், ஸ்திரீ உபாத்திமார்களின் போதனா முறைக்காக ஏற்பட்ட ஸ்கூல்களின் தொகை 12.1915-ம் வருஷத்தில் 23, அவைகளில்படித்த மாணாக்கர்களின் தொகையும் இரட்டிப்பாயிருந்தது. 1915-ம் வருஷத்தில் 646 பேர்கள்.

போதனா முறை ஸ்கூல்களின் செலவு 1915-ம் வருஷத்தில் 40 ஆயிரத்திலிருந்து 187000 ஆக உயர்ந்திருக்கிறது. செக்கெண்டெரி ஸ்கூல்களின் தொகை 233 ஆக இருந்தது 38-க்கு குறைந்துவிட்டது. அவைகளில் வாசித்து வந்த மாணாக்கர்களின் தொகை 19030 ஆக இருந்தது 6288-க்குக் குறைந்துவிட்டது. பெண்களுக்காக ஏற்பட்ட பிரைமெரி ஸ்கூல்களின் தொகை இரட்டிப்பாக உயர்ந்தது. அவைகளில் படிக்கும் பெண்களின் தொகை நான்கு மடங்கு அதிகரித்தது. 1915-ம் வருஷத்தில் பெண்களுக்காக ஏற்பட்ட பிரைமெரி ஸ்கூல்களின் தொகை 120000. ஐரோப்பியர்களுக்காக ஏற்பட்ட ஸ்கூல்கள் அல்லாமல் மற்றப் பெண்கள் படிக்கும் காலேஜ், செக்கெண்டெரி பிரைமெரி போதனா முறை ஸ்கூல்களுக்காக ஏற்பட்ட மொத்தச்

செலவு 1882-ம் வருஷத்தில் 3 லக்ஷம் ரூபாயாக இருந்தது. 1915-ம் வருஷத்தில் 14½ லக்ஷம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

மெடிகல் ஸ்கூல்களிலும் காலேஜ்களிலும் படித்த பெண்களின் மொத்தம் 1911-ம் வருஷத்தில் 40 பேர்கள்: 1915-ம் வருஷத்தில், 1916 பிரைமெரி ஸ்கூல்களும் 38 செக்கெண்டெரி ஸ்கூல்களும் 23 போதனாமுறை ஸ்கூல்களும் 3 காலேஜுகளும் இருந்தன. அதே 1915-ம் வருஷத்தில் பிரைமெரி ஸ்கூல்களின் படித்த மாணாக்கர்களின்தொகை 1,19,963 பேர்கள். செக்கெண்டெரி ஸ்கூல்களில் 6,288. காலேஜில் 65.

பெண் கல்வி இவ்வளவு மெதுவாக விருத்தியடைவதற்குக் காரணம் என்ன? கவர்ன்மெண்டார் அதற்கு என்ன பரிகாரவழியை அனுஷ்டித்து வருகிறார்கள்? இந்தியா முழுவதிலும் பெண்கல்வியின் அபிவிருத்திக்குப் பல தடைகள் ஏற்பட்டிருக்கின்றன. பிள்ளைகளின் படிப்புவிஷயமாய் கவனம் செலுத்தப்பட்டதற்கு வெகுகாலத்திற்கப்புறம் பெண்களின் கல்வியைப்பற்றி கவனிக்க ஆரம்பித்தார்கள். ஜீவனோபாயத்திற்காகவே புருஷர்கள் படிப்பில் ஆசை வைத்துப் படித்து வந்தார்கள். பெண்கள் ஜீவனோபாயத்திற்குத் தேடவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இந்தியாவில் ஸ்திரீகள் சம்பாதிப்பதற்காக ஆசைப்படுகிறதுமில்லை, அதற்கு அவசியமும் ஏற்படவுமில்லை.

பால்ய விவாகமும், ஸ்திரீகள் புருஷர்களுடைய மத்தியில் கலக்காமல் ஒதுங்கி இருத்தல், இவ்விரண்டு காரணங்கள் பெண்கல்வியின் அபிவிருத்திக்குத் தடையாக இருக்கின்றன. பெண்கள் நிரம்ப சீக்கிரத்திலேயே படிப்பை நிறுத்திவிடுகிறார்கள். 11 வயதுக்குமேல் பெண்கள் படிக்கிறதில்லை. பிள்ளைகளுக்குப் படிப்பு எப்படி அவசியமோ அப்படியே பெண்களுக்கும் அவசியம் என்பதை ஹிந்துக்களும், மகம்மதியர்களும் இப்பொழுது உணர்ந்து வருகிறார்கள். பிள்ளைகளின் படிப்பு அபிவிருத்தியாவதினால், அவர்கள் விவாகம் செய்துகொள்ளப் போகும் பெண்களைத்தேடும் பொழுது, அவர்கள் பெண்களின் தேக ஆரோக்கியத்தையும், இலக்ஷணங்களையும் கவனிப்பதைவிட, பெண்களுக்கு வாசிக்கத் தெரிகிறதா என்பதைப்பற்றி அதிகமாகக்கவனிக்கிறார்கள். பெரிய பெண்களுக்குப் பிரத்தியேகமாக கல்வி கற்பிப்பதற்காக ஜெனனகிராண்டுப் பணம் கொடுக்கப்படுகிறது. ஜெனனா மிஷனும், சென்னை, கடலூர், கோயமுத்தூர் ஆகிய இத்தலங்களிலுள்ள நாஷனல் இந்தியச்சங்கங்களும் நல்லவேலைகள் செய்து வருகின்றன.

பெண்கள் படிக்கும் பாடசாலைகளுக்கு உபாத்திமார்களை நியமிப்பது நிரம்ப கஷ்டம். இதைப் பரிகாரஞ் செய்வதற்கு, பெண்களுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பெண்களை உபாத்திமார்களாக இருக்கும் பெண்பாடசாலைகளில், ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்படுகின்றன. ஸ்கூல் உபாத்திமார்களின் மனைவிகள் உபாத்திமைத் தொழிலை அனுஷ்டித்து வருவதற்காக அவர்களுக்கும் தாராளமாய் பண உதவி செய்யப்பட்டு வருகின்றது. கைம்பெண்கள் உபாத்திமைத் தொழிலுக்கு ஏற்றவர்களாக ஆகும்படியாகப்பயிற்சி பெற்றுவருகிறார்கள். ஸ்திரீ உபாத்திமார்கள் போதனா முறையில் பயிலுவதற்காக அதிக போதனா முறைப்பாடசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. கைம்பெண்களுக்காக ஆச்சிரமம் ஏற்பட்டிருக்கிறது. எந்த ஸ்தாபனமும் விருத்தி யடைய வேண்டுமானால், ஜனங்கள் தங்களாலானபடி சிரமமெடுத்துக் கொண்டு உழைத்துவரவேண்டும். கைம்பெண்கள், உபாத்திமைத் தொழிலை சர்வ சிரேஷ்டமான தொழில் என்றும், அதில் நல்லொழுக்கம் முதலிய பலவித குணங்கள் விருத்தி யடையும் என்றும், ஜீவனோபாயத்திற்காக இத்தொழிலை ஏற்றுக் கொள்ளாமல் பரிதாபப்படக் கூடிய சகோதரிகளின் நிலைமையை உயர்த்துவதற்காகவே இத்தொழிலை நடத்திவர வேண்டும் என்றும், அவர்கள் எண்ண வேண்டும்.

1881-ம் வருஷத்தில் தான் முதல் முதல் ஸ்கூல் இன்ஸ்பெக்ட்ரெஸ் நியமிக்கப்பட்டார். 2-வது இன்ஸ்பெக்ட்ரெஸ் 1888 இல் நியமிக்கப் பட்டார். மூன்றாவது இன்ஸ்பெக்ட்ரெஸ் 1901-ம் வருஷத்தில் நியமிக்கப்பட்டார். மிஸ் பெயின், மிஸ் கார், மிஸ் ஆர்னால்டு போன்றவர்கள் பெண் கல்வியின் அபிவிருத்தியில் மிக்க உழைத்திருக்கிறார்கள். பெண்களுக்கு ஏற்பட்ட பாட புஸ்தகங்கள் அவ்வளவு திருப்திகரமாக இல்லை. அவைகளை கவர்ன்மெண்டார்தான் கவனிக்கவேண்டும். தகுந்தபடி பாடபுஸ்தகங்களை இந்திய கனவான்களும் சீமாட்டிகளும் எழுதிவர வேண்டும். ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்ப்பதற்கு வேண்டிய புஸ்தகங்கள் இருக்கின்றன. பெற்றோர்கள் தங்களுடைய பெண்களை ஸ்கூல்களுக்கு அனுப்பிவரவேண்டியது மெத்தாவசியம் என்று உணர்ந்து அனுப்பி வரவேண்டும்.

(சுதேசமித்திரன்)

இங்கிலாந்து சரித்திரக் கதை.

1. பிரித்தானியர்கள்.

சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இப்பொழுது இங்கிலாந்து என்று வழங்கும் தேசத்துக்கு பிரித்தன் என்று பெயர். அக்காலத்தில் அங்கு வசித்தவர்களை பிரித்தானியர்களென்பார்கள். இப்பிரித்தானியரெல்லோரும் ஒரே இடத்திலிருந்து கொண்டு தங்களுக்குத் தெரிந்த பயிர்சிகளை அநுசரித்தும், விர்த்திசெய்து கொண்டுமிருக்க சரிப்படவில்லை. ஏனெனில், அக்காலத்தில் அந்நாட்டில், காடுகளும், செடிகளும், மலைகளும், சதுப்பு நிலங்களும், இடை இடையே ஏராளமாக விருந்தன. ஆனது பற்றி இப்பிரித்தானியர்களுடைய நாகரீகம் பலவிதமாகவிருக்க நேர்ந்த போதிலும், இவர்களுள் தென்பாகத்திலிருந்தவர்கள் மற்ற பாகங்களிலிருந்தவர்களைக் காட்டிலும் நாகரீக முள்ள வராயிருந்தனர். அவர்கள் அங்கு வியவசாயம் செய்து கொண்டும், அதற்கு சாதகமான ஆடுமாடுகளைப் போஷித்தும், வடபாகத்திலிருந்தவர்களைப் போல் மரவுரி தரியாது நெய்த ஆடைகளைத் தரித்தும், பொன் வெள்ளி முதலான சிறந்த உலோகங்களால் செய்யப்பட்ட ஆபரணங்களை அணிந்தும், இருப்பாயுதங்களை உபயோகித்தும், வெங்கல பாத்திரங்களைப் புழங்கியும் வாழ்ந்து வந்தனர். இது அல்லாமல் தங்களுக்குக்கிழக்கேயும், தங்கள் தேசத்திலிருந்து பிரிடிஷ் சானலால் (British channel) பிரிக்கப்பட்டுமுள்ள, கால் (Gaul) தேசத்தில் வசித்த தங்களினத்தாரோடு தகர வியாபாரம் செய்து வந்தனர். இன்னும் இவர்களுடைய மதவிஷயங்களை ஆராயுங்கால், இவர்கள் நாகரீகஜனங்கள் வகுப்பில் சேரத்தக்கவரே யென்று சொல்லவேண்டும். இவர்கள் பல தெய்வங்களை ஆராதித்தும், ட்ரூயிட்ஸ் (Druids) என்ற சொல்லப்பட்ட கவிராயர்களாகிய குருக்களின் வாக்கியங்களை பரிபாலனம் செய்தும் வந்தனர். இவ்வளவிருந்தும், இவர்களது நாகரீகம் இவர்களுள் ஐக்கியமில்லாமையான பெருங் குறையைப் பெற்றிருந்தது.

மிஸ்டிலாஹேற செய்த உபந்நியாசம்.

சென்னை ப்ரிஸிடென்ஸி காலேஜியில் சென்னை ஸ்திரீகள்காலேஜ் ப்ரின்ஸ்பாலாகிய மிஸ் டி-லா-ஹேற "ஸ்திரீகளுக்கு இந்தியச் சிறுவர்கள் செய்யவேண்டிய கடமை" என்ற விஷயத்தைப்பற்றி உபந்நியாசம்

செய்தார்கள். அச்சமயத்தில் திவான் பஹதூர் பி. ராஜகோபால சாரி யாரவர்கள் சபைத்தலைமையை வகித்தார்.

மிஸ் டிலாஹே செய்த உபந்யாசத்தைச் சுருக்கி எழுதுகிறோம். பெரியோரை யாவரும் மரியாதை பண்ணவேண்டும். இது சகஜமே. இந்தியாவில் வயதுமுதிர்ந்த ஸ்திரீகள் விருத்திக்கு வரக்கூடிய எண்ணங்களுடையவர்களா யிருக்கவேண்டும். இவர்களுக்கு அவ்வித எண்ணமிருந்தால்தான், இவர்கள் குமாரத்திகளும் அவ்வித எண்ணமுடையவர்களா யிருப்பார்கள். பெண்களுக்கு கல்வி நல்லபலனைத் தருமென்று சொல்லவேண்டும். கல்வியால் நல்ல மனிதராகிறார்கள். கல்வியே பெண்களை நல்லவர்களாகச் செய்யும்.

முன்காலத்தில் பெண் கல்வி விஷயமாக தர்க்கித்து வந்தார்கள். இப்பொழுதோ பெண்களுக்கு கல்வி அவசியம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு இங்லீஷ் அவசியமா வென்பது தான் கேள்வி. ஸ்திரீகளுக்கு அவசியமானதெதுவோ அதை அவர்கள்தான் சொல்லவேண்டும்.

அதிகப் படிப்பு படித்தவன் படிப்பில்லாத பெண்ணை மணந்து கொண்டால் இருவரும் சந்துஷ்டியாய் குடித்தனம் செய்வது அசாத்தியம். குழந்தைகளை நல்லவழியில் பழக்கவேண்டுமானால் தாய்மார்களுக்கு கல்வியறிவு அவசியம் தேவை.

சிலர் ஸ்திரீகளுக்கு இங்லீஷ் அவசியமில்லை யென்றும் அதில்லாமலே முன் காலத்தில் சகுந்தலையைப்போன்ற மாதர்களிருக்கிறார்களென்றும் சொல்லுவார்கள். ஆனால் அக்காலத்திற் கேற்றபடி சகுந்தலையிருந்தாள். இக்காலத்திற் கேற்ற கல்வி ஸ்திரீகளுக்கு வேண்டும். எவ்விதமான முறையில் நமது ஸ்திரீகளுக்கு கல்வி புகட்டவேண்டும் என்ற கேள்விவரும். அம்முறையோ நமது ஊக்கத்தாலும், விடாமுயற்சியாலும் க்ரமேண மெதுவாக நமது தேசத்துக்கு ஒத்ததாய் வந்துவிடும். நன்றாக விருத்தியடைந்த ஸ்திரீகள் வேண்டுமானால் ஸ்திரீகளுக்கு உயர்தரக் கல்வி புகட்டவேண்டும். அதாவது அவர்களை காலேஜியில் சேர்த்து படிப்பிக்கவேண்டும்.

உயர்தரக் கல்வியால் தீங்குவிளையுமென்று சிலரைப் பார்த்து சொல்லக்கூடாது. ஸ்திரீகள் இஷ்டப்பட்டாலாவது அல்லது உபாத்திமார்களாயிருக்க விரும்பினாலாவது உயர்தரக்கல்வி படிக்கலாம். அப்படி யில்லாதவர்களுக்கு உயர்தரக்கல்வி புகட்ட எனக்குச் சிறிதும் சம்மதமில்லை. ஸ்திரீகள் சீக்கிரத்தில் விவாகம் செய்துகொள்வதை நிறுத்தவேண்டும். ஏனெனில் அவர்கள் உபாத்திமைத்தொழிலுக்

குச் சென்றால் அது அவர்களுக்கு தடங்கலாயிருக்கக் கூடாது. அவ்விதமிருக்க எண்ணமுடைய ஸ்திரீகளைத் தைரியப்படுத்தவேண்டும்.

பின்பு பாலிய விவா கத்தால் வெகுதீங்குகள் உண்டு. இது பெண் கல்விக்குப் பெரியதடையா யிருக்கிறது. வர சுல்கம் இன்னும் வழங்கி வருகிறது. இதையும் ஒழித்து விடவேண்டும். வாலிபர்கள் சிறிய பெண்களை மணம்புரிந்து கொள்ளக்கூடாது!!

"மிஸ் டிலாஹே சொன்னவைகள் மிகவும் சிறந்த புத்திமதிகளா யிருக்கின்றன. பெரியோரிடத்தில் வாலிபர்கள் மௌனமாயிருக்க வேண்டும். வீண்பேச்சுகள் பேசி விகண்டாவாதம் பண்ணக்கூடாது. ஒவ்வொரு வாலிபனும் தன் மனைவிக்கு தனக்கு ஒழிந்த நேரத்தில் கல்வி புகட்டிவர முயலவேண்டும். இப்படி செய்வதுதான் ஒவ்வொருவனுடைய முக்கிய கடமையாகும்" என்று சபைத்தலைவர் சொல்லி முடித்தார்.

இந்திய துருப்புகளின் வீரச்செய்கை

இந்திய துருப்புகள் இந்தியாவிலிருந்து யுத்தகளத்திற்கு வருகின்றார்களென்பதைக் கேட்ட ஜர்மானியர்கள் முதலில் அவர்களை அலக்ஷியமாக எண்ணினார்கள். பின்னிட்டு அவர்கள் செய்த வீரச் செய்கைகளைக்கண்டு நடுங்க ஆரம்பித்தார்கள்.

இந்திய துருப்புகள் வந்தவுடன் ஜர்மானியர்கள் அவர்களை ஏமாற்ற பல தந்திரங்களைச் செய்தார்கள். ஒரு இரவு கபட நெஞ்சுள்ள ஜர்மானிய சோல்ஜர் ஒருவன் கூர்க்கர் உத்தியோகஸ்தன் மாதிரி வேஷம் தரித்து கூர்க்கர் சைனியமிருக்கு மிடத்திற்குச் சென்றான். சிறிது நேரம் நிலவில் நின்றபின், அவர்கள் உத்தியோகஸ்தரைப்பார்த்து "ஐயா, வேறு ஒருபெரிய கூர்க்கா சைனியம் வந்துகொண்டிருக்கிறது. அதற்கு இந்த இடத்தைக் கொடுக்கவேண்டும். நீங்கள் இன்னும் வெகுதூரம் போகவேண்டும் என்பதைச்சொல்ல உங்களது பெரிய உத்தியோகஸ்தர் என்னைத் தூதனாக அனுப்பியிருக்கிறார்" என்றான்.

இவ்வித மோசத்தால் இரவில் இந்திய துருப்புகளை எதிர்க்க யோசித்தார்கள். மேலும், இவர்கள் அவ்விடத்தை விட்டு வேறு இடத்திற்குப் போகும்பக்ஷத்தில் ஜர்மானியர்கள் யாதொரு கஷ்டமின்றி அவர்கள் தோண்டியிருக்கும் பள்ளத்தைப் பிடித்துக்கொள்ளலாமல்லவா? இவ்வித கெட்ட எண்ணத்துடன் ஜர்மானி சோல்ஜர் சொன்னதைக் கேட்ட ஒரு உத்தியோகஸ்தன் சிறிது நேரம் திகைத்

தான். பின்பு அந்த அந்நியனைப்பார்த்து, "நீ யார்? எங்கிருந்து வருகிறாய்" என்று தைரியத்துடன் கேட்டான்.

"நீங்கள் அந்த இடத்தைக் காலிபண்ண வேண்டு"மென்று இங்கிலீஷில் சொன்னானே தவிர கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. இது அவ்வுத்தியோகஸ்தனுக்கு சந்தேகத்தை உண்டாக்கியது. ராணுவத்தில் இவ்விதம் உத்திரவு வந்தால் உடனே அதன் படி கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். ராணுவ உத்தியோகஸ்தன் அவ்விதம் செய்வதற்குமுன் இவன் சொல்வது உண்மையாவென்பதை அறிய விரும்பினான்.

கூர்க்கா உத்தியோகஸ்தன் உடனே "ஏ தூதா! நான் கேட்கும் கேள்விக்கு உடனே பதில் சொல்ல வேண்டும். நீ கூர்க்கா துருப்பைச் சேர்ந்தவனாயிருந்தால், எந்தப்படகின் மூலமாக இந்நதியைத் தாண்டிக் கொண்டுவந்தாய்" என்பதை உடனே சொல் என்றான்.

அந்த கெட்ட எண்ணமுள்ள ஜர்மானியன் இக்கேள்விக்குப் பதில் சொல்லமுடியவில்லை. இவ்விதம் பதில் சொல்ல முடியாமல் நான் இவர் கையில் சிக்கிக் கொண்டேனே என்று எண்ணி ஓட ஆரம்பித்தான். அந்த உத்தியோகஸ்தன் துப்பாக்கியை எடுத்து அவனைச் சுட்டு கொன்றுவிட்டான்.

இவ்விதம் பற்பல சூதுகளை அவர்கள் செய்து ப்ரிடிஷ் படைகளை ஏமாற்ற முயன்றதில் 'கெடுவான் கேடு நினைப்பான்," என்பதற்கிணங்க அவர்களுக்கே அவ்வித சூதுகள் ஆபத்தாய் முடிந்தன.

பெல்ஜியத்தில் டிக்ஸ் மூடுக்கு சமீபத்தில் ஜர்மானியர்களுக்கும் ப்ரிடிஷாருக்கும் பலத்த யுத்தம் நடந்தது. ஜர்மானியர்களின் தொகையோ அதிகம். ப்ரிடிஷாரின் தொகையோ அவர்களை விட அதிகக் குறைச்சலாகயிருந்தது. ஆயினும் ப்ரிடிஷார் தைரியம் தளராமல் சில நாள் ஜர்மானியர்களை எதிர்த்து வந்தார்கள். ப்ரிடிஷாருக்கு உதவியாக கூர்க்காபடையொன்று வந்து சேர்ந்தது. இருபடையும் சேர்ந்து குண்டுகளைச் சரமாரியாக ஜர்மானியர்களின்மீது பொழிந்துவந்தார்கள். இரவு வந்தவுடனும் யுத்தம் பலமாக நடந்தது. நடுராத்ரியில் ஜர்மானியர்கள் களைத்து குண்டுகளை ப்ரயோகம் செய்வதை நிறுத்திவிட்டார்கள். கூர்க்காபடையின் அநேகர் திடீரென்று தென்படவில்லை. இப்படி இவர்கள் தென்படாமலிருந்தது ப்ரிடிஷாருக்கு திகிலையுண்டு பண்ணிற்று. அவர்கள் வேறு இடத்திற்குப் போக வேண்டுமென உத்திரவு வந்த சங்கதி ப்ரிடிஷாருக்குத் தெரிந்தவுடன் முகமலர்ச்சியுடனிருந்தார்கள். இதனால்தான் ஜர்மானியர்கள் யுத்தம் செய்வதை நிறுத்திவிட்டார்கள் போல் தோன்றுகிறது.

ஒரு ப்ரிடிஷ் சோல்ஜர் மற்றொரு சோல்ஜரைப் பார்த்து, "கூர்க்கர்கள் வேறு புதியவிடத்திற்குப் போயிருக்கிறார்கள்; ஒரு வேளை ஜர்மானியர்கள் அவ்விடத்திற்குப் போயிருக்கலாம். அவர்களைச்சந்திப்பதற்காகவே கூர்க்கர்கள் போயிருக்கலா"மென்றான்.

பொழுது விடிந்தவுடன் கூர்க்கர்கள் தாங்கள் முன்னிருந்தவிடத்திற்குத் திரும்பி வந்து விட்டார்கள். இரவு முழுவதும் அவர்கள் யுத்தம் செய்தார்களாம். இவர்கள் ஜர்மானியர்களுடைய ட்ரன்சுகளை கைவசமாக்கிக் கொண்டதும் தவிர அவர்களில் அநேகரைக் கொன்றார்களாம். கூர்க்கர்களுக்கும் அவர்களது இடது கைகளில் சிறிது காயம் பட்டதாம். இவர்களுடைய தைரியமே தைரியம். நமது சக்கரவர்த்திக்காக முழுராஜவிசுவாசத்துடன் ப்ரிடிஷாருடன் கலந்து தைரியத்துடன் யுத்தம் செய்ததும் தவிர ஜர்மானியர்களுடைய இடங்களைக் கைவசப்படுத்திக்கொண்டதும் ஆச்சரியமல்லவா?

இன்னொரு சமயம் ஒருநாள் இராத்திரி ஜம்ரஸுக்கு தெற்கில் பட்டாணி துருப்புகள் அவர்களை எதிர்த்தார்கள். பகலில் ஜர்மானியர்கள் வேறொருவிடத்தில் திரண்ட சேனையுடனிருந்தார்கள். இவர்கள் இருள் வந்தவுடன் ப்ரிடிஷ் படையின் மீது சரமாரியாக குண்டுகளை பிரயோகம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் சென்றார்களாம். மேலும் ஜர்மானியர் முன்னுக்கு பெருத்த சேனையை அனுப்பியதால் ப்ரிடிஷாருக்குச் சொந்தமான இடத்தைப் பிடித்துக் கொள்ளலாமென்று நம்பியிருந்தார்களாம்.

ஆனால் சாயங்கால சமயத்தில் மழை பெய்ய ஆரம்பித்தது. இருளாக ஆக மழை அதிகரித்தது. "யுத்தம் செய்வதற்கு இது சரியான இரவல்ல" வென்று பிரிடிஷ் சோல்ஜர்கள் சொல்லுவது யாவருக்கும் கேட்டதாம். இவர்களுக்குஅந்தண்டை இந்தண்டை நகரவும் மழைக்கு ஒதுங்கியிருக்கவும் இடமில்லையாம். இரவு முழுவதும் இவர்களுக்கு நித்திரையுமில்லையாம். இவர்களுக்கெதிரில் 200 கஜ தூரத்திலுள்ள ஜர்மானியர்கள் எங்கு சமீபத்தில் வந்து விடுவார்களோ என்பதைக் கவனித்து அவர்களைத் தடுக்கத் தயாராயிருந்தார்களாம்.

இவர்களுக்குச் சமீபத்தில் ஒருவரிசையாக மரங்களடர்ந்திருந்தன. நல்லிரவாயிருந்த சமயத்தில் சிக்படையைச்சேர்ந்த சிலர் இவ்விடத்தில் வந்து சேர்ந்தார்கள். சிங்கம், புலிகள் எப்படி திருட்டுத்தனமாய் நகர்ந்து செல்லுமோ அம்மாதிரி இவர்கள் காட்டின் வழியாக நகர்ந்துசென்றார்களாம். அவ்விதம் சென்றபொழுது சிறிதும் சத்தமும் காலடியும் கேட்கவில்லையாம்.

சிக்படை வந்திருக்கிறதென்ற சங்கதி ஜர்மானியர்களுக்குத்தெரியாது. அவர்களிருந்த விடத்திற்கு சிக்படை மெதுவாக வந்து சேர்ந்தது. ப்ரிடிஷாரிருந்த விடத்தில் ஒருவன் இதென்னவென்று மற்றொருவனைக் கேட்டான்! 'அவன் இந்தியர்கள் வெளியேபோகிறார்கள்,' என்று பதில் உரைத்தான். இதைக் கேட்டு யாவரும் புன்சிரிப்பு கொண்டார்களாம். இந்தியர்கள் போவதைபலவிடத்திலுள்ள சோல்ஜர்கள் பார்த்தவண்ணமாயிருந்தார்கள். இவர்களுக்கு அவர்களின் கருமையான உருவம் சப்தமின்றி போவது தெரியும். இவர்களுக்கு ஜர்மானிய சேனைக்காவலாளர்களின் உருவம் நன்றாகத் தெரிந்ததாம். ஒரு ப்ரிடிஷ் சோல்ஜர் ஆறு பேரிருப்பதை எண்ணிவிட்டு அவர்களைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டேயிருந்தானாம். உடனே அந்த ஆறு பேரும் இவன் கண்ணுக்குத் தென்படவில்லையாம். இன்னது நடந்ததென்பது ஒருவருக்கும் தெரியாது. ப்ரிடிஷாரிருக்கும் இடத்தில் சப்தமொன்றும் கேட்கவில்லையாம்.

முதலில் ஏவுபார்க்கச் சென்ற சிக்படையில் சிலர் திரும்பி வந்து இன்னும் நூற்றுக்கணக்காயுள்ள சிக்சிப்பாய்களைக் கூட்டிக்கொண்டு முன் போன மாதிரி மெதுவாக நகர்ந்துபோனார்கள். இங்கு சிறிது சைனியத்துடனிருந்த ப்ரிடிஷாரை எதிர்க்க ஜர்மானியர் தயாராயிருந்தார்கள்.

சிக்படை ஜர்மானியர்களை எதிர்த்து அவர்களில் அநேகரைக் கொன்றார்கள். சிலரைக் காயப்படுத்தினார்கள். தப்பினவர்கள் செத்தோம் பிழைத்தோம் என்று விழுந்தடித்துக்கொண்டு ஓடினார்கள். அநேகரைக் கைதிசெய்துகொண்டு சிக்படை உற்சாகத்துடன் ப்ரிடிஷ் படையிருக்குமிடத்திற்கு வந்தது. உடனே அபஜயமடைந்த ஜர்மானியர்கள் குண்டுகளை ப்ரிடிஷ்படையின் மீது ப்ரயோகித்தார்களாம். ப்ரிடிஷ்படையும் அவர்களுடன் யுத்தம் செய்தார்கள். ஆனால் ஜர்மானியர்கள் ப்ரிடிஷ் படையுடன் எதிர்க்கமுடியவில்லை. மறுநாள் ப்ரிடிஷாருக்கு பெருத்த சைனியம் வந்து சேர்ந்தது. சிக்படை மேற்கூறிய வண்ணம் செய்தது மிகவும் மெச்சத் தகுந்ததே. ஜர்மானியர்கள் ப்ரிடிஷ்படை பலமடைந்திருப்பதைக் கண்டு திகிலடைந்து உடனே வேறு இடத்திற்கு தங்கள் இடத்தை மாற்றிக்கொண்டார்கள்.

விகட கொத்து

கண்குருடும், காதுசெவிடுமாய் கிழவி யொருவள் ஒரு நகரத்தின் வீதியில் குடியிருந்தனள். அந்நகரத்தில் உற்சவகாலம் வந்தது. லட்சக்கணக்கான ஜனங்கள் பெரிய ஆரவாரத்துடன் தேரொன்றை அக்கிழவியிருந்த வீதிவழி இழுத்துச் சென்றார்கள். தற்செயலாய் கிழவி வெளியே வர நேரிட்டது. தேரின் பின் பக்கத்திலிருந்து காதுசெவிடுபட இருபதுதடவை அதிர் வேட்டுச் சப்தமுண்டானது. கிழவி சிறிது நேரஞ் சென்று தன் பேரப்பெண்ணைக் கூவி, "ஏண்டியம்மா, கோமளம், தேர் வருகிறதோடி? இங்கே அதிர் வேட்டு நாற்றமுண்டாகிறதே" என்று கேட்டாள்.

* * *

ஒருவர் தன் பெண்ணை ஒருசிறுபையனைப் பார்த்து விவாகம் செய்து கொடுக்க வரதக்ஷிணை ஜாஸ்திகொடுக்க வேண்டியிருந்ததால், முன்னமேயே கல்லியாணம் செய்திருந்த ஒரு கிழவரிடம் சென்று "ஐயா, நீங்கள் விதிப்படி என்பெண்ணை விவாகஞ் செய்துகொள்ளுங்க" ளென வேண்டினார். அதற்கு கிழவர் "போதும், போதும். என் தலையில் பாதிமயிர் நரைத்தும் பாதி மயிர் கறுப்பாயுமிருக்கிறது. உன் மகளைக்கலியாணம் செய்தால், நான் கிழவரென்று அவள் நரைமயிர் யாவற்றையுமெடுத்துவிடுவாள். இப்பொழுதிருப்பவளோ, பிறகு நான் சிறுபிள்ளையாகி விட்டேனென்று கறுப்புமயிர் யாவற்றையுமெடுத்துவிடுவாள்! நான் மொட்டையாகிவிடுவேன்! ஆதலால் உங்கள் பெண் எனக்குவேண்டா" மென்று மறுத்துவிட்டார்

* * *

ஒரு பிரபுவும் இரண்டு பெண்பிள்ளைகளும் ஓரேவண்டியில் பிரயாணம் செய்யநேரிட்டது. பெண்பிள்ளைகளிருவரும் ஒருவரோடொருவர் வாதாடி இரைச்சல் போட்டுக்கொண்டிருந்தார்கள். கடைசியில் ஒருத்தி பிரபுவைப்பார்த்து "நாங்கள் பேசுவதால் உங்களுக்குத் தலைவலி எடுக்கவில்லையா?" வென்று வினவினாள். அதற்கவர் "கொஞ்சமேனுமில்லை நானும் கலியாணம் செய்து கொண்டேன். 25 வருஷகாலமாய் மனைவியும் வீட்டிலிருக்கிறாள்." என்றார்.

* * *

அடே, அசடே! இங்கேவாடா. கடையில் நாம்தான் ஒன்றும் வாங்கப் போகிறதில்லை. அப்படியானால் பேனாக்குச்சியையும், சிப்பிப்பொத்தானையும் பார்த்துக்கொண்டிருப்பானேன்? இதோகாச்மீர சால்வை, இதோ பொன் நகைகள் இருக்கின்றன பார்ப்போம் வாயேன்!

NEWS AND NOTES

சமாச்சாரக் குறிப்பு

இப்பத்திரிகையில் "இங்கிலாந்து சரித்திரக்கதை பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இவ்வருமையான கதை ஒவ்வொறு மாதப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும். இச்சரித்திரக்கதைகள் பாடசாலை உபாத்தியாயர்களுக்கும், மாதர்களுக்கும் தெரிய வேண்டிய தவசியம். மேலும் இப்பத்திரிகையில் யுத்தத்தைப் பற்றி சுருக்கமாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த மாசப் பத்திரிகையில் பெண்களுக்கு உபயோகமான சிலமுக்கிய விஷயங்கள் பிரசுரிக்கப்படும். இன்னும் சில நீதிக்கதைகளையும் சித்திரப்படத்துடன் பிரசுரிக்க ஏற்பாடு செய்து வருகிறோம். இனி 8 பக்கம் கொண்ட ஒரு பாரத்தில் சமாச்சாரக் குறிப்பு பிரசுரிக்கப்படும். கையொப்ப நேயர்கள் இம்மாதப் பத்திரிகைக்குப் பணம் கொடுக்கவேண்டியதில்லை. வழக்கம் போல் ஜனவரிமீ முதல் டிசம்பர்மீ வரையில் தான் கணக்கு வைத்துக் கொள்வோம்.

* * *

சென்ற மாதத்தில் சேலத்தில் அதிக மழை பெய்ததால் மிக்க வெள்ளம் பெருகி, ஜனங்கள் கஷ்ட நஷ்ட மடையும்படியாயிற்று. ஏர்க்காடு என்னுமிடத்தில் 10 அங்குல் மழை பெய்ததாம், சேலம் நகருக்கு ஜலசப்ளைக்கு ஆதாரமான பனைமரத்துப்பட்டியில் 7½ அங்குலம் மழை பெய்தது. முக்கியமான நதிகளில் வெள்ளம் பெருகிவிட்டது. பல குளங்கள் உடைப்புகள் எடுத்து விட்டன. திருமணி முத்தாற்றிலே வெள்ளம் பரவி கலாசாலை, ஹாஸ்டல் முதலிய விடங்களைச் சுற்றி ஜலம் நிரம்பியிருந்ததாம். ஜனங்கள் உயிர் தப்பினால் போதுமென்று தங்கள் வீடு வாசலை விட்டு விட்டு ஓடிவிட்டார்களாம். ஏழைகளுடைய வீடுகளில் சுமார் 500 வீடுகள் சேதமடைந்தன. மேலும் ஆயிரம் குடும்பத்தினர் கஷ்டப்பட்டார்கள். வாராவதிகளும் சேதம் அடைந்தன. வெள்ளத்தால் கஷ்டப்படும் ஜனங்களுக்கு உதவி செய்ய மெஸ்ஸர்ஸ் பத்மனுப செட்டியாரும், ராவ் பஹாதூர் சுப்பிரமணிய ஐயரும் முன்வந்திருப்பதைக் கேட்டும், அவ்வூர் வாசிகள் பொதுமீட்டிங்கு கூடி பண உதவிக்காக சில தீர்மானங்கள் செய்ததைக் குறித்தும் சந்தோஷப்படுகிறோம்.

* * *

"நமது மாணவர்கள் பெரும்பாலோர் சோர்வுள்ளவர்களாயிருக்கிறார்கள். வாழ்வின் சுகங்களில் அவர்களுக்கு உற்சாகமே இல்லை. பெரும்பாலோர் கண்ணாடி போட்டுக்கொண்டிருக்கிறார்கள். கண்களின் பலக்குறைவு, மூளை நரம்புகளின் பலக்குறைவால் உண்டாகிறதென்று நினைக்கிறோம். இந்நிலைமைக்குக் காரணமென்னவென்று விசாரித்தறிய வேண்டியது வெகு அவசியமாகும். மாணவர்களின் ஆகார விஷயத்தில் பிரவேசிப்பது பெற்றோர்களின் நிலைமையில் பிரவேசிப்பதாகும். மாணவர்களின் மூலமாவது பெற்றோர்களைக் கற்பிப்பது அவசியம். ஸ்கூல் பிள்ளைகள் திடமாயிருக்கிறார்களாவென்று கவனிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். திடனற்றிருந்தால் அதற்கு வேண்டிய பரிகாரத்தைத் தேடவேண்டும்."

* * *

பல்லாரியில் 3-வது வருஷத்திய டிஸ்ரிக்ட் கான்பரென்ஸ் நடந்தது. கடைசியில் சேர்மன் "கல்வி, ஐக்கிய நாணயச்சங்கம், ஏற்படுவதின் அவசியம், விவசாய சங்கங்களின் அவசியத்தை பொது ஜனங்களின் மனதில் பதியும்படிச் செய்யவேண்டும் என்றும் தாழ்ந்த வகுப்பார்க்கு கல்விகற்று கொடுத்து அவர்களை முன்னேற்றம் அடையும்படிச் செய்யவேண்டும்," என்றார்.

* * *

பெண்களுக்குள் ஆரம்பப் படிப்பைப் பிரபல மடையச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் சென்ற சில வருஷங்களாக பம்பாய் கவர்ன்மெண்டார் அங்கே சில பெண்களுக்கு மாதந்தோறும் 2 அல்லது 3 ரூபா விதம் உபகாரச் சம்பளம் கொடுத்து வந்தனர். அவ்விதம் உபகாரச் சம்பளம் கொடுத்து வந்ததன் பலனாக, பாடசாலைகளுக்குக் கிரமமாய்ப் போக வேண்டுமென்ற ஆசையும் படிப்பில் சிரத்தையும் பெண்களுக்குள் உண்டாயிருப்பதை அம் மாகாண கவர்ன்மெண்டார் உணர்ந்து கொண்டு, பிரத்தியேகமான சிலருக்கு மாதம் 4 ரூபா வரையில் உபகாரச் சம்பளம் கொடுக்கலாமென்பதாக இச்சமயம் உத்தரவு செய்திருக்கின்றனர். சென்னையிலும் பெண்களின் ஆரம்பக் கல்வி யபிவிருத்திக்காக உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறதாயினும், அதன் விவரங்கள் நன்கு பிரபலமாக வேண்டு மென்பதோடு, அம்முறைமை இன்னும் விசாலமாகச் செய்யப்பட்டால் நலமாயிருக்குமென்று சுதேசமித்திரன் அபிப்பிராயப்படுகிறது உண்மையே

* * *

பரோடா கட்டாய ப்ரதம கல்வியில் முதன்மையானது. அங்கே பிள்ளைகளும் பெண்களும் படித்து வருகிறார்களாம். பெண்கள் தொகை அதிகரித்து வருகிறதாம். வயது சென்ற பெண்மணி

கள் வீட்டு அலுவலால் பகலில் படிக்க முடியாமலிருக்கிறார்கள். இவர்களில் சிலர் பாடசாலைகளில் சிறு பெண்களுடன் சேர்ந்து படிக்க வெட்கப்படுகிறார்களாம். இவர்களுக்கு பிரத்தியேகமாக சாயங்காலத்தில் வாசிக்கவும், எழுதவும் போதித்து வர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம். இவ்விதம் இலங்கையிலும், இந்தியாவிலும் பாடசாலைகள் சாயங்கால வேளையில் ஸ்தாபிக்கப்பட்டால் நல்லது. கட்டாயப்படிப்பும் ஏற்பட வேண்டியது அவசியமே.

* * *

நெல்லூரில் ராஜீய கான்பரன்ஸ் அக்டோபர் மாசம் கூடிற்று. அச்சமயத்தில் மிஸ்டர் கே. ஆதி நாராயண ரெட்டி கீழ்த்தரப்படிப்பு கட்டாயமாயும், இலவசமாயும் கொடுக்கப்பட வேண்டுமென்றும், முனிசிபாலிடிகளின் எல்லைக்குள் இம்மாதிரி செய்ய முனிசிபாலிடிகளுக்கு கவர்ன்மெண்டார் அதிகாரம் கொடுக்க வேண்டுமென்றும் ஒரு தீர்மானத்தைப்பிரேரேபித்து, இப்படி செய்வதற்காக கொஞ்சம் வரியை உயர்த்தினால் கூடபாதகமில்லை யென்றார். நெல்லூரில் பெண்களுக்கு ஒரு செக்கெண்டரி ஸ்கூல் ஏற்படுத்த வேண்டுமென்றும், கூடூர், கண்டுக்கூர், ஆத்மகூர், இவைகளிலிருக்கும் எலிமெண்டரி பாடசாலைகளை செக்கண்டரி ஸ்கூலாக உயர்த்த வேண்டுமென்றும் கோவூரில் ஒரு நெசவு பாடசாலை ஏற்படுத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

* * *

மதுரையிலுள்ள அமெரிக்கன் காலேஜ் மாணவர் விடுதிக்காக அஸ்திவாரக்கல் மிஸஸ் எப். எச். வார்னரால் நாட்டப்பட்டது. மேலும் சாஸ்திர ஆராய்ச்சிக்கு ஏற்பட்ட கட்டிடமும் திறக்கப்பட்டது. இதற்கு பெயர் அமெரிக்கன் கலாசாலையில் நியூயார்க்கிலிருக்கும் மிஸ்டர் எல்லன் எஸ் ஜேம்ஸ் ரசாயன சாஸ்திரக் கட்டிடம். மிஸஸ் ஜேம்ஸ் இதற்கு 3,000 டாலர் அனுப்பினார்களாம். பிரின்ஸிபால் மிஸ்டர் (Zembro) சம்புரோ அந்த காலேஜியின் விருத்திக்காக மிகவும் உழைத்து வருவது யாவருக்கும் தெரிந்த விஷயமே. அவர் முயற்சி கைகூடுமாறு கடவுள் கிருபை செய்வாராக.

* * *

சமஸ்தானாதிபதிகள் கான்பரன்ஸ் டெல்லியில் நடந்தது. அச்சமயம் அநேக மன்னர்கள் வந்திருந்தார்களாம். எச், இ. ராஜப்ரதிநிதி அக்கிராசனம் வகித்து 'யுத்தம் இன்னும் முடிந்தபாடில்லை. இந்த யுத்தத்திற்கு நீங்கள் பணத்தை ஏராளமாய் வாரிக் கொடுத்தும் துருப்புகளைக் கொடுத்தும் செய்யும் உதவி எந்நாளும் பிரிடிஷ் ஜனங்

களின் ஹிருதயங்களினின்றும் நீங்காது. உங்களுடைய சேனைகள் விக்டோரியா கிராஸ் என்ற பதக்கங்களைப் பெறத்தகுந்த காரியங்கள் செய்திருக்கின்றன. முடிவானஜயம் வரும் வரையில் உங்களெல்லாரையும் நான் நம்பியிருக்கலாமென்றே பூர்ணமாய் நம்புகிறேன். உங்களுடைய ராஜ்யங்களைப் பற்றியும் உங்களைப் பற்றியும் தெளிவான அபிப்பிராயங்களை வெளிப்படையாய்ச் சொல்லுவதற்கே இக்கான்பரன்ஸ் கூட்டப்பட்டது. இந்தியா கவர்ன்மெண்டுக்கும் தேசாதிபதிகளாகிய உங்களுக்கும் உள்ள நெருங்கிய சம்பந்தந்தான் எல்லாவற்றிலும் சிரேஷ்டமானதாகும்." என்றார் கெயிக்வார் மகாராஜா "நாங்கள் எல்லாரும் பிரிடிஷ் ஏகாதிபத்தியத்திற்கு வேண்டிய சகல ஒத்தாசைகளையும், ராஜவிசுவாசத்துடனும் செய்யத் தயாராயிருக்கிறோம்" என்றார். இத்துடன் சபைகலைந்தது.

* * *

தீபாவளிப்பண்டிகைக்குச் சிறு பிள்ளைகள் அதிக பணம் கொடுத்து பட்டாசு கட்டுகளைவாங்கி சந்தோஷத்துடன் விட்டார்கள். தீபாவளிப் பண்டிகை இந்தியர்களுக்கு முக்கியமானது. அப்பண்டிகை காலத்தில் நேஷனல் பண்டுக்கும் திரவியசகாயம் சென்னை வாசிகள் செய்தார்கள். அப்பண்டுக்கு இன்னும் அதிக திரவிய உதவி வருமென்று நம்ப இடமிருக்கின்றது.

* * *

இம்மாதக் கடைசியில் சென்னை பீபில்ஸ் பார்க்கில் சென்ற வருஷம் நடந்தது போல் பார்க் சந்தை 23௳ முதல் ஜனவரீ 2௳ வரையிலும் நடத்தப்படுமாம். அதில் கல்வி சம்பந்தமான பொருட்காட்சி வைக்கப்படுமாம். மேலும், புஸ்தக ஷாப்புகளும் விநோத வேடிக்கைக் கடைகளும் ஸ்தாபிக்கப்படுமாம். விளையாடல்களும், பாணவேடிக்கையும் வெகு விமரிசையாக நடைபெறுமெனத் தெரிகிறது. இதன் வரும்படி யுத்தபண்டுக்கும் சென்னை ஆஸ்பிடல் ஷிப்புக்கும் விநியோகம் செய்யப்படுமாகையால் சென்ற வருஷத்திய வரும்படியைவிட இவ்வருஷம் அதிகப்பணம் வசூலாகுமென்று நம்ப இடமிருக்கிறது.

* * *

சென்றமாசம் 19௳ சரிகை வேலை சம்பந்தமான பொருட்காட்சி சென்னையில் திறக்கப்பட்டபொழுது அநேகர் சென்று சரிகைவேலைத் திறமையைக்கண்டு மெச்சினார்கள். 22௳-யில் கோஷாஸ்திரீகள் அக்காட்சியைப் பார்த்தார்கள். சரிகை வேலையில் சிறந்தவர்களுக்கு பரிசும் சர்டிபிகேட்டும் அளிக்கப்பட்டன.

சுகாதார சம்பந்தமான உபந்நியாசங்கள் சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் மிஸ்டர் J. W. மேட்லி அவர்களால் செய்யப்படும். நவம்பர்மீ 29வ சென்னையில் ஜலாதார சப்ளையைப்பற்றி உபந்நியாசம் செய்வார்.

* * *

1917ஆம் ஜனவரிமாசத்தில் பரோடாவில் கைத்தொழில் பொருட்காட்சி நடத்தப்படுமென தெரிகிறது. அச்சமயத்தில் இந்திய கைத்தொழிலில் சம்பந்தமானவைகளும் கூடிய வரையில் இந்தியாவில் செய்தயந்திரம் முதலியவைகளும் முக்கியமாய் கவனிக்கப்படுமாம். பரோடாவில் கைத்தொழிலை பற்பல மார்க்கத்தில் விருத்தி செய்வதற்காகவே இக்காட்சி வைக்கப்படுமாம்.

* * *

சென்றமாசக் கடைசில் ஆஜ்மீரிலுள்ள மேயோ காலேஜியில் நமது எச். இ. ராஜப்ரதிநிதி அவர்கள் மன்னர்களின் குமாரர்களும் ராஜபுத்திரர்களும் நிறைந்துள்ள சபையின் முன் வெகு சிறப்பாகப் பேசி கடைசியாக அக்காலேஜ் மாணவர்கள் விருத்தியடைந்து வருவதைக் குறித்து தாம் மிக்க சந்தோஷப்படுவதாகச் சொல்லி முடித்தார்கள்.

* * *

சென்ற மாசக் கடைசியில் சென்னை சட்ட சபை மீட்டிங் நடைபெற்றது. அப்பொழுது காகிதத்திற்கேற்பட்டிருக்கிற கிராக்கியை உத்தேசித்து புனலூர் காகிதச் சாலையில் வெள்ளைக் காகிதம் செய்ய உடனே ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், இப்பொழுது கிடைப்பது அரிதாயிருக்கிற மருந்துச் சரக்குகள் முதலியவற்றைச் செய்ய இங்குள்ள ரசாயனச் சாலைகளில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கனம் போலவரம் ஜெமீன்தார் கேட்டார்.

* * *

நடுத்தரப் பள்ளிக் கூடங்களில் மாணவர்களுக்குப் போதுமான இடமிருக்கிறதா வென்றுபார்க்க ஒரு கமிட்டி நியமிக்க வேண்டுமென்று கனம் ராமச்சந்திரராவ் பிரேரணை செய்தார்.

* * *

நடுத்தரப் பள்ளிக்கூடங்களில் தேச பாஷைப் படிப்பை எப்படி விருத்தி செய்யலாமென்று யோசிக்க ஒரு கமிட்டி நியமிக்கவேண்டுமென்று கனம் கிருஷ்ணராவ் பிரேரணை செய்தார். ரோட்ஸ் என்றவர் வைத்துவிட்டுப்போன ஐவேஜியிலிருந்து ஜெர்மன் மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த உபகாரச் சம்பளத்தை இந்தியர் பெற அவர்களுக்குள்ள பாத்தியத்தை இந்த கவர்ன்மெண்டார் இந்தியா மந்திரிக்கு உடனே வற்புறுத்த வேண்டுமென்று கனம் பிட்டண்டிரிக் பிரேரணை செய்தார்.

அநேகம் ஸ்கூல்கள் இருக்கிற பெரிய பட்டணங்கள் தவிர மற்ற இடங்களில் இன்கம்ப்ளீட் ஸெகண்டரி ஸ்கூல்களில் பெரிய வாத்தியாராக பி.ஏ.எல்.டி.பரீட்சைகளில் தேறினவர்கள் இருந்தால்தான் அவை அங்கீகரிக்கப்படும் என்ற விதியை தற்சமயம் அனுஷ்டிக்காமலிருக்க வேண்டி கனம் ராமய்யங்கார் பிரேரணை செய்தார்.

* * *

கவர்ன்மெண்டு ரெயில்வேக்களிலும் உதவிபெற்ற ரெயில்வேக்களிலும் 1916 ம் வருஷம் ஏப்ரல் மாசம் முதல் நவம்பர்மீ 4-ந்தேதி வரையில் சென்ற வருஷத்து வரும்படியைவிட 3 கோடியே 40 லக்ஷத்து 39 ஆயிரத்து 804 ரூபாய் அதிகம் வந்திருக்கிறதாம்.

* * *

புத்தரின் அஸ்திசேஷங்களிற் சில டாக்ஸில்லா என்னுமிடத்திலிருந்து சோதனை செய்து எடுக்கப்பட்டது. அந்த அஸ்திசேஷங்களை ஸிலோனைச் சேர்ந்த கண்டி பட்டணத்திலுள்ள புத்தப்பல் கோயிலுக்குக் கொடுக்குமாறு இந்தியா கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்து விட்டார்களாம்.

* * *

சென்ற மாதம் 23வ கான்வொகேஷன் நடந்தது. சுமார் 1,330 பேர் பி. ஏ. முதலிய பட்டம் பெறவந்திருந்தார்கள். இந்தியன் வைஸ் சேன்சலர் வெல்வட் உடைதரித்து, சேன்சலர் உடுப்புதரித்த எச். இ. கவர்னருக்கு அடுத்தாற்போல் வந்ததை சபையோர் பார்த்த வண்ணமாயிருந்தார்கள். நவாப் இமடுல் முல்க் பஹதூர் சையத் ஹுசேன் பில்க்ராமி சி. எஸ். ஐ. அவர்கள் சிறந்த உபந்நியாசம் செய்தார்கள் இதன் சாராம்சம் அடுத்த பத்திரிகையில் வரும்.

வைத்திய பரிக்ஷையில் (அதாவது எம். பி. & பி எஸ்.) ஒரு மாது பட்டம் பெற்றாள். இம்மாதுக்கு பால்பர் மெடல் கிடைத்தது. எம். பி. & எம். எஸ்ல் ஒரு மாது பட்டம் பெற்றாள். உபாத்தியாயர் பரிக்ஷையில் (அதாவது எல். டியில்.) 3 பேர் பட்டம் பெற்றார்கள். பி. ஏ. பரிக்ஷையில் 4 பேர் பட்டம் பெற்றார்கள். இவர்களில் இந்து பெண்மணி கமலம்மாள் பி.ஏ. ஒருவள்தான். ஆக இவ்வருஷம் 9 பேர் உயர்தரக் கல்வியில் தேறியிருக்கிறார்கள்.

மாதர் மனோரஞ்சினி ஆபீஸ்.

பொடிட்டா விலை 0—2—6.

(சித்திரப்படங்கள் அடங்கியது.)

நமது ஆபீஸில் தமிழ் நாவல்களும், ராமாயணம் பாரதம், இந்து பாகசாஸ்திரம், பக்தவிஜயம் முதலிய புஸ்தகங்களும் விலைக்கு கிடைக்கும். ஆர்டர்கள் வந்தவுடன் தாமதமின்றி வி. பி.யில் அனுப்பப்படும்.

இந்திய மாயா விநோதக் கதைகள். விலை அணா. 4.

(சுமார் 28 படங்களடங்கியது.)

மேக்மில்லன் கம்பெனி,

பீச்ரோடு, சென்னை.

CALENDAR, 1916

பஞ்சாங்கம்

1916ௗ டிசம்பர்மீ—அனளௗ கார்த்திகை, மார்கழிமீ

இங்.	தமிழ்.	வாரம்.	திதி, நக்ஷத்திரம், பண்டிகை.
1	17	வெ	‡ ஸப் 34-58, அவி 18-14, ரா 7-4.
2	18	சனி	அஷ் 30-45, சத 15-28, ரா 2-38.
3	19	ஞா	நவ 27-30, பூட் 13-35, ரா 8-53.
4	20	திங்	தச 25-43, உட் 12-38, ரா 14-21.
5	21	செ	ஏகா 23-56, ரே 12-43, கௌசிக ஏகாதசி. [தீபம்.
6	22	புத	த்வா 23-40, அசு 13-45, தி 3-30, ரா 10-18, பரணி
7	23	வியா	* த்ர 24-31, பர 15-52, ரா 19-10, அருணாசல தீபம்.
8	24	வெ	சதி 26-29, கிரு 19-3, சிவதீபம் பூர்ணிமை [தீபம்.
9	25	சனி	○ 29-36, ரோ 23-20, தி 1-46, ரா 10-21, விஷ்ணு
10	26	ஞா	ப்ர 33-54, மிரு 28-43, ரா 23-46.
11	27	திங்	த்வி 39-16, திரு 35-9.
12	28	செ	த்ரி 45-30, புன 42-25, தி 8-43.
13	29	புத	சது 52-16, பூச 50-11, தி 4-59.
14	30	வியா	பஞ் 59-5, ஆயி 58-2, தி 26-25.
15	1	வெ	ஷஷ் 60-0, மக 60-0, ரா 3-44.
16	2	சனி	ஷஷ் 5-27, மக 5-27, ரா 0-38.
17	3	ஞா	ஸப் 10-46, பூர 11-52, ரா 3-25.
18	4	திங்	அஷ் 14-31, உத் 16-49, ரா 11-2.
19	5	செ	நவ 16-25, ஹ 19-57, ரா 12-26.
20	6	புத	தச 16-12, சித் 21-4, ரா 6-56,
21	7	வியா	ஏகா 13-56, சுவா 20-11, ரா 5-37, ஏகாதசி.
22	8	வெ	த்வா 9-38, விசா 17-26, தி 26-49.
23	9	சனி	‡ த்ர 3-35, சதி 56-46, அனு 13-8, தி 25-56. [சை.
24	10	ஞா	● 48-44, கேட் 7-34, தி 25-31, ரா 29-34, அமாவா
25	11	திங்	$\frac{7}{8}$ ப்ர 40-11, மூல 1-12, பூரா 54-27, தி 22-32.
26	12	செ	த்வி 31-34, உரா 47-42, தி 12-11, ரா 28-31.
27	13	புத	த்ரி 23-14, சிர 41-21, ரா 22-16.
28	14	வியா	சது 15-33, அவி 35-45, ரா 24-11.
29	15	வெ	பஞ் 8-48, சத 31-13, ரா 18-8.
30	16	சனி	ஷஷ் 3-16, ஸப் 59-8, பூட் 27-57, ரா 22-57.
31	17	ஞா	அஷ் 56-31, உட் 26-9, ரா 27-42.

* கிருத்திகை. † ஷஷ்டி. ‡ கரிநாள்.

Printed at the Commercial Press, Madras &
Published by C. S. Ramaswamy Iyer, Triplicane.

10 FEB 1917 MADRAS

The Tamil Zenana & School Magazine.

மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"—ஔவையார்.

Vol. XVIII | Madras January 1917 | No. 2
புத்தகம் 18 | சென்னை: ஜனவரிமீ, 1917ௗ | இலக்கம் 2

சென்னை கான்வோகேஷன் பேச்சு.

கான்வோகேஷன் சமயத்தில் நவாப் இமடுல் முல்க் பஹதூர் சைட் ஹுசேன் பில்கிராமி C. S. I. அவர்கள் பேசின் பேச்சின் சாராம்சம்.

சென்னை மற்ற இராஜதானிகளைவிட தாழ்ந்ததல்ல. இங்கு கல்வி அபிவிருத்தி மற்ற விடங்களைவிட அதிகரித்திருக்கிறது. இவ்வித அபிவிருத்திக்கு காரணம் இங்குள்ள கல்வி இலாகா, சென்னை யூனிவர்ஸிடி இவைகளின் ஊக்கமும், முயற்சியுமேயாம்.

இந்தியாவிலுள்ள மூன்று யூனிவர்ஸிடிகள் அபரிமிதமான வேலைகளைச் செய்து வருகின்றன. முன் பரிக்ஷைக்குப் படித்து பரிக்ஷையில் தேறுவதுதான் முக்யம் என்று நினைத்தார்கள். வேறொன்றையும் முக்யமாகக் கருதவில்லை. அப்படிச் செய்வது சரீரத் திற்கும், மனதுக்கும் கெடுதியே யொழிய நன்மையல்ல. முன் மனப் பாடம் செய்தும் வந்தார்கள். இது உலகமுழுவதும் பரவி யிருந்தது. இதனால் தலைவலி பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் அடிக்கடி உண் டாய் அவர்களுடைய சக்துஷ்டியைக் கெடுத்தது மல்லாமல், இரத்த இன்மையையும் புத்திக்குறைவையும் உண்டாக்கியது.

மேலும் ப்ரைமரி, சகண்டரி பாடசாலைகளிலும் பிள்ளைகள் மனப்பாடம் செய்து மெட்ரிகுலேஷன் பரிக்ஷையில் தேறவேண்டி யிருந்தது. இப்படி அவர்கள் செய்தமையால், அவர்கள் தங்கள் தாய் பாஷையைப் படிக்க அவகாசமில்லை. தங்கள் மதம், சம்ப்ரதாயங்கள் கட்வடிக்கைகள் முதலியவைகளைத் தெரிந்து கொள்ளவும் சாவகாச மில்லை. தாய்தந்தைகள் குழந்தைகளுக்கு பெரியோர்களாகிய ரிஷி கள், மகாத்துமாக்கள் முதலியவர்களைப்பற்றிய கதைகளையும் சொல்

லிக்கொடுக்க முடியவில்லை. இவைகள் சாதாரண விஷயங்களா யிருந்த போதிலும், இவைகளால் நல்ல குணம், நல்ல நடவடிக்கை முதலியவைகளுண்டாகும்.

இவ்விதம் செய்து வந்தமையால் பல கெடுதல்கள் உண்டாயின. மேற்கத்திய வழக்கப்பழக்கங்களை அனுசரிக்கவும் தங்கள் முன்னோர்கள் புராதனமாய் கையாண்டு வந்தவைகளை விட்டுவிலகவும் ஆரம்பித்து விட்டார்கள். தங்கள் சுயபாஷையில் நன்றாக எழுதத் தெரியாது. இங்கிலீஷிலும் சொல்ப அறிவுதான் உண்டு. அவர்கள் படித்து வந்த 7 அல்லது 8 வருஷகாலத்தில் அறிவு சக்தி குன்றி, தேக பலமற்றவர்களாய் விட்டார்கள்.

சமீபத்தில் ப்ரைமரி சகண்டரி பாடசாலைகளைத் திருத்தி நல்ல மாதிரிக்கு கல்வி இலாகா கொண்டுவந்திருப்பது மெச்சத் தகுந்ததே. அவைகளைப் பரிசோதனை செய்ய கல்வியிற்றேர்ந்த கனவான்கள் இன்ஸ்பெக்டர்களாகவும் உபாத்தியாயர்களாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வித சீர்திருத்தம் முன் நான் சொல்லிய கெடுதல்களைத் தடுப்பதற்காகவே செய்யப்பட்டிருக்கிறது.

மேற்கூறிய சீர்திருத்தம் செய்யப்படுவதற்கு முன் கிராம பள்ளிக்கூடங்களில் பிள்ளை மணக்கணக்குகளை துரிதமாகவும் சரியாகவும் போடுவார்கள். இப்பொழுதுகூட கிராமத்திலுள்ள முதியோர் இங்கிலீஷ் பாடசாலையில் படிக்கும் பையன் மணக்கணக்குப் போடவேண்டுமானால் பலகையும் பென்சிலையும் எடுத்துப் போடுவதைக் கண்டு சிரிப்பது யாவருக்கும் தெரியும். மகமதியர்களும் கிராமாந்திரங்களிலுள்ள இந்து பாடசாலைகளைப்போல் மக்டாப்ஸ் என்ற பாடசாலைகளை ஸ்தாபித்திருந்தார்கள். இங்கு பிள்ளைகள் முதலில் மரப்பலகையில் பேனாவால் மையெடுத்து எழுதுவார்கள். பின் கடுதாசியில் எழுதுவார்கள். ஆனால் கணக்கைவிட அதிகமாகப் படிக்கவும் எழுதவும் போதிக்கப்பட்டு வந்தார்கள்.

கிரம சிக்ஷையோ பாடசாலையைவிட அதிக கடுமையாயிருந்தது. சிற்சில சமயத்தில் பிள்ளைகள் வெகு குரூரமாக சிக்ஷிக்கப் படுவார்கள். அப்படி யிருந்தும் பிள்ளைகள் முகமலர்ச்சியுடன் தங்கள் உபாத்தியாயர்களிடத்தில் பிரியமுள்ளவர்களா யிருப்பார்கள். பெற்றோர்களும் இவ்விஷயத்தில் தடை சொல்ல பிரவேசிக்க மாட்டார்கள்.

உயர்தரக் கல்வியோ இந்தியா முழுவதிலு மிருந்தது. காசி பிக்ராம்பூர், நாட்டிய, மதுரைமுதலிய விடங்களில் புராதனமாக கல்லூரிகளிலிருந்தன. அவ்விதமே மகமதியர்களுக்கும் கல்லூரிகள் பீஸ்க்ராம், லக்னௌ, கைராபாட், கோபாமௌ, முதலிய விடங்களி லிருந்தன. இவைகளில் வேதாந்தம், தத்துவம் முதலியவைகள் போதிக்கப்பட்டு வந்தன. பற்பல விடங்களிலிருந்து பிள்ளைகள் கல்லூரிகள் உள்ள மேற்கூறிய விடங்களுக்குச் சென்று கல்வி கற்றுவருவார்கள். இப்பொழுதோ அவ்வித கஷ்ட மொன்றுமில்லை. ஒவ்வொரு பட்டணத்திலும் ஐஸ்கூலிருக்கிறது. காலேஜு மிருக்கிறது. இவைகள் புதுமாதிரி சீர்திருத்தப்பட்டு நல்ல ஸ்திதியிலிருக்கின்றன.

நான் உங்களுக்கு இன்னும் சிறிது கல்வி விஷயமாகச் சொல்ல விரும்புகிறேன்.

குழந்தைகள் 10 வயதுவரையிலும் வேறு வேலையின்றி சுயர்ச்சியாயிருக்க வேண்டும். அவர்களுடைய மூளைக்கு அதிகவேலை யொன்றும் கொடுக்கக்கூடாது. அது வளர்ந்து விருத்தியடையும்படி செய்ய வேண்டும். பத்து வயதுக்குள் வாயால் நாம் பற்பல நல்ல உபயோகமான விஷயங்களை குழந்தைகளுக்குச் சொல்லிவரவேண்டும். அவர்களுக்கு யாதொரு ஸ்ரமமின்றி பெற்றோர்களும், உபாத்தியாயர்களும், ஸ்ரமப்பட்டு இவ்விதம் செய்துவந்தால் மிகவும் நல்லது. மத விஷயமாகவும், நீதிபோதனை விஷயமாயும் அவர்களுக்குப் போதனை செய்யும் பொழுது உண்மையைப்பற்றி வெகு நன்றாக கதைகள் மூலமாய் போதித்து வரவேண்டும். அச்சமயத்திலும், அவர்கள் வயதான பின்பும் பொய் சொல்லாமலிருக்கும்படி செய்து வரவேண்டும். எல்லாத் தீங்குக்கும் பொய் சொல்வதுதான் மூலாதாரம். அப்படியே உண்மையும் எல்லா நன்மைக்கும் மூலாதாரம். நல்ல உயர்ந்த குணத்திற்கும் அஸ்திவாரம்.

அவரவர்கள் மதாசாரப்படி அவர்களுடைய, மதக் கொள்கையைப்பற்றி கதை ரூபமாகச் சொல்லி வரவேண்டும். சாதுக்கள், பெரியோர்கள், ரிஷிகள், குருக்கள் முதலியவர்களின் திவ்ய சரித்திரங்களைக் கதை ரூபமாகச் சொல்லி வரவேண்டும். குழந்தைகளும் அவரவர்கள் மதக் கொள்கையின்படி நம்பிக்கையுடன் அவைகளில் சொல்லிய வண்ணம் சடங்கு முதலியவைகளைச் செவ்வையாய் செய்து வர வேண்டும்.

சுய பாஷையை ஒவ்வொருவரும் நன்றாகப் படித்து வரவேண்டும். சரியான முறையை கையாண்டுவரின், பிள்ளைகள் படிக்கவும், எழுதவும் சுலபமாகக் கற்றுக்கொள்ளுவார்கள். பின்னிட்டு பாடசாலையில் உயர்தரப்படிப்பு ஆரம்பிக்கும்பொழுது அவர்களுக்குதானாகவே விசாலமான அறிவுண்டாகும்.

தேகாப்பியாசமும் செய்துவரும்படி பழக்கி வரவேண்டும். நான் இதைப்பற்றி வற்புறுத்துவேன். ஏன் என்றால் புருஷத்துவம்,

தன் வணக்கம், இவர்களுக்குண்டாகும். இவைகள் பலனாக தன்னடக்கமும், தேர்ச்சியுள்ள மூதறிவும் உண்டாகும்.

மேற்கூறிய வண்ணம் பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும், போதித்து வந்தால், அவர்கள் இங்க்லீஷ் படிக்க ஆரம்பிக்கும்பொழுது வெகு சீக்கிரத்தில் இங்க்லீஷ் படிப்பு வரும். அவர்கள் தேக ஸ்திதியும் நல்ல நிலைமையிலிருக்கும். மேலும் இங்க்லீஷ் ஆரம்பம் செய்வதற்கு முன் சம்ஸ்கிருதம், அராபிக் முதலிய பாஷைகளை நன்றாகக் கற்று நல்லறிவுடையவர்களாகவேண்டுமென்றும் சொல்வேன்.

என் பேச்சை முடிக்கு முன் உலக முழுவதும் ஸ்திரீயும், மனிதனும் கவலையுடன் கவனித்து வரும் முக்ய விஷயத்தைப்பற்றி சில வார்த்தைகள் சொல்லுகிறேன். ஐரோப்பாவில் இரண்டு வருஷ காலமாக நடந்துவரும் அகோர யுத்தமே. யுத்தத்திற்கும் கல்விக்கும் சம்பந்தமென்னவென்று கேட்பீர்கள். சம்பந்தமிருக்கிறதென்பது என் அபிப்பிராயம். எல்லாத் தேசத்திலும் கல்வி புகட்டப்பட்டு வருகிறது. ஆனால் மற்ற தேசத்து கல்விக்கும், ஜர்மனி தேசத்து கல்விக்கும் வித்தியாசமுண்டு. ஜர்மனியைத் தவிர மற்ற எல்லா தேசத்திலும், உண்மை, நியாயம், தயை, சுவாதீனம் முதலியவைகளைப் போதித்து வருகிறார்கள்.

ஜர்மனியிலோ இவைகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு மனித பிரயத்தனத்தால் பலமடையவேண்டுமென்பதையைப் போதிக்கிறார்கள். இப்படி போதிப்பது கூடாதென ஒருவன் அங்கு சொன்னால் அவனைக்கொன்று விடுவார்கள். இந்த யுத்தத்தில் ஜர்மானியர்கள் செய்த அக்கிரமங்களுக்கும் அநியாயங்களுக்கும், குரூரச் செய்கைக்கும் கணக்கு வழக்கு கிடையாது. துராசையும், கெட்ட எண்ணமும் கொண்ட ஜர்மானியர்கள் குற்றமற்ற மனிதரையும், ஸ்திரீகளையும், குழந்தைகளையும் பச்சாதாபமின்றிகொன்றார்கள். கொன்றும் வருகிறார்கள். கணக்கில்லா பொய் மொழிகளைச் சொல்லுகிறார்கள்.

பாதுகாக்காத பட்டணங்களையும், கோயில்களையும் நாசமாக்கியதுடன் சிறந்த புஸ்தக சாலைகளையும், விலை உயர்ந்தவும் அபூர்வமானவுமுள்ள கைத்தொழில் வேலையுள்ள அழகான கட்டடங்களை அழித்தார்கள். கராச்சியிலிருந்து கல்கத்தா வரையிலும் உள்ள கடற்கரையில் ப்ரிட்டிஷ் கப்பல் பலமற்றிருந்தால் சத்துருக்களாகிய ஜர்மனியர்கள் எவ்வளவோ கெடுதல்களைச் செய்திருப்பார்கள். இப்பொழுதும் அவர்களுக்கு ப்ரிடிஷ் யுத்த கப்பலென்றால் திகில்தான். தப்பு தண்டாக்கள் செய்துகொண்டு யுத்தம் புரிகிறார்களே தவிர அவர்களிடத்தில் சிறிதும் நியாயம் கிடையாது.

நீங்கள் ஆஸ்பிடல் கப்பலுக்காக உதவிபுரிந்திருக்கிறீர்கள். யுத்த பண்டுக்கு பண உதவிசெய்கிறீர்கள். யுத்த கப்பலுக்கும் நீங்கள் உதவிபுரிய முன்வரவேண்டும். நாமெல்லாரும் மிகுந்த ராஜ விசுவாசமுள்ளவர்கள். இதர தேசங்களில் அதிகப்பண உதவி செய்து வருகிறார்கள். நாம் இன்னுமதிகமாகச் செய்துவந்தால் அதிக நலம்.

கடைசியாக நண்பர்களே! பட்டம்பெற்ற நீங்கள் பற்பல வழியில் ஜீவனம் செய்யப்போவீர்கள். உங்களது வேலை எதுவாயிருந்தாலும் சரி “கடவுளை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் கடமையை ஒருவருடைய தயை தாக்ஷிண்யமின்றியும் பயமின்றியும்” செய்யுங்கள். ‘கடவுள் உங்களுக்கு கிருபை செய்வாராக, நீங்கள் உண்மையுள்ளவர்களாய் உங்களிடத்திலும், உங்கள் அரசனிடத்திலும், இருங்கள். உங்கள் தேசத்துக்கு எப்பொழுதும் உண்மையுள்ளவர்களாயிருங்கள். இப்பொழுது நீங்கள் பட்டம்பெறுமுன் செய்த சத்தியத்தை மறவால் உங்கள் வாழ்நாள் முழுவதுமிருங்கள்.’

வேதவதியின் தைரியம்.

ஒரு வீட்டில் குழந்தைகள் இரவில் சாப்பாடானதும் தங்கள் தாதா விடத்திற்குப்போய் பின் வருமாறு அவருடன் சம்பாஷணை செய்தார்கள்.

குழந்தைசள்:—தாதா! எங்களுக்கு நமது புராணங்களிலிருந்து ஏதாவது ஒரு நல்லகதை சொல்லுங்கள்.

தாதா:—உங்களுக்கு வேடிக்கைக்கதை வேண்டுமா? அல்லது தைரியமும் தெய்வபக்தியுமுள்ளவர்களைப்பற்றிய கதைகள் வேண்டுமா? அல்லது மாயாவிநோதக்கதைகள் வேண்டுமா? எதைச்சொல்லும்படி கேட்கிறீர்களோ அதைச்சொல்லுகிறேன்.

குழந்தைகள்:—தாதா! தைரியமும் தெய்வபக்தியுமுள்ளவர்களைப்பற்றி ஒரு கதை இன்றைக்கு சொல்லுங்கள்.

தாதா: நான் வேதவதி என்ற மாதின் தைரியத்தைப் பற்றியும் தெய்வபக்தியைப் பற்றியும் ஒரு கதை சொல்லுகிறேன். கவனமாய் கேளுங்கள்.

ராவணன் என்ற ராக்ஷதன் எங்கும் போர்புரிந்து ஜெயம்பெற்று இயவனம் என்னும் கானகத்தை அடைந்தனன். அங்கு பக்ஷிகளும் புஷ்பங்களும் நிறைந்த ஒரு பூஞ்சோலை ராவணன் கண்ணுக்கு தென்

பட்டது. இவன் அச்சோலையைப் பார்த்துப் போகலாமென்று எண்ணி அங்கு சென்றான். வேதவதி என்ற பெண்மணி இவ்வுலக ஆசையைத்துறந்து நாம் இனி இப்பூஉலகில் இருப்பது சிறிதும் சரியல்ல என்று தீர்மானித்து அக்கினி வளர்த்தி அதன் மத்தியில் நின்று கடும் தபசு செய்துகொண்டிருந்தாள்.

ராவணன் இச்சோலை முழுவதையும் பார்த்து அதிக ஆநந்தங்கொண்டு திரும்பி வருகையில் வேதவதி அகோர தபசு செய்வதைக் கண்ணுற்றான்.

உடனே அவ்விடத்தில் ஸ்தம்பம்போல் நின்றான். "ஆ ஆ! என்ன விந்தை! இந்த சவுந்தரியமுள்ள பெண்மணி எந்த காரணத்திற்காக இப்படி தபசு செய்கிறாள்? இவளுக்கு என்னகுறை? அல்லது உலகமாயையை நிவர்த்திசெய்து அழிவில்லாப் பரம்பொருளை வேண்டி இவ்விதம் அமர்ந்தனளோ? அல்லது தனக்குகந்தபுருஷன் கிடைக்கவேண்டுமென்று தபசு செய்கிறாளோ? அப்படியிருந்தால் நான் அல்லவோ இவளுக்குத் தகுந்தகணவன். என்னைவிட சிறந்த கணவன் இவளுக்கு எவன் கிடைப்பான்? நான் அவளிடத்திற்குச் சென்று அவளைக் கேட்கிறேன். அவள் என்னை மணம்புரிய இஷ்டப்படாவிடின் அவளை பலவந்தமாக எடுத்து என் தேசத்துக்குக் கொண்டுபோகிறேன்" என்று பலவாறாக யோசித்தான்.

கடைசியாக தான் நினைத்ததே சரியென்று விமானத்தில் ஏறி அவளிடத்திற்கு வந்தான். விமானத்திலிருந்து கீழிறங்கி யாதொரு கல்மஷமின்றி திருகரண சுத்தியோடு! தபசுசெய்யும் அப்பெண்மணியிடத்திற்கு வந்தான். அவள் தபசைக்கலைத்தான், சத்தம்செய்தான்.

"ஓபெண்கள் நாயகமே! நீயார்? உன்பெயர் யென்ன? நீ தவத்துக்கு வந்த காரணமென்ன" என்று சப்தமாக வானமும் உடைபடும்படியாய்க் கெர்ஜித்துக் கேட்டான்.

வேதவதி என்பவள் கண்களை விழித்துப்பார்த்தாள். ஓ! ஓ! என்ன காரியம் செய்தோம். இங்கு புருஷர்கள் வரமாட்டார்கள் என்று எண்ணித் தவம் செய்யவந்தது பிசகாக முடிந்ததே. இவன் யாரோ தெரியவில்லை. இவ்விடத்திற்கு என்னத்திற்காக வந்திருக்கிறான்? இருக்கட்டும் இவனுக்குத் தக்க பதில் சொல்லுகிறேன்.

அம்மனிதனைப்பார்த்து ஓ ராஜனே நான் அந்தணரில் மிகுந்த குசத்துவ மகா முனிவருடைய குமாரத்தி. என் பெயர் வேதவதி. என்னுடைய அருமை வாய்ந்த பிதா எப்பொழுதும் சந்தியாவந்தனாதி நித்திய கருமங்களிலே எள்ளளவும் தவறாமல் விதிப்படி வேதபாராயணம் செய்து வருவார். அப்படி செய்துகொண்டு வருகிற நாளையில் அவரோ தப்பட்ட வேத சொரூபத்தினின்று நான் பிறந்தேன். அவ்விதம் நான் பிறந்தமையால் எனக்கு வேதவதி என என் தகப்பனார் பெயரிட்டார். நானோ கன்னிகா ஸ்திரீ. என்னை மணம்புரிய வேண்டுமென அமரர்களும், அரக்கர்களும், அசுரர்களும், மற்ற யாவரும் வந்து எனது பிதாவைக் கேட்டார்கள்.

எனக்கோ அவர்களில் எவரையாவது மணம் புரிவதில் சிறிதுமிஷ்டமில்லை. ஆகையால் அவர்களொருவரையும் மணம் புரிய எனக்குச் சம்மதமில்லை என்று கூறினேன், அதனால் அவர்களில் ஒரு அரக்கனாகிய சம்பு வென்பவன் அதை மனதில் வைத்துக் கொண்டு என் பிதாவை இரவில் வந்து கொன்றுவிட்டு போய்விட்டான். அது கண்ட என் தாய் மிக வருந்தி என் தந்தையுடன் அக்னிப் பிரவேசமானாள்.

நான் மிகவும் விசனப்பட்டு அன்னாகாரமின்றி என் மனதில் நெடுநாளாய்க் கருதியிருக்கும் என் வடிவுக்கேற்ற புருஷனாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவை நினைத்து தவமியற்றுகிறேன்" என்றாள்.

இதைக்கேட்ட தசக்ரீவன் ஓ பெண்ணே! நானோ புலஸ்தியப் பிர்மாவின் சந்ததியில் வந்த பௌத்திரன். என்னை தசக்ரீவன், அல்லது ராவணன் என்று சொல்லுவார்கள். விச்சிரவப் பிர்மாவே என் பிதா. நான் இவ்வுலகத்துக்கு ஆதார கர்த்தாவாகிய கைலாசபதிக்கு நண்பன். எனது வல்லமையால் அக்கைலங்கிரியை யெடுத்த வீரப் பிரதாபன். மூன்று உலகமும் புகழ்கொண்ட இலங்கைப் பட்டணத்தில் அரசாக்ஷி செய்யப்பட்டவன். அநேக வரம் பெற்றிருக்கின்றேன். சமயத்துக்கேற்ற ரூபமுள்ளவனா யிருப்பேன்.

அந்த விஷ்ணு என்னைவிட சிறந்தவனா? நீ பெண். பெண் புத்தியால் அவனை இதுவரையிலும் கருதினாய். இனி அவ்வித எண்ணத்தை விட்டுவிட்டு என்னை மணம்புரிந்துகொள். அவ்விதம் நீ செய்தால் அந்த விஷ்ணு முதலான பேர்களும் உன்னோடு நல்ல வார்த்தை சொல்லுவார்கள். அரம்பை, ஊர்வசி முதலான தேவஸ்திரீகளும் உன்னேவல்கேட்டு நடப்பார்கள், என்று பலவாறாகச் சொன்னான்.

ராவணன் சொல்லியவைகளை வேதவதி கேட்டு சிந்தை பொறுக்காமல் கோபத்துடன் அடா! ராக்ஷச பதரே! இதற்குள் மறந்துவிட்டாயோ; உன் வல்லமையும், சாமர்த்தியமும் ஒருவாறு நடவாமல் வெள்ளியங்கிரியின் கீழ் அகப்பட்டுப் பிராணாவஸ்தையடைந்த பின்பு பல்லைக் காட்டிக் கெஞ்சி சிவபெருமான் தயவால்

செத்தோம் பிழைத்தோம் என்று ஓடிப்போக வில்லையா? அடா நிர்மூடா! நானெனும் அகந்தை கொண்டு உன்னாலான பிரட்டெல்லாம் செய்கிறாயே. நீ அந்த மகா விஷ்ணுவுக்குச் சரியா? வானத்தை முட்டிப் பறக்கினும் ஊர்க்குருவி பறவை ராசனுக்கு நிகராகுமா? ஓ துர்க்குணமுடைய துஷ்டா! இந்தக்ஷணம் அப்பால் போய்விடு. இவ்விடம் நிற்காதே," என்றாள்.

உடனே ராவணன் கோபங்கொண்டு ஆலகால விஷம்போற் சீறி அதிக்கிரமித்து இப்பொழுது உன்னை இலங்கைக்குக் கொண்டு செல்வேனென்று அந்த வேதவதியின் கையைப்பற்றி இழுத்தான்.

> வாடாமலரோன் வரச் செருக்கான் மற்றென்னை நீ
> கூடாதன சொல்லிக் கூடாது—தீண்டினையால்
> ஏடா உனக்கு மிலங்கைக்கு முற்கிளைக்கும்
> கேடாகத் தோன்றுவே னென்றாள் கிளர்சினத்தாள்.

இவ்விதம் தனது கையை யிழுத்தவனை மிகுந்த கோபாவேசத்தோடு பார்த்து, அடா! துன் மார்க்கப்பயலே! தாமரை மலரில் வாசஞ் செய்கின்ற பிரமனது வரம்பெற்ற கர்வத்தால் அடாத வார்த்தைகளைச் சொன்னாய். மேலும் என் கையைத் தொட்டு இழுத்தாய். உனக்கும் உன் இலங்கைபுரிக்கும் உன்பந்துக்களாகிய ராக்ஷதர்களுக்கும் கேடுவரும். நான் சீதையாகப் பிறந்து வந்து ராமரை மணம்புரிவேன். அவர் உன் உயிரை மடிப்பார் என்று சொல்லிவிட்டு அக்கினியில் விழுந்து உயிர் துறந்தாள்.

ராவணன் மனவருத்தத்துடன் தன் தேசம் நோக்கிச் சென்றான்

பதார்த்தகுண சிந்தாமணி

கீரை வகை.

துயிலிக்கீரை:—ஆமமும் நமிட்டுச் சிரங்கும், விரணமும் உண்டாகும். பழமலக்கட்டும் பிரமேகமும் நீங்கும்.

பண்ணைக்கீரை:—குடலுக்கு நன்மைத் தாராநின்ற பண்ணைக் கீரை ஆமம், கரப்பான், கிரந்தி, விரணம், இவைகளைநீக்கும், வலத்தையிளக்கும்.

பரட்டைக் கீரை:—இக்கீரையால் சிலேஷ்மநோயும் வாதப்பிணியும், கரப்பானும் போம். ஆனால் பித்தம் உண்டாம்.

செங்கீரைத் தண்டின் குணம்:—தீராத பித்த நோயையும், பெரும்பாட்டையும், சன்னி பாதத்தையும் நீக்கும்.

முளைக்கீரையின் குணம்:—விருத்தபால யௌவன பருவத்தவர்க்கும் நாவுக் கிதமா யிருக்கும். காச சுரத்தை நீக்கும், பசியைத்தரும், வெகு ருசியுள்ளது.

முள்ளிக் கீரை அல்லது குப்பைக் கீரை:—காட்டு முள்ளிக்கீரை, நீர்ப்பேதியையும், ஜடராக்கினி விருத்தியையும் செய்யும். தங்கத்தை பஸ்பமாக்கும் என்றும் சொல்வதுண்டு.

அறுகீரை அதாவது அரைக்கீரையெனமருவியது:—பல வியாதிகளுக்கும் நற்கதியான அறுகீரையினால் சுரம், நடுக்கல் சந்நிபாதம், கப ரோகம், வாதநோய் இவைபோம். பலம் உண்டாகும்.

புளிச்சக் கீரை:—சிணுக்கிருமனும் மந்தமும் நீங்கும். காய சித்தியாம். பல முண்டாகும்.

சிறு கீரை:—சிறு கீரையால் தூம்பிர நோய் காசம், இளைப்பு, பாதரசவேகம், விரணம், பித்தநோய், நாவிபாஷாணம் முதலிய விஷங்கள் போம். நீர் இறங்கும் தேகத்திற்கு அழகுண்டாகும்.

கலவக் கீரை:—பல வகையும் கலந்த கீரை வாத, பித்த, கப தோஷங்களையும், மலச்சிக்கலையும், ஆந்திரபித்த வாதத்தையும்போக்கும். இது பத்தியத்திற்கு உதவும்.

லார்ட் கிட்சனர்

லார்ட்கிட்சனர் கன்ஸ் பரோஹுவுசில் பிறந்தார். இது லிஷ்டேளல் என்ற சிறிய பட்டணத்திற்கு சமீபத்திலிருக்கிறது. இது ஐர் லாண்டிலிருக்கிறது. இவருடைய தகப்பனார் இந்திய சேனையில் கர்னலாயிருந்து பென்ஷன் பெற்று லிமெரிக், கேரிக் என்றவிடங்களில் பெரிய பூமியை வாங்கி அதை விருத்திக்குக் கொண்டு வந்தார். இவருடைய தாயாரோ கிறிஸ்துவ குருவின் புத்திரி. கிட்சனர் இரண்டாவது குமாரர். இவருக்கு பெயர் ஹொராஷியோ ஹர்பர்ட். ஆனால் இவரை ஹர்பர்ட் என்று அழைப்பார்கள்.

இவர் குழந்தைப் பருவத்தில் பேசாமல் சும்மாயிருக்க மாட்டார். ஏதாவது ஒரு சண்டையில் அகப்பட்டுக் கொள்வார். அவர் உடனே தப்பித்துக் கொள்வார். அந்நியர்களைக் கண்டால் வெட்கப் படுவார். ஆகையால் தனிமையாகப் போவாராம். சிலர் அவ்விதம் போகும் கிட்சனரைப்பார்த்து "என்ன கனவுகாணுகிறான்" என்று சொல்லுவார்களாம். விளையாடல்கள் இவருக்கு நன்றாகத் தெரியாது, ஆனால் இவருக்கு நீந்தத்தெரியும், இவர் சமுத்திரகரையில் நீந்துவது வழக்கம்,

ஹர்பர்ட் சிறிது காலம் படிப்பில் அக்கரையில்லாதவராயிருந்தார். இப்படி இவர் இருந்தது இவர் தகப்பனாருக்கு விசனமும் கோபமுண்டானது. ஏனெனில் தன் குமாரன் புத்தியுள்ளவனென்றும் அவன் சரியாய் படித்தால் கெட்டிக்காரன் ஆவான் என்றும் தெரியும். தனது சகோதரர்களுடன் ஒரு பாடசாலையில் படித்துவரும் நாளில் பரிக்ஷை

தினம் வந்தது. அதற்கு முந்திய தினத்தில் நீ அஜாக்கிரதையாயிருக்கின்றாய். நீ பரிக்ஷையில் தேறாவிடின், உன்னைப் பெண்கள் பாடசாலையிலேயேவைத்துவிடுவேன் என்றார். பரிக்ஷையும் முடிந்தது. ஹர்பர்டும் தவறிவிட்டான். அவர் சொல்லியவண்ணம் தம் பிள்ளையை பெண் பாடசாலையிலேயே யிருக்கும்படி செய்துவிட்டு உன் பாடங்களைக் கவனித்து படிக்காவிட்டால் "உன்னை ஒரு டொப்பி செய்பவனிடம் டொப்பி வேலை செய்ய அனுப்பி விடுவேன்" என்றார்.

ஹர்பார்ட் இந்த அவமானத்தைச் சகிக்கமுடியவில்லை; மிகவும் வெட்கத்துடனும் ரோசத்துடனும் நன்றாகப்படிக்க ஆரம்பித்தான். இப்படி படித்தமையால் படிப்பில் விருத்தியடைந்தான். கணக்கு நன்

றாகப்போட ஆரம்பித்தான். பாடசாலை வேலையைக் கவனிப்பதால் காலத்தின் அருமை பெருமையையும், அறிவைப் பெறுவதில் சுறு சுறுப்பாயிருக்க வேண்டியதையும் கற்றுக்கொண்டான். இவைகளிரண்டும் தான் பெரியவனாகும் பொழுது தனக்கு மிகுந்த உதவியைச் செய்யும் என்பதையும் அறிந்து கொண்டான்.

பாடசாலையில் படித்த பின்பு கிட்சினரும் அவருடைய சகோதரர்களும் சுவிட்சர் லண்டுக்குப் போனார்கள். அங்கு அழகான ஜினியா என்ற ஏரியின் கரையில் தங்களது உபாத்தியாயர் வீட்டில் வசித்து வந்தார்கள். படிக்கிற நேரத்தில் படிப்பார்கள். மற்ற சமயத்தில் ஸ்னானம் செய்வார்கள், படகு விடுவார்கள். மலையின் மீது ஏறுவார்கள், (கிட்சினருக்கு) ஹர்பர்டுக்கு இளம்பிராய முதல் தன் தகப்பனாரைப்போல் சோல்ஜராக யிருக்க எண்ணம்.

இவர் சுவிட்ஸர்லண்டில் சில காலம் படித்த பின் லண்டனுக்கு வந்து ராணுவ பாடசாலையில் சேர்ந்து படித்தார், 1868ம் வருஷம் ராணுவ பரிக்ஷையில் தேறினார். இவரைச் சிறந்த மாணாக்கன் என்று அப்பாடசாலை உபாத்தியாயர்கள் சொன்னார்களாம்.

இச்சமயத்தில் இவருக்கு துக்கம் உண்டானது. இவருடைய அருமைத் தாயார் மரணமடைந்தாள். இவர் ராணுவத்தில் சேர்ந்து உழைத்து வந்தார். திடீரென்று 1870-ம் வருஷத்தில் ஜெர்மனிக்கும் பிரான்சுக்கும் யுத்தம் உண்டானது. சோல்ஜராகயிருந்து அநேக விஷயங்களை அறிந்துகொள்ள வேண்டுமென்ற அவாமிகுதியும் (ஹர்பர்ட்) கிட்சனருக்கு உண்டு. ஆகையால் பிரன்சு சேனையில் சாமனிய போர்ச் சேவகனாக அமர்ந்தார். பாரிஸ் நகரத்தை விரோதிகளாகிய ஜர்மனியர்கள் சூழ்ந்துகொண்டிருந்தார்கள். இவர் சேர்ந்திருந்த படை பாரிஸ் நகரத்தை தப்புவிக்க பிரயத்தனம் செய்தது. இவருடைய சாமர்த்தியம் எங்கும் பரவியது. இவரை யாவரும் தைரியம் பொருந்திய சிறு போர்ச்சேவகன் என்று சொன்னார்கள். ஒரு சமயத்தில் இரண்டு பிரன்சு உத்தியோகஸ்தர்களுடன் ஆகாய விமானத்தில் ஏறிக்கொண்டு வெகு உயரம் சென்றார். இவர்கள் விரோதிகளிருக்கும் இடங்களைக் கண்டறிய அவ்விதம் சென்றார்கள்.

இவர் பிரஞ்சு படையில் அடைந்த அநுபவம் மிகவும் உபயோகமுள்ளதாயிற்று. அக்காலத்தில் பிரஞ்சுப்படை சீராக நடத்தப்படவில்லை. சோல்ஜர்களுக்கு யுத்த பயிற்சியே சிறிதுமில்லையாம். சோல்ஜர்களுக்கு யுத்த பயிற்சி மிகவும் முக்கியம் என்பதைத் தெரிந்து கொண்டார். அவர்களுக்கு ஏராளமான ஆயுதங்களும், துணிமணி

யும், ஆகாரம் அவசியம் என்பதையும் அறிந்துகொண்டார். அவர்கள் நன்றாக ஒழுங்குபடுத்தவேண்டு மென்பதையும் செவ்வனே கண்டுகொண்டார். பிரன்சுக்காரருக்கு அப்பொழுது அபஜயம் கிடைத்தது. ஏனெனில் பிரன்சுக்காரர்கள் யுத்தத்திற்கு ஆயத்தமாயிருக்கவில்லை. ஜர்மனியர்களோ ஆயத்தமாயிருந்தார்கள்.

கிட்சினராகிய சிறிய போர் வீரன் லண்டன் மாநகருக்குத் திரும்பிச் சென்றார். பிரிடிஷ் யுத்த ஆபீஸிலிருந்து உத்தரவு பெறாமல் பிரன்சு படையில் சேர்ந்ததற்காக இவரைக் கண்டித்தார்கள்.

இவரை மறுபடியும் சேனையில் எவ்விதம் சேர்த்துக்கொள்ளலாம் என்று ஆலோசித்தார்கள். சேனைத் தலைவர் மிகுந்த கோபத்துடன் "ஐயா! நீர் ஏன் பிரஞ்சு படையில் சேர்ந்தீர்? இதற்கு உமது பதில் என்ன?" என்று கேட்டார். கிட்சனர் "ஐயா! தயவு செய்து கேளுங்கள். இங்கு சிறிது காலம் நான் இருந்து வேலை செய்வது அவசியமில்லையென்று நினைத்தேன். மேலும் இன்னும் யுத்தத்திற்குரிய சிறிது விஷயங்களை யறிய விரும்பினேன்" என்றார்.

அச்சேனைத் தலைவர் இவர் கபடற்றவரென்றும் இவர் வேலையில் அதிக அபிலாஷையுள்ளவரென்றும் தெரிந்து மிகவும் திருப்தியடைந்தார்.

சேனைத் தலைவர் "நான் இவரிடத்தில் மனோதிடமிருப்பதைக் கண்டேன். இவரை மறுபடியும் சேனையில் சேர்த்துக்கொள்ள தீர்மானிக்கிறேன்" என்றார். இவரை ஒரு சேனைத் தலைவருக்கு அடுத்த உத்தியோகஸ்தராக நியமித்தார். இவர் சுறுசுறுப்புள்ளவராயும் ஸ்ரத்தையுள்ளவராயுமிருந்து தமது வேலையைச் செவ்வனே செய்து வந்தமையால் இவருடைய மேலதிகாரிகள் இவரை மெச்சி, இவருக்கு வேறு வேலை கொடுத்தார்கள். இவர் பேலஸ்டைன் என்ற ஸ்தலத்தை தமது பரிவாரங்களுடன் சென்றுப் பார்த்து வந்தார். அவ்விடம் முழுவதையும் சுற்றிப் பார்த்து நன்றாக சகல விஷயங்களையும் வெகு கஷ்டத்துடன் தெரிந்துகொண்டார். இவர் அங்கு பற்பல விடங்களுக்குச் சென்று ஒவ்வொரு விடத்தையும் படமாக் வரைந்துகொண்டார். காடுவனாந்தரங்களைக் கடந்தார். தனிமையாகவும் சிற்சில விடங்களில் தங்கியிருந்தார். அவ்விடங்களில் வெயிலோ அதிகம். சில வேளையில் குளிரோ அதிகம். இவருக்கு சுரமும் கண்டது. பனி மிகவு மிருந்தமையால் இவர் கண்ணுக்கு உபத்திரவமுமுண்டானது. விடாமுயற்சியுடன் பல கஷ்டங்களை அநுபவித்துக்கொண்டு தமது வேலையிலேயே கண்ணாயிருந்தார்.

அங்குள்ள ஜனங்களுடன் பழகிஅவர்கள் பேசும்அராபி பாஷையைக் கற்றுக்கொண்டார். அத்தேசத்து ஜனங்களுடைய நடை, உடை பாவனைகளையும்தெரிந்துகொண்டார். அவர்கள் உடுத்திக்கொள்ளும் உடையை இவரும் தரித்துக்கொண்டார். சிற்சில சமயங்களில் அவ்வித உடை இவருக்குஅசௌகரியமா யிருந்ததாம். இவர் தாடி வளர்த்திக்கொண்டு மிருந்தார். சூரிய உஷ்ணத்தால் இவர் முகம் சிறிது வேறுபட்டது. இவரைஅத்தேசத்தார் ஒரு பெரிய அரேபியா மனிதன் என்று நினைத்து இவருக்கு உகந்தமரியாதையைச் செய்தார்களாம்.

இவர் ஒட்டகத்தின்மீது ஏறிச் சவாரிசெய்வாராம். அது வேகமாக ஓடினபோதிலும் முரட்டுத்தனம் செய்யுமாம். வேகமாய் ஓடும் பொழுது திடீரென்று கீழே படுத்துக்கொள்ளுமாம். பின்பு அதை எழுப்பி ஓடும்படி செய்தால் அதனிஷ்டப்படி வேறு திசையை நோக்கிச் செல்லுமாம். ஒரு சமயம் ஒட்டக சவாரி மிகவும் கஷ்டம் என்று சொல்லியிருக்கிறார்.

பைபிலில் சொல்லப்படும் அஸ்கேலான் என்ற நகரம் புராதனமானது. சேம்ஸன் இங்குவந்து தனது விரோதிகளாகிய 30 பேரைக் கொன்றார். இப்பட்டணத்தை ஒவ்வொரு சோல்ஜரும் வெகு முக்கியமானதென்று கருதுவான். ஏனெனில் 1192ம் வருஷத்தில் இங்கிலாந்த் தேசத்து ரிச்சர்ட் I என்பவர் இந்நகரத்தைக் கைவசமாக்கிக் கொண்டார். ஈஜிப்டுக்கு அரசனாயிருந்த சலாடீன் என்பவனுடன் யுத்தம்புரிந்து அவனைத் தோற்கடித்தார். இவ்விதம் யுத்தம் செய்து தங்கள் பரிசுத்தமான இடத்தைக் கைவசமாக்கிக்கொள்ள பலத்தயுத்தம் செய்யவேண்டி யிருந்தது.

பரிசுத்தமுள்ள இவ்விடம் மெடிடரேனியன் கடல்கரையிலிருக்கிறது. ஒரு நாள் பிற்பகலில் கிட்சனரும், காண்டர் என்ற தளகர்த்தரும் கடலில் ஸ்நாநம் செய்ய விரும்பினார்கள். இங்கு அலையோ அபாயகரமாயிருக்கும். ஸ்நாநம் செய்வது மிகவும் கஷ்டம். இவ்விருவரும் ஸ்நாநம்செய்ய ஆரம்பித்தார்கள். மிஸ்டர் காண்டரை அலை அடித்துக்கொண்டு போயிற்று. கிட்சனருக்கு நீந்த நன்றாகத் தெரியும். சிறுவயதில் ஐரலண்டெல் கடலில் நீந்தி பழகியிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறோமல்லவா? தனது சிநேகிதருக்கு ஆபத்து உண்டானதைக் குறித்து நினைத்து விசனமுற்று உடனே கடலில் நீச்சலடித்து மிக்க கஷ்டத்துடன் தமது நண்பரை உயிருடன் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தார். இவர் அப்பொழுது கொண்ட சந்தோஷத்திற் களவுண்டா?

இன்னொருதடவை காண்டர் உயிரைக் காப்பாற்றி யிருக்கிறார். கேலிலீயில் சிறிய பட்டணமாகிய ஸேபட்டுக்கு சமீபத்தில் இயேசு

கிறிஸ்து 7 ரொட்டித் துண்டுகளையும் சில சிறிய மீன்களையும் 4000 ஜனங்களுக்கு பங்கிட்டுகொடுத்தார். இந்த அற்புத காட்சி நடந்த இடம் இது. இவ்விடத்திற்கு 1875ம் வருஷம் ஜூலைமீ 10வ யன்று கிட்சனரும், காண்டரும் சில துருப்புடன் வந்திருந்தார்கள். இவர்களை அங்குள்ளவர்கள் கண்டதும் கோபாவேசத்துடன் கிறிஸ்தவ நாய்களைக் கொல்லுங்களென்று கூக்குரலிட்டார்கள். இவர்களை அவ்வூர் ஜனங்கள் எதிர்த்தார்கள். இவர்களிடத்தில் தடியுமில்லை, ஆயுதங்களுமில்லை. என்ன செய்வார்கள் பாவம்! ஒருவன் காண்டர் தலையின்மீது ஒரு தடியால் படேரென்று அடித்தான். கிட்சனர் அவர்களிடத்திலிருந்த தடிகளைப் பிடித்துக்கொண்டு அவர்களை எதிர்த்து காண்டரைத் தப்புவித்தார். பின்பு அம்மூடஜனங்கள் கற்களைவிட்டெறிந்தார்கள். துப்பாக்கிகளைக்கொண்டு சுட்டார்கள். வெகுதூரத்துக்கப்பால் காண்டர் முதலியவர்கள் ஓடிப்போய் விட்டார்கள். கிட்சனருக்கு இடது துடையில் ஒரு கல்பட்டது. ஆயினும் அவர் அவர்களை எதிர்த்துக்கொண்டிருந்தார். உடனே துருக்கி பட்டாளம் வந்தது. விரோதிகள் பட்டாளத்தைக் கண்டார்களோ இல்லையோ காற்றாய்ப் பறந்துபோய் விட்டார்கள்.

இவ்விதம் ஆறு வருஷகாலம் கிட்சனர் மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்துவந்து கடைசியாக பேலஸ்டைன் பண்ட் கமிட்டிக்கு பேலஸ்டைன் முழுவதும் படம் வரைந்து கொடுத்தார்.

அச்சமயத்தில் ருஷியாவுக்கும் துர்க்கிக்கும் நடந்துகொண்டிருந்த யுத்தம் முடிவுக்கு வந்தது. ப்ரிட்டன் ஸைப்ரஸை கைவசமாக்கிக் கொண்டது. கிட்சனர் கோர்ட்டுகளை ஸ்தாபித்தும் அவ்வூரை சீர்திருத்தியும் வந்தார். அவ்வூரின் விஸ்தீரணத்தையும் கண்டு பிடித்தார்.

எஷியமைனரில் ப்ரிடிஷ் வைஸ் கான்சலராகவிருந்து யுத்தத்தால் ஆஸ்திபாஸ்திகளை அழிந்த ஜனங்களின் ஸ்திதியை விருத்தி செய்தார்.

இவருடைய சாமர்த்தியத்தைக் காண்பிக்க இன்னொரு சமயம் நேரிட்டது. ஈஜிப்டில் ராஜாங்க விஷயம் திருப்திகரமாயில்லை. ஆகையால் கலகம் உண்டானது. கடன் அதிகரித்தது. ப்ரிடிஷ் உத்தியோகஸ்தரை நியமித்து சுதேச ஜனங்களை சேனையில் சேர்க்கவும் அவர்களைப் பழக்கிவரவும் ராஜதந்திர நிபுணர்கள் எண்ணங் கொண்டார்கள்.

ஈஜிப்டின் சேனைக்கு வுட்டை சேனைத் தலைவராக நியமித்தார்கள். கிட்சனருக்கு அரபிபாஷை தெரியுமல்லவா? ஆகையால் கர்னல்

டெயலருக்கு அடுத்த உத்தியோகஸ்தராக கிட்சனரை நியமித்தார்கள். டெய்லர் கிட்சனருடைய அபார சக்தியையும் சுறுசுறுப்பையும் கண்டு மகிழ்ந்து "அவர் சாந்தமுள்ளவர், அவர் மிகவும் கெட்டிக்காரர்" என ஒரு நண்பரிடத்தில் 1883 ம் வருஷத்தில் சொன்னாராம்.

இவ்விதம் கிட்சனர் தமது வேலையில் உற்சாகத்துடனும், சுறுசுறுப்பாயுமிருந்து பெரிய உத்தியோகத்திற்கு வந்தார். இவர் திடகாத்திரமுள்ளவர். மிக்க தைரியமும், விடாமுயற்சியும் உள்ளவர். வேலையைச் செய்யவேண்டுமென்ற விருப்பமுள்ளவர். எப்பொழுதும் இவ்வித குணமுள்ளவர்கள் நல்ல ஸ்திதிக்கு வருவார்களென்பதற்குத் தடை உண்டோ?

கும்ப சம்ரக்ஷணையும் சுகாதாரமும்.

ஜலம்.

ஜலம் ஜனங்களுக்கும் பிராணிகளுக்கும், புல், பூண்டு, செடி, மரம் முதலியவைகளுக்கும் மிகவும் அவசியமானது. ஜலமில்லாவிடின் யாவரும் மிகவும் கஷ்டப்படுவார்கள். ஜலமில்லாத சிற்சில ஊர்களில் ஜனங்கள் இப்பொழுதும் கஷ்டப்படுவது யாவருக்கும் தெரியும். கவர்ன்மெண்டார் ஜலவசதிக்காக அநேக ஏற்பாடுகள் செய்துவருகிறார்கள். ஊர் ஜனங்களும் இவ்விஷயத்தில் கவர்ன்மெண்டாருடன் ஒத்து உழைத்தால் எவ்வளவோ நன்மைகள் உண்டாகும்.

ஜலத்தில் இரண்டுவித வாயுக்கள் சேர்ந்திருக்கின்றன. (Hydrogen and oxygen) ஜலவாயுவும் பிராணவாயுவும் சேர்ந்திருக்கின்றன. ஜலம் ஆவி ரூபமாகவும், மேகங்களாகவும், பனியாகவும், மழையாகவும், பனிக்கட்டியாகவும், ஆலங்கட்டியாகவுமிருக்கும். பின்னிட்டு ஜலமாக மாறும்.

ஜலத்தின் உபயோகம்.

ஜலம் பிராணிகளுக்கெல்லாம் அத்யாவசியம். புல் பூண்டு முதலியவைகளுக்கும் மிகவும் தேவை. ஜல மில்லாவிடின் உயிருடனிருக்க முடியாது. நமது தேகத்தில் 4ல் 3பாகம் ஜலம் இருக்கிறது. இது நாம் புசிக்கும் ஆகாரத்திலிருந்து கிடைக்கிறது. பூஷணிக்காய், பறங்கிக்காய், சுறக்காய், உருளைக்கிழங்கு, வெள்ளிரிக்காய் முதலியவைகளில் ஜலமதிக மிருக்கிறது. அதிக பாகம் தண்ணீர், காப்பி, தேயிலை முதலிய பானங்களைப் பருகுவதால் நமது தேகத்தில் சேருகிறது.

தண்ணீரில்லாவிடின் தானியங்கள் விளையாது. அன்னாகாரதிகள் கிடைப்பது அருமை. அவைகளின் விலையோ அதிகப்படும்.

மரணமும் அதிகமாய்விடும். வியாதியுமுண்டாகும். ஆகையால் கடவுள் நமக்கு நீரை ஸ்ருஷ்டித்திருக்கிறார். மழைகாலத்தில் மழைஜலம் வயல்களுக்கு மிகவும் உபயோகமாகிறது. மழையில்லாத காலத்தில் கிணறு, குளம், ஏரி முதலியவைகளிலுள்ள ஜலத்தை எடுத்து வயல் தோட்டம் முதலியவைகளுக்கு உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். வாய்க்கால் மூலமாய் இவைகளிலிருந்து ஜலம் வயல் முதலியவைகளுக்குப் பாய்வதும் அநேகருக்குத் தெரியும். இப்படிச் செய்வதனால்தான் நமக்கு வேளாவேளையில் தானியங்களும் காய்கறிகளும் கிடைக்கின்றன. ஜனங்கள் அதிக கஷ்டமின்றி ஜீவிக்கின்றார்கள்.

இவ்விதம் கவர்ன்மெண்டார் ஜலம் பாய்ச்ச அணைக்கட்டுகள் முதலியவைகளை கட்டுவித்து அவைகளைச் சரிவர பாதுகாத்துவர உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள். எவ்வளவோ ஆயிரக் கணக்கான கால்வாய்கள் இந்தியா முழுவதுமிருக்கின்றன. முன் பயிரிடப்படாமலிருந்த பூமியில் அநேகபாகம் இப்பொழுது பயிரிடப்பட்டு வருகிறது. இதனால் ஜனசங்கை விருத்தியடைய யடைய தானிய விருத்தியுமுண்டாகிறது.

1900—1901-வருஷங்களில் 46½-கோடி ரூபாய் இந்தியா கவர்ன்மெண்டார் செலவுசெய்திருக்கிறார்கள். 50,000 வாய்க்கால்களிருக்கின்றன. வயல்களுக்கு எங்குபார்த்தாலும் ஜலம் பாய்கிறது. இதனால் ஜலம் பயிருக்கு மிகவும் அவசியமெனத் தெரிகிறது. ஆயினும் நமது தேகசௌக்யத்திற்கு ஜலம் மிகவும் அவசியமானதே.

அதில்லாமல் நமது தேகத்திலுள் உள்ள அவயவங்கள் சரிவர தங்கள் வேலையைச் செய்யமுடியாது. நமது சர்மம் கெட்டுப்போய்விடும். வியாதியடையும். நமது துணிதுண்டுகளைச் சுத்தமாய் வைத்துக்கொள்ள முடியாது. சாக்கடைகள் அசுத்தமடைந்து அவைகளிலிருந்து துர்நாற்றம் வெளிக்கிளம்பும். அதனால் வியாதி அதிகரிக்கும். தெருக்களில் தூசிகள் கிளம்பிக்கொண்டேயிருக்கும். தூசிகளில் சிறு சிறு க்ருமிகளிருக்கும். அவைகள் நமது மூக்கு, வாய் முதலியவைகளின் மூலமாகச்சென்று பற்பல வியாதிகளை உண்டாக்கும். அதனால் தான் பெரிய பெரிய பட்டணங்களிலுள்ள தெருக்களில் தண்ணீர் அடிக்கடி தூசி கிளம்பாவண்ணம் போடுகிறார்கள்.

பழமொழிகள்:—(தண்ணீர் சம்பந்தமானவைகள்.)

தண்ணீரிலே அடிபிடிக்கிறது.
தண்ணீர் வெந்நீரானாலும் நெருப்பை அவிக்கும்.
தண்ணீரையும் தாயையும் பழிக்கலாமா?
தண்ணீரும் மூன்று பிழை பொறுக்கும்.

இந்து ஸ்திரீ ரத்னங்கள்.

கானோர் ராணி.

கானோர் மத்திய இந்தியாவில் ஒரு சிறு ராஜ்யம். முன்காலத்தில் மகமதியர்கள் படை எடுத்து வந்தபொழுது இந்து ராஜ்யங்களெல்லாம் தலை எடுக்காமல் அழிந்து விட்டன. ஆனால் கானோர் அக்காலத்தில் தளர்ச்சி அடையாமல் தனது சுயேச்சையைக் காப்பாற்றிக்கொண்டது. அவ்விதம் செய்துகொள்ள யுத்தம் செய்தது. பட்டாணிகள் டெல்லிக்கு வெளியில் துரத்தப்பட்டார்கள். மொகலாயர்களோ மழை வருமுன் வெட்டுக்கிளிகள் எப்படி ஏராளமாகப் பறக்குமோ அம்மாதிரிக் கும்பல்கும்பலாக இந்தியாவுக்கு வந்து குவிந்தார்கள். பட்டாணிகளை காலாபக்கத்திலும் துரத்திவிட்டு தாங்கள் முன் இருந்த ஸ்தலங்களைக் கைவசமாக்கிக் கொண்டார்கள். வலிமையுள்ள பட்டாணிகள் டெல்லிக்கப்புறம் துரத்தப்பட்டபொழுது இவர்கள் வேறு வழியின்றி இந்து மன்னர்களைத் துரத்தி அவர்களுடைய ராஜ்யத்தைப் பிடித்துக்கொள்ள முயன்றார்கள்.

கானோரை ஜெயித்து அந்த ராஜ்யத்தைப் பிடித்துக்கொள்ள எண்ணி இவர்களில் ஒருவன் தனது சேனையோடு காேனார் அரசனுடன் சண்டைக்குப் போனான். காேனார் அரசன் மிக்க தைரியம் பொருந்தியவன். பட்டாணிக்குப் பயப்படாமல் இவனும் தனது சேனையைத் திரட்டிக்கொண்டு பட்டாணியுடன் யுத்தம் புரிய வந்தான். இருவருக்கும் பலத்த யுத்தம் நடந்தது. பட்டாணி சுலபத்தில் இந்து ராஜாவை ஜெயித்து விடலாமென்று எண்ணியிருந்தான். அவன் எண்ணினது தப்பே. காேனார் அரசனை வெல்ல முடியவில்லை. பட்டாணியும் மிக்க பலத்துடன் வெகுநாள் யுத்தம் புரிந்தான். சிறிது சிறிது பூமியைப் பிடித்துக்கொண்டான். நல்ல அதிர்ஷ்டவசத்தால் பட்டாணிக்கு ஜயகாலமுண்டானது. காேனார் அரசன் பட்டாணியால் கொல்லப்பட்டான். அவனது சேனைத்தலைவரும் மற்றவரும் யுத்தத்தில் மடிந்தார்கள்.

கானோரிலுள்ள ஜனங்களுக்கு இத்துக்க சமாச்சாரம் எட்டியவுடன் மிக்க விசனமுற்று ராணிக்கும் இச்சங்கதியைத் தெரிவித்தார்கள். ராணியார் தெய்வபக்தியும் ஜனாபிமானமும் உள்ளவள். விசனத்தை வெளிக்காட்டாமல் தைரியத்துடன் தன்னால் கூடியமட்டும் ஜனங்களையெல்லாம் ஒருமிக்கசேர்த்து விரோதிகளுடன் யுத்தம் புரிய சென்றாள். கானோர் ஜனங்கள் தங்கள் ராணியாரே சேனைத்தலைமையை வகித்து யுத்தம்புரிய வந்ததைக்கண்டு தைரியங்கொண்டு எதிரிகளுடன் உக்கிரமாக யுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள். இருதிறத்தாருக்கும் அகோரயுத்தம் நடந்தது. அநேகர் மடிந்தார்கள். பட்டாணிக்கு சேனையின் தொகையோ அதிகம். ராணிக்கோ அதிக கொஞ்சம் தொகைதான். ஆயினும் பட்டாணியால் ராணியை ஜெயிக்க முடியவில்லை. இருசேனையும் விடாமல் யுத்தம் புரிந்தார்கள்.

கானோரை எப்படியாவது பிடித்துக்கொள்ள வேண்டுமென்று பட்டாணி எண்ணினான். ராணிக்கோ சேனையின் பலம் குறைந்துகொண்டேயிருந்தது. ஆயினும் மனம் தளராமல் ஒரு அங்குல நிலம்கூட அப்பட்டாணி கைக்குள் அகப்படாவண்ணம் அகோரயுத்தம் செய்து வந்தாள். கானோருக்கு ஐந்து பலமான கோட்டைகள் உண்டு. ஐந்து கோட்டைகளையும் பாதுகாத்துக்கொண்டு யுத்தம் புரிந்தார்கள். பரிதாபமான ராணியார் கடைசியாக தன்னால் முடியாததைக்கண்டு நர்மதா நதியண்டை வந்தாள். இவள் அவ்விடத்தைவிட்டு நர்மதா கரைக்கு வந்தவுடன் விரோதிகள் இவளைத் துரத்திக்கொண்டே வந்தார்கள். கோட்டைக் கதவை தூள்தூளாக்க முயன்றார்கள். கதவுகளையெல்லாம் மூடிவிட்டு வெகு ஜாக்கிரதையுடன் யுத்தம் செய்தார்கள். வெளியிலிருந்தவர்களை பட்டாணிகள் கொன்றார்கள். இவ்விதம், படகிலும், கரையிலும் இருந்த கானோர் வீரர்கள் மடிந்தபோதிலும், விரோதிகளுக்கு நஷ்டமுண்டானது கணக்கு வழக்கில்லை.

கோட்டைக்குள் மனந்தளர்ந்து யுத்தம் புரிந்து வந்தவர்கள் வெகுநேரம் கோட்டையைப் பிடித்துக்கொண்டிருக்க முடியவில்லை. தைரியம் குன்றி பலமற்று இருந்தபோதிலும் தங்கள் ராணி பக்கத்தில் நின்றுகொண்டு யுத்தம் புரிந்தார்கள். பட்டாணிகள் சுவர்களின்மீது ஏறி உள்ளே ஆயிரம் ஆயிரமாக குதித்து உள்ளிருப்பவர்களைக் கொல்ல ஆரம்பித்தார்கள். சரணாகதியடைவதைத்தவிர வேறு வழியில்லாததை யாவரும் கண்டு உடனே பட்டாணிக்கு தாங்கள் சரணாகதியடைவதாகவும் இந்த அகோர யுத்தத்தை உடனே நிறுத்திவிடவேண்டுமென்றும் எங்கள் ராணியாரின் எண்ணமென்று தெரிவித்தார்கள்.

பட்டாணி உடனே சந்தோஷப்பட்டு யுத்தத்தை நிறுத்திவிட்டான். தன்னிடத்திற்கு தூதாக வந்தவனுக்கு மேரை மரியாதைகள் செய்தான்.

"ராணியின் அழகு என்னை மயக்குகிறது. ஐயா, நீர் உடனே போய் உமது ராணியின் தைரியத்தைக்கண்டு மிகவும் மெச்சுகிறேன் என்று சொல்லும், அவள் ராணியாயிருப்பதற் குரியவளே. அவள் ராணியாகயிருக்க இஷ்டப்பட்டால், நான் உயிருடனிருக்கு மளவும் அவள் ராணியாகவே யிருப்பாள். நான் அவளது ஊழியக்காரனாயிருப்பேன். அவள் இந்தகரானோரை ஆளட்டும், நான் அவளுக்குப் பணிவிடைசெய்யும் வேலைக்காரனா யிருக்கிறேன்" என்று சொல்லும். "இவ்விதமி நக்க அவள் மறுதளித்தால். நான் பலவந்தம் செய்யவேண்டிவரும் என்பதையும்" சொல்லும் என்று தூதனிடத்தில் கெட்ட எண்ணமுள்ள பட்டாணி சொல்லியனுப்பினான்.

தூதன் ராணியாரிடத்தில் வந்து, பேசவாயெழாமல் சிறிது நேரம் நின்றான். ராணி பதில் என்ன சொன்னான் என்று கம்பீரத் தொனியுடன் கேட்டபோது தூதன் மெல்லிய குரலுடன் அத்துஷ்டன் சொல்லியவைகளையெல்லாம் சொன்னான்.

ராணியார் அப்பொழுதே தீர்க்காலோசித்து உடனே, "தூதா, அந்தப் பட்டாணியிடத்திற்குப்போய், அவன் தைரியத்துடன் யுத்தம் புரிந்ததைப்பற்றியும் அவன் கொண்டிருக்கும் தீர்மானத்தைப்பற்றியும் நான் அதிக சந்தோஷப்படுவதாகச் சொல். ஸ்திரீகளாகிய நாங்கள் எப்பொழுதும் அதிர்ஷ்டத்தையும் தைரியத்தையும் மெச்சுங்குணமுள்ளவர்கள். அவன் என்னை மறுவிவாகம் செய்துகொள்ள விரும்புகிறானென்பது எனக்குத் தெரிகிறது. பட்டாணியாகிய கான் என்னை அவனது மனைவியாக வைத்துக்கொள்ளும் பக்ஷத்தில் அது எனக்கு மிகுந்த கௌரவம் என்று நினைக்கிறேன். எங்களது குடும்ப ஏற்பாடு பிரகாரம் எனது அரண்மனை மெத்தைக்கு அவனை வரும்படி சொல். அந்தஸ்துக்குத் தக்கபடி நான் உடை தரித்துக்கொள்ள வேண்டுமல்லவா? ராணிக்குகந்த உடுப்புகளையணிந்துகொள்ள இரண்டு மணி தேசகாலம் தேவையென்று அவனுக்குச் சொல்" என்றாள்.

தூதன் உடனே பட்டாணியாகிய கானிடத்திற்குப் போய் ராணி சொன்ன வார்த்தைகளையெல்லாம் சொன்னான். பட்டாணிக்கு இதுவரையிலுமில்லாத சந்தோஷம் பொங்கிற்று. இவன் சந்தோஷத்திற்களவு கிடையாது. உடனே ராணியார் கோரிய வண்ணம் செய்யட்டும் என்று பதிலளித்தான். அதிக விலையுயர்ந்த உடுப்பையும், நவரத்ன மாலையையும் கானுக்கு ராணியார் அனுப்பினாள். மதிமயங்கி

புத்தி சுவாதீனமின்றி யிருக்கும் கானோ அதைப் பார்த்து மிக்க ஆநந்தங்கொண்டு அவ்வுடுப்பை பெற்று உடனே தரித்துக்கொண்டான். நவரத்ன மாலையை கழுத்தில் அணிந்துகொண்டான்.

சந்தோஷமாக யாவரும் பாட்டு பாடினார்கள். மதிமயங்கி குதித்தார்கள். யுத்தம் நடந்ததை மறந்தார்கள். எவ்விடத்திலும் சந்தோஷம் கொண்டாடப்பட்டது. குதூகலமாய் யாவருமிருப்பதாக தென்பட்டார்கள். பட்டாணிகளோ கத்தி முதலிய ஆயுதங்களை தூரவைத்துவிட்டார்கள். நமது அரசனுக்கு விவாகம் நடக்கப்போகிறதே, நாம் எல்லாரும் அவர் க்ஷேமத்தின் பொருட்டு குடித்துவிட்டு சந்தோஷமாயிருப்போம் என்றார்கள். அவ்விதமே பட்டாணிகளெல்லாம் செய்து மதிமயங்கி கூத்தாடிக்கொண்டும் கண்டதையெல்லாம் பிதற்றிக்கொண்டும் புத்தி சுவாதீனமில்லாமலிருந்தார்கள்.

இவர்களுடைய அரசனோ பைத்தியக்காரனாயிருந்தான். பொறுமை சிறிதுமில்லை. ராணியை எப்பொழுது பார்ப்போம் என்று ஆவல் கொண்டவனாயிருந்தான். அவளையே நினைத்த நினைப்பாயிருந்தானேயொழிய இவனுக்கு வேறொன்றும் தோன்றவில்லை. "கெடுவான் கேடு நினைப்பான்" என்பதற்கிணங்க இவனுக்கு அச்சமயத்தில் கெட்ட எண்ணமே இவன் மனதில் குடிகொண்டிருந்தது.

கடைசியாக ராணியிடமிருந்து ஒரு தூதன் வந்து "ஐயா, வரலாம்" என்றான். ராணியார் "வலியார் முற்றன்னை நினைக்க தான் தன்னின் மெலியார் மேற்செல்லுமிடத்து" என்பதையும், நினைத்து பின்பு

"முற்றுமோ வெனக்கினி யானந்த வாழ்வு
மூதறிவுக்கினியாய் நின் முளரித்தாளிற்
பற்றுமோ சற்று மில்லையே யோவையோ
பாவி படுங் கட்கலக்கம் பார்த்திலாயோ.

கலங்காத நெஞ்சுடைய ஞானதீரர்
கடவுளுனைக் காணவே காயமாதி
புலங்கரணார் நானொருவன் ஞானம் பேசிப்
பொய்க் கூடுகாத்த தென்னபுதுமை கண்டாய்

சொல்லாய தகுதி யெல்லாங் கடந்து நின்ற
சொரூபானந்தச் சுடரே தொண்டனேனைக்
கல்லாகப் படைத்தாலு மெத்த நன்றே
கரண முடனானுறவு கலக்கமாட்டேன்.

என்னை நான் பிறந்துழவைந்தவாறிங்
கெனக்கெனவோர் செயலில்லையே யேழை யென்பான்
முன்னை செய்வினை யெனவும் பின்னை வந்து,
மூளும் வினை யெனவும் வர முறையே னெந்தாய்.

தாயான தண்ணருளை நிரம்ப வைத்துத்
தமியேனைப் புரவாமற் றள்ளித் தள்ளிப்
போயான தென்கொலையா வேகதேசம்
பூரணத்துக்குண்டோ தான் புகலல்வேண்டும்,

புகலரிய நின் வினை யாட்டென்னை யெந்தாய்
புன்மை யறிவுடைய னென்னைப்பொருளாப்பண்ணி
யிகல் விளைக்கு மலமாயை கன்மத்தோடே
யிடருறவுஞ் செய்தனையே யிரக்கமீதோ.

சிந்தித்த வெல்லாமென் சிந்தை யறிந்தே யுதவ
வந்த கருணை மழையே பராபரமே."

எனப்பலவாறாக ஈசனைத் தியானித்துக்கொண்டிருந்தாள்.

ராணி அனுப்பிய விலை யுயர்ந்த உடுப்பைத் தரித்துக்கொண்டும் ஆபரணங்களை அணிந்துகொண்டும் மிக்க மனமகிழ்ச்சியுடன் ராணியின் அரண்மனைக்கு (பட்டாணி) கான் வந்தான். வேலைக்காரர்கள் இவனை மெத்தைக்கு அழைத்துச் சென்றார்கள். இவன் ராணியைக் கண்டு 'இவ்வளவு அழகு வாய்ந்த மாது இப்பூலோகத்திலில்லையே. இவளது அழகை வர்ணிக்க நாவெழவில்லையே.' என்று எண்ணினான். இவளோ வெல்வட்போட்டிருந்த மேடையில் உட்கார்ந்திருந்தாள். ஸ்திரீகளெல்லாம் மெத்தையில் உட்கார்ந்திருந்தார்கள். இவர்கள் அந்தப்புரத்திலுள்ள கையில் தீவர்த்திகளை வைத்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் நல்ல அழகான உடைகளைத் தரித்துக்கொண்டிருந்தார்கள்.

கான் வந்தவுடன் அவனை ஒரு ஆசனத்தில் உட்காரும்படி சில ஸ்திரீகள் சொன்னார்கள். இவன் ராணிக்கு முன்னமேயே அடிமையாய்விட்டான். இச்சமயம் கேட்கவேண்டுமோ? அவள் சொல்வதை யெல்லாம் மரியாதையுடன் செய்யத் தயாராயிருந்தான். அவள் மனம் கோணாமல் நடக்கவும் எண்ணமுடையவனாயிருந்தான். ராணியுடன் சிலமணிநேரம் பற்பல விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தான். நேரமோ அதிகமாயிற்று. மணி அதிகமானது கூட இவனுக்குத் தெரியவில்லை. ஒருதரம் ராணியின் அழகை

ஏறிட்டுப்பார்த்தான். உடனே இவன் முகம் மாறுபட்டது. என் தேகம் எரிகிறதே. நான் என் செய்வேன். இப்படி எரிவதற்கு காரணமென்ன வென்றுகேட்டான். ராணிவேலைக்காரர்களைக் கூப்பிட்டு இவனுக்கு விசிறி கொண்டு விசிறும்படி ஆஞ்ஞாபித்தாள். குளிர்ந்த நீர் பருகக் கொடுக்கும்படியும் சொன்னாள். இவைகளால் இவனுக்கு எரிச்சல் போகவில்லை. அதிகரித்தது. நெருப்பில் விழுந்த புழுப்போல் துடிதுடித்தான். மரணம் கிட்டிவிட்டது. மரணக்குறிகள் தென் பட்டன. கலியாண உடுப்பைபத்துண்டு துண்டாகக் கிழிக்க ஆரம்பித்தான்.

கம்பீரமுள்ள ராணி தன் ஆசனத்தி லிருந்து எழுந்து, "ஐயா, தங்களுக்கு அந்திகாலம் கிட்டிவிட்டதை தெரிந்து கொள்ளுங்கள். தாங்கள் அணிந்திருக்கும் உடுப்பில் விஷம் கலந்திருக்கிறது. மாலையிலும் விஷம் பூசப்பட்டிருக்கிறது. தங்களைத் தீண்டாமலிருப்பதற்கு இதைத் தவிர வேறு உபாயம் உண்டோ? தங்கள் எண்ணத்திற்கு இதுதான் தகுந்த தண்டனை" என்று கோபாவேசத்துடன் உரக்கச் சொன்னாள்.

கானுடன் வந்தவர்கள் திகிலடைந்து தங்களுக்கு என்ன ஆபத்து விளையுமோ வெனத் தயங்கி யிருந்தார்கள். அவர்கள் மயக்கம் தெளியுமுன், ராணியார் தைரியத்துடன் பக்கத்திலுள்ள நதியில் குதித்து விட்டாள். பித்தம் பிடித்த பட்டாணிகள் ஸ்திரீகளைக் கொல்ல எழுந்தார்கள். தீவர்த்திகையில் பிடித்துக்கொண்டிருந்த ஸ்திரீகள் உடனே தாங்கள் உட்கார்ந்த மெத்தையில் தீ நன்றாகப் பிடிக்கும்படி கொளுத்தினார்கள். அம்மெத்தைகளுக்குள் வெடிமருந்து வைக்கப்பட்டிருந்தமையால் அவைகள் வெடிக்க ஆரம்பிக்கவே ஸ்திரீகளில் சிலர் நதியில் விழுந்தார்கள். சிலர் சுரங்கம் வழியாக உயிர் தப்பித்து ஓடினார்கள். அரண்மனை முழுவதும் இடி முழக்கம்போல் சப்தம்செய்து கொண்டு தீபற்றி எரிந்து கீழேவிழுந்தது.

துர் எண்ணமுள்ள கான் அக்னி பகவானுக்கு இரையானான். அவனுடன் அவன்கூட வந்தவர்களும் சாம்பலாய் விட்டார்கள்.

ராணியோ நதியில் விழுந்து மரணமடைந்தாள். இவளுடைய தைரியமும் சமயோசித புத்தியும் இவளது கற்பைக் காப்பாற்றியது. இவள் தனது தேசத்திற்காக தன் உயிரைத் துறந்தாள். இவளைப் பற்றி அவ்வூரிலுள்ளவர்கள் புகழ்ந்து பேசிவந்தார்கள். இவளன்றோ மகா உத்தமி?

பழமொழிகள்:—கற்பில்லா அழகு வாசனை இல்லாப் பூ.
கற்பெனப்படுவது சொற்றவறாமை.

உப்பு.

உப்பு எத்தேசத்திலும் யாவருக்கும் இன்றியமையாத வஸ்து. உப்பில்லாவிடின் தேகசுகத்திற்கு கெடுதலுண்டாகும். உப்பு ஒவ்வொரு வஸ்துவிலும் கொஞ்சம் சேர்ந்திருந்தபோதிலும் தனிமையாக உப்பு இல்லாவிடின் ஜனங்களுக்கும், பிராணிகளுக்கும் மிகவும் கஷ்டமாக விருக்கும்.

உப்பு பார்க்க வெண்மையா யிருந்தாலும் அதில் அசுத்தம் கலந்திருக்கிறது. அதனால் அது மங்கிய கறுப்பு நிறமுடையதா யிருக்கிறது.

உப்பைத் தொட்டுப் பார்த்தால் கடினமா யிருக்கும்.

இதைப் பொடியாக்கலாம்.

தண்ணீரில் போட்டால் கரைந்து விடும்.

போஜனத்துக்கு ருசி கொடுக்கும்.

உப்பை மாத்திரம் வாயில் போட்டுக் கொண்டால் கைக்கும்.

சுத்தி செய்த உப்பு வெண்மையாயும் பிரகாசமாயு மிருக்கும்.

உப்பு செய்யும் விதம்:—சுத்தி செய்த இடத்தில் பாத்திகள் செய்யவேண்டும். அப்பாத்திகளில் சமுத்திர நீரை இறைக்க வேண்டும். சூரிய உஷ்ணம் அதில் ஏற ஏற ஜலம் வற்றிக் கொண்டேவரும். இவ்விதம் சில நாள் செய்து வரவேண்டும். பின்பு உப்புமேலே உறைந்துவிடும், பாத்திகளை நன்றாகக் காயும்படி செய்யவேண்டும். காய்ந்த பின்பு பாத்திகளின் மேலுள்ள உப்பை சிறிதுமண் சேராமல் எடுக்க வேண்டும். சில சமயம் தரையில் உப்பைக் கொட்டி வைப்பார்கள். அதனால் அதன் நிறம் மண்ணிறமா யிருப்பதுண்டு. பின்பு இதை விற்பனைக்கு அனுப்புவார்கள். இந்த உப்பைத்தான் நாம் உபயோகித்து வருகிறோம். சிலர் இந்த உப்பை வாங்கி ஜலத்தில் கரைத்து அடுப்பில் வைத்துக் காய்ச்சுவார்கள். ஜலம் வற்றி வெண்மையான உப்பு அடியில் தங்கிவிடும். இவ்விதம் செய்து பாலக்காடு முதலிய விடங்களில் உபயோகித்து வருகிறார்கள்.

லோகங்கள் அதாவது இரும்பு, செம்பு, தங்கம் முதலியவைகளை பூமியில் சுரங்கம் செய்து எப்படி எடுக்கிறார்களோ அவ்விதமே மலை உப்பு என்பதை எடுக்கிறார்கள். இதைச்சுத்திசெய்து ஜலத்தில் கரைத்து அடுப்பில் வைத்து காய்ச்சுவார்கள். ஜலம்வற்றியவுடன் வெண்மையாக யிருக்கும் உப்பை ஆங்கிலேயர்கள் பெரும்பாலும் உபயோகிக்கிறார்கள். இம்மலை உப்பு ஐரோப்பா கண்டத்தில் அதிகம். இதற்குக் கல்லுப்பென்று பெயர்.

உப்பு ஜனங்களுடைய தேக சுகத்துக்கும், புசிக்கும் உணவுக்கும் மிகவும் முக்கியமானது. உப்பு சேராவிடின் ருசிக்காது. இது யாவருக்கும் தெரிந்தவிஷயம்: உப்பு சமுத்திரத்தில் கலந்திருப்பதினால் துர்நாற்றம் அதிலில்லை.

ஊர்காய் முதலியவைகளுக்கு உப்பை அதிகம் சேர்த்தால் அவைகள் கெடாது. பூச்சி புழுக்கள் கிட்டே அண்டாது. மிருகங்களுக்கு மிகவும் உபயோகமானது. மருந்துக்கு உதவும். எருவுக்கும் உதவும்.

நமது சித்திரப்படக் கதை,

நூறுவருஷம் நித்திரை செய்த பெண்மணி.

21-வது பக்கத் தொடர்ச்சி.

அரசகுமாரத்தி உட்கார்ந்து நித்திரை செய்பவள்போல் தென்பட்டாள். அவள் சமீபத்திலுள்ளவர்களும் நித்திரை செய்பவர்கள்போல் தென் பட்டார்கள்,

இவ்விதம் இவ்வரசகுமாரத்தி நூறுவருஷம் நித்திரையிலிருந்தாள். அவ்வூர் ஜனங்களுக்கும் இவ்விதம் ஒரு இடமிருக்கிறதென்றும் அதில் ஒரு அரசகுமாரத்தி நித்திரை செய்து வருகிறாளென்ற சங்கதி ஒன்றும் தெரியாது. வயது சென்றவர்களுக்கும் இச்சங்கதி மறந்துபோயிற்று. சிறுவர் சிறுமியருக்கு எப்படித் தெரியும்? தெரியாதல்லவா?

இப்பெண்மணிக்குச் சரியாக நூறு வருஷம் முடிந்தது. ஒரு நாள் அடுத்த தேசத்து அரசகுமாரன் வேட்டையாடகாட்டுக்குச் சென்றான். இவனும் இவனது வேலைக்காரரும் வெகுநேரம் காட்டில் வேட்டை ஆடினார்கள். அரசகுமாரன் சிறுவனாக யிருந்தபோதிலும் அறிவும் சாமர்த்தியமு முள்ளவன். மிக்க தைரியசாலி. ஆகையால் பற்பல துஷ்ட மிருகங்களை யெல்லாம் கொன்றான். நல்ல அழகான பக்ஷிகளை இம்சிக்காமல் விட்டு விட்டான். இவ்விதம் வேட்டையாடிய பின் களைத்துப் போனான். தனது தேசத்திற்குத் திரும்பிப்போக தனது வேலைக்காரர்களுடன் புறப்பட்டான்.

வேறு வழியாக வரும்பொழுது ஒரு கட்டடத்தை மூடிக்கொண்டிருக்கும் மரங்கள் முட்செடிகள் முதலியவைகளைக் கண்டான். இது என்ன காடுக்குள் காடா? என்றான். அங்கு ஒரு உயரமான மரமிருந்தது. அதின்மேல் ஏறி நாலாப்பக்கத்திலும் சுற்றிப் பார்த்தான். மரங்களுக்கு மத்தியில் பூர்வ காலகட்டிடமொன்று இவன் கண்ணுக்குத் தென்பட்டது. மரத்திலிருந்து கீழே யிறங்கி வந்து அங்குள்ள வேலைக்காரர்களைப் பார்த்து அதோ தெரிகிறதே அதென்ன கட்டடம்?" என்று கேட்டான். 'எங்களுக்கு ஒன்றும் தெரியாது. இங்கு எவ்விதம் கட்டிடமிருக்கிறதோ" என்றார்கள். அகஸ்மாத்தாய் அம்மார்க்கமாய் ஒருவயது முதிர்ந்த வேடன் வந்தான். அரசகுமாரன் அவனைப்பார்த்து "ஐயா, மரங்களடர்ந்திருக்கும் இவைகளுக்கு மத்தியில் ஒரு புராதன கட்டடம் இம்மரத்தில் ஏறிப்பார்த்தால் தெரிகிறதே. அது யாருடையது? அதேன் இங்கிருக்கிறது?" என்று கேட்டான்.

அவ்வேடன் "மகா பிரபுவே! நான் குழந்தையா யிருக்கும் பொழுது இங்கொரு அரண்மனை யிருப்பதாகவும், அதில் ஒரு ராஜ குமாரத்தி படுத்து நித்திரைசெய்வதாகவும் என் பாட்டனார் சொல்லக் கேள்வி. மேலும் ஒரு அரசகுமாரன் இங்குவந்து இப்பெண்மணிக்கு ஒரு முத்தமளித்தால் இவள் எழுந்திருப்பாளாம். இது இப்பெண் மணிக்கு ஒரு சாபம். ஒரு தேவதை இவளை இவ்விதம் செய்ததாம். இவளுடைய தாய் தந்தைகள் மற்ற உறவினர்கள் இப்பொழுது உயிருடன் இல்லை. இவர்களுடைய ராஜ்யமும் தென்படவில்லை. மற்றொன்றும் எனக்குத் தெரியாது. இவ்வளவுதான் தெரியும்" என்று மிகவும் வணக்கத்துடன் சொன்னான்.

அரச குமாரனுக்கு இவ்விஷயங்களைத் தெரிந்துகொள்ள ஆவல் அதிகரித்தது. வேடனை எவ்வளவோ கேள்விகளைக் கேட்டான். வேடனுக்குத் தெரிந்தவைகளைச் சொன்னான். தெரியாதவைகளை எவ்விதம் அவன் சொல்லமுடியும்? ஐயா, எனக்கு இவ்வளவுதான் தெரியும், என்றான் கடைசியாக.

அரசகுமாரன் அவ்வேடனை தன்கூட இட்டுக்கொண்டு மற்றவர்களை அங்கேயே தங்கியிருக்கும்படி சொல்லிவிட்டு அப்புதருக்குள் முள் முதலியவைகளை அப்புறப்படுத்திக் கொண்டு தைரியமாக நுழைதான்.

இவன் நுழைந்தவுடன் மரக்கிளைகள் தூர நகர்ந்தன. விஸ்தாரமாக வழி இவனுக்கு தென்பட்டது. மரக்கிளைகள் நகர்ந்தது இவனுக்கு ஆச்சரியத்தை யுண்டாக்கியது. இவன் உடனே அரண்மனைக்குள் சென்றான். வேடன் பயந்து வெளியில் நின்றுவிட்டான்.

தோட்டத்தில் தோட்டக்காரர்கள் அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தார்கள். சேவகர்கள் தங்கள் ஸ்தானங்களில் தூங்கிக் கொண்டிருந்தார்கள். குதிரைக் காரர்கள் குதிரைகட்டு மிடங்களில் உறங்கிக்கொண்டிருந்தார்கள். குதிரைகளும் தூங்கிக்கொண்டிருந்தன.

ராணுவ சேவகர்களும் தங்கள் ராணுவ உடுப்புகளுடன் படுத்த வண்ணமா யிருந்தார்கள். வேலைக்காரிகள் தங்களது வேலைகளைச்செய்வதைவிட்டு எங்கெந்த் வேலைகள் செய்து கொண்டிருந்தார்களோ அவ்வேலைகள் செய்யுமிடங்களில் நித்திரை செய்துகொண் டிருந்தார்கள். பெருக்குகிறவர்களும், கூட கையில் துடப்பங்களுடன் படுத்து நித்திரை செய்துகொண்டிருந்தார்கள்.

இவ்விதம் நித்திரை செய்பவர்களை யெல்லாம் செவ்வனே உற்று பார்த்துக்கொண்டு அரச குமாரத்தி யிருக்குமிடத்திற்குப் போனான்.

அரச குமாரத்தி நல்ல அழகும் விலை மதிப்புள்ள மெத்தையில் படுத்து நித்திரை செய்வதைக்கண்டு திகைத்து நின்றான் சிறிதுநேரம். அவள் தூங்கும்பொழுது மெதுவாக மூச்சுவிடுவதையும் பார்த்தான். அவள் நூறு வருஷ காலமாக இவ்விதம் நித்திரை செய்துகொண்டிருந்தபோதிலும், இப்பொழுது தான் நித்திரை செய்யச் சென்றவள் போல் தென்பட்டாள். இவளைப் பார்த்துக்கொண்டிருந்த அரச குமாரனுக்கு மயிர் கூச்சமுண்டானது. ஒருவித பயம் மனதில் உதித்தது.



மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு மனந்தளராமல் அவள் சமீபத்திற்குப்போனான். முழங்காலிட்டுக்கொண்டு மெதுவாக படுக்கையைத்தொட்டான். பின்பு துணிந்து மெதுவாக அவளுக்கு ஒரு முத்தம் கொடுத்தான்.

தக்ஷணமே தேவதையின் மந்திரவசியம் போய்விட்டது. சாபமும் நீங்கிற்று. தூங்கி எழுந்திருப்பவள் போல் கண்களைத் திறந்து அரச குமாரனைப் பார்த்தாள். உடனே அவ்வரண்மனை முழுவதிலும் நித்திரை செய்துகொண்டிருந்தவர்களும் கண் விழித்துக்கொண்டு தங்கள் படுக்கையிலிருந்து எழுந்தார்கள். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வேலையைச் செய்ய ஆரம்பித்தார்கள். சமையல் அறையில் அடுப்பு எரிய ஆரம்பித்தது. சமையலும் அறுசுவையோடு தயார் செய்யப்பட்டது. நாய்கள் குலைத்துக்கொண்டு சந்தோஷத்துடன் வாலை ஆட்டிக்கொண்டு வந்தன.

குதிரைகளும் சந்தோஷத்தைத் தெரிவிக்க கனைத்தன.

பக்ஷிகள் நிரம்ப உடனே தென்பட்டன, அவைகள் அங்குள்ள குளக்கரையிலுள்ள மரங்களிலிருந்து பழங்களைத் தின்றுகொண்டிருந்தன.

ராணுவ சேவகர்கள் பாரா கொடுத்துக்கொண்டிருந்தார்கள்.

அரச குமாரத்தி எழுந்து அரச குமாரனுக்கு மரியாதை செய்து அவனை உட்காரும்படி வேண்டிக்கொண்டாள். அரச குமாரன் உட்கார்ந்தான். அரச குமாரத்தி இவ்விதம் தனக்கு நேரிட்டதின் காரணத்தை ஆதியோடு அந்தம் வரையில் அரசகுமாரனுக்குச் சொன்னாள். பின்பு ஸ்நாநம்செய்து இருவரும் நன்றாகப் புசித்தார்கள்.

அரச குமாரன் தன் வேலைக்காரர்களையும் வரவழைத்து அவர்களை போஜனம் பண்ணும்படி சொன்னான். வேடனை மறக்கவில்லை அவனுக்கும் நல்ல போஜனம் அளிக்கப்பட்டது.

உடனே அவ்விடத்தைவிட்டு போவோம் என்றாள் அரச குமாரத்தி. அரச குமாரனும் சம்மதித்து அங்குள்ள பரிவாரங்களுடன் வெளியில் வந்தான்.

இவர்கள் வெளியில் வந்தார்களோ இல்லையோ அந்த அரண்மனை மாயமாய் மறைந்துபோயிற்று. இவர்கள் கண்களுக்கு ஒரு காடாகதென்பட்டதே யொழிய அரண்மனை தென்படவில்லை. அரச குமாரன் அரச குமாரத்தியை தனது குதிரையின்மீது வைத்துக் கொண்டு தனது ராஜ்யத்திற்குப்போனான்.

அங்குபோனதும் நடந்த விருத்தாந்தங்களையொன்றும் விடாமல் தன் பெற்றோர்களுக்குச் சொன்னான். அவர்கள் மிகுந்த சந்தோஷமடைந்து அரச குமாரத்தியை அன்புடன் வரவழைத்து அவளுக்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் செய்தார்கள். சில நாள் சென்றபின் அரச குமாரனுக்கும் அரச குமாரத்திக்கும் வெகு விமரிசையாக விவாகம் நிறைவேறிற்று. தம்பதிகள் சுகமாக தங்கள் வாழ் நாளைக் கழித்துவந்தார்கள்.

[அடுத்த பத்திரிகையில் சித்திரப்படங்களடங்கிய கதைபிரசுரிக்கப்படும். ப-ர்.]

(முற்றிற்று)

நான்கு திருடர்கள் தந்திரத்தால் ஏமாந்தார்கள்.

சோள தேசத்தில் ஒரு கிழவியின் வீட்டில் நான்கு திருடர் பணம் கொடுத்து புசித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு நாள் இவர்கள் திருடி பொதுவில் வைத்திருந்த நகைகளையும், பணங்களையும் ஒரு தவலையில் போட்டு மேலே மூடி முத்திரை யிட்டார்கள். இதை நால்வரும் கிழவி

யினிடம் கொடுத்து "அம்மா! நாங்கள் நாலு பேருமாக வந்து கேட்கும்போது இதைக் கொடு. அதுவரைக்கும் பத்திரமாகப் புதைத்து வை" யென்று சொன்னார்கள்.

கிழவி அதைப் பத்திரமாக தன் கொல்லையில் புதைத்து வைத்தாள். சிலநாள் அந்நான்கு திருடர்களும் அக்கிழவி வீட்டிலேயே புசித்துவந்தார்கள். ஒருநாள் அந்த நாலுபேரும் எதிர் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது தெருவில் இடைச்சி மோர் விற்றுக்கொண்டு போனாள். அத்திருடர்கள் தாகத்திற்கு குடிக்க மோர்வாங்குவதற்கு அந்தக் கிழவிவீட்டிற்குப் போய் தோண்டி எடுத்துக்கொண்டுவா வென்று தங்களுள் ஒருவனை அனுப்பினார்கள்.

அவன் இதுதான் தக்க சமயம் என்று எண்ணி கிழவி வீட்டிற்குப் போய் "பாட்டி! தோண்டி எடுத்துக்கொண்டு வரச் சொன்னார்கள்" என்று சொன்னான்.

அக்கிழவி அவன் சொன்னதைக் கேட்டு சந்தேகங்கொண்டாள். உடனே வெளியில்வந்து அம்மூவர்களைப் பார்த்து "அவனைத் தோண்டி யெடுத்து வரச் சொன்னீர்களா" வென்று உரக்கக் கேட்டாள்.

அவர்கள் "ஆம்" என்றார்கள். கிழவி உள்ளேபோய்க் கட்டபாறையைக் கொடுத்துச் சுகமாகத் தோண்டி எடுத்துக்கொண்டு போவென்று சொன்னாள். அவன் அதிக சந்தோஷத்துடனே சீக்கிரத்திலே தோண்டி தவலையை எடுத்துக்கொண்டு புழக்கடை வழியே ஓட்டம் பிடித்தான்.

மற்ற மூன்றுபேரும் ஒரு நாழி வரைக்கும் பார்த்து அவனைக் காணாமையால் உள்ளேபோய் நடந்த மோசத்தை யறிந்துகொண்டார்கள். கிழவியின்மீது சோழராஜனிடத்திலிருந்த நியாயாதிபதியினிடத்தில் பிரியாது செய்தார்கள்.

நியாயாதிபதி கிழவியையழைப்பித்து விசாரணை செய்து அவ்வுடைமையைக் கிழவி கொடுக்கும்படியாகத் தீர்ப்பு செய்தார்.

அந்த ஏழைக்கிழவி நான் என்னசெய்வேன் தெய்வமே! என்று அழுதுகொண்டு வீட்டுக்குத் திரும்பிவந்து கொண்டிருந்தாள். அப்பொழுது வழியில் சிறு பிள்ளைகள் கச்சக்காயாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் மிகுந்த புத்திசாலியான ராமன் "ஏன் பாட்டி! அழுகிறாய் என்றான்.

அதற்கு அக்கிழவி நடந்த சங்கதியை எல்லாம் சொன்னாள். ராமன் அதைக்கேட்டு 'இந்த அநியாயத்தீர்ப்பை செய்பவன் வாயிலே மண்விழுந்தது போலவே இக்காய்கள் குழியிலே விழக்கடவது, என்று சொல்லி தன் கையிலிருந்தகெச்சக்காய்களை விட்டெரிந்தான். அதைக் கேட்டுக்கொண்டிருந்த சிலர், போய் அரசனிடத்தில் சொன்னார்கள். அரசன் உடனே அந்த ராமனை யழைப்பித்து 'நியாயதிபதி செய்த தீர்ப்பை அநியாயத்தீர்ப்பென்று சொன்னாயே. நீ நியாயமாக தீர்ப்பு செய்' என்று சொன்னார்.

உடனே ராமன் தைரியமாய் திருடர்களையும், கிழவியையும்அழைப்பித்து விசாரணை செய்தான். உடைமைக்காரரைப்பார்த்து "உங்கள் வாக்கு மூலப்படியே நீங்கள் மூன்றுபேர் மாத்திரம் கேட்டால் கொடுக்கக்கூடாது. நாலுபேரும் வந்து கேட்டால் அப்போது உங்கள் பொருளைக் கொடுப்பாளென்று" கிழவி பக்கம் தீர்ப்பு செய்தான். பொருள் போனவழி எதுக்கும் போமென்கிறபடியே கிழவிக்குண்டாகிய துக்கம் போய் விட்டது.

இத்தீர்ப்பை ராஜன் கேட்டு மிகவும் மகிழ்ந்து அவனுக்கு மரியாதை ராமனென்று பெயரிட்டு அவனுக்குவெகுமதிகளை யளித்தார். மேலும் அவனைப்படிக்க வைத்தார். அவன் பெரியவனானவுடன் அவனை நியாயாதிபதியாக நியமித்தார். அவனுக்குச் சகல மரியாதையும் செய்து வந்தார். மரியாதை ராமனும் புத்திநுட்பமாய் சகல விவகாரங்களையும் சுலபமாக தீர்த்து வந்தான்.

ராஜபக்தி.

16-வது பக்கத் தொடர்ச்சி.

மணிகாரன் வீடு தீபற்றியது.

புல், தட்டு, தவிடு, கடலை, பொட்டு, இவை நிரம்பிய அறையில் எதுகுலன் நுழைந்ததும், எங்கே படுத்துத் தூங்குவதென்று அவனுக்குத் தெரியவில்லை. மேலே ஒரு பரண் போட்டிருந்தது. அதில் உடைந்துபோன குதிரை வண்டியின் சாமான்கள் சில போட்டிருந்தன. பக்கத்தில் ஒரு ஏணியும் இருந்தது. மெதுவாய்ப் பரண்மேல் ஏறி அச்சாமான்களை இறக்கிவைத்துவிட்டு, அவ்விடத்தில் கொஞ்சம் புல்லைப் பரப்பிப்படுத்துக்கொண்டான். போர்த்துக் கொள்ள கம்பளம் கிடையாது; இவ்வறைக்குக் கதவுமில்லை. 'கப், கப்' என்று பனி வீசுகின்றது. நடுநிசியாயும் சிறுவனுக்குத் தூக்கம் வரவில்லை. உடம்பு குளிரால் விறைத்துப்போயிற்று. மூலை மூலையாய்ப் படுத்து உறங்கப்பார்த்தான். எந்த மூலையில் முடங்கிக் கொண்டாலும் குளிர் பொறுக்க முடியவில்லை. அதனால் எழுந்து போய் வெளியே சற்று

ஓடினாலாவது உடம்பில் சூடு பிறக்கும் என்று எண்ணிக் கீழிறங்கி, அவ்வறையைச்சுற்றி ஓடத் தொடங்கினான். மணிகாரன் வீட்டுச் சமையல் அறைக்குமேலே, மாடியில் விளக்கு வெளிச்சம் தென்பட்டது. அவ்வறையில் தான் சமையல்காரி சந்திரமதி தூங்குகிறாளோ என்று எண்ணி சும்மாவிருந்தான். இன்னொருமுறை ஓடிவருவதற்குள் அதே அறையில் வெளிச்சம பளீர்' என்று வீசிற்று. நிமிஷத்துக்கு நிமிஷம் வெளிச்சம் அதிகமாகவே, அவ்வெளிச்சத்தில் ஒரு பெண்பிள்ளை குறுக்கே ஓடுவதையும், அவள் ஜன்னலைத் திறக்க முயல்வதையும், துணித்திரையின் வழியாகக் கண்டான். அடுத்த நிமிஷத்தில் அப்பெண் துணித்திரையை நீக்கவே அவ்வறை நெருப்புப் பற்றி எரிகின்றதென்பது விளங்கிற்று.

ஒரு நிமிஷம் ஆலோசனை செய்தான்; எடுத்தான் ஏணியைத் தோளின் பேரில்; தூக்கிக்கொண்டு ஓடினான் அவ்விடத்திற்கு; ஒரு நொடியில் ஜன்னலை முறித்து உள்ளே குதிக்கவே, புகைதிக்கு முக்காடுகின்றது'; மூச்சு விடக்கூடவில்லை, இரண்டடி வைப்பதற்குள் காலில் ஒரு தேகத்தை இடறவே அதைத் தாவிக்கட்டி எடுத்துக்கொண்டு இறங்கத் தொடங்கினான். அதற்குள் அந்த ஜன்னல் புறமெல்லாம் நெருப்பு மூண்டெரியத் தொடங்கிற்று. ஏணியினின்று இறங்குவதற்குள் கை கால்கள் வெந்து போயின. ஆயினும் க்ஷேமமாய்க் கீழிறங்கி, தன் சுமையை ஜாக்கிரதையாய்க் கீழே படுக்க வைத்து, நிலா வெளிச்சத்தில், யாரென்று பார்க்கவே, ஹேமநாதர் குமாரத்தி காந்திமதி யென்று தெரிந்து, மறுபடி அப்பெண்ணைத் தோளில் போட்டுக்கொண்டு, தான் தூங்க எத்தனித்த குதிரை லாயத்தில், புல்லின் மேல் படுக்க வைத்துவிட்டு, வீட்டில் உள்ளவர்களை எழுப்பத் தொடங்கினான். குதிரைக்கு நீர்காட்டும் தொட்டி நிரம்பத் தண்ணீர் இருந்தது. பக்கத்தில் ஒரு பானையைத் தண்ணீரால் நிரப்பிக்கொண்டு மறுபடி ஏணியின் மீதேறி எரியும் அவ்வறையின் மேல் ஜலம் ஊற்றிக்கொண்டே, 'தீ, தீ, தீ, தீ,' என்று கதறினான்.

இதற்குள் வீட்டில் உள்ளவர்களும், மற்றவர்களும், அக்கம் பக்கத்தாரும் எழுந்து வந்தனர். ஹேமநாதர், முகத்தில் சோகம் குடிகொண்டவராய், ஓடிவந்தனர் அவ்விடத்திற்கு!! சந்திரமதி அலறி அடித்துக்கொண்டு வந்து சேர்ந்தாள்:

'என் குழந்தையைக் காப்பாற்றுங்கள்! என் குழந்தையைக் காப்பாற்றுங்கள்!! ஐயோ, ஒருவரும் இல்லையா? அவள் மேல் மாடியில் தூங்குகிறாள்; காப்பாற்றுங்கள் !! காப்பாற்றுங்கள்!! இல்லையேல்

நானே உள்ளே குதித்துக் குழந்தையை எடுத்து வருகின்றேன்." என்று பக்கத்தில்நெருங்கிறார். ஜன்னல்களிலிருந்தும், கூரையிலிருந்தும் நெருப்பு 'புஸ், புஸ்' என்று நல்ல பாம்புபோல் சீறிக்கொண்டு வருகின்றது. நெருங்க முடியவில்லை.

அடுத்த பக்கத்தில் எதுகுலன், தன்னிடம் வந்த பாரிஜாதன் முதலியவர்களை ஜலம் கொண்டுவரச் சொல்லி, வெகு துரிதமாய் நெருப்பு அவிப்பதில் கவனமாய் இருக்கிறான் இன்னும் சிலவேலையாட்களையும் பாரிஜாதன் அப்புறத்துக்கு அழைக்கவே, எல்லாரும் கூடி ஏராளமாய் ஜலம் ஊற்றி நெருப்பின் வேகத்தைக் குறைத்தனர்.

இதற்குள் இராஜப் பிரதிநிதி ஹேமநாதர்-படும் கஷ்டத்தை கண்ணால் பார்க்கமுடியவில்லை. மறுபடியும், மறுபடியும், பயித்தியம் பிடித்தவன்போல், நெருப்பில் போய் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்ள எத்தனிக்கவே, பக்கத்தில் உள்ளவர்கள் அவரைக் கட்டிப் பிடித்துக் கொள்ளவேண்டியதாயிற்று. "ஐயோ! என் அருமைக் குழந்தை! வெந்து இறந்துபோகிறதே!! ஒருவரும் அவளைக் காப்பாற்றுவார் கிடையாதா?" என்று கையைப் பிசைந்து கொண்டு கதறினார்.

அப்பொழுது அங்கு நின்ற கூட்டத்தில் ஒருவர் "ஆ! ஹா!!! அப்படியா? நாலு குழந்தைகள் சாம்பலானார்களே, பக்கத்து மாளிகையில்!!" என்று உரக்கக் கத்தினார்.

"சிவ! சிவா!!" என்று கத்திக்கொண்டு துக்கம் ஆற்றாமல் நின்ற விடத்திலேயே மூர்ச்சைபோய் விழுந்து விட்டார். உடனே அவரை பக்கத்துக் குடிசைக்குத் தூக்கிக்கொண்டு போய் விட்டனர்.

எதுகுலனும் பாரிஜாதனும் இவை ஒன்றும் தெரியாமலே ஜலத்தைக் குடம்குடமாய் ஊற்றி நெருப்பை யெல்லாம் தணித்துக்கொண்டிருந்தனர். வேலை முடிந்ததும் எதுகுலன் பாரிஜாதனை குதிரை லாயத்துக்கு அழைத்துக்கொண்டு போனான். வழியில் பாரிஜாதன் "அப்பா! எது குலதிலகரே!! இது என்ன கஷ்டம் பார்த்தீரா? இந்தப்பெரிய மனுஷனுக்கு இந்தக் கஷ்டம் வரலாமா? என்ன பொறுமை என்ன அழகு!! அப்பெண் மணி!!—இவ்வளவு கஷ்டம் ஒரு வருக்கும் வரக்கூடாது!!" என்றான்.

"ஐயா! பாரிஜாதா!!, அப்பெண்மணி இறந்து போகவில்லை அதிகமாய் காயம் படாமல் க்ஷேமமாய் இருக்கிறாள் என்றே நினைக்கிறேன். முதலில் ஏணியேறி ஜன்னலை முறித்து அவளை எடுத்து வந்து லாயத்தில் படுக்கவிட்டுப் பிறகு தான் எல்லாரையும் கூப்பிட்டு நெருப்பணைக்கத் தொடங்கினேன். இதோ படுக்க விட்டிருக்கிறேன்

கார்ந்து கொண்டிருந்தது. அடா கருப்பண்ணா! புதுப் பேய் யென்கிற ஊரில் வாங்கி வந்த ஒரு எருதையும் சூடு போடவேண்டும். அந்தப் புதுப் பேயை இங்கு கொண்டுவந்து கட்டுங்களென்றான். இந்தப் பேய் தன்னைப் பற்றி தான்சொல்லுகிறான் என்று நினைத்து, திடீரென ஓடி வந்து, குடியானவன் காலில் விழுந்து, என்னைச் சூட்டுக்கோலால் சுடாதேயும் என்றது. குடியானவன் புத்திசாலியாகையால் இதில் ஏதோ விசேஷ மிருக்கிறதென்று எண்ணி 'எங்கே வந்தாய்' சீக்கிரம் சொல் என்றான்.

இவ்வூர்ப் பேய்கள் இத்தனை நாளும் போல் உமக்கு எள்ளாகவேணுமா எண்ணெயாக வேணுமா வென்று கேட்டுவரச் சொன்னதுகளென்றது.. சரி, சந்தோஷம், நீயும் அவர்களுடன் கூட யிருந்து இன்று முதல் எண்ணெயாகக்கொண்டு வாருங்களென்றான். இந்தப்புதுப்பேய் நல்லது அவ்விதமே செய்து வருகிறோம் என்று சொல்லிவிட்டு மற்ற பேய்களிடத்தில் இச்சங்கதியைச் சொல்லிற்று. பேஷ்! நீ செய்த உபகாரமா இது! ஓட மருந்துண்டு உறங்கி விழுந்தன என்று வெறுத்துக்கொண்டு அன்று முதல் எண்ணை கொண்டுவா துவக்கிற்று. ஓர் மாது.

மகாவிகட விநோதக்கதைகள்.

I நண்பனும் கடிதமும்: ஒரு மனிதன் தன் சிநேகிதனுக்கு வரும்பொழுது சில புஸ்தகங்கள் வாங்கிவரும்படி ஒரு கடிதம்போட, அவன் வரும்பொழுது வாங்கிவர மறந்துவிட்டதால், இருவரும் ஒரு சமயத்தில் சந்தித்தபொழுது தோழன், "நீ புஸ்தகம் வாங்கிவரும்படி எழுதின கடிதம் கிடைக்கவில்லையே" என்றான்.

II ஒரு வியாபாரியும் குருமாரும்:—ஒரு வியாபாரி எளனமாய் ஒரு குருமாரைபார்த்து, "பாரிஸ்மாநகரில் ஒரு குருமாரைத் தூக்கில் போடும்போது ஒரு கழுதையும் கூடபோடுவார்களென்று உங்களுக்குத் தெரியுமா?" என்றான். அதற்கு அவர், "ஆம், நல்லவேளைபாய் நாமிருவரும் அங்கில்லாததைப்பற்றி சந்தோஷம்" என்றார்.

III ஒரு ஐரிஷ் தேசத்தான் ஒருவனை பாஸ்துமஸ் புக்ஸ் (Posthumous Books) என்றால் என்ன என்று கேட்க மற்றவன், "ஒருவன் இறந்தபிறகு அவனால் எழுதப்பட்ட புஸ்தகத்திற்கு பாஸ்துமஸ் புக்ஸ்" என்று சொன்னான்.

IV ஒரு பையன் ஒரு படமெழுதித்தன் சகோதரியிடங்கொடுத்து எப்படி யிருக்கிறது என, அவள், எல்லாஞ்சரி, ஆனால் "மூக்குசரியாயில்லை" என்றாள். அவன், "அதுதான் உன்மூக்கு" என்றான்.

V அரைடிக்கட்டும் பெண்ணின் வயதும்:—"உன்வயதென்ன?" என்

றொரு கனவான் ஒரு அரைடிக்கட்டு வாங்கிபெண்ணைக் கேட்க, அவள், "நான் வீட்டில் இருந்தால் ஒன்பதரை வயது, ஆனால் ரயிலில் இருந்தால் ஆறரைவயது" என்றாள்.

VI நாம் "தாத்தா, எல்லாருமாசாகவேண்டும்?" என்று சந்திர ஹாசன் என்ற பையன் கேட்க, அவர், "ஆம்," அப்பா உண்மைதான் என, பையன், "அப்பொயார் கடைசி மனிதனை தகனஞ்செய்வது?" என்றான்.

VII "மாணிக்கம், இந்தக் கடிதத்திற்குத் தலைவாங்கி ஒட்டிவிடு" என்று தகப்பன் மகனுக்கு உத்திரவிட, மாணிக்கம் போஸ்ட் ஆபீஸுக்குப்போய், சிறிதுநேரத்திற்கெல்லாம் வந்து, "அப்பா, நான் காசில்லாமல், ஒருவருக்குந்தெரியாமல் எல்லாரும் கடிதம் போடும் ஒரு பெட்டியில் போட்டுவிட்டேன்" என்று களிப்புடன் சொன்னான்.

சமாச்சாரக் குறிப்பு

அமெரிக்காவில் சமாச்சாரப் பத்திரிகைகளைப் படிப்பவர்கள் மிகவும் அதிகமாம். அங்கு தினசரிபத்திரிகை 2471, வாராந்தரப்பத்திரிகை 16,169 மாதாந்தரப் பத்திரிகைகளும் மற்றவைகளும் சேர்ந்து மொத்தமாக 21,806 பத்திரிகைகளிருக்கின்றனவாம். இவைகளை யெல்லாம் 59,000,000 பேர் பணம் கொடுத்து வாங்கி படித்து வருகிறார்களாம். சராசரி அமெரிக்காவில் 4100 மனிதருக்கு ஒரு பத்திரிகையும், க்ரேட்பிரிடனில் 4700 பேருக்கு ஒன்றும், ப்ரான்ஸில் 5900 பேருக்கு ஒன்றும் ஜர்மனியில் 7800 பேருக்கு ஒன்று மாகயிருக்கின்றதாம்.

"பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் இரக்கம் என்ற விஷயத்தை முதலில் போதிக்கவேண்டும். பின்பு மரியாதை என்ற விஷயத்தை போதிக்க வேண்டும். இவ்விதம் செய்து வருவதில் பேசுவதிலும் செய்வதிலும் உண்மையாகயிருக்கவும், எண்ணத்திலும் பார்வையிலும் உண்மைபொருந்தி யிருக்கவேண்டும். உண்மை, ஊக்கம், அவா, இவைகள் திரவியத்திற்குச் சமமானது; இவைகள்தான் கல்வி போதிப்பதின் முக்ய எண்ணம். பிள்ளைகள் பாடசாலைகளில் கணக்குப்போடுவதிலும், ட்ரில் செய்வதிலும், அபிநயன பாடல்களைச் சொல்லும் பொழுதும், அவர்கள் செய்யும் பிழைகளை உபாத்தியாயர்களில் அநேகர் கவனித்து திருத்தமுயலுவதேயில்லையாது. இவ்விதம் செய்யாமலிருப்பதால் சிறுபிள்ளைகள் அவ்வித பிழைகளைப் பிழைகளென்று தெரிந்து கொள்ளாமல் அவைகளைக் கையாடி வருவார்கள். ஆகையால் அவர்கள் சிறு பிராயத்தில் செய்து வரும் பிழைகளைக்கவனித்து அப்பப்போது திருத்திவந்தால் அவர்கள் அறிவும் விருத்தியடையும்.

இராஜ பக்தி

பிரதிநிதியார் தரிசனம்.

"அமிர்தேசா நீ மறுபடி லக்ஷ்மண புரிக்குப் போய் வரும்போது எனக்கு ஒரு வஸ்துவும் விசாலாக்ஷிக்கு ஒரு வஸ்துவும் வாங்கி வருகிறாயா? சொல்லு" என்றான் ஹம்ஸப்பிரியன்.

'விசாலாக்ஷிக்கு என்ன வேண்டும் அப்பா?" என்றான் அமிர்தேசன்.

"அவளுக்கு ஒரு பூனைக் குட்டி வேணுமாம்."

"சரி, அது எளிதில் கிடைக்கக் கூடியதே: உனக்கு என்ன வஸ்துவின்மேல் இச்சை: சொல் தம்பீ" என்று கேட்டான் அமிர்தேசன்.

"எனக்கு ஒரு நல்ல ஜாதி நாய்க்குட்டி சம்பாதிக்கவேண்டும். நமது பெரிய நாய் இருக்கின்றதென்றாலும் இக்காலத்தில் நமக்குப் பல விரோதிகள் இருக்கும் போது, ஒரே நாயின் உதவியை நம்பி யிருப்பது சரியன்று; யாராவது அதைக் கொன்று விட்டால் கஷ்டம்; அந்த ஆபத்தை உத்தேசித்தே நான் சில நாளாய் இன்னொரு நாய் சம்பாதிக்கப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறேன்" என்றான் அமிர்தேசன்.

"நீ சொல்வது சரியே; இரண்டு நாய்க் குட்டி கிடைத்தால் ஒன்று எனக்கும் ஒன்று ஹம்ஸ ப்ரியனுக்கும் உபயோகமாகும்" என்றான் எதுகுலதிலகன்.

"அப்படியானால் குட்டிகள் லக்ஷ்மணபுரியில்தான் கிடைக்கும். வனாந்தரங்களைக் கடந்து, 7, 8-மைல்களுக்கு அப்பால் எனது சிநேகிதர்கள் சிலர் இருக்கின்றனர். அவர்களை நான் பார்த்து அநேக நாள் ஆய் விட்டன. அங்கே சரியான ஜாதி நாய்க் குட்டிகள் கிடைக்கலாம். சீக்கிரம் ஒரு நாள் போய் சொல்லிவைத்து விட்டு வருகிறேன்." என்றான் அமிர்தேசன்

"நானும் வரட்டுமா, உன்னுடன்?" என்று கேட்டான் எதுகுலன். அவனுக்கு எது காரணம்பற்றி யானாலும் வீட்டை விட்டு வெளியே போவதென்றால் மிகசந்தோஷம்.

"எனக்கு இஷ்டமில்லை, அப்பனே; யாராவது கண்டபடி உன்னைப் பற்றிக் கேள்விகள் கேட்பார்கள். அனாவசியமாய் அனைவருக்கும் பதில் சொல்ல எனக்கு இஷ்டமில்லை. அவ்வளவே தவிர நீவரக்கூடாது என்று இல்லை எனக்கு, என்றான்" அமிர்தேசன்.

மறுநாட்காலையில் அமிர்தேசன் லக்ஷ்மணபுரிக்குப் புறப்பட்டான். திரும்பிவர இரண்டு நாள் ஆயிற்று. குட்டிகளுக்குப் பதினைந்து நாள்தான் ஆயிற்று என்றும், இன்னும் இரண்டு மாதம் கழித்துக் கொடுப்பதாகச் சொன்னதாகவும், சமாசாரம் கொண்டு வந்தான்.

பனிக்காலம் நெருங்கிற்று. போன வருஷத்தில் இதே காலத்தில் தான் மாளிகைக்கு நெருப்பு வைத்தது. மாளிகை எரிந்துபோய் ஒரு வருஷம் ஆய்விட்டது. கிழவனான வனபால அமிர்தேசனுக்கு வாயுவின் உபத்திரவத்தினால் கால் கைகள் பிடித்துக் கொண்டு சுவாதீனம் இல்லாமல் போய்க் கொண்டிருந்தன. மழைக் காலத்தை விடப் பனிக் காலத்தில் தான் வாயுவின் தொந்தரவு அதிகம். எதுகுலன், தானே தனியாகவும், சில சமயங்களில் ஹம்ஸப் பிரியனை அழைத்துக் கொண்டும் போய் வேட்டையாடியும் தோட்டவேலைகளைப் பார்த்தும் வந்தான். சில நாள் அமிர்தேசனுக்கு வெளியேபோய் உலாவிவர அநுகூலமாய் இருந்தது. பனி அதிகமாக நடமாட்டமே போய் விட்டது. வண்டியில் ஏறிக்கொண்டு போய் கிராமங்களில் இறைச்சியை விற்று வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு வருவது கூடப் பிரயாசம் ஆய்விட்டது. அப்படி வண்டியில் போய் வந்தாலும் இளைப்பு அதிகமாகும். கிழவன் தேகம் கட்டுவிட்டுத் தளர்ந்து போய் தினே தினே க்ஷீணித்துக் கொண்டு வந்தது.

கிழவனும் தன் கஷ்டத்தை வெளிக் காட்டி சிறுவர்களை பயப்படுத்தாமல் இருக்கவேண்டுமென்று முயற்சி செய்தான். கடைசியில் சாத்தியப்படவில்லை. படுக்கையோடு படுத்தபின் குழந்தைகளுக்கு விசாரம் அதிகமாயிற்று. வனாந்தரத்தைக் கடந்து நாய்குட்டிகளை வாங்கிவர யார்போவது? எதுகுலனும் ஹம்ஸப்பிரியனும் தாங்கள் போய்வருவதாய் எவ்வளவு தூரம் கெஞ்சிக் கேட்டும், அமிர் தேசன் சம்மதிக்கவில்லை. "இன்னும் இரண்டு நாள் போனால் தானே சரியாய்ப் போகிறது. இப்பொழுது என்ன அவசரம்; சும்மாபோய் வாங்கிக் கொண்டுவருகிறேன்." என்பான். இரண்டுநாள், இரண்டுநாள், இரண்டு நாளாகக் கழிந்து கொண்டே வந்தன. வர வர அமிர்தேசனுக்கு பலம் குறைந்து கொண்டே வந்ததே ஒழிய தேகபலம் அதிகமாகிற வழியைக் காணோம். அதுபற்றி அமிர்தேசன் எதுகுலனை லக்ஷ்மணபுரிக்கு அனுப்புவதாக ஒருவாறு சம்மதப்பட்டான்.

லக்ஷ்மணபுரிக்குப் போக வழிகள்.

எல்லாவற்றையும் சொல்லியபிறகு "அங்கே போனதும் யாராவது உன்பெயரை விசாரித்தால் வனபால அமிர்தேசன் பேரன் வனபால எதுகுலன் என்று பதில் உரை" என்றான். எதுகுலனும் அங்ஙனமே செய்வ

பார், கொஞ்சம் ஜலம் கொண்டுவா" என்று ஜலம் வந்தவுடன், அக்குழந்தையின் முகத்தில் தெளித்துத் துடைத்து விட்டு, அவயவங்களைத் தடவிக்கொடுத்து உபசரிக்கவே, கண்ணை விழித்தாள். "ஆ! ஹா!! தெய்வமே துணை! நல்ல வேளையாய் உயிர் பிழைத்தாள். இன்னும் சரியான ஞாபகம் வரவில்லை. உன்னுடைய குடிசைக்குக் கொண்டு போகலாம் வா; அங்கே கொஞ்சம் கஞ்சி கொடுப்போம். வேண்டிய சாமான்களும், படுக்கவிடப் படுக்கையும் அங்கே இருக்கின்றன" என்று பறுபடியும் தோளில் போட்டுக்கொண்டு புறப்பட்டான் எதுகுலன்.

அதற்குள் பாரிஜாதன் "தேவரீர் எடுத்துப்போவதிலும் அடியேன் எடுத்துப்போவது சுலபம்" என்று தான் வாங்கிக்கொண்டான்.

பாரிஜாதன் குடிசையில் படுக்கை மேல் சாயவைத்துக்கொஞ்சம் கஞ்சி ஊற்றி மேல் ஆடைகளைக் கழற்றி விசிறவே—ஞாபகத்தோடு அப்பெண் பிழைத்து எழுந்தனள். எழுந்தவுடன் முதலில் "என் தகப்பனார் எங்கே?" என்றாள். "இருக்கின்றார் க்ஷேமமாய்" என்று பாரிஜாதன் பதில் சொல்ல, உடனே "என்னையார் காப்பாற்றியது?" என்று கேட்டாள். "இதோ நிற்கும் வனபால யதுகுலன்" என்றான் பாரிஜாதன். யார்?—ஓஹோ ஞாபகம் வருகின்றது; சரிதான்—என் தகப்பனாரிடம் போகவேண்டும், எங்கு இருக்கிறார் அவர்?" என்றாள்.

வேதாரண்யம் கெவர்ன்மெண்டு பெண்பாடசாலையின் பரிசளிப்பு கொண்டாட்டம்

1916௵ டிஸம்பர்௴ 3௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 3-30 மணிக்கு ஷை ஸ்கூலின் பெண்குழந்தைகளுக்கு பரிசளிப்பு கொண்டாட்டம் 1915 & 1916 வருஷத்திற்காக ஷை ஊர் போர்ட் பாய்ஸ் கூலில் நடந்தது. வேதாரண்யம் டெப்டி தாசில்தார் ம-ள-ள-ஸ்ரீ T.B. தாசராவ் அவர்கள் பி.ஏ. அக்கிராஸனாதிபதியாக இருந்தார். ஷை கொண்டாட்டத்திற்கு பல உத்யோகஸ்தர்களும், அநேக வக்கீல்களும் வர்த்தகர்களும் பெற்றோர்களும் இன்னும் மற்ற இவ்வூர் மிராசுதார்களும் விஜயஞ் செய்திருந்தார்கள்.

நடவடிக்கைகளின் விபுரம்.

ப்ரோக்ராமில் கண்டபடி முதலில் 5வது வகுப்பு நாராயணி என்னும் சிறுமியால் பெண்கல்வி அவசியமென்பதைப்பற்றி வியாசம் எழுதிவாசித்தாள். ஷை விஷயத்தைப் பற்றி பெண்கல்வியின் அனுகூல பிரதிகூலங்களை பாடல் ரூபமாகச் சிலபெண்கள் பாடினார்கள்.

ஸ்திரீ வித்யா விஷயத்தைப் பற்றி 4வது வகுப்பு வேதாம்பாள், பாலாம்பாள், வசந்தரை, தில்லைகண்ணு என்ற 4 சிறுமிகளால் சம்பாஷணை மூலமாக நடித்த விஷயம் மெச்சத் தக்கதே.

பிறகு 3வது வகுப்பு ருக்குமணி, பத்மாட்சி என்ற சிறுபாலிகைகள் இங்லீஷில் சிநேகிதர்களாயிருந்து சம்பாஷித்தார்கள்.

அதன் பிறகு 4 வது வகுப்பில் படிக்கும் இரண்டு பெண்கள் உபாத்யாயராகவும், பிள்ளைகளாயுமிருந்து இங்கிலீஷில் சம்பாஷித்தார்கள்.

கிண்டர் கார்டன் டிரில், அபிநயப்பாட்டு, கும்மி, கோலாட்டம் இவைகள் நிரம்பவும் ஒழுங்காகவும், ஆச்சரியப்பட தக்கதாகவும் இருந்தன.

மேற்கண்ட விஷயங்களைக் கண்ட சபையோர் மிகவும் மெச்சினார்கள். ஸ்கூலின் ரிப்போர்ட்டு ஹை ஸ்கூல் எட்மாஸ்டரால் வாசிக்கப்பட்டது. பெண்களுக்கு பரிசுகள் வஸ்துக்களாகவும், புஸ்தகங்களாகவும், நாணயங்களாகவும் சிறப்பாய் அளிக்கப்பட்டன. அக்கிராஸனாதிபதி அவர்கள் எழுந்து பெற்றோர்களுக்கும் சிறுமிகளுக்கும் புத்திமதி சொன்னார். விஜயம் செய்திருந்த கனதனவான்கள் யாவருக்கும் சிறுமியர் சிறுவருக்கும் சிற்றுண்டி முதலானவைகள் கொடுக்கப்பட்டன. கடைசியில் நாஷனல் ஆந்தமும் மங்களமும் பாடின பின்பு சபைகலைந்தது.

NEWS AND NOTES

சமாச்சாரக் குறிப்பு

சென்னை விஷயம்.

சென்னையில் வெளியூர்களிலிருந்து கிறிஸ்துமஸ் சமயத்தில் திரளாக ஜனங்கள் வந்திருக்கிறார்கள். பீபில்ஸ்பார்க்கு வேடிக்கைப்பார்க்கவும் சென்று வருகிறார்கள். அங்கு போலீஸ், சிப்பாய், முதலியவர்கள் பந்தய ஆட்டங்கள் யாவரும் களிக்கும்படி பற்பல விநோத விளையாடல்களைச் செய்தார்கள். மைசூர், திருவநந்தபுரம், மதிராஸ் பாண்டுவாத்தியமும் வெகு நன்றாக யிருக்கின்றன. பாணவேடிக்கையோ கேட்க வேண்டியதில்லை.

மவுண்ட் ரோடிலுள்ள ஷாப்புகள் வெகு அலங்காரமாக ஜோடிக்கப்பட்டிருக்கின்றன. கெய்டி தியடர், எல்பின்ஸ்டன் தியடர்களில் விநோதமான காட்சிகளைப்பார்க்க ஜனங்கள் இரவில்சென்று வருகிறார்கள். ப்ரொபஸர் ராமமூர்த்தியின் அபார செய்கைகளைக் கண்டு களிக்கின்றனர். க்ரிக்கட் மாட்ச் பல நடக்கின்றன. மாணவர்கள் கூட்டம் நடந்தது. அதற்கு மாணவர்கள் அநேகர் போயிருந்தார்கள். அவர்கள் வரசுல்கம் வாங்கக்கூடாதென தீர்மானம் செய்ததைக்கேட்டு சந்தோஷப்படுகிறோம்.

மைலாப்பூரில் வைஷ்ணவ கான்பரன்ஸ் வெகு விமரிசையாக நடந்ததைப்பற்றி நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம். அதற்கு ஜஸ்டிஸ் சீனிவாச ஐங்காரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அநேக பண்டித சிரோன்மணிகளும், வைஷ்ணவ பக்தர்களும், மற்ற கனவான்களும் விஜயம்செய் திருந்தார்கள்.

சென்னை ப்ரிசிடென்சி காலேஜியில் இந்தியன் கணித சாஸ்திர கான்பரன்ஸும் வெகு நன்றாக நடந்தது. நமது கவர்னரவர்கள் அதைத் திறந்தார். பம்பாயிலுள்ள எல்பின்ஸ்டன் காலேஜ் ப்ரின்ஸ்பால் மிஸ்டர் வில்கின்ஸன் சபைத்தலைமையை வகித்தார். கணக்கு

விஷயமாக பல விஷயங்கள் பேசப்பட்டன. ஷை 29உ அவர்கள் எல்லாம் சேர்ந்து சிற்றுண்டி உண்டபின் அச்சபை கலைந்தது.

இந்திய கிறிஸ்தவ கான்பரன்ஸ் வெஸிலி காலேஜியில் வெகு சிறப்பாக நடந்தது. அதற்கு கல்கத்தாவிலுள்ள கனம் தாஸ் அவர்கள் அக்கிராஸனம் வகித்து சிறந்த உபந்நியாசம் செய்தார். அந்த உபந்நியாசத்தை ஒவ்வொருவரும் படிப்பது நலம்.

சென்னை பச்சையப்பன் காலேஜியில் ஐக்யநாணய சங்கம் கான்பரன்ஸ் கூடிற்று. இதற்கு சென்னை இராஜதானியிலுள்ள சங்கங்களிலிருந்து டெலிகேட்டுகள் வந்திருந்தார்கள். கனம் கில்மேன் அவர்கள் இக்கான்பரன்ஸுக்கு சபைத்தலைமையை முதல்தினம் வகித்தார். இரண்டாவது நாள் கனம் ராஜகோபாலா சாரியாரவர்கள் சபைத்தலைமையைவகித்தார். அநேக தீர்மானங்கள் செய்யப்பட்டன. இவ்வித சங்கங்கள் நமது தேசத்தாருக்கு அளவற்ற நன்மையைச் செய்து வருகின்றன. அவைகள் மிகவும் முக்கியமானவைகளே.

வெளியூர் விஷயம்.

இவ்வருஷத்திய காங்கிரஸ் மகா சபை லக்நௌவில் 26-ந் தேதி மாலையில் 2-மணிக்குக்கூடிற்று. அப்பந்தல் வெகு அலங்காரம் செய்யப்பட்டிருக்கிறதாம். இத்தடவை ஜனங்களதிகம் வந்திருக்கிறார்களாம். உள்ளே யிருப்பதற்கு அநேகருக்கு இடமில்லையாம். பிரிட்டிஷாருக்கு 'ஜயம் உண்டாவதாக', "ஒற்றுமையே பலம்தரும்" என்ற வாக்கியங்கள் சித்திர எழுத்துக்களில் எழுதப்பட்டிருக்கின்றனவாம். மதமதியர்களும், இந்துக்களும், கிறிஸ்தவர்களும், பார்சீகர்களும் ஒன்றாய்ச்சேர்ந்து இம்மகா சபைக்கு வந்திருந்தார்களாம். இதற்கு அம்பிகாசாரன் முஸம்தார் சபைத் தலைமையை வகித்து மிகவும் உபயோகமுள்ள சிறந்த உபந்நியாசம் செய்தார்கள். பல தீர்மானங்கள் செய்யப்பட்டன. மிஸ்ஸஸ் சரோஜினி நாயுடு இந்தியன் ஆர்ம்ஸ் ஆக்ட் என்ற தீர்மானத்தைப்பற்றி வெகு நன்றாக பேசினாளாம். இம்மாது இங்கிலீஷ் பாஷையில் மிக்க அறிவுள்ளவள். கவிபாடத்தெரியும். இம்மாது இயற்றியுள்ள கவிகளைக்கண்டு அநேகர் புகழ்ந்து பேசுகிறார்கள். இம்மாது இவ்விஷயத்தைப்பற்றி பேசியது அநேகருக்கு இங்கு ஆச்சரியமாயிருக்கிறது.

அலிகார் நகரில் முகம்மதிய கல்விக்கான்பரன்ஸ் வெகு விமரிசையாக நடந்தது. இதற்கு கனம் மியான் முகம்மது ஷாபி C. I. E. அக்கிராசனம் வகித்தார். இவர் கல்வியபிவிருத்தியில் முகம்மதிய சமூகத்தினர் தக்க முன்னேற்றமடைய வேண்டுமென்று பலமாய் வற்புறுத்தியிருப்பதை நமது முகம்மதிய சகோதரர்கள் நன்கு சிந்தனை செய்து பார்ப்பார்களென நம்புகிறோம்.

லாகூரில் பாட்டியா கான்பரென்ஸ் நடந்தது. ஸ்திரீகள், பிள்ளைகள் கல்வி விஷயமாய் அவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கவும், பாட்டியா ஸ்திரீகளின் கல்வி விஷயத்தில் ஒரு கல்வி சாலை ஸ்தாபிப்பதற்காக சேத்து சுந்தாஸ் நாத் $6\frac{1}{2}$-லக்ஷம் ரூபாய் நன்கொடை கொடுத்ததைப்பற்றி சிலாகித்துப்பேசப்பட்டது.

லக்னௌவில் எல்லா இந்தியவர்ணாசிரம கான்பரன்ஸ் நடந்தது. சென்னை மிஸ்டர் என் கே. ராமசுவாமி ஐயர் இதைக்கூட்டி வைத்தார். வர்ணாசிரம தர்மம் என்பதைப்பற்றி பிரசங்கம் செய்தார்.

பர்மா முஸ்லீம் கான்பரன்ஸ் ரங்கூனில் 28-யன்று கூடிற்று. மிஸ்டர் ஹாஜீபூ ஹாப்பாயிமியா பர்மாவிலுள்ள லெட்சம் முகம்மதியர்களில் இரண்டொரு ஆயிரம் பெயர்களே உயர்தரக் கல்வி பெற்றவர்களாயிருந்து வருவதையும், 100-க்கு 70 வீதமுள்ள முஸ்லீம்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாயிருந்து வருவதைப்பற்றிக் குறிப்பிட்டு பர்மாவில் முஸ்லீம் கல்வியை விருத்தி செய்யத்தக்க ஏற்பாடு செய்யப்படவேண்டுமென்றார். காலேஜ் வேண்டுமென்றார். முஸ்லீம் பெண்கள் கல்வி பள்ளிக்கூடங்களைப் பரிசிலனை செய்ய ஒரு ஸ்திரீ டிப்டி இன்ஸ்பெக்டரை கவர்ன்மெண்டார் நியமிக்கவேண்டுமென்றார்.

இந்தியன் நாஷனல் ஆசாரத் திருத்த கான்பரென்ஸ் லக்னௌ காங்கிரஸ் பந்தலில் கூடிற்று. அநேக ஸ்திரீகள் வந்திருந்தார்களாம். பாபு ஜோதிஸ்வரூபர் பிரசிடெண்டாகவிருந்தார். உலக முழுவதும் எல்லாரும் ஆசார திருத்தம் வேண்டுமென்றுதான் விரும்புகிறார்கள். 11 வருஷங்களுக்கு முன் பம்பாயில் பரோடா மகாராஜா ஆசார திருத்தம் செய்வது வெகு சிரமமான காரியமென்றும், ஆசாரத் திருத்தத்திலேதான் உலகம் நன்மையை யடைய விரும்புகிறதென்றார்.

தீர்மானங்கள்.

ஜாதி வேற்றுமையைத் தவிர்த்தலைப்பற்றி இச்சபை ஒரு தீர்மானம் செய்து, ஹிந்துக்களுக்குள் பல ஜாதிகளுள்ளும் கலியாணம் பண்ணிக்கொண்டாலும் அவ்விஷயம் சட்டப்படி செல்லத்தக்கது என்று ஒரு மசோதாவைக் கவர்ன்மெண்டார் கொண்டு வர வேண்டுமென்று தீர்மானம் ஒன்று நிறைவேறிற்று.

தாழ்ந்த வகுப்பாருக்கு வேண்டிய கல்வியைக் கொடுக்கத்தக்க சௌகரியங்களைக் கவர்ன்மெண்டார் செய்துகொடுக்க வேண்டுமென்று தீர்மானமொன்று செய்யப்பட்டது. மற்ற ஜாதியார்கள் கூட ஹிந்து மதத்தில் சேர்க்கப்படலாம் என்றதீர்மானம் செய்யப்பட்டது.

பாலிய விவாகம் செய்யக்கூடாதென்றும் விவாகச் செலவு குறைக்கப்படவேண்டுமென்றும், சடங்குகள் செய்யும் விஷயத்தில் செலவு குறைக்கப்பட வேண்டுமென்றும் திரை மறைவிலிருக்கும் வழக்கம் நீக்கப்பட வேண்டியது என்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. ஸ்திரீகளின் கல்வி, விதவைகளின் புனர் விவாகம், சமுத்திரயாத்திரையில் ஊக்கம் கொடுத்தல், மதுவிலக்கு முதலிய விஷயங்களைப்பற்றி இன்னும் பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

முஸ்லிம் லிக் மகாசபையும் லக்னௌவில் 30வ யன்று கூடிற்று. இதற்கு அக்கிராஸனாதிபதி கனம் மிஸ்டர் ஜின்னா. இந்துக்களும் மகம்மதியர்களும் பிறரும் ஒற்றுமையுடனிருந்தால் தான் முன்னேற்றம் அடையக்கூடுமென்றும், இவ்விரு சாதியாருடைய ஒற்றுமையே சுராஜ்யத்துக்கு பெரிய ருஜாவென்றும், இந்தியர் சுய ஆட்சியை அடைந்தால் படித்தவர்களால் பாமர ஜனங்கள் நசுக்கப்பட்டுப் போவார்கள் என்று சொல்லப்படுவதை பரிகாசம் செய்தும் சொன்னார்.

இதேயிடத்தில் இந்தியத் தொழில் ஆலோசனைக் கான்பரன்ஸும் கூடிற்று. இதற்கு கனம் ரெய்ஸிதாநாதராய் பகதூர் அக்கிராசனம் வகித்தார். இவர் விரிவாக பிரசங்கம் செய்தார். அது இந்தியாவில் தொழிலபிவிருத்தியைக் குறித்தேயிருக்கிறது. அதை ஒவ்வொருவரும் படிப்பது நலம்.

அலஹாபாத்திலுள்ள காயஸ்தா பாடசாலையைச் சேர்ந்த சில கனவான்கள் டாக்டர் ரன்ஜிட் சிங் மூலமாக சிந்தியா மகாராஜாவுக்கு ஒரு விண்ணப்பம் கொடுத்தார்கள். மகாராஜா அப்பாடசாலைக்கு ரூ. 10,000 அளித்தார்கள்.

மிஸ்டர் ஜே. நாராயணமூர்த்தி டாரக்டர்ஆப் இண்டஸ்ட்ரியலுக்கு பெர்சனல் அஸிஸ்டன்ட். இவரை இந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து கண்ணாடி செய்யும் சாலைகளைப் பார்த்து முழுவிவரம் எழுதும்படி கெவர்ன்மெண்டார் நியமித்திருக்கிறார்கள்.

ரங்கூனில் சால்வேஷன் ஆர்மியார் கைத்தொழில்சாலை வைத்திருக்கிறார்கள். நல்ல நடவடிக்கையுள்ள ஜெயிலிலிருக்கும் கைதிகளுக்குத் தகுந்த கைத்தொழில்கள் கற்பித்து அவர்களை திருட்டு முதலிய குற்றங்களைச் செய்யாமலிருக்க நல்ல வழியில் திருப்ப முயன்று வருகின்றார்களாம். அந்த ஊர் ஜெயிலிலிருந்து 12 கைதிகள் கைத்தொழில் சாலையில் யிருக்கின்றார்களாம். இது ஒரு நல்ல காரியமே.

ஸ்திரீ வேஷம் தரித்த ரயில் திருடர்கள் ஹெளரா ஸ்டேஷனில் நவம்பர்மீ 24வ இராத்திரி பஞ்சாப் மெயில் வண்டி புறப்படுவதற்கு முன் சில திருடர்கள் பிடிக்கப்பட்டார்கள். பஞ்சாப் மெயில் வண்டியில் ஸ்திரீகளுக்கென பிரத்தியேகமாயிருக்கும் இண்டர் மீடியட் வண்டியில் 6 மகமதியர்கள் தலை முதற்கொண்டு கால் வரையிலும் துணியால் மூடிக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தார்களாம். இவர்களில் ஒருவன்மேல் சந்தேகம் உண்டாய் ஸ்திரீவேஷம் தரித்தவன் புருஷன் எனத் தெரிந்தது. உடனே டிக்கட் கலெக்டர் பரிக்ஷை செய்ததில் அந்த ஆறுபேறும் புருஷர்கள் தான் எனத்தெரியவந்ததாம். அவர்களை போலீஸார் விசாரணைசெய்து வருகிறார்கள்.

வைஷ்ணவா கான்பரன்ஸ் காசியில் நவம்பர்மீ 24வ கூடிற்று. நூற்றுக்கணக்கான வித்வான்கள் பற்பல இடங்களிலிருந்து வந்தார்களாம். பற்பல விஷயங்களைப்பற்றி வாதம் நடந்ததாம்.

யுத்தகளத்தில் இந்திய துருப்புகள் வீரச்செய்கைகளைச் செய்துகொண்டும், தைரியத்துடனும் யுத்தம் புரிந்து வருகிறது யாவருக்கும் தெரியும். அவர்களுடைய பிரதிநிதியாருக்கு நமது அலக்சாண்டிரா ராணியார் நவம்பர்மீ 23வ யன்று யூனியன் ஜேக்கையும் ஷீல்டையும் ஸர் ப்ரதாப் சிங்குக்கு பின்வருமாறு சொல்லி வெகுமதி யளித்தார்கள். அச்சமயம் இந்திய அரசர்களும், உத்தியோகஸ்தர்களுமிருந்தார்கள்.

இந்தப் பெரிய யுத்தத்தில் தைரியத்துடன் யாவரும் மெச்சும்படியாகச் சிறந்த வேலைகளைச்செய்து வருகிற மிக்க தைரியம் வாய்ந்த இந்திய துருப்புக்கு நமது ராஜ்யமுழுவதுமுள்ள ஸ்திரீகளுக்

கும் குழந்தைகளுக்கும் பதிலாக இனாமாக அளிப்பதைக் குறித்து நான் அதிக சந்தோஷப்படுகிறேன். இது காறும் யுத்தத்தில் சிறந்த இந்திய துருப்பு செய்துவந்த வீரச்செய்கைகளைக்கண்டும் கேட்டும் அடிக்கடி நான் மெச்சி வந்ததை இப்பொழுதும் நிச்சயமாய் சொல்லுகிறேன். மேலும், முன் எனது கணவரிடத்திலும் இப்பொழுது எமது குமாரனிடத்திலும் பூர்ண ராஜ விசுவாசமும், பக்தியும் வைத்திருப்பதைக் குறித்தும் நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்." மிஸ்டர் சேம்பர்லேன் இந்திய துருப்பின் தைரியம், ராஜ விசுவாசம் இவைகளைப்பற்றி சொல்லி நான் இந்தச் சிறந்த வெகுமதிகளை வைத்திருந்து பின்பு உங்களது வீரச்செய்கைகளின் அறிகுறியாக இவைகளை இந்தியாவில் வைக்கிறேன் என்றார்.

எச். இ. லார்ட்வில்லிங்கடன் பம்பாயிலுள்ள அட்மிரல் அவுஸில் யுத்தத்தில் காயமடைந்தவர்களுக்குத் தாதிவேலை செய்ய தாதிகளுக்காக லேடிவில்லிங்க்டன் க்ளப்பைத்திறந்தார்.

கனம் ஸர் சங்கரன் நாயரவர்கள் டெலலியை விட்டுப்புறப்பட்டு சென்னைக்கு வந்தார். சென்னையில் 4-தினம் தங்கிவிட்டு பெங்களூருக்குச்சென்றார். சென்னையில் மலையாளிக்ளப்பைச் சேர்ந்தவர்கள் அவரைவரவழைத்து அவருக்கு மரியாதை செய்தார்கள். சென்னை மகாஜன சபையாரும் கல்வி விஷயமாக ஒரு பத்திரம் வாசித்தார்கள்.

1915௵ பர்மாவில் 7 பேர் யானையாலும், 40 பேர் புலிகளாலும், 8 சிறுத்தையாலும், 5 பேர் கரடியாலும், 5 இதர பிராணிகளாலும் 1,558 பேர் பாம்புகளாலும் கொல்லப்பட்டார்கள். ஆகமொத்தம் 1624. இதற்குமுந்திய வருஷத்தில் 1879 பேர் கொல்லப்பட்டார்கள்.

பெரிட்காட் ராஜா சிம்மா சனத்திற்கு வந்தபொழுது விசேஷ சடங்கு நடந்தது. அப்பொழுது நமது வைஸிராய் ப்ரசன்னமாயிருந்தார். ராஜா அவர்கள் இரண்டு மோடார் வண்டிகளை காயம்பட்ட சோல்ஜர்களின் உபயோகத்திற்கும், 10,000 ரூ. யுத்தத்திற்கும், ரூ. 5000 சேனைக்கும் அளித்ததைக்குறித்து சந்தோஷப்படுகிறோம்.

பர்மா யுத்த பண்டில் இப்பொழுது 22-லக்ஷம் ரூபாய் சேர்ந்திருக்கிறதாம்.

வங்காளத்திலுள்ள லேடி கார்மைக்கேல் ஸ்திரீகள் யுத்த பண்டைச்சேர்ந்தவர்கள் மெசொபொடாமியாவில் சென்ற யுத்தவீரர்களுக்கு கிறுஸ்தமஸ் இனாம் அனுப்ப முயன்று வருகிறார்களாம்.

சென்ற மாசம் 6௳ லேடி ஆம்ப்தில் தாதிகளின் சாலையின் சம்பந்தமாக ஒரு மீடிங் கூடிற்று. அச்சமயத்தில் எச். இ. லேடி பெண்ட்லண்ட் சபைத்தலைமையை வகித்தார்கள்; அநேக மாதர்களும், கனவான்களும் வந்திருந்தார்கள். சென்ற வருஷத்து ரிபோர்ட் வாசிக்கப்பட்டது. யுத்தம் நடப்பதால் புதிய தாதிகளை இந்தியாவிலும், ஐரோப்பா கண்டத்திலிருந்தும் தெரிந்தெடுக்க முடியவில்லை. இந்தச் சாலையில் மெம்பர்களாயுள்ளவர்கள் வியாதியஸ்தர்களுக்கு சிகிச்சை செய்ய சொற்ப பணத்திற்கு தாதிகள் கிடைப்பார்களென்று பொது ஜனங்களுக்கு சமயம் வாய்க்கும்பொழுது சொல்வது நலம் என்பதைச் சொன்னார்கள்.

சென்னையில் ப்ரபல வர்த்தகரும் தர்மம் செய்பவருமான ராவு சாயப் C. ராமானுஜம் செட்டியாரவர்களை கவர்ன்மெண்டார் இவ்வருஷத்திற்கு ஷெரிப்பாக நியமித்திருக்கிறார்கள். இவர் இரண்டு ஐஸ்கூல்களை நடத்தி வருகிறார். ஆயுர்வேத வைத்திய பாடசாலைகளுக்கும், அடிக்கடி திரவிய உதவி புரிந்து வருகிறார். கவர்ன்மெண்ட் ஸ்திரீகள் காலேஜியில் படிக்கும் கிறுஸ்தவப் பெண்மணிகளுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துவர நிரந்தர ஏற்பாடு செய்திருக்கிறார். இவர் செங்கல்பட் டிஸ்ட்ரிக்ட் போர்ட் மெம்பர். கார்பொரேஷன் கமிஷனர். இவ்விரண்டிலும் தம்மாலியன்றளவு உபயோகமானவைகளைச் செய்து வருகிறார். இவரை ஷெரிப்பாக நியமித்தது சரியே.

மிஸ்டர். போலக் என்பவர் தென் ஆபிரிக்காவில் இந்தியர்களுக்காக மிகவும் உழைத்து வருபவர். இவர் சென்னைக்கு சென்ற மாசம் 10௳ வந்து மிஸ்டர் ஜி. ஏ. நடேசனுடன் 15௳ வரையிலும் தங்கியிருந்தார். பின்பு பம்பாய்க்குச்சென்று அங்கு சிலநாளிருந்துவிட்டு லக்னௌக்குச் சென்றார்.

மிஸ்டர் கார்பெட் திடீரென்று சீமையில் இறந்தாரென்ற சங்கதி டிசம்பர்மீ 7௳ எட்டியிருக்கிறது. இவருடைய இரண்டு பிள்ளைகள் யுத்தத்தில் மடிந்தார்களென்ற சங்கதியைக் கேட்டது முதல் இவருக்கு அசௌக்யமுண்டானது. அதே விசனத்தால் இவர் இறந்தார். இவர் ஸ்பெயின் தேசத்தில் பிறந்தார். இவர் சிலோனில் வெகு காலம் பற்பல வேலைகளைச் செய்துவந்தார். 1897-௵ பாரிஸ்டர் பரிக்ஷைக்குப் படித்துதேறினார். ராயல் கமிஷனுக்கு காரியதரிசியாகயிருந்தார். அப்பொழுது தான் இவர் பேர் பிரபலமாயிற்று. பின் சென்னைக்கு அட்வொகேட் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். இவர் இந்தியர்களிடத்திலும் தமது சொந்த தேச ஜனங்களிடத்திலும் மிகுந்த பிரியமுடையவராயிருந்தார். இவர் மரணத்தைப்பற்றி நாம் மிகவும் துக்கப்படுகிறோம்.

தெல்லிச்சேரியில் ஜெகந்நாத கோயில் ஏன்றிருக்கிறது. இது அவ்வூரிலுள்ள திய்யா ஜாதியாருடையது. அவர்கள் கார்த்திகை பண்டிகையையும், உற்சவத்தையும் வெகு விமரிசையாக அக்கோயிலில் கொண்டாடினார்களாம். ப்ரிடிஷாருக்கு ஜயம் கிடைக்கும்படி அநேகர் பூஜை செய்து ஸ்தோத்திரமும் செய்தார்களாம்.

தாழ்ந்த வகுப்பாரை, முன்னுக்குக் கொண்டுவருவதற்காக ஏற்பட்டிருக்கும் சங்கத்தாரால் வியாசர்பாடியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்கூலுக்கு ஒரு கட்டிடம் கட்டுவதற்கு சென்னை கவர்ன்மெண்டார் 3050 ரூ. சாங்கிஷன் செய்திருக்கிறதைக் குறித்து சந்தோஷப்படுகிறோம்.

யூனியன் ஜேக்பீட் என்பதாக ஒரு சந்தையை டிசம்பர்மீ 8௳ கவர்னர் திறந்தார். லேடி பெண்ட்லண்டும் சில மாதர்களும் அதற்குரிய ஏற்பாடுகளையெல்லாம் செவ்வனே செய்தார்கள். சாமான்களோ வெகு நேர்த்தியானவைகள். வெகு அழகாக வரிசைக்ரமமாக வைக்கப்பட்டிருந்தன. இவைகளைப் பலர் விலைக்கு வாங்கினார்கள். வரும்படி யுத்த பண்டுக்கேயாம்.

CALENDAR, 1917

பஞ்சாங்கம்

1917ஞு ஜனவரிமீ—அனளஞு மார்கழி, தைமீ

இங்.	தமிழ்.	வாரம்.	திதி, நக்ஷத்திரம், பண்டிகை.
1	18	திங்	ஸப்-அஷ் 8-0, ரே 36-36, தி 7-30, உத் 2 செ.
2	19	செ	நவ 5-10, அசு 35-49, தி 25-56, ரா 32-21.
3	20	புத	தச 3-21, பர 36-14, சே 3-59.
4	21	வியா	* ஏகா 2-45, கா 37-46, தி 7-0, வைகுண்ட ஏகாதசி,
5	22	வெ	துவா 3-28, ரோ 40-39, தி 19-41, ரா 27-55
6	23	சனி	திர 5-31, மிரு 44-39, தியாஜ்யமில்லை.
7	24	ஞா	சசி 9-3, திரு 49-58, தி 7-30, ஆருத்திரா தர்சனம்.
8	25	திங்	○ பௌ 13-3, பு 55-43, தி 22-50.
9	26	செ	கி-பிர 18-4, பூச 60-0, தி 7-55, மூ 1, சு.
10	27	புத	த்வி 23-29, பூச 2-11, ரா 9-58.
11	28	வியா	திரி 28-55, ஆயி 8-45, ரா 14-6.
12	29	வெ	சது 33-52, மக 14-52, ரா 8-57, போகி பண்டிகை.
13	1	சனி	பஞ் 37-56, பூ 20-26, ரா 12-1, உத்தி 2, ரவி 42-58. உத்திராயண புண்ணியகாலம் பொங்கல்பண்டிகை.
14	2	ஞா	ஷஷ் 41-2, உத் 24-58, ரா 19-12, மாட்டுப்பொங்கல்.
15	3	திங்	ஸப் 42-49, அஸ் 28-24, ரா 21-11, கண்பொங்கல்.
16	4	செ	அஷ் 43-21, சித் 30-10, ரா 16-40.
17	5	புத	நவ 42-32, சு 31-32, ரா 17-37.
18	6	வியா	தச 40-26, வி 31-11, ரா 11-27, திருவள்ளூர் வீரராகவ சுவாமி த்வஜாரோகணம்.
19	7	வெ	ஏகா 37-25, அ 29-48, ரா 15-16,
20	8	சனி	துவா 33-12, கே 27-32, விஷாபாவ.
21	9	ஞா	திர 28-28, மூ 24-30, தி 20-42, ரா 29-10.
22	10	திங்	ச 23-5, பூரா 20-51, ரா 11-40.
23	11	செ	● அமா 17-20, உத்தி 16-54, தி 25-12, திதித்வயம்.
24	12	புத	சு-பிர 11-29, திரு 12-47, தி 22-5.
25	13	வியா	த்வி 5-38, உபரி 54-31, அவி 8-37, தி 15-17.
26	14	வெ	சது 54-15, ச 4-44, தி 19-48.
27	15	சனி	பஞ் 50-6, பூரட் 1-15, உத்திர 57-22 தி 24-11.
28	16	ஞா	ஷ 47-19, ரே 56-24, தி 27-58, கந்தசுவாமி உட்ச[வாரம்பம்.
29	17	திங்	ஸ 43-32, அ 55-19, ரா 7-21 ரதசப்தமி.
30	18	செ	அஷ் 41-53, பர 55-25, தி 19-21.
31	19	புத	நவ 41-23, கா 56-38, தி 26-1.

Printed at the Commercial Press, Madras &
Published by C. S. Ramaswamy Iyer, Triplicane.

167

OFFICE OF THE REGISTRAR OF ... 10 FEB 1917

The Tamil Zenana & School Magazine.

மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்."—ஔவையார்.

Vol. XVIII | Madras February 1917 | No. 3
புத்தகம் 18 | சென்னை: பிப்ரவரிமீ, 1917ஞு | இலக்கம் 3

லார்ட் கிட்சனர்.

49-வது பக்கத் தொடர்ச்சி.

சூடானில் மாதி என்ற ஒரு மதவைராக்கியன் தோன்றினன். இதற்கு தென்பாகத்திலுள்ள விடங்களை மாதி சேனைகளைச் சேகரித்து கைவசமாக்கிக்கொண்டான்.

கர்னல் ஹிக்ஸ் சில துருப்புடன் இவர்களை நோக்கிச் சென்றார். ஹிக்ஸும் அவருடைய துருப்பும் பல கஷ்டங்களை அநுபவித்து தகுந்த உதவியில்லாமையால் யாவரும் மடிந்தார்கள். கலகமோ நடந்து கொண்டேயிருந்தது.

சூடானில் மேற்கூறிய வண்ணம் நடக்கும் கலகத்தை யடக்க லண்டன் மாநகரத்திலிருந்து ஜெனரல் கார்டன் சென்றார். இவர் மகா வீரபராக்ரமமுள்ளவர். தைரியசாலி. இவருடன் சென்றிருந்த சேனை எதிரிகளுக்கு ஈடல்ல என்பதைத் தெரிந்து கொண்டார். உடனே ப்ரிடிஷாருக்கு இன்னும் பலமான சேனையை அனுப்ப வேண்டுமென்று கடிதம் எழுதினர்.

இங்க்லாந்திலுள்ள ப்ரிடிஷ் உத்தியோகஸ்தர்கள் இவர் சொன்னதை நன்றாகத் தெரிந்து கொள்ளவில்லை. அஸ்ரத்தையாயிருந்து விட்டார்கள். கார்ட்டூம் என்ற விடத்தில் தான் கார்டன் இருந்தார். மாதியின் சேனை அவ்விடத்திற்கு வந்து அதைச் சுற்றிலுமிருந்தார்கள். அவ்விடத்தை அவர்கள் பிடித்துக் கொண்டார்கள். கார்டனும் அவருடைய சேனையும் சுமார் ஒருவருஷம் வரையில் அவ்விடத்தைப் பெற விரோதிகளுடன் போராடிக்கொண்டேயிருந்தார்கள்.

இங்க்லாந்திலிருந்து வந்து கொண்டிருக்கும் துருப்பில் கிட்சனர் துப்பறியும் உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டார். இவர் ஒரு அரேபியன் மாதிரி வேஷம் தரித்து, கார்டனுக்கு சமாச்சாரங்கள் அனுப்

பிக்கொண்டு வந்தார். இத்துருப்பு வருவதற்குள் கார்டன் கொலையுண்டார். விரோதிகளால் சூழப்பட்ட கார்ட்டூம் விரோதிகளின் கைவசமாகி விட்டது.

கிட்சனரும் துருப்பும் வந்தவுடன் விரோதிகளுக்கும், ப்ரிடிஷ் துருப்புக்கும் யுத்தம் நடந்தது. கார்ட்டூம் ப்ரிடிஷ் கைவசமாய் விட்டது. மாதியின் கொட்டம் அடக்கப்பட்டது.

கிட்சனர் பின்னிட்டு சான்ஸிபாருக்குச்சென்றார். அங்கு இவர் ஜர்மனிக்கும் கிழக்கு ப்ரிடிஷ் ஆப்ரிக்காவுக்கும் மத்தியில் எல்லையை ஏற்படுத்தினார்.

இவர் 1886ம் வருஷம் கவர்னர் ஜனரலாக நியமிக்கப்பட்டார். நைல்நதியண்டை இவர் தங்கியிருக்கையில் கலகம் உண்டானது. அக்கலகத்தை உடனே அடக்கிவிட்டார். சுவாகிம் என்றவிடத்தில் மாதிக்குப்பதிலாக ஒருதுருக்கி தேசத்து அடிமை விற்பவன் கலகம் செய்யகிளம்பினான். அவனுடன் யுத்தம்செய்து அவனைக் காயப்படுத்தினார். அவன் கொட்டம் அடங்கிற்று. அவன் சங்கதி பின்னிட்டு ஒன்றும் தெரியவில்லை. லார்ட் கிட்சனர் கர்னலாக நியமிக்கப்பட்டார். உடனே ஈஜிப்ட் தேசத்து சேனைக்கு தளகர்த்தராகவும் நியமிக்கப்பட்டார்.

சூடானில் கலகம் மும்மரமாய் நடக்க ஆரம்பித்தது. அதைவெகு சாமர்த்தியத்துடன் வேரோடு களைந்து விட்டார். இவர் 1892ம் வருஷத்தில் அச்சேனைக்குத்தலைவராக நியமிக்கப்பட்டவுடன் இவர் எடுத்துக்கொண்ட ஸ்ரமத்துக்கு அளவேயில்லை. சேனையிலுள்ளவர்களை சாமர்த்திய வான்களைக் கொண்டு யுத்தபயிற்சி யுண்டாகும்படி பழக்கி வைத்தார். பலவிடங்களுக்கு ரயில் பாதைகளைப்போட்டு வைத்தார். இவ்வித ரயில் பாதைகளால் ஒரு இடத்திலிருந்து மற்றொருவிடத்திற்கு யுத்த சாமான்கள் முதலியவைகளைக் கொண்டு போக மிகவும் அநுகூலமாயின. அங்கு வனாந்தரத் திருடர்கள் பலருண்டு. அவர்கள் ஈஜிப்ட்சேனை தங்குமிடங்களில் வந்து பல சாமான்களைத் திருடிக் கொண்டு போய்க் கொண்டிருந்தார்கள்.

கிட்சனரோ கெய்ரோ என்ற பட்டணத்தை தமது முக்ய ஸ்தானமாக ஏற்படுத்தினார். டெர்விஷ் சாதியார்கள் பற்பல தீங்குகளை விளைவித்துக்கொண்டிருந்தார்கள். திருடர்களுடன் சேர்ந்து கொண்டுமிருந்தார்கள். இவர்களை அடியோடு தொலைக்க வேண்டிய பிரயத்தனங்களை புத்தி சாமர்த்தியத்துடன் கிட்சனர் செய்ய வேண்டியிருந்தது.

டங்கோலா வென்ற விடத்தைப் பிடித்துக்கொண்டார். ஏனெனில் இங்கே தான் திருடர்கள் ஏராளமாக கூடியிருந்தார்கள். இவர்

கள் அநேக ஈஜிப்ட்தேசத்தாரைக்கொன்று அவ்விடத்தைக் காடாகச் செய்தனர். ஆனது பற்றி அவர்கள் கொட்டத்தை யடக்க அவ்விடத்தைப் பிடித்துக்கொண்டு அவர்களை யெல்லாம் தண்டித்தார்.

சூருக்கு வழியைக்கண்டு பிடித்து நயில் நதியண்டை ரயில் பாதையையும் ஸ்தாபித்தார். இவ்விதம் செய்ததால் யுத்த சாமான் முதலியவைகளைத் துரிதமாக எடுத்துக் கொண்டு போனார்கள். பர்பர் என்ற விடத்தையும் பிடித்துக் கொள்ளவே டர்விஷ் சாதியார் பயந்து நடுநடுங்கி ஓடஆரம்பித்தார்கள்.

கிட்சனர் விடாமுயற்சி யுடன் டர்விஷ்சேனையைத் துரத்திக்கெண்டு ஸெரீபா என்ற விடத்தைப் பிடித்துக் கொண்டார். வெகு நேரம் யுத்தம் செய்து கேலிப் சேனையைத் தோல்வி யடையும் படி செய்தார். அவர்களில் 3000பேர் யுத்தகளத்தில் மடிந்தார்கள்.

கிட்சனர் ஓம்டுர்மான் என்ற விடத்தைக் கைப்பற்ற முயன்றார். இதுமாதியால் வெகு பலமாக கட்டப்படடிருந்தது. ரயில் பாதைகளும் விஸ்தாரமாக போடப்பட்டன. ஜனங்களும் சாமான்களுடன் ஏராளமாக வந்தார்கள். விரோதிகளின் தொகையோ 40,000, பிரிடிஷ் ஈஜிப்டின் சேனையின் தொகையோ 22,000த்துக்கு அதிகமில்லை. ஆயினும் இவருடைய யுத்த பயிற்சியினாலும் சமயோசித யுக்தியாலும் விரோதிகளை ஓம்டுர்மானுக்கு வெளியில் துரத்தி விட்டு அவ்விடத்தைக் கைவசமாக்கிக்கொண்டார்கள். விரோதிகள் மறுபடியும்ஈஜிப் சேனையைத் தாக்க முயன்றார்கள். அச்சேனையின் தலைவர்களாகிய ஜெனரல் ஹெக்டரும், மேக்டனல்டும் மிக்க தைரியத்துடன் விரோதிகளை எதிர்த்து அவர்களின் சேனையை சின்னா பின்னமாக்கினார்கள். விரோதிகளோ சிதருண்டு ஓடிவிட்டார்கள்.

இப்பொழுது கார்ட்டூம், ஓம்டுர்மான் என்ற இருமுக்ய ஸ்தலங்கள் இவர்கள் கைவசமாயின. விரோதிகளின் பலம் குறைந்தது. விரோதிகள் இன்னது செய்வது என்று தோன்றாமல் பலதிசைகளிலும் தப்பித்து ஓடிக்கொண்டிருந்தார்கள். இவர்கள் இப்படி செய்தது கிட்சனருடைய விடாமுயற்சியாலும், புத்தி சாமர்த்தியத்தினாலுமேயாம்.

க்ரமேண சூடான் முழுவதும் கலகமின்றி சமாதானமே குடிகொண்டிருந்தது. இதுவோ விசாலமான பெரிய தேசம். மாதியின் உபத்திரவம் தொலைந்த பின் ஈஜிப்ட் ஜனங்கள் சௌக்யமாயிருக்க நேர்ந்தது. இவர்களுடைய திரவியம், நிலம் முதலியவைகள் காக்கப்பட்டு வந்தன. இவைகளை யெல்லாம் கிட்சனர் செய்தார்.

விசேஷ அறிவும், சாமர்த்தியமும் இருந்தாலொழிய ஒருவராலும் இவ்விதம் செய்யமுடியாது. மேலும் மனத்தளராமையும் விடாமுயற்சியும் அவசியம் தேவை. மேற்கூறியகுணங் களமைந்த கிட்சனர் செய்த வேலைகளைக் குறித்து பார்லிமெண்ட் சபையாரும் எட்வர்ட் அரசரும் மிகமகிழ்ந்து இவரை கார்ட்டூமுக்கு லார்டாகச் செய்தனர்கள். லார்ட் என்றால் பிரபு என்அர்த்தம். மேலும் இதிலிருந்து 30,000 பவுன் வரும்படி இனாமாகவும் கொடுக்கப்பட்டது. பார்லிமெண்ட் சபையார் ராஜதர்ம நிபுணர்களில் கிட்சனர் சிறந்தவரென்றும், யாவரும் புகழத்தக்க அலுவல்களைச் செய்திருக்கிறார் "என்றும் சொன்னார்கள்.

இவர் இவ்விதம் நற்பேர் பெற்று சூடான் முழுவதிலும் கலகமின்றி அதைச் செவ்வனே திருத்தி ஜனங்களுக்கு நன்மைசெய்து கொண்டு ஆண்டு வருகையில் தென் ஆப்ரிக்காவில் போவர் யுத்தம் ஆரம்பமானது. போவர்கள் பலமுள்ளவர்களாக தென்பட்டார்கள். கொலன்ஸோ, மேகர்ஸ் பொன்டின் என்றவிடங்களில் பிரிடிஷ் துருப்புக்கு அநேக இடையூறுகளும், ஆபத்துக்களும். உண்டாயின. உடனே பெருத்தவலிவுள்ள சேனை அனுப்பப்பட்டது. இதற்கு லார்ட் ராபர்ட்ஸைத் தலைவராக நியமித்தார்கள்.

லார்ட் கிட்சனரை லார்ட்ராபர்ட்ஸின் கீழ் அவருடைய ராணுவ உத்தியோகஸ்தர் வகுப்புக்கு முக்யஸ்தராகயிருக்க முடியுமாவென மேலதிகாரிகள் கேட்டார்கள். லார்ட் கிட்சனர் தமது இயற்கையான நல்ல குணத்துடன் "லார்ட்ராபர்ட்ஸின் கீழ் எந்த வேலையையாயினும் நான் சந்தோஷத்துடன் செய்வேன்" என்று பதிலளித்தார். உடனே இவர் அவருக்கு உதவியாக அனுப்பப்படவே, இவர் தென்ஆப்ரிக்காவுக்குச் சென்று அவருக்கு மனப்பூர்வமாக ராஜவிசுவாசத்துடன் உதவி புரிந்து வந்தார்.

போவர்களுக்கும், ப்ரிடிஷாருக்கும் யுத்தம் நடந்து கொண்டேயிருந்தது. லார்ட் கிட்சனர் போக்கு வரவுக்குரிய சாதனங்களை ஏற்படுத்தினார். போவர்களால் பிடிக்கப்பட்ட கிம்பர்லே என்ற பட்டணத்தைப் பிடித்தார். பேர் பெற்ற போவர் தலைவராகிய க்ரான்சியையும் அவருடைய சேனையையும் வளைத்து பிடித்துக்கொண்டார். வடக்கே சென்று ப்ளோம் பௌன்டின் என்ற பட்டணத்தைப் பிடித்துக் கொண்டார்.

பின்னிட்டு ப்ரிடோரியாவையும் பிடித்துக் கொண்டார். இது ட்ரான்ஸ் வாலுக்கு முக்ய பட்டணம். பின்பு லார்ட் ராபர்ட்ஸ் தமது ஜன்ம தேசமாகிய இங்க்லாந்துக்குச் சென்றவுடன் லார்ட் கிட்சனர் அவர் ஸ்தானத்தில் நியமிக்கப்பட்டார். இவர் அங்குள்ள சேனை

முழுவதிற்கும் தலைவராய் விட்டார். தம்மாலியன்றளவு புத்திசாதுர்யத்துடன் சேனைத்தலைமையை வகித்து பற்பல சீர்திருத்தங்களைச் செய்து போவர்களுடன் எதிர்த்துவந்தார்.

நிற்க, லார்ட்ராபர்ட்ஸ் இங்க்லாந்துக்கு வந்து சேர்ந்தவுடன் "லார்ட் கிட்சனருடைய சமயோசித புத்திக்கும் சாமர்த்தியத்திற்கும் அவர் எப்பொழுதும் மனப்பூர்வமாய் உதவி புரிந்ததற்கும் அவருக்கு நான் மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன்" என்று பகிரங்கமாய் வெளியிடுகிறேன் என்றார். "லார்ட்கிட்சனர் செய்த மாதிரி ஒருவரும் இடைவிடாமல் உழைத்திருக்க மாட்டார்கள். எடுத்த காரியத்தைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற அவா அவருக்குண்டு. அவர் அப்படியே செய்திருக்கிறார். கிட்சனர் பிரிடிஷ் ராஜ்யாதி பத்யத்திற்காக தமது கடமையைச் செய்ய எப்பொழுதும் உற்சாகத்துடனிருந்தார்" என்று புகழ்ந்தும் சொன்னார்.

நிற்க, போவார்களுக்கோ ஆப்ரிக்காவில் பிரிடிஷ் துருப்புடன் எதிரில் நின்று யுத்தம்புரிய முடியவில்லை. ஆனால் அவர்கள் அத்தேச முழுவதும் தங்கள் துருப்பைச் சிறிது சிறியதாக அனுப்பி யுத்தம் புரிந்தார்கள். நேருக்கு நேராக நின்று யுத்தம் புரிய சக்தியின்றி இப்படி செய்து வந்தமையால் ஏதாவதொரு விடத்தில் சிறிய தொகையுடன் பிரிடிஷ் துருப்பிருந்தால் அதை எதிர்த்து வந்தார்கள். அவர்கள் குதிரைப்படையோ மிக்க தீரமுள்ளது. அவர்களைச் சுற்றி வளைத்துக் கொள்வது மிகவும் கடினம். ஆனால் லார்ட் கிட்சனர் தமது புத்தி நுட்பத்தாலும் விடாமுயற்சியினாலும், இவ்விதம் இவர்கள் செய்து வந்த சூழ்ச்சிக்குப் பயந்து பின்னிடையாமல் அவர்களுடன் போர்புரிந்து அவர்களைத் தோற்கடித்து இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

தென் ஆப்ரிக்கா ப்ரிடிஷ் கொடியின் கீழ் யாதொரு தொந்தரவின்றியிருந்து வருகிறது யாவருக்கும் தெரியும்.

தென் ஆப்ரிக்கா சமாதனத்துடனிருப்பதைக் கண்டு லார்ட் கிட்சனர் இங்க்லாந்துக்குச் சென்றார். அங்கு அநேக பிரமுகர்கள் இவரைப் புகழ்ந்து பேசினார்கள். நமது எட்வர்ட் அரசர் இவரை வைகௌண்டாகச்செய்தார். இது ஒரு கௌரதாப்பட்டம். இப்பட்டம் இவர் இது வரையிலும் செய்து வந்த அபார வேலையைக் குறித்து புகழப்பட்டு இவருக்கு அரசரால் அளிக்கப்பட்டது.

இவர் தென் ஆப்ரிக்காவில் சமாதன முண்டானவுடன் தமது சேனையைப் பார்த்து பின் வருமாறு சொன்னார்:—"இந்த யுத்தத்தில் நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள், உங்களில் சிலர் குதிரை

சவாரி நன்றாகச் செய்யவும் சுடவும் கற்றுக் கொண்டீர்கள். நீங்களெல்லோரும் அபாய காலத்தில் நிலையுள்ளவர்களாகவும் உறுதியுள்ளவர்களாகமிருக்கவும், தைர்யத்துடன் விரோதிகளை எதிர்க்கவும், நீங்கள் ஜெயித்த இடங்களைப் பத்திரமாய் வைத்துக்கொள்ளவும் கற்றுக் கொண்டீர்கள். நீங்கள் உங்களது உண்மையான நண்பர்களுடன் சேர்ந்து அவர்கள் பக்கத்தில் நின்று கொண்டு அநேக யுத்தங்களைப் புரிந்தீர்கள். அவ்விதம் செய்ததையும், உங்களது உண்மையான நண்பாகளையும் நீங்கள் ஒருபொழுதும் மறக்க மாட்டீர்கள். நீங்கள் உற்சாகத்துடன் சகித்துக் கொண்டிருந்த கஷ்டங்கள்கூட ஜயமடைந்தபின் இன்பமாக உங்கள் ஞாபகத்தில் பதிந்திருக்கும். நீங்கள் கற்றுக் கொண்டதையெல்லாம் உங்களுக்குப் பின் ராணுவத்திற்கு வரப்போகும் வாலிபர்களுக்குப் போதியுங்கள். உங்கள் குதிரைகளையும், யுத்தாயுதங்களையும் தயாராக வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் தேகத்தை யாதொரு பிணியுமின்றி பலமுள்ளதாக வைத்துக்கொள்ளுங்கள். நமது அகண்ட பிரிடிஷ்ராஜ்யத்தில் எப்பொழுதாவது யுத்தத்திற்குப் போகவேண்டியிருக்கும் சமயத்தில் தயாராயிருக்க மேற்சொல்லியவைகளைச் செய்துவந்தால் உதவும்."

நிற்க, இங்க்லாந்தில் இவர் சிறிதுகாலமிருந்தபின் இந்தியச் சேனைக்குத் தலைவராக நியமிக்கப்படவே உடனே இந்தியாவுக்கு வந்தார். 7 வருஷகாலம் இவ்வலுவலிலிருந்தார். அநேக சீர்திருத்தங்களைச் செய்தார். சோல்ஜர்களைப் புதிய மாதிரியில் பழக்கிவந்தார். பலபடைகளை ஒழுங்காக அமைத்து செய்யவேண்டிய சீர்திருத்தங்களைச் செய்தார். இவர் இந்தியாவைவிட்டு அகலும்பொழுது இவருடைய சேனை யுத்தத்திற்குப்போக சமயம் நேரும்பக்ஷத்தில் அதற்குத் தயாராயிருந்தார்கள். முன்னைவிட இந்தியச்சேனை அதிக பலப்பட்டிருந்தது. இவ்விதமிருக்கும்படி செய்த மகாபுருஷர் லார்ட் கிட்சனர்தான்.

பின்பு லார்ட் கிட்சனர் ஆஸ்த்ரேலியாவுக்கு அனுப்பப்பட்டார். இங்கு சேனையைப் பார்வையிட்டார், 80,000 பேர் கொண்ட ஒரு புதிய படையைச்சேர்த்து யுத்தபயிற்சியுண்டாகும்படி பழக்கி வைத்தார். பின்பு நியுஸீலண்ட், கானடா முதலிய விடங்களில் பிரயாணம் செய்தபின் ஈஜிப்டுக்கு 1911ம் வருஷம் சென்றார்.

அத்தேசத்தைச் சீர்திருத்துவதில் அதிக கவனம் செலுத்தினார். அத்தேசத்தார்சந்துஷ்டியாகவும் சுகவாழ்வுள்ளவர்களாகவுமிருக்கத் தக்கவைகளையெல்லாம் செவ்வனே யோசித்து செய்தார். வனாந்தரமாயுள்ள நிலத்துக்கு நீர் பாயும்படி ஏற்பாடு செய்து அங்கு வந்து குடி

யேறும் ஒவ்வொருவருக்கும் 5 ஏக்ரா பூஸ்திதியை யளித்தார். அவ்வூர் ஜனங்கள் லார்ட் கிட்சனர் ஈஜிப்டுக்காக உழைத்து வந்ததைக் குறித்து மிகமகிழ்ந்து, இவரை வாழ்த்தி வந்தார்கள்.

இப்பொழுது நடக்கும் யுத்தம் ஆரம்பமானபொழுது லார்ட் கிட்சனர் லண்டன் மாநகரத்தில் இன்னும் ஈஜிப்டிலுள்ள ஜனங்களின் சௌகரியத்தை விருத்திபண்ண கவர்ன்மெண்டாருடன் யோசனை செய்துகொண்டிருந்தார். அவ்விதம் செய்ய பல யோசனைகளை அவர்களுடன் கலந்து தெரிந்துகொண்ட பின் ஈஜிப்டுக்குத் திரும்பிப்போக எண்ணினார். ஆனால் கவர்ன்மெண்டார் யுத்தத்திற்கு காரியதரிசியாக யிருக்கவேண்டுமென்று இவரைக் கேட்டார்கள். இவரும் அவ்விதமிருந்து தம்மாலியன்றதைச் செய்வதாக ஒத்துக் கொண்டார்.

இவர் பற்பல விடங்களிலிருந்தமையால் ஜனங்களுடைய நடை, உடைபாவனைகளும், அந்தந்த ஊர்களின் படம், துருப்புகள்செல்லும் மார்க்கம், முதலியவைகள் இவருக்குநன்றாகத்தெரியும். இவரும்சாமானிய மனிதரல்ல. சிறந்தபுத்திமான். சேனைகளைச் சேர்த்து யுத்தத்திற்கு அனுப்பமுயன்றார். பலர் சந்தோஷத்துடன் சேர்ந்தார்கள்.

இந்தியாவிலிருந்தும் உதவிசென்றபொழுது லார்ட் கிட்சனர் அவ்வுதவியையும் பெற்றுக்கொண்டார். தமது அநுபோகத்தாலும் புத்தி நுட்பத்தாலும் அநியாயமாய் யுத்தம் செய்யும் ஜர்மனியர்களுடைய கொட்டத்தை அடக்கமுயன்றார். ஜர்மனியர்களுக்கும் லார்ட் கிட்சனர் என்றால் மனதில் திகிலுண்டாம்.

அவ்வித அபார சக்தியுள்ள கனவான் திடீரென்று இறந்துபோகவே ஜனங்கள் துக்கப்பட்டதிற்கு அளவேயில்லை. அவருடைய உறுதிச் சொல் "சன்னத்தமாயிரு" என்பதே.

பக்திமார்க்க அனுபவம்.

இருதயத்தில் ஆராதிப்பதே ஆனந்தம். இதைப்பொருந்தியவர்களே ஆநந்த முடையவர்கள். நம்மைக்கைநெகிழவிடும் இவ்வுலகத்தில் நாம் ஒன்றே உண்மை. நம் இருப்பிடமாகிய இருதயமே நமக்கனுகூலமாய் யேற்படுத்தப்பட்டது. அதுவே உண்மை. மற்றப் பொருள்கள் பொய். நம்பிராண சக்தியை தெய்வீக முள்ளதாய் பரிசுத்தப்படுத்தி வாழவேண்டும். இதில் அச்சமில்லாமல் தைரியமாய் நிற்கலாம். நம்முன் சித்த சலனங்கள் ஆயிரக்கணக்காய் வந்து தாக்கும். அவைகளை நாம் லட்சியம் செய்யவே கூடாது. நாம் மேலும் மேலும்

அழுத்தமாய் அந்நிலையில் நிற்கவேண்டும். நாம் அந்நிலையிலிருந்து கொஞ்சமும் பின்வாங்கி வருதல் கூடாது. நமதன்பும் பக்தியுமே அங்கு நமக்கு ஆதரவாய் பிடித்துக்கொள்ளத் தகுந்தன. நாம் அன்புடையராயும் பக்தி வயத்தராயும் நிற்றல் எவ்வளவு பெரிய விஷயம். உண்மையில் அன்பும் பக்தியும் நாம் நினைக்கக் கூடியதற்கும் ஏற்பட்ட பெரிய விஷயங்கள் என்பதை நாம் மறக்கவே கூடாது. அன்பு நிறைந்த பக்தி ஒன்று மாத்திரமே ஒருவரை எப்பொழுதும் சந்தோஷமாய் இருக்கச் செய்வது.

உண்மையான பக்தியே ஆச்சரியமான பெரிய வல்லபத்தைத் தருகிறது. ஓர் மானத பூசாரி அன்பு நிறைந்துள்ள பக்தியால் எவ்வித சடப்பொருளினுங்கூட தெய்வீகத்தை உண்டு பண்ண முடியும். அவ்வித பக்தி உயிர் வளர்க்கும் வலிமையுடையதாயிருக்கிறது. மானதபூஜையில் ஒப்பில்லாத கடவுளைக் குறித்து பக்தி செலுத்துவதே நாம் ஆனந்தமுடைய வராவதற்கு ஏது. நம்பிக்கை, அன்பு, பக்தி இவைகளின் வல்லபத்தினாலேயே இந்தக் குறிப்பை அல்லது நம் இருதயத்தில் ஆராதிக்கத்தக்க அந்த உவமையில்லாத பொருளைநாம் இலகுவாய்ப் பெறலாம். தர்க்க விசாரணையால் அது நிலைப்பதல்ல. நாம் அப்படிச் செய்யின் நம்மை அது இலகுவாய் நழுகுதல் அடையும்.

அன்புததும்பிய பக்தியே கடவுளின் காட்சியை நமக்குத் தருவது "ஊன்நாறும் உயிர் வாழ்க்கை, ஒறுத்து அன்று, வெறுத்திடவே" என்றபடி பல திறமாய் தேகத்தை வருத்திக்கொள்வதாலும், தெளிந்துள்ள மானத சக்தியாலும், யோக அப்பியாசங்களினாலுங்கூட அவரை அடையலாம் என்பது முடியாததாம். உண்மையுள்ள பரிசுத்தமான அன்பினாலும், நிட்காமியத்தாலும் (விருப்பமற்ற செய்கைகளினாலும்) கடவுளைக்குறித்த அன்பினாலு மாத்திரமே அப்பொருளைப் பெறலாம். கடவுளோ பராதீன மற்றவர். அவர் எந்த விதத்தாலும் கட்டுப்படமாட்டார். இருந்தாலும் "என்பக்தர்கட்கு நான் கட்டுப்படுகிறேன். அவர்கட்கு நான் ஒரு பக்தனாய் இருப்பதிலேயே என் பிரியம்" என்று அவர் கூறுகிறார். கடவுள் அன்புருவாயிருக்கிறார். அன்பு தானே கடவுளுருவாகிறது. இவ்விஷயத்தை அனுபவித்து அறிவோமென்றால் அது அதிக கஷ்டமாய்த் தோன்றுகிறது. ஆனால் வஞ்சக மில்லாத பரிசுத்த இருதயத்தில் அனுபவத்தால் அறியலாம். சொந்த பிரயோசனத்தை நினைக்கிற அற்ப ஆசையும் நம்மிடம் இருக்கக்கூடாது. அது எவ்வளவு காலம் நம்மிடமிருப்பினும் அவ்வளவு காலமும் நாமதனை அடையலாமென்று எதிர்பார்க்க முடியாது. அது தெய்வீகமும் தலைமையுமுடையது.

இவ்வித அன்பு எழும்போதே பிரபஞ்சபந்தத்திலிருந்து விடுபடலாம். இவ்வுலக பந்தத்திலிருந்து விடுபடுவது கஷ்டமாயிருக்கிறது; அதற்காக நாம் நமது நம்பிக்கையை விடாது முன்னினும் பலமாய் ஊன்றி நிற்கவேண்டும். நம் உள்ளக் குறிப்பிற்காக இப்பிரபஞ்சத்தை விட்டு விலகுவது நமக்கு எவ்வளவு கஷ்டமாயிருந்தாலும் நாம் மேலும் மேலும் அனுபவித்தறியத் தக்கது அது ஒன்று தான். இந்த அனுபவத்தைக் கண்டறியாத உள்ளம் ஓர் பாலை நிலம் போலவே பிரயோசன மற்றதாம். இது நம்முடைய ஆத்மா. இவ்வுலகத்தில் இவ்வொன்று மாத்திரமே நமக்கு உண்மையாயிருப்பது. தெளிந்த உண்மை பக்தியுடையார்க்கு இது கொஞ்சமும் கடினமல்ல. ஏனெனில் அப்படியான ஹிருதயம் அன்பே உருவமாகிறது. அது சுபாவ பக்தி விசேஷத்தால் தானே நம் உள்ளக் குறிப்பாகிய கடவுளிடம் பெருகியோடுகிறது.

நாம் அவரிடம் உறுதியான எண்ணம் வைக்கவேண்டும். அதன்பின் நம் சித்த சலனங்களிலிருந்து உண்மையில் விடுபடலாம். பல தீங்குகளிலிருந்தும் நம்மைக் காப்பாற்றி நம்மைச் சந்தோஷிப்பிக்கவே அவர் நினைக்கிறார். ஆதலின் நாம் எப்பொழுதும் நம் நோக்கங்களை அவர் மேலேயே வைக்கவேண்டும். கபடற்ற குழந்தைகளைப் போல் நாம் அவரை ஸ்தோத்தரிப்போம். நமக்கு வேறு எவ்வித லட்சியமும் வேண்டாம். நாம் தைரியக் குறைவாயாவது அன்பில் குறைவாயாவது எப்பொழுதும் இருக்கக்கூடாது. எப்போதும் நாம் சந்தோஷமாயிருப்போம். பின் அவர் கிருபையின் வழியே சாந்தியும் ஆனந்தமும் நம்மைக் களிப்பாறச் செய்யும்.

கமலத்தன்னை.

காற்றோட்டம்—VENTILATION

போன பாடத்தில் வாயு உஷ்ணமாகும்போது சூடுண்ட வாயு மேலே கிளம்புகிறதென்றும், சுற்றுப் புறங்களிலிருந்து குளிர்ந்த வாயு அவ்விடத்துக்கு வருகின்றதென்றும், உஷ்ணமாகும் காரணம் பற்றி வாயு இவ்விதமாய் இடம் பெயருகிறதென்றும் சொன்னோமல்லவா? நமது வீடுகளிலும் அறைகளிலும் வாயு ஸதா இடம்மாறிக் கொண்டேயிருக்கின்றது.

சமையல் அறையில் அடுப்பு எரியும்போது அடுப்பின்மேலே உள்ள காற்று உஷ்ணமாவதினால் கூரையை நோக்கி மேலே புறப்படுகின்றது. உடனே பக்கத்தில் உள்ள குளிர்ந்த காற்று அடுப்பின் பக்கத்தில் வந்து சேருகிறது. அடுப்புக்கு மேலே புகை போக்கியில்லா

விட்டால், உஷ்ணமான காற்று வெளியேபோக வழியில்லாமல், மறுபடி உள்ளேயே சூழ்ந்துகொள்ளுகிறது. அதனால் அறை முழுவதும் புகை நிரம்பி, நமக்கு அதிக தொந்தரவு ஏற்படுகிறது. சில நாளில் சுவர்கள் எல்லாம் புகை பிடித்துக் கருத்துப்போகும். சமையல் செய்யும் இடத்துக்கு மேலே ஒரு புகை போக்கி இருக்கும் பக்ஷத்தில் புகையுடன் உஷ்ணமான காற்று வெளி யேறியவுடன், தாராளமாய் சுத்தமான குளிர்ந்த காற்று உள்ளே நுழையும். சமையல் அறையும் புகை நிரம்பிக் கெட்டுப்போகாமல் சுத்தமாய் இருக்கும்.

தூங்கும் அறையிலும் அவ்விதமே. நாம் சுவாசிக்கும்போது வெளியே விடும் காற்று அறையில் உள்ள வாயுவைவிட சாதாரணமாய் உஷ்ணமாகவே யிருக்கின்றது. ஆகையால் அக்காற்று மூச்சு விட்டவுடன் மேலே போகவே பிரயத்தனப்படுகின்றது. அந்த உஷ்ண வாயு வெளியே போவதற்குத் தக்க ஏற்பாடு செய்திராவிட்டால், அது மறுபடியும் அறையிலேயே சூழ்ந்துகொள்ளும். அவ்வறையில் தூங்குவோர் மறுபடியும் பல தடவை அக்காற்றையே உட்கொண்டு இரவெல்லாம் கழிக்க வேண்டிவரும்.

நாம் மூச்சுவிடும்போது வெளியே அனுப்பும் காற்று சுத்தமான காற்று அல்லவென்றும், கரியமில வாயு கலந்திருப்பதனால் அதை உட்கொள்வது தேகத்துக்குக் கெடுதி யென்றும் சாஸ்திர பண்டிதர்கள் பல முறை வற்புறுத்திக் கூறுகின்றனர். ஆகையால் நாம் தூங்கும் அறைகளில் விஷக்காற்று வெளியே போவதற்காக, கூரைக்குப் பக்கத்தில் சிறு ஜன்னல்கள் இருக்கவேண்டும். சுத்தமான காற்றுத் தடையின்றி உள்ளே நுழைவதற்கு அறையின் பக்கங்களில் தக்க ஜன்னல்கள் இருக்கவேண்டும். இவ்விதமாய் ஜன்னல்கள் அமைத்திருப்பின், கரியமிலவாயு கலந்த உஷ்ணமான காற்று மேல் ஜன்னல்களின் வழியாய் வெளி யேறியவுடன், பக்கங்களிலிருந்து வரும் சுத்தமான காற்று அறையை நிரப்பிக்கொள்ளும்.

சில வீடுகளில் ஜன்னல்கள் இருந்தும், அவற்றை நன்றாய்ச் சாத்திவிட்டு, இரவில் குழந்தைகளுடன் பெரியோர்களும் ஒரே அறையில் தூங்குகிறார்கள். அதனால் அவ்வறையில் உள்ள வாயு முற்றிலும் கெட்டுப்போகிறது. காலையில் தூங்கி யெழுந்திருக்கும்போது அவர்கள் சுறு சுறுப்பாய் இருக்கவேமாட்டார்கள். தூக்கமும் அவர்களுக்கு தேக சௌக்கியத்தைக் கொடுப்பதில்லை.

நமது அறையில் நாம் இரண்டு மூன்று மணி நேரம் கதவுகளையும் ஜன்னல்களையும் நன்றாய்ச் சாத்திக்கொண்டு தூங்கிய பின்னர்

எழுந்திருந்து கதவைச் சற்று தூரம் (நான்கு விரல் அகலம்) திறந்துகொண்டு, ஒரு மெழுகு வர்த்தியைக் கொழுத்தி கதவின் மேல் புறத்தில் பிடித்துக்கொண்டால் உஷ்ணமான காற்று வெளியே போவதினால் மெழுகு வர்த்தியின் ஜுவாலையையும் வெளியே தள்ளிக்கொண்டு போவதைப் பார்க்கலாம். அதே தீபத்தைக் கதவின் கீழே பிடித்தால், குளிர்ந்த காற்று வெளியேயிருந்து உள்ளே வரும்போது ஜுவாலையை உட்புறம் தள்ளிக்கொண்டுவரும். இப்பரிக்ஷையால் தூங்கும் அறைகளில் வாயு எப்பொழுதும் இடம்விட்டு இடம் மாறுவதற்குப் பிரயத்தனம் செய்கின்றதென்பது தெளிவாய்த் தெரிகின்றதல்லவா?

இவ்வாறு, வெளிப்புறப்படும் உஷ்ணமான விஷக்காற்றை அப்புறப்படுத்தவும், சுத்தமான நல்லகாற்றை உள்ளே விடவும், ஏற்பாடு செய்வதற்குத்தான் Ventilation (வென்டிலேஷன்) என்பர் ஆங்கிலேயர். நாம் இதைத் காற்றோட்டம் என்று சொல்லுவோம்.

காற்றோட்டம் குறைவாய் இருக்கும் வீடுகளிலும் குடியிருப்பவர்களுக்குப் பலவிதமான நோய்கள் வருகின்றன. கல்கத்தாவில் பிளாக் ஹோல் (Black Hole) என்னும் ஒரு சிறு அறையில் பல ஜனங்கள் இரவு முழுவதும் அடைபட்டிருந்தபடியால் விடிவதற்குள் பலர் இறந்துபோனதாகக் கதை சொல்வதுண்டு.

நமது இரத்தத்தைச் சுத்திசெய்து தேகத்தை சௌக்கியமாய் வைத்துக்கொள்ள எவ்வளவு நல்லகாற்று வேண்டுமோ அவ்வளவு நல்லகாற்று, நாம் குடியிருக்குமிடத்தில் இல்லாவிட்டால் நமது சுவாசாசயம் கெட்டுப்போகிறது. புகை நிரம்பிய காற்றையும், தூசி நிரம்பிய காற்றையும் உட்கொண்டால் சுவசாசயத்தின் சிறு துவாரங்கள் அடைபடுகின்றன. ஆகையால் (Consumption) க்ஷயம் முதலிய தீராவியாதிகளுக்கு உள்ளாகிறோம் என்று சாஸ்திரபண்டிதர் கூறுகின்றனர். க்ஷயம் என்கிற கெட்ட வியாதி 20,30, வருஷங்களுக்கு முன் இருந்ததைவிட இப்பொழுது இந்தியாவில் அதிகமாய் இருக்கின்றதென்பதை வைத்திய சிரோன்மணிகள் ஒப்பு கொள்ளுகின்றனர். வங்காள தேசத்தில் ஸ்திரீகள் முன்னிலும் வெகு அதிகமாய் இவ்வியாதியால் கஷ்டப்படுகிறார்களாம். இதற்குக் காரணம், வேண்டிய அளவு நல்ல காற்றை உட்கொள்ளாத தோஷமே ஒழிய வேறில்லை. ஆகையால் நமது வீடுகளிலும் அறைகளிலும் காற்றோட்டம் சீராய் இருக்கும்படி தக்க வழிதேடிக் கொள்ளவேண்டும்.

பணம் ஏராளமாய்ச் செலவுசெய்து சாஸ்திரப்படி தக்க ஜன்னல்கள் அமைத்துப் பெரிய வீடுகளை நாம் கட்ட முடியாவிடினும்,

நமக்குக் கிடைத்திருக்கும் குடிசையிலும் கூட விஷக்காற்று வெளியே போகவும், நல்லகாற்று உள்ளேவரவும் தக்க ஏற்பாடுசெய்து கொள்ளலாம். நல்லகாற்று என்றால் 'நாம் சுவாஸம் விடுவதற்குத் தகுதியான காற்று' என்பதை நாம் மறந்துபோகக் கூடாது. அறைகளுக்கு ஓடிவரும் காற்று, தாழ்வாரம், கூடம், திண்ணை, இவ்விடங்களிலிருந்து வருவதால் நமது வீடுகளின் எல்லாப் பாகங்களும், சுற்றுப் புறங்களும் சுத்தமாய் இருத்தல் வேண்டும். உதாரணமாக நமது அறையின் ஜன்னல் வீதிப்புறம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அந்த வீட்டின் திண்ணையின் கீழே எப்பொழுதும் ஜலதாரைகளிலிருந்துவரும் அழுக்கு ஜலம் தேங்கி நாறிக் கொண்டிருப்பதனால், அவ்விடத்திலிருந்து நமது அறையில் நுழையும் காற்றும் கெட்டகாற்றாய் இருக்குமல்லவா? இத்தனை கெட்ட காற்றை சுவாசிப்பதைவிட ஜன்னலை மூடிவிடுவதே உத்தமம். அல்லது நமது தாழ்வாரத்தில் எருமைகளையும் மாடுகளையும் கட்டிக் கொண்டிருந்தால், அவை இரவெல்லாம் சாணிபோட்டு, நீர் பெய்வதினால் அத்தாழ்வாரத்திலிருந்துவரும் காற்றும் கெட்ட காற்றாகவேதான் இருக்கும். இவையன்றிக் காற்றோட்டத்தினால் நமக்கு தேக சௌக்கியம் உண்டாக வேண்டுமானால் நமது வீடுகளும், வீட்டின் புறங்களும், வீதிகளும் சுத்தமாய் இருக்கவேண்டும்.

நமது வீடுகளிலும் அறைகளிலும் வாயுசுத்தமாய் இருக்கின்றதா வென்று அறிந்து கொள்வதற்கு அவ்விடங்களில் கொஞ்சமேனும் துர்வாசனை இல்லாமல் இருக்கின்றதா என்று பரிக்ஷை செய்யவேண்டும் - என்கின்றார் ஒரு சாஸ்திர பண்டிதர். நாற்றம் வீடுகளில் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாய் இருக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு அந்த வீட்டில் காற்று அசுத்தமாய், இருக்கின்றதென்று தீர்மானிக்கவேண்டும். நாற்றத்தை கொஞ்சம் நுகர்ந்தவுடன் வீட்டுக்கதவுகளையும் ஜன்னல்களையும் நன்றாய்த் திறந்துவிட்டு வெளிச்சமும் காற்றும் ஏராளமாய் அறையில் புகும்படி செய்யவேண்டும். சூரியவெளிச்சம் பட்டமாத்திரத்திலேயே வியாதிகளை உண்டாக்கும் பல கிருமிகள் இறந்து விடுகின்றன.

ஆர். கே. சுவாமி பி.ஏ. எல். டி.,

மாதவி-அல்லது உயர்குணமாது.

நெய்தல் நிலச் செழிப்பும் தன்னிடமுள்ள உப்பங்கழி வழியாய் பல நில வளப்பங்களைத் தருவிக்கும் பெருமையும் லங்கா நகருக்கு ஏற்றுமதி செய்து செல்வம் திரட்டுவதுமான வேதாரண்யம் என்னும்

ஊரில் பல நாள்கள் முன்னர் குலதுங்கன்என்னும் ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவன் குடிகள் ஒழுக்கமும் உயர்குணமுமுள்ளவர்கள்.

வேதாரண்யத்தை அடுத்து பல காடுகளிருந்தன. அதில் மிருக வகைகளும் பட்சி பேதங்களும் நிறைந்திருந்தன. ஆதலால் அவ்வூர் வாசிகளன்றி பிறநாட்டினரும் அங்கு வந்தால் காட்டைக்காண விரும்புவார்கள். அதனைக் காணச் செல்வோர் மிருகங்களால் தொந்திரவடையாமலும் பட்சிகள் முதலியவைகட்கும் மனிதர்களால் துன்பமில்லாதபடிக்கும் சனங்கள் அங்கு சென்று உன்மத்தமாய் கண்டு களித்து வரும்படி பல யேற்பாடுகள் அரசன் செய்திருந்தான்.

அரசன் தன் பரிபாலனத்திற்குட்பட்டவர்களிடம் கருணையும், கடவுளிடத்து பக்தியும், துறவிகளிடத்து அன்பும்கொண்டவன். அவனுக்கு இளமைப் பருவத்துப் பிறந்த சந்திராம்பாள் என்ற பெண்ணும், மத்திமவயதில் தோன்றிய சுசீலன் என்ற ஓர் குமாரனுமிருந்தார்கள். சுசீலன் பிறந்த சில வருடங்களில் சந்திராம்பாள் பருவமடைந்தமையால் இராமேஸ்வரத்தை ஆண்டு வந்த செல்வராயனின் வாழ்க்கைத் துணைவியாயனுப்பப்பட்டாள்.

சுசீலனுக்கு பதினாறு பிராயம் நடந்ததும் அவன் தாய் தந்தையர் உலக போகத்தை தன் புத்திரனுக்காக விட்டுச் செல்பவர்போல் பரலோக சுகத்தைக் கைக்கொள்ளச் சென்றனர்.

அரசு சுசீலன் தலைமைக்குட்பட்டது. இவனும் தன் தந்தையிலும் மிக்கானாய் குடிகள் பலருங்கொண்டாட நல்லரசு நடத்திவந்தான். அவன் தன் குடிகள் திருப்தியடையக்கூடிய விஷயங்களை முன் யோசனையாய் ஆலோசித்துச் செய்வான். ஆதலின் குடிகளும் தங்கள் பால்ய அரசனை மிக்க விசுவாசித்து வந்தார்கள்.

சுசீலன் தன்னோய்வு நேரங்களில் காடுகளிலும் நந்தவனங்களிலும் பட்சி மிருகங்களின் இயற்கைகளைக் கண்டு களிப்பதிலும் பூஞ்செடிகளின் சுபாவங்களைப் பார்ப்பதிலும் இதர பிராணிகளின் சந்தோஷத்தைக் கண்டு தான் ஆனந்தமடைவதிலும், மனவாறுதலாய் கடத்திவந்தான்.

நம்பாலிய அரசனுக்கு இருபத்தொரு வயது கடந்ததும் குடிகள் ஓர் நாள் ஊர்பொது மண்டபத்தில் கூடிப்பேசியபின் பல தனிகர்கள் ஒன்று சேர்ந்து காணவந்தனர்கள்.

அரசன் குடிகளின் வருகையை யறிந்து நன்கு உபசரித்து அவரவர்க்கேற்ற தானத்திலிருத்தி "ஐயன்மீர் நீங்கள் யேதோ காரணம் பற்றி எமக்கு முன்னறிவிப்பின்றி இங்கு கூடினீர்கள். உங்கள் கருத்தை வெளியிடின் நான் அதன்படி நடக்க முயலுவேன்" என்றான்.

குடிகள் "எங்கள் அரசசெல்வமே! தங்கள் தந்தை காலத்திலும் நாங்கள் உயர்வும் பெருமையும் அடைய பல ஏற்பாடுகள் செய்திருக்கிறீர்கள். எங்கள் சுகத்தில் உங்கள் கருத்துசென்றுகொண்டிருக்கிறது. நீங்கள் எங்களை நடத்தும் கருணைக்கு நாங்கள் உங்கள் க்ஷேமத்தைக்கோரி விசுவாசிப்பதன்றி நாங்கள் செய்யத் தகுவது என்ன இருக்கிறது? நாங்கள் தங்களைப் பிரார்த்திப்பது தங்கள் இளமைப் பிராயத்தை இல்லற தர்மத்தில் செலவழித்து எங்கள் அரசபாரம் ப்ரியமும் தங்கள் உயர்குலமும் நீடூழிவாழும்படி கருத்துக்கொள்ளவேண்டுமென்று தங்களைப் பிரார்த்திப்பதே எங்கள் வேண்டுகோளாய் இங்கு வந்தோம்" என்றார்கள்.

அரசன் அவர்கட்கு உடனே பதிலளியாது சில நிமிஷங்கள் மவுனமாய்த்தலை கவிந்து, பின் சபையைப் பார்த்து, "ஐயன்மீர்–அரசாங்க முறைக்கும் இல்லற இயல்பிற்கும் ஒவ்வ நீங்கள் கூறுகிறபடி நானோர் பெண்ணை வதுவை செய்துகொள்ளவேண்டிய தவசியமே. ஆயினும், உயர்குலமும் நல்லழகும் பெண்கட்குப்போதியதாய்க்கருதும் இவ்வுலகயியல்பிற்கு உயர்குணமும் நல்ல நடையும் வேண்டுமெனக்கருதும் என் இயற்கைமாருகத் தோன்றுகிறது. அதனைப்பற்றி என்னுள்ளத் தோற்றத்தை உங்கட்குச் சொல்லுவேன்.

அநித்தியமான இவ்வுலக வாழ்க்கையில் எம் வாழ்நாள் மிகு சொற்பம். அதில் நானனுபவிக்கயிருக்கும் அற்ப இன்பமும் துன்பமாய் முடியின் எனக்கும் இந்நாட்டிற்கும் என் பெரியோர் கியாதிக்கும் ஓர் இழுக்காய் முடியலாம். அன்றியும் மனமாற தான் விரும்பாத ஓர் பெண்ணை தன் பெருமைக்காகவும் பிறர் விருப்பத்திற்காகவும் கலியாணம் செய்து கொள்வதிலும் கொடுமையான துன்பம் வேறில்லை. ஆதலின் இவ்விஷயத்தில் என் சமாதானம் யேற்படாது போவதிலும் வதுவையின்றியே காலம் செல்வது எனக்கு சந்தோஷத்தைத் தருவதாகும். நீங்களும் என்னை வற்புறுத்தாதிருக்க வேண்டுகிறேன்" என்றான்.

அரசன் உள்ளக்கருத்தை யூகித்துணர்ந்த அங்குகூடியிருந்த குடிகளில் அறிவின் முதியோரொருவர், எழுந்து "எங்களரசே! உங்கள் கருத்திற்கு நாங்கள் மாறுபடோம். தாங்கள் கருதும் பெண் எக்குலத்தினளாயினும் ஏழமையுடையவளாயினும், அவளை எங்கள் நாட்டுப் பேரரசியாக ஒப்புக்கொள்வோம். அதற்காக எங்களிடம் சந்தேகம் கொள்ளவேண்டாம். நீங்கள் குறிப்பிடின் நாங்கள் பேசிமுடிக்கிறோம்" என்றார். மற்றவரும் ஆம் என்ற தொனியுடன் எழுந்து நின்றனர்.

அரசன் குடிகளின் பக்தியையும் உள்ள கிளர்ச்சியையும் கண்டு மனமுருகி "ஐயன்மீர், நீங்கள் கொண்டிருக்கும் அன்பிற்கு அளவு எல்லையற்றதாய் காண்கிறேன். நானும் உங்கட்கு நடந்துகொள்ள வேண்டிய நல்லறிவை கடவுள் எனக்குத் தருவாரென்று நம்புகிறேன். இதுநிற்க, உங்கள் உள்ளம் ஒருமைப்பட்டு என்றும் மாறுதலடையாதிருக்கும் நம்பிக்கையுங்கட்கிருக்குமானால் இப்போதே நான் உங்களுடன் வந்து அப்பெண்ணை உங்கட்குக் காட்டுவேன்" என்றான். குடிகளும சந்தோஷமாய் ஒப்புக் கொண்டார்கள். அரசனும் குடிகளில் பிரமுகர்களும் தங்கள் தங்கள் ஊர்திகளில் செல்லும் அழகை பலரும் கூடி இருபாலாரும் நின்று பார்த்த வண்ணமாயிருந்தார்கள். காட்டையடுத்து சென்றுகொண்டிருக்கும் அங்கு ஓர் தடாகத்தில் நீர்மொண்டு நீர்குடம் தலையில் நிறுத்தியவண்ணமாய் மாதவியென்ற ஓர் ஏழைக் குடியானவன் பெண்ணும் அரசனூர்தி தன் குடிசைக்கு முன்போய்க்கொண்டிருந்ததால் தானும் காண்பாரில் ஒருத்தியாய் நின்று பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனால் அரசன் சடுதியில் தன் வாகனத்தை அவ்விடத்தே நிறுத்தி இறங்குவதையும் அவனிறங்குவதைக் கண்டகுடிகளும் இறங்குவதைப் பார்த்து மாதவிதான் கூட்டமத்தியில் மெதுவாய்ப்புகுந்து சென்று தன் குடிசையில் நீர்குடம் இறக்கி கதவின் மறைவில் நின்று பார்த்திருந்தாள்.

அரசன் அக்குடிசையிலேயே புகுவதைக்கண்ட மாதவி கொல்லையில் பயிர் வேலை செய்துகொண்டிருந்த தன் தந்தையிடம் போய் அறிவிக்க, அவனும் பரபரப்பாய் ஓடி வந்து, அரசரும் குடிகளும் தன் குடிசையிலும் புறத்தும் நிறைந்திருப்பதைக்கண்டு, அரசன் காலில் விழுந்து எழுந்து, ஐயனே! யென்று நாத்தழுதழுப்ப இவ்வேழைக் குடிசைக்கு தாங்களும் பிரபுக்களும் வருவதற்கு என்ன பாக்கியம் செய்திருந்தேன் என்றான்.

அரசன் மலர்ந்த முகத்துடன் அவனைப் பலவிதமாய் வேண்டி உட்காரச் செய்து "மாதவரே! உம்மை வேண்டி ஓர் காரியமாய் வந்தேன். அதைப்பற்றி உமக்கு பரிந்து பேசி எனக்கு அக்காரியத்தை முடிக்கும்படியே இப்பிரபுக்களும் என்னோடு வந்தார்கள்" என்றான்.

மாதவன் ஒன்றும் அறியாதவனாய் மயங்கி "அரச பாக்கியமே! யாரும் உபயோகமாய் மதியாத இவ்வேழையைக்கொண்டு ராஜாங்கத்திற்கே ஓர் காரியமாவதானால் அதுவே என் பாக்கியம். என் உடல் பொருள் ஆவி மூன்றும் அரசாகிய தங்கட்குரியதுதானே. தாங்கள் இடும் உத்திரவை மாத்திரமே யெதிர் பார்க்கிறேன்" என்றான்.

அரசன் மாதவனைக் கருணையோடு பார்த்து "மாதவரே! இவ்வரசை நான் நடத்துவதற்கு ஓர் அரசி தேவையல்லவா? அக்காரியத்தை உமது புதல்வியைக்கொண்டு பூர்த்தி செய்யவேண்டுமென்பதை உம்மைக் கேட்டு முடிவு செய்தற்காகவே நானும் இங்கு வந்தது. அதனை இங்கு வந்திருக்கும் பிரபுக்களுடன் கலந்து நீர் முடிவு செய்ய வேண்டுகிறேன்" என்றான்.

மாதவன் அரசன் காலில் விழுந்து எழுந்து நடுங்கி நின்று "ஐயனே! நான் காதில் கேட்டது உண்மையாகுமா? சிறுவயது முதல் தாயை யிழந்து ஆதரிப்பாரின்றி யிருக்கும் எனக்கு உபசரித்து என் பசுக்களை மேய்த்து இக்காட்டில் போது போக்கிவரும் என் சிறுமிக்கும் எனக்கும் இவ்வார்த்தை தகுமா? எங்களை நீங்கள் சோதிக்க எண்ணினால் நாங்கள் உங்கள் அடிமைகள் என் செயற்பாலது" என்று கண்ணீர் ததும்ப நின்றான்.

உலகத்தில் தன்னொத்த அரச குமாரிகளிருக்க உத்தரவுப்படி காத்திருக்கும் பிரபு புத்திரிகளிருக்க அரசன் கருத்தைக் கண்டு குடிகள் வியந்திருந்தாரெனினும் தங்கள் அரசன் உயர்குணமுடையனென்று நன்றாயறிந்திருந்த உத்தம குடிகளாதலின் தங்கள் எண்ணங்களை யெல்லாம் அப்புறப்படுத்தி மாதவனை "நோக்கி மாதவரே! ஆம்? நம்மரசர் கருத்திற்கு நீர் பாக்கியம் செய்தது போல் எங்கட்கில்லையானாலும் நீர் அரசர் விருப்பத்தையும் எங்கள் கருத்தையும் முடித்தே வைக்கவேண்டும்" என்றார்கள்.

இதுவரை சந்தேகத்தில் போராடித் தத்தளித்த மாதவன் அரசன் வார்த்தைகள் உண்மையென்பதை யறிந்து—சபையோரை நோக்கி "அரசே ஐயன்மீர்! தங்கள் கருத்தை நானென்றும் மறுக்கவல்லவனல்லேன். உங்கள் மனம்போல் ஆகுக. ஆயினும் என் குழந்தை மாடு மேய்த்துத் திரிந்து எனக்குண்டி சமைக்க மாத்திரமே அறிந்திருக்கிறாள். அப்பெருங் காரியங்களை அவள் தலையில் சுமத்துகதால் தவறுவரின் அவளை மன்னித்துக் காக்கும்படி வேண்டுகிறேன்" என்று கண்ணீர் ததும்பப்பேசி. சபையில் வணங்கி ஓர் புறம் அமர்ந்திருந்தான்.

பின்பு அரசன் மாதவியிருந்த கதவின் பக்கம் நோக்கி 'மாதவி! உன் கருத்து எங்கள் கருத்திற்கிசைவதாமா?" என்றான். இதுவரையும் கதவின் புறம்பே நின்று நடந்தனவெல்லாம் கேட்டு தனக்கு நிகழப்போவனவெல்லாம் இன்பமென எள்ளளவும் நினையாது தன்னிலைமைக்கு மேற்போதல் துன்பமேயென கண்ணீர் ததும்பி நின்ற

மாதவி அரசன் விளித்தமையால் திடுக்கிட்டுத் தெளிந்து கண்களை பரபரப்பாய்த் துடைத்து வெளியேவந்து அரசனையும் சபையோரையும் தந்தையையும் "வணங்கி எங்கள் தெய்வமே! தாங்கள் விரும்ப' தந்தையாரிணங்க, ஊரார் சம்மதிக்க, நான் நடக்கவேண்டியவளே. தங்கள் மனம் ஆண்டுகொள்ளுங்கள்" என்று அரசனை வணங்கி அப்புறம் ஒதுங்கினள்.

பின்பு அரசன் மாதவியை அவள் தந்தையினின்றும் விடைபெற்று பிரித்து மற்றவருடன் அரண்மனை சென்று அங்கோர் சுபதினத்தில் மாதவியை மனைவியாக்கிக் கொண்டான்.

அரசன் விவாகம் முடிந்தவுடன் மாதவிதான் மற்றவர்களில் ஒருத்தியே! தனக்கென விசேஷித்த கவுரவம் ஒன்றுமில்லையென்றும் அப்படியிருப்பது பிறர் சௌகரியத்திற்கும் உபயோகத்திற்குமே ஒப்புவிக்கப்பட்டிருப்பதாய்க் கருதுவாள். அரசை விரும்பி வருவோரிடத்தில் பட்சமாயிருப்பாள். வேலைக்காரர்களை அன்பாய் நடத்துவாள். ஏழைகளிடத்தில் இரக்கங்காட்டி இதமொழி கூறுவாள். அவர்கள் குறைகளை நிவர்த்திக்க வழி தேடுவாள். அரசன் தன்னைக் கேட்கும் விஷயங்கட்கும் அன்பாயும் பணிவாயும் மறுமொழி பகர்வாள். அரசனிடம் கூறுவதிலும் குடிகள் தன்னிடம் சொல்லிக் கொள்வதில் சாவகாசமும் சௌகரியமுமிருப்பதால் அடிக்கடி தன்னைத் தேடிவருவதைதான் அலுப்புக் காட்டாமல் அவர்கள் மொழிகளை அமர்ந்து கேட்டு சமையம் நேர்ந்தபோது ஞாபகமாய் அரசர்க்கு இதமொழியுடன் புகட்டி அவர்கள் குறைகளை நீக்குவாள்.

அவள் காலத்தில் அநேக குளங்கள், கிணறுகள், சத்திரங்கள், சாலைகள், வியாபாரவிருத்தி முதலிய சௌகரியங்கள் யேற்பட்டு ஜனங்கள் அரசனையும் மாதவியையும் ஓயாதுபுகழ ஆரம்பித்தார்கள். குழந்தைகள் மாதவி மேல் கீதங்கள் பாடுவார்கள். பொதுவாய்ச் சொல்லுமிடத்து பலரும் பல பாடுபட்டுத்தேடும் உயர் குணங்கள் யாவும் அவளை வலிய அடைந்தன. அவள் அந்நாட்டினர்க்கு குலதேவதையாய் விளங்கினாள்.

இவ்வாறு மூன்றாண்டுகள் சென்றதும் மாதவி கருவுற்று ஊரார் கொண்டாடப், பெரியோர் ஆசீர்வதிக்க, அரசன் மகிழ, நல்ல லக்கினத்தில் ஒரு பெண்மகவை யுயிர்த்தாள். அரசன், ஜனங்கள் பெரியோர் முதலியவர்கட்கு வேண்டிய நன்கொடை யளித்தான்.

அக்குழந்தைக்குப் பிராயம் ஒன்று நடந்த நாளில் ஓர் நாள் அரசன் மாதவியைநோக்கி மாதவி ஜனங்கள் உன்னை உயர் குலத்தவ

ளல்லவென்றும் உன் வயிற்றிற் பிறந்த சிசுதாங்கள் மதிக்கத் தகுந்ததல்ல வென்றும் பேசுகிறார்கள். இதற்கென்ன செய்யலாமென்றான்.

மன்னவன் மனப்போக்கின்படி போய் அவனைத் திருப்தி செய்யும் உத்தமகுணமுள்ள மாதவி, சுவாமி தங்கட்கு இழுக்குவருமாயின் அது எனக்கும் உரியதே. தாங்கள் மனம் கவலையற்றிருப்பதே எனக்குச் சமாதானம். குடிகளை சமாதானம் செய்ய தாங்கள் என்னையும் என் குழந்தையையும் எப்படி வேண்டுமானாலும் செய்ய உத்திரவிடுங்கள் என்று முகமலர்ச்சியாய் பேசினாள். அரசன் அவ்வார்த்தையைக் கேட்டதும் மவுனமாய் எழுந்து சென்றான்.

பின்னும் சில நாழிகையில் ஓர் பணியாளன் மாதவியிடம் வந்து அவளை வணங்கி அரசர் தங்கள் குழந்தையை வாங்கிப்போகச் சொன்னார்கள் என்றான். மாதவி எங்கு என்று நான் கேட்கலாமா? என்றாள். அதற்குப்பணியாளன் அம்மணி அக்குழந்தையைக் காட்டில் கொண்டுபோய் வெட்டி—என்று மவுனமாயிருந்தான்.

மாதவி மனம் நடுங்கி உடல்பதறி ஒன்றும் அறியாளாய் தன் பக்கத்தில் வஞ்சனையற்று களங்கமற்ற அழகிய முகாரவிந்தம் துலங்க நல்ல நித்திரை செய்துகொண்டிருந்த தன்னருமைப் புதல்வி நல்ல சகலாத்தொன்றை போர்த்தியிருந்தபடி அப்பா கேசவா! குழந்தை நித்திரை கலையாது கொண்டுபோ, விழித்தால் உன்னையும் உன் பக்கத்தில் தொங்குகிற:—(என்று விரலால் சுட்டிக்காட்டி) கண்டால் பயப்படலாம். அன்றியும் அப்பனே இக்குழநதையை அரசன் சொற்படி நடத்துவதில் தவறமாட்டாய் என்பதை நானறிவேன். ஆயினும், இதனை என் குழந்தையென்று நினையாமல் உங்களரசகுமாரி என்பதை மனதில் வைத்து இதன் உடலை மிருகங்கள் முதலிய சேதியா வண்ணம் பதனமாய் ஓர் குழியில்—என்று கூறும்போது நெஞ்சடைத்துப் பேச நாவெழாதவளாய் முத்துப்போல் புலபுல வென்று கண்ணீர்கொட்ட அப்பால் திரும்பிச் சென்றனள்.

நெடுநாழிகை குப்புறக்கவிந்தபடி அழுதாள். இவ்வளவு நாழிகை துக்கித்தோமென்பது அறியாது தன் குழந்தைக்குத், "தன்னருமைச் செல்விக்கு ஓர் முத்தம் தந்தனுப்ப மறந்தமைக்குத் தன்னை நொந்தவளாய் கேசவனிருந்த விடத்தை ஓடிவந்து பார்த்தனள். ஆனால் கேசவன் நெடுநாழிகை முன்னமே குழந்தையுடன் அகன்றுபோனான்.

பின்னிரண்டு வருடங்கள் தன் உத்தம குணத்தால் மாதவி தனக்கு நேர்ந்த துன்பத்தை தன் கணவர்க்காக மறந்து வாழ்ந்துவந்தாள் என்று சொல்லவேண்டியதே. பின்னும் கருவுற்றாள். தான் கருப்

பந்தாங்கிய துணர்ந்த மாதவி தான் கொண்ட மனோ துன்பத்தை பிறர் அறியர்வண்ணமாய் பர தேவதையை நினைத்து அவட்குத் தன்னெண்ணங்களைக் காட்டிப் பிரார்த்திப்பாள். ஆயினும் என் "ஊழ்வினை பையநுழைந்திடும்" என்றபடி நல்ல சுபவேளையில் ஓர் ஆண் மகவைப் பெற்றாள். அரசனும் மகிழ்ச்சிகொண்டாடி முன்னினும் அதிகமாய் தான தருமங்கள் செய்வித்தான்.

அக்குழந்தை சந்தோஷிப்பதையும் தன்னிடம் அன்புபாராட்டித் தாவுவதையுங் கண்டு மார்போடணைத்து மாறிமாறி முத்தமிட்டுக் கொஞ்சுவாள். பின் அக்குழந்தையைக் கிடத்தி அதன் செந்தாமரை மலர் போலும் முகத்தைப் பார்த்தபடியே விம்மி விம்மி அழுவாள். பின்னெடுத்து அணைப்பாள்; தன்னைத்தானே தேறுதல் செய்துகொள்வாள்.

மாதவிக்குத் துன்பத்தின் மேல் துன்பமும் அடிமேலடியும் வருவதுபோல் அக்குழந்தைக்கு ஓர் ஆண்டு நடந்தது. ஓர்நாள் மாதவி தன் செல்வக்குமாரனின் வருட வளர்ச்சியையும் அதனால் விளங்கும் அழகையுங்கண்டு அதனைசீராட்டி நித்திரைசெய்வித்தாள். அப்போது கேசவன் முன்போல் தன் உடைவாள் பக்கத்தில் தொங்க அவள் முன்வந்து வணங்கினன். தன் பகைவரெனினும் மலர்ந்த முகமன்றி வேறில்லா மாதவி வயிறு எரிய மனந்துடித்தாளெனினும் தான் சந்தேகித்திருந்த வண்ணமே நேர்ந்ததைக்கண்டு "வினையுடையான் வந்தடைந்து வெய்துறும் போதும் மனன் அஞ்சானாகலினிது" என்றபடி மனதைத்திடப்படுத்தி அப்பனை என்னவேனும் விசேஷமுண்டோ வென்றனள்.

அவனும் மிக்கப்பணிவுடன் தங்கள் குழந்தையைக் வாங்கிக் கொண்டு போகும்படி உத்திரவு; ஆதலின் அதனை தங்களுக்கறிவிக்க வந்தேனென்றான்.

மாதவி மற்றொன்றுஞ் சொல்லாளாய் தன் குழந்தை நித்திரை கலையாதெடுத்து மார்போடணைத்து முத்தமிட்டு குழந்தை விழித்துக் கொள்ளாமையால் ஆறுதலடைந்து அதனை அவன் கையில்தந்து அப்பனே இது உங்களரசர் குமாரன் என்பதை மறவாதே யெனச் சொல்லித்தான் அப்பால் போயினள்.

பின் ஓர் வருடங்கிருமித்து மாதவி மற்றோர் ஆண்மகவைப் பெற்று ஓர் வருடம் ஆற்றொணாத் துயரத்துடன் போற்றி முன் குழந்தைகளைப் போலக் கேசவன் கைத்தந் தொழிந்தாள்.

இத் துன்பங்களுக்குக் குட்பட்ட மாதவிக்கு மறுபடியும் நான்கு வருடங்கள் கழிந்ததும் ஓர் நாள் அரசன் மாதவியை நோக்கி மாதவி

சனங்கள் உன்னை வரவர சாஸ்தியாய் வெறுக்கிறார்கள். என் போன்ற அரச குடும்பத்தில் கல்யாணம் செய்து கொள்ளக் கட்டாயப்படுத்துவார்கள் போலிருக்கிறது. அவர்கள் அபிப்பிராயப்படி வேறுபெண் கேட்டால் சம்பந்தம் செய்து கொள்ள நினைப்பவர்கள் உன் போன்ற கேவலப் பெண்ணிருக்கிற விடத்தில்சமமாய் வாழ எப்படிப் பெண் கேட்டனுப்பலா மென ராஜ்யத்தின்பேரில் சண்டை தொடுப்பார்கள் போலிருக்கிறது. குடிகளும் அதிர்ப்தியாயிருக்கும் இச்சமையத்தில் சண்டை நேர்ந்தால் துன்பமல்லவா என்றான்.

மாதவி அரசனை நமஸ்கரித்தெழுந்து சுவாமி தங்கள் க்ஷேமமே என் சுகம். அன்றியும் என் தந்தை விருத்தாப்பியகாலத்தில் உபசரிப்பாரின்றி வருந்துகிறார். நான் தங்கள் சுகத்திற்காக என் மனோ தேவதையைப் பிரார்த்தித்து வருவேன் அவர்க்கு என் கடமைகளைச் செய்து முடிக்க உத்திரவு தரப்பிரார்த்திக்கிறேன். உங்கள் சௌக்கியத்தைக் கேட்டு என் மனம் ஆறுதலடையும் என்று சொல்லிக்கொண்டே தன்மீதணிந்திருந்த ஆபரணங்களைக் கழற்றி பக்கத்திலிருந்த பெட்டியில் வைத்துப் பின் அரசனை நோக்கி என் கணவரே நான் வரும்போது கொண்டு வந்தது ஓர் புடவையே. இப்போதும் அப்புடவை ஒன்றே நான் கொண்டுபோகிறேன். எனக்கு உத்திரவு தரவேண்டுமென்று அரசன் பாதத்தைத் தொட்டு வணங்கி அதில் தன் கண் துளிகளில் சிலதைச் சிதறவிட்டு அவனைப் பார்த்தவண்ணமே அப்பால் சென்று அரண்மனை வாயில் கடந்து பாதசாரியாய் பதினைந்து வருடங்கள் தன் கணவனைப் பிரியாமாதவி தன் தந்தையின் குடிசைக்கு இளமைப் பிராயத்தை நினைத்தவளாய் வந்து சேர்ந்தாள்.

மாதவனும் தன் மகள் மனம் செழுமையற்றிருப்பதை யுணர்ந்து அவள் மனம் நோகச்செய்ய அஞ்சி அவளை ஒன்றுங் கேளாது அவள் முன் போல் மாடு மேய்ப்பதையும் தனக்கு அன்பாய் பணிசெய்வதையுங்கண்டு மனந்தாளாது நொந்திருந்தான். கமலத்தன்னை.

ராஜபக்தி.

73-வது பக்கத் தொடர்ச்சி.

"அடுத்த வீட்டில் இருக்கிறார் தாயே" என, காந்திமதி தானே புறப்பட்டுப்போக வேண்டுமென்ற எண்ணத்துடன் எழுந்திருந்தாள். கை, கால்களுக்கு இன்னும் பலம் வராமையால் எழுந்தவள் நிற்க முடியாமல் 'பொத்' என்று படுக்கையில் விழுந்தாள். இருவரும்

161434

ஆதரவுடன் தாங்கிக்கொண்டனர். "பாரிஜாதா! என்னால் நடக்க முடியவில்லையே! என் தகப்பனாரை அழைத்து வருகிறாயா, தயவு செய்து, இவ்விடத்திற்கு?" என்று சொல்ல, "இதோ போகிறேன்" என்று பாரிஜாதன் புறப்பட எதுகுலனும் பின் தொடர்ந்தான். எதுகுலன் வருவதைக்கண்ட பாரிஜாதன் "சற்று இங்கு நில்லும் ஐயா குழந்தைக்குத் துணையாய், நான் போய் எஜமானரை அழைத்து வரும் வரையில்" என்று கேட்டுக்கொள்ள, எதுகுலன் வாசற்படிக்கு வெளியே வந்து நின்றுகொண்டிருக்க, பாரிஜாதன் எஜமானனிடம் சென்றான்.

மூர்ச்சை தெளிந்து பெரு மூச்சுவிட்டுக்கொண்டு கீழே படுத்துப் புரண்டுகொண்டிருக்கும் ஹேமநாதரிடம் நெருங்கி "சுவாமி நெருப் பெல்லாம் அவிந்துபோய்விட்டது" என்றான். "அது எப்படி போனாலும் போகட்டும், எனக்கு விசாரமில்லை. என் குழந்தைக்கு என்ன செய்வேன் !!" என்று பலமாய் அழத்தொடங்கினார்.

"ஐயா உமது குழந்தை சௌக்கியமாய்ப் பிழைத்திருக்கிறாள்; நீர் அழவேண்டாம்" என, அவர் 'சுருட்டி மடக்கி' எழுந்து "அப்படியா? ஆ! அப்படியா? க்ஷேமமா? எங்கே! எங்கே! எங்கே!" என்று பித்தன்போல் நாற்புறமும் ஓடத் தலைப்பட்டார். உடனே பாரிஜாதன் அவர் கையைப் பிடித்துக்கொண்டு "எனது குடிசையில் இருக்கிறாள். போவோம் வாருங்கள்" என்று அழைத்துப்போனான். குடிசை வாசற்படியண்டை போனவுடனேயே ஹேமநாதர் பாரிஜாதன் கையைப் பிடுங்கிக்கொண்டு வழியில் நிற்கும் எதுகுலதிலகனையும் கவனியாது, ஓரே ஓட்டமாய் ஓடித் தன் குழந்தையை எடுத்துக் கட்டிக்கொண்டு முத்தமிட்டார்.

பாரிஜாதன் வெளியே எதுகுலனிடத்தில் நின்றுகொண்டு, மறுபடி ஒருமுறை எவ்விதம் அவன் காந்திமதியை எடுத்து வந்தான் என்பதை ஆதியோடந்தமாய்க் கேட்டான். கதை யெல்லாம் சொல்லி முடிந்ததும் பாரிஜாதன் "ஐயா உண்மையாகவே உம்மிடத்தில் என் எஜமானின் எவ்வளவு நன்றி பாராட்டவேண்டும்?—பாராட்டுவார் என்பதற்குச் சந்தேகமில்லை!! என்ன தைரியம்! என்ன காருண்யம் !! ஐயா உமக்கு !!!" என்று புகழ்ந்தான்.

"அக்காரணத்துக்காகவே என் குதிரைக்கு இப்பொழுதே ஜேணம் போடுவாய்; நான் உடனேயே ஊருக்குத் திரும்பிப்போகிறேன். நான் சொல்வதை அர்த்தம் பண்ணிக்கொண்டாயா? என் வீட்டையும் அவருக்குக் காட்டாதே !!"

Y15m211, M99M0
M99.15-18

“அவர் கேட்டால் எப்படி மாட்டேன் என்கிறது, எனக்குச் சொல்லுமையா?—அவர் கேட்டு வற்புறுத்தினால்—”

“என்னவானாலும் சரி சொல்லவே கூடாது. தனது நன்றியைக் காண்பிக்க எனக்கு வனத்தில் ஏதாவது உத்தியோகம் கொடுக்கிறேன் என்பார்—எனக்கோ ராஜத்துரோஹிகளிடத்தில் உத்தியோகம் பெற இஷ்டமில்லை. காட்டில் வேட்டையாடவேண்டுமானால், அங்கிருப்பதெல்லாம் அரசனுடையது—அவருடைய கக்ஷியில் சேர்ந்த எனக்கும் அவைகளெல்லாம் சொந்தமே!! போய்வருகிறேன் பாரிஜாதா!! வேலையில்லாமல் இருந்தால் நாளை, மறுநாள் வீட்டுப்புறம் வரக்கூடுமா?” என்று கேட்டான் எதுகுலன்.

“இந்த வாரம் முடிவதற்குள் ஒரு தடவை வருகிறேன்—கட்டாயம் வருகிறேன் ஐயா;” என்றான். உடனே எதுகுலன் குதிரையைத் தயார் செய்யச் சொல்லவே, பாரிஜாதன் “ஐயா மறந்துவிட்டேன். உமது கை எப்படி யிருக்கின்றது?” என்று வினவ, எதுகுலன். “கைதான் எரிகின்றதப்பா, ஏதாவது மருந்து கிடைத்தால் போடுகிறாயா?” என்றான். உடனே வேறு ஒரு அறைக்குள் நுழைந்து கொஞ்சம் செந்தேனையும் வாழையிலையையும் கொண்டுவந்து, எதுகுலன் கையின்மீது தேனைத்தடவி, அதன்மேல் துளிர் வாழை இலையைப் போட்டு துணியால் கட்டினான். கட்டியபின் குதிரையைத் தயார்செய்யவே, எதுகுலன் குடிசை நோக்கிப் புறப்பட்டான்.

அமிர்தேசன் சிவபதமடைந்தது.

எதுகுலன் வெகு வேகமாய்க் குதிரையை நடத்திக்கொண்டு போனான். அதற்கு இரண்டு காரணம். ஒன்றாவது ஏழை அமிர்தேசன் உடம்பு எப்படி யிருக்கிறதோ என்னவோ என்ற விசாரம்; இரண்டாவது நெருப்புப்பட்டதனால் உண்டான கைவலி. இவன் வீடுபோய்ச் சேர இன்னும் ஒரு நாழிகை வழி இருக்கும் பொழுதே ஹம்ஸப்பிரியன் எதுகுலனைக் காணும்பொருட்டு தேடி எதிர்கொண்டு வந்தான். அவனைக் கண்டதும் குதிரையை விட்டிறங்கி, இரவில் தனிவழி நடக்கும்படியான அவசர சமாச்சாரம் என்னவென்று விசாரிக்க, ஹம்ஸப்ரியன், அமிர்தேசனுடைய வியாதியின் கொடுமையையும், அவன் படும் அவஸ்தையையும், உடனே எதுகுலனைப் பார்க்கவேண்டுமென்று ஆவலாய் இருப்பதையும் எடுத்துக் கூறினான். எதுகுலன் தான் இதுவரையில் துரத்திக் கொண்டுவந்த குதிரையை இனிமேலும் தொந்தரவு செய்ய இஷ்டமில்லாமல், இருவருமாய் நடந்துபோக உத்தே

சித்து, குதிரையை நடத்திக்கொண்டு போகும் போதே ஹம்ஸப்பிரியனுடன் மணிகாரன் வீட்டில் நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லிக்கொண்டுவந்தான். “ஆனால் இன்னும் கைவலி அதிகமாய் இருக்கின்றதா, அண்ணா?” என்று கேட்டான் ஹம்ஸன். “ஆமாம் தம்பீ!! வலியாமல் இருக்குமா? கொஞ்ச நெஞ்சமா அந்நெருப்பு!!!”

“இருக்கட்டும்; வலியையாவது கொஞ்சம் குறைக்க முடியும் என்னால். முன் ஒருமுறை நமது மாளிகையில் மாதவன் சமையல் அறையில் கையைச் சுட்டுக்கொண்டபோது, வைத்தியன் நாராயணஸ்வாமி ஒரு பச்சிலை கொண்டுவந்து அரைத்துத் துணியில் தடவி அதை வெந்தவிடத்தில் கட்டினான். அவ்விலைக்குப் பேர்தெரியாவிடினும் அது எனக்கு நன்றாய் அடையாளம் தெரியும். தோட்டத்து வேலியோரத்தில் ஏராளமாய் இருக்கின்றது. போனவுடனே ஒரு கட்டுக் கட்டுவோம்; அது சீக்கிரத்தில் வலியை வாங்கும், அண்ணா” என்றான் ஹம்ஸப்பிரியன்.

“இருக்கலாம்; ஏதோ உனக்கு இஷ்டமானதைச் செய், எனக்கு விரோதமில்லை. இதோ விடாயிற்று; குதிரையைக் கொண்டுபோய் கட்டு; நான் நேராய் அமிர்தேசனிடம்போய் அவனைப் பார்த்து வருகிறேன்.”

எதுகுலனைக் கண்டதும் பஞ்சடைந்த கண்களில் நீர் ததும்ப, அமிர்தேசன் “அப்பா குழந்தாய்! எதுகுலா!! இவ்வளவாவது வந்து சேர்ந்தாயே!!! தெய்வ சங்கல்பம் தான் இது!! இனிமேல் என் னுயிர் தடையின்றி வெளியேறும்; எங்கேவராமல் இன்றிரவு தங்கிவிடுகிறாயோ என்ற விசாரம் எனக்கு இவ்வளவு என்று சொல்ல முடியாது!! இன்னும் ஒரு நாழிகையோ! இரண்டு நாழிகையோ!! அவ்வளவுதான் அமிர்தேசன் காலம் என்று எனக்குத் தோன்றுகின்றது.” என்றான்.

எதுகுலன், அமிர்தேசன் படுக்கையண்டை உட்கார்ந்து அவனைத் தடவிக்கொடுத்து “என் அப்பா, அமிர்தேசா அப்படிச் சொல்லுகிறாய்? இன்று ராத்திரி உனக்கு ரொம்ப ஸங்கடமாய் இருக்கின்றதா என்ன? நான் ஏதாவது உபசாரம் செய்யட்டுமா? கஞ்சி வைத்துக்கொண்டு வரட்டுமா?” என்று கேட்டான்.

அமிர்தேசன் “குழந்தாய்! எதுகுலதிலகனே!! எனக்கு ஸங்கடம் ஒன்றுமில்லை. இனி உலகத்தில் எனக்குத் தேவையான வஸ்துவும் ஒன்றுமில்லை; எனது அந்திக்காலம் சமீபிக்கின்றது. உன்னிடம் இரண்டொரு வார்த்தை சொல்லவேண்டும். அவ்வளவுதான். பக்

கத்தில் வருவாய், என் கண்மணியே!! முதலில் நீ வெகு ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். உனக்காகவில்லாவிடினும் உன் சகோதரிகளுக்காகவாவது நீ பத்திரமாய் இருக்க வேண்டிய தவசியம். நீ சிறு பிள்ளை பலசாலி தைரியவான்; உன் வயதுள்ளவர் ஒருவர் உனக்கு எதிராக மாட்டார்கள்; அது பற்றி நீ உன் சகோதரிகளை என்னினும் பதின்மடங்கு அதிக ஜாக்கிரதையாய்க் காப்பாற்றுவாய்; ஆனாலும் மான் வேட்டையாடி எதிரிகள் கையில் அகப்பட்டுக் கொள்ளாதே. பொல்லாத ராஜத்துரோஹிகள் உன்னை தண்டிக்க வழிதேடிக்கொண்டே இருப்பார்கள். அந்த அயோக்கியர்களுடன் யாதொரு வியாபாரமும் உனக்கு வேண்டாம். சமையல் அறையில் பால் அடுப்புக்குப் பக்கத்தில் துவையல் அறைக்கும் கல் இருக்கின்றதல்லவா? அதன் கீழ் ஒரு பாத்திரத்தில் பை ஒன்றிருக்கின்றது. அதில் உங்களுக்கு வேண்டிய பணம் இருக்கும். அப்பணத்தை வைத்துக்கொண்டு நீங்கள் வெகு நாள் ஒருவரையும் அபேக்ஷிக்காமல் ஜீவனம் செய்யலாம். 'பணத்தைப் போற்றி வாழ், உங்கள் கஷ்டமெல்லாம் சீக்கிரத்தில் நிவாரணம் ஆகும். தேவாதி தேவன் உங்களுக்குக் கிருபை செய்வார். இனியென்ன சொல்லப் போகிறேன், புத்தி சாலியான உனக்கு!! ——— அழாதே; போய்க்குழந்தைகளை அழைத்துவா. அவர்கள் எல்லாரும் என்னைச் சுற்றிலும் இருக்கட்டும். அவர்கள் எல்லாரிடமும் விடை பெற்றுக்கொண்டு போகிறேன். கணக்கில்லாத எத்தனையோ பாபங்களைச் செய்துள்ள என்னை ஸ்ரீ சைலவாஸியான பிரபு மன்னித்துத் தன் பாதாரவிந்தம் சேர்த்துக்கொள்ளட்டும்!! சீக்கிரம் கூட்டி வா, மகனே" என்றான். எதுகுலன் எல்லாரையும் ஒரு நிமிஷத்தில் அழைத்து வந்தான்.

வந்தவருள் ஹம்சனைப் பார்த்து "ஹம்ஸப்பிரியா!! என் அரசிளங்குமரனே!! உன் சகோதரிகள் உன் உதவியினாலேயே பிழைக்கவேண்டியிருப்பதால், மூடத்தனமாய் அடாத காரியங்கள் செய்யாதே. காட்டு மாடுகளையும், காட்டுப் பன்றிகளையும் பிடிப்பதில் கவனமாய் இருந்து உன் உயிரை அபாயத்துக்கு உள்ளாக்கிக் கொள்ளாதே. நீங்கள் எல்லாரும் க்ஷேமமாய் இருந்தால் தான் குடும்பத்துக்கு பலம் அப்பா —. தோட்டத்தை கவனித்துக்கொள். அதுவே உங்களுக்குப் போதும். எதுகுலனுக்கு வேண்டிய பணம் கொடுத்து இருக்கிறேன். ஜாக்கிரதையாய் வீட்டுக்காரியங்களைப் பார்த்துக் கொள்" — "விசாலாக்ஷீ! குழந்தாய்! கண்ணின் கருமணியே!! என்னை முத்தமிட்டுக்கொள்; எனக்கு எத்தனையோ உபகாரம் செய்தாய் நீ! உன் பிரயாசத்துக்கு அஹோபிலத்திறைவன் அருள் மிகுந்து

அரசனுக்கு ஒப்பான கணவனை உனக்குக் கொடுக்கட்டும். எத்தனையோ தடவை பக்திரசமான பத்யங்களையும், சுலோகங்களையும், தேவாரங்களையும் பாடி என் மனதை ஈசனுடைய பாதார விந்தங்களில் அடைக்கலம் புகும்படி செய்தாய்!! எனக்கு மோக்ஷம் கொடுக்கவந்த லலிதாதேவியென்றே எண்ணுகிறேன் உன்னை!! தாயே நான் போய் வருகிறேன்." — "அலமேலுமங்காய்!! என் அருமைக் குழந்தாய்!! இன்று போலவே நீ என்றும் பொறுமையும், அருளும், சாத்துவிக குணமும் நிரம்பி உன்உடன் பிறந்தோர் எல்லாருக்கும் உபகாரமாய் இரு. அவர்களுக்குள் நடுநாயகமாய் விளங்கி என்றும் எல்லாரையும் உற்சாகப்படுத்து. கண்ணே இனி நீ அழக்கூடாது," என்று கண்ணைத் துடைத்துத் தட்டிக் கொடுத்தான்.

குழந்தைகள் எல்லாரும் நிறுத்தாமல் அழுவதைப்பார்த்து அமிர்தேசன் ஆற்றாதவனாய் "என் குழந்தைகாள்! என்னப்பனை ஸ்தோத்திரம் செய்யுங்கள். முதலைவாயில் அகப்பட்டுக் கொண்டு வருந்தின கஜேந்திரனைக் காத்து ஆட்கொண்டவாறு என்னையும் தேவாதிதேவன் இப்பொழுது பாதாரவிந்தம் சேர்த்துக்கொள்ளட்டும்." என்று கைகூப்பிக் கண்ணை மூடிக் கொள்ளவே, எல்லாரும் ஒன்று கூடி நெஞ்சை துக்கம் வந்து வந்தடைக்கவும், அதனை விலக்கிக் கொண்டு, பக்திரஸமும், சோகரஸமும், சொட்டச் சொட்ட,

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்..........

நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தி லிடார்ப்படோம் நடலையில்லோம்

என்னப்பா நீ! ஐயநீ! அன்புடைய மாமனும் மாமியு நீ!!

என்றித் தகைய பாடல்களைப் பாடியபின் கண்ணைத் துடைத்துக் கொண்டு, அமிர்தேசனைப் பார்க்கவே, அவன் ஆவி எம்பெருமான் திருப் பாதாரவிந்தத்தில் ஐக்கியமாகிவிட்டது.

எல்லாரும் ஓவென்று கதறியழுதார்கள், என்று சொல்லவும் வேண்டுமா!!

கடைசியாக ஹம்ஸபிரியன் "விசாலாக்ஷீ! என் அண்ணாவைத் தொந்தரவு பண்ணுகிறாய்! அவ்விதம் அவன் கையின் மேல் படுத்துக்கொண்டு அழுதாயாகில் அவனுக்கு எவ்வளவு நோவு உண்டாகும்! அக்கை எம்மாத்திரம் வெந்து போய் இருக்கிறதென்பது உனக்குத் தெரியாது. எல்லாரும் அடுத்த அறையில் போய் அண்ணாவுக்குக் கொஞ்சம் மருந்து போடுவோம். வலிகொஞ்சம் நிற்கட்டும் பாவம்" என்று தன் சகோதரிகளின் கவனத்தை இறந்த

வர் பக்கத்திலிருந்து இருப்பவர் பக்கத்துக்குத் திருப்பினான். உடனே தமது தமயனுக்கு உபகாரம் செய்ய எண்ணங் கொண்டவராய் எல்லாரும் கூடத்துக்கு வந்தனர். ஹம்ஸப்பிரியன் தோட்டத்துக் கோடி பசுந்தழை கொண்டுவந்தான். விசாலாக்ஷி கல்லலம்பி அதை அரைக்கவே அலமேலு ஒரு துணி கிழித்துக்கொண்டு வந்தாள். ஹம்ஸப்பிரியன் எதுகுலனுடைய ஆடைகளைக் கழற்றி, பசுந்தழை மருந்தைத் துணியில் பரப்பி, அத்துணியை கையைச் சுற்றிக்கட்டினான். சில நிமிஷங்களில் எதுகுலன் வலிமிகவும் குறைந்ததென்று சொன்னான்.

இதற்குள் விடிய நாலைந்து நாழிகை தான் இருந்தன: ஹம்ஸப்பிரியன் சகோதரிகள் இருவரையும் படுக்கையில் படுக்கவைத்து, அவர்கள் தூங்கிய பின்னர், எதுகுலனிடத்தில் வந்து "அண்ணா அமிர்தேசனுடைய சரீரம் இங்கு விழுந்து கிடக்கும் வரையில் ஏழைக் குழந்தைகள் அழுதவண்ணமாகவே இருப்பார்கள். முதலில் இனிமேல் நாம் நடத்த வேண்டிய காரியத்தை யோசிக்கவேண்டும்." என்றான்.

"என்ன செய்யலாம் தம்பீ? எனக்கோ ஒன்றும் தோன்றவில்லை. குழந்தைகள் அழுவது என்ன ஆச்சரியம்!! அழத்தானே அழுவார்கள்! இச்சமயத்தில்!!"

"ஆனால் நான் சொல்வதைக்கேள் அண்ணா இப்பொழுதே அமிர்தேசனை புதைக்கக் குழி வெட்டுகிறேன் தோட்டத்தில். விடியுமுன் முடிந்து விடும். காலையில் சூர்யோதயத்துக்குள் அமிர்தேசனைப் புதைத்து விடுவோம்" என்றான்.

தம்பீ உன் யோசனை சரியே! நான் எப்படி உனக்கு உதவி செய்வேன் இன்றைய தினம்? எனக்குக் கைகள் இருந்தும் பயன் படவில்லையே!" என்று விசனப்பட்டான் எதுகுலன்.

"அண்ணா என்னால் இக்குழி வெட்டமுடியாதா? இதற்காக உன் உதவி வேண்டுமா? உன் கையில் நெருப்புப்பட்டு அவ்வலியால் வருந்துகிறாயே என்ற விசாரம் ஒன்றேயன்றி, எனக்கு நீ உதவிக்கு வரவில்லையே என்ற எண்ணமே கிடையாது. என் பேச்சை நீ இன்று கேட்கவேண்டும், அண்ணா. குழந்தைகளிடத்தில் படுத்துக் கொண்டு கொஞ்சம் சிரமபரிகாரம் செய்துகொள். காலையில் உடம்பு நன்றாயிருக்கும்" என்றான்.

குடும்ப சம்ரக்ஷணையும் சுகாதாரமும்.

ஜலம்.—(முன் தொடர்ச்சி)

ஒவ்வொரு வீட்டிலும் உள்ள ஜனங்களுக்கு ஜலம் அவசியம் வேண்டும். தினம் பாத்திரங்களைக் கழுவவும், துணிகளைத் தோய்க்கவும், ஸ்நாநம் செய்யவும், வீட்டைச் சுத்தம் செய்யவும் ஜனங்களுக்கு ஜலம் உபயோகப்படுகிறது. பட்டணத்தில் சாக்கடை சுத்தி செய்யவும், தெருக்களில் தண்ணீர் தெளிக்கவும் ஜலம் உதவுகிறது. பட்டணத்தில் குழாய் ஜலத்தை அநேகர் சிற்சில சமயத்தில் வீணாக செலவழிக்கிறார்கள். அவ்விதம் செய்தால் நமக்குத்தான் நஷ்டம். ஆகையால் ஜலம் நமக்கு எப்பொழுது தேவையோ அப்பொழுது தான் குழாயைத் திறந்து ஜலத்தை உபயோகிக்க வேண்டும். அனாவசியமாக குழாயைத் திறந்து ஜலம் வீணாக செலவாகும்படி செய்யக்கூடாது.

ஜலம் நமக்கு எங்கிருந்து கிடைக்கிறது? ஜலம் ஊற்றுகளிலிருந்து கிடைக்கிறது. தண்ணீரில்லாத ஆற்றில் ஒரு குழி தோண்டினால் அதில் ஜலம் ஊறும். அந்த ஜலம் தெளிவாகவும் சுத்தமாகவுமிருக்கும். இதை உபயோகிப்பது நலம். ஆழமான கிணறுகளிலிருந்து ஜலம் கிடைக்கிறது. சிற்சில விடங்களில் கிணற்றின் ஆழம் 50 அடியிலிருந்து 60 அடிவரையிலிருக்கும். சில கிணறுகள் 10அடி ஆழத்திலிருந்து 20 அடி வரையிலிருக்கும், இவ்வித ஆழமுள்ள கிணறுகளிலிருந்து ஊறிவரும் ஜலத்தை உபயோகித்து வந்தால் நல்லது தான். கெடுதல் ஒன்றும் உண்டாகாது. கிணற்றண்டை குப்பை கூளம் முதலியவைகளைப் போடக்கூடாது. தண்ணீர் எப்பொழுதும் தங்கியிருக்கும்படியும் செய்யக் கூடாது. கிணற்றிற்குள் வெளிச்சமும், காற்றும், வெயிலும் செல்லும்படியாக கிணற்றைக் வைத்துக்கொள்ள வேண்டும். கிணற்றிற்குள் குப்பை கூளம் முதலியவைகளைப் போடக்கூடாது. வருஷத்திற் கொருமுறையாவது கிணற்றிற்குள் உள்ள அழுக்கு மண் முதலியவைகளை எடுத்து விடுவது நலம்.

குளத்து ஜலமும் நமக்கு மிகவும் உபயோகப்படுகிறது. ஆனால் குளத்து ஜலத்தில் அசுத்தம் சேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மாடு முதலியவைகளை அதில் இறங்கும்படி செய்யக்கூடாது. துணிமணிகளைத் தோய்க்கக்கூடாது. குப்பை அழுகிப்போன இலை புஷ்பங்கள் முதலியவைகளிருந்தால் அவைகளை எடுத்துவிட ஏற்பாடு செய்து வரவேண்டும். கொசு அதில் சேராவண்ணம் பாதுகாத்து வரவேண்டும். அதில் நல்ல மச்சங்களைவிட்டு வைக்கவேண்டும். இவ்வி

தம் செய்து குளத்தைக் காப்பாற்றிவந்தால் அதின் ஜலம் பருக உதவும். அதனால் யாதொரு கெடுதலுமுண்டாகாது.

மாடு முதலியவைகளுக்கும் ஸ்நாநம் செய்யவும் துணிமணிகளைச் சுத்தி செய்யவும் ப்ரத்தியேகமான குளங்களிருந்தால் நல்லது. இப்படி சிற்சில கிராமங்களிலும், பட்டணங்களிலும் உண்டு.

ஆற்றின் ஜலம் நமக்கு மிகவும் உபயோகமாகிறது. மலைகளிலிருந்து நீர்வீழ்ச்சியாக ஜலம் கீழே விழுகிறது. விழுகிற இடம் ஒரு சமயம் குளம்போல் தென்படும். அதில் ஜலம் நிறைந்தவுடன் அதற்குமேல் வரும் ஜலம் பற்பல மார்க்கமாய் பள்ளமிருக்கு மிடத்தில் ஓட ஆரம்பிக்கும். அப்படி பள்ளமான பாகங்களைத் தேடிக்கொண்டு ஜலம் ஓடுவதினால் தான் ஆறு நேராகச் செல்லுவதில்லை. கோணலாகச் செல்லுகிறது. ஆற்றின் ஜலம் கலங்கியிருக்கும். அதை நாம் எப்பொழுதும் தெளிய வைத்து வடிகட்டி சாப்பிடுவது நலம். வடிகட்டிய ஜலத்தைக் காய்ச்சி குடித்தால் இன்னும் நல்லதே.

ஆற்றோரத்தில் அசங்கியம் செய்யாமலும், அழுகிப்போன இலை முதலியவைகளைப் போடாமலுமிருக்கவேண்டும். வாய்க்கால் மூலமாய்ப்போகும் ஆற்றின் ஜலம் சில க்ராமங்களுக்கு மிகவும் உதவுகிறது.

ஏரியின் ஜலமும் நல்லதுதான். ஏரிகளில் மழையால் ஜலம் நிரம்புகிறது. ஏரியிலும் அசுத்தம் சேராமல பார்த்துக்கொள்ளவேண்டும். அவ்விதம் செய்துவந்தால் அந்த ஜலம் பருகுவதற்கு நல்லது. சென்னையில் குழாய் மூலமாய்வரும் ஜலம் ரெட்ஹில்ஸ்என்ற ஒரு ஏரியிலிருந்து வருகிறது. அதைச் சென்னை கார்பொரேஷனைச் சேர்ந்த இஞ்சினீயர் முதலிய கனவான்கள் செவ்வனே சிப்பந்திகளைக்கொண்டு கவனித்து வருகிறார்கள். அதிலிருந்து ஜலத்தை ஒருவாய்க்கால் மூலமாய் வரவழைத்து கீழ்பாக்கத்தில் அதிலிருந்துவரும் ஜலத்தை சாஸ்திரப்படி சுத்திசெய்து சென்னை முழுவதிற்கும் குழாய்கள் மூலமாய் ஒவ்வொரு வீட்டிற்கும் உதவும்படி செய்கிறார்கள். முன்னைவிட இப்பொழுது குழாய் ஜலம் சுத்தமான தென்றே சொல்லலாம். ஜலம் ஏராளமாக வருகிறது. ஜனங்கள் ஜலத்தை வீணாகச் செலவழிக்காமல் வேண்டியஅளவு உபயோகித்து வந்தால்தான் நல்லது. வெயில் காலத்தில் ஜலம் அந்த ஏரியில் வற்றிப்போய்விட்டால் ஜனங்களுக்கு அதிகமாக ஜலம் எப்படி கிடைக்கும்? ஆனதுபற்றி ஜலம் செலவழிப்பதில் சென்னையிலுள்ளோர் அதிக ஜாக்கிறதையாக யிருந்தால் மிகவும் நன்மையுண்டாகும்.

சமுத்திர ஜலம் பற்பல விஷயங்களில் நமக்கு உபயோகப்படுகிறது. சமுத்திர ஜலத்தில் அடிக்கடி ஸ்நாநம்செய்தால் தேகத்திற்கு நல்லது. சமுத்திர ஜலத்திலிருந்து உப்பு எடுக்கிறார்கள். இந்த உப்புதான் நமக்கு மிகவும் உபயோகப்படுகிறது. இது கவர்ண்மெண்டாருக்குச் சேர்ந்தது. உப்பு விலையை கவர்ண்மெண்டார் மிகவும் குறைத்திருப்பது ஜனங்களுக்கு அதிகலாபகரமா யிருக்கிறது.

கப்பல் பிரயாணம் செய்கிறவர்களுக்கு பிரயாணமத்தியில் நல்ல ஜலம் செலவழிந்துபோய்விடும். அப்பொழுது கப்பல் உத்தியோகஸ்தர்கள் சமுத்திர ஜலத்தை எடுத்து காய்ச்சுவார்கள். அவ்விதம் கொதிக்கும் ஜலத்திலிருந்து ஆவிமேலே கிளம்பிவரு மல்லவா? அந்த நீர்ஆவியை ஒரு பாத்திரத்தில் சேர்ப்பார்கள். அப்பாத்திரமுழுவதும் நீர் ஆவி நிரம்பியவுடன் அப்பாத்திரத்தைக் குளிரச் செய்தால் அதிலுள்ள நீர் ஆவி நல்ல சுத்தமான ஜலமாகிவிடும். இந்த ஜலத்தைப் பிரயாணிகளுக்கு கொடுப்பார்கள். கப்பல் உத்தியோகஸ்தர்களும், வேலைக்காரர்களும் உபயோகிப்பார்கள். ஆகையால் சமுத்திர ஜலமும் நமக்கு பற்பல விஷயங்களில் மிகவும் உபயோகமுள்ளதா யிருக்கிறது.

C. S. R.

இங்கிலாந்து சரித்திரக் கதை

2. பிரித்தானியர்களும் ரோமர்களும்.

இவ்வாறு ஐக்கியமில்லாமல் பிரித்தானியர்கள் வாழ்ந்து வந்த நாளில், தென் ஐரோப்பாவில் இத்தாலியா (Italy) தேசத்தில், ரோமாபுரியை (Rome) பிரதான நகரமாகக் கொண்டு ரோமர்கள் (Romans) என்று நாமம் பூண்ட ஜனங்களிருந்தார்கள். இந்த ரோமர்கள் அக்காலத்தில் இப்பூமண்டலத்தின் கண் வசித்த ஜனங்களுக்குள், மேற்பட்ட நாகரீகம் பெற்றிருந்தனர். இன்னும், புஜபலசாலிகளாகவும், அதி பராக்கிரம சாலிகளாகவும், ராஜாங்க விஷயங்களில் மிக புத்திசாலிகளாகவும் இவர்கள் விளங்கினர். ஆனது பற்றி, இவர்கள் தென் ஐரோப்பாவில் அநேக நாடுகளைக் கைக்கொண்டதல்லாமல், ஆசியா, ஆப்பிரிக்கா கண்டங்களில் அதி விசாலமானப் பிரதேசங்களை ஜெயித்து அவைகளைத் தம் வசமாக்கியிருந்தார்கள். இவ்வளவு நாடுகளை கைக்கொண்டிருந்தும், இன்னும் அநேக நாடுகளில் இவர்களுடைய புஜ பலத்தையும், நாகரீகத்தையும், பரவச் செய்ய வேண்டுமென்ற அவா இவர்கள் மனதைக் குடிகொண்டிருந்தது. ஆகையால் இவர்கள் இத்தாலியாவிற்குவடமேற்கிலுள்ள கால் (Gaul—Modern

France) தேசத்தின் மேல் தங்களுடைய சிறந்த தளகர்த்தராகிய ஜூலியஸ் ஸீஸருடன் (Julius Caesar) படை யெடுத்துப் போகலாயிற்று.

அச்சமயத்தில் பிரித்தானியர்கள் தங்களோடு வர்த்தகஞ் செய்து கொண்டிருந்த தங்களினத்தாராகிய கால்ஸுக்கு உதவி புரிய, ஜூலியஸ் ஸீஸருக்கு அடங்காக் கோபம் வந்தது. ஏனெனில் இது பரியந்தம் யாரும் இவருக்கு குறுக்கே வந்ததேயில்லை இவர் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே யாவரும் பயந்து ஒளிந்து விடுவார்கள். அப்படியிருக்க இப்பிரித்தானியர்களின் செய்கை மிகவும் துணிகரமாகவே யிருந்தது. இவர்களைத்தக்கபடி கண்டிக்காவிடின் தன் கீர்த்தி லோபமடையுமென்று கால்ஸை ஒருவாறு அடக்கிக் கைக்கொண்டு ஒரு சிறு சைனியத்துடன் பிரித்தன் மீது படையெடுத்து ஜூலியஸ் ஸீஸர் சென்றார். பிரித்தானியரோ அச்சமுறாது ஸீஸரை எதிர்த்தனர். தன்னுடனிருந்த சைனியத்தைக் கொண்டு பிரித்தானியரைக் கண்டிப்பது கூடாத காரியமெனத்தெரிந்து கொண்ட ஸீஸர் உடனே ரோமாபுரியை நோக்கித் திரும்பினார்.

பிரித்தானியரை தண்டிக்காவிடின் அதிப்ரக்யாதி பெற்ற ரோமருடைய புஜபலம் இழிவு அடையுமென்பதை நன்குணர்ந்த ஸீஸர் பிரித்தன் மீது மறுபடியும் திரண்ட சைனியங்களோடு படையெடுத்துச் சென்றனர். இம்முறை பிரித்தானியர்கள் ரோமரை தைரியமாய் எதிர்த்தார்களேயானாலும், ரோமர்களின் புஜபலத்திற்கு முன்பு நிற்க முடியாமல், தோல்வியடைந்தனர். ஸீஸரோ பிரித்தனை ரோம நாடாகக் கருதி வந்தவரில்லையாதலால், பிரித்தானியர்களை தக்கபடி கண்டித்ததும், இனிமேல் ரோமர்களின் காரியங்களில் அவர்கள் பிரவேசிக்காவண்ணம், ஏற்பாடுகளைச் செய்து ரோமாபுரிக்குப் போய் விட்டார். அவ்வேற்பாடுகளிலொன்று பிரித்தானியர் வருஷா வருஷம் ரோமர்களுக்கு கப்பங்கட்டி வரவேண்டுமென்பது.

சிலகாலம் பிரித்தானியர் ரோமருக்குக் கப்பங்கட்டினர். அதற்குப் பிறகு ரோமர்களுடைய காரியங்கள் சிறிது அலங்கோலப்படவே, ரோமர்களுக்குச் சேர்ந்த நாடுகளில் ரோம-துரைத்தனத்தின் பலம் குறையலாயிற்று. ஆகவே, பிரித்தானியரும் முதலில் கப்பங்கட்டுவதை நிறுத்தலானார்கள். அதைப்பற்றி ரோமர்கள் கவனியாது நிற்கவே, பிரித்தானியர் தைரியமடைந்து, தாங்கள் செய்திருந்த ஒப்பந்தத்திற்கு விரோதமாக, மறுபடி கால்ஸுக்கு உதவிபுரிந்தனர். நாளடைவில் பிரித்தானியர்களின் உபத்திரவம் அதிகமாயிற்று. ஆகையால்

ரோமர்களின் சக்ரவர்த்தி பிரித்தனை ஜெயித்து, ரோம அதிகாரிகளை அங்கே வைத்தாலொழிய, பிரித்தானியர் அடங்கியிராரென்று தகுந்த தளகர்த்தர்களையும், திரண்ட சைனியங்களையும், சிறந்த அதிகாரிகளையும் அனுப்பி, தென்பிரித்தனை ஜெயித்துக் கைக்கொண்டு ஆள ஆரம்பித்தார்.

அதுமுதல், சுமார் முந்நூற்று ஐம்பது வருஷகாலம் ரோமர்கள் இப்பொழுது இங்கிலாந்து, உவேல்ஸ் தென் ஸ்காட்லாந்தாக வழங்கப்படும் பூமியைத் துரைத்தனம் செய்து வந்தனர். இத் துரைத்தனத்திற்குட்பட்டிருந்த பிரித்தானியரின் பாக்கியமே பாக்கியம். ரோமர்களின் சட்டங்களும், ஏற்பாடுகளும் வியாபிக்கவே பிரித்தானியர் தங்கள் சண்டைசச்சரவுகளை ஒழித்து, அமரிக்கையாய் வாழ்ந்து வந்தனர். பிரித்தன் முழுமையிலும், நகரங்களும், ராணுவஸ்தலங்களும், பங்களாக்களும், வாராவதிகளும், சிங்காரத்தோட்டங்களும், போக்குவரவை யதிகரிக்கச் சிறந்த நீண்ட ரஸ்தாக்களும், உன்னதமான கட்டடங்களும், ஆபீஸ்களும் விளங்கின. இப்பொழுது வட ஸ்காட்லாந்து 'ஐர்லாந்து என்று சொல்லப்பட்ட நாடுகளில் அப்போதிருந்த பிக்ட்ஸும், ஸ்காட்ஸும், (Picts and Scots) பிரித்தானியரை உபத்திரவம் செய்யாமலிருக்கும்படியும், பிரித்தனைக் கொள்ளையடிக்காமலிருக்கவும் உன்னதமான கோட்டை மதில்களும், ஆங்காங்கு ராணுவங்களும் இன்னும் கடல்மார்க்கமாய் திருடர்கள் பிரித்தனைக் கொள்ளை கொள்ளாவண்ணம் தகுந்த ஏற்பாடுகளும் உண்டாயின. ஆனதுபற்றி, பிரித்தனே ஐரோப்பாவின் தான்யக் களஞ்சியமென்று யாவரும் கூறும்படியாய் நாடுசெழிப்புற்றோங்கியது. ஈயச்சுரங்கங்களும், இரும்புச்சுரங்கங்களும் கண்டுபிடிக்கப்பட்டு இவ்விரண்டு உலோகங்களின் வியாபாரம் பெருகலாயிற்று. ரோமர்கள் புதிதாய் ஏற்று அனுஷ்டித்துக்கொண்டிருந்த கிறுஸ்து சமயமும், ரோமர்களின் பாஷையும் பரவலாயிற்று. இவ்வளவிருந்தும் பிரித்தானியருக்குத் தங்கள் விஷயங்களைத் தாமே பிரருதவியின்றி கவனித்துக்கொள்ளும் ஞானம் பிறக்கவேயில்லை. ரோமர்களுடைய நாடும் நானாவிதத்திலும் அலங்கோலப்பட, பிரித்தனிலிருந்த ராணுவங்களனைத்தும் அதிகாரிகளனைவரும், ரோமாபுரியைக் காக்கப் போகும்படி நேரிட்டது.

இடத்தையும் எண்ணையும் போதிக்கும் முறை.

சகோதரர்களே! சகோதரிகளே! இன்று உங்களுக்கு இடத்தையும் எண்ணையுஞ் சார்ந்த (கணக்குப்) பாடத்தைப் பிள்ளைகளுக்குப் போதிப்பதில் அநுசரிக்கவேண்டிய முக்கிய வழிகளைப்பற்றிச் சொல்லத் துணிகின்றேன்.

இடத்தையும் எண்ணையுஞ் சார்ந்த பாடத்திற்குக் கணித சாஸ்திரம் என்று பெயர்.

உலகத்தில் நாம் சாதாரணமாய் பார்க்கக்கூடிய பொருள்களெல்லாம் சிற்சில குணங்களை யுடைத்தாயிருக்கின்றன. அவைகளிற் சாதாரணமானவை உருவம், நிறம், வாஸனை, பரிசம், (உஷ்ணம், குளிர்ச்சி, மிருது, கடினம்) சப்தம், உறையுந் தன்மை, திரவத் தன்மை, உடைபடுந் தன்மை, தகடாகுந் தன்மை, கரையுந் தன்மை, உருகுந் தன்மை, சங்கியை, பரிமாணம் முதலியனவாம்.

மேற்கூறிய சாதாரண குணங்களிற் சிற்சிலவற்றைப் பற்றிச் சிற்சில சாஸ்திரங்கள் கூறும்: உதாரணமாக வஸ்துக்களின் உருவம், நிறம் முதலியவைகளைப் பற்றிச் சித்திரமு (சிற்ப சாஸ்திரப் பகுதியு)ம், வாஸனை, பரிசம், கரையுந் தன்மை, முதலியவைகளைப் பற்றிப் பதார்த்த விஞ்ஞான சாஸ்திரமும் (Physics and Chemistry) சங்கியை, பரிமாணம் முதலியவைகளைப் பற்றிக் கணித சாஸ்திரமும் நன்கு விளக்குகின்றன.

ஆதலால், கணித சாஸ்திரமென்பது எண்ணிக்கை அல்லது சங்கியை, பரிமாணம் அல்லது இடம் இவற்றைப் பற்றிக் கூறும் சாஸ்திரமா மென்றேற்படுகின்றது.

எண்ணிக்கை அல்லது சங்கியை.

எண்ணிக்கையென்பது எத்தனை என்னுங் கேள்விக்கு விடையாய் ஒரு பசு, இரண்டு புத்தகங்கள், பதினைந்து ரூபாய் என்னும் ஞானத்திற்குக் காரணமாயிருக்கின்றது. இ[illegible]னம் கண் பார்வையால் அறியத்தக்கது. கட்புலனற்ற குருடர்கள் பொருள்களைத் தொட்டுப் பரிச உணர்ச்சியால் அறிவது வழக்கம்.

இடம் அல்லது பரிமாணம்.

இடமென்பது பொருள்களின் இருப்பிற்கு ஆதாரமாய் இருப்பது. இதற்கு வெளி (Vacuum) என்று பெயர். இவ்வெளி பொருள்களின் இருப்பிற்கு ஆதாரமாயிருத்தலால் அப்பொருள்களின் எல்லாப் பக்கங்களிலும் இது சம்பந்தப்பட்டிருக்கிறது. பொருள்கள்

தங்கள் இருப்பிற்கு எவ்வளவு இடம் வேண்டுமோ அவ்வளவு இடத்தை ஆகாயத்தில் அதாவது வெளியில் ஆக்கிரமித்துக்கொள்ளுகின்றன. உதாரணமாக 2 அடி அகலம், 4 அடி நீளம், 3 அடி உயரமுள்ள ஒரு பெட்டியில் இருப்பிற்கு, 2 அடி அகலம், 4 அடி நீளம், 3 அடி உயரமுள்ள இடம் வேண்டும். இப்பரிமாணத்திற்குக் குறைந்த இடம் அப்பெட்டியின் இருப்பிற்குப் போதுமானதாகாது. ஒரு வஸ்துவின் பரிமாணத்திற்குச் சரியான அளவுள்ள விடமே அவ்வஸ்துவின் இருப்பிற்குப் போதுமானது ஆதுமாகையால் இடமும் பரிமாணமும் ஒன்றேபோல் விவகரிக்கத்தகும். ஆதலால் அவ்விரண்டிற்கும் பேதமேயின்று.

பரிமாணமென்பது எவ்வளவென்னுஞ் ஞானத்திற்குக் காரணமாயிருப்பது. எவ்வளவென்னுங் கேள்விக்கு விடை அகலம், நிகளம் அல்லது உயரம், பருமன் முதலிய அளவுகளாம்.

ஒரு பொருளின் பரிமாணத்தை அளந்து அறிவதற்குச் சில சாதனங்கள் அவசியம் வேண்டியன. அவை அடிக்கோல், கஜக்கோல் முதலியனவும் ஆழாக்கு, படி, மரக்கால் முதலியனவுமாம். இத்தகைய சாதனங்களின்றேல் ஒரு பொருளின் பரிமணம் ஐயமற அறியப்படமாட்டாது. ஆதலால் கெஜம், அடி, அங்குலம் முதலியநீட்டளவுகளும், படி ஆழாக்கு முதலிய முகத்தல் அளவுகளும் அத்தியாவசியம்.

என். சுப்பிரமணிய ஐயர் எட்மாஸ்டர், கார்பொரேஷன் மாடல்ஸ்கூல்.

நமது குழந்தைகள் பக்கம்.

மரியாதைராமன் கதை.

பஞ்சு வர்த்தகருக்கு ஒரு பூனையால் வழக்கு நேரிட்டது.

ஒரு காலத்தில் நாலுபேர் சேர்ந்து பஞ்சு வர்த்தகம் செய்தார்கள். பஞ்சு மூட்டைகளை எலிகள் கடிக்காதிருக்கும் பொருட்டு அவர்கள் ஒரு பூனையை வளர்த்தார்கள். அவ்விதம் அதை அன்புடன் காப்பாற்றி வரும்பொழுது அதனுடைய நாலு கால்களையும் ஆளுக்கு ஒவ்வொரு காலாக பங்கு வைத்துக் கொண்டார்கள். அவனவன் தன் பங்காகிய காலுக்குத் தண்டை கொலுசு முதலானதுகளால் அலங்கரித்துச் சிறப்பாக வைத்திருந்தார்கள். இவைகள் விலையுயர்ந்த நகைகளே.

ஒரு தினம் அந்தப் பூனைக்கு ஒரு காலிலே காயம் பட்டது. அந்தக்காலுக்குச் சுதந்தரக்காரன் எண்ணெச்சீலை சுற்றி வைத்தான்.

அது அடுப்பண்டையிலே போனபோது அடுப்புத் தீயினாற் பற்றிக் கொண்டது. அதனுடனே அந்தப் பூனையானது பஞ்சு மூட்டைகளின்மேல் விழுந்து ஓடிப் போயிற்று. அப்படி அது ஓடினதால் நெருப்பு அம்மூட்டைகளில் பட்டது. அவைகள் பற்றிக்கொண்டு வெந்து போய் விட்டன.

அந்தக் காலுக்கு உரியவனை மற்ற மூவரும் "நீ தான் எங்களுக்கு நேரிட்ட நஷ்டத்தை ஈடு கட்டி கொடுக்கவேண்டும்" என்றார்கள்.

எண்ணைச் சீலை கட்டின கூட்டாளி "எனக்கு யாதொரு சம்பந்தமில்லை. நான் ஒரு தம்படி கூட கொடுக்க மாட்டேன்" என்றான்.

ஆகையால் அம்மூவரும் மரியாதை ராமனிடத்தில் பிரியாது கொடுத்தார்கள். மரியாதை ராமன் எண்ணைச் சீலை கட்டினவனை வரவழைத்து, விசாரணை செய்து, சகல விஷயங்களையும் அறிந்து கொண்டான். பிரதிவாதியின் மேல் குற்றமில்லை யென்பதையும், அவன் நன்மை செய்யப் புகுந்தானே யொழிய கெடுதல் விளைவிக்க வேண்டும் என்று எண்ணவில்லை யென்பதையும் தெரிந்து கொண்டான். அம்மூன்று பேரும் வீணாக இவன் மீது பிராது கொடுத்திருக்கிறார்கள் என்று யோசித்து தீர்ப்பு சொல்லத் தொடங்கினான்.

வாதிகளே! பிரதிவாதி பூனைக்கு எண்ணைச் சீலையை சுற்றி வைத்தது சரியே. பூனையோ காயமுள்ளது. அதனால் நடக்க முடியாது. காயம் ஆற அவன் அப்படி செய்தான். ஆனால் உங்கள் மூன்று பேர்களுடைய கால்களினாலே பூனை நடந்தது. ஆகையால் இப்படிப்பட்ட சேதம் வந்தது. ஆனது பற்றி நீங்கள் மூன்று பேரும் பிரதிவாதியினுடைய நஷ்டத்தைக் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பு செய்தான். வாதிகள் மூன்று பேரும் யானைத்தலையிலே தானே மண் போட்டுக் கொள்ளுகிறது போலத் தங்களுக்குத் தாங்களே முன்வந்தோடு பின்னும் நஷ்டம் தேடிக் கொண்டார்கள். திக்கற்றவனுக்கு தெய்வமே துணை என்கிற பழமொழிப்படியே அதிக விசனம் அடைந்த பிரதிவாதி தெய்வ சகாயத்தினாலே தன் பட்சம் தீர்ப்பானது கண்டு அதிக சந்தோஷத்தை அடைந்தான்.

விகட கொத்து

1. உபாத்தியாயர்.—(மூன்றாவது வகுப்புப் பிள்ளைகளைப் பார்த்து).

"100 நெல்லிக்காயை 3 பேருக்கு எப்படி சரியாய்ப் பகிர்ந்து கொடுப்பீர்கள்?"

எல்லோரும் சிலேட்டில் கணக்குப்போட ஆரம்பித்தார்கள். கமலம் என்னும் சிறுபெண் மாத்திரம் சும்மா இருந்ததை உபாத்தியாயர் கண்டு கோபிக்குமுன்னமே? "இதென்ன கஷ்டம்! உப்பு, மிளகாயுடன் தொக்கு இடித்தால் 3 பேரும் பகிர்ந்து கொள்ளலாம்" என்றாள். எல்லோரும் சிரித்தார்கள்.

2. "மரணசகாய நிதி"யில் பணம்போட்டுக் கொண்டிருந்த ஒரு கிராமத்தான் வியாதியால் படுகடையாய்ப் படுத்துக் கொள்ளவே டாக்டர்கள் "பாதி உயிர் போய்விட்ட"தென்று சொல்லிவிட்டார்கள். உடனே அவன் தம்பி "மரணசகாயநிதிக்கு அடியில் கண்டபடி தந்தியடித்தானாம்." அண்ணனுக்கு பாதி உயிர் போய்விட்டது. உடனே அரைவாசிப்பணத்தை என்பேருக்கு அனுப்புங்கள்.

3. ஏழைச்சிறுவன் ஒருவன் நாட்டுக் கோட்டைச் செட்டியாரொருவரிடம் வேலைக்காகப்போய்-கதவண்டை நின்றுகொண்டு "செட்டியாரே! எனக்குப் பிழைக்க ஒருவழி சொல்லவேண்டும்" என்றான். செட்டியார் தாமதியாமல் "அதோ பார், திரும்பிப்பார். அந்தக் கதவைச் சாத்திக்கொண்டு வந்தவழி போனால் நீ பிழைக்கலாம்" என்று சொல்லி யனுப்பினாராம்.

4. உபாத்தியாயர்:—"செல்லப்பா! உன் பேர் என்ன?"

குழந்தை:—"நேக்குத் தெரியாது."

உபாத்தியாயர்:—"உன்னை அப்பா எப்படி கூப்பிடுகிறார்?"

குழந்தை:—"நேக்குத் தெரியாது"

உபாத்தியாயர்:—"பக்ஷணம் பண்ணினால், அம்மா உன்னை எப்படிக் கூப்பிடுகிறாள்?"

குழந்தை:—"அம்மா என்னை கூப்டமாட்டா, நான் அடுக்குள்ளேயே இருப்பேன்."

விடு கதை.
இரட்டை யெழுத்திலானது
வட்டமான பக்ஷணம்
நெட்டெழுத்தில் ஆனது
இட்ட முடனே தின்னலாம்
தோசை யொன்று தருகிறேன்
ஆசையுடனே விடுவிப்பாய்.

☞ பெண்கள் எழுதும் விடுகதைகள் ஒவ்வொரு மாசப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும். ஆகையால் பெண்கள் விடுகதைகளை எழுதி பத்திராதிபருக்கு அனுப்புவார்களென்று நம்புகிறோம்.

பத்திராதிபர்.

இந்திய மாயாவிநோதக் கதைகள்.

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. சித்திரப்படங்களடங்கிய கதைகள் உடையது. விலை அணா 4.

மாக்மிலன் கம்பெனி, புஸ்தக வியாபாரிகள்,
இந்தியன் பேங்க்ஸ் பில்டிங்ஸ்—பீச்ரோட், மதராஸ்.

NEWS AND NOTES

சமாச்சாரக் குறிப்பு.

எச். ஈ. லேடி பெண்ட் லேண்ட்.—சென்றமீ 19௳ நமது கவர்னரின் மனைவியார் பிராமணை இந்து கைம்பெண் ஆஸ்ரமத்தைப் போய் பார்த்தார்கள். அப்பொழுது மிஸ் லிஞ்சும், சகோதரி சுப்பலக்ஷ்மி அம்மாளும் அவர்களை வரவேற்று கைம்பெண்கள் செய்த பூச்செண்டை எச். ஈ. லேடி பெண்ட் லெண்ட் அவர்களுக்கு அளித்தார்கள். உடனே யாவரும் உள்ளே சென்றதும் சில பெண்மணிகள் தமிழில் பாட்டு பாடினார்கள். சிலர் சம்ஸ்கிருதத்தில் சம்பாஷணை செய்தார்கள். 6-வது பாரத்தில் படிக்கும் பெண் ஒருவள் இங்கிலீஷில் நல்வரவு பத்திரத்தைப் படித்தாள். அழகான வெல்வெட்டினால் தைக்கப்பட்ட பையில் 100 ரூ நோட்டு ஒன்றைப்போட்டு இரண்டு சிறு பெண்கள் சென்னை ஆஸ்பிடல் கப்பலுக்காக லேடி பெண்ட் லண்டிடம் முக மலர்ச்சியுடன் கொடுத்தார்கள். பின் தெலுங்கிலும், சிலர் பற்பலராகங்களுடன் பாடினார்கள். சில பெண்மணிகள் ரபேந்திர நாத்டாகூர் இயற்றிய தபால் ஆபீஸ் என்ற நாடகத்திலிருந்து சிலபாகங்களை நடித்துக் காட்டினார்கள். சிறிய பெண்கள்செய்த ட்ரில் பார்க்க வெகு அழகாயிருந்தது. பின்னிட்டு எட்டுபெண்களில் ஒருத்தி பார்ஸி பெண்ணாகவும், ஒருத்தி குஜராத்தியாகவும், காஷ்மீரப் பெண்ணாகவும், ஒருத்தி மலையாளப் பெண்ணாகவும், ஒருத்திமராட்டிப் பெண்ணாகவும் ஒருத்தி மகமதியப் பெண்ணாகவும் வேஷம் தரித்துக்கொண்டு தங்கள்முன் இந்தியாவின் படத்தை வைத்துக்கொண்டு "அன்பு மிகுந்த இந்தியா" என்பதைப்பற்றி சில பாடல்களைப் பாடினார்கள். இவைகளையெல்லாம் லேடி பெண்ட்லண்டு அவர்கள் கண்டு மனமகிழ்ந்து திருவல்லிக்கேணியிலுள்ள கெவர்ன்மெண்ட் ட்ரய்னிங் ஸ்கூலில் பெண்களுக்குச் சிறந்த முறை போதிக்கப்பட்டு வருகிறதைக்கண்டு தாம் மிகவும் சந்தோஷப்படுவதாகச் சொன்னார்கள். "புத்தி சாதுரியமுள்ள பெண்களில் சிலர் தங்கள் கற்றுவரும் கணித சாஸ்திரத்தின் அறிவால் இந்த ஆஸ்ரமத்தை நான் முதலில் பார்த்தபின் இந்நாள்வரைக்கும் எவ்வளவு விருத்தி யடைந்திருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளக்கூடும். அப்பொழுது 21 பேர்தான் இருந்தார்கள். இப்பொழுதோ 62 பேர் இருக்கின்றார்கள். சென்னை ஆஸ்பிடல் ஷிப்புக்கு அவர்கள் கொடுத்த நன் கொடையின் தொகையோ ரூ 100. இவர்கள் செய்த ஆட்டம் பாட்டங்களைக் கண்டு மிகவும் சந்தோஷப்படுகிறோம். அவைகளெல்லாம் மிகவும் நன்றாயிருந்தன.

மிஸ்லிஞ்சு மாதையும் சகோதரி சுப்ப லக்ஷ்மி அம்மாளையும் வாழ்த்துகிறோம்." என்று அங்குள்ள புஸ்தக குறிப்பில் எழுதினார்கள். மறுநாள் லேடி பெண்ட் லெண்ட் அவர்கன் இவ்வாஸ்ரமத்து பெண்மணிகளுக்கு பஸ்ராவிலிருந்து வந்த ஆறு பெட்டிகள் நிறைந்த பேரீச்சம் பழங்களை அனுப்பினார்கள்.

ருஷியாவில் ஒவ்வொருவரும் கட்டாயம் ப்ரதம கல்வி கற்று வரவேண்டுமென்று ருஷியா கவர்ண்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

எச். இ. லேடி. பெண்ட்லண்ட் அவர்கள் சிறிய பொட்டக்ராப் பெட்டியை வைத்துக் கொண்டு தாம் செல்லுமிடங்களில் தென்படும் வஸ்துக்களையும், மனிதரையும் படம் எடுப்பதில் மிக்க ஆவல் உடையவர்கள். சென்றமாதம் 18௳ மாட்டுப்பொங்கல் தினம் சைதாப்பேட்யில் தெருக்களில் சென்று அலங்காரம் செய்த ஆடுமாடுகளையும், மாட்டு வண்டிகளையும் பார்த்து அவைகளைப் போல் படம் எடுத்தார்கள். வண்டிக்காரர்களைக்கண்டு அவர்களுடைய ஜீவனோபாயஸ்திதியைப்பற்றி விசாரித்தார்களாம். இவ்விதம் இவர்கள் விசாரித்ததைக் கண்டு ஜனங்கள் சந்தோஷமடைந்தார்கள்.

மிஸ்டர் லாய்ட் ஜார்ஜ் பிரதம மந்திரியாய் விட்டாரென்ற சமாச்சாரத்தைக்கேட்ட ஜர்மானியர்கள் பயந்து நடுநடுங்கி வெளிக்குமாத்திரம் காட்டாமல், சமாதானம் செய்து கொள்ள தங்களுக்கிஷ்டமென்று தெரிவித்தார்கள். இங்கலாந்திலுள்ள ராஜதந்திர நிபுணர்களும், பத்திராசிரியர்களும் ஒருமிக்க இது அல்ல அப்படி செய்ய சமயம், ஜர்மானியர்களுடைய அநியாயச் செயல்களை அடக்குவதுதான் சமாதானம் என்று சொல்லி விட்டார்கள். அவ்விதமே ருஷியர்களும் பிரன்சுக்காரர்களும் சொல்லிவிட்டார்கள். இந்தியாவிலுள்ளவர்களும் அவ்விதமே அபிப்பிராயப்படுகிறார்கள்.

மிஸ்ஸஸ் சிரௌஜினி நாயுடு அவர்கள் அலஹாபாத்தில் "தற்காலத்திய விஷயங்கள்" என்றதைப்பற்றி ஒரு உபந்நியாசம் செய்தார்கள்.

யுத்த பண்டிற்கு பரோடாமகா ராஜா லக்ஷம் ரூபாயும், ராஜபுதனத்திலுள்ள மன்னர்கள் ரூ. 4,51,206, நீபால் கவர்ண்மெண்டும் அத்தேசத்து மந்திரியும் 3 லக்ஷம் ரூ. அளித்திருக்கிறதைக் கேட்டு சந்தோஷப்படுகிறோம்.

சைதாப்பேட்டை டீசர்ஸ் காலேஜியில் கல்வி சம்பந்தமான பொருட்காட்சி ஜனவரிமாதம் 3௳ கவர்னரால் திறக்கப்பட்டது. அக்காட்சியில் பாட்சாலைகளில் பிள்ளைகளுக்குப் போதிக்கத் தகுந்த உப

கரணங்களும், போதனாமுறை சம்பந்தமான விஷயங்களுமிருந்தன. பூகோள சம்பந்தமாய் போதிக்க பற்பல சிறந்த படங்களும், கருவிகளும் வைக்கப்பட்டிருந்தன. ஸயன்ஸ் விஷயமாகவும் அநேக நூதனசாமான்கள் தென்பட்டன. கிண்டர் கார்ட்டன் சம்பந்தமாக பிள்ளைகள் வரைந்த சித்திரங்கள் வெகு நன்றாக யிருந்தன. கைத்தொழில் சம்பந்தமாக களிமண்வேலை, மரவேலை (தச்சுவேலை) முதலியவைகளும் யாவரையும் மெச்சும்படி செய்தன. இதன் சம்பந்தமாய் நடந்த உபந்நியாசங்களும் அறிவைப் புகட்டக்கூடியவவைகளே.

மூன்று வருஷகாலமாக பூனாவிலுள்ள சேவசாதன் சபையார் ஸ்திரீகளை உபாத்திமைத் தொழிலில் பயிற்று வந்தார்கள். அவ்விதம் செய்ததில் அநுகூலமாய் முடிந்ததாம். அவ்விதம் முடிந்ததைக் கொண்டு அச்சபையார் நின்று விடாமல் ஸ்திரீகளுக்கு போதனாமுறை காலேஜ் ஒன்றை சென்ற வருஷத்தில் கவர்ன்மெண்ட் அநுமதிபெற்று ஸ்தாபித்தார்கள். சென்றமாதம் அக்காலேஜியில் ஒரு கூட்டம் கூடிற்று. அச்சமயம் காலஞ்சென்ற ரானடேயின் மனைவியார் சபைத்தலைமையை வகித்தார். காரியதரிசி ரிபோர்ட்டை வாசித்து ஸ்திரீகள் உபாத்திமைத் தொழிலில் விருத்தியடைவது மிகவும் நல்லதென்றும் இப்பொழுது 50 விதந்துகள் அவ்வித பயிற்சிபெற்று வருகிறார்களென்றும், தேச நன்மைக்காக ஸ்திரீகள் இவ்விதம் செய்து வருவது மிகவும் உபகாரம் என்றும் சொன்னார்.

சென்னையில் ப்ரமசமாஜத்தில் சென்றமாசம் 26உ ஒரு மாதர் கூட்டம் கூடிற்று. அதற்கு ஸ்ரீமதி பாருகுட்டி அம்மாள் பி. ஏ. எல். டி. அவர்கள் சபைத்தலைமையை வகித்தார்கள். டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாள் அவர்கள் (எம். பி. சி. எம்.) தாழ்ந்த வகுப்பாரின் முன்னேற்றத்தின் அவசியத்தைப் பற்றியும், ஸ்ரீமதி காமாக்ஷி அம்மாள் பக்தியும் அன்பும் என்பதைப்பற்றியும், ஸ்ரீமதி மங்கம்மாள் ராஜாராம் மோஹனராயின் திவ்ய சரித்திரத்தைப்பற்றியும் உபந்நியாசம் செய்தார்கள். ஸ்ரீமதி மங்கம்மாள் 10 வருஷகாலமாய் தமது சகோதரிகளுக்காக உழைத்து வருவதைக் குறித்து ஸ்ரீமதி பாருகுட்டியம்மாள் மிகவும் சந்தோஷப்படுவதாகவும் அந்த அம்மாளுக்கு மற்றவர்களும், இன்னும் ஊக்கம் தளராமலிருக்கும்படி தைரிய மூட்ட வேண்டுமென்றும் சொன்னார்கள். மிஸ்பவானியும், மிஸ்ஸஸ் போஸும் வீணை வாசித்து மங்களம்பாடியபின் சபைகலைந்தது.

வித்தியாதிகாரிகளின் கான்பரன்ஸில் ராஜப்பிரதிநிதி அவர்கள் ஸ்திரீகளின் கல்வி விஷயமாக பின்வருமாறு அபிப்பிராயப்பட்டார்:— "ஸ்திரீகளுக்குள் கல்வியை விருத்தி செய்ய வேண்டியதைப் பற்றியும் நீங்கள் கவனிக்கப் போகிறீர்கள். தேசத்தின் ஜனாசாரவழக்க பழக்கங்கள் பெண்கல்வி யபிவிருத்திக்குத் தடைகளா யிருப்பதை என்னை விட நீங்கள் நன்றாயறிந்திருப்பீர்கள். என்றாலும் இத்தேசத்தில் ஆண்கள் கல்விபெற்று வருவதற்குத் தகுந்தவாறு பெண்கள் படிப்பிக்கப்பட்டு வாராததைக் குறித்து எனக்கு ஒருவித அச்சம் ஜனிக்கின்றது. புருஷர்களின் கல்வியபிவிருத்திக் கேற்றவாறு ஸ்திரீகளும் கல்வியறிவு பெற்று வராவிட்டால் தேசத்தில் கல்வியினால் எவ்வித நலமும் உண்டாகமாட்டாது. இது உண்மையென்பதை அநேக இந்தி

யர்கள் ஏற்றுக்கொள்வார்கள். ஆகவே இவ்விஷயத்தில் நம்மால் கூடியதை நாம் செய்யக் கடமைப்பட்டுள்ளோம். நம்முடைய முயற்சியில் படித்த இந்தியர்கள் கூட்டுறவு காட்டுவார்களென்று நான் நம்புகிறேன். அதோடு இவ்விஷயத்தில் ஸ்திரீகளின் கூட்டுறவும் நமக்கு வேண்டும். அவர்களே தங்களுக்குள்ள தேவைகளைத்தெரிந்து சொல்லக் கூடியவர்கள். ஆண்கள் மாத்திரம் எவ்வளவு யோசனை செய்து ஒரு ஏற்பாட்டைச் செய்தாலும் ஸ்திரீகளின் அபிப்பிராயமும் அதனில் கலந்திருந்தாலன்றி அந்த ஏற்பாடு ஈடேற மாட்டாது."

பீகம் ராணியின் தாராள சிந்தை:—மத்திய இந்தியாவிலுள்ள போபால் சமஸ்தான பீகம் ராணிபட்டத்துக்கு வந்து 17 வருஷ காலமாகிறது. தவிர அவருடைய சஷ்டியப்தபூர்த்தியும் சென்ற மாசத்தில் நடைபெற்றது. ஆகவே, அந்த சுபதினத்தில் அவருடைய சமஸ்தானப் பிரஜைகளும் உத்தியோகஸ்தர்களும் கூடி, அவருக்கு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்க, அச்சமயம் அவர் தமக்குள்ள தாராள சிந்தையுடன் பேசியிருக்கிறார். அச்சுபதினத்தை அவர் நன்கு கவனித்து, ஜனங்களுக்கு மேன்மேலும் விசுவாசத்தையும் அன்பையும் பெருகச் செய்வதற்காக வரி வஜா செய்திருப்பதோடு, கூடிய சீக்கிரத்தில் சமஸ்தானத்திலை ஆரம்பக் கல்வியை இலவசமாகவும் கட்டாயமாகவும் செய்யவும் தீர்மானித்து விட்டார்.

ஜனவரி மீ 31உ புதன்கிழமை மாலை 4-30-மணிக்கு கோஷா பார்ட்டிக்கு கவர்ன்மெண்டு ஹவுஸில் கவர்னரும் அவரது மனைவியும் சிறிய விருந்தளித்தார்கள்.

பிப்ரவரி மீ 9உ வெள்ளிக்கிழமை காலை 11-மணிக்கு சென்னைக் கவர்னர் விருந்து நடத்தப்படும். அரண்மனையில், சென்னை ஸ்திரீகளின் யுத்த நிதிக்கூட்டம் கூடும்.

THE COMPLETE LETTER WRITER.

(4th Edition Revised and Enlarged.)

HARI CHARAN DAS.

PRICE Re. 1. (*full cloth gilt 320 pages*).

An universal Guide to the Art of letter Writing for all positions of life. It contains 24 Chapters—Private Correspondence, News Papers, Doctors, School Correspondence, Government and Commercial, Collectors Office, Attorneys Vakils, and Muktears, Steamers Police, Municipality, Incometax, Railways, Tramways, Medical Department, Postal Department, Telegraph Department, Precis Writing, Drafting Docketing, Book Keeping, Miscellaneous forms Miscellaneous Application forms, Forms of Address, Paper Currency, Abbreviations and Daily wages. **Matriculation Essay—By** Hari Charan Das. Very useful book for School Boys. Price As. 8. **English Etiquette & English Proverbs** A very useful book for those who come in contact with Englishmen. Price As. 5 only. **Child's Easy Conversation**, 2nd. ED.—If you want to speak in English fluently you should buy the above book. It will teach both you and your children to speak in English within two are three months Price As. 10 only.

M. L. DAS & CO. BOOK-SELLERS & PUBLISHERS,
122, *Baitakhana Road*, CALCUTTA.

இந்துஸ்திரீ ரத்தினங்கள். (முதல்பாகம்.)
துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது.
விலை அணா 8.
குமாரசுவாமி நாயுடு அண்ட் சன்ஸ். சின்னதம்பி தெருவு, சென்னை.

CALENDAR, 1917

பஞ்சாங்கம்

1917ஆண்டு பிப்ரவரிமீ—அனளஆண்டு தை, மாசிமீ

இங்.	தமிழ்.	வாரம்.	திதி, நக்ஷத்திரம், பண்டிகை.
1	20	வியா	தச 46-12, ரோ 59-15, நா 0-8.
2	21	வெ	ஏகா 44-21, மி 60-0, தி 14-12, உத்திரா 2, சு.
3	22	சனி	துவா 47-40, மி 3-41, தி 25-58
4	23	ஞா	திர 51-58, திரு 8-12, நா 12-43. [பர்வதம்
5	24	திங்	சதி 57-4, புன 13-58, நா 7-43, கந்தசாமி கைலாச
6	25	செ	○ பௌள 60-0, பூ 20-20, நா 27-38.
7	26	புத	○ பௌள 2-43, ஆயி 27-1, விஷாபாவ.
8	27	வியா	பா 7-58, மக 33-14, தி 0-7, நா 26-41, அவி 3-செ திருமுடிசியாள்வார் திருநக்ஷத்திரம்.
9	28	வெ	த்வி 12-9, பூரம் 39-1, நா 26-5, உத்திராட 2-புத
10	29	சனி	திரி 17-14, உத்திர 44-23, சே1-41, கூரத்தாள்வார் திருநக்ஷத்திரம்.
11	30	ஞா	சது 19-35, அஸ் 47-36, தி 6-30, அவி 3-சு.
12	1	திங்	பஞ் 21-11, சி 50-10, தி 8-27.
13	2	செ	ஷஷ் 23-14, சு 52-49, தி 4-15.
14	3	புத	ஸப் 20-35, வி 51-18, தி 6-22.
15	4	வியா	அஷ் 18-25, அ 50-10, தி 1-6.
16	5	வெ	நவ 15-59, கே 48-40, தி 3-49.
17	6	சனி	தச 11-8, மூ 45-12, நா 12-39.
18	7	ஞா	ஏகா 7-47, பூரா 43-4, தி 8-20. [18-54
19	8	திங்	துவா 0-49, திர 54-25, உத்தி 38-34, தி 1-34, நா
20	9	செ	ச 49-15, திரு 33-33, நா 13-58, மகாசிவராத்ரி.
21	10	புத	● அமா 43-16, அ 29-20, நா 17-17.
22	11	வியா	சு-பா 37-36, ச 25-24, நா 11-34.
23	12	வெ	த்வி 32-26, பூரட் 21-50, நா 15-40.
24	13	சனி	திரி 27-43, உத்திரட் 18-52, நா 19-49.
25	14	ஞா	சது 24-5, ரே 16-43.
26	15	திங்	பஞ் 21-21, அ 15-25, தி 5-38 நா 10-49, அவி 3-சு.
27	16	செ	ஷஷ் 19-40, ப 15-17, நா 16-43.
28	17	புத	ஸப் 19-17, * கா 16-18, நா 26-38.

Printed at the Commercial Press, Madras &
Published by C. S. Ramaswamy Iyer, Triplicane, Madras. S.E.

H. E. LORD CHELMSFORD (*Our present Viceroy.*)

எச். ஈ. லார்ட் செம்ஸ்போர்ட்

[நமது வைஸ்ராய்.]

21 MAR 1917

The Tamil Zenana & School Magazine.

மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"—ஔவையார்.

Vol. XVIII	Madras March 1917	No. 4
புத்தகம் 18	சென்னை: மார்ச்சுமீ, 1917ஞ	இலக்கம் 4

ஸர் ஜான் பிரன்ச்.

ஸர் ஜான் பிரன்ச் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். இவருக்கு பந்துக்கள் இங்லாந்து, ஸ்காட்லண்ட், ஐரலண்ட் முதலிய விடங்களில் உண்டு; பிரான்சிலும் பந்துக்கள் உண்டு. இவருடைய பெரிய பாட்டனார், முதலியவர்கள் பெரிய பூஸ்திதியுடையவர்கள்; இவருடைய தாயாரின் பந்துக்கள் ஸ்காட்லண்டில் உண்டு. தாயாரின் பெயர் மார்கரட் எக்ல்ஸ். இம்மாது க்ளாஸ்கோவில் ஒரு சிறந்த தனவானுடைய புத்திரி. பிரன்சினுடைய தகப்பனாரோ கப்பற் படையில் கேப்டின் அதாவது தலைவர். இவருடைய தகப்பனார் இறந்த பின் வில்லியம் ஸ்மித் என்பவர் இக்குடும்பத்திற்குத் தலைவராயிருந்தார். இவர் இவருக்கு சிற்றப்பன். பிரன்சுக்கு ஐந்து சகோதரிகளுண்டு. ஒருவள் ஸ்திரீகளின் சுவேச்சை சங்கத்தில் உழைத்து வருகிறாள்.

ஸர் ஜான் பிரன்சு 1852-ம் வருஷம் செப்டம்பர்மீ 28உ கேன்ட் என்றவிடத்தில் ஜனித்தார். இவர் சிறிய பையனா யிருந்தபொழுது கண்டிப்பும் தீவிரமும் உள்ளவராயிருப்பாரென்று ஒருவரும் நினைக்கவில்லை. இவர் கூச்சமுள்ளவராயிருந்தார். வீட்டில் கடவுளைப்பற்றி தமது சகோதரிகளுக்கு பிரசங்கம் செய்து வந்தார். இப்படி இவர் செய்து வந்தமையால் இவர் ஒருக்கால் பாதிரியாய் வருவரோ என்பதாக வீட்டிலுள்ளவர்கள் நினைத்தார்களாம். இவர் இரக்கமுள்ளவர். கடின நெஞ்சுள்ளவரல்ல. இதரானுக்கு உதவிபுரிய வேண்டுமென்னும் பூர்ண எண்ணமுள்ளவர். இவர் இவ்வித நற்குணங்களைப் பெற்றிருந்தமையால் சோல்ஜர்கள் இப்பொழுதும் இவரைப் புகழ்ந்து வருகிறார்கள்.

நிற்க, மழை காலத்தில் இவர் வீட்டில் மெத்தையிலிருந்து கீழிறங்கி சாப்பிடும் அறைக்குப்போய் அடுப்பை மூட்ட ஆரம்பித்தாராம். இங்லாந்து முதலிய தேசங்களில் நிலக்கரியைத்தான் விசேஷமாக அடுப்புக்கு

உபயோகித்து வருகிறார்கள். ஏனெனில் நெருப்பு சீக்கிரத்தில் அணைந்து போகாது. நெருப்பு எப்பொழுதும் அடுப்பிலிருக்கும். கணப்பு காயவும் அங்குள்ளவர்களுக்கு உதவும். ஆகையால் தான் நிலக்கரியை உபயோகித்து வருகிறார்கள். இவர் அடுப்பில் நிலக்கரியைப்போட்டு நெருப்புக் குச்சியை யெடுத்து அதில் பற்றவைத்துப் பார்த்தார். அதில் நெருப்பு பிடிக்கவில்லையாம். இங்கு அச்சமயத்தில் இவர் வீட்டு வேலைக்காரி வந்தவுடன் அம்மா! உனக்காக நெருப்பு மூட்ட என்ன முயன்றும் பயன்படவில்லையே என்றாராம். இவருக்கு சிறு வயது முதல் இதராளுக்கு உதவிபுரிய வேண்டுமென்ற எண்ணமுண்டு. ஆகையால் தான் சோல்ஜர்களும் மற்றவர்களும் இவரை மெச்சி வந்தார்கள். இவர் சிறு வயதிலேயே தம் தாய் தந்தைகளை இழந்துவிட்டார். இவருடைய சிற்றப்பன் இவரையும் இவருடைய சகோதரிகளையும் செவ்வனே காப்பாற்றி வந்தார். இவருக்கு வயதாக ஆக யுத்தங்களைக் குறித்துப் படிக்க இவர் ஆவல் கொண்டார். நெபோலியன் போனபார்ட் என்ற மகான் சரித்திரத்தைப் படிப்பதில் மிக்க விருப்பம் இவருக்குண்டு. ஆயினும் இவர் தமது பாடசாலைக்குக் கிரமமாய் போய்க்கொண்டும், தமது பாடங்களை அலக்ஷியம் செய்யாமல் நன்றாகப் படித்துக்கொண்டும் வந்தார். இவர் எப்பொழுதும் சுறு சுறுப்புள்ளவர். படிப்பதில் கருத்துள்ளவர். ஒரு பாடத்தைப் படிக்க ஆரம்பித்தால் அதை முழுவதும் நன்றாகப் படித்து விடுவார். அரை குறையாக படிக்கமாட்டார். உபாத்தியாயர்களும் இவருடைய விடாமுயற்சி, படிப்பதில் விருப்பம், புத்திநுட்பம் முதலியவைகளைக் கண்டு சந்தோஷித்தார்கள்.

தன் தகப்பனார் கப்பற் படையில் சேர்ந்து வேலை செய்த மாதிரி இவரும் இத்தொழிலைக் கற்பிக்கும் பாடசாலையில் சேர்ந்து கற்றுவந்தார். அங்கு கப்பற்படைக்குரிய விஷயங்கள் யாவற்றையும் செவ்வனே கற்றுக் கொண்டபின் பரிக்ஷையிற்றேறினார். பின்பு ஒரு யுத்த கப்பலில் வேலையில் அமர்ந்தார். தாழ்ந்த வேலையிலிருந்து படிப்படியாக கேப்டினாகவும் நியமிக்கப்பட்டார். இவ்விதம் 4 வருஷ காலம் கப்பற் தொழிலில் பழகின பின் தரைப் படையில் சேர்ந்தார். உடனே லப்டினண்டாக நியமிக்கப்பட்டார். அப்பொழுது இவர் இளம்பிராயமுள்ளவர். இவருக்கு அநுபவம் அதிகமில்லை. சோல்ஜர்கள் இவரை கேலிபண்ணிக்கொண்டிருந்தார்கள்.

இவர் விடாமுயற்சியாலும் புத்தி சாதுரியத்தாலும் பாலியமாயிருந்த போதிலும் ஒவ்வொரு விஷயத்தையும் உடனுக்குடனே செவ்வனே செய்து தெரிந்துகொண்டார். தாம் செய்து பார்த்ததையும், கற்றுக் கொண்டதையும் மறக்காமல் ஞாபகத்தில் வைத்துக்கொண்டார். மேலும் தம் வேலை என்ன உண்டோ அதைத் துரிதமாகவும், சரி

யாகவும் செய்து வந்தார். இவ்விதம் இவர் கஷ்டப்பட்டு யாதொரு தப்பு தண்டாக்களின்றி தமது வேலையைத் தமது பெரிய உத்தியோகஸ்தர் மெச்சும்படி சுறு சுறுப்புடன் சரிவர செய்து வந்தமையால் துரிதமாக உயர்ந்த பதவிக்கு அவர்கள் இவரை சிபார்சு செய்து வந்தார்கள். இவரும் அவ்வித பதவிக்கு அருகராகயிருந்தார்.

1884--5-ம் வருஷத்தில் ஈஜிப்டில் மாதியைச் சேர்ந்தவர்கள் கலகம் செய்தபொழுது அவர்களை யெதிர்த்து அவர்கள் கொட்டத்தையடக்க அவ்விடத்திற்குப்போனார். ஜெனரல் ஸர். ஹர்பர்ட். ஸ்டூவர்ட்டின் கீழ் மேஜராகயிருந்து யுத்த சேனையை நடத்திவந்தார். ஸ்டூவர்ட் அச்சமயம் கார்ட்டூம் என்ற விடத்தை நோக்கி கார்டனுக்கு உதவிபுரிய 2500 மனிதருடன் சென்றுகொண்டிருந்தார். ஆபு க்ளீ என்றவிடத்தில் ஸ்டூவர்ட்டை மாதியைச் சேர்ந்த 11,000 பேர்கள் எதிர்த்தார்கள். கோரமான யுத்தம் இருதிறத்தாருக்கும் அங்கு நடந்தது. சிறிய ப்ரிடிஷ் சேனையோ சதுரமாக நின்றுகொண்டு பலத்த யுத்தம் புரிந்து, விரோதிகள் ப்ரிடிஷ் சேனையின் உள் புகுந்து அவர்களைத் தும்சம் செய்ய பிரயத்தினம் செய்தபொழுது ப்ரிடிஷார் விரோதிகளில் பலரைக் கொன்று மீதியுள்ளவர்களைத் துரத்திக் கொண்டுபோனார்கள்.

மறுநாள் பலத்த யுத்தம் நடந்தது. ஸர் ஹர் பர்ட் ஸ்டூவர்ட் கொல்லப் பட்டார். இவர் கொலையுண்ட மூன்று வாரமானதும் ஸர் ரேட்வேர்ஸ் புல்லர் பெருத்த சேனையுடன் இங்கு வந்தார். பிரன்சு மிக்க தீரத்துடன் தமது படையைக் கொண்டு விரோதிகளை யெதிர்த்தா ரென்று ஸர். ரெட் வேர்ஸ் தமது கடிதமொன்றில் எழுதினார். பிறகு பிரன்சும் குதிரைப் படையை நடத்துவதில் சமர்த்தரென பிரக்யாதி பெற்றவுடன் லப்டினண்ட் கர்னல் என்ற உயர்ந்தபதவிக்கு நியமிக்கப்பட்டார்.

ஆறு வருஷகாலம் இவ்விதம் அலுவல் செய்த பின் இந்தியாவிலுள்ள குதிரைப் படைக்கு இன்னும் இதைவிட உயர்ந்த உத்தியோகஸ்தராக நியமிக்கப் பட்டார். இவ்விதம் இரண்டு வருஷமிருந்து சமர்த்தரென பேற்பெற்ற பின் யுத்த ஆபீஸுக்கு மாற்றப்பட்டார். இவர் குதிரைப் படையைப் பழக்குவதில் எழுச்சியை உண்டாக்கி அப்படைக்கு வேண்டிய யுத்த வித்தையைப் போதித்து வந்தார். இவரால்தான் குதிரைப்படை மிகவும் சிறந்ததாயிற்று.

போவர் யுத்தம் ஆரம்பமானதும் பிரன்சு நெட்டாலுக்குச் சென்று ஒரு பெரிய குதிரைப் படைக்குத் தலைவராய் அவர்களுடன் பலத்த போர் புரிந்தார். இவர் முன் வைத்தகாலைப் பின் வாங்கமாட்டார். எலண்ட்ஸ் வாக்ட் என்ற விடத்தில் இவருக்கு முதல் முதலில் ஜயமுண்டானது. இங்கு போவர்கள் ரயில் பாதையை உடைத்து விட்டார்கள். இவ்

விடத்தை வெகு மும்முரமாக தாக்கிக் கொண்டிருந்தார்கள். இவர் போவர்களை காற்றாய்ப் பறந்து போகும்படி செய்துவிட்டார். அவர்களுடைய மருந்து, சாமான், உடுப்பு முதலியவைகளை வைக்கு மிடங்களைக் கைவசமாக்கிக் கொண்டார்.

போவர்களின் பிரதமப் படையானது முன் வந்து லேடி ஸ்மித் என்ற பட்டணத்தைச் சூழ்ந்து கொள்ள ஆரம்பம் செய்தது. அப்பொழுது ஜெனரல் ஸர் ஜார்ஜ் வொயிட் அப்பட்டணத்தை எதிரிகள் வசம் ஆகாமலிருக்கும்படி பாது காத்துவந்தார். அவ்விதம் செய்கையில் ஒரு முக்யமான கடிதம் பிரன்சிடம் கொடுத்து அதை ஸர் ரெட்வர்ஸ் புல்லரிடம் கொடுத்து வரும்படி அனுப்பினார். பிரன்சு ரயிலில் போகும்போது போவர்கள் துப்பாக்கியால் சுட்டார்கள். குண்டுகள் ஜன்னல்களின் வழியாகச் சென்றன. பிரன்சு சௌக்கியமாக சுருட்டு பிடித்துக்கொண்டு முகமலர்ச்சியுடன் பிரயாணம் செய்தாரேயொழிய சிறிதும் குண்டுக்குப் பயப்படவில்லை. இவர் உயிர் தப்பினது.

இவர் பின்பு பல தடவை யுத்தம் புரிந்தார். போவர்கள் முன்னுக்கு வந்து ப்ரிடிஷாரை எதிர்க்காமலிருக்கும்படி அவர்களைத் தடுத்தார். புதிய யுத்தமுறையைப் புத்திசாமர்த்தியத்தால் சாதுரியமாகக் கையாடிவந்தார்.

1900-ம் வருஷ முதலில் லார்ட் ராபர்ட்ஸும் கிட்சனரும் தென் ஆப்ரிக்காவுக்கு வந்தார்கள். அச்சமயம் ஜெனரல் பிரன்சு 5000 பேர்களுள்ள படைக்கு தலைமை வகித்து வந்து கிம்பர்லியைப் பெற முயன்று வந்தார். கிம்பர் லியை போவர்கள் சூழ்ந்துகொண்டு அதை முற்றுகைப் போட்டுக் கொண்டிருந்தார்கள். ப்ரிடிஷ் துருப்பு அதை விரோதிகளின்வசம் அகப்படாமல் பாதுகாத்துவந்து, அவர்களுக்கு உதவிபுரிந்து கொண்டிருக்கையில் "நான் நிச்சயமாக இரண்டு மூன்று தினத்திற்குள் உதவி புரிந்து—நான் உயிரோடிருந்தால்—போவர்களைத்துரத்தி விடுகிறேன்" என்று கிட்சனரிடம் அவர் சொன்னார். போவர் தலைவரான டிவெட் என்பவர் இவர் இவ்விதம்துருப்பை பல திசைகளிலும் கொண்டு வருவதைத் தடுக்க முயன்றார். பிரன்சு ஒரு நதியைத் தாண்டும்பொழுது அவர் சமீபத்தில் ஒருகுண்டுவிழுந்து அது வெடித்தது. அப்பொழுது இவர் உயிர்தப்பினது தெய்வச்செயலே. இப்படி இவர் பலதடவைகளில் துணிவாய் விரோதிகளுக்குச் சிறிதும் பயப்படாமல் அவர்கள் அருகில் யுத்தம் புரிய சென்றிருக்கிறார். இவருக்கு காயம்படவே யில்லை. அபாயமான இடங்களிலிருந்தும் இவர் உயிர் தப்பின போதிலும், காயம் சிறிதும் படாமலிருந்தது ஆச்சரிய மல்லவா?. யுக்தியாயும் புதிய மாதிரியாயும் தமது துருப்பை கிம்பர்லியை நோக்கி திருப்பிக்கொண்டு போனார். போவர்களுடைய காலாட்படைகளையும், பீரங்கிப்படைகளையும் வீராவேசத்துடன் எதிர்த்து அவர்கள் படைகளைச் சின்னபின்ன மாக்கிக்

கொண்டு நேராக அவர்கள் மத்தியில் நுழைந்து சென்றார். போவர்கள் திண்டு முண்டாடி கடைசியில் பார்க்கும் பொழுது குதிரைப்படையின் தலைவர் கிம்பர்லியை யடைந்து விட்டாரென்பதை யறிந்து குண்டுகளைப் பிரயோகம் செய்தார்கள். அப்பொழுதும் யுத்த களத்தில் வெயிலோ தீக்ஷிண்ய மாயிருந்தது. தூசியோ அதிகம், நெருப்புப் பொரியோ எங்கும் பரவியிருந்தது. இவ்வித மிருந்தும் பிரன்சு தைரியத்துடன் முன் செல்வதிலேயே கண்ணும் கருத்துமா யிருந்தார். கடைசியாக போவர்களைத் திரும்பி ஓடும்படி செய்துவிட்டு கிம்பர்லி பட்டணத்திற்குள் தாம் கிட்சனருக்குச் சொல்லிய வண்ணம் மறுநாள் காலையில் குதூகலத்துடன் பிரவேசித்தார். அங்குள்ளவர்கள் இவருக்கு முகமலர்ச்சியுடன் நல்வரவு கூறினார்களென்றும் சொல்ல வேண்டுமோ?

அன்று சாயங்காலமே, லார்ட் ராபர்ட்ஸுக்கு கிம்பர்லி கைவசமானதும், போவர்கள் ஓடிப்போனதும் தெரிந்தவுடன் மேகர்ஸ்போன்டீன் என்ற விடத்தை விட்டு விட்டு திரும்பிச் செல்லும்க்ரான்சேயின் சேனை எங்கு ஒருக்கால் ப்ளோம் பொன்டீனைப் பிடிக்க வருமோ என்று எண்ணி உடனே பிரன்சை அங்கே போகும்படி உத்திரவு அனுப்பினார்கள். பர்டிபர்க்கில் போவர்கள் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தார்கள். கிட்சனர் சேனையுடன் அங்குசென்று அப்பட்டணத்தைச் சுற்றி சூழ்ந்து கொண்டார். இருவர்களுக்கும் பலத்த யுத்தம் நடந்தபோதிலும் க்ரான்சேயையும் அவருடைய சேனையையும் பிடித்துக் கொண்டார். போவர்களில் மிக்க வீரரும், போர் தலைவரில் சிறந்தவருமாகிய க்ரான்சே சரணாகதி யடைந்தார்.

ஜெனரல் பிரஞ்சும ப்ளோம் பொன்டீனுக்குப் போய்அங்கு யுக்தியாய் பல ஏற்பாடுகளைச் செய்து விட்டுப் ப்ரிடோரியாவுக்குச் சென்றார். அங்கு சென்றவுடன் இவர் பேர் பிரக்யாதி பெற்றது. இவர் அவ்விதம் இடம் விட்டு இடம் போனமையால் தான் போவர்களும் ஒவ்வொரு பட்டணத்தையும் காலி செய்து கொண்டு போக வேண்டியிருந்தது. ப்ரிடோரியாவைப் பிடித்துக் கொண்ட பின்பு கிட்சனர் தமது சேனையைப் பல விடங்களிலும் போகும்படி செய்தார். இவ்விதம் இவர் செய்தமையால் போவர்கள் தலைக்காட்டவே முடியவில்லை. பிரஞ்சு கிழக்கு டிரான்ஸ்வால் முழுவதும் தமது சேனையை அனுப்பினார். கேப் காலனியில் சிறிது கலக முண்டாகவே அங்கும் தமது சேனையை அனுப்பினார். 1902-ம் வருஷம் மேமீ 31௳ போவர்கள் தோல்வி யடைந்தமையால் பிரிடிஷாருடன் சமாதான உடன்படிக்கைசெய்து கொண்டார்கள். அச்சமயத்தில் பிரன்சு திறமை வாய்ந்த வரென்றும், யோசனை சக்தியுடையவரென்றும், குதிரைப் படைக்குச் சரியான தலைவரென்றும் யாவரும்

சொன்னார்கள். லார்ட் ராபர்ட்ஸும், கிட்சனரும் பல தடவைகளில் இவரைப் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள். இவர் கீழிருந்த சோல்ஜர்களும், முழுநம்பிக்கையுடன் இவரை நம்பியிருந்தார்கள். இவரிடத்தில் நற்குணங்களிருப்பதைக் கண்டு இவரை மிகவும் நேசித்து வந்தார்கள். இவர் சாந்த முள்ளவர். வாய்பதட்டமே இவரிடத்தில் கிடையாது. சாதாரண உடையைத் தரித்துக் கொண்டிருப்பாரே யொழிய டாம்பீகமான உடைகளைத் தரித்துக்கொள்ளமாட்டார். கர்வமே இவரிடத்திலில்லை. கைசளைத்த விரோதிகளிடத்தில் தயாளகுணமுள்ளவராக யிருப்பார். அவர்களைப் பார்த்து தன்னைப் பெருமையாகப் பாராட்டிக் கொள்ளமாட்டார். கர்வம் சிறிதும் இவரிடத்தில் தென்படாது. சாதாரண உத்தியோகஸ்தரைப் போல் ஆபீஸுக்குப் போவார். தமது வேலையைச் சரிவர ஒழுங்காகச் செய்வார். பெரியோரும், புத்திமான்களும் இவ்விதம் தானிருப்பார்கள். பொறுமையே அவர்களிடத்தில் குடி கொண்டிருக்கும்.

நிற்க, சர்ஜான் பிரன்சு போவர் யுத்தம் முடிந்த பின் ராணுவத்தைச் சேர்ந்த பற்பல உயர்ந்த பதவிகளில் இருந்து வேலை செய்து வந்தார். 1913ம் வருஷத்தில் இவரை பீல்ட் மார்ஷலாக நியமித்தார்கள். இப்பொழுது நடக்கும் யுத்தம் ஆரம்பமானதும் ப்ரிடிஷ் துருப்புக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். யுத்த முனையில் தமது சேனையுடனிருந்து யுத்தம் புரிந்துவருகிறார். பிரயத்தனங்கள் செய்து கஷ்டப்பட்டு வேலை செய்துவந்தால் ஜயம்உண்டாகும் என்பதை உண்மையாக உணர்ந்து கொண்டவர் பிரன்சு தான். இவருடைய் நற்குணங்களே இவருக்குப் பூஷணங்களாய் விளங்குகின்றன.

ஸ்திரீகளுக்கு தோட்டவேலை.

முன் காலத்தில் நமது தேசத்தில் ஸ்திரீகள் தோட்டம் வைத்து அதில் காய் கரிகளையும் புஷ்பச் செடிகளையும் பயிராக்கி வந்தார்கள். புஷ்பத் தோட்டங்களில் ஸ்திரீகள் சாயங்கால வேளையில் உல்லாசமாய் தங்கள் சகிகளோடு நடந்து வந்ததாகவும், பந்து முதலிய விளையாடல்களை ஆடிவந்ததாகவும் தெரிகிறது. தற்காலத்தில் கிராமங்களில் ஸ்திரீகள் தங்கள் விட்டு கொல்லைப் புறத்தில் தங்கள் உணவுக்கு வேண்டிய காய் கரிகளைப் பயிராக்கி வருகிறார்களென்றே சொல்வோம். அப்படி செய்வதில் மானக்குறைவென்று பட்டணங்களிலுள்ள ஸ்திரீகள் நினைப்பார்கள். அவ்விதம் நினைப்பது தப்பு. சில தினங்களுக்கு முந்தி நாமும் சில நண்பர்களும் மைலாப்பூரில் மரங்களடர்ந்த ஒரு விதிமார்க்கமாய் சாயங்கால வேளை

யில் நடந்து வருகையில் ஒரு தனவந்தரும் கவர்ன்மெண்டில் உயர்ந்த பதவியிலுள்ள வருமான ஒரு கனவானுடைய பங்களாவைச்சுற்றியுள்ள தோட்டத்தில் அவரைக் கொடியிலிருந்து அவரைக்காயை அக்கனவானுடைய புத்திரி பறிப்பதைக்கண்டு களித்தோம். நமது தோட்டத்தில் வேலை செய்வதும், செடிகளை வளர்ப்பதும், வளர்த்தபின் அவைகளிலிருந்து காய்களை எடுப்பதும் அகௌரவமாகாது. சென்னையில் அநேகமாக தனவந்தர்கள் விசாலமான பங்களாக்களில் வசித்து வருகிறார்கள்.

அவர்களுக்கு விசாலமான இடமிருக்கிறது. அந்த இடத்தில் ஒரு பகுதியில் பூந்தோட்டமும், ஒரு பகுதியில் காய்கறிகள் தோட்டமும், ஒரு பகுதியில் அழகான க்ரோட்டன் என்ற செடிகளையும் வைத்து அவைகளைக் கவனித்து வருவது மிகவும் நலம். தோட்டக்காரன் செய்யும் வேலைகளைத் தவிர ஸ்திரீகள் புஷ்பங்களை எடுக்கலாம் காய்கரிகளை எடுக்கலாம். அவைகளுக்கு எரு சரியாக தோட்டக்காரன் போட்டு வருகிறானென்பதையும், புல் பூண்டு முதலியவைகளை அப்போதைக்கப்போது எடுத்து விடுகிறானென்பதையும், அடிக்கடி பாத்திகளைக் குத்தி கிளரிவிடுகிறானென்பதையும் கவனித்து வரலாமல்லவா? தண்ணீர் சரிவர அவைகளுக்குப் பாயும்படி செய்கிறானென்பதையும் கவனிக்கலாம். அழுகிப்போன இலைகளையும் ஒடிந்த கிளைகளையும் ஒரு தனிமையான யிடத்தில் போட்டு வைக்கும்படி சொல்லலாம். மேலும் தங்கள் குழந்தைகளுகக்கு ஒவ்வொரு விதையின் விசேஷங்களைச் செவ்வனே காட்டி போதிக்கலாம். உதாரணமாக புடலை விதையும், அதை நட்டபின் எத்தனை நாள் சென்று அது முளை கிளம்புகிறதென்றும், அம்முளை எவ்விதமிருக்கிறதென்றும், அது எவ்விதம் பரவுகிறதென்றும், அது விடும் மொக்கு பூ, பிஞ்சு, காய், பழுத்தபின் பழம் முதலியவைகளையும் செவ்வனே காண்பித்து சொல்லலாமல்லவா? இவ்விதம் சொல்லி வந்தால் குழந்தைகளுக்கு செடிகளின் அருமை பெருமையும், உபயோகம் முதலியவைகளும் தெரியும். ஈஸ்வர சிருஷ்டியின் அபார சக்தியும் தெரியும். அப்படிக்கின்றி தங்கள் வேலைக் காரர்களையே ஒவ்வொன்றையும் செய்யச்சொல்லி விட்டு தாங்கள் ஒன்றையும் கவனிக்காமலிருந்தால் அவர்களுடைய தோட்டம் நன்றாயிருக்குமென்பது சந்தேகம் தான். வேலைக்காரர்கள் ஏதோ கடனுக்கு வேலையைச் செய்வார்களே தவிர மனப்பூர்த்தியாய் செய்வார்களென்பது உண்மையல்ல. ஆனால் வீட்டு எஜமானி ஒவ்வொன்றையும் தினம்பார்த்து வரும் பக்ஷத்தில் அவன் வேலை சரியாக யிருக்கும். தோட்டமும் பார்க்க அழகாகத் தோன்றும்.

இதனால் சாயங்கால வேளையில் மோட்டார் வண்டியில் ஏறிச் சவாரி செல்ல முடியவில்லையே. ஸ்திரீகள் கூடும் கூட்டத்திற்கும் போகமுடியவில்லையே என்று சொல்லுவது தப்பு. ஒவ்வொரு மணியில் என்னென்ன வீட்டு வேலை செய்யவேண்டுமோ அவைகளை ஒரு குறிப்பு புஸ்தகத்தில் குறித்து வைத்துக்கொள்ளவேண்டும். அக்குறிப்பின்படி தங்கள் வேலையைச் சரிவர செய்து வந்தால் இவர்கள் தேக சௌக்கியத்திற்கும் நல்லது. குடும்ப ஆரோக்யத்திற்கும் நல்லது. சாப்பாடும் ருசியாயும் மனோகரமாயுமிருக்கும்.

நிற்க, தோட்டத்திற்குரிய முக்கிய விஷயங்களைக் கவனிப்போம். செடியின் வளர்ச்சி, பூமியின் சாரம், காற்றின் பலம், முதலியவைகளைக் கவனிக்கவேண்டும். செடிகளுக்கு நல்ல உணவு கிடைத்தால் தான் அவைகள் செழித்து ஓங்கி வளரும். நல்ல பலனைக் கொடுக்கும். புஷ்பங்களாயிருந்தால் பரிமளமாயும் வெகு அழகாயுமிருக்கும். காய்களாயிருந்தால் பெருமனும் உருசியாயுமிருக்கும். அதிகமும் உண்டாகும்.

ஸ்திரீகள் தோட்ட வேலை செய்யக்கூடாதென்பதைக் குறித்து சாதாரணமாக சில தடைகளைச் சொல்லுவதுண்டு. முதலாவது அது மிகவும் கஷ்டமானதென்று சொல்லுவார்கள். இரண்டாவது தோட்ட வேலையால் கைகால்கள் அசுத்தமாய் விடுகிறதென்பார்கள். இரண்டாவதைப்பற்றி யோசிப்போம். தோட்டவேலைசெய்யும் ஸ்திரீ விரும்பினால் சுத்தமாயிருக்கலாம். அல்லது அசுத்தமாயுமிருக்கலாம். சுத்தமாயிருக்கிறவள் தான் சிறந்த தோட்டக்காரி. சில ஸ்திரீகள் தோட்டவேலையை வெகு சீராகவும் சுத்தமாகவும் செய்கிறார்கள்.

தங்கள் புடவையையும், கைகால்களையும் அசுத்தப் படுத்திக் கொள்ளாமல் வைத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் களிமண் உள்ள இடத்தில் வேலை செய்தால்தான் கைகால்களில் அசுத்தமாகும். அவ்வித வேலை முடிந்தவுடன் கைகால்களைச் சுத்தி செய்துகொள்ளவேண்டிய தவசியமல்லவா? மேலும் தாங்கள் உபயோகிக்கும், மண் வெட்டி, களைக் குத்தி, கடப்பாரை, கத்தி முதலியவைகளை அப்போதைக்கப் போது சுத்தி செய்து வைத்துக்கொள்ளவேண்டாமா? அழுகிப்போன இலை முதலியவைகளை ஒரு குழியில் போட்டு மூடிவைக்கவேண்டும். அப்படி ஒரு மாதம் வரையில் வைத்திருந்தால் அது மக்கி நல்ல எருவாகும். அந்த எருவை உபயோகிக்கலாம். எருவுக்கு செலவழிக்கும் பணமும் லாபமாகும். தொட்டிகளில் புல் பூண்டு முளைத்தால் அவைகளையும் களைப்பிடுங்கி எரு குழியில் போட்டு மூடிவைக்கவேண்டும். தொட்டியிலுள்ள செடியை ஆறு மாதத்திற்கொருமுறையாவது

புது எரு, மண், மணல் கலந்து போட்டு வைக்கவேண்டும். இவ்விதம் செய்து வந்தால் நல்லதல்லவா? கைகால்களையும், ஆயுதங்களையும் அப்போதைக்கப்போது சுத்தி செய்து வைத்துக்கொண்டு வந்தால் அசுத்தம் எவ்விதம் உண்டாகும்?

முதலில் சொல்லிய தடையைப்பற்றி யோசிப்போம். தோட்ட வேலை ஸ்திரீகளுக்கு கஷ்டம் என்று சொல்வது ஒரு விஷயத்தில் உண்மை தான். அதாவது பூமியைச் சரியாகச் செய்வதும், உழுவதும், குழி தோண்டுவதும், வாய்க்கால் வெட்டுவதும், கிளைகளை வெட்டி எறிவதும் ஸ்திரீகளுக்கு கஷ்டமான வேலைதான். ஏழை ஸ்திரீகள் நாட்டுப் புறங்களில் இவ்விதம் செய்கிறார்கள். அவர்கள் அவ்விதம் செய்து வரவேண்டியதே. மத்திய வகுப்பு ஸ்திரீகளும், உயர்ந்த தனமிருந்த வகுப்பு ஸ்திரீகளும் நாம் முதலில் கூறியவண்ணம் வேலைக்காரர்களை வைத்து வேலை வாங்கவேண்டும். ஸ்திரீகள் இவ்விதம் தோட்டத்தின் மேல்பார்வை பார்த்து வந்தால் நல்ல காற்றை உட்கொள்வதினாலும் அடிக்கடி நடமாடுவதினாலும் இவர்களுக்கு தேகாரோக்கிய முண்டாகும். வியாதி யொன்றும் கிட்டே அணுகாது.

ஏழை ஸ்திரீகள் மண்வெட்டியை எடுத்து வேலை செய்ய ஆரம்பித்தால் முதலில் கஷ்டமாயிருக்கும். பின்னிட்டு அதாவது சில நாள் சென்ற பின்பு சிறிதும் கஷ்டம் தோன்றாது. தேகத்தில் கைகால்களில் சதை யுண்டாகும். தேகம் வலிமை யடையும்.

பலமுள்ள ஸ்திரீகளும், பலமற்ற ஸ்திரீகளும் தோட்ட வேலையைக் கவனித்து வருவது நலமெனத் தோன்றுகிறது. "அவ்விதம் செய்துவந்தால் அவர்கள் நரம்புகள் நல்ல ஸ்திதியிலிருக்குமென்றும் நரம்பு சம்பந்தமான வியாதிகள் கிட்ட அண்டாதென்றும்" ஹெல்த்அண்ட் ஆபினஸ் என்ற பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது உண்மையே.

இந்திய மாதர்களும் கல்வியும்.

இப்புவியின் கண்ணுள்ள நாகரீகமுள்ள நாடுகளில் பெண்களது கல்வி மிகவும் பிரசித்தி பெற்று வந்து நம்மிந்தியா தேசத்தில் மட்டும் அது குழந்தைச் ஸ்திதியிலிருப்பது மிகவும் விசனிக்கத் தக்கதேயாகும். கல்வியாலுண்டாகும் நன்மைகள் பல உள. கல்விக் கருந்தனம் அறிவை யூட்டுவது மன்றி, அடக்கம், மரியாதை, பொருமை என்னும் குணங்களைக் கொணர்கின்றன. ஆண் பாலர்களுக்கு மட்டும் கல்வியைப் புகட்டி, பெண் பாலர்களுக்கு கல்வி யறிவைப்

புகட்டாமலிருப்பது மிகவும் விசனிக்கத் தக்கதாகும். நம்மிந்திய மாதர்கள் கல்விச் செல்வம் பெறுவார்களேயாயின் தங்களதில்லங்களில் ஓர்வித சச்சரவுமின்றி தங்களது வாழ் நாட்களை சத்காலக்ஷேபங்களில் கழிப்பார்களென்பது திண்ணம். கல்வி யறிவினால் புத்தி தீட்சண்ய மடைகின்றது. வீட்டிலுள்ள தங்களது சிறுவர்களைக் கெட்ட வழக்கங்களில் பழக்கவிடாமல் நன்மார்க்கத்தில் செலுத்தி அவர்களுக்குத் தினந்தோறும் பாடம் சொல்லிக் கொடுப்பதுமன்றி அவர்களுக்கு கல்வியில் இன்பத்தைப் புகட்டுகின்றனர். இவை யாவற்றையும் தீர்க்கமாக ஆராய்வோமேயாயின் கல்வியினது மகிமை விவரிக்க வியலாதென்பது இதை வாசிக்கும் வாசகர்கள் எளிதில் அறியலாம்.

திருஷ்டாந்தமாகச் சொல்லுமிடத்து ஒரு கனவானது இல்லத்திலுள்ள அவரது மனைவியை எடுத்துக்கொள்வோமேயாயின் அவ்வுத்தமி கல்வி கற்ற மடந்தையாக விருப்பின் அவருக்கு அநேக காலங்களில் அவருக்கு ஒரு கையைப்போல் உதவுகின்றாள். தனது கணவனுக்கு வரும் லிகிதங்கள் யாவும் சரிவரப் படித்து அவரில்லாத நேரங்களிலவருக்குத் தக்க பதிலுரைக்கின்றனர். அன்றி அவர் வீட்டிலிருக்கும் காலங்களில் கூட அவருக்குவேண்டிய உதவிகள் யாவும் புரிகின்றனள். அவருக்கு வேலை அதிகமாக விருப்பின் அவருடன் ஒருங்கே சேர்ந்து தானும் அவருடன் எழுதவேண்டியவைகளை எழுதி உதவி புரிந்து அவரதுமனதை சந்துஷ்டி செய்கின்றனள். சகோதரிகாள்! இதனாலேயே கல்வியினால் உண்டாகும் நன்மைகள் எளிதில் புலப்படவில்லையா? மணவாளனும், மனைவியும் கல்வி கற்றிருப்பார்களேயாயின் அவர்களது மனம் எத்தகைய சந்தோஷந்தான் அடையாது. அவ்வுத்தமர் தனது மனைவி கல்வி கற்றிருப்பதைக் கண்டு மிகவும் மகிழ்ந்து அவளுக்கு பன்மடங்கு கல்வியை அபிவிர்த்தி செய்ய உயர்ந்த நூல்களை வாங்கிக்கொடுத்து ஓய்வுநேரங்களில் படிக்க உற்சாகப்படுத்துகிறார். அதுவுமன்றி அம்மாது வீட்டிலுள்ள அசுத்தங்களினாலுண்டாகும் தீங்குகளை நன்கு அறிந்தவளாகையால் அவையாவற்றையும் அப்புறப்படுத்துகின்றனள். அன்றி தனது குழந்தைகள் யாவருக்கும் சுத்தமுள்ள வஸ்திரங்களை அணிகின்றனள். வீடு, மனம் முதலியவைகள் யாவும்சுத்தமாயிருப்பதினால் தம்பதிகள் நீடூழிகாலம் வாழ்வதுமன்றி, எப்பொழுதும் ஓர்வித சச்சரவுமின்றி காலத்தை ஆனந்தமாகக் கழிக்கின்றனர். ஏனைய மாதர்களைப்போல் கல்வி கற்ற மாது வம்பர் சபையில் சேராமல் தனது ஓய்வு நேரங்களை புராணங்கள் படித்துக்கொண்டாவது அன்றி நல்லொழுக்கம் புகட்டும் நூல்களைப் படித்துக்கொண்

டாவது தனது நாட்களை நல்வழியில் செலுத்துகின்றனள். சில மாதர்களைப்போல் ஆபரணங்களைப் பெற தனது கணவனிடம் சென்று அவரைத் தொந்திரவு சற்றேனும் செய்வதில்லை. தனது பந்துக்களிடமாவது, சிப்பந்திகளிடமாவது நன்முகம் காட்டுகின்றாளேயொழிய சற்றேனும் கோபிப்பதில்லை. சகோதரிகாள்! இவை யாவற்றையும் ஆராய்வோமேயாயின் கல்வி கற்பதினால் மாதர்கள் நல்லொழுக்கங்களிலும், சுகத்திலும் மேன்மை யடைகிறார்களென்பது விளங்கவில்லையா?

மாதர்கள் கல்வி கற்காவிடில், அதனால் உண்டாகும் தீங்குகள் பல உள. தனது கணவர்களுக்கு பொம்மைகளைப்போல் உதவுகின்றனர்களேயொழிய, அவர்களுக்கு கல்வி கற்ற மாதர்களைபோல் தூண்களாக உதவுகிறதில்லை. எப்பொழுதும் அவர்களிடம் மனம் ஊசாலிடிக்கொண்டே யிருக்கின்றது. தங்களது கணவர்கள் எத்தகைய நற்போதனைகள் செய்தாலும் அவர்கள் தாங்கள் இச்சிக்கும் நகைகளைச் செய்து கொடுக்காவிடின் அவர்களிடம் வெறுப்புக் கொள்கின்றனர். புருஷர்கள் எத்தகைய ஏழ்மை ஸ்திதியிலிருந்தபோதிலும் தாங்கள் இச்சித்த ஆபரணங்கள் செய்து கொடாவிடின் அவர்களிடம் என்னேரமும் சச்சரவு செய்துகொண்டே யிருக்கின்றனர். தம்பதிகள் என்றும் சுகமே யடைவதில்லை.

சகோதரிகாள்! நான்கூறுவதில் நீங்கள் யாவரும்சற்று வெறுப்பு அடையினும் அடையக்கூடும். ஆனால் இவை யாவற்றையும் தீர்க்க ஆலோசனை செய்வீர்களேயாயின் இவ்வாபரணங்களின் மேல் உண்டாகும் இச்சையாவும் இக்கல்வியில்லாமையினாலுண்டாகும் தீமைகளேயன்றி வேறல்லவென்று எளிதில் அறிவீர்கள். அன்றி கல்வியின்மைத்தனத்தினால் மாதர்கள் யாவரும் அக்கம் பக்கத்து இல்லங்களுள் சென்று வீண் வம்புகள் அளக்கின்றனர். நல்லொழுக்கமுள்ளவர்களை தீயொழுக்கமுள்ளவர்களென்று பற்பலவாறு நிந்திக்கின்றனர்.

அந்தோ! இதனால் உண்டாகும் தீமைகள் பலவுள. தங்களது மனைகளிலுண்டாகும் அசுத்தங்களினாலுண்டாகும் தீமைகளை அறிய அசக்தர்களாக விருப்பதினால் நோய்களுக்கிரையாகின்றனர். புருடர்கள் எத்தகையக் கல்வியை அடைந்திருப்பினும் தங்களது மனைவிகள், படிக்காமலிருப்பதைக்கண்டு விசனப்படுவதுமன்றி அவர்கள் செய்யும் உபத்திரவங்களைக்கண்டு மிகவும் மனக்கிலேசமடைகின்றனர். தம்பதிகள் மனச் சம்மதமில்லாதிருப்பதினால் அவர்கள் ஆனந்தமாக காலத்தைக் கழிக்க வியலாதவர்களாக விருக்கின்றனர். கல்விக்கே கலையாகவிருக்கும் ஸரஸ்வதி ஓர் ஸ்திரீயாகவிருக்க மாதர்களுக்கு

மட்டும் கல்வி புகட்டாமலிருப்பது நன்றோ? ஆண் பாலர்கள் மட்டும் கல்வியைப் பருகி அதனது ருசியைக்கண்டு ஆனந்த மடைந்துவர பெண்களுக்கு மட்டு மதை நிராகரிப்பது மிகவும் தப்பான எண்ணமாகும். காருண்ய ப்ரிடிஷ் ராஜாங்கத்தாருக்கு நாம் மிக்க நன்றியுள்ளவர்களாக விருக்கின்றோம். பற்பல ஜில்லாக்களில் பள்ளிக்கூடங்களை ராஜாங்கத்தார் பெண்களுக்கு வைத்திருந்தும்பெண்களுக்குப்போதுமானதாகத்தோன்றவில்லை. சகோதரிகாள்! எத்துணை இடையூறுகள் வரினும் கல்விச் செல்வத்தை சற்றேனும் கைவிடாமல், ஆண் பாலர்களைப்போல் அத்துணை கல்வி சற்று வித்வ சிரோமணிகளாக வராவிடினும் புத்தி யறிவை விசாலிக்க வேணும் கல்வி கற்றுவரின், தேசம் மாதர்களது கல்வியினாலும், நல்லொழுக்கத்தினாலும் உயர் தோங்கி வளர்வதுமன்றி, என்றும் நாகரீகத்தில் சிறந்த நாடாக விளங்கும். மாதர்களும் புருடர்களும் என்றும் மனக்கிலேசமற்று வாழ்வதன்றி, சுகாதாரங்கள் மேன்பட்டவர்களாக விருந்து ஒருவருக்கொருவர் ஓர் கையை உதவிக்கொண்டு நீண்ட ஆயுளுடன் ஆனந்த சாகரத்திலாழ்ந்தும், நல்லொழுக்கம் எங்கும் குடிகொண்டு சுகஜீவியாக வாழ்வார்களென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கா நிற்கின்றது. * ஓர் மாது.

கொளிஞ்சி விதை சேகரிக்கும் விதமும் அதை விதைக்குமுன் செய்யவேண்டிய பக்குவமும்.

விவசாய டிபார்ட்டுமெண்டார் கிருஷிகருக்கு சிபார்சு செய்யும் அநேக பசுந்தாள் உரப் பயிர்களில் கொளிஞ்சிப் பயிர் ஒன்று. "கொளிஞ்சி நெல்காட்டும்" அல்லது "கொளிஞ்சி குலைகாட்டும்" என்று வழங்கும் பழமொழி தமிழ் ஜில்லாவிலுள்ள எல்லா கிருஷிகருக்கும் சாதாரணமாய் தெரிந்தவிஷயம். தற்காலம் சாதாரணமாய் கிருஷிகர் எருவுக்காக வாங்கும் இலைதழைகளின் விலை ஜாஸ்தியாகிக்கொண்டிருப்பதுமல்லாமல் தழை எருக்கள் தங்களுக்கு வேண்டும்போது சுலபமாய் கிடைக்கக்கூடாமலிருக்கிறது. ஆகையால் விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் பசுந்தாள் எருப்பயிர்களை கிருஷிகர் தங்களுடைய நிலங்களிலேயே விளைவித்து பலனடைதல் மெத்த சலிசான விஷயமென்று போதிக்கிறார்கள்.

* [நிருபம் எழுதுகிறவர்கள் கடுதாசியில் விஷயத்தை ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதி யனுப்பவேண்டும். தங்கள் பேர், வீட்டு நம்பர் தெருவு, ஊர், முதலிய முழு விலாசத்தையும் எழுதி யனுப்புவேண்டும். பத்திராதிபர்].

டிபார்ட்டுமெண்டார் சிபார்சு செய்யும் அனேகவித பசுந்தாள் உரப்பயிர்களில் வடிகால்வசதியுள்ள ஒருபோக நஞ்சை நிலங்களுக்கு கொளுஞ்சிப் பயிர்தான் மிகத்திறமானது. இக்கொளிஞ்சி மிகச்சிறந்ததென்ற விஷயத்தை உத்தேசித்து திருநெல்வேலி ஜில்லாவைத் தவிர மற்ற தமிழ் ஜில்லாக்களில் இக்கொளிஞ்சி விதைக்கு மெத்த கிராக்கி ஏற்பட்டுவிட்டது. இது காரணத்தினால் திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து இதர ஜில்லாக்களுக்கு வருஷாவருஷம் ஏராளமான கொளிஞ்சி விதை ஏற்றுமதியாகிறது. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ளவர்களைப்போல் இதர ஜில்லாவிலுள்ள கிருஷிகரும் இக்கொளிஞ்சி விதையைச் சேகரிக்காததினால் நாளுக்கு நாள் திருநெல்வேலி ஜில்லாவில் இவ்விதைக்கு பிரியம ஜாஸ்தி உண்டாகிக்கொண்டிருக்கிறது.

இதர ஜில்லாக்களிலுள்ள கிருஷிகருக்கும் இவ்விதை சேகரிக்கும் விதம் தெரிந்துவிட்டால் யாதொரு கஷ்டமில்லாமல் கொளிஞ்சி விதை அங்கங்கே கிடைக்கும். திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து வருஷாவருஷம் தருவித்துக்கொள்ளவேண்டிய அவசியமும் நேரிடாது. கொளிஞ்சி விதை சேகரிக்கும் முறையில் யாதொரு கஷ்டமுமில்லை.' அதை எளிதில் எல்லாரும் சுலபமாய் கையாடக்கூடியதுதான். கொளிஞ்சிச் செடிகளில் சாதாரணமாய் மார்ச், ஏப்ரல் மாதங்களில் புஷ்பித்து ஜூன் ஜூலை மாதங்களுக்குள் காய் பிடித்து விதை முற்றியிருக்கும். முற்றின நெத்திலிருந்து சூரிய உஷ்ணத்தினால் நெத்து வெடித்து விதைகள் செடிகளுக்கு அடியிலும் பக்கத்திலும் சிதறிவிடும்.

இவ்விதம் சிதறியிருக்கும் விதைகளைத் திருநெல்வேலி கிருஷிகர் மண்ணுடன் கூட்டிப் பெருக்கி அப்பால் மண்ணைச் சல்லடைகளால் அப்புறப்படுத்தித்தனிவிதைகளைமாத்திரம் வேறேஎடுத்துகட்டிவைப்பதுண்டு. இந்த விதை சேகரிக்கும் மாதங்களில் சாதாரணமாய் கூலிப் பெண்களுக்கும் கூலிப் பையன்களுக்கும் வேலை ஜாஸ்தியகப்படாதாகையால் அவர்கள் இவ்விதை சேகரிப்பதில் சிரத்தை எடுத்து சேகரிப்பது சாதாரணம். அப்படி சேகரித்த ஒருபடி விதைக்கு பதிலாக ஒருபடி நெல்லை கூலியாக வாங்கும் வழக்கமுண்டு. மேலே சொன்ன மாதிரி விதை சேகரிக்க எல்லாவிடங்களிலும் சௌகரியப்படமாட்டாது. ஏனென்றால் செடிகளின் கீழிருக்கும் மண் இளகலாயும் மணல்பாங்காயும் இருக்கும்பட்சத்தில் விதைகளை கூட்டிப் பெருக்கி எடுக்க கஷ்டப்படும். இவ்விதையை மேல்குறித்த மாதிரியன்றி வேறுவிதத்திலும் சேகரிக்கலாம். கொளிஞ்சிச் செடிகளில் காய்

பிடித்துக் காய் முற்றி வெடிக்கும் பருவத்திற்குச் சில நாட்களுக்குமுன்—அக்காய்களையும் நெத்துகளையும் சாதாரணமாய் மொச்சைக்காய், காராமணிக்காய்களை முற்றியிருக்கும் சமயத்தில் பொருக்கி எடுப்பதுபோல் இக்கொளிஞ்சிக் காய்களையும் பொருக்கி சேகரிக்கலாம்.

சாதாரணமாய்ஒரு கூலிப்பெண் 16 படி நெத்தை ஒரு நாளில் உருவி சேகரிக்கக்கூடும். அதிலிருந்து குறைந்தது ஒருபடி விதை அகப்படக்கூடும். இப்படி முற்றின காய்களையும் நெத்துகளையும் பொருக்கி அதை இரண்டுநாள் காயப்போட்டுவிட்டால் வெயிலில் மேல் தோல் வெடித்து விதைகள் கீழே கொட்டுண்டுபோம். ஆகையால் மேல்குறித்த இரண்டுவிதங்களில் எந்த விதம் சௌகரியமாய் காணப்படுகிறதோ அந்த விதம் கையாடி கொளிஞ்சி விதையை சேகரிக்கும் வழக்கத்தை மற்ற ஜில்லாக்களிலும் அனுஷ்டித்துவிட்டால் திருநெல்வேலி ஜில்லாவைப்போல தூரமான ஜில்லாக்களிலிருந்து விதை வருஷாவருஷம் தருவிக்கவேண்டிய அவசியம் நேரிடமாட்டாது. விதையும் அங்கங்கே புதிதாயும் சேகரித்துக்கொள்ளலாமென்ற நிச்சயமுமிருக்கும்.

கொளிஞ்சி விதைகளை வாங்கும் கிருஷிகர்கள் தாங்கள் வாங்கின விதை சரியானபடி முளைக்கவில்லையென்றும் தங்களுக்கு அனுப்பிய விதைகள் நல்லதல்லவென்றும் சிலவேளைகளில் முறையிடுகிறார்கள். விதைகள் முளையாமலிருப்பது அனேகமாய் விதைப்பழுதினால் மாத்திரமல்ல விதைகளை விதைக்குமுன் பக்குவப்படுத்தி விதைக்காததே இதற்கு முக்கிய காரணம். கொளிஞ்சி விதையின் மேல்தோல் புரையானது மிகவும் கெட்டியாயிருக்கும் சுபாவமுடையதாதலால் அக்கெட்டித்தோல் மெதுவடைந்து அந்த விதையினுள்ள முளை வெளிவர மெத்த நாளாகிறது. ஆகையால் விதை சீக்கிரம் முளைக்கவேண்டுமானால், கெட்டியாயிருக்கும் மேல் தோலை மெதுவடையச்செய்யும் பக்குவங்களைக் கையாடவேண்டியதவசியம். இப்பக்குவங்கள் விதை விதைக்கு முன்னமே விதைகளுக்குச் செய்யவேண்டும். கொளிஞ்சி விதை தீவிரமாய் முளைக்கும்பொருட்டு அநேகவிதங்களில் விதையைப் பக்குவப்படுத்தும் வழக்கங்களிருக்கின்றன. அவைகளில் சாதாரணமாய் கையாடக்கூடியதும் சுலபமானதும் சில இதனடியில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

(1) விதைகளைக் கொளிஞ்சிச் செடிகளின் கீழிருந்து மண்ணுடன் கூட்டிப் பெருக்கி வந்தவுடன் விதையுடன் கலந்த மணலை முதலில் போக்காமல் அத்துடன் கொஞ்சம் செம்மண் கலந்து அதை கல்லுரலிலாவது, மர உரலிலாவது நெல் குத்துவதைப்போல் உலக்கைகள்

கொண்டு இலேசாய் சற்றுநேரம் குத்தி, விதையின் மேல் தோல் சற்று உராஞ்சியிருப்பதுபோல் காணும்வரை குத்தி எடுத்து அதிலுள்ள மண், கருப்பு விதைகள், பொக்கு விதைகள் முதலானவைகளைச் செவ்வையாய்ப் போக்கி விதையைக் காயப்போட்டு பத்திரப்படுத்தி விதைக்க வேண்டும்.

(2) செடிகளின் அடியில் தரை கெட்டியாயிருக்குமிடங்களிலிருந்து சேகரித்தக் கொளிஞ்சி விதையைக் கொஞ்சம் நெல் பதருடன் சமபாகம் கலந்து முன்சொன்ன முறைப்படிக் குத்தி எடுத்துப் பதரை தூத்திவிட்டு நல்ல விதைகளை அப்புறப்படுத்தி வெயிலில் காயப்போட்டு வைத்திருந்து விதைக்கவேண்டும்.

(3) வரகு தானியத்திலிருக்கும் உமியை அப்புறப்படுத்த உபயோகிக்கும் திருகியில் இந்த கொளிஞ்சி விதையையும் போட்டு வரகு அரிசி எப்படி தயார் செய்கிறார்களோ அதேபிரகாரம் இலேசாய் திருகியைச்சுற்றி விதையின் தோல் உராஞ்சின சமயத்தில் அவ்விதைகளை அப்புறப்படுத்தி சுத்தப்படுத்தி பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு விதைக்கவேண்டும்.

(4) விதைகளை ஏராளமாய் தயார் செய்யவேண்டிய காலங்களில், விதைகளை பருமணலுடன் கலந்து ஒரு கெட்டியான களத்தில் விதையை இலேசாய் பரப்பி அதன்மேல் சற்று வைக்கோலைப் பரப்பி அதன்பேரில் மாடுகளைக்கொண்டு நெல்லுக்கு தாம்புகட்டி அடிப்பதுபோல் சற்று நேரம் தாம்பு அடித்தால் விதைகளின் மேல்தோல் சற்று உராஞ்சிப்போகும். அதை எடுத்து ஒப்படி செய்து பந்தோபஸ்து செய்து விதைக்கவேண்டும்.

இப்படி மேல் குறித்த எந்த விதத்திலாகிலும் ஒரு விதத்தில் விதைகளைப் பக்குவப்படுத்தி விதைத்தால் விதைகள் நன்றாய் முளைக்குமென்பதில் தடையில்லை. எந்தவிதத்தில் விதைகளைப் பக்குவப்படுத்தும்போதும் விதைகள் நசுங்கிப்போகாமலும் விதைகளின் மேலிருக்கும் கெட்டித்தோல் மாத்திரம் சற்று உராஞ்சிப்போகும்படிக்கும் செய்யவேண்டியதே தவிர விதைகள் நசுங்க விடக்கூடாது. மேல் சொன்ன பிரகாரம் செய்வதின் கருத்து விதைகளின் மேலிருக்கும் கெட்டியான மேல் தோல் சற்று மெதுவடைவதற்காகவே தவிர வேறொன்றிற்குமல்ல.

பக்தியின் அனுபவம்

நாம் உண்மையில் பக்தியுடையவர்களாய் இருக்க விரும்பினால் இப்பிரபஞ்சத் தோற்றங்கட்கும், விவகாரங்கட்கும் விலகி யிருக்க

வேண்டும். நம் சாந்தி நிலையை உலகத்திலுள்ள எந்த நிலையும் மாற்ற முடியாது. நம் ஹிருதயம் பரிசுத்தமாயும், நிட்காமியமாயும் அன்பு நிறைந்து விசால முடையதாயும் இருக்க வேண்டும். நம்மை பெரியோராய் நினையாமல் யாரிலும், எல்லாவற்றிலும் பெரியோனாகிய கடவுளின் தாழ்மையுள்ள வேலைக்காரராய் எண்ண வேண்டும் நமக்கு அபாயம் உண்டென்பதை நினையாமல் அவர் வேலைக்காக எப்பொழுதும் தயாராயிருக்கவேண்டும். நாம் அவரிடத்து வணக்கம் செலுத்தும் போதும் அவருக்காக வாழ்நாளை நடத்தும் போதும் பல / கொடுமைகளையும் அகால மரணத்தையும் சந்திக்கலாம். அல்லாமலும் நம் ஆராதனை அனுபவத்திலும், அவ்வித ஆநந்தத்திலும் அவரது அநுகூலம் சித்தியாததினால் நம்மை நாமே அவரிட மிருந்து அப்புறப்படுத்துகிறோம். இது பாபமேயாகும். தைரியமாயிருந்து, பயமற்று சித்த சலனங்கள் நம்மை அடித்துப் போகாதவண்ணம் சாக்கிறதையாயிருக்க வேண்டும். எக்காலத்தும் பொறுமையற்றவர்களாய் இருத்தல் கூடாது.

வெளித்தோற்றத்தால் உள்ளத்தின் உண்மை உணர்ச்சியை ஒரு பொழுதுங் காணமுடியாது. ஆதலால் வெளிவிவ்கார அளவை குறைக்க வேண்டும். வார்த்தையில் கூடியவரையில் மிதமா யிருப்பது நலம். நம் ஒழுக்கம் நமக்குப் பிரகாசத்தைத் தருவதன்றி, வார்த்தைகளும் பாஷா லட்சணமுமல்ல. பெரிய தத்துவ ஞானிகள் வெகு இலகுவான பாஷையைப் பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் வார்த்தையில் ஜீவியம், நம்பிக்கை, உற்சாகம், இவைகள் பிரகாசிக்கின்றன. பக்தி என்னும் இளம்பயிரை உள்ளத்தில் மவுனமாய் வளரவிடவேண்டும். பூரணமான அன்பும் உண்மையான கண்ணீரும் அதற்கு வார்க்கும் ஜலம். நாம் பூரண உள்ளத்தோடும் அறிவின் விளக்கத்தாலும் மாத்திரம் வேலை செய்வோம். அதின் பயனைப் பார்த்திருக்கக் கூடாது.

உண்மையில் ஆராதனை செய்வோர் தன் சித்தி பூர்த்திக்காக வேலை செய்கிறார்கள். ஆதலால் அவர்கள் செய்யும் ஒவ்வொரு விஷயமும் பூஜாகாரியமாய் முடிகிறது. தன் தேகமும் மற்றெல்லா அவயவங்களும் உபாஸனா மூர்த்திக்குரியதாய் நினைக்கிறார்கள். அவைகளை அப்பொருளுக்காகவே கவலையெடுக்கிறார்கள். ஆனால் அவைகள் தன்னுடைய தாய்க்கருதியல்ல. தன் தேகம் முதலிய தன்னுள்ள மூர்த்திக் குரிய பாகமாய் கருதலாலேயே, பசி குளிர் முதலிய எவ்வித துன்பமடையும் போதும் அம்மூர்த்தியாக அதனை நீக்க நினைக்கிறார்கள். ஆதலால் நம் வழி பாட்டிற்குரிய அவருக்காக நாம் ஒவ்வொரு விதமான கவலையும் எடுக்கவேண்டும். அல்லது நம் தேகத்தை நம்

மங்கள மூர்த்திக்குரிய ஆலயமாய்க் காணலாம். ஆகவே, அதற்காக நாம் எதைச் செய்யினும் நம்மனதிற் குரிய கடவுட்கு நைவேதனமாகிறது. ஆதலால் நம் ஹிருதய பீடத்தில் முற்றும் பரிசுத்தமானதும், மதிக்கத் தகுந்ததுமான நைவேதனங்களையே வைக்கும்படி சாக்கிறதையாயிருக்க யேதுவுண்டாகிறது. நாம் நம்முன்னே வசிக்கச் செய்த மூர்த்திகரத்தை இந்த விதமாய் அடிக்கடி தியானிப்பதனாலேயே பிரபஞ்ச சம்பந்தமான சகல கட்டுகளினின்றும் விடுதலை யடைய யேதுவுண்டாகிறது.

இந்த விதமாய் உண்மை பக்தியில் ஆராதனை செய்வதால் நம் வாழ்நாளின் ஒவ்வொரு நிமிஷத்திலும் நம்மனோ மூர்த்தியுடன் நாம் பொருந்தி வாழும்படி நம் ஹிருதயம் ஓர் ஒழுங்கான பழக்கத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. நாம் அவருடன் வசிக்கும் பொழுது எல்லாத் துன்பங்களும் நீங்கின நம் அன்பு வலைப்பட்ட அவர் ஒருவரையன்றி நாம் எதிர் பார்க்கும்படி மிகுதியாய் வாழ்வதற்கு அங்கு ஒன்றுமில்லாது முடிகிறது. நம்மன் புரிமை கொண்ட அவரது திருவடிகளில் நம்பூரண உள்ளமும் பொழிந்தோட யேதுவாகிறது. அவ்விடத்தில் நம்மை நாம் மறக்கிறோம். இதுவே முடிவற்ற யெல்லையில் நம்மை நடத்துவதால் இதுவே ஆனந்த ரூபமாகிறது' பின் இதுவே கடவுளின் உண்மைத் தோற்றமாம்.

அன்பின் வழியாகவே தெய்வ சந்நிதியைஉணருகிறோம். அன்பே நம்மையும் கடவுளையும் ஒன்று சேர்க்கிறது. நம்பூர்ண உள்ளம் நம்முள்ள மூர்த்திக்காகக் கொண்ட அன்போடு எழும்போது அது ஒரு பிரவாகமாய்ப் பொங்கி நம்முள் தோன்றும் அறியாமை, லோபம், பயம், சந்தேகம், சுயநயம், இப்படியான ஒவ்வொன்றையும் அடியோடு கழுவிக் கொண்டு போகிறது. அப்படி கழுவப்பட்டஉள்ளத்தில் நின்றது நம் தியான மூர்த்தி ஒன்றே. பின் உலக சம்பந்தமன எதையும் நாம் தள்ளி லகுவாய் அந்நிலையிலிருக்கலாம். ஏனெனில் நம்மன்பில் கட்டுண்ட அவரையன்றி நாம் மதிக்கத் தகுவது அங்கு ஒன்றுமில்லை. அவர் ஆதியந்தமற்றவர், அழிவற்றவர், மாறுபாடில்லாதவர், மற்றபொருள்கள் எல்லாம் நிலையில்லாத மாறுதலுடையன. அவரே சோதிமயமானசித்து. ஏனையவெல்லாம், அழியத் தகுந்த சடம்.

இவ்வித மூர்த்திகர அன்பு யாதொரு முயற்சியுமின்றி உலக விஷயங்களிலிருந்து நம்மை லகுவாய் விலக்கிக்கொள்ளக் கூடியதாக்குகிறது. ஆதலால் நம்பூரண உள்ளமும் நம் தியானமூர்த்தியிடம் தங்கும் போது நம்மை மயக்கக்கூடியது இவ்வுலகத்திலெதுவுமில்லை. இதுவே

நாம் சுலபமாய்ப் பெற்ற துறவுநிலை. ஆதலின் நாம் கடவுளுக்கு ஆராதனை செய்யவேண்டும்; நாம் அவரை அடுத்தடுத்து நினைக்கவேண்டும் இதனால் நாம் சுத்தியடையலாம். ஏனெனில், நாம் ஒரு பரிசுத்த வஸ்துவை தியானிக்கும்போது தானாகவே நம்முடைய மலங்கள் கழுவப்பட்டுப் போகிறது' கடவுளின் திருவடிகளில் நாம் அடைக்கலம் புகும்போதும் அல்லது நமது கவலைகளை அவரிடம் சுமத்தும் போதும் உலகத்தைப்பற்றிய கவலை நம்அன்பைப் பற்றுவதில்லை. பின் நம்கவலைகள் நம்மிடமிருந்து கரைந்துபோகிறது. இதுவே உண்மையான துறவும் உண்மையில் பாபவிமோசனமுமாகிறது.

கமலத்தன்னை

பூர்வகாலத்து ஸ்திரீகளின் சரித்திரம்

இருத்த்துவசனும் மதாலஸையும்.

பூர்வகாலத்தில் சத்துருசித் என்னும் அரசன் இருந்தான். இவன் மகா வீரன். இவன் யாகங்கள் செய்து இந்திரனைத்திருப்தி செய்தான். இதனால் இவனுக்கு ஒரு புத்திரன் உண்டானான். அக்குழந்தையை இவன் மனைவி அன்புடன் சீராட்டி வளர்த்தி வந்தாள். தக்க வயது வந்தவுடன் வித்யாரம்பம் செய்வித்து இவர் குல ஆசிரியன்கையில் தங்கள் குழந்தையை ஒப்புவித்தார்கள். ஆசாரியார் அரச குமாரன் அறிவு, ஆற்றல், தொழில் முற்றல், ஆளிவைகளால் தன்னோடொத்த அரசகுமாரரோடு கூடி நாடோறு விளையாடிக் கொண்டிருப்பான். ஒரு சமயம் நூல்கள் யாவையும் கற்று அறிவோடு நிலைமைபெற்று நிற்பன். மற்றொரு சமயம் காப்பிய நாடகம், அலங்காரம், நிருத்தம், கீதம், சரச சல்லாபம் முதலிய வற்றில் களித்திருப்பான். படைக்கலங்களில் பழகுவதிலும், குதிரையேற்றம், யானையேற்றம், தேரேற்றம் முதலிய வேற்றங்களிலும் வல்லமையடைந்து சிறந்தவனாயினான். பகற்போதில் உள்ளடக்கத்திலும் எப்போதும் களிப்பினாலே நாளைப் போக்கிக் கொண்டிருப்பான். அரச குமாரனோடு பிரம க்ஷத்திரிய வைசிய மக்கள் பலர் வந்து விளையாடியிருந்தனர். அரச குமாரனோ அறிவு, சாமர்த்தியம், உருவம் முதலிய வற்றால் பிரகஸ்பதி, சுக்கிரன், அசுவனிதேவர் முதலியவர்களுக்கு ஒப்பாய் விளங்கிவந்தான்.

இப்படி படித்து நற் பேர் பெற்று வரும் நாளில் நாகர் உலகத்து அசுவதரன் என்னும் பாம்பரசின் புத்திரர்களிருவர் பூலோகத்துக்கு பிராமணர் வேஷம்தரித்து தங்களது உண்மையான உருவத்தை மறைத்து, யௌவனப் பருவமும் அழகும் உடையராய் இவ்வரச

குமாரனிடம் வந்து, இங்குள்ள ப்ரம க்ஷத்திரிய வைசிய புத்திரரோடும், அவ்வரச குமாரனோடும் சேர்ந்து விளையாடி வந்தார்கள். நீராடினார்கள். சேர்ந்து புசித்தார்கள். சேர்ந்து பற்பல விடங்களுக்குச்சென்று அங்குள்ள அருமையான விஷயங்களைக் கண்டு வந்தார்கள். நாக லோகத்து அரச குமாரர்களுக்கும் இவ்வரச குமாரனுக்கும் நண்பும், அன்பும் மிகுதியாயிற்று. அவர்களை விட்டு அவ்விராஜ புத்திரன் வேடிக்கை யொன்றும் செய்யான், இனிமையான சொற்களைப் பேசமாட்டான். உண்ணவும் மாட்டான். நீராடான். குடிப்பன குடியான். விளையாடான், தன்னுடைய நற்குணங்களை விருத்தி செய்யும் நூல்களைப் படிக்கவும் மாட்டான். அந்த நாக குமாரர்களும் இராக் காலத்தில் பாதாளவுலகம் சென்றிருக்கும் பொழுது தங்கள் நண்பனாகிய அரசகுமாரன் தங்கள் பக்கத்தில் இல்லாமலிருப்பதைக் கண்டு விசனப்படுவார்கள். ஒரு விஷயத்திலும் விருப்ப மில்லாமலிருப்பார்கள். பெருமூச் செறிந்துஇரவுப்பொழுதைப் போக்கி, பொழுது விடிந்ததோ இல்லையோ அரசகுமாரனிடத்திற்கு வந்து விடுவார்கள்.

இப்படி நாகலோகத்து குமாரர்கள் செய்துவரும் ஒரு நாளிரவு அவர்களுடைய தகப்பனார் தன் குழந்தைகளைப் பார்த்து "ஓ எனது, அருமையான செல்வப் புத்திரர்களே! உங்களுக்கு பூலோகத்திலேயே ஆசை யுண்டாயிருப்பது போல் தோன்றுகிறதே. நெடுநாளாக இங்கே பகல் காலத்தில் உங்களைக் கண்டதேயில்லை. காரணம் என்ன" என்றான்.

நாகப் புத்திரர்கள் தங்கள் பிரியம் வாய்ந்த தகப்பனாரை வணங்கி கைக்கட்டிக்கொண்டு "தந்தையே! கேளும், சத்துரு சித்து என்னும் அரசன் புத்திரன் இருதத்துவசன் என்பவன் பூலோகத்திலிருக்கின்றான். அவன் நல்லழகுடையவன். அவன் மனமும், ஒழுக்கமும் செவ்வனே யுள்ளன. எங்களுக்கு மிகுந்த நண்பன், பெருவீரன், மிக்கவினிமையோடும் பேசவல்லான், தெய்வ பக்தியுள்ளவன். பெரியோரிடத்தில் மரியாதை யுள்ளவன். யாவருக்கும் தீங்கு செய்ய மாட்டான். துஷ்டர்களைத் தண்டிப்பான். எங்களிடத்தில் ஒன்றையும் மறையான், நல்ல சொற்களையே வழங்கிவருகிறான். பெருங் கல்விமான். சிநேகம் செய்வதற்கு வேண்டிய எல்லா குணமுடையான். அடக்கமே அணியாக வணிந்தவன். அவன் செய்யும் உபசாரங்கள், அன்பு, அவ்விடத்திய சுகம் இவற்றால் கவரப்பட்ட எங்கள் மனம் இந்நாக லோகத்தை மாத்திரமல்ல, மற்றெந்த லோகத்தையும் விரும்புவதில்லை. அவனில்லை என்று இவ்விடத்தில் வருந்துகிறோம்" என்றார்கள்.

இவைகளைக்கேட்ட நாக ராஜன் மிகவும் மகிழ்ந்து, "என் அருமைக் குழந்தைகளே! அவனைப் புகழ்வதினால் அவன் புண்ணிய வானென்றே எனக்குத் தோன்றுகிறது. அவ்வித நற்குணங்களமைந்த புத்திரனைப் பெற்றோனே சான்றோன், உலகத்தில் சகல சாஸ்திரங்களையும் அறிந்தவர் பலர் உண்டு. ஆயினும் நற்குண முடையாரா யிருப்பது அருமை. சிலர் மூர்க்கரா யிருந்தாலும் நல்ல இயற்கை யுடையவரா யிருத்தலுமுண்டு. சாஸ்திர அறிவும், இயற்கைக் குணமாகிய இரண்டும் நன்றாக அமையப்பெற்ற புத்திரனே பெரியவர்களில் பெரியவன். ஓ புத்திரர்களே! அவ்வித நற்குணமுள்ளவும் மகத்தான உபகாரம் செய்யும் அரச குமாரனுக்கு வேண்டியது யாதானுமொன்றினைச் செய்து, களிப்பித்தீரோ? இரந்து வந்த இரவலரை வீணே போக்காதவனும் ஆற்றலற்றவர்க்கு எல்லா நண்பாவானுமன்றோ சிறந்தோன். அவன் பிழைப்பே பிழைப்பாம். அவன் உடம்பெடுத்தது தானுடம் பெடுத்தபடி. நமது மாளிகையிலுள்ள இரத்தினங்கள், பொன், ஆதனம், வாகனம் முதலியன வெல்லாவற்றுள்ளும் எது அவனுக்குக் கொடுத்தால் திருப்தி யாகுமோ அவற்றையெல்லாம் கொண்டுபோய் கொடுத்து விடுங்கள். இவ்விஷயத்தில் சிறிதும் சந்தேகப்பட வேண்டாம். சினேகிதருக்கும், தனக்கு உபகாரம் செய்தவனுக்கும் பிரதி உபகாரம் செய்யாமலேதான் மாத்திரம் பிழைக்க வேண்டு மென்னும் எண்ணம் கொள்பவன் பிழைப்பும் ஒரு பிழைப்போ? அது கெட்டது. மனிதன் என்னும் வாகனமானது நட்புப்பயிர்க்கு உதவி யென்னும் மழையினையும், பகைப்பயிர்க்கு இகன் மழையினையும் பொழியாநிற்கும். பேரறிவினை யுடையோர் நட்பின் விளை வினையே வேண்டுகின்றனர்" என்றான்.

நாக புத்திரர்கள் "அப்பா! அவனுக்குச் செய்யவேண்டியதைச் செய்து முடித்தோம். ஆயினும் அவனுக்குக் கைம்மாறு செய்வதற்கு யாவராலும் முடியாது. அவனிடம் சென்றவர்கள் யாவரும் தங்களுக்கு வேண்டுவன வெல்லாம் பெற்று சந்தோஷப் படுகின்றார்கள். அவன் விரும்பத் தக்க தொன்றுமில்லை. அவனிடத்திலிருக்கும் ரத்தன வைடூரியங்களைப்போல நம்மிடத்தில் ஒன்றுமில்லை. அவ்விதமே வாகனம், ஆடை, அணி முதலியன அவ்விடத்தி லிருப்பது போல் வேறெவ்விடத்திலுமில்லை. அவன் மிக்க திறமையுள்ளவன். இவ்வளவிருந்தும் அவனுக்கொரு குறைதான் உண்டு. அக்குறையை நீக்க நம்மால் முடியாது. கடவுளால்தான் முடியும்." என்றார்கள்.

நாகராஜன் "என் அருமை மைந்தர்களே! அதை நாம் நீக்க முடியுமோ முடியாதோ அவசியமல்ல. அவை நான் அறிய விரும்புகிறேன். உலகத்தில் அறிவுடையோர்க்கு முடியாத தொன்றில்லை. பிள்ளைகள் தக்க முயற்சி யுடையவர்களா யிருந்தால் அதைப் பெறலாம் என்பது நிச்சயம். "அலசாது நடக்கும் எறும்பும் ஆயிரங்காதமுஞ் செல்லும் "அடிபெயர்க்காத கருடன் அங்குலியும் நடவாது." முயற்சி யுடையார்க்குச் செல்லத்தக்க விடமிது, செல்லலாகாத விடமிது வென்பதில்லை. பூமி யெங்குள்ளது? துருவ மண்டலம் எங்குள்ளது? உத்தானபாதான் என்னும் அரசன் பிள்ளையாகிய துருவன் என்பவன் துருவ மண்டல அதிகார பதத்தினை யடையவில்லையா? ஆகையால், ஓ! மக்களே! சாதுவான அந்த அரச குமாரன் சிறுவனாயிருந்தும் பெரியோன் என்பது என் எண்ணம். அவனுக்கு வேண்டியதை உடனே சொல்லுங்கள். உங்களால் அக்குறையை நீக்க முடியுமா முடியாதா வென்பதை அறிய விரும்புகிறேன்" என்றார்.

நாக ராஜரின் புத்திரர்கள் "அப்பா! அவ்வரச குமாரன் நல்லொழுக்க முடையோனா யிருந்தும், அவன் சிறுவயதில் நடந்த செய்தியொன்றை எங்களிடத்தில் கூறி யிருக்கின்றான். அதைச் சொல்லுகிறேன். தயை செய்து கேளுங்கள்" என்றான்.

[அடுத்த பத்திரிகையில் மதாலசையின் சரித்திரம் வரும். ப-ர்,]

மாதவி- அல்லது உயர்குணமாது.

100-வது பக்கத் தொடர்ச்சி.

இதுவரையில் அரண்மனை இரகசியங்களை வெளிவிடாது காத்து வந்த உத்தியோகஸ்தரும் பல வேலைக்காரரும் மாதவி காடு சென்றது மனந்தாளாராய் முறுமுறுத்தனர். பொதுவாய்ச் சொல்லுமிடத்து மாதவி அரண்மனையில் இல்லையென்றதும் சனங்கள் நடந்த விஷயங்களை அறிய ஆவல்கொண்டனர். பையப் பைய பல நாள்களாய் மாதவி பட்ட துன்பமும் அரசன் கொடுமையும் மாதவியின் மனப்பொறுமையும் வெளியாயது. குடிகள் மனங்கலங்கினர். அரசன் குடிகள்பேரில் வீண்பழி சுமத்தினான் என்று வருந்தினர். சிலர் அவனுக்கு சித்தப்பிரமை யென்றனர். சிலர் அவன் கொடுமைக் குணங்களை நம்மையறியாது மறைத்தொழுகுகிறான் என்றார்கள். பல பேசி யென்? ஊரார் கூடி அரசனை ஒழுங்கு படுத்த யேற்பாடு செய்யும் கூட்டம் கூடத் தீர்மானித்தார்கள். இம்முடிவு வருதற்கு ஒரு வருஷமாயது. கூட்டம் கூடினர். அடுத்தவாரம் அரசனைக்கண்டு அவன் வாக்குமூலம் கேட்பதெனத் தீர்மானித்தார்கள்.

தந்தையுடன் வாழ்ந்த மாதவி தன்னுயர் குணத்தையும், இயற்கையாயுள்ள அன்பு நிறைந்த உள்ளத்தையும், தன்னருமைத் தந்தையிடத்தும் அவனால் வளர்க்கப்பட்ட சில பசுக்களிடத்துமே காட்டி வந்ததால் அவைகள் இவளிடம் தங்கள் நன்றியறிதலைக் காட்டத் தலைப்பட்டன. அவள் அப் பசுக்களை நல்லபுல் தரை தேடி மேய்த்து, சுத்த சலமுள்ள யிடத்தில் நீரருந்தச்செய்து, அவைகள் களையாறும் படி ஓர் விருக்ஷநிழலில் படுத்து அசைப்போடச்செய்து, தான் அம்மர நிழலில் அமர்ந்து யேதேதோ சிந்தித்து வருந்தி மாலைப்பொழுது வீடு சேர்வாள்.

தான் காட்டில் மாடு மேய்க்கும்போது பட்சிகளும் சிறு பிராணிகளும் இரைக்காக அங்குமிங்கு மலைவதைப்பார்த்து தான் வீட்டிலிருந்து போகும்போதே சில தானியங்கள் கொண்டுபோய் அவைகட்குக் கொடுப்பாள்: இதனால் பட்சிகளும் சந்துக்களுங்கூட அவளைச் சூழ்ந்திருந்தன. அவள் காட்டில் மர நிழலில் பசுக்களைக் களையாற்றி அமர்ந்திருக்கும்போது தன் துக்கம் மேலாடுவதை தன் சமாதானத்தால் அடக்குவாள். சில சில சமையங்களில் அதனைத் தான் செயிக்க மாட்டாதவளாய்த் துன்பத்தின் வழி அறிவுசெல்ல கண்ணீர் ஊற்று நீர்போல்கூட தன் பக்கத்தில் எது நடப்பினும் அறியாது ஓர் பதுமைபோல் அப்படியே அமர்ந்திருப்பாள். அப்போது அவள் துன்புறுவதை உணர்ந்தனபோல் பசுக்கள் அவள் முன் வந்துபார்த்து தலை கவிந்து இரைதேடாது நிற்கும். சில அவளைத் தங்கள் நாவால் இதமுற நக்கும், மரத்தின் மீது இருக்கும் பட்சிகள் நிர் சப்தமாய்ப் பார்த்திருக்கும். அவள் தன் வியாகூலத்தை ஜெயித்து பிரக்ஞையடையும் போது பசுக்கள் அவள் முன் விளையாடும், பட்சிகள் கலகலவென்று சப்திக்கும். தனக்காக அவைகள் அன்பு காட்டுகின்றன என்பதை ஓர்வாறாய் உணர்ந்த மாதவி அவைகளைத் தடவிக் கொடுத்துக் கொஞ்சுவாள். பட்சிகள் மரம் நிறைந்திருப்பதைக் கண்டு அவைகட்கு தானியமளிப்பாள்.

இவ்வாறு ஒருவருட காலங் கழித்த மாதவி ஓர் நாள் (அதாவது ஊர் சனங்கள் கூடி அரசனை அடுத்த வாரம் பார்ப்பதாய் பேசி முடித்த மறுநாள்) தனக்கு வழக்கமாயுள்ள மரநிழலில் கேகிக்கள் சூழ குருவிகள் கூட்ட மிட கண்ணீர் பொழிய தன் துன்ப யோகத்தமர்ந்து சுவற்றிலெழுதிய சித்திரம் போலிருந்தாள். முப்பது வயதுள்ள மங்கை தன் கூந்தல் விரிந்து கிடக்க சந்திரனைத் தாங்கும் தாமரை ஒப்ப கரத்தால் தன் ஒளி தாங்கிய முகத்தை ஓர் புறமாய் தாங்கி வருந்துவதை யாரோ கண்டு சகிப்பார்? அப்படிக் கண்டு

சகியாது கண்ணீர் ததும்பி சில நாழிகைகள் அவள் முகத்தையே நின்று பார்த்து தன்னை யறியாது "எல்லாம் உன் உயர்வுக்கே செய்தேன்" என்று கூறி பின் தன்னை உணர்ந்தவனாய் தன் கண்ணைத் துடைத்துப் பார்த்து மாதவி தன் யோகத்திலிருந்து கலையாமையால், தன் வாய் தவறுவந்த சில மொழிகள் அவள் அறியாதிருந்தமைக்கு மனங்களித்து, இதமுற ஓர் மனிதன் மாதவி! மாதவி! என்று தன் மிருதுவான குரலால் அழைத்தான்.

பாஷாணம் அருந்திப் பரிதவிப்பார்க்கு ஓர் துளி அமுதம் வார்ப்பதுபோல் தான் பலநாள் உண்டு மனவாறுதலடைந்திருந்த மொழி அவள் துன்ப சாகரத்தில் சிதறுதலும் உணர்ச்சி நீங்கி அறிவு நிலை வந்து தன்னைத் தெளிவித்தது அமுதமொழிதானா என்பதறிய சடுதியில் தன் கண்களைத் துடைத்து எழுந்து நாற்புறமும் பார்த்துத் தன் பக்கத்தே அரசன் நிற்பதுணர்ந்து அவனை நமஸ்கரித்து 'ஸ்வாமி! தாங்கள் தனித்து வரக்காரணமேன்' என்றாள்.

அரசன் "மாதவி! கல்யாணம் இன்னும் ஒருவார மிருக்கிறது. அங்கிருந்து காரியத்தை விமரிசையாய் நடத்த வல்லவர்கள் உன்னையன்றி யெனக்கார் இருக்கிறார்கள்? நீயிருந்து நடத்தின் யாரும் அதனைப் பெருமையாய்க் கொண்டாடுவார்கள். இக்காட்டிலுங் கூட நீ தனித்திருக்கவில்லை. உன்னிடம் அன்பு கொண்ட பசுக்களும் பட்சிகளும் உன்னைச் சூழ்ந்து உன் க்ஷேமத்தைக் கோருகின்றன. நீ உத்தமி, உயர் குணமுள்ளவள், நீ வந்திருந்து என்னைப்பெருமைப் படுத்தவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்" என்றான்.

மாதவி மனமுருகி "அரசே! நான் தங்கள் ஊழியப்பெண், உத்தரவிட்டபடி நடக்கக் கடமைப்பட்டவள். அன்றியும் நீங்கள் எப்பொழுதும் அன்பே பாராட்டுகிறீர்கள். அதற்காகவே இவ்வுடலை நான் காக்கவைத்திருக்கிறேன்: அக்கடமையை நான் தீர்த்தற்கே பூதேவியும் பொறுமையாய் என்னைத் தாங்குகிறாள். இப்படியான பணி நான் தங்கட்குச் செய்யாதுபோனால் என்னுடலை அக்னிதேவன் உண்ண அஞ்சுவான். என் மனக்குறை நீங்கிற்று. நாளை உதயம் அரண்மனை வந்து சேருகிறேன்" என்றாள்.

"மாதவி! நான் உன்னை அழைத்துப் போகவே வந்தேன். அதோ குதிரை மேய்ந்துகொண்டிருக்கிறது. நீ முன்னர் வீடுசென்று உன் தந்தையிடம் விடை பெற்றுக்கொள். நானும் உன்னைப் பின்பற்றி வருகிறேன்" என்றான்.

மாதவி மற்றொன்றும் பேசாளாய் வீடு நோக்கிச் சென்றாள். காட்டிலிருந்த பட்சிகள் கல்லொன்ற ஒலியுடன் மேலெழுந்து பரக்

தன. பசுக்கள் அவளுக்கு முன் பின்னும் மந்த காசமாய்க்குதித்து விளையாடிச் சென்றன. இவையெல்லாம் கண்டு மனம் நிலையில்லானாய் அரசன் மயங்கி நின்றான்.

சில நாழிகைகள் கழித்து அரசன் தன் குதிரை யேறிமாதவன் குடிசைப் பக்கம் வந்திறங்கினான். இதற்குள் மாதவி அரசன் பணியைத் தந்தைக் கறிவித்து விடை பெற்று வெளிவந்தாள். அரசன் அவளைத் தன் குதிரை மீதமர்த்தி தானும் யேறி அரண்மனை வந்து சேர்ந்தான்.

பணியாளர்கள் மனங்களித்தனர். உத்தியோக முடையோர் உள்ளம் பூரித்தனர். அரண்மனையில் பலரையும் உபசரிக்கும் யேற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன. ஆறாநாள் இரவு சம்பந்தி வீட்டார் பெண்ணுடன் வருவதாய் பிரஸ்தாபம் யெழுந்தது. சில நாழிகைகள் கழித்ததும் அரசன் மாதவியிடம் வந்து, மாதவி! என் தமக்கை சுந்திராம்பாளும், அவள் புருஷன் செல்வராயரும், அவர் மக்களும் வந்திருக்கிறார்கள். அவைகளில் மூத்தது பெண். அவள் பெயர் கமலநாயகி; சுகுணதீரன், சுந்திரவதன் என்ற இரண்டு மக்களுமுண்டு. உன் கல்யாணத்தின் போது என் தமக்கையையும் மைத்துனனையும் நான் பார்த்தது. நானக்குழந்தைகளை நன்றாயறிந்திலேன். நாளைக் கல்யாணமாதலால் அப்பெண், குழந்தைகள் உன் மனதிற்குத் திருப்தியாகக் காணப்படுகின்றனவா என்பதறிந்து வா. அவைகட்குயேதேனும் கொண்டுபோ என்று சொல்லிப்போனான்.

உடனே மாதவி பல கனிவர்க்கங்களும் தின் பண்டங்களும் மங்களத்திற்குரிய பல பண்டங்களும் உயர்ந்த ஆபரணங்களும் எடுத்துக்கொண்டு சென்றாள்.

மாதவி சம்பந்திகள் தங்கியிருக்கும் மாளிகை சென்றதும் அவள் வருகையை அறிந்த சுந்திராம்பாள் முன்னே வந்து அவளைக் கட்டி ஆலிங்கனம் செய்து "என் கண்ணே! உன்னை நெடுநாள்களாய் பார்க்கயெண்ணம். பரதேவதை இப்போது தான் அதற் கிடந்தந்தாள். உத்தம குணங்களைக் கேட்ட என் குழந்தைகள் உன்னை எப்போது காணலாம் என என்னைக் கேட்டுக் கொண்டிருக்கின்றன. கண்ணே வா, குழந்தைகட்கு உன் அமுத மொழியில் சில சொல்" என்றழைத்துப் போனாள்.

வீட்டில் உட்புறம் இருவரும் செல்லுகையில் ஸ்திரீ லக்ஷணம் விளங்க உருவெடுத்ததுபோல் பதின் மூன்றுவயதுடைய ஓர் கன்னிகையும் கருணை நிறைந்தழ்கும் கம்பீரமான பார்வையும் மந்தகாசமான நடையுமுடைய இரண்டு சிறுவரும் எதிரில் வந்தனர்.

அக் குழந்தைகளைக் கண்டதும் சுந்திராம்பாள் "என் கண்மணிகளே! இதோ நீங்கள் சிறுபிராயமுதல் கேட்டுக்கொண்டிருந்த மாதவி," என்று, மாதவியைக் காட்டி, அங்கு விரிக்கப்பட்டிருந்த உயர்ந்த இரத்தினகம்பளத்தில் மாதவியை உட்காரச்செய்து தானும் உட்கார்ந்தாள்.

கமலநாயகியும் குழந்தைகளும் மாதவியை வணங்கின. மாதவி அவைகளை ஒவ்வொன்றாய் முத்தமிட்டு ஆசிர்வதித்தாள். கமலநர்யகி அவள் எதிரில் உட்கார்ந்து அவளைப்பார்த்து நாங்கள் அநேக நாட்களாய் உங்களைப் பார்க்க வரவேண்டுமென்று கேட்டுவந்தோம். அம்மாவும் அப்பாவும் சொல்லிவந்தபடி இத்தனை நாள்கள் வரமுடியாது போயிற்று என்று கேட்டபோது மாதவி மனந் தாளாளாய் அப்பெண்ணை தன் மிருதுவான கரங்களால் அருகில் சேர்ந்தணைத்துமறுபடியும் முத்தமிட்டு உச்சி முகந்து அவள் கூந்தலைக் கோதும்போது அவள் கண்களில் நீர்ததும்பின. ஒன்றுஞ்சொல்ல அறியாளாய் கமலநாயகிக்கு பதிலுரைப்பதுபோல் சில சில உபசார வார்த்தைகளை மாத்திரமே சொல்லியிருந்து திடுக்கிட்டு தன் பாரிசத்தில் இரண்டு புருஷ குழந்தைகளும் தன் மடியில் படுத்து கண் கலங்கிய வண்ணமாய் தன் முகத்தைப்பார்த்திருப்பதைப் பார்த்து அவர்களை இருகக்கட்டிக் கொண்டாள்.

பின் அண்ணாந்து பார்த்தபோது சுந்திராம்பாள் கண்களில் நீர்துளி சிந்துவதையும் கமல நாயகி விம்மி விம்மியழுவதையுங் கண்டாள். தானுந் தாளாது ஏராளமாய்க் கண்ணீருகுத்தாள். மற்றக் குழந்தைகளும் விம்மத் தலைப்பட்டன.

இவையெல்லாம் பார்த்த சுந்திராம்பாள் குழந்தைகளிடத்து மாதவிக்கிருக்கும் அன்பும் தன்னுத்தம குழந்தைகட்கு அவள் மீதிருக்கும் பட்சமும் கண்டு மனமுருகினாளேனும் அவ்வன்பு ஒன்றோடொன்று கரை கடந்து பொங்குவதைக்கண்டு, புருடக் குழந்தைகளை அழைத்து முத்தியிட்டு, அப்பா! யேதோ காரியமாய் வரச் சொன்னார்கள். நீங்கள் அங்கு போங்கள் என்றாள். அவைகளும் உத்திரவுக்கு உடனே கீழ்ப் படிந்து சென்றன.

பின் மாதவி தன்னைத்தானே தைரியம் செய்துகொண்டு கமலநாயகிக்கு தான் கொண்டுவந்த ஆபரணங்களை தன்கையால் பூட்டி முத்தமிட்டு அவளைச் சற்று கவனித்து அந்நகைகட்கு அவள் அழகு செய்வதைக்கண்டு உள்ளம் பூரித்தவளாய் சுந்திராம்பாளுடன் சில நாழிகை பேசியிருந்து விடைபெற்றுத் திரும்பும்போது புருடக்குழந்தைகள் எதிரில் வருவதைக்கண்டு அவைகளை இன்னொருதடவை

பார்த்துப்போக எண்ணி அக்குழந்தைகளை வாரியணைத்துக் கொஞ்சி பிரியாவிடை பெற்றுத் தன் அரண்மனை வந்தாள்.

இவள் வருகையை யெதிர் பார்த்திருந்த சுசீலன் மாதவியைக் கண்டதும் நெடு நாழிகையாய் அங்கு தங்கிவிட்டாய் என்றான்.

அதற்கு மாதவி—சுவாமி-தங்களருமைத் தமக்கையாரின் குழந்தைகளின் அன்பும் உயர்குணமும் நான் அவர்களைவிட்டுப் பிரிந்து வரும்படி செய்யவில்லை.

ஆ! காட்டில் மிருகங்களும் பட்சிகளும் உன்னிடத்து பாராட்டிய அன்பிலும் அக்குழந்தைகள் எப்படிக் குறைவாய்க் காட்டமுடியும்? உயர் குணமும் உத்தம நடையும் உன்னிடமன்றி யாரிடத்துள்ளது என்று சட்டெனத் திரும்பி அப்பால் போனான்.

சூரிய உதயமானதும் குடிகள் அரசனை அன்று காண ஏற்படுத்தியிருந்த தினமாதலால் சிறியார் பெரியார் முதலிய யாவரும் திரண்டு சபாமண்டபத்தில் கூடினர். பல வாத்தியங்களும் மங்களகரமாய் முழங்கிக்கொண்டிருந்தன. சில நாழிகையில் அரசன் சபா மண்டபத்து வந்தமர்ந்தான். அவனோடு சமமாக செல்வராயனும் வந்திருந்தான். செல்வராயன் பக்கத்தில் இரண்டு அரசிளங் குமாரரும் இருந்தனர். மற்றவர்களும் அந்தஸ்துக்குத் தக்கபடி அமர்ந்தனர்.

அரசன் சபையோரை நோக்கி "ஐயன்மீர்! நீங்கள் ஒருவாரம் முன்னரே இச்சபை கூட்டயோசித்திருப்பதாய்க் கேள்விப் பட்டேன். கால தாமதமின்றி உங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டால் நான் தேடக் கூடிய பரிகாரங்களைத் தேடுவேன்" என்றான்.

அங்கு அறிவில் முதியரும் வாய் வல்லருமான ஒருவர் எழுந்து "அரசே! நாங்கள் உங்கள் உயர் குணங்களை யறிந்து உங்கள் மனம் சந்தோஷத்தை யடையும்படி உங்கள் விருப்பப்படி "மாதவி" என்னும் தெய்வகுண மாதை வதுவைக்குடன்பட்டு பட்ட மகிஷியாய் ஒப்புக்கொண்டோம். பின் நாங்கள் வாக்காலும் மனத்தாலும் நடையாலும் ராஜாங்கத்திற்கு எந்த விதபாபமும் செய்தறியோம். அப்படியிருக்க எங்களை முன்னிட்டு ராணியார் பல துன்பமடைந்ததாயும் அவர் செல்வக் குழந்தைகளும்—என்று கண்ணீர் ததும்ப நின்று— நாங்கள் எங்கள் சந்தேகங்களை நிவர்த்தித்துக்கொள்ளவே வந்தோம்" என்றார். மற்ற சனங்களும் உடல் கொதித்த வண்ணமாய் அரசனை உருக்கிப் பார்த்திருந்தார்கள்.

சுசீலன் இவ்வாறு பேசியவரை கையமர்த்தி யிருக்கச் செய்து தன் பக்கத்தே திரும்பினான். இக் குறிப்புணர்ந்து கொண்டு கேசவன் அரசனை வந்து வணங்கினான். அரசன்-கேசவா சொன்னபடி செய்தனையா? வென்றான். அவனும் வணங்கி சுவாமி-ராணியாரும் தங்கள் அருமைச் சோதரியாரும் அவரது செல்வப் புதல்வியும் இதோ திரைச்சீலைக்கு மறைவிலமர்ந்திருக்கிறார்கள் என்றான்.

பின் தன் மைத்துனன் செல்வராயரை அரசன் நோக்கினான். அவனும் தன் கையிலிருந்த மூன்று கடிதங்களை கேசவன் கையில் தந்தான். அவனும் அதனை வாங்கி அரசன் முன்னிருந்த மேஜையில் வைத்தான்.

இவை யெல்லாம் நடத்திய பின் அரசன் சபையை நோக்கி "ஐயன்மீர்! நீங்கள் சந்தேகித்தது ஒருவாறு உண்மையே ஆயினும் நானுங்கள் கருத்தைத் தெரிவிப்பதானால் நான் கேட்கும் சில விஷயங்கட்கு நீங்கள் ஒத்து பதில் தரவேண்டும். மாதவியை நீங்கள் பட்ட மகிஷியாய் ஒப்புக்கொண்ட துண்மையா? இனிமேலும் நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா?" என்றான்.

குடிகள்.—ஆம். இனிமேலும் சத்தியத்தில் அப்படிச் செய்யத் தவறோம்.

அரசன்.—மாதவியின் குழந்தைகள் இருந்தால் நீங்கள் இளவரசராய் அங்கீகரித்திருப்பீர்களா ?

குடிகள்.—அரசே நாங்கள் சொப்பனத்திலும் பேதமாய் நினையாத கேள்வி. அக்குழந்தைகளே யெங்கள் இளவரசு. வேறு நாங்கள் நினைத்தோமென்றாவது நினைப்போமென்றாவது சந்தேகிப்பது தெய்வ சம்மத மாகாது. சத்தியத்தில் அக்குழந்தைகள் எங்கள் இளவரசாவதே எங்கள் விருப்பம் என்று ஒரு மொழியாய் ஓல மிட்டனர்.

அரசன் மனமிளகி ஐயன்மீர்! நானுங்களைச் சந்தேகித்து எனக்கு நானே துன்பிழைத்துக் கொண்டேன். என் அருமை மனைவிக்கு ஆற்றொணாத்துயர் செய்வித்தேன் என்று கண்ணீர் ததும்பி பக்கத்தில் திரும்பினான். திரைமறைவிலிருந்த மாதவியையும், தன் தமக்கையையும், கமல நாயகியையும் சபைமுன் அழைத்துவந்து நிறுத்தி, செல்வராயன் பக்கத்திலிருந்த இரண்டு புருடக் குழந்தைகளையும் மாதவி கைதந்து, மாதவி! இவைகள் உன் குழந்தைகள். இக்கமல நாயகியே உன் மூத்த குமாரத்தி, நான் உன்னை வஞ்சித்தேன். ஆனால் மோசம் செய்யவில்லை. சபையோரும் நீயும் என்னை மன்னிப்பீர்களா என்றான். மேல் நடந்தவைகளை இதனைப் படிக்கும் சோதரிகள் அறிவார்கள்.

(குறிப்பு) மேஜையின் பேரில் வைக்கப்பட்ட கடிதங்கள் சுசீலன் கேசவன் வசம் தன் குழந்தைகளை வளர்க்கும்படி மூன்று முறை மைத்துனர்க்கு யெழுதிய கடிதங்கள். மாதவியின் இளைய குமாரன் இராமேஸ்வர ராஜ்யத்திற்கு செல்வராயன் விருப்பப்படி இளவரசாக ஒப்புக்கொள்ளப் பட்டான்.

கமலத்தன்னை.

(முற்றிற்று)

ராஜ பக்தி

106-வது பக்கத் தொடர்ச்சி

வீட்டு விசாரம்.

பொழுது விடிவதற்குள் ஹம்ஸப்பிரியன் ஒரு குழிவெட்டி வைத்தது மன்றி பக்கத்துக் கிராமத்திலிருந்து ஒரு புரோஹிதனையும் அழைத்துவந்து எதுகுலனை எழுப்பி, செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து முடித்து அமிர்தேசனை நல்லடக்கம் செய்தனர். வீட்டுக்கு இருவரும் திரும்பும் போது எதுகுலன் "அப்பா! தம்பீ!! நமது அமிர்தேசன் மஹா புண்யசாலி, சாகும் தருவாயில் இரண்டு பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டான். நல்லவர்களுக்கு எப்பொழுதும் நல்ல கதி கிடைக்கின்றது; பார்". என்றான். அன்று முதல் 15 நாள் வரையில் பக்கத்துக் கிராமத்துக்கே சென்று ஆற்றோரத்தில் செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்து முடித்தான் ஹம்ஸப்பிரியன்.

தினமும் இரண்டு பெண்களும் அமிர்தேசன் சமாதியில் விளக்கு வைத்து வருவார்கள். சமாதியைச் சுற்றிலும் புஷ்பச் செடிகளையும் அழகிய கொடிகளையும் வளர்த்தினர். பெரிய மரங்கள் தழைத்தோங்க விதை விதைத்தனர். சில சமயங்களில் நால்வரும் அங்கே கூடி அமிர்தேசனுக்குப் பிரியமான பாட்டுகளையும், கீர்த்தனைகளையும், சுலோகங்களையும் பாடுவார்கள். வீட்டில் ஏதாவது தின்பண்டம் செய்தால் கொஞ்சம் எடுத்து அமிர்தேசனுக்கென்று தனியேவைத்து விட்டு, அதை பக்தியோடு சமாதியில் கொண்டுபோய் ஸமர்ப்பித்து வருவாள் அலமேலுமங்கை.

அச்சல பாரிஜாதன் ஒரு வாரத்துக்குள் வருவதாகச் சொன்னவன், சொன்னபடி வரவில்லை. தினமும் அவன் வருவான், வருவான் என்று எதிர்பார்த்த வண்ணமாய் இருந்தனர் சகோதரர் இருவரும். ஒன்று, இரண்டு, மூன்று வாரங்கள் ஆய்விட்டன. இன்னமும் பாரிஜாதனைக்காணோம். ஒருமாதமாயிற்று. இனி என்ன செய்வதென்று இருவரும் யோசனை செய்யத் தொடங்கினர். வீட்டில் சாமான் ஒன்

றும் கிடையாது. மாவு, அரிசி, பருப்பு முதலிய சாமான்கள் வாங்கி வர லக்ஷ்மணபுரிக்கோ அல்லது ரெட்டிப்பேட்டைக்கோ போய் வர வேண்டும். இவற்றை யோசிக்கும் சமயத்திலேயே அமிர்தேசன் பணம் வைத்திருப்பதாகச் சொன்னதும் ஞாபகத்துக்கு வந்தது. இரண்டு சகோதரர்களும் அவ்விடத்தில் போய் கல்லைப் புரட்டிப் பார்த்ததில் ஒரு ஜோடுதவலையில், ஒரு பை நிரம்ப வெள்ளிக் காசுகளும் ஒரு சிறுபை நிரம்பத் தங்கக் காசுகளும் இருந்தன. அவற்றைப் பார்த்ததும் எவ்விதம் அமிர்தேசன் இல்வளவு பொருள் சம்பாதித்தான். என்று ஆச்சரியப்பட்டனர். "உண்மையாகவே ஏராளமான திரவியம் இது!! தடையில்லாமல் பலநாளைக்கு நமக்குப் போதுமானது" என்றான் ஹம்சப்பிரியன்.

"எனக்கும் அப்படியே தான் தோன்றுகின்றது. பாரிஜாதன் ஒரு தடவை வந்தால் நல்லது; எனக்கோ வேண்டிய சாமான்களின் விலையும் தெரியாது, விற்குமிடமும் தெரியாது. மான் வேட்டையாடி விற்கக் கொண்டு போனால் எத்தனை பணம் கேட்கின்றதென்பதும் தெரியவில்லை. அமிர்தேசன் இருக்கும் வரையில் செல்லப்பிள்ளையாய் நம்மை வளர்த்தி விட்டான். இப்பொழுது நமக்குக் கஷ்டமாய் இருக்கின்றது. நாளையதினமும் பார்ப்போம்; பாரிஜாதன் வராவிடில் நானே அவன் வீட்டுக்குப்போய் அவனைப் பார்த்து வருகிறேன்" என்று கொஞ்சம் வெள்ளிக் காசுகளை மட்டும் எடுத்துக்கொண்டு, கல்லை நன்றாய் மூடிவிட்டு இருவரும் வெளியே வந்தனர்.

நல்ல வேளையாய் மறுநாட் காலையில் பாரிஜாதன் குடிசைக்கு வந்து சேர்ந்தான். "கிழவனுக்கு எப்படியிருக்கின்றது?" என்றான் முதலில். "புதைத்து ஒரு மாதமாகின்றது" என்றான் எதுகுலன்.

"அப்படித்தான் நானும் நினைத்தேன். வைகுண்டம் சேரட்டும் பாவம்!! உமது கை எப்படி யிருக்கின்றது? ஐயா?"

"முக்கால் வரிசை சௌக்கியமாய் விட்டது. என் தம்பி ஏதோ பச்சிலை தடவினான்: அது சௌக்கியப் படுத்திற்று—அது கிடக்கட்டும், உட்கார்ந்து கொள். உன்னிடத்தில் வெகு சமாச்சாரம் பேச வேண்டி யிருக்கின்றது. முதலில் இவ்வளவுநாள் ஏன் நீ வருவதற்கு? அதைச்சொல். ஒரு வாரத்துக்குள் வருவதாகச் சொன்னவன் இவ்வளவு நாள் தாமதமா?" என்று கேட்டான்.

சுளுவாய்ச் சொல்ல வேண்டுமானால் சொல்லுகிறேன், கேளும். தாமதத்துக்குக் காரணம் பட்டாபிஷேகம்!!

"யாருக்குப் பட்டாபிஷேகம்?"

விஜ்ஜலனுக்கு !! ஆம் ! ஐயா !! விஜ்ஜலனுக்கு !!! அவன் இப்பொழுது விஜ்ஜலராஜன் ஆய்விட்டான்.

"யார் ஐயா பட்டம் கொடுத்தது விஜ்ஜலனுக்கு! மோட்டுப் பூச்சி நசுக்குவது போல் நசுக்காமல் பட்டாபிஷேகமா இப்பயலுக்கு !!"

"முதலிலிருந்து சொல்லுகிறேன் கேளும். நமது சக்ரவர்த்தியும் குழந்தைகளும் வெவ்வேறு ஊர்களுக்குப் போய் யாதவராஜனிடத்திலும் ஆந்திரராஜனிடத்திலும் அடைக்கலம் புகுந்தார்கள் அல்லவா?"

"ஆம்"

"அந்த யாதவ ராஜனுடன் உடன்படிக்கை செய்துகொண்டு, அவனுக்குச் சில தேசங்களைக் கொடுப்பதாகச் சொல்லி, பழைய எல்லைச்சண்டைகளைத் தீர்ப்பதாக வாக்களித்து அரசனை வெளியே விடாமல் தன்னிடத்திலேயே சிறையில் வைத்ததுபோல் வைத்திருக்கும்படி ஏற்பாடு செய்து விட்டானாம். அதன் பிறகு குண்டல தேசத்திலிருக்கும் ஒவ்வொரு பிரபுவையும் நேரே அழைத்து அவர்களையும் வசப்படுத்திக் கொண்டானாம். தனக்குப் பகைவர் என்று தோன்றிய சிலரைத் தூரதேசங்களுக்கு தூதர்களாகவும் பிரதிநிதிகளாகவும் அனுப்பிவிட்டானாம். இவ்வாறு வழிகளை எல்லாம் தடையில்லாமல் அமைத்துக் கொண்டு தானே மன்னன் என்று பட்டாபிஷேகம் செய்து கொண்டானாம் விஜ்ஜலன் !!"

"மற்ற பிரபுக்கள் எல்லாம் பெண் பிள்ளைகளா? ஏன் சும்மாவிருக்கின்றனர்?"

"ஏனெனில், முதல் தரமான சேனைகளை விஜ்ஜலன் கையில் ஒப்புவித்து விட்டார்கள் அல்லவா, எல்லாரும்? எப்படியிருப்பினும் விஜ்ஜலனுக்கு சேனைகளை யெல்லாம் தன் வசப்படுத்திக்கொள்ளும் குணம் இருக்கின்றதென்பதை எல்லாரும் ஒப்புக்கொள்ளவேண்டியது தானே!! அது பற்றி விஜ்ஜலனுக்கு பயப்படாவிட்டாலும் அவன் சேனையைப் பார்த்து நடுங்குகின்றனர்" என்றான் பாரிஜாதன்.

"ஆனால் எல்லாப் பிரபுக்களும் சம்மதித்து விட்டார்கள்!! சரி! சரி!! க்ஷத்திரியவம்சம் நாசமடைகின்றதென்பதை நிரூபிக்க இன்னும் வேறு சாக்ஷியம் வேண்டுமா!! நரி, புலிகளின் கூட்டத்தில் அரசு செலுத்துவது போலாயிற்று!! பேஷ்! பேஷ்!!" என்று கோபாவேசத்துடன் நகைத்தான் எதுகுலன்.

"அப்படியில்லை, ஐயா! பல பிரபுக்களுக்கு மனதில் என்னவோ அசமாதானம் தான்!! கோபமும் கூடபார்க்கப்போனால்!! ஆனால் ஒன்றையும் வெளிக்காட்ட முடியாமல் தவிக்கின்றனர் போலும்—"

"ஆமாம்! சரி!! ஆகவே என்னதான் செய்யப் போகிறார்கள்?" என்று அதட்டிக் கேட்டான். பாரிஜாதன் "ஐயா, இந்த சம்மதமும், இப்பொழுது ராஜ்யத்தில் இருக்கும் அமைதியும், நம்பக் கூடியவைகளா? ஆடி மாதத்தில் அடிக்கப்போகிற புசல் காற்றுக்கு முன் இருக்கும் அமைதி போலவல்லவோ இது!! ஆரம்பிக்க வேண்டியதுதான் காற்று; 'குடுமியெல்லாம் பிச்சுக்கொண்டு போய்விடும்.' அதுவே போல்தான் இங்கேயும்."

எதுகுலன் "ஆரம்பித்தால் தானே!! எவன் ஆரம்பிக்கப் போகிறான்? தைரியமாய் நேற்று வந்த அனாதிப்பயல் தந்திரமாய் நரிபோல் சிம்மாசனம் ஏறவும், அவனைப் பார்த்து ஏமாந்து நிற்கும் ஆடுகளா சண்டைக்கு ஆரம்பம் செய்யப் போகின்றனர்? எங்கேயாவது உண்டா பாரிஜாதா? பார்த்துக்கொள்வோம், நடக்க நடக்க."

பாரிஜாதன் "என் எஜமானர் ஹேமநாதர், நீங்கள் புறப்பட்டு வந்து இரண்டு தினம் கழித்து, அவசர சமாச்சாரம் வந்ததன் மேல் கல்யாணபுரிக்குச் சென்றார். கூடியவரையில் விஜ்ஜலனைப் பட்டாபிஷேகம் செய்து கொள்ளாதிருக்கும்படி தடுக்கப் பிரயத்தனம் செய்தார் என்று கூடப் பிரஸ்தாபம். உண்மையோ, பொய்யோ!! கிழக்கே உதித்து மேற்கே அஸ்தமிக்கும் சூரிய நாராயணனுக்குத் தான் தெரியும். கடைசியாய்ப் பிரயோசனப்படவில்லையாம்.

எதுகுலன் ஒன்றும் பேசவில்லை.

கொஞ்சநேரம் கழித்துப் பாரிஜாதன் "நேற்றைய தினம் மறுபடி அவர் தலை நகரிலிருந்து திரும்பி வந்தார். முன்னிலும் அதிக கவலையும் விசாரமும் அவர் முகத்தில் விளங்குகின்றன. அவர் உம்மைப் பார்க்கவேண்டுமென்று இஷ்டப்படுகிறார். நீர் செய்த உபகாரத்துக்கு உமக்கு வந்தனம் அளிக்க வேண்டுமாம். ரொம்பக் கேட்டுக் கொண்டார்."

எதுகுலன் "அவர் கொடுக்கும் வந்தன மூட்டைகளை யெல்லாம் உன் மூலமாகவே வாங்கிக் கொள்ளுகிறேன். அதுவே நேரில் கொடுத்தது போல எனக்கு" என்று கடுகடுத்துக் கொண்டு சொன்னான்.

பாரிஜாதன் "அதுவும் சரியே. இன்னுமொரு சமாச்சாரம் உமக்குச் சொல்ல வேண்டுவது. அது அவர்மகளிடமிருந்து, அவள் உம்மை நேரில் கண்டு உமது தைரியத்திற்காகவும் நல்ல குணத்திற்காகவும் நேரில் வந்தனம் செய்யாவிட்டால் தான் திருப்தி யடையவே முடியாதென்று சொல்லும்படி கட்டளையிட்டிருக்கிறாள். இன்னும் ஒரு வாரத்துக்குள் அவள் தகப்பனார் மறுபடி தலைநகர் போவதாய் இருப்பதால்

அவர் இல்லாத சமயத்தில் நீர் ஒரு முறை அத்திசையாய்ச் சவாரி செய்து வந்து அந்த அம்மாளைக் கண்டு விட்டுப்போவது அநுகூலமாய் இருக்கும். ஹேமநாதர் இல்லாத சமயத்தில் வந்தால் அவரும் உமக்கு ஏதாவது உத்தியோகம் கொடுப்பதாகச் சொல்லி உம்முடைய ராஜ விசுவாசத்தைப் பரிக்ஷிக்க இடம் இராது. நீரும் அவருடன் பேசாமலே திரும்பி வந்து விடலாம்" என்றான்.

எதுகுலன் "சரி: பார்க்கலாம், அந்தப்பெண்மணியை சந்திப்பதில் எனக்கு யாதொரு ஆக்ஷேபனையும் இல்லை, உன் எஜமானனும் ஊருக்குப் போவதால் ஒருக்கால் வந்தாலும் வருகிறேன்."

பிறகு எதுகுலதிலகன் தனக்கு வேண்டிய பலசாமான்களையும் எவ்வாறு வாங்கலாம் என்றும், விலை எப்படி யிருக்கு மென்றும், எவ்விடத்தில் எந்தெந்த சாமான்கள் கிடைக்கு மென்றும், விசாரிக்கத் தொடங்கினான். "ஐயா, உமக்கு என்னத்திற்கு அவ்வளவு பிரயாசம்? எனக்கு வேறு வேலையில்லை இப்பொழுது; ஆகையால் நானே உம்முடன் வந்து கடை முதலிய எல்லாவற்றையும் காட்டுகிறேன். நீர் தனியே போவதைவிட நானும் கூட வருவது அநுகூலமாய் இருக்குமல்லவா?"

எதுகுலன் "ஆக்ஷேபனை யென்ன? வெகு சந்தோஷமாச்சுது! பாரிஜாதா எனக்கு இத்தனை உபகாரம் எவர் செய்யப் போகிறார்கள்? உன் பேருதவியை எந்நாளும் மறவேன்."

இருவரும் புறப்பட்டுப்போக ஏற்பாடு செய்துகொள்ளவே, ஒரு நொடியில் ஹம்சப்பிரியன் குதிரையையும் வண்டியையும் வீட்டின் முன் கொண்டு வந்து நிறுத்தினான்.

எது குலனும் பாரிஜாதனும் லக்ஷ்மண புரிக்கு வந்து, அங்கே சாதாரணமாய் வனபாலர்களும் மற்றவர்களும், அதிகாரிகளும் வழக்கமாய் இறங்கும் சத்திரத்துக்கு வண்டியை ஓட்டிக் கொண்டு போனார்கள். அந்தச் சத்திரக்காரன் ஒரு கடை வைத்து இருந்தான். அவனே இரகசியமாய் வனபாலர் திருட்டுத்தனமாய்க் கொண்டு வந்து விற்கும் பண்டங்களை வாங்கிக் கொள்பவன். அவன் கையில் ஏதாவது ஒரு சாமான் கிடைத்து விட்டால் தக்க இடம் பார்த்து ஒரு நொடியில் எல்லாவற்றையும் சிறிது சிறிதாய் அக்கிராமத்தில் விற்று விடுவான்.

வந்த இருவரும் வண்டியை வெளியே நிறுத்தி விட்டு சத்திரத்துள்ளே நுழைந்ததும், சத்திரக்காரன் கூடத்தில் உட்கார்ந்து கணக்குப் பார்த்திருப்பதைக் கண்டனர்.. அவன் தேகத்தில் சதை வழிந்திருப்பதைப் பார்த்தால் ராஜாபிமானிகளுடைய அதிகாரம் போய்

ராஜத் துரோஹிகளுடைய அதிகாரம் வந்தும் கூட அவனுக்கு வாட்டமில்லை யென்பதும் தெளிவாயிற்று. அவன் வீதிப்புறம் முதுகைத் திருப்பிக் கொண்டு கணக்குப் பார்த்திருந்தபடியால் உள்ளே நுழைந்த இருவரையும் பார்க்கக் கூடவில்லை. எத்தனையோ பேர் ஒவ்வொரு தினமும் சத்திரத்துக்கு வந்துகொண்டே யிருக்கின்றனர். வரும் ஒவ்வொருவரையும் அவன் திரும்பிப் பார்த்துக்கொண்டே யிருப்பதென்றால் அவனுடைய ஸ்தூல தேகத்துக்கு சாத்தியமா? கூப்பிடும் வரையில் அவன் பேசுவதில்லை யென்று விரதமாக வைத்துக் கொண்டு விட்டான். அவன் பெயர் ஆந்திர தனபால் செட்டியார். ஏனெனில் அவன் முதலில் ஆந்திர தேசத்திலிருந்து வந்த ஒரு ராணுவச்சிப்பாய். சத்திரக்காரனாக அமர்ந்து வெகு பேர் பெற்றவன். எல்லாரும் அவனை 'ஆந்திரரே' என்று கூப்பிடுவதேயன்றி தனபாலன் என்னும் பெயரையே மறந்து விட்டனர். அதனாலேயே அவன் மட்டும் தனத்தை பர்லனம் பண்ணுவதில்லை யென்று நீங்கள் எண்ணவே வேண்டாம். பணவிஷயத்தில் வெகு அழுத்தம் தனபால் செட்டியார்.

விகடக் கொத்து

1. ஒரு தனவான் வீட்டில் கலியாணம் நடந்த காலத்தில் சமைப்பதற்காக ஒரு பரிசாரகன் ஏற்றுக்கொண்டான். ஆனாலும் தனவான் அவனைப்பார்த்து "ஐந்து நாள் சமையல் செய்ய உனக்கு எனன்வேணும்" என்று கேட்டார்.

பரிசாரகன் மெதுவாய் "ஐந்து ரூபாய்க்குக் குறையாமல் தரவேணும்" என்றான்.

தனவான் அவன் விருப்பத்துக்கு இசைந்தவர் போல் தலையை யசைத்து தன் கைவிரல் நான்கை உயர்த்திக்காட்டினார்.

பரிசாரகனும் தனக்கு நான்கு ரூபாய் கிடைக்கும் என்ற தைரியத்துடன் தன் வேலையைக் கிரமமாய்ச் செய்துவிட்டு ஐந்தாவது நாள் சாயங்காலம் தனவானைக் கண்டு வணங்கினான்.

அவரும் தாமதமில்லாமல் மூன்று ரூபாய் தந்தார். உடனே பரிசாரகன் முகஞ் சுளித்ததைக்கண்டு அவர் "நான் நாலு விரலைக்காட்டினது வாஸ்தவந்தான். எல்லா விரல்களும் ஒன்று போல இருந்தால் உனக்கு நாலு ரூபாய் கொடுத்திருப்பேன். நடு விரல் பெரிசு, அதற்கு ஒரு ரூபாய், ஆள் காட்டி விரலுக்கும் மோதிர விரலுக்கும் முக்கால் முக்கால் ரூபாய், சுண்டு விரலுக்கு அரை ரூபாய் கூட்டிப்பார்த்துக் கொள்ளப்பா" என்றார்.

2. சென்ற சஞ்சிகையில் வந்த விடுகதைக்கு விடை

தோசை.

சமாச்சாரக் குறிப்பு.

சீகாழியில் மிஸ்டர் C. S. நாராயண சுவாமி ஐயர் பாதரஸத் தால் கிண்ணம், டம்லர் முதலியவைகளைச் செய்துவருகிறார். அதாவது அபரேக்கை உறுக்கி இதனால் கிண்ணம் முதலியவைகளை மைக்கா யும் வார்ப்பு சாமான்களாகச் செய்கிறாராம். புராதன காலத்து சாஸ் திரப்படி மேற் கூறியவைகளைச் செய்கிறாராம். இவருக்கு இன்னும் இவ்வித வேலையை விருத்தி செய்ய கனவான்கள் உதவி புரிந்தால் மிகவும் நலமாக விருக்குமல்லவா?

கவர்மெண்ட் மாளிகையில் ஜனவரி மீ 31௨ கோஷாபார்டிக்கு விருந்தளிக்கப்பட்டது. அச்சமயத்தில் அநேக மாதர்கள் வந்திருந்தார் கள். உள்ளே வரும் மாதர்களை எச் இ லேடிபெண்ட்லண்டும் அவர் கள் குமாரத்தியும் நல்வரவு கூறி வரவழைத்தார்கள். அங்கொரு மேஜையில் யுத்தத்தில் துருப்புகளுக்கு உடுக்க வேண்டிய சாமான் கள் சேகரிக்கபபட்டிருந்தன. இவைகளெல்லாம் சென்னை மாதர்கள் செய்தவைகள். அங்கு வந்தவர்கள் சிற்றுண்டி உண்டார்கள். தேத் தண்ணீர் அருந்தினார்கள். சங்கீதம் வாசிக்கப்பட்டது. தமிழில் மிஸ்டர் ரெங்காசாரியாரின் குமாரத்திபாடியதைக் கேட்டு ஆநந்தங் கொண்டார்கள். இவ்வித கூட்டத்திற்கு மாதர்கள் வந்ததைக் குறித்து தாம் மிக்க சந்தோஷப்படுவதாகவும் யுத்த பண்டுக்கு ரூ. 47,500 வசூல் செய்யப்பட்டிருக்கிற தென்றும், இவ்விதம் யாவரும் சேர்ந்து உல்லாசமாய் சங்கீதம்பாடி காலத்தைக் கழித்ததற்காகவும் மிகுந்த சந்தோஷப்பட்டதைத் தெரிவித்து யாவருக்கும் லேடி பெண்ட்லண்ட் வந்தனமளித்த பின் கூட்டம் கலைந்தது.

ஸ்திரீகள் நாள்:—இங்கலாந்தில் யுத்தத்திற்குரிய சாமான்களை அநேக ஸ்திரீகள் இப்பொழுது தங்கள் வீட்டு வேலைகளையும், சௌ கரியங்களையும் விட்டுவிட்டு செய்து வருகிறார்கள். யுத்தம் ஆரம்ப மானதும் ஸ்திரீகளின் கிறிஸ்துவ சங்கத்தார் யுத்தத்திற்காக வேலை செய்யும் ஸ்திரீகளுக்கு வேண்டிய கூடாரம், சாப்பிடும் இடம், நித் திரை செய்ய இடம், ஸ்ரமபரிகாரம் செய்து கொள்ளும் இடம் முதலிய வைகளைச் செய்து கொடுத்து வந்தார்கள். இச்சங்கத்திற்கு நமது மேரிராணியாரும், அலக்சாந்திரா ராணியாரும் போஷகர்கள். இவ் வித முயற்சி முதிர்ந்து விருத்தியடைந்து வருகிறது. எங்கெங்கே நூற்றுக்கணக்கான ஸ்திரீகள் வேலை செய்து வருகிறார்களோ அவர் களுக்குரிய சௌகரியங்களைச் செய்ய இச்சங்கத்தார் முயன்று வரு கிறார்கள். அதற்கு பணம் தேவையல்லவா? தங்கள் வீடு வாசலை விட்டுவிட்டு வேலை செய்யும் ஸ்திரீகளுக்கு நம்மாலியன்ற உதவி புரிய வேண்டாமா? இதற்காக லண்டன் மாநகரத்தில் பிப்ரவரி மீ 27௨ யன்று ஸ்திரீகளின் தினம் என்று ஒரு தினம் கொண்டாடப்படுமாம். இவ்வித தினம் ப்ரிடிஷ் ராஜ்ய முழுவதும் கொண்டாடப்பட்டு வந் தால் மிகவும் நன்மையென டச்சஸ் ஆப்பார்ல்பரோ அவர்கள் எழுது கிறார்கள். அத்தினத்தில் பணம் வசூல் செய்து அடியில் வரும் விலா சத்துக்கு அனுப்பினால் மிகவும் உதவியாகயிருக்குமென்றும் நாம் மிகவும் ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்ளுகிறோம். இதைக் குறி

த்து அலக்சாண்டிரா ராணியார் தமது அநுதாபத்தைத் தெரிவித்தி ருப்பதுடன் இவ்வித நன்மைன காரியம் பூர்த்தியடைய வேண்டு மென்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

Women's Day Fund for women wartime workers, 168 Piccadilly, London W. England.

சென்னை ராயப்பேட்டையில் ஹோபர்ட் ட்ரெய்னிங் ஸ்கூல் ஒன்றிருக்கிறது. இது கவர்ண்மெண்டாரால் மகமதிய பெண்களுக் காக ஸ்தாபிக்கப்பட்டு நன்றாக நடத்தப்பட்டுவருகிறது. இதன் பரிசு அளிக்கும் தினம் இம்மாதம் 1௨ யன்று கொண்டாடப்பட்டது. அப் பொழுது எச். இ. லேடி பெண்ட்லண்ட் அவர்கள் சபைத்தலைமையை வகித்தார்கள். மிஸ்ஸஸ். சதாசிவ ஐயர், மிஸ்லிஞ்சு, மிஸ்ஸஸ், திரு வெங்கடாசாரியார், மிஸ். ஷண்முகம், மிஸ்ஸஸ். லேஸரஸ், முதலிய மாதர்கள் விஜயம் செய்திருந்தார்கள். அப்பாடசாலையின் தலைமை மாது ரிபோர்ட்டை வாசித்தார்கள். இப்பாடசாலையில் சேர்ந்து கைத் தொழில் முதலியவைகளைக் கற்றுக்கொண்டு கௌரவமாக ஜீவனம் செய்ய மகமதியஸ்திரீகளுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துவந்தால் மிகவும் நல்லதென்று சொன்னார்கள். மிஸ்லிஞ்சு அவர்கள் "அடுத்த ஜூலை மாதம் முதற்கொண்டு இப்பாடசாலை சகண்டெரி பாடசாலை யாய்விடும். பம்பாயிலிருந்து இந்துஸ்தானியும் இங்க்லீஷும் தற்கால போதனாமுறையும் தெரிந்த ஒருமாது வரவழைக்கப்படுவாள். இப் பாடசாலையின் தலைமை உபாத்தியாயினி சொன்ன கைத்தொழில் பாடசாலை ஒன்று ஜார்ஜ்டவுனிலாவது திருவல்லிக்கேணியிலாவது ஸ்தாபிக்கப்படும். அதில் ஸ்திரீகள் சேர்ந்து கைத்தொழிலாகிய சரிகைவேலை, துணியில் பூகோர்ப்பது முதலியவைகளைக் கற்றுதேறி சுக ஜீவனம் செய்ய முடியும்" என்று நம்புகிறேன் என்றார்கள்.

எச். இ. லேடி பெண்ட்லண்ட் அவர்கள் அங்குள்ள பெண்மணி களுக்கு வெகுமதிகளை அளித்தார். இந்த ஸ்கூலுக்குதாம் இப்பொழுது வந்திருப்பது மூன்றாம் தடவையென்றும், இந்த ஸ்கூலிலுள்ள பெண் மணிகளும், உபாத்தியாயினிகளும் நல்லவேலையைச் செய்து வருவ தைக்குறித்து தாம் மிகுந்த சந்தோஷப்பட்டதாகவும், சொன்னார் கள். மேலும் இந்த ஸ்கூலைச் சேர்ந்தவர்கள் யுத்தத்துக்கு ஒரு தாதியை அனுப்ப யுத்தபண்டுக்கு உதவி செய்ததைக் குறித்து அவர் களுக்கு வந்தனமளித்தார்கள்.

பர்மாதேசத்து லப்டினண்ட் கவர்னர் டைகர் டன்னல் என்ற தைத் திறந்தார். இது 7369 அடி நீளமுள்ளது, இதைக் கட்டிமுடிக்க ரூ 10,50,000 பிடித்தது. 2-வருஷமும் 8-மாதமும் ஆனதாம்.

ஸ்திரீகள் இப்பொழுது பல தொழில்களைச்செய்ய முன்வருகிறார் கள். இங்கிலாந்து முதலிய தேசங்களில் ஸ்திரீகள் குமாஸ்தாக்களாக யிருக்கவும் யுத்தசாமான்களைச் செய்யவும் முன்வருகிறார்கள். அநே கம்பேர் இப்பொழுது அவ்விதம் செய்துவருகிறார்களாம். படித்த ஸ்திரீகள் அவர்களது யோக்யதைக்குத் தக்கவேலைகளில் அமர்ந்து உதவிபுரிந்து வருகிறார்களாம்.

திருவாங்கூர் ஸ்ரீ மூலம் ஜனப்பிரதிநிதி சபை.

திவான் செய்த பிரசங்கம்.—திருவாங்கூர் சமஸ்தானத்தின் ஜனப்பிரதிநிதிசபையாகிய ஸ்ரீ மூலம்சபை இம்மாதம் திருவனந்தபுரத்தில் கூடிற்று. சென்ற ஆண்டின் நிர்வாக அமிசங்களை திவான் சபை முன் எடுத்துச் சொன்னார். அதன் ஸாராம்சம் பின் வருமாறு:—

ஆரம்பப் படிப்பு.—ஆரம்பப் படிப்பை விசாலிக்க வேண்டுமென்ற அவசியமும் அவசரமும் ஏற்பட்டவுடனே அதற்கென்று பிரத்தியேகமாக மிஸ்டர் பி. ராமசுவாமி ஐயர் நியமனம் பெற்றார். முந்திய வருஷத்திலே 1917 பாடசாலைகளும் அவைகளில் 24364 பிள்ளைகளுமே இருந்தும் பிரஸ்தாப வருஷத்திலோ பாடசாலைகளின் தொகை 2317; பிள்ளைகளின் தொகை 296104; பள்ளிக்கூடத்தில் இடமில்லையாதலின், மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள முடியாதென்றபுகார் இவ்வருஷத்தில் இல்லை, பிரஸ்தாப வருஷத்திலே ஜன சமூகத்தினரால் 377 பாடசாலைகள் ஏற்பட்டன. இவ்விதம் பாடசாலைகளை ஏற்படுத்தி நடத்தி வருவதைக்கண்டு ஜனங்களிடம் சமஸ்தானத்துக்கு சந்தோஷம் உண்டு.

பெண் கல்வி. முந்திய வருஷத்திலே 323 பெண்பாடசாலைகளிருந்தும், பிரஸ்தாப வருஷத்தில் 341 பாடசாலைகள் இருக்கின்றன. முந்திய வருஷத்தில் 73832 பெண்கள் கல்வி பெற்றிருக்க, பிரஸ்தாப வருஷத்திலோ 91610 பேர் கல்வி பெறுகின்றனர். இத்தொகையிலே 50 பேர் கலாசாலையிலும், 2548பேர் நடுத்தரப் பாடசாலைகளிலும் இருப்பவர்களாவர். பெண் பாடசாலைகளின் பாட விபரத்தைத் திருத்தியமைக்கவேண்டுமென்று யோசனைசெய்யப்பட்டு வருகிறது.

தொழிற் கல்வி. எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாய் வேலையில்லாதிருப்போரைப்பற்றி என்ன செய்வதென்பதே பிரமாதமான பிரசினையாக இருக்கிறது. ஆகவே ஆரம்பப் பாடசாலைகளில் தொழிற் கல்வியைப் போதிப்பதென்று தீர்மானமாயிற்று. அவ்வாறே ஆங்காங்குள்ள தொழில் முயற்சிகளைக் கற்றுக் கொடுக்கும்படி 6 உயர்தர ஆரம்பப் பாடசாலைகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஏற்பாடு பலனுடையதாக இருக்குமாயின் அது இன்னும் விசாலமாகச் செய்யப்படும். நாகர்கோவிலிலே நெசவுப்பாடசாலை யொன்றும் கொல்லத்தில் தச்சுப்பாடசாலை யொன்றும் இருக்க, சமஸ்தானத்திலிருந்து உதவி பெறும் 8 தொழிற் பாடசாலைகளும் உள; தவிர சமஸ்தான உதவிபெறாத 9 தொழிற் பாடசாலைகளும் இருக்கின்றன.

சென்ற 5 வருஷ காலத்திலே கல்வியிலாகாச் செலவானது முன்னையிலும் இரண்டரை மடங்கு அதிகரித்திருக்கிறது.

கனம் திவான் பஹதூர் பி. ராஜகோபாலசாரியார் அவர்களை சி. ஐ. இ. கனம் பி எஸ் சிவசுவாமி ஐயர் ஸ்தானத்தில் எக்ஸிக்யூடிவ் கௌன்சில் மெம்பராக கவர்ன்மெண்டார் நியமித்திருப்பது இவ்விராஜதானியிலுள்ளவர்களுக்கு அதிக திருப்திகரமாயிருக்கிறது. நாம் நமது சந்தோஷத்தைத் தெரிவிக்கின்றோம். அடுத்த மாசப் பத்திரிகையில் இவரது உருவப்படம் நமது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

பேர் பெற்ற பரிசுத்தமான கிணறு வற்றி வருகிறதைக் கேட்க விசனப்படுகிறோம். இந்த ஊற்று கிணறு உவேல்ஸிலிருக்கிறது. ஒரு நிமுஷத்திற்கு 2000 காலன் ஜலம் வந்து கொண்டிருந்ததாம். இப்பொழுது அவ்விதம் ஊறாமல் குறைந்து வருகிறதாம். உலகம் முழுவதிலுமுள்ள ரோமன்காதெலிக் கிறிஸ்தவர்களுக்கு இது பரிசுத்தமான கிணறு. இதில் ஸ்நானம் செய்தால் சகல வித ரோகங்களும் தீரும் என்ற மூட நம்பிக்கை அங்கேயும் உண்டு. இதன் காரணத்தை சாஸ்திர நிபுணர்கள் கண்டு பிடிக்க முயன்று வருகிறார்கள்.

நமது பிரதம மந்திரி லாய்ட் ஜார்ஜ் சென்றமாதம் இங்க்லாந்தில் யுத்தபண்ட் விஷயமாக ஒரு சிறந்த உபந்நியாசம் செய்திருக்கிறார். அதைப் படிப்பதும் அதை மொழிபெயர்த்து ஒவ்வொருவருக்கும் கொடுப்பதும் நலமென அபிப்பிராயப் படுகிறோம். அதில் முக்யமாக உலக முழுவதும் ஸ்திரீகள் யுத்த பண்டுக்காக செய்து வரும் உதவி அபரிமிதமென்றும், அவர்களில் அநேகர் தங்கள் சுய நன்மையைக் கருதாது யுத்த சாமான்களைச் செய்தும், காயம்பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்தும் வருவதானது ஆச்சரியமானதென்றும் மிகவும் ஸ்திரீகளை ஸ்லாகித்துப் பேசியிருக்கிறார். இன்னும் ஸ்திரீகளை அவ்வித மேன்மையான உதவியைப்புரிந்துவர இவரது பேச்சு தூண்டுமென்று நாம் மனப்பூர்வமாய் நம்புகிறோம்.

வாணியம்பாடியில் ஒரு ஐஸ்கூலிருக்கிறது. இது மகமதியர்கள் படிக்கும் பாடசாலை. இதை உஸ்மானி காலேஜியாக செய்யப்போகிறார்களாம். இதற்கு மகமது இப்ராஹீம் குராஷி ப்ரின்ஸ்பால். இவர் வெகுகாலமாக மிக்க சிரத்தை எடுத்துக்கொண்டு இப்பாடசாலையை முன்னுக்குக் கொண்டு வந்திருக்கிறார். இப்பொழுது இதற்கு மாசம் ரூ 1000-யும் தென் இந்தியாவிலுள்ள மகமதியப் பிள்ளைகள் காலேஜ் வகுப்பு முழுவதும் படித்து வர இதை காலேஜாக செய்ய ரூ 25,000 ரூபாயும் எச் எச் நைஸாம் அவர்கள் அளித்திருப்பதைக் கேட்டு நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம்.

ஒப்பந்தக் கூலி முறையும் ஆமதபாத் நகர ஸ்திரீகளும்:—பிஜித் தீவுக்கு ஒப்பந்தக்கூலி முறையின்மேல் வேலைசெய்யப் போவதால் ஸ்திரீகளுக்குச் சொல்ல வொண்ணாத சீர் கேடுகள் நேருவதைக் கண்டு, பம்பாய் மகாணத்தைச் சேர்ந்த ஆமதபாத் நகர ஸ்திரீகள் மனந்தாளாமல் சென்ற மாதத்தில் பொது மீட்டிங் கூடி, லேடி சேம்ஸ் போர்டுக்கு அனுப்பியிருக்கும் தீர்மானத்தின் விவரம் பின் வருமாறு:—

"ஒப்பந்த முறையின்மேல் பிஜித்தீவுக்கு இந்திய ஸ்திரீகள் கொண்டுபோகப்படுவதால், அம்முறையின்படி ஸ்திரீகள் துன்மார்க்கமாய் நடக்கும்படி நேர்ந்து விடுகிறது. ஆகையால், அந்தஸ்திரீகளுக்கு மானக்கேடும் அபவாதமும் உண்டாகின்றன. ஸ்திரீகளுக்கு அவ்விதம் துன்மார்க்கவழியில் பிறக்கும் குழந்தைகளோ அவமதிப்புக்கு ஆளாகின்றன. மனதினால் சிந்திக்கவும் சகிக்கவும் ஒண்ணாத அச்சீர்கேடுகளைக் கவனித்துப் பார்த்தால், உடனே அம்முறையை ஒழித்து விட வேண்டும். திக்கற்றவர்களாயுள்ள இந்திய ஸ்திரீகளும் குழந்தைகளும் ஓலமிட்டு அழுவதை லேடி செம்ஸ்போர்டு காது கொடுத்

துக் கேட்டு, அவர்களுக்குப் பரிந்து பேசவேண்டும். தாங்களும் ஒரு ஸ்திரீ யாதலாலும், தாங்களும் தாயாராக இருப்பதாலும், இந்தியஸ்திரீகளுக்கு உண்டா யிருக்கும் ஆழ்ந்த மனோ வருத்தத்தையும் உணர்ச்சியையும் தாங்கள் நன்கு அறிந்துகொள்வீர்களென்றும், அவ்விதம் அறிந்துகொணடு மேற்படி விஷயத்தை ராஜப்பிரதிநிதிக்கு எடுத்துச் சொல்வீர்களென்றும், அம்முறையை ஒழித்து விடும்படி ராஜப்பிரதிநிதிக்கு அறிவிப்பீர்களென்றும், நாங்கள் நம்பி யிருக்கிறோம். தவிர, இனிமேல் சிலநாளேனும் அம்முறை அனுஷ்டானத்திலிராதபடியும், அது காரணமாக இந்திய ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் துன்மார்க்கச் சீரழிவு நேராதபடியும் தாங்கள் சிரத்தை காட்டுவீர்களென்பது எங்களது கோரிக்கை."

ராஜப்ரதி நிதியின் பிரசங்கம்.

ராணுவத்தில் இந்தியர்கள். "இந்தியாவைக் காக்கும்படையில் பிரிட்டிஷ் பிரஜைகளே தான் இருக்க வேண்டு மென்று நிர்ப்பந்தமான சட்டம் விதிக்கவில்லை. யுத்த காலம் முடிவு வரையில் பொதுவாய் ராணுவச் சேவகத்தில் இந்தியர்களையும் சேர்க்க வேண்டி ஏற்பாடு செய்யப் பிரேரணை செய்திருக்கிறோம். இவர்கள் விஷயத்தில் ராணுவத்திற்கு இவ்வகுப்பாரில் எத்தனை பேர் சேருவதற்கு அகப்படக் கூடுமென்பதை யோசித்து, இவர்களில் எத்தனை பேரை படையிற் பழக்கலாம் என்றும் எவ்வளவு படைகளைச் சேர்க்கலாமென்றும் கணக்குப் பார்த்து அதற்குத் தக்கவாறு செய்யவும் இந்தப் படையில் இந்தியர்களைச் சேரவும் அவர்களைப் பூர்ணமான படையில் சேர்க்கவும் சௌகரியம் செய்ய எண்ணமிட்டிருக்கிறோம். இந்தியர்கள் தங்கள் தேசத்திற்கு என்று ராணுவத்தில் உழைக்க வேண்டுமென்னும் விருப்பம் கொண்டவ ராயிருக்கிறார்களென்றும் வெளிப்படையாய் பல காலமாய்ச் சொல்லப்பட்டு வருகின்றது. ஆகவே இப்போது திரட்டவேண்டு மென்று எண்ணமிட்டிருக்கிற இப்படைக்கு வேண்டியவர்கள் பலர் சேருவா ரென்றே நம்புகிறேன். இப்படை 6 மாச காலத்திற்குள் சேர்க்கப்பட்டு விட வேண்டியது. இக்காலத்திற்குள் தேவையான இந்தியர்கள் அப்படையில் சேருவார்களென்று நான் நம்புகிறேன். ஆனால் இந்தப் படையின் வேலைகளெல்லாம் இந்தியாவுக்குள்ளேயே கட்டுப்படுத்தப்பட்டதாயினும், ராணுவ நிலைமைக்குத் தக்கவாறு, இப்படைகள் கடுமையான ராணுவச்சட்டங்களை யநுசரித்தே நடத்தப்படும் என்பதை எவரும் ஞாபகத்தில் நன்றாய்ப் பதித்துக்கொள்ள வேண்டியது. அவர்களுடைய தேசத்தின் பொருட்டே அவர்களைப்படையில் சேரக்கோரப்படுகிறார்களாயினும் அவர்கள் ஏகாதிபத்தியத்தின் பொருட்டு உழைக்கக் கோரப்படுகிறார்கள்."

பெண்களுக்கு உயர்தரப் பள்ளிக் கூடங்கள்.—7-2-17ல் நடந்த சட்ட சபையில் பெண்கள் நடுத்தரப் படிப்பை அடையும்படி செய்ய இன்னும் சில இடங்களில் உயர்தரப் பள்ளிக்கூடங்களை வைக்க வேண்டுமென்று கனம் அ, சூர்யநாராயண ராவ்— தீர்மானத்தைப் பிரேரணைசெய்து, நடுத்தரப் படிப்பை பெண்களுக்கு சொல்லிவைக்க இப்பொழுது மாகாணத்தில் 33 பள்ளிக்கூடங்களே இருக்கின்றன

வென்றும், சில ஜில்லாக்களில் ஒன்றுகூட இல்லையாகையால் பெண்கள் ஒரு ஜில்லாவிலிருந்து இன்னொரு ஜில்லாவுக்குப் போவது கஷ்டமாயிருக்கிற தென்றும் சொன்னார். கனம் ஏ எஸ் கிருஷ்ணராவ் தீர்மானத்தை ஆமோதித்தார். கவர்ன்மெண்டு தரப்பில் பதில் சொன்ன கனம் ஸ்டோன் தீர்மானத்தில் கண்ட விஷயத்தில் கவர்ன்மெண்டாருக்கு வெகு அபிமான மிருக்கிற தென்றும், ஆனால் பள்ளிக்கூடங்களில் படிக்க பெண்கள் அகப்படாக்கஷ்டமே கவர்ன்மெண்டாருக்கு பெரிய இடைஞ்சலா யிருக்கிறதென்றும், புதுப்பள்ளிக்கூடங்களை பெண்களுக்காக ஏற்படுத்த கவர்ன்மெண்டாரே ஒரு திட்ட மேற்படுத்தி யிருக்கிறார்களென்றும், கனம் மெம்பர்கள் தங்களுடைய செல்வாக்கை உபயோகப்படுத்தி பெண்கள் இன்னும் சில வருஷகாலம் படிக்கும்படி செய்தால் பெண் பள்ளிக்கூடங்களின் தொகை அதிக மாகுமென்றும் சொன்னார். அவர் அபிமானம் காட்டிப் பேசியதன்மேல் கனம்சூர்யநாராயணராவ் தமது தீர்மானத்தை வாபீஸ் பெற்றுக்கொண்டார்.

பாடசாலைகளில் மதபோதனை.—பாடசாலைகளிலே மதபோதனை அவசியமென்று பலர் வற்புறுத்தி வருவது பிரசித்தம். கேவலம் லௌகிக விஷயங்களைமட்டும், போதிப்பதோடு நின்றுவிட்டால், மாணவர்களுக்கு நற்குணம் எவ்வாறு படியுமென்பது பெரும் பாலாருடைய கட்சி. ஆகவே சிறு வயதிலேயே மாணவர்களுக்கு மத போதனையும் சன்மார்க்கப் பயிற்சியும் வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. அவ்விதம் சொல்லப்படுவதை எளிதில் மறுக்க இடமில்லை. இது இப்படியிருக்க, பாடசாலைகளிலே மதபோதனை விஷயம் எப்படியிருக்க வேண்டுமென்பதைப்பற்றி விவகரிக்க, லண்டனிலே சில வாரங்களுக்குமுன் ஒரு மீட்டிங் கூடியபொழுது, ஒவ்வொரு பாடசாலையிலும் தலைமை ஆசிரியரைத் தவிர ஒரு மத போதகர் இருக்கவேண்டுமென்றும், பையன்கள் சன்மார்க்கமுள்ளவர்களாய் இருக்கவேண்டுமாயின் அவர்களுக்கு மத போதனை அவசியமென்றும், பலர் வற்புறுத்திப் பேசி யிருக்கின்றனர். மத போதனையில்லாதபடிப்பினால் பயனில்லை யென்றும் ஒருவர் சொல்லி யிருக்கிறார். ஆகவே அவ்விஷயத்தை இங்கே பலரும் சிந்தனை செய்து பார்ப்பார்களென்று நம்புகிறோம்.

THE COMPLETE LETTER WRITER,

(4th Edition Revised and Enlarged.)

HARI CHARAN DAS,

PRICE **Re. 1.** (*full cloth gilt 320 pages.*)

An universal Guide to the Art of letter Writing for all positions of life.

It contains 24 Chapters—Private Correspondence, News Paper, Doctors, School Correspondence, Government and Commercial, Collectors Office, Attorneys Vakils, and Muktears, Steamers Police, Municipality, Incometax, Railways, Tramways, Medical Department, Postal Department, Telegraph Department, Precis Writing, Drafting Docketing, Book Eeeping, Miscellaneous forms Miscellaneous 'Application forms, Forms of Address, Paper Currency, Abbreviations and Daily wages. **Matriculation Easy**—By Hari Charan Das. . Very useful book for School Boys. Price As. 8. **English Etiquette & Engilsh Proverbs** A very useful book for those who come in contact with Englishmen, Price As, 5 only **Child's Easy Conversation**, 2nd ED.—If you want to speak in English fluently you should buy the above book. It will. teach both you and your children to speak in English within two are three months Price As. 10 only.

M. L. DAS & CO., BOOK SELLERS & PUBLISHERS.

122, *Baitakhana Road CALCUTTA.*

CALENDAR, 1917

பஞ்சாங்கம்

1917ஞ் மார்ச்சுமீ—நளஞ் மாசி, பங்குனிமீ

இங்.	தமிழ்.	வாரம்.	திதி, நக்ஷத்திரம், பண்டிகை.
1	18	வியா	அஷ் 20-7, ரோ 18-37, ரா 4-12.
2	19	வெ	நவ 22-14, மி 22-16, ரா 15-30, அவி 3-புதன்
3	20	சனி	தச 25-36, தி 26-50, ரா 30-17
4	21	ஞா	ஏகா 29-55, புன 32-24, சே 3-35, ரா 25-14, குலசேகராள்வார் திருநக்ஷத்திரம்.
5	22	திங்	துவா 34-54, பூ 37-56.
6	23	செ	திரி 40-16, ஆயி 45-17, தி 14-19.
7	24	புத	சது 45-7, மக 51-24, தி 18-20, திருவெற்றியூர் பொகடமான் சேர்வை. [பண்டிகை.
8	25	வியா	○ பௌ 50-18, பூ 57-40, தி 13-29, காமினியா
9	26	வெ	இ-பி 54-15, உத்திரட் 60-0, தி 17-13.
10	27	சனி	த்வி 57-3, உத்திரட் 2-34, தி 26-20.
11	28	ஞா	திரி 58-34, அஸ் 6-31, தி 27-46.
12	29	திங்	சது 58-40, சி 9-16, தி 23-27.
13	30	செ	பஞ் 57-41, சு 10-47, தி 24-55, பூரட் 4 சு 38-28.
14	1	புத	ஷஷ் 55-22, வி 11-22, தி 21-10.
15	2	வியா	ஸப் 52-4, அ 10-10, தி 23-44.
16	3	வெ	அஷ் 47-48, கே 8-20.
17	4	சனி	நவ 42-20, மூ 5-43, தி 1-52, பூரட் 4 செ
18	5	ஞா	தச 37-12, பூரா 2-15, உத்திரா 56-19, தி 19-3.
19	6	திங்	ஏகா 31-17, திரு 54-25, தி 5-0, பூரட் 4-புதன்
20	7	செ	துவா 25-18, அ 50-28, தி 3-45, சுக்குர அஸ்தமா
21	8	புத	திரி 19-22, ச 46-31, தி 7-16. [னம்
22	9	வியா	ச 14-19, பூரட் 43-17, தி 1-47.
23	10	வெ	● அமா 8-26, உத்திரட் 39-22, தி 6-1, பூரட் 4-சு.
24	11	சனி	சு-பி 3-49, ரே 37-1, தி 8-11.
25	12	ஞா	த்வி 1-28, தி 57-31, அ 36-43, தி 26-54.
26	13	திங்	ச. 57-44, பர 36-41, தி 0-42.
27	14	செ	பஞ 57-45, கார். 37-50, தி 7-15.
28	15	புத	ஷஷ் 59-0, ரோ 40-13, தி 19-25.
29	16	வியா	ச 60-0, மி 43-47.
30	17	வெ	ச 1-34, திரு 48-33, தி 6-27.
31	18	சனி	அஷ் 5-12 புன 54-12, தி 21-22.

Printed at the Commercial Press, Madras &
Published by C. S. Ramaswamy Iyer, Triplicane, Madras. S.E.

The Tamil Zenana & School Magazine.

மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"—ஔவையார்.

Vol. XVIII	Madras: April, 1917	No. 5
புத்தகம் 18	சென்னை: ஏப்ரல்மீ, 1917ஞ்	இலக்கம் 5

THE REGISTRAR ... 19 APR 1917

அட்மிரல் ஸர் ஜான் ஜெலிகோ.

I

யுத்தம் ஆரம்பமானதும ஸர் ஜான் ஜெலிகோ கப்பல் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர். தலைமுறை தலைமுறையாக இவர்குடும்பத்தார் கப்பற்காரர்கள். வீரபராக்கிரமமுள்ள நெல்ஸன் என்பவர் ப்ரமாதயுத்தம் செய்தபொழுது இவரது பாட்டனார் அட்மிரல் பேட்டன் கப்பற் தலைவராகயிருந்தார். நெல்ஸன் ட்ரபல்கர்யுத்தத்தில் பூர்ணஜயமடைந்தது யாவருக்கும்தெரியும். ஜெலிகோவின் தகப்பனார் வியாபாரக் கப்பலுக்குத் தலைவராகயிருந்து யாவராலும் நன்கு மதிக்கப்பட்டுவந்தார். இவ்வித சிறப்பு வாய்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் ஸர் ஜான் ஜெலிகோ.

இவர் சிறுவயது முதற்கொண்டு தைரியமுள்ளவராயும் அஞ்சாநெஞ்சுடையவராயுமிருந்தார். ஒருநாள் இவர் தமது தாதியை மிகவும் விசனப்படும்படியும் கோபமுண்டாகும்படியும்செய்தார். இங்கிலாந்தில் லண்டன் முதலிய பட்டணங்களில் எப்பொழுதும் ஜனங்கள் தெருக்களில் போய்க்கொண்டிருப்பார்கள். வண்டிகள் போய்க்கொண்டிருக்கும். சுறுசுறுப்பாயுள்ள ஒருதெருவில் தாதியைவிட்டுவிட்டு இவர் தெருவைக்கடந்து அங்குமிங்கும் போய்க்கொண்டிருந்தார். தாதி வீணாககூச்சலிட்டு இவரைக் கூப்பிட்டாள். கோபக்குறியைக் காண்பித்தாள். எதற்கும் ஜெலிகோ மசியவில்லை. பார்த்தாள் தாதி; ஒரு "போலீஸ் உத்தியோகஸ்தன் வரும்பக்ஷத்தில் அவனிடத்தில் உன்னைப்பற்றிச் சொல்லுகிறேன்" என்று கடுகடுப்பாய்ச்சொன்னாள். ஜெலிகோ இதற்கும் சிறிதும் பயந்தவனாகத்தென்படவில்லை. புன்சிரிப்புள்ள முகத்துடன் ஜெலிகோ நேராக நடந்துசென்றாராம். அவ்விதம் சென்றுகொண்டிருக்கை

யில் இவருக்கெதிரில் ஒரு போலீஸ்காரன் வருவதைக்கண்டு அவனிடத் திற்குப்போய் "உம்முடைய சட்டையில் எத்தனை அழகானபொத்தான் களிருக்கின்றன" வென்று ஆச்சரியத்துடன் சொன்னார். இவ்விதம் சிறுகுழந்தை சொன்னதைக் கேட்ட போலீஸ்காரன் இவரை அதட்டவில்லை.

இவர் பின்பு தாதியுடன் வீடுபோய்ச் சேர்ந்தாராம். அக்கால முதல் ஜெலிகோ மிக்க தைரியவானா யிருப்பானென்று யாவரும் நினைத்து வந்தார்கள்.

இவருக்கு வயதாக ஆக கப்பல்தொழில்செய்ய இச்சையதிகம் உண்டானது. தலைமுறை தலைமுறையாக இவருடைய பந்துக்கள் கப்பல் தொழில்செய்து வந்தமையால் இரத்தசம்பந்தமுள்ள ஜெலிக்கோவுக்கும் இதில் விருப்பமுண்டானது ஆச்சரியமல்ல, இது சகஜமே. கப்பல் செப்பனிடும் துறையாகிய சௌத்தாம்படனில் கப்பல்கள் வருவதையும் போவதையும் பார்த்து சந்தோஷப்படுவார். மேலும் தமது தகப்பனார் தூரதேசங்களுக்கு கப்பல் பிரயாணம் செய்ததைக் குறித்து சொல்லும் கதைகளைக் கேட்டு ஆநந்திப்பார். இவர்படிக்க ஆரம்பித்தபின் தமது முன்னோர்கள் யுத்தத்தில் சேர்ந்துவந்ததைப் பற்றி நினைத்து அவர்களைப் பெருமை பாராட்டினார். தாமும் அவ்விதமிருக்க விரும்பினார். இவ்விதம் இவர் விரும்பியபொழுது இவர் சிறுபிராய முள்ளவராயிருந்தார். இவர் தகப்பனாரும் தனது குமாரன் விரும்பிய வண்ணம் செய்ய சம்மதித்தார். ஆயினும் "அப்பாமகனே! நீ உயர்ந்த பதவிக்கு வரவேண்டுமானால் கஷ்டப்பட்டு படித்து பரிக்ஷைகளில் தேறவேண்டும். அப்பொழுது உனது முன்னோர்களைப் போல் நற்பேர் அடையலாம்" என்றார்.

ராட்டிங் பீனிலுள்ள பாடசாலைக்கு இவர் தகப்பனார் இவரை அனுப்பினார். ஜெலிக்கோ பிரயாசைப்பட்டு நன்றாகப் படித்துவந்தார். இவர் புத்தியையும், சுறு சுறுப்பையும், படிப்பதில் ஊக்கத்தையும், உபாத்தியாயர்கள் கண்டு களித்தார்கள். இவருக்கு பதின்மூன்றுவது வயது வந்ததோ இல்லையோ வித்தாப்பியாசவாலிபனாக ராயல்நேவியில் சேர்ந்து பயின்றுவந்தார். இவ்விதம் பயின்று வருகையில் இவரது புத்திசாதுரியத்தைக்கண்டு மகிழ்ந்தார்கள். இவரும் நன்றாகப்படித்து பரீக்ஷையில் 100க்கு 100 மார்க்கு பெற்று இவரது உபாத்தியாயர்கள் களிக்க முதல் வெகுமதியையும் அடைந்தார். கப்பலில் வாலிப உத்தியோகஸ்தனாக ஐந்து வருஷம் பயின்றுவந்தார். இதற்கு வேண்டிய பாடங்களை நன்றாகப்படித்து மிக்க கெட்டிக்காரன் என்ற பேரைப் பெற்றார். இவருக்கு இருபத்தொன்று வயது ஆவதற்கு முந்தியே

இவர் லப்டினண்டாக நியமிக்கப்பட்டார். முதல் வகுப்பில் பரிக்ஷைகளில் தேறியதால் இவருக்கு மூன்று சர்டிபிகேட்டுகள் கிடைத்தன. இவைகளைக்கொண்டு திருப்தியுடன் ஜெலிகோ சும்மாயிருக்கவில்லை. இன்னும் பற்பல யுக்தியான வானவிஷயங்களை யறியவும் இன்னும் உயர்ந்த பதவிக்குப் போகவும் முயன்று வந்தாரே யொழிய வீணாக காலத்தைக் கழித்துக்கொண்டு இருப்பதைக்கண்டு திருப்தியடையவில்லை.

ஈஜிப்டில் யுத்தமுண்டானபொழுது இவர் அந்தயுத்தத்தைச் செவ்வனே பார்த்துவந்தார். சில பட்டணங்களையும் சூயஸ் கால்வாயையும் பாதுகாத்து வந்தார். பின்பு இவர் இன்னும் சில பரீக்ஷைகளில் தேறி சிறந்த வெகுமதிகளைப் பெற்றார்.

மதவிசாரம்

ஹிந்துமதம்

"மதம்" என்னும் சொல் "மதி" யென்னும் வினைப்பகுதியினடியாகப் பிறந்ததாம். அதற்கு நினை அல்லது மனதில் எண்ணு என்பது பொருளாகும். "ஹிந்து மதம்" என்பது ஹிந்துக்களின் மதம் அல்லது கோட்பாடென்று பொருள்படும்.

சாதாரணமாய் உலகத்திலுள்ள எல்லா மதங்களுக்கும் சிற்சில பொதுவான இலக்ஷணங்களுள. எல்லாமதங்களும் உலகத் தோற்றத்தையும், அங்ஙனம் தோற்றும் உலகத்தைத் தோற்றுவிக்கும் ஒரு சக்தி அல்லது ஈச்வரனையும், அச்சக்தி அல்லது ஈச்வரனுடைய இலக்ஷணத்தையும், அது எங்குளதென்பதையும், இன்னும் இவைபோன்ற வேறு சில விஷயங்களையும் ஒப்புக்கொள்ள வேண்டியதவசியமாம். ஆதலால் ஹிந்துமதமும் உலகத்தின் சுவபாவத்தையும், அதன் சிருஷ்டியையும், சிருஷ்டிகர்த்தாவாகிய சக்தி அல்லது ஈச்வரனுடைய லக்ஷணத்தையும், இவ்வுலகத்தில் மனிதன் நித்தியாநந்தத்தை யடையும் மார்க்கங்களையும் பற்றிக் கூறுவதாகும்.

ஊலகத் தோற்றத்தில் அதைக் காணும் ஒவ்வொருவனுக்கும் நிச்சய புத்தி யுண்டென்பதில் சந்தேகமின்று.

"மண்டபமாதி கண்டோர் மயனுள னென்னல்போலும்
குண்டலமுதல் கண்டோர்பொற் கொல்லனுண் டென்னல்போலும்
ஒண்டுகில் கண்டோர் நெய்தோன் ஒருவனுண் டென்னல்போலும்
அண்டமற் றகண்டம்செய்தோன் உளனென வறிவாய் நெஞ்சே."

என்பதிற்கிணங்க மண்டபம், வீடு முதலியவைகளைக்கண்டு அவற்றை யுண்டாக்கிய மயன் ஒருவனிருக்கவேண்டுமென்றும் குண்டலம் முதலிய பொற்பணிகளைக்கண்டு அவற்றையுண்டாக்கிய தட்டான் ஒருவனிருக்கவேண்டுமென்றும், ஒரு வஸ்திரத்தைக்கண்டு அதை நெய்தவன் ஒருவனிருக்கவேண்டுமென்றும் அநுமிப்பதுபோல இவ்வுலகத்தில் சகல ஜீவகோடிகளையும், மற்றுமுள்ள தாவரஜங்கமங்களையும், ஆகாசம், சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் மற்றுமுள்ள கிரகங்கள் முதலிய யாவையும் சிருஷ்டித்த ஒரு மகாபுருஷன் இருக்கவேண்டுமென்று ஊகிப்பது அவசியம். இதை யாவரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். உலகத்திலுள்ள சகல சராசரங்களும் நித்தியமான பஞ்சபூதங்கள் (அதாவது மண், ஜலம், நெருப்பு, காற்று, ஆகாயம் முதலியவை.) ஒன்றோடொன்று கலத்தலினால் உண்டாவது இயற்கையேயென வொப்பும் நாஸ்திகர்கள்கூட "இயற்கை" யென்பதை ஒப்புக்கொள்ளுகிறார்கள். இவ்வியற்கையையே ஆஸ்திகர்கள் கடவுள் அல்லது ஈச்வரன் என்கிறார்கள். ஆதலால் உலகத்திலுள்ள சகல மதங்களும் உலகத் தோற்றத்திற்குக் கர்த்தாவாக ஒரு சக்தியையோ அல்லது இயற்கையையோ, அல்லது கடவுளையோ ஒப்பியிருக்கின்றனரென்பது யேற்பட்டது. இனி "அவ்வீச்வரனுடைய இலக்ஷணமென்ன" என்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

(தொடரும்.)

இடத்தையும் எண்ணையும் போதிக்கும் முறை.

(113-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நிற்க, சாதாரணமாய்க் கணித சாஸ்திரத்தில் துலாமானம், அஃதாவது நிறுத்தலளவை உபயோகப்பட்டுவருகின்றது. ஆனாலோ கணித சாஸ்திரம் சங்கியை பரிமாணங்களை மாத்திரம் குறிக்குமென்று முன் கூறப்பட்டிருக்கின்றது. துலாமானமோ சங்கியையுமல்ல. பரிமாணமுமல்ல. ஆதலால் "சங்கியை பரிமாணங்களைப்பற்றிக் கூறுவது கணிதசாஸ்திரமா" மென்னும் லக்ஷணம் (Definition) பொருந்தாதென்று சிலர் சந்தேகிக்கலாம். இங்ஙனஞ் சந்தேகிப்பவர்களுக்குப் பரிமாணத்திற்கும் துலாமானம் அல்லது எடைக்கும் இன்னவித சம்பந்தம் உள்ளதென்று தெரிந்திருப்பின் சந்தேகிக்க இடந்தராது. ஆதலால் பரிமாணத்திற்கும் எடைக்குமுள்ள சம்பந்தத்தை யிங்குச் சற்று விளக்குவோம்.

சாதாரணமாய்ப் பரிமாணத்தையுடைய பொருள்களுக்கெல்லாம் எடையுண்டு. இது நியமமாம். நம்மால் பார்க்கப்படும் பொருள்களெல்லாம் எடையை யுடையனவாயிருப்பதால் ஏன் பரிமாணத்தையுடைய பொருள்களுக்கு எடையிருப்பது அவசியம்? எடை யென்பது பூமிக்கும் வஸ்துக்களுக்கும் இயல்பாயுள்ள ஆகர்ஷண சக்தியைத் தடுத்தலினால் உணரப்பட்ட ஒருவித வுணர்ச்சியேயாம். ஒவ்வொரு பொருளும் பலவாயிரக்கணக்கான பரமாணுக்களின் கூட்டத்தாலாயதென்று நம்மில் ஒவ்வொருவரும் உணர்ந்திருக்கின்றோம். இவ்வணுக்கள், அப்பொருளானது சூனியஸ்தலத்தில் (Vacuum) எவ்வளவு இடத்தை ஆக்கிரமித்து இருக்கின்றதோ அவ்விடத்திற்குத் தக்கபடியும் பொருளுக்குத் தக்கபடியும் மற்றுமிதர விஷயங்களுக்குத் தக்கபடியும் அடர்த்தியாகவோ, விசாலமாகவோ சேர்ந்திருக்கும். 1 அங்குல நீளம், 1 அங்குல அகலம், 1 அங்குல உயரமுள்ள ஒரு ஈயக்கட்டியைக் காய்ச்சினால் அக்கட்டியில் சேர்ந்திருக்கும் அணுக்கள் தம்மில் ஒவ்வொன்றும் ஒவ்வொன்றைவிட்டு உஷ்ணத்தினால் விலகுவதினால் அக்கட்டி முன்னிருந்த பரிமாணத்தைக்காட்டிலும் அதிக பரிமாணமுடையதாகின்றது. ஆனால் எடையோ மாறுபடுவதில்லை. இதுபோலவே ஒரு ஆழாக்கு உருக்கின நெய் தோயுமானால் அது முன்னிருந்த பரிமாணத்தைக்காட்டிலும் குறைந்த பரிமாணமுடையதாகின்றது. எடை ஒன்றேயாம். ஆதலால் அணுக்களின் கூட்டத்தின் நெருக்க விசாலங்களுக்கேற்பப் பரிமாணம் பேதப்படுகின்றது. தெளிவாகக் கூறுமிடத்து பரிமாணத்திற்குக் காரணம் அணுக்களின் கூட்டமேயாமெனச் சித்தித்தது. எடைக்கும் அணுக்களின் கூட்டமே காரணமாமென்று முன் கூறப்பட்டது. ஆதலால் இவ்விரண்டிற்கும் (பரிமாணம், எடை) அணுக்களின் மூலமாய் பரஸ்பரம் சம்பந்தம் உண்டு ஆதலால் பரிமாணத்தில் எடையையும் சேர்த்துக்கொள்வது உசிதம்.

(தொடரும்.)

சாரதாம்பாள்.

(ஓர் சிறு துப்பு அறியும் நாவல்.)

1-வது அத்தியாயம்.

வசந்தபுரம் என்னும் பட்டணத்தில், ஓர்நாள் சாயரக்ஷை நான்குமணி சுமாருக்கு ஒரு மாடி வீட்டில் 22 வயதுள்ள ஓர் மாது ஹார்மோனியம் என்னும் வாத்தியத்தை வைத்துக்கொண்டு ஆனந்தமாகப் பாடிக்கொண்டிருந்தாள். அவ்வானந்தக்குரலை, போவோர், வரு

வோர் யாவரும் வழியில் நின்று கேட்டுக்கொண்டேயிருந்தார்கள். திடீரென யாவரும் திகிலடையும்படியாக, ஐயோ! என்னைக் கொல்லுகிறானே! கொல்லுகிறானே!! எனச் சத்தம் பிறந்தது. உடனே அங்கு நின்றிருந்த யாவரும் துரிதமாகக் கதவை உடைத்து மாளிகைக்குள் நுழைந்து, அங்குமிங்கும் சுற்றி அலைந்து, மாடிக்குச்செல்லும் படிக்கட்டுகளின்மேலேறி, விரைவாக அம்மாது ஹார்மோனியம் வாசித்தவிடத்தை அணுகி நோக்கினார்கள்.

அந்தோ! என்ன ஆச்சர்யம்! வாசித்துக்கொண்டிருந்த மாதைக் காணோம், எங்கேயோ, மாயமாக மறைந்துவிட்டாள். மாயமாக மறைந்த மாது, ஏன் இவ்வார்மோனிய வாத்தியத்தை எடுத்துப்போகவில்லை. ஒருக்கால் அன்னவளைக் கொல்லவந்தவனே,இப்பெட்டியைப் போட்டுவிட்டு, அம்மாதைப்பிடித்துப் போய்விட்டான் போலிருக்கிறது என்றார் சிலர். ஆமாம், அப்படித் தானிருக்கும் என்றார் சிலர். ஐயோ! புத்தியில்லாது விண் வார்த்தையாடும் மனிதர்களே! நாம் வரும் வழியில்தானே அன்னவர்கள் வெளிவரவேணும். ஆதலால் இது ஓர் பெரிய ஆச்சர்யமான கனவாகவல்லவாயிருக்கிறது என்றார் ஒருவர். அந்தோ! பாவம், இவ்விட்டு "ரத்தினம்" என்பவளை நான் நன்கு அறிவேன். அவள் உயர்குலத்தில் பிறந்த மாது என்றே சொல்லலாம். மிகவும் நன்னடக்கையும், குணமும், புத்தியும் படைத்தவள். அவளுக்கு ஏதோ கொஞ்சம் சொத்துமிருக்கிறது. பாவம், இவ்வூருக்கு வந்து பதினைந்து தினங்களேயாயின. அதற்குள் இவ்வித தீங்கு நேரிடவேண்டுமா, பாவம், பாவம், என்றார் ஒருவர். ஓ! ஓ! அந்தம்மாளா, ஐயோ பாவம், அவள் மிகவும் நல்லவளாயிற்றே, அன்று என் பெண்ணுக்கு விவாகம் என்றுசொன்னவுடனே ரூபாய் 100 கொடுத்தாளே, அந்தோ! கருணாகரா! அம்மாதை நீயே காப்பாற்றவேண்டுமென்றார் ஒருவர்.

இவர்களிவ்விதமாக ஒருவர்க்கொருவர் தங்களுக்குத் தெரிந்த விஷயங்களையெடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கும்போது, மாளிகைக்குள் போலீஸ் படைகள் நுழைந்தார்கள். அவர்களைக் கண்டதும் அங்கிருந்தோர் யாவரும் பேசாது மௌனமாக ஒருவர்மேலொருவர் விழுந்துகொண்டு, அவர்கள் என்னதான் செய்கிறார்களென்று பார்ப்போமென பார்த்துக்கொண்டேயிருந்தார்கள். அவ்விடம் நின்றவர்களில்சங்கதி பூராவும் அறிந்துகொண்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் வீராசாமிநாயுடு என்பவர், அம்மாளிகைக்கு அடுத்த வீட்டுக்கு உடையவரை கூப்பிடும்படி உத்திரவு செய்தார். உடனே அவ்வீட்டிற்கு உடையவரான தனவந்த பூபதி யென்பவர் துரிதமாக நாயுடு

அவர்கள் முன்பாகவந்து நின்றார். அவரைக் கண்டதும் முகமலர்ச்சியுடன், வீராசாமி நாயுடு:—ஐயா, தனவந்த பூபதியாரே, இவ்விடு யாருடையது? இதில் வசித்துக்கொண்டிருந்த பெண்களைப்பற்றி உமக்குத்தெரியவருமோ என்றார்.

தனவந்தபூபதியார்:—ஐயா, இவ்விடு என்னுடையதே, இதில் வசித்துக்கொண்டிருந்த மாதை நானறியேன். இம்மாது சுமார் இரண்டு வாரத்துக்கு முன்னால் என்னிடம் வந்து, ஐயா, இவ்விட்டுக்கு சொந்தக்காரர் நீர்தானா, எனக்கு இவ்விடு வாடகைக்கு வேண்டியிருக்கிறது. கிடைக்குமோ, எனக் கேட்டாள். நான் அன்னவளுக்கு வீடு கொடுப்பதாகச் சொல்லி, மாதம் 1-க்கு 15 ரூபாய் வீதம் வாடகையும் பேசி, மூன்றுமாத வாடகை ரூபாய் 45-ம் அட்வான்சாகப் பெற்றுக்கொண்டு, வீட்டையும் அவள் சுவாதீனம் செய்துவிட்டேன். அம்மாதைப் பார்த்தவுடனே, அவள் மிகவும் நல்லவளென்றும், குணவதியென்றும், தெரிந்துகொண்டேனென்றார்.

வீராசாமிநாயுடு:—ஐயா, அம்மாதுக்கு புருஷர் எவருமில்லையா?

தனவந்தபூபதியார்:—அப்பெண்ணைப்பார்த்தால் இன்னும் மணமாகாக் கன்னிகைபோலத்தான் தெரிகிறது.

வீராசாமிநாயுடு:—நீர் ஒன்றும் அப்பெண்ணினிடம் இதுவிஷயத்தைப்பற்றிக் கேட்கவில்லையோ?

தனவந்தபூபதியார்:—நான் இவ்விஷயங்களைப்பற்றி அம்மாதைக் கேட்கவில்லை. அம்மாதைப் பார்த்தவுடனே ஓர் சீமாட்டிபோல் தெரிந்ததால், இவ்விஷயத்தைப்பற்றிக் கேட்க என் மனம் தைரியம் கொள்ளவில்லை.

வீராசாமிநாயுடு:—சரி, அம்மாதுக்கு வயதென்னயிருக்கும், என்ன நிறமுடையவள்?

தனவந்தபூபதியார்:—ஐயா, சுமார் 20, 22யிருக்கும், சிவப்பு நிறம். நல்ல லட்சணமுடையவள், அம்மாதைப் பார்த்தோர் யாவரும் இம்மாது என்ன அழகு, இப்பூலோக ரம்பையோவென எண்ணி அவளைக்கண்டு களிப்பார்கள் என்பது திண்ணம்.

வீராசாமிநாயுடு:—ஐயா, இம்மாளிகையிலிருந்து, கொல்லுகிறானே கொல்லுகிறானே என வந்த சத்தத்தை நீர் கேட்டீரோ?

தனவந்தபூபதியார்:—ஐயா, எனக்கு இதுவிபரம் ஒன்றும் தெரியாது. நான் நேற்று மத்தியானம் ஓர் காரியமாக இதனடுத்த நகரமாகிய பார்வதிபுரத்துக்கு சென்றுவிட்டு இப்போதுதான் வந்தேன்.

வந்தவுடன் இச்சங்கதிகளைக் கேட்டு இங்கு வரப் பிரயத்தனப்படும் சமயம் தாங்கள் அழைப்பதாகத் தெரிந்து வந்தேன்.

வீராசாமிநாயுடு:—சரி, உமக்கு இனி இவ்விஷயங்களைப்பற்றி வேறொன்றும், தெரியவராதோ? ஓ! ஓ! அவனுடைய தொழிலென்ன தெரியுமோ?

தனவந்தபூபதியார்:—ஐயா, இம்மாளிகையைவிட்டு மாது வெளிச் சென்றதை நான் பார்த்ததேயில்லை. ஒவ்வோர் சமயம் சாயரக்ஷை 5 மணிக்குமேல் வெளி உலாவச் செல்லுவாள்.

வீராசாமிநாயுடு:—அம்மாதுக்கு இங்கு வேலையாட்கள் ஒருவருமில்லையோ? எனக் கேட்கும்போதே, ஐயோ! இதென்னகோரம்! எனச் சத்தம் பிறந்தது. அங்கு யாவரும் சென்று பார்க்கும்போது ஒருவன் பயத்தால் அலறிக்கொண்டு நிற்பதைக்கண்ட வீராசாமி நாயுடு, அவனைப் பயப்படாமலிருக்கும்படிக்கு உடம்பைத் தட்டிக்கொடுத்து, ஏன் அப்பா இவ்விதம் கத்தினாய்? என்று கேட்டார்.

ஐயா, நானும் எல்லோருடன் ஒன்றாய் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தேன். என் உடம்பு கொஞ்சம் சௌக்கியமில்லாததால் என்னால் நிற்கமுடியாது உட்கார்ந்தேன். அச்சமயம் இங்கு கிடப்பதைப் பார்த்து பயந்து அலறினேனென்றான்.

உடனே அங்கிருந்தோர் யாவரும் கீழே கிடப்பதைப் பார்த்து, ஓ! ஓ! இச்சேலை அம்மாது உடுத்தியிருந்ததுதான். அந்தோ! இரத்தம்பூராவும் நனைந்திருக்கிறதே. இவனாலேயே அம்மாது கொல்லப் பட்டாள், கொல்லப்பட்டாள், சந்தேகமேயில்லை யென்றார்கள். "வீராசாமிநாயுடு பயங்கொண்டு நடுக்கத்துடன் நிற்பவனை உற்றுப் பார்த்து, அடே, நீ பெரியண்ணனல்லவா, கேடி, நீ இங்கு எங்கு வந்தாய், உள்ளதை உள்ளபடி சொல்லெனக் கேட்டார்.

பெரியண்ணனுக்கோ முகமெல்லாம் வெளுத்து, கண்களினின்றும் நீர்வடிய, ஐயோ! நானொன்றும் அறியேன். தங்களைப் போலவே நானும் இதைப் பார்க்கவே வந்தேன். என்னை மன்னியும் மன்னியும், என அவர் பாதங்களில் விழுந்தான். இச்சம்பவத்தைக் கண்ட வீராசாமி நாயுடுகாருக்கு முன்னைவிட அதிக சந்தேகம் ஜனித்தது. உடனே அவன் கைகளுக்கு விலங்குமாட்டி, ஜெயிலுக்குக்கொண்டுபோகும்படி உத்தரவிட்டு விட்டு, மாளிகை முழுவதும்சுற்றி, சுற்றிப் பார்த்தும் சவம் கிடைக்கவில்லை. மாளிகையைவிட்டு வெளிப் போகவும் வேறு வழியொன்றும் காணாததால் சரி சரி, அப்போக்கிரிப்பெரியண்ணனே இது செய்தவன், சந்தேகமேயில்லை. அவனைப்

பிடித்து நெருக்கினால் உண்மை வெளிப்பட்டுவிடுமெனச் சொல்லிக் கொண்டே, மாளிகையைப் பூட்டிவிட்டு கச்சேரியைநோக்கிச்சென்றார்.

இவைகளையெல்லாம் இமைகொட்டாது, பார்த்துக்கொண்டிருந்த ஓர் உருவம், ஐயோ! பழி ஒரு பக்கம், பாவம் ஒரு பக்கமா, இந்தப் போலீஸ் புலிகள் செய்யும் வேலை, அந்தோ! ஒன்றும் தெரியாத அப்பாவிகள் கிடைத்துவிட்டால் போதும்! ஏதோ, நானும் இதை முடிவுவரை பார்த்தே தீருகிறேனெனச் சொல்லிக்கொண்டே வழி நடந்தது.

2-வது அத்தியாயம்.

முன் அத்தியாயத்தில் கூறிய சம்பவம் நடந்த மறுநாள், அவ்வூராரில் பலர், ஐயோ! பாவம்! நல்ல மேன்மை குணம் படைத்த உத்தமி ரத்தினத்தைக்கொன்றானே! பாவி, "பெரியண்ணன்" அந்தோ! அம்மங்கையைக் கொல்லவும் மனம் துணிந்ததே, அடேபாவி, அம்மாதிடம் ஏழையென்று உரைத்தால் உனக்குத்தகுந்த மரியாதை செய்திருப்பாளே, எனச்சொல்லிக்கொண்டே யிருந்தார்கள். அவர்களில் ஒருவன் மட்டும் பெரியண்ணன், கொன்றேயிருக்க மாட்டான். பாவம் அவன் ஒன்று மறியாத அப்பாவி, அவனைப் பிடித்துக் கொண்டு போய் விட்டார்களென்றான். இதைக் கேட்டதும், அங்கிருந்தோரெல்லாருக்கும், மிகவும் கோபமூண்டு, அடே சுந்தரம் நீ இவ்விதமாய்த் தெரியாமல் எவ்வித காரியத்தையும் பேச வேண்டாம். நீ ஏதோ, கையிலாகாத சில திருட்டுக் கேஸ்களைக் கண்டு பிடித்து, ஓர், துப்பு அறிபவனாகி விட்டோமென, மமதைகொண்டு இவ்விதம் பேச ஆரம்பிக்கிறாய். பாவி, பெரியண்ணனாலேயே, அம்மாது இறந்தாள். அவன் மிகவும் போக்கிரி, அதிலும் அவன் வேஷ்டியில் இரத்தக்குறி யிருப்பதே கொன்றதற்கு சாக்ஷி, நீ அதைக் கவனிக்கவில்லை போலிருக்கிறது என்றார்கள். இதைக்கேட்ட சுந்தரம்:—ஐயன்மீர்! அவன் உடைகளில் இரத்தக்குறி யிருந்ததை நானும் பார்த்தேன். அவன் கொலை செய்யவில்லை யென்று தெரிவிக்கிறேன். பெரியண்ணன் கொன்றதாகச் சொல்லுகிறீரே, அவன் கொன்ற மாதெங்கே, அல்லது கட்டமெங்கே?

ஊரார்:—அடே சுந்தரம், நீ சொல்லியது ஓர் வித ஆச்சர்யமாகத் தானிருக்கிறது. நாமெல்லோரும் தானே தேடிப் பார்த்தோம். நீ சொல்லும் அம்மங்கையின் சவத்தையும், கட்கத்தையும் காணோமே. ஒருக்கால் துப்பு கிடைத்துவிடுமென்ற பயத்தால் முதலில் சவத்தை ஒளித்துவிட்டு, திரும்பி வந்த சமயம் பயத்தால் வீரிட்டலரியிருக்கக் கூடாதோ?

சுந்தரம்:—ஐயா! நீங்களெல்லோரும் நல்ல யூகசாலிகள், கொன்றவன் நாம் மாளிகைக்குள் போகும்வரை நின்றிருப்பானா? அல்லது கொலை செய்தவனே இவ்விதம் சத்தம் செய்து தன்னைக் காட்டிக் கொள்வானா? இதை யோஜியாமல் பெரியண்ணனே கொன்றவனென்த் தீர்மானமாய்ச்சொல்கிறீர்களே!

ஊரார்:—சுந்தரம் ஏதோ நீ சொல்வதைப் பார்த்தால் அவன் நிரபராதியெனத் தெரிகிறது. ஆகிலும் அவன் துணி முழுவதும் இரத்த மயமாகயிருக்கிறதே, அதற்கு நீ என்ன தகவல் சொல்லுகிறாய்?

சுந்தரம்:—அண்ணமார்களே! ஏன் ஒருக்கால் அவன் உட்காரும்போது அறியாமல் சேலையின் மேல் உட்கார்ந்து, பின் தெரிந்து, பயந்து வீரிட்டலரியிருக்கக் கூடாதோ?

ஊரார்:—சுந்தரம் நீ சொல்வதே சரி. நாங்கள் இந்நேரம் வரை உன்னோடுவாதாடினது எங்கள் புத்திக்குறைவு. ஆகிலும் நீ ஏதோ, இதைப்பற்றி முன்னாடியே, உன் மனதில் ஓர் முடிவு செய்து கொண்டிருப்பதாய்த் தெரிகிறது. உண்மையாகக் கொன்றவன் உமக்குத் தெரிந்தேயிருக்கும்; இருந்தாலும் எங்களைச் சிலரை சாக்ஷியாகக் கோரியிருக்கிறார்கள், நாளை நாங்கள் கச்சேரிக்குச் சென்று என்ன கூறும்படி சொல்கிறாய்?

சுந்தரம்:—ஓ! ஓ! அது விபரம் எனக்கு ஒன்றுமே தெரியாது. நீங்களன்று என்னென்ன, உங்கள் கண்களில் பார்த்தும், காதுகளால் கேட்டுமிருக்கிறீர்களோ, அதை அப்படியே சொல்லி விடுங்கள்.

ஊரார்:—ஆனால் பெரியண்ணன் மடிய வேண்டியதே.

சுந்தரம்:—மடிந்தாலும் மடிந்தான், உயிர் பெற்றாலும் பெற்றான்.

ஊரார்:—எவ்விதம் உயிர்பெற முடியும்? அவனுக்கு வேறு ஒருவரும்சிபார்சாக வருபவரும் இல்லை. பாவம் முன்னாலேயே கேடி, அவன் வேஷ்டிகளில் இரத்தக்குறியிருக்கிறது. நம் யாவரையும் கண்டவுடன் பயந்து வீரிட்டலரினான். இதுகளே அவனுக்கு விரோதமாயிருக்கும் போது அவன் எவ்விதம் தப்ப முடியும்?

சுந்தரம்:—ஐயன்மீர், நாம் இப்போது பேசிக்கொள்வதில் யாது பயன்? கேஸ் நடைபெறும் தினத்தில் முடிவு தெரிகிறது, அதற்குள் நாம் ஏன் இவ்வளவு தூரம் கஷ்டப்பட வேண்டும்?

ஊரார்.—ஆமாம் சுந்தரம். நீ சொல்வது தான் நியாயம், ஏன் நாமிதைப்பற்றி வீண் கதை பேசிக் கொண்டிருக்கிறோம். எல்லாவிபரமும் நீ சொன்னபடி, விசாரணை தினத்தில் தெரிந்துவிடும். சரிமணியோ ஒன்பதடிக்கிறது. நாங்களினிச் செல்லுகிறோமென ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் இல்லம் நோக்கிச் சென்றார்கள்.

சுந்தரம் மட்டும் தனதில்லத்துக்குச் செல்லாது, ரத்தினம்" கொலையுண்ட மாளிகையை நோக்கி நடந்தான். அவன் மனதில் பல விதமான யோஜனைகள் ஒன்றன் பின் ஒன்றாய் உதித்தது. மாளிகைக்குள் ஏதாவது ரகசிய வழிகளில்லாது இக்காரியம் நடந்தேறியிராது. இது ஏதோ, விபரீத கொலையாகயிருக்கிறது. கொலையுண்ட மாதை வெளிக்கு விட்டால் துப்புக் கிடைத்து விடுமென்றே, கொன்றவன் சவத்தைத் தூக்கிச்சென்று விட்டான் போலத் தெரிகிறது. ஆகிலும் இதை நம்மால் கூடியவரை உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடித்து, பெரியண்ணனை தப்புவித்தே தீரவேண்டுமெனச்சொல்லிக்கொண்டே நடந்தான்.

சுந்தரம் என்பவர் துப்பு அறிவதில் மிகவும் கெட்டிக்காரர். அவருக்கு வயது 25. இவ்வளவு சிறுவயதில் பல கேசுகளைக் கண்டுபிடித்து, "சிங்கம்" எனப் பெயர் பெற்றவர். வசந்தபுரம் என்னும் பட்டணத்தில் பல துப்பு அறிபவர்களிருந்தும், இவரைப்போல அவ்வளவு புத்தி சூட்சமுடையவர்களல்ல. இவர் தனது தாய்நாடு பெங்களூரிலிருந்து இவ்வூருக்கு வந்து மூன்று மாதங்களேயாயின. அதற்குள் பலசிக்கலான திருட்டுக் கேஸ்களைக் கண்டுபிடித்து நல்ல பெயர் பெற்றுக் கொண்டவர். இவர் மிகவும் பரோபகாரி. திக்கில்லாதவர்களுக்கும், ஏழைகளுக்கும், தன்னால் கூடியவரை உதவி செய்பவர். ஆதலால் இப்பெரியண்ணன் திக்கில்லாதவனென்றும், நிரபராதி யென்றும் தன் மனதுக்குத் தெரிந்து, இக்கேஸில் தலையிட்டு, பெரியண்ணனைத் தப்புவிக்க, துப்புநாடி "ரத்தினம்" கொலையுண்டமாளிகையைநோக்கிச்சென்று கொண்டிருந்தார்.

இவர் பலவிதமாக யோஜனை புரிந்துகொண்டே, தனவந்த பூபதியின் மாளிகைக்கருகில் வந்து நின்றார். "ரத்தினம்' கொலையுண்ட மாளிகையை வெளிப்புரமும், பின்புரமும், சுற்றி, சுற்றிப்பலமுறை பார்த்தார். ஆங்காங்கு அம்மாளிகையின் மூக்குகளில் போலீஸ், காவல்காத்துக் கொண்டிருப்பதைப்பார்த்து, மனதில் ஓர்வித ஆனந்தம் கொண்டார். அன்று அமாவாசை யிருட்டாதலால் ஒருவரும் சுந்தரத்தைக் கவனிக்கவில்லை. திறந்திருந்த ஜன்னல் ஒன்றின் கம்பிகளைத்தான் கொண்டு வந்திருந்த சாமான்களால் பெயர்த்தெரிந்து விட்டு உள் நுழைந்தார். உள் நுழைந்த சுந்தரத்தை யாவரும் கவனிக்கவுமில்லை. சுந்தரமும் நெடு நேரமாயும் வெளி வரவேயில்லை.

குடும்ப சம்ரக்ஷணையும் சுகாதாரமும்.

ஜலம் 109-வது பக்கத் தொடர்ச்சி.

ஜலம் அசுத்தமாகும் விதம் எப்படி என்பதைக் கவனியுங்கள். கிணறு குறுகலாயிருந்தால் அது மணலும் மெதுவான மண் கலந்தயிடமாயிருக்கும். அவைகள் மூலமாக அசுத்தப்பதார்த்தங்கள் சேர்ந்து ஊறும். கிணற்றிற்கு மேலுள்ள சுவர் செங்கல் கட்டடமாகயிருந்தால் அது உடைந்து போகும் போதெல்லாம் மண், சுண்ணாம்பு, உடைந்தகல் இவைகள் கிணற்றிற்குள் விழுந்து கிணற்று ஜலத்தை அசுத்தப்படுத்துகிறது. அல்லது கிணறு சாக்கடை, மாட்டுக் கொட்டாய், குதிரை லாயம், கக்கூசு இவைகளுக்குச் சமீபத்திலிருந்தால் ஜலம் அசுத்தமாய்விடும். ஆகையால் மேற் கூறியவைகளிருக்கும் இடங்களில் கல் போட்டிருக்க வேண்டும். ஆயினும் துர்நாற்றமும், ஜலமும் தங்கக்கூடாது. கிணற்றை மூடாமல் வைத்திருந்தால் அதில் இலை, வைக்கோல், குப்பை, கூளம், தூசி முதலியவைகள் விழுந்து ஜலத்தை அசுத்தப்படுத்தும். பக்ஷிகளும் கிணற்றிற்குள் கூண்டுகளைக்கட்டும். கிணற்றிலிருந்து ஜலம் எடுக்கும் கயிற்றை அழுக்காகவைத்துக் கொண்டிருந்தாலும் ஜலம் அசுத்தமாய்விடும். மேற்சொல்லியபிரகாரம் மண், சாம்பல், இலை, முதலியவைகள் கிணற்றிற்குள் விழுந்து ஜலத்தை அசுத்தப்படுத்துவதல்லாமல் ஜலம் ஊறிவரும் ஊற்றை அடைத்துக்கொள்ளும். அப்பொழுது புதிய ஜலம் ஊறிவர மார்க்கமில்லையல்லவா? அதிலிருக்கும் ஜலம் கெட்டுவிடுகிறது. ஆனதுபற்றி அந்த ஜலம்நமக்கு உபயோகமாகாது. ஆகையால் கிணற்றிலுள்ள குப்பை, கூளம் முதலியவைகளை அடிக்கடி எடுத்துவிடவேண்டும்,

குளத்திலுள்ள ஜலம் எவ்விதம் அசுத்தமாய் விடுகிறதென்பதைக் கவனிப்போம். கிணற்று ஜலத்தைவிட குளத்து ஜலம் அதிகமாக அசுத்தமாய்விடுகிறது. எப்படியெனில் குளத்திற்குச் சமீபத்தில் ஜனங்கள் ஜலபாதைக்குப் போகிறார்கள். மழை காலத்தில் அசுத்தப்பதார்த்தங்கள் குளத்திற்கு சமீபத்திலிருந்தால் மழை ஜலம் இவைகளை அடித்துக்கொண்டுபோய் குளத்தில் விழும்படி செய்யும். இதனால் ஜலம் முழுவதும் அசுத்தமாகிவிடும். வண்ணான் தனது அழுக்குத் துணிகளையும் ஸ்திரீ புருஷர்கள் அழுக்குத் துணிகளையும் தோய்ப்பதினால் குளத்து ஜலம் அசுத்தமாய்விடுகிறது. தொத்து வியாதியுள்ள ஜனங்கள் ஸ்நானம் செய்வதினாலும் துணிகளைத் தோய்ப்பதினாலும் அசுத்தமாய் விடுகிறது. ஆகையால் குடிப்ப

தற்காக நாம் முன் சொல்லிய பிரகாரம் பிரத்தியேகமாக ஒரு குளம் வைத்துக் கொள்ளவேண்டும். ஸ்நானம் செய்ய ஒரு குளமும், துணிகளைச் சுத்திசெய்ய ஒரு குளமும் ஏற்படுத்திக்கொண்டால் மிகவும் நல்லது. இவ்விதம் செய்ய அந்தந்தக் கிராமவாசிகள் சேர்ந்து ஏற்பாடுசெய்துவந்தால் அவர்களிருக்கும் கிராமத்திற்கு க்ரமேண பெருத்த நன்மையையுண்டாக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. பட்டணங்களிலும் இவ்விதம் செய்து வருவது நலமே.

நதிகளிலுள்ள ஜலம் கெட்டுப் போவதைப் பற்றியோசிப்போம். நதிகளில் சிற்சில சமயங்களில் ஜனங்கள் மடிகிறார்கள். மிருகங்கள் மடிகின்றன. ஜனங்களும் இறந்துபோன மிருகத்தைப்போட்டு விடுகிறார்கள். இப்படி செய்வதினால் நதிகளிலுள்ள ஜலம் அசுத்தமாய் விடுகிறது. பட்டணத்து சாக்கடை ஜலம், அல்லது அரிசி யந்திரம், எண்ணெய் யந்திரம், பஞ்சு யந்திரம் முதலியவைகள் சமீபத்திலிருந்தால் இவைகளிலுள்ள அசுத்த ஜலத்தை நதியில் விழும்படி செய்வார்கள். அப்பொழுதும் நதியிலுள்ள ஜலம் கெட்டுப்போய்விடுகிறது. மலம் மூத்திராதிகளை நதிகளில் கொட்டுகிறார்கள். இதுவும் தப்பு; சுகாதாரத்தை விரும்பும் ஜனங்கன் மேற்கூறியவாறு செய்வதைத் தடுக்க முயலவேண்டும். அவ்விதம் தடுக்காவிட்டால் பற்பல கெட்ட வியாதிகள் அந்த ஊரில் பரவும், ஜனங்கள் மடிவார்கள். ஆகையால் அபாயம்வரும் முன்னே அதைத்தடுக்க வேண்டிய பிரயத்தனங்களை நாமே செய்து வந்தால் மிகவும் நல்லதல்லவா?

முனிசிபாலிடியார் யாவற்றையும் செய்வார்கள் என்று எண்ணிக்கொண்டு குளம்,கிணறு,நதி முதலியவைகளை அசுத்தம்செய்துகொண்டு வந்தால் அவர்களாலேயே யாவற்றையும் சுத்திகரிக்கமுடியுமா? ஊர் ஜனங்களும் அவர்களுடன் சேர்ந்து உழைத்து வரவேண்டும். ஒத்து உழைத்துவரின் அந்த ஊர் க்ஷேமமடையும். எப்பொழுது க்ஷேமமடைகிறதோ அப்பொழுது அந்த ஊரில் வியாதிகள் அதிகமிராது.

பதார்த்தகுண சிந்தாமணி.

மணலிக்கீரையின் குணம்:—இக்கீரையால் வாதகோபம், மார்புச்சளி, சிலேஷ்மம், கிருமிரோகம், பயித்திய தோஷம் முதலியவை நீங்கும்,

நீர் ஆரைக்கீரை அல்லது ஆரைக்கீரையின் குணம்:—நல்ல சுவையையும் நாவிதமுமுள்ள நீராரைக்கீரை பித்த நோயையும், அதிமூத்திரத்தையும், ரத்தப்பிரமேகத்தையும் நீக்கும்.

புளியாரைக்கீரையின் குணம்:—இக்கீரை பித்த மயக்கம், தீமையை விளைக்கின்றவாத கப மிசிரம், மூலவாயு, கிரகணி, ரத்தமூலம் இவைகளை நீக்கும்.

கோழிக்கீரையின் குணம்:—கோழிக்கீரையால் படையும், கரப்பானும், சொறியும், கிருமியும் உண்டாகும்.

புளிப்புக்கீரையின் குணம்:—வாதம், அருசி, சீதளம், ரத்தபித்த ரோகம், கரப்பான் முதலியவைகள் நீங்கும். ஆனால் பித்தம் உண்டு பண்ணும்.

பிண்ணாக்குக்கீரையின் குணம்:—உருசியுள்ள பிண்ணாக்குக் கீரையால் மலமும், மூத்திரமும் ஜாரியாயிறங்குவதும் தவிர வாததோஷமும் கரப்பானும் உண்டாகும். பிரமேகவெட்டை போம். மேகம் தணியும்.

முக்குளிக்கீரையின் குணம்:—கபதோஷம் அதிசாரம், ஆமம் இவைகளை உண்டாக்கும், வெப்பத்தை நீக்கும்.

வெந்தயக்கீரையின் குணம்:—வயிற்றுப்பிசம், அக்னிமந்தம், வாத கோபம், சிலேஷ்ம தோஷம், காசம், இருமல், அருசி, இவை நீங்கும்.

கொத்துமல்லிக்கீரையின் குணம்:—இக்கீரையால் வாத அரோசகமும், பித்தவருக்கமும், பித்த சுரமும் போம்.

கொடிக்காசரை கீரையின் குணம்:—இக்கீரையால் பயித்தியம் போம், கபம் நீங்கும்.

காசினிக்கீரையின் குணம்:—அதி வெப்பத்தை நீக்கும், உதிரத் தழுக்கையும் நீக்கும். ரத்த விருத்தியைச்செய்யும், அஸ்தி சுரத்தை நீக்கும், பலத்தையுண்டாக்கும்.

நறுந்தாளி, நன்முருங்கை, தூதுணம்பசலை அறுகீரை இவற்றுள் யாதேனும் ஒன்றைப்புளி நீக்கிப் பாகஞ்செய்து அன்னத்துடன் நெய் சேர்த்து காலையில் மாத்திரம் ஒரு மண்டலம் உண்ணில் தேக பலம் உண்டாகும்.

ராஜபக்தி.

153-வது பக்கத் தொடர்ச்சி.

இருவரும் செட்டியார் பக்கத்தில் நெருங்கியதும் பாரிஜாதன் "என் ஐயா ஆந்திரரே சுகமா?" என்றான்.

"யார் ஐயா கூப்பிடுகிறது?" என்று வெகு பிரயாசத்தோடு கை இரண்டையும் பின்னே ஊன்றிக்கொண்டு கழுத்தை யானைமாதிரி மெதுவாய்த் திருப்பிப் பார்த்தான். ஓஹோ!! அச்சல பாரிஜாதரா!! வாரும்! வாரும்!! இத்தனை நாள் எங்கே ஐயா கண்ணிலேயே காணோம்?"

"கண்ணிலேயே மட்டுமின்றி மூக்கிலேயும் கூடக் கண்டிருக்க மாட்டீர்—தெரியாதா உமக்கு நமது தர்பார்!! நமது வனங்களுக்கு ஒன்று, இரண்டு ஒன்றில்லாமல் ஏராளமாய்ப் புதிய உத்யோகஸ்தர்கள் வந்திருக்கின்றார்கள். எத்தனையோ மாறுதல்கள் ஆய்விட்டன: ஆய்க்கொண்டும் இருக்கின்றன. அப்படியிருக்கும் பொழுது எனக்கு வேலை அதிகம் இராதா? அதுதான் வரவில்லை" என்றான்.

தனபாலன் "நியாயம்; நியாயம் தான். உங்களுக்கெல்லாம் எஜமானர் யாரோ ஒரு குடியரசு உத்தியோகஸ்தர் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவர் எப்படி ஐயா?"—உடனே சற்று உஷாராய் "இதுயார் உம்முடன் கூடவந்து இருப்பவர்?"

பாரிஜாதன் "இவனா"—இப்பொழுது மரியாதையாய்ப் பேசவில்லை காரணம் தெரியுமல்லவா?—இவனா? இவன் தான் நமது சிநேகிதன் அமிர்தேசனுடைய பேரன், வனபால எதுகுலன் என்றுபேர், நமது அமிர்தேசன் தான் பாபம் இறந்துபோய் விட்டானே!!"

"என்ன? என்ன? நமது அமிர்தேசனா? என்ன மனுஷியன்! தங்கக் கம்பிதான்!! பாவி!! இறந்துபோய் விட்டானா? அதற்குள்ளாகவா? —சரி எல்லாரும் போக வேண்டியது தானே ஒரு தினம்!! வனபாலனால் என்ன; உத்தியோகஸ்தன், குடித்தனக்காரன், அரசன்—எவனானாலும் என்ன, எல்லாரும் எமனுக்கு காலை ஒப்புவிக்க வேண்டியது தானே!!! என்றான் தனபாலன் வேதாந்தமாக.

ஐயா அதுகிடக்கட்டும். நான் இன்றுஎதுகுலனை அழைத்துவந்த காரியம் தெரியுமா உமக்கு அமிர்தேசனுக்குப் பிறகு இனி வனத்திலிருந்துசாமான் வேண்டுமானால் இவனைப் பிடித்துக்கொள்ளும் உமக்குப்புளியங்கிளையைப் பிடித்ததுபோல் தான்; தெரியுமோ இல்லையோ?" என்றான் பாரிஜாதன் ஜாடையாய் எதுகுலனைப் பார்த்துக் கொண்டே. "ஓஹோ!! ரொம்பசரி; ரொம்பசரி!! வனபதார்த்தங்களுக்கேபஞ்சமாய்ப் போய்விட்டது. கொஞ்சநாளாய்!! எத்தனை பேர் வந்துஎன்னை தினம்தினம்தொந்தரவு செய்கிறார்கள்!! அவர்கள் தொந்தரவு சொல்லி முடியாது. அவ்வளவு தானே கடைசித் தடவை எங்களுக்கு மான் கிடைத்தது. அமிர்தேசன் கொண்டு வந்து கொடுத்ததுதான்!! அதன் பிறகு வனாந்தரமே வெகு தூரமாய் விட்டது எங்களுக்கு!—நீ குடியரசு உத்தியோகஸ்தரிடம் வேலையில் அமர்ந்திருக்கிறாயா அப்பா?" என்றான் எதுகுலனைப் பார்த்து.

"ஐயா அந்த நாய்களிடத்தில் நான் உழைப்பதில்லை?" என்றான்.

"சரி; சரி; அப்பனே நீ சொல்வதில் தப்பில்லை. நன்றாய்ச் சொன்

னாய்! சிறு பிள்ளையானாலும் புத்திசாலி. அமிர்தேசன் வம்சத்தார் ராஜபக்தி நிரம்பினர் என்பதை யார் தான் சந்தேகிப்பார்கள்? நரசிம்மன் வம்சத்தைப் போற்றி வந்தார்கள் அல்லவா அவர்கள்!! பாபம்! பாபம்!! அவ்வம்சமே அடியோடு போய்விட்டதே!! என்ன செய்யலாம்? அது ஒரு கஷ்டம் எங்களுக்கெல்லாம் ராஜபக்தி நிரம்பிய அமிர்தேசன் வம்சத்தில் பிறந்தவன் நீ! 'விரையொன்று போட்டால் சொரை ஒன்று முளைக்குமா?'—சரி! அறைக்குள் போவோம் வாருங்கள் இங்கே இவ்வித சமாச்சாரம் பேசக்கூடாது. 'பகலில் பக்கம் பார்த்துச் சொல்லு. இரவில் அதையும் சொல்லாதே' என்கிறார்கள் பெரியவாள். யாரிடத்தில் எது பேசலாம், எது பேசக்கூடாது என்பது கூடத்தெரிகின்றதில்லை. இக்காலத்தில்!! பிள்ளாய் நாம் என்ன செய்யக்கூடும். நாம் செய்த பாபம்" என்று சொல்லிக்கொண்டே இருவரையும் உள்ளே அழைத்துக்கொண்டு போனான், தனபாலன். சீக்கிரத்தில் மூவருமாகக் கூடிப் பேசி எதுகுலன் வனபதார்த்தங்களை விற்கவும், தனபாலன் அவற்றை வாங்கவும், வேண்டியபடி ஏற்பாடு செய்துகொண்டனர்.

18-வது அத்தியாயம்.

எதுகுலன் தன் தகப்பன் கத்தியை மீட்டது.

தனபாலனிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு குதிரையையும் வண்டியையும்மட்டும் சத்திரத்திலேயே விட்டு விட்டு மற்ற சாமான்கள் வாங்க எதுகுலனும் பாரிஜாதனும் புறப்பட்டனர். ஒரு கடையிலேயே எல்லாம் கிடையாதாகையால் வெவ்வேறு கடைக்குப் போகவேண்டி யிருந்தது. கொஞ்சமாயிருந்த சாமான்களைக்கட்டி அந்த அந்தக்கடையிலேயே வைத்துவிட்டு வண்டி கொண்டு எடுத்துப் போவதாய்ச் சொல்லி வேறு இடங்களுக்கு நடந்தனர். சாமான்களோடு சாமான்களாய் எதுகுலதிலகன் தன் அம்புகளுக்கு எஃகு நுனிகள் வாங்கவேண்டுமென்று எண்ணியிருந்தான். அதற்காக ஒரு கொல்லன்பட்டையில் நுழைந்தனர். வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டிருக்கும்போது அவன் கடையில் சுவற்றின்மேல் ஒரு பெரிய கத்தி தொங்கிக் கொண்டிருந்தது. அது எதுகுலனுக்கு முன் எப்பொழுதோ பார்த்த கத்திபோல் தோன்றியபடியால், விரைவில் அதன் பக்கத்தில் போய் நின்றுகொண்டு, "இது என்ன கத்தி ஓய் இது?" என்றான் அந்தக் கம்மாளனைப் பார்த்து.

"ஐயா அது என்னுடைய கத்தியல்ல அதன்மேல் படிந்த துருவெல்லாம் எடுத்துச் சுத்தப்படுத்தும்படி நரசிம்ம வீரருடைய ஜனங்

களில் ஒருவர் கொண்டு வந்து கொடுத்தது. அதை மறுபடி திரும்பி வாங்கிக் கொள்வதற்குள் மாளிகை தீப்பற்றி எறிந்துபோய் விட்டது. எல்லாரும் இறந்துவிட்டனர். நான்செய்த வேலைக்குக் கொஞ்சம் எனக்குப் பணம்வரவேண்டும், வரவழியோ காணோம். ஆகையால் இந்தக் கத்தியை விற்றுவிடவா, அல்லது என்ன செய்வதென்று தெரியவில்லை." என்றான் கடைக்காரன். எதுகுலனுக்கு சில நிமிஷங்கள் வரையில் துக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டபடியால் பேசவே முடியவில்லை. கடைசியாக "ஐயா, கடைக்காரரே! உண்மையைச் சொல்லுமிடத்து நானும் என் சந்ததியாரும் நரசிம்மவீரன் வீட்டிலேயே உழைத்துக் கொண்டிருந்தவர்கள். ஆகையால் இந்தக்கத்தி மற்ற யார் கைக்கும் போவது எனக்கு இஷ்டமில்லை. அவ்வாறாயின் என் மனதுக்குப்புண்ணாய் இருக்கும். ஆகவே உமக்குச் சேரவேண்டிய பணத்தை நான் கொடுக்கிறேன். கத்தியை என்னிடம் கொடுத்துவையும். மறுபடி அந்த வம்சத்தார் வந்து தங்களுடையதென்று உரிமை பாராட்டும்பொழுது உடனே இந்தக்கத்தியை அவர்களுக்கு ஒப்புவிக்கிறேன்." என்றான்.

"ஆம் நியாயமே நீர் சொல்வது, இதைவிட நேராகவும், பரிஷ்காரமாகவும் என்ன செய்யப்போகிறீர் கடைக்காரரே" என்றான் அச்சல பாரிஜாதன்.

கடைக்காரன் சரியென்று சம்மதித்து கணக்கைக்காட்டினான். அக்கணக்குப்படி சேரவேண்டிய பணத்தை எதுகுலன் கொடுத்துக் கத்தியைப்பெற்றுக்கொண்டான்.

அப்பொழுது எதுகுலனுக்குண்டான சந்தோஷத்துக்களவில்லை. தன் சந்தோஷத்தை அடக்கமுடியாமல் கத்தியுடன் வெளியே வந்தான். சத்திரத்துக்கு வந்ததும் பாரிஜாதன் வண்டியைக் கட்டிக்கொண்டு வர, லாயத்துக்குப் போகவே, எதுகுலன் சத்திரக்காரனா தனபாலனிடம் சென்று ஏதோ சில சமாசாரம்பேசப்போனான். பாரிஜாதன் வண்டியைக் கட்டிக்கொண்டு வந்து அதில் எதுகுலன் புதிதாய் வாங்கின கத்தியையும் வைத்து, சத்திரத்துவாயிலில் நிறுத்தினான். வண்டி நிற்கையில் ஒரு மனிதன் அங்கே வந்து கத்தியை உற்றுப்பார்த்தான். "ஏன் ஐயா!! அது எனது எஜமானன் வீர நரசிம்ம மல்லருடைய கத்தியல்லவா? நானன்றோ அதை கம்மாளன் மாணிக்கனிடத்தில் துருவெடுக்கக் கொண்டுபோய்க் கொடுத்தேன். உமக்கெப்படிக்கிடைத்தது" என்றான். பாரிஜாதன் "நீர் சொல்வது சரியே, உமது பெயர் என்ன ஐயா? என்று கேட்டான். "என் பெயரா, மாத

வன்; நான் மாளிகையில் கடைசி நாள் வரையில் உழைத்து வந்தேன்." என்றான். "சரி, ஆனால் உமக்கு என்ன வேலை இப்பொழுது?" என்று கேட்டான் பாரிஜாதன்.

"நானா! இப்பொழுது வீரண்ண செட்டி கடையில் முதல் சேவகனாயிருக்கின்றேன்."

"ரொம்பசரி, ஐயா, தயவு செய்து கொஞ்சம் குதிரை யண்டையில் நில்லும்: நான் உள்ளே போய் சில சாமான்களை எடுத்து வருகின்றேன்," என்றான்.

இருக்கிறேன் பரவாயில்லை: "எனப்பா வனபாலரே இக்கத்தி கிடைத்த விதம் சொல்லுமென்றால் அதைக் காணோமே" என்றான் மாதவன்.

"மறுபடி வந்து சொல்லுகிறேன்." என்று உள்ளே ஓடினான் பாரிஜாதன். மாதவன் குதிரையையும் வண்டியையும் அழகு பார்த்துக் கொண்டிருந்தான்.

பாரிஜாதன் உள்ளே போனதும் நடந்த விருத்தாந்தத்தை எதுகுலனோடு சொன்னான். சொல்லியபின் "ஐயா, நீர் வெளியே இப்பொழுது வந்தால் அந்தப் பயல் உம்மைத் தெரிந்துகொள்வான். ஆகையால் நான் அவனை அனுப்பும் வரையில் வெளியே வரவேண்டாம்" என்றான்.

நீ சொல்வது தான் சரியான வழி. அவன் போவதற்குள் என் அத்தைப் பாட்டியை எங்கே அடக்கம் செய்தார்கள் என்பதைத் தெரிந்துகொள். "சீக்கிரம் அனுப்பு அவனை" என்றான் எதுகுலன்.

பாரிஜாதன் வெளியே வந்ததும் கத்தியை அமிர்தேசன் பேரப்பிள்ளை வாங்கினதாகச் சொன்னார். அதைக்கேட்ட மாதவன் "அமிர்தேசனுக்கு ஒரு பேரப்பிள்ளை இருக்கின்றானா?" என்று ஆச்சரியத்துடன் வினவினான். அமிர்தேசன் இறந்ததுமுதல் இன்னும் சில மெய்யும் பொய்யும் கலந்து சொல்லிப்பின்னர் பாரிஜாதன் "ஏன் ஐயா மாளிகையிலிருந்த பெண்பிள்ளைகளுக்கு என்ன வாயிற்று தெரியுமா?" என்று கேட்டான்.

"ஆகிறதென்ன அங்கம்மாள் குடியரசுவீரன் ஒருவனைக்கட்டிக் கொண்டு ஓடிவிட்டாள். சமையல்காரி சுந்தரி தன் ஊருக்குப்போய் தன் ஜனங்களண்டை வாசம் பண்ணுகிறாள்" என்றான்.

"ஒரு கிழவி இருந்ததாகச் சொன்னார்களே: அவள்கூட இறந்து போய்விட்டாள் போலிருக்கின்றது, அல்லவா?! நான் என்னவோ

ஞாபகம் வைத்துக்கொள்ளவில்லை. உமக்கு நிச்சயமாய் ஏதாவது தெரியுமா?"

"ஆமாம், தானும் இறந்து, சௌட்வேலப்பனையும் கொன்றாள் அந்தக்கிழவி."

"என்ன செய்தார்கள் பிறகு?"

"அவளிடத்தில் ஒன்றும் சொத்து இல்லாததுபற்றி ஊரில் உள்ளவர்கள் எல்லாரும் சேர்ந்து ரெட்டிப்பேட்டையில் கிழண்டை எல்லையில் பெரிய மனிதரை அடக்கம் செய்யுமிடத்தில் இக்கிழவியையும் தாங்கவிட்டனர்." என்றான்.

"உம்முடைய கடையில் வேலை சுறுசுறுப்பாய் நடக்கின்றதா? நீர் இவ்வளவுநேரம் நிற்பதைப் பார்த்தால் உமக்கு சாவகாசம் ஏராளமாய் இருக்கும்போல் இருக்கிறதே?" என்று கேட்டான் பாரிஜாதன்.

"சேச்சே!! எனக்கு வெகுவேலை யிருக்கின்றது. அமிர்தேசன் பேரனை மிகவும் கேட்டதாகச் சொல்லும் - நான் போய்வருகிறேன் என்று ஓடிப்போனான். "அப்படியே போய்வாரும்" என்று அனுப்பிவிட்டு அவன் கொஞ்சதூரம்போனதும் "ஒழிந்ததேசனியன்" என்று உள்ளேபோய் எதுகுலனை அழைத்துவந்தான். இருவரும் வண்டியில் ஏறிக்கொண்டு எந்த எந்தக்கடைகளில் சாமான்கள் வைத்து இருந்தார்களோ அவற்றை எடுத்துக்கொண்டு குடிசைக்குப் புறப்பட்டனர். போகும் வழியிலே மாதவன்சொன்ன விஷயங்களையும் இன்னும்பல சங்கதிகளையும் பற்றிப் பேசிக்கொண்டே இரவில் வெகுநேரம் கழித்து க்ஷேமமாக குடிசைவந்து சேர்ந்தனர்.

பக்தியின் அனுபவம்.

நம் ஆராதனைப் பழக்கத்தால் நம்மிடம் உண்மையான பக்தி தோன்றுகிறது. அதுவே நம்மை அடக்கமாயும், எல்லாரிடமும் அன்பாயும் விளர்க்கிறது. ஏனெனில் உண்மை பக்தி முதிர்ச்சி நாமென்பது சிறிதுமின்றி மறைத்து எல்லாம் நம்பக்திக்குரிய ஆராதனை முகூர்த்தமாய்த் தோற்றுவிக்கிறது. எல்லாவற்றிலும் நம்மைப் பதிவிக்கிறது. ஆதலால் அப்படியான பக்திக்குரியவர்கள் எங்கும் தம் அன்பிற்குரியதைக் காண்கிறார்கள். அவர்கள் தங்களை எல்லாருக்கும் ஊழியர்களாக்குகிறார்கள். ஒவ்வொரு ஜீவப்ராணி மூலமாயும் தங்கள் கற்பனை மூர்த்திக்குவேலை செய்கிறார்கள். புல்லினும் தாழ்மையாயும் பொறுமையில் மரத்தையும் ஒத்திருக்கிறார்கள். அவர்கள் தனக்குப் பெருமை தேடியல்ல, ஆனால்

மற்றெல்லோருக்கும் பெருமை கருதற்கே. இப்படியான ஆத்மரூபமே ஆனந்த உருவமான கடவுளின் பெயரை தாங்கத் தகுதி.

ஒரு மரம் நாம் குறைப்பதை நினையாமல் அதன் சுபாவத்தை நிறைவேற்றுகிறது. நாம் அதின் கிளைகளை வெட்டினால் மறுபடியும் வளரவே ஆரம்பிக்கிறது. நமக்கு நிழலையும் தருகிறது. அப்படி உண்மையில் ஆராதனைக்காரர்கள் தன்னுள் வைத்த பரமார்த்த சொரூபத்தை வணங்குகிறார். தாங்கள் எதையும் அவரிடத்து விரும்புவதில்லை. ஏனெனில் அப்படி வணங்குவோருக்கு அவர் மிக்க அன்புள்ளவராய் விளங்குகிறார். அவர்கள் அன்பின் காரணமாக அவர்கள் அன்பையே உருவமாய்க்கொண்ட அவர் அவர்கள் அன்பிற்கு உரியவராகவேதானே யிருப்பார். ஆனால் நாம் ஒன்றை அவரிடம் எதிர்பார்க்கும் வரையில் நாம் உண்மையில் அவருக்கு அன்புசெலுத்த முடியாது. நம் கற்பனாமூர்த்தியாகிய அவரும் நமக்கு வெகு தூரத்தில் தங்கிவிடுகிறார். அன்பின் காரணமாய் நாமவரை விசுவாசிக்க ஆரம்பிக்கும்போது மாத்திரமே உண்மை ஆராதனைக்குரிய பக்தியை யடைகிறோம், பின் அமைதியாயும் மவுனமாயும் சேவிக்கமுடியும். தன்னைப்பற்றி வெளிப்படுத்திக்கொள்ளுகிற எவரும் உண்மை பூஜகருமாக முடியாது. உண்மை ஊழியருமாகார். ஓர்பெரியோர் கூறுவது:

உண்மை உழைப்பாளிகள் மவுனமாய் உழைக்கிறார்கள். மவுனமாகவேபோய் விடுகிறார்கள். மனிதசமுகத்திற்காக உள்ளபடியே தங்கள் வாழ்நாளைக் கொடுத்தவர்களுங்கூட அநேக சமயங்களில் பலராலும் காண முடியாமல் போகிறார்கள்.

நம் வேலையைப் புகழ ஒருவருமில்லாதவும் நம்மை உற்சாகப்படுத்த ஒருவருமில்லாதவும் யெவரும் நம்மை விரும்பாதவுமான அவ்விடமே நிறை சாந்தி, முடிவற்ற மனோலயம், பயமற்ற உழைப்பின் நிச்சயம். நம் அன்போடு கூடிய பக்திநிறைவும் அங்கே உள்ளது.

பெரிய சித்திகள் நம்முன் தோன்றும்போது அங்கு புகழ்வதற்கு ஆயிரக்கணக்கான சனங்கள் இருக்கிறார்கள். முற்றும் சுயகாரியப்பிரியமும் கேவல பயங்காளியுங்கூட தன்னை ருசுப்படுத்த தன் உயிரையுங் கொடுக்க முன்வரலாம்.

ஆனால் அற்பகாரியத்தையும் பிறர் அறியாமல் செய்வதே உண்மையான மேன்மை. மனிதவகுப்பில் சுயநயங்கருதாத அதுவே அன்பு. உண்மையில் அவர்களே ஆனந்திகள்.

நம் உள்ள மூர்த்திக்கு உறவாகும்படி நாம் அதைத் தேடினால் நமக்குப் பேரறிவை அது கொடுக்கிறது. நம் ஆராதனை மார்க்கத்தில் நமக்குக் களைப்புத்தந்து நம்மை அடிக்கடி தவறி நடக்கும்படிச்

செய்கிற நம் சுபாவவிருத்திக்கு எதிராய் ஓர் நிலையில் நின்று நாம் அவருக்குத் தொழும்பு செய்யப் பிரயாசைப்படுவோம். நமக்கு அவர் அன்புள்ள தந்தைதாயாகக் காணப்பட்டால் அவரை நம் உண்மைத் தந்தையாகப் பாவிப்போம். பின் உலகத் தந்தையினும் அதிக நெருக்கமாய் அவருதவியையும் உத்திரவையும் எதிர்பார்ப்போம். அல்லது நம் தாயைப்போல் நமக்கு மிக்க அன்பாய்த் தோன்றினால் இன்னும் சாஸ்தியாய்க்கூட அவரை நெருக்கமாய் எடுத்துக்கொள்ளலாம். ஏனெனில் தாயார் என்ற கருத்தில் எந்த பந்துவும் கொண்டுவருவதற்கியலாத சமீப உணர்ச்சி ஒன்று நமக்குத் தோன்றுகிறது. தகப்பனார் என்றால் சில சமயங்களில் பயம். தாயாரென்றால் தவநிழைத்திருந்தாலும் தாராளமாய்ச் செல்லுகிறோம். ஏனெனில் அவள் எப்பொழுதும் அன்பு பாராட்டுகிறாள். ஆகையால் அவள் உள்ளபடி நம்மைத் தண்டிக்கமாட்டாள் என்றறிகிறோம்.

அப்படியில்லாமல் கோபிகாஸ்திரீகளுக்கு கிருஷ்ணமூர்த்தி ஹிருதயமூர்த்தியாய் விளங்கினதுபோல் நம் கணவரே நம் உள்ள மூர்த்தியாதல் நமக்கு எல்லா விதத்திலும் பரிசுத்த வாழ்வாகும். கிருஷ்ணனை பால்ய உருவமாய் பலரும் கொண்டாடுவதுபோல் நம் அன்பின் சுபாவம் அளவு கடக்குமானால் நம்மிளங் குழந்தை உருவமாகவும் தியானிக்கலாம். இதைவிட உயர்வும் பரிசுத்தமான பந்துவுமேயில்லை. ஏனெனில் கபடற்ற தன்மையின் பேராழமும் சுயநயங் கருதாத்தாயின் அன்பும் ஏராளமாயிருக்கிறது. இப்படியான அன்பின் கடலில் நாம் எவ்வளவு ஆழமாய் முழுகினாலும் அவ்வளவு உயரமாய் ஞானத்தில் எழுவோம். உத்தமத் தாயின் அன்பு பொருந்தியவர்களாய் நம் தெய்வக் குழந்தையைச் சூழ்ந்துகொள்வோம். பின் நம்மை நெருங்கிவரக்கூடிய துன்பமில்லை, நம் உத்தம குழந்தையைப்போல் அவரைக்கவனிப்போம். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் தாயாராகிய தேவகியைப்போலிருக்கவேண்டும். அவள்தன் மகனின் புகழிற்காவது வல்லபத்திற்காவது ஒருபொழுதும் கவலைப்பட்டதில்லை. ஆனால் தன் கவலையும் ஆதரவும் தேடியுள்ள தன்னுடைய ஒரே சிறு குழந்தையாய் மாத்திரமே கருதினாள். இந்த விதமான எந்த குறிப்புகளிலாவது நம்முள் உண்மை பக்தி யெழும்போது அவ்வுறவின் பாத்தியம் அப்படியே உண்மை அன்பும் ஆராதனையுமாய் சுபாவமாகவே ஹிருதயத்திலிருந்து பொங்கி கற்பனாமூர்த்தத்தை நோக்கி ஓடுகிறது. இவ்விதமாயாவது வேறெவ்விதமாயாவது ரூபகரமான கடவுளை வணங்காமலும் உண்மை பக்தி இருக்கவுங்கூடும். அது நிர்ஜலனமாயும் தீவிரமாயும் நம் உள்ளத்தின் உண்மையை ஆராய்வதனால் அதுவும் பக்தியே. ஆகையால் நம்மனோரதமூர்த்திக்கு நம்பிரியப்படி எந்தவிதப் பெயரிட்டழைத்

தாலும் நாம் அவரிடம் பூரண அன்பை மாத்திரம் அடைந்திருக்கவேண்டும். நன்றியறிவோடும் சுயநயங் கருதாமலும் பரிசுத்தமாயும் அவருக்கு ஊழியஞ் செய்யவேண்டும். நாமெல்லோரும் உண்மை பக்தியை அடைவோமாக.

கமலத்தன்னை.

சிறுமியர்க்கான கதை

என் கண்மணிகளே ! உங்களுக்கு ஒரு சிறுகதை சொல்லுகிறேன். அதில் நீங்கள் கற்றுக் கொள்ளும் நீதிகளைக் கவனிப்பீர்களா? நீங்கள் கற்றுக்கொள்ளும் நீதிகளின்படி நடப்பீர்கள் என்றே நம்புகிறேன்.

ஒரு ஊரில் ஒரு கிழவி யிருந்தாள். அவள் அந்த ஊருக்குக் கடைசியில் காட்டோரத்தில் குடியிருந்தாள். அவள் சாப்பாட்டிற்கு கஷ்டப்பட்டாள். அதனால் சில கோழிகள் வாங்கி வளர்த்தாள். அவைகளின் பிரயோஜனத்தால் காலக்ஷேபம் செய்யலாம் என்று எண்ணினாள். அப்படியே ஒரு பெட்டைக் கோழி வாங்கிவளர்த்தாள். அது பல முட்டைகளிட்டு குஞ்சுபொரித்தது. இப்படியே அவை பல கோழிகளாயின. அவைகளைவிற்று அதிகப்பசியின்றி சாப்பிட்டுவந்தாள். ஒரு சமயம் அவளிடம் பல பெட்டைக்கோழிகளும் ஒரு சேவலும் இருந்தது. சேவல் நல்ல அழகாயிருந்தது. ஒரு நாள் பெட்டைகளுடன் நித்திரை செய்யும்போது யேதோ பயந்து கொக்கரித்தது. அதன்பக்கத்திலிருந்த அதற்குப் பிரியமான பொட்டை யொன்று அதைப்பார்த்து என் நாயகரே ஏன் இப்படி சத்தமிடுகிறீர் என்றது. அதற்கு சேவல் பிரியமுள்ளவளேஎன்னை யாரோ தொண்டையில்கவ்வித்தூக்கிப்போவதுபோல் சொப்பனங் கண்டு பயந்தேன் என்றது. அதற்குப் பெட்டை ஸ்வாமீ உம்மை நல்ல தைரிய புத்தியுள்ளவர் என்றுஎண்ணியிருந்தேன். நீர் இவ்வளவுபயங்காளிஎன்று நான் நினைக்கவில்லை. என்போன்ற பெண்கள் புருஷன் முட்டாளா யிருக்கச் சம்மதித்தாலும் பயங்காளியாயிருக்க சம்மதிக்க மாட்டார்கள் என்பதை, அறியமாட்டீரா ? சொப்பனத்தில் இப்படி பயந்து, உம்முடைய தேகம் இன்னும் நடுங்குகிறதே! நீர் எப்படி, என்னையும் என் சக்களத்திமாரையும் வைத்து ஆதரிக்கப் போகிறீர்? என்றது. இதைக்கேட்ட சேவல் எனன்பே நானப்படி பயங்காளியென்று என்னை நினைக்கவேண்டாம். சில சமயங்களில் கனவின்பலன் சரியாய்முடிகிறது. அதனால் சற்று அஞ்சினேன். இனிபரவாயில்லை. சூரிய உதயமாகிவிட்டது. நாம் வெளியே போய் வருவோம் என்று தன் இரக்கைகளை அடித்து பரந்து கொஞ்ச தூரம் போய் உட்கார்ந்தது. உடனே பக்கத்திலிருந்த பெட்டைகளெல்லாம் ஓடின. இவைகளை யெல்லாம் இட்டுக் கொண்டு தான்யமுள்ள இடங்களைத் தேடி அவைகளுக்கும் பகிர்ந்து கொடுத்துக் கொண்டுதான்

உற்சாகமாய்த் தன்மனைவி சந்தோஷிக்கும்படி காட்டோரங்களிலும் போய் மேய்ந்தது. அங்கு ஓர்மறைவில் இச்சேவலைப்பிடிக்கக்காத்திருந்த ஓர் நரி சடுதியில் வெளிவந்தது. நரியைக் கண்டதும் சேவல் பரந்தோடி கத்தியது. பெட்டைகளும் கத்திக்கொண்டு ஓடின. அப்போது நரி சேவலைக் கூப்பிட்டு நேசனே நான் உங்கட்குத் தீங்கு செய்யவந்தவனல்ல. நீயேன் வீணாய் என்னைக்கண்டு அஞ்சுகிறாய் என்று இத மொழியாய்க் கூறியது. இதைக்கேட்ட சேவல் தான் பயப்படாதவனைப்போல் தைரியமாய் நின்று என்னகாரியம் ஏன் தேடிவருகிறாய் என்றது. அதறகு நரி நேசனே உன் தகப்பன் பாட்டன் முதலானவர்கள் இக்காட்டின் பக்கம் வந்தால் என்னோடு பேசாதுபோவதில்லை. அவர்கள் தங்கள் அழகிய குரலால் பாடி எனக்கு சந்தோஷ மூட்டுவார்கள். நான் காட்டில் கிடைக்கும் தின்பண்டம் கொண்டுவந்து கொடுத்து அவர்கட்கு விருந்து செய்வேன். உன் அழகிய குரலைக்கேட்பதும் உன்னோடும் சினேகம் செய்ய ஆவலாய் ஓடிவந்தேன். நீ இனிய குரலாய்ப்பாடி எனக்குச் சிலநேரம் சந்தோஷ மூட்டினால் நாளைநான் வரும்போது உனக்கும் உன் பெண்டுகளுக்கும் விருந்தளிப்பேன் என்றது. சேவல் அதன் வஞ்சகவார்த்தைகளை உண்மையாக நம்பித் தான் பாடுவதாய் ஒப்புக்கொண்டுதான் நேரே நிமிர்ந்து நின்று தன் சிவந்த கொண்டையோடு அழகாய்க்காணும் தலையை நிமிர்த்தி கண்களைமூடி வாயைத்திறந்து கொக்-ரக்-கோ என்று கூவிற்று. நரி தந்திரமாய்ப்பாய்ந்து அதன் கழுத்தைக் கவ்வித் தோளின்மீது போட்டுக்கொண்டு ஓடியது. இதனைக்கண்ட பெட்டைக் கோழிகளெல்லாம் கதறிக்கொண்டு பறந்தமையால் சேவலைக் காணாத கிழவி பக்கத்து வீட்டாரைக் கூப்பிட்டு பலருடன் சேர்ந்துநரியை அடிக்கும்படி வேண்டினாள். அவர்கள் கம்புகழி முதலியஎடுத்து நரியை விரட்டிக்கொண்டு ஓடினார்கள்.

பலர்கூடி ஓடுவதைக்கண்ட சேவல் நரியே நான் உன்னுடைய நிலைமையிலிருந்தால் இவர்களை யெல்லாம் திரும்பியோடும்படி செய்யமாட்டேனா? நீ சித்தமாய் தைரியமில்லாதபேதை என்றது. இதைக்கேட்ட நரி மூடா நான் அவர்களுக்கு பயந்து ஓடவில்லை. எனக்கு காடு சமீபித்துவிட்டது. சீக்கிரம் உன்னைக்கொண்டு போய் பசியாற ஓடுகிறேன் என்று சொல்லுகையில் சேவல் அதன் வாயிலிருந்து தப்பி சீக்கிரமாய் பறந்து ஓர்மரத்தின் மேல் உட்கார்ந்து கொண்டது. நரி சேவல் தப்பிப்போனதைக்கண்டு நான் உன்னை இன்ன காரணத்திற்குத் தூக்கிப் போனேன் என்பதை நான் உனக்குச் சரியாய் சொல்லவில்லை. நீ அதைக்கேட்டுக் கொண்டுபோ நண்பனே என்றது.

அதற்கு சேவல் அன்பனே உன் ஏமாற்றமான சொற்களை இத மொழி யென்று நம்பி கர்வங்கொண்டு கண்மூடி நின்றதால் நீ முன்னர் ஏமாற்றினய். நான் மறுமுறை ஏமாந்து மூழுமூடன் ஆகமாட்டேன் என்றது.

நரிவெட்கி என் கர்வத்தால் அதிகப் பேச்சுப் பேசிவாயிலிருந்த நல்ல ஆகாரத்தை இழந்தேன் என்று சொல்லிப் போயிற்று.

சேவல் மெதுவாய்த் தப்பி வீடுசென்று தன் மனைவிகளுடன் சந்தோஷித்து பிறகு எப்பொழுதும் மோசவார்த்தையை நம்பாது வாழ்ந்திருந்தது.

இதனால் நீங்கள் தெரிந்து கொள்வது என்ன? அப்படித் தெரிந்து கொண்டதை நீங்கள் உங்கள் அனுபவத்தில் கொண்டு சாக்கிரதையாய் நடப்பீர்களா ?

கமலத்தன்னை.

இந்திய புத்திரிகளுக்கு ஓர் விக்ஞாபனம்.

ஸகோதரிகளே !

இக்காலத்தில் நீங்கள் கூர்ந்து உணரவேண்டிய தொன்றுண்டு அதாவது, ஸ்திரீகளுக்கு அன்பு மிகுதி ; புருஷர்களுக்கு ஞாநம் மிகுதி; ஆனாலும், ஸ்திரீபுருஷர் ஒவ்வொருவருக்கும் இரண்டும் அதி அவசியம் ; புருஷர்களுடைய தர்மத்தைக் கூட இருந்து முன் செலுத்துவதற்கேற்ற ஞானம் ஸ்திரீகளிடத்திலும், பெண்மக்களிடத்தில் கௌரவபுத்தி கொள்ளத்தக்க அன்பு புருஷர்களிடத்திலும் தற்காலத்தில் மிகக் குறைவு. ஒரு குடும்பத்தில் ஸ்திரீ புருஷர் இருவரும் நேர்மையா யிருக்கவேண்டியது போலவே, ஒரு தேச க்ஷேமத்திற்கும் இன்றி அமையாதது, அத்தேசத்து ஆண், பெண்மக்களின் ஒற்றுமையேயாம். நமது இந்தியாவின் அபிவிருத்தியை ஒரு ரதத்திற்கு ஒப்பிடுவோமானல் நீவிரும் நாமும் அதற்கு அவசியமான இரண்டு சக்கரங்களாவோம். ஒற்றைச் சக்கரம் மட்டும் பயன்படாது. இதுதான் நீவிரும் நாமும் அறிய வேண்டிய உண்மை.

இக்காலத்தில் ஓர் தவருன் எண்ணங் கொண்டிருக்கிறோம். இது, ஜன்மாந்தரங்களைப் பற்றிய உண்மையை ஊன்றியறியாததால் வந்தவினை. இப்போது புருஷர்களாயிருப்பவர் பலர் அநேக முன் ஜன்மங்களில் ஸ்திரீகளாயிருந்து, ஸ்திரீ சுபாவத்தையே அதிகமாய் விருத்தி செய்திருக்கிறார்கள். அதனால் தான் சில ஆண்மக்களிடமுங் கூட, காம்பீர்யம் அதிகமாய்ப் பிரகாசியாமல், கருணையும், அச்சமும், கூச்சமும், வெட்கமுமே மிகுதியாய் விளங்குவதைக் காண்கிறோம். இவர்களை, ஸங்கீதம் கவித்

வம், நாடகம், முதலிய கலைகளிற் படிப்பித்தல் தான் தகும். இவர்களுக்கு இயற்கையாகவே இவைகளில் ஓர் நாட்டம் இருக்கும். பரோபகாரங் கருதி உழைக்க இவர்கள் தளரார். அன்பின் வழிபற்றியே இவர்கள் செல்வர். தத்துவமும் தர்க்கமும் இவர்களுக்கு ருசியா யிரா.

அநேக பூர்வஜன்மங்களில் ஆண்மக்களாயிருந்து இப்போது பெண் வடிவத்திலிருப்போரையும் பார்ப்போம். நல்ல மனோவல்லமையையும், தர்க்க, தத்துவ, பௌதிக சாஸ்திரங்களில் தீவ்ர நாட்டத்தையும், இவர்களிடம் காண்போம். பிறர் தம்மை எவ்வாறு கருதினும், தாம் நீதியெனக் கண்ட வழியில் பயமின்றி இவர்கள் செல்வார்கள். ஸ்ரீஹெஸி நாம்பாளம்மையார், ஸ்ரீபெசண்ட் அம்மையார், ஸ்ரீஸரோஜினீதேவியார் இவர்கள் இதற்குச் சான்றுவர். ஆகவே சரீர வேறுபாடுகளைக் கருதுவதோடு, சுபாவங்களில் ஒற்றுமையையும் கவனிப்போமானல், உலகத்தில் சஹோதர தர்மம் நிலைக்கும்.

நாம் ஒவ்வொருவரும் அன்பையும், ஞானத்தையும் நம் சீலத்தில் நிறைய அமைத்துக் கொள்ளவேண்டும். அன்பை யிழந்த ஞானமும், ஞானத்தை யிழந்த அன்பும் பயனற்றவை. இதுமட்டுமோ? தீமையையுமல்லவோ விளைக்கின்றன ! எப்படி யென்று பார்ப்போம். ஐரோப்பிய யுத்தத்தில், அரும் பெரும் காரியங்களைச் சாதிக்கக் கூடிய மஹா புத்தி பராக்ரமசாலிகள் தம் ஞானத்தையும், சக்தியையும் எப்படி உபயோகிக்கிறார்கள்? ஒரு க்ஷணத்தில் பதினாயிரக் கணக்கான ஜனங்களைக் கொல்லும் வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அன்பிழந்த ஞானம் கொடும் பகையாயிற்று. அங்ஙனமே ஞானமிழந்த அன்பும் துவேஷமாகவும், குருட்டு பக்தியாகவும் விளையும். எப்படியெனில், "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்" என்னும் உண்மையை அநேகர் அறிகிறோமில்லை. அறிவோமானல், நம்மையும், நம் பிள்ளைகளையும், நம் பந்துக்களையும், நாம் எவ்வள்வு உயர்வாய் மதிக்கிறோமோ, அப்படியே பிறருக்கும், அவரவர் பிள்ளைகளும், பந்துக்களும் உயர்வு என்று உணர்வோம். அப்போது எல்லோரையும் ஸமமான அன்போடு கருதுவோம். இது இல்லாததால் தமது குழந்தைகளை நேசிக்க எண்ணி, பிறர் குழந்தைகளிடத்து அசூயைகொள்கிறோம். ஞானமில்லாமல் அன்பு செலுத்தத் தொடங்கி துவேஷத்தைக் கொள்கிறோம்.

எது எக்காலத்திலும் அழியாத ஸத்தியமாயுள்ளதோ, அதை யறிவது தான் ஞானம். அதனிடத்து பிரியங்கொள்வதுதான் அன்பு, ஸத்தியத்தைத் தழுவாத அன்பும் ஞானமும் முரண்படும், சிதைந்துபோம். அன்பும், ஞானமும் ஸத்யத்தைத் தழுவாமல் முரண்படவே, உடலையும், உருவத்தையும் பெரிதாக நினைக்கிறோம். உயிரையும் குணத்தையும் கவனிக்கிறோமில்லை.

வெளி டம்பத்தைக் கண்டு மயங்குகிறோம். உள்ளத் தூய்மையை அசட்டை பண்ணுகிறோம். அதனால், உலக வாழ்வு ஈசுவர கைங்கர்யமாய் நிகழாமல் உண்பதும் உறங்குவதுமாக முடிகிறது. இப்படிச் சீர்குலையும் காலங்களில் தான் பகவான் அவதரிப்பதாகக் கீதா சாஸ்திரம் கூறுகிறது. அதாவது, "தருமம் அழிந்து அதர்மம் ஓங்கும் போது நான் அவதரிக்கிறேன்" என்பதேயாம். தற்கால யுத்தத்தை தர்மாதர்ம யுத்தமென்று நாம் எங்ஙனம் கூறும விருப்பது? இக்காலத்தில் ஞானம் அபிவிருத்தியாகி யிருப்பதற்குத் தக்கபடி உலகத்தில் அன்பு இல்லை. நமக்குத் தெரிந்தமட்டில் பிறருக்கு கற்பிக்க வேண்டுமென்ற அன்பும், நாம் கற்றுக்கொண்டதற்குத் தக்கபடி நேர்மையாய் நடக்கத் தீவிர பக்தியும் இப்போது நம்மவருள் மிகத்தேவை. எல்லோரிடத்தும் ஸகோதரபாவமான அன்புகொள்ள வேண்டுமென்று நாம் எவ்வளவு நன்றாயறிந்தாலும், நங்கண்ணுக்குப் பிரியமான ரூபவான்களிடத்திலும், ரூபவதிகளிடத்திலும் மட்டும் அன்பு கொள்கிறோமே யொழிய, மற்றவர்கள் எவ்வளவு நற்குணம் பொருந்தியவர்களா யிருந்தாலும், அவர்களைக் கவனிக்கிறோமில்லை.

நந்தேசத்து ஸ்திரீ புருஷர்களாகிய நாம் பரஸ்பர கௌரவத்தோடு ஒருவரை யொருவர் நன்குமதித்து ஒருங்கு சேர்ந்து, நம் தேசத்து பொதுநலம் ஒன்றிற்கேனும் உழைக்க முன்வராத இக்காலத்தில், கருணையங் கடலான ஸ்ரீகிருஷ்ண பகவான் அவதரிப்பாரானால், அவரை நாம் அறிந்து நன்கு மதிக்கமுடியுமா? லோகாநுக்கிரகத்திற்கு அவர் புருஷ ரூபமாய்த்தான் வருவார், ஸ்திரீ ரூபமாய் வரமாட்டார்; ஸ்திரீ ரூபமாய் வருவார், புருஷ ரூபமாய் வரமாட்டார் என்றும் நாம் கருதல் நியாயமோ? ஒரு மஹாபுருஷன் வந்தால், அவருக்கு ஸதிரீ யென்றும் சூத்திரனென்றும் பேதபுத்தி இருக்குமோ? "ஸ்திரீகளும், வைசியர்களும், சூத்திரர்களும் என்னை யடையத் தகுந்தவர்கள்" என்று பகவான் கூறியிருக்கிறாரே! ஸ்திரீ ரூபமாய் பகவான் வந்தால், புருஷர்கள் அவரையணுகி, அவரை வணங்கி, அவர் ஆக்ஞைப்படி நடக்கவும், புருஷரூபமாய் பகவான் வந்தால் ஸ்திரீகள் அவரையணுகி அவரை வணங்கி அவர் ஆக்ஞைப்படி நடக்கவும், ஏற்றவிதமாய், நந்தேசத்தில் ஸ்திரீ புருஷர்களுக்குள் அந்யோந்யமான முறைமை நிகழ்கிறதென்று நாம் சொல்ல முடியுமா? புருஷர்களுக்கு இக்காலத்தில் பக்தியே அழிந்து போயிருக்கிறது. ஸ்திரீகளாகிய நீங்கள் பக்தி ரஸத்தை அறிவதுபோல் புருஷர்களுக்கு அறியச்சக்தி கிடையாது. இக்காலத்திலும் பகவான் வருவதாகப் பிரஸ்தாவம் உள்ளது. உலகப்போராட்டத்தை நிறுத்தவும் அவர் வரவை வேண்டுகிறோம். ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில் கோப

ஸ்திரீகள் எத்தகைய உள்ளுணர்வோடு பகவானுடைய பெருமையைப் பிரகாசப்படுத்தி வந்தனரோ, அத்தகைய உள்ளுணர்வோடு இக்காலத்திலும் பகவானுடைய அவதாரத்தை ஆவலாய் எதிர் பாருங்கள். முற்காலத்தில் கோபஸ்திரீகள் விதைத்த பக்தியே இக்காலம் வரை உலகத்தில் நிலைத்திருக்குமானால், அவ்வித பக்தியை இக்காலத்திலும் நீங்கள் பிரபலப்படுத்த என்னதடை? இனிவெகு காலம்வரை உலகில்பக்தி நிலைத்திருக்க நீங்கள் விதை ஊன்றுவது உங்கள் பாக்கியமல்லவா? ஸர்வ தர்மங்களையும் நாம் அறியாவிட்டாலும், அவதாரமூர்த்தி வருங்காலத்தில் அவரிடம் பக்தியை மட்டும் எல்லோரும் கொள்வார்களானால், அதுவேபோதும். அதன் மூலமாய் தர்மங்களைத் தெரிந்துகொள்வோம். "அநந்யபக்தியால் மட்டும் என்னையறிய முடியும்" என்று ஸ்ரீகிருஷ்ணன் கீதையிற் கூறியபடியே, ஸ்ரீ கிருஷ்ணனுடைய பெருமையை இடையர்களுக்கு இடையப் பெண்கள் தான் அறிவுறுத்தினரென்று கேட்டிருக்கிறோம். அதேமாதிரி, இக்காலத்திலும் வரப்போகும் பரமாசார்யனிடம், ஆண்மக்கள் அநேகருக்கு பக்தியில்லை. உங்கள் மூலமாகத்தான் அவர்களுக்கு பக்தி பெருகவேண்டும். ஸ்திரீகளுடைய நிஜபக்திக்கு பகவான் மிகவும் கட்டுப்பட்டவர். பகவான் திரௌபதீமாந ஸமரக்ஷணம் செய்யவில்லையா? பகவான் உலகில் உதித்து ஸங்கடங்களைத் தீர்த்து சமாதானத்தை நிலைபெறச்செய்யும்படி தீவிரமாய்ப் பிரார்த்தியுங்கள். அவர் நிச்சயம் வருவார். கோபிகைகளின் சங்கமொன்று முற்காலத்தில் ஏற்பட்டிருந்தால், இப்போதும் உங்கள் பக்திக்குரிய பொதுச் சங்கம் ஒன்று அவசியமல்லவா? பூர்வ ஜன்மங்களில் ரிஷிகளாயிருந்தவர்கள் கோகுலத்தில் ஸ்திரீகளாய்ப் பிறந்தார்களென்றால், இக்காலத்திலும் அத்தகைய புண்யாத்மாக்கள் ஸ்திரீகளாகிய உங்களுக்குள் இல்லையென்று எவர் மறுப்பார்? எத்தனையோ அரிய ரத்தினங்கள் ஸமுத்திரத்திற் புதைந்து கிடப்பனபோல, உங்களுக்குத் தக்க கல்வி ஏற்படாமையால், உங்களிடத்துள்ள நக்ஷத்ரம் பிரகாசிக்கமுடியவில்லை. உங்கள் கல்விக்கு நீங்களே முயலவேண்டுமல்லாது வேறொருவர் உங்களுக்காகக் கற்கமுடியாது.

உங்களுக்கு பக்திமயமான கல்வியைப் புகட்ட, உதயதிசை நக்ஷத்ர சங்கம் நம் இந்தியாவிற்கு ஓர் பெரும் பாக்கியமாகவுள்ளது. இத்துடனுள்ள துண்டுப் பத்திரிகைகளைப் படித்து, இச்சங்கத்தின் நோக்கங்களையும் உயர்வான பிரயோஜனத்தையும் ஜனங்களுக்குள் பரவச் செய்து, இதைப்படிக்கும் ஒவ்வொரு சகோதரியும், தம் அருகாமையில் ஒரு சிறு நக்ஷத்திரக் கிளைச்சங்கத்தை ஏற்படுத்தி வருமாறு வேண்டுகிறோம். ஒரு தெருவிலுள்ள நாலைந்து வீட்டுக்கு ஒரு சங்கம் வீதம் நந்

நாட்டில் ஏற்படவேண்டும். வீண் வம்பைத் தவிர்க்கவும் பிறர் குற்றத்தை மறக்கவும் மன்னிக்கவும், பிறரிடத்து அன்போடு நடக்கவும் பழகுமின்.'- எவரிடத்திலும் அணுவளவாவது ஒரு நற்குணத்தைக் கண்டு அதை நாம் அடையும்படிக்கும், எல்லாவற்றிலும் தம் சொந்த பிரயோஜனத்தையே பெரிதும் பாராட்டாமல், நாளுக்கு நாளதிகமாய் எத்தனை விதங்களில் பிறர்க்கு உபயோகமாய் வாழலாமென்பதையும் தெரிந்து நடக்க முயலுங்கள். ஸ்ரீ பெஸண்ட் அம்மை எப்படி உழைக்கிறார் பாருங்கள்.

அதற்கு சாதனமாக, அருகாமையிலுள்ள நாலைந்து வீட்டுப் பெண்மக்கள் ஒருவர் வீட்டில் பிரதிதினமும் சாவகாசமான ஒரு குறித்த நேரத்தில், அல்லது வாரமொரு முறையாவது, குறித்த சமயத்தில் கூடி, அமைதியாயும் சாந்தமாயும் ராமாயணம், பாகவதம் முதலியவைகளைத் தமிழில் படிப்பதோடு அவைகளின் ஸாரங்களையும் படிப்பினைகளையும் சிந்தித்தறியலாம். நமது பூர்ணசந்திரோதயம் முதலிய பல பத்திரிகைகளை வருவித்து, நந்தேசத்தின் தற்கால நிலைமையையும், அதில் அவதார மூர்த்தியைப்பற்றி எழுதப்படும் வியாஸங்களையும் படிக்கலாம். சந்தேகங்கள் உண்டானால் எம்மைப்போன்றவர்கட்கெழுதினால், நமக்குத் தெரிந்த அளவு தெரிவிக்கத் தயாராயிருக்கிறோம். இப்படி கிராமங்கள் தோறும் தெருக்கள் தோறும் ஸ்திரீகள் அனைவோரும் ஒருமித்து, இவ்வுதயதிசை நக்ஷத்ர சங்கத்தை ஏற்படுத்தி நடத்தி வருவீர்களானால், நம் இந்தியாவில் புதிய விளக்கேற்றி வைத்தமாதிரி பிரகாசம் ஏற்படும். ஞான மணம் கமழும். லக்ஷ்மியும், ஸரஸ்வதியும் நம் இந்தியத் தாயோடு ஒருமித்து வாழ்வார்கள்.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு

என்று திருவள்ளுவர் எழுதியுள்ள பிரகாரம், எவ்விதத்திலும் நல்லோரை உபசரிக்கத்தக்க ஸ்திரீ சங்கங்கள் ஏற்படவேண்டும். எவர் சொல்வதையும் கேட்குமுன் தள்ளிவிடலாகாது, கேட்குமுன் அங்கீகரிக்கவுமாகாது.

உங்கள் பேதைமைக் குணம் நல்லதேயானாலும், அறிவின்மையைக்கண்டிப்பாய் தவிர்க்கவேண்டும். உங்கள் பூர்ண பக்தியையும் தைர்யத்தையும் கொண்டு அறிவின்மையை விலக்கவேண்டும். உண்மைப்பரோபகாரிகள் இன்னாரென்று அறிந்து அவர்களுடன் ஒத்து உழைக்கவேண்டும். அவர்களை ஆதரித்து ஆஷாடபூதிகளைத் தவிர்க்கவேண்டும். பழத்தின் ருசியைக்கொண்டு மரத்தின் யோக்யதையை நாம் அறிவதுபோல, பரோபகாரம் என்னும் ஓரேகுறியை முன்வைத்து,

இன்னார் பெரியோர் என்று அறியலாம். அப்படி அறிந்த க்ஷணமே நீங்கள் அவருடன் ஒத்து உழைக்க முன்வரவும் வேண்டும். பர்த்ருஹரி சொல்லியபடி உலகத்தின் நீதி நிபுணர்கள் உங்களைப் புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும், ஐசுவர்யம் பெருகினாலும், குறைந்தாலும், இன்று மரணம் வரக்கூடியதாயிருந்தாலும், அல்லது ஒரு யுகம் கழிந்துதான் மரணம் வரும் என்றாலும், நியாய முறையினின்றும் ஒரு மயிரிழைகூட தீரர்கள் விலகமாட்டார்கள். இதை உஙகட்குச் சொல்வானேன் என்றால் நியாய வழியில் செல்வோருக்கு அபரிமிதமான இடையூறுகள் அவசியம் வரும். அவைகளை அலக்ஷியமாய் எதிர்க்கவேண்டும். இத்தகைய சீலமில்லாதவர்கள் பிறர்க்கு ஒரு போதும் உபயோகமாய் வாழ இயலார். ஆகவே நந்தேசத்து ஜயசீலர்களும் ஜயவீரர்களுமான தற்கால முற்காலத்து ஸ்திரீ புமான்களின் சரித்திரங்களைப் படிப்பீர்களானால், உங்கள் மனோபாவத்திற்குத் தக்கபடி, இனி நம் தேசத்தில் பிறக்கும் ஜீவர்கள் ஒளி நிறைந்த நக்ஷத்திரங்களாய்ப் பிரகாசிக்கத்தக்க சரீரங்களைக் கொடுக்க வல்லவராவீர்கள். உங்கள் தகைமைக்குத் தக்கபடி சிறிதளவாவது இதில் உதவிபுரிவீர்களானால், அது பகவானுக்குச் செய்த கைங்கர்யமாகும்.

''சீவனென்னச் சிவனென்ன வேறில்லை'' என்னும் திருமூலர் வாக்குக் கிணங்க, ஜீவர்களின் க்ஷேமத்திற்கு நாம் உழைப்பதே ஸ்வாமியினுடைய சித்தத்தை யறிந்து உழைப்பதாகும்.

ஸ்திரீகளுக்கு நமது பூரணசந்திரோதயம் அரைச்சந்தா விகிதத்திற்குக் கொடுக்கப்படும். இம்மாதிரிப்பத்திரிகைகளை வேண்டுவோர் தம்மாலியன்ற எவ்வற்பத் தொகையாவது எமக்கனுப்பினால், அதற்குத் தக்க துண்டுப் பத்திரிகைகள் அனுப்பப்படும். அவைகளைப் பிறர் பலருக்குக் கொடுத்து நம் சங்கத்தைப் பரவச்செய்யலாம்.

தங்கள் சகோதரன்,
பி. எஸ். ராமசுப்பையர்,

பழமொழிகள் :—

நற்குணமே நல்ல ஆஸ்தி.
நற்பெண்டீர் நல்லதைக் கண்டால் நமது நாயகனுக்கு என்பார்
நன்மை செய்திடில் நாலிடையூறும் வரும்.
நன்மை செய்தார் நன்மை பெறுவார்.
தீமை செய்தார் தீமை பெறுவார்.
நன்மை கடைப்பிடி.
நல்லோர்க்குப் பொறுமையே துணை.

சமாசாரக் குறிப்பு.

சுதேசமித்திரன்.

ஒப்பந்தக் கூலிகளைப்பற்றி

இராஜப்பிரதிநிதியை ஸ்திரீகள் பேட்டி கண்டனர்.

இந்தியாவின் பல பாகங்களினின்றும் ஸ்திரீகளின் பிரதிநிதி கோஷ்டி ஒன்று ஒப்பந்தக் கூலிகளைப்பற்றி இராஜப்பிரதிநிதியைக் கண்டு பேசப்போகிறதாக முன்னமே சொல்லியிருந்தபடி, சென்ற 24-ந்தேதி அவர்கள் இராஜப்பிரதிநிதியை பேட்டி கண்டுகொண்டனர். நவீன இந்தியாவின் சரித்திரத்தில் இம்மாதிரியான சம்பவம் இதுதான் முதல் தடவையானதால், இது ஞாபகத்தில் என்றும் இருக்கக்கூடியது. பம்பாயிலிருந்து தான் இந்த பிரதிநிதி கோஷ்டியில் ஸ்திரீகள் அதிகமாகச் சேர்ந்திருந்தார்கள். ஸ்திரீகள் ராஜப்பிரதிநிதியை பேட்டி கண்டு கொள்ள வேண்டுமென்ற விஷயம். அந்த மாகாணத்திலிருந்து உற்பத்தியானதாலேயே, அங்கிருந்து ஸ்திரீப் பிரதிநிதிகள் அதிகமாய்ச் சேருவதற்குக் காரணமாயிற்று. அப்புறம் வெகுநாள் கழித்தே மற்ற மாகாணங்களிலிருந்தும் பிரதிநிதிகளைப் பொறுக்கியெடுப்பது என்ற உத்தேசம் உண்டானதும், பம்பாயிலிருந்து ஸ்திரீப் பிரதிநிதிகள் அதிகமாக சேர்ந்திருப்பதற்கு மற்றொரு காரணமாகும். பின்வரும் பத்திரம் மிஸஸ் ஜிகாங்கீர் பிபெடிட் என்பவரால் இராஜப்பிரதிநிதிக்கு வாசித்துக் கொடுக்கப்பட்டது.

வேண்டுகோள் பத்திரம்.

"இந்த மகா யுத்தம் நடக்கும் காலத்தில் தங்களுக்கு ஒழிவு நேரமில்லாத இச்சமயத்தில் இந்தியாவின் ஸ்திரீகளின் சார்பாக, வெகு பக்ஷமாக எங்களை நல்வரவேற்கச் சம்மதம் கொடுத்ததற்காக நாங்கள் தங்களுக்கு வந்தனம் செலுத்துகிறோம். முதன் முதலாக யுத்தகாலத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் கூலிகள் அந்நிய நாட்டுக்கு ஒப்பந்தத்தின் பேரில் போகக்கூடாது என்று உத்தரவிட்டது கண்டு மிகவும் வந்தனமுள்ளவராயிருக்கிறோம் என்று சொல்ல நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். குடியேற்ற நாடுகளில் எங்களுடைய சகோதரிகளாகிய ஸ்திரீகள் எவ்வளவு அவமானப்படுத்தப்படுகிறார்களென்றும், எவ்வளவு துக்கத்திற்கும் உட்படுத்தப்படுகிறார்களென்றும் தங்களுக்குச் சொல்ல வந்தோமே தவிர வேறு ஸ்திரீ ஜாதியாகிய நாங்கள் சொல்ல வந்தது ராஜீய காரணங்களை யுத்தேசித்தல்ல. நாங்கள் எங்கள் வீட்டு வேலைகளை விட்டுவிட்டு வெளியே வருபவர்களல்லர். மேற்கூறிய மானக்கேடான சம்பவம் ஸ்திரீகளுக்கு நேரிட்டு ஸ்திரீ சமூகம் சிரமப்படுகிற

தென்ற விஷயத்தை முன்னிட்டு எங்களுடைய ஜாதி வழக்கங்களையும் தூரவைத்துவிட்டு, இக்குறைகளை நிவர்த்திக்கவேண்டி தங்களிடம் சொல்லிக்கொள்ள வந்தோம்.

இந்திய ஸ்திரீகள் கிராமாந்தரங்களிலிருந்து ஒப்பந்தக் கூலிகளாக குடியேற்ற நாடுகளுக்குக் கொண்டுபோகப்பட்டு உதவியில்லாமல் படும் கஷ்டங்களை நிவர்த்திக்கக் கேட்டுக்கொள்ள இங்கு வந்து சேர்ந்தோம். இந்த ஒப்பந்தக் கூலி முறையினால் அந்த ஸ்திரீகள் படும் சிரமங்களை இங்கு எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இவை ஏற்கெனவே ஐரோப்பியர்களாலும் இந்தியர்களாலும் எடுத்து அடிக்கடி ஒரேமாதிரியாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தியா கவர்ன்மெண்டே அம்முறையை மிகவும் கடிந்துபேசியிருக்கின்றனர். எங்களுடைய சகோதர சகோதரிகள் படும் கஷ்டங்களால் மனம் மிகுதியும் சிரமமடைந்த உணர்ச்சி உண்டாயிருக்கிறதென்பதைத் தெரிவிக்கவேண்டியே நாங்கள் தங்களிடம் இன்று வந்தோம். எங்களுடைய தேசஸ்திரீகள் எப்போதும் கோழைத்தனமுள்ளவர்கள். அவர்களுக்கு ஆதரிப்பாரும் அக்குடியேற்ற நாடுகளில் இல்லாமலிருந்தால் அவர்கள் படும்சிரமமும் துன்பமும் இவ்வளவாகுமென்பதைத் தங்களுக்கு தெரிவிக்கவே இங்கு வந்தோம். அவர்கள் தங்களுடைய குடும்பங்கள் குழந்தைகள் முதலானவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டுத் தூரதேசங்களில் படும் பாடும் கஷ்டமும் துன்பமும் கொஞ்சமல்ல. அவர்கள் அடையும் அவமானம் முதலியவைகளால் எங்கள் மனது மிகவும் உருகுகின்றது.

மேற்கூறிய குடியேற்ற நாடுகளில் சென்ற சிலவருஷங்களாக இவ்வொப்பந்தக் கூலிகள் படும் கஷ்டம் துன்பங்களினால், இனி தொழில் முறையில் பயிற்சி பெறாத இந்தியர்கள் எவரும் அங்கு போக முடியாதபடி ஆகிவிட்டது. ஆகவே தன் மதிப்புள்ள எந்த இந்தியரும் 1 ஸ்திரீகளாகட்டும், புருஷர்களாகட்டும் இந்திய தேசத்தின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டி இனி அககுடியேற்ற நாட்டுக்கு ஒப்பந்தக்கூலிகளாக போகக்கூடாது. ஆகவே ஒப்பந்தகூலிகள் அந்நிய நாட்டுக்கனுப்பப்படும் வழக்கம் ரத்து செய்யப்படும் என்று ஏற்கெனவே இந்தியா கவர்ன்மெண்டார் சொன்னவாக்கை, யுத்தக்காலத்தில் கூலிகள்வேற்று நாட்டுக்குச் செல்லக்கூடாது என்று கட்டளை அனுஷ்டானத்திலிருக்கையிலேயே நிறைவேற்றிவிடும் படியாக நாங்கள் கேட்டுக்கொள்ளுகிறோம்.

முடிவாகஎங்களுடைய உணர்ச்சியின் தன்மையை நன்றாக அறிந்து இந்திய ஸ்திரீகளின் மானம் கௌரவம், முதலியவற்றிற்கு ஹானியையுண்டுபண்ணுகிற ஒப்பந்தக்கூலி முறையைச்சாசுவதமாய் ரத்து செய்து எங்களுடைய மனப்பூர்வமான நன்றியறிதலைப் பெற்று பிரிட்டிஷ் ராஜ்

யத்தின் பெருமையான ஆட்சியை நிலைநாட்ட தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்;

தங்கள் பணிவுள்ள ஊழியர்கள் (ஒப்பம்.)

ஸரோஜினி நாயுடு, மெஹ்ரி டி டாடா, உமா தாரு, ருபில் ஷாப்பீகம், சுந்தரிபாய், டி. ஸரூர்லக்ஷ்மி (மிஸஸ் ஸ்ரீநிவாச சாஸ்திரி) சூடாமணி அம்மாள் (மிஸஸ் ரங்கசாமி ஐயங்கார்) ஷியாஜிஜி காங்கிர் பெடிட், லேடி ஜேஷி போஸ், மிஸஸ் இகே ராய்.

லேடி ஹர்நாம் சிங்கு முதலியவர்கள் உடம்பு அசௌகரியத்தினாலும் இன்னும் அவஸரமான காரணங்களை யுத்தேசித்தும் டிபுடேஷனில் வரவில்லை.

மேற்கூறிய பிரதிநிதிகளுக்கு ராஜப் பிரதிநிதி பின்வருமாறு பதில் கூறினார்.

ராஜப்பிரதிநிதியின் பதில்.

உங்களை நல்வரவேற்க எனக்கு விசேஷ சந்தோஷமுண்டாகிறது .நான் சந்தோஷமடைவதற்குக் காரணங்கள் இரண்டு உள்ளன. இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாட்சியில் ராஜப் பிரதிநிதியை ஸ்திரீகள் வந்து பேட்டி கண்டுகொண்டது இதுதான் முதல்தடவையாகுமென்று நம்புகிறேன். இந்தியா கவர்ன்மெண்டார் இந்திய ஸ்திரீகளின் ஆலோசனையைக் கேட்டுச் செய்யவேண்டிய காரியங்கள் மிகுதியும் உள்ளன. ஸ்திரீகளின் கல்வியைப்பற்றி அவர்களின் ஒத்தாசையும் ஆலோசனையும் கவர்ன்மெண்டுக்கு மிகுதியும் வேண்டியிருக்கிறதென்று சொல்லுவேன். போன ஜனவரி மாசத்தில் வித்தையிலாகா டைரக்டர்கள் ஒன்று கூடியபோது கல்விக் குறைவினால் ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் அதிக தாரதம்மியம் ஏற்பாட்டிருக்கிறதென்றும், கல்வியில் ஒரு தேசத்தில் ஸ்திரீகள் பின்னிலையையும், புருஷர்கள் முன்னிலையையும் யடைந்திருத்தல் தக்கதல்லவென்றும் நான் பேசினேன். ஆசாரமுறை இடையூறாய் நின்று இந்திய ஸ்திரீகளின் கல்வி முன்னேற்றத்திற்கு பங்கமுண்டாகின்றதென்பதை நான் அறிவேன். இந்த விஷயத்தில் உங்களைப்போலொத்த ஸ்திரீகள் கூடி ஆலோசனைகள் செய்து கவர்ன்மெண்டுக்கு இது விஷயத்தில் ஒத்தாசை செய்யவேண்டியது முக்கியமான கடமையல்லவா? ஸ்திரீ சமூகத்தில் சுகாதாரம் அவசியம் கவனிக்கப்படவேண்டும். காச நோயால் பீடிக்கப்படாமலிருத்தற்குரிய சௌகரியமான மார்க்கங்கள் இன்னின்னவையென்று அவர்கள் கவனிக்கவேண்டும். இவைகளைப்பற்றியெல்லாம் தேசத்தில் கல்வி நலமும் புத்தியின் உயர்ச்சியையும் பெற்ற இந்திய ஸ்திரீகள் கூட்டம் கூட்டமாய் ஆங்காங்கு சேர்ந்து தம்முடைய தேச ஸ்திரீகள் கல்வி

சுகாதாரம் முதலியவற்றைப் பற்றிக் கவனிக்கவேண்டிய முயற்சிகளைச் செய்ய வேண்டுவது அவசியமாயிருக்கிறது.

இப்போதுநீங்கள் மேற்கொண்ட ஆரம்ப முயற்சியினால் பிற்காலத்தில் விசேஷ நன்மையுண்டாகுமென்று நினைக்கிறேன். மிகவும் முக்கியமான விஷயத்தைப்பற்றி என்னிடம் விண்ணப்பித்துக் கொண்டதைக் கேட்க எனக்கு சந்தோஷமுண்டாகிறது. உங்களைநல்வரவேற்பதற்கு இதுஇரண்டாவது காரணமாகும். நீங்கள் வந்த விஷயத்தில் எனக்கு மிகுந்த அநுதாபமுண்டென்றுதான் அதிகம் சொல்லவேண்டியதில்லை. ஒப்பந்தக்கூலி முறையால் உண்டாகும் சிரமங்களைப்பற்றி நீங்கள் சொல்வதை நான் அறிவேன். அதைப்பற்றியும் எனக்கு அநுதாபம் உண்டு. நீங்கள் கொடுத்த பத்திரத்திற்கு நீண்ட பதிலைச் சொல்ல தேவையில்லை.

யுத்த காலத்தில் ஒப்பந்தக் கூலிகளை அந்நியநாட்டுக்கு அனுப்பக் கூடாது என்று உத்தரவிட்டதற்குக் காரணத்தை நீங்களறிவீர்கள். இந்த வியாபாரம் ஒரு முறை நின்றபிறகு மறுபடியும் நடக்கும் என்று தோன்றவில்லை. இனி பிற்காலத்தில் அதிகவரும்படியை எதிர்பார்த்து இந்தியாவை விட்டுப்போக உத்தேசிக்கலாம். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் நேரும்பட்சத்தில்; இப்போது ஒப்பந்தக்கூலி முறைபோலில்லாமல், வேறு நிலைமைகள் நாம்மிகுதியும் கவலைகொள்வோம் என்பதை நான் உறுதியாய்ச்சொல்லுவேன். அப்போது ஸ்திரீஜாதிகளின் மானம் காப்பாற்றப்படும்படி முன்னால் கவனிப்பது எங்களுடைய விசேஷ சிரத்தையாயிருக்கும்.

இந்தியாவின் புத்திரிகளும் புத்திரர்களும் தங்களுடைய சொந்த தேசத்தில் மனச்சந்துஷ்டியுடையவர்களாயிருக்கவேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்குமாறு, இந்தியாவில் கைத்தொழில்கள் முதலியன விருத்தி செய்யப்பட்டு, தொழிலாளிகளுக்கு இந்நாட்டிலேயே வேலை அகப்படுவதற்கு வேண்டிய சௌகரியம் செய்து கொடுக்கப்படுமென்று எதிர் பார்க்கிறேன். உங்களுடைய விண்ணப்பத்தில் சொல்லியிருக்கிற விஷயத்தில் நான் கொண்ட அநுதாபம் இப்படிப்பட்டதென்பதை அப்போது உணரும்படியாயிருக்கும். உங்களுடைய குறைகளைப்பற்றிச் சொல்லிக்கொள்ள அசௌகரியத்தையும் பாராமல், நீங்கள் இவ்வளவு தூரம் டில்லிக்கு வந்து என்னைப் பார்த்ததற்காக நான் மிகுதியும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்."

ஐரோப்பிய ஸ்திரீகளின் கடிதம்.—இந்தியாவில் வசிக்கிற ஐரோப்பிய ஸ்திரீகள் ராஜப்பிரதிநிதிக்கு எழுதிக்கொடுத்த கடிதத்தையும் மிஸஸ் ஜிஹாங்கீர் பெடிட் ராஜப்பிரதிநிதிக்கு வாசித்துக்கொடுத்தார். அக்கடிதம் இராஜப் பிரதிநிதியின் பேட்டி காணப்போகும் ஸ்திரீ டிபுடேஷனுக்கென்று விலாசமிட்டிருந்தது. அதன் ஸாராம்சம் பின்வருமாறு:—

ஒப்பந்தக் கூலிகளை குடியேற்ற நாடுகளுக்கு அனுப்பும் முறையைக் கூடிய சீக்கிரத்தில் ரத்து செய்துவிடவேண்டுமென்ற கருத்துள்ள விண்ணப்பத்துடன் வரும் இந்திய ஸ்திரீப்பிரதிநிதிகள் ராஜப்பிரதிநிதியால் 24-ந் தேதி வரவேற்றப்படுவார்கள். இந்த உணர்ச்சியில் நாங்களும் மிகுதியும் அநுதாபம் கொண்டவர்களென்பதை தாங்கள் அறியவேண்டும். தங்களுடன்கூட நாங்களும் ராஜப்பிரதிநிதியின் சமீபம் வராமற் போன போதிலும் விசேஷமான துன்பம் அவமானம் முதலியவைகளை இந்தியஸ்திரீ சமூகங்களுக்கு விளைவிக்கிற இந்த ஒப்பந்தக்கூலி

முறையை இந்தியா கவர்ன்மெண்டார் சீக்கிரத்தில் ரத்து செய்யும் காரியத்தில் எங்கள் மனசும் கலந்திருக்கிறதென்பதை இதனால் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தங்கள் உண்மையுள்ள,

(ஒப்பம்) மேரி எம் ஹீட்டன்; டி. என். பிரவேட்; ரெஜோரி; எப் ராபர்ட்ஸன்; ஹேஸ்ல்ட்டால்பர் லி இ ஆர்தர்; எ கிரீவ்ஸ்; லூயிமாநர்ட்டின் மெர்ன்னி; மேயர்ஹெஸ்டா கிரேலூனுஹாக் எமி, ஆர்லிலியன்ரீட், பிரான்ஸிஸ் எம் ஹில்.

ஸிந்து நாட்டு ஸதிரீகளின் கடிதம்.—ஒப்பந்தக் கூலி முறையை சீக்கிரம் ரத்து செய்யவேண்டுமென்ற தீர்மானமும் இந்த டிபுடேஷனில் நல்லுணர்ச்சியும் அநுதாபமும் கொண்டஸிந்து நாட்டு ஸ்திரீகளின் கடிதமொன்று இராஜப்பிரதிநிதிக்குக் கொடுக்கப்பட்டது. இது விஷயமாய் தேச முழுவதும் கொண்ட அநுதாபத்தை மிகுதியும் குறிக்கும் தந்திச் சமாசாரங்களும் செக்ரிடரிக்கு வந்திருந்தன.

லேடி சேம்ஸ போர்ட்டும் டிபுடேஷனும்:—டிபுடேஷனை இராஜப்பிரதிநிதி நல்வரவேற்ற பிறகு அங்கு வந்த ஸ்திரீகளெல்லாரையும் லேடி சேம்ஸ் போர்டு வரவேற்று, அவர்களுக்குத் தேயிலைப்பானம் கொடுத்தார். சற்று நேரம் தாங்கள் வந்த காரியத்தைப் பற்றிச் பேசியிருந்தபிறகு அவர்கள் ராஜப்பிரதிநிதியின் அரண்மனையினின்றுநீங்கிச் சென்றார்கள்.

சைதாப்பேட்டை உபாத்திமார்களின் காலேஜ்

உபாத்திமார்களின் சங்கம்

(ஜூனியர் பிராஞ்சு.)

இச்சங்கத்தின் வருஷாந்த மீட்டிங் சென்றமாதம் காலேஜ் கட்டடத்தில்கூடிற்று. கனம் திவான் பகதூர் ராஜகோபலாச்சாரியார் அக்கிராசனம் வகித்தார்.

“உபாத்திமார்களும், அவர்களுடைய சுற்று நிலைமையும்” என்ற விஷயத்தைப்பற்றி மிஸ்டர் சி. எஸ். சுந்தரம் ஐயர் ஒரு உபந்நியாசஞ் செய்தார். ராஜீய, ஜனசார, பொருளாதார விஷயங்களில் இந்தியர்கள் புதிய வழியை அனுஷ்டித்து வருகிறார்கள். இவ்வித மாறுதலான நிலைமையை உபாத்திமார்களும் அனுஷ்டித்து மாணாக்கர்களையும் அவ்வழிகளில் தயார் செய்ய வேண்டும் என்று உபந்நியாசகர் பேசிமுடித்தார். சேர்மன் எழுந்து நின்று உபாத்திமார்களின் தொழில் கஷ்டமானதும் பொறுப்பேற்றமுள்ளதுமாகும் என்றும் தேசம் இப்பொழுதிருக்கும் நிலைமையை கவனித்துப் பார்த்தால் அத்தொழில் நிரம்ப கஷ்டமானதென்றும் சொல்லி விட்டு உபாத்திமைத் தொழிலை வகிக்கக் போகும் சிறுவர்களை நோக்கி நீங்கள் உங்களுடைய வேலைகளை உங்களாலான சாமர்த்தியத்துடன் செய்து வரவேண்டுமென்றும் அப்படிச் செய்து வந்தால் பிறகு உங்களுடைய நித்யகடமை இன்னது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுவீர்கள் என்றும், கடையில் உங்களுக்கு ஏற்பட்ட கடமையைச் சரிவர முடித்துவிட்டோம் என்ற மனத்திருப்தி உண்டாகுமென்றும் 30-40 பிள்ளைகள் அடங்கிய ஒரு வகுப்பை ஒழுங்காக நடத்தி வருவது நிரம்ப சிரமமான காரியமென்றும், ஒரு வருஷ காலம் வரையிலும்

ஒரு ஸெட்டு மாணாக்கர்களை நல்ல வழியில் பயிற்சி செய்வித்து கல்வியைக் கற்றுக்கொடுத்த பிறகு, மற்றொரு வருஷத்திற்கு மற்றொரு புதிய ஸெட்டு மாணாக்கர்களை மறுபடியும் அதே விதமாய் தயார் செய்வது நிரம்ப கஷ்டமான காரியமென்றும் இப்படியே செய்து வந்தால் உபாத்திமார்களுக்கு அனுபோகம் ஏற்படுமென்றும் பிறகு அவர்களுடைய வேலை அவ்வளவு பிரயாசமாக இராதென்று பல புத்திமதிகளைச் சொல்லிவிட்டு அடியிற்கண்ட வேறு சில புத்திமதிகளையும் சொன்னார். நீங்கள் எப்பொழுதும் ஜனங்களுடன் கூடி உறவாடி நடமாடி சினேக பாவங்காட்டி கலந்திருக்கவேண்டும். இப்படிச் செய்வது அவர்களுக்கு விருப்பம் இருந்தாலும் சரியே இல்லாவிட்டாலும் சரியே. நீங்கள் அப்படிச் செய்வதிலிருந்து பின் வாங்கவேண்டாம். ஜனங்களுடன் ஒத்திருக்கவேண்டும். கக்ஷிகளில் சேரக் கூடாது. கல்வி விஷயமாய் நீங்கள் பேசினால் எவருக்கும் விரோதமே இராது. உபாத்திமைத் தொழிலுக்கு அபார சாமர்த்தியமும் அறிவும் விசால புத்தியும் வேண்டும். இன்னும் 25-30 வருஷ காலம் வரையிலும் இப்பொழுதிருக்கும் இந்த நிலைமை நீடித்திருக்கும். உபாத்திமார்கள் அவர்களுக்கேற்பட்ட காரியங்களிலேயே தலையிடவேண்டுமேயன்றி மற்றவர்களுடைய காரியங்களில் தலையிடக்கூடாது என்று சேர்மன் பேசி முடித்தார்.

மிஸ்டர் எச். எஸ். டன்கன் சேர்மனுக்கு வந்தனமளிக்க சபை கலைந்தது.

லாகூர் ஸ்திரீகள் ஒப்பந்தக் கூலி டிபுடேஷனில் ஏன் சேர வில்லை?

ஒப்பந்தக் கூலி முறையை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஸ்திரீகளின் பிரதிநிதிகளின் கூட்டம் ராஜப்பிரதிநிதியினிடம் சென்ற 24-ந் தேதி போய்ச் சேர்ந்து ராஜப்பிரதிநிதியிடம் பேசி வந்த விஷயம் ஏற்கனவே சொல்லப் பட்டிருக்கிறது. இந்த டிபுடேஷனில் லாகூர் ஸ்திரீப் பிரதிநிதிகள் போய்ச் சேரவில்லை. ஒப்பந்தக் கூலிகள் வேற்று நாட்டிற்கும் போகக்கூடாதென்று ராஜப்பிரதிநிதி உத்தரவிட்டது, தற்போது நடந்து கொண்டிருக்கும் யுத்த விஷயத்தை யொட்டியே தவிர, வேறு அந்நாட்டில் இந்திய ஸ்திரீகளுக்கு நேரிடும் மானத்தைக் காப்பதற்காகப் பிறப்பித்த உத்தரவன்று, என்று தப்பர்த்தம் பண்ணினதே காரணமாகும். லாகூர் ஸ்திரீகள் டிபுடேஷனில் கலக்காததற்கு இதே காரணமென்று லேடி மேடாவுக்கு மிஸஸ் ஸரளா தேவி சௌதரி தந்திச் சமாச்சாரம் அனுப்பியிருந்தார். ராஜப்பிரதிநிதி ஸ்திரீகளின பிரதிநிதிக் கூட்டத்திற்கு இந்திய ஸ்திரீகளின் மானத்தைக் காப்பதற்காக ஒப்பந்தக் கூலி முறையை ரத்து செய்திருப்பதாகச் சொன்னது எல்லாருக்கும் திருப்தியைத் தருகிறது.

இக்கிலாந்தும் ஸ்திரீ சுதந்தர வாதிகளும்.

மிஸ்டர் ஆஸ்குயித் ஆமோதிக்கிறார்.

இங்கிலாந்திலே ஸ்திரீகளுக்கு வோட் கொடுக்கும் சுதந்தரம் கொடுக்க வேண்டுமென்று, அதன் சம்பந்தமாய் விசாரணை செய்த கமிட்டியார் சிபார்சு செய்திருக்கிறார்களாகையால் அதை யனுசரித்து

ஸ்திரீகளுக்கு வோட் கொடுக்கும் சுதந்தரத்தைக் கொடுத்துவிட ஏற்
பாடு செய்யவேண்டுமென காமன்ஸ் சபையில் மிஸ்டர் ஆஸ்குவித்
ஒரு தீர்மானத்தைப் பிரேரணை செய்தார். யுத்த சமயத்தில் ஸ்திரீ
கள் பற்பல வழிகளில் தேச சேவகம்செய்து வந்திருக்கிறார்களென்
றும் ஆகவே அவர்களுக்கு வோட்கொடுக்கும் சுதந்தரத்தை கொடுக்
காமலிருப்பது யுக்தமல்ல வென்றும் மிஸ்டர் ஆஸ்குவித் சொன்னார்.

இவ்விஷயமாய் கவர்ன்மெண்ட் தீர்மானங்கள் செய்வதற்கு
முன்பு தற்போது போர் முனையிலிருந்துவரும் போர் வீரர்களின்
அபிப்பிராயத்தைக் கேட்டறிந்து கொள்வது அவசிய மென்றும் யுத்
தத்திற்கு பிறகு செய்யப்படும் சீர் திருத்தங்களில் போர்வீரர்களின்
அபிப்பிராயத்தையும் கலந்து கொள்வது அவசிய மென்றும் ஸ்திரீ
களின் ஜனத்தொகைக்கு ஏற்ற அளவு பிரதிநிதி பாத்யம் கொடுத்து
விட கவர்ன்மெண்ட் தயாராயில்லை யென்றும் மிஸ்டர் லாயிட் ஜார்ஜ்
சொன்னார். இந்த யுத்த சமயத்தில் ஸ்திரீகள் செய்து வரும் வேலை
களைப்பற்றி மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் வெகுவாய்ப் புகழ்ந்து கூறிவிட்டு
சுதந்தரங்கள் கொடுப்பதென்ற பிரச்னையை பார்லிமெண்ட் வசத்தில்
தாம் தீர்மானத்திற்கு விட்டுவிடப் போவதாயும் சொன்னார். பார்லி
மெண்ட் எவ்விதத் தீர்மானம் செய்யு மென்பதில் தமக்கு சந்தேக
மில்லை யென்றும் சொன்னார். கமிட்டி செய்திருக்கும் ரிபோர்ட்டைப்
பற்றி வியந்து கூறி அதில் கண்ட சிபார்சின்படியே ஸ்திரீகளுக்கு
சுதந்தரங் கொடுக்க சபை மெம்பர்கள் உடன்படும்படி தாம் வேண்
டிக் கொள்வதாயும் மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் சொன்னார்.

ஸ்திரீ சுதந்தர மசோதா கொண்டுவரப்படும்.

ஸ்திரீகளுக்கு வோட் கொடுக்கும் சுதந்தரத்தை யளிப்பதற்கான
சட்டஞ் செய்வதற்காக மசோதா ஒன்று காமன்ஸ் சபையில் கொண்டு
வரப்படுமென்றும், ஸ்திரீகளுக்கு சுதந்தரம் கொடுக்க வேண்டு
மென்று பலர் வெகு பலமாய் வற்புறுத்திக் கூறுவதினால்தான் கவர்ன்
மெண்ட் இதன் சம்பந்தமாய் மசோதா கொண்டுவரத் தீர்மானித்த
தென்றும் மிஸ்டர் போனர்லா தெரிவித்தார்.

சண்டை முடிவடைகிற வரையில் ஒரு புது எலெக்ஷன் ஜாப்
தாவை மட்டும் தயார் செய்து விட்டு அத்துடன் போர் வீரர்களுக்கு
வோட்டு கொடுக்கும் சுதந்திரத்தைக் கொடுத்துவந்தால் போது மென
யூனியனிஸ்ட்கக்ஷி மெம்பர்கள் மிஸ்டர் ஆஸ்குவித்தின் தீர்மானத்
தில் ஒரு திருத்தப் பிரேரணை கொண்டுவந்தார்கள். அந்த திருத்தப்
பிரேரணைக்கு விரோதமாய் 341 பெயர்களும் சாதகமாய் 68 பெயர்
வோட்கொடுக்கவே திருத்தப் பிரேரணை தள்ளப்பட்டுப் போயிற்று.
மிஸ்டர் ஆஸ்குவித் பிரேரணை செய்த தீர்மானம் சந்தோஷ ஆரவாரங்
களுடன் ஒரு மனதாய் நிறைவேறி விட்டது.

வேல்ஸ் இளவரசர்.

உபகாரச் சம்பள கமிட்டி என்று ஒரு கமிட்டி யுத்தத்தில் வேலை
செய்வோர்களின் பராமரிப்பின் பொருட்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

அந்த கமிட்டிக்கு வேல்ஸ் இளவரசர் அக்கிராசனாதிபதியாயிருந்தார்.
தற்போது அவர் தமது பதவியை ராஜிநாமா கொடுத்துவிட்டதாக
மிஸ்டர் போனர்லா காமன்ஸ் சபையில் தெரிவித்துப் பேசியபோது
ஸோல்ஜர்களின் க்ஷேமலாபங்களைக் கவனிப்பதில் இளவரசர் காட்
டிய சிரத்தையைப்பற்றிப் புகழ்ந்து கூறி, இளவரசரின் வயது உயர
உயர அவர் பொதுக் காரியங்களில் காட்டும் சிரத்தையும் அதிகரிக்கு
மென்று நம்பலாமென்றும் அவர் சொன்னார். மிஸ்டர் ஆஸ்குவித்
தும் இளவரசரைப் புகழ்ந்து பேசினார்.

குழந்தைகளின் படிப்பும் ராஜாங்கமும்

திருவாங்கூர் ஜனப்பிரதிநிதி சபையிலே கல்வி விஷயத்தைப்
பற்றிவிவாதம் நடந்த பொழுது முகம்மதிய சமூகத்தில்ஆரம்பக் கல்வி
கட்டாயமாக்கப்பட வேண்டுமென்பதாக முகம்மதியப் பிரதிநிதிகள்
சொல்லியிருக்கிறார்கள். பம்பாயிலே வண்டி யோட்டுதல் முதலிய
பற்பல வேலையில் அமர்ந்துள்ள தொழிலாளிகள் பலரும் மகா நாடு
கூடி, ஆரம்பப்படிப்பை இலவசமாகவும் கட்டாயமாகவும் செய்துவிட
வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். இது இப்படி யிருக்க, குழந்
தைகளுக்குப் படிப்புக் கற்றுக் கொடுக்க வேண்டியது மிக்க முக்கிய
மெனத் தோன்றுகிறதென்றும், ஆகவே ஒவ்வொரு குழந்தைக்கும்
தக்க கல்வி கொடுப்பது எல்லாருடைய கடைமையாகுமென்றும், பம்
பாய் கவர்னரான லார்டு வில்லிங்டன் சொல்லியிருக்கிறார்.

வானசாஸ்திர சம்பந்தமாய் கிளப்பப்பட்டிருக்கும் பீதியைப்பற்றி
கவலைப் பட வேண்டாம.

1917-ம் வருஷம் எப்ரல்மாதம் 20-ந்தேதி யன்று ஒரு சிறு கிர
கம், பூமியுடன் மோதுகிறதென்றும் அதனால் பெரியவிபத்து உண்
டாகப் போகிறதென்றும், ஒரு பொய் வதந்தி சென்னை நகர் எங்கும்
பரவியிருக்கிறது. அதனால் ஜனங்கள் பீதியடைந்திருக்கிறார்கள், அந்த
சிறு கிரகம் அமெரிக்காக் கண்டத்தைச் சேர்ந்த மெக்ஸிகோவிலா
வது, அல்லது மெக்ஸிகோ வளை குடாவிலாவது. எப்ரல்மீ 20ந்
தேதி விழுகிறதென்றும் அது தரையின் பேரில் விழுந்தால் இந்த
பிரபஞ்சமே உருமாறிப் பொடியாக ஆனாலும் ஆகும் என்றும் அது
சமுத்திரத்தில் விழுந்தால் பூமியைச் சூழ்ந்த சமுத்திர மெங்கும்
அகோரமான அலைகளால் கொந்தளிப்பு உண்டாகுமென்றும் சொல்
லப்படுகிறது. பொய்.

இதைப்போன்ற எத்தனையோ பொய்வதந்திமுந்தி பரவியிருக்
கது. ஒரு கெடுதலும்சம்பவிக்க வில்லை. அந்தப்பொய் வதந்தியுடன்
அதையும் சேர்த்துவிட்டு பீதியடையாமல் தைரியமாய் இருக்கலாம்
அவ்வித நிகழ்ச்சி பவிக்காது என்று அநேகர் அபிப்பிராயப்படுகிறார்
கள்.

ஸர். பி. எஸ். சிவசுவாமி அய்யருக்கு ஒருவிருந்துக் கச்சேரி:—ஸர் பி
எஸ் சிவஸ்வாமி ஐயர் தமது பெரும் பதவியிலிருந்து விலகிக்கொண்டு
விட்டதினால், அவருடைய நண்பர்களும் சென்னை சட்டசபை மெம்
பர்களும் சேர்ந்து அவருக்கு தென்னிந்தியா தேகப்பயிற்சிச்

சங்கத்தின் கட்டிடத்திற் கருகில் ஒரு விருந்துக் கச்சேரியை நடத்தினார்கள். பல உத்தியோகஸ்தர்களும் பல கனதனவான்களும் வந்திருந்தார்கள். ஸர். பி. எஸ். சிவஸ்வாமி அய்யரை விருந்துகச்சேரிகமிட்டியார் வரவேற்று உபசரித்தார்கள். அச்சங்கத்தின் வெளியில் அமைக்கப்பட்டிருக்கும் ஒரு பந்தலில் அனைவரும் வந்து உட்கார்ந்தவுடனே ஸ்ரீமதி சரஸ்வதிபாயால் நந்தனார் சரித்திர காலக்ஷேபம் நடத்தப்பட்டது. பிறகுசிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. பல தமாஷாக்களும் விளையாட்டுகளும் நடந்தன. கடைசியாக வாணவேடிக்கைநடந்தது.

லாய்ட்ஜார்ஜ் குறிப்பிட்டிருக்கும் விஷயத்தைக் கவனிக்கவேண்டும்.

"யுத்தச் செலவுக்காக இபபொழுது இந்தியாவிலிருந்து கிடைத்திருக்கும் பேருதவிக்கு இந்தியா கவர்ன்மெண்டினிடமும் இந்தியா ஜனங்களிடமும் மிகவும் மனப்பூர்வமான நன்றி காட்டுவதாக பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் பெயரால் நான் சொல்லுகிறேன். யுத்த ஆரம்பகாலத்திலே இந்தியாவெங்கும் ராஜபக்தி நிதர்சனமாகக் காட்டப்பட்டது. யுத்தத்திற்கு உதவிபுரிவதில் உள்ள உற்சாகமும் வெளிப்பட்டது. இதுவரையில் இந்தியச்சேனையானது நிகரற்ற உதவி செய்திருக்கிறது. இதோடு யுத்தவிஷயமாய்ப் பணவுதவி செய்வதென்றுள்ள தீர்மானத்தைப்பார்த்தால், இந்த யுத்தத்திலே நமக்குள்ள லக்ஷியங்களுக்கு ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த இதர நாடுகள் மனமார சார்பாயிருப்பதுபோலவே இந்தியாவும் சார்பாயிருக்கிறதென்பதற்கு நிதர்சனமான ருஜூ காணப்படும். முடுக்கான இந்தயுத்தசமயத்திலே இந்தியா வலுவில் முன்வந்த சமயத்தில் வெளிப்படையான உதவிசெய்திருப்பதனால் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு மனமார்ந்த திருப்தி ஏற்படுவதோடு ஏகாதிபத்தியத்திலுள்ள எவ்வகுப்பினருக்கும் ஜனங்களுக்கும் பரஸ்பரம் நல்ல எண்ணமும் ஏற்படவேண்டும்."

ராஜப்ரதிநிதி அவர்களின் பிரசங்கம்.

யுத்தக் கடன்.—யுத்தத்துக்காக நாம் வாங்கும் கடனை எவ்வளவு தொகை இந்தியாவில் கிடைக்கக்கூடுமோ அவ்வளவு கிடைக்கும்படி செய்வது நாமெல்லோருக்கும் ஏற்பட்ட கடமை. இந்தியாவுக்கும் அன்னிய தேசங்களுக்கும் நடக்கும் பணப்போக்குவரத்து விஷயமாய் நமக் கேற்பட்டிருக்கிற கஷ்டத்தையே யல்லாமல், இங்கிலாந்துக்கும் அன்னிய தேசங்களுக்கும் நடக்கும் பணப் போக்குவரத்து விஷயமாய் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு ஏற்பட்டிருக்கிற கஷ்டத்தையும் இந்தியாவில் யுத்தக் கடனைக் கிடைக்கும் தொகை நிவர்த்தி செய்யும் நம்மால் எவ்வளவு செய்யக்கூடு மென்பதை நாம் ஆழ்ந்து யோசனை செய்து முடிவு செய்யுமுன் நம்மால் கூடியதைச் செய்துவிட்டோமென்று நாம் ஒருவரும் நினைக்கக்கூடாது. நம்முடைய கையிலிருப்பதை யெல்லாம் கொடுத்தே விடும்படி நம்மை ஒருவரும் கேட்கவில்லை. நம்மால் கூடிய அளவு கடனைக் கொடுக்கும்படியே நம்மைக் கேட்கிறார்கள். எல்லோரும் அவரவர்களால் கூடிய வளவு கடன் கொடுக்கவேண்டு மென்பது நம்முடைய விருப்பம். கடன் கொடுப்பது ஒவ்வொருவனுக்கும் கடமை யென்பதையும் அதனால் இன்னின்ன அனுகூலங்கள் விளையுமென்பதையும் எல்லோரும்

தெரிந்து கொள்ளும்படி நாம் செய்தால் தான் தேசத்திலுள்ள கோடானுகோடிஜனங்களை கடன்கொடுக்கும்படி நாம் செய்யக்கூடும். இந்த உத்தேசம் நிறைவேற, ஜனங்களுக்கு இவ்விஷயமாய் அறிவூட்டும் வேலை செய்யப்படவேண்டும், அது உத்தியோக தோரணையில் செய்யப்படாமல், உத்தியோகஸ்தர்களால் செய்யப்படுமானால், பலன் அதிகமாகக் கிடைக்கும்.

கல்வி அபிவிருத்தி.

கல்வி அபிவிருத்தி விஷயமாக யுத்தத்திற்கு முன் நாம் எவ்வளவு வேகத்துடன் முன்சென்றோமோ அவ்வளவுவேகத்துடன் முன்செல்லக் கூடாமல் பண நெருக்கடி செய்து விட்டது. ஆயினும் பழைய அபிவிருத்தி குறையவில்லை. பண நெருக்கடியிருந்தும் உபாத்தியாயர்களின் சம்பளங்களை உயர்த்தி கொடுக்கவும் அவர்களைப் பயிற்சி செய்விக்கவும் செலவிட 30லட்சம் ரூபாய் திட்டத்தில் கண்டிருக்கிறோம். இந்தப் பணத்தின் பலனை தேசத்துக்கு விசேஷ நன்மை விளையுமென்று நான் எதிர்ப்பார்க்கிறேன். பாட்னாவிலும் டாக்காவிலும் யூனிவர்ஸிட்டி ஏற்படுத்தும்படி லார்டு ஹார்டிஞ்சு காலத்தில் இந்தியா மந்திரி கொடுத்த அனுமதியின்படி யூனிவர்ஸிட்டிகளை ஏற்படுத்தும் விஷயத்தில் இன்னும் சிறிது நாம் முன்னேற்ற மடைந்திருந்தால் எனக்கு திருப்தியா யிருக்கும். பாட்னா யூனிவர்ஸிட்டி விஷயமாக சென்ற செப்டம்பர் மாதத்தில் இந்த சபையில் ஆஜர் செய்த மசோதாவைப்பற்றி கமிட்டியில் வாதம் ஆய்விட்டது. பாட்னாவில் யூனிவர்ஸிட்டி ஏற்பட வேண்டிய விஷயமாய் ஜனங்களுக்கு ஆவல் அதிகமாயிருக்கிறது. ஆகையால் இந்தத் தடவை நடந்த மீட்டிங்குகளில் அம்மசோதாவைச் சட்டமாக்கி விடலாமென்று நான் நம்பியிருந்தேன். ஆயினும் கட்சிப் பிரதிகட்சி வாசமில்லாமலே அதைச் சட்டமாக்க வேண்டுமென்று நாம் தீர்மானித்திருந்தோம், மசோதாவின் நிபந்தனைகளை சென்ற திங்கட்கிழமை தான் கமிட்டி மெம்பர்கள் ஒருமனதாய் அங்கீகரித்தார்கள். இனி அடுத்த செப்டம்பர் மீட்டிங்கில் தான் அம்மசோதாசபை முன் வரப்படும் என்று ராஜப்பிரதிநிதி அவர்கள் சொன்னார்கள்.

இந்திய யுத்தக் கடன்.

சென்றமாசத்தில் ஸெனட் அவுஸில் எச். இ. கவர்னரின் அக்கிராசனத்தின் கீழ் கூடிய பொதுஜன மீட்டிங் நடந்தது. இந்தியாவில் யுத்தகன்கொடைக்காகவசூலிக்கப்படும்கடன்தொகைவிஷயமாயும், அதற்கு இந்தியர்கள் அனைவரும் அவரவர்களால் இயன்ற வரையில் கடன் கொடுக்கமுன்வரவேண்டிய அவசியம். இந்தியாவின் நானாபாகங்களிலும் நடை பெற்றுவரும் பல மீட்டிங்குகளின் நடவடிக்கைகளை நாள்தோறும் எதிர்பாராத அளவு கடன்தொகை அதிகரித்து வருவதையும் நமது பத்திரிகைகளில் நேயர்கள் கவனித்திருப்பார்கள். நேற்றைய சட்டசபை மீட்டிங்கில் நமது ராஜப்பிரதிநிதியும், இதுவிஷயமாய் சொல்லியவாறு எல்லாரும் இயன்றவரையில் யுத்தக்கடனுக்கு பணம் கொடுக்க வேண்டியது இந்தியர்களின் கடமை என்று நாம் மீண்டும் வற்புறுத்துவோம். சுதேசமித்திரனிலிருந்து எடுக்கப்பட்டது.

394

287 800 009

CALENDAR, 1917

பஞ்சாங்கம்

1917ஆ ஏப்பிரல்மீ—நளஆ பங்குனி, பிங்களஆ சித்திரைமீ

இங்.	தமிழ்.	வாரம்.	திதி, நக்ஷத்திரம், பண்டிகை.
1	19	ஞா	நவ 5-19, பூ 56-45, சி 12-40.
2	20	திங்	தச 10-13, ஆயி 60-0, ரா 2-3
3	21	செ	ஏகா 15-27, ஆயி 1-42, ரா 6-23,
4	22	புத	துவா 20-36, மக 9-57 ரா 1-38.
5	23	வியா	திரி 25-8, பூர 15-54, ரா 5-1, அசு 1-4, பங்குனி
6	24	வெ	சது 28-52, உத்தி 21-10, ரா 13-3. [உத்தரம்.
7	25	சனி	○ பௌ ஶ1-27, அ 25-14, ரா 15-55.
8	26	ஞா	கி-பி 32-52, சி 29-5, ரா 12-52.
9	27	திங்	த்வி 32-59, சுவா 30-47, ரா 14-9.
10	28	செ	திரி 31-49, வி 30-47, ரா 10-0.
11	29	புத	சது 28-55, அ 30-8, ரா 13-1.
12	30	வியா	பஞ் 25-58, கே 28-30, ரா 16-55.
13	1	வெ	ஷஷ் 21-44, மூ 26-2, தி 22-12, ரா 18-21, அசு-1, சூ-1-29.
14	2	சனி	சப் 16-43, பூரா 23-49, ரா 17-23.
15	3	ஞா	அஷ் 11-11, உத்தி 19-16, தி 28-25, அசு-1, சு.
16	4	திங்	நவ 5-15, த 53-55, திரு 15-3, தி 24-1.
17	5	செ	ஏகா 53-28, அவி 10-50, தி 27-36.
18	6	புத	துவா 47-20, ச 6-45, தி 21-45.
19	7	வியா	திரி 42-3, பூரட் 3-5, உத்திட் 56-33, தி 25-4.
20	8	வெ	ச 37-27, ரே 57-3, தி 28-20.
21	9	சனி	● அமா 33-31, அசு 55-19, ரா 14-30.
22	10	ஞா	சு-பி 30-47, பர 54-45, தி 19-5.
23	11	திங்	த்வி 28-50, கா 55-4, தி 24-56.
24	12	செ	திரி 28-21, ரோ 56-49, ரா 5-0.
25	13	புத	ச 29-4, மிரு 60-0, தி 11-34.
26	14	வியா	பஞ் 31-2, மிரு 0-1, தி 22-25.
27	16	வெ	ஷஷ் 34-12, திரு 4-3, ரா 5-21, அசு 1, செ கா 2-புத சக்கிரவர்த்தி திருமகனார் திருநக்ஷத்திரம், முதலியாண்டான் சாத்துமுறை.
28	16	சனி	சப் 38-19, புன 9-15 தி 31-8.
29	17	ஞா	அஷ் 43-10 பூசம் 15-25, ரா 19-29.
30	18	திங்	நவ 48-18, ஆயி 21-52, ரா 32-45.

Printed at the Commercial Press, Madras &
Published by C. S. Ramaswamy Iyer, Triplicane, Madras. S.E.

The Tamil Zenana & School Magazine.

மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"—ஔவையார்.

Vol. XVIII | Madras: May, 1917 | No. 6
புத்தகம் 18 | சென்னை : மேமீ, 1917ஆ | இலக்கம் 6

ஸ்திரீகள் கவனிக்கவேண்டிய விஷயம்.

நமது தேசத்தில் ஸ்திரீகள் பூர்வகாலந்தொட்டு கல்வி பயின்று வந்தார்கள். இப்பொழுது அநேகர் இங்கிலீஷில் கல்வி கற்று உயர்தரப் பரிக்ஷையிலும் தேறிவருகிறது நமக்கு அதிக சந்தோஷத்தை யளிக்கிறது. ஆனால் ஸ்திரீகள் தங்கள் தங்கள் தாய் பாஷையை அலக்ஷியம் செய்து வருகிறார்கள். இது மிகவும் தப்பு. தென்னிந்தியாவிலுள்ள ஸ்திரீகளில் பெரும்பான்மையோருக்குத் தமிழ்ப்பாஷையே தாய் பாஷையாகும். சிலருக்கு மராட்டியும், கன்னடமும், தெலுங்கும், மலையாளமும் தாய் பாஷையாயிருக்கும். ஸ்திரீகள் தங்கள் தாய் பாஷைகளில் முதலில் அறிவுண்டாகும்படி அப்பாஷையைச் செவ்வனே பயின்றுவரவேண்டும். அவ்விதம் படித்துவரும் பெண்மணிகளுக்கு நல்ல புஸ்தகங்களை வாங்கிக்கொடுக்கவேண்டும். இப்பொழுது அநேக நாவல்கள் உலாவுகின்றன. அவைகளில் பெரும்பான்மை ஸ்திரீகளின் அறிவைக் கெடுக்கக்கூடியவைகளே. ஆகையால் புஸ்தகங்களைப் பெற்றோர்கள் செவ்வனே படித்து புத்தி புகட்டக்கூடியவைகளை அவர்கள் கையில் கொடுக்க வேண்டுமே தவிர "நமதுபெண் தமிழ் நன்றாகப்படிக்கிறாள்" என்று மகிழ்ந்து புத்தியைக் கெடுக்கக்கூடிய புஸ்தகங்களை வாங்கிக் கொடுக்கக் கூடாது.

மதசம்பந்தமான விஷயங்களும், சுகாதாரம், குடும்ப சம்ரக்ஷணை முதலியவைகளும், பெரியோர்களின் திவ்ய சரித்திரங்களும், பெண்களுக்குப் போதிக்கப்படவேண்டும். வீட்டு வேலை செய்யவும், கோலம் போடவும், சாமான்களைச் சரிவரவைத்துக் கொள்ளவும் போதிக்க வேண்டும். அவர்களுக்கு நல்ல சகவாச மிருக்கவேண்டும். உலக சமாச்சாரங்களும், அப்போதைக்கப்போது தெரிந்திருத்தல் மிகவும் நல்லது.

பாடசாலையில் படிக்கும் பெண் மணிகளும் தங்கள் தாய் பாஷையை மறக்கக்கூடாது. அதை வீட்டில் ஒழிந்த காலத்தில் படித்து விருத்தி செய்துகொள்ள வேண்டும். இவ்விதம் செய்துவரின், அவர்களுக்கு அறிவுண்டாவதுடன் தாய் பாஷை க்ஷீணதசைக்குவராது. க்ரமேண உன்னத ஸ்திதிக்குவரும். ஐரோப்பா முதலிய கண்டங்களிலுள்ள ஜனங்கள் தங்கள் தாய் பாஷையை முதலில் செவ்வனே கற்றுவருகிறார்கள். அதில் நன்றாக தேர்ச்சியடைந்தபின், இதர பாஷைகளைப்படிக்க ஆரம்பிக்கிறார்கள். பம்பாய், வங்காளம் முதலிய விடங்களில் இப்பொழுது தங்கள் தாய் பாஷையை விசேஷமாக விருத்தி செய்ய முயன்று வருகிறார்கள். ஆங்கிலத்தில் உயர்ந்த பரிக்ஷைகளில் தேறிய புமான்கள் கூட தங்கள் தாய் பாஷையிலேயே பேசிவருவது யாவருக்கும் தெரியும்.

நமது தேசத்திலோ ஜட்கா, ரிக்ஷா வண்டிக்காரருடன் நம்மவர்களிற்சிலர் இங்க்லீஷில் பேசுகிறார்கள். அப்படி செய்பவர்கள் தங்கள் தாய் பாஷையில் பேசினால் அகௌரதை என்று எண்ணுகிறார்கள் போலும். இவர்களைப்பார்த்து பாடசாலைகளில் படிக்கும் பெண்கள் கூட இங்க்லீஷில் பேசப்பிரியப்படுகிறார்கள். ஆங்கில உடையைத்தரிக்கவும், நமது வழக்கப்பழக்கங்களைக் கைவிடவும் ஆரம்பிக்கிறார்கள். இவ்விதம் செய்வது ஜாதி ஆசாரத்திற் குற்றதல்ல. அவரவர்கள் தங்கள் தங்கள் மதானுசாரங்களைக் கையாண்டுவரவேண்டும். அவ்விதம் கையாண்டு வருவதில் எதாகிலும் வெகு நல்லதாக இதர ஜாதியார்களிடத்திலிருந்தால் அவைகளை நாம் எடுத்துக்கொள்ளலாம். ஸ்திரீகள் சத்கால க்ஷேபங்களைச் செய்துவர ஒரு சிறு சபை தங்களுக்குள்ளேயே வைத்துக்கொள்ளலாம். அச்சபையில் சேருபவர்கள் நல்ல குணமும் யோக்யதையுமுள்ளவர்களாக யிருக்கவேண்டும். மேற்கூறிய சிற் சில விஷயங்களை நமது மாதர்கள் முக்கியமாய் கவனித்து நடப்பார்களென்று நம்புகிறோம்.

பம்பாய், வங்காளம் முதலிய விடங்களில் சுதேச பாஷையில் பிரசுரிக்கப்பட்டுவரும் பத்திரிகைகளை ஆயிரக் கணக்காக வாங்கிப் படிக்கிறார்கள். நமது தேசத்தில் தனமுள்ள மாதர்களில் அநேகர் "ஒன்றரை ரூபாய்க்கு ஒரு ரவிக்கைக்குட்டை வாங்கலாம், 3 ரூபாய்க்கு இரண்டு ரவிக்கைக் குட்டைகள் வாங்கலாம். பேபருக்கும் புஸ்தகங்களுக்கும் பணத்தை வீணாக ஏன் செலவழிக்கவேண்டு"மென்று எண்ணுகிறார்கள். அவ்விதம் எண்ணாமல்நமது தேசத்தில் உலாவிவரும் தமிழ்ப்பத்திரிகைகளில் எது தங்களுக்குத் தேவையோ அதை ஒவ்வொருவரும் வாங்கிப் படித்து வரவேண்டும்.

சுதேச மித்திரன் என்ற தினசரிபத்திரிகைக்கு 10,000 கையொப்பம் நமது தேசத்தில் சேராமலிருப்பது தென் இந்தியாவிலுள்ள பிரமுகர்களுக்குப் பெருத்த அவமானமே. பம்பாய்கல்கத்தா முதலிய விடங்களிலுள்ள பத்திரிகைகளுக்கு 40,000 50,000 கையொப்பங்களிருக்கின்றன! நமது ராஜதானியில் இன்னும் அவ்வித ஊக்கமும் அபிமானமும் ஏற்படவில்லை. தமிழ்ப்பத்திரிகைகளை ஒவ்வொருவரும் வாங்கிப்படிக்க முன் வரவேண்டும். தேசாபிமானமும் சுதேச பத்திரிகைகளை ஆதரிப்பதில் அவாவும் நம்மவரிடத்தில் வேரூன்றி யிருக்கவேண்டும். ஒவ்வொருவர் வீட்டிலும் தமிழ்ப்புஸ்தகங்களடங்கிய லைபரெரி வைத்துக்கொள்ளவேண்டும். பெரிய அந்தஸ்திலுள்ளவர்கள் கிராமங்களிலுள்ளவர்களுக்கு உதவி புரிந்து பத்திரிகைகளையும், புஸ்தகங்களையும் படித்துவர ஊக்கத்தையுண்டாக்கி திரவிய உதவி புரிந்துவர வேண்டும். ஸ்திரீகளும் தங்களது சகோதரிகளுடன் சேர்ந்து பற்பல புஸ்தகங்களையும், பத்திரிகைகளையும் வாங்கிப் படித்துவர முயலவேண்டும். வீண்வம்பு பேச்சுக்கு இடம் சிறிதும் தரக்கூடாது.

ராஜபக்தி

179-வது பக்கத் தொடர்ச்சி.

இரண்டு புதிய பேயர்வழிகள்.

குடிசையில் வந்து சேர்ந்தவுடன் வழி நடந்த அலுப்பால், போஜனம் செய்தவுடனேயே, தூங்கிவிட்டனர். மேலும் மறுநாட் காலையிலேயே பாரிஜாதன் தன்னிருப்பிடத்திற்கு புறப்படவேண்டி யிருந்தது. ஆகையால் விடியற்காலம் எவருக்கும் தொந்தரவு செய்யாமல் எழுந்து குதிரையைத்தயார்செய்து கொண்டான். அவனுக்கு முன்னமேயே தூங்கி எழுந்த ஹம்ஸப்பிரியன் அவனுக்குக் கொஞ்சம் தின்பண்டங்களைக் கொடுத்தான். அதில் பாதி தின்றுவிட்டுப் பாதியை வழியில் தின்பதற்காகக் கட்டிக்கொண்டு சந்தடிசெய்யாமல் புறப்பட்டான். ஹம்ஸப்பிரியனும் பாரிஜாதனை சுமார் இரண்டுநாழிகை வழிதூரம் கூடச் சென்று அனுப்பிவிட்டுத் தோட்டத்தை நோக்கித் திரும்பிவந்து கொண்டிருந்தான். வழியில் காட்டு மாடுகளையும், பன்றிகளையும், மான்களையும், படுப்பதற்குச் சில பொய்க்குழிகள் செய்துவைத்திருந்தான். அவற்றில் ஏதாவது மிருகம் இருக்குமோவென்று பார்த்துவிட்டுத் தோட்டத்திற்குப்போகலாமென்று எண்ணி அவ்வழியே திரும்பினான்.

இதற்குள் சூரியோதயமாயிற்று. புற்களின்மேலிருந்து பனித்துளிகளெல்லாம் கலைந்து இருந்தன. ஏதோ மிருகம் வந்திருக்கவேண்டு

மென்ற எண்ணத்துடன், அந்த அடிச்சுவடைப்பார்த்துக்கொண்டு ஒரு படுகுழியண்டை சென்றான். அங்கே ஜாக்கிரதையாய்க் குழியண்டை உட்கார்ந்துகொண்டு உள்ளே உற்றுப்பார்த்தான். ஒன்றும் தென்படவில்லை. ஏதோ பெருமூச்சுமட்டும் காதில் படுவதுபோலிருந்தது. ஒரு சமயத்தில் ஹீனஸ்வரமாய்க் கத்துவதும் காதில்பட்டது. யாராவது மனிதர்கள் விழுந்துவிட்டனரோவென்று கூப்பிட்டுப்பார்த்தான். மறுபடியும் அதேமாதிரி ஹீனஸ்வரமாகவேதான் குரல்கேட்டது. மனிதனாய்த்தான் இருக்கலாம் என்று நிச்சயம் செய்துகொண்டு, குழிபறித்தபோது மண் எடுத்துக்கொட்ட உபயோகப்படுத்தின ஏணி பக்கத்தில் இருந்ததனால், அதை எடுத்து உள்ளே ஜாக்கிரதையாய் நாட்டி சிரமத்தோடு கீழிறங்கினான். அடியில் 'குண்டியும் கோமணமுமாய்' ஒருபையன் படுத்துக்கிடந்தான். அப்பையன் சிறுவனாகவும் அதிகமாய் இளைத்தும் இருந்தபடியால் இலேசாய் அவனைத் தூக்கிக்கொண்டு வெளியே ஏறிவந்தான்.

ஏறிவந்தவுடன் அவனை எடுத்துக்கொண்டு பக்கத்தில் ஓடும் அருவிக்குப்போய் கொஞ்சம் ஜலம் கொடுத்தான். பையன் வெகு தாகத்தோடு குடித்தபிறகு சற்றே பேச எத்தனித்தான். ஆனால் அவன் மிகவும் மெல்லிய குரலோடும், அன்னிய பாஷையிலும் பேசினபடியால் ஹம்ஸப் பிரியனுக்கு ஒன்றும் அர்த்தமாகவில்லை. அச்சிறுவனுக்கு ஆகாரம் முதலியவற்றைக் கொடுக்கவேண்டுமென்று எண்ணி ஜாடைகளால் அவனை அங்கே படுத்து இருக்கும்படிச் சொல்லிவிட்டுக் குடிசைக்குப் போய் கொஞ்சம் பாலும், ரொட்டியும், எடுத்துக்கொண்டு, வண்டியைப் பூட்டி எதுகுலனையும் அழைத்துக்கொண்டு பறந்தோடிவந்தான்.

ரொட்டி தின்று கொஞ்சம் பால் குடித்தபின் பையன் நன்றாய்க் கண்விழித்துப்பார்த்தான்.

"இவன் யாராய் இருக்கும் அண்ணா?" என்று தம்பிகேட்க எதுகுலன் "ஏதோ பிச்சைக்காரப்பிள்ளை என்று தோன்றுகின்றது. வனத்தைத் தாண்டிச்செல்லும்போது உள்ளே விழுந்திருக்கலாம்" என்றான்.

"எனக்கு அப்படித்தோன்றவில்லை. இவன் ஒரு செஞ்சுப்பிள்ளை என்று நினைக்கிறேன். இத்தகைய பிள்ளைகளையும், பிள்ளைகளின் தகப்பன்மாரையும் நான் மாளிகையிலிருக்கும்போது கண்டிருக்கிறேன். இவர்களை நமது அன்னை செஞ்சுக்கள் என்று சொன்னதுகூட எனக்கு ஞாபகம் வருகின்றது." என்றான் ஹம்ஸன்.

"இப்பையன் நம்மோடு இருப்பானாகில் மாடுமேய்க்கவும், குதிரை வளர்க்கவும், வீட்டுவேலை செய்யவும் மிக உபயோகமாய் இருக்கும்" என்றான் எதுகுலன்.

இருவரும் பையனை வண்டியில் ஏற்றிக்கொண்டு குடிசைக்குவந்து ஒருபடுக்கையின்மீது படுக்கவிட்டனர். பிள்ளை சற்றுதூங்கி விழித்ததும் அவனைப்பற்றி இன்னும் விவரம் அறியவேண்டி ஹம்ஸப் பிரியன் "பையா உன் பெயர் என்ன?" என்றான்.

"பாப்பையன்" என்றான்.

"உனக்கு எங்கள் பாஷை பேச வருமா?" என்றான்.

"கொஞ்சம்" என்று பதிலுரைத்தான்.

"நீ செஞ்சுவா?" என 'ஆம்' என்றான். இவ்விதமான பல கேள்விகள் கேட்கவே பின் வரும் விஷயங்கள் தெரிந்தன. பையனோ ஒரு வார்த்தைக்குமேல் பதில் சொல்லவில்லை.

இப்பையன் இன்னும் சில செஞ்சுக்களோடுகூட ஆந்திர நாட்டை நோக்கிப்போய்க் கொண்டிருந்தநாகவும் முந்நாள் இரவு படுகுழிக்குப் பக்கத்தில் கூடாரம் அடித்து இறங்கி இருந்தார்கள் என்றும், இரவில் முயல், பெருச்சாளி, இவற்றைப் பிடிப்பதற்குச்சென்ற பிள்ளை தற்செயலாய் குழியில் விழுந்து விட்டதாகவும் தெரியவந்தது. இவனுடைய தாய் அக்கூட்டத்தோடு இருக்கிறாளாம். தகப்பன் கிடையாது. அவர் போகும் வழியும் ஊரும் அவனுக்குத் தெரியவில்லை. "இங்கேயே இருந்து வேலை செய்து காலத்தைக் கழிக்கின்றாயா?" என்று கேட்டதற்கு, இருக்க இஷ்டப்பட்டான். ஆனால் வேலை சுலபமாயும் அதிகமாய் கஷ்டப்படுத்தாமலும் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். சமையல் செய்யவும், பக்ஷிகள், முயல்கள், இவற்றைப் பிடிக்கவும், தெரியும் என்றான்.

"நாங்கள் உன்னை வளர்த்தால் யோக்கியனாகவும் பொய் சொல்லாமலும் இருப்பாயா?" என்று கேட்டான் எதுகுலன்.

பையன் சிறிது யோசனையுடன் ஆகட்டுமென்று தலையை அசைத்தான். "சரி, பாப்பையா! சில நாள் உன்னை எங்களிடம் வைத்துப் பார்ப்போம், அப்பா! நீ நல்லவனாக இருந்தால் உனக்கு வேண்டிய தெல்லாம் கொடுத்து உன்னை சந்தோஷப்படுத்துவோம்; நீயும் சுகமாய் இருக்கலாம்; நீ கெட்டவழியில் நடந்தால் வெளியே துறத்திவிடுவோம். தெரியுமா பையா?" என்றான்.

"இருக்கேன் சுமாராய்" என்றான் பையன். இதோடு அன்றைய வேலை முடிந்தது.

மறுநாட் காலையில் எதுகுலன் எழுந்ததும் "தம்பீ! பாரீஜாதனுக்கு நான் வாக்களித்தபடி இராஜப் பிரதிநிதி வீடு வரையில் போய் அப்பெண் மணியைக்கண்டுவிட்டுவருகிறேன். என் வில்லையும் அம்புகளையும் எடுத்

துக்கொண்டு, நமது நாய் உடும்பையும் கூட்டிக்கொண்டு போகிறேன். பாரிஜாதன் வேண்டாம் என்று சொன்னான் என்றாலும், குற்ற மில்லை. அன்று நாம் வனத்தில் சிறுத்தையைக் கண்ட பிறகு, ஆயுத மில்லாமல் வெளியே புறப்படுவது சரியல்ல என்று தோன்றுகின்றது.'' என்றான். இவற்றோடு தான் வாங்கி வந்த கத்தியையும் டம்பமாய் இடது புறத்தில் தொங்கவிட்டுக்கொண்டான் என்று சொல்ல வேண்டுவ தில்லையே !!

" சரி அண்ணா; அதற்குள் இந்தச் செஞ்சுவை வைத்துக்கொண்டு என்ன செய்யமுடியுமோ, பார்க்கின்றேன் நான். இப்பயல்மட்டும் என்னு டன் சரியாய் வேலை செய்தால் எவ்வளவு அனுகூலம் தெரியுமா அண்ணா! ஒரு ரம்பம் வாங்கிக்கொண்டு அவனும் நானும் இந்தப் பலகையை அறுத்து, வேண்டிய சமான்கள் செய்துகொள்ளலாம். தச்சு வேலை களை எல்லாம் சரியாய்ச் செய்ய கற்றுக்கொடுப்பேன். எத்தனையோ செய்யவேண்டுமென்று உத்தேசம் பண்ணுகிறேன் நான்—."

என்பதற்குள் எதுகுலன் புன் சிரிப்புடன் " அப்பா ஹம்ஸப் பிரியா! பொழுது போகிறபடியால் நாளை மறுபடியும் எல்லாவற்றையும் விரிவாய்ப்பேசலாம். உன் முன் யோசனையும் புத்தி கூர்மையும் எனக்கு நினைக்க நினைக்க ஆச்சரியமாய் இருக்கின்றது! எவ்வளவோ வேலைக ளுக்கு நீ அஸ்திவாரம் போடுகிறபடியால் எல்லாவற்றையும் கேட்க இப் பொழுது பொழுது இல்லை " என்றான்.

விசாலாக்ஷி கொஞ்சம் பழையதுபோட அதைச் சாப்பிட்டுவிட்டு இருவரும் புறப்பட்டனர். சுமார் ஒரு நாழிகை வழி தூரம் வரையில் சென்றதும் ஹம்ஸப் பிரியன் " போய்வருவாய் அண்ணா." என்று சொல்லிவிட்டுத் தோப்பின் புறம் சென்றான்.

எதுகுலனும் தன் வழியைத் தொடர்ந்தான்.

பாரிஜாதன் கொடுத்த புது நாய் ஆகிய 'உடும்பு' டன் எதுகுலன் வெகு வேகமாய் வழி நடக்கவே, பலயோசனைகள் அவன் மனதில் எழுந்தன. யோசனைமேல் யோசனையாய் ஆகாயத்தில் வீடு கட்டிக் கொண்டிருந்தான். தனக்கு மறுபடியும் நாடு கிடைத்ததாகவும், மாளி கையைத் திரும்ப கட்டுவதாகவும், அப்பொழுது தன் வலப்புறத்தில் கலாவதி நின்று கொண்டு, தான் வேலைக் காரர்களுக்குச் சொல்லும் வேலைகளை எல்லாம் கவனித்துக் கொண்டிருப்பதாகவும்—இவ்விதமே பகற்கனவும், நடைக்கனவும், கண்டு கொண்டு வழி நடந்து கொண டிருக்கையில் திடீரென்று உடும்புகுலைக்கவே, தன் ஆகாய மாளிகை எல்லாம் ஒருங்கே அழியத் திரும்பிப் பார்த்தான். குலைத்துக்கொண்டு

ஓடி வந்த நாய் எதுகுலன் இரண்டு கால்களுக்கும் நடுவே நின்றுகொண்டு. இன்னும் பலமாய்க் குலைக்கத் தொடங்கிற்று.

இதற்குள் சுமார் அரைவாசி வழி கடந்து வந்து இருப்பான் எது குலன், திரும்பிப்பார்க்கவும் வனபாலன் போன்ற உடையுடன், எம தூதன் போல் ஒரு கருத்த மனிதன் எதிர் நின்றான். அவன் சிவந்த கண்களும் அகன்று பெருத்த மூக்கும், பூதாகாரமான உருவமும்—எது குலன் அல்லாத வேறு ஒருவனுக்குப் பயத்தை யுண்டாக்கியிருக்கும் என் பதற்குச் சந்தேகமில்லை. இதற்கு முன் இவ்வளவு அவலக்ஷணமான முகத்தையும், இவ்வளவு குரூரமான கண்களையும் பார்த்ததே இல்லையே, என்று எதுகுலன் தன்னுள் எண்ணினான். அந்த எமதூதன் எதுகுல னைப் பார்த்து "அடே சிறு பிள்ளாய்! என்ன செய்கின்றாய் இவ்விடத் தில்?" என்று கேட்டுக்கொண்டே தன் வில்லை எடுத்து நாணேற்றப் போனான்.

எதுகுலன் கண் மூடுவதற்குள் நாணையேற்றி அம்பை வைத்துக் கொண்டு "நான் வனத்தில் நடந்து போகிறேன் என்பதை அறிகிலையோ." என்றான்.

"ஆமாம்! நீ போகிறாய் தெரிகின்றது: ஆனால் ஒரு நாயையும் கூட் டிக்கொண்டு வில்லும் கையுமாய்ப் போகிறாயே. ஆகையால் என்னுடன் கூடவா. வனத்தில் திருட்டுத் தனமாய் மான் வேட்டை யாடுகிறவர் களைத் தண்டிப்பது எனது வேலை" என்றான்.

"நான் திருடனும் அன்று; என்னிடத்தில் திருட்டுச் சொத்தும் கிடையாது: உன்னுடன் வரவோ என்றால் முடியாது. என்னை விட் டுத் தூர விலகு. இல்லையேல் இதோ இவ்வம்பால் உன் உயிரை மாய்ப் பேன்." என்றான் தைரியமாக.

"அடே வேலையற்ற இளம் பிள்ளாய்! உன்னிடம் திருட்டு வஸ்து ஒன்றும் இல்லாததினாலேயே உனக்குத் திருட எண்ணமில்லை என்பது எப்படி ருசுவாகிறது? நீ வேட்டையாடப்போகிறாய் அது நிச்சயமாய்த் தெரிகின்றது. வா அப்பனே வா! வா!! இந்தப் புள்ளியண்டை அது எல்லாம் சாயாது. என்னவென்று நினைத்துக்கொண்டாய் என்னை; திருடனை எல்லாம் பிடிப்பது எனக்கு இட்ட வேலை. உன்னையோ பிடித்துத்தான் போவேன்" என்றான்.

"உன்னாலே முடியுமானால் என்னைப் பிடிக்கப் பக்கத்தில் நெருங்கு. எனது அம்புகளும் கூராய்த்தான் இருக்கின்றன. என் இடுப்பிலும் ஒரு கத்தி தொங்குகின்றது. குறியும் உன்னை விட நன்றாய்த்தான் வைப் பேன். வா பக்கத்தில்!—மறுபடியும் நான் சொல்வதைக் கேள். நான்

மிருகங்களைத் திருடுகிறவன் அல்ல; அரசப் பிரதிநிதி வீட்டிற்குப் போகிறவன். ஏன் இவ்வளவு தூரம் சொல்லுகிறேன் என்றால் நீ ஏதாவது மூடத்தனமாய் காரியங்கள் செய்யாமல் இருக்கவேண்டுமென்று:! நான் போகிறேன். நீ சும்மா அப்புறம் செல் இல்லையேல் உன் வேலை போய்விடும். இன்னும் அடாதன செய்ய எத்தனித்தால் உன் உயிருக்குப் பயந்தான்; பத்திரமாய்ப் பிழை" என்றான் எதுகுலன்.

எதுகுலன் மெதுவாயும், அமைதியாயும், நிர்ணயத்துடனும் பதட்டமின்றி வார்த்தைகள் பேசவே, அந்த வனபாலனுக்கு கைகால் ஓடவில்லை. எதுகுலனைப் பிடிப்பதென்றால், தன் உயிருக்குச் சனி பிடித்ததென்று, நிச்சயமாய் விளங்கிற்று. தனக்குக் கொடுத்த அதிகாரமோ திருடர்களைப் பிடிப்பதற்கே அன்றி, ஜனங்களைக் கொல்வதற்கன்று. எதுகுலன் முகத்தில் தோன்றிய அதிகார தோரணையையும், கம்பீரத்தையும் பார்த்து அவன் மற்ற சாதாரண ஜனங்களுக்கு முற்றும் மாறாய் இருந்தபடியால், வனபாலன் திகைத்துப் போய்விட்டான். அத்துடன் எதுகுலன் பிரதிநிதி வீட்டுக்கே போவதாகவும் சொன்னான். இவற்றை எல்லாம் யோசித்து, இனி இப்பிள்ளையை மிரட்டுவது பயனில்லை என்று கண்டு, தன் குறும்பைக் கொஞ்சம் தணித்துக்கொண்டு "நீயோ எஜமானன் வீட்டுக்குப் போவதாகச் சொல்லுகிறாய், நான் உன்னை குற்றவாளி என்று பிடித்துக்கொண்டாலும் அங்கேயே தானே உன்னை இட்டுக்கொண்டு போகவேண்டும்: ஆகையால் நீ என் முன்னே போ, நான் பின் வருகிறேன்: அவ்வளவு தான்." என்றான் அந்த வனபாலன்.

"சந்தோஷம் ஐயா! ரொம்ப சந்தோஷமே !! உன் முன்னே நான் நடக்கவேண்டுமோ? அழகாய் இருக்கிறது!! அது என்னவோ நான் செய்ய வேண்டுவதில்லை. எனக்குப் பொழுது போகின்றது. இஷ்டமிருப்பின் உன் நாணைக் கழற்றி உன் பக்கத்தில் நடந்துவா. நானும் அப்படியே நாணைக் கழற்றி உன் பக்கத்தில் நடக்கிறேன். இது தான் உனக்குச் சொல்லக்கூடிய நிபந்தனை. வெட்டி மிரட்டு மிரட்டாதே. நீ சொல்வது ஒன்றும் எனக்கு சம்மதம் ஆகாது. இல்லையேல் உன் இஷ்டப்படி நீ செய்; என்னால் கூடியதை நான் பார்த்துக் கொள்கிறேன்." என்றான் அதிக கோபத்துடன் எதுகுலன். வனபாலன் கண்களும் கோபத்தால் சிவக்க ஆரம்பித்தன. ஆனால் என்ன செய்யக்கூடும்? எதுகுலன் சொல்வதைத் தட்டமுடியாமல் அதற்கு உடனே உடன்பட்டான். அந்தவனபாலன் நாணைத்தளர்த்திவிடவே, தானும் தளர்த்தினான். பிறகு இருவரும் ஒருவர் பக்கத்தில் ஒருவராய் நடந்துபோயினர். சிறிதுநேரம், பொறுத்து அந்த வனபாலன "ஏன் ஐயா! நீர் பிரதிநிதி வீட்டிற்குப் போவதாகச்

சொன்னீரே அவர் இப்பொழுது ஊரில் இல்லையே அங்கேபோய் என்ன செய்வாய்?" என்று கேட்டான்.

"அவர் இல்லாவிட்டாலும் அவர் பெண் கலாவதி இருக்கின்றாள் அல்லவா?" என்றான் எதுகுலன்.

எதுகுலனுக்கு எஜமானன் வீட்டுப் பெயர் வழிகள் கூட நன்றாய்த் தெரிவதைப் பார்த்த வனபாலனுக்குச் சற்றே மனதில் பயம்தோன்றிற்று. இப்பிள்ளை சாதாரணமானவன் அல்ல. எஜமானனுக்கு சொந்தமா யிருக்கலாமென்று எண்ணிக் கொண்டான். அவ்வெண்ணத்துடன் சற்று மரியாதையாய், "ஆமாம் ஐயா! அந்த அம்மாள் இருக்கிறாள். நேற்றுக் காலையிற் கூட நான் அந்தப் பெண்மணியைப் பூந்தோட்டத்தில் கண்டேன்." என்றான். "மணிகாரர் அச்சல பாரிஜாதர் ஊரில் இருக்கிறாரா தெரியுமா?" என்றான் எதுகுலன். வனபாலனுக்கு இன்னும் ஆச்சரியம் நேரிட்டது. உண்மையாகவே இப்பிள்ளை ஏதோ பெரிய மனிதன் என்பது நிச்சயமாயிற்று.

'ஆமாம் ஊரில் இருக்கிறார். ஐயா, உமக்கு எங்கள் ஜனங்கள் எல்லாரையும் தெரியும் போலிருக்கின்றதே. நான் கேட்பது குற்றமென்று நீங்கள் எண்ணாவிடின், தாங்கள் யார் என்று—."

"நீ என்னை எவ்வாறு நடத்தவேண்டுமோ அவ்வாறு நடத்திருப்பின், நீ கேட்கும் கேள்வியும் சரிதான் என்று நானும் சரியாய் பதில் சொல்லி யிருப்பேன். ஆகையால் இப்பொழுது நான் இன்னான் என்று தெரிந்து உனக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை யாகையால் நான் சொல்வதில்லை. நீ கண்டுகொள் வேண்டுமானால்" என்றான்.

இவ்வாறு பதில் சொன்னதைக்கேட்ட அந்த வனபாலனுக்கு இன்னும் அதிக ஆச்சரியமாயிற்று. எதுகுலன் அதிகார லக்ஷணத்தோடு சொன்னவார்த்தைகளைக் கொண்டு அவன் ஏதோ பெரிய குலத்தவன் என்றும், தான் பண்ணினது பெரிய தப்பிதம் என்றும், நினைக்கத் தொடங்கினான். ஆகையால் வெகுமரியாதையாய் "ஐயா ! நான் என் வேலையைத்தானே செய்தேன். தாங்கள் என் மீது கோபிக்கலாமா ?" என்றான்.

இவ்வாறு வழிநடந்து மணிகாரன் வீட்டுப் பக்கத்தில் வந்து சேர்ந்த உடன், எதுகுலன் முன்னினும் பதின்மடங்கு கம்பீரத்தோடு, நான் வந்து சேரவேண்டிய இடம் நெருங்கிவிட்டது. இதோநான் பிரதிநிதிவீட்டில் நுழையப்போகிறேன்; நீயும் என்னுடன் உள்ளே நுழைகின்றாயா? இல்லையேல், அக்குடிசைக்கு ஓடி அச்சல பாரிஜாதனிடத்தில் வனத்தில் எதுகுல திலகனைக் கண்டதாகவும், இங்கு வந்திருப்பதாகவும்,

அவனைப் பார்க்க இஷ்டப்படுவதாகவும், சொல்லுகிறாயா? நீ அவனுக்குக் கீழ்ப்பட்டவன் என்றே எண்ணுகிறேன்; அல்லவா?" என்றான். "ஆம், ஐயா! அப்படியே போகிறேன். ஏதோ என் வேலையைச் செய்ய—"

"நீபோ, அப்பா; அதிகம் பேசவேண்டியதில்லை" "இதோ போகிறேன் சுவாமி."

"சுவாமியாவது பூதமாவது!! 'எட்டினால் குடுமி எட்டாவிட்டால் கால்' அல்லவா இந்த ராக்ஷஸர்களுக்கு" என்றான் மனதுக்குள்.

உள்ளத் தூய்மை

தூய்மையே உண்மையான ஆற்றல். தூய்மையே உண்மையான ஆரோக்கியம். இந்த ஆதாரத்தின்வழியே நம் வல்லபத்தை ஒன்று சேர்க்கவேண்டும். இதை நாம் மறக்கலாகாது. பின் நமக்கு அழிவில்லை: தூய்மை நம்மைப் பயமறச்செய்யும். தூய்மை நம்மை சந்தோஷியாக்கும். நாம் சத்துவ குணத்தைப் பெறவேண்டும். வல்லபத்தைப் பெறுவோமாக. பின் நம்முன் எதுவந்தாலும் பொருட்டல்ல. தூய்மையின் பலத்தாலே பலவீனப்படுத்துபவைகளை வெல்லவேண்டும். கடவுளிடத்தில் உண்மையான நம்பிக்கைகொண்டு தைரியமாய் மேலேபோவோம்: அவர் எப்பொழுதும் நம்மைக்காப்பார். தோஷமின்மையாய் நாம் செய்வது எதுவானாலும் அது பிரகாசிக்கும். ஆகையால் நாம் பயமடைவதற்கு அங்கு ஒன்றுமில்லை. இதுதான் இரகசியம், கடவுளின் அருள்வழியே இதனையறிகிறோம். அவர்சக்தி பெரிது. அவருடைய தோற்றம் நம்பரிசுத்த ஆன்மாவிடம் காணப்படும். அவர் எப்பொழுதும் ஒழுங்கான பாட்டைவழியையே நமக்குக் காட்டுகிறார். ஆதலால் நாம் பலத்தோடு வேலைசெய்யவேண்டும். பலக்குறைவாய்ச் செய்தல்கூடாது. மேலேபோ! கம்பீரமாய்ப்போ! பாதை நம்மெதிரே கிடக்கிறது. குறித்த எல்லையைக் கிட்டவேண்டும். தூங்கக்கூடாது. இளைப்பாறமுடியாது. நித்திரைதெளிஎழுந்திரு.

நம் மனதின் பரிசுத்ததனம் சில சமையங்களில் மங்கலடைவதற்காவது, இருளாவதற்காவது நம் ஊக்கம் கெடுதல்கூடாது. அது நீடித்திருக்காது. பெரும் புயலடித்தபிறகே அமைதி தோன்றுகிறது. ஒழிவின்றிக் காரியம் செய்தபிறகே சமாதானம் பிறக்கிறது. ஒன்று மற்றொன்றைப் பின்பற்றிவருவதே சுபாவவிதி. வருத்தமறியாமல் சந்தோஷம் இன்னதென்பதை அனுபவத்தில் தெரியமுடியாது. ஆதலால் நம்வாழ்நாளில் சம்பவிப்பதெல்லாம் சில ஆழ்ந்த கருத்தோடு நமக்கு நல்

லறிவைமாத்திரம் கொடுத்தற்குரியதாய்ச் சம்பவிக்கிறதென்பதை நாம் எப்பொழுதும் ஞாபகப்படுத்தவேண்டும். நல்ல பலத்திற்காகத் தேகப் பயிற்சி செய்தபிறகு அதற்கெதிராய் இளைப்பும் பலவீனமும் வரக்கூடியது சுபாவமாயிருக்கிறது. இப்படியான சமயங்களே உண்மை பக்தாளுக்கு பரீக்ஷைகளாகின்றன. காரிய பரிசுத்தத்தையும் தன் உறுதியையும் பற்றிக்கொண்டு இவ்விரண்டு நிலைமைகளிலும் அழுத்தமாய் சமநிலைபற்றி நிற்கும் அவரே பூரண அறிவுள்ள கீர்த்தியாளர். ஏனையோர் சிசுக்களை ஒப்பவராவர்.. ஒவ்வொன்றும் ஒழுங்காய்ப்போய் கொண்டிருக்கும்போது யாதாமொருவரும் சந்தோஷமாயிருக்கமுடியும். ஆனால் ஒவ்வொன்றும் தனக்கெதிரிடையாகவும் விரோதமாகவும் நடந்துகொண்டிருக்கும்போது தொந்தரவின்றி யிருக்கக்கூடியவர் எவரோ அவரே உண்மையான பக்தராவர். மனத்தூய்மையின்மேலும் நம்பிக்கையின்பேரிலும் அழுத்தமாய் நில். சத்துவகுணம் நம்மைப் பொருந்துதற்கு நிச்சயமாயிருக்கிறது. பாதை பின் தெளிவாய்த்தோன்றும்.

ஓர் அந்தரங்க பக்தர் ஒரு பொழுதும் களைப்பாறுவதில்லை. ஏனெனில் அவர் அடிக்கடி சொற்ப நிட்காமியத்தையாவது தோஷமின்மையின் சொற்ப தோற்றத்தையாவது அடையும்படி முயலுகிறார். அதுவே ஒவ்வொரு குறிப்பிற்கும் அஸ்திவாரமாகிறது. உண்மையில் நிட்காமியமாயிருப்பதே மிக உயர்வான விஷயம். நிட்காமியாயும் தோஷமில்லாமலும் நம் பூரண உள்ளத்தோடும் அறிவோடும் பிரார்த்திக்கவேண்டும். ஏனெனில் நாம் ஸ்வாதீனம் அடைதற்கு இது ஒன்றே வழி; மற்றெல்லா வழிகளும் நம்மைச் சிறையிருப்பாய் நடத்தும்.

நிட்காமியமும் மனத்தூய்மையும் பிரிக்கமுடியாமல் ஒன்று மற்றொன்றைத் தொடர்ந்திருக்கும். நிட்காமியச் செய்கையால் மனம் தூய்மையடைகிறது. தூய்மையடைந்த உள்ளத்தில் அன்பன்றிவேறொன்றுந் தங்குகிறதில்லை. அவ்வன்போ கட்டுப்படா அன்பு. அவ்வன்பு பிரவாகத்தைப்போல் பெருகி எல்லாவற்றையும் வாரிச்செல்கிறது. உலக விஷயமாய்த் தோன்றுகிற யாதொன்றிற்கும் நம் முள்ளத்தில் இடமில்லை. துன்பம், வருத்தம், துர்ப்பாக்கியம், மாச்சரியம், அருவருப்பு, இன்னும் உலகத்தில் சம்பவிக்கக் கூடிய எதுவும் அங்கிருப்பழிந்து போகின்றன. இது ஒன்றே பரமோத்தமமான அன்பென நாமறிவது. இந்த ஒரு விஷயமே நானறிந்து பக்தி வழிபாடாய் எடுத்துக் கொண்டது.

ஏனையவெல்லாம் மறந்து இவ்வன்பால் கவரப்பட்டிருக்கவேண்டும். மற்றவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதை நாம் கவனிக்கக் கூடாது. அவரைப்பற்றி மாத்திரமே கவலைப்படவேண்டும். அவர்

ஒருவரைப்பற்றி மாத்திரமே இவ்வெளித்தோற்றப் பிரபஞ்சம் முற்றும் உன்னிலிருந்து மறைந்து போம்படி கைவிடு. இந்த வித அன்பில் சித்தப்பிரமை கொள்ளுதற்கு இதுவே காலம். இவ்வுலகத்தில் சிலர் பணத்திற்கும், சிலர் பெயருக்கும், சிலர் கீர்த்திக்குந் தானே பைபித்தியமாயிருக்கிறார்கள். ஆனால் நாம் நம் தியான மூர்த்திக்காக பைத்தியமாயிருக்கிறோம். ஆதலால் ஒரே நிலையில் இரு, உறுதியில் அழுத்தமாயிரு, மேலே மேலேபோ, நீ ஏன் பயப்படவேண்டும். நம் ஹிருதயத்தில் பயம் என்பது கொஞ்சமும் இடம் பெறுதல் கூடாது. பதிலட்சணமுணர்ந்து, பயமின்மையாயும், சந்தோஷமாயும், தூய்மையாயுமிரு. நீ தெய்வீகக் குழந்தையாயிருக்கிறாய் என்பதை உலகம் காணும்படி விட்டிரு. அளவு கடந்த சக்தி நம்முள்ளிருப்பதை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். நம்மை அந்நிலையில் அசைக்கக் கூடியது ஒன்றுமில்லை யென்பதை யறிந்து அப்படியே வலுவாயிருக்க வேண்டும். என்ன நேர்ந்திருக்கிறது என்பதை கவனிக்க வேண்டியதில்லை. எப்பொழுதும் நிச்சலமாயிருக்க வேண்டும். தூய்மை யடைந்த உள்ளத்தில் கிலேசமாவது துன்பமாவது இல்லை. தன் தாயின் கரங்களில் ஆனந்தமாய்க்கிடக்கும் ஓர் சிசுவைப்போல் உன் முகம் எப்பொழுதும் ஆனந்தமாயிருக்கட்டும்.

உள்ளம் நிச்சயமாய்த் தூய்மை யடைந்தபிறகே உண்மையான பக்தி வருகிறது. பக்தி நம்மை எப்படி நிட்காமியாக்குகிறதென்பதை யறிவீர்கள். ஓர் தாய் தன் குழந்தையிடம் செலுத்தும் பக்தியை உதாரணமாய் எடுத்துக்கொள்வோம். அவள் தன் குழந்தையின் நன்மையை உத்தேசித்து, எப்பொழுதும் தான் சுறுசுறுப்பாய் இருக்கவேண்டும் என்பதை நினைத்தவளாய்த் தன்னைப்பற்றிய ஒவ்வொன்றையும் மறக்கிறாள். குழந்தைக்காகத் தான் எந்தவித அபாயத்தையும் சந்திக்கத் தயாராயிருக்கிறாள். தன் சந்தோஷத்தை யிழந்தாலுங்கூட குழந்தையின் சௌகரியம் ஒன்றிற்கே அவள் எப்பொழுதும் ஆவல் கொள்ளுகிறாள். இந்த விதமாக நம் சொந்த உரிமையையும் சொந்தக் காரியத்தையும் தன் தியான மூர்த்தியின் பொருட்டு மறந்து வருவதே நிட்காமியத்திற்குள்ள ஒரே வழி. உண்மை பக்தி என்பதின் கருத்தும் இதுவே.

இப்பெருமைக்குரிய தியான ரூபத்தை நம்மெதிரில் பற்றிக்கொண்டு நாம் எப்பொழுதும் மேலே நகர்ந்துகொண்டிருக்வேண்டும். இத்தேகம் இருக்குமோ நழுகுமோ என்பதை நாம் கவனிக்கவேண்டியதில்லை. மற்றவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதையும் நாம் கவனிக்ககூடாது. நமது கடவுளும் எஜமானனுமான, நம்மனோரதமூர்த்தியை நாம் வணங்க வேண்டும். பூரண உள்ளத்தோடு அவரை பக்தி செய்துகொண்டிருப்

பதே சாந்தியையும் சந்தோஷத்தையும் தரும். திரண்ட செல்வம் நல்ல பெயர், உயர்ந்த கீர்த்தி முதலிய வேறெதுவும் நமக்குச் சாந்தியைத் தராது. ஆதலால் பயனைப்பற்றிக் கருதுவதில்லை என்ற தீர்மானத்தோடு நம்மனோரதமூர்த்திக்கு நாம் வேலை செய்யவேண்டும். உண்மையான மதம் இது தான்.

மதக்கோட்பாடுகளெல்லாம், தூய்மை, சத்துவகுணம், பயமின்மை, மனோசாந்தி இவைகளையே நமக்குத் தருகின்றன. சமயக்கொள்கை ஒருவருக்குரிய நல்லொழுக்கத்தை விதித்து மேலெழுப்புவதற்கு நிச்சயிக்கிறது. யாதாமொரு கூட்டத்திற்காவது கோயிலுக்காவது உரிமை கொண்டிருப்பது ஒருவருக்கு ஆன்ம சந்தோஷத்தைக் கொடுக்க முடியாது. ஒவ்வொன்றையும் உன் உண்மை அறிவால் பார். யாருக்கு பயம். கடவுளோ நமக்கு மிக்க அன்புள்ள தாய். அத்தாய் தன் குழந்தைக்கு ஏதேனும் தீங்கு செய்வாளா? தோஷமின்றி, பொறுமைசாலியாய் சத்தியத்தில் நிற்கப் பழகு.

மனதைத்தூய்மை செய்வதற்கு நீ உன் இந்திரியங்களை ஆளுதற்கு முதலில் கற்றுக்கொள்ளவேண்டும். இந்திரியங்களைக் கைக்கொண்ட பின் உன் மனதைப் பரமார்த்த சொரூபத்தின்பேரில் பொருத்து. உன் மனம் தெளிவடைவதற்கு முன் அடுத்தடுத்து உண்மைத் தோற்றங்கள் உனக்குத் தோற்றினும் தோற்றலாம்; ஆனால் அவை உடனுக்குடனே நழுகிப்போம். அடுத்தடுத்து இந்திரியங்களை வசப்படுத்திச் செல்வதால் மாத்திரமே உண்மையான தோற்றங்களை நாம் சாஸ்வதமாய் வைத்துக்கொள்ளமுடியும். மனதை இந்திரியங்களின் வசம் ஒப்புவிப்பதால்தான் ஞானங்களெல்லாம் இழந்துபோகின்றன. இந்திரியங்களை மனம் சந்தோஷிப்பிக்க முயலுகிறவரையில் அது ஒழிவின்மையாயும் அசந்தோஷமாயு மிருக்கிறது. புறம்பேயுள்ள பிரபஞ்ச வல்லபத்தின் வழியாக மாத்திரமே எல்லாத் தொந்தரவுகளும் வருகின்றன என்பதை மனம் தன்னனுபவத்தாலுணர்ந்து இந்திரியங்களைத் தனித்து ஆளும்பொழுது மாத்திரமே உண்மையான சாந்தி தரிசனப்படுகிறது. பின் வெளி விஷயங்களிலிருந்து அது திரும்பிவிடுகிறது. காலக்கிரமத்தில் உள்ளம் பரிசுத்த மடைகிறது.

உள்ளம் தூய்மையானபொழுது நமதுள்ளத் தோற்றத்தை அல்லது சித்த பூரணப் பொருளை யடைகிறோம். நம்முடைய ஹிருதயமோ ஒரு கண்ணாடியை யொத்திருக்கிறது. அது மலத்துகள் மூடப்பட்டிருக்கும் காலம் வரையிலும் சர்வ ஜீவபிராணிகளிடத்தும் குடியிருக்கும் உண்மை ஆத்ம நாயகனை நாம் அதில் கண்டெடுத்துக் கொள்ளமுடியாது. ஆகையால் மனத்தூய்மை ஆன்ம சுத்திக்கு இன்றியமையாக் காரியம்.

உண்மையில் சர்வ சமையங்களின் சத்து மனத்தூய்மையே. உள்ளத் தூய்மையில்லாமல் சுத்தமான தோற்றங்கள் தெளிவான அறிவைக் கொண்டு அடைய முடியாது. ஆதலால் வெளித்தோற்றங்களில் அதிக ஊன்றுதல் செய்தல் கூடாது. சலஸ்பரிசமிருந்தாலும் இல்லாவிட்டாலும் நாம் தூய்மையும் சுத்தமுமுடையவராவோம் என்பதை அறிய வேண்டும். அவருடைய பெயரால் ஒவ்வொன்றும் தெளிவும் சுத்தமுமடைகின்றன. அந்தரங்க பக்தியோடும் ஆவலோடும் கடவுளின் பரிசுத்த நாமத்தை அடுத்தடுத்துச் சொல். சர்வமலங்களும் கழுவப்பட்டுப் போம். உன்மனம் தூய்மை வளர்ந்து கொள்ளும்படிவை. அது தெய்வ சிந்தனையும் தெய்வீகமுடையார் கூட்டத்தைத் தேடுதலுமே. பின் மனத்தூய்மை நம்முள்ளத்தில் பிரகாசிக்கும்.

சொல்லப்பட்டவைகளிலெல்லாம் முதலாக சர்வ அகங்காரங்களையும் விட்டொழிக்க வேண்டும். மலத்தில் இதைவிடப்பெரியதில்லை. இதுவே ஸ்வயலாப வஞ்சகத்தால் நம்முள்ளக் கண்ணாடியை அவ்வளவு துரிதமாய் மூடக்கூடியது. நாம் உண்மை பக்தியாளராயிருக்க விரும்பினால் நம்மை இருளிலும் பந்தத்திலும் நடத்துகிற "நான்" என்பது நமக்குப்பிரகாசம் தந்து சர்வ பிரபஞ்சத்தையும் மூடிக்கொள்ளும். நாமும் சில காரியங்களைச் செய்கிறோம். என்னும் கருத்தையும் விட வேண்டும். நாம் செய்கிறோம் செய்ய மாட்டோம் என்பதும் விடவேண்டும். கவுரவம் கொள்வதைவிடு. இக்கருத்தை நிர்மூலமாக்கு, பின் சுயலாபங்கருதாதவராவோம். சுயநயங்கருதும் எண்ணங்களை வேரோடு. களை நம் குறியை நாமடையலாம்.

நிட்காமிய கருத்துக்களுடன் நம் கற்பனா மூர்த்திக்கு தொழும்பு செய்ய விரும்பினால் தாராளமாய்ச்செய்யலாம். அதுவே உண்மை. அதன் வழியாய் ஒருவர் சம்பூரணம் அடையக்கூடும். சுயநயங்கருதாது நம்மனோமூர்த்திக்கு நாம் செய்யும் சேவை நம்முள்ளத்திலிருந்து எல்லா பந்தங்களையும் விலக்கித் தூய்மையைத் தருகிறது. கமலத்தன்னை.

சாரதாம்பாள்

(171-ம் பக்கத் தொடர்ச்சி.)

3-வது அத்தியாயம்.

" ரத்தினம் " கொலையுண்டு ஒரு வாரமாயிற்று. ஒருவரும் இதைப் பற்றிப் பேசுவாரையே காணோம். இக்கேஸை செஷன் கோர்ட்டுக்கு மாற்றிவிட்டதாக வதந்தி ஒன்று உண்டாயிற்று. யாவரும் இது விஷயத்தில் புத்தியைச் செலுத்தாமல், தங்கள், தங்கள் காரியங்களில் கண்ணோக்கமாகவே யிருந்தார்கள். வசந்த புரத்தில், ஓர் நாள் ஓர் மாடி

வீட்டின் அறையில் ஒரு பெரியவர் நாற்காலியின்மீது உட்கார்ந்து கொண்டு மிகவும் விசனப்பட்டுக் கொண்டிருந்தார். அவரைப்பார்த்தால் சுமார் 60 வயதுள்ள வரென்றே சொல்லலாம். உடம்பு முழுவதும் வெளுத்து, கண் குழிந்து, மிகவும் இளைப்புள்ளவர் போலக்காணப் பட்டார். அடிக்கொரு முறை "ஐயோ! என் சாரதா! என் அன்புள்ள குழந்தாய், நீ எங்கு சென்றுவிட்டாயோ! உனக்காகவே நான் இதுவரை உயிருடனிருந்து வந்தேனே, நான் தேடி வைத்திருக்கும், இத்தனை, அப்பப்பா! பத்து லக்ஷம் பவுனுக்கும் நீயே சுதந்திரமுடையவளென்றிருந்தேனே, அந்தோ! என்னைத்தனியாக விட்டு விட்டு, எங்கு சென்றாய்? நீ சென்று இப்போது வருஷம் ஆறு ஆகியும், ஒரு துப்பும் காணோமே. ஐயோ! என் கண்ணே! உன்னாலல்லவா இந்நாள் வரை என் மனைவி யிறந்த விசனத்தையும் ஒருவாறு நிறுத்தியிருந்தேன்.

இந்தப் பாழும் துப்பு அறிபவர்கள் ஆறு வருஷமாயும் ஒரு துப்பும் தெரிவிக்காது, கூடிய சீக்கிரம் குழந்தையுடன் வருகிறோம், வருகிறோம், எனக் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறார்களே ஒழிய குழந்தை வந்த பாடில்லையே. ஏதோ இவ்வூருக்குப் புதிதாக வந்த சுந்தரம், துப்பு அறிவதில் மிகவும் கெட்டிக்காரரென அவரிடமும் சொல்லி மாதம் இரண்டாகி விட்டனவே, ஆ! என் சாரதா! நீ, கோறியபடி, உன்னை லட்சுமணனுக்கு மணம்செய்து கொடுக்காததால், ஒரு சமயம் அன்னவனுடன் ஓடிவிட்டாயோ, அந்தோ! அவ்விதமிருந்தால், லட்சுமணனை ஒவ்வொரு தரமும் சந்திக்கிறேனே, ஜெகதீசா! எவ்விதமாகவோ ஆறு வருஷமாகப் பொறுத்திருந்தேன். இனி உயிர் வாழ முடியாது. என் சாராதா! உன்னைப்பாராது என் கண்கள் பூத்துப்போகின்றன. ஐயோ! பசியும் எடுப்பதில்லையே, உன்னால் எனது உடம்பும் இளைத்து வாடிப் போகின்றதே. 40 வயதுள்ள என்னைப்பார்த்தால் 60 வயது போலக்காண்கிறதே, என் கண்ணே சாரதா! என் முன்பாக வாராயோ, நான் செய்ததப்பிதத்தை மன்னிக்கமாட்டாயோ" என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிக்கொண்டே விசனத்தால் தன்னையறியாது நாற்காலியினின்றும் திப் பென விழுந்தான்.

அச்சமயம் இவரைப்பார்க்க வேண்டுமென்று வந்த இவர் சிநேகிதர் " தாமோதரம் பிள்ளை " யென்பவர், " சரவணப் பிள்ளையினுடைய நிலைமையை அறிந்து, ஓடோடியும் வந்து அவருக்கு வேண்டிய சிகிச்சைகள் செய்து தன் கையால் எடுத்து, நாற்காலியில் அமர்த்தி, ஓ! என் பிரிய சரவணா! "நீ ஏன் வர வர இவ்விதம் உடம்பைப் புண்படுத்திக்கொள்கிறாய், உனது குழந்தைசாரதாள், எங்கும் சென்றிருக்கமாட்டாள். லட்சுமணனுடனேயே தான் சென்றிருப்பாள். கூடியசீக்கிரம் உம்மைக்காண்

பாள். அவளென்ன சிறு பெண்ணோ? உலக நடவடிக்கை தெரியாத அல்ப புத்தியுடையவளா? கட்டாயமாக துப்பு அறிபவர்கள் கண்டுபிடித்துக்கொண்டுவருவார்கள் விசனத்தை ஒழி" என்றார்.

சரவணப் பிள்ளை:—என்ன தாமோதரம்! நீயும் தெரியாமல் தானே பேசுகிறாய். என்ன இந்த ஆறு வருஷமாகவா, எனது குழந்தை சாரதாள் இத்துப்பு அறிபவர்களுக்கு கிடைக்காமலிருப்பாள்? ஏதோ, என் மனதிற்குப் பலவிதமான யோசனை உதிக்கிறது. அந்தோ! ஒருக்கால் லட்சுமணனை, மணக்க நான் சம்மதியாததால் கிணற்றில் விழுந்து இறந்துவிட்டாளோ" என விம்மி, விம்மி, சிறு குழந்தையைப்போல விசனப்படலானார்.

தாமோதரம் பிள்ளை:—"சரவணா! உனக்கு வயது நாற்பதாகியும் இன்னும் புத்தியில்லை. என்ன, சாரதாளை ஒன்றும் தெரியாதவளென்றே வைத்துக்கொண்டாய். அவளைப்போல ஞானமும், யூகமும், படிப்புமுள்ள பெண்கள் இப்பட்டணத்திலேயே யில்லை யெனச்சத்தியங் கூடச்செய்வேன். அப்பேர்ப்பட்டவள் இவ்வித துர்மரணத்திற்கு ஆளாகுவாளா? நீ இவ்விதம் பலவிதமாக நினைத்து, நினைத்துத் தான் உடம்பைக் கெடுத்துக் கொண்டாய், இனி இன்றுமுதல் இவ்வித எண்ணங்கொள்ளாதே, கூடிய சீக்கிரம் சாரதாள் உன்னை வந்து காண்பாள்" என்றார்.

சரவணப் பிள்ளை:—தாமோதரம்! எனக்கு புத்தி, புகட்டி வருகிறாயே ஒழிய உன் மனதையே நீ, "சாரதாள் எங்கே?" எனக்கேட்டுப் பார். உன் மனதே உனக்குச்சொல்லும், அன்று நாம் பேப்பர் பார்க்கும் போதே, 20 வயதுடைய ஓர் பெண் குழந்தை கிணற்றில் விழுந்து கிடப்பதாகவும், சுற்றத்தார் ஒரு வருமில்லாது, அநாதி பிணமென எடுத்து, தகனம் செய்ததாகவும் படித்து நீயே உறுதியாக "சாரதாளே" தானெனச்சொல்லி விசனப்பட்டாயே. இப்போது இவ்விதமாகச்சொல்லி, என் விசனத்தை நீக்குகிறாயே, ஐயோ! சாரதாள், நிச்சயமாகக் கிணற்றில் தான் விழுந்து இறந்து விட்டாள். தெய்வமே! இனி நான் உயிருடனிருப்பதில் பயனென்ன என இரு கைகளாலும், தலையில் மோதியடித்துக்கொண்டே சிறு குழந்தைகளைப்போல் விம்மி, விம்மி, அழத்தொடங்கினார். இந்தக்கேட்ட

தாமோதரம் பிள்ளை:—ஓ! ஓ! நாம் அன்று ஒரு முறை "பத்திரிகையில் வாசித்துப் பார்த்த"படி, கிணற்றில் விழுந்த மாது சாரதாளாகத் தானிருக்க வேண்டும். ஏதோ நாம் நமது நண்பன் விசனத்தை ஒழிக்க வேண்டிபலவிதமான தேறுதலான வார்த்தைகளைச் சொல்லியும் கேழ்க்கமாட்டேனென்கிறானேஎன்னும், எண்ணமுடையவனாய்(வெளிப்

படையாக) சரவணா! நான் எவ்வளவு தரம் சொன்னபோதிலும், உன் மடைமையான புத்தியைத்தானே மேல்கொண்டு விசனப்படுகிறாய்; உன்னைப்போலுள்ளோர்கள் இவ்விதமாக விசனப்பட்டால், காரியம் எவ்விதம் கைகூடும்? உன்னுடைய மனிதர்கள் பல திக்குகளிலும் மாறி, மாறித் தேடிக்கொண்டேயிருக்கிறார்கள்; மேலும் துப்பு அறியும் ஆசாமிகளும், தங்களால் கூடியவரை பிரயாசையுடன் தேடிக்கொண்டேயிருக்கிறார்கள். துப்பு அறியும்முருகேசனென்ன, கோபாலனென்ன, சிங்காரமென்ன, சுந்தரமென்ன, இவர்களெல்லாம் அல்ப சொல்பமா? ஒருவரைவிட ஒருவர் கெட்டிக்காரர்களே. நீ அதைரியப்படவேண்டாம் கட்டாயமாகச் சாரதாம்பாள் கிடைத்துவிடுவாள். அவளேதோ, சிறுவயதினால், காதலென்னும் விஷயத்தால் தூண்டப்பட்டு, புத்தி தெரியாது ஓடிவிட்டாள். இப்போது அவளுக்கு சுயபுத்திதோன்றி, தான் செய்தது யாவும் தப்பிதமெனத் தெரிந்து வந்துவிடுவாளெனப் பலவிதமான தேறுதல் வார்த்தைகளை யெடுத்துச் சொல்லி துக்கத்தை நிறுத்தி, அநேகவித சந்தோஷ சமாச்சாரங்களையும் குடும்ப விஷயங்களையும், குறித்துப் பேசிக்கொண்டேயிருந்தார்கள். சொற்ப நேரம் சென்றதும் சரவணா! நமது ஊரில் என்றும் வராத புது கம்பெனி மனோரஞ்சித நாடகக்கொட்டகையார் வந்திருக்கிறார்கள். இன்று அரிச்சந்திர நாடகமாம். போய்ப்பார்த்து வருவோம் வருகிறாயா? எனக் கேட்டார், தாமோதரம்.

சரவணப்பிள்ளை:—என்ன தாமோதரம், என் நிலைமை யிவ்விதமிருக்க, "நாடகம் வேறா? நீ என்ன என்னைப் பரிகாசம் செய்கிறாயோ?

தாமோதரம்பிள்ளை:—சரவணா; நீ அந்த சாரதாம்பாள் விஷயத்தைப் பற்றி நினைக்காதே வா! போய் வருவோம், அதனால் உனது மனதும் நிம்மதியடையும். தயாராக யிருக்கிறேனெனச் சொல்லி, உத்தரவு பெற்று தனதில்லம் நோக்கிச் சென்றார்.

4-வது அத்தியாயம்.

இரவு சுமார் 9-மணியிருக்கலாம். வசந்தபுரத்தின் பாதைவழியாக ஜனங்கள் நடந்துகொண்டே யிருந்தார்கள். ஒவ்வொருவரும் ஆ! ஆ! இன்று நாடகம் பேஷாயிருக்கும், சீக்கிரமே சேர்ந்து டிக்கெட் வாங்குவோமென விரைவாக நடக்கலானார்கள். நாடகக் கொட்டகை பூராவும் கோஷமாக யிருந்தது. அங்கு மாட்டியிருக்கும் கியாஸ்லைட்டின் வெளிச்சமோ வீற்றிருப்பவர் கண்கள் கூசும்படி செய்கின்றதுபோலும்! ஒருவர்மேலொருவர் உட்கார்ந்துகொண்டு மிகவும் கஷ்டப்பட்டுக்

கொண்டிருந்தார்கள். "டிக்கெட்" கிடைக்காமல் தங்கள், தங்கள் மாளிகைக்குத் திரும்பிச் சென்றார்களனேகர். அநேகர் தங்கள் மோதிரம், மணிபர்ஸ், வகையறா சாமான்களைத் திருடக் கொடுத்தும், ஆட்டம் (நாடகம்) பார்க்க வேண்டுமென்ற கருத்தைக்கொண்டு, கவனியாதவர் போலிருந்தார்கள். முதல் வரிசையில் பல பெரிய மனிதர்கள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களணிந்திருந்த வயிரக் கடுக்கன்களும், மோதிரங்களும், விளக்கின் வெளிச்சத்தினால் பளீர் பளீரென, பிரகாசித்தன. அங்கு வீற்றிருந்த இருவரில், ஒருவர் என்ன "தாமோதரம்" ஆட்டம் ஆரம்பிக்கவில்லையே, இன்னும் நேரமாகுமோ," என்றார்.

தாமோதரம்.—இல்லை, நேரமாகாது கூடியசீக்கிரம் ஆரம்பம்செய்து விடுவார்கள். மணி 9½-ஆனவுடன் ஆட்டம் நடத்துவார்கள். என்ன, சரவணா? இதுவரை நீ வராதவன்போலக் கேட்கிறாயே?

சரவணப் பிள்ளை:—இல்லை, கொட்டகை முழுமையும் நிறைந்து விட்டதே. இனித் தாமதமென்ன எனக்கேட்டேன்: என்ன இன்று ஆட்டம் நன்றா யிருக்குமோ?

தாமோதரம் பிள்ளை:—ஏதோ நன்றாக யிருக்குமெனப் பலபேர் சொல்லியதால்தானே நாம் வந்தோம். எல்லாம் இன்னும் சொற்ப நேரத்தில் தெரிகிறது.

இவர்களை நமது நண்பர்கள் மறந்திருக்கமாட்டார்கள். இவர்கள்தான் முன் அத்தியாயத்தில் உரைத்த தாமோதரம் பிள்ளையும், சரவண பிள்ளையும்.

ஓ! ஓ! மணி ஒன்பதரையாய் விட்டதே, இன்னும் ஆட்டம் ஆரம்பிக்கவில்லையே, யெனப் பலபேர் பற்பலவிதமாகச் சத்தமிட ஆரம்பித்தார்கள். சிலர் கைதட்டிக் கூச்சலிடவும் வாயினால் ஊதவும், ஆரம்பம் செய்தார்கள். உடனே அக்கம்பெனிக்கு மானேஜராகிய வீரராகவலு நாயுடு யென்பவர் மேடையின்மேல் தோன்றி,

"ஐயா, கனதனவான்களே! தாய்மார்களே! இதுவரை பொறுத்து ரக்ஷித்த பெரியோர்கள், இன்னும் சற்றுநேரம், பொறுத்துக்கொள்ளும்படிக்கு வேண்டுகிறேன். எங்கள் கம்பெனி ஸ்திரீபார்ட் நடராஜன், என்பவர், இன்று குறித்த நேரத்தில் வராத விஷயத்தைப்பற்றி விசனப்படுகிறேன். அவருக்கு ஏதோ சொந்த அலுவலிருப்பதால் வரத் தாமதமாய்விட்டது. கூடிய சீக்கிரம் வந்துவிடுவார். அவர் வந்தவுடன் ஆட்டம் ஆரம்பித்துவிடுகிறோம். இதைப்பற்றி யாவரும் மன்னிக்கும்படி வேண்டுகிறோமென்றார். இதைக் கேட்டவுடன் பலபேர், ஆனந்தத்தாலும், சிலர் மனச்சங்கடத்தோடும், கரகோஷம் செய்தார்கள். பின் கொட்டகை முழுமையும் சத்தமயமாகவே யிருந்தது. சுமார் அரை மணிநேரம் சென்றதும் ஆட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அன்று நாடக மேடையின்மேல் நடித்த ஒவ்வொருவரையும் கொண்டாடாதார் யாருமில்லை. ஆ! ஆ! எட்டுவயது சிறுவன் லோகிதாசன் வேடம்பூண்டு நடித்தானே, அதற்கேபோதாது நாம் கொடுத்தபணம் என்போரும், அடடா! அந்த சந்திரமதியே வந்துவிட்டாற்போலல்லவா யிருந்தது, சீன்களே! சீன்கள்! இந்தக் கம்பெனியைப்போல சீன்கள் வேறு கம்பெனியில் தயார்செய்து காட்டவே மாட்டார்களென்போரும், பலவிதமாகப் பேசிக்கொண்டே தங்கள், தங்கள் மாளிகைகளை நோக்கி நடந்து கொண்டே யிருந்தார்கள்.

நாடகம் நடந்த மறுநாள் 10-மணிக்கு, நமது சரவணப் பிள்ளை, தனது மடக்கு நாற்காலியின்மேல் படுத்துக்கொண்டு, பழய, "சுதேசமித்திரன்" பத்திரிகையை வாசித்துக்கொண்டிருந்தார். "ரத்தினம் என்னும் ஓர் பெண்ணின் கொலையைப்பற்றி, பெரிய எழுத்தில் பிரசுரம் செய்யப்பட்டிருந்தது. அது பின்வருமாறு:—

சுமார் 25-வயதுடைய "ரத்தினம்" என்னும் பெண், இவ்வூர் கேடி பெரியண்ணனால் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை 5-மணிக்கு தனவந்த பூபதியார் வீட்டின் மாடிமேல் கொல்லப்பட்டாள். மாளிகை பூராவும் தேடி அலைந்தும், சவம் கிடைக்கவில்லை. சவம் கிடைத்து, தெரிவிப்பவர்களுக்கு நல்ல இனாம் அளிக்கப்படும். வெள்ளிக்கிழமை தினம் செஷன்கோர்ட்டு......முன்பாக கேஸ்விசாரிக்கப்படும்.

V. S. S. P.
Napier St.

என்று வரையப்பட்டிருந்ததைப் பார்த்த சரவணப் பிள்ளைக்கு, ஒன்றும் தோன்றாது, தனது கண்களில் நீர் வடிந்தது. ஓ! ஓ! அம்மாதுதான், ஒரு சமயம் நமது சாரதாளோ! இவர்களுக்குப் பேர் தெரியாது ரத்தினம் என்று பிரசுரம் செய்துவிட்டார்களோ, தெய்வமே! நம்முடைய குழந்தை, ஒருவர் கையாலா கொல்லப்பட்டாள்! இனி நிச்சயமாக என் குழந்தை இறந்தாளென்று தெரிந்துகொண்டேன். இனி உயிருடனிருப்பதில் பயனில்லை. இச்சொத்துக்கள் யாவற்றையும் நமக்கு வேண்டியவர்களுக்கும், கோயில்களுக்கும் எழுதிவைத்துவிட்டு, உயிரைவிட்டுவிடவேண்யடிதே. அப்பா! கத்தியால் கொல்லப்பட்டாளா! அடடா! என்ன கோரமான சங்கதி, இவ்விதவார்த்தைகள் என் செவியில் விழத்தானா இதுவரை உயிருடனிருந்தேன், ஜகதீசா! இது என்ன! ஏன் இப்பூவுலகில்பிறப்பித்தாய்? அந்தோ! நான் படும் கஷ்டம் இனியாரும் படவேண்டாம். (சற்று

நேரம் தன் கண்களை மூடிக்கொண்டிருந்து) சீ! என்ன நான் ''பயந்தவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம்பேய்'' என்பதுபோல, யாரோ ஓர், ரத்தினம் என்னும் பெண் கொல்லப்பட்டிறந்ததாய்ப் பத்திரிகையில் கண்டு, இவ்விதம் மனதை ஊசலாட்விட்டுவிட்டேன். அடடா! என்புத்திதான் என்னே! என்னே? இவ்விதம் மாறுதலடைந்துவிட்டது என்றார். தன் முன்னால் அச்சமயம் ஒருவர் நிற்பதைக்கண்ட சரவணப்பிள்ளை, வா! சிங்காரம்! என்ன இவ்வளவு நேரமாயிற்று? போனகாரியம் ஜெயம் தானே!

சிங்காரம்:—ஐயா, நானிங்கிருந்து புறப்பட்டு, பல யிடங்களிலும் என்னால் கூடியவரை தாங்கள் சொன்ன அடையாளப்படிக்குத்தேடித் திரிந்தேன். கிடைக்கவில்லை. தாங்கள் வீணாக மனதைப் புண்படுத்திக்கொண்டிருப்பீரே என்று திரும்பிவரும்சமயம் கோபாலனைக் கண்டேன். அவர் ஏதோ, துப்புக்கிடைத்த தாகவும், இன்னும் ஒருவா ரத்தில் குழந்தையுடன் புறப்பட்டு வருவதாகவும் சொல்லும்படி சொன்னார் என்றார்.

சரவணப்பிள்ளை:—என்ன சிங்காரம்! உன்னால் முடியாத காரியம் கோபாலனால் முடியுமென்று நான் நினைக்கவில்லை. ஏதோ, இனி நான் என் குழந்தையைப் பார்க்கமுடியாது.

சிங்காரம்:—ஐயா, நீங்களிவ்விதம் சொல்ல வேண்டாம், நாங்கள் மூவரும், ஒவ்வொரு திக்குகளாகச்சென்று தேடிப்பார்த்தும், எனக்கு மட்டுமே கிடைக்கவில்லை. முருகேசனுக்கோ, இது விஷயமாக ஒரு துப்பும் கிடைக்காது. திருட்டு நோட்டுகள் அச்சடிக்கும் கள்வர்களைக் கைது செய்ததில் கவர்ண்மெண்டாராலேயே, துப்பு அறிவதில் கெட்டிக்காரரெனப் பெயர்பெற்று, அவர் இன்னும்விடாது தங்கள் குழந்தையைத் தேடிக்கொண்டிருக்கிறார். கோபாலனுக்கோ, ஏதோ துப்பு அறிந்து அங்கு போயிருக்கிறார். ஒவ்வொருவருடையது, வெவ்வேறுவழி. கட்டாயமாக உங்கள் குழந்தை அகப்பட்டு விடுவாள், வியாகூலப் படவேண்டாம். இன்னும் என்னால் கூடியவரைக்கும் சென்று பார்க்கிறேன். அதைரியப் படவேண்டாம் எனச்சொல்லி விடைபெற்றுக்கொண்டு தன் காரியமாக வெளிச்சென்றார்.

சரவணப்பிள்ளையும், சிங்காரம் சொன்ன உறுதியால், கோபாலன் சாரதாம்பாளைக் கொண்டு வந்துவிடுவாரென்ற நம்பிக்கையுடனிருந்தார்.

5-வது அத்தியாயம்.

ஆடி மாதம் 10உ புதன்கிழமை தினம் தனவந்தபூபதி மாளிகையில் இருவர் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் சரிதான், பாவம் பெரியண்ணன், விசாரணை காலம் நெருங்கி விட்டது. வெள்ளிக்கிழமை தினம் தூக்கில் தொங்கவேண்டியது தான். ஐயோ! இந்தப் பாவி, அந்த உத்தமியான பெண்ணைக் கொன்றுவிட்டானே, அவனுக்கும் ஏதோ கெட்ட காலம்! போலீசார் கையிலேயே ஏன் அகப்படவேணுமென்று, பூபதியாரே! என்றார் கோவிந்தசாமி பிள்ளை.

தனவந்தபூபதியார்:—ஐயா, நீர்சொல்வது வாஸ்தவம் தான். கொன்றவனே, தன்னைக் காட்டிக்கொள்வானா! இது தான் என் மனதிற்குச் சந்தேகமாயிருக்கிறது. இதில் ஏதோ, பலவிதமான சூதுகள் நடந்திருக்கவேணுமென்று எண்ணுகிறேன். பெரியண்ணனோ, திருட்டுக் கேஸிலும், இவ்விதமான கொலைக் கேஸிலும், மிகவும் அநுபோகமுடையவன். இவனைச் சேர்ந்தோர் சிலர், இப்பெண்மணியைக் கொன்று பொருள்களைக் களவாட எண்ணங்கொண்டு, அதன்படி பெண்ணைக் கொன்று, பொருளையும், சவத்தையும், மறைத்து வைக்க, ஓடிக்கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு காவலாக பெரியண்ணன் வீற்றிருந்திருக்கக்கூடும். திடீரெனப் போலீஸ் புலிகளைக்கண்டு பயந்து வீரிட்டலறிவிட்டான். உடனே இவனைக் கைது செய்துவிட்டார்கள். பாவம், இவன் இந்த ஆறுமாத காலமாக கெட்ட செய்கைகளில் பிரவேசியாமல், இப்போது ஆரம்பித்துவிட்டான். இப்பேர்ப்பட்டவர்களெல்லாம், இவ்விதம் பிடிபட்டு, தண்டனை யடைந்து ஒழிந்தால் தான் ஊருக்குச் க்ஷேமம் என்றார்.

கோவிந்தசாமி பிள்ளை:—ஐயா, எல்லாம் முன் செய்த வினையின் படிதானே நடக்கும். அந்த நியாயம் நமக்கென்னத்திற்கு, இப்போது நான் நாடி வந்த பொருள் இப்போது கிடைப்பதைக்காணோம்.

தனவந்தபூபதியார்:—என்ன கோவிந்து, நீ என்ன எனக்குத் தெரியாதவனா, நாம் இருவரும் ஒருமிக்கப் பள்ளியில் வாசித்த நண்பர்களாயிற்றே. என்னிடம் இது சமயம் தொகையிருந்தால் நீ கேட்க வேண்டுமா; நானே உனது நிலைமையை அறிந்து கொடுக்கமாட்டேனோ?

கோவிந்தசாமி பிள்ளை:— இனி வேறு பக்கம் பத்திரம் எழுதிக்கொடுத்து, வாங்கவேண்டியது தான்—ஐயோ! கடன் வாங்கவேண்டுமென்றால் என் மனம் பலவிதமாக ஊசலாடுகிறதே. அதிலும் இவ்வூரில் எல்லாம் எனக்குத் தெரிந்தவர்கள். எவ்விதம் சென்று தொகை கேட்பது?

தனவந்தபூபதியார்:—உனக்கு அதைரியம் வேண்டாம். ஏதோ, நமது சமயத்துக்கு வாங்கி, பிற்பாடு செலுத்தவேண்டியது தானே, இதற்காக பயப்பட்டால் காரியம் எப்படி முடியும்? இவ்விடம் இந்த ஒரு வாரத்திற்கு முன்னாடி, ஓர் மார்வாடி உண்டியல் கடைவைத்திருக்கிறார். அவர் ஜென்ம தேசம் பம்பாயாம். அவரிடம் சென்றால் சொற்ப வட்டிக்கே தொகை கிடைக்கும். பின்னிட்டு தொகை சேர்ந்ததும் ஷைபாருக்குக் கொடுத்துவிடலாம்.

கோவிந்தசாமி பிள்ளை:—ஐயா, நீங்கள் சொன்ன யோசனை சரிதான். நீங்களும், என்னோடு வந்து தான் அது முடியவேண்டும் "பருப்பில்லாமல் கலியாணம்" எவ்விதம் முடியாதோ, அவ்விதம் நீங்களில்லாது ஒரு காரியமும் நடைபெறாது

தனவந்தபூபதியார்:—நானென்னத்திற்கு அங்கு வீணாக வரவேண்டும்? எனக்குப் பதிலாக என்குமாஸ்தாவை அனுப்புகிறேன்; அவருடன் சென்று தாங்கள் கோறும் ரூபாய் 5000—(ஐயாயிரம்)மும் பெற்று வாருங்கள்.

கோவிந்தசாமி பிள்ளை:—நான் ஒருக்காலும் தாங்கள் வராமல் போகேன். தாங்கள் வந்தாலாயிற்று; இல்லாதவரை, என் பெண்ணுக்கு இப்போது விவாகம் வேண்டாமென நிறுத்திவிடுகிறேன்.

தனவந்தபூபதியார்:—அப்படி யொன்றும் செய்து விடாதீர். நானும் வருகிறேன். சரி, எழுந்திரும், போவோமென இருவரும் மார்வாடி கடையை நோக்கிப் புறப்பட்டார்கள்.

மார்வாடி கடையின் முன் புறம் பந்தலிட்டு, ஜன்னல்களின் கம்பிகளுக்குப் பலவிதமான வர்ணம்பூசி, ஒரு பலகையின் பேரில் "ரூமச்சந்து" உண்டியல் கடை யென வரையப்பட்டிருந்தது. இருவரும் உள்ளே நுழைந்தார்கள். அங்கு போடப்பட்டிருந்த ஆசனங்களும், மெத்தைகளும், சுவர்களில் மாட்டப்பட்டிருந்த படங்களும், மாளிகையை அலங்காரம் செய்துகொண்டிருந்தன. உடனே மார்வாடியின் குமாஸ்தா எழுந்து, வாருங்கள்! வாருங்கள்! இங்கு வீற்றிருங்களென ஒரு ஆசனத்தைக்காட்டி, அமரும்படி செய்தார். உடனே தாங்கள் வந்த சங்கதிகளைத் தெரியப்படுத்தி, பத்திரம் எழுதிக்கொடுத்து, தொகைகளைப் பெற்றுக்கொண்டு இல்லமேகினர்.

இவர்கள் போகும் வழியில் எதிரில் வீருசாமி நாயுடு வருவதை யறிந்து, இருவரும் அவருக்கு வந்தனம் செய்து நின்றார்கள். ஐயா, தனவந்தபூபதியாரே, உம்மைத் தான் தேடி வருகிறேன். எங்கே, அந்த மாளிகையின் சாவி? அம்மாளிகையில் ஏதோ, துர்நாற்றம்

வீசுவதாக எனது ஆட்களால் தெரிந்தேன். ஆதலால் அதையும் பார்த்துக்கொண்டு இன்னும் ஏதாவது துப்பு அகப்படுகிறதா எனச் சுற்றிப் பார்ப்போம் வாருங்களென, மூவரும் "ரத்தினம்" கொலையுண்ட மாளிகையை நோக்கி நடந்தார்கள். மாளிகை திறக்கப்பட்டு, ஒவ்வொருவரும் நாற்றம் பொறுக்கமாட்டாது வெளியிலேயே நின்றுவிட்டார்கள். வீருசாமி நாயுடுக்கு மட்டும் மனதில் பலவிதமான யோசனைகள் உதித்தன. உடனே நாற்றம் வரும் திக்கை நோக்கி நடக்கலானார். ஆ! அங்கு ஓர் ஸ்திரீயின் சவம் கிடந்தது. அதைப் பார்த்தவுடனே, நாயுடுவுக்கு சந்தோஷமுண்டாயிற்று. சிலரை அழைத்து சவத்தை வெளியே கொண்டு வந்தனர். அடையாளமே தெரியாது அழுகி, மட்கிக் கிடந்தது. சரி, பெரியண்ணன், குற்றவாளியே, இனி வேறு அத்தாட்சி வேண்டியதில்லை எனச் சொல்லிவிட்டு, சவத்துடன் கச்சேரியை நோக்கி நடந்தார். அன்று பூராவும் 'வசந்தபுரமெங்கும், பெரியண்ணன் கொன்றஸ்திரீயின் சவம் அகப்பட்டது. இனிப் பெரியண்ணன் தப்ப வழியில்லை. அவன் மடியவேண்டியதே, என் ஓர் குழப்பம் உண்டாய்விட்டது. 'சுந்தரம் எங்கே? அவரைக் காணோமே? அவரிருந்தால், அவருக்கு முன்பாகவே இச்செயல்களைக்காட்டி, தான் புகன்றதுயாவும் தப்பிதம் என்று அவர் வாயாலேயே, சொல்லும்படிச் செய்வோமென, பலவிதமாக பலர் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இது நடந்த மறுநாள் வெள்ளிக்கிழமைதினம் வசந்தபுரத்தில் எங்கு பார்த்தபோதிலும் இன்றல்லவா பெரியண்ணன்கேஸ் விசாரணை. இன்று சீக்கிரமாகக் கச்சேரிக்குச்சென்று இதன் முடிவை அறிய வேண்டும் எனச்சொல்லிக்கொண்டே நடந்தார்கள். ஒவ்வொருவர் சாப்பிடாமலும், இக்கேஸை அறிய மிக ஆவல் கொண்டு நடந்துகொண்டே சென்றனர். கச்சேரிமுழுவதும் கூட்டமாகவிருந்தன. அங்கு பலவிதநாற்காலிகள் போடப்பட்டு அவைகளில் கெட்டிக்கார வக்கீல்கள் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்கு முன்பாக மேடையின்மேல் ஓர் மேஜையும், ஆசன மொன்றும் போடப்பட்டு ஆசனத்தில்......ஜட்ஜ் அவர்கள் உட்கார்ந்துகொண்டு பலவிதமான கேசுகளை எடுத்து, விசாரித்து முடிந்தவுடன், பெரியண்ணன் கேஸ் எடுக்கப்பட்டது.

சேவகன், பெரியண்ணன், பெரியண்ணன் எனக்கூப்பிட்டான். பெரியண்ணன்கைகளில்மாட்டியவிலங்குகளுடன்இருசேவகர்மத்தியில் பெட்டியின்மேல் ஏற்றி நிறுத்தப்பட்டான். அங்கு வீற்றிருந்த துரைத்தனவக்கீல் பலவிதமான கேள்விகளைக் கேட்டு, சாக்ஷிக்களைக் கூப்பிடும்படி செய்தார். அச் சமயம் மிகவும் அவசரமாக ஓர் நாடோடி (பிச்சைக்காரன்) நின்றிருப்பவர்களை விலக்கிக்கொண்டு துரிதமாகக் கச்சேரிக்குள்

நுழைந்து, அங்கு நாற்காலியின்மீது வீற்றிருந்த "சதாசிவம்பிள்ளை" யென்னும் ஓர் வக்கீலினிடம் ஓர்கடிதத்தைக் கொடுத்துவிட்டு மாயமாக மறைந்து விட்டான். கடிதத்தைப் படித்துப் பார்த்த "சதாசிவம்பிள்ளை" மிகவும் சந்தோஷங்கொண்டு தனதிருப்பிடத்தைவிட்டு எழுந்து, ஐயா, துரையவர்களே! நான் இப்"பெரியண்ணன்" "நிரபராதி" யெனரூபிக்க வாதாடப் பிரயத்தனப்படுகிறேன். ஆதலால் இன்னும் ஒருவாரத்திற்கு வாயிதா கொடுக்கவேண்டுமென்று பரிந்து கேட்டுக் கொள்ளுகிறேனென்றனர். உடனே வக்கீல் கேட்டபடிக்கு ஒரு வாரம் வாயிதா கொடுக்கப்பட்டது.

யாவரும் 'ஆ! இதென்ன ஆச்சர்யம்! பெரியண்ணனுக்கு சிபார்சாக வருபவர் ஒருவருமில்லையே, வந்தாலும் இவன் தப்புவது மிகவும் கஷ்டமே. இவ்விதமிருக்க யாரோ ஒரு நாடோடி ஓர் கடிதத்தைக் கொண்டுவந்து வக்கீலிடம் கொடுக்க, அவர் இக்கேசுக்காக ஒருவாரம் வாய்தா வாங்கியிருக்கிறார். இனி இது எவ்விதம் முடிவு பெறுமோ? எல்லாம் இன்னும் ஒரு வாரத்தில் தெரிகிறது, என்று சொல்லிக்கொண்டே தங்கள், தங்கள், இல்லம் நோக்கிச் சென்றார்கள். பெரியண்ணனும் ஏதோ, நான் முன் செய்த புண்ணிய பலத்தினால் இன்று தப்பினேன். ஆ! ஆ! என்னை மீட்க, பிரயத்தனப்படும் புருஷர் யாரோ அறியேனே? தெய்வமே! அவருக்கு ஒரு கெடுதலும் வாராமல் காப்பாற்றும் எனச் சொல்லிக்கொண்டே காவலுடன் சிறையை நோக்கிச் சென்றான்.

குடும்ப. சம்ரக்ஷணையும் சுகாதாரமும்.

அசுத்த ஜலம்.

ஜலத்தை ஒரு பாத்திரத்திலாவது அல்லது க்ளாஸ்டம்ளரிலாவது சிறிது நேரம் வைத்திருந்தால் அடியில் வண்டல் தங்கிவிடும். இதைவிட இன்னும் மிகக் கெடுதலான வஸ்து க்காலரா முதலிய வியாதிகளை உண்டாக்கும் கிருமிகளே. இவைகள் மிகவும் சிறியதாயிருக்கும். நமது கண்ணுக்குப் புலப்படாது.

மைக்ராப்ஸ்கோப் என்ற கருவியால் பார்த்தால் இவைகள் நன்றாகத் தெரியும். புழுக்களின் முட்டைகளும், கொசுக்களும் தண்ணீரிலிருப்பது நன்றாகத்தெரியும். இவ்விதமுள்ள தண்ணீரைப் பருகுவதால் தான் ஜனங்களுக்கு வியாதியுண்டாகிறது. ஸ்திரீகளுக்கும் இவ்விதமே தான் உண்டாகிறது. ஒருவிதமான கொசுக்கடியால் மலேரியா சுரம் உண்டாகிறதென்று வைத்திய நிபுணர்கள் சமீபத்தில் கண்டு அறிந்த பரிக்ஷையால் தெரிகிறது. மேலும் யானைக்கால் என்ற வியாதி இந்தியாவில்

பல விடங்களில் உண்டாவதற்கும் காரணம் ஜலத்தை கொசுக்கள் அசுத்தப்படுத்துவதால் தான். இவ்வித அசுத்தத்தால் இரத்தக்கடுப்பு, பேதி, விஷசுரம் முதலியவைகள் உண்டாகின்றனவென்று சொல்லப்படுகிறது.

ஜலத்தை மூன்றுவித வஸ்துக்கள் அசுத்தமாக்குகின்றன. முதலாவது, வாயு, இரண்டாவது தாதுப்பொருள்கள், மூன்றாவது மனிதர், மிருகம் முதலியவைகள்.

கரிமலவாயு ஜலத்தில் சாதாரணமாக உண்டு. இது யிருக்கும் ஜலம் சுத்தமாகவும் பளபளப்பாகவு மிருக்கும். இந்த வாயு தான் ஜலத்தை இவ்விதம் செய்கிறது. ஆனால் இது மிகவும் கெடுதியல்ல. ஜலத்தைக் கொதிக்க வைத்தால் இந்த வாயு நீங்கிவிடும். சாக்கடையிலிருந்து வரும் துர்நாற்றம் யாவருக்கும் தெரியும். அது ஒரு வாயு; இது மிகவும் கெடுதியானது. இது ஜலத்தை அசுத்தமாக்கி விடுவது சகஜம்; இது யிருக்கும் ஜலமும் சுத்தமாகவும், பளபளப்பாகவு மிருப்பதாகத் தென்படும். ஆகையால் அவ்வித ஜலத்தை நன்றாகக் கொதிக்க வைத்தபின் குடிக்கவேண்டும். சமையல் முதலியவைகளுக்கும் கொதிக்கவைத்த தண்ணீரை உபயோகித்தால் மிகவும் நல்லதே:

தாதுப்பொருள்களால் ஜலம் அசுத்தமாகின்றது. எப்படி யென்றால் பூமியிலுள்ள தாதுப்பொருள்கள் மூலமாக ஜலம் அசுத்தமாகிறது. சுண்ணாம்பு சேர்ந்திருக்கும் ஜலம் மிகவும் கெடுதல். இதனால் பேதி யுண்டாகும். ஜீரணக் கருவிகள் சம்பந்தமான வியாதிகள் உண்டாகும். சாதாரண உப்பு ஜலத்தில் சிறிது தென்படும், அதிக உப்பு ஜலத்திலிருந்தால் அது அசுத்த மென்றே நினைக்கவேண்டும்.

இரும்பும், ஈயமும் ஜலத்தில் கலந்திருக்கும். இரும்பு சிறிதிருந்தால கெடுதியே கிடையாது. ஆனால் அவ்வித ஜலத்தைக் கிரமமாக உபயோகித்து வரவேண்டும். ஈயம் கலந்திருக்கும் ஜலம் விஷமுள்ளது அதை ஒரு பொழுதும் உபயோகிக்கக் கூடாது. உபயோகித்தால் கெடுதி சம்பவிக்கும்.

மனிதர், மிருகம், இலை முதலியவைகளால் ஜலம் அசுத்தமாய் விடும், அவ்விதமாகும் ஜலம் மிகவும் கெட்டது. மிகவும் அபாயமானது: இலை, காய் முதலியவைகளால் அசுத்தமான ஜலம் பழுப்பு வர்ணமுள்ளதாயிருக்கும். இந்த ஜலமும் கெடுதலையுண்டுபண்ணும். ஆனால் பிராணிகளால் அசுத்தமாகும் ஜலம் மிகவும் கெட்டது. காய்ச்சிகூட உபயோகிக்கக்கூடாது. வீட்டு வேலைக்கும் இதை உபயோகிக்கக் கூடாது.

சாக்கடை வாயுவால் அசுத்தமாகிற ஜலத்தை உபயோகித்தால் காலரா, விஷசுரம் முதலியவைகள் உண்டாகும். அந்த ஜலத்தில் சிறிய க்ருமிகளிருக்கும். அக்கிருமிகள் தேகத்தில் பரவி வியாதியை யதிகரிக்கும்.

வெள்ளைப் பூனை.

ஒரு காலத்தில் ஒரு வயது முதிர்ந்த அரசன் தன் ராஜ்யத்தை அரசாண்டு வந்தான். அவனுக்கு அழகான மூன்று புத்திரர்கள் உண்டு. அவர்கள் கல்வியில் தேர்ந்து நற்குண முடையவர்களாயும் தெய்வபக்தி யுள்ளவர்களாயு மிருந்தார்கள். அவர்கள் தங்கள் தகப்பனிடத்தில் மிக்க மரியாதையாயும் பிரியமாயுமிருந்தார்கள். தங்கள் தகப்பனார் ஏதாவது சொன்னால் அவர் சொற்படி கேட்டு நடப்பார்களே தவிர, 'தந்தைச் சொல் மிக்க மந்திரமில்லை' என்பதற்கிணங்க அவரை எதிர்த்து பேச மாட்டார்கள்.

ஒரு நாள் ராஜனிடத்தில் இச்சகம் பேசி ஜீவிப்போன் ஒருவன் அரசனிடத்திற்குப் போய் "மகாராஜாவே! தங்களுடைய குமாரர்கள் சிம்மாசனத்தை யடைய துராலோசனை செய்து வருகிறார்கள்" என்று சொன்னான். அரசன் இவன் வார்த்தையை நம்பவில்லை. ஆயினும் அவ்வித துராலோசனையைத் தனது குமாரர்கள் செய்யாவண்ணம் தடுக்க அவர்களைத் தூரதேசங்களுக்குப் பிரயாணம் செய்யும்படி அனுப்பதீர்மானித்து விட்டான்.

சில நாள் சென்றபின்பு ஒரு நாள் அரசன் தனது குமாரர்களைக் கூப்பிட்டு "எனது அருமை வாய்ந்த புத்திரர்களே! எனக்கு வயதாகி விட்டது. ராஜ்யபாரத்தினின்று நீங்க சீக்கிரம் கருதுகிறேன். என் தள்ளாமைக்கு ராஜ்யசம்பந்தமான மனக்கவலையே கூடாது. இவைகளை விட்டு நீங்குவதே நல்லது, ஆகையால் எனது தள்ளாத காலத்தில் என்

னுடனிருந்து என்னை எப்பொழுதும் சந்தோஷிப்பிக்க ஒரு இனிமையான சிறிய நாயை உங்களில் எவனாவது ஒரு வருஷத்திற்குள் வெளிதேசங்களுக்குப் போய் கொண்டுவருகிறானோ அவனுக்கு எனது ராஜ்யத்தைக் கொடுக்க எண்ணியிருக்கிறேன்" என்றார்.

ராஜகுமாரர்கள் தங்கள் தகப்பனார் சொன்னதைக்கேட்டு வியப்புற்றார்கள். ஆயினும் அவர்கள் தூர தேசங்களுக்குப் போய் தங்களால் கூடிய மட்டும் நேர்த்தியான சிறிய நாயை விலைக்கு வாங்கி வருவதாகச் சம்மதித்தார்கள். உடனே தங்கள் தகப்பனாரிடத்தில் உத்திரவு பெற்றுக்கொண்டு புறப்பட்டார்கள். இவர்கள் தங்கள் ராஜ்ய எல்லையைக் கடந்தவுடன் அங்கொரு சத்திரம் தென்பட்டது. அதில் மூவரும் தங்கி போஜன முண்டார்கள். பின்பு மூவரும் யோசித்து 'நாம் ஒவ்வொருவரும் தனிமையாக வெவ்வேறு பாதையில் செல்வோம்' என்றார்கள். அவ்விதமே செய்ய தீர்மானித்து மூவரும் பிரிந்து போவதைப்பற்றி விசனமுற்றார்கள். கடைசியாக நாம் ஒரு வருஷமானதும் இங்கு எல்லாரும் வந்து சேர்வோம் என்று சொல்லி ஒவ்வொருவரும் தனித்தனியே வெவ்வேறு சாலையில் சென்றார்கள்.

இளைய சகோதரன் ஒரு பட்டணத்திற்குப் போய் அங்கு அநேக நாய்களைப் பார்த்து அவைகளில் அதிக நன்றாயுள்ளதை விலைக்கு வாங்கிக் கொண்டு மற்றொரு பட்டணத்திற்குப் போனான். முன் தான் வாங்கின நாயைப் பார்க்கிலும் அதிக மேலானதை அங்கு வாங்கினான். இவ்விதமே அநேக பட்டணங்களுக்குச் சென்று சிறந்தவும் மிக்க அழகு முள்ள நாயை வாங்கிக்கொண்டு மற்றவைகளை விற்றுவிட்டான்.

இவன் ஒருநாள் இராத்திரி மரங்கள் அடர்ந்த காட்டின் வழியாகப் போய்க்கொண்டிருக்கும் பொழுது இவனுக்கு வழிதப்பிவிட்டது, இருளோ மூடிக்கொண்டது. பெருத்த இடிமுழக்கமும் மழையும் ஆரம்பித்தன. புயல்காற்று போல் இவனுக்கு தென்பட்டது. வழியோ தெரியவில்லை. சிறு பிள்ளையாகையால் இன்னது செய்கிறதென்று தெரியாமல் சிறிது நேரம் திகைத்து ஒரு பெரிய விருக்ஷத்தின் கீழ் நின்றான். மழை நின்றபாடில்லை என்பதைக்கண்டு இருளில் தட்டுத்தடுமாறிக்கொண்டு வழியைக் கண்டுபிடிக்கச் சென்றான். வெகு நேரம் இவ்விதம் போய்க்கொண்டிருக்கையில் சிறிது தூரத்தில் ஒரு விளக்கு இவன் கண்ணுக்கு தென்பட்டது, இவன் அதை நோக்கியே சென்றான். இருள் மிகுதியாயிருந்தமையாலும் மழை தாரை தாரையாகப் பொழிந்தமையாலும் வேகமாக நடக்க முடியவில்லை. மெதுவாகச் சென்று கொண்டிருந்தான். கடைசியாக ஒரு பெரிய அரண்மனை தென்பட்டது. அதன் வாசற்படியண்டை வந்தான்.



கதவண்டை ராஜகுமாரன் வந்தபொழுது அங்கு ஒருமணி தொங்க விட்டிருப்பதைக் கண்டான். அதை உடனே அடித்தான். பனிரண்டு கைகள் கதவைத்திறந்ததைக்கண்டான் ராஜபுத்திரன். ஒவ்வொரு கையி லும் ஒரு விளக்கு இருந்தது. கைகள் அந்தரத்தில் தென்பட்டனவே தவிர மற்ற மனித உருவமொன்றும் இவனுக்குத் தென்படவில்லை. ராஜ குமாரன் ஆச்சரியமும் பயமுமடைந்து ஒரு அடிகூட எடுத்துவைக்காமல் ஸ்தம்பம்போல் நின்றுவிட்டான். உடனே இன்னும் சில கைகள் இவ னுக்குத்தென்பட்டன. அக்கைகள் இவனை அரண்மனைக்குள் போவென்று சொல்லும் பாவனையாக இவனை உள்ளே மெதுவாகத் தள்ளின. அந்தக் கைகள் இவனுடன் வந்து இவனை ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்கும் அதிலிருந்து சபாமண்டபத்திற்கும், அதிலிருந்து இன் னொரு அறைக்கும், இதிலிருந்து இன்னொரு நேர்த்தியான அறைக்கு இட்டுக்கொண்டு போயின.

ராஜகுமாரன் சுற்றி நாலாப்பக்கத்திலும் பார்த்தான். அங்கு இன் னொரு அறையைக் காணவே அதனுட்சென்றான். அங்கு நெருப்புகுண் டத்தில் நெருப்பு தகதகவென்று எரிந்து கொண்டிருந்தது. ஒரு சாய்வு நாற்காலி தானாகவே நகர்ந்து நெருப்பு குண்டத்திற்குச்சமீபத்தில் வந்தது. ராஜகுமாரன் உடனே நாற்காலியில் உட்கார்ந்தான். பின்பு கைகள் இவ னிடத்திற்கு வந்து மெதுவாக இவன் தேகத்திலுள்ள மழையால் நனைந்த உடுப்புகளை எடுத்து வேறொரு விடத்தில் போட்டுவிட்டு நல்ல விலை யுயர்ந்த உடுப்புகளை எடுத்து ராஜ குமாரனுக்கு கொடுத்தன. ராஜ குமா ரன் பயம் நீங்கி முகமலர்ச்சியுடன் அவைகளைப் பெற்று தரித்துக்கொண்

டான். கைகள் மறுபடியும் ஒரு விலை மதிப்புள்ள சால்வையையெடுத்து இவனுக்கு குளிர் போகும்படி இவன் தேகத்தில் போட்டன. பின்பு ஒரு யாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்து இவன் கைகால்களையும், முகத்தையும் சுத்திசெய்து கொள்ள கொடுத்தன. இவனும் அவ்விதமே கைகால்களையும் முகத்தையும் கழுவிக் கொண்டான். பின்பு அவன் மேலிருந்த சால்வையை யெடுத்து விலை மதிப்பு சொல்ல முடியாத மிக வும் சிறந்த பட்டுப் போர்வையை அவனுக்கு போத்திக்கொள்ள கொடுத்து அவனை சாப்பிடும் அறைக்கு அழைத்துப் போயின. இவன் அங்கு சென்றதும் அறுசுவையோடு போஜனம் தயார் செய்யப்பட்டிருப்பதைக் கண்டுகளித்து ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான். இவனுக்கெதிரில் ஒரு அழகான மேஜை வைக்கப்பட்டது. அதில் போஜனமும் பானவகையும் தென்பட்டன. கிண்ணங்களும் தட்டுகளும் பொன்னால் செய்தவைகள்.

இவ்வளவு நேர்த்தியான ஆகாரம் பொன்பாத்திரங்களி லிருக்கின் றதே! என்னுடன் இன்னும்யார் இதை உண்ணுவார்கள்?" என்று ஆச்சரி யப்பட்டுக் கொண்டிருந்தான். இரண்டு அடி உயரமுள்ள ம்ருகங்களில் அநேகம் கதவைத்திறந்துகொண்டு உள்ளேவந்தன.

முதல் ம்ருகம் நீண்டதுணியால் தன்தேகத்தை மூடிக்கொண்டு வந்தது. இரண்டு பூனைகள் அதன்பின் கத்திகளுடன் வந்தன. இவைகளுக்குப்பின் அநேக பூனைகள் கும்பல்கும்பலாக எலிகளும் மூஞ்சூர்களும் நிரம்பியுள்ள கூண்டுகளை எடுத்துக்கொண்டு வந்தன. முதல்ம்ருகம் துக்கத்தில் ஆழ்ந்திருப்பதுபோல் தென்பட்டது. முதலில் வந்தபூனை ஆச்சரியமடைந்திருக்கும் ராஜகுமாரனுக்கு சமீபத்தில் வந்து

தனது நீண்ட மூடுதுணியை எடுத்துவிட்டது. அது மிக்க அழகான வெள்ளைப்பூனை. அதுசிறு பிராயமுள்ளதாயும் சந்தோஷக்குறி சிறிதுமில்லாததாயும் இருப்பதாக இவனுக்குத் தோன்றிற்று.

“ராஜகுமாரா! வாரும், உட்காரும், உமக்கு நல்வரவு கோருகிறேன். நாமிருவரும் உட்கார்ந்து சாப்பிடலாம்” என்று வெள்ளைப்பூனை அன்புடன் சொல்லிற்று. இராஜகுமாரன் பூனைக்கு சமீபத்தில் உட்கார்ந்தான்.

இருவரும் அறுசுவையோடுள்ள ஆகாராதிகளை உண்டார்கள். உண்டவுடன் ராஜகுமாரன் பூனையைப்பார்த்தான். அதன்முன்னங்காலில் பொன்சட்டத்தில் போட்ட ஒருசிறிய உருவப்படம் கட்டி தொங்கவிட்டிருப்பதைக்கண்டான். அதைப்பார்க்கலாமாவென்று பூனையை அரசகுமாரன்கேட்டான். பூனை அவ்வுருவப்படத்தை அவனுக்கு காண்பித்தது. ராஜகுமாரன் அதை ஒற்றுப்பார்த்தான். அது தன்னுடைய உருவப்படமாயிருப்பதைக்கண்டு வியப்புற்றான்.

படத்தில் ராஜகுமாரன் பூனையின் காலில் தொங்கவிட்டிருக்கும் படத்தைப் பார்ப்பதைப் பாருங்கள்.

வெள்ளைப்பூனையோ அப்பொழுது பெருமூச்சுவிட்டது. அது மிகுந்த துக்கத்தில் ஆழ்ந்திருப்பதை ராஜகுமாரன் கண்டு அதைப்பற்றி ஒன்றும் கேட்காமலிருப்பதே நலம்' என்று நினைத்தான். அன்றிரவு சுமார் பத்துமணிவரையிலும் இருவரும் பலவிஷயங்களைப்பற்றி பேசினார்கள். உடனே அரசனை நித்திரை செய்யப்போ என்றுசொல்வதுபோல் கைகள் தோன்றி அரசகுமாரனைத் தொட்டன. அரசகுமாரன் தூங்க

படுக்கை அறைக்குப்போய் படுத்துக்கொண்டான். வெள்ளைப்பூனையும், அதனுடைய பரிவாரங்களும் உடனே வெளிச்சென்றன.

மறுநாள் அதிகாலையில் ஒரு பெருத்த கூச்சல் கேட்டமையால் அரசகுமாரன் எழுந்தான். என்ன சப்தமென்று பலகணிவழியாகப் பார்த்தான். அப்பொழுது வெள்ளைப் பூனை அரசகுமாரனை சந்தோஷிப்பிக்க வேட்டைக்குப்போக ஐந்நூறு பூனைகளை தயார் செய்து கொண்டிருப்பதைக் கண்டு அதிசயித்தான்.

வெள்ளைப் பூனை ஒரு குரங்கின்மீது சவாரி செய்துகொண்டு அரசகுமாரனிடத்திற்கு வந்தது. அரசகுமாரன் சவாரி செய்ய ஒரு மரக்குதிரை தயாராயிருந்தது. இது மாயா சக்தியால் உண்டானது. உடனே அரசகுமாரனும் மரக்குதிரையின்மீது ஏறி வெள்ளைப் பூனையுடன் வேட்டையாடப் புறப்பட்டான். மற்றப் பூனைகள் எக்காளம் என்ற ஒருதுகுழலை ஊதிக்கொண்டு பின்தொடர்ந்தார்கள்.

காட்டுக்குள் சென்றதும் முயல்களும், சீமை முயல்களும் பயந்து நாலாப்பக்கத்தில் தப்பித்துக்கொள்ள ஓட ஆரம்பித்தன. பக்ஷிகள் ஆரவாரத்தைக்கேட்டு மரக்கிளைகளின்மீது தங்கியிருந்தன. குரங்குகள் இருந்த விடங்களிலேயே தயங்கி யிருந்தன. இவைகளெல்லாம் வெள்ளைப் பூனையும் அரசகுமாரனும் வேட்டையாடுவதைக் கண்டு களித்து இன்று நமக்கு சுபதினமென்று நினைத்தன. வேட்டையாடிய பின் களைப்புற்று பரிவாரங்களுடன் வெள்ளைப் பூனையும், அரசகுமாரனும் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள்.

உடனே அரசகுமாரனுக்கு வழக்கம்போல் ஆகாராதிகள் தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. அரசகுமாரனும் வெள்ளைப் பூனையும் பசிதீர உண்டார்கள். வாத்திய கோஷமும் நடந்தது. சிறிது நேரம் வெள்ளைப் பூனை அரசகுமாரனுடன் பேசிவிட்டு தன்னிருப்பிடத்திற்குப்போயிற்று. அரசகுமாரனும் நித்திரை செய்யப்போனான். மற்றவைகளும் மாயமாய் போய் விட்டன.

இப்படி ஒவ்வொரு நாளும் வெள்ளைப் பூனை அரசகுமாரனுக்குப் பொழுது போகும்படியும் சந்தோஷமுண்டாகும்படியும் புதிய புதிய வேடிக்கைகளைச் செய்து வந்தது. இவ்விதம் அது செய்து வந்தமையால் அரசகுமாரனுக்கு நாள் கழிந்தது சிறிதும் தெரியவில்லை. கிட்டத்தட்ட ஒரு வருஷமாய் விட்டது. வெள்ளைப் பூனை செய்துவரும் வேடிக்கைகளைக் கண்டு களித்துக்கொண்டு காலம் செல்லுவதைக் கூட கவனிக்காமலிருந்தான் அரசகுமாரன்.

வரதக்ஷணை.

இப்புவியின்கண் மானிடர்களாய்ப் பிறப்பது மிகவும் அரிது. அவற்றிலும் கூன், குருடு, செவிடு, என்ற அங்கவீனங்களன்றிப் பிறப்பது மிகவும் அரிது. அவற்றினும் உயர்குலத்தில் பிறந்து செல்வவான்களாகப் பிறப்பது மிகவும் துர்லபம். இத்தகைய உயர்குலத்தில் பிறந்து புத்தியில் தீட்சண்யமடைந்து இக்கொடிய வியாபார விவாகங்களை கையாடுபவர்களை என்னென்று உரைப்பது? கல்வியிலும், செல்வத்திலும், மேம்பட்டவர்களாயினும் இக்கொடிய வழக்கத்தினால் மிகவும் தாழ்மையடைகின்றனர். இவ்வியாபார விவாகத்தினால் உண்டாகும் தீமைகள் பலவுள. அநேக குடும்பங்கள் நிலை குலைகின்றன.

இளம்பெண்கள் தங்களது பெற்றோர்களின் ஏழ்மைதனத்தைக் கண்டும், அவர்கள் தங்களுக்குத் தேடும் மணவாளன் சரியாக அகப்படாமையால் அடையும் வியாகூலத்தையும் கண்டு சகியாதவர்களாய், தற்கொலை செய்துகொண்டு மாள்கின்றனர். அந்தோ! இவர்களது ஸ்திதி கொடிது! கொடிது!

ஒருவனுக்கு சில பெண்களிருந்துவிடின் அவனது செல்வம் யாவும் சில வருடங்களுக்குள் அவர்களது சீர்சிலைந்துகளுக்குச் செலவழிக்கப்படுகின்றன. சில வருடங்களுக்கு முன் செல்வவானாகவிருந்தவன் ஓர் ஏழையாகின்றான். தனக்கு எவ்வளவு கஷ்டம் வரினும் அவற்றை கொஞ்சமேனும் பாராமல் தனது பெண் சுகமாக வாழவேண்டுமென்று தான் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை விவாகத்தில் மருமகன் வீட்டாருக்கு அர்ப்பணம் செய்கின்றான். அந்தோ! அவனது மனம் எப்படி வியாகூலமடைந்திருக்குமென்பதை யாவரும் எளிதில் அறியக்கூடும். ஏழ்மையுள்ளவன் கையில் பணமில்லாக் குறையால் தனது அருந்தவப் புத்திரிகளை, முடவனுக்கோ, அன்றி 60 வயது சென்ற கிழவனுக்கோ கொடுக்கின்றனர். அந்தோ! அப்பெண்கள் எப்படி மனச் சந்துஷ்டியுடன் கிழப்பிணங்களை மணம் செய்துகொள்ள இச்சைப்படுவார்கள்?

தங்களுக்கு இணையுள்ள மணவாளர்களை மணப்பதைவிட்டு, அவர்களுக்கு 6 மடங்கு வயதில் பெரியவர்களை மணக்க எப்படிமனம் இச்சைகொள்வார்கள். ஒன்றுமில்லா மூடன் கூட 600 ரூபாயை கொடு என்று கேட்கப்புகின், படிப்பில் தேற்சிபெற்ற பிள்ளைகள் ஆயிரக்கணக்காக வாங்குவது சகஜமேயாம்.

இவ்வரதக்ஷணை என்னும் கொடு வழக்கத்தைச் சீக்கிரம் வேரோடு களையாவிடின், இந்தியர்கள் என்றும் முன்னுக்கு வரார்களென்பது திண்ணம். கனம்வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரியின் மசோதாயாவராலும்கைப் பற்றப்படின் இக்கொடிய வழக்கம் சீக்கிரம் குன்றுமென்பது திண்ணம்.

கோபாலன்

நீர்வள நிலவளத்தில் சிறப்புற்றோங்கிய திருச்சிநகர்தனில் சூரியன் தனது கிரணங்களை அந்திநேரத்தில் எங்கும் பரப்பி பொன்னிற மாக்கினான். அப்பொழுது ஓர் இளைஞன் மலைக்கோட்டைதனைக்கண்டு மிக்க அகமகிழ்ந்தவனாய் விநாயகரைக்கண்டு கைகூப்பி துதிசெய்துவிட்டுஅங்குமிங்குமுள்ள நில வளங்களைக்கண்டு ஆனந்தித்தானேயாயினும் சற்று விசனமுற்றவனாகத் தோன்றினான். இவனது முக விலாசத்தை நோக்கின் யாவரும் எளிதில் அந்தணர் குலத்திலுதித்த உத்தமன் என எளிதில் அறிவார்கள்.

சிவந்தமேனியும் அகன்ற மார்பும், அழகிய முக விலாசமும் கண்டவர் மனதைக் கொள்ளைகொண்டன. இவன் தெருவிற் செல்லுங்கால் யாவரும் இவனைக்கண்டு ஆனந்தியாமல் செல்லார்கள். மாதர் குழாங்கள் நீரெடுக்கச்செல்லின் ஒவ்வொருவரும் தங்களது கண்களால் சுந்திர வாலிபனைக்கண்டு மனம்களிப்பார்கள். இவ்வாலிபனது முகவிலாசம் இத்துணையாயின் அவனது புத்தி நுட்பத்தைப் பற்றி என்னகூறுவது? சுருக்கக்கூறுமின் சுந்திரவாலிபன் யாவரிடமும் தனது நன்னடக்கைக்கும்,புத்திகூர்மைத் தனத்திற்கும்நற்பெயர்பெற்று விளங்கினன்.

இவ்வளவு அழகிய சுந்திர வாலிபனுக்கு மனதில் என்ன வியாகூலமுளது? கடவுளது வலிமையைக்கண்டு மிக்க சந்தோஷமுற்றான். வயல்களையும், அழகிய பூந்தோட்டங்களையும் படைத்த பிரம்மனது மகிமை பல உளதென ஆராய்வானாயினன். தன் மனதிற்குள்ளே தனது நிர்பாக்கிய ஸ்திதியைக்கண்டு மிகவும் நொந்துகொண்டான். தனது பிதாயிருப்பின் தான் எத்தகைய ஸ்திதியிலிருக்கக் கூடுமென்பதை சிந்திக்கலாயினன். சிலவருடங்களுக்குமுன் ஓர் பிரபுவின் புத்திரனாக விருந்து இப்பொழுது ஓர் நிர்பாக்கியனாக யிருப்பதைக்கண்டு மிகவும் மனம் நொந்துகொண்டான். இருப்பினும் தான் பி.ஏ., வகுப்பில் படித்தமையாலும், புத்தி நுட்பமுள்ள இளைஞனாகையாலும் சற்று மனம் தேறினான். 'தான் கூடியசீக்கிரத்தில் பரிக்ஷையில் பாஸ்செய்தால்தனது துக்கம் ஒருவாறுநீங்கும். எல்லாம் ஈசனதுசெயல்' என்று கூறிக்கொண்டு தனது கண்களில் ததும்பும் நீரைத் துடைத்துக் கொண்டு கோபாலன் மெள்ளப்படிக்கட்டுகளினின்று கீழிறங்கினான்.

இவன் கீழிறங்கியவுடன் இவனை நோக்கி மற்றுமோர் இளைஞன் "என்னப்பா கோபாலா யாது ஒருவாராகக் காண்கின்றனை? உனது முகத்தை நோக்கின் மனம் சற்று வேறுபட்டிருப்பதாகத் தோன்றுகிறது. உனதுநண்பனிடம் பகரக்கூடாதா" என்றான்.

கோபாலன்—"ரத்னம் உன்னிடம் ஒளிக்க வேண்டியது என்னிடம் யாதுளது? எனது துர்பாக்கிய ஸ்திதியைப் பற்றி நான் நொந்து கொண்டேனே யொழிய வேறல்ல. உனக்கென்னப்பாகுறை? நீ ஓர் ஜட்ஜியின் புதல்வன். உன்னை உனதுபெற்றோர்கள் அருமையாக வளர்க்கின்றனர். நான் ஓர் அநாதி. என் சார்பில் உனக்கேன் அவ்வளவிரக்கம் என்று கூறி கண்களில் நீர் ததும்பினான்.

ரத்னம்—"கோபாலா! ஏன் நீ இப்படி நொந்து கொள்கின்றனை? நீ கற்ற கல்வியினது பெருமை இதுதானோ? விதியையாரோ வெல்வது?

நீ உன்னை தரித்திரனென்று கூறிக்கொள்வது நியாயமோ? ஏதோ கால வித்தியாசத்தால் நீ இத்தகைய ஸ்திதியை அடைந்தனையேயன்றி வேறன்று. குப்பையில் கிடக்கினும் மாணிக்கம் மாணிக்கமேயாம். உனது பிதா உயர் குலத்திலுதித்த கனவான். அப்படியிருக்க நீ எப்படி ஓர் தரித்திரனாவாய். அடுத்த வருடம் இத்தேதியில் நீ குறைந்தது மாதம் 60 ரூபாய் சம்பாதியாயோ? அப்படியிருக்க நீ ஏன் இப்படி உன்னைவருத்திக் கொள்கின்றனை? பெற்றோர்களிறந்த துக்கமதிகமாக விருப்பினும் அதைப் பொங்க விடுவதினால் நீ அடையும் பயன் யாது? கோபாலா! ஏன் சும்மாவிருக்கின்றாய்? நான் உன்னைப் பன்முறை எனதில்லத்திற்கழைத்தும் நீ வராமலிருப்பது யாது காரணமோ நான் அறிகிலேன். இம்மைகல்மஸ்ஸிற்கேனும் (Michaelmas) நீ அகத்தியம் தஞ்சாவூர் வந்து செல்ல வேண்டும் என்று வெகு உருக்கமாகக் கூறினான்.

கோபாலன்—"ரத்னம் என்னையறியாமல் சின்னேரங்களில் நான் துக்கமடைகிறேன். நான் இல்லீவிற்கு உனதில்லம் வர அசக்தனாகவிருக்கிறேன். ஆகையால் என்னை மன்னிக்கவும். நான் மாயவரத்தில் உள்ள எனது மாமனதில்லம் போவதாக உத்தேசம் செய்திருக்கிறேன். அடுத்த லீவிற்கு கட்டாயம் அவ்விடம் வருகின்றேன். நேரமாகிறது எனக்கு விடை கொடு, நான் செல்ல வேண்டுமென்று விடைபெற்றுக்கொண்டு, தனது ரூமிற்குச்சென்று தனது பெட்டியை எடுத்துக்கொண்டு கடையில் சில சாமான்கள் வாங்கிக்கொண்டு மாயவரம் புறப்பட திருச்சி ஜங்கஷனை நோக்கிச் சென்றான்.

2-வது அத்தியாயம்.

மாயவர அக்கிராரத்தில் ஓர் நாள் மாலைநேரத்தில் மாதர்களும் பெண்களும் சிறந்த பட்டாடைகளும், அணிகலன்களும் அணிந்துகொண்டு வெகு உல்லாசமாக வெளிக்கிளம்பினர். ஒவ்வொருவர்களது இல்லமும் வாயிலில் தண்ணீர் தெளிக்கப்பெற்று கோலங்களிடப்பட்டிருந்தன. எல்லா வீடுகளும் வாயிலில் அழகாக ஜோடிக்கப்பட்டிருந்தன. இதைக்காணின் வெளிச்செல்வோர் எளிதில் தசராவினது ஆரம்பமென அறிவார்கள். தங்களதழகைக் காட்ட இது தான் தருணமென்று மாதர்கள் ஒவ்வொருவரும் தங்களிடத்துள்ள உயர்ந்த ஆடைகளை யணியப்பெற்றனர். வெளிச்செல்லும் வாலிபர்கள் தங்களுக்குச் சமயம் வாய்த்ததென்று இவர்களதழகைக் கண்டு களிப்புற்றனர்.

இம்மங்கையர் கூட்டங்களுள் ஓர் சுந்தரியினது நடையும், அவளது முகவனப்பும் யாவரையும் எளிதில் வசீகரித்தது. அக்குழாங்களுள் அவள் ஓர் திலகம்போல் விளங்கினாள். அவளது கரிய நீண்ட கூந்தலும் விற்புருவமும், அழகிய பற்களும், பவளவாயையும், அழகிய வனத்தையும் கண்டு களிப்பாறச்சென்ற புருடர்கள் வெகு சிலர். அவளது ஒய்யார நடையையே கண்டு ஆநந்திப்போர் சிலர். அவளது வனத்தை நோக்கிக்கொண்டே யிருப்பவர் மற்றும் சிலர். இவ்வழகிய சுந்தரி தனக்கியற்கையாயுள்ள அழகிற்கேற்ப சிலஅணிகலன்களணிந்துகொண்டிருந்ததினால் அவள் ஓர் தெய்வலோக மங்கையைப் போல் தோன்றினாள். அவளது காதிலுள்ள வயிரத்தோடுகள் சூரியனது வெளிச்சத்தால் ஜ்வலித்தன.

ஏனைய வில்லங்களிற்குச் சென்ற பிற்பாடு தனது தாயுடன் தனது வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். வீட்டில் வந்து யாவற்றையும் வெகு நன்றாக அலங்கரித்தாள். தனது தாயை நோக்கி "அம்மா உனது பெட்டியிலிருக்கும் பெரியவெள்ளைக்கார பொம்மைகள் யாவும் கொடு. நான் அவற்றை யெடுத்து கொலுவின் மேற்படியில் அடுக்குகின்றேன்" என்றாள். அவளது தாய் பத்மாவதியம்மாள் சீறி மிக்க கோபத்துடன் "போறுண்டி! ஜானகி நீவைக்கிற கொலுவிற்கு இப்பொழுது வைத்திருக்கும் பொம்மை போராதுன்னா? இதைவிட உனக்கென்னடியழராது" என்று கடுகடுத்துக் கூறினாள்.

அன்றிரவுகொலுவினது வைபவம் முடிந்தவுடன் ஜானகிதன் கையில் ஓர் கடிதத்தை யெடுத்துக்கொண்டு தனது தாயிடம் ஓடோடியும் வந்து. "அம்மா இதோ பார்த்தாயா நமது கோபாலந்தான் இன்று ராத்திரி வண்டியில் வரதாகக் கடிதமெழுதியிருக்கிறான்" என்று வெகு சந்தோஷத்துடன் கூறினாள். பத்மாவதியம்மாள் மிக்க கோபத்துடன் பெண்ணை நோக்கி "ஏன்டீ கழுதை அந்த தரித்திரம் வந்தால் உனக்கென்னடீ! உன் வேலையைப் பார்த்துக்கொண்டு படுத்துக்கொள் போ" என்று இடி முழக்கம்போல் கர்ஜித்தாள். ஜானகி மிக்க விசனத்துடன் தனதறைக்குச் சென்றாள். பத்மாவதியினது புருடனும் இச்சங்கதி தெரிந்தும் எங்கே ஏதாவது கோபாலனைப்பற்றிக் கூறின் தன்னை தனது மனைவி வைவாளோ என்ற பயத்தினால் ஒன்றும் பேசாமல் தனதறைக்குச் சென்றார். மணியம் சுப்பிரமணியய்யர் கோபலனது தாயின் சகோதரன். வெகு சாத்மீகி. தனது சகோதரி புத்திரன் மீது வாஞ்சையுள்ளவர். ஆனால் அதை வெளிக்காட்ட மிக்கவும் பயப்பட்டார். தனது மனைவியைக்காணின் காததூரம் செல்வார். அவள் ஆஞ்ஞையை என்றும் மறுக்கார். அவ்வம்மை சீறிக் கூறும் வார்த்தைகளை ஆசீர்வாதமாக ஏற்றுக்கொள்வார். செல்வம் அளவற்ற துடையனவாயினும் அதனைச் செலவு செய்ய தனது மனைவியினது இஷ்டம்போல் செய்யத் தயாராக விருப்பார். தனக்கு வேண்டிய திரவியங்கள் யாவும் தனது மனைவியனது கைவசத்திலிருந்தன. அவள் இஷ்டமன்றி அதிலிருந்து ஒருகாசுகூட எடுக்க அசக்தராக விருந்தார்.

தினந்தோறும் தனது காலைக் கடன்களையும், ஜபதவங்களையும் சரியாகச்செய்துவிட்டு தனது மனைவியிட்ட அன்னத்தைப்புசித்து அவளது ஆஞ்ஞையைச் சிறமேற்கொண்டு நடப்பார். அவளிடமுள்ள பயத்தினாலேயே இவர் தனது மருமானது வருகையைக் கடிதத்தில் கண்டும் எங்கு கூறின் தனது மனைவி தன்னைக் கோபிப்பாளோ என்ற பயத்தினால் சும்மாவிருந்தார். இத்தகைய புருஷோத்தமர்க்கு பத்மாவதியம்மாள் மனைவியாக விருந்தது வெகு அற்புதமாக விருந்தது. அவ்வம்மை தனக்குள்ள சௌந்தரியத்தைப்பற்றி மிகவும் செருக்கடைந்த மாதுசிரோன்மணி. தனக்கிஷ்டமாயுள்ள ஆடையாபரணங்களை தினந்தோறும் அணிந்துகொண்டு தன தழகைக்கண்டு தானே சற்றுகர்வமடைவாள். தனது தமயன் தாசில் தாராகையால் தனது கணவனை அடிக்கடி அவர் ஏதேனும் பிழை செய்யின் அவரைத் தண்டிப்பதாகக்கூறி பயமுறுத்துவாள். தனது கணவனை ஓர் துரும்பாக நினைப்பாளேயன்றி அவரை என்றும் மனதாற துதியாள். கோபலனை ஓர் தரித்தரனென்று கூறுவதுமன்றி அவனைத்தன்னில்லம் வராதபடியிருக்கவேண்டிய அவமரியாதைகள்

யவும் செய்வாள். தனக்கிருக்கும் துர்க்குணங்களில்லாத தன் பெண்ணினது நற்குணங்களைக்கண்டு மிக்க கோபமுறுவாள்.

3-வது அத்தியாயம்.

கோபாலன் இரவு 9-30 மணிக்கு ரயிலை விட்டு கீழிறங்கி மணியம் சுப்பிரமணியய்யர் இல்லம் நோக்கிப் புறப்பட்டான். அவன் மனதுள் பலவாறு சிந்திக்கலாயினன். தன்னைத்தனது மாமி அன்புடன் ஏற்காளென்று தெரிந்தும் சுந்தரி ஜானகியைக்கண்டு செல்லவேண்டுமென்னும் ஆவல்கொண்டான். வாயிலில் வந்து சிறிதுநேரம் கூவியும் பதிலில்லை. பிறகு சிலநேரத்திற்கெல்லாம் சுந்தரிஜானகி ஓடோடியும் வந்து தனது அத்தானை வெகு அன்புடன் வரவேற்றினாள். உள்ளே சென்று வெகு குதூகலத்துடன் தனது தாயிடம் "அம்மா கோபாலத்தான் வந்துவிட்டார். அவருக்கு அன்னம் போடு" என்றாள்.

பத்மாவதியம்மாள் மிக்க கோபத்துடன் "போடீ கழுதை தூக்கத்தினின்று என்னை யேன்டீ எழுப்புகின்றாய்? அத்தான் வந்தால் ஆரத்தையெடு. ஏனடீ இப்படிக்கத்துகின்றாய்" என்று வெகு பதட்டமாகக் கூறிச் சயனித்துக்கொண்டாள். ஜானகி தனது தாயினது நடத்தையைக்கண்டு மிகவும் விசனமுற்றாள். இதைக்கண்ட கோபாலன் சற்று விசன மடைந்த போதிலும் ஜானகியைத் தேற்றவெண்ணி அவளை யருகிலழைத்து "ஜானகி நான் வரும்பொழுதே திருச்சியில் போஜன மருந்தியபிற்பாடு தான் இவ்விடம் புறப்பட்டேன். எனக்கு அன்னம்வேண்டுவதில்லை யம்மா. நீபடுத்துக்கொள்" என்றான்.

ஜானகி பின்பு சில நேரம் கோபலனுடைய யோக க்ஷேமங்கள் யாவும் விசாரித்துவிட்டு தனது சயன அறைக்குச் சென்றாள். அன்றிரவுமுழுமையும் அவள் நித்திரை செய்யவேயில்லை. தன் மனதுள்ளேயே பின்வருமாறு யோசிக்கலாயினள். "ஏனோ எனது மாதா கோபாலனை நிந்திக்கிறாள். அவரை அன்புடன் வரவேற்றினால் இவளது பாக்கியம் என்ன குறைந்து விடுகின்றது? நம்மைக்காண வேண்டுமென்னும் ஆசையினாலன்றோ இவ்விடம் வந்திருக்கிறார். இவளிடம் ஏதேனும் பணம் பெற்றுச் செல்லவேண்டுமென்று வந்திருக்கிறார் என்று இம்மூட மாதா நினைக்கின்றனளோ? அவரது சுந்தர முகத்தை என்று காண்போமென்று நான் பன்னாட்களாக ஆவல்கொண்டேன். இப்பொழுது நேராகக் கண்டாய்விட்டது. அவருக்கு விடுமுறை நாட்கள் பத்து தினங்கள் தாம் என்று கூறினரன்றோ! அதற்கப்புறம் இவர் திருச்சிக்குச் செல்லின் நாம் இவரை மறுபடியும் பார்க்கவொண்ணாது. என்னுடன் பேசும் பொழுதெல்லாம் எவ்வளவு அன்பாக வார்த்தையாடுகின்றனர். ஆ! அவரது அழகை நான் எப்படி கூறுவது. அழகே ஓர் உருவெடுத்தாற்போலன்றோ தோன்றுகின்றது. அவரது கண்கள் எவ்வளவு வசீகரமுள்ளதாக விருக்கின்றன. சுந்திரவதனத்திற்கேற்ப அவரதுமொழிகள் எவ்வளவு இன்பகரமாக விருக்கின்றன. ஆ இவரை மட்டும் எனது தாய் யாது காரணத்தினால் நிந்திக்கின்றனள்?"

II .. இவரைப் பலதடவைகளில் ஓர் தரித்திரனென்று கூறுகின்றனளே. அப்படி இவ்வுத்தமரைக் கூறுவது அவளுக்கு நியாயமன்று. கால வித்தியாசத்தினால் செல்வத்தை யிழந்தாரேயாயினும் கல்வி செல்வத்தில்

தேர்ச்சிபெற்றிருக்கிறாரன்றோ? இவர் பி. ஏ. வகுப்பில் படிப்பதாக என் தந்தை கூறுவதைப் பன்முறை கேட்டிருக்கிறேன். இவரதுருவம் என் மனத்தின் முன் நிற்கின்றது. இவரையன்றி நான் வேறொருவரையும் மணவேன் என்பது நிச்சயம். ஆ இச்சுந்திர புருடருக்கு நாம் நிகரோ? ஓர் ஏழைப் பெண்ணை மணக்கச் சம்மதமடைவாரோ? சீச்சி இஃதென்ன பேதமை. அவர் நம்மினும் பன்மடங்கு செல்வத்திலும், கல்வியிலும், அழகிலும் சிறப்புற்ற மங்கையை மணப்பாரேயன்றி நம்மை என்றும் மணக்கார்.

எனது தாய் தனது சகோதரன் புத்திரனாகிய ஸ்ரீனிவாசனுக்குக் கொடுக்கப் பிரயத்தனப்படுவதாகத் தோன்றுகின்றது. அவனது நட்பை நான் சற்றேனும் வேண்டேன். அவனது மூட புத்தியையும், குரூரப் பார்வையையும், தடித்த சரீரத்தையும் எவர் விரும்புவார்? பார்வைக்கு ஓர் குரங்கைப் போலிருக்கிறானேயன்றி வேறல்ல. வயதும் ஏறக்குறைய 30 ஆய்விட்டது. எனது தாய் செல்வத்தை நாடுகின்றனளேயன்றி வேறல்ல. அம்மூடனை மணப்பதைக் காட்டிலும் ஓர் பாழும் கிணற்றில் எளிதில் விழுந்துவிடலாம். நான் கோபாலனையன்றி வேறொருவரையும் மணவேன். அவர் சம்மதப்படாவிடின் இறப்பது தான் நலம் என்று கூறிக்கொண்டே கண்ணயர்ந்தாள்.

கோபாலனுக்கு அன்றிரவு முழுமையும் தூக்கமேவரவில்லை. தனது நிர்பாக்கிய ஸ்திதியைப்பற்றி மிகவும் மனதுள் நொந்துகொண்டான். ஆ நமது மாமன் நம்மை வாவென்று கூடக் கூறவில்லையே. யாது காரணமோ தெரியவில்லை. ஆம் அவர் என்ன செய்வார்? எல்லாவற்றிற்கும் அவரது மனைவியினது ஆஞ்ஞைக்குக் கீழ்ப்பட்டிருப்பவராகையால் அவர் ஒன்றும் செய்ய அசக்தராகவிருக்கின்றார். அப்புண்ணியவதி ஏனோ நம்மைக்காணின் சீறி விழுகின்றனள்? நான் இவ்விடம் விடுமுறை நாட்களைச் செலுத்தத்தானே வந்திருக்கிறேன். என்னிடம் அன்பாக இரண்டு மொழிகள் பகரக்கூடாதா? அவர்களை நிந்திப்பதில் யாதுபயன்? இவையாவும் நாம் செய்த பாவ கிருத்தியங்களேயன்றிவேறன்று. எனது பெற்றோர்கள் அவர்கள் என்னை இஸ்திதியில் பார்க்க சகிப்பார்களா? ஜானகி ஒருவள் மட்டுமே என் சார்பில் வெகு பச்சாத்தாபப்பட்டவளாகக் காண்கின்றனள். அவளைக் காணவேணுமென்றே நான் இவ்விடம் வந்திருக்கின்றேன். ஜானகி என்ற பெயர் இவளுக்கேதகும். எவ்வளவு அன்பாக என்னுடன் வார்த்தையாடினள். அவளதழகிய வதனத்தைக் காணும் தோறும் எனது மனதில் ஓர்வித உற்சாகம் கிளம்புகின்றது. அவளது தேனினுமினிய மொழிகளைக் கேட்பின் வெகு இன்பகரமாக விருக்கின்றது. எப்பொழுதும் அவளுடன் பேசிக்கொண்டிருப்பின் 'அதுவே போதுமெனத்தோற்றுகின்றது.' இவ்வழகியபெண்ணை அடைய நம்மாலியலுமா? ஒருக்காலும் முடியாத காரியம். அவளது செல்வத்திற்கேற்பி ஓர் தனவந்தன் புத்திரனுக்குக் கொடுப்பார்களேயன்றி நமக்கென்றும் கொடாரென்பது திண்ணம். நம்மைப்போலுள்ள தரித்திரன் இவ்வழகிய பெண்ணை நாடுவது "முடவன் கொம்புத் தேனுக்கிச்சைபட்டதுபோலாகும்." எவ்வித எண்ணங்கள் எண்ணினும் அவளை எனது மனத்தினின்று அகற்ற அசக்தனாகவிருக்கின்றேன்" என்று கூறிக்கொண்டே கண்ணயர்ந்தான்.

சமாச்சாரக் குறிப்பு.

குவாலியரிலுள்ள சிந்திய மகா ராஜா அவர்கள் 5,000பவுன் லேடி லென்ஸ் டௌன்ஸ் பண்டுக்கு தாராள குணத்துடன் அளித்திருக்கிறார்கள்.

குண்டூர் ஜில்லா கூட்டுறவு கான்பரன்ஸ் தென்னாலி தாலுக்காவிலுள்ள சாவளி என்ற பட்டணத்தில் இம்மாதம் 22வ கூடும். அப்பொழுது குண்டூர் கலக்டர் மிஸ்டர் டேவிஸ் சபைத்தலைமை வகிப்பார்.

பம்பாயிலுள்ள ஸ்திரீ யுத்த கடன் நிதிக்கு இப்பொழுது 20 லக்ஷம் ரூ. சேர்ந்திருக்கிறது. சென்றமாதம் முதல்வாரம் புதன்கிழமையதினம் குஜ்ராத்தி ஸ்திரீகள் சபைகூடிற்று, அப்பொழுது குஜராத்தி ஸ்திரீகள் 2 லக்ஷம் ரூ. யுத்த நிதிக்கு கையொப்பம் செய்தார்களாம்.

ஈஸ்டர் விடு முறை தினத்தில் லாகூரில் அஞ்சுமான் இஸ்லாமியா கல்வி கான்பரன்ஸ கூடிற்று. அச்சமயத்தில் கல்வி விருத்திக்காக ரூ. 35,008வசூல் செய்யப்பட்டதாம். சிக் கல்வி கான்பிரன்ஸும் லாகூரில் கூடிற்று. காஷ்மீர் மகாராஜா அவர்கள் ரூ. 1000யும், தர்பங்கா மகாராஜா அவர்கள் 2000 ரூ. கொடுத்தார்கள். மொத்தம் 80,000 ரூ. கையொப்பம் செய்யப்பட்டிருக்கிறதாம்.

கும்பகோணத்தில் வெகுகாலமாக ஒரு ஹைஸ்கூலிருந்தது. அது 1867-ம் வருஷம் காலேஜியாக கவர்ன்மெண்டாரால் செய்யப்பட்டது. இப்பொழுது 50வருஷமாகிறது. அக்காலேஜியில் படித்து பெரிய அந்தஸ்திலுள்ளவர்கள் அநேகரிருக்கின்றார்கள். அவர்களில் வி. பி. மாதவ ராவ் அவர்கள் ஸி. ஐ. ஈ. ஒருவர். அது காலேஜ் ஆனவுடன் சுமார் 48 வருஷத்துக்கு முன் பி.ஏ. பரிக்ஷையில் தேறினவர்களில் இவர் ஒருவர். அக்காலேஜியின் ஜூபிலி கொண்டாட்டம் சென்ற மாதம் 7வ நடைப்பெற்றது. அப்பொழுது வி. பி. மாதவராவ் அவர்கள் சபைத்தலைமை வகித்தார். இவர் அக்காலத்தில் ப்ரின்ஸ் பாலாக விருந்த மிஸ்டர் போர்டர், மிஸ்டர் கோபாலராவ் இவர்களைப் பற்றி சிறப்பாகவும் புகழ்ந்தும் பேசினார். இவர்கள் மாணாக்கர்களிடத்தில் பக்ஷமாயும் பொறுமையுடன் அவர்களுடைய நடவடிக்கைகளைக் கவனித்து அவர்களை நற்குணமுடையவர்களாகச் செய்வதில் கண்ணும் கருத்துமாயிருந்தார்களென்றும் சொன்னார். கடைசியாக வருஷம் ரூ.100 வட்டியுள்ள வரும்படி திரவிய நிதி ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறேன். இந்த ரூ. 100-ம் இக் காலேஜியில் படிக்கும் மாணாக்கன் பி. ஏ. பரிக்ஷையில் சம்ஸ்க்ருதத்தில் ஒவ்வொரு வருஷத்திலும் முதலில் தேறினால் அவனுக்கு வெகுமதி அளிக்க எனது எண்ணம் என்று சொல்லி முடித்தார்.

வயதான ஸ்திரீகளுக்கு வீட்டிலேயே படித்து வர ஒரு ஏற்பாடு அநேக இடங்களில் நேஷனல் இந்தியன் சபையாரால் செய்யப்பட்டுவருகிறது. பட்டணத்தில் இவ்விதம் செய்து வர ஒரு மீட்டிங் கூடிற்று. அச்சமயம் அநேக இந்திய மாதர்களும், ஆங்கில மாதர்களும் வந்திருந்தார்கள். விவாகமான பெண்மணிகள் வீட்டிலேயே தினம் படித்து வர ஒரு வகுப்பு அவசியமென்று அவ்வித நன்மையை நேஷனல் இந்தியன்

சபையார் செய்து வருகிறார்களென்றும் பட்டணத்திலுள்ளமாதர்களுக்கு இவ்வித படிப்பால் அறிவு விருத்தியடையுமென்று மிஸ்டர் கல்லா குருசுவாமி செட்டியாரவர்களின் மனைவியார் தெலுங்கில் சொன்னார்கள். இவ்வித வகுப்பை ஸ்தாபிப்பதற்கு முன் சரஸ்வதியை பூஜை செய்தார்கள். சிறிய பெண்மணிகள் வாத்தியம் வாசித்துக் கொண்டு கீதம் பாடினார்கள். கலவலதிருவெங்கடத்தான் செட்டி பெண்கள் பாடசாலையிலுள்ள சில பெண்மணிகள் அபிநயப்பாட்டு பாடி ஒரு கதையை நாடக ரூபமாக நடித்துக் காண்பித்தார்கள். இவர்கள் மேலும் ட்ரில் முதலிய சில வேடிக்கைகளை நன்றாகச் செய்து அங்குள்ளவர்களுக்கு சந்தோஷத்தை யுண்டாக்கினார்கள். அங்கு வந்திருந்த மாதர்களும் சிறு பெண்களும் சிற்றுண்டி யுண்டார்கள். அவர்களின் உருவப்படம் எடுக்கப்பட்ட பின் சபை கலைந்தது. 5 மாதர்கள் இப்பொழுது சேர்ந்திருக்கிறார்கள்.

பிரிட்டன் தேசத்தில் 7கோடி பவுன் ஒவ்வொரு வருஷத்தில் பகுத்தறியாமல் தர்மம் செய்யப்பட்டு வருகின்றதாம்.

தெற்கு நைஜீரியாவில் 2000 சதுரமைல் விஸ்தீரணமுள்ள விடத்தில் நிலக்கரியிருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதாம.

பரோடா மகாராஜா அவர்கள் 70லக்ஷம் ரூ. இந்தியா யுத்தக்கடனுக்கு கொடுத்திருக்கிறார்கள். தென்னிந்தியாவிலும் ஒவ்வொருவரும் இதற்குதங்களாலியன்றதைக் கடனாகக் கொடுக்க முன்வருவார்களென்று நம்புகிறோம்.

குயினா சுரத்திற்குச் சிறந்த ஔஷதமென்று சாஸ்திரரீதியாய் யாவருக்கும் தெரிந்த விஷயம். இது 1535ம் வருஷத்தில் யேசுசங்கத்தைச் சேர்ந்த ஒருவரால் கண்டு பிடிக்கப்பட்டது. பெருவென்ற விடத்திற்கு வைஸிராய் ஒருவரிருந்தார். அவருடைய மனைவி சுரத்தால் மிக்க வருந்திகொண்டிருந்தாள். இம்மருந்தால் அவள் சுரம் நீங்கிற்று. இம்மாது இம்மருந்து ஐரோப்பா கண்டத்துக்கு 1639ம் வருஷத்தில் கொண்டு போய் சுரம் வந்தவர்களுக்கெல்லாம் கொடுத்தாளாம். இதன் மகிமை யாவருக்கும் தெரியவே, திரளாகப் பணம் கொடுத்து இம்மருந்தை அநேகர் வாங்கி உபயோகித்தார்களாம்.

ஏழை மகமதியர்களுக்கு ஒரு காலேஜ் டேராடூனில் ஸ்தாபிக்கப்படுமாம். ஏற்கனவே, அலிகாரில் ஒரு காலேஜ் யிருக்கிறது. இதில் வருஷா வருஷம் சேரவரும் பிள்ளைகளில் சுமார் 100 பிள்ளைகளை இடமில்லாமையால் சேர்த்துக்கொள்வதில்லையாம். இந்தப் புதிய காலேஜ ஏழைப் பிள்ளைகளுக்கென்றே ஸ்தாபிக்கப்படுகின்றமையால் அவர்களுக்குமிகவும் பயனைத் தரும்.

ப்ரொபஸர் ரஸிக்லால் என்ற கனவான் கல்கத்தா பிரஸிடென்ஸி காலேஜியிலிருக்கிறார். இவர் டாக்டர் பி.ஸி. ரேயின் மாணாக்கர். இவர் ஒரு வித உப்பைக்கண்டு பிடிக்க பிரயத்தனம் செய்து வருகிறார். யுத்தத்தில் விஷக்காற்றை ஜர்மானியர்கள் உபயோகித்து வருகிறார்களல்லவா? இந்த உப்பால் அவ்விதக்காற்றை உண்டாக்கலாமாம். அவ்விதம் செய்ய அமெரிக்கன் கவர்மெண்டார் 11,900டாலர் ப்ரொபஸர் ரஸிக்லால்தத்துக்கு அளித்திருப்பதைக் கேட்டு சந்தோஷப்படுகிறோம். இவர் முயற்சி கைகூடுமென்று நம்புகிறோம்.

CALENDAR, 1917

பஞ்சாங்கம்

1917 ஞூ மேமீ—பிங்கள ஞூ சித்திரை—வைகாசிமீ

இங்கி.	தமிழ்.	வாரம்.	திதி, நக்ஷத்திரம், பண்டிகை.
1	19	செ	தச 52-27 ம 28-26 ரா 19-4
2	20	புத	ஏகா 58-3 பூ 34-38 ரா 22-39
3	21	வியா	துவா 60-0 உத்தி 40-8
4	22	வெ	துவா 2-5 அஸ் 44-39 தி 2-43
5	23	சனி	திதி 4-8 சி 48-2 தி 5-47 நரசிம்ம ஜயந்தி, மதுரகவியாள்வார் திருநக்ஷத்திரம்.
6	24	ஞா	சது 5-6 சு 50-8 தி 2-31
7	25	திங்	○ பௌ 5-35 வி 50-55 தி 4-19 திருவல்லிக்கேணி கருடோச்சவம்
8	26	செ	கி-பி 4-16 அ 50-41 தி 0-53
9	27	புத	த்வி 1-50 தி 56-43 கே 49-6 தி 4-19 கிரு 2-சு
10	28	வியா	சது 54-11 மூ 46-46 தி 8-19 ரா 11-11
11	29	வெ	பஞ் 49-1 பூ 43-41 தி 9-32 கிரு 2 பு திருவல்லிக்கேணி பார்த்தசாரதி ரதோட்சவம்.
12	30	சனி	ஷஷ் 43-24 உத்தி 40-2 தி 2-28 ரா 17-34
13	31	ஞா	நவ 37-24 திரு 36-1 ரா 13-29 கிரு 2 கு 58-23
14	1	திங்	அஷ் 31-15 அ 31-50 ரா 16-44
15	2	செ	நவ 25-10 ச 24-44 ரா 10-47
16	3	புத	தச 19-20 பூரட் 23-52 ரா 14-37
17	4	வியா	ஏகா 13-58 உத்திரட் 20-30 ரா 17-12
18	5	வெ	துவா 9-12 ரே 17-47
19	6	சனி	திரி 5-13 அசு 15-54 தி 6-13
20	7	ஞா	சது 2-15 ப 14-59 ரா 12-58
21	8	திங்	● அமா 0-22 பி 58-57 கிரு 15-2 ரா 24-0
22	9	செ	த்வி 58-14 ரோ 16-36 தி 31-13
23	10	புத	திரி 60-0 மி 9-30
24	11	வியா	திரி 2-23 திரு 23-7 ரா 23-28
25	12	வெ	ச 5-13 புன 28-2 ரா 18-12
26	13	சனி	பஞ் 9-9 பூ 34-27
27	14	ஞா	ஷஷ் 13-55 ஆயி 41-18 தி 10-20
28	15	திங்	சப் 18-58 ம 47-18 தி 14-18
29	16	செ	அஷ் 23-12 பூ 53-14 தி 9-16 கிரு 2 கு
30	17	புத	நவ 28-23 உத்தி 59-0 தி 13-3 பச்சாதுதயம் சுக்கு
31	18	வியா	தச 32-2 அஸ் 60-0 தி 21-46

Printed at the Commercial Press, Madras &
Published by C. S. Ramaswamy Iyer, Triplicane, Madras, S.E.

OFFICE OF THE REGISTRAR 28 JUN 1917

The Tamil Zenana & School Magazine.

மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. XVIII | Madras, June, 1917. | No. 7
புத்தகம் 18 | சென்னை : ஜூன் மீ, 1917 ஞூ. | இலக்கம் 7

மனைவி.

"மனைவி, தன் கணவனிடத்தில் அந்தரங்க விசுவாசமுடையவளாயும் கடவுளை நம்பியிருப்பதுபோல் அவனிடத்தில் அனுகூலையாயுமிருந்துகொண்டு அவனிஷ்டப்படி நடந்துகொள்ளவேண்டும்" என்று வாத்ஸ்யாயன சூத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பார்யை என்றால் சாஸ்திரப்படி விவாகமானவள். நாம் மனைவி என்கிறோம். மனைவி என்றால் வீட்டுக்குரியவள், வீட்டு எஜமானி என்று அர்த்தமாகும் சம்ஸ்க்ருதத்தில் தர்மபத்தினி என்று சொல்லப்படுகிறது.

எவள் வீட்டுக்காரியங்களைச் சரியாய்ப் பார்த்து, தன் கணவனிடத்தில் அன்புடனிருக்கிறாளோ அவள் தான் மனைவி. மேலும் அவள் தன் புருஷனைத் தன் உயிருக்குச் சரிசமானமாய் பாவிக்கவேண்டும். அந்தரங்க விசுவாசம் மனைவிக்குத்தான் உரியது. அதுபற்றியே மனைவி எத்தேசத்திலும் சிறப்பாக மதிக்கப்படுகிறாள். ஆனால் அவள் தன் கணவனுடன் இல்வாழ்க்கையை நியாயமாயும், பக்ஷபாதமின்றியும், நடத்திவரவேண்டும்.

கணவன் மூடனானாலும் தரித்திரனானாலும், குரூபியானாலும், மனைவி அவனை அலக்ஷியம் செய்யாமல் அவனை பக்ஷமாய் நடத்தி, அவனை நல்மார்க்கத்தில் திருப்பிவர முயலவேண்டுமேதவிர, அவனை ஒரு வேலைக்காரனை நடத்துவதுபோல் நடத்தக்கூடாது. அவ்விதமே கணவனும் தன் மனைவியை நடத்தாமலிருக்கவேண்டும்.

நமது சாஸ்திரத்தில் மனைவி தன்கணவனை தெய்வம்போல் பாவிக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது உண்மையே. கணவன் என்று ஒருவனை ஒருவள் வகித்தபின், தம்பதிகள் ஒத்து வாழவேண்டுமே தவிர சண்டை சச்சரவுகள் செய்துகொண்டிருக்கக் கூடாது. அவர்

கள் அன்பு மிகுந்த சிநேகிதர்களைப்போலிருக்க வேண்டும். கடவுளிடத்தில் எவ்விதம் அவர்களுக்கு பக்தியிருக்கிறதோ அவ்வித பக்தி மனைவிக்குத் தன் கணவனிடத்திலிருக்கவேண்டும்.

பர்த்தா நல்லொழுக்க மில்லாமல் துற்குணமுடையவனாக விருந்தால் உத்தமஸ்திரீ அவனை நல்லவழியில் திருப்பிவர முயலவேண்டும். அவனுடன் இதமான வார்த்தைகளைப் பேசி வரவேண்டும். அவனது கெட்டகுணங்கள் வேரோடு நீங்கும் மார்க்கத்தை மனைவி தன்னாலியன்றளவு செய்துவரவேண்டும். இவ்விதம் மனைவி செய்துவரின் அவளுக்கு நற்பேர் கிடைக்கும்.

புருஷன் பட்டணத்தில் வசித்தாலும்சரி, காட்டில் வசித்தாலும் சரி, மகா பாபியாகவிருந்தாலும்சரி, உத்தம புருஷனாகவிருந்தாலும்சரி, தர்மவானாக விருந்தாலும்சரி, எந்தமனைவி அவ்வித கணவனிடத்தில் அந்தரங்க விசுவாசத்துட னிருக்கிறாளோ அவளுக்கு நற்பதவி கிடைக்குமென சாஸ்திரங்கள் கூறுகின்றன.

மனைவி தன் கணவனிடத்தில் அன்புடனிருந்து தன் இல்வாழ்க்கையைச் சரிவர நடத்திவரின் அவளுக்குத் தன் கணவனைத்தவிர வேறு சிறந்த உறவினரில்லையென இராமாயணம் அயோத்தியாகாண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

அட்மிரல் ஸர் ஜான் ஜெலிகோ.

163-வது பக்கத் தொடர்ச்சி.

ஜெலிகோ வீரத்தன்மையுள்ளவர். இவரது வீரத் தன்மையைக் குறித்து கதை சொல்லப்படுகிறது. ஒரு நாள் புயல் காற்றடித்தது ஜெலிகோ அச்சமயம் ஒரு கப்பலுக்குத் தலைவராகவிருந்தார். ஜிப்ரால்டருக்கு சமீபத்தில் ஒரு கப்பல் மணல் தரையில் காற்றால் தள்ளப்பட்டது. அதிலுள்ள ஜனங்களைக் காப்பாற்ற ஒரு படகில் ஏறிக்கொண்டு துரிதமாக ஜெலிகோ சென்றார். அச்சமயத்தில் படகு கவிழ்ந்துவிட்டது. ஜெலிகோ தெய்வாதீனமாய் தப்பித்துக்கொண்டு அந்தக் கப்பலிலுள்ள ஜனங்களை யெல்லாம் காப்பாற்றினார். இவ்விதம் மனோ தைரியத்துடன் தம் உயிரையும் கவனியாமல் அநேகரைக் காப்பாற்றியதற்காக இவரை யாவரும் புகழ்ந்து இவருக்குப் பொன் பதக்கம் இனாமாக அளித்தார்கள்.

இன்னொரு சமயம் இவர் உயிர் போகும்படியான ஆபத்திலிருந்து தப்பித்துக்கொண்டார். இவர் ஒரு கப்பலுக்குத் தலைவராக விருந்த பொழுது யுத்தப்பயிற்சி செய்து வந்தார். அப்பொழுதுஇரண்டு கப்பல்

களும் ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. அப்பொழுது ஒரு கப்பலுக்கு அடியில் துவாரம் உண்டாய்விட்டது. இதன் தலைவர் இது முழுகிப்போவதற்குள் இதைக்கரைக்குக் கொண்டுபோக முயன்றார். இவருடைய முயற்சி கைகூடவில்லை. அரை மணி நேரத்திற்குள் பாதி கப்பல் ஜலத்திற்குள் போய்விட்டது. பாதி ஜனங்கள் ஜலத்திற்குள்ளும் பாதி ஜனங்கள் ஜலத்திற்கு மேலுமாகவிருந்தார்கள். ஜலத்திற்குமேலிருந்த ஜனங்கள் உடனே காப்பாற்றப்பட்டார்கள். ஜலத்திற்குள்ளிருந்த ஜனங்கள் மனோ தைரியத்துடன் தெய்வமே கதி என்று எண்ணியிருந்தார்கள். ஜெலிகே இக்கப்பலின் மேல்பக்கமிருந்தார்.

இச்சங்கதி ஜெலிகோவுக்குத் தெரிந்தவுடன் ஐயோ! அநேக ஜனங்களின் கதி என்னவாகும் என்று நினைத்து, மிகுந்த துக்கத்துடனும் தைரியத்துடனும் தன்னுடைய உயிரைக்கூட கவனியாமல் அடிக் கப்பலில் யாராவது இருக்கிறார்களாவென்பதைக் பார்க்கப்போனார். அச்சமயத்தில் கப்பலோ வேகமாக முழுக ஆரம்பித்தது. பார்த்தார் ஜெலிகோ, இன்னது செய்வதென்பது இவர் புத்திக்குத் தோன்றவில்லை. சிறிது நேரம் திகைத்தார். உடனே மேல் தட்டுக்கு வந்தார். கப்பலோ முழுகிக்கொண்டேயிருக்கிறது. உடனே சமுத்திரத்தில் தைரியமாகக் குதித்தார். மெதுவாக தட்டுத்தடுமாறி நீந்திவந்தார். இவர் மிக்க பலவீனமாயிருந்தமையால் நீந்த இவரால் முடியவில்லை. கைசளைத்துப் போயிற்று. ஜலத்திற்குள் ஒரு தடவை போய் மேலே வந்தார்.

ஒருவர்ஜெலிகோவைப் பார்த்தாரோ இல்லையோ, வேகமாக நீந்திக் கொண்டுவந்து ஜெலிகோவைப் பிடித்து ஜாக்கிரதையாக கரைக்குக் கொண்டு வந்தார். அநேகர் இவ்விதம் ஜலத்தில் குதித்தார்கள். அநேகர் கப்பல் ஆணியில்பட்டு மாண்டார்கள். சிலர்படகின் உதவியால் காப்பாற்றப்பட்டார்கள். ஜெலிகோ கரைக்கு வந்ததும் பிரக்ஞையற்றிருந்தார். சிறிது நேரம் சென்ற பின் இவருக்கு ஞாபகம் வந்தது. இவர் யாவற்றையும் விசாரித்து சங்கதி பூராவும் தெரிந்துகொண்டார். இரண்டு மூன்று தினமானவுடன் இவருக்கு சிறிது பலமுண்டானது. வழக்கம்போல் இவர் கப்பல் தலைமை வகித்து வந்தார்.

சிறிது காலஞ் சென்ற பின் சீனா தேசத்தில் கலகமுண்டானது. கலகக்காரர்கள் ஐரோப்பியர்களை யெல்லாம் சீனா தேசத்தைவிட்டுப் போகும்படி பலவந்தம் செய்துவந்தார்கள். அநேக பாதிரிகளும், வியாபாரிகளும் கொல்லப்பட்டார்கள். சீனா முழுவதும் கலகம் பரவ ஆரம்பித்தது. அநேக ஐரோப்பியர்கள் பீகின் என்றபட்டணத்தில் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள பதுங்கியிருந்தார்கள்.

இப்பரிதாபமான காட்சியைப்பார்க்க முடியவில்லை. இவர்களுடைய ஸ்திதியோ விசனிக்கத்தக்கதாயிருந்தது. சீனாவிலுள்ள எல்லாத் தேசத்து ஐரோப்பியர்களும் இவ்வித சங்கடத்தி லிருப்பது ப்ரிடிஷாருக்குத் தெரியவே உடனே பெருத்த சேனையை அனுப்பினார்கள். அச்சேனைக்கு ஜெலிகோ தலைவராக நியமிக்கப்பட்டார். இவர்பெருத்த சேனையுடன் புறப்பட்டார். கலகக்காரர்கள் ப்ரிடிஷ் சேனைக்கு பற்பல விதங்களில் தொந்திரவு செய்தார்கள். ஜெலிகோ விடாமுயற்சியுடன் கலகக்காரர்களுடைய கொட்டத்தை தமது புத்திசாதுர்யத்தால் அனேகமாக அடக்கி விட்டார். அப்பொழுது இவருடைய வீரச்செய்கையைப் பற்றி எல்லா தேசத்து மன்னர்களும், மந்திரிகளும் புகழ்ந்து பேசினார்கள். இவருக்கு அனேக கௌரதாப் பட்டங்கள் அளிக்கப்பட்டன. சீனாவிலும் கலகம் பூராவாக அடங்கிவிட்டது.

கலகமடங்கியபின் ஜெலிகோ சீனாவிலிருந்து புறப்பட்டு இங்க்லாந்துக்கு வந்தார். இவருக்கு உயர்ந்த உத்தியோகம் கிடைத்தது. இவர் கடற்படையிலும், தரைப்படையிலும் பற்பல அலுவல்களைவெகு திறமையுடன் யாவரும் மெச்சும்படி செய்து வந்தார். கடைசியாக இவர் ப்ரிடிஷ் கப்பற் படைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் கப்பல்களையெல்லாம் சீராய் பரிக்ஷித்து வந்தார். தமது வேலையில் கண்ணும் கருத்தாயிருந்து வந்தார். அப்பப்போது வெளிவரும் நூதன விஷயங்களைச்செவ்வனே கற்றுவந்தார்.

யுத்தமாரம்பமானதும் இவருக்குப் பின் வருமாறு நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி தந்தி மூலமாய் தெரிவித்தார்:—"இச்சமயத்தில் உமக்கும், உமது மூலமாக உமக்கு கீழுள்ள உத்தியோகஸ்தர்களுக்கும் நான் தெரிவிப்பது என்னவெனில், தாங்கள் பிரிடிஷ் கப்பல்களுக்குத் தலைமை வகித்திருப்பதால் தாங்களும், தங்கள்உத்தியோகஸ்தர்களும் இந்தயுத்தத்தில் கப்பற் படையில் நாம் அடைந்திருக்கும் பெருமையையும், கீர்த்தியையும் காப்பாற்றுவீர்களென்று நம்புகிறேன். மேலும் தங்களது புத்தி சாதுர்யத்தால், தங்களது உத்தியோகஸ்தர்கள் அவ்வித பெருமைக்கும், கீர்த்திக்கும் பின் அடையமாட்டார்களென்ற பூர்ண நம்பிக்கை எனக்கு உண்டு. மேலும் இன்னும்உலகத்தாரனைவரும் அதிசயிக்கும்படியான கீர்த்தியை யடைவார்களென்றும் நம்புகிறேன்."

இவர் மெதுவாகத்தான் பேசுவார். வீண் ஆடம்பரம் செய்யமாட்டார். இவர் தமக்குத் தோன்றிய புதிய புதிய விஷயங்களைக் காரியத்தில் செய்து காட்டுவாரேதவிர வீண் வார்த்தைகளைப் பேசிவரமாட்டார்.

யுத்தம் நடக்கும் பொழுது ஏதாவது அபாயம் சம்பவிக்கும் போலி

ருந்தால் மெதுவாக "அவ்விதம் செய்தால் அபாயம் நேரிடாது" என்று சொல்வார். உரக்க கூச்சலிட்டு பேசமாட்டார்.

இவர் சாந்தமுள்ளவர், முன் கோபக்காரரல்ல. அபார யோசனையுள்ளவர். ஆனால் க்ரம சிக்ஷையிலோ கண்டிப்பானவர். தமது உத்தியோகஸ்தர்களும் மற்றவர்களும் தங்கள் தங்கள் வேலையைச் சரியாய் செய்துவரின் இவருக்கு அதிக சந்தோஷ முண்டாகும். அவ்விதம் அவர்களில் எவராவது செய்யாவிடின் கோபம் கொள்ளாமல் அவரை அழைப்பித்து, அக்காரியத்தைச் சரிவர செய்து வரும்படி கண்டிப்பாய் உத்தரவளிப்பார். இவ்வித நற்குணமுள்ளவர் நமது ப்ரிடிஷ் சேனையிலிருந்து யுத்தம் புரிந்துவருகிறார். இவர் காரியம் கைகூடுமாறு ஈசன் அருள் புரிவாராக.

சாந்த்பீபி

அக்பர் சக்ரவர்த்தி வடஇந்தியாவை ஆண்டுவரும் காலத்தில் இப்ராஹீம் அடில் ஷா என்ற அரசர் பிஜப்பூரில் அரசு புரிந்து வந்தார். அக்காலத்தில் பிஜப்பூர் சிறப்பான நகரமாயிருந்தது. இதில் பலத்த கோட்டையிருந்தது. விசித்திரமான அரண்மனைகளும், உன்னதமான மாளிகைகளும், விசாலமான கடைத்தெருவும், பெரிய பள்ளிவாசல்களும், அழகு பொருந்திய தேவாலயங்களும், ரமணீயமான பூந்தோட்டங்களும், மாடமாளிகைகூட கோபுரங்களுள்ள நீண்டதெருக்களும், அக்கோட்டைக்குள்ளிருந்தன. மேலும் தெருக்களில் இருபக்கங்களில் தென்னை மரங்களும் நன்றாக தழைத்து ஓங்கிவளர்ந்து நிழலைக்கொடுத்தன.

கீர்த்திபெற்ற சாந்த்பீபி என்ற அரசியார்தான் பிஜப்பூரை மேற்கூறிய வண்ணம் அழகுள்ளதாகச் செய்தார்கள். சாந்த்பீபி பிறந்த இடம் ஆமத்நகரம். இது பாமினி ராஜ்யத்தில் முகம்மது டோக்ளாக் காலத்தில் சேர்ந்திருந்தது. தக்ஷிண இந்தியாவில் பாமினி ராஜ்யமும், விஜயநகரமும் பலமடைந்து வந்தன.

ஹாஸன், காங்கு என்ற பிராமணரிடத்தில் வேலைசெய்து ஜீவித்து வந்தான். இந்தகாங்கு என்ற பிராமணர் படித்தவர், புத்தி சாதுர்யமுள்ளவர். ஆகையால் முகம்மது டோக்ளாக்குக்கு இவர் சிநேகரானார். ஹாஸனுக்கு தெய்வாதீனமாய் ஒரு புதையல் காங்கு நிலத்தில் கிடைத்தது. ஹாஸன் சத்தியம் தவறாதவன். எஜமானனிடத்தில்விசுவாசமும், பக்தியுமுள்ளவனாதலால் அப்புதையலைதன்எஜமானனுக்குக்கொடுத்தான்.

எஜமானனாகிய பிராமணன் "ஹாஸன் மிக்க யோக்கியன், நம்மிடத்தில் அன்பும், விசுவாசமுமுள்ளவன்" என்று நினைத்து அவனிடத்தில்

இன்னும் அதிக பிரியமா யிருக்கலானார். சிறிது காலஞ்சென்றபின் இவர் டோக்ளாக்குக்குச் சொல்லி ஒரு நல்லவரும்படி யுள்ளவேலையில் அவனை அமர்த்தினார். ஹாஸன் தன்னுடைய, மாசற்ற நற்குணத்தாலும், புத்தி சாதுர்யத்தாலும் உயர்ந்த பதவிக்கு வந்தான். க்ரமேண தக்ஷிணத்தில் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொண்டான். அதைத்தான் பாமினி ராஜ்யம் என்று சொல்லிவந்தார்கள். அது நாளடைவில் ஐக்கியமின்றி வெவ்வேறாகச் சிதறிவிட்டது.

ஆமத் நகரக்கு சுல்தான் ஹுஸேன் அரசராக விருந்தார். இவருடைய புத்திரிதான் சாந்த்பீபி. சுல்தானுக்கு சாந்த்பீபி ஒரே பெண் குழந்தையாகையால் அவர் அவளிடத்தில் அதிக பிரியமாயிருந்தார். தாம் தர்பார் மண்டபத்திற்குப் போகும்பொழுது தம்முடன் சாந்த்பீபியை யிட்டுக் கொண்டுபோய் தமதிடத்திலேயே சாந்த்பீபியை இருக்கும்படி சொல்வார். சாந்த்பீபிக்கு புத்தி நுட்பமுண்டு, தைரியமுண்டு. தனக்குத் தெரியாத விஷயங்களைத் தனது தகப்பனாரைக் கேட்டு தெரிந்துகொள்வாள். இவ்விதம் செய்வதில் சிறிதும் பயப்படமாட்டாள். ஆனால் தன் தகப்பனாரிடத்திலும் பெரியோரிடத்திலும் வணக்கமுடையவள். இவளுக்குத் தெய்வபக்தியு முண்டு.

சாந்த்பீபி அடிக்கடி தமது தகப்பனாருடன் இருந்து வந்தமையால் ராஜ்யத்தை ஆளுகை செய்யும் முறைகளை யெல்லாம் செவ்வனே கற்றுக் கொண்டாள். இவளது தகப்பனாரும் இவளது விவேகத்தைக்கண்டுகளித்தார். இவளுக்குத் தக்க வயதுவரவே தன் மகளுக்கு விவாகம் செய்விக்க எண்ணினார்.

பிஜப்பூரும் அக்காலத்தில் பாமினி ராஜ்யத்தில் சேர்ந்திருந்தது. பின்னிட்டு ஒரு சுல்தான் அரசுபுரிந்துவந்தார். அவருடைய குமாரர் அலி அதில் ஷா. இவர் கல்வி கற்றவர். நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர், அழகுடையவர். தெய்வ பக்தியுள்ளவர். ஆகையால், இவருக்கு தன் அருமை மகளை மணம் செய்துவைக்க விரும்பினார். மேலும் அக்காலத்தில் தக்ஷிண இந்தியாவில் இந்து ராஜாக்கள் மகமதியர்களை எதிர்த்து சண்டை செய்து கொண்டிருந்தார்கள். “பிஜப்பூர் சுல்தான் குடும்பத்திற்கும் தன் குடும்பத்திற்கும் இவ்வித சம்பந்த முண்டானால் இருதேசத்து சேனையும் சேர்ந்து யுத்தம் செய்யின் இந்து ராஜாக்கள் தோல்வி யடைவார்கள். மேலும் இருதேசத்தாரும் சேர்ந்திருப்பதே இதர விரோதிகளுக்கு ஒருவித பயத்தை யுண்டாக்குமல்லவா?” என்று ஆலோசித்துதமது செல்வக்குமாரத்தியை அலிஅதில்ஷாவுக்கு விவாகம் செய்து வைக்க ஏற்பாடு செய்தார். பிஜப்பூர் சுல்தானும் சம்மதிக்கவே அலிஅதில் ஷாவுக்கும்சாந்த்பீபிக்கும் வெகுசிறப்பாக விவாகம் நடந்தது.

விவாகமானவுடன் சாந்த்பீபி தமது தகப்பனாரை விட்டுப் பிரிந்து பிஜப்பூருக்குக்சென்று தமது கணவருடன் இல்லறத்தை நடத்தி வந்தாள். மகமதியர்களுக்கும் சில இந்து ராஜாக்களுக்கும் சண்டை நடந்தது. மகமதியர்கள் ஜெயித்தார்கள். அநேக சிற்றரசுள்ள பட்டணங்கள் பிஜப்பூர் சுல்தான் கைவசமாயின.

சாந்த்பீபி தமது உதாரகுணத்துடன்சிற்றரசர்களுடைய பட்டணங்களை யெல்லாம் போய் பார்ப்பாள். ஒவ்வொரு அரசருடைய ராணியையும், ரஜபுத்திரிகளையும் கண்டு பேசுவாள். அவர்கள் தங்கள் ராஜ்யம் சுல்தான் ஆளுகைக்குட்பட்டிருப்பதைக் கண்டு கோபத்துடன் சாந்த்பீபியுடன் பேசுவார்களாம். அப்பொழுது சாந்த்பீபி பொறுமையுடன் அவர்களுடன் பேசி அவர்கள் நட்பை அடைவாள். இவள் சிறிதும் கர்வமின்றி ராஜவம்சத்தைச் சேர்ந்த ராஜ புத்திரிகளுடன் இதமான வார்த்தைகளைப் பேசுவாள். அவர்களுக்குத் தன்னாலியன்ற நன்மையையும் செய்வாள்.இவ்விதம் சாந்த்பீபியிருந்தமையால் சிற்றரசர்களெல்லாம் பகையைப்பாராட்டாமல்சுல்தானுடன் சிநேகமாயிருக்க ஆரம்பித்தார்கள்.

ராணி சாந்த்பீபியோ மிகவும் சௌந்தரிய முள்ளவள், இவள் சரீரம் மெல்லியது. இவள் மேனி சுத்தமான மஞ்சள் நிறமுள்ளது. அகண்ட கண்களைப் பார்க்கப் பார்க்க அழகாயிருக்கும். நெற்றிப் புருவம் மெல்லிய கருமையான உரோம முடையது. பவளம் போன்ற உதடுள்ள வாயைப் பார்த்தால் அவள் நிதானமாயும் இனிய குரலோடும் இனிமையான வார்த்தைகளைப் பேசுபவள் என்பதைத் தெரிவிக்கும். விசாலமான நெற்றி இவள் விசேஷஞானமுடையவள் என்பதைத் தெரிவிக்கும். வெளியிற் செல்லும்பொழுது மிகவும் மெல்லீய துணியால் தன் முகத்தை மூடிக்கொண்டிருப்பாள். இது மகமதியர்களுடைய வழக்கம். ஆனால்இது இவளது இயற்கையாய் அமைந்திருக்கும் ராணிக்குத்தகுந்த அழகை மறைக்காது.

குதிரை சவாரி செய்வதில் ராணிசாந்த்பீபி சமர்த்துடையவள். தனது கணவன் யுத்தத்திற்குப் போனாலும் சரி, வேட்டையாடப்போனாலும் சரி அவர் நிழல் பிரியாது அவருடன் போவதுடன் அவர் பக்கத்திலேயே யிருப்பாள். தானும் போர் புரிவாள். வேட்டையும் ஆடுவாள். ராஜ்யத்திலிருக்கும்பொழுதோ தானும் தர்பார் மண்டபத்திற்குச் சென்று ராஜ காரியங்களை யெல்லாம் செவ்வனே கவனித்து வருவாள். யுத்தம் புரிவதில் தைரியத்தைக் கைவிடாள். துணிவு பொருந்திய அநேக வீரச் செயல்களைச் செய்திருக்கிறாள்.

அராபி, பார்ஸி, துர்க்கி முதலிய பாஷைகளைக் கற்று சோல்ஜர்களுடனும், ஜனங்களுடனும் தாட்டியாகப்பேசுவாள். கன்னடமும், மராட்டி

பாஷையும் வெகு நன்றாகத் தெரியும். தனது ஓய்வு நேரத்தில் வர்ணமிட்டு சித்திரம் வரைவாள். பற்பல விநோதப் புஷ்பங்களைப்போல் சித்திரம் வரைவாள். வீணை வாசிப்பதில் சமர்த்தும் புத்தி நுட்பமும் அதிகம். வீணையில் இவளது விரல்கள் படுவதே தெரியாது. அவ்வளவு கைதேர்ந்தவள். மதுரமான பார்ஸீகப் பாட்டுகளையும், இந்திபாஷையிலுள்ள பாட்டுகளையும் இனிய குரலில் பலராகங்களைக்கொண்டு பாடுவாள். இவைகளைக் கேட்க வெகு இனிமையாயிருக்கும். இவளுக்கு தனது கணவரிடத்தில் அத்தியந்த பிரியம். கணவனுடைய இணைபிரியாத அன்புக்கு அளவு கிடையாது.

"அன்பின் வழிய துயிர் நிலை யஃதிலார்க்
கென்பு தோல் போர்த்த வுடம்பு."

அன்போடு பொருந்தியவுடலே வுயிருள்ள வுடலாகும். அவ்வன்பில்லா வுடலே யுயிரற்ற வுடலாகும் என்பதற் கிணங்க ராணியும், ராஜனும் அன்போடு பொருந்தியவர்களாய் இல்லறத்தை நன்றாக நடத்தி வந்தார்கள்.

மேற் கூறிய வண்ணம் சாந்த்பீபி தமது கணவரிடத்தில் மிக்க அன்புடையவளாயிருந்த போதிலும் இவளுக்கு ஓரே ஒரு விஷயத்தில் சந்துஷ்டி சிறிதுமில்லை. மக்களைப் பெறுவதே சிறந்ததன்றோ ? குழந்தைகளிருந்தால் அறிவுடைய பெற்றோர்கள் தங்கள் புதல் வரைத்தம் பொருளென்று சொல்வார்கள், தம்மக்களது மழலைச் சொற்களைக் கேட்டு மகிழ்வார்கள். அம்மகளுடலைத் தொட்டு இன்பம் கொள்வார்கள். தம்மக்களறிவுடைமையானது தம்மைவிட உலகத்துயிர்களுக்கெல்லா யினிதாயிருக்குமென்பார்கள், தன் மகனைக் கல்வியில் வல்லவனெனக் கேட்டதாயானவள் பெற்ற காலத்தினும் பெரு மகிழ்ச்சியடையவாளன்றோ? சாந்த்பீபிக்கு குழந்தையில்லாக்குறை ஒன்று தான் விசனத்தை உண்டாக்கி வந்தது.

மனோ உறுதி.

நமக்குரிய நம்பிக்கையில் நாம் ஒரு கற்பாறையைப்போல் ஸ்திரமாய் நிற்போம். நம் உள்ள மூர்த்தியிடம் நாம் ஜாக்கிரதையாயும், நன்றி யுள்ளவர்களாயும் இருப்போம். ஆண்மையும், சத்தியமும், சுய நயங்கருதாமை முதலிய குணங்களை நாம் எடுத்துக்கொள்ள வேண்டியது. அஞ்சாமலும் பின்பாராமலும் மேலே போவோம். மானுஷீய உதவியைத் தேடக் கூடாது. கடவுளின் கருணை ஒன்றையே பார்த்திருக்கவேண்டும். அவர் காப்பாற்றுவார். அவரையே பிரார்த்திப்போம். அவரை மாத்திரமே

சார்ந்திருப்போம். மனிதவர்க்க உதவி நிலவரமானதல்ல. அவர்கள் சுய நயங் கருதுகிறவர்கள், விசுவாசத்துரோகமும் செய்வார்கள். நம் அன்பிற்காகவே நம்மை அன்பாய்ப்பார்க்கும் அவரே நம்பரமோத்தம சிநேகிதர். ஒரு பெரியார் கூறுவது :—

" கடவுளாகிய அவர் உசிதமின்ன தென்பதறிகிறார். இவ்வுண்மையறியாரெல்லாம் பயனின்றி உரைகள் வழங்கட்டும். இத்தகையரை நாம் துணைக்கொள்வதுமில்லை, விடுவதுமில்லை. நாமோ சர்வேஸ்வரப் பெருந்தகையாரின் ஊழியர்கள். அற்ப மனிதர்களின் கேவலமுயற்சிகள் நம்மதிப்பிற்குக் கீழ்ப்பட வேண்டியவைகளே. மேலே பன்னாட்களாய் வலுமுயற்சி செய்து வந்ததின்பேரில் ஓர் விசேடகுணம் நிர்மாணிக்கப்படுவதாகிறது. அதைரியமாயிருந்து விடாதே. உண்மைக்குரிய ஒரு மொழி ஒரு பொழுதுங் கைவிடக் கூடியதல்ல. வெகு சீக்கிரமாயாவது மிகத்தாமதமாயாவது அது தன்னைத் தாமே காண்பிக்கும். உண்மை, நல்லொழுக்கம், தூய்மை இவை அழிவில்லாதன. உள்ளத் தெளிவுள்ள ஒருவனை என்னிடம் கொடு. நல்வழிப் படுத்தற்கு நான் கூட்டம் விரும்பவில்லை. என் குழந்தாய் துரிதமாய்ப் பற்றிக்கொள். உன் உதவிக்கு ஒருவரையும் பரிகவனியாதே. சர்வஜன உதவியினும் கடவுள் பெரியவரல்லவா? பரிசுத்தமாயிரு, கடவுளிடத்து நம்பிக்கையை வைத்திரு. எப்பொழுதும் அவரையே சார்ந்திரு. நீ சரியான பாட்டையிலிருக்கிறாய், உன்னையெதிர்த்து வெல்வ தொன்றுமில்லை."

நம் ஒழுக்கங்களைச் சீர் செய்வதற்கென்றே சில சமயங்களில் நமக்கு துன்பங்களும், கஷ்டங்களும் வந்து சேருகின்றன. அவைகளே நமக்குப்பரீக்ஷா காரியங்களாகின்றன. அப்பரிக்ஷையில் நாம் தேறவேண்டும் ஒழுக்கத்தை உருவப்படுத்துவதே நமக்கு நன்மைகளாகின்றன என்பதை நாம் அறியவேண்டும். எவ்வளவு அதிகமாக நாம் துன்பத்தை அனுபவிக்கிறோமோ அவ்வளவு சாஸ்தியாக நம் ஆதரணைக்காக நம் தாயை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளுகிறோம். இந்தக் காரணத்தினாலேயே பாண்டவர்களின் தாயார் தனக்கு எப்பொழுதும் துன்பத்தையும், துக்கத்தையும் கொடுக்கும்படி குறைவற்ற பரம்பொருளை வேண்டினாள். ஏனெனில் பொதுதானொரு பொழுதும் அவரை மறவாதிருக்கக் கூடுமென்றே. தோன்வாய் ஒவ்வொரு விஷயமும் நமக்கு சுலபமாயும் ஆநந்தமாயும் தோன்றும்போது நாம் கடவுளை மறக்கிறோம். ஆதலால் அப்படியான ஆசாரியார் நமக்குத் துன்ப ரூபமாய் வந்து நம்முடைய கடவுளை நமக்கு ஞாபகப்படுத்தும்போது அதுவே ஆனந்தமான காரியம்.

ஸ்ரீஹிருதயமூர்த்திக்குத் தொழும்பு செய்வதில் எதிர்க்கப் போதுமான தைரியமுடையவர்களா யிருக்கவேண்டும். "சுவாமி விவேகாநந்தர்"

'என் தலைவர்,' என்ற உபன்யாசத்தின்கண் "உலக முழுதும் உங்களை நொறுக்கிக் கீழே தள்ள விரும்பினாலுங்கூட உங்கள் ஹிருதயமூர்த்திக்கு உழைக்கவும் அவர்க்காக எதிர்க்கவும் கூடும் என்பதை உண்மையில் நீங்கள் நிச்சயிக்கிறீர்களா?" என்று சொல்லுகிறதை ஞாபகப்படுத்துங்கள். இந்த விதமான உற்சாகமும் ஆன்ம நைவேதனம் செய்யும் தைரியமும் அவசியமாயிருக்கின்றன. கேவல எண்ணமுள்ள மனிதர்களால் உண்மையை அனுபவித்தறிய ஒருபோதும் முடியாது: நம் வாழ்நாள்களில் நமக்கு இட்ப்பட்ட வேலையை நாம் தைரியமாய்ச் செய்து முடிக்க வேண்டும், பயப்படவேண்டாம். தைவீகமுறுதலும் தூய்மையடைதலும் நம் சனன உரிமை. உறுதியுடையவனாய் மேலேமன்றாடு. நிட்காமியாயிருப்பவர்கட்கு யாதொருவரிடமும் ஏன் பயம் வேண்டும்? சுயநயங்கருதலே துன்பத்திற்கும் பயத்திற்கும் காரணம். நிட்காமியாயிருப்பவனுக்கு எந்த வித பாபமுமில்லை. இதை யறிந்து எவ்வித பயங்களிலும் கவலைகளிலுமிருந்து விடுபடவேண்டும். மதக் கோட்பாடுகளில் கற்பது பயமின்மையே. தூய்மையான எண்ணங்களாலும் செய்கைகளாலும் ஒருவனுக்கு பயமின்மை வந்து சேரும். கடந்த காலங்கள் சென்றன, இறந்தன. ஆனால் நிகழ்காலம் சீவதிசையிலிருக்கிறது. ஆகையால் நிகழ்கால நிமிஷங்களில் ஒவ்வொன்றை நிட்காமியமாய்ச் செய்.

கர்ம பாட்டையானது ஞானிகள் கூட அடிக்கடி மயங்கக்கூடிய அவ்வளவு கடினமாயும் வளைவாயு மிருக்கிறது. தளர்ச்சி சில சமையங்களில் வருகிறது; ஆனால் நாம் அமைதியாயும் அழுத்தமாயு மிருக்க முயற்சிக்கவேண்டும். கடவுள் வழிகள் மனதிற் கெட்டாதன. நாம் ஜீவதிசையில் இருக்கும் வரையும் போராடுதலே வேண்டும். நம் தவறுகள் ஆயிரக் கணக்கானாலும் அவசியமில்லை: நாம் இன்னும் கையாளாத புதியபலமும் உற்சாகமுங்கொண்டு எழுந்திருக்கவேண்டும். வாழ்நாள் போராட்டத்திற்குரியது. நாம் ஒவ்வொன்றிலும் தைரியமாய்நிற்க எழுந்திருக்கவேண்டும். நம்மாசாரியரது உபதேசத்தைப் பின்பற்ற முயற்சிக்க வேண்டும். எழுந்திரு,நம்பலயீனங்களைநீக்குவோம். ஆன்மா நித்தியதவமுள்ளது. அதற்கோ பாசபந்தமில்லை. நாம்யாருக்கும் பயப்படவேண்டாம். முயற்சியுடன் மேலேபோவோம். பயப்படாதேமேலேபோ. உனக்கு பந்தமில்லை. உனக்கு அழிவில்லை. நம்மை, பலயீனர், பொல்லாதவர், பாபி என்று அழைக்கும்படி சிறிது மிடம் கொடுக்கக்கூடாது: நாம் அப்படியில்லை, நாம் பரிசுத்தமுடையோம். பூரண புத்தியுடையோம். இப்பாட்டைப் பாடுவோம்.

"ஐயன் திருவடிக் கடைக் கலம்புக்கபின்
எம்பயமங்கே யென்செயக்கூடும்
எல்லாம் வல்ல யிறைவன் கருணைக்
கெல்லையில்லை யதுயாம் பெறுமாறே;

பொல்லார் கூடிப் பழிப்பினும் பழிக்க
வல்லார்கூடி வருத்தினும் வருத்துக
எல்லோருமெமை யென்செயலாமே;
அவரெமக்கருளி யவருள் மொழிகொண்டு
இறப்பினுமவன் புகழ்மறப்பது முண்டோ;
அல்லன்வரினு மருள்வழி தந்தான்
யெல்லையிலின்பம் யெய்துவம்யாமே;
உயிர்க்குயிராய் ஒப்பரும் பொருளை
உள்ளமென்னுமோர் தனிக்குடிலில்
மெள்ளயிருத்தி மேன்மை செய்குவமே
அவரே :—நம்முளத்தலைவர் நம்முயிர்க்கிறைவர்
அவர் தம் :—அருள்களி யென்னுமானந்தக கடலுள்
தெய்வக்குழந்தை தோன்றினரென்ன
இருப்பதும் வாழ்நாள் கழிப்பதும் மனனே.'

ஆகையால் அவர் திருவடிக் கடைக்கலம் புகுந்தபின் சந்தோஷமுமானந்தமுமன்றி பயமென்பதேயில்லை. உண்மையில் அது ஒன்றே அதிர்ஷ்டமென்பது. உபாசனை செய்வாரே மிகமிக அதிர்ஷ்டசாலி. "நான் சுலபமாய் பாப விமோசனம் என்பதைக் கொடுக்க முடியும். ஆனால் நான் பக்தி (ஆராதனை) என்பதைக் கொடுக்கிறதில்லை; நான் பக்தியைக்கொடுப்பதால் என்பக்தர்கட்கு நான் கட்டுபட வேண்டியவனாகிறேன்" என்று பகவான் கூறுகிறார். உண்மை பக்தியை யொருவர் அடைவதென்றால் அது நிர்வகிக்க முடியாத கடுமையாயிருக்கிறது. அதை அடைந்தவரும் புகழ்ச்சி இகழ்ச்சியைக் கவனியாது அமைதியாய் நிலையிலிருந்து வேலை செய்யக் கூடியவருமே ஆனந்தியாகிறார்கள்.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்நாளில் ஒவ்வொரு விஷயமும் துன்பமாயும் கடுமையாயும்தோன்றும் பொழுதுகளைப்புமு் போராட்டமுமான சமையங்களே வருகின்றன. இவ்விதமாக நிலைமைகளைக் கடவாமலோ உண்மை வரப்போகிறதில்லை. ஆகையால் நாம் தைரியமாயும் பொறுமையாயுமே இருக்கவேண்டும். அறிவீனர் நினைப்பதுபோல் இவ்வுலகம் ஓர் வசீகரமான நந்தவனமல்ல. இதுமுற்றும் முள்ளுகளால் நிறைந்துள்ளது. இதில் மெத்த மெத்த சாக்கிரதையாய் நாம் உலாவுதல் வேண்டும். விழிப்பாயிருப்பது நன்மைக்குமாத்திரமல்ல, அம்மூர்த்தியின் அபிவிருத்திக்கு நிச்சயமாக அவசியமானது. நாம் விழித்திருக்கும்போது திருடர்கள் நம் அறையில் நுழையமுடியாது. ஆகையால் எப்பொழுதும் சாக்கிரதையாயும் விழிப்பாயு மிருக்கப் பிரயாசைப் படவேண்டும். பின் நம் பொக்கிஷத்தை யிழக்கமாட்டோம். ஆகையால் நாம் பேசி வந்தவைகளி லெல்லாம் உன்னிடத்துள்ள அம்மூர்த்தி யிடத்தும் உறுதியான நம்பிக்கை வை.

கமலத்தன்னை.

ராஜபக்தி.

(210-ம் பக்கத் தொடர்ச்சி.)

கலாவதி சொல்லுகிறாள்.

எதுகுலன் வாசற்படியேறிக் கதவைத் தட்டவும், வழக்கம்போல் கலாவதி கதவைத்திறந்தாள். எதுகுலனைக்கண்டதும் அவளுக்குண்டான சந்தோஷத்துக்கு அளவில்லை. "ஓ! ஹோ!! எதுகுலதிலகா!! வாருங்கள்! வாருங்கள்!! உள்ளேபோகலாமே!" என்றாள். எதுகுலன் "சந்தோஷம்; அப்படியே செய்வோம்" என்று சொல்லித் தலைகுனிந்து உள்ளே சென்றான். முன்னால், எதுகுலன் பிரதிநிதியுடன் முதல்நாள் பேசிய அறைக்குப்போய்ச் சேர்ந்தனர் இருவரும். அங்கே ஒரு நாற்காலியில் எதுகுலனை உட்காரச்சொல்லி, கலாவதி "ஐயா, புண்யாத்மாவே!! உமக்கு வந்தனம்! வந்தனம்!! அத்யுக்ரமான அக்னியில் நான் விழுந்து, புழுப்போல் வெந்துபோகாமல், என்னைக்காத்துரக்ஷித்த உமது நன்மைக்கு என்ன கைமாறு செய்யப்போகிறேன் ஏழையாகிய நான்? உம்மைக்கண்டு நேரில் உமக்கு வந்தனமளிக்காமல் இதுவரையில் என் மனம் புண்பட்டு வருந்திற்று. உம்முடைய தைரியத்தை நான் எவ்விதம் கொண்டாடுவேன்——" என்றிப்படி பலவாறு மனதார அவன் நல்ல குணங்களைப்புகழ்ந்தாள். அதினும் பதின்மடங்கு அவளுடைய கண்கள் பேசாமலே அவளுடைய நன்றியறிவை வெளிப்படுத்தின. அவள் மனத்திலோ நன்றியறிவென்கிற ஒரு எண்ணம் தவிர வேறு எண்ணம் இருப்பதற்கே இடமில்லாமல் போயிற்று.

எதுகுலன் உள்ளுக்குள் சந்தோஷத்துடன் "அம்மா! ஏதோ நான் செய்த அற்பகாரியத்தை நீங்கள் வெகு அதிகமாய்ச் சிலாகிக்கின்றீர்கள்!! அப்படிச் செய்யவேண்டிய அவசியம் உண்டென்று எனக்குத்தோன்றவில்லை. அக்கொடிய நிலைமையில் நீங்கள் இருந்தபோது எவர்தான் மனமிறங்கி உதவிசெய்யாமல் சும்மாவிருத்தல்கூடும்? அந்நிலையில் மனிதரின்றி மிருகமிருப்பினும் நான் அவ்விதமே முன் சென்று உதவி செய்திருப்பேன். புருஷனென்று பெயர்படைத்தவன் எவனும், உயிரைத் திரணமாக எண்ணி, நான் செய்தமாதிரியே துணிந்து காப்பாற்றியிருப்பான். சந்தேகமில்லை. நான் உங்களைக் காப்பாற்றாதிருப்பின் என்னைப் புருஷனென்று உலகத்தார் மதிக்கக்கூடுமோ? பேடியிலும் பேடியென்று நான்போகும் திசையைக்கூடத் திரும்பிப்பார்க்கமாட்டார்கள் மனிதர்கள்." என்று பதிலுரைத்தான்.

"நீர் செய்த இப்பெரிய உபகாரத்துக்குப் பிரதியாக ஏதாவதுகொஞ்சம் பிரதியுபகாரம் செய்யக்கூடுமாயின்—" என்பதற்குள், எதுகுலன்,

"அம்மா! உங்களுக்குக் கொஞ்சமேனும் பிரயாசமேவேண்டாம். நான் செய்த காரியம் நீங்கள் நினைக்கிறபடி அவ்வளவு தூரம் மெச்சத்தக்கதும் அன்று. நீங்கள் உமது தகப்பனாரிடம் சொல்லி ஏதாவது உபகாரம் செய்வதாக எண்ணும்பக்ஷத்தில், நீங்கள் எண்ணும் காரியமும் பிரயோஜனப்படாது. நான் இப்பொழுதுள்ள விஜ்ஜலவீரனிடம் எவ்விதமான உத்தியோகத்தையும் வகிக்கமாட்டேன். ஆகையால் அவ்விதமாய் நீங்கள் பிரயத்தனம் செய்வது வீணாகும்: தயவுசெய்து அவ்விதமான பிரயத்தனங்களை நிறுத்திவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றான்.

"நீர் இவ்விதம் பதில் சொல்லுவீர் என்ற சம்சயம் எனக்கு இதற்கு முன்னேயே உண்டு. அதற்காக உம்மை நோவதில் பயனென்ன? இராஜத்துரோஹிகள் என்று உம்மைப் போன்றவர்கள் சொல்லுகிறார்களே, அவர்களில் பல்பேர், கூடுமானால் இன்றைக்குக் கூட குடியரசுக்காரர் கக்ஷியை விட்டு அரசன் கக்ஷியைச் சேர்ந்து கொள்ளத் தயாராய் இருக்கின்றனர். ஆனால் அவ்விதம் செய்வதற்கு எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன......சரி; அது கிடக்கட்டும்; நீர் எங்கே குடியிருப்பது?"

எது "இவ்வனாந்தரத்தில் மற்றொரு கோடியில், என் பாட்டனாருடைய வீட்டில் குடியிருக்கிறேன்."

கலாவதி :—"நீர் மாளிகையில் வளர்ந்ததாக என் தகப்பனாரிடம் சொன்னீர் அல்லவா?"

எது: "ஆம் அங்கே தான் வளர்ந்து வந்தேன், நரசிம்ம மல்லவீரர் கொண்ட நகரில் படுமளவும் அங்கேயே இருந்தேன்."

கலாவதி:—"நீர் அவ்விடத்திலேயே கல்வி கற்று வந்தீர் அல்லவா?"

எதுகுலன்:—"ஆம்."

கலாவதி:—"நீர் மாளிகையில் வளர்ந்து மாளிகையில் கல்வி கற்றவரானால் உம்மை வனபால ராக்கவா நரசிம்ம வீரர் எண்ணியிருந்தார்?"

எதுகுலன்:—சற்று முகம் சிவந்து "இல்லை, நான் சிறந்த போர் வீரனாக வேண்டுமென்பது அவரெண்ணம்."

கலாவதி:—"உமக்கும் நரசிம்மவீரருக்கும் ஏதாவது உறவுண்டோ?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை"யென்று அதிருப்தியுடன் பதில் சொல்லி விட்டுத்தன் நாற்காலியிலிருந்து எழுந்து விட்டான். ஏனெனில் இப்படிக் குறுக்கு வெட்டு வெட்டில் பல கேள்விகள் கேட்பதைப்பார்த்து எதுகுலனுக்கு அவ்விடத்தில் இருக்கப் பிடிக்கவில்லை. மேலும் மிதமிஞ்சி இராஜத்துரோஹிகளுடன் பேசுவது தன் க்ஷேமத்துக்கு அபாயமென்று எண்ணி, எழுந்துபோகப் பிரயத்தனம் செய்துகொண்டே, "இப்பொழுது

நரசிம்மவீரர் உயிரோடிருப்பின், அரசனுடைய ஸ்திதி வேறுவிதமாய் இருந்திருக்கும். நானும்—நானும் அரசனுடைய இராணுவத்தில் ஓர் போர்வீரனாய்ச் சேர்ந்திருப்பேன். சந்தேகமேயில்லை. அதைப்பற்றிப் பேசுவதில் பயனென்ன...நான் போவதற்குமுன் உங்களைச் சிலகேள்விகள் கேட்கவேண்டும். உமது வம்சத்தார் எவர்?"

"என்தாய் வம்சத்தார் குலோத்தமர்கள்; ஸ்ரீஅனந்த அசலகுலோத்தமர் எனது அம்மான். அவரை உமக்குத் தெரியுமோ?"

"அப்படியா! அவர் நரசிம்மமல்லர் போலவே உயர்குடியிற் பிறந்தவர், தென்மேற்கு நாடுகளுக்கு அதிபதியாய் இருந்தவர்."

"ஆம்! ஆம்!!"

"அவ்வளவு உயர்ந்த வம்சத்தில் பிறந்த நீங்கள் தாழ்ந்த நிலைமையில் இருக்கும் என்னை ஒரு பொருட்டாக எண்ணி இவ்வளவு தூரம் தயவுசெய்து பேசியதற்கு மிகவும் வந்தனம். தாயே! போய் வருகிறேன்; மறுபடி ஒருமுறை வந்தனம், தயவுசெய்து உத்தரவு கொடுக்கவேண்டும்."

"ஐயா! கருணைக்கடலே!! நீர் போகுமுன் மறுபடி ஒருமுறை உமக்கு மனதார வந்தனமளிக்கின்றேன்—இந்தப் பயனில்லா உயிரைக் காப்பாற்றிய உமக்கு ஈசன் அருள்புரிவாராக!!—என் தகப்பனார் வந்தவுடன் தயவுசெய்து இன்னொருமுறை இங்கே வரவேண்டும். உம்முடைய தைரியத்தை அவர் தினந்தோறும் புகழ்ந்துபேசுகிறார். உம்மை அதிக மரியாதையாய் நடத்துவார் என்பதற்குச் சந்தேகமில்லை—பார்ப்பதற்கு அவர் முகம் சிரிப்பில்லாமலும், கடுகடுப்பாயும், விசனகரமாயும் இருப்பினும், அவர் மனது எவ்வளவு நல்லதென்பது அவருடன் பழகினவர்களுக்கே தெரியவரும். என்தாய் இறந்தபின்னர் அவர் சிரிப்பதே அபூர்வமாய்விட்டது."

என்பதற்குள் எதுகுலன் அறையின் வாசற்படியண்டை நின்றுகொண்டு "இருக்கலாம்! நான் மனதார வெறுக்கும் கக்ஷியைச்சேர்ந்து, விஜ்ஜலனிடத்தில் உத்யோகம்பெற்று, அவனுக்குக்கீழே உழைப்பவரிடத்தில் எவ்வளவுதூரம் நல்ல அபிப்பிராயம் படக்கூடுமோ, அவ்வளவு தூரம் அவரை மரியாதையாய் மதிக்கின்றேன். இதற்குமேல் நான் என்ன சொல்லக்கூடும்? சாத்தியமில்லை." என்றான்.

"ஐயா, எனக்குத்தெரிந்த இரகசியங்களையெல்லாம் உம்மிடம் சொல்லமுடியாது. இல்லாவிட்டால் விஜ்ஜலன் கக்ஷிக்கும் என் தகப்பனுக்கும் உள்ளசம்பந்தம் சரியாய்த்தெரியும். சுருக்கமாய்ச் சொல்லுவோமானால் என் தகப்பனாரும், அவருடைய சில சினேகிதர்களும் விஜ்ஜலருடைய நெருங்கிய இஷ்டர்களென்று நீர் எண்ணவேண்டாம். இதை

நீர்மட்டும் அறியத்தக்கது. இது உண்மையென்று நான் மனதாரச் சொல்லக்கூடும்."

"அப்படியிருப்பின் எனக்கு அவரிடம் மரியாதை அதிகமாகின்றது ஆனால் ஏன் அவர் விஜ்ஜலனிடத்தில் உத்தியோகம் செய்யவேண்டும்? விட்டுவிடலாமே?"

"விட்டுவிடலாம், உண்மையே; இவர் விடுவதானாலும் இவரையார் விடுகிறார்கள்? 'குடியரசு குடியரசு' என்றுசொல்லி, ஒவ்வொரு சுத்த வீரனையும் சிக்கவைக்கின்றார்கள் அல்லவா? உண்மையாகவே விஜ்ஜலன் யார்யாரிடத்தில் சந்தேகப்படுகிறானோ, அவர்களுக்கு ஒவ்வோர் உத்தியோகம்கொடுத்து அப்பால் விலக்கிவிட்டான். வேண்டாம் என்றாலோ ஆபத்து. என் தகப்பனாரும் விஜ்ஜலனிடத்தில் அகப்பட்டுக்கொண்டு கஷ்டப்படுவதைப்பார்க்கிலும் இவ்வனாந்தர வாசியென்று வந்துவிட்டார். அவர் மனதுக்கு விரோதமாய் எத்தனையோ காரியங்கள் நடந்ததுபற்றி அவற்றையெல்லாம் பார்த்துச் சகித்துக்கொண்டு கல்யாணபுரியில் இருப்பதைவிட வனவாசம் போவதுமேலென்று இங்கே வந்து விட்டார். இந்த உத்தியோகத்தால் அவருக்குச் சேனையாவது, பலமாவது, அந்தஸ்தாவது, புகழாவது உண்டா? இந்த ஆளில்லாக் காட்டில் அவருடைய சாமர்த்தியம் வீணாகி, இரும்பு துருப்பிடிப்பதுபோல், பலமற்றுப் போகட்டுமென்று தள்ளிவிட்டான் விஜ்ஜலன்."

"இங்கே அவர் ஒன்றும் செய்ய முடியாதென்பது உண்மையே. ஆனாலும் என்னையும் என்னைப் போன்றவர்களையும் தண்டிக்கக் கூடுமல்லவா?" என்றான் புன்சிரிப்புடன்.

"என் தகப்பனாரைப் பார்ப்பதற்கு மறுபடி எப்பொழுது வருகிறீர்?" என்றாள், கேள்விக்கு நேராய் பதில் சொல்ல இஷ்டப்படாமல்,

"எப்பொழுதென்று நிச்சயமாய்ச் சொல்லமுடியாது: திருட்டுத்தனமாய் மிருக வேட்டையாடும் மனிதர்கள் விஜ்ஜலப்பிரதிநிதியின் முன் வருவது தப்பல்லவா? ஒருக்கால் என்னைத் திருடனென்று வனபாலர்கள் பிடித்து இழுத்துக்கொண்டு அவரிடம் கொண்டு வந்தால் அப்பொழுது பார்த்துக்கொள்ளுகிறேன். அச்சமயத்தில் கட்டாயமாய்ப் பார்க்கவும் வேண்டியதுதானே!!" என்றான் சலிப்புடன்.

"மிருகங்களை வேட்டை யாடவேண்டாம், ஐயா! அப்படி நீர் வேட்டையாடினாலும் ஒருவரும் உம்மைத் தொந்தரவு செய்யமாட்டார்கள். உம்மை எவராகிலும் தொந்தரவு செய்வதானால் என் தகப்பனார் இராஜப்பிரதிநிதியாய் இருந்து பயனென்ன? போய்வாரும்;" என்றாள் கலாவதி.

எதுகுலனும் மரியாதையாய்த் தலைகுனிந்து விடை பெற்றுக் கொண்டு வெளியே போனான்.

வெளியே வந்து, அச்சல பாரிஜாதனைக் கண்டதும் அவன் "ஐயா! நீர் வந்து நேரமாயிற்றுப் போலேயிருக்கிறது. இந்நேரம் கலாவதியம்மா ளிடத்தில் பேசிக்கொண்டிருந்தீரா? எனக்கு மிகவும் சந்தோஷம்; இந்த மரியாதையே உமது செல்வாக்கை இப்பிராந்தியங்களில் அதிகப்படுத் தும்—நீர் வனத்தில் சந்தித்த தடியன், உம்மைத் திருடனென்றும், மான் வேட்டை யாடுகிறவனென்றும், ஆகையால் குற்றவாளியாக்க வேண்டுமென்றும் சொன்னான். நான் அவனைப் பேசவொட்டாமல் தடுத்து, நானே உம்மைப் பல தடவைகளில் வேட்டைக்கு அழைத்துப் போவது வழக்கமென்றும், இவ்வனத்திலேயே உம்மைப்போல் வில் லாளி இல்லை யென்றும், இவ்விஷயமெல்லாம் பிரதிநிதியாருக்கும் தெரியு மென்றும், சொல்லி யனுப்பினேன். நான் மணியகாரனானபடியால், எனக்கு பயந்து, இந்தப் பாதகர்கள் உம்மைத் தொந்தரவு செய்யமாட் டார்கள்" என்றான்.

"சந்தோஷம் பாரிஜாதா! எல்லாம் விதிப்படி நடக்கின்றது? விதி க்கு மீறி ஒன்றும் நடக்கப்போகிறதில்லையே!!"

பிறகு எதுகுலன் தன் வீட்டில் நடந்த விருத்தாந்தங்களையும், செஞ்சுப் பிள்ளையைக் குழியில் இருந்து எடுத்த விதத்தையும் விஸ்தார மாய்ச் சொல்லவே, பாரிஜாதனுக்கு வெகு விநோதமாய் இருந்தது. சிறிது நேரம் பேசிய பின்னர், எதுகுலன், "நான் வனத்தில் கண்டேனே அந்தவனபாலன் பேர் என்ன?" என்று கேட்டான் பாரிஜாதனை.

"ஜேடன் கிருப்பண்ணன். இந்த சேனையைவிட்டு வந்தவன். பேரும் சரியாய்த்தான் இருக்கின்றது, முகத்துக்குத் தக்கபடி!! அவன் முகம் அப்படியிருக்கின்றது பார்த்தீர்களா?"

"அவன் முகமா? அவன் முகமே அவன் அயோக்கியன் என்று காட்டுகின்றதே!!"

"ஆனால் அவனைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. வந்து 10, 15 நாள் தான் ஆச்சுது: அவ்வளவு தான்."

"ஆனாலும் அவன் ஒருவரிடமும் பக்ஷமாய் இருப்பான் என்று எனக்குத் தோன்றவில்லை, அப்பா! சோறு போடும் கையைத் திரும்பிக் கடிக்கும் கீழ் ஜாதி நாயைப் போன்றவனோ என்னவோ, பாரிஜாதா!! நீ ஜாக்கிரதையாய் இரு! அப்பா!!" என்றான் எதுகுலன்.

எதுகுலன் அன்றிரவு பாரிஜாதன் குடிசையிலேயே தூங்கிவிட்டு, விடியற்காலம் கொஞ்சம் ஆகாரம் பண்ணிக்கொண்டு, தன் ஆயுத சமேத னாய் 'உடும்பையும்' கூட்டிக்கொண்டு, தன்னில்லை நோக்கிப்புறப்பட் டான்.

குடும்ப சம்ரக்ஷணையும் சுகாதாரமும்.

ஜலம்

அசுத்த ஜலத்தால் உண்டாகும் கெடுதிகளோ பல; அசுத்த ஜலத்தில் காலரா, விஷசுரம் முதலியவைகளை உண்டாக்கக் கூடிய க்ருமி களிருக்கும். அந்த ஜலத்தைக் குடித்தால் அதிலுள்ள க்ருமிகள் தேகத் திற்குள் சென்று பல க்ருமிகளாகின்றன. இவ்விதம் க்ருமிகளால் பற்பல வியாதிகள் உண்டாகும். ஆகையால் ஜனங்கள் ஒரு ஊரிலிருந்து மற்ற ஊருக்குப் போனால் அங்கேயும் ஜலத்தைக் காய்ச்சி குடிக்கவேண்டும்.

ஜலத்தை சுத்தம் செய்யும் வகை,

ஊற்றுஜலம், ஆழமான கிணற்றின் ஜலம், மலைப்பிரதேசத்திலுள்ள ஏரிஜலம், மழை ஜலம், சமையல் முதலியவைகளுக்குரியதே. சென்னையில் குழாய்களின் மூலமாய் வருகின்ற ஜலமும் சமையலுக்கு நல்லதுதான். ஆனால் இதில் சிற்சில சமயங்களில் அழுக்கு தென்படுகிறது. ஆகையால் இந்த ஜலத்தை வடிகட்டிய பின் உபயோகிப்பது மிகவும் நல்லது.

ஜலம் அசுத்தமாயிருந்தால் பின் வருமாறு அதை சுத்தி செய்து கொள்ளவேண்டியது.

ஜலத்தை சுமார் 10 அல்லது 15 நிமிஷம் வரையில் கொதிக்க வைக்க வேண்டும். ஜலம் கொதிக்கும் பொழுது அதிலுள்ள க்ருமிகள் இறந்து விடும். இவ்விதம் அடிக்கடி செய்து வந்தால் அசுத்த ஜலம் சுத்த ஜலமாய் விடும். கொதிக்க வைத்த ஜலத்தைத் திறந்து வெகு நேரம் வைத்திருக்கக் கூடாது. அவ்விதம் வைத்திருந்தால் அப்பாத்திரத்தில் தூசி விழும், மேலும் வேறு விதங்களால் ஜலம் அசுத்தமாய் விடும். காய்ந்த ஜலத்தை நன்றாக மூடிவைக்க வேண்டும். கொதிக்க வைத்த ஜலம் நாவிற்கு உருசியாயிராது. ஆகையால் கொதிக்க வைக்காத ஜலத்தை அநேகர் குடிக்கிறார்கள். அவ்விதம் செய்வதால் பற்பல வியா திகள் உண்டாகின்றன. நாம் ஒரு ஊரை விட்டு மற்றொரு ஊருக்குப் போனால் அங்குஜலத்தை நன்றாகக் கொதிக்கவைத்து குடிக்க வேண்டும். அவ்விதம் செய்யாவிடின் ஜலதோஷம், தலைவலி முதலிய நோவுண்டா கும், சுரமுண்டாகும். அந்த வூரில் காலரா விஷசுரம் முதலிய வியாதி களிருந்தால் அவைகளும் வரும்.

வீட்டில் இரண்டு மூன்று நாள் வைத்திருக்கும் ஜலத்தை உபயோ கிக்கக்கூடாது. ஜலத்தில் கையைப் போடக்கூடாது. சுத்தமான பாத்தி ரத்தை உபயோகிக்க வேண்டும். ஜலத்தை எப்பொழுதும் மூடி வைக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு வேண்டிய விஷயங்கள்.

1. குழந்தைகளைத் தாய்மார்கள் வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வர வேண்டுமென்பது தாய்மார்களுக்குத் தெரியும். நமது தேசத்தில் குழந்தைகளுக்கு ஸ்நாநம் செய்து வைக்கும் பொழுது அதிகசூடுள்ள ஜலத்தை உபயோகிக்கிறார்கள். இது மிகவும் தப்பு. இவ்விதம் செய்வதால் குழந்தைக்கு அபாயம் நேரிடுவதுண்டு. ஆகையால் தாய்மார்கள் அதிக சூடில்லாத ஜலத்தை உபயோகித்து வரவேண்டும்.

குழந்தைகள் மூன்று அல்லது நான்கு வயதானதும் தாய்மார்கள் அவைகளின் தேக சுத்தத்தைப்பற்றி அதிகமாகக கவனிக்கிறதில்லை. இரண்டு நாளைக்கொரு தடவை சிலர் தங்கள் குழந்தைக்கு ஸ்நாநம் செய்விக்கிறார்கள். இது தப்பு. தினம் குழந்தைகள் ஸநாநம் செய்து வரவேண்டும். அப்படி செய்து வந்தால் தான் அவர்களுடையதேகம் சுத்தமாயிருக்கும். ஆனால் சிறிய குழந்தைகளாச்சே, ஜலதோஷம், சுரம் முதலியவைகள் வந்து விடுமே என்று சிலர் சொல்வார்கள. இது உண்மைதான். ஜலத்தைக் காயவைத்து அதில் ஸ்நாநம்செய்யச் சொல்லலாம்.

குழந்தைகளுடைய தோல் மிகநுட்பமானது. மெல்லியது. ஆகையால் எரிச்சலை யுண்டாக்கும்படியான சோப், சீக்காய் முதலியவைகளை உபயோகிக்கக் கூடாது. நல்ல கடலை மாவு, பயிற்றும்பருப்புமாவு, முதலியவைகளுடன் கஸ்தூரி மஞ்சள் கொஞ்சம் சேர்த்து மெதுவாகத் தடவலாம். அவர்கள் ஸ்நாநம் செய்தவுடன் உலர்ந்த மெல்லிய துணியால் அவர்கள் தேகத்தை நன்றாகத் துடைக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு எப்பொழுதும் அழுக்கில்லாத உடுப்புகளைத் தரவேண்டும். சிறிதும் அழுக்கு அதில் இருக்கக்கூடாது. அவ்விதம் குழந்தையின் மீதுள்ள உடுப்பில் அழுக்கிருந்தால் அதை எடுத்து விடவேண்டும். நல்ல உடுப்பைத் தரித்துக் கொள்ளும்படி சொல்லவேண்டும். இவ்விதம் குழந்தைகள் சுத்தமாயிருந்தால் வியாதி ஒன்றும் வராது.

சாரதாம்பாள்.

(224-ம் பக்கத் தொடர்ச்சி.)

6-வது அத்தியாயம்.

கோவிந்தசாமிபிள்ளை பெண் "கண்ணம்மாள்" விவாகத்தைநாமும் போய்ப் பார்ப்போமென்று சிலர் சொல்லும்பொழுது கதிரவனும் கிழக்கு திக்கில்உதித்தான். கோவிந்தசாமி பிள்ளை மாளிகைக்கெதிரில்பல விதமாக அலங்காரம்செய்யப்பட்டு, அநேகவிதமான வாத்திய கோஷங்கள் நடந்து கொண்டிருந்தன. ஒவ்வொருவரும் தங்கள், தங்கள், நூதனஉடைகளையும், நகைகளையும், அணிந்து கொண்டு வழி நடக்கலானார்கள்.

கோவிந்தசாமி பிள்ளையைப்போல் இவ்வளவு விமரிசையாக ஒருவரும் விவாகம் நடத்தவேயில்லை யென்றும், சிலர் ஓ! ஓ! நானும் கடன் வாங்கி செய்ய வேண்டுமென்றால் இதைவிட அதிகமாகவே செய்வேனென்போரும், இன்னும்பலபேர் பல விதமாகப் பேசிக்கொண்டே நடந்தார்கள்.

திங்கட்கிழமை காலை 9-மணிக்கு தாரா முகூர்த்தம் முடிந்து, தம்பதிகளைப் பல பெரியோர்கள் யாவரும் ஆசீர்வதித்துவிட்டு, தங்கள் தங்கள் இல்லம்நோக்கிச்சென்றார்கள். அன்றுசாயரக்ஷை மாலை 4-மணிக்குகோவிந்தசாமி பிள்ளைமாளிகையில் "பாகவதர்" புள்ளாங் குழல் (Flute) எனப் பல பேர் பல விதமான வஸ்திரங்களணிந்து கொண்டு சென்று கொண்டிருந்தனர். மாளிகை பூராவும் ஜனங்கள் நிரம்பி, வெகு கூட்டமாகவிருந்தன. ஒருவர்மேலொருவர் விழுந்துகொண்டு சத்தம் செய்து கொண்டிருந்தனர். வெளியில் சென்றிருந்த கோவிந்தசாமி பிள்ளை வந்தார். அவரைக் கண்டவுடன் தனவந்த பூபதியார் "ஏன் ராம்ச்சந்து" வரவில்லையோ? எனக்கேட்டார்.

இல்லை, அவருக்கு ஏதோ கொஞ்சம் உடம்பு சௌக்கியமில்லையாம். ஆதலால் வருவதற்கு முடியாததைப்பற்றி, மன்னிக்கும்படி வேண்டுகிறேனெனக் கேட்டுக் கொண்டார். சரி, இனிகச்சேரி நடக்கட்டுமே என்றார் கோவிந்தசாமிபிள்ளை. உடனே பலவிதமானகீர்த்தனைகளும் ஜாவளிகளும் தேவாரங்களும் பாகவதர் அவர்களால் பாடப்பட்டன. ஒவ்வொருவரும் ஆனந்தத்தால் குதித்தார்கள். பல பேர் கண்களில் ஆனந்த பாஷ்பம் சொரிந்தன. ஆ! ஆ! இப்பேர்ப்பட்ட கச்சேரியை நாங்களிதுவரை பார்த்ததே இல்லையென பாகவதர் அவர்களைக் கொண்டாடினார்கள். கச்சேரியும் ஒருவாறு முடிந்து, அவரவர்கள் பல விதமான சந்தோஷத்துடன் தங்கள் தங்கள், மாளிகைக்குச் சென்றார்கள்.

பெரியண்ணன் கேஸ் நடந்து ஒருவாரமாய் விட்டது. இப்போது முன்னையைவிட அதிகஜனங்கள் கச்சேரியில் கூட்டமாகவிருந்தார்கள். ஒவ்வொருவரும் குசு, குசு, வெனப் பேசிக்கொண்டிருந்தார்கள். பெரியண்ணன் கேஸ் எடுக்கப்பட்டு, பெரியண்ணனைப் பெட்டியின் பேரில் நிறுத்தப்பட்டது. கோர்ட்டாரால் தான் சொல்வது யாவும் சத்தியம் என்று பெரியண்ணனிடம் வாக்கு மூலம் வாங்கப்பட்டதும் துரைத்தன வக்கீல் அவனை அடியில் கண்டபடி விசாரிக்கத்துடங்கினார்.

துரைத்தன வக்கீல்:—உமது பெயரென்ன?

பெரியண்ணன்:—எனது பெயர் பெரியண்ணன்.

து. வக்கீல்:—உமது தொழிலென்ன?

பெரிய.—கூலி ஜீவனம்.

து. வக்கீல்—நீ கொலை செய்த பெண்ணை அறிவாயா?

பெரியண்.—நான் கொலை செய்யவுமில்லை. அப்பெண்ணும் எனக்குத் தெரியாது.

து. வக்கீல்—கொலை நடந்தவிடத்திற்கு என்ன காரணத்தைக் கொண்டு சென்றிருந்தாய்?

பெரியண்.—எல்லோரையும் போல நானும் வேடிக்கைப பார்க்கச் சென்றிருந்தேன்.

து. வக்கீல்—உண்மையாக நீ, அப்பெண்ணைக் கொலை செய்யவில்லையா?

பெரியண்.—இல்லை.

து. வக்கீல்—பின் எவ்விதம் உன் உடுப்புகளில் இரத்தக்குறி உண்டாயிற்று?

பெரியண்.—அம்மாளிகையில் நின்று பார்த்துக் கொண்டிருந்த பொழுது என் தேக பல ஈனத்தால் நிற்கமுடியாமல் உட்கார்ந்தேன். ஏதோ, தண்ணீரைப்போல ஜில்லென்றிருந்தது. எழுந்து பார்த்ததில் இரத்தத்தால் தோய்க்கப்பட்ட சேலையென்றெனக் கண்டு பயங்கொண்டேன். அவ்விரத்தம் என் உடைகளில் உண்டாயிருக்கிறது.

து. வக்கீல்—போன வருஷத்தில் சுப்பய்யர் வீட்டில் கொள்ளை அடித்தவன் நீ தானே?

பெரியண்—ஆம்.

து. வக்கீல்:—கெங்காதரர் வீட்டில் குழந்தையைக் கொன்று, நகைகளைத் திருடப் பிரயத்தனம் செய்தவன் நீ தானே?

பெரியண்—ஆம்.

துரைத்தன வக்கீல்—இதற்கு முன் எத்தனை தரம் தண்டனையடைந்திருக்கிறாய்?

பெரியண்—மூன்று தரம் தண்டனை யடைந்துள்ளேன்.

து. வச்கீல்—இப்போது உன் பேரில் போலீசார் பார்வையுண்டா?

பெரியண்—ஆம் என் பேரில் போலீசார் பார்வையுண்டு.

து. வக்கீல்—நீ கேடி தானே?

பெரியண்—ஆம்.

து. வக்கீல்—நீயே ஒரு சமயம் முன்போல பொருள்களை அபகரிக்க அந்த மாதைக் கொன்றிருக்கக் கூடாதோ?

பெரியண்—ஐயா, நானென்றும் இக்கேஸில் தலையிடவேயில்லை. இது சத்தியம் எனத்தொப் பென விழுந்தான்.

உடனே அவனை அப்புறப்படுத்தினார்கள். பின் சாக்ஷிகளை விசாரணை புரிய சாக்ஷிகளைக் கூப்பிட ஆரம்பிக்கப்பட்டது.

முதல் சாக்ஷி, வீராசாமி நாயுடு, வீராசாமி நாயுடு, எனக் கோர்ட்டு சேவகன் கூப்பிட்டான். வீராசாமி நாயுடு வந்தவுடன் அவர் பெட்டியின் மேல் நிறுத்தப்பட்டார். கோர்ட்டாரால் சொல்வது யாவும் சத்தியமென வாக்கு மூலம் வாங்கப்பட்டது.

து. வக்கீல்—ஐயா, உமது பேர் வீராசாமி நாயுடா?

வீராசாமி நாயுடு—ஆம்.

து. வக்கீல்—நீர் எத்தனை வருஷ காலமாக இப்போலீஸ் உத்தியோகத்திலிருந்து வருகிறீர்?

வீராசாமி நாயுடு—சுமார் 10 வருஷ காலமாகவிருந்து வருகிறேன்.

து. வக்கீல்—பெரியண்ணனை உமக்குத் தெரியுமோ?

வீராசாமி நாயுடு—ஆ! ஆ! நன்றாகத் தெரியும். அவன் ஓர் பெரிய கொள்ளைக்காரன். பல கேஸ்களிலும் அவனைப்பிடித்து தண்டனை செய்திருக்கிறேன்.

து. வக்கீல்—இக்கேஸில் அம்மாதை அவன் கொன்றதைப் பார்த்தீரா?

வீராசாமி நாயுடு—இல்லை. நான் மாளிகைக்குள் நுழையும் போதே அங்கு சவத்தைக் காணோம். இவன் என்னைக் கண்டவுடன் பயந்து வீரிட்டுக்கத்தினதாலும் வேஷ்டிகளில் இரத்தக்குறி யிருந்ததாலும், இவனைச் சந்தேகத்தின் பேரில் பிடித்து சிறை செய்தேன். நேற்றைய தினம் அம்மாளிகையைப் பரிசோதித்துப் பார்த்ததில் கொல்லப்பட்ட அப்பெண்ணின் சவமும் கிடந்தது. அதை இவன் முன்பு காட்டியதில் நானே கொன்றவனென ஒப்புக்கொண்டான்.

து. வக்கீல்—தான் கொன்றதாக ஒப்புக் கொண்டானா?

வீராசாமி நாயுடு—சந்தேகமில்லாது ஒப்புக் கொண்டான்.

சரி, இரண்டாவது சாக்ஷி, மரகதம் பிள்ளை, மரகதம் பிள்ளை எனச் சேவகன் கூப்பிட்டான். நெட்டையும், பருமனுமான ஓர் மனிதன் பெட்டியின்மேல் நின்றான். கோர்ட்டு முன் நான் சொல்வது யாவும்சத்தியம் என வாக்கு மூலமளித்தான்.

து. வக்கீல்:—ஐயா, உமது தொழிலென்ன?.

மரகதம் பிள்ளை:—மளிகை வியாபாரம்.

து. வக்கீல்:—இக்கேஸைப்பற்றி உமக்கென்ன தெரியும்?

மரகதம் பிள்ளை:—நானும் இன்னும் சிலரும் சாயரக்ஷை அதாவது மாது கொலையுண்டதினம் சுமார் 4 மணிக்கு சற்று வெளியே உலாவி வருவோமெனச்சென்றோம். தனவந்த பூபதியாரின் சொந்தமான மாளிகையில் ஓர் பெண் ஹார்மோனியம் என்னும் வாத்தியத்தை ஆனந்தமாக வாசித்துக் கொண்டிருந்தாள். நாங்கள் யாவரும் அங்குநின்று வேடி

க்கைப் பார்த்துக் கொண்டிருந்தோம். திடீரெனக் கொல்லுகிறானே எனச்சத்தம் கேட்டது. உடனேயாவரும் மாளிகைக்குள் கதவைத்திறந்து உளநுழைந்தோம். ஒருத்தரையும் காணோம். அதற்குள் போலிஸ் இன்ஸ்பெக்டராகிய வீராசாமி நாயுடு என்பவர் தமது ஆட்களுடன் வந்து சந்திப்பார்த்தார். அச்சமயம் ஓர் புரமாக உட்கார்ந்து கொண்டிருந்த பெரியண்ணன், எங்களைக் கண்டதும் வீரிட்டுக் கத்தினான். உடனே அவனைப் பார்த்ததில் அவனுடைய உடைகளிலெல்லாம் இரத்தமா யிருந்தது. மேலும் எங்களைக் கண்டதும் அவன் கை, கால்களெல்லாம் நடுக்கமெடுத்தன. உடனே வீராசாமி நாயுடு அவனைப்பிடித்து கைதி செய்தார். எனக்கு அவன்பேரில் சந்தேகமே. இவ்வளவுதான் எனக்குத் தெரியும்.

சரி: மூன்றாவது சாக்ஷி அப்புசெட்டியார், அப்புசெட்டியார் எனச் சேவகன் கூப்பிட்டான். அவரும் இன்னும் மற்ற சாக்ஷிகளும் மரகதம் பிள்ளை சொல்லியவாறே சொல்லிச் சென்றார்கள். பெரியண்ணனை மறுபடியும் விசாரணை செய்தார்கள்.

து. வக்கீல்:—நீ மாதைக்கொன்றதாக வீராசாமி நாயுடு விடம் சொன்னதுண்டா ?.

பெரியண்ண:—அச்சமயம் என்புத்தி கலங்கி யிருந்ததால் நான் கொன்றதாக ஒப்புக்கொண்டேன்.

து. வக்கீல்: உன்புத்தி அப்பொழுது இவ்விதம் கலங்கியிருந்தமையால் அம்மாதைக் கொன்றிருக்கக் கூடாதோ ?

பெரியண்ணன்:—பதிலில்லை.

எதிரி வக்கீல் சதாசிவம் பிள்ளையோ, மனதில் பலவிதமான யோசனையுடன் ஓ! ஓ! இன்னும் ஏன்......வரக்காணோம், பாவம், பெரியண்ணன் இனிச் சாகவேண்டியதே என எண்ணினவராய், என்னஇது, பாவி, பெரியண்ணன் தான் கொன்றதாக ஒப்புக்கொண்டானே. நாம் என்னவிதமாக அவர்களை இனி விசாரிப்பது என யோஜனைசெய்து கொண்டிருக்கும்போது, துரையவர்கள், ஏன்,. சதாசிவம்பிள்ளை? ஏதாவது குறுக்கு விஜாரணை யுண்டோ? எனக்கேட்டார்.

ஒன்றுமில்லையென மறுமொழிகூறி உட்கார்ந்தார். எல்லோருக்கும் ஆச்சர்யமாய் விட்டது. என்ன இது? போனவாரத்தில் கேஸ்நடைபெறும் போது பெரியண்ணனைத் தப்புவிக்கத்தான் பேசுவதாகச் சொன்னார். இப்போது ஒன்றும் பேசாது விட்டாரே. இதில் ஏதோ மர்மமிருக்கிறது. பிள்ளைவாளோ வெகு கெட்டிக்காரர். இவ்விதம் பேசாமல் விட்டுவிட்டதைப் பார்த்தால் கொஞ்சம்பயமாகவும் சந்தேகமாகவுமிருக்கிறதென்று துரைத்தன வக்கீலே நினைத்துக் கொண்டார்.

பலவிதமான ஜனங்கள் சரி, சரி, சட்டப் புஸ்தகத்தில் பெரியண்ணனைத் தூக்கில் போடவேண்டிய தெனக் கண்டிருக்கும். நாம் எவ்வளவுதூரம் வாதாடினபோதிலும் பயனில்லையென்று பேசாதுவிட்டுவிட்டாரெனப் பேசிக்கொண்டார்கள். உடனே கேஸ்களை ஆய்ந்தோய்ந்து பார்த்துதீர்ப்பு சொல்லும்படிக்கு ஜூரிகளிடம் ரிகார்டுகள் கொடுக்கப்பட்டன. எல்லோரும் ஜூரிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எங்கும் நிசப்தமாகவிருந்தது. மழை, பிசு, பிசு வெனத் தூரிக் கொண்டிருந்தது.

பெரியண்ணன் தன் மனமெல்லாம் ஒடுங்கி கோர்ட்டார் என்ன சொல்லுவார்களோ என மிகுந்த பயத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். உடனே ஜூரிகள் மனத்தாங்கலுடன் "பெரியண்ணன் குற்றவாளியே" என்றார்கள். அச்சமயம் கோர்ட்டு பூராவும் சந்தடியாகவிருந்தது. ஐயோ! பாவம், பெரியண்ணன் இன்றோடு தொலைந்தானென்போரும், புலிபோலிருந்தவன் பூனை போலொடுங்கிப் போய் விட்டானென்போரும், பலவிதமாகப் பேசிக் கொண்டே யிருந்தார்கள். பெரியண்ணன் குற்றவாளியென்று கேள்விப்பட்டதும் தன்னிலையின்றி கண்கள் சுழன்று, மனமெல்லாம் திடுக்கிட்டு, திப்பென விழுந்தான்.

இப்பொழுது எதிர் பாராத விதமாய் ஒரு சுந்தரபுருஷன் ஓர் பெண்மணியின் கரத்தைப் பிடித்துக் கொண்டு கோர்ட்டுக்குள் நுழைந்தான். அவ்விருவரைப் பார்த்ததும் சதாசிவம் பிள்ளையின் முகம் மலர்ந்தது. மற்றெல்லோரும் ஆச்சர்யமும், திகிலும் பிடித்து, பேசநாவெழாமல், இமை கொட்டாது அவ்விருவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

7-வது அத்தியாயம்.

கோர்ட்டில் தோன்றிய புருஷனும், பெண்ணும் வேறுயாருமல்ல. நமது துப்பு அறியும் "சுந்தரமும்" கொலையுண்டபெண் "ரத்தினமுமே". நமது சுந்தரம் அன்று தனவந்த பூபதியின் மாளிகைக்குள் நுழைந்ததாகச் சொல்லியிருக்கிறோம். நமது வாசகர்கள் இதை மறந்திருக்க மாட்டார்கள். சுந்தரம் அங்குசென்று அநேக விதமான பிரயத்தனம் செய்து கொலையுண்ட மாதை (ரத்தினத்தை) கோர்ட்டுக்கு முன்பாக நிறுத்தினர். அங்கு வீற்றிருந்த யாவரும் இதென்ன, இறந்தவள் பிழைத்து வந்து விட்டாளா, அல்லது ஆவேசமோ! எனப்பலபேர் பல விதமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். கோர்ட்டாரும் ஒன்றும் தெரியாது ஆச்சர்யத்துடன் சுந்தரத்தை அணுகி விஷயங்களைத் தெரிவிக்கும்படி உத்தர விட்டார்கள்.

சுந்தரம் தான் இந்நாள் வரை பிரயத்தனம், செய்து "ரத்தினத்தைக் கொண்டு வந்த விபரத்தை ஆதியோடந்தமாகச் சொல்லி, பெரி

யண்ணன்" "நிரபராதி" யெனக் கோர்ட்டார் முன்பாக ரூபித்து அவனை விடுதலை செய்தான்.

'பெரியண்ணன்" தன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வடிய என்னைத் தூக்கு மரத்தின் வாயினின்றும் காப்பாற்றிய மகானுபாவா! இதுதான் என்னால் செய்யக் கூடிய நன்றியென சுந்தரத்தினுடைய பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்தான். சுந்தரம் பெரியண்ணனுக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொல்லி விட்டு, இன்ஸ்பெக்டராகிய வீராசாமி நாயுடுக்கு எக்கேஸையும் ஆய்ந்தோய்ந்து பாராமல், இவ்விதம் தடபுடலாக செய்யக்கூடாதென்றும், இன்னும் பலவிதமான புத்திமதிகளைச் சொல்லிவிட்டு, எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு கச்சேரியை விட்டு வெளிச்சென்றான்.

நண்பர்காள்! சுந்தரம் எவ்விதம் ரத்தினத்தைக்கொண்டு வந்தார்.?

இறந்தவள் எவ்விதம் பிழைத்தாள்? உண்மையான குற்றவாளியார்? என அறிய உங்களுக்கு மிக ஆவலிருக்கலாம். சற்று பொறுத்துக் கொள்ளுங்கள். கூடிய சீக்கிரம் ஷியாராலேயே உங்களுக்குத் தெரியவரும்.

சரவண பிள்ளை "மிகவும் விசனத்துடன் தன் குழந்தையை நினைத்து, நினைத்து, இளைத்துக் கொண்டே வருகிறார். அவருக்கு தன் குழந்தை இறந்து விட்டனளென்றே தினம், தினமும், பல கனவுகள் தோன்றி பிரமிக்கச் செய்து கொண்டே வந்தன. பெரியண்ணன் விடுதலையாகிய மறுநாள் காலை 9 மணியிருக்கும். சரவணபிள்ளை, தன் மாளிகையில், நாற்காலிமீது உட்கார்ந்து கொண்டு, ஐயோ! சாரதா! இன்று இறந்தாயென்று கனவு கண்டேனே! உன்னை இனி எந்த ஜென்மத்தில் பார்க்கப் போகிறேன். அந்தோ! பாழும் துப்பு அறிபவர்களை நம்பி, நம்பி, வீண் பிரயோஜனமற்றதாய் விட்டதே. இன்று முதல் குழந்தையைத் தேடவேண்டாமென்று ஒவ்வொரு துப்பு அறிபவனுக்கும் தெரிவித்து விடுகிறேனெனத் துக்கத்துடன் எழுந்தார். எழுந்திருக்க முடியாமல் படுத்தார், பின் தன் முழுபலம் கொண்டு எழுந்தார். தன்கண் எதிரில் நிற்கும் உருவத்தைக்கண்டு திடுக்கிட்டு மிக ஆனந்தத்துடன் என்ன "சுந்தரம்" போன காரியம் என்னவாயிற்று? உம்மைப்பற்றியே தான் நினைத்துக் கொண்டிருந்தேன், ஏன், ஜெயம்தானே? என்றார்.

சுந்தரம்:—ஆ! ஆ! போன காரியம் ஜெயம்தான், ஏதோ, இதுவரையிலும் தாமதமாய் விட்டதைப்பற்றி மன்னிக்க வேண்டும்.

சரவணபிள்ளை:—இதைப்பற்றி முழுகிப் போனதொன்று மில்லை. குழந்தை உயிருடனிருக்கிறதா?" எங்கே? அதுவே போதும்.

சுந்தரம்:—குழந்தை உயிருடனிருக்கிறது. அதோ பாருங்கள் உங்கள் குழந்தை வருகிறது. என்றார் சந்தோஷத்துடன்.

உடனே "ரத்தினமாகிய 'சாரதாம்பாளை"க்கண்ட பிரபு ஓடோடியும் சென்று கட்டிக் கொண்டார். தகப்பனும், பிள்ளையும், அன்று அனுபவித்த சந்தோஷத்திற்கோ அளவில்லை. அப்படி அநுபவித்து பார்த்தவர்களுக்குத்தான் தெரியுமே யன்றி, நம்போலுள்ளவர்களுக்குத் தெரியவே தெரியாது. குழந்தையைத்தன் மடிமீது வைத்துக்கொண்டு, சுந்தரம்! உம்மைப் போல துப்பு அறிபவர்களை நான் கண்டதில்லை. 8 வருஷமாக இன்னும் கண்டுபிடிக்கிறார்கள், இனி நீர் இவ்வூரை விட்டுப் போகச் சம்மதியேன். இனி என் குழந்தையும், சொத்தும் உமக்கே சொந்தம் என மனமகிழ்ந்து சொன்னார்.

சரவணபிள்ளையின் மகள் சாரதாம்பாள் சுந்தரமென்னும் துப்பு அறிபவரால் கண்டு பிடிக்கப் பட்டாளென்ற செய்தி ஊர் பூராவும் பரவிவிட்டது. எல்லாரும், தங்கள் தங்கள் காரியங்களை விட்டு விட்டு, பிரபுவின் மாளிகைக்குள் நுழைந்தார்கள். அங்கு பிரபுவின் மடிமீது வீற்றிருக்கும் சாரதாம்பாளையும், பிரபுவையும், கண்டு மிகவும் ஆனந்தங்கொண்டார்கள். வந்தவர்களில் ஒருவர், சுந்தரத்தைப் பார்த்து, "ஆ! என் அன்புள்ள சுந்தரம்! குழந்தை கிடைத்த சந்தோஷத்தால் பிரபு, நீர் எவ்விதம் கண்டுபிடித்தீரென்பதைக்கேளாமல் மௌனமாக விட்டு விட்டார்கள். என் போன்ற நேயர்களுக்கு அதை அறிய மிகவும் ஆவலாக விருப்பதால் கொஞ்சம் விவரித்துச்சொல்லும்" என்றார். சரவணபிள்ளையும் அதை ஆமோதித்து தூண்டினார்.

சுந்தரம் சரவண பிள்ளையை நோக்கி, பின்வருமாறு சொல்லுகிறார்:—"ஐயா, நான் இவ்வூருக்கு வந்து மூன்று மாத காலமாக ஓர் கேஸைப்பற்றித் தேடி அலைந்து கொண்டிருந்தேன். அது மிகவும் சிக்கலாகவிருந்ததால் என் புத்திக்கு ஒன்றுமே தோன்றாது பைத்தியம் கொண்டவனைப் போல், இரவும், பகலும், அதே நினைவாக அங்கு மிங்கும் சுற்றிக் கொண்டிருந்தேன். அச்சமயம் தங்களால் தங்கள் பெண் "சாரதாம்பாள்" எங்கேயோ ஓடிப்போய் வருஷம் ஆறு ஆகியும், ஒரு துப்பும் கிடைக்கவில்லை யென்றும், அப்பெண், லட்சுமணன், என்ற ஓர் மனிதனை மணம்புரிய அவனுடன் ஓர் சமயம் ஓடிப்போய் விட்டாளோ? ஏதோ, ஒன்றும் தோன்றவில்லை யென்றும் கேள்விப்பட்டேன்."

"உடனே எனக்கு இதைக் கேட்டதும் போன உயிர் மீண்டது போலாயிற்று. ஏனெனில் நான் நாடி வந்த ஆசாமியே, தங்கள் சொல்லிய ஆசாமி என்று தெரிந்ததால், தங்களுக்கு தங்கள் குழந்தையைக் கட்டாயமாய்க் கொண்டுவந்து சேர்ப்பிக்கிறேனெனச் சொல்லிவிட்டு, தாங்கள் சொன்ன அடையாளப்படி "ரமணியை" தேடி வந்தேன். இவ்விதமிருக்க, ஓர் நாள் "ரத்தினம்" என்னும் மாது கொல்லப்பட்டு, சவம் அகப்படாமல் பெரியண்ணனே கொன்றதாக, போலீசார்

பிடித்துக்கொண்டு போனதைப்பார்த்து, எனக்கு மிகவும் ஆச்சர்யமும் விசனமும் உண்டாயின."

"சவம் கிடைக்காது பெரியண்ணனை எவ்விதம் கொன்றதாகப் பிடித்துப் போனார்களென்று யோசித்ததில், இரத்தத்தால் தோய்க்கப் பட்ட சேலை ஒன்று கிடந்ததாகவும், அதைப்பார்த்து பெரியண்ணன் மிரண்டதாகவும், அவன் உடைகளில் இரத்தக்குறி தென்பட்டதால் அவனைப் பிடித்து கைது செய்துவிட்டார்களென்று தெரிந்து, பாவம், பெரியண்ணன் கொன்றவனல்ல, அவனோ ஒன்றும் தெரியாத அப்பாவி. கொன்ற ஆசாமி, நான் தேடி வந்த ஆசாமியே, என அறிந்து பெரியண் ணனைத் தப்புவிக்கவும், குற்றவாளியைக்கண்டுபிடிக்கவும், துரிதமாக வேலை செய்தேன்."

"ரத்தினம்" கொலையுண்ட தனவந்த பூபதியின் மாளிகையில் நுழைந்து ஏதாவது ரகசிய வழிகளுண்டோவென மூன்று நாளாகச் சுற்றி சுற்றி, அலைந்து தேடிப்பார்த்தும், ஒன்றும் கிடைக்காததால் இனி நமது பிரயத்தனம் வீண், என எண்ணமுடையவனாய், மிகவும் துக்கத் துடன் சற்றுநேரம் படுத்துவிட்டு, பின்னும் ஒருமுறை எழுந்து தேடிப் பார்த்தேன். என் அதிர்ஷ்ட வசத்தால் நான் நினைத்தபடிக்கே, ஓர் வழி தென்பட்டது. அதை எவனொருவன் தன்கண்களில் கூர்மையாகவும், ரகசிய வழி உண்டென்ற ஞாபகத்தோடும், பார்த்தால் தான் கண்டு கொள்ள முடியும். அவ்வழியாக சுமார் ஒரு மணிநேரம் சென்றதும் ஓர் காட்டுப் பாறையில் கொண்டுபோய்விட்டது. அங்கு ஒவ்வொரு பக்க மும் தேடிக்காணாது, தூரத்தில் ஓர் மாளிகை தென்பட அங்கு சென்று, சற்று அமருவோமென நினைப்புக்கொண்டு, துரிதமாகச் சென்றேன்."

"அம்மாளிகைக்கருகில் செல்லும்போது இருவர் பேசும் குரல்கேட் டது. திடீரென அங்கேயே நின்று உற்றுக்கேட்டேன். அதில் ஓர் மாதும், புருஷனும், சச்சரவு இட்டுக்கொண்டிருந்தார்கள். அதைப் பூராவும் நான் சொல்லுவதென்றால் இப்போது எனக்கே ஞாபகமில்லை. கடைசி அங்கு மாளிகையில் பேசிக்கொண்டிருந்தவர்கள் தங்கள் பெண் "சாரதாம் பாளும் அவளால் சிறு பெண் புத்தியால் காதலிக்கப்பட்ட" "லட்சுமண னுமே" யென்று தெரிந்தேன். அற்ப சந்தோஷத்துடன் மாளிகைக் கருகில் சென்று பேசுவதை உற்றுக் கேட்டேன். அதில் உமது குமாரத்தி, இன்னும் தன் "கற்பை"ப் போக்கடித்துக்கொள்ளவில்லை யென்றும், இப்போது அவனைவிட்டுத் தப்புவிக்க பல வேலைகள் செய்வதாகவும் தெரிந்துகொண்டேன். கடைசியாக சொல்லும்போது தாங்கள் லட்சு மணனென்று சொன்னபாவி, தங்கள் பெண்ணை மணம்புரிய அழைத் தான். அவளோ, தனக்கிஷ்டமில்லை யென மறுத்துவிட்டாள்.

"உடனே அவனுக்கு கோபம் பிறந்து, தனது கத்தியை எடுத்து, வெட்ட ஓங்கினான். அச்சமயம் "சாரதாள்" கெட்டிக்காரத் தனமாக, வெட்டவேண்டாம் இன்று பொறுத்துக்கொள். நாளையதினம், பதில் அளிக்கிறேன் என்றாள். இதைக்கேட்ட புருஷன், மகிழ்ந்துகொண்டு, தனது கரத்தில் ஏதோ ஒன்றைத் தூக்கிக்கொண்டு, வெளிவந்தான். நான் அவன் வெளி வரும் பொழுது மறைவாக நின்று பார்த்துக் கொண்டிருந்தேன். நான் எந்த வழியாக வந்தேனோ, அந்த வழி யாகவே நடந்து சென்றான். இது தான் சமயமென, பெண்ணிருக்கும் அறைக்குள் நுழைந்து, பெண்ணைப் பார்த்து, சந்தேகமறத் தங்கள் பெண் சாரதாம்பாளென அறிந்து, மிக ஆனந்தங்கொண்டு, சகல சங்கதி களையும், ஆதியோடந்தமாக அவள் சொல்லக்கேட்டேன்."

"ரத்தினம்" என மாறு பெயர் பூண்டு அப்பாவிகைக்கு அகப்படா மல், தப்பித்துக்கொண்டு, இவ்வூருக்கே வந்து, தாங்கள் உயிரோடிருக் கிறீரோ வென்றும், தன்னைப்பற்றி ஊரார் என்ன பேசிக்கொள்கிறாரென் றும் அறிய, தனவந்தபூபதி மாளிகையில் குடி யிருந்ததாகவும், அங்கும், ஏவ்விதமோ, என்னைத் தெரிந்து கள்ளவழி ஒன்றுண்டாக்கி அதன் மூல மாக வந்ததாகவும், அவனைக் கண்டவுடனே தான் பயந்து, கொல்லு கிறானே, கொல்லுகிறானே எனச் சத்தமிட்டதாகவும், அதைக் கவனி யாது தான் கொண்டு வந்திருந்த இரத்தம் கலந்த சேலையை எறிந்து விட்டு, ரகசிய வழியாகவே இம்மாளிகையில் கொண்டு வந்து விட்டு என்னைப் பலவந்தப்படுத்தினான்."

"நான் இந்த ஆறு வருஷ காலமாக அவனை ஏமாற்றி வந்ததுபோல இன்னும் மொழிந்து பார்த்தேன். பயன்படாததால், நாளையதினம் உன்னை மனப்பூர்வமாய் விவாகம்செய்து கொள்கிறேன் எனச் சொல்லி விட்டு, இதை விட்டு வேறு விடம் போக யோஜனை புரியும்போது தாங் கள் வந்தீரென மொழிந்தாள்."

"உடனே அவளுக்கு தைரிய வார்த்தைகள் புகன்று வேறு வழியாக அவளை அழைத்துக்கொண்டு இச்சுரங்க வழியாகவே வந்தேன். அங்கு வந்தவுடன் ஓர்வித துர்நாற்றம் வீச ஆரம்பித்தது. என் மனதுக்கு இது என்ன ஆச்சர்ய மெனத்தோன்றவே, அங்கு சென்று பார்த்ததில் சுமார் 20 நாளைக்கு முன் கொன்ற பெண்சவம்போல் தெரிந்தது. உற்றுப்பார்த்ததில் ஆ! நான் தேடிவந்த பெண்ணெனக் கண்டேன்."

"உடனே தங்கள் குழந்தையைக் கூப்பிட்டு, இப்பெண்ணைத் தெரி யுமோ, எனக்கேட்டேன். இப்பெண்ணைத் தெரியுமென்றும், இப்பெண் ணும், இன்னுமொரு பெண்ணும், தன் மனத்திற்கு இசையாததால், பாவி லட்சுமணன், அவர்களைக் கொன்றுவிட்டதாகவும், இதுவரை சவ த்தை ஒளித்து வைத்திருந்து எனக்கு அடிக்கொரு முறை காட்டி, பயப்

படுத்தி வந்ததாகவும், தான் வெளியில் செல்லும் போது இச்சவத்தைத் தான் தூக்கிச்சென்ற தாகவும் மொழிந்தாள்."

"இச் சமயம் வெளிச்சென்றால் போக்கிரி லட்சுமணனைப் பிடிப்பதற்கும், பெரியண்ணனைத் தப்புவிப்பதற்கும், இடஞ்சலுண்டாகுமென நினைத்து, ஒரு நாள் பூராவும் அங்கிருந்தோம். நேற்றைய தினம் சவத்தை வீராசாமி நாயுடு எடுத்துப்போனதும், நாங்களிருவரும் வெளிவந்து, சாரதாம்பாளை ஓர் பந்தோபஸ்தான விடத்தில் ஒளித்து வைத்துவிட்டு, நாடோடிபோல வேஷம் பூண்டு, கச்சேரிக்குச் சென்று வக்கீல் சதாசிவம் பிள்ளையிடம் உண்மையான குற்றவாளி அகப்பட்டுவிட்டான். பெரியண்ணனைத் தப்புவிக்க ஒரு வாரம் வாய்தா வாங்கும்படிக்கு ஓர் சீட்டு எழுதி கொடுத்துவிட்டு, உண்மையான குற்றவாளியை இந்த ஒரு வாரமாகத்தேடி நேற்றைய தினம் கண்டு பிடித்து என் போலுள்ள ஓர் துப்பு அறிபவரிடத்தில் விட்டுவிட்டு, பெரியண்ணன் கேஸ் முடியும் சமயம் வந்து சேர்ந்தோம்."

இது தான் சங்கதி. இதுவரை தங்கள் பெண்ணை இம்சித்து வந்த லட்சுமணன் இந்நேரம் தூக்கு மரத்தில் தொங்குவானென்றார்.

சரவண பிள்ளை—ஐயா, இவ்வளவு உபகாரம் செய்த உமக்கு நான் என்ன நன்றி செய்யப்போகிறேன்? அவனை (குற்றவாளியை) எங்கு கண்டுபிடித்தீர்?

சுந்தரம்—ஐயா, அவன் வேறு யாருமல்ல, தங்கள் பட்டணத்தில் உண்டியல் கடை வைத்திருந்த "ராமச்சந்து" தான். அவன் இவ்வித தனவந்தர்களுடைய இல்லம் சென்று தன் மாய வார்த்தையால் பெண்களை மயக்கி அவர்களால் ஐசுவரியம் அடைந்து—இவ்விதம், "சாரதாம்பாளை" நான் கூட்டி வந்துவிட்டதால், இங்கு தான் வந்திருப்பாளென நினைத்து—உண்டியல் கடைவைத்து வியாபாரம் செய்தான். அவனுடைய உண்மையான பெயர், லட்சுமணனுமல்ல, ராமச்சந்துமல்ல. "நாராயணசாமி நாயுடு." எனச்சொல்லி, சரவண பிள்ளையிடம் தான் பெங்களூருக்குப் போவதாகச்சொல்லி, அவருடைய விடையையும் எதிர் பாராமல் திடீரென மாளிகையைவிட்டு வெளிச்சென்று, அன்றே பெங்களூரை அடைந்து, "கெங்காதரபிரபுவுக்கு" பெண் கொல்லப்பட்டிறந்தாளென்றும், உண்மையான குற்றவாளி கண்டு பிடிக்கப்பட்டு தூக்குப் போடப்பட்டானென்றும் தெரிவித்து விட்டு தனது இல்லம் சென்றார்.

"கெங்காதரனோ" குழந்தை போனதைப்பற்றி விசனப்படுவதில் பயனில்லையெனத் தன் காரியங்களில் கண்ணோக்கமாயிருந்தார். சரவண பிள்ளையோ, எதிர் பாராத விதமாய் சுந்தரம் திடீரென பெங்களூருக்குப் போய்விட்டதையறிந்து, உடனே பெங்களூர் சென்று "சுந்தரத்தை,"

அழைத்து வந்தார். "சுந்தரம்" சரவண பிள்ளையின் தொந்தரவால் "வசந்தபுரம்" வந்து, ஷையார் மாளிகையிலேயே "சுந்தரம்" "சாரதாம்பாளை" சாஸ்திரப்படி, வெகு விமரிசையாக மணம் புரிந்துகொண்டு சுகமாக வாழ்ந்து கொண்டிருந்தனர்.

முருகேசனுக்கும், கோபாலனுக்கும், சிங்காரத்துக்கும், வெகுமானங்கள் அளிக்கப்பட்டன. "நாராயணசாமி நாயுடு," தூக்கில் போடப்பட்டு இறந்தான். அவனுடைய சொத்துக்கள் யாவும் "சுந்தரத்திற்கே சேர்ந்தது. பெரியண்ணனை, சுந்தரம் தன் வேலை ஆளாக நியமித்துக் கொண்டான்.

முற்றிற்று.

நமது துண்டுப் பத்திரிகை.

பாரத்வர்ஷவனிதா வித்யாலய என்ற இந்தியமாதர் யுனிவர் ஸிடி பூனாநகரில் ஒரு வருஷகாலமாக நன்றாக நடத்தப்பட்டு வருவதைக்கேட்க நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம். இதற்கு இப்பொழுது 1200க்கு மேல் வித்யாலயசமாஜிகர்களிருக்கிறார்கள். யுனிவர்ஸிடி முதல் வருஷ வகுப்பில் நான்கு மாணவிகளிருக்கின்றார்கள். அடுத்த வருஷம் முதல் உபகாரச்சம்பளம் கொடுத்து வர இதைச் சேர்ந்தவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். அடுத்த வருஷம் இன்னும் அநேக பெண்மணிகள் இந்த யுனிவர்ஸிடியில் சேர்ந்து விருத்தியடைவார்களென்று நம்புகிறோம். டாக்டர் ஸர். பண்டார்கர் என்ற பேர்பெற்ற சம்ஸ்கிருத வித்துவான் இதற்கு சேன்ஸ்லர், கனம் மிஸ்டர் பரன்ஜபே எம், ஏ. வைஸ்-சேன்ஸலர். ப்ரொபஸர் கார்வே பொது நன்மைக்காக சுயநயம் பாராட்டாமல் இரவும் பகலும் இந்த யுனிவர் ஸிடிக்காக உழைத்து வருகிறார். இந்த யுனிவர்ஸிடிவிருத்தியடையுமாறு ஈசன் அருள் புரிவாராக.

மதனபள்ளியில் "மாதர் விருத்தி சபை" ஒன்று 9 மாசத்திற்கு முன் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதாம். ஒரு ஆங்கிலமாது இந்தியாவில் ஸ்திரீகளுடையவேலை" என்ற விஷயத்தைப்பற்றி உபந்யாசம் செய்தார்கள். மற்றொரு இந்திய மாது 'பெண்கள் 12-வயதுவரையில் தான் பாடசாலைகளில் படிக்கிறார்கள். அதற்குப் பின்னிட்டு பாடசாலைகளுக்குப் போவதுமில்லை. தாங்கள் படித்த படிப்பை விருத்திசெய்வதுமில்லை. அப்படி செய்யக்கூடாது." என்று சொன்னார்கள். அம்மாது ஆங்கிலம் சில பெண்மணிகளுக்கு கற்பிப்பதாகச் சொல்லவே 30-மாதர்கள் அந்த அம்மாள் வீட்டிற்கு வாரமிருமுறை சென்று இங்கிலீஷ் கற்று வருகிறார்கள்.

ஞாயிற்றுக்கிழமைதோறும் சங்கீதம், தையல்வேலை போதிக்கப்பட்டு வருகின்றன, மதம், ஜனாசாரம் முதலிய விஷயங்களைப் பற்றி சில மாதர்களும் கனவான்களும் உபந்நியாசம் செய்துவருகிறார்கள். இதன் முக்கிய நோக்கம் மாதர்கள் இந்தியாவின் புத்திரிகள் யென்பதை யறிந்து தங்கள் சகோதரிகளுக்கு பரஸ்பர உதவிபுரிந்து வரவேண்டும் என்பதே. நல்ல தாய்மார்களாகவும், மனைவிகளாகவும் ஸதிரீகளைப் பழக்க வேண்டும். இவ்வித எண்ணமுடையவர்கள்தான் இச்சங்கத்தில் சேரலாம். இதைப் போல் பல சபைகள் பல இடங்களில் ஸ்தாபிக்க வேண்டுமென்று தொராதி ஜினகராஜ தாசரவர்கள் இந்துபத்திரிகையில் எழுதியிருக்கிறார்கள். இம்மாது மிஸ்டர் ஜினகராஜ தாசரவர்களின் மனைவியார். இவ்வித சங்கம் இந்திய மாதர்களுக்கு மிகவும் அவசியமே. இவர் முயற்சி கைகூடுமென்று நம்புகிறோம். இம்மாதத்தில் மேற்கூறிய நோக்கத்துடன் மாதர்களுக்கு ஒரு சபை அடையாறுக்கு சமீபத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதாம்.

சென்னை கவர்ண்மெண்டார் இந்திய ஸ்திரீகளுக்குத் தனிமையாக ஒரு வைத்திய பாடசாலையை (Medical school for Indian women) ஸ்தாபிக்க ஏற்பாடு செய்து வருவதைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறோம். இதை எந்த விடத்தில் ஸ்தாபிப்பது என்பது கவர்ண்மெண்ட் யோசனையிலிருக்கிறது. சர்ஜன் ஜெனரலைக் கவர்னமெண்டார் இஞ்சினியர் காலேஜ் கட்டடத்தில் ஸ்தாபிக்கலாமா அல்லது மைலாப்பூரிலுள்ள கலியாணி ஆஸ்பத்திரிக்குச் சமீபத்தில் ஸதாபிக்கலாமாவென்று கேட்டிருக்கிறார்கள்' ஏனெனில் இப்பாடசாலையில் படிக்கும் பெண்மணிகள் ஒரு ஆஸ்பத்திரிக்குச் சென்று அங்கு தினம் பழகி வர வேண்டிய தசிவயம். திருவல்லிக்கேணியில் இஞ்சினியர் காலேஜுக்கு சமீபத்தில் கோஷா ஆஸ்பத்ரியிருக்கிறது. மைலாப்பூரில் கல்யாணி ஆஸ்பத்திரி இருக்கிறது. அங்கு இன்னும் விசாலமான விடம் கிடைக்கும். ஆனால் திருவல்லிக்கேணிக்கு சமீபத்தில் அப்பாடசாலையை ஸ்தாபித்தால் பெண்களுக்கு மிகவும் அநுகூலமாயிருக்கும். இங்கு ட்ராம் வண்டி சமீபத்திலிருக்கிறது. சமுத்திரக் கரையண்டை பாடசாலையிருந்தால் பெண்களின் தேக சௌக்யத்திற்கும் நன்மையுண்டாகும். பட்டணம், எழும்பூர் முதலிய விடங்களிலிருந்து இங்கு அதிக சிரமமின்றி வரலாம். மைலாப்பூரில் ஸ்தாபித்தால் தூரத்திலிருந்து வருபவர்களுக்கு சிரமமாயிருக்கும். ஆகையால் கவர்ன்மெண்டார் இஞ்சினியர் காலேஜியிலேயே அப்பாடசாலையை ஸ்தாபிக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்வார்களென்றுநம்புகிறோம்.

பெங்களூரிலுள்ள மஹிள சேவசமாஜ் மெம்பர்களுக்கு அவ்வூரிலுள்ள தியசாபிகல் சொஸைட்டி மண்டபத்தில் மிஸ்ஸஸ் ஹில்டாவுட் என்ற மாது (தாம் எல்லா தேசங்களிலும் பார்த்

துள்ள) ஸ்திரீகளின் ஸ்திதியைப்பற்றி ஒரு உபந்நியாசம் செய்தார்கள். அப்பொழுது சுமார் 150 ஸ்திரீகள் வந்திருந்தார்கள். மிஸ்ஸஸ் ஹில்டாவுட் ஆங்கில ஸ்திரீகளின் நடவடிக்கை ஸ்திதி முதலியவைகளைப்பற்றியும் பிரான்ஸ், சுவிட்ஸர்லெண்ட், இட்டலி, இந்தியா முதலிய விடங்களிலுள்ள ஸ்திரீகளின் தாரதம்மியத்தைப்பற்றியும் செவ்வனே விவரித்துச் சொன்னார்கள். மேலும் ஸ்திரீகள் தங்கள் மதாசார அநுஷ்டானங்களை யனுசரித்துக்கொண்டு தங்கள் அறிவை விருத்தி செய்து வரவேண்டுமென்றும், தங்கள் ஜனாசார சம்பந்தமாக தங்களாலியன்றதைச் செய்து வரவேண்டுமென்றும், அப்படிச் செய்யாமலிருப்பது ஜனசமூகத்திற்கு குறை யென்றும் சொன்னார்கள்.

(சமாஜத்தின் பிரஸிடெண்டாகிய) மிஸ்ஸஸ் பார்வதி சந்திரசேகரர் அந்த மாது பேசியதைக் கன்னடத்தில் மொழி பெயர்த்து சொன்னார்கள்.

மிஸ்ஸஸ் C. அரவாமுது ஐயங்காரவர்கள் மற்ற பாஷையில் மொழி பெயர்த்து சொன்னார்கள். இந்த மஹிளா சமாஜம் நல்ல வேலை செய்து வருவதை நாம் கவனித்து வருகிறோம்: இச்சமாஜம் இன்னும் ஜனாசார விஷயத்தில் அக்கரை யெடுத்து உழைத்து வருமென்றே நம்புகிறோம்.

யுத்தத்திற்காக இந்தியாவில் அநேகர் உதவிபுரிந்து வருகிறார்கள். ஆனால் இதுபோதாது. இப்பொழுது யுத்தத்திற்கு இந்தியாவிலுள்ளவர்கள் தங்களாலியன்றளவு கடன்கொடுத்து உதவிபுரியவேண்டும் என்ற விஷயமாக செனட் அவுஸில் ஒருசபை கூடிற்று. அதற்கு நமது கவர்னர் சபைத் தலைமையை வகித்து நீண்டதோர் உபந்நியாசம் செய்தார். கனம் மிஸ்டர் பி, எஸ் சிவசுவாமி ஐயரவர்களும் பேசினர். இவ்விதம் கடன்கொடுத்து உதவி புரிந்தால் நன்மை பல உண்டாகும். ஆகையால் எல்லாரும் தங்களால் இயன்றதைச் செய்ய முன்வருவார்களென்று நம்புகிறோம்.

சென்னை ஸ்திரீகளின் கலாசாலையில் வாசிக்கும் பெண்களிலே ஏழைகளின் நன்மையை உத்தேசித்து அவர்களுக்கு உதவி செய்வதற்காக ராவ்பகதூர் ராமானுஜஞ் செட்டியார் 4,300 ரூபாய் கொடுத்திருக்கிறார். அத்தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு ஏழைகளுக்கு புத்தகம் முதலியன வாங்கி கொடுக்கப்படுமென்பதோடு, அவர்களுக்கு பிரயாணச் செலவும் கொடுக்கப்படும். அந்நன்கொடையை வித்தியா இலாகாத் தலைவரின் பெயரால் அவர் செய்திருக்கிறார். கவர்ன்மெண்டார் அந்நன்கொடையை அங்கீகரித்து, அதைப் பரிபாலித்து வர ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

" இந்திய யுத்தக் கடனுக்குக் கொடுக்கும் கடன் ஒருபோதும் வீண் போகாது, பணத்திற்கு ஒருபோதும் மோசமில்லை. ஸ்தாவர சொத்

துக்களின்மீது கடன் கொடுப்பதைக் காட்டிலும், இந்த யுத்தக்கடனுக்காகப் பணங்கொடுப்பது விசேஷ லாபமுள்ளது. ஏனென்றால், ஸர்க்காரே பணத்திற்கு உத்தரவாதமாயிருக்கிறார்கள். ஸர்க்காருக்குக் கிடைக்கும் ரெவினியூ வருமானத்திலிருந்து நமது கடன் திரும்பக்கொடுக்கப்படும். அதனாலே, நாம் கடனாகக் கொடுக்கும் பணம் போய்விடுமோவென்ற பயம் நமக்குக் கொஞ்சமேனும் வேண்டாம். நிலபுலங்களிற் பணம் போட்டால் ஒரு வேளை ப்ருவ பேதத்தினால் நஷ்டம் நேரிடச் கூடும். அம்மாதிரியான நஷ்டம் இந்திய யுத்தக்கடன் விஷயத்திற்கிடையாது. சந்தோஷமாகப் பணம் கடன் கொடுத்தால் ஒரு வருஷத்திற்குப் பிறகு வட்டியோடுகூட நமது பணம் திரும்பும். நம் பிரிடிஷார் வெற்றி பெற நமது பணம் காரணபூதமாகவும் இருக்கும். தேசத்திற்கும் ராஜ்யத்திற்கும் பணங்கொடுத்து உதவிசெய்ய இதுவே. நல்ல சமயம். புதைத்து வைக்கும் பணத்தை பூதங்காத்துவிடும். பெட்டியில் வைக்கும் பணம் ஒருவேளை திருட்டுப்போய்விடும்.

யுத்தக்கடனோ அப்படியல்ல. ஒரு வருஷத்துக்குப்பின் எப்பொழுது வேண்டுமானாலும் அசலும் அதற்குரிய வட்டியும் வந்து சேரும். இன்றே யுத்தக்கடனுக்குப் பணம் கொடுத்தனுப்புங்கள்! பணத்தை யுத்தக்கடனுக்குக் கொடுத்துப் பத்திரப்படுத்த இதைவிட வேறு சமயம் வாய்ப்பதரிது.

எந்த போஸ்டாபீஸிலும் பணம் செலுத்தலாம். ரூபா 7-12 முதற்கொண்டு எவ்வளவு தொகையானாலும் கட்டலாம்." நமது தேசத்திலுள்ள யாவரும் இந்திய யுத்த கடனுக்கு உதவி செய்ய முன் வருவார்களென்று நம்புகிறோம்.

சென்னை கவர்ண்மெண்டார்சென்னை மாதர் கிறிஸ்துவகாலேஜியின் ஆஸ்டல் கட்டடத்திற்காக ரூ. 67,542 ஸெங்ஷன் செய்திருக்கிறார்கள்.

கோபாலன்

237-ம் பக்கத் தொடர்ச்சி.

4-வது அத்தியாயம்.

மறுநாள் மாலை ஜானகி கோபாலனைக்காண வெகு ஆவல்கொண்டவளாய் தன்னிடமுள்ள விலையுயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்து கொண்டாள். தனது தாய் வெளிச்சென்றிருப்பதைக் கண்டு இது தான் சமயமென்று ஓர் வெள்ளிப் பாத்திரத்தில் காப்பியும், ஓர் தட்டில் ரவா உப்புமாவையும் எடுத்துக்கொண்டு மாடியை நோக்கிப் புறப்பட்டாள். மெல்லென கோபாலனது அறையின் கதவைத் திறந்து அன்னத்தைப்போல் உய்யாரமாக நடந்து உட்சென்றாள். கோபாலனை நோக்கி "அத்தான்! ஏது? இன்னும் காப்பி அருந்தவில்லை போல் காண்

கிறது. தாங்கள் சரிவர போஜனம் அடையாததைப்பற்றி நான் மிகவும் விசனமடைகின்றேன்" என்றாள்.

கோபால "சுந்தரி ஜானகி நீ யிருக்குமட்டும் எனக்கு யாது குறை? உன்னைக் காணவேணுமென்றே நான் இவ்விடம் வந்தது. நீ கல்வி ஏதேனும் கற்று வருகின்றாயா? அல்லது உனது தாய் வேண்டாமென்று நினைத்திவிட்டாளோ" என்றான்.

ஜானகி:—அத்தான்! நான் இப்பொழுது ஏழாவது வகுப்பில் படித்து வருகின்றேன். இவ்வருஷம் முடிந்ததும் என்னைப் பள்ளியினின்று நிறுத்தி விடுவார்கள் போல் காண்கின்றது. அப்படி யென்னை நிறுத்திவிடினும் நான் வீட்டில் படித்து வருவேனென்பது திண்ணம் என்று வெகு நயமாகக் கூறினாள்.

கோபாலன்—"ஜானகி! நான் இனிமேற்பட அடிக்கடி இவ்விடம் வருவது நன்றன்று. உனக்கு அடுத்த வருஷம் விவாகமாகப் போவதாகக் கேள்வியுற்றேன். மணமகன் உனக்கியன்றவன் தானோ? உனக்குப் பிடித்திருக்கின்றதா? உனது விவாகத்திற்கு நான் வந்தால் உனது மாதா என்னை நிந்திப்பாளோ? நீ சுகமாக வாழ்ந்தால் எனக்கதுவே போதுமென்று வெகு உருக்கமாகக் கூறினான்.

ஜானகி—"அத்தான்! என்னைத் தாங்கள் இப்படி ஏளனம் செய்வது தகுதியன்று. தாங்கள் யாவும் கற்ற கல்விமான். அப்படி இருக்க, என்னை ஏதோ மனதில் நினைத்துக்கொண்டு ஏளனம் செய்வதாகக் காண்கின்றது" என்று கூறி கண்களில் நீர் தாரைதாரையாக விட்டழுதாள். இதைக் கண்டதும் கோபாலனுக்கு மிக்க துக்கமுண்டாயிற்று. ஜானகியை நோக்கி "ஜானகி! நான் கூறியவற்றுள் ஏதேனும் பிழையிருப்பின் என்னை மன்னிப்பாயாக. என் மனமாற உன்னை வாழ்த்துகின்றேன். உன்னை ஏதோ ஓர் தனவந்தன் புத்திரனுக் கொடுக்கப் போவதாகக் கேள்வியுற்று மிக்க சந்தோஷமடைந்தேன். உனது நலத்தை நாடுபவனாகையால் நீ ஓர் தனவந்தனுக்கு மனைவியாவதைப்பற்றி சந்தோஷமடைந்தேனே யன்றிவேறல்ல. நான் கூறியவற்றுள் ஏதேனும் பிழையிருந்தால் என்னை மன்னிக்கவேண்டு மென்றான்.

ஜானகி—"அத்தான்! நீ கூறியபடி எனது மாதா தனது சகோதரின் புத்திரனாகிய ஓர் மூடப் பயலுக்கு என்னைக் கொடுக்க விரும்புகிறாள். அவன் செல்வவானாயிருந்து யாதுபயன்? கல்வி ஒன்றும் அறியாத கசடன், விகாரரூபன், மிகவும் முன்கோபி, இத்தகைய புருஷனை எப்பெண் மணப்பாள்? இவனை மணப்பதைக் காட்டிலும் உயிரை மாய்த்துக்கொள்வேன். தங்கள் சார்பில் என் மனம் நாடி விட்டது. தாங்கள் இஷ்டப்படி என்னை ஏற்றுக்கொள்ளுங்கள். இல்லா

விடின் நான், விவாகமற்ற மடந்தையாகக் காலத்தைக் கழித்து விடுகின்றேன். தங்களது பதிலுக்கு எதிர் பார்க்கிறேன்" என்று சொல்லி மூர்ச்சையாயினள்.

இச்சொற்களைக் கேட்டவுடன் கோபாலனது முகம் மலர்ந்தது. தன்னை ஜானகி நேசிக்கிறாளென்று கண்டு ஆநந்தமுற்றான். அவளைக் கைவிடுவதில்லை யென்று உறுதிகொண்டான். அவளது முகத்தில் தண்ணீரைத் தெளித்து மூர்ச்சை தெளிவித்தான். புன்முறுவலுடன் ஜானகியை நோக்கி "ஜானகி! நான் உன்னை என்றும் கைவிடேன். என்னைப் போலுள்ள தரித்திரனை மணக்கமாட்டாயென்று எண்ணியிருந்தேன். என்மேலுள்ள உனது அன்பை மிகவும் மெச்சுகின்றேன். நேற்றைய தினம் வந்ததுமுதல் எனது மனதில் உன் ஞாபகமேயன்றி வேறில்லை. நான் உன்னை யன்றி வேறொருவரையும் மணப்பதில்லை என்பது சத்தியம்" என்றான்.

ஜானகி சந்தோஷ சாகரத்திலாழ்ந்தாள். சிலநேரம் பற்பல சமாச்சாரங்கள் பேசிய பிற்பாடு கோபாலனிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு மாடியினின்று கீழிறங்கினாள்.

5-வது அத்தியாயம்.

கோபாலன் முதல் வகுப்பில் மேன்மையாக பாஸ் செய்திருப்பதாக எங்கும் வதந்தி பரவிற்று. மேலும் இவன் இவனது உபாத்தியாயர்களிடம் நற்பெயர் பெற்றவனாகையால், இவனது தலைமை துரை இவனுக்கு ஓர் நல்ல உத்தியோகம் கொடுக்கவேண்டுமென்று எண்ணி ராஜாங்கத்தாருக்கு லிகிதம் வரைந்து சிபார்ஸ் செய்ததுமன்றி தன்னால் செய்யக்கூடிய பிரயத்தனங்கள் செய்தார். அவ்வருஷத்தில் நடை பெறும், டிப்டி கலெக்டர் பரிக்ஷையில் (P.C.S.) இவனைச் சேர்க்க அனுமதி பெற்றார். பரிக்ஷையும் சின்னாட்களில் நடை பெற்றது. கோபாலன் மிக்க புத்திசாலியாகையால் பரிக்ஷையில் முதல்வனாகத் தேறினான்; ராஜாங்கத்தார் இவனது கெட்டிக்காரத் தனத்தைக்கண்டு மிகவும் மெச்சி இவனை மாயவரம் டிப்டி கலெக்டராக நியமித்தார்கள்.

புதிய டிப்டிகலெக்டர் கோபாலய்யரைக் காண குடிஜனங்கள் பல்லோர் வந்து சேர்ந்தனர். எங்கும் திரள்திரளாக ஜனங்கள் அவரது புத்திநுட்பத்தையும் வசீகரப் பார்வையும் கண்டு ஆநந்தித்தனர். கோபாலய்யர் மாயவரம் வந்து சேர்ந்தவுடன், பத்மாவதியம்மாளின் சகோதரராகிய தாசில் ராமச்சந்திரய்யர் தன்னைக் கோபிக்கப்போரானோவென்று மிகவும் நடுக்கமுற்றார். பிறகுகோபாலன் தன்னுடன் அன்பாக வார்த்தையாடியதைக் கண்டுமிகவும் மனக்களிப்புற்றார்.

கோபாலன் அன்று தனது ஜாகையிலிருந்துவிட்டு அன்றுமாலை தனது மாமனில்லம் நோக்கிப் புறப்பட்டான். இவனைக் காண ஜனங்கள்

யாவரும் இவனைப் பின் தொடர்ந்தனர். தாசில் ராமச்சந்திரய்யருடனும் ஏனைய சிப்பந்திகளுடனும், ஏவலாளர்கள் பின் தொடர, மணியம் சுப்பிரமணியய்யர் இல்லம் நோக்கிப் புறப்பட்டான். இவன் வருவதை முன்பே ஜானகி அறிந்தவளாகையால் மிக்க களிப்புற்றவளாய் தனக்குள்ள நகைகளை அணிந்துகொண்டு தனதுமாடியிலுள்ள அறையினின்று கோபாலன் புடைசூழ்ந்து ஏவலாளர்களுடன் வருவதைக்கண்டு மிக்க சந்தோஷமடைந்தாள்.

மணியம் சுப்பையர் இங்குமங்கும் வீட்டில் சுற்றிக்கொண்டு, நாற்காலியைச் சரிப்படுத்திக் கொண்டும் ரத்ன கம்பளத்தை விரித்துக்கொண்டு மிருந்தார். எங்கே தனதுமருமான் தன்னை முன் அலட்சியம் செய்ததைக்கண்டுகோபம்கொள்வானோவென்று மிக்க திகிலடைந்தார். வீட்டில் அன்றையதினம் பட்சணங்கள் யாவும் செய்யும்படி ஆஞ்ஞாபித்தார். அவரது மனைவி பத்மாவதியம்மாள் என்றும் தனது கணவனுக்கு நேர் மாறாகச் செய்பவளேயாயினும், கோபாலன் வருகிறானென்று அறிந்தவுடன் மிக்க பயபக்தியுடன் காரியங்கள் யாவும் செய்தனள். தனது கோபாலனை முன்பு இகழ்ந்தாளே யாயினும் இப்பொழுது மனதில் மிகவும் திகிலுற்றாள். எங்கே தன் மேலுள்ள கோபத்தை வைத்துக்கொண்டு தனது தமயன் வேலையைப் போக்கடித்து விடுகிறானோவென்று மிகவும் பயந்தாள். கோபாலன் இத்தகைய உன்னதஸ்திதிக்கு வருவானென்று கனவிலும் நினையாதவளாகையால் தான் அவனைக்கடிந்து கூறியதை நினைத்து மிகவும் வியாகூலமுற்றாள். எப்படியேனும் தனது பெண் ஜானகியை அவளிஷ்டப்படி கோபாலனுக்கு மணம் செய்துவிட வேண்டுமென்று அவாக் கொண்டாள்.

கோபாலன் தனது பரிவாரங்களுடன் மணியம் சுப்பிரமணியய்யர் இல்லம் வரும்பொழுது அவரது வீட்டுக்கெதிரில் அவரது குழந்தை சந்திரன் மண்ணில் விளையாடுவதைக்கண்டு, கோபாலன் மிக்க ஆனந்தமுற்றவனாய் அவனை வெகு அன்பாக அழைத்துக் கொண்டு அவரதில்லம் நோக்கிப் புறப்பட்டான். வீட்டிற்குச் சென்றவுடன் ஓர் மூலையில் மணியம் சுப்பிரமணியய்யர் நின்றுகொண்டிருப்பதைக்கண்டு கோபாலன்! "மாமா என்னைக்கண்டு ஏன் ஒளிந்துகொள்ளுகிறீர்கள்? நான் யார் தெரியவில்லையா? பழைய ஏழை கோபாலன்தானே" என்றான்.

மணியம் சு.ர.—"அப்பா கோபாலா! எப்படி யிருப்பாயோ என்று பயந்தேன். நான் ஓர் மணியம்தானே" என்றார். பத்மாவதியம்மாள் உள்ளே இருந்து தனதுகுழந்தையிடம் அத்தானை உள்ளே வரும்படி கூறினாள். கோபாலன் குழந்தையைநோக்கி 'சந்திரா! அம்மாவிடமிருந்து கொஞ்சம் தீர்த்தம் கொண்டுவா' என்றான்.

பத்மாவதியம்மாள் மிக்க சந்தோஷத்துடன் உள்ளே ஓர்வெள்ளி டம்ளரில் சுத்த ஜலமும் மற்றுமோர் தட்டில் ஹல்வாவும் கொண்டுவந்தாள். வெகு மரியாதையுடன் கோபாலனைநோக்கி "ஜானகி உங்களையே மணம் செய்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறாள். தாங்கள் எங்களது ஏழைக்குடியிலுள்ளபெண்ணை விவாகம் செய்து கொள்ளச் சம்மதமுண்டோ?" என்று வெகு வினயமாகக்கேட்டாள்.

கோபாலன் மிக்க சந்தோஷத்துடன் "தாங்கள் இவ்வளவு நேரம் வேண்டிக்கொள்ளும் பொழுது எனக்கென்ன தடை? எனக்குமுற்றும் சம்மதம் என்றான். ஜானகி தான் எண்ணியவண்ணம் தனது அத்தான்கூறியதைக் கண்டு சந்துஷ்டி யடைந்தாள். அடுத்த மாதமே கோபாலனுக்கும் ஜானகிக்கும் மாயவரத்தில் விவாகம் வெகுசிறப்பாக நடந்தது. கோபாலன் கடைசியாக பெரிய உத்தியோகத்திற்கு வந்தான். தனது மனைவியுடன் மாயவரத்தில் சுகமாக வாழ்ந்துவந்தான்.

கோபாலன் ஏழைகளுக்குத் தன்னாலியன்ற உதவிபுரிந்து வந்தான். ஊர் ஜனங்கள் கோபாலனையும் அவன் மனைவியையும் வாழ்த்தினார்கள்.

(முற்றிற்று.)

சமாச்சாரக் குறிப்பு.

வட இந்தியாவிலுள்ள குன்றுகளிலும் மலைகளிலும் இம்மாதம் வெயிலுக்குப் பதிலாக குளிர்காற்று வீசுகிறதாம், மழைகாலம்போலிருக்கிறதாம். மலைகளில் பனிக்கட்டிகூட விசேஷமாகக் காணப்படுகின்றதாம். மலைப்பிரதேசிகள் "சுமார் நாற்பது ஐம்பது வருஷகாலமாக இவ்விதமிருந்ததில்லையென்றும், இக்காலத்தில் சிறிது குளிர்காற்றிருக்கும் அல்லது சிற்சில விடங்களில் பனிகட்டிகாணப்படும். இப்பொழுது விசேஷ குளிரும் மழையுமிருப்பது அதிசயமே" என்று சொல்லுகிறார்களாம். ஆனால் சென்னையிலோ வெயில் உக்கிரம் தாங்கமுடியவில்லை. இங்கு சமுத்திர மிருப்பதால் இங்குள்ளவர்களுக்குச் சிறிது அநுகூலமாயிருக்கின்றது. சிறிது நாளாக வெயில் உக்கிரம் அதிகமில்லை. ஒரு தினம் மழை பெய்தது.

பிரிட்டிஷ் இந்தியாவிலே சென்ற 1915-16-ம் வருஷத்தில் ஆரம்பக் கல்வியின் நிலைமையைக் காட்டக் கூடிய ரிபோர்ட் நமது பார்வைக்கு வந்திருக்கிறது. அதில் ஆரம்பக் கல்வியைப்பற்றி வெளியாகும் அம்சங்களைப் பற்றியே இங்கு ஆராய்ந்து பார்ப்போம். தேச சமஸ்தானங்கள் நீங்கலாக பிரிட்டிஷ் இந்தியாவின் ஜனத்தொகை சுமார் 24½ கோடியாகும். பிரஸ்தாப 1915-16-ம் வருஷத்திலே பிரைமரி பாடசாலை முதல் கலாசாலை வரையில் பற்பல விதமான படிப்புப்பெறுபவர்களின் தொகை 76 லட்சத்து 17 ஆயிரத்து 496 தான்; அவர்களில் ஆரம்பக் கல்வியைப்பெறும் பையன்கள் 55 லட்சத்து 68 ஆயிரத்து 11 பேர்; பேண்களோ 11 லட்சத்து 1951 பேர். ஆகவே ஆரம்பக் கல்வி பெறுவோரின் தொகை சுமார் 66½ லட்சமே. அதாவது மொத்த ஜனத்தொகையிலே நூற்றுக்கு கொஞ்சம் குறைவாக 3 பேரே ஆரம்பக் கல்வி பெற்று வருகின்றனர்!

சூரத்தில் அநேக ஜனங்களை ஏப்ரல் மாதத்தில் நாய்கள் கடித்தன. அவ்விதம் கடித்த காயத்தால் வியாதியுண்டானதாம். அந்தவூர் கலெக்டர் அவர்களை கவர்ன்மெண்ட் சிலவிலேயே கஸௌலிக்குக் கொண்டுபோய் அங்குள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற ஏற்பாடுசெய்திருக்கிறார். இன்னும்பித்தம் பிடித்த நாய்களைக் கொன்றுவரவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறதாம்.

டெல்லிமா நகரத்தில் ஈக்கள் அதிகமிருக்கின்றனவாம். இதை ஒழிக்க ஹெல்த் ஆபீஸர்முயன்று வருகிறாராம். வருஷமுதலில் அதிக ஈக்களிருந்தனவாம். அவ்வித ஈக்கள் அதிகமாகவிருக்கும் இடங்களைப் பார்த்து அவைகளை எல்லாம் கொன்றார்களாம். இன்னும் பினைல் முதலியவைகளை அடிக்கடி தெளித்தும் வந்தார்களாம். முன்னிருந்த அதிக தொகை இப்பொழுது குறைந்திருக்கிறதாம். சென்னையிலும் ஈக்கள் அதிகமிருக்கின்றன. முனிஸிபாலிடியார் கவனித்தல் நலம்.

நாம் மேமாதத்துப் பத்திரிகையை நமது சந்தாதார்களுக்கு வி. பி. யில் அனுப்பினோம். இவ்விதம் அனுப்புமுன் பத்திரிகையில் நோட்டீஸ் வெளியிட்டிருந்தோம். மேலும் அச்சடித்த கார்டும் அனுப்பப்பட்டது. இவ்விதம் நமது ஆபீஸார் செய்திருந்தும் அநேக வி. பி. கள் வாபீஸ் செய்யப்பட்டன. இவ்விதம் சந்தாதாரர்கள் செய்தது நமது ஆபீஸுக்கு நஷ்டமாக முடிந்தது. சந்தாத்தொகையை அனுப்பாதவர்கள் தயவுசெய்து இப்பொழுதாவது மணியார்டர் செய்து அனுப்பினால் மிகவும் நலமாயிருக்கும். அவ்விதம் பணம் அனுப்பாதவர்களுக்கு ஜூலை மாதப் பத்திரிகையை வி. பி. யில் அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறோம். அப்பொழுதாவது பத்திரிகையை வாபீஸ் செய்யாமல் வி. பி. யைப்பெற்றுக்கொண்டு பணம் அனுப்பி உதவிபுரிவார்களென்று நம்புகிறோம். இனி ஒவ்வொருவருஷத்திலும் பிப்ருவரிமாசத்தில் ரூ. 2 அ. 9-க்குவி.பி. அனுப்பப்படும்.

பனைமரம் தூங்குகிறதும் விழிக்கிறதும்.—பனைமர ஜாதியிலொன்று பாரிட்பூர் ஜில்லாவிலுள்ளது. காலை முதல் மாலை வரையில் அம்மரம் தலை நிமிர்ந்து நின்றிருக்கிறது. மாலையானதும் அம்மரம் தலைவணங்கி விடுகிறது. அதன் மட்டைகளெல்லாம் தலைதாழ்ந்து விடுகின்றன. இந்த மாதிரி தினந்தோறும் நடந்துவருகிறது. அம்மரத்தின் தலைப்பாகத்தின் பளுமட்டும் 100-க் கணக்கான அந்தர் பளுவிலுள்ளது. புரொபஸர் ஸர் ஜே ஸி போஸ் அங்கு அதன் வளைவுகளையும்அதன் செயல்களையும் அளக்க ஒரு கருவியனுப்பி யிருக்கிறார். அக்கருவி அங்கிருந்து அதன் செயல்கள் இப்படி யென்பதை நிமிஷந்தோறும் கணக்கெடுத்து வருகிறது. இம்மரத்தின் செயல்களினால் அறியத்தகும் நீதிகளை புரொபஸர் ஒவ்வொன்றாக அறிந்து வருகிறார். இம்மரம் இப்படிச் செய்யும் காரியத்திலிருந்து மரத்திற்கும் உணர்ச்சியுள்ளதென்பது அறியக்கூடியதாயிருக்கின்றது.

சிவிங்கியினால் தாக்கப்பட்ட குழந்தை.—எல்வின் டிக் என்ற 9-வயதுள்ள குழந்தை கல்கத்தா போர்டு ஹவுஸ் பள்ளிக்கூடத்தில் படித்

துக்கொண்டிருந்தது. இந்தக் குழந்தையைச் சென்ற வெள்ளியன்று 14-மாசம் வளர்ந்த சிவிங்கி யொன்று தாக்கிக் கடுங்காயப்படுத்தியதாகச் சமாச்சார மெட்டுகிறது. அந்த சிவிங்கியை ஒருவர் லோயர் ஸர்க்கியுலர் ரோட்டில் சங்கிலியினால் கட்டி வைத்திருந்தார். இந்தக்குழந்தை அதனிடம் விளையாடப்போயிற்று. அப்போது சிவிங்கியினுடையவர் அதனிடம் போகாதேயென்று சொல்லியும் அப்பெண் குழந்தை அதனிடம் போய் அதன் வாலைத்திருக அது குழந்தையைத் தள்ளி நகத்தாலே கீறிற்று. குழந்தை ஆஸ்பத்திரிக்கு உடனே எடுத்துப் போகப்பட்டு சிகிச்சை பெற்று சௌக்கிய மடைந்து வருகிறது.

மாதர் மனோரஞ்சனி.—மாதர் மனோரஞ்சனி என்னும் மாதாந்த தமிழ்ப்பத்திரிகையின் மே மாசத்துச் சஞ்சிகை நமக்குக் கிடைத்தது. பத்திராதிபர் ஸ்திரீகள் கவனிக்க வேண்டிய விஷயம் என்று எடுத்துச் சொல்லிக்கொண்டு வருகையில் ஸ்திரீகள் தேச பாஷைகளை அலட்சியம் செய்யாது படித்து விருத்தி செய்து வரவேண்டுமென்றும் தேச பாஷையைப் பம்பாய் வங்காளம் முதலிய மாகாணங்களில் விருத்தி செய்து வருகிறார்களென்றும் இங்கிலாந்தில் தாய்ப் பாஷையை யறியாத ஸ்திரீகளில்லையென்றும் வற்புறுத்திச் சொல்லி வருகிறார். இன்னும் தேச பாஷைப் பத்திரிகைக்குக் கௌரவம் கொடுக்க வேண்டுமென்றும் ஸ்திரீகள் நம் நாட்டு ஜாதியாசார வழக்க ஒழுக்கங்களை விட்டுவிடக் கூடாதென்றும் இன்னும் அவர்களுள் சிறு சபைகள் ஏற்படுத்திக்கொண்டு ஸ்திரீகள் கூட்டங் கூடி அறிவை விசாலித்துக்கொள்ள வேண்டுமென்றும் கூறுகிறார். இன்னும் இச்சஞ்சிகையில் எளியநடையில் நல்ல நாவல்கள் வெளிவந்திருக்கின்றன.

சுதேசமித்திரன்.

கப்பல்கள் ஆதியிலே பாய்கட்டி ஓட்டப் பட்டன; பிறகு நீராவி சக்தியால், ஓட்டுவதென்று ஏற்பட்டது. இப்பொழுதோ வெகுவாக கப்பல்களெல்லாம் மோடார் சக்தியினால் ஓட்டப்பட்டு வருகின்றன: அதிலும் பற்பலவிதமான போர்க் கப்பல்களெல்லாம் அநேகமாக மோடார் சக்தியினால் தான் செலுத்தப்பட்டு வருகின்றனவென்று சொல்லவேண்டும். மின்சாரவிசையினால் கப்பல்கள் ஓட்டப்படுவதாக இன்றளவும் ஏற்பட்டு விடவில்லை. ஆனால் அமெரிக்காவிலே மின்சாரவிசையினாலேயே ஓட்டக்கூடிய பெரிய சண்டைக் கப்பலொன்று கட்டப்பட்டு விட்டதாக அறிகிறோம். அச்சண்டைக் கப்பலின் பெயர் "நியூ மெக்ஸிகோ" என்பதாகும். அது 600 அடி நீளமும் 97 அடி அகலமும் உள்ளது. 14 அங்குல பீரங்கிகளில் பன்னிரண்டும், 5 அங்குல பீரங்கிகளில் இருபத்திரண்டும் அதில் ஏற்றப்பட்டிருக்கின்றன.

விஜயநகரத்தில் மேமீ 18உ பூகம்பம் உண்டாய் சில வினாடி வரையில் யிருந்ததாம். இவ்விதமிருந்தமையால் கெடுதலொன்றும் உண்டாகவில்லையாம்.

நமது பத்திரிகையில் ஸ்திரீகளுக்கு வேண்டிய அறிவைப் புகட்டக் கூடிய விஷயங்களை பிரசுரிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். எல்லாத் தேசத்து ஸ்திரீகளுடைய நடை உடை பாவனை முதலியவைகளும், அறுபத்து நான்கு கலைக் ஞானத்தின் சுருக்கமும் அடுத்த மாத முதற்கொண்டு நமது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். பண்டிட் வி. விஜயராகவாசாரியாரவர்கள் கலைக் ஞானச் சுருக்கத்தை எழுதுவரார்கள்.

காமகோடி பீடம் என்ற சங்கராசார்ய மடம் முதன் முதல் காஞ்சீபுரத்தில் ஸ்தாபிக்கப்பட்டு சுமார் கி.பி. 1686-ம் வருஷம் வரையில் அவ்விடமே யிருந்தது. வெகுகாலம் இம்மடம் விஷ்ணு காஞ்சியில் ஹஸ்திசைலநாதன் அதாவது வரதராஜ ஸ்வாமியின் கோவிலுக்கு மேல்புறமிருந்து, பிறகு சிவகாஞ்சியில் மடமொன்று கட்டப்பட்டு அவ்விடம் சிலகாலமிருந்ததாக ஏற்படுகிறது. முஹம்மதியர்களினு பத்திரவம் அதிகரித்தபடியால் சுமார் கி. பி. 1686-வருஷம் காமகோடி பீடத்திலெழுந்தருளியிருந்த களொஸ்வாமி பிரதம சிம்மலமானென்ற தஞ்சாவூர் ராஜாவின் வேண்டுகோளுக்கிணங்கி தஞ்சாவூருக்குச் சென்றதாகச் சொல்லப்படுகிறது. அந்த சமயம் சுவாமிகள் தங்க விக்ரஹமான காமாக்ஷியையும் தஞ்சாவூருக்கு எடுத்துச் சென்று, அவ்விடம் காமாக்ஷி தேவிக்கு ராஜாவினால் ஒரு கோவில் கட்டி வைத்ததாகவும் சொல்லப்படுகிறது. பிறகு தஞ்சாவூரினின்று சுவாமிகள் கும்பகோணம் சென்றார். அவ்விடம் காவேரிக்கரையோரமாம் இப்போதிருக்கும் மடம். தஞ்சாவூர் ராஜா சரப்போஜியினால் 1743-ம் வருஷம் கட்டப்பட்டதாகத் தெரியூ வருகிறது. மடத்தில் பூஜிக்கப்படும் சுவாமியின் நாமதேயம் சந்திர மௌளீசுவரர்.

மைசூரில் வைத்திய போதனைச்சாலை.—மைசூர் ஸப் அசிஸ்டெண்டு சர்ஜன்களைப் பழக்குவதற்காக ஒரு வைத்திய கலாசாலையை ஏற்படுத்த மைசூர் கவர்ன்மெண்டார் உத்தரவு பண்ணியிருக்கிறார்கள். பெங்களூரில் இக்கல்விச்சாலை ஜூலை மாசம் 1-ந்தேதி திறக்கப்படும். முதலில் 16 மாணவர்கள் இதில் சேர்த்துப் பயிற்றப்படுவார்கள். ராஜாங்கத்தின் ஒவ்வொரு ஜில்லாவிலிருந்து 2 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இக்கல்விச் சாலையில் சேர்க்கப்படுவார்கள். பிரைவேட் மாணவர்களும் இக்கல்விச்சாலையில் சேர்ந்து வைத்தியர்களாக ஆகலாம். ஆனால் வெளிநாட்டிலிருந்துவரும் மாணவர்களைக் காட்டிலும் மைசூர் மாணவர்கள் சேருவதைச் சிலாக்கியமாகப் பொறுக்கி எடுத்துக் கொள்ளப்படும். ஸப் அஸிஸ்டெண்டு ஸர்ஜன் பரீக்ஷைக்கு இக்கல்விச்சாலையில் 4 வருஷங்கள் வாசிக்க வேண்டியிருக்கும்.

நமது பாஷையிலுள்ள கிரந்தங்களை நம் மாணவர்கள் கட்டாயமாகப் படிக்கும்படி செய்யவேண்டுமென்று கடலூரில் கூடின கல்விக்கான்பரென்ஸின் உபசரணைக் கமிட்டியின் சேர்மனாகிய மிஸ்டர் நடேசய்யர் வற்புறுத்தியதை வெகுவாக நாம் கொண்டாடுகிறோம். ஆங்கில பாஷையிலுள்ள ஷேக்ஸ்பியர் நாடகங்கள் காலேஜ் மாணவர்களுக்கு வருஷந்தோறும் கட்டாயப் பாடமாக ஏற்படுத்தப்படுகின்றன, அதுபோல், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, ஐங்குறுநூறு, கலித்தொகை முதலிய தமிழ் நூல்களின் அறிவும் அவசியமேதான். தேசபாஷையிலிருக்கும் நூல்களைப் படிப்பதால், மாணவர்கள் பரிசுத்த வாழ்வும் சிந்தனையுமுடையவர்களாய், சாந்தகுணம் முதிர்ந்தவர்களாகி, இதர ஜனங்களின் க்ஷேமத்தில் சிரத்தை கொள்ளுவார்களென்று மிஸ்டர் நடேசய்யர் சொல்லியிருப்பது முற்றிலும் உண்மையே. சென்னை யுனிவர்ஸிடியார் இதைக் கவனிப்பார்களாக.

CALENDAR, 1917

பஞ்சாங்கம்

1917 ஞு ஜூன்மீ—பிங்கள ஞு வையாசி—ஆனிமீ

இங்	தமிழ்	வாரம்	திதி, நக்ஷத்திரம், பண்டிகை.
1	19	வெ	ஏகா 34-35 அஸ் 3-34 தி 24-46
2	20	சனி	துவா 37-18 சி 7-9 தி 21-41
3	21	ஞா	திரி 35-55 சு 9-29 தி 23-44 நம்மாழ்வார் சாத்துமுறை காஞ்சிவரதராஜசுவாமி கருடோட்சவம்
4	22	திங்	ச 34-44 வி 10-36 தி 20-36
5	23	செ	○ பௌ 32-19 அ 10-39 தி 24-20
6	24	புத	கி-பி 28-50 கே 9-19 தி 28-50
7	25	வியா	த்வி 24-20 மூ 7-20 தி 3-29
8	26	வெ	திரி 19-23 பூ 4-16
9	27	சனி	சது 13-46 உத்தி 1-1 தி 55-51
10	28	ஞா	பஞ் 7-46 அ 52-41 தி 6-10
11	29	திங்	ஷஷ் 1-35 ச 53-48 சத 48-28 தி 9-25
12	30	செ	அஷ் 9-28 பூரட் 44-31 தி 3-25
13	31	புத	நவ 44-0 உத்திரட் 41-0 தி 7-6
14	1	வியா	தச 39-19 ரே 38-6 தி 9-33 மி 3 சூ 23-47
15	2	வெ	ஏகா 34-17 அ 36-0 தி 21-26 ரா 27-8
16	3	சனி	துவா 32-0 ப 34-50 சே 3-27
17	4	ஞா	திரி 30-0 கிரு 34-46 தி 4-48
18	5	திங்	சது 29-12 ரோ 35-53 தி 15-30 ரா 18-0
19	6	செ	● அமா 29-39 மி 38-14
20	7	புத	சுபி 31-23 திரு 41-44 தி 0-27
21	8	வியா	த்வி 34-12 புன 46-32 தி 14-8
22	9	வெ	திரி 38-15 பூச 52-11 தி 8-25
23	10	சனி	சது 42-50 ஆயி 58-32 தி 27-34
24	11	ஞா	பஞ் 47-51 ம 60-0 தி 31-52
25	12	திங்	ஷஷ் 52-0 ம 5-12 தி 27-21
26	13	செ	சத 58-8 பூ 11-39 தி 31-22 மி 3 பு
27	14	புத	அஷ் 60-0 உத்தி 17-22 ரா 7-36 புன 4 ச
28	15	வியா	அஷ் 1-32 அஸ் 21-14 ரா 11-5
29	16	வே	நவ 3-28 சி 26-5 ரா 8-16
30	17	சனி	தச 4-48 சு 28-44 ரா 10-39 பெரியாழ்வார் திருநக்ஷத்திரம்

Printed at the Commercial Press, Madras &
Published by C. S. Ramaswamy Iyer, Triplicane, Madras. S.E.

OFFICE OF THE REGISTRAR OF ... 23 OCT 1917
361

The Tamil Zenana & School Magazine.

மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. XVIII | Madras, July, 1917. | No. 8
புத்தகம் 18 | சென்னை : ஜுலை மீ, 1917 ஞு. | இலக்கம் 8

ஸ்ரீ : ॥

அறுபத்து நான்கு கலைக்ஞானத்தின் சுருக்கம்.

ராஜாதிராஜ-ஸ்ரீ போஜமஹாராஜன் இயற்றிய "யுக்திகல்பதரு" முதலிய பூர்வ சாஸ்திரங்களிலிருந்து திரட்டப்பட்டது.

பூர்வபீடிகை.

இயற்கையாய் புஷ்பங்களில் பரிமளம் நிறைந்திருப்பதுபோல், நமது வாஸஸ்தானமாகிய இந்த இந்தியாவில் அனேகவித ஸௌகரியத் தொகுதியும், ஸுகமும், பெருமையும் இயல்பாகவே அமைக்கப்பட்டிருப்பதால் ஸகல ப்ராணிகளும் காலமுறைப்படி பெரும்பாலும் நன்மைகளையே அடைந்து வருகிறார்கள். இந்த பூமியானது சந்திர வம்சத்தில் உதித்த **பரதன்** என்னும் ஒரு பெரிய அரசனால் வெகு புகழ்ச்சியுடன் ஆளப்பட்டு சிலவித பாகங்களை அடைந்தது முதல் இதற்கு **பரத**கண்டம் என்று பெயர் உண்டாயிற்று. இவ்வித பரதகண்ட பூமியில் (இந்தியாவில்) வஸிப்பவர்களுக்கு அதிக மழை, அதிக வெய்யில், அதிக பனி, அதிக குளிர், எறிமலை, பூமிகம்பம், மற்றும் அனேக விதக்கொடுஞ் செயல்கள் என்னும் நாமதேயமே ஒரு பொழுதும் நேரிடாதென்றே பூர்விகமஹான்களும், மஹரிஷிகளும் அனுக்கிரஹம் செய்திருக்கிறார்கள்.

இதுமாத்திரமல்ல; மிகவும் அருமையான முத்து, பவழம், வைரம், வைடூரியம், மரகதம், மாணிக்கம், கோமேதகம், பத்மராகம், புஷ்யராகம் என்னும் நவரத்தினங்கள் உண்டாகக் கூடிய கனிகளும், தங்கம் உண்டாகக் கூடிய சுரங்கங்களும்; பாரஸீகம், காந்தாரம், கோஸலம், பாஞ்சாலம், காம்போஜம் முதலிய சில தேசங்களில் மிகவும் நேர்த்தியான குதிரைகளும், பலவித யானைகளும், அழகியமான்களும், மல்லிகை, முல்லை, செண்பகம், ரோஜா, வெண்தாமரை, செந்தாமரை, நீலோற்பலம் முதலிய புஷ்பச் செடிகளும், ஓஷதிக்கொடிகளும், பிலா, மா, வாழை முதலான கனிவிருக்ஷங்களும் ஏராளமாய் உண்டாக்கப்பட்டு வளர்ந்தோங்கி வருகின்றன. இவைகள் எல்லாம் ஜீவராசிகளின் ஸுகத்திற்கு முக்யகாரணமாகும்.

மேலும், அத்ரி, புலஸ்தியர், கௌதமர், வஸிஷ்டர், வால்மீகி, வியாஸர், பரத்வாஜர், காச்யபர் முதலிய பரமதார்மிக மஹரிஷிகள் தங்களது மெய்ஞ்ஞானத்தினால் அனேகவித சாஸ்திரங்களைச்செய்தும், இந்த இந்தியா என்னும் பரதகண்டம் ஒன்று தான் தவம், யோகம், பக்தி, யாகம், பகவந்நாமகீர்த்தனம், தானம் முதலிய நற்காரியங்களுக்கு தகுந்த புண்ய பூமி என்று விசேஷமாய் எடுத்துக் கூறியுமிருக்கிறார்கள். இது போலவே—கங்கை, யமுனை, ஸிந்து, விதஸ்தி, சதத்ரு, கோமதீ, கண்டகீ, சர்மண்வதீ, கோதாவரீ, காவேரீ முதலிய புண்ய நதிகளும், புஷ்கரம் முதலிய புண்ய தீர்த்தங்களும், அயோத்யை, மதுரை, ஹரித்வாரம், காசீ, காஞ்சீ, அவந்தி, த்வாரகை என்னும் முக்யமான மோக்ஷக்ஷேத்திரங்களும், ஜகன்னாதம், காளஹஸ்தி, ஸ்ரீரங்கம், சிதம்பரம் முதலிய ஸ்வயம் வ்யக்தக்ஷேத்திரங்களும் இந்த பரதகண்ட வாஸிகளுக்கு இம்மையில் ஸகல செல்வத்தையும், முடிவில் அளவற்ற ஆனந்த மயமான மோக்ஷபதவியையும் கொடுப்பதற்காகவே விளங்கிவருகின்றன.

இவ்வித காரணத்தினால், இந்த கலியுகத்தில் பரதகண்ட வாஸிகள் நற்காரியங்களை கொஞ்சம் செய்த போதிலும், தர்ம, அர்த்த, காம, மோக்ஷம் என்னும் நான்குவித புருஷார்த்தங்களின் பலனை ஸுலபமாய் (எளிதில்) அடைவார்கள் என்றும் நமது சாஸ்திரங்களில் நன்றாய் கூறப்பட்டிருக்கிறது. கல்வி, இல்லறவாழ்க்கை, பொருளாராய்ச்சி முதலியவைகளை நன்றாய் அறியக்கூடிய நல்ல புத்தியையும், பதங்களிலாவது, அர்த்தங்களிலாவது, தத்வ விஷயத்திலாவது சில ஸமயங்களில் ஏதாவது ஸந்தேகம் உண்டானால் அதை நீக்கிக்கொள்ளும் பொருட்டு நல்ல குருக்களையும், நல்ல சாஸ்திரங்களையும், அந்தந்த அவதார காலங்களில் நமக்காக ஏற்படுத்திக்கொடுத்த பகவானுடைய மேன்மை குணங்களை நாம்

எவ்வாறு எடுத்துரைக்கக் கூடும்? வேதாந்தங்களும் பகவானுடைய குணத்தை ஸம்பூரணமாய் சொல்லமுடியாமல் சோர்ந்து நின்றன என்றும் சிலவிடங்களில் கூறப்பட்டிருப்பதை நாம் அறிந்தேயிருக்கலாம். இப்படிப்பட்ட மஹாமஹிமைசாலியான பகவானால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட அனேகவித விசித்ர ஸ்ருஷ்டிக்குள் ப்ருதிவீ, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம் என்னும் பஞ்சபூதங்களின் ஸ்வரூபத்தை மாத்திரம் நாம் சற்று கவனிப்போம்.

ப்ருதிவீ அல்லது பூமி.

பூமியானது முன்சொன்ன பஞ்சபூதங்களுள் முதன்மையாய் கூறப்பட்டது. மேகங்களிலிருந்து வெளியாகும் சுத்த ஜலமானது பூமியின் மேல் வீழ்ந்தவுடனே அந்தந்த பூமியின் ஸாராஸாரத்திற்கு தகுந்தபடி ருசியான ஜலமாகவும், உப்பு ஜலமாகவும், ஒரு பொழுதும் தெளியாத கலக்க ஜலமாகவும் மாறிவிடுகிறது. சில ஸமயங்களில் மழை ஜலமானது பூமியின் ஸாரத்திற்குத் தகுந்தபடி வேறு வர்ணத்தையும் அடைந்துவிடும். பூமியானது முன் சொல்லிய நவரத்தினங்கள் உண்டாகும் கனிப் ப்ரதேசத்திக்கும், புல், பூண்டு ஓஷதி, பயிர் முதலியவைகளுக்கும் முக்ய ஆதாரமாய் இருக்கிறது. மனுஷ்யர்களும், மிருகங்களும், மற்றுமுள்ள ஜீவராசிகளும் யதேச்சையாய் (தன்னிஷ்டப்படி) நான்கு திக்குகளிலும் ஓடி உலாவி வஸிப்பதற்குத் தகுந்த விசால முடையதாயுமிருக்கிறது. வர்ஷா காலங்களில் நான்கு திக்குகளையும் ஆகாயத்தையும் மூடிக்கொண்டு பயங்கரமான இடி மின்னல் கர்ஜனையுடன் மேகங்கள் அதிக மழையைப்பெய்தால், உடனே சற்று நேரத்திற்கெல்லாம் அந்த ஜலம் வடிந்து போகும்படி பூமியானது அனேக இடங்களில் மேடுபள்ள முள்ளதாயும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஸகலப்பிராணிகளுக்கும் நன்மையை புகட்டுவதற்காகவே பூமியின் ஸ்வரூபமானது வெகு ஸௌகரியத்துடன் கூடியதாய் அமைக்கப்பட்டிருக்கிறது. நமது பூர்வீகர்கள் பூமி தேவீ என்றும், க்ஷமா என்றும், ஸர்வம்ஸஹா (ஸகலவித தீயச்செயல்களையும் ஸஹித்துக்கொள்ளும் குணமுடையவள்) என்றும் விசேஷமாய் பூமியின் மஹிமையைக் கொண்டாடியிருக்கிறார்கள். நன்றாய் யோசித்துப் பார்க்குமிடத்தில், நமக்கு பூமியே முதன்மைத்தாயாகச் சொல்லலாம். ஈச்வரனுடைய கருணையினால் பூமியானது இவ்விதம் தகுந்த நிலைமையில் அமைக்கப்பட்டிருக்கிறது. பூமியானது ஸரியான நிலையில் இல்லாமலிருந்தால் ஜனங்கள் ஒரு நிமிஷங் கூட உயிர் பிழைத்திருக்கமுடியாது.

ஸம்ஸ்கிருதபாஷை என்றும், கீர்வாண பாஷை என்றும் வழங்கப்படும் வடமொழியில் மலைகளுக்கு பூதரம் என்றும், பூமிப்ருத் என்றும் பெயர் உண்டு. அதின் கருத்து என்னவென்றால்—இவ்வித பூமியை

மலை. யும் மலைகளே தமது அடியினால் பற்றிச்சுமந்துகொண்டிருக்கிறது என்பதே யாதும். பூமியின் ஸ்ருஷ்டிபோலவே மலையின் ஸ்ருஷ்டியும் அமைப்பும் ஜனங்களுக்கு அனுகூலமாகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. குளங்கள், தடாகப்படிகள், தேவாலயங்கள், நதியின் வாராவதிகள், சத்திரங்கள், நியாயஸ்தலங்கள் கோர்ட்டு முதலிய ஸபைகள், நர்த்தனசாலை, பஜனகூடம், வீடுகள், கைப்பிடிச்சுவர்கள், படிகள்முதலிய அநேக விதகட்டடம் கட்டுவதற்குத் தகுந்த கற்பாரைகள் மலைகளிலேயே உண்டாகின்றன. வடமொழியில் சிலா என்பது தமிழில் கற்பாறைகளுக்கும் கற்களுக்கும் பெயர். அவ்வித சிலையானது, ஆண் சிலைஎன்றும் பெண் சிலை என்றும் நபும்ஸகசிலை என்றும் மூவகையாய் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு வெண்கலமணியை அடித்தால் அதின் ஒலியானது கொஞ்சம் கொஞ்சமாய் குறைந்து காதுக்கு இனிமையாய் ஒலிப்பதுபோல் எந்த சிலையை (கல்லை) த்தட்டினால் சத்தம் கேட்கிறதோ; அது பெண் சிலை என்று வழங்கப்படும். அதற்குக்கொஞ்சம் குறைந்த சத்தமாய் ஒலித்தால் அது ஆண் சிலை எனப்படும். தட்டிய மாத்திரத்தில் அழகிய ஒலி உண்டாகாமல் டக் டக் என்றே விகாரமான சப்தம் உண்டாகும் சிலையை நபும்ஸககல்லு, என்று வழங்குவார்கள். இவ்வித கற்களுக்கும் பல்வித ஔஷதிகளுக்கும், யானை முதலிய மிருக ஜாதிகளுக்கும் நதிகளுக்கும் மலைகள் தான் உற்பத்தி ஸ்தானமாகும். மலைகளிலிருந்து உண்டாகும் நதிகள் தான் எப்பொழுதும் வற்றாத ஜலமுடையதாயும், நல்ல மணல்களையுடையதாயுமிருக்கும். இந்த பரதகண்டத்தில் (இந்தியாவில்) ஹிமயம் விந்தியம், பாரியாத்ரம், மஹாமலை, சித்ரகூடம், மஹேந்திரம், மலயம், ஸஹ்யம், ருக்ஷவான், சுக்திமான் முதலிய பெரிய மலைகளும் நிலைபெற்றிருக்கின்றன. சில பர்வதங்களின் அடிவாரத்திலும் ஸமீபத்திலும் நவரத்தினம் உண்டாகும் சுரங்கமும், தங்கம் உண்டாகும் இடமும் காணப்படுகின்றன. இவ்வித பர்வதங்களின் சார்பிலும் ஸமீபத்திலும் அநேக வித மரங்கள் நிறைந்த காடுகளும் ஜனங்களின் பயனுக்காகவே அமைக்கப்பட்டதாய் விளங்குகின்றன.

முற்கூறிய பூமிக்கு ஸஹாயமாகவே ஜலமும் பகவானால் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. ஜலங்கள் அநேகவிதமாய் ஏற்படுத்தப்பட்டிருந்தபோதிலும் முக்கியமாய், வர்ஷ நீர், ஊற்று நீர், ஆற்று நீர், என்றே மூன்று

அப்பு அல்லது ஜலம். விதமாய் வழங்கப்பட்டிருக்கிறது. வஸந்த காலம், க்ரீஷ்ம காலம், வர்ஷா காலம், சரத் காலம், முதலிய காலங்களுக்குத் தகுந்தபடி நதிகளின் ஜலத்தையும் கிணற்று ஜலத்தையும், தடாக ஜலத்தையும், சுனை ஜலத்தையும் உபயோகப்படுத்

திக்கொள்வதற்காக அநேக நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. கடலிலோ வெனில்—சில விடங்களில் கால் மயில் ஆழமும், சில விடங்களில் மூன்று மையிலுக்கதிகமான ஆழமும், சீறிவரும் அலைகளும் பெரிய ஜலச் சுழிகளும் வெண்மையான நுரைகளும், திமி, திமிங்கலம், மீன்கள், ஆமை முதலிய ஜல ஜந்துக்களும் ஏராளமாய் குடிகொண்டிருக்கும் ஸமுத்திரத்தையும் பூமிக்கு ஆதாரமாகவே ஈசன் உண்டுபண்ணியிருக்கிறார்.

காந்தி என்பது இங்கு சூரியன், சந்திரன், அக்னி, என்னும் மூன்றையே குறிப்பிடுகிறது. சூரியன் வேத ஸ்வரூபியாய் விளங்குகிறான். ஸகல ஜீவராசிகளுக்கும் தேஹ ஆரோக்கியத்தையும், கண் விழிப்பையும், புத்தி மலர்ச்சியையும் கொடுத்துக்கொண்டே தினந்

தேஜஸ் அல்லது காந்தி. தோறும் உதயமாகிறான். சூரியனைக் குறித்தே பிராம்மணர்கள் எல்லோரும் பிரதிதினமும் முக்காலத்திலும் அர்க்கியம் கொடுத்து பூஜிக்கிறார்கள். சூரியனால் பயிர், புல், செடி, மரம், முதலியவைகள் வளர்க்கப்படுகின்றன. சூரியன் உதிக்காவிடில் உலகத்தில் எங்கும் இருள் மூடி ஜனங்கள் நாசத்தையே அடைய நேரிடும். இதற்கு அத்தாக்ஷியாக ஒரு கதையை இங்கு விவரிப்போம். "முன்பு ஒரு காரணத்தினால் விந்திய மலையானது ஆகாயத்தில் வெகு தூரம் உயரக் கிளம்பிவிடவே விந்தியத்திற்கு தெற்கு பாக பூமியில் ஸூரிய கிரணம் கொஞ்சமேனும் பிரவேசிக்காமல் ஜனங்கள் எல்லாம் தட்டித் தடுமாறி வெகு சிரமப்பட்டு உயிரை இழந்துகொண்டிருந்தார்கள். அதே ஸமயத்தில் விந்திய மலைக்கு வடக்கில் வழக்கப்படி சூரியஉதயம் உண்டாகிவரவே அங்குள்ள ஜீவன்கள் சுகமாய் வாழ்ந்தார்கள். விந்திய மலைக்குத் தெற்கு பாகத்தில், மாத்திரம் பன்னிரண்டு (12) வருஷ காலம் வரையில் சூரிய, வெளிச்சத்தை ப்ரவேசிக்கவொட்டாமல் அந்த மலை தடுத்து நின்றுகொண்டிருந்ததைக் கண்டு ஸ்ரீ அகஸ்திய மஹரிஷி அம்மலையின் சமீபம் சென்று அதை மறுபடியும் கிளம்பாதபடி அடக்கிவிட்டார்" என்று மஹாபாரதத்தில் சொல்லப்பட்டிருப்பதை நாம் அறிந்தேயிருக்கிறோம். ஆகையால் சூரிய கிரணம் படியாவிட்டால் ஜலமும் ருசியாய் இருக்கமாட்டா. ஜீவராசியும் பிழைத்திராது. ஆகையால் ஜீவனுக்கு சூரியனே முதல் உபகாரகன் ஆகுவான். இவ்வித சூரியனே முதல் ஒளி எனப்படுவான்.

இவ்வுலகத்திற்கு இரண்டாவது ஒளியாக விளங்கும் சந்திரன் ஒரு கல்பத்தில் அத்ரிமஹரிஷியின் கண்ணிலிருந்து பிறந்தவனாகவும், மற்றொரு கல்பகாலத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் மனதிலிருந்து பிறந்தவ

சந்திரன். னாகவும், மற்றொரு கல்பத்தில் பாற்கடலில் உதித்தான் என்றும் விஷ்ணுபுராணம், பாகவதம், பாரதம் முதலிய க்ரந்தங்களில் கூறப்பட்டிருக்கிறது. இவ்வித சந்திரன் நவக்கிரஹங்களில் ஒருவனாய்க் கருதப்பட்டும், வடக்கு திக்குக்கு அதிகாரத்தையும் பெற்றுவருகிறான். இவன் ஒவ்வொரு மாதத்திலும் சுக்லபக்ஷத்தில் நன்றாய் வளர்ந்து வந்து, கிருஷ்ண பக்ஷ ப்ரதமை திதி முதல் தனது அமிர்தமயமான ஒவ்வொரு கலையையும் அக்னி, சூரியன் முதலிய தேவர்களுக்கு ஒவ்வொரு நாளும் ஈன்று வருகிறான் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மண்ணுலகில் வாழும் ஸகல ஜீவ ராசிகளின் களைப்பை நீக்கி ஆரோக்யத்தையும் மனக்களிப்பையும் உண்டு பண்ணுவதே இந்த சந்திரனுக்கு முக்ய குணமாகும். சூரியனுடைய வம்சத்தில் மனு, இக்ஷ்வாகு, ஸகரன், பகீரதன், ரகு, அஜன் தசரதன், ஸ்ரீராமன் முதலிய தார்மிக அரசர்கள் ஜனித்தது போலவே, இந்த சந்திரனுடைய வம்சத்திலும், புரூரவஸ், ஆயு, யயாதி, ஸுமதி, ஸுரோதன், துஷ்யந்தன், பரதன், அஜமீடன், குரு, ஜயசேனன், சந்தனு, பாண்டு, பாண்டவர்கள், அபிமன்யு, பரீக்ஷித், ஜனமேஜயன் முதலிய மஹா தர்மிஷ்ட அரசர்களும் பிறந்து இவ்வுலகை வெகு நாள் காப்பாற்றினார்கள் என்று மஹாபாரதத்தில் கண்டிருக்கிறோம். அநேக நக்ஷத்திரங்கள் ஒன்று கூடியபோதும் ஒரு சந்திரனுக்கீடாகுமோ; என்று சில ஸமயங்களில் இந்த சந்திரனையே சுட்டிக்காட்டி முக்ய உதாஹரணமாகவும் வழங்கி வருகிறோம். இந்த சந்திரனுக்கும், அவனது மண்டலத்திற்கும் ஏற்பட்டிருக்கும் அனேக குணங்களையும் அமைப்பு முறைமையும் நமது சாஸ்திரங்களில் அங்கங்கு நாம் அறிந்து கொள்ளக் கூடும்.

இம்மண்ணுலகத்திற்கு மூன்றாவது ஒளியாய் விளங்கும் அக்னியாவன் தென்கிழக்கு திக்குக்கு அதிகாரியாய் ப்ரகாசிக்கிறான். அன்றியும் பிராம்மணர்களால் ஹோமம் செய்யப்படும் ஸமயங்களில் இவனே அக்னி. முக்யதேவதையாய் இருந்து மற்ற தேவர்களுக்கு அந்தந்த ஹவிர்ப்பாகத்தை கொண்டு போய் கொடுக்கிறான் என்றும் வேதம் முறையிடுகிறது. இவ்வித அக்னியினுடைய அம்சமானது ஒவ்வொரு ஜீவன்களிடத்திலும் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்படி இல்லாவிடில் ஒருவருக்கும் பசியே உண்டாகமாட்டாது. சாப்பிட்ட உணவும் ஜீரணமாகாது. அதுவுமல்லாமல் யார்தான் அக்னியில்லாமல் உணவு வகைகளைத் தயாரிக்க முடியும். மனுஷ்யர்களின் நாபியில் குடிகொண்டிருக்கும் அக்னிக்கு ஜாடராக்னி என்றுபெயர். மேகத்திலிருக்கும் அக்னிக்கு மின்னலென்றும் மேகாக்னி என்றும் பெயர் ஸமுத்திரத்தின் நடுவில் மறைந்துலாவும் அக்னிக்கு படபாக்னி என்று பெயர். ஹோம குண்டங்களிலிருக்கும் அக்னிக்கு வைதிகாக்னி என்று பெயர். ஸாதாரணமாய் வீடுகளில் அடுப்பில் நிறைந்திருக்கும் அக்னிக்கு நெருப்பு என்று பெயர். ஏனெனில் கொஞ்சமாகிய அக்னிக்கு நெருப்பு என்றும், அதிக அக்னிக்கு தீ, பெருந்தீ, ஜ்வாலாக்னி என்றும் பெயர் வழங்கப்பட்டு வருகிறது. கம்மாளர்களின் உலக்கடையில் இரும்பில்பிடித்திருக்கும் அக்னிக்கு லோஹாக்னி என்றும் அயோக்னி என்றும்பெயர். எப்படியிருந்த போதிலும் இவைகள் எல்லாம் ஒரு முக்ய அக்னியின் உட்பிரிவாகவே கருதவேண்டும். இவை தவிர, வன்னிமரம், முதலிய சில வஸ்துக்களிலும் அக்னியானது உள்ளடங்கியிருக்கிறது. சில வித பொருள்களை ஒன்று சேர்த்தால் அவைகளிலிருந்து ஓர் வித அக்னி உண்டாகும். துப்பாக்கி, பீரங்கி மருந்துகளையே இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். ஸகல பொருள்களிடத்திலும் அக்னியின் அம்சம் கொஞ்சம் கலந்ததாகவே ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. அக்னியானது கோபித்துச் சீறிவந்தால் பச்சை மரங்களும் எறிந்து கரிக்கட்டையாக மாறிப்போய் விடும். ஜலமும் வற்றிப் போகும். அக்னியானது காற்றுடன் சேர்ந்து விட்டால் பெரியமலைகளையும் கற்பாறைகளையும் மண்ணையும் பிளந்து உருகும்படி செய்து விடும். அக்னியின் ஒரு அம்சம் பொருந்திய தீபமானது ஒவ்வொரு இடங்களிலும் இராவிடில் மனுஷ்யர்கள் எல்லாம் இருளில் தட்டுத்தடுமாறி வீழ்ந்து வெகு துன்பத்தை அடையும்படி நேரிடும். தீபம் இராவிட்டால் உணவை ஸரிவர அருந்தவேமுடியாது. கஷ்டப்பட்டு சாப்பிட்டபோதிலும் ஜீரணமாக மாட்டாது.

ஆகையால், பரம காருணிகனான பகவான் இப்படிப்பட்ட குணம் பொருந்திய அக்னியை உலகத்தாரின் நன்மைக்காகவே ஸ்ருஷ்டித்திருக்கிறார் என்பதை யார்தான் அறிய மாட்டார்கள்?

பூமியில் பிறந்து, ஜலத்தை உண்டு, ஜாடராக்னியினால் உணவை சாப்பிடக்கூடியதசையில் எல்லோரும் இருந்தபோதிலும், வாயுவினுடைய ஸஹாயமில்லாமல் சற்றுநேரம்கூட உயிர் பிழைத்திருக்கமுடியாது என்பதை நாம் பல தடவை கேட்டும், அறிந்துமிருக்கிறோம். உலகத்தில் சிசுவாய் பிறந்தவுடனே குழந்தைக்கு மூச்சு வருகிறதா? அழுகிறதா? என்றே கேட்பார்கள். இது போலவே, அவனுக்கு மூச்சு நின்றுவிட்டதா என்ன? அப்படி மூச்சு நின்றுவிட்டால் அவனருகில் போகலாகாது. அவனை செத்த பிணம் என்றே வழங்கவேண்டும் என்றும் இவ்விதமான வார்த்தையையும் நாம் கேட்டுவருகிறோம். ஆகையால் வாயுதான் ஜீவன்களுக்கு முக்கிய ஆதாரம். வாயு அல்லது காற்று. வாயவானது, காற்று என்றும், பெருங்காற்று என்

றும், மந்த மாருதம் (தென்னல் காற்று) என்றும், மூச்சுக்காற்று என்றும், ஜலக்காற்று என்றும், விசிறிக்காற்று என்றும், சாமரைக்காற்று என்றும் அந்தந்த பொருள்களின் சேர்க்கைக்குத்தக்கபடி பல விதமாய் வழங்கப்பட்டபோதிலும் காற்று ஒன்றே முதல் காரணமாகும்.

இதுவரையில் விவரித்த ஜலம், அக்னி காற்று என்றும் இந்த மூன்று பூதங்களும் ஈச்வரனால் அமைக்கப்பட்ட எல்லையை மீறி நடக்கக்கருதுமேயாகில், இவைகளின் வேகத்தை தடுக்க யார்தான் முன்நிற்கமுடியும். காற்று சீறுமேயாகில், மலைகள் உடைந்துபோகும். பூமி பிளந்துவிடும். மரங்களும் பெரியகட்டடங்களும் சிதறி தவிடுபொடியாய் பறந்தோடும். ஸகலப்ராணிகளும் பஞ்சுபோல் ஆகாயத்தில் சுற்றி உழலும்படி நேரிடும், இவ்விதகாற்றானது அக்னிக்கு ஸஹாயமாக சேர்ந்துவிடும் பக்ஷத்தில் அப்பொழுது நேரிடக்கூடிய நிலைமையை நாம் மனதினாலும் எண்ண முடியாது.

ஆகையால், இப்படிப்பட்ட விசேஷசக்திபொருந்திய காற்றை ஈச்வரன் ஸ்ருஷ்டித்து ஜனங்களின் க்ஷேமத்திற்காக அதற்கு அளவையும் ஏற்படுத்திவைத்திருக்கிறார். இவ்வித வாயுவுக்கு அதிபதியான வாயுதேவன் மானை வாகனமாகவைத்துக்கொண்டு வடமேற்குதிக்குக்கு அதிகாரத்தை அடைந்து விளங்குகிறான். இவனுக்கு பத்னியான அஞ்ஜனை என்பவளிடத்தில் ஹனுமார் அவதரித்து சிறு வயதிலேயே உதிக்கும் சூரியனைக் கனி என்று சாப்பிட முயன்றதையும் நாம் புராணங்களினால் அறிந்து கொள்ளுகிறோம். இது போலவே-இந்த வாயுதேவனுக்குப் புத்திராகிய ஹனுமான் கிஷ்கிந்தையில் வஸித்து ஸ்ரீராமனுடைய பாதாரவிந்தங்களில் பக்தி செய்து கடலைத்தாண்டி சீதையைக்கண்டது முதலான அற்புதசெயல்களையும் அனைவருமறிந்தேயிருப்பார்கள். கர்ப்பத்தில் வளர்ந்துவரும் சிசுவுக்கு ஸம்பூரண அவயவங்கள் உண்டான உடனே வாயுவினுடைய ஒரு அம்சமானது அந்த சிசுவின் ஆன்மாவுடன் சேர்ந்து ப்ராணனை உண்டு பண்ணுகிறது. எப்பொழுது உலகத்தில் காற்று வீசாமல் நின்று விடுகிறதோ ; அப்பொழுதே ப்ரளய காலம் நேர்ந்து விட்டதெனவே சொல்லலாம். மனிதர்களின் உடம்பில் ஓடி ஸஞ்சரிக்கும் வாயுவானது கோபிக்குமாகில் சரீரத்தை ஒரே கட்டாகக் கட்டி முடக்கிவிடும். கைகால்களை கொஞ்சமேனும் அசைக்கமுடியாது. உருவத்தை மாற்றி பலவிதமாய் கெடுத்துவிடும். அதற்காக, தயாநிதியாகிய பகவான் அனேகவித ஒஷதிகளையும் வைத்திய சாஸ்திரத்தையும் உலகில் நெடுநாளாய் அமைத்து காப்பாற்றி வருகிறார். வாயுவினுடைய வேகமானது இவ்வளவு என்று ஒருவராலும் நிச்சயிக்கமுடியாது. இவ்வித வாயுபகவான் (வாயுவிற் கதிபதியானவன்) உருவமில்லாதவன் ஸ்பர்சத்தினாலேயே அறியக்கூடியவன். காற்றிக்கு இன்னும் அனேக வித மஹிமைகளும் உண்டு.

23 OCT 1917 REGISTRAR MADRAS

மனோ உறுதி

(251-ம் பக்கத் தொடர்ச்சி)

பலயீனங்களை உதுக்கித்தள்ளு. உண்மை யென்னும் அகண்ட சூரியப் பிரகாசத்துள் வெளிப்படவேண்டும். பின் ஒவ்வொன்றும் வித்தியாசமாகவே காணும். நாம் ஒருவர்க்காக உண்மையான வழியைப் பற்றுதல் என்பதும் ஒருவர்க்காக அதனை விட்டுவிடுதல் என்பதும் கூடாது. நாம் ஜீவதிசையிலிருக்குமளவும் இந்நிலையிலேயே நிற்கவேண்டு மென்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். நமக்கு பலமும் பிர காசமும் கொடுக்கும்படி கடவுளைப் பிரார்த்திக்கவேண்டும். அப்படிச் செய்வதால் நாம் சரியான பாதையில் அவரைப் பின்பற்றலாம். நாம் சரியான பாதையில் செல்லும்போது மத்தியில் இறந்துவிடுவோமோ என்ற கவலை நாம் அடையவேண்டியதில்லை. ஆனால் நாம் ஒருபொழுதும், நமது பலயீனத்தால் அவ்வழியைவிட்டு விடுதல்கூடாது.

மனம்தேகம் இரண்டிலும் உயர்வு தாழ்வுகளிருக்கின்றன. அக்கார ணத்தால் நாம் எந்த விதத்திலும் மனத்தளர்வடைதல் கூடாது. நாம் அழுத்தமாயும் ஒரே நிலையாயுமிருக்கவேண்டும். பலவிதத் தொழில்களி லும் பழக்கந்தேடிக்கொண்ட ஒருவர் தான் முயற்சியாய்ச் செய்யும் தொழிலில் நல்ல லாபம் கிடையாவிடில் கிருஷி முதலியவைகளில் பிர வேசிக்கிறான். ஆனால் கிருஷிகனோ பல வருஷங்கள் மழையின்றியிருந் தாலும் தன் பயிர்த்தொழிலை விட்டுப் பிரிகிறதில்லை.

இதைப்போலவே ஒருவன் தெய்வீக அன்போடு சன்மிக்கிறான். அவனோ வேறொன்று மறிகிலான். மற்றொரு விதமான பக்தனோ அதை அடையும்படிச் சாதாரணமாய் முயற்சிக்கிறான். இதில் முன்னையனோ நூற்றுக்கணக்கான கஷ்டங்களைச் சந்திக்கினும் அவன் வாழ் நாள் களில் பெரும் பாகம் அனுபவித்தறியவே போராடுகிறான். தான் அதில் தவறினும் கடவுளிடத்துத்தான் கொண்ட அன்பை மாத்திரம் தவறவிடமாட்டான். இதில் பின்னையனோ தன் பாதையில் சொற்பத் தடையைச் சந்திக்கினும் மறுபடியும் பிரபஞ்சத்தில் திரும்பித்தான் கொண்டிருந்த அன்பு அலைப்புண்டு போகிறான். இதில் முதலாவான் அன்பு பரிசுத்த அன்பு. அவனன்புகொள்வது அவன் அன்பிற்காகவே. மற்றையனோ சுயநய முடிவிற்காகக் கடவுளை வணங்குகிறான். அவன் விருப்பங்கள் பூர்த்தியாகாதபோது தன் பக்தி மார்க்கத்தை கைவிட்டு விடுகிறான்.

இதனால் நாம் தெரிந்துகொள்வது ஒரு நிலைப்பட்ட மனம் மெத்த அவசியம் என்பதே. அதுஇல்லாமல் மேலெழுதல் கூடியதல்ல. ஆதலால் பகிர்முக நோக்கின்பேரில் செல்லும் நம் பிராண சக்தியை நம்மால் கூடியவரையில் அதின் சார்பினின்றும் குறைக்க நாம் எப்போதும் முயற்சிக்கவேண்டும். பின் அந்தர்முக பலத்தை நாம் மேலுக்குமேல் அடைவோம். புகழ்ச்சி இகழ்ச்சிகளைப்பற்றியும் பிறர் வசனங்கள் செய்கைகளைப்பற்றியும் நமக்குக் கவலையில்லை. இவைகளில் அசைவற்று நிதானமாய்ச் செல்வோம். நம்மை பந்தரகிதராக்கிக்கொள்வதற்கு எந்த விதத் தளர்ச்சியுங்கூடாது. இவ்வாறு பகவான் கீதையில் கூறுவதையும் நம் நினைவிற்கொள்ளவேண்டும்.

எவ்வித நிலைமைகளாலும் பலயீனத்திற்கும், தளர்ச்சிக்கும் நம்மை ஒருபொழுதும் நாம் ஒப்புவித்தல்கூடாது. நம்நிலையில் நாம் எப்பொழுதும் ஓர் சுத்த வீரனைப்போல் ஜாக்கிரதையாய் நிற்போம். எழுந்து நில், நான் தைரியசாலி, நான் சுத்தமுள்ளவன், நான் தெய்வீகமுடையவன், எனத் தைரியமாய்ச்சொல். பலயீனங்களெல்லாம் உடனே கவிழ்ந்துபோம். சர்வ பந்தங்களும் மறைந்துபோம்- நீ ஆனந்தமும், சாந்தமும், திருப்தியுமுடையவனாய் ஒன்றையும் புறம்பே எதிர்பாராதே. உன் முழு எண்ணத்தையும் உள்ளே திருப்பு. உன்னுள்ளே பார். கடவுளின் ஞாபகத்தை உன் ஹிருதயத்தில் வை. அவரை இரவும் பகலும் வணங்கு. இந்த வாழ் நாளில் ஒருவர் செய்யக்கூடிய பெரிய காரியம் அதுவே.

உலக விஷயங்களில் உண்மையான சந்தோஷம் கிடையாது. இந்த உலகத்தில் எதுவும் உண்மையில்லாதிருக்கும்போது அது மாத்திரம் எப்படி யிருக்கமுடியும். சந்தோஷமும் வருத்தமும் மாயாரூபமானவை. அவை வந்துபோகும் தன்மை யுள்ளவைகள். அதிக நாள் நீடித்திருக்க முடியாது. ஆகையால் அவை சில நாள்களுக்குத்தான் என்று அறிந்தவனாய் அனுபவி. சுகதுக்கங்களில் பாதிக்கப்படாது தங்கும் ஒருவரே சுத்தவீரர் சாந்தமாயிரு. சாந்தம் ஒவ்வொன்றையும் நாளடைவில் ஜயிக்கும். தைரியமுள்ள சிப்பாய்களைப்போல் நம் நம்பிக்கையில் அழுத்தமாயிருக்கவேண்டும். தேகம் நீண்ட நாள்கள் தங்காது, ஆனால் ஆன்மா தங்கும், ஒழுக்கம் தங்கும். ஆகவே உன் ஒழுக்கத்தை கட்டி முடிக்க உன் கவனங்களை யெல்லாம் கொடு.

நீ பாபரகிதமும் பந்தரகிதமாயுமிருக்கிறாய். உன்னிடத்தில் உனக்கு நம்பிக்கையிருந்தால் அதைரியம் உன்னைப் பொருந்தாது. உன் ஜீவனின் ஒவ்வோர் அணுவும் அவ்வித நம்பிக்கை வைக்கும்படி செய். சந்தேகத்துடன் குறிப்பை யடைய முடியாது "தன்னிடத்தில் நம்பிக்கையில்

லாத ஒருவன் நிரீசுரவாதியாயிருக்கிறான்." என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். முதலில் உன்னிடத்தில் நம்பிக்கை வைத்தாலல்லது கடவுளிடத்தில் நம்பிக்கை அடைய முடியாதென்பதை அறி.

நம்தலைவர் நம்மை என்ன செய்தற்கு விரும்புகிறார் என்பதை நாம அறியாதிருக்கலாம். ஆனால் நாம் அவருடைய குழந்தைகள் என்பதையறிகிறோம். மேலும் அவர் நமக்கு வழிகாட்டி ஆதரிப்பார் என்பதில் நாம் முழுநம்பிக்கை யோடிருக்கலாம்; நமக்கு வேண்டுவதும் அவ்வளவு தான். உலகமுற்றும் நமக்கெதிராய் நிற்கட்டும். நாம் கவலைப்படுவதில்லை. தைரியமுள்ள சிப்பாய் போலும் நம்பிக்கையு முண்மையுமுள்ள வீரனைப் போலும் நாமிருக்க வேண்டும். மேலான யாகாதி காரியங்களைச் செய்யாமல் எந்தப் பெரிய காரியமும் நிறைவேற்றப் பட்டதில்லையாதலால் கன்மபாட்டை மிகச் சுத்தானது.

எழுந்திரு, விழித்துக் கொள். இந்த பகிர் முகத்தோற்றமான பிரபஞ்சத்தினின்று திரும்பிப்போ. உன்னுள்ளே தானே ஆழத்தினும் ஆழமாய்ச் செல். உண்மையான சாந்தியையும் சிரமசாந்தியையும் நீ அங்கே காண்பாய் சாந்தியை உன்னுள்ளேயிருந்து மாத்திரமே பெறவேண்டியது வேறெங்குமல்ல வென்றறிவாயாக. நாம் சாந்தியாயிருந்தாலன்றி எவ்விடத்தும் நமக்குச் சாந்தியைத் தரக் கூடியதில்லை. ஆகையால் உன்னுள்ளே தானே சாந்தியைப் பெறுதற்கு முயற்சி செய். பின் நீ பந்தரகிதப்படுவாய். பகிர் முகத் தொந்திரவுகள் உன் அமைதியை எப்பொழுதும் உடைக்காது. பயப்படாதே உன்னுள்ளத்தை நம்பு; மேலே போ. உண்மைக்காக சண்டையிட்டிறக்கும் சுத்த வீரரைப் போல் இறப்போம். அது ஆத்ம சாந்தியைத் தரும்

அச்சமின்மை

பரிசுத்தமாயும், தீர்மானமாயும், நாம் பயமற்று நின்றால் நம்பாதையிலிருந்து நம்மை ஒன்றும் வெருட்டி விட முடியாது. மனிதரில் சிலர் கெடுதலென்று சொல்வதற்காக மாத்திரம் நம்மூர்த்திகரவாழ்வை நாம்யேன் விட்டுவிடவேண்டும். இல்லை. இல்லை. நாம் அந்த விதம் செய்யக் கூடாது. உலக முற்றும் நமக்கு விரோதமானாலும் நம் அன்பின் மூர்த்திக்கு உண்மையுள்ளவர்களாய் இன்னும் அதிகமாய் அங்கு அசைவற்றிருக்க வேண்டும். இதற்காகவே நமக்குத் தைரியமும் தீர்மானமும் வேண்டும். ஒவ்வொன்றும் ஒற்றுமையாயிருக்கும் போது சுத்தவீரமுடைமையாய் காட்டலாம். ஆனால் உலக முற்றும் தனக்கு எதிரியாய் நடந்தாலுங்கூட அடி பெயர்த்து அழுத்தமாய் நிற்பதல்லவோ பரிசுத்த வீரம். இப்படி நேர்வதே ஆன்மசோதனை.

பூரண சாமர்த்தியமான ஒரு ஒழுக்கத்தை உருப்படுத்திக் கொள்ள நமக்கு அநேக விஷயங்கள் தேவை. நன்மை, தீமை, சுகதுக்கம், சந்தோஷம் வருத்தம் இவை இரண்டிரண்டின் வழியாகவே நாம் போக வேண்டும். சுக துக்கங்களால் பாதிக்கப்படாதபோது நம் முடிவை எட்டலாம். பின் நமக்கு புறத்தோற்றமான பிரபஞ்சத்தைப் பற்றிப்பயமில்லை பிரபஞ்சத்தில் என்ன காரியமுள்ளது. அதில் உண்மையான சந்தோஷமில்லை யென்பது நமக்குத் தெரியும். இந்த வாழ்நாளில் கடவுளை அனுபவித்தறிய முடியாவிட்டாலுங் கூட வேண்டியதில்லை. விஷமென்று விலக்கிய இப்பிரபஞ்சத்திற்கு மாத்திரம் நாம் திரும்பிப்போவதாய் ஒருபோதும் நினைக்கக் கூடாது. எப்பொழுதும் இதனை நினை அது பூரண பலத்தைக் கொடுக்கும், பிரபஞ்சத்தை விலக்கிய ஒருவர் அல்லது வேறு விதமாய்ச் செல்லுமிடத்து, தன் ஒழுக்கத்தை உருப்படுத்த பிரபஞ்சத்தைக் கக்கித் தள்ளிய பிறகு திரும்ப அந்த ஊத்தைப் பண்டத்தை உருசிபார்க்க விரும்பினால் அது எவ்வளவு முட்டாள் தனம்! எவ்வளவு அறியாமை! எவ்வளவு பாதகம்! எவ்வளவு அவமானம்! இவை எவ்வளவு அவர் அடைந்திருக்கவேண்டும். உண்மையான வாழ்நாளிலும் பரிசுத்தமாய் வசிப்பதிலும் நிச்சயமான சந்தோஷம் கொஞ்சம் உண்டு. ஆனால் அதை வேறுவழியில் கண்டு கொள்ள முடியாது.

உற்சாகம் கொள். அளவுகடந்த பொறுமையோடு விளங்கு. பொறுமை எல்லாவற்றையும் செயிக்கும். அதிசயிக்கும் தீர்மானத்துடன் உண்மையான வாழ்நாளைப் பெறவேண்டியவளாய் "கர்வமுள்ள பிரபஞ்சமே அப்பாற்போ" நானுன்னை விரும்பவில்லை" உன்னுதவி எனக்கு வேண்டாம்" என உன் தைரியத்தோடும் பூரண பலத்தோடும் அடுத்தடுத்துச் சொல். எவ்வளவு சீக்கிரத்தில் உன் அறியாமையான இருள் விலகுகிறதென்பதையும் எவ்வளவு சீக்கிரத்தில் உன் பரிசுத்த இருதயம் தெய்வீக அன்பினாலும் பிரகாசத்தினாலும் நிறைகிறதென்பதை நீ பார்க்கலாம்.

பயமா? யாருக்குப் பயம்? நாம் பயப்படுவதற்கு அங்கு என்ன இருக்கிறது. நம்சத்துருகட்கு நாம் முதுகு காட்ட முடியுமா? இல்லை. ஒரு பொழுதும் இல்லை? அடிமையாய் ஜீவித்து வாழ்வதினும் கற்புடையார் போல் சாவோம். வீரரைப் போல் இறப்போம். தூய்மை கவசமும், ஞானவாளும் கற்புக் கேடயமும் கொண்ட நாம் தைரியமாய் சண்டை போடக்கூடும். அவை நமக்கே உரியன.

கமலத்தன்னை.

ராஜபக்தி.

(256-ம் பக்கத் தொடர்ச்சி.)

தன்னைக் கொல்லவந்த பாதகனைக் காப்பாற்றியது.

எதுகுலன் தன் வழியில் முக்கால்பாகமும் கடந்த பின்னர், குடிசைக்கு இன்னும் 4,5 நாழிகை வழிதூரம் இருந்தது. வெகுதூரம் வந்து விட்டபடியால் இனி வனபாலர் உபத்திரவம் இராதென்று எண்ணி, மான் வேட்டையாடலாமா வென்று சுற்றிலும் பார்த்தான். பக்கத்தில் ஒரு புதரும் அதன் மத்தியில் ஒரு கோனேரியும் இருந்தன. மான்கள் கோனேரியில் நீர் அருந்திப் புதரில் உல்லாசமாய்ப் படுத்திருக்குமென்றெண்ணிப் புதரை நோக்கிச் சென்றான். உடும்பைப் பக்கத்தில் அழைத்துக் கொண்டு சந்தடி செய்யாமல் செடிகளில் நுழைந்து, புதர்களைத் தாண்டி அப்பால் போகவே, மான் ஒன்றும் தென்படவில்லை. கோனேரிக்கரையிலே ரம்யமான புல்தரையின் மீது, ஜேடன் கருப்பண்ணன், அயர்ந்து நித்திரை போய்க் கொண்டிருந்தான். உடும்பு குலைக்க ஆரம்பம் செய்து விட்டது. உடனே எதுகுலன் அதை மௌனமாய் இருக்கச் செய்து, மெதுவாய்ப் பக்கத்தில் நெருங்கிப்பார்க்கவே, அவனுடைய வில் பக்கத்தில் நாணேற்றிவைத்திருந்தது. அம்புப் பெட்டியும் திறந்துகிடந்தது.

எதுகுலன், கருப்பண்ணன் பக்கத்தில் உட்கார்ந்து, அம்புகளின் கூரிய முனைகளையெல்லாம் கழற்றி எறிந்துவிட்டு வில்நாணுக்கும் ஒரு பசையைத் தடவிவைத்தான். இப்பசையின் குணத்தால் நாண் அழுத்தியபோது அறுந்து போகும். அழுத்தாதவரையில் அப்படியே இருக்கும். பிறகு "இந்தப் பாவி என்னைத் தொடர்ந்து வந்தான் நேற்றையதினம். இன்று என்ன செய்வானோ! இவன் வேட்டைக்கு வரவில்லையென்பது நிச்சயமாகிறது; ஏனென்றால் இவனுடைய நாய் பக்கத்தில் காணப்படவில்லை. மனிதனையாவது மிருகத்தை யாவது தொந்தரவுசெய்ய வேண்டுமென்று எண்ணி, இவன் வில்லை நாணேற்றி வைத்திருக்கும் பக்ஷத்தில், இவனுடைய பிரயத்தனம் ஒரு தடவையாவது தப்பிப்போகட்டும்.

அப்படித்தப்பாமல் அம்பை முடிக்கினாலும் மழுங்குண்ட அம்பு அதிக தொந்தரவு செய்யாதல்லவா? ஒருக்கால் தூங்கியெழுந்திருந்து என்னையே தொடர்ந்து வந்து எய்தாலும் நானும் தப்பித்துக்கொள்ளக்கூடுமல்லவா?———அட,! அடா!! இது என்ன விந்தை! அந்த அம்பினது முனையைக் கவ்விக் கொண்டுபோன காகம் ஏன் கீழே விழுந்து புரளுகின்றது? ஆஹா! அம்பில் விஷத்தைத்தடவியிருக்கிறாயே! அடே! கொடும்பாதகா! அவ்விஷ அம்பினால் எவர் உயிரைவாங்க எண்

ணியிருந்தாய் !!—இனி இப்பாதகனிடத்தில் நிற்பதும் பாவமே—" என்று இவ்வாறுமனதில் நினைத்துக்கொண்டு அவ்விடத்திலிருந்து புறப்பட்டுக் குடிசையை நோக்கிச்சென்றான்.

கருப்பண்ணன் முகத்தைப்பார்த்தவுடனேயே அவன் கொலைகளவுக்கஞ்சாதவன் என்பதைக் கண்டிப்பாய்த்தெரிந்து கொள்ளலாம். சுமார் 50,60 அடிதூரம் போவதற்குள்ளாகவே, எதுகுலன் தன் நாய்குலைப்பதைக் கேட்டுத்திரும்பிப்பார்க்கவே, நாய் அதிவேகமாய் குலைத்துக்கொண்டே தன்னிடம் ஓடிவந்து கொண்டிருந்தது. நடந்த சங்கதியென்னவெனில் கருப்பண்ணன் மடியில் இறைச்சித்துண்டுகள் இருந்தன. அவற்றைத் தின்னவேண்டுமென்று 'உடும்பு' அவன் அள்ளையில் முட்டித்துணியைப் பற்றியிழுத்தது. அதனால் கருப்பண்ணன் விழித்துக்கொண்டு உடும்பின்தலையில் ஒரு அடி கொடுத்தான். அந்த அடியை வாங்கிக்கொண்டு 'வள், வள்' என்று குலைத்துக்கொண்டு, உடும்பு எதுகுலனிடம் பறந்தோடி வந்தது. கருப்பண்ணன் நாயைபின் தொடர்ந்து ஓடிவரவில்லை. ஆகையால் எது குலன் பின்னேதிரும்பிப் பார்த்தும் நாய் குலைத்ததிற்குக் காரணம் ஒன்றுமே புலப்படவில்லை. சுற்றிலும் பார்த்தான்; மனிதர்களும் தென்படவில்லை, மிருகங்களும் தென்படவில்லை. ஆகையால் மறுபடி வழியைத் தொடர்ந்து வேகமாய் நடந்து போனான்.

தன் வீடு பக்க[illegible]ப்க் கொண்டுவரவே, எதுகுலன், இனி வேட்டையாடப் போவது மு[illegible]தென்றெண்ணி, குடிசைக்கு இரண்டு நாழிகை வழிதூரத்தில் ஒரு பெரிய ஆலமரத்தடியில் சற்று இளைப்பாறுவோம் என்று உட்கார்ந்தான். உட்கார்ந்த சில நிமிஷத்துக்கெல்லாம் வழக்கப்படி மனோ ராஜ்யம் செய்யத் தொடங்கி மெய்மறந்து, யோசனையில் ஆழ்ந்தான். நிமிஷங்கள் பறந்தோடுகின்றன. எது குலதிலகனுக்குத் தெரியவேயில்லை. தன் நிலைமையும், தான் போர் வீரனாய் அரசனிடம் சேருவதும், எத்தனையோ தடவை சண்டை செய்வதும், அரசன் ஜயமடைவதும், தான் மரியாதை பெறுவதும்,—கலாவதியை மறுபடி காண்பதும், அவள் தன்னை மேன்மையாய்ப் பேசுவதும் எவ்வழியில் யோசனை சென்றாலும் மறுபடியும் கலாவதியிடம் வந்து நிற்கின்றது என்றிவ்வாறான யோசனையில் தன் தற்கால நிலைமையே மறந்துவிட்டான். மனோ ராஜ்யத்தால் உண்டாகும் ஆனந்தத்தை அனுபவித்தவர்களுக்கே தெரியும் அதன் உண்மை !!

பலநிமிஷங்களுக்குப் பின், மறுபடி உடும்பு குலைத்துக் கொண்டு தன்கால்களுக்கு இடையில் வந்து நின்று கொள்ளவே, வீரன் எதுகுலன், விழித்துக் கொண்டு, எழுந்து நான்கு புறமும் சுற்றிப் பார்த்தான்.

முன் போலவே ஒன்றும் புலப்படவில்லை. பத்திரமாய் இருப்பது நன்றென்று கருதி நொடியில் தன் வில்லுக்கு நாணேற்றி அம்பும் கையுமாய் நின்றான். உடும்பு சற்றேனும் நில்லாமல் குலைத்துக் கொண்டு கிழக்குப் பக்கம் முன் சென்றது. உடனே எதுகுலனுக்கு, இது ஏதோ கருப்பண்ணன் செய்யும் சூது தான் என்றும், அவன் கிழக்குதிக்கில் மறைந்திருக்கின்றான் என்றும், நிச்சயமாய்த் தோன்றிற்று. மறுபடி கிழக்கு திக்கில் கவனித்துப் பாக்கவே, மரங்களுக்கு இடையில் 10, 20 அடி தூரத்தில் மறைவில் நின்று கொண்டு, கருப்பண்ணன் தன் வில்லில் அம்பு தொடுத்து தன்னை எய்யக் குறிவைத்துக் கொண்டிருப்பது எது குலனுக்குத் தென்பட்டது.

எது குலன் பார்க்கும் போதேகருப்பண்ணன் நாணை இழுத்து அம்பை எய்து விட்டான். நாண் 'படீர்' என்று இரண்டாகத் துண்டித்து, வில்லின் மேல்பாகம் அவன் மோவாய்க் [illegible]டையைப் பிளந்து கொண்டு அப்பால் போயிற்று. அம்போகருப்பண்ண[illegible]ன் காலின் கீழேயே விழுந்து விட்டது. இதற்குள் உடும்பு அவன்மே[illegible] பாய்ந்து கடிக்க வந்தது. தனக்குப் பட்ட அடியையும் கவனியாது கருப்பண்ணன் தன்வில்லால் நாயை அடிக்க முன் வந்தான். அதற்குள் எதுகுலன் இமைப்பொழுதில் விரைந்து வந்து, அந்த அடிநாயின்மேல் படாமல் தன் கத்தியால் தடுத்தான். "தடுக்கிறாயா போக்கிரிப்பயலே, உன்னை என்ன செய்கிறேன் பார்" என்றான் கருப்பன். "நான் உன் நாணைப் பசை பூசியிராவிட்டால், நீ இப்பொழுது என் உயிரை வாங்கி யிருப்பாய் தடையில்லை. இனி யென்ன செய்ய முடியும் உன்னால் !!" என்றான் எதுகுலன். "நான் உன்னைக் குறிபார்க்க வில்லையே, உன் நாயையல்லவா அடிக்க அம்பு தொடுத்தேன். அதை இப்பொழுதுதான் விட்டேனா பார்" என்று மறுபடி அதை அடிக்க வில்லை ஓங்கினான்.

"அடே! பொய் பேசும் பேதாய்! என்னையார் என்று எண்ணினாய்! நீ என்மீது அம்பு எய்யப்போவதைக் கண்ணார நான் கண்டும், இல்லையென்கிறாய்.—எனக்கு அஸ்திர சாஸ்திரம் தெரியாதென்று எண்ணினையோ—இருப்பினும் நீ என் நாயைக் கொல்வதென்னிமித்தம்? என் நாயையா குறிபார்த்தாய்! சரி! அதை நீ கொல்வதற்குள் உன் பிணத்தைக் கீழே உருட்டுகிறேன் பார்." என்று சொல்லிக்கொண்டே, ஒரு கூரிய அம்பை நாணில் ஏற்றிக்கொண்டு, "இவ்விடத்தை விட்டுத்திரும்பிப் பாராமல் ஓடு, ஓடு; ஒரு க்ஷணம் தாமதம் செய்தாலும், திரும்பிப் பார்த்தாலும் இதோ அம்பை எய்து விடுகிறேன் பார்" என்றான்.

எதுகுலன் தீர்மானமாய் எய்து விடுவான் என்று கருப்பண்ண

னுக்கு நிச்சயமாகவே, அவன் சொன்னபடி செய்வதே யுக்தமென்று திரும்பிப்பாராமல் புறப்பட்டான். எதுகுலனும், கருப்பன் தலை மறைவாய்ப்போகும் வரையில், வில்லும் கையுமாய் அங்கேயே நகராமல் நின்று கொண்டிருந்தான். தலை மறைந்தவுடன் தன் வழியே நடக்கத் திரும்பினான்.

அதற்குள் சூரியன் அஸ்தமித்து இருள் மூள்வதாயிற்று. கருப்பண்ணன் ஒருக்கால் தன்னைப் பின்தொடர்ந்துவருகிறானோ என்னவோ என்று அடிக்கொருமுறை பின் திரும்பிப் பார்த்துக்கொண்டேபோனான். கடைசியாய்க் கையெழுத்து மறையும் சமயத்தில், நடுவனத்தில் ஒருவன் மரத்துக்கு மரம் ஒளித்துக்கொண்டு, தன்னை நெருங்குவதைக் கண்டான். "ஓ! ஹோ!! அப்படியா! கருப்பா! நீ மறுபடியும் வருகிறாயா!! நல்லது! நல்லது!! உன்னை ஆட்டிவைக்கின்றேன் பார், இப்பொழுது!! யாருக்கு முதலில் கால் வலியெடுக்கிறதோ பார்ப்போம்!! இவ்வனாந்தரத்தைச் சுற்றிச் சுற்றியடிக்கிறேன்! வாடா!—எங்கேயிருக்கிறோம் இப்பொழுது—" என்று தனக்குள்ளேயே எண்ணிக்கொண்டு, தான் நிற்குமிடத்தைச் செவ்வையாய் அறிந்து கொள்ளும் பொருட்டு நாற்புறமும் சுற்றிப்பார்த்தான். "ஆழ்வா… கேணியண்டையல்லவா இருக்கிறோம். நல்லது! பக்கத்தில் இரு… 'வேடன் தோப்பு? அங்கே யல்லவா எனது அருமைத் தம்பி …ம்ஸன், கள்ளக்குழி வெட்டியிருக்கிறான்!! ஹா! ஹா!! பேஷ்! பேஷ்!!" என்று தோப்பின் அப்பால் உள்ள திறந்த வெளியில் நடக்க ஆரம்பித்தான்.

அப்பொழுது எதுகுலன் நின்ற விடத்துக்கும் தோப்பிற்கும் 300, 400 அடி தூரமிருக்கலாம். தோப்பில் மரமடர்ந்து இருப்பதையும், அதன் நடுவில் பல கள்ளக்குழிகள் இருப்பதையும் கருப்பன் மரம் மரமாய் ஒளிந்து வருவதையும், தான் திறந்த வெளியில் நடந்துபோனால் கருப்பன் தோப்பில் ஒளிந்து பின்தொடருவான் என்பதையும், அது தான் தனக்கு அநுகூலம் என்பதையும், ஒரு நொடியில் அறிந்து கொண்டவீர எதுகுலன், மனதில் இன்ன விதமாய்த் தான் காரியங்கள் நடக்கவேண்டுமென்று தீர்மானம் செய்துகொண்டான்.

உடனே உடும்பைப் பக்கத்தில் அழைத்துக்கொண்டு தோப்பின் பக்கத்தில் உள்ள வெட்ட வெளியைத்தாண்டிப் போகிறவன்போல் குறுக்கே சென்றான். எதுகுலன் வெட்டவெளியில் நடக்கவே கருப்பனுக்கு சந்தோஷமாயிற்று. "இனி நான் வருவதை இவன் எப்படி கண்டு கொள்வானோ பார்த்துக்கொள்ளுகிறேன். இப்பிராந்தியங்களுக்கு நான் முன்னே வந்ததில்லை. ஆயினுமென்ன மரங்களுக்கிடையில் நரிபோல் நுழைந்து நுழைந்து சென்று அந்தப் பயலைக் கொல்லுகிறேன்" என்றெண்ணித் தோப்பினுள் புகுந்தான்.

கருப்பண்ணன் போனவழி எப்படி யிருந்ததென்றால், அவனுக்கும் எதுகுலனுக்கும் நடுவே மரங்களுக்கிடையில் படுகுழிகள் கணக்கில்லாமல் இருந்தன. எதுகுலனுடைய சூழ்ச்சியை அறியாது கருப்பன் விரைவாய் ஒளிந்தொளிந்து வந்துகொண்டிருப்பதை, எதுகுலன் அறிந்ததும் "சரி! சரி!! வா! வா!! தம்பீ!! அது தான் எனக்கு வேண்டியது" என்று தன்னுள் நினைத்துக்கொண்டே முன்னினும் அதிவேகமாய் நடந்து போனான். தன்னைக்கண்டு சிறுவன் பயந்தோடுகிறான் என்றெண்ணிக் கருப்பன் துரத்திக்கொண்டுவந்தான். இது தான் எதுகுலன் வேண்டியது. படுகுழிகள் இருப்பதை அறியாது, பறந்தோடிவரும் கருப்பன் ஒரு குழியண்டை காலை வைக்கவே, மண் சரிந்து, தலை கீழாய்த் 'தொப்' பென்று உள்ளே விழுந்தான். கையில் வைத்திருந்த வில்முறிந்து துடையில் ஏறிற்று. 'கூ, கூ' என்று அலறினான் குழியிலிருந்து கருப்பண்ணன்.

"அதுபோதும் உனக்கு!! தெய்வம் சரியான தண்டனை கொடுத்தார்! கொலைக்கஞ்சாப்பிசாசே! பாப்பையன் எத்தனை நாழிகை குழியில் இருந்தானோ அத்தனை நாழிகை நீயும் குழியில் விழுந்து கிடந்தால் உனக்கு அறிவுவரும்; உன் ஆண்வம் குறையும்; இனி என் வழியைத் தேடிக்கொண்டு வீடு போகிறேன்—வாடா உடும்பே! இனி வீடு சேருவோம்; வயிறு பசிக்கின்றது. அஹோபிலத்திறைவன் திருவருளால் இன்று நீயும் நானும் பிழைத்தோம்" என்று, நாயைக் கூட்டிக் கொண்டு, நடந்த விஷயங்களை நினைத்து நினைத்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டும், தெய்வச் செயலாய்த் தான் பிழைத்ததற்கு ஸ்ரீசைலவாசியையும், அஹோபில நரசிம்மனையும், மனதில் தியானித்துக்கொண்டும், வீட்டிற்கு ஓட்டமாய் ஓடினான்.

குடிசையை நெருங்கவே ஹம்ஸப்பிரியனும் பாப்பையனும் எதுகுலனைத் தேடுவதற்காகப் புறப்பட்டுக்கொண்டிருந்தனர். நல்ல வேளையாய் எதுகுலன் வந்துவிடவே, ஹம்ஸப்பிரியன் தமயனை ஆலிங்கனம் செய்துகொண்டு உள்ளே அழைத்துச் சென்றான். தன் அருமைத் தங்கை விசாலாக்ஷியையும், அலமேலுவையும் முத்தமிட்டுக்கொண்டபின், எல்லாரும் ஒருங்கே போஜனம் செய்த பின்பு, அன்று மத்தியானம் நடந்த விருத்தாந்தத்தை யெல்லாம் விவரமாய் எடுத்துரைத்தான் எதுகுலதிலகன். எல்லாரும் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருக்கையில் பாப்பையன் எழுந்திருந்து "இப்பே! அவன் குழிலே!!' அவனை நான், வில்லு, கொல்றே" என்று புறப்பட்டான்.

"சீ! சீ!! அப்படிச் செய்யாதே: பையா!! அது தப்பு" என்றான் புன்சிரிப்புடன் எதுகுலன்.

"அடே! பாப்பையா நீ உட்காரு கதவண்டையில்: நீ ஜனங்களைக் கொல்லக்கூடாது" என்றாள் அலமேலு.

"அவன் எஜமான் கொல்ற: வரா: அவன் கெட்டவே"

"ஆனால் நீ அவனைக் கொன்றால் நீயும் கெட்டவன்தானே பிள்ளாய்!!" என்றாள் மறுபடியும் அலமேலு. இந்த நியாயம் அவனுக்கு விவரமாய்த் தெரியாவிட்டாலும் எஜமானியான அலமேலுவின் வார்த்தையைத் தட்டமுடியாமல் வாசற்படியண்டை உட்கார்ந்துகொண்டான்.

"சரி! ஆனால்!! இப்பொழுது அந்தப் பயலை என்ன செய்வோம்? அண்ணு" என்றான் ஹம்ஸன்.

எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. என் எண்ணம் என்னவெனில் இவ்வளவு கொடிய பாவியான அந்தப் பிசாசு படுகுழியிலேயே இரண்டு மூன்று நாள் விழுந்து கிடந்தால் பிறகு அவனுக்கு புத்தி வருமென்று எண்ணுகிறேன். பிறகு பாரிஜாதனுக்குச் சொல்லியனுப்புவோம்." என்றான் எதுகுலன்.

"ஒரு தடையிருக்கின்றது அப்படிச் செய்வதற்கு, அவனுடைய வில் முறிந்து போயிருக்கலாம் என்கிறாய்: முறிந்து போனவில் அவன் தேகத்தில் எங்கேயாவது ஏறியிருந்தால் அவன் ஒரு நாளுக்குள்ளாகவே இறந்து போகக் கூடும். ஆகையால் இரண்டு மூன்று நாட்கள் அவனைக் குழியில் விட்டுவைப்பது எனக்கு இஷ்டமில்லை" என்றான் ஹம்ஸப்பிரியன்.

"நீ சொல்வதும் உண்மையே; அப்படியிருப்பினும் இருக்கலாம். அவன்போட்ட சப்தத்தையும், அவன் வேகமாய் விழுந்ததையும் பார்த்தால் ஒருக்கால் அடிபட்டிருக்கலாம் என்றே தோன்றுகிறது. உண்மையாய் அவன் இறப்பதானால் அந்தப் பாவத்தையும் நாம் என் தலையில் சுமத்திக்கொள்ள வேண்டும்?" என்றான் எதுகுலன்.

"ஆகையால் இனிச் செய்யவேண்டியதை சொல்லுகிறேன். நாளை விடியற்காலம் நான் குதிரையேறிப் பாரிஜாதனண்டை சென்று நடந்தவற்றைச் சொல்லி அவனை அழைத்து வருகிறேன்."

"செய், அப்படியே தம்பி! உன் புத்தியே புத்தி!! நானும் அதுதான் சரியான வழியென்று எண்ணுகிறேன்" என்றான் எதுகுலன்.

இரவில் படுக்கைக்குப் போகுமுன் வழக்கம்போல் தேவப் பிரார்த்தனை செய்யும்போது! அன்றிரவில் எதுகுலதிலகன் உயிர் பிழைத்து வந்ததற்காக இன்னொருமுறை அதிகமாய் ஈசனுக்கு மனதாறப் பிரார்த்தனை செலுத்தினர் குடிசை வாசிகளான நரசிம்மன் குழந்தைகள்.

ஹம்ஸப் பிரியன் சூரியோதயத்துக்கு முன்னமேயே புறப்பட்டு, ஜாமப் பொழுதுக்கு பாரிஜாதன் குடிசைபோய்ச் சேர்ந்தான். பாரிஜாதனும்

சிறுவனைச் சந்தோஷமாய் வரவழைத்து, க்ஷேமசமாசாரம் பேசிய பின் ஹம்ஸன், நடந்த சமாசாரங்களை அவனுக்குத் தெரிவித்தான். பாரிஜாதனுடைய நியாயமும் பாப்பையனுடைய நியாயமும் ஒன்றாகவேயிருந்தன. "அந்த பொல்லாத கழுதை குழியிலேயே சாகட்டும்" என்றான். ஹம்ஸன்; அவ்விதம் செய்வது தப்பென்று பலமுறை தட்டிச் சொல்லவே, இரண்டு வனபாலர்களைத் துணைக்கு அழைத்துக்கொண்டு, போஜனம் செய்தபின் ஹம்ஸப் பிரியனுடன் புறப்பட்டான் பாரிஜாதன்.

படுகுழியண்டை வரும்போது அஸ்தமித்து விட்டது. தாழ்ந்த குரலுடன் பலஹீனமாய்க்கருப்பண்ணன் அழுதுகொண்டிருப்பது அவர்கள் காதில் விழுந்தது. பக்கத்தில் சென்று "யார் ஐயா? உள்ளே" என்றான் பாரிஜாதன்.

"நான் ஐயா; நான்; நான்தான் கருப்பண்ணன்—வனபாலன்."

"உனக்கு அடிபட்டிருக்கிறதா?"

ஆமாம்; அடிபெலம்; நான் — விழும்போது — வில்முறிந்து — ஹூ, ஹூ—வில்முறிந்து, தொடேலே—ஏறிவிடுத்தைய்யா?—அப்பா, அப்பா!

"இன்னும் தொடேலேயே இருக்காவில்லு"

"இல்லே ஐயா பிடிங்குட்டேன்;—ஆனால்—இரத்தம் போச்சு—கொளமாத் தோங்கறது—அப்பப்போ—உசிர்போறதைய்யோ—" என்றான் அப்பாதகன்.

பிறகு தங்களுடன் கொண்டுவந்த ஏணியை நாட்டி, மெதுவாய் அவனை வெளியே எடுத்துப் போட்டனர். வலிபொறுக்கமாட்டாமல்அழுகின்றான் கருப்பன். மறுபடி இரத்தம் சேதமாகாமல் சரியாய்ப் புண்களைக் கட்டி குடிக்க ஜலமும் கொடுத்தனர். அதனால் சற்று வலிதீர்ந்து மயக்கம் தெளிந்து எழுந்து உட்கார்ந்தான்.

"இப்பொழுது என்ன செய்வோம்? இவனை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டுபோவது தகாது: உண்டவீட்டுக்கு இரண்டகம் நினைக்கும் படுபாவி" என்றான் இரகசியமாய் ஹம்ஸனுடன், பாரிஜாதன்.

"நான் சொல்வதைக்கேள். இவர்கள் மூவரும் இங்கேயே இருக்கட்டும், நாம் இருவரும் வீட்டுக்குப்போவோம். குதிரைக்குக் கொள்ளுக் கட்டிய பின் வண்டியை ஓட்டிவந்து இவனை லக்ஷ்மணபுரிக்கு ஏற்றிக் கொண்டுபோவோம். நானும் உங்களுடன் கூட வந்து மறுபடி வண்டியை வீட்டுக்கு ஓட்டிக்கொண்டு வருகிறேன். அப்படிச் செய்தால் தான் இவர்களுக்கு ஏதாவது சாப்பாட்டுக்கு வழியுண்டு, நமக்கும், க்ஷேமம்—" என்றான் ஹம்ஸப்பிரியன்.

"இரவெல்லாம் நீங்கள் தூக்கம் விழிக்க வேண்டிவருமே—" என்றான் பாரிஜாதன்.

"அதற்கென்ன செய்வது? அசௌகரியமே என்று பார்த்தால் வேலை எப்படி நடக்கும்."

அதுவே நேரான வழி யென்று பாரிஜாதனும் ஒப்புக்கொண்டு தன் வனபாலர்களை கருப்பனுக்குத் துணையாக நிறுத்திவிட்டு குடிசைக்குச் சென்றனர். குதிரையைப் பாப்பையன் வசம் ஒப்புவித்த பின் உள்ளே போய் எதுகுலதிலகனிடம் நடந்த சமாசாரங்களைச் சொன்னார்கள். "ஐயா! காரணமின்றி உம்மைக் கொல்ல வந்த கொடும் பாவி, முறிந்த வில் மார்பில் தாக்கி உடனே இறந்துபோயிருக்கக்கூடாதா? அதுவே தக்க தண்டனையாகும் அத்தகைய பாவிக்கு!! எப்படியிருப்பினும் அவனை நான் விடப்போகிறதில்லை. இவ்விஷயத்தைப் பிரதிநிதியாருக்குஞ் சொல்லி, உடனே நீக்கிவிடுகிறேன் அவனை வேலையிலிருந்து!!" என்றான் பாரிஜாதன்.

"யோசியாமல் அப்படி ஒன்றும் அவசரப்பட்டுச் செய்யக்கூடா தப்பா—பாரிஜாதா: உனக்கு இந்தக் கழுதைகளின் குணம் தெரியாது. எஜமானனுக்குக் கட்டுப்பட்டு ஊழியக்காரனும் இருக்கும்பொழுதே இவ்வளவு தீங்கு செய்கின்றவனை வேலையின்றி எதேச்சையாய் விட்டு விட்டால் எத்தனை கொலை செய்யமாட்டான்: நமது வனத்தில் விபரீதங்கள் நடந்துவிடும். இத்தகைய பாதகர்கள் நமது கையின் கீழ் இருப்பதே நல்லது. உட்காருங்கள் சாப்பிடுவோம்; குதிரை கொள்ளுத் தின்ன இன்னும் இரண்டு நாழிகை பிடிக்கும். அதுவரையில் நிதானமாய் அவசரப்படாமல் பேசிக்கொண்டே சாப்பிடுவோம்." பாப்பையன் குதிரையை கவனித்துக்கொள்வான் என்றான் எதுகுலன். அப்பொழுது பாப்பையன் எதிரேவர, அவனைப் பார்த்து பாரிஜாதன் "ஐயா! இவன் தானோ தாங்கள் குழியிலிருந்து வெளியேற்றிய செஞ்சுப் பையன்?" என்று கேட்டான்.

"ஆம்" என்றான் ஹம்ஸப்பிரியன்.

"சாவகாசப்பட்டால் இவனை ஒருதினம் என் குடிசைக்கு அழைத்துவாருங்கள்; அதனால் அநுகூலமுண்டு. ஏதாவது ஒரு சமயத்தில் நீங்கள் வரக்கூடாமல், எனக்கு ஆள் அனுப்ப வேண்டுமானால் இப்பயல் பிரயோசனப்படுவான்" என்றான் பாரிஜாதன்.

"சரி அப்படியே செய்யலாம் பாரிஜாதா—நானோ, இல்லையேல் ஹம்ஸனோ, யார் உன்னுடன் வரவேண்டுமென்கிறாய் இப்பொழுது? சொல் உடனே" என்றான் எதுகுலன்.

"ஹம்ஸப்பிரியர் தான், ஆக்ஷேபணை யென்ன!! நான் வாங்கி வரும் வண்டி உம்முடைய தென்றும், ஹம்ஸருக்கும் உமக்கும் உள்ள சம்மந்தமும், அந்தப்பசங்களுக்குத் தெரியாமல் இருப்பதே மேலானது"

என்றான். பிறகு விசாலாக்ஷியைப் பார்த்து "தாயே! என் மனிதர்கள் காலைமுதல் ஒன்றுமில்லாமல் பட்டினிகிடக்கிறார்கள். ஏதாவது தர்மம் செய்கிறீர்களா?" என்று கேட்டான். விசாலாக்ஷி "தடையென்ன? மூன்று பேருக்கல்லவா? இதோ வண்டி கட்டுவதற்குள் தயாராய்க்கட்டி வைக்கின்றேன்" என்றாள்.

வண்டி கட்டினதும், சோற்று மூட்டையை வாங்கிக்கொண்டு, படுகுழியண்டைபோகவே, அவ்விடத்தில் கருப்பண்ணன் மற்ற இரண்டு வனபாலர்களுடனும் உஷாராய்ப் பேசிக்கொண்டிருந்தான். அவர்கள் மூவருக்கும் ஆகாரம் படைத்த பின்பு, பிரயாசத்துடன் அடி பட்டவனை வண்டியில் ஏற்றிக்கொண்டு நடு நிசிக்கப்புறம் லக்ஷ்மணபுரிபோய்ச் சேர்ந்தனர். ஹம்ஸப் பிரியனுடைய குதிரை அன்று வீட்டுக்கும் லக்ஷ்மணபுரிக்கும் மூன்று தடவை நடந்ததென்றாலும், மறுபடி வீட்டுப்பக்கம் திருப்பவே, சந்தோஷத்துடன் உருமிக்கொண்டு ஒரே ஓட்டமாய் வீடு வந்து நின்றது.

நமது பெண்கள் நிலைமை

16434

பெண்பால் சமூகத்தை நிகழ்த்துகின்றாள். ஆகையால்தான் ஹிந்து மதப்படி, கடவுளின் வல்லமை, அல்லது சக்தி பெண்ணுருவாகப் பேசப்படுகின்றது. ஆடவர்கள் எவ்வாறிருப்பினும் எத்தொழிலைச் செய்யினும் அவர்கள் தன்மைகளெல்லாம் பெண்பாலால்தான் அமைக்கப் படுகின்றன. சமூகத்தின் தன்மைகளை அமைப்பதில் பெண்பாலாரிடத் தில் என்னவோ ஒரு விசித்திர சக்தி இருக்கின்றது. அதன் மகிமையினால், தாயாகவும், தாரமாகவும், தமக்கையாகவும், தங்கையாகவும், வேறு எவ்வித உறவினளாகவும் மித்திரியாகவும் ஜீவர்களுக்கு நின்று, அவர்கள் குணங்களின் தன்மையையும் அவர்கள் வாழ்க்கையின் தன்மையையும் ஆக்குகின்றாள் பெண்பால். ஆகையால் சகோதரி சகோதரர்களே! வியப் படையாதேயுங்கள். பெண்தான் சமூகம் நிகழ்கின்ற தன்மைக்குக் காரணமாகின்றாள். இவ்விஷயத்தை இன்னும் சற்று விளக்கமாக விரிக்க லாம். ஆனால் நான் இந்த ஓரே வியாசத்துள் சொல்லவேண்டிய விஷயங் கள் பல இருக்கின்றன. ஆதலால் பெண்பால், சமூகத்தை நிகழ்த்தும் விதத்தைப்பற்றி மேற்சொல்லாது மேற் செல்லுகின்றேன்.

ஒரு நாடு உன்னதமடைந்தாலும் அல்லது தாழ்வடைந்தாலும் அந்த ஏற்றம் அல்லது வீழ்ச்சி அந்த நாட்டைச் சார்ந்த ஒவ்வொன்றிலும் பிரதிபலித்துத் தோன்றும். அவ்வாறிருக்க, சமூக நிகழ்ச்சித் தன்

மையின் காரணமாகிய பெண்பாலாரிடத்தில்தானா அது தோன்றாது? ஆம் அவசியம் தோன்றும். ஒரு நாட்டின் பெண்கள் நிலைமையை அறிந்து கொண்டால் அந்த நாட்டின் நிலைமையையே அறிந்து கொள்ளலாம். பெண்களிடம் அழகு, தூய்மை, கம்பீரம், கல்வி முதலிய நன்னலங்கள் துலங்கப்பெற்ற நாடு செழிப்பாயும் ஆநந்தமயமாயும் விளங்கும். இக் காரணம்பற்றித்தான் நமது கவிகள் ஒரு நாட்டின் சிறப்பைக்கூறும் பொழுது முக்கியமாய் நங்கையர்களைப் பற்றி விசேஷமாக வர்ணிக்கிறார்கள்.

இப்பொழுது நமது தமிழ் நாட்டுத்தையலர்கள் நிலைமையைப்பற்றிக் கவனிப்போம். முதன் முதல், அவர்களது முக்கிய ஆசை, கொள்கைகள், ஆசாரங்கள் முதலியவைகளைப் பார்ப்போம். சுயநலம், மிக முற்றி வளர்ந்துள்ள சுயநலம், "யாருக்கு என்ன நேரிட்டபோதிலும், எந்தக் காரியம் எப்படிப்போயினும், நான், என் மகன், மகள், கணவன் முதலியவர்களும் என்னை மிக நெருங்கிச் சார்ந்துள்ளவர்களும் எவ்விதத்தாலாவது சௌக்கியமாக வாழவேண்டும். எங்களுக்கு அணுவளவேனும் இலாபகரமாயில்லாத, எங்களுக்குத் தினையளவேனும் இன்னலிழைப்பதாய்த் தோன்றுகிற எவ்விதக் காரியத்திலும் தலையிடவே கூடாது" என்பதாதிய கொள்கைகளை ஈனும் மிகக்கொடுமையான சுய நலக் கடலில் நமது பெண்கள் ஆழ்ந்திருக்கிறார்கள். அவர்களுக் கேற்பட்டிருக்கும் ஆசாரங்களோ, அம்மம்மா! நினைக்க நினைக்க நிஜ தேசாபிமானிகள் நெஞ்சங்களைப் புண்ணாக்கி வருத்துகின்றன.

விளையாட்டுக் குழந்தைகளுக்குக் கல்யாணம், பத்துப்பன்னிரண்டு வயதுக்குமேல் பாலிகைகள் இல்லற முறைகளைப்பற்றிச் சகல உபதேசங்களும் பெற்றுச் சுய நலத் துவஜம் நாட்டிக் குடித்தனஞ் செய்தல், குழந்தைப் பெறுதல், ஐந்து வயது விதவை, எட்டு வயது விதவை, பத்துப் பன்னிரண்டு பதினைந்து பதினெட்டு இருபது முதலிய பல பருவங்களமைந்த விதம் விதமான விதவைகள், அவர்களுக்குரிய சிரோமுண்டனம், ஓர்வித உடைக்கட்டு, ஓர்வித போஜனக்கட்டு முதலிய பல பல கட்டுப்பாடுகள் ஆகிய இந்த ஆசாரங்கள் ஒருபால். குழந்தைப்பருவத்தில் விவாகமாகும் பாக்கியம் பெறாத பெண்ணோ, 12 வயது 16, 18, 20, 25, 30, எத்தனை வயது வரையிலாயினுஞ்சரி அகத்திலேயே அடைபட்டு, அந்நிய புருஷரை ஜன்னல் வழியாகவும், திரைச்சந்து வழியாகவும் பார்த்துக்கொண்டு அடுப்பங்கரையில் அவிந்து புழுங்கிப்போயிருக்கும் தன் அழகிய உருவத்தை மாத்திரம் அந்நிய புருஷர் கண்களிற் படாதபடி மறைத்திருக்க முயலுதல், இந்த நிர்ப்பந்தங்களினின்று விடுபடநிமித்தமும் மற்றும் பல காரணங்களை முன்னிட்டும் தன் கழுத்தில் ஒரு புரு

வாசுகி, ஔவை, தடாதகைப்பிராட்டி, மங்கையர்க்கரசி, காரைக்காலம்மையார் என்ற புனிதவதி, மிகச் சமீப காலத்திலும் சிநேகலதை, வள்ளியம்மை முதலிய எத்தனையோ உத்தமிகள் உதித்து வாழ்ந்த நாடு இது. தோகையர் தூய்மையோடிருக்குந் தன்மை ஏனைய தேசங்களைவிட இந்தத் தேசத்திற்கே விசேஷமாக இசைந்தது. ஆனால் சென்ற சில நூற்றாண்டுகளாக நமக்குள் ஏற்பட்ட ஆசாரங்களால், சமூகத்தின் தன்மையை அமைக்கும் சக்திவாய்ந்த ஸ்திரீ ஜாதியை இழிந்தவர்களாக நாம் கருதிவிட்டோம், அவர்களிடம் எப்பொழுதும் அவநம்பிக்கையும் சந்தேகமும் கொண்டவர்களாயினோம். "தற்காலம் பதிவிரதை, பரிசுத்தமான பெண் ஜகத்தில் இல்லவேயில்லை," ஆலகால விஷத்தையும் நம்பலாம்... ......சேலைகட்டிய மாதரை நம்பினால் தெருவில் நின்று தியங்கி விழிப்பரே" "பத்துவயதுக்கு மேல் பறையனுக்கேனும் பெண்ணைக்கொடு" "சாதம் சமைக்கவும் ஜனத்தொகை பெருக்கவுந்தான் பெண்பிறந்தாள்." என்பனவாகிய மொழிகள் நமது உயிர்க்கொள்கைகளாயின.

ஐயோ அம்மா! இவைகள்தாம் உண்மையில் நமது தற்காலத் தாழ்ந்த நிலைமைக்குக் காரணம். வீணாக என்னென்னவோ காரணங்களைச் சொல்லி நோவானேன்? தேசத்தின் செழுமை, ஜனங்களின் தேகப் பொலிவு, கம்பீரம், சித்தத் தெளிவு, மனத்தூய்மை, மனத்திடன் முதலிய நன்னலங்கள் க்ஷீணித்து பெரும் பரிதாபத்திற் குரித்தான மூதேவிமயத்தில் யாவும் முயங்கியிருப்பதற்கு மூலகாரணமென்ன! சமூகம் நிகழ்கின்ற தன்மைக்குக் காரணமாயிருக்கும் பெண்பாலார் மிகக்கொடுமையான சுயநலக் கடலில் ஆழ்ந்து, சமூகத்தின் கடுமையான அவநம்பிக்கைக்கும் சந்தேகத்திற்கும் பாத்திரமாகி, விசால சித்தங்கொண்டோர் தூதூ வென்னிகழ்தற்குரிய, வெறும் வெட்கத்துக் குரிய பல விசித்திரக் கொள்கைகளுக்கும் ஆசாரங்களுக்கும் வாழ்க்கைக்கும் உட்பட்டிருப்பதே. இனி, அவர்கள் நிலைமையின் மற்றொரு பகுதியைப் பார்ப்போம் :—

கல்வி! கல்வி. அது ஒரு அற்புத விஷயம். **அது** அறிவிற்குக்கண். சமூகத்திற்குக் கண் பெண். ஆகையால் அந்தக் கண்ணாகிய கல்விக்கும் இந்தக் கண்ணாகிய பெண்ணுக்கும் நமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் சம்பந்தத்தை ஆராய்வோம். "அடுப்புக்கட்டிக்கு அழகு வேண்டுமா! சமையலறையில் சட்டி சுரண்டுகிறவளுக்குச் சாஸ்திர மென்னத்திற்கு! எண்ணறக்கற்று எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பின்புத்திதானே, என்றவாறு இந்த நிர்ப்பாக்கிய நாடெங்கும் வியாபித்திருந்த கேடுகெட்ட மொழிகளும் கொள்கைகளும் வரவர வலிகுன்றிட, அவைகளின் பொய்மையை ஜனங்கள் உணர்ந்து வருகிறார்களென்பது மெய்யே. பெண்கள் கற்கக் கூடாது என்ற கொள்கையினோர் அதிதுரிதமாகக் குறைந்து வருகிறார்

ஷன் எப்பொழுது மாங்கல்யத்தைத் தரிப்பானோ என்ற ஏக்கம், என்ப தாதிய ஆசாரங்களையும் வாழ்க்கையையும் அநுசரிக்கிறாள்.

இவ்வித வாழ்க்கைக்கும் ஆசாரங்களுக்கும் காரணம்? ஸ்திரீ ஜாதியாரிடத்துக் கடுமையான அவநம்பிக்கையும் சந்தேகமுமே. விவாகமாகாத எந்தப் பெண்ணும் மதிற்சுவர்க் காவலின்றி தன் கற்பழியாதிராள் என்ற வெட்கத்துக்குரிய கொள்கையை உறுதியாகப் பற்றியிருக்கிறார்கள் நமது ஜனங்கள். ஐயோ! இதர தேசங்களில் மதிற்சுவர்க் காவலின்றி பலவிடங்களிலும் உலாவுகின்ற இலட்சக்கணக்கான கன்னிகைகள் அனைவரும் ஒழுக்கங் கெட்டவர்களா எனக் கேட்பின் "ஆம்" என்று கூசாது கூறும் விவேகிகளு மிருக்கின்றனர். இவ்வினாவிற்கு, மற்றும் பலரோ, "மற்றத் தேசங்களின் கன்னிகைகளின் கற்பைக் காக்க மதிற்சுவர் அவசிய மில்லாமலிருக்கலாம். அந்த அநாவசியம் அவர்கள் தேசத்திற்குப் பொருந்தியது. நமது இந்திய நாட்டிற்கோ மதிற்சுவர் கன்னிகைகளுக்கு அத்தியாவசியகம், இந்த ஆவசியகம் நமது நாட்டிற்குப் பொருந்திய தாயிருக்கிறது" என்று கூறுகின்றார்கள். இவ்வுத்தரத்தைச் சற்றுக் கவனிப்போம்.

இதரதேசத்துக் கன்னிகைகளைவிட நமது நாட்டுக் கன்னிகைகள் உள்ளப் பரிசுத்த முறுவதிலும் நிறைகாத்துக்கொள்ளுந் தன்மையிலும் மிகக் குறைந்தவர்களாயிருக்கிறார்கள். கோஷாத்திரையால் மூடப் பெறாத ஆசாரங்களை நாம் அனுஷ்டித்தால் ஐயோ! "மானக்கேடும் விபசாரமும் நமது சமூகமுழுவதும் பரவிப் பெருங்கேட்டை விளைவிக்கும்" என்றேற் படுகின்றது. சகோதரி சகோதரர்காள்! இது முற்றுந் தப்பான அபிப்பிராயம். இவ்வாறு உரைத்த தற்காகப்பலரும் என்னை வெறுத்து நிந்திக்கக்கூடும்; ஆனால் எல்லோரும் அமர்ந்து ஆழ ஆலோசித்துப்பாருங்கள். ஒரு பெண்ணின் குண ஒழுக்கங்கள் அமைவதற்கு. அவள் பெற்றோர்கள், முக்கியமாய் அவள் தாய், அவளை வளர்க்கும் முறையும், அவள் பெறும் கல்வியுந்தான் காரணம். மதிற்சுவரும் படுதாக்களுமல்ல. ஒரு தனி மதத்தாரை ஒரு தனிக் கொள்கையாரை, சற்றுந்தாக்காமல் பொதுவான விரிந்த நோக்குடன் வெகு ஜாக்கிரதையாக, மிகு நுண்ணறிவோடு தன் உயர்ந்த நூலை எழுதியிருக்கிற திருவள்ளுவரே என்ன சொல்லுகிறார்.?

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை."

ஆகையால் மங்கையர் கற்பிற்கு, தக்க காவல் மதிற்சுவரல்ல. அன்றியும் நமது சக்தியையும் பெருமையையும் நாம் நன்றாய் அறிந்துகொள்ளவில்லை. சீதை, பாஞ்சாலி, சந்திரமதி, தமயந்தி, சாவித்திரி, நளாயினி,

கள். தங்கள் ஆண்குழந்தைகளை மாத்திரம் பாடசாலைக்கனுப்பிப் பெண் குழந்தைகளை அனுப்பாதிருக்கும் பெற்றோர்களின் தொகை குறைந்து வருகின்றது. ஆனால் படித்தவர்களென்று சாதாரணமாக அழைக்கப் படுகின்ற நமது பெண்கள் யதார்த்தத்தில் அடைந்துள்ள கல்வியறிவின் அளவை நிர்ணயித்துப்பார்க்கலாம்.

படிக்கிற பெண்கள் சாதாரணமாகப் பத்துப் பன்னிரண்டு வயது வரையில்தான் படிக்கிறார்கள். அதற்கு மேல்தான் அவர்கள், கல்யாண தக்ஷிணை கொடுக்கல் வாங்கல்கள், கல்யாணச்சடங்கு, சாந்திச்சடங்கு, கணவனோடு வாழ்தல், மாமி மருகி மனஸ்தாபங்கள், சீமந்தச் சடங்கு, பிரசவச் சடங்கு முதலிய வியவகாரக் கல்விகளில் பாண்டித்தியம் பெற்று இல்லறம் நடத்துவதற்காவது அல்லது அஞ்சி ஒடுங்கி அடுப்பங் கரையில் அவிந்து புழுங்கி ஏங்கியிருப்பதற்காவது தங்கள் வாழ்க்கையை அர்ப்பணஞ் செய்ய வேண்டுமே. ஆகையால் எப்படிப் படிக்கமுடியும்? எங்கே படிக்கிறது? ஐயோ! அம்மணீ! கல்விக்கரசியாகிய சாரதே! இவ்விஷயங்களை நினைக்க நினைக்க எனக்கு என்ன ஆத்திரம் பொங்குகிறதம்மா! பாட்டு, படிப்பு, விளையாட்டு முதலியவைகளிலேயே முற்றும் மூழ்கியிருக்க வேண்டிய ஆநந்தமயமான மிகப்பாலிய பருவத்திலேயே முற்கூறிய இல்லற வியவகாரங்களை எங்கள் பெண்களுக்கு உபதேசித்து அவர்களை அவைகளில் தள்ளிவிடுவது, அவ்வாறு தள்ளிவிடப்பெறாத கன்னிகைகளைச் சிறையிலடைத்து நிர்ப்பந்திப்பது முதலிய வழக்கங்களையெல்லாம் தொலைத்து, ஏ தாயே! உன் புத்திரிகளாகிய தமிழ் நாட்டுப் பெண்களைத் தக்க அந்தஸ்திற்கும் உன்னத வாழ்விற்கும் எப்பொழுது உயர்த்துவையோ? ஆ இதென்ன விநோதம்! நமது நங்கையர்க்கேற்பட்டிருக்கும் ஆசாரங்களை முன்னமே சுருக்கமாகச் சொல்லிவிட்டு அவர்கள் கல்வியின் நிலைமையை ஆராயப்புகுந்தால் மீண்டும் இந்தப்பேனா என்னை அந்தப் பழைய ஆசார விஷயத்திற்கே இழுக்கிறதே.

சகோதரி சகோதரர்கள் சற்று மன்னிப்பார்களாக. சரி—இனி இப்பொழுது எடுத்துக்கொண்ட பெண் கல்வியைப்பற்றியே பேசுவோம்.—படிக்கிற பெண்கள் சாதாரணமாய்ப்பத்துப் பன்னிரண்டு வயது வரையில் தான் படிக்கிறார்கள். அதுவரையில் அவர்கள் என்ன கற்கின்றார்கள்? சுயபாஷையைப் படிக்கவும் எழுதவும், இலக்க கணிதம், பூகோள சாஸ்திரம், தேசசரித்திரம் இவைகளில் சொற்ப ஞானமும், தையல் முதலிய சித்திரத்தொழில்களில் சிறிது விற்பனமும், சில சமயம், "c, a, t, cat பூனை," "d, o, g, dog நாய்" என்று சிற்சில இங்கிலீஷ் வார்த்தைகளை எழுத்துக்கூட்டவும் வாசிக்கவும் தெரிந்து கொள்கிறார்கள். சிலச்

சில பெற்றோர்கள் தங்கள் புத்திரிகளுக்குப் பிரத்தியேகமாக வீட்டில் உபாத்தியாயரமர்த்திச் சங்கீதமும் அவர்களுக்குக் கற்பிக்கிறார்கள்.

இவர்கள் பெறும் சங்கீதஞானத்தின் அளவையும் சற்று நிர்ணயித்து விடுவோமே. அதாவது, சங்கீதத்தின் உபக்கிரம் (ஆரம்ப) சித்தாந்தங்களிலும், சில காலமாக நவீனமாக முளைத்திருக்கும் ஹார்மோனியம் என்ற பெருநாத வாத்தியம் வாசிப்பதிலும் சிறிது ஞானமே. இந்த விஷயமாக சில வார்த்தைகள் கூறச் சமயம் வாய்த்திருப்பதால் அதை உபயோகிக்கின்றேன். இந்த இடத்தில் இந்தப் பேச்சு அனாவசியமென்று ஒருகால் கொள்ளுவோராது க்ஷமிப்பைக் கோரியே கூறலாகின்றேன். இசைக் கருவி விற்பனம் பயிலும் நமது பெண்களில் பெரும்பான்மையோர் ஹார்மோனியமே பயில்கின்றனர். பிடில் என்னும் கருவியில் பயில்வார் சிலர்.

ஆனால், என்றுந் தெவிட்டாத அமிர்தத்தைச் செவிகளில் ஊற்றுகின்ற நிகரற்ற நுண்ணிசையைத் தரும் வீணை என்ற நமது பண்டைக் காலத்துக் கருவி வாசிக்கப் பழகும் பெண் ஒருவருமே இல்லையென்றுஞ் சொல்லிவிடலாம். வீணை நாதத்தைக் கேட்டிருப்பவர்களுடைய தொகையைக் கணக்கிட்டால் விரைவில் விரல்விட்டெண்ணி விடலாம். ரவிவர்மன் என்ற சித்திரன் வீணையைத் தாங்கி விளங்கும் சரஸ்வதிபடம் சித்திரித்திராவிடில், வீணையின் உருவங்கூட நமது ஜனங்களின் மனத்திற் படிந்திராது.

தற்காலம் 'நாவல்கள்' என்ற கட்டுக்கதை எழுதுவோர் சிலர் தங்கள் கதைகளில் வீணையைப் பற்றிப் பேசுகிறார்கள். அதைக் காண்பாரிற் பலர் என்ன கருதுகிறார்கள்? இந்த உலகத்தில் அடைதற்கரிய பாரிஜாத மலர், கற்பக விருட்சம், காமதேனு முதலியவைகளை அமைத்து உற்சாகக் கதைகள் எழுதுவதுபோல் வீணையையும் கதையிற் சேர்த்து எழுதியிருப்பதாகத்தான் கருதுகிறார்கள். ஒருகால் அக்கதைகளின் ஆசிரியர்களும் அவ்வாறு தான் கருதி எழுதினார்களோ என்னவோ! ஐயோ வீணையே! சரஸ்வதி தேவியின் பிரியாத் தோழியே! உன்னையும் மறந்த மாந்தர்களின் மதி என்ன மதியோ! நீ மீண்டும் இந்த நாட்டுப் பெண்கள் மடியிலும் கரங்களிலும் அழகுறத் தவழ்ந்து விளையாடுவது எக்காலத்திலோ? எக்காலத்திலா!- சமீபகாலத்தில்தான் என்று எண்ணவோ ஒன்று என் சித்தத்திற் பேசுகின்றது.

சகோதரிகளே! சங்கீதம் பயிலும் சகோதரிகளே! வீணையை ஆதரித்து அதற்குப் புதிய உயிர் கொடுத்து அதனோடு குலாவியிருங்கள். அஃதொன்றே நமது நிலைமை உயர்வடைவதற்குப் பெரியதோர் மங்களச் சகுனமாகும். வீணையை வாசிக்கக் கற்றுக்கொள்வது அநேகமாக அசாத்தியமான காரியமென்றும் சங்கீத சாஸ்திரத்தில் மிகச்சிறந்த ஞானமுடையவர்களே சரிகம, பத, நிச என்ற சரளி வரிசையை வாசிக்கக் கற்றுக்கொள்வதற்கு மாத்திரம் பன்னிரண்டு வருஷங்களாகும் என்று பல கதைகள் இக்காலத்தில் பரவியிருக்கின்றன. அவைகளைப்பற்றி அதைரியப்படாதேயுங்கள். வீணைப்பயிற்சி பிடில் பயிற்சியைவிட அதிகச் சுலபமானது. ஹார்மோனியமவ்வளவு சுபலமான தென்றுஞ் சொல்லலாம். ஆனால் வீணை அளிக்கும் இசையின் இன்பத்தை மாத்திரம் எந்த இசைக் கருவியும் கொடுக்கவியலாது.

பருவக் காற்றுகளும் ஜல வோட்டங்களும்

போன பாடத்தில் சொல்லியபடி, காற்று நமது அறைகளில் உலாவி வருவது போலவே, உலகத்திலும் இடம் பெயர்த்து வீசுகின்றது. பூமியின்மேல் அதிக உஷ்ணமான பாகமானது (Torrid zone) உஷ்ண மண்டலம் என்பது, உங்களுக்குத் தெரியுமே. இப்பிரதேசம் பூமத்திய ரேகையான (Equator) ஈக்வேடர் என்னும் கோட்டுக்கு வடக்கேயும் தெற்கேயும் முறையே 22½ டிக்ரி பரவியுள்ளது. இவ்வுஷ்ண மண்டலத்தில் சூரியன் அதிக உஷ்ணமாய்க் காய்வதினால் இவ்விடத்தில் உள்ள வாயுவும் உஷ்ணமடைகின்றது. உஷ்ணமானவாயு கிரமப்படி மேலே கிளம்புகின்றது. அப்பால் வடக்கேயும் தெற்கேயும் உள்ள குளிர்ந்த தேசங்களிலிருந்து சீதளமான காற்று உஷ்ண மண்டலத்தை நோக்கி வீசத் தலைப்படுகின்றது. மேலே போன உஷ்ணமான காற்று துருவப் பிரதேசங்களை நோக்கிச்சென்று, அங்கே செல்வதற்குள் குளிர்ந்து, திரும்பவும் உஷ்ணப் பிரதேசத்தை நோக்கி வருகின்றது. இவ்வாறு வாயு பூமியைச் சுற்றிக்கொண்டேயிருக்கின்றது.

அப்படியானால் வாயுமண்டலத்தில் மேல் பாகங்களில் காற்று துருவப் பிரதேசங்களை நோக்கி வடபுறமாயும் தென்புறமாயும் ஓடவேண்டுமல்லவா? வாயு மண்டலத்தில் கீழே துருவப்பிரதேசங்களிலிருந்து வடக்கிலிருந்து தென் முகமாயும், தெற்கிலிருந்து வடமுகமாயும் குளிர்ந்தகாற்று வீசவேண்டுமல்லவா? ஆம், உண்மையே. ஆனால் ஏன் காற்றின்திசை பல தடவைகளில் மாறுகின்றது? எப்பொழுதும் ஒரே திசையிலேயே வீசுவதில்லையே? ஏன், என்றால், காற்று வீசும்போது, பூமியின் மீதுள்ள மலை, குன்று, இவற்றால் தடுக்கப்பட்டு திசைமாறுவதுண்டு. தவிரவும் பூமி சதாமேற்குப் புறமிருந்து கிழக்கு நோக்கிச் சுழல்வதால் வடதுருவப் பிரதேசத்திலிருந்து உஷ்ணமண்டலத்தை நோக்கி வரும் வடகாற்று வடகிழக்கு திசையிலிருந்து வருவதுபோல் தோன்று

கிறது. அதுவேபோல், தென் துருவங்களிலிருந்து உஷ்ணப் பிரதேசத்தை நோக்கி வீசும்காற்று தென்கிழக்கிலிருந்து வருவதுபோல் தோன்றும். இவை பருவங்கள் தப்பாமல் வீசுவனபற்றி இவற்றிற்கு வடகிழக்குப் பருவக் காற்றென்றும் (North East trade winds) தென்கிழக்குப் பருவக் காற்றென்றும் (South East trade winds) பெயர்.

சமுத்திர ஜலத்தில் கன்வெக்ஷன் ஏற்படுவதாலும், பருவக்காற்றுகள் சமுத்திரங்களின்மீது வீசுவதாலும், சமுத்திரஜலம் நிலையாய் ஓரிடத்திலேயே நில்லாமல் ஓடிக்கொண்டே யிருக்கின்றது. இவ்விதமாய் சமுத்திரஜலம் இடம் பெயர்ந்து ஓடுவது சில விடங்களில் மிகத்தெளிவாய்த் தெரிகின்றது. நமது மதராஸ் சமுத்திரக் கரையில் வருஷத்துக்கு வருஷம் மணல் அதிகமாய்க் குவிந்து போவதற்குக் காரணம் ஜலவோட்டமே. இந்துமஹா சமுத்திரத்திலிருந்து கோடை மழைக்காற்றான தென்மேற்குக் காற்று வீசும்போது (S. W. Monsoon), அது சமுத்திர ஜலத்தையும் வேகமாய் ஓட்டிக்கொண்டு வருவதால், நமது மேற்குக் கரையிலும், கிழக்குக் கரையிலும் மணல் ஏராளமாய்க் குவிகின்றது. அதனால் மேற்குக்கரையில் உள்ள துறைமுகங்களில் மணல் நிரம்புகின்றது. மதராஸ் பக்கத்திலும் சமுத்திரம் ஆழமற்றிருப்பதற்கும் காரணம் அதுவே. கல்கத்தாவுக்கு அடுத்த ஹுக்ளி துறைமுகங்களில் கங்காநதி கொண்டுவரும் சேறும், சமுத்திர ஜல ஓடை கொண்டுவரும் மணலும் கூடுவதினால் அடிக்கடி அத்துறை முகங்களில் சேறெடுக்க வேண்டியதாகிறது. இந்துமஹா சமுத்திரத்தில் இது போன்ற இன்னும் எத்தனையோ ஜலவோட்டங்கள் இருக்கின்றன.

அட்லாண்டிக் மஹா சமுத்திரத்திலே மெக்ஸிகோ என்னுமிடத்திலிருந்து ஒரு ஜலவோட்டம் புறப்படுகிறது. அதற்கு கல்ப்ஸ்டிரீம் (Gulf Stream) என்று பெயர். புறப்படும் இடத்திற்குச் சற்று அப்பால் "இவ்வோடத்தின் அகலம் சுமார் 40 மைல்; ஆழம் 8000 அடி; உஷ்ணம் 85 டிகிரி; இத்துணை பெரிய ஜலவோட்டம் வடக்கே ஆர்டிக் (Arctic) பனிக்கடல் வரைக்கும் ஓடுகின்றது."

இதற்கு மாறாகக் குளிர்ந்த கனமான ஜலம் துருவப் பிரதேசங்களிலிருந்து புறப்பட்டு உஷ்ண தேசங்களுக்கு வருகின்றது. Labrador ஜலவோட்டம் மேற்சொன்ன கல்ப் ஸ்டிரீம் ஜல வோட்டத்தை எதிர்த்து வருகிறது. குளிர்ந்த துருவஜலம் கீழேயும், உஷ்ணமான கல்ப் ஸ்டிரீம் மேலேயும், ஓடுகின்றன. இன்னும் இவ்வாறான எல்லாஜலவோட்டங்களையும் பற்றி நாம் இங்கே விவரமாய்ச் சொல்ல முடியாது.

வெள்ளைப் பூனை

(23-ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜ குமாரனுக்கு ஒரு வருஷம் முடிவுக்கு வர இன்னும் மூன்று நாட்கள்தா னிருக்கின்றன வென்பது ஞாபகம் வந்தது. மேலும் 'என் அரண்மனைக்குப் போவதற்கு சத்திரத்தில் என் சகோதரரைச் சந்திக்க வேண்டும்' என்று நினைத்தான். ஆனால் வெள்ளைப் பூனையைவிட்டு அகல மனம் வரவில்லை. ஏனெனில் இவனுக்கு அப் பூனையிடத்தில் வர வர, அன்பு அதிகரித்துக் கொண்டே வந்தது, 'நமக்கு வேண்டிய அழகான நாய் இன்னும் கிடைக்கவில்லையே! மூன்று தினங்கள்தான் இருக்கின்றன. என்ன செய்வோம்' என்று மனவருத்த மடைந் திருந்தான்.

வெள்ளைப் பூனை ராஜகுமாரனது முகத்தில் விசனக்குறி யிருப்பதை அறிந்துகொண்டு, 'ராஜ குமாரா! நீ ஏன் இப்பொழுது சந்தோஷ முள்ளவனாகத் தென்பட வில்லை? தயை செய்து சொல்' என்றது.

'எனது பிரியமுள்ள வெள்ளைப் பூனையே! உன்னை விட்டுப் பிரிந்து போக வேண்டுமே என்ற துக்கம் எனது மனதில் குடி கொண்டிருக்கிறது. உன்னையே நான் விரும்புகிறேன். நீயோ ஒரு பூனையாக விருக்கிறாய். நீ ஒரு அழகுள்ள ஸ்த்ரீயாய்விடு, அவ்விதம் முடியா விட்டால் என்னையும் ஒரு பூனையாகச் செய்து விடு. நாமிருவரும் சுகமாக இங்கு வசிப்போம்' என்றான் ராஜ குமாரன்.

வெள்ளைப் பூனை ராஜ குமாரன் சொன்னதைக் கேட்டுப் புன்னகை செய்தது. ஆனால் பதிலொன்றும் சொல்லவில்லை.

பின்பு ராஜ குமாரன் தன் தகப்பனார் அதிசயமான ஒரு வஸ்துவை விரும்புகிறார் என்று சொன்னான்.

வெள்ளைப் பூனை அவ் வஸ்துவைச் சொல் என்றது.

ராஜ குமாரன் 'என் தகப்பனார் அதிக அழகுள்ள ஒரு சிறியநாய் வேண்டும் என்று சொல்லி யிருக்கிறார்' என்றான்.

வெள்ளைப் பூனை 'எனது பிரியம்வாய்ந்த நண்பனே! இந்த விதையைப் பார்! உனக்கு வேண்டிய வஸ்து இதிலிருக்கிறது' என்று சொல்லி அந்த விதையை ராஜ குமாரனுக்குக் காட்டியது.

ராஜ குமாரன் பூனை சொல்வதைக் கேட்டு வியப்புற்றான். பின்பு அந்த விதையை எடுத்து தன் காதுக்குள் வைத்துப் பார்த்தான். நாய் குலைப்பதைக் கேட்டு அதிசயித்தான். அப்பொழுது ராஜ குமாரனுக்கு உண்டான சந்தோஷத்திற் களவில்லை. வெள்ளைப் பூனைக்கு வந்தனமளித்துவிட்டு 'நான் போய் வருகிறேன். எனக்கு உத்திரவுகொடு' என்று பூனையைக் கேட்டான்.

பூனை விசனத்துடன் 'சரி போய், வா' என்றது.

ராஜ குமாரன் துரிதமாக ஒரு குதிரைமீது சவாரி செய்து தன் ஊருக்கு சமீபத்தில் வந்தான். தான் முதலில் தன் சகோதரரைச் சந்திப்பதாகச் சொன்ன சத்திரத்திற்குப் போனான். அவ்விடத்தில் தன் சகோதரர் இன்னும் வரவில்லை. ராஜ குமாரன் பத்திரமாக அந்த விதையை மூடி வைத்துக் கொண்டு சத்திரத்திற்கு வெளியில் போனான். அங்கொரு கடையில் விகாரமுள்ள நாயொன் றிருந்தது. அதை விலைக்கு வாங்கிக் கொண்டு சத்திரத்திற்கு வந்து போஜன முண்டு சிறிது நேரம் நித்திரை செய்தான்.

இவனுடைய சகோதரர் இங்கு வந்தார்கள். ஒவ்வொருவ னிடத்திலும் ஒரு அழகான சிறிய நாயிருந்தது. இவர்கள் தங்கள் சகோதரனைக் கண்டு மகிழ்ந்து, தாங்கள் கொண்டுவந் திருக்கும் அழகு பொருந்திய சிறு நாய்களைக் காட்டினார்கள். இளைய ராஜ குமாரனே தான் வாங்கின விகாரரூபமுள்ள நாயை அவர்களுக்குக் காண்பித்தான். அவ் விருவருள் ஒருவன் மற்றவனைப் பார்த்து 'அவனைப்பற்றி நமக்குச் சிறிதும் பயமில்லை,' என்று சொன்னான். இருவரும் சந்தோஷங் கொண்டு கூத்தாடினார்கள்.

இம்மூவரும் சத்திரத்தில் அன்றிரவு தங்கியிருந்து மறுநாள் காலையில் தங்கள் அரண்மனை போய்ச் சேர்ந்தார்கள். மூத்த சகோதரர் இருவரும் தாங்கள் வெகு கஷ்டப்பட்டு விலைக்கு வாங்கின அழகான நாய்களைத் தங்கள் தகப்பனருக்கு கொடுத்தார்கள். இளைய ராஜ குமாரனே தான் சிரம மின்றி சொற்பவிலை கொடுத்து வாங்கின விகாரமான நாயைத் தன்னிடத்தில் வைத்துக் கொண்டு ஒருபக்கத்தில் நின்று கொண்டிருந்தான். இவன் நாயைப் பார்த்து எல்லாரும் நகைத்தார்கள்.

ராஜா தனது மூத்தகுமாரர்கள் கொண்டுவந்த நாய்களைக் கண்டு சந்தோஷமுற்றான். அவைகளில் எது மிக்க சிறந்த தென்பதைச் சொல்ல முடியவில்லை. ஏனெனில் அவ்விரு நாய்களும் மிகவும் அழகாயிருந்தன.

இவைகளை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த இளைய ராஜகுமாரன் தன்னுடைய பையிலிருந்த விதையை யெடுத்தான். அதை ராஜ சபையிலுள்ள யாவருக்கும் காண்பித்தபின் உடைத்தான். உடனே அதிலிருந்து மிகவும் அழகான சிறிய நாய் துள்ளிக்குதித்து மேஜையின் மீது உட்கார்ந்தது. இது மற்ற நாய்களை விட சிறந்ததாக விருந்தது. அங்குள்ளவர்களுக்கு இதைப் பார்க்கப் பார்க்க சந்தோஷத்தை விளைவித்தது. ஏனெனில் இது ஒரு சாதாரண மோதிரத்தினுள் செல்லக்கூடிய அவ்வளவு சிறிய நாயாயிருந்தது.

அரசன் இளைய குமாரனது நாய்தான் மிகவும் நேர்த்தியான தென்றும் சிறந்த தென்றும் சொன்னான். ஆனால் தன் சிம்மாசனத்தைக் கொடுக்க இஷ்டப்படவில்லை. "எனது அருமையான குழந்தைகளே! எனக்காக இவ்வளவு கஷ்டப்பட்டு இந்த நாய்களைக் கொண்டு வந்ததற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். எனக்கு இன்னொரு வஸ்து தேவை. அது மெல்லிழை வஸ்திரமே. அதை ஒரு வருஷத்திற்குள் உங்களில் எவன் கொண்டு வருகிருனே அவனுக்கு எனது சிம்மாசனம் உரியது, அது ஒரு ஊசியின் துவாரத்தின் (காது) வழியாகச் செல்லக்கூடியதா யிருக்க வேண்டும்" என்றான்.

அரசன் சொன்னதைக்கேட்ட பிள்ளைகள் மன வருத்த மடைந்தார்கள். 'இது மிகவும் கஷ்டமானது ஆயினும் முயற்சி செய்வோம்' என்று சொல்லிக் கொண்டு முன்போல் மூவரும் புறப்பட்டார்கள். மூத்த சகோதரர் இருவரும் வெவ்வேறு மார்க்கமாகச் சென்றார்கள். இளையவன் வெள்ளைப் பூனையினிடத்திற்கு நேராகப் போய் தன் தகப்பனர் சொன்னதைச் சொன்னான்.

'ராஜகுமாரனே! அதைப்பற்றி நீ சங்கடப் படாதே. என்னுடைய பூனைகள் நெசவுத் தொழிலில் கைத்தேர்ந்தவைகள். உனது தகப்பன் விரும்பிய வண்ணம் அவை செய்து கொடுக்கும். அச்சமயம் வருமளவும் அதைப்பற்றி சிந்திக்காதே. அவைகளுக்கு அவ்விதம் மெல்லிய வஸ்திரம் செய்வது வரவா, செலவா, சுலபமே' என்றது.

பூனை தன்னிடத்தில் அன்புடன் பேசியதைக் குறித்து மகிழ்ந்து அதற்கு வந்தனமளித்தான் ராஜகுமாரன்.

பூனையோ பற்பல விநோதங்களைச் செய்து வந்தது. ராஜகுமாரனுக்கு வருஷமுடிவு வந்ததுகூட தெரிய வில்லை. பற்பல வேடிக்கைகளும் விருந்துகளும் நடந்தன. இவைகளையும், பூனை புத்தி சாதுர்யத்துடன் பேசுவதையும் கண்டு ஆச்சரிய மடைந்தான்.

வெள்ளைப் பூனை வருஷமுடிவு வந்தவுடன் மறவாமல் ஒரு மாங்கொட்டையைக் கொண்டுவந்தது. 'ராஜகுமாரனே! இந்தக் கொட்டையைக் கொண்டு போ. இதில் நீ கோரிய மெல்லிழை வஸ்திரம் அதாவது மஸ்லீம் போன்ற துணி இருக்கிறது. இதை உன் தகப்பனருக்கு முன் உடை. அதற்கு முன் உடைக்காதே'; என்று சொல்லிற்று.

பூனையினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு ராஜகுமாரன் அரண்மனை நோக்கிப் புறப்பட்டான். மூத்த சகோதரிருவரும் இவனுக்கு முன்னாலேயே சத்திரத்திற்கு வந்திருந்தார்கள். இளைய சகோதரன் அவர்களுடன் அரண்மனைக்கு வந்தான்.

ராஜகுமாரர்கள் தாங்கள் கொண்டுவந்த துணியை அரசனுக்குக் காண்பித்தார்கள். அரசன் துணியைப் பார்த்தான். மூத்த சகோதரர்

கொண்டுவந்த துணி மிகவும் மெல்லியது. அதிக நேர்த்தியானது, இவ்வித துணியை ஒருவரும் இதுவரையில் பார்த்ததே யில்லை. ஆனால் ஊசியின் காது வழியாக அது நுழைய வில்லை.

அரசனுக்குத் திருப்தி உண்டாகவில்லை. இளைய குமாரன் மெதுவாக மாங்கொட்டையை யெடுத்து உடைத்தான், அதில் வாதுமைக் கொட்டை இருப்பதைக் கண்டு அதிசயித்தான். மறுபடியும் அதை உடைத்தான். அதில் புரசங்கொட்டையிருந்தது. மனோதைரியத்தை விடாமல் அதை உடைத்தான். அதில் இலுப்பைக் கொட்டை இருந்தது. அதை உடைத்தான். அதில் அவரைக் கொட்டை யிருந்தது, ராஜசபையில் உள்ளோரெல்லாம் 'இதென்ன ஆச்சரியம்! இவனுக்கென்ன பைத்தியமா' வென்று கைக்கொட்டி நகைத்தார்கள். அதை உடைத்தான். அதில் கடலையிருந்தது. பார்த்தான் ராஜகுமாரன் சிறிது நேரம் ஒன்றும் தோன்றாது திகைத்தான். ஆ! ஆ! வெள்ளைப் பூனையே! இத்தடவை என்னை மோசம் செய்தாயே! நான் என்ன செய்வேன் என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான். இவ்விதம் சொன்னானோ இல்லையோ இவனை ஒரு பூனை பிறாண்டினாற்போல் இவனுக்கு தோன்றிற்று.

முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார் என்பதற்கிணங்க இவன் மறுபடியும் கடலையை உடைத்தான். அதில் மெல்லிய துணி நூல் போல் தென்பட்டது. அதை இழுத்தான். இழுக்க இழுக்க வெகு நீளமாக வந்தது. எல்லாரும் மிக்க ஆச்சரியங் கொண்டு அதை அளந்து பார்த்தார்கள். அது 400 கஜம் நீளமுள்ளதா யிருந்தது. அது ஊசியின் காது வழியாக நுழைய விட்டார்கள். அது வெகு சுலபமாக நுழைந்தது.

'எனது இளைய குமாரனுக்கு இப்பொழுது சிம்மாசனத்தைக் கொடுக்கமாட்டேனென்று எப்படி சொல்வது? தகுந்த காரணமில்லையே' என்று அரசன் மனதிற்குள் யோசிக்கலானான்.

"எனது பிரிய முள்ள குமாரர்களே! இது காறும் நீங்கள் நான் கோரியவைகளை யெல்லாம் எனக்குத் திருப்தியாகும்படி செய்ததைக் குறித்து நான் மிகவும் மனமகிழ்ச்சி யடைகிறேன். நான் என் ராஜ்யத்தைக் கொடுப்பதற்கு முன் இன்னும் ஒரு வஸ்துவை விரும்புகிறேன். ராஜனுக்குத் தகுந்த ராணி வேண்டு மல்லவா? உங்களில் எவன் பூலோகத்தில் ஸ்திரீகளில் மிக்க சௌந்தரிய முள்ளவளை இட்டுக் கொண்டு வருகிறானோ அவனுக்கு அவளை விவாகம் செய்து வைத்து என் ராஜ்யத்தையும் அளிக்கின்றேன். இதுதான் நான் கோரும் வஸ்து. நீங்கள் சலிக்காமல் பாடுபட்டு ஒரு பெண் ரத்னத்தை ஒரு வருஷத்திற்குள் கொண்டு வருவீர்களென்று நம்புகிறேன்" என்றான் அரசன்.

சீட்டு கொடுக்குமிடத்தில் வேடிக்கை.

நாட்டுப்புறத்தான் :—ஐயா, யார் சாமி உள்ளே!

சீட்டு கொடுப்போர். :—ஏன். எந்த ஊருக்கு டிகட்டு வேண்டும்? சீக்கிரம் எடு பணம்.

நா.—எனக்கு ரெட்டகுடிக்குப் போகணுங்க.

சீ.—ரெட்டகுடியா! போ. அங்கே ரயில்வண்டி போகிற பொழுது நீயும் போகலாம்.

நா.—என்ன ஐயா? எனக்கு ராவேக்குப் போகணும், என்னமோ சொல்றீங்களே.

சீ.—அடே, என்னடா எழவு! எந்த ஸ்டேஷனுக்குடா?

நா.—ஆம, சாமி மாணிக்கம் மருமவன் சேஷன் இல்லெ? அவன் ஊட்டுக்குத்தான் வச்சுக்குங்களேன். எசமானுக்குத்தான் எல்லாம் தெரிதே.

சீ.—சீச்சீ! முட்டாள் தூரப்போ.

நா.—தூரத்தொலைக்குப் போன்னா, அப்பொ, சீட்டு இல்லீங்களா! என்ன சாமி அதிரிச மாயிருக்கு.

சீ.—எல்லாம் அதிரிசமாயிருந்தால் சுண்டல் வாங்கிக் கொள்ளேன்.

நா.—மறுவ, நல்லணத்துக் கானும் கொடுங்களே. எளவு புள்ளெ குட்டிகளெ இழுத்துக் கிட்டு வந்துட்டேன். இல்லாட்டி நேரே விட்டுடுவேன். சீட்டும் வாண்டாம் நாட்டுவாண்டாம் என்னபண்ணு? சாமி! நல்லணத்துக்கு சத்தம் சொல்லுங்க.

சீ.—சத்தமா! சத்தம், இரண்டே முக்காலணா.

நா.—என்ன சாமி ஒரு பணமும் ஒண்ணரைக்கசுங்களா?

சீ.—இது ஏதடா, உன் எழவே எனக்கு ஏழவாய்ப் போச்சு. காசை எடுத்துத்தொலையேன், உனக்குத் தலை முழுகுகிறேன்.

நா.—மறுவ, சொன்னாலும் கோச்சுக்கரீங்க. நீங்க சொன்னது தானா சத்தம்? சொல்லுங்க. ஒரு பணம் வச்சக்குங்க. ஒண்ணரைக் காசிலே ஒங்களுக்குத் தான் என்ன சீனம்பரம்!

சீ.—இது வேறையோ? சத்தம் குறைக்க வேண்டுமோ? போடா, போடா முட்டாள். யாருடா இவனைப் பிடித்துத்தள்ளு.

போர்டர்.—என்ன அண்ணே, பெரிய மனிசனா இருக்கே, புத்தியில்லே! ரயில் டயன், ஒருடிக்கட்டு வாங்க இத்தனெ லாச்சியாரா?

போ அண்ணே இங்கே. போகாட்டி மதியாரி கெட்டுப்போய் விடுவே போங்கரேன் என்ன மொறச்சு பாக்கிறயே-போவெ ளியே.

நாட்டுப்புறத்தான் சற்று வெளியில் சென்று கூட்டத்தில் ஒரு பக்கத்தில் சுவற்றில் சாய்ந்து கொண்டு நின்றான். சுவர், புதிதாய்க்கல் பூசப்பட்டு காய்ந்ததும் காயாமலும் இருந்த படியால் நமது நாட்டுப் புறத்தான் சாய்ந்ததும் அவன் குளிருக்குப் போட்டுக்கொண்டிருந்த சட்டையைக் கெட்டியாய் பிடித்துக்கொண்டது. அதை அவன் உணர்ந்தானில்லை. பணத்தைக் கணக்குப் பார்த்து ரயில் வந்ததைக்கண்டு திரும்பவும் அவஸரமாய டிக்கட்டு வாங்க ஓடும்பொழுது கீல் பிடித்து இழுக்க அதை ரயில் சேவகன் இழுப்பதாக நினைத்து.

நா.—என்ன அண்ணே! விடு அண்ணே! என்ன கிளமனிசன்றெ எக்காளம் பன்றே. வண்டி வந்துட்டெ என்ன! பிள்ளையும் பாரேன்! இது சாமர்த்தியமா?

இதற்குள் இவனையன்றி மற்றெல்லோரும் ஏற, ரயில் போய்விட்டது. இவன் புலம்பல் மாத்திரம் முடியவில்லை.

பழமொழிகள்.

அஃகமும் காசும் சிக்கெனத் தேடு.
அகங்கையிற் போட்டுப் புறங்கையை நக்கலாமா?
அகட விகடமாய்ப் பேசுகிறான்.
அகதிக்கு ஆகாசமே துணை.
அகதிக்குத் தெய்வமே துணை.
அகதிசொல் அம்பலம் ஏறாது.
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
அகத்துக் கழகு ஆமுடையாள்.
அகம் ஏறச் சுகம் ஏறும்.
அகம் மலிந்தால் அஞ்சும் மலியும்.
அகம் குறைந்தால் அஞ்சும் குறையும்.
அகல இருந்தால் நிகள உறவு.
கிட்டவந்தால் முட்டப் பகை.
அகல உழுகிறதை விட ஆழ உழுகிறது சிலாக்கியம்.
அகவிலை யறியாதவன் துக்கம் அறியான்.

சமாச்சாரக் குறிப்பு.

சென்னை காக்ஸ்டன் அச்சுக்கூடத் தலைவர் ஸ்ரீமான் கல்பட்டு கன்னைய நாயுடு அவர்கள் பிங்களவருஷம் ஆனிமீ 25உ ஞாயிற்றுக்கிழமை தினம் பரமபதம் அடைந்ததைக் குறித்து நாம் மிகவும் விசனப்படுகிறோம். இவருக்கு அச்சமயம் வயது சுமார் 35. இவருக்கு நண்பர்கள் பலவுண்டு, சுற்றத்தார் உண்டு, குழந்தைகள் உண்டு, இளையசகோதரர் உண்டு, மைத்துனர் உண்டு, சகோதரிகள் உண்டு, தர்மவழியில் கஷ்டப்பட்டு திரவியம் சேர்த்திருக்கிறார். பலருக்கு உதவிபுரிந்து வந்திருக்கிறார். பாடசாலைப் பிள்ளைகளுக்கு உதவி செய்வதில் மிக்க தயாள குணமுள்ளவர். செய்யூரில் ஒரு பாடசாலையை ஸ்தாபித்து 12 வருஷகாலமாகச் செவ்வனே நடத்தி வருகிறார். எழும்பூர் பாலிகா பாடசாலையின் கமிட்டிக்கு இவர் ஒரு மெம்பர்.

பந்துக்கள், நண்பர்கள் முதலியவர்கள் தம்முடன் ஒன்றாகப் புசிக்க வேண்டும் என்ற அவா மிக்க இவருக்குண்டு, அவ்விதமே செய்து வந்தார். அவர்களுக்கு வேண்டிய உணவு அளிப்பார். அவ்விதம் செய்வதில் சிறிதும் தயங்கமாட்டார். கோபம் இவர் முகத்தில் சிறிதும் தென்படாது. எப்பொழுதும் புன்சிரிப்புடன் தென்படுவார். ஏழைகளுக்கும் பிதா, நண்பர்களுக்கு உற்ற சிநேகிதர், பண்டிதர்களுக்குத்தகுந்த பரோபகாரி. தெய்வபக்தியும், நன்னடைக்கையும், நற்குணமும் பொருந்திய இவர் சிறுவயதில் பரமபதம் சென்றது தமிழ் உலகத்தாருக்கு மிகுந்த விசனத்தை உண்டாக்கியது. இத்துக்க சமாச்சாரத்தைக் கேட்ட இவரது ஆபீஸிலுள்ளவர்களும், பந்துக்களும், நண்பர்களும் பாடசாலைப் பிள்ளைகளும் தாரைதாரையாகக் கண்ணீர் விட்டார்கள்.

சிறுவர், சிறுமியர் முதலியவர்களுக்கு மிகவும் அறிவு புகட்டக்கூடிய பாடசாலைப் புஸ்தகங்களை எளிய நடையில் பிரசுரித்திருக்கிறார். ஸ்ரீமான் நமச்சிவாய முதலியாரவர்கள் மேற்கூறிய புஸ்தகங்களையும் இன்னும் பல அருமையான புஸ்தகங்களையும் அவ்விதம்பிரசுரிக்க எழுதினார்கள். இந்தியரில் இதுகாறும் தமிழ் உலகத்தாருக்கு இவ்வித உதவி புரிந்துவர முதல் முதலில் வந்தது கன்னைய நாயுடுவும், நமச்சிவாய முதலியாரவர்களுமே. இருவரும் சகோதரர்களை விட சிறந்த சிரோமணியாய் விளங்கினார்கள். நமச்சிவாய முதலியாருக்கு அவர் இறந்தது பெரும் துக்கமே. தமிழ் உலகத்தாருடைய துக்கம் இன்னும் அதிக மானதுதான்.

இன்னும் அநேக பண்டித சிரோமணிகள் பற்பல புஸ்தகங்களை எழுதி கொடுத்து வந்தார்கள். புஸ்தகங்களின் விலையோ அதிக சொற்பத் தொகை தான். ஏழைகள் கூட சொற்ப விலைக்கு கஷ்டமின்றி

பாடசாலைப் புஸ்தகங்களை வாங்கிப் படிக்க வேண்டுமென்ற அவா இவருக்கு அதிகமிருந்தமையால் தான் அவ்வித சொற்ப விலைக்கு புஸ்தகங்களை விற்று வர உத்தரவளித்து வந்தார்.

இன்னும் எத்தனையோ நல்லெண்ணங்கள் அவர் மனதில் குடிகொண்டிருந்தன. இவர் மேல் உலகிற்கு ஏகியது பூ உலகிலிருப்போரது துரதிர்ஷ்டமேயாம்.

ஆயினும் இவருடைய சகோதரரும், ஸ்ரீமான் நமச்சிவாய முதலியாரவர்களும், துக்கத்தை ஒருவாறு நீக்கிக்கொண்டு இன்னும் பல தமிழ், தெலுங்கு புஸ்தகங்களைப் பிரசுரித்து வருவார்களென்றும், அவ்விதம் செய்து வர ஈசன் அவர்களுக்கு தீர்க்காயுளையும் தேகபலத்தையும் அளிக்குமாறு நாம் பிரார்த்திக்கின்றோம்.

ஜுலைமீ 23வ சென்னை காக்ஸ்டன் அச்சுகூடத்தலைவர் ஸ்ரீமான் கல்பட்டு கன்னையநாயுடு அவர்கள் பரமதம் அடைந்ததைக் குறித்து பல வித்துவான்கள் பாடிய இரங்கற் கவிகளை ஸ்ரீமான் நமச்சிவாய முதலியாரவர்கள் பாடி ஒவ்வொன்றுக்கும் தகுந்த அர்த்தங்களைச் சொல்லி யாவருக்கும் எளிதில் விளங்குமாறு பிரசங்கமாறி வெகு சிறப்பாகச் செய்தது மிகவும் மெச்சத் தகுந்ததே. சாதாரணமாகப் பண்டிதர்கள் நமது முதலியாரவர்கள் அன்று செய்தமாதிரி செய்யமாட்டார்களென்பது எமது துணிவு. ஏனெனில் அவர்கள் அனுவசியமாய் காலஹரணம் செய்வார்கள். சொல்லக் கூடாததைக் சொல்லுவார்கள், சொல்ல வேண்டியதை சிற்சில சமயங்களில் தெளிவாகச் சொல்ல மாட்டார்கள். அப்படிக்கின்றி துக்கத்துடனிருந்த முதலியாரவர்கள் துக்கத்தை அடக்கிக்கொண்டு அற்புதமாய் உபந்நியாசம் செய்தார்களென்றே நாம் சொல்வோம்.

தஞ்சாவூரில் ஆகஸ்ட் மாஸம் 13வயி லிருந்து 18வவரையில் கல்வி சம்பந்தமான பொருள்காட்சி அவ்வூரிலும், அந்த தாலுகாவிலு முள்ள எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர்களின் அபிவிருத்திக்காக நடத்தப்பட்டுவருகிறது. எல்லா உபாத்தியாயர்களும் மாணுக்கர்களும் இக்காட்சியைப் பார்த்து வருகிறார்களாம். இக்காட்சிக்கு மெஸ்ஸர்ஸ் ய. ம. டாக்லாஸூம் ஆர். நாராயண ஐயரும் காரியதரிசிகள். கமிட்டியில் அநேக பிரமுகர்கள் மெம்பர்களாயிருந்து உழைத்து வருகிறார்களாம். இக்காட்சியால் பலருக்கு அறிவு விருத்தி யுண்டாகுமென்று நம்புகிறோம்.

மலையாளத்தில் மன்னூர் காட் என்ற விடத்தில ஒரு குகையை சில கூலிகள் கற்களை பூமியிலிருந்து வெட்டி யெடுக்கும்பொழுது கண்டு

பிடித்தார்களாம். ஒரு கூலி முதலில் ஒரு சதுரக்கல்லைக் கண்டான், அதை எடுத்தான். உடனே ஒரு கதவு தென்பட்டதாம். அதனுள் போனதும் நாலு பேர் தங்கியிருக்கப் போதுமான இடம் தென்பட்டதாம். அங்கே, பூஜாபாத்திரங்களும், விளக்கு, கத்தி முதலியவைகள் அகப்பட்டதாம். இது பூர்வ காலத்துக்குகையாகவிருக்கலாமெனக் கருதப்படுகிறது. அநேகர் இதைப் பார்த்து வருகின்றார்களாம்.

தென்மலையாளத்தில் கொடங்கலூர் என்ற கிராமத்தில் இம்மாதம் 10வ பகல் 2 மணிக்கு ஆகாசத்திலிருந்து மிகவும் பளுவுள்ள ஐந்தாறு கற்கள் விழுந்தனவாம். இவை விழுமுன் இடிமுழக்க முண்டானது, உடனே கற்கள் விழுந்தன. இவை கெட்டியாகவும் கருமையாகவும் இருக்கின்றனவாம். அவ்வூர் சப்மாஜிஸ்ட்ரேட், போலீஸ் சேவகர்களுடன் அவ்விடத்திற்குப் போய் அக்கற்களைப் பரிசோதித்து அவைகளைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறாராம். கொச்சி டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அவர்களும் அவைகளைப்பார்த்து அவைகள் விழுந்தநேரம் முதலியவைகளை விசாரித்து தெரிந்துகொண்டாராம்.

ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜியைப்பற்றி. பம்பாய் சட்ட சபை பூனாவில் கவர்ன்மெண்டு மாளிகையில், லார்டு வில்லிங்டனின் அக்கிராசனத்தின் கீழ் ஜுலைமீ 24-ந்தேதி கூடிற்று. சட்ட சபையில் அநேக கேள்விகள் கேட்ட பிறகு மிஸ்டர் ஹரிச்சந்திர விஷ்ணுதாஸ் ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜி இறந்ததற்காக, அநுதாபங் காட்டும் தீர்மானம் ஒன்று சபையில் கொண்டு வந்தார் :— ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜியைப் பற்றிக் கனம் மெம்பர் சொல்லிய அனைத்தையும் அங்கீகரிப்பதாகச் சொல்லிப் பின் வருமாறு கவர்னர் பேசினர் :—

பம்பாய் கவர்னரின் பிரசங்கம்.—பெரிய ராஜதந்திர நிபுணரும், பிரிட்டிஷ் பிரஜையுமாகிய காலஞ்சென்ற ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜி விஷயமாய், நான் கொண்டிருக்கும் மதிப்பை வெளிக்காட்டிப்பதிவு செய்விக்க வேண்டியவனாயிருக்கிறேன். நான் அவரை அறியும் பாக்கியம் பெற்றிருந்தவன். அவருடைய நட்பை நான் பெற்றவன். வார்ஸோவா என்னுமிடத்திலுள்ள ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜியின் வாஸஸ்தலத்தில் முதல் முதலாக நான் சென்று முதன் முதலில் அவரைப் பரிச்சயம் செய்துகொண்டது என் ஞாபகத்திற்கு வருகிறது. அப்போது அவருடைய அருமையான மூளையின் வன்மையைக் கண்டு பெரிதும் வியந்தேன். அந்த ஞாபகம் இப்போதும் என் மனத்தைவிட்டு அகலவில்லை. அவர் வயது சென்றவராய் அப்போதிருந்த போதிலும், அவர் பொது நலமான விஷயத்தில் கொண்டிருந்த சிரத்தையும் இந்தியா முன்னேற

வேண்டுமென்ற விஷயத்தில் வகித்திருந்த மனப்பான்மையும், மிகவும் வியக்கத் தக்கவைகளாகவே இருந்தன என்பதற் கையமில்லை.

சில மாசங்கள் முன்னால் அவர் பம்பாய் யூனிவர் ஸிடியில் எல். எல். டி. பட்டம் பெறுவதற்காக யூனிவர் ஸிடி ஹாலில் பிரசன்னமானார். ஆங்கு அநேக பிரமுகர்கள் பிரசன்னமாயிருந்தனர். நான் சான்சலர் ஸ்தானத்திலிருந்து அவருக்கு அப்பட்டத்தைக் கொடுத்தேன். அவர் அப்போது அதனைப் பெறுவதற்காக எழுந்த தன்மையைப் பார்த்தவர் எவரும் அந்த உருவத்தையும், அந்த உருவத்தின் பெருமையையும் தன்மையையும் மறக்கவே முடியாதென்று நினைக்கிறேன். அவரைத் தான் உண்மையான பிரஜையென்று சொல்லவேண்டும். அவர் தம் தேசத்திற்கு ஊழியம் செய்துவந்ததே யல்லாமல், அவர் இங்கிலாந்தின் பார்லிமெண்டின் மெம்பராகவும் இருந்து வந்தவர்; அவர் இந்தியாவின் பிரதிநிதியாக இங்கிருந்து இங்கிலீஷ் பார்லிமெண்டில் மெம்பராக உட்கார்ந்து வேலை செய்யவில்லை. எங்கள் ஜாதியார்களால் அவர் மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டு இங்கிலாந்து ஜனங்களுக்காகவும் பெரிதும் பாடுபட்டவர். பொதுஜன ஊழியம் செய்து வந்த ஜனங்களையே சென்ற சில காலமாகத் தர்மராஜன் பொறுக்கி எடுத்து வருகிறான்.

மெஸர்ஸ் கோக்கலே யென்ன, ஸர்பிரோஸிஷா மேட்டா என்ன, ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜி என்ன இவர்களெல்லாரும் நம்மினின்றும் பிரிக்கப்பட்டார்கள். அவர்களை இப்படிப்பட்ட நெருக்கடியான காலத்தில் இழப்பதற்கு முடியாது தான். ஆனால் அவர்கள் தேசகைங்கரியம் செய்து வழிகாட்டிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இனி வருங் காலங்களில் மதிப்பும் கௌரவமும் நம்பிக்கையும் மிக்கஜனத்தலைவர்கள் உண்டாவார்கள். மேற் கூறிய மனிதர்கள் செய்த வேலையை அவர்கள் தொடர்ந்து விசேஷமான இராஜீய நோக்கத்துடனும் தைரியத்துடனும் நன்கு செய்வார்கள். ஒவ்வொரு ராஜ விசுவாசமுள்ள தேசாபிமானியும் ஏகாதிபத்தியத்தின் கீழ் இந்திய சுயஆட்சி பெறவேண்டு மென்று விரும்பும் விருப்பத்தை இத்தலைவர்கள் பூர்த்தி பண்ணுவார்கள்.

மேற்கூறிய அநுதாபத்தீர்மானத்தை சபையார் மௌனமாய் எழுந்திருந்து நின்று நிறைவேற்றினார்கள்.

சில தினங்களுக்கு முன் நமது கவர்னர் சென்னைக்கு வந்திருந்த பொழுது, ஜமீன்தார்களின் குமாரர்களுக் கென்று பிரத்தியேகமாக கலாசாலை யொன்றை ஏற்படுத்தும் விஷயமாய் சில ஜமீன்தார்களுடன் கலந்து பேசினாரென்றும், அவ்விஷயமாய் மறுபடியும் இவ்வருஷக் கடைசியில் ஒரு கான்பரன்ஸ் கூட்டப்படுமென்றும், அக்கலாசாலைக்கு ஜமீன்தார்களால் எவ்வளவு தொகை வசூலிக்கப்படுகிறதோ அதற்குச் சரியான தொகையைக் கொடுப்பதாக கவர்ன்மெண்டார் வாக்களித்திருக்கின்றனரென்றும், சொல்லப் படுகிறது.

ஜமீன்தார் வகுப்பார் ஏழைகளல்ல. அவர்களுக்கு கவர்ன்மெண்டார் சரியான தொகையைக் கொடுப்பது சரியல்ல, அப்பணத்தைப் ப்ரைமரி கல்விக்கும் கைத்தொழில் சம்பந்தமான கல்விக்கும் உபயோகிப்பது நலம். மேலும் ஜமீன்தார் குமாரர்கள் காலேஜ்களில் சேர்ந்து படித்து வந்தால், அவர்களுக்கு எல்லாப்பிள்ளைகளுடன் சேர்ந்து பழகுவதால் அவர்களுடைய எண்ணங்களும் கஷ்டங்கள் முதலியவைகளும் தெரியும். இவைகள் ஜமீன் குமாரர்களுக்கு பின்னிட்டு மிகவும் உபயோகமுள்ளவைகளே.

இரண்டு வாரங்களுக்கு முன்வரையில் சென்னை நகரில் உப்பு படி ஒன்று ஒரு அணா மூன்று பைசா வீதம் விற்கப்பட்டுவந்திருக்க, சென்ற 18-ந் தேதியி லிருந்து விஷமேறுவதுபோல் அதன் விலை யானது ஏறி 262 படி மூன்று அணா வீதம் விற்கப்பட்டது. இந்தத் தாங்கமுடியாத விலை ஏழை ஜனங்களுக்கு மிகுந்த ஆத்திரத்தை உண்டு பண்ணி யிருக்கின்ற தென்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. சகல விதமான உணவுப் பொருள்களையும் விட உப்பு இன்றியமையாத சாதன மென்பதும் அதன் விலை சிறிதேனும் அதிகப்பட்டால் கோடிக்கணக்கான ஜனங்கள் சொல்லி முடியாத கஷ்டக் திற்குள்ளாவார்க ளென்பதும் கவர்ன்மெண்டுக்கு நன்றாய்த் தெரியும். உப்புக்கு எவ்வளவு குறைந்த வரி விதிக்கக் கூடுமோ அவ்வளவு வரையில் அதன் வரியைக் குறைத்து விட வேண்டுமென்பதே கவர்ன்மெண்டின் விருப்பம் எனப் பன்முறையும் கவர்ன்மெண்டினாலேயே வற்புறுத்திச் சொல்லப் பட்டிருக்கின்றது.

மலேரியா ஜ்வரத்திற்குப் பலரும் கொயினா மாத்திரையை உபயோகித்து வருகின்றனர். அதனால் குணமடையாதவர்களும் உண்டென்று சொல்ல வேண்டும். ஆகவே, அதற்குப் பதிலாக வேறு ஏதேனும் மருந்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று டாக்டர் ஹொரேஸ் வில்லிஸ் என்பவர் நெடுங்காலம் பரிசீலனை செய்து வந்து, பலனடைந்திருக்கிறாரென்று தெரியவருகிறது. அவ்விஷயமாய் "இந்தியன் மெடிகல் கெஜட்" என்ற பத்திரிகைக்கு அவர் எழுதியிருக்கும் கடிதத்தின் ஸாராம்சத்தை இங்கே சுருக்கமாய்ச் சொல்வோம். மலேரியா ஜ்வரம் இத்தேசத்தில் ஆதிகாலந் தொட்டு உள்ளது; ஆகவே அதற்கு புராதன வைத்திய நூல்களில் ஏதேனும் மருந்து இருக்க வேண்டுமென்று அவர் கருதி, உருது பாஷையில் நல்ல ஞானமுள்ள தமது மனைவியின் உதவியைக் கொண்டு, உருது பாஷையிலுள்ள வைத்திய நூல்களைப் பரிசோதித்து வந்தார். அதன் பலனாக பற்பல விதமான உப்புகளையும் ஆரஞ்சு போன்ற கனி வர்க்கங்களில் ஒன்றின் சாற்றையும் கலந்து அவர் ஒரு கஷாயம் தயாரித்திருக்கிறார். மலேரியா ஜ்வரத்தினால் வேலைக்கு லாயக்கில்லை என்று போலீஸிலிருந்து தள்ளி விடப்பட்ட 23-பேருக்கு அக் கஷாயத்தை அவர் கொடுத்ததில் அந்த 23 பேரும் குணமடைந்திருக்கிறார்கள். பதினாறு வருஷங்களுக்கு முன் அம்மாதிரி பலன் கிடைத்தவுடன் அதை அன்று முதல் இன்றளவும் அவர் உபயோகித்து வந்து பலன் பெற்றிருக்கிறார்.

சென்னையில் குழாயை சில மணி நேரம் நிறுத்திவந்தார்கள். வடிகட்டின ஜலத்தை போதுமான வரையில் அனுப்ப முடிய வில்லை, பின்னிட்டு வடிக்கட்டின ஜலமும், வடிக்கட்டாத ஜலமும் கலந்து எப்பொழுதும் விடப்படும் என்று கார்பொரேஷன் பிரஸிடெண்டு அறிவித்தார்.

வடிக்கட்டாத ஜலத்தின் உபயோகத்தால், மரணம் ஜாஸ்தியாய் விடுகிறதென்று ஹெல்த் ஆபிஸர் முறையிட்டார். அதன் மேல் சிறிது நேரம் நிறுத்தி வடிக்கட்டின ஜலத்தையே விடப் பார்த்தார்கள்; முடியவில்லையென்று பழைய வழக்கத்தை மறுபடி கைக்கொள்ளப்போகிறார்கள். ஹெல்த் ஆபிஸர் சொல்வது உண்மையானால், இதன்பலனாக மரணம் அதிகமாகும்; ஜலத்தைக் காய்ச்சிக் குடிக்க வேண்டுமென்று பிரஸிடெண்டு எச்சரிக்கை செய்கிறார், காய்ச்சிக் குடிக்கும் பிரயோஜனத்தை அறியும் படியான படிப்பு பாமர ஜனங்களுக் கிருக்கிறதா?

திருச்சினாப்பள்ளி ஸெயின்ட் ஜோஸெப்ஸ் காலேஜில் எல்டிகிளாஸ் ஒன்று 9-ந் தேதியன்று ஸ்தாபிக்கப்பட்டது. சைதாப்பேட்டை உபாத்திமார்களுடைய காலேஜில், போதனாமுறை பயிலுவதற்காக பல உபாத்திமார்கள் விண்ணப்பஞ் செய்து கொண்டார்கள். அவர்களில் 20-பேர்களுக்கு சைதாப்பேட்டை உபாத்திமார்களுடைய காலேஜில் இடம் இல்லையாகையால் அவர்களை, புதிதாய் திருச்சினாப்பள்ளியில் திறந்து வைக்கப்படும் உபாத்திமார்களுடைய காலேஜில் சேர்ந்து கொள்ளும்படியாக அவர்களுக்கு உத்தரவு அனுப்பிக்கப்பட்டதென்று தெரிகிறது.

ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜி.

ஸ்திரீகளின் அநுதாபக்கூட்டம்.

10-ந் தேதியன்று பம்பாயில் குஜராத்தி ஹிந்து ஸ்திரீ மண்டல சபையின் சார்பாக, மிஸஸ் ஸரோஜினி நாயுடுவின் அக்கிராசனத்தின் கீழ், பம்பாய் ஸ்திரீகளின் பொதுக்கூட்ட மொன்று கூடி, ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜியின் மரணத்தைக் குறித்து அநுதாபம் காட்டிப் பேசித் தீர்மானம் செய்து அத்தீர்மானம் அவர் குடும்பத்தவர்க்கு அனுப்பப்பட்டது.

விநோதமான ஜப்பானிய வழக்கங்கள்.

ஒரு ஸ்திரீ நிருபர் எழுதுகிறார்:—ஜப்பானியர்கள் அநேக விஷயங்களில் ஐரோப்பியர்களின் வழிகளை அநுசரித்த போதிலும், கீழ்நாட்டார்களுக்குள் வழங்கிவரும் சில ஆசாரங்களையும் மூட நம்பிக்கைகளையும் கைவிடவில்லை. இப்பொழுதுகூட ஸரியான காலத்தில் மழை பெய்யாமல் போனால், அரண்மனையி லிருக்கும் சீமாட்டிகள், பட்டுக் காகிதத்தினால் பொம்மைகள் செய்து, தோட்டங்களி லிருக்கும் மரக்கிளைகளில் தொங்கவிடுவது வழக்கம். இப்படிச் செய்வது, மழை பெய்வதற்காக தேவதைகளைப் பிரார்த்திப்பதற்கு அடையாளம். மழை பெய்கிறவரையில் இந்த பொம்மைகள் தொங்கவிட் டிருக்கிறபடியால், இவைகளினால் தான் மழை பெய்ததென்று ஜனங்கள் நினைத்துக்கொள்வது ஸஹஜம். கடைசியாக மழை வரும்பொழுது, இப்பொம்மைக ளெல்லாம் கிளைகளிலிருந்து எடுக்கப்பட்டு ஆறுகளிலும், ஓடைகளிலும் மிதந்து போகும்படி விடப்படுகின்றன.

ஜப்பானிய சக்கரவர்த்தியின் அரண்மனையில் இன்னுமொரு விநோதமான வழக்கம் இப்பொழுதும் வழங்கி வருகின்றது. அதாவது ஒருவனுக்கு வயிற்றுவலியாவது தலைவலியாவது வந்தால், ஒருவிதமான நாணல்களைக்கட்டி அவன் வயிற்றிலாவது, தலையிலாவது அதைச்சுற்றி, சில மந்திரங்களை ஜபிக்கிறார்கள்.

பண்டைக் காலங்களில், 'சக்கரவர்த்தி அல்லது சக்கிரவர்த்தினி, அரண்மனையைவிட்டு வெளியில்போனால், அங்கிருக்கும் சீமாட்டிகள்,

காலநிலை சுகமாயிருப்பதற்காக, காப்புகளை மரங்களில் கட்டுவார்கள், "கான் டெம்பொரரி ரெவ்யூ" என்றசஞ்சிகையில் கொஞ்ச நாளைக்கு முன் பிரசுரிக்கப்பட்டிருந்த ஒரு வியாசத்தைப் படித்தால், ஜப்பான் ராஜாவின் அரண்மனையில் மூடபக்தி குடிகொண் டிருக்கிறதென்று தோன்றும், மேலும் அவர்கள் செய்யும் ஆசாரோபசாரம் நிரம்பவும் ஆச்சரியமா யிருக்கிறது. ராஜாவையாவது, ராணியையாவது பார்க்கப் போகிறவர்கள், மண்டிபோட்டுக்கொண்டே போகவேண்டும். இப்பொழு திருக்கும் சக்கரவர்த்தியின் தகப்பனார் வியாதியாய்ப் படுத்திருந்த பொழுது, அவருக்குச் சிகிச்சை செய்து கொண்டிருந்த வைத்தியர்களெல்லோரும் இந்தப்பிரகாரம்தான், அவரிடம் எப்பொழுதும் போய்க் கொண்டிருந்தார்களாம்.

தவிர, சக்கரவர்த்தியின் சரீரத்தை கையுறை போட்டுக் கொள்ளாமல் ஒருவரும் தொடக்கூடாது. மூன்று வருஷங்களுக்கு முந்திதான், ராஜாவின் மணிக்கட்டை பட்டினால் மூடாமல், வைத்தியர்கள் அவர் தாதுவை பரீக்ஷிக்க அனுமதி பெற்றார்கள். அப்பொழுது தான் முதல் முதல் ராஜாவின் சரீரத்தின்பேரில், வைத்திய ஆயுதங்களைப் பரீக்ஷித்தார்கள்.

வெறுங்கையினால் ராஜா,ராணி முதலானவர்களை ஒருவரும் தொடக்கூடாது என்ற வழக்கமானது ரொம்பவும் கண்டிப்பாய் அநுசரிக்கப்பட்டு வருகிறது. உதாரணமாய், சில வருஷங்களுக்கு முந்தி, ராஜாவின் தாயார், ஒரு வண்டியில் ஸவாரி செய்துகொண்டு போனபொழுது, நெருக்கிடமாய்ப் போன ஸந்தர்ப்பத்தில், ஒரு கூலி யானவன் ராணியை வண்டியிலிருந்து தன் கையினால் கீழே யிறக்கினதற்காக, தண்டிக்கப்பட்டான்.

ஜப்பானியர்கள் அநேக மூட நம்பிக்கைகளை இன்னும் கைப்பற்றுகிறார்களென்பது, அவர்கள் குழந்தைகளின் பொருட்டுச் செய்யும் சடங்குகளி லிருந்து நன்கு விளங்கும். ஒரு குழந்தை தன் செவிலித்தாயை விரும்பாமல் போனால், அக்குழந்தையின் தாய் தகப்பன்மார் ஒரு பல்லியை சுட்டுக் கரியாக்கி, அதை இரண்டு பொட்டணங்களாய்க் கட்டி, ஒன்றை அக்குழந்தையின் ரக்ஷையில் வைத்துக் கட்டி, மற்றொன்றை செவிலித் தாயினிடம் கொடுத்தால், இவ்விருவர்களுக்கும் அன்னியோன்யம் ஏற்படுமென்று ஜப்பானியர்கள் நம்புகிறார்களென்று, ஜப்பானிய வாழ்க்கையையும் வழக்கங்களையும் நன்றாயறிந்த டாக்டர் W. L. ஹில்ட்பர்க் என்பவர் சொல்லுகிறார்.

அரக்கு சாயம் போட்ட பாத்திரங்களை குழந்தைகள் உபயோகிப்பதனால் அந்த விஷத்தினால் குழந்தைகளுக்கு அபாயம் நேரிடாமலிருப்பதற்காக கைத்தாயாவது வைத்தியராவது அக்குழந்தைகள் முதல் முதல் ஸ்நானம் செய்யும் ஜலத்தில் அந்தப் பாத்திரத்தை போட்டு விடுவார்கள். சாதாரணமான எல்லாரும் குழந்தைகளுக்கு முதல் முதல் நாய் மாதிரியிருக்கும் பொம்மைகளைப் பரிசளிப்பார்கள். ஏனென்றால் அதனால் பிசாசுகள் ஓடிப்போய் விடுமென்றும், குழந்தைகளுக்கு சரீர ஆரோக்கியம் உண்டாகுமென்றும் அவர்களுடைய நம்பிக்கை. நாய் மிகவும் ஆரோக்கியமான மிருகமென்று அவர்களால் கருதப்படுகிறது. ஆகையால் அது தான் சரீர சௌக்கியத்தை குழந்தைகளுக்கும் கொடுக்கின்றதென்று அவர்கள் நம்புகிறார்கள்.

அமிர்தாஞ்ஜனம்

எல்லா நோய்களுக்கும்

ஸித்தாஞ்ஜனம்

சொகுசான டப்பியுடன் விலை அணா 8

டஜன் 1 க்கு ரூபா 5.

வி. பி. வேறு எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

படை மருந்து	டப்பி 1 க்கு	அணா 4
தந்த சூரணம்.	டப்பி 1 க்கு	,, 2
மோஹினி தைலம்	ஸீஸா 1 க்கு	,, 12

அமிருதாஞ்சனம் டிப்போ,

169, பிரேடரி ரோட, பம்பாய்.

6, தம்புசெட்டி தெரு, மதராஸ்.

The Tamil Zenana & School Magazine.

மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. XVIII	Madras, September, 1917.	No. 10
புத்தகம் 18	சென்னை : செப்டம்பர்மீ, 1917ஞ	இலக்கம் 10

॥ ஸ்ரீ: ॥

அறுபத்து நான்கு கலைக்ஞானத்தின்

சுருக்கம்.

(288-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விதமாய் கூறப்பட்ட ப்ருதிவீ, அப்பு, தேஜஸ், வாயு, என்னும் நான்கு பூதங்களிலும் ஒவ்வொரு பொருள்களிலும் இடையில் இடையில் தங்கியிருப்பதுதான் ஆகாயம் அல்லது வானம் எனப்படும். லோககர்த்தவாகிய பகவான் ஆகாயத்திற்கும் ஒரு அபூர்வமான சக்தியைக் கொடுத்திருக்கிறார். ஆகாயத்தினுடைய அம்சமானது ஒவ்வொரு சரீரங்களிலும் பரவியிருக்கிறது: நாம் பேசும் பேச்சானது ஆகாயத்தினுடைய சக்தி விசேஷத்தினாலேயே மற்றொருவருடைய காதில் போய் சேருகிறது. ஈச்வரன் ஆகாசத்தை ஸ்ருஷ்டிக்காவிடில் நாம் பேசும் பேச்சு ஒருவருக்கும் கேளாது. ஒருவன் சொல்லும் கருத்தை மற்றொருவன் அறிந்துகொள்ளமுடியாது. கல்வியினுடைய மஹிமையும் குறைந்தேபோய்விடும். துஷ்ட மிருகங்கள் கர்ஜனை செய்யவும் முடியாது. அவ்விதம் கர்ஜித்தபோதிலும் அது மனிதர்கள் செவியில் பிரவேசிக்காமலிருக்கும். அதனால் சில ஸமயங்களில் அபாயமும் நேரிடும். திருச்சின்னம் (திருச்சின்னம், மேளம் மத்தளம், புள்ளாங்குழல், பேரிகை, மணி, முதலிய வாத்யங்களின் உபயோகமே வீணாய்விடும். ஆகையால் நமது காதுகளின் த்வாரங்களிலும் பலவித வாத்யங்களின் வயிற்றிலும் மற்றுமுள்ள அனேகவைகளிலும் ஆகாயத்தின் குணம் பரவியிருக்கிறதை நாம் அறிந்து கொண்டேயிருக்கிறோம். ஆகாயத்தின் குணம் காதுகளில் கொஞ்சம் குறைந்து விட்

ஆகாயம் அல்லது வானம்.

டால் அவனை நாம் செவிடன் என்றே சொல்லுகிறோம். சில ஸமயங்களில் நாம் ஒரு புஸ்தகத்தை எடுத்து வாயையும், பற்களையும், நாக்கையும் ஒன்றுசேர்த்து படிக்கும்போது ஓர்வித சப்தம் உண்டாகிறதே. அப்போது அவ்விடத்தில் ஆகாயத்தின் குணமிருக்கிறதல்லவா? இல்லாவிடில் உச்சரிப்பே உண்டாகமாட்டாது. ஆகாயமானது ஒவ்வொரு பொருள்களிலும் சேர்ந்திருக்கிறபடியால் தான் அங்கங்கு ஓசை முதலியது உண்டாகிறது. ஒரு இரும்புத்துண்டை மற்றொரு இரும்புத்துண்டுடன் தட்டும்போது அங்கு ஒலி உண்டாகிறதல்லவா? அவ்விடத்தில் ஆகாய குணம் சேர்ந்திருப்பதாலேயே ஒலி உண்டாகிறது. பெரிய பொருள்களிலும் மிகவும் சிறிய பொருள்களிலும், மற்றுமுள்ளவிடங்களிலும் ஆகாயத்தின் அம்சம் பரவியேயிருக்கிறது.

முக்ய ஸாராம்சம் என்னவென்றால் ஆகாயத்திற்கு சப்தம் தான் (ஒலிதான்) ப்ரதான குணம் என்பதாயிற்று. இவ்வித சப்தத்தையே சிலர் பரப்ரம்மம் என்று வழங்குகின்றார்கள். அவர்களுக்கு சப்த பரம்ம வாதிகள் என்று பெயர். சுமார் சில வருஷங்களுக்கு முன் ஸ்வாமி விவேகாநந்தர் என்கிற மஹான் அமெரிக்கா தேசத்திற்கு ப்ரதான ஸ்தலமாகிய வாஷிங்டன் நகரில் ஒரு பெரிய கல்விச் சபை கூடியபோது அங்கு போய், இவர் இந்த சப்தப்ரம்ம வாதிகளின் ஸாராம்சத்தை எடுத்து விவரமாய்க்கூறினார். இவரது வித்வ தன்மையைக்கண்டு அத்தேசத்திலுள்ளார் சிலர் சில சீர்திருத்ததை அடைந்துகொண்டார்கள்.

நமது தேசத்தில் அவதரித்த ஸ்ரீ சங்கராசாரியார் ஸ்வாமிகள், ஸ்ரீராமானுஜாசாரியார் ஸ்வாமிகள், ஸ்ரீமத்வாசாரியார் ஸ்வாமிகள், ஸ்ரீ வேதாந்த தேசிகர், அப்பய தீக்ஷிதர் முதலிய பெரிய வித்வான்களும் தாங்கள் இயற்றிய நூல்களில் இந்த சப்த ப்ரம்மவாதத்தின் விஷயமாய் வெகு அழகாய் எடுத்துக்கூறியிருக்கிறார்கள்.

இவ்விதம் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பஞ்ச பூதங்களும் ஒன்றுக்கொன்று ஸஹாய காரணமாகிக்கொண்டே ஜீவன்களுக்கு சௌக்கியத்தைக் கொடுத்துக்கொண்டு வருகின்றன. முதலில் ஸ்ருஷ்டித்த இப்படிப்பட்ட பஞ்சபூதங்களின் விசித்திர சக்தியினால் ஈசன் உலகில் அனேக பொருள்களையும், ஜீவராசிகளையும், ஸ்ருஷ்டித்து காப்பாற்றிக்கொண்டுவரும் தருணத்தில் மது, கைடபன், ஹிரண்யகசிபு முதலிய துஷ்ட அஸுரர்கள் பிறந்து தங்களது பலத்தினால் தேவர்களை ஓட்டியும் மஹரிஷிகளுக்கும், பிராமணர்களுக்கும், பலவித உபத்திரவங்களைச் செய்துகொண்டும், வேதாத்யயனம், யாகம், முதலிய நற்காரியங்கள் நடக்கவொட்டாமல்.

பலமுறை கெடுத்துக்கொண்டு வந்தார்கள். அவ்விதம் அவர்கள் செய்த கொடுஞ் செயல்களை ஸஹிக்க முடியாமல் தேவர்களும் ரிஷிகளும் அலறி ஓடும்போது பகவான் அனேகவித அவதாரங்கள் செய்து அவர்களைத் தொலைத்து பூமியில் தர்மத்தையும் நற்காரியங்களையும் நிலை நாட்டினார். பிறகு த்ரேதாயுக, த்வாபரயுகங்களில் கம்ஸன் முதலிய அஸுரர்களும் ராக்ஷஸர்களும் உற்பத்தியாகி முன்போல் உலகத்தை ஹிம்ஸித்து வருகையில் ஆதிபகவான் வடமதுரையில் தேவகீ தேவிக்கும் வஸுதேவருக்கும் புத்திரனாய் அவதரித்து கம்ஸன் முதலியோரைக்கொன்று பாண்டவர்களைக் காப்பாற்றி பக்தர்களாகிய நாம் உஜ்ஜீவிக்கும்பொருட்டு கீதையை (பகவத்கீதையை) அர்ஜுனன் மூலமாய் வெளியிட்டார்.

ஸாதுக்களை ரக்ஷித்து தர்மத்தை நிலை நாட்டுவதற்காக அவதரித்த ஸ்ரீ கிருஷ்ணன் பாஞ்சாலதேசத்திற்கும் மத்ஸ்ய தேசத்திற்கும் நடுவிலிருக்கும் தேவகிரியின் சார்பில் அநேக சிஷ்யர்களுடன் கூடிக்கொண்டு ஆச்ரமத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ ஸாந்தீபினீ மஹரிஷி ஸந்நிதியை நாடி, சாஸ்திர முறைப்படி அவரை ஆசார்யனாகவரித்து தானும் அவரிடத்தில் மிகுந்த பக்திவைத்து சிஷ்யபாவத்தை வெளியிட்டுக்கொண்டு, அம்முனிவரிடத்திலிருந்து ஸகல சாஸ்திரங்களையும் கற்றுக்கொண்டார். அந்த கிருஷ்ணனிடத்திலிருந்து சில மஹான்களும் மஹரிஷிகளும் மற்றும் சில அபூர்வ விஷயத்தைக் கற்றுக்கொண்டு வெளி யிட்டார்கள்.

ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்திற்கு முன்பே, ஸ்ருஷ்டிகாலம் முதல் இந்த பரதகண்டமென்னும் இந்தியாவில் பரம்பரையாய் ஸகல சாஸ்திரங்களும், பலவித வேலைகளும் நடைபெற்றுக்கொண்டே வந்தன. ஆகிலும், சுமார் 2000 வருஷங்களுக்குமுன் விந்தியமலையின் ஸமீபத்திலிருக்கும் அவந்தீ தேசத்தின் ராஜதானியாகிய உஜ்ஜயினீ மஹா நகரத்தை ஸ்ரீ விக்ரமார்க்க பூபதி வெகுகியாதியுடன் ஆண்டபிறகு அவனது ஸிம்மாஸனத்தை யடைந்து அரசு புரிந்த ராஜாதிராஜ ஸ்ரீ போஜமஹாராஜன் காளிதாஸன், பவபூதி முதலிய பெரியவித்வான்களைத் தனது சபையில் வைத்துக்கொண்டு அவர்களது ஸஹாயத்தினாலும் தனது புத்தி மஹிமையினாலும் "சதுஷ் ஷஷ்டிகலா" (அறுபத்து நான்கு கலை) என்னும் நூலை முதலில்செய்து, பிறகு "யுக்திகல்பதரு" என்னும் நூலையும் வடமொழி என்னும் ஸம்ஸ்கிருத பாஷையில் இயற்றினான்.

கலை என்றால் வித்யை, அல்லது ஓர்வித படிப்பு, அல்லது ஓர்வித கல்வி ஸாமர்த்தியம் என்று கருத்து. இவ்வித அறுபத்து நான்கு கலைகளில் ஒருவன் பயிற்சியடைவானாகில் அவனுக்குத் தெரியாத விஷயம் உலகத்தில் ஒன்றுமில்லை. இந்த அறுபத்து நான்கு கலைகளில் ஸம்பூர

ணத் தேர்ச்சியை அடைந்தவர்கள் முற்காலத்தில் சிலர் இருந்ததாக ஏற்படுகிறது. இந்த கலியுகத்தில் மனுஷ்யர்களுக்கு வயது கொஞ்சம், அவ்வளவு பலம் கிடையாது. ஸம்பூர்ண ஸௌகரியமும் நேரிடுகிறதில்லை. ஆகையால் இந்த கலைகளின் ஞானத்தை ஒருவன் கற்காவிடினும் சிலர் சில சாஸ்திரத்தில் தேறியவராயும், மற்றும் சிலர் மற்றும் சில வித்தையில் தேறியவராயு மிருக்கிறார்கள்.

பொதுவாய் பார்க்குமிடத்தில் இந்த இந்தியாவில் இந்த அறுபத்து நான்கு விதமான கல்வியில் நிபுணர்களாகவே அனேகர் இருக்கிறார்கள். இந்த கலைகளின் ஞானத்தினால் நெடுநாள் ஸுகமாய் வாழ்வதற்குத்தகுந்த ஸௌகரியத்தை ஸம்பாதித்துக் கொண்டு அதிக ஸந்தோஷத்துடன் வாழலாம். இதில் ஒவ்வொரு கலையில் பயிற்சியும் ஒவ்வொருவருக்கும் அவசியம் வேண்டியதேயாகும். ஆனபோதிலும், தங்கள் ஸௌகரியத்திற்குத் தகுந்தபடி தங்களால் கூடியவரையில் கலைக்ஞானத்தை அடைவதே பெரிய நன்மையாகும். இதனால் ஏற்படக் கூடிய கீர்த்தியையும், ஐசுவரியத்தையும், ஸுகத்தையும், ஆனந்தத்தையும் சொல்ல முடியாது.

இதற்கு ஒரு உதாரணத்தை இங்கு விவரிப்போம்—ஒரு பெரிய மனுஷ்யன் சொல்லுகிறான்—"அடே! யாரடா அங்கு நிற்கிறது? (சற்று உற்றுப்பார்த்து,) வாருமய்யா! வாரும் தாங்கள் வந்தது ரொம்ப ஸந்தோஷம் ஆச்சுது. நமது உத்தேசப்படி (பகவானுடைய கிருபையின்படி என்றே சொல்லுவோம்) வரன் நிச்சமாய் விட்டது. நமது பங்களாவில் நாலு பக்கத்திலும் பந்தல் போட்டு அழகாய் அலங்காரம் செய்தாய்விட்டது. இனி நமது ஸுந்தரத்தின் கலியாணம் நிச்சமாய் நடந்து விடும். ஆனால் ஒன்று வேணும் "ஸங்கீதத்தில் நல்ல கெட்டிக்காரனானவன் யார் இருக்கிறான். சொல்லும்." என்று கேட்டதற்கு மற்றொருவன் பதில் அளித்ததாவது—"கேளும் கனவானே! தஞ்சாவூரில் (அவன்) இருக்கிறான்." மதுரையில் (அவன்) இருக்கிறான். நாகப்பட்டணத்தில் (அவன்) இருக்கிறான் என்று சிலரைக் குறிப்பிட்டுச் சொன்னான். உடனே அந்தப் பெரிய மனுஷ்யன் கூறியதாவது, உடனே அவனை வரவழை அவன் எவ்வளவு பணம் கேட்டாலும் தடையில்லாமல் கொடுக்கிறோம்" என்றார்.

முன் குறிப்பிட்டவர்களுக்கு ஸங்கீத சாஸ்திரத்தில் ஞானம் இல்லாவிடில் இப்படிப்பட்ட கீர்த்தி, தனம் முதலியது கிடைக்குமா? நீங்களே சற்று ஆலோசித்துப் பாருங்கள். ஆகையால் நமது இந்தியாவில் விளங்கும் ஒவ்வொரு புருஷர்களும், ஒவ்வொரு மாதர்களும் அவசியம் கல்வி

யில் தேர்ச்சியை அடைய ப்ரயத்னம் செய்ய வேண்டும். ஐரோப்பா முதலிய வெளி நாடுகளில் புருஷனும் ஸ்திரீயும் ஸமமாக படிப்பதாய் ஏற்படுகிறது. அப்படியிருந்த போதிலும் நமது ஹிந்து சாஸ்திர மத முறையிலிருந்து தவறாமல் நல்லொழுக்கத்திலிருந்து கொண்டே தம்மால் கூடியவரையில் கல்வியைக் கற்றல் நன்மையின் பொருட்டேயாகும்.

இவ்விடத்தில் குறிப்பிட்ட உதாரணமானது ஸங்கீதத்தின் விஷயமாகும், இது போலவே மற்ற அறுபத்து மூன்று கலைக்ஞானத்தினால் ப்ரயோஜனத்தை அடைய வேண்டிய ஸ்தலம் அனேகம் உண்டு. எக்காலத்திலும் எந்த தேசத்திலும் பயனை உண்டு பண்ணக் கூடிய இந்த கலையின் விவரத்தை சொல்லும் வடமொழி நூல்கள் அனேகம் நாசமாகி விட்டன. முன் சொல்லியபடி போஜராஜன் இயற்றிய "சதுஷ்ஷஷ்டி கலை" என்னும் நூல் இப்போது கிடைப்பதே அரிது. அது அச்சிடப்படவுமில்லை. "யுக்தி கல்பதரு"என்னும் மற்றொரு புஸ்தகமும் அச்சிடப்படவில்லை. மூலப்புஸ்தகமும் ஸம்பூர்ணமாய் கிடைக்கவில்லை. இது ஸம்பந்தமான மற்றுமுள்ள சில புஸ்தகங்கள் ஒரு ஸமயம் வெளி நாடுகளுக்கு போய் இருக்கலாம் என்று தோன்றுகிறது. ஆகிலும், போஜராஜன் காலம் முதல் சுமார் 2,000 வருஷகாலமாய் இந்தியாவில் இந்த 64 கலையின் பயிற்சி மிகவும் விசேஷமாய் நடைபெற்று வந்ததாகவும் ஏற்படுகிறது. (இதை மேல்பாகங்களில் விவரிப்போம்.) இவ்வித காரணத்தினால் கூடியவரையில் அனேக புஸ்தகங்களிலிருந்து ஆதாரம் எடுத்து எளிய தமிழ் நடையில் (பாலர்களுக்கும் கூட அர்த்தமாகும்படி எழுதும்படி தீர்மானிக்கப்பட்டது. அவ்விஷயத்தை நமது நண்பர்கள் படித்து அறிந்துக் கொள்ளக்கூடும். இந்த 64 கலையின் பயிற்சியில் ஒன்று குறைந்தாலும் கூட, உலக வாழ்க்கையின் ஸுகத்திற்கு ஒரு பாகம் குறைந்ததே ஆகிவிடும் ஆகையால், மஹாபாரதத்தில் சொல்லிய முறைப்படி அப்படிப்பட்ட அறுபத்து நான்கு கலைகளின் பெயர்கள் அடியில் விவரிக்கப்படுகின்றன:

கலைகளின் பெயர். கருத்தின் சுருக்கம்.

1. கீதம்.........(கீதம், ஸங்கீதம், கானம் என்கிற இம்மூன்று பதமும் ஒரு பொருளையே குறிப்பிடுகிறது. விசேஷமாய் மாதர்களாலும், புருஷர்களாலும் பாடத் தகுந்தது. பூர்வ ஜன்ம ஸுகிருதம் படைத்தவர்கள் தான் இந்த ஸங்கீதகலையில் நல்ல தேர்ச்சியை அடைய முடியும். பணத்தினாலும், பிரயத்தினத்தினாலும் இது ஸாதிக்கத் தக்கதன்று.)

2. வாத்யம்......(தேவாலயங்களிலும், அரசர்கள் மாளிகைகளிலும், கலியாண மண்டபங்களிலும் மற்றுமுள்ள சுபகாரிய ஸமயத்திலும் நடை பெறத்தகுந்தவை. இவ்வித வாத்யங்களின் கருவிகள் தேசங்கள் தோறும் பலவிதமாய் அமைக்கப்பட்டு வருவதாகும்.)

3. நர்த்தனம்......(நடனம். நர்த்தனம். ந்ருத்யம் என்பவை ஒரே பொருளாகும். இது தேவநர்த்தனம் என்றும், மனுஷ்யம் என்றும் இருவகைப்படும். முக்கியமாய் தாவலிகளும், பாலிகைப் பெண்களும் கற்கத் தகுந்தது.)

4. நாடகம்......(விசேஷமாய் பூர்வ சரித்திரங்களை இப்பொழுது நடப்பதுபோல் நடித்துக் காண்பித்தல்.)

5. சித்திரம்......(நன்றாய் தியானம் உண்டாவதற்காக த்ரிமூர்த்தி முதலிய தேவர்களையும், பூர்வீக மஹான்களையும் பலவித வர்ணத்தில் சுவர் முதலியவைகளில் எழுதல்.)

6. தண்டுலகு ஸுமபலி...(மங்கள ஸமயங்களில் ஸ்திரீகள் த்ருஷ்டி தோஷம் நீங்கு வதற்காக கலியாணப்பெண்பிள்ளை எதிரில் ஆரார்த்திகை (ஆலத்தி) எடுத்தல். புஷ்பத்தினால் ஜோடித்தல் அரிசியினாலும், மாவினாலும் தட்டு தயாரித்தல்.)

7. புஷ்பாஸ்தரணம்...(புஷ்பங்களினால் கட்டில் மெத்தை, படுக்கையறை முதலியதை ப்லவிதமாய் அலங்கரித்தல்.)

8. விசேஷகச்சேத்யம்...(ஸ்தரீகளின் நெற்றிக்கு பலவிதமாய் அனேக சமயங்களில் தரிக்கக் கூடிய பொட்டு, திலகம், சாந்து, குங்குமம், முதலிய தயாரித்தல்.)

9. தசனவஸனங்கராகம்...(பற்களுக்கும் நகங்களுக்கும் காவி ஏற்றல் ஆடைகளுக்கு பலவித வர்ணத்தை ஒற்றிடுவதுடன் அதில் சித்திர வேலையும் செய்வது.)

10. மணி பூதுகா கர்மா...(முக்யமாய் நவராத்திரி ஸமயங்களில் (தஸ்ரா வில்) பதுமைக் கொலு வைப்பதற்காக பலவிதமாய் சிறு வீடுகட்டி அமைத்தல் முதலியன.)

11. சயனரசனை......(படுக்கையின் குணமும் இவ்விதம் அமைத்தால் ஸுகநித்திரை உண்டாகும் என்றும் விஷயம்.)

12. உதகவாத்யம்.

உதககாதம்......பீச்சாங்குழலினால் ஆடவர்களும் மாதர்களும் வஸந்த காலத்திலும், க்ரீஷ்மகால மென்றும் கோடை காலத்திலும் விளையாடுதல், அதற்குரிய மற்றும் சிலவித முஸ்தீப்புகள்.

13. சித்ரயோகம்...தேவர்கள், கந்தருவர், கின்னரர், கிம்புருஷர், ஹம்ஸம் முதலிய பக்ஷிகள், இவைகளின் உருவம் போல் வஸ்திரங்களிலும், சேலைகளிலும் மாளிகைச் சுவர், மண்டபம், ஹால் முதலியவைகளில் பலவித லக்ஷணம் பொருந்தியதாய் உருவமிழைத்தல்.

14. மால்யக்ரதனம்...தேவர்களுக்கு மாலை கட்டும் விதமும், அரசர்களுக்கும் கலியாணப்பெண்பிள்ளைகளுக்கு மாலைகட்டும் விதமும், அவ்வாறே புஷ்பங்களால் செய்யக் கூடிய பலவித வேலைகளும் கூடியது.

15. சேகராபீடயோஜனம்...விசேஷமாய் மாதர்கள் தலையில் அணியக் கூடிய ராக்குடி முதலிய ஆபரணங்களும், சந்திரன் உருவம் போலவும், ஸூரியன் உருவம் போலவும் ரத்தினங்களால் செய்யப்பட்ட தலைஸாமான் என்னும் ஆபரணங்கள் முதலிய அலங்காரம்.

16. நைபத்யயோஜனம்...ஆடவர்கள் மனம் களிக்கும்படி அவ்வளவு விசேஷமாய் பாதாதிகேசம்வரையில் மாதர்களை அலங்கரித்தல், இதுபோலவே மாதர்மனம் களிப்புறும்படி ஆடவரை அலங்கரித்தல். கலியாண சிங்காரிப்பு. ஊர்கோல அலங்காரம், திலரையங்கரித்தல் முதலியவைகளும் சேர்ந்தது.

17. கர்ணபத்ரபங்கம்...மாணிக்கம், முத்து, ப்வழம், நீலரத்னம், வைரம், பத்மராகம், கொமேதகம், புஷ்பராகம், வைடூரியம், பேரோஜம், தங்கம், பொன், வெள்ளி, யானைத்தந்தம், முதலியவைகளால் கம்மல் (ஓலை) அட்டிகை, காப்பு, கொலுஸு, ஒட்டியாணம், மோதிரம், வங்கி திருமங்கல்யம் என்னும் தாலி, நூபுரம் என்னும் பாதத்தண்டை சிலம்பு முதலிய ஆபரணத்தின் லக்ஷணமும், அவைகளைத் தரித்துக்கொள்வதினால் உண்டாகும் பயன் முதலிய விஷயங்களும்.

18. ஸுகர்தயுக்தி...பகல் காலத்தில் வசிக்கும் இடத்திலும், இரவு காலத்தில் நித்திரை செய்யும் ஹால்களிலும் நல்ல வாஸனை உண்டு பண்ணுவதால் உண்டாகும் குணமும் மற்றும் சில விஷயமும்.

19. பூஷணயோஜனம்...சில சில ஆபரணங்களை சில சில அவயவங்களில் தான் அணியவேண்டும் என்னும் முறையும் மற்றும் சில விஷயமும்.

20. பதாதிசஸ்த்ரஸந்தானம்...பதாதி என்னும் ஆள்களையும் (ஸோல்ஜர்களையும்) குதிரைகளையும் யுத்தகளத்தில் யுக்திராய் ஜயித்து பகைவரை வெல்லுதற்குரிய சிலவித ஏற்பாடுகள் சேனைத்தலைவனாய் நடத்தல் முதலியவையும்.

21. களசுமாரயோகம்...சர்க்கரை செய்தல், பயிர் செய்தல், துணி பட்டு முதலிய நெய்தல், அந்தந்த காலத்திற்குத்தகுந்தபடி குடித்தனம் செய்தல், உலக நடவடிக்கை.

22. ஹஸ்தலாகவம்...உலகத்திலுள்ள கடினமான வேலையைச் செய்வதிலும் ஓர் வித நல்ல பயிற்சியை அடைதல்—உடம்பை தனக்கு ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளுதல், மனதை அடக்குதல் முதலியவை.

23. பாகக்ஞானம்...ஆத்மாவைக் காப்பாற்றும் பொருட்டும், விருந்தினர் முதலியோரை நன்றாய் ஆதரிக்கும்பொருட்டும் செய்யப்பட்ட அன்னம், (ஸாதம்) பக்ஷணம், ஊருகாய், வத்தல், வடாம், துகையல், கறியமுது முதலிய பாக சாஸ்திரம் கற்றல்.

24. ஆஸவாதிரசனை...மத்யம் என்னும் கள், பானகம் முதலிய தயாரித்தல், அதை உட்கொள்ளும் முறை. அதிகமாய் உபயோகித்தால் உண்டாகும் கெடுதி.

25. ஸ்ரீ சீவாபகர்மா...குதிரை முதலியவைகளுக்குத் தகுந்தபடி தோல் தைத்தல். நானா ஜாதி மிருகங்களில் வயது நிர்ணயம் முதலியன.

26. ஸ்ரீத்ரக்ரீடை...உழுதல், மரமேறுதல், யஜமானன் மனம் போல் நடந்து கொள்ளுதல் காலத்துக்குத் தக்கபடி நடந்து கொள்ளுதல் முதலியன.

27. வீணாதிரசனை...வீணை, தம்புரு, மத்தளம், காஹளம், நாகசுரம் விஷ்ணு பிம்பம், சிவபிம்பம், மணி, முதலிய செய்தல் வார்ப்பித்தல், பலவித பாத்திரம் செய்தல்.

ஒழுக்கம்.

சுயநய விருப்பங்களைப் பூர்த்திசெய்யச் சார்ந்துள்ள ஒருவருக்கு சைதன்ய வாழ்வும் பரித்தியாக வாழ்வும் மிக்க கஷ்டமாகத் தானிருக்கும். அப்படியில்லாதிருந்தால் அதுவே பேரானந்தத்தையும் சாந்தியையும் வருவிப்பதாகும். பரித்தியாகம் செய்வதிலும் கொஞ்சம் உண்மையான சந்தோஷமுண்டு. ஒழி, ஒழி,பந்தாகிதம் செய்திரு. நம்முடைய சார்பாய் கொஞ்சமிருந்தாலும் அவ்வளவு காலமும் நமக்கு சுயேச்சையில்லை. புறச் சார்பை இனிநாம் சார்வதில்லை என்றபொழுதும் நம்மிற்குள்ளேயே ஒவ்வொன்றையும் நாமடையும்பொழுதும் நாமே நம்மைதிருப்தி செய்து கொள்ளும் பொழுதும் மாத்திரமே சுயேச்சை யேற்படுகிறது. இந்திரியங்களின் அனுபவத்தில் என்ன சுகமுள்ளது? அவை மயக்கத்தையுந் துன்பத்தையுந்தானே தருகின்றன. சில சமயங்களில் ஒரு நிமிஷம் இந்திரிய அனுபவம் நம் வாழ் நாள் முற்றும் துன்பத்தைக் கொண்டு வந்தும் சேர்க்கிறதல்லவா ? இப்படியான அற்பசுகங்களால் முடிவரையில் துன்பத்தை மாத்திரம் உண்டுபண்ணிக்கொள்வதில் என்னபிரயோசனம்? நம்வாழ் நாள்முற்றும் போராடி சொற்பமும் சித்ருபதோற்றத்தை அடையாதிருந்தாலுங் கூட இவ்வற்பசுகத்தை எப்பொழுதும் தேடாதிருப்பதே நன்மை.

குறைந்தது தன்னடக்கமே நம்சுவாதீனத்தை நமக்கு சாஸ்திபண்ணுகிறது. இந்தஜீவதிசையில் நாம் கடவுளனுபவத்தை அறிவோமா? இல்லையா என்பதைப்பற்றிய கவலை நமக்கு வேண்டியதில்லை.

" சந்ததமும், வேதமொழி, யாதொன்று பற்றின்
அது தான் வந்து முற்றும், எனலால்,
சகமீதிருந்தாலும் மரணம் உண்டு என்பது
சதாசிட்டர், நினைவது, இல்லை,
சிந்தை அறியார்க்கு இது போதிப்பது அல்ல
செப்பினும், வெகுதர்க்கம் :—

ஆனால் நாம் ஏன் அடிமைகளைப் போல் வசிக்கவேண்டும் என்பதற்கும் கண்மூடித் தனமாய் நம்சுயநய விருப்பங்களைப் பின் பற்றிப் போய், மேலும் மேலும் நம்மை நாமேசுற்றியேன் பந்தித்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு ஒரு காரணமுமிருந்ததில்லை. நெருப்பில் நாம் எண்ணெயைவிடும்போது அது உயரமாய்க் கொழுந்து விட்டெரிவது போல நம்மிந்திரியங்களைத் திருப்திசெய்ய நாம் சாஸ்திரமுயற்சி யெடுக்கும்போது அவை இன்னும் பலமாய் வளருகின்றன. உலகமோ துன்பம் நிறைந்துள்ள தெனத்தெரியும். அப்படியிருக்க அதனால் நாம் ஏன் மறு

படியும் துன்பத்தை வருவித்துக் கொள்ளவேண்டும். கூடாது, எந்தவித்
தாலும் நம்பாட்டையினின்றும் நாம் திரும்பிப் போவதை நினைத்தல்
கூடாது என்ற இந்த விதத் தீர்மானத்தை நாம் அடையவேண்டும். பரித்
தியாகம் என்பதின் பொருள் எப்பொழுதும் திரும்ப எடுத்துக் கொள்ளா
திருக்கும்படியாய் விட்டொழி என்பதே. பலமே அவசியம், அழுத்தமே
அவசியம், பலத்தின் முன் எல்லாம் அடங்கிவிடுகிறது. சுத்தமான நிட்
காமியதவ ஒழுக்கமுடைய ஒருவனுக்கு தேவர்கள் கூடப் பயப்படுகிறார்
கள். ஒழுக்கத்தின் பலமே மிகப்பெரியது.

தைரியமா யிருப்போம், மேலே போவோம் ஒன்றுக்கும் பயப்பட
வேண்டியதில்லை. நாம் உண்மையுடையோம், பரிசுத்தமுடையோம்,
தைரியமுடையோம் என்று சொல் நினை, பழகிக்கொள் பின் எவ்வித
பயத்தினின்றும் நீங்கினவராவோம். சுயநய விருப்பத்திலிருந்து தானே
பயமுண்டாகிறது. ஆகையால் முற்றும் நிராசை யோடிருப்போம். உற்
சாகம், உற்சாகம், உற்சாகம், கொள்வோம் சோம்பேறிகள் உண்மைச்
சித்திபெறல் ஒரு நாளுமில்லை. நாம் கேட்டவை படித்தவைகளிலுள்ள
சாரங்களை யெடுத்துக் கொள்வோம், அவற்றை நம் வாழ்நாளில் அனுப
வித்தறியப் பிரயாசைப் படவேண்டும். உலகமுற்றும் நமக்கு விரோதமா
கும்படி செய்து கொண்டாலும் நம்ஹிருதய மூர்த்திக்குத் தொண்டு
செய்வதிலிருந்து தவறவேகூடாது. நாம் அபஜயப்பட்டு வாழ்வதிலும்
இறப்பதே மேன்மை. நாம் உயிர்வாழும் வரையில் நம்பகைவரோடு
தைரியமாய் சண்டை போடுவோம், நமக்குப் பகைவர் புறம்பிலில்லை.
நமது சித்த விகாரங்கள், விருப்பங்கள் இவைகள் தானே நமக்கு
உண்மை விரோதிகள்; நாம் அவைகளை வெல்வோம். நாம் பந்தரகிதரா
தற்கு தைரியம் பொறுமை இரண்டையுமடைய வேண்டும். உண்மைக்
காக நிற்கமுடியாத வாழ்நாளில் என்ன பிரயோசனம்? தைரியமாயும்,
பயமற்றும் , ஒவ்வொன்றையும் பரிசுத்தமாயும் பார்க்க வேண்டும்.
அடுத்தடுத்து உயிர்க்குப் போராட்ட மிருத்தலால் நாம் களைப்பாறுதலை
இங்கே எதிர்பார்க்க முடியாது. மேலே போவோம். மனத்தளர்ச்சியை
யும் சோம்பலையும் உண்டு பண்ணிக் கொள்ளவேண்டாம். துன்பமடை
தலே நன்மை.

பகவான் கீதையில் என்ன சொல்லுகிறார் என்பதைப்பற்றி ஞாப
கப்படுத்த வேண்டும் "துவக்கத்தில் விஷத்தைப்போலும், முடிவில்
அமுதத்தைப் போலும் உள்ள அந்த சந்தோஷமானது ஆன்மசுத்த அறி
விலிருந்து தோன்றுகிற உத்தம குணங்களாய்க் கூறப்பட்டிருக்கிறது.
ஆனால் "துவக்கத்தில் இன்பமாய் முடிவில் விஷமாய் ஞானேந்திரியங்
களாலும் கன்மேந்திரிய சம்பந்தங்களாலும் உண்டாகிற அந்தச் சந்தோ

ஷமோ நம்சித்த விகாரத்திலிருந்து வருவதாய்ச் சொல்லப்பட்டிருக்கி
றது." நாம் தவறிலிருந்து ஒழுங்கைப் பிரிக்கிறதற்கு நம் பகுத்தறிவின் வல்
லபத்தை உபயோகப் படுத்த வேண்டும். நம்விருப்பங்களால் நம்மை
அடித்துப் போகச் செய்வது சுலபமாகவே யிருக்கிறது; ஆனால் பகுத்த
றிவின் வல்லபத்தைக் கொண்டு புகுவதால் அவைகளைக் கவிழ்த்து விடு
வதே உண்மையான வீரம், உண்மையான தைரியம்.

மனத்தளர்ச்சியே மரணம். என் பழக்கங்கள் எனக்கு அறிவிப்
பது ஊக்கம் ஒன்றே பக்தி, ஊக்கமே உண்மை. நம்மை பலயீனப்
படுத்துகிறவைகள் எதுவுமே பாபமானவைகள். நம்முழுவல்லபத்தைக்
கொண்டு நாம் அதனை விலக்கவேண்டும். நாம் ஒன்றை கற்கும்போது
தவறுகள் செய்கிறோம் நாம் ஒருதரம் அதனைக் கற்றபிறகு, பின் எந்த
மனச்சோம்பலுக்கும் இடங்கொடுப்பதில்லை யென்ற தீர்மானத்தோடு
நாம் வேலை செய்யவேண்டும். இதுவே எல்லா வேலைகளிலும். பெரியது
யோகங்களிலெல்லாம் இதுவே மேலானது. நம் கேவல விருப்பங்களை
ஜெயித்து நமக்கு நாமே எஜமானாகிறவரையில் நாம் களைப்பாறியிருக்க
எதிர்ப்பது எப்படி முடியும்? நம்புலன்கட்கு நாம் . கீழ்ப்படியலாமா?
இல்லை. நாம் அப்படிச் செய்யக் கூடாது. பிரபஞ்ச அனுபவங்களைப்
பின்பற்றி அதன் அனுபவங்கள் கொஞ்சம் அடையும்படி பருவத்தில்
குழந்தைகளாய் இருப்பவர்களை அதில் விட்டு வைப்போம். ஆனால் நாம்
ஒரு பொழுதும் அவைகட்குக் கீழ்ப்படிய வேண்டியதில்லை, நம்மிஷ்
டப்படி நாம் அவைகளை நடத்தவேண்டும். நமக்கு நாமே எஜமானான
பிறகு அதற்கு மேல் பந்தமில்லை, அதற்குமேல் பயமுமில்லை; ஆனால் சாந்
தியும் சந்தோஷமுமே. இப்போது அதிகப் பேச்சில் உள. அதிகப்படிப்
பில்லை, அதிக மதக்கொள்கையில்லை. இனிநாம் ஜீவித்தற்கும் தகுதியு
டையவராவதற்கும் காலம் வந்து கொண்டிருக்கிறது. பிரபஞ்சம் அது
சம்பந்தப்பட்டவரையில் மேலும்! மேலும்! சுருசுருப்பாகவும் இருக்கட்
டும். ஆனால் நாமதைத் திரும்பிக் கூடப் பாராமல் அமைதியாய் மேலே
போவோம்.

எதைப்பற்றியும் நம்மனதிற்கு நாம் தொந்திரவு கொடுக்க அதிகார
மில்லை. விஷயங்கள் தங்களுக்குத் தாங்களே பொறுப்பெற்றுக் கொள்
ளும். பலனைக் கவனியாமல் நாம் வேலை செய்தற்கு மாத்திரமே பாத்தி
யம். வேலை செய்தல் என்பதற்குப் பொருள் நம் ஒழுக்கத்தை மேலாகச்
செய்தல் என்பதே. நம் ஊக்கத்தை வீண் பேச்சுகளில் செலவு செய்யா
மல் நாமதைச் செய்தற்கு முயற்சிப்போம். உத்தம ஆசாரியர்கள் சாதா
ரண வார்த்தைகளின்றி குறிப்பின் வலுவைக் கொண்டே கற்பிக்கிறார்
கள். இப்படியான ஒழுக்கங்களை நாம் கட்டிக் கொள்ளக் கூடுமானால்

பிறருமாத்திரமே பிறருக்கு நன்மை செய்ய பாத்தியங் கிடைக்கும். ஓர் யாசகன் மற்றொரு யாசகனுக்கு உதவி செய்ய முடியாதென்பதை யறிய வேண்டும். கொடுப்பதற்கு என்று முதலில் கொஞ்சம் சேவித்துக் கொள்ள வேண்டும். பின் பிறர்க்கு உதவி செய்ய சக்தியுள்ளவராவோம்.

பயம் மனோசஞ்சலங்களிலிருந்து விடுபட்டு ஓர் இயல்பிலிருந்து வேலை செய்வோம். கடவுள் அவருடைய குழந்தைகளைப் பற்றி கவலையெடுத்துக் கொள்ளுகிறார், நம்முடையவைகளோ செய்தற்கும் இறத்தற்கும் ஆகின்றன. நேரான காரியத்தையே செய்வோம். தைரியம் தருவனவற்றையே செய்வோம். பரிசுத்தமானவைகளையே செய்வோம். உயர்வைத்தருவனவற்றையே செய்வோம். பின் அமைதியாய் இறப்போம். பெரிய விஷயங்களைப்பற்றியே சிக்கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. உலகம் நம்மை அங்கீகரிக்காது விடலாம். உலகம் நமக்கு நம்பிக்கைத்தராமலுமிருக்கலாம். அது காரியமல்ல. நம் ஒழுக்கம் நம்மைச் சந்தோஷமாயும் சுகமாயுஞ் செய்யும்.

கமலத்தன்னை.

நமது பெண்களின் நிலைமை.

(307-வது பக்கத்தொடர்ச்சி.)

சாதாரணமாக நமது பெண்கள் பெறும் படிப்பின் அளவைக் கூறினேன். தனிமரம் தோப்பாகுமா! பசித்தவள் பருக்கை நாலைந்து புசித்துவிட்டால் பசியாறினவளாவளா! அமாவாசை இருட்டில் சில மின்மினிப் பூச்சிகளிருந்துவிட்டால் அந்தகாரம் அகன்றிடுமோ! கொஞ்சம், தமிழ் எழுதப்படிக்கவும் கூட்டல் கழித்தல் என்ற சில கணக்குகளும் தையல் சங்கீதம் முதலியவைகளில் சொற்ப ஞானமும் அடைந்து விடுவதையும் கல்வி என்றழைக்கலாமா? ஆனால் இது தான் நமது பெண்கல்வி. இதற்கு மேல் ஏக நமது பெண்களுக்கு இயலாமலிருக்கிறது. ஏனெனில் அவர்கள் படிப்புப் பருவம் பத்துப் பன்னிரண்டு வயது வரைதான். எழுத்தென்பதே இன்னதென்றறியாத முழுமூடத்துவ நிலமையைப் பார்க்கினும் இந்தக் கல்வியாவது அடைந்திருப்பது உசிதக்குறைவல்லவென்றாலும் இந்த அற்பகல்வி மாத்திரம் போதவே போதாது. இதனால் விளைந்திருக்கிற வேறு சில பயன்களைப்பற்றி ஒரு புத்தகத்தில் எழுதப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்:—

“.........மேற்கூறியாங்கு கல்வி கற்ற காரிகையர் பலரிடத்துச் செருக்கு ஜனித்துவிடுகின்றது. அவர்கள் தாங்கள்தான் அதிசயமாய்க் கற்றவர்களென்றும் தங்களைப் போல் யுக்தி புத்தியுடையார் இருப்பதரிதென்று யெண்ணிக் கொள்ளுகிறார்கள். தங்களைவிட அதிகமாய்க்

கற்றவர்களைக் காணின், அன்னோர் நட்பை இருதய பூர்வகமாய் விரும்புவதில்லை. உண்மையில் அவர்கள் அகத்தில் மற்றோர் தங்களைவிட அதிகமாய்க் கற்றிருக்கிறார்களே என்ற பொறாமையே குடிகொண்டிருக்கும். தங்களைவிடக் குறைந்த கல்வியுடையார்பாலோ, தங்கள் கல்வித்திறத்தைக் காட்டுகிறார்கள். கல்வியின் வாசனையே அறிந்திராத தங்கள் சகோதரிகளை உபேட்சிக்கிறார்கள் ....”

ஆ! எவ்வளவு ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. தற்காலப் பெண்கல்வியின் சில காரியங்கள் திமிர்ந்த கல்வியால் அமைப்பெறும் பெருந்தகைமையும் அறிவு விசாலமும் பத்துப் பன்னிரண்டுவயது குறுகிய படிப்புடையாரைக் கிட்டுமா! இவர்கள் அற்பப்படிப்பு இவர்களுக்கு அளிப்பன, அகந்தை, அற்பப்பேச்சு, அற்பசாகசம், வீண் டாம்பிகம் வீண் சொகுசு முதலிய அற்பத் தன்மைகளே. சி! என்னம்மா! இந்தப் படிப்பும் ஒரு படிப்பாகுமா! இலக்கியத்தின் சுவையைச் சற்று அறிந்து எளிய நடையிலேனுமுள்ள ஒரு நல்ல காவியம் அல்லது வேறுவித இலக்கிய நூலைத் தங்கள் அவகாச நேரங்களில் வாசிக்க உண்மையாக ஆநந்திக்கும் சக்தி இருக்கிறதா நமது படித்த பெண்களுக்கு! அவர்கள் அடைந்துள்ள கல்வி, சாதாரணமாகப் பத்திரிகைகள் வாசிப்பதில் கூட அவர்களுக்கு ஆர்வத்தை எழுப்பவில்லையே. பின்னர் இலக்கியச் சுவையை எப்படி அறிவார்கள்? ஆனால் அவர்களிற் பலர் கம்பன் திருக்குறள் முதலிய விஷயங்களைப்பற்றிப் பிரமாதமாகப் புகழ்ந்து தாங்கள் அவைகளின் பெருமைகளைக் கரைகண்டு விட்டது போலப் பேசுவார்கள். உண்மையில் கம்பராமாயணத்தில் ஒரு செய்யுளையாவது, திருக்குறளில் ஒரு அதிகாரத்தையாவது, அவைகளுக்குத் தெளிவானநடையில் உரையிருப்பினும், வாசித்துணர அவர்களுக்குப் பொறுமை யிராது. எப்படியிருக்கும்! அவைகளின் உருசியை உணர்ந்திருந்தால் வாசித்துணர இன்பமிருக்கும். அவ்வின்பமிருந்தாலல்லவோ வாசித்துணரப் பொறுமை வரும்! உருசியே யில்லாவிட்டால் அந்த இன்பமேது பொறுமை யேது!

கல்வியின் இலக்ஷணந்தான் இவ்வாறு இருக்கிறதா! அடுத்ததாக, சற்று நாஜூக்கான விஷயத்திற் புகுகின்றேன்.

எப்பொழுது தொடங்கியது என்று அறியவே கூடாதவாறு மிக மிகப் பழைய காலத்திலிருந்து மானிடர்களுக்குள் மதம் மதம் என்று வழங்கப்படுகிறதே. இவ்விஷயத்தில் நமது பெண்களுக்குள்ள அறிவையும் ஆர்வத்தையும் சற்று அவிழ்த்துப்பார்ப்போம்.

மாதாவின் வயிற்றிலிருந்து உதிக்கும்பொழுது முழுப்பேதமையோடு உதிக்கின்ற குழந்தை அழுவதற்கும், பால் பருகுவதற்கும், தாய் முகம் பார்த்துச் சிரிப்பதற்கும், குப்புற விழுவதற்கும் ஊர்ந்து விளை

யாடுவதற்கும் தானாகவே தன் சொந்தக் கவனத்தையும் புத்தியையுங் கொண்டு கற்றுக்கொள்ளுகின்றது. அம்மாதிரித் தன்மையதே நமது பெண்கள் பெற்றுள்ள மதஞானம். எழுதப் படிக்கக் கற்பிக்கப்படுவது போல் பிறரால் பிரத்தியேகமாக மதம் போதிக்கப்படுகின்றதா நமது பெண்களுக்கு? இல்லவேயில்லை, கிறிஸ்தவக் குடும்பங்களிலும் பாடசாலைகளிலும் அப்போதனை நிகழ்கின்றதென்பது நிஜமே. இச்சமயம், நாம் பேசுவது அவர்களைப்பற்றியல்ல, ஏனையோரையே.

வீட்டிலேனும் பாடசாலையிலேனும் எங்கேனும் பிரத்தியேகமான மதபோதனையின்றி அநேக வருஷ காலமாக இயங்கி வந்திருக்கிறது நமது பெண் சமூகம். ஆகையால் அதன் மத அறிவு எவ்வளவு இழிந்த நிலைமைக்கு வந்திருக்கவேண்டும்! அதன் மத ஆர்வமும் எவ்வளவு க்ஷீணித்திருக்கவேண்டும்! ஆம், அவ்வாறேதான் இருக்கிறது. இருக்கிற நிலைமையை இருக்கிறவாறு வெண்மையாக எடுத்துக் காட்டுகின்றேன்.

தனியாகப் பிறரிடமிருந்து மதபோதனை பெறாத நமது பெண்ணின் மத அறிவு அவள் வாசிக்கும் புத்தகங்களைப் பொறுத்திருக்கலாம். சாதாரணமாக நமது பெண்கள் வாசிக்கும் வைதிக நூல்கள் இராமாயணம் பாரதம் புராணங்கள் முதலியவைகளே. இவைகளிற் கூடப் பிரியம் மிகக் குறைந்து தற்காலம் நாவல்கள் என்ற கதைகளில் விசேஷ பிரேமை வளர்ந்து வருகிறது. முற்கூறிய வைதிக நூல்களில் தான் என்ன இருக்கின்றன? அநேக அற்புதமான சரித்திரங்கள் இருக்கின்றன. இச்சரித்திரங்களில் ஈஸ்வரபக்தி அதி உருக்கமாகச் சித்திரிக்கப்பட்டிருந்தபோதிலும் அவற்றில் எத்தனையோ தேவதைகள், எத்தனையோ வகை ஆசாரங்கள், எத்தனையோ வகைக் கொள்கைகள் (இக்கொள்கைகளும் ஆசாரங்களும் பல சந்தர்ப்பங்களில் ஒன்றிற்கொன்று முற்றும் முரணாக இருக்கின்றன) கொள்ளை கொள்ளையாயிருக்கின்றன. இவைகளிலிருந்து ஒரு தெளிவான ஒரு திட்டமான மதத்தை ஒவ்வொரு பெண்ணும் தானே அமைத்து அறிந்துகொள்ள இயலாது.

புராணேதிகாசங்களைத் தவிர மத அறிவிற்குக் காரணமாகிய வேறு சாதனங்கள், கோயில்கள் மதாசாரங்கள் பண்டிகைகள் முதலியவைகளாம். கோயில்களில் அநேக தேவதைகளின் விக்கிரகங்களுக்கு, உற்சவங்கள் பண்டிகைகள் முதலிய விசேஷ தினங்களில் சற்று விசேஷமாகவும், மற்றக் காலங்களில் சாதாரணமாகவும் வெறுஞ் சடங்கு ரூபமாகப் பலவித ஆராதனைகள் நிகழ்கின்றன. இவைகளிலிருந்து ஒரு திட்டமான ஒரு தெளிவான மதத்தை ஒவ்வொரு மாதும் தானே அமைத்தறிந்துகொள்ள முடியுமா! இனி, வீட்டில் அனுஷ்டிக்கப்படும் ஆசாரங்க

ளென்ன? அமா வாசை, கிர்த்திகை (கார்த்திகை) முதலிய காலங்களில் வெறுஞ் சடங்காக விரதங்களை அனுஷ்டித்தல், தீபாவளி சங்கராந்தி முதலிய காலங்களில் வெறுஞ் சடங்குகள் புரிவதோடு வெகு சுகமாக உண்டு உடுத்தல், தும்மல் சாஸ்திரம், கொட்டாவி சாஸ்திரம், சகுன சாஸ்திரம், பல்லிசாஸ்திரம், காக்கை சாஸ்திரம், கனவு சாஸ்திரம் முதலியவாறு இகலோக வாழ்க்கைக்கு 'இன்றியமையாததாகக் கருதப்படுகிற ஆயிரத்தெட்டுச் சாஸ்திரங்களை அனுஷ்டித்து இருக்கிற துன்பங்களை இரட்டிப்பாக பெருக்கியும் இல்லாத துன்பங்களை இருக்கிறதாகக் கருதியும் பெரிய அவஸ்தைப்படல், மற்றும் குழந்தை கல்யாணம், குழந்தை தாலியறுத்து மூலையில் வைத்தல்........, முதலிய இவைகளே நமது மதாசாரங்கள். இவைகளிலிருந்து ஒரு திட்டமான ஒரு தெளிவான மதத்தை எவ்வாறு நமது பெண்கள் பெறமுடியும்!

தனியாக மதபோதனை பெறாத நமது தையலர்களுக்கு ஏற்பட்டிருக்கும் மத அறிவுதான் என்ன? அல்லது அவர்கள் அனைவரும் யாதொருவித மத அறிவும் ஆர்வமுமற்ற மண்டூகங்களா? அன்று அன்று. அவ்வளவு அநாகரிக ஸ்திதிக்கு நாம் வரவில்லை. நமது நங்கையர்களுக்கு ஒருவகையான மத அறிவும் ஆர்வமும் இன்னும் சற்று இருக்கின்றன. இராமேசுரம் சென்றால் புத்திரபாக்கிய முதலிய பாக்கியங்களைப் பெறலாம் என்ற துணிபு, விநாயகருக்கு ஒரு அபிஷேகம் செய்வதாகப் பிரார்த்தித்துக்கொண்டால் கைக்கொண்ட காரியம் சித்தியாகும் என்ற ஒரு நம்பிக்கை, விரதங்கள், சிரார்த்தங்கள் முதலியவைகளை அனுஷ்டிக்காவிட்டால் சந்ததி விர்த்தியாகாது என்ற எண்ணம், ஐயனாரப்பனுக்கு ஒரு பூஜை போடாவிட்டால் மாரியம்மனுக்கு ஒரு கோழி பலியிடாவிட்டால் அந்தந்தத் தேவதைகள் நமக்கு நோய் மரணம் முதலியவைகளைக் கொடுக்கும் என்ற பயம் முதலியவைகளில் தான் கிடக்கின்றது நமது பெண்களது சத்தான மத அறிவும் ஆர்வமும். காட்டுமுளி புல்லைப்போல் கவனிப்பாரின்றி, தானே அமைந்துள்ள இந்த மத அறிவும் ஆர்வமும், தமிழ் நாட்டின் சாபமாயேற்பட்ட அற்பச் சுயநலப் பிரேமைக்கு முற்றும் இசைந்து எவ்வளவு தாழ்ந்த தன்மையை அடைந்திருக்கிறது பாருங்கள். ஆனால் இந்த மத அறிவும் ஆர்வமுங்கூட மாதர்சமூகம் 'முழுவதும் நிறைந்திருக்கிறதென்று சொல்லிவிடக்கூடாது. சிலரிடத்து அதுவுமில்லை. கோயிலிலென்ன இருக்கிறது! குளத்திலென்ன இருக்கிறது! வீணாக விரதங்கள் அனுஷ்டித்து உடம்பைக் கெடுத்துக்கொள்வானேன்! நடப்பது நடந்தே தீருமன்றி பிரார்த்தனையினாலென்ன பயன் பூஜையினாலென்ன பயன்! சுவாமி நேரே உதித்துவந்து பேசினாரோ!" என்பதாகிய கொள்

கைகளோடு தாங்கள் நாகரிகத்தில் அபிவிர்த்தியடைந்திருப்பதாக எண்ணிக்கொண்டிருக்கிற நாஸ்திக நங்கையர்கள் நாளடைவில் பெருகிக்கொண்டே வருகிறார்கள்.

இந்த நாஸ்திகப் பெண்களாயினுஞ்சரி, ஏனையோராயினுஞ்சரி, ஒரு விஷயத்தில் மாத்திரம் எல்லோருக்கும் நம்பிக்கையும் பயமுமுண்டு. என்ன விஷயத்தில்? பெண்களுக்குப் பேய்பிடிக்கிறதென்ற கொள்கையில் காட்டேரி, இசக்கி, கறுப்பன் முதலிய அசங்கியப் பெண்களுடைய பிசாசுகள் பெண்களைப் பற்றிக்கொண்டு துன்புறுத்துகின்றன என்ற எண்ணம் நமது சமூக முழுவதும் வியாபித்திருக்கிறது. இவ்வாறு வியாபித்திருப்பதற்கு முக்கிய காரணம் பேயால் பெண்கள் படும் அவஸ்தைகளைக் கண்கூடாகக் காண்பதாம். பேய்களில் வீண் நம்பிக்கை வைத்து நமது ஜனங்கள் கஷ்டப்படுவதைப் பற்றிச் சற்று விரிவாக மற்றொருமுறை கூறலாமென்று நினைக்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லவேண்டியதை மாத்திரம் சொல்லி விடுகிறேன். முற்கூறிய நாஸ்திகப் பெண்களை முழுநாஸ்திகர்களென்றுஞ் சொல்லிவிடக்கூடாது. ஏனெனில் பேய்களில் அவர்கள் நம்பிக்கை வைத்திருப்பதால் ஏன் அந்த நம்பிக்கைவைத் திருக்கிறார்கள்? பிசாசுகளின் சேஷ்டைகளைக் கண்ணாற் காண்கிறார்களாம். ஆனால். என்ன எண்ண மனம் பெரும் பிரமையடையச் செய்யும் எல்லையற்ற கணக்கற்ற புவனாதிகளும் காரியாதிகளும் அதிவிசித்திரமாக இயங்கச்செய்து மானிடர்க்கு இதமளிக்கும் தெய்வத்தின் நிகழ்ச்சிகளை மாத்திரம் அவர்கள் கண்ணாற் காணவில்லை போலும், அவர்கள் அறிவுக் கண்ணும் ஸ்தூல கண்ணும் என்ன கண்ணோ!

இதுகாறும் சொல்லியதைச் சுருக்கமாகத் தொகுத்துச் சில வரிகளில் சொல்லி, மேற்கொண்டு சில குறிப்புரையோடு இந்த வியாசத்தை முடித்து விடுகிறேன்.

பெண்பால், மானிட சமூகத்தில் முக்கிய பகுதியாயிருக்கும் பெண்பால், அஃதாவது சமூகம் நிகழ்கின்ற தன்மைக்குக் காரணமாயிருக்கும் பெண்பால் இந்த நாட்டில் வெறுஞ் சுயநலக் கடலில் ஆழ்ந்து, சமூகத்தின் சந்தேகத்திற்கும் அவநம்பிக்கைக்கும் பாத்திரமாகி அபிவிர்த்தியை அடியோடொழிக்கக் கூடிய கொடுமையான ஆசாரங்களுக்கும் கொள்கைகளுக்கும் உட்பட்டிருக்கின்றாள்.—உண்மையில் சரியானபெண்கல்வியே இங்கே இல்லை. தற்காலம் படிப்பு என்று அழைக்கப்படுகிற பத்துப் பன்னிரண்டு வயது அரைக்காலிலும் அரைக்காற் படிப்புபெண்களுக்கு அகந்தை முதலிய அற்பத் தன்மைகளைத்தான் அளிக்கிறது. திமிர்ந்த கல்வியால் அடையப் பெறும் பெருந்தகைமையும் அறிவு விசாலமும் நமது பெண்களுக்கில்லை.—அன்றியும் தனியாக மதபோதனை பெருக அவர்களுடைய மத அறிவும் மத ஆர்வமும் கவனிப்பாரின்றி தானேயமைந்து மிக்க கேவல நிலைமையையும் நாஸ்திகத் தன்மையையும் அடைந்து விட்டது.

இதுதான் நமது பெண்களின் நிலைமை. சகோதரி சகோதரர்களே! இந்நிலைமையைப்பற்றி ஆலோசித்துப் பாருங்கள் அது எவ்வளவு தாழ்ந்ததாக எவ்வளவு பரிதபிக்கத்தக்கதாக இருக்கிறதென்று உங்கள் நெஞ்சத்தில் தைக்கவில்லையா! அப்படித் தைக்குமாறு, நமது பெண்கள் நிலைமையை உண்மையாகச் சரியாக, உணர்ந்து கொள்வதுதான் அந்நிலைமையைத் திருத்தி உயர்த்துவதற்குரிய முதற்படி. மரக்கிளை பொன்றின் நுனிப்பாகத்தில் நின்று அடிப்பாகத்தைத் தறிக்கும் பாக்கிய சாலி, தான் தறித்துள்ள அபாய நிலைமையை உணர்ந்தால் தானே தன்னைக் காப்பாற்றிக் கொள்ளலாம். மற்றயவாறு அன்னாற்கு என்ன போதித்தும் என்ன பயன்? ஆகையால், மின்னலொளி கண்களிற் பாய்வது போல, நெருப்பின் சூடு சுரீரெனச் சுடுவதுபோல, பனிக்கட்டியின் குளிர்ச்சி ஜில்லெனஸ்பரிச உணர்ச்சியைத் தாக்குவது போல நமது பெண்களின் நிலைமை நமது மனத்தைத் தாக்க, எட்டிக்காய் கசப்பதுபோல் அந்நிலைமையால் நாம் கசப்படையவேண்டும். இதுதான் அபிவிர்த்திக்கு அஸ்திவாரம். இதுதான் மாதர் சம்பந்தமாக நிகழும் ஒரு புதிய கிளர்ச்சி, இந்தப் புதிய கிளர்ச்சி உதித்து நமது சமூக முழுவதும் மெல்ல மெல்லப் பரவி வருகிறது. அதை மேன் மேலும் விரைவாகப் பரவச் செய்யவேண்டும். இந்தப் புதிய கிளர்ச்சியைப் பற்றிப் பேசப் பேச அதற்கு உயிரும் உறுதியும் வளர்கின்றன.

ஆகையால் பத்திரிகைகளில் இதைச்சார்ந்த விஷயங்கள் எவ்வளவு அடிக்கடி பிரசுரமாகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு நலம். அன்றியும் வெறும் பத்திரிகை ஆர்ப்பாட்டம் மாத்திரம் போதாது., வீடுகளிலும், இப்பொழுதும் ஏற்படுகிற இனி ஏற்படவேண்டிய பல பல சங்கங்களிலும் உலாவப் போகுமிடங்களிலும், ரெயில்வண்டி முதலிய பிரயாண வாகனாதிகளிலும் சந்தர்ப்பம் நிகழ்ந்த போதெல்லாம் இதைப்பற்றிய பேச்சு நிகழ வேண்டும். இப்படி நமது பெண்கள் நிலைமையைப் பற்றிய பேச்சு அதிகமாக வழங்க வழங்க அந்த நிலைமையின் தாழ்மையும் அத்தாழ்மைக்குக் காரணமாக நம்மைச் சூழ்ந்து பொதிந்துள்ள ஊழல்களும் தெளிவு தெளிவாகத் தெரியவரும். தெரியத் தெரிய அவ்விழிந்த நிலைமையிலும் ஊழல்களிலும் வெறுப்பு உண்டாகும். பின்னர் அவைகளை இயற்கையாகவே தகர்த்தெறிந்துவிட்டு

நமது மாதர்கள் உன்னதமடைய வழிதேடுமாறுதான் நேரிடும். அந்நேர்ச்சி நிகழ்ந்து கொண்டுதானிருக்கிறது. சந்தேக மில்லை ஆனால் அது ஒரு குழந்தையைப் போலத் தத்தித்தத்தி நடக்கிறது. அதற்கு ஒளியும் உரமும் உற்சாகமும் ஓங்கி நாடு முழுதும் மங்களம் பெருகி மாட்சியடையயாவும் வல்ல கடவுள் திருவருள் புரிக, சுபம். பெண் நல நாடி.

நமது பத்திரிகையில் ஸ்ரீ மதி கமலத்தன்னை யார் எழுதி வரும் விஷயம் பெண்களுக்கு மிகவும் முக்கியமானது. நமது பத்திரிகையில் பெண்களின் நிலைமையைப் பற்றி எழுதிய பெண் நலநாடி" என்பவர் தமது சகோதரிகளின் தற்கால ஸ்திதியைக் கண்டு துக்கிப்பது சகஜமே. நாம் எம்மாலானமட்டும் மேற் கூறிய இருவர்களுடைய சகாயத்தினால் பெண்களுக்காக இன்னும் அதிகமாக உழைத்து வருவோம். அப்படி செய்து வர மற்றவரும் உதவிபுரியமுன் வந்தால் நலமல்லவா?

பத்திராதிபர்.

ராஜபக்தி.

(301-ம் பக்கத்தொடர்ச்சி).

XXII.

எதுகுலன் கொலையாளிகளைக் கொன்று ஒரு சிறுவனைக் காப்பாற்றியது.

ஹம்பைப் பிரியன் மற்றொரு முறை லக்ஷ்மண புரிக்குப் போய் வேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு பாரிஜாதனையும் கண்டு பேசி வரலாமென்று உத்தேசம் பண்ணவே, எதுகுலன் பாப்பையனையும் அழைத்துக் கொண்டு போகவேண்டும் என்றான். பாப்பையன் யோக்கியன் என்று தோன்றிய படியால் எந்தச் சமயத்திலும் அவனை நம்புவதில் தப்பில்லை யென்று இரண்டு சகோதரர்களுக்கும் தெரிந்தது. எதுகுலன் தான் மட்டும் வீட்டில் இருந்துகொண்டு விசாலாக்ஷிக்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொடுப்பதாகச் சொன்னான். இல்லையேல் தோட்டத்து வேலையையாவது பார்ப்பதாக ஒப்புக் கொண்டான்.

அவர்கள் புறப்பட்டுப் போனதும், இரண்டையும் மறந்து ஏதோ யோசனையாய் ஆகாயத்தில் தேரோட்ட ஆரம்பித்து விட்டான், அந்த யோசனையோடேயே தான் வாங்கின கத்தியையும் கொண்டுவந்து அதைத் துடைக்கத் தொடங்கினான். அதைப் பளபள வென்று செய்து முடித்த பின்னும் மனோ ராஜ்யத்துக்கு முடிவு ஏற்படவில்லை. சாப்பாடானதும் தன் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு எவ்வழிச் செல்வதென்று யோசியாமல மனம்போனதிக்கில் செல்பவன் ஆயினான். திக்குதிசை தெரியாமல போய்க்கொண்ட மனோராஜ்யம் செய்த எதுகுலனுக்குப்

பொழுது எவ்வளவாயிற்றென்பதே தெரியவில்லை. ஓரிடத்தில் போனதும் தாழ்ந்த குரலுடன் ஒரு உருமல் கேட்டது, உடனே பக்கத்தில் ஒரு சிறுத்தை இருக்கவேண்டும் என்று தெரிந்து கொண்டான்.

விழித்துக் கொண்டு நாற்புறமும் பார்த்தான். தான் முன் ஒரு பொழுதும் பாராதபாகமாய் இருக்கின்றது. சூரியனும் அஸ்தமிக்கிறான் தங்கவும் இடமில்லை. சிறுத்தை எதிர்த்தால் பார்த்துக் கொள்ளலாமென்று வில்லை நாண் ஏற்றி அம்புகளையும் பரிக்ஷை செய்து விட்டு மறுபடி ஏதோ வழியில் புறப்பட்டான். தான் வந்தவழியே தெரியவில்லை எதுகுலனுக்கு. சூரியன் அஸ்த்த மிக்கவே கிருஷ்ண பக்ஷமாகையால் சந்திரன் இல்லாமல், பக்கத்து மலைகள் கவிழ்ந்திருந்த அந்தப் பள்ளத்தாக்கில் இருள்சீக்கிரமாய்ப் பரவத்தொடங்கிற்று.

"எங்கேபோவது இப்பொழுது" இருட்டே இன்னும் அரைநாழிகையில் எங்கும் மூடிக்கொள்ளும், மேகங்களும் சேருகின்றன. நக்ஷத்திரங்கள் தெரிந்தால் கொஞ்சம் அநுகூலம், கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிஷம் இவை கிழக்கேயிருக்கின்றன இக்காலத்தில். அவற்றைக் கொண்டு கிழக்குமேற்கு தெரிந்து கொள்ளலாம், எவ்வளவு தூரம் நடந்திருக்கிறானோ அந்த எல்லையே தெரியவில்லை. ஒரு காரியம் செய்யவேண்டியது இப்பொழுது, "நேரேகிழக்கே நடப்பேன். எப்படி யிருந்தாலும் வனத்தை விட்டு வெளியேறுவோம்" என்று நக்ஷத்திரங்களின் உதவியால் கிழக்கைநோக்கி வேகமாய் ஓடினான். இரண்டு நாழிகை வழி தூரம் ஓடினதும் மூண்ட இருட்டில் தனக்கு முன்னால் மரங்களுக்கு இடையில் 'முணுக்கு முணுக்கு' என்று வெளிச்சம் தோன்றியது. மினு மினுப் பூச்சியென்று முதலில் எதுகுலன் நினைத்தான். மறுபடியும் கொஞ்சம் தூரம் செல்லும் போது வெளிச்சத்துடன் 'சிக்கு முக்கிக்கல்' கொட்டும் சப்தம் கேட்டது. உடனே யாரோ தீபம் தயார்செய்கிறார்கள் என்று நினைத்து மரங்களின் இடையில் ஒளிந்து சென்றான். முன்னர் ஒரு பெரியமரம் இருக்கவே அதன் பின் நின்று அப்பால் நடக்கும் காரியத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒரு வர்த்தி இரண்டு மூன்று நிமிஷம் பிரகாசித்தவுடன், மண்டியிட்டு ஒருவன் விளக்கேற்றுவதைக் கண்டான். அந்த விளக்கு ஒரு நிமிஷத்தில் மறையவே, அது மூடப்பட்டதென்றும், வேண்டும்போது திறந்து கொள்ளக் கூடியதென்றும், எதுகுலனுக்கு விளங்கிற்று. ஏனெனில் அவ்விதமான விளக்குகள், ஒன்று இரண்டு அமிர்தேசனிடத்திலும், பாரிஜாதனிடத்திலும் முன்னமே பார்த்து இருக்கிறான்.

பிறகு எதுகுலன் அவ்விடமிருந்து செடிமறைவில் தவிழ்ந்து கொண்டும், படுத்துக்கொண்டும், நகர்ந்து கொண்டும் போய் அவர்களுக்கு 30,

40 அடிதூரத்தில் ஒருபுதரில் ஒளிந்து கொண்டான். முன்னமேயே அமிர்தேசனும் பாரிஜாதனும் இத்தகைய மனிதர்களைப் பற்றிச் சொல்லக் கேட்டிருக்கிறான். சேனையை விட்டு வந்த வீரர் பலர் வனத்தில் குடியிருந்து கொண்டு பக்கத்திலிருக்கும் வீடுகளைக் கொள்ளையடித்து வந்தனர். இவர்களும் அம்மாதிரியானவர்களோ, என்ற சந்தேகத்துடன் அவர்கள் சொல்வதைக் கவனித்தான்.

"இன்னும் பொழுதாகல்லே. நீ மூடத்தனமாய் உளராதே அவனுக்கு சாமான் வாங்கிவர ஆள்களும் மத்தவரும். இராத்திரி வேளேலே மாத்ரம் வராங்கோ. அஸ்தமிக்சு 4, 5, நாழிவரை அவர்கள் புறப்படவில்லே."

"யார் அவனுக்கு வேண்டியதெல்லாம் அனுப்புறா."

"லக்ஷ மணபுரிலே நடுவீதிலே இருக்கான் பார்டா செட்டி அவன் பேர் மறந்துடறேனே—"

"சரி சரி!! விட்டுத்தள்ளு, தெரியும்போ ;—எனக்குத்தெரியாதா."

"அந்தச்செட்டியுங் கூட ஒருநாப் போங்கல் வைக்கணுண்டா; என்னசோல்றே.'

"அமா மாமா: அங்கேபோறு ஒன்னெப் பொங்கல்லேக்கா, போய்ப்பாரு :"

"அது கிடக்கட்டும் :' இந்தாளிடத்தே பணம் இருக்கா? தமாஷ் பண்ணராயா?"

"நிச்சயமாயிருக்கு: அன்னிக்கு சாமான் கொண்டுவந்தவனுக்குக் கொடுக்கிறச்சே பாத்தேன். ஒருபை இருக்கு அது ரொம்பத் தங்கக் காசுதான்!! இன்னென்ன !!"

"அவங்களுக்குக் குடுத்தூட்டு எங்கே வச்சான்பையை?

"அதானே பாக்கல்லே!! பணம் வாங்கினவங்கோ திரும்புவாங்கோன்னு பயந்து ஓடிட்டேன்."

"சரி அப்படியானால் எப்படி, உள்ளே பூராது?"

மொதல்லே கதவத் தட்டாது: தறந்தா அசலுமனுஷாலாட்டும் உள்ளே நொழையாது. இல்லாட்டா நீ வீதிலே கதவைத் தட்டிண்டு இரு, நான் பின்னாலே தோட்டத்துக் கதவாலே உள்ளே வறேன். கதவில்லாட்டால் சன்னல்: ஏதோ சிக்கினது: எல்லாம் நல்லாப் பார்த்திருக்கிறேன்."

"எத்தனைபேர் உள்ளே?"

"அவனோடு ஒருபையன் இருக்கான். அவனே லக்ஷ்மணபுரிக்கு அப்பப்போ போறான்."

"நாம் இரண்டுபேர் போதுமா ஆளுக்கா? இன்னும் சகாயம் இருந்தா நல்லதல்லே? அந்த செஞ்சுப் பசங்கோ மொட்டையும் மூக்கனும் இருக்கானே, கூடுமிடத்தில் இருப்பாளே, ஓடிப்போய் பிடிச்சாரட்டுமா? நொடிலே போய்வாரேன் அவாளும் தடிப்பசங்கள். நன்னியுண்டு."

"தடிப்பசங்கோ அது என்னமோ, சரி: நன்னி இல்லே. எல்லாம் தட்டிண்டு போயிடரா!! மிந்தானுத்து வேலேலேதெரில்லே. அரைப்பை கொண்டு வந்தங்கோன்னு சத்தியம் பண்ணறே. நம்மப்போல் யோக்கியாளே போதும்: யுத்த வீரா: சத்தியம் உண்டு. அதுக்கென்று உன்னைக் கூட்டியாந்தேன். உன்னை நம்பலாம் என்னு, மாதலா, என்னென்றே: போது ஆச்சு, என்ன சொல்றே? நாம் அவனு ஒருவனுக்கு இரண்டுபேர்—பையனைக் கணக்குலே வைக்காதே—புறப்படலாமா சொல்லு?" என்று கேட்டான்.

மாதலன் என்று அழைக்கப் பட்டவன் "நீ சொல்றபடி நான் அப்பா: பை என்னமோ இருக்கு, எங்கிறே சண்டை பிடிக்க வேண்டியதுதான் !!"

"ஆமாமா: நான் சொல்லறத்தைக் கேளு. இந்தப் பையிலேபாதி, பொதச்சுவச்ச பணம், இரண்டும் சேத்தி, எனக்கு போருமானது. அதை எடுத்துண்டு நான் மைசூருக்கு ஓடிடரேன்." மாதலன் "எனக்குப் போதாதப்பா: மைசூரும், கிய்சூரும், எனக்கு சரிப்படாது. உசுர் போனாலும், நம்மூர்லேயே ஜோக்காயிருந்து சாகவேணும்; எனக்கு என்னமோ அப்படித்தான் தோணறது—சரி புறப்படு போலாம்" எனப் புறப்பட்டனர்.

எதுகுலனுக்கு இந்தக் கொடும் பாவிகள் கொள்ளையடித்து, கொலை செய்யப் புறப்படுகிறார்கள் என்பது நிச்சயம் ஆயிற்று. தானும் கூடவே புறப்பட்டான், சுமார் 2, 3 நாழிகை வழிதூரம் நடந்தபின் அவர்கள் நின்று விட்டனர். எதுகுலனும் நின்றான். அவர்கள் தங்களுடைய குறுவிற்களையும் அம்புகளையும் சரிசெய்து கொண்டனர். தானும் தனது பெரியவில்லை நாணேற்றி தயாராய் வைத்துக் கொண்டான். மறுபடி வழிநடந்து ஒரு மாந்தோப்பில் புகுந்தனர். எதுகுலனும் விடவில்லை: பின் தொடர்ந்தான் மெதுவாய்.

அத்தோப்பின் நடுவில் 100, 200 அடிச்சதுரத்தில் ஒரு வெட்டவெளிசெய்து இருந்தது. அதன் நடுவில் ஒரு 'ஓட்டுபில்லே' வீடு: அதைச்சுற்றி அடர்ந்த பூந்தோட்டமும் செடி கொடி, புதர் செத்தையும். நீர்

சப்தம்; இருட்டோ பிளந்து கொண்டு போகக் கூடியது போன்றிருந்தது. அவ்விருவரும் நின்றதும், எதுகுலனுக்கும் அவர்களுக்கும் 10 அடி கூடக் கிடையாது. இருவரும் என்னவோ ‘குசுகுசு’ வென்று பேசினார்கள். காற்றினால் தோப்பில் உண்டான சத்தத்தால் அவர்கள் பேசுவது ஒன்றும் எதுகுலனுக்குக் கேட்கவில்லை. மறுபடி ஒரு தடவை நாணைத் தடவிக்கொடுத்து, ஒரு அம்பைக் கையில் எடுத்துக் கொண்டு, இரண்டுகைகளையும் கூப்பித் தலைமேல் வைத்துக் கொண்டு “ஈசா! ஸ்ரீ சைலவாசீ! என்னப்பனே!! இக்கொடியோர் செய்யும் காரியத்தைத் தடுக்க எனக்கு பலம் கொடுப்பாயாக!! நான் இந்தப் பிரயத்தனத்தில் உயிர் இழப்பதாய் இருப்பினும், தர்மம் நடக்கட்டும். தீய செயலைத்தடுக்க எனக்கு உதவி புரியவேண்டும்.” என்று பிரார்த்தித்து, அவர்கள் நகரத்தானும் நகர்ந்தான்.

ஒருவாசல் முன் சென்று மெல்லிய குரலில் “சாமீ! அப்பா!! எளியவன் வழிதப்பிப் போட்டேன். கதவு தொராங்கோ!! கதவு தொராங்கோ!!” என்று கத்தினான். உடனே ஜன்னலின் வழியாய் விளக்கு வெளிச்சம் தெரிந்தது. சிறிது நேரம், மறுபடி பயனில்லாமல் கத்தியபின் திடீர் திடீர் என்று, கதவை உதைக்கவும் உடைக்கவும் தொடங்கினான். இவ்விதம் செய்தால் உள்ளே இருப்பவர் வீதிக்கதவை கவனித்துக் கொண்டு பின்புறத்தைக் காப்பாற்ற மாட்டார்கள் என்பது, அவன் எண்ணம். மற்றவன் நிமிஷத்தில் புறக் கடைப் பக்கம் போய் விட்டான். உடனே எதுகுலனும் அக்கொல்லைப் புறத்துக்கே தானும் பறந்தோடினான். அறைநொடியில் அந்த மனிதன் ஜன்னலைத்திறந்து அதன் முன் வில்லுங் கையுமாய் நின்று கொண்டான். உள்ளே போக அவனுக்கு தைரிய மில்லை போலும். எதுகுலனும் அவனுக்கு 4, 5 அடி தூரத்தில் அவன் பின்னே நின்று கொண்டு தன் அம்பையும் எய்யத்தயாராய் மண்டியிட்டு நின்றான்.

எதுகுலன் இந்த நிலைமையில் நின்ற பொழுது ஐயோ! அப்பா!! அவர்கள் புறவடைப்பக்கம் கூட வந்து விட்டார்களே!!” என்ற சப்தம் கேட்டது. உள்ளே விளக்கு வெளிச்சத்தில் சிலர் நகருவது தெரிந்தது. அதைக் கவனித்து, வெளியே நின்ற பாவி, சன்னலண்டை கையை வைத்துக் கொண்டு, எதிரே அறையில் காணப் பட்ட மனிதன் மேல் ஒரு அம்பு எய்தான். அதற்குள் எதுகுலனும் தன் அம்பை எய்ய அது அப்பாவியின் உடலில் பாய அவன் கீழே விழுந்தான். உடனே இன்னொரு அம்பை எடுத்துக் கொண்டு சன்னலின் வழியாக உள்ளே நுழைவதற்குள், வெளிக்கதவை உடைத்துக் கொண்டு வந்தவன் உள்ளிருப்பவரோடு கத்திச் சண்டைபோடும் சப்தம் கேட்டது. விளக்கு உள்ளே

கொண்டுபோய் விட்டபடியால் ஒன்றும் தெரியவில்லை. நிர்ச்சப்தமாய் இருந்தது. உள்ளே தாழ்ந்த குரலில் அழுகைமட்டும் கேட்டது. உள்ளே நுழையாமல் வீட்டைச் சுற்றிக் கொண்டு வீதிப் புறம் வரவே வாசலில் ஒருவரு மில்லை. அறையின் பக்கத்தில் இரண்டு தேகங்கள் படுத்துக் கிடந்தன. வேகமாய் உள்ளே நுழையவே ஒரு சிறுபையன் அழுது கொண்டிருந்தான். “பயப்படாதே பையா: நான் உனக்கு உதவி செய்ய வந்திருக்கிறேன்.” என்று சொல்லி அவனிடம் இருந்த விளக்கை வாங்கிக் கொண்டு வெளியே தாழ்வாரத்துக்கு வந்தான். கூடவந்த சிறுவன் அறைக்குப் பக்கத்தில் கிடந்த தேகத்தின் மேல் விழுந்து அழத்தொடங்கினான். அந்ததேகத்தை நன்றுப் பரிக்ஷை செய்ய விளக்கைப் பக்கத்தில் கொண்டுவரவே, அவன், பெருமூச்சு விட்டுக் கொண்டும், ஸ்மரணை தப்பியும் விழுந்து கிடந்தான். தன் பக்கத்தில் அழும்பையனைப் பார்த்து “பிள்ளாய்! வீணில் அழாதே! உள்ளே போய்க் கொஞ்சம் ஜலம் கொண்டுவா. நான் காயம் எங்கே, என்று சோதிக்கிறேன்,” என்றான் எதுகுலன்.

பையன் தண்ணீர் கொண்டுவரவே கொஞ்சம் முகத்தில் தெளித்து கொஞ்சம் தாகத்துக்கும் கொடுக்கவே, கண்விழித்து கைஜாடை செய்தான். பேசவோ அவனுக்கு நாவெழ வில்லை, தலையைச் சற்று தூக்கி, தன்னையே காட்டிக்கொண்டு தலையை அசைத்தான். அதாவது, தன் காரியம் ஆய்விட்டது என்றும், இனிப்பிரயோஜனம் இல்லை யென்றும் பொருள் படும்படி அவ்வாறு ஜாடை செய்தான். பிறகு தண்ணீர்ச் சொம்புடன் நிற்கும் பையனைப் பார்த்து அவனைச் சுட்டிக் காட்டி, மிகப்பரிதாபமான முகத்துடன் எதுகுலனைப் பார்த்தான்: உடனே எதுகுலனுக்கு அவன் மனதில் உள்ள எண்ணம் விளங்கிற்று. தன்னை நோக்கி, அப்பிள்ளையைத் தான் காப்பாற்ற வேண்டுமென்று சொல்வதை அறிந்து கொண்டு, எதுகுலன் வெகு ஆதரவோடு “ஐயா! நீர் உம் குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமென்றல்லவா சொல்லுகின்றீர், எனக்குத் தெரிகின்றது. இதோ பஞ்ச பூதசாக்ஷியாய் அவனைக் காப்பாற்றுவேன் என்று உமக்கு வாக்குக் கொடுக்கிறேன்.” என்று அவனுடைய வலதுள்ளங்கையில் தன் கையால் அடித்துக் கொடுத்து “ஐயா! உமது பிள்ளையை என் வீட்டிற்கு அழைத்துப் போய் என்து சகோதரன் போல் வளர்க்கிறேன். நீர் விசனப்பட வேண்டாம்” என்று, அவன் கண்ணில் தாரைதாரையாக வழிந்த கண்ணீரைத் துடைத்தான்.

அப்பொழுது அவன் முகத்தில் கொஞ்சம் சந்தோஷக்குறி தோன்றிற்று. மறுபடி நன்றாய்க் கண்ணை விழித்து எதுகுலனை ஏறிட்டு நோக்கினான்; அவனுடைய யோக்கியதையையும், நடத்தையையும் முகக்

திலிருந்து கண்டறிவான் போன்று!! இரண்டொரு நிமிஷத்தில் அம்ம
னிதன் கண்ணை மூடிவிட்டான்.

"இனி இவர் யமலோகம் சேர்ந்த மாதிரியே: இனிச் செய்வ
தென்ன? முதலில் அந்த இரண்டு கொடும்பாவிகளும் உயிரோடு இருக்கி
றார்களா, என்பதைக் கவனிக்க வேண்டும்." என்று விளக்கெடுத்துக்
கொண்டு பக்கத்தில் இருப்பவனைச் சோதித்தான். அவன் செத்து விறைத்
துப்போய் இருந்தான்; கத்தி ஹிருதயத்தில் நுழைந்திருந்தது. புறவ
டைப் பக்கத்தில் இருப்பவனண்டை போனதும், அவன் "மாதலா!
மாதலா!! கொஞ்சம் ஜலம் கொண்டுவா; எனக்கு உசுர் போவது" என்
றான். எதுகுலன் ஓடிப்போய், கொஞ்சம் ஜலம் கொண்டுவந்து குடிக்கக்
கொடுத்தான். ஜலத்தைக் குடித்தபின் "அப்பா இரத்தப் பிரவாகத்
தைப்பார்! நான் இனிப்பிழைப்பது ஏது!—உனக்கு அந்தப் புளியமரம்
தெரியுமா—புளியமரம்—இடி விழுந்த புளியமரம்—அப்பப்பா!!—அதின்
தென்புறம் பத்தடி தூரத்தில்—என்னுடைய—எல்லா வற்றையும்—எல்
லாப் பணத்தையும்—புதைத்து இருக்கிறேன்—எல்லாத்தையும் எடுத்துக்
கொள்—சுகமாய்ப்பிழை—இன்னும் கொஞ்சம் ஜலம் கொடு—" என்று
ஜலம் குடித்துக்கொண்டே மல்லாந்து படுத்துக் கொண்டு உயிர் விட்
டான்.

இவனும் இறந்தது கண்டு, எதுகுலன், அச்சிறுவனைக் கவனிக்கப்
போனான். அங்கே சென்றதும், சிறுவன் தன்தகப்பன் பிணத்தைக்
கட்டிக்கொண்டு அழுதபடியே மூர்ச்சையாயிருந்தான். அறையில் ஒரு
படுக்கை இருக்கக் கண்டு அதன்மேல் சிறுவனைப் படுக்கவிட்டு, முகத்
தில் ஜலம் தெளித்து, வாயிலினும் கொஞ்சம் நீர் ஊற்றினான். கொஞ்
சம் கொஞ்சமாய்த் தெளிந்து எழுந்த சிறுவன், மறுபடி தன்னைச் சுற்றி
லும் உள்ள விஷயம் இன்னதென்று ஞாபகம் வந்தவுடனே, கூக்குர
லிட்டு அழத்தொடங்கினான். எதுகுலன் இனி உபசாரம் செய்வதில் பய
னில்லை என்றும், ஒரு முறை கெட்டியாய் அழுதபின் தான், ஒருவாறு
துக்கம் தணியுமென்றும் கண்டு, பக்கத்து அறையில் போய்ப் படுத்துக்
கொண்டு, எல்லா சங்கதிகளையும் ஒன்றின் பின் ஒன்றாய் எண்ணி எண்
ணிக் கடைசியில் அயர்ந்து நித்திரை போனான்.

காலையில் சூரிய உதயம் ஆய் 2 நாழிகை ஆய்விட்டது. எதுகுலன்
தூங்கி எழவில்லை. அடுத்த அறையில் தூங்கின சிறுவன் தூங்கி எழுந்த
வுடன் "ஐயோ! ஐயோ! ஐயோ" என்று கதறவே அது சப்தம் கேட்டு
திடுக்கிட்டு எழுந்தான். மெதுவாய் வெளிக்கதவைத் திறந்து கொண்டு
போய், தான் இருக்குமிடத்தை அடையாளம் தெரிந்து கொள்ளலாமோ
வென்று நாற்புறமும் சுற்றிப் பார்த்தான். நாலாபக்கத்திலும் தோப்பும்,

செடியும், புதரும் தவிர, வழியே ஒரு புறத்திலும் காணவில்லை. "இது
எவ்வளவு அநுகூலமான இடம் அப்பா, ஒளிந்துகொள்வதற்கு!! குதி
ரைப் பட்டாளமே மாதக்கணக்காய் வனத்தின் கீழும் மேலும் தேடின
போதிலும், இவ்வொளிவிடத்தைக் கண்டு கொள்ள முடியாதே!!" என்று
ஆச்சரியத்துடன் பிரமித்து நின்றான். புதர்களில் நுழைந்து ராத்திரி
யில் திருடர்களும் தானும் நுழைந்து வந்த வழியைத் தேடிக் கடைசி
யில் கண்டுபிடித்தான். தோப்பைக் கடந்து வெளியேபோனதும் வனாந்
தரத்தின் அடியும் முதலும் தெரியவில்லை. வழியென்ற பேரே ஒரு புற
மும் கிடையாது. சிறிது தூரம் சுற்றியலைந்தான். பிரயோசனப் பட
வில்லை. மறுபடி அவ்வீட்டிற்கே போக எத்தனித்துத் தோப்பில் புகுந்
தான். புகும் போது ஒரு நாய் குலைத்தது. என்னவென்று காணும்
பொருட்டு சற்று நின்றான். ஒரு நிமிஷத்தில், அமீர்தேசனுடைய பூதா
காரமான நாய் ஓடிவந்து தன்காலில் விழுந்து புரண்டு கொடுத்தது.
அதை அணைத்து முத்த மிடுவதற்குள், ஹம்ஸப்பிரியனும் பாப்பைய
னும் அவ்விடம் வந்து சேர்ந்தனர்; அடுத்த நிமிஷத்தில் ஹம்ஸப் பிரியன்
எதுகுலனை மார்போடு அணைத்துக் கொண்டான்.

"ஓ அண்ணா உன்னை இன்று உயிரோடு கண்டேனே, சுவாமி கிரு
பையால்!! அகோ பிலத்திறைவா! சரணம்! சரணம்!!" என்று கண்க
ளில் நீர் ததும்பி, கன்னத்தில் வழிய, கைகூப்பி தேவனைத் தொழுதான்.
"அண்ணா! நேற்றிரவில் உன்னைக் காணாமல் என்ன கஷ்டப் பட்டேன்
தெரியுமா! கடைசியில் பாப்பையன் நமது நாயைக் கொண்டு, மோப்பத்
தால் நீ யிருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமெனவே, உனது
மேல் வேஷ்டியைக் கொடுத்து மோப்பம் காட்டி, அதேமோப்பத்தால் நீ
போனவழியைக்கண்டு பிடிக்கும்படி செய்தான். பிறகு நாய் முன்செல்ல
நாங்கள் கூடவே வந்து கொண்டிருக்கிறோம், வீட்டில் விசாலாக்ஷியும்
அலமேலுவும் மிகவும் விசனப்படுவார்கள்!! என்றான்.

எதுகுலன் பிற்பாடு பாப்பையன் தலையைத் தடவிக் கொடுத்து
"நீ நல்லவன்!! நல்லவேலை செய்தாய்" என்றான். "நமது குடிசைக்கு
எவ்வளவு தூரம் இருக்கும் தம்பி?" "சுமார் 10,12 நாழிகை வழிதூரம்
இருக்கும்." "உனக்குச் சொல்லவேண்டிய விஷயம் எத்தனையோ இருக்
கின்றன. அவற்றை சீக்கிரம் சொல்லவேண்டும்" என்று சில வார்த்
தைகளில் அவர்களுக்கு இனிக் காட்டப்போகிற இடத்தில் நிகழ்ந்த வற்
றைச் சுருக்கமாகச் சொன்னான்.

பிறகு மறுபடி அவர்களைத்தோப்பின் வழியே அழைத்துக் கொண்டு
போனான். அவ்வீட்டில் நுழைந்து அங்கே கொலையுண்டிருக்கின்றவர்
களைப் பார்த்து, ஹம்ஸப்பிரியனும், பாப்பையனும் மனம் இளகி மதி

மயங்கிவிட்டனர். இனிச்செய்யவேண்டிய வேலை என்னவென்று யோசிக்கத்தொடங்கினார்கள்.

கடைசியாக எதுகுலன் செய்த ஏற்பாடு என்னவெனில், "ஹம்ஸப்பிரியன் உடனே போய் அச்சலபாரிஜாதன் மூலமாய் பிரதிநிதிக்கு இச்சமாசாரத்தைச் சொல்லவேண்டியது. பாப்பையன் வீட்டுக்குப் போய் எதுகுலனுடைய க்ஷேமத்தை அலமேலுவுக்கும், விசாலாக்ஷிக்கும் சொல்லவேண்டியது. அதுவேசரியென்று ஹம்ஸப்பிரியனும் பாப்பையனும் சம்மதித்தனர்.

"இன்னுமொன்று இந்தப்பையனை என்ன செய்யலாம். இங்கேயே விட்டுப்போவது சரியல்ல. கூட்டிக்கொண்டு போவதென்றால் நடக்க மாட்டான். எல்லாம் உன்னுடைய இஷ்டத்தைப் பொருத்தது. நீ லக்ஷ்மணபுரிக்கு நடந்துபோவதாய் இருந்தால் பாப்பையன் குதிரையையும் வண்டியையும் இங்கு ஓட்டிக்கொண்டுவரலாம். நீ குதிரைமீது போவதாய் இருந்தால்—" என்பதற்குள், ஹம்ஸப்பிரியன் 'நடந்து போவதுமேல் என்று எனக்குத்தோன்றுகிறது. அண்ணா! ஏனெனில் குதிரையும் வண்டியும் இங்கு கொண்டுவந்து இப்பிள்ளையையும் இவன் சொத்தையும் கொண்டுபோக உங்களுக்கு சாவகாசம் இருக்கும். இவன் தகப்பனார் இராஜவிசுவாஸியாய்த்தான் இருந்து இருக்கவேண்டும். அது பற்றி இவன் சொத்தை இராஜத்துரோஹிக் கழுகுகள் வாயில் போட்டுக் கொண்டுபோவதற்குமுன் வேண்டிய பத்திரம் செய்துகொண்டுவர உனக்குப்பொழுது வேண்டும் அல்லவா?" என்றான்.

"நீ சொல்வதில் தப்பேயில்லை. அப்படியே செய் தம்பீ" என்றான். ஹம்ஸப்பிரியனும் பாப்பையனும் புறப்படவே எதுகுலன், அறையுள் தூங்கும் சிறுவனை எழுப்பப்போனான்.

"அப்பா!! இவ்வுலகில் உன்னையும் இழந்தேனே!! இனி எனக்கு என்னகதி? நீர் என்ன செய்யப்போகிறீர் ஐயா என்னை?" என்று அழுதான் அப்பிள்ளை.

"குழந்தாய்! உன் தகப்பனாரிடத்தில், உன்னை என் தம்பியைப் போல் வளர்ப்பதாக வாக்கு அளித்து இருக்கிறேன்; நீ பயப்படாதே. உன்னை நான் அழைத்துச்செல்லுகிறேன்,—உன் தகப்பனார் பேரென்ன? அவர் ஏன் இந்த வனத்தில் குடியிருக்க வேண்டியிருந்ததென்று வது, உனக்கு இஷ்டமில்லையேல், சொல்லவேண்டியதில்லை—ஆனால் எவ்வளவு நாளாய் நீங்கள் இவ்விடம் குடியிருக்கிறீர்கள் என்பதை மட்டும், சொல்லு, அப்பா" என்று கேட்டான்.

"ஒரு வருஷத்துமேல் ஆயிற்று."

"இது யார் வீடு"—"இது என் தகப்பனார் வாங்கியது. இவ்விடத்தில் ஒருவரும் தன்னைக்கண்டு பிடிக்கமாட்டார்கள் என்றும், மறுபடி விஜ்ஜலனுக்குக் காட்டிக்கொடுக்கமாட்டார்கள் என்றும், இங்கே ஒளிந்து கொண்டார். கொண்டாநகர் யுத்தத்தில் அரசனுடன் சிறைப்பட்டவர்களில், ஒருவன் என் தகப்பன் தப்பிப்பிழைத்து இங்கு ஓடி வந்து விட்டார்"!

"ஓகோ! ஆனால் அவர் இராஜவிசுவாசி!! அல்லவா," என்றான் எதுகுலன்.

'ஆம்! ஆம்!! அதுவே அவர்மேல் ஏற்பட்ட குற்றம்" என்றான் அச்சிறுவன்.

"ஆனால் இன்னும் விசேஷமாயிற்று பயப்படாதே. நாங்களும், உன் தகப்பன் மாதிரியே, இராஜவிசுவாசிகள்; நீ எங்களை நம்பலாம், ஆக்ஷேபணையில்லை," என்றான்.

வெள்ளைப் பூனை

(312-ம் பக்கத் தொடர்ச்சி.)

மூன்று சகோதரரும் அரசன் இவ்விதம் சொல்லியதை விரும்பவில்லை. என்ன நமது தகப்பனார் ஆகாத காரியத்தைச் செய்யும்படி சொல்லுகிறாரே என்றார்கள். ஆயினும் தகப்பனார் வார்த்தையை மீறி நடப்பது தப்பென்பதை எண்ணி மூவரும் அவ்விதமே செய்வதாக ஒத்துக்கொண்டார்கள்.

முன்போலவே மூவரும் பிரயாணம் செய்ய புறப்பட்டார்கள். இளையவன் வெள்ளைப் பூனை யிருக்கும் அரண்மனைக்கு நேராகப் போனான்.

வழக்கம்போல் வெள்ளைப் பூனை ராஜ குமாரனுக்கு பற்பல வேடிக்கைகளைச் செய்துகொண்டு அவனுடன் தன் காலத்தைக்கழித்து வந்தது. ராஜ குமாரனும் சந்தோஷமாக ஒரு வருஷம் வரையில் இவ்விடத்திலிருந்தான். கடைசியாக வருஷ முடிவு வந்தது. இன்னும் ஒரு நாள் தான் இருக்கிறதே என்று மனக்கலக்கத்துடன் நினைத்தான்.

வெள்ளைப் பூனை வந்ததும், "வெள்ளைப் பூனையே! இன்னும் ஒரு தினம் தானிருக்கிறது. அதிக சௌந்தரியமுள்ள ராஜ கன்னிகையை நீ தான் தேடிக்கொடுக்கவேண்டும்," என்று ராஜ குமாரன் சொன்னான்.

"ராஜ குமார! இப்பூவுலகில் சிறந்த ரூபலாவண்ணியமுள்ள பெண்மணியைப் பெறவேண்டியது உனது பொறுப்பே. என் தலையையும்

வாலேயும் சேதித்துவிடு. பின்பு அவைகளை நெருப்பில் எறிந்துவிடு,'' என்று வெள்ளைப் பூனை சொல்லிற்று.

"ஐயோ! உன் தலையையும், வாலையும் சேதிப்பதா? வெகு நன்றாயிருக்கிறது! உனக்கு அவ்விதம் தீங்கு செய்வேனா? அப்படி செய்ய எனக்கு மனம் வருமா? பிரியமான பூனையே! உண்மையாகவே நீ என்னுடன் கேலி பண்ணுவதாகத் தோன்றுகிறது. இது நியாயமா என்று ராஜகுமாரன் பதிலுரைத்தான். 'நான் பரிகாசம் பண்ணவில்லை எனது ப்ரியமுள்ள ராஜகுமாரனே! நீ என்னிடத்தில் அதிக பிரியமாயிருக்கிறாயென்பது எனக்கு நன்றாய்த்தெரியும். ஆயினும் நான் கோரும் வண்ணம் நீ செய்யவேண்டும்,'' என்று வெள்ளைப்பூனை சொல்லிற்று.

ராஜகுமாரனுக்கு இன்னது செய்கிறதென்று தெரியவில்லை. கண்ணீர் பெருகி இரு கன்னங்களிலும் வழிந்து ஓடிற்று, மிக்க பயத்துடன் கத்தியை எடுத்தான். கைநடுங்கிற்று. ஐயோ! இவ்வித பயங்கரமான வேலையைச் செய்வதற்காக இங்கு வந்தேன் என்று மனவருத்தத்துடன் உரக்கச் சொன்னான்.

பூனை! "ராஜகுமாரா! அழகுள்ள பெண்மணி வேண்டுமானல் நான் சொல்லியவண்ணம் சிறிதும் பயமின்றி உடனே செய்,'' என்றது.

ராஜகுமாரன் மனோதைரியத்துடன் முகத்தைவேறுபக்கம் திருப்பி வைத்துக்கொண்டு அதன் தலையையும் வாலையும் வெட்டி அவைகளை நெருப்பில் போட்டான்.

உடனே ஒரு அழகுள்ள பெண்மணி இவன் முன் நின்றாள். தக்ஷணமே அவ்வரண்மனையிலுள்ள பூனைகளெல்லாம் உருவமாறி விட்டன. அணியணியாக வேலைக்காரர்கள் அவளிடத்திற்கு வந்தார்கள், போர்வீரர்கள் அரண்மனையின் வெளிப்பக்கத்தில் தோன்றினார்கள்.

ராஜகுமாரன் இதென்ன ஆச்சர்யம்! பூனை ஒரு அழகுள்ள பெண்மணி ஆய்விட்டதே என்று திகைத்து நின்றான்.

ராஜகுமாரத்தி 'எனது பிரியமுள்ள ராஜகுமாரனே! நான் பூனையல்ல. கீர்த்தி பெற்ற ராஜாவின் புத்திரி. என் தாயார் பிரயாணம் செய்வதில் மிகவும் பிரியமாயிருந்தாள். ஒரு சமயம் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப்போய்க் கொண்டிருக்கும் பொழுது ஒரு காட்டில் ஒரு அழகான அரண்மனையைக் கண்டாள், அதில் ஒரு ரமணீயமான தோட்டமிருந்தது. அதில் பற்பல பழவகைகளிருந்தன.

அங்குள்ள பழங்கள் வெகு நேர்த்தியாயிருந்தன. என் தாயார் அப்பழங்களைக் கண்டவுடன் அவைகளைப் புசிக்க வேண்டுமென்று விரும்பினாள். அத்தோட்டத்தைச் சுற்றி பெரிய மதிற்கட்டப்பட்டிருந்தது. என் தாயார் வேலைக்காரனை அவ்விடத்திற்கு அனுப்ப முடியவில்லை. அங்கு யாராவது இருக்கிறார்களாவென்று பார்த்தாள். ஒருவரும் என் தாயாருக்குத் தென்படவில்லை. ஐயோ அப்பழங்களைப் புசிக்க எனக்கு பாக்கியமில்லையேயென்று வருந்தினாள். இப்படி விசனப்பட்டு வந்தமையால் மனோ வியாதி உண்டாயிற்று. இவள் வியாதியால் பீடிக்கப்பட்டு படுக்கையில் படுத்திருந்தாள். இப்பழங்களைப் புசிக்கவேண்டுமென்ற ஞாபகமே இவள் மனதில் குடிகொண்டிருந்தது. ஒருநாள் இரவு இவள் நித்திரை செய்யும் பொழுது மோகினி இவளிடத்திற்கு வந்து இவளைத் தூக்கத்தினின்று எழுப்பி "நீ எங்களது அருமையான பழங்களைப் புசிக்க விரும்புவதைப்பற்றி நானும் எனது சகோதரிகளும் மிகவும் கோபமாயிருக்கிறோம். நீயோ அக்காரணத்தால் தான் வியாதியால் வருந்துகிறாய். ஆயினும் உனது வியாதியை நீக்கி விடுகிறோம், நீ உயிர் பிழைப்பாய், ஆனால் நீ ஒரு பிரதிக்ஞை செய்யவேண்டும். உனக்குத் தேவையான பழங்களை நீ எடுத்துக் கொண்டு போகலாம். அவைகள் வெகுநாள் வரையில் கெடாமலிருக்கும், உனக்குப் பிறக்கும் முதல் குழந்தையை எங்களுக்கு கொடுக்கவேண்டும்'' என்றது.

மோகினியின் உத்திரவுப்படி என் தாயார் அத்தோட்டத்திற்குள் சென்று தன்னால் புசிக்கக்கூடிய பழங்களைப் புசித்தாள். பின்பு தனக்கு வேண்டிய பழங்களையும் வீட்டிற்கு எடுத்துக் கொண்டு போனாள்.

சிறிது காலஞ்சென்றபின் நான் பிறந்தேன், மோகினிகளை ஏமாற்றும் பொருட்டு என் தாய் தந்தையர்கள் அரண்மனையிலுள்ள ஒரு பெரிய கோபுரத்தில் என்னை வைத்து வளர்த்தி வந்தார்கள். இச்சங்கதி மோகினிகளுக்குத் தெரிந்தவுடன் குக்குடசற்பத்தை என் தகப்பனாருடைய ராஜ்யத்திற்கு அனுப்பிற்று. அதைப்பார்த்த பொழுது யாவருக்கும் பயம் உண்டானது. அதன் சுவாசத்தால் அநேகர் மடிந்தார்கள். அதன் சக்தியால் தானியம் விளையவில்லை. பஞ்சம் உண்டானது. பஞ்சத்தால் ஜனங்கள் மடிந்து கொண்டிருந்தார்கள்.

எனது பெற்றோர்கள் என்னை மோகினிகள் வசம் கொடுப்பதே நலமெனத் தீர்மானித்து என்னை காட்டிலுள்ள அரண்மனைக்கு எடுத்துச் சென்றார்கள். இச்சங்கதியை யறிந்த மோகினிகள் முகமலர்ச்சியுடன் என்னை ஏற்றுக்கொண்டு மிகவும் பிரியமாய் என்னை வளர்த்துவந்தார்கள்.

பறவை நாகத்தை அந்த நிமிஷத்திலேயே மோகினிகள் என் தகப்பனாரது ராஜ்யத்திலிருந்து திரும்பி வரும்படி உத்திரவிட்டார்கள்.

பறவை நாகம்சென்றதும் ராஜ்யம் முன்போல் செழிப்படைந்தது, ஜனங்கள் பயமின்றி சுகமாக வாழ்ந்து வந்தார்கள்.

நானோ இந்த அரண்மனையில் தனிமையாக விருந்தேன். மோகினிகள் தான் எனக்குத்துணை. இப்படியிருக்கையில் ஒருநாள் ஒரு யௌ

வன புருஷன் இவ்வரண்மனைக்குச் சமீபத்தில் நிற்பதைக் கண்டேன். எனக்கு அப்பொழுது உண்டான சந்தோஷத்திற்களவில்லை. ஏனெனில் இது வரையிலும் ஒரு மனிதனையாவது ஸ்திரீயையாவது நான் பார்க்க வில்லை. அம்மனிதனைக் கண்டவுடன் அவனுடன் தப்பித்துக்கொண்டு போக எண்ணி அம்மனிதனைக் கூப்பிட்டு எனக்கு உதவி புரியும்படி அவனைக் கெஞ்சி கேட்டுக் கொண்டேன். அம்மனிதன் மகிழ்ச்சியுடன் சம்மதித்தான். நான் உடனே நூல் ஏணியைத் தயார் செய்து தோட்டத்திலுள்ள சுவற்றைத் தாண்ட ஏற்பாடு செய்தேன். ஏணியினின்று நான் கீழிறங்கும் சமயத்தில் ஒரு மோகினி என்னைப் பார்த்தது. அது அச்சமயம் பறவை நாகத்தின் மேல் ஏறிவந்தது. என்னைக்கண்டு மிகவும் கோபங்கொண்டு என்னை வெள்ளைப்பூனையாகச் செய்தது. அந்த மனிதனை நீ இங்கு வந்தது பிசகென்று கடிந்து சொல்லிற்று. நீ உடனே ஓடிப்போ, இல்லாவிடின் உன் உயிர்போய் விடிமென்றது. அவன் ஓடிப் போய் விட்டான்.

அந்த மோகினி என்னை இந்த அரண்மனையில் வைத்தது. இது என் தகப்பனாருக்குச் சொந்தமானது. இதிலிருந்த வேலைக்காரர்களை யெல்லாம் மோகினி தனது மாயாசக்தியால் பூனைகளாகச் செய்தது. எனக்கு உதவி செய்ய பன்னிரண்டு கைகளையும் வைத்தது. மேலும் ‘முதலில் நீ பார்த்தமனிதன் இங்கு வருவான். அவன் ராஜபுத்திரன். அவன் உன் தலையையும், வாலையும் துண்டித்து நெருப்பில் போட்டால் தான் நீ ஸ்திரீ உருவத்தை அடைவாய் இல்லாவிடின் அடையமாட்டாய் அவன் உன்னை மணந்துசுகமாய் வெகுகாலம் ஜீவித்திருப்பான்,’’ என்றது.

ராஜகுமாரனே! நீ தான் முன் வந்து எனக்கு உபகாரம் செய்யத் தயாராயிருந்த மனிதன். உமக்கு அநேக வந்தனம் என்றாள். பின்பு புசிக்க இருவரும் உட்சென்று அறுசுவையோடு வேலைக்காரர்கள் சமையல் செய்திருந்த வைகளைப்புசித்துவிட்டு, தங்களுக்கு வேண்டிய நகைகள், பொன் வைடூரியம் ரத்தினம் முதலியவைகளை எடுத்துக்கொண்டு பொன்ரதத்தில் ஏறினார்கள். அந்த ரதமுழுவதும் விலையுயர்ந்த வைரக்கல், ரத்தினம், புஷ்பராகம், பச்சை முதலியவைகளால்இழைக்கப் பட்டிருந்தன. அதை பன்னிரண்டு வெள்ளைக் குதிரைகள்இழுக்கத் தயாராயிருந்தன. இவைகள் இவர்களுக்கு மோகினியின் கிருபையால் கிடைத்தன. ராஜகுமாரன் ராஜகுமாரியுடன் அத்திவ்ய ரதத்தில் ஏறி தன் அரண்மனைக்குப் போனான். வேலைக்காரர்களும் ராணுவ உடுப்புத் தரித்த ஆயிரம் போர் வீரர்களும் ஜயபேரிகையுடன் பின் தொடர்ந்தார்கள்.

அதே சமயத்தில் இவனுடைய மூத்தசோதரரிருவரும் இராஜ குலத்துப் பெண்மணிகளுடன் வந்து சேர்ந்தார்கள்.

இவர்கள் தகப்பனார் இவர்கள் செய்த அற்புத காரியங்களைக் கண்டு களித்தார். ஆனால் தனது ராஜ்யத்தை ஒருவருக்கும் கொடுக்க சிறிதும் இஷ்டப்படவில்லை. வேறு வழி ஏதாவதொன்றுளதாவென்பதை யோசித்தார்.

இதற்குள் வெள்ளைப் பூனையாயிருந்த ராஜகுமாரத்தி ராஜாவைப் பார்த்து, மகாராஜாவே! தாங்கள் தங்களது சிம்மாசனத்தை ஒருவருக்கும் கொடுக்கவேண்டாம். கொடுக்கவேண்டுமே என்று தாங்கள் கவலைப்படவேண்டாம். எனது பிதாவின் விசலாமான ஆறு நாடுகள்

இருக்கின்றன. அவைகளுக்கிருந்த சாபம் நீங்கிவிட்டது. அவைகள் எனக்குச் சொந்தம். தங்களுடைய மூத்தபுத்திரர்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாடு கொடுக்க எனக்கு உத்திரவு அளிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். இளையகுமாரரும் நானும் மீதியுள்ள நாலு நாடுகளை வைத்துக்கொள்ளுகிறோம்,’’ என்றாள்.

ராஜகுமாரி உதாரகுணத்துடன் சொல்லியதை யாவரும் கேட்டு சந்தோஷப்பட்டார்கள். ராஜனும் மனமகிழ்ந்து அவ்விதமே செய் அம்மா என்றான்.

மறுநாள் மூன்று குமாரர்களுக்கும் மூன்று ராஜபுத்திரிகளுக்கும் விவாகம் மிக்க சிறப்பாக நடந்தது. பூனையாயிருந்த ராஜகுமாரி தனது கணவருடன் தனக்கு மீதியாயுள்ள நாலு நாடுகளையும் பார்த்துவிட்டு ஒரு நாட்டின் முக்கியப்பட்டணமாகிய நாகபுரத்திலுள்ள அரண்மனைக்குப் போனாள். இளைய ராஜகுமாரன் அந்த நாலு நாடுகளையும் நீதிதவறாமல் அரசுபுரிந்துவந்தான். ராஜகுமாரி தர்மம் செய்துகொண்டும், கடவுளை ஸ்துதிசெய்துகொண்டும் தன் கணவனுடன் சுகமாக வாழ்ந்து வந்தாள்.

முற்றிற்று.

சமாச்சாரக் குறிப்பு.

திருவனந்தபுரம் மகாராஜாவுக்கு ஷஷ்டி பூர்த்தி சாந்தி இம்மாதம் 24உ வெகு விமரிசையாக நடைபெற்றதாம். மகாராஜா அவர்கள் தமது பிரஜைகளிடத்தில் அதிக விசுவாசமாகவேயிருந்து வருகிறார். ஜனங்களும் அவரிடத்தில் அதிக ராஜ விசுவாசமாகவேயிருந்து வருகிறார்கள். மகாராஜா அவர்கள், கல்வி, வியவசாயம், வைத்தியம் கைத்தொழில் முதலியவைகளை விருத்தி செய்து வருவதும் யாவருக்கும் தெரியும். தெய்வ பக்தியுமுடையவர், இம்மஹாராஜா சுகஜீவியாய் வெகுகாலம் தமது ராஜ்யத்தை ஆண்டு வருமாறு ஈசன் அருள் புரிவாராக.

இந்திய மாதர்கள் இப்பொழுது பக்தி, படிப்பு முதலிய விஷயங்களில் கவனம் செலுத்தி வருகிறார்கள், இவர்கள் தங்களுக்கு அறிவு புகட்டக் கூடிய புத்தகங்களையும், பக்தி உண்டாகக்கூடிய புத்தகங்களையும் படித்து வருவதுடன் தங்கள் சகோதரிகளுக்கு அப்படி செய்யும்படி சொல்லி வரவேண்டும், சிறு பெண்மணிகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பியும் வரவேண்டும், பக்தி நிறைந்த் இந்திய மாதர்கள் செய்து வந்த பிரார்த்தனை வீண்போகவில்லை. இதைக் குறித்து கவர்ன்மெண்டாருக்கு இந்தியமாதர்களுக்குப் பதிலாக நாம் மனப்பூர்ண வந்தனமளிக்கின்றோம். ஸ்ரீ அனிபெஸண்ட் அம்மையாரை கவர்ன்மெண்டார் மூன்று மாதகாலமாக பந்தோபஸ்தில் வைத்திருந்தது நமது நேயர்களுக்குத் தெரியும். அம்மாது சிரோன்மணியார் பந்தோபஸ்திலிருந்து நீக்கிவிடப்பட்டார்கள்.

உலகத்திலுள்ள புஸ்தகங்களில் பெரியது லண்டன் மாநகரத்திலுள்ள ப்ரிடிஷ் மியூசியத்திலிருக்கிறதாம், அதில் சிறிய டச்சுபடங்களிருக்கின்றனவாம், இது வெகு நன்றாக பைண்ட் செய்யப்பட்டிருக்கிறதாம், 7 அடி நிகளமுள்ளது. 800 பவுண்ட் நிறையுள்ளது, இஸ்

சார்லஸ் என்பவர் ஹாலண்டை விட்டு நீங்கு முன் 1600ம் வருஷத்தில் இப்புத்தகம் அவருக்கு இனாமாக அளிக்கப்பட்டதாம்.

சென்னை ஸ்கூல் இன்ஸ்பெக்ட்ரேஸ் ஸ்தானம்.—மிஸ் அலைப்ஸ் ஸொர்ஜியண்ட் சென்னையில் ஸ்கூல் இன்ஸ்பெக்ட்ரெஸ்ஸாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஒரு சிறிய ஸ்திரீ பட்டதாரி.—சென்னைக் கவர்ன்மெண்டார், மிஸ் தொஸா ஜோஸப் பி. ஏ. (ஆனர்ஸ்) என்பவரை 200 ரூபாய் சம்பளத்திற்கு வேலையில் அமர்த்திக் கொள்ளச் சம்மதித்துவிட்டார்கள். அவருக்கு வசிக்க வாடகையில்லாமல், வசதியான இடமும் கொடுக்கப்படும். அவர் வேலைபார்க்க, ஆலப்பிழை என்னுமிடத்தை விட்டுச் சீக்கிரம் புறப்படுவாரென்று 'கொச்சின் ஆர்கஸ் பத்திரிகை' கூறுகின்றது.

ருஷ்யாவில் மதுபானம் தடைசெய்யப்பட்டது. — ஏற்கெனவே ருஷிய கவர்ன்மெண்டார் செய்த உத்தரவை யனுசரித்து, தற்போதைய கவர்ன்மெண்டில் பிரதம மந்திரியான மிஸ்டர் க்ரென்ஸ்கி புதிய உத்தரவு ஒன்றை பிறப்பித்திருக்கின்றார். ருஷ்யாவிலுள்ள சாராய உற்பத்திச் சாலைகளில் இனிமேல் யாரும் சாராயம் காய்ச்சக்கூடாதென்றும் அத்தொழிற்சாலைகளில் காடியும் மயக்கந்தராத இதர பானங்களும் உற்பத்தி செயயப்படவேண்டுமென்றும் உத்தரவு செய்திருக்கின்றார்.

ஒரு அதிசய சிகிச்சை.—வெண்குட்டநோய் மருந்தினால் தீருகிறதில்லையென்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் தம்புசெட்டித் தெருவிலிருக்கும் டாக்டர் ஜகதீசய்யர், விரிஞ்சிபுரம் நடேசன் என்ற பையனுக்கிருந்த அந்த வியாதியை சொஸ்தப்படுத்தினதற்காக அப்பையனுடைய தகப்பனார் சுப்பிரமண்ய குருக்கள், ஒரு தங்கமெடலும் தங்கச் சங்கிலியும் டாக்டருக்குப் ப்ரிசளித்ததாகத் தெரிகிறது.

மந்திரவாதிகள் தண்டிக்கப்பட்டனர்.—தென்னார்காடு ஜில்லாவில் சிதம்பரத்திற்குச் சமீபத்தில் பட்டுகுருக்கள் என்கிற ஒரு மந்திரவாதி பொன்னுசாமி பிள்ளை என்பவனை சிஷ்யனாய் வைத்துக்கொண்டு ஒரு பிராம்மணப் பையனுக்கு பாலில் மூலிகை கொஞ்சம் கலந்து கொடுத்து அதனால் பையன் மூர்ச்சிதனாய் கீழேவிழுந்திருக்கும் சமயத்தில் அவன் அணிந்துகொண்டிருந்த ஆபரணங்களைத் திருடிக்கொண்டு பிறகு அவனையும் ஒரு பாழுங்கிணற்றில் தள்ளிவிட்டுப் போய்விட்டாராம். சில தினங்களுக்கு முன் அப்பீல் கேஸ் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ அய்யர், மிஸ்டர் ஜஸ்டிஸ் பிலிப்ஸ் இவர்கள்முன் விசாரணை செய்யப்பட்டு இரண்டு ஜட்ஜிகளுக்குள் தண்டனை விஷயத்தைப் பற்றி பின்னபிப்பிராயமுண்டானபடியால் கேஸ் மூன்றாவது ஜட்ஜ் முன் விசாரணைக்குப் போடப்பட்டது. கேஸ் சென்ற வாரத்தில் மூன்றாவது ஜட்ஜ் மிஸ்டர் ஸ்பென்ஸர் முன் வாதிக்கப்பட்டு இம்மாதம் 6உ காலையில் ஜட்ஜ் தீர்ப்புச் சொன்னார். முதல் எதிரியாகிய பட்டு குருக்களுக்குப் பத்து வருஷம் கடுங்காவல் தண்டனையைப் பற்றியும், இரண்டாவது எதிரிக்கு ஐந்து வருஷம் கடுங்காவல் தண்டனை விதிப்பதைப்பற்றியும் மிஸடர் ஜஸ்டிஸ்

ஸ்பென்ஸர், மிஸ்டர் ஜஸ்டிஸ் பிலிப்ஸுடன் ஒற்றுமைப்பட்டு தண்டனையை காயப்படுத்திவிட்டார். ஆகையால் தண்டனையை மூன்று வருஷமாய் மாற்றவேண்டுமென்று தனியாய் அபிப்பிராயப்பட்ட மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ அய்யருடைய தீர்ப்பு ரத்து செய்யப்பட்டது. ஆகையால் இந்திய மாதர்கள் மந்திரவாதிகளென்று போலிவேஷம் தரித்துத்திரியும் துஷ்டர்களின் வார்த்தைகளைக்கேட்டு சிறிதும் மயக்கம் கொள்ளக்கூடாது, அவர்கள் புருஷர்களில்லாத சமயத்தில் வீட்டிற்குவந்தால் அவர்களை தூரத்திவிடவேண்டும். அவர்களுடன் முகம் கொடுத்து பேசவேகூடாது.

ப்ராம்மணருக்கு ஒரு செட்டிபெண் மனைவியானது.—குலங் கோத்ரம் விசாரிக்காமல் தரகர்களைக் கொண்டு விவாகத்துக்கு பெண் நிச்சயம் செய்வது சில ஸமயங்களில் கெடுதலாக முடிகிறது. ஸமீபத்தில் பெஜவாடலிலுள்ள ஒரு ப்ராம்மணர் கல்லியாணஞ் செய்துகொள்ள விரும்பி தென்மலையாளம் திருவானை மலையிலுள்ள ஒரு ப்ராம்மணரைத் தமக்கு ஒரு பெண் தேட நியமித்தார். அவர் ஒரு செட்டி ஜாதிப் பெண்ணை ப்ராம்மணரைப்போல் நடிக்கச் செய்து கல்யாணம் செய்வித்து பெண்ணின் பெற்றோர்களிடம் பணம் பெற்றார். இந்த சூதில் ஒரு அம்பட்டன் உள்பட வேறு மூன்றுபேர் ஸம்பந்தப் பட்டிருக்கிறார்களாம். அம்பட்டனுக்கு பேச்சுப்படி பணம் கிடைக்காததால், அவன் இவ்விஷயத்தை வெளிக்குக் கொண்டுவந்து விட்டான். இதன் மேல் மணமகன் வழக்குத் தொடர, ஆறு குற்றவாளிகளுக்கும் தனித்தனியே ஆறு மாஸங் கடுங்காவல் கிடைத்தது.

ஒரு ரெயில்வே தொழில் பாடசாலை.—ரெயில்வே கம்பெனியில் வேலைக்குப்போக ப்ரியப்படும் மாணாக்கர்களுக்கு இத்தொழிலுக்கு வேண்டி விஷயங்களைப் போதிப்பதற்காக, திருச்சினாபள்ளியில் தொழில்சாலையொன்றை ஸ்தாபிக்கவேண்டுமென்று தென்னிந்தியா ரெயில்வே கம்பெனி மாஜிட்ராபிக் இன்ஸ்பெக்டரான பி. வி. சாமராவ் உத்தேசித்திருக்கிறார். இவ்வித தொழில்சாலை, தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அது திருச்சினாப்பள்ளியில் ஸ்தாபிக்கப்படும். ஸெப்டம்பர் மாதத்தில் வகுப்புகள் ஏற்படும், ஸ்கூல் பைனல் பரீக்ஷையில் தேர்ந்திருக்கும் இந்திய மாணாக்கர்களும். 4-வது பாரம் முடிய படித்திருக்கும் ஆங்க்லோ இந்திய மாணாக்கர்களும் மேற்கண்ட வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

சென்னையில் பொருள் காட்சி.—சென்னையில் அடுத்த டிஸம்பரில் ஒரு பொருட்காட்சி நடக்கப்போகிறது. அந்தப்பொருட்காட்சி மாகாண கவர்ன்மெண்டாரின் ஆதரவைக்கொண்டு, தொழில் இலாகாத் தலைவரால் ஏற்பாடு செய்யப்படும். பொருட்காட்சியை நடத்த ஒரு நிர்வாகக் கமிட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிர்வாகக் கமிட்டிக்கு தொழில் இலாகா டைரெக்டராகிய மிஸ்டர் இன்ஸ் சேர்மனாவார். ராவ் பகதூர் விஜயராகவாசாரியார் அந்தக் கமிட்டியின் ஸெக்ரெட்டரியாவார்.

161434

அமிர்தாஞ்ஜனம்

எல்லா நோய்களுக்கும்

ஸித்தாஞ்ஜனம்

சொகுசான டப்பியுடன் விலை அணா 8

டஜன் 1 க்கு ரூபா 5.

வி. பி. வேறு எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

படை மருந்து	டப்பி 1 க்கு	அணா 4
தந்த சூரணம்.	டப்பி 1 க்கு	„ 2
மோஹினி தைலம்	ஸீஸா 1 க்கு	„ 12

அமிருதாஞ்ஜனம் டிப்போ,

169, பிரேடீ ரோட, பம்பாய்.

6, தம்புசெட்டித்தெரு, மதராஸ்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்